

திருவிவிலியத் துணை நூல்



பதிப்பாசிரியர்
ஞான இராபின்சன்

மறுபதிப்பாசிரியர்
இஸ்ரயேல் செல்வநாயகம்

திருவிவிலியத் துணை நூல்

A Companion to the Bible


30 கட்டுரைகள்

பதிப்பாசிரியர்

ஞான இராபின்சன்

மறு பதிப்பாசிரியர்

இஸ்ரயேல் செல்வநாயகம்



தமிழ் இறையியல் நூலோர் குழு, மதுரை.

1995.

Published by

TAMIL THEOLOGICAL BOOK CLUB,
TAMILNADU THEOLOGICAL SEMINARY,
MADURAI - 625 010.

A COMPANION TO THE BIBLE

30 Essays

General Editor :
Dr. Israel Selvanayagam

Editor of the First Edition :
Gnana Robinson
Editor of the Revised Edition :
Israel Selvanayagam

© T.T.B.C.

First Edition	: 1972
Revised Edition	: 1995
Copies	: 1500
Price	: Rs. 150/-

Typeset & Printed by *Institute of Printing Technology and Journalism, Madurai - 10.*

முந்திய பதிப்பின் நூன்முகம்

உலகின் நூல்கள் யாவற்றிலும் தலைசிறந்தது என்று போற்றப்படுவதும், பல நூற்றாண்டுகளாகப் பெருவாரியான மக்களுடைய வாழ்க்கையில் சிறப்பான இடம் பெற்றுள்ளதுமான நூல், கிறிஸ்தவர்களின் மறை நூலான விவிலியம் ஆகும். காலங்கள் மாறின, சமூக அமைப்புகள் மாறின, அரசுகள் மாறின: ஆனால் விவிலியத்தின் சிறப்பிடம் மாறவேயில்லை. கிரேணம், காலத்துக்குக் காலம் அதன் செய்தி மக்கள் வாழ்க்கையுடன் பொருத்தமுடையதாக விளக்கப்பட்டு வருவதுதான். விவிலியத்தின் எழுத்துக்கள் மாற்றமடைவதில்லை; ஆனால் அவற்றின் மூலம் ஆவியானவர் உலகிற்குச் சொல்லும் விதம் காலத்துக்குக் காலம் மாற்றமடைவதுண்டு. ஆவியானவர் தம்முடைய இந்தப் பணியைத் தம் அடியாராகிய விவிலிய வல்லுநர் மூலம் நிறைவேற்றி வருகிறார் என்றால் அது மிகையாகாது. இந்த அறிஞர்கள் மூலம் ஆவியானவர் சொல்வதைக் கேட்கும் பொறுமையுள்ளவர்களே விவிலியம் தரும் செய்தியைக் காலத்திற்கேற்றாற்போல் அறிந்து உணர முடியும்.

உலக வரலாற்றின் நெருக்கடி மிகுந்த ஒரு கட்டத்தில் வாழும் நாம், கடவுள் தம் வாக்காகிய விவிலியத்தின் மூலம் நமக்குக் கூற இருப்பதை அறிந்துணரவேண்டியது அவசியம். இப் பணியில் வாசகருக்கு உதவ எழுந்ததே **திருமறைத்தோழன்** என்னும் இந் நூல். இந்திய அறிஞர் பலர் விவிலியத்தைப்பற்றி எழுதிய முப்பத்துநான்கு கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. விவிலியத்தைக் கற்று, அதன் மூலம் கடவுள் வாக்கை உணர விழைவோருக்கு இந் நூல் நிச்சயம் துணை நிற்கும்.

இந்நூலை இயற்றுவதில் எம்முடன் ஒத்துழைத்தவர் பலர். கிறிஸ்தவ இறையியல் நூலோர் குழு இயக்குநர் அருள்திரு. ஆ.தே. மனுவேல் அவர்கள் தந்த ஊக்கமும், ஆக்கம் தரும் ஆலோசனைகளும் அதிகம். அவர்களுக்கு எமது நன்றி உரித்தாகுக. பலுமிக்கப் பொறுப்புகள் பல இருந்தும், சிரமம் பாராட்டாது கட்டுரைகள் பல வரைந்து தந்தும், அணுகிச் சென்ற வேளையெல்லாம் நயந்து உதவியும் ஊக்கமூமளித்த தமிழ்நாடு இறையியல் கல்லூரி முதல்வர் பண்டிதர் சாமுவேல் அமிர்தம் அவர்களுக்கும், மனமுவந்து கட்டுரைகள் பல எழுதி உதவிய கல்லூரியின் இதர உடன் ஆசிரிய நண்பர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றி. தமிழாக்கம் செய்தும், நகல் எடுத்தும் உதவிய நண்பர்கள் பலர் உண்டு. அவர்களுக்கும் யாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். இந் நூல் அச்சாகி வரும் வேளையில் யாம் வெளிநாடு செல்லவேண்டியிருந்ததால், இப் பொறுப்பினை எமது நண்பரும், எமக்குப்பின் எம் பொறுப்பை ஏற்றவருமான அருள்திரு. தயானந்தன் பிரான்சிஸ் அவர்களிடம் விட்டுச் சென்றோம். அவர்கள் இந்நிலையில் இந் நூல் வெளிவர உதவியதற்காக அவர்களுக்கும் எமது நன்றி. கடைசியாக, இவ்வளவு சீரிய முறையில் இந்நூலினை அச்சடித்துத் தந்த சென்னை டயோசீசன் அச்சகத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

தமிழ் மக்கள் யாவரும் விவிலியத்தை நன்குக் கற்று நற்பயனடைய இந் நூல் பயன்பட வேண்டும் என்று இறைவனை வேண்டி, இதனை வாசகருக்கு அறிமுகப்படுத்துகின்றோம்.

ஞான இராயின்சன்
பொதுப் பதிப்பாசிரியர்

அரசரடி
23-3-1971.

மறு பதிப்புரை

இந்நூல் **திருமறைத் தோழன்** என்றத் தலைப்பில் 1972இல் வெளிவந்தது. இதன் திருத்திய மறுபதிப்பை வெளியிட 10 ஆண்டுகளாகச் செய்த முயற்சி இப்போதுதான் நிறைவு கண்டுள்ளது. இந்தப் பதிப்பு எவ்வாறு அமையவேண்டுமென்பது பற்றி தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் விவிலியப் பாடங்கள் கற்றுக்கொடுக்கின்ற பேராசிரியர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. மொழித் திருத்தம், சில கட்டுரைகளில் அண்மைக்கால ஆய்வுகளின் ஒளியில் திருத்தங்கள் செய்து குறிப்புக்களைச் சேர்த்தல், புதிய ஏற்பாட்டுக் கட்டுரைகளின் எண்ணிக்கையைக் குறைத்தல், விடுதலை சார்ந்த விவிலிய விளக்கம் பற்றி ஓரிரு கட்டுரைகளைச் சேர்த்தல் ஆகிய ஆலோசனைகள் தரப்பட்டன.

கத்தோலிக்கரும் சீர்திருத்தச் சபையினரும் சேர்ந்து தமிழில் உருவாக்கியுள்ள பொது விவிலிய மொழிபெயர்ப்பைச் சார்ந்து மொழிநடை திருத்தப்பட்டுள்ளது. விவிலிய நூல்கள் அதில் பெற்றிருக்கும் புதிய பெயர்கள் (எ.கா. ஆதியாகமம் - தொடக்க நூல்) இந்நூலில் கையாளப்பட்டுள்ளன. தமிழ் இறையியல் நூலோர் குழுவின் வெளியீடுகளில் இந்நூலில்தான் முதன்முறையாகப் பொது மொழிபெயர்ப்பில் காணப்படும் புதுச் சொற்களும், நூல் பெயர்களும், முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. **திருவிவிலியத் துணைநூல்** என்னும் இதன் புதுப்பெயரையும் இந்த அடிப்படையிலேயே எடுத்துக்கொள்ளவேண்டும்.

முந்திய பதிப்பில் 34 கட்டுரைகள் அடங்கியிருந்தன. இவற்றில் 'பொதுவான நிருபங்களின் போதனை' (27), 'அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின நிருபங்கள் தரும் இறையியல் கருத்துக்கள்' (28), 'யோவானின் நற்செய்தி நூலும் நிருபங்களும் தரும் இறையியற் கருத்துக்கள்' (30), 'எபிரேயருக்கு எழுதப்பட்ட நிருபத்தின் செய்தி' (31), 'புதிய ஏற்பாட்டின் இறையியல்' (32), 'கிறிஸ்தியல்' (33), 'புதிய ஏற்பாட்டு இறுதியியல்' (34) ஆகிய ஏழு கட்டுரைகள் இதில் நீக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைகளை எழுதியோர் ஜே.பா. அலெக்சாந்தர் (27,31,34), வி.பு. ஹாரிஸ் (28,30), தோ.சா. காரட் (32). ஏ.ஜெ. அப்பாசாமி (33) ஆகியோராவர். இக்கட்டுரைகளின் செய்திகளும், சேர்க்கைகளும் இந்நூலில் 'புதிய ஏற்பாட்டு இறையியல்' என்னும் தலைப்பில் (27) கோர்க்கப்பட்டுள்ளன. சில கட்டுரைகள் இன்றையமயமாக்கப்பட்டும் விரிவாக்கப்பட்டும் உள்ளன. எ.கா. 'தமிழ் விவிலியம்' (1) கட்டுரையின் அமைப்பு சிறிது மாற்றப்பட்டு இன்றைய பொதுமொழிபெயர்ப்பு வரையுள்ள வரலாற்றுண்மைகள் சேர்க்கப்பட்டுள்ளன. 'முடிவுரை' இல்லாதிருந்த சில கட்டுரைகளுக்கு (எ.கா. 6,7) அது எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. 'புதிய ஏற்பாட்டின் பின்னணி' (22) என்ற கட்டுரையில் 'சமூக, குடும்ப நிலை' பற்றிய உண்மைகள் இணைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, இரண்டு புதிய கட்டுரைகள் (29,30) சேர்க்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைகள் விவிலிய விளக்கம், ஆய்வு சார்ந்த பல உண்மைகளையும் விடுதலை சார்ந்த அழுத்தங்களையும் எடுத்துக்கூறுகின்றன. இன்னும் விரிவான முறையில் தற்கால விவிலிய ஆய்வுகளைப் பற்றி தமிழ் விவிலிய அறிஞர்களிடமிருந்து கட்டுரை எழுதி வாங்க நான்கைந்து ஆண்டுகளாகச் செய்த முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

பொது விவிலிய மொழிநடைக்கேற்ப பழைய கட்டுரைகளில் முதல் திருத்தம் செய்தவர் பங்களூர் ஐக்கிய இறையியல் கல்லூரியின் பேராசிரியர் அறிவர் ஜோன்ஸ் முத்துநாயகம் ஆவார். தமிழ் விவிலியம் பற்றிய முதல்கட்டுரையை இன்றையமயமாக்கித் தந்தவர் இந்திய வேதாகமச் சங்கத்தின் மொழிபெயர்ப்புத் துறையில் பணிபுரியும் அருள்திரு. ஜெ. ஜெயக்குமார் ஆவார். சில கட்டுரைகளைப் படித்து, அவை பேரில் கருத்து வழங்கி, சில குறிப்புக்களைச் சேர்த்து, துணைநூல் பட்டியல்களில் சில புதிய நூல்களையும் சேர்த்ததில் தமிழ்நாடு இறையியல் கல்லூரி விவிலியத்துறைப் பேராசிரியர்கள் அறிவர் ஜெசுதாசன் ஜெயராஜ், அறிவர் எம். ஞானவரம் ஆகியோர் பேருதவி செய்தார்கள். அறிவர் தயான்சந்த் கார் அவர்கள் புதியதொரு கட்டுரை எழுதித் தந்தார்கள். இவர்கள் அனைவருக்கும் எம் நன்றி உரித்தாகுக.

1991இல் நான் தமிழ் இறையியல் நூலோர் குழுவின் பொதுப்பதிப்பாசிரியராக ஏற்படுத்தப்பட்டபோது முதற்கவனம் செலுத்தவேண்டிய பணிகளில் இந்நூலைத் திருத்திப் பதிப்புச் செய்து வெளிக்கொணர்வதும் ஒன்றாகும். அதுமுதல் இக்குழுவின் நிருவாகக் குழுவினர் அறிவர் தயானந்தன் பிரான்சிஸ் (தலைவர்), அருள்திரு. கம்பர் மாணிக்கம் (இயக்குநர் & பொருளர்), அருள்திரு. CRW டேவிட் ஆகியோர் ஆதரவும் ஆலோசனைகளும் வழங்கி வந்துள்ளனர். இந்நூலின் முந்தியப் பதிப்பாசிரியர் அறிவர் ஞான இராபின்சன் அவர்களும் இக்குழுவின் ஆலோசனைகளுக்கு ஒப்புதல் அளித்து ஆதரவு தந்தார்கள். இவர்கள் அனைவருக்கும் எம் நன்றி.

அச்சுப்பிழைகள் திருத்தியதில் உதவிசெய்த திரு. G. வில்சன், திருமதி. விக்டோரியா ரீத்தா சாமுவேல் ஆகியோருக்கும், நன்முறையில் இதனை நூல்வடிவாக்கிய அச்சகத்தாருக்கும் எம் நன்றி.

விவிலியத்தைப் படிப்பதிலும், தியானிப்பதிலும் தமிழ்க் கிறிஸ்தவர்களிடையே ஆர்வம் அதிகமாகிக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. அதே நேரத்தில் விவிலியத்தை முறையாகப் பயன்படுத்தத் தெரியாமல் குழம்பும் மக்களும் பெருகி வருகிறார்கள். எந்தத் திறனாய்வுப் பார்வைக்கும் இடந்தராமல் மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி கவர்ச்சியான விளக்கங்களை வணிகநோக்கு கலந்த பக்தியுணர்வுடன் விளக்கும் அருளுரைஞர்களும் எழுத்தாளர்களும் பலர் உள்ளனர். இந்நிலையில் விவிலியத்தை முறையாக ஆய்ந்து அதன் ஆழங்களில் பதிந்து கிடக்கும் கருத்துச் செல்வங்களை வெளிக்கொணர்ந்து, தனியாள் - சமூக மறுமலர்ச்சிக்கு உதவிட இந்நூல் இறையியல் மாணவர்களுக்கும், சபை மக்களுக்கும் உதவும் என்ற நம்பிக்கையில் இறைவன் திருவடிகளில் இதனைப் படைக்கிறோம்.

இஸ்ரயேல் செல்வநாயகம்
(பதிப்பாசிரியர்)

தமிழ் இறையியல் நூலோர் குழு, மதுரை.
இந்தியா தன்னுரிமைபெற்ற நாள், 1995.

உள்ளடக்கம்

			பக்கம்
1.	தமிழ் விவிலியம்	ச. குலேந்திரன்	1
2.	விவிலியத்தின் ஒருமைப்பாடு	தோ.சா. காரட்	13
3.	விவிலியத்தின் அதிகாரம் - இறைவெளிப்பாடு	ஆ.தே. மனுவேல்	17
4.	விவிலியத்தைப் படிப்பதெப்படி?	லெஸ்லி நியுபிகின்	29
5.	திருநாட்டின் நில அமைப்பு	கொ. செல்வமணி	35
6.	விவிலியமும் அகழ்வியலும்	அ. மினாசோன்	55
7.	விவிலியம் உருவாகிய காலத்தில் வழக்கிலிருந்த அளவுகள், நாணயங்கள், பஞ்சாங்கங்கள்	ஞான இராபின்சன்	70
8.	விவிலிய ஒழுக்க வழக்கங்கள்	பியாண் பியாஸ்டட்	77
9.	விவிலிய ஒழுக்கவியல்	டேவிட். காலப்	87
10.	விவிலிய வரலாற்று நோக்கு	ஈ.சீ. ஜான்	97
11.	விவிலியப் பொருள் விளக்க வரலாறும், அடிப்படைத் தத்துவங்களும்	சஃபீர் பி. அத்யால்	107
12.	இந்தியக் கிறிஸ்தவ இறையியலில் விவிலியம் பெற்றுள்ள இடம்	ஆர்.எயிச்.எஸ். பாயிடு	117
13.	இஸ்ரயேலரின் வரலாறு	ஞான இராபின்சன்	129
14.	பழைய ஏற்பாட்டுக் கனோன்	சாமுவேல் அமிர்தம்	143
15.	ஐந்திருநூல் ஆய்வு	சாமுவேல் அமிர்தம்	151
16.	இறைவாக்கு நூல்கள்	ஞான இராபின்சன்	160
17.	புனித எழுத்தேடுகள்	ஞான இராபின்சன்	169
18.	மறைபொருள் வெளிப்பாடு	ஞான இராபின்சன்	174
19.	இஸ்ரயேலர் சமயம்	ஞான இராபின்சன்	180
20.	பழைய ஏற்பாட்டு இறையியல்	சாமுவேல் அமிர்தம்	199
21.	பழைய, புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்துச் சமயச் சிந்தனை	தோ.சா. காரட்	216
22.	புதிய ஏற்பாட்டின் பின்னணி	லா. ஈஸ்டர் ராஜ்	224
23.	புதிய ஏற்பாட்டுக் கனோன்	பியாண் பியாஸ்டட்	231
24.	புதிய ஏற்பாட்டு மூலப் பாட ஆய்வு	ஆ. இராபின் மக்ளாஷன்	239
25.	சமநோக்கு நற்செய்தி நூல்களின் இசைவுப் பிரச்சனை	து. போத்திராஜுலு	248
26.	இயேசுவின் வாழ்க்கை வரலாறும், அவர் கற்பித்த உண்மைகளும்	சா.தா. செபஞானம்	253
27.	புதிய ஏற்பாட்டு இறையியல்	இஸ்ரயேல் செல்வநாயகம்	276
28.	புதிய ஏற்பாட்டுக் காலத் திருச்சபை	ஜே.பா. அலெக்சாந்தர்	300
29.	விவிலிய விளக்கம் - அணுகுமுறைகள்	தயான்சந்த் கார்	310
30.	விவிலிய ஆய்வுகள்: ஒரு வரலாற்றுப் பார்வை	இஸ்ரயேல் செல்வநாயகம்	323

சுருக்கெழுத்துக்கள், குறியீடுகளின் விளக்கம்

1. விவிலிய நூல்கள்

சுருக்கம்	விரிவு	பழைய பெயர்
ப.ஏ.	**பழைய ஏற்பாடு**	
1. தொட.	தொடக்க நூல்	ஆதியாகமம்
2. விடு.	விடுதலைப் பயணம்	யாத்திராகமம்
3. லேவி.	லேவியராகமம்	லேவியராகமம்
4. எண்.	எண்ணிக்கை நூல்	எண்ணாகமம்
5. இணை.	இணைச்சட்டம்	உபாகமம்
6. யோசு.	யோசுவா	யோசுவா
7. நீதித்.	நீதித்தலைவர்கள்	நியாயாதிபதிகள்
8. ரூத்து	ரூத்து	ரூத்தின் சரித்திரம்
9. 1சாமு.	1 சாமுவேல்	1 சாமுவேல்
10. 2சாமு.	2 சாமுவேல்	2 சாமுவேல்
11. 1அர.	1 அரசர்கள்	1 இராஜாக்கள்
12. 2அர.	2 அரசர்கள்	2 இராஜாக்கள்
13. 1குறி.	1 குறிப்பேடு	1 தினவர்த்தமானம் (1 நாளாகமம்)
14. 2குறி.	2 குறிப்பேடு	2 தினவர்த்தமானம் (2 நாளாகமம்)
15. எஸ்ரா	எஸ்ரா	எஸ்றா
16. நெகே.	நெகேமியா	நெகேமியா
17. எஸ்.	எஸ்தர்	எஸ்தர்
18. யோபு	யோபு	யோபு
19. திருப்.	திருப்பாடல்கள்	சங்கீதம்
20. நீதி.	நீதிமொழிகள்	நீதிமொழிகள்
21. சபை.	சபைஉரையாளர்	பிரசங்கி
22. கவி.	கவின்மிகு கவிதை	உன்னதப்பாட்டு
23. எசா.	எசாயா	ஏசாயா
24. எரே.	எரேமியா	எரேமியா
25. புல.	புலம்பல்	புலம்பல்
26. எசே.	எசேக்கியேல்	எசேக்கியேல்
27. தானி.	தானியேல்	தானியேல்
28. ஓசே.	ஓசேயா	ஓசேயா
29. யோவேல்	யோவேல்	யோவேல்
30. ஆமோ.	ஆமோஸ்	ஆமோஸ்
31. ஓப.	ஓபதியா	ஓபதியா
32. யோனா	யோனா	யோனா
33. மீக்.	மீக்கா	மீகா
34. நாகூம்	நாகூம்	நாகூம்
35. அப.	அபகூக்	ஆபகூக்
36. செப்.	செப்பனியா	செப்பனியா
37. ஆகாய்	ஆகாய்	ஆகாய்
38. செக்.	செக்கரியா	சகரியா
39. மலா.	மலாக்கி	மல்கியா

பு.ஏ.	புதிய ஏற்பாடு	
	ந.நூல்கள்	**நற்செய்தி நூல்கள்**
1.	மத்.	மத்தேயு நற்செய்தி	மத்தேயு சுவிசேஷம்
2.	மாற்.	மார்க்கு நற்செய்தி	மாற்கு சுவிசேஷம்
3.	லூக்.	லூக்கா நற்செய்தி	லூக்கா சுவிசேஷம்
4.	யோ.	யோவான் நற்செய்தி	யோவான் சுவிசேஷம்
5.	திருத்.	திருத்தூதர் பணிகள்	அப்போஸ்தலர் நடபடிகள்
6.	உரோ.	உரோமையர்	ரோமர்
7.	1கொரி.	1 கொரிந்தியர்	1 கொரிந்தியர்
8.	2கொரி.	2 கொரிந்தியர்	2 கொரிந்தியர்
9.	கலா.	கலாத்தியர்	கலாத்தியர்
10.	எபே.	எபேசியர்	எபேசியர்
11.	பிலி.	பிலிப்பியர்	பிலிப்பியர்
12.	கொலோ.	கொலோசையர்	கொலோசேயர்
13.	1தெச.	1 தெசலோனிக்கர்	1 தெசலோனிக்கேயர்
14.	2தெச.	2 தெசலோனிக்கர்	2 தெசலோனிக்கேயர்
15.	1திமொ.	1 திமொத்தேயு	1 தீமோத்தேயு
16.	2திமொ.	2 திமொத்தேயு	2 தீமோத்தேயு
17.	தீத்து	தித்து	தீத்து
18.	பில.	பிலமோன்	பிலேமோன்
19.	எபி.	எபிரேயர்	எபிரேயர்
20.	யாக்.	யாக்கோபு	யாக்கோபு
21.	1பேது.	1 பேதுரு	1 பேதுரு
22.	2பேது.	2 பேதுரு	2 பேதுரு
23.	1யோ.	1 யோவான்	1 யோவான்
24.	2யோ.	2 யோவான்	2 யோவான்
25.	3யோ.	3 யோவான்	3 யோவான்
26.	யூதா	யூதா	யூதா
27.	திருவெ.	திருவெளிப்பாடு	யோவானின் தரிசனம் (வெளிப்படுத்தின விசேஷம்)

குறிப்பு: ஒரு நூலின் பெயர் தந்து, அதிகாரம்: வசனங்களின் எண் தந்து, அதற்குப்பின் வெறும் அதிகாரம்: வசனங்களின் எண் மட்டும் வந்தால் அது முன் தரப்பட்ட நூலிலிருந்து வருவது என்று கொள்க.

2. ஒரெழுத்துச் சுருக்கம்:

(i) ஒரு வசன எண்ணுக்குப் பின் 'பி' என்னும் எழுத்து வருமாயின் அதன் பொருள் 'பின்வரும் வசனம் அல்லது வசனங்களைக் காண்க' (f,ff) என்பதாகும்.

(ii) அப்படியே 'மு' வருமாயின் அதன் பொருள் 'முதலியன' (etc.) என்பதாகும்.

(iii) அப்படியே 'அ' வருமாயின் 'வசனத்தின் முதல் பகுதி' என்றும், 'ஆ' வருமாயின் 'வசனத்தின் இரண்டாம் பகுதி' என்றும் பொருள்படும்.

3. பிறமொழிச் சொற்கள்:

(i) R.S.V. - Revised Standard Version (English Bible).

(ii) செப்துவசிந்து, Septuagint - பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பு. இது LXX என்றும் எழுதப்படும். இதற்கு 70 என்று பொருள். 70 பேர் சேர்ந்து இந்த மொழிபெயர்ப்பைச் செய்ததால் இப்பெயர் பெற்றது.

கட்டுரை ஆசிரியர்கள்

1. பேரருள்திரு. S. குலேந்திரன் (1901 - 1992), தென்னிந்தியத் திருச்சபை (தெ.இ.தி.) முன்னாள் பேராயர், யாழ்ப்பாணம்.

2. பேரருள்திரு. T.S. காரட் (1915 - 1980), முன்னாள் பேராசிரியர், தமிழ்நாடு இறையியல் கல்லூரி (த.இ.க.) திருமறையூர், த.இ.க., மதுரை; தெ.இ.தி. முன்னாள் பேராயர், திருநெல்வேலி.

3. அருள்திரு. A.D. மனுவேல், முன்னாள் பேராசிரியர், த.இ.க., திருமறையூர்; பொதுப்பதிப்பாசிரியர், தமிழ் இறையியல் நூலோர் குழு; பொதுச் செயலர், சென்னை கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்; அனைத்துலகக் கிறிஸ்தவத் தொடர்புச் சங்கத்தின் ஆசிய இயக்குநர், லண்டன்; இப்போது ஓய்வு பெற்றிருப்பவர்.

4. பேரருள்திரு. லெஸ்லி நியுபிகின், முன்னாள் பேராயர், தெ.இ.தி. மதுரை - இராமநாதபுரம், சென்னை; அனைத்துலகத் திருச்சபை மன்றத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்; இப்போது ஓய்வு பெற்றிருப்பவர்.

5. பேரருள்திரு. C. செல்வமணி, முன்னாள் முதல்வர், த.இ.க., திருமறையூர்; பேராசிரியர், த.இ.க., மதுரை; பேராயர், தெ.இ.தி. கன்னியாகுமரி; இப்போது ஓய்வு பெற்றிருப்பவர்.

6. அருள்திரு. A. மினாசோன், தமிழ் சுவிசேஷ லுத்தரன் சபையின் முன்னாள் ஆயர்; முன்னாள் பேராசிரியர், குருசாலா, தரங்கை, குருகுல், சென்னை, ஐக்கிய இறையியல் கல்லூரி பங்களூர்; இப்போது ஓய்வு பெற்றிருப்பவர்.

7. அருள்திரு. அறிவர். ஞான இராபின்சன், முன்னாள் பேராசிரியர், த.இ.க., திரும்மறையூர்; பேராசிரியர், முதல்வர், த.இ.க., மதுரை; பொதுப் பதிப்பாசிரியர், தமிழ் இறையியல் நூலோர் குழு; இப்போதைய முதல்வர், ஐக்கிய இறையியல் கல்லூரி, பங்களூர்.

8. பேரருள்திரு. பியாண் ஃபியாஸ்டட், முன்னாள் பேராசிரியர், த.இ.க., மதுரை; பொதுச் செயலர், ஸ்வீடன் திருச்சபையின் அருட்பணி மன்றம்; இப்போதைய அங்குள்ள கோட்லண்ட் தீவின் பேராயர்.

9. அருள்திரு. டேவிட் காலப், முன்னாள் பேராசிரியர், த.இ.க., மதுரை; ஆயர், தெ.இ.தி., மதுரை - இராமநாதபுரம்; வழிபாட்டுப் பொறுப்பாளர், சென்னை கிறிஸ்தவக் கல்லூரி; இப்போது அமெரிக்காவில் ஓய்வு பெற்றிருப்பவர்.

10. அறிவர். E.C. ஜாண், முன்னாள் ப.ஏ. துறைப் பேராசிரியர், முதல்வர், ஐக்கிய இறையியல் கல்லூரி, பங்களூர்; இப்போது ஓய்வு பெற்றிருப்பவர்.

11. அறிவர் சஃபீர் P. அத்யால், முன்னாள் ப.ஏ. பேராசிரியர், முதல்வர், ஐக்கிய விவிலியக் கல்லூரி, யோத்மால் (பின் பூனா).

12. அறிவர். இராபின் H.S. பாய்டு, அயர்லாந்து மூப்பராளுகை சபையிலிருந்து அருள்தொண்டராக 1954இல் இந்தியா வந்தவர்; முன்னாள் பேராசிரியர், குஜராத் ஐக்கிய இறையியல் பள்ளி, அகமதாபாத்.

13. பேரருள்திரு. சாமுவேல் அமிர்தம், முன்னாள் ப.ஏ. பேராசிரியர், முதல்வர், த.இ.க., மதுரை; இறையியல் கல்விப்பணி இயக்குநர், அனைத்துலகத் திருச்சபை மன்றம்; இப்போது பேராயர், தெ.இ.தி. தென் கேரளம், திருவனந்தபுரம்.

14. பேரருள்திரு. L. ஈஸ்டர்ராஜ் (1912 -1985), முன்னாள் முதல்வர், குருசாலா, தரங்கை; பேராசிரியர், த.இ.க., மதுரை; பேராயர், தமிழ் சுவிசேஷ லுத்தரன் திருச்சபை.

15. அருள்திரு. A. இராபின் மக்ளாஷன், அருட்பணியராக 1963இல் இந்தியா வந்தவர்; முன்னாள் பேராசிரியர், த.இ.க., திருமறையூர்; த.இ.க., மதுரை.

16. பேரருள்திரு. D. போத்திராஜுலு, முன்னாள் பேராசிரியர், த.இ.க., மதுரை; பேராயர், தெ.இ.தி. மதுரை - முகவை; இப்போது தெ.இ.தி.இன் சபைமக்கள் கல்வி இயக்குநர், மதுரை.

17. அருள்திரு. S.T. செபஞானம் (1910- 1986), முன்னாள் ஆயர், திருநெல்வேலி தெ.இ.தி. பேராயம்; பேராசிரியர், த.இ.க., திருமறையூர்.

18. அருள்திரு. J.P. அலெக்சாந்தர் (1916 - 1981), முன்னாள் ஆயர் கன்னியாகுமரி, தெ.இ.தி. பேராயம்; பேராசிரியர், த.இ.க., மதுரை.

19. அறிவர். தயான்சந்த் கார், முன்னாள் பேராசிரியர், த.இ.க., மதுரை; இப்போது இயக்குநர், அருட்பணி & இறையியல் தொகுதி, ஆசியக் கிறிஸ்தவப் பேரவை, ஹாங்காங்.

20. அறிவர். இஸ்ரயேல் செல்வநாயகம், பேராசிரியர், உரையாடல் ஒருங்கிணைப்பாளர், த.இ.க., மதுரை; பொதுப் பதிப்பாசிரியர், தமிழ் இறையியல் நூலோர் குழு.

திருவிவிலியத் துணை நூல்

A Companion to the Bible

1

தமிழ் விவிலியம்

ச. குலேந்திரன்

1.தொடக்க நூற்றாண்டுகளில் திருவிவிலிய மொழிபெயர்ப்பு

விவிலியம் என்னும் கிறிஸ்தவத் திருமறை பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்ற இரு பிரிவுகளிலடங்கும். ப.ஏ.இன் பெரும்பான்மையான நூல்களும் ஆக்கியோரின் மொழியாகிய எபிரேய மொழியில் எழுதப்பட்டவையாகும். பிந்திய பகுதிகளில் சில, எபிரேய மொழியோடு நெருங்கிய தொடர்புடைய அரமேய மொழியில் எழுதப்பட்டன. ஏனெனில் யூதர்கள் பாபிலோன் சிறையிருப்புக்குப்பின் எபிரேய மொழியிலல்ல, அரமேய மொழியிலேயே பேசி வந்தார்கள்.

பு.ஏ. கிரேக்கப் பண்பாட்டைச் சார்ந்து, கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. இம்மொழி கிறிஸ்து பிறப்பதற்கு ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னால் அலெக்ஸாந்தருடைய வீரர்களால் பரப்பப்பட்டுப் பேச்சு வழக்கிலிருந்த மொழிநடையாகும். புனித லூக்காவைத் தவிர மற்ற எல்லா பு.ஏ. நூலாசிரியர்களும் யூதர்கள் என்பதை நினைவில் கொள்ளும் பொழுது, இது நமக்கு விந்தையாகத் தோன்றும். அவர்கள் ஏன் கிரேக்க மொழியில் எழுதினார் களெனில், இன்று ஆங்கில மொழி அனைத்துலக மொழியாகத் திகழ்ந்து நம்மிடையில் எப்பணியாற்றுகிறதோ, அப்பணியை அன்று கிரேக்க மொழி அனைத்துலக மொழியாக அமைந்து அன்னாரிடையில் ஆற்றியதாலேயாகும்.

தென் ஐரோப்பா, வட ஆப்பிரிக்கா, வட மேற்கு ஆசியா ஆகிய பல நாடுகளில் கிரேக்க மொழி பொதுமொழியாக மாறியதால், யூதரின் நன்மைக்காக ப.ஏ.உம் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய தேவை ஏற்படலாயிற்று. இம் மொழிபெயர்ப்பு கி.மு. 285-287இல் எகிப்தை ஆண்ட பிலடெல்பாஸ் என்ற கிரேக்க மன்னனின் காலத்தில் நடைபெற்றது. இம் மொழிபெயர்ப்பினைச் **செப்துவஜிந்து** (LXX) என்றழைப்பர். ஏனெனில் 72 நாள்களில் 72 மனிதர் இம் மொழிபெயர்ப்பினைச் செய்து முடித்தனர் என்பது மரபு. செப்துவஜிந்து என்றால் 72 என்பது பொருள்.

கிரேக்க-உரோமை உலகில் மக்கள் பொது மொழியான கிரேக்க மொழிக்குப் பதில் லத்தீன் மொழி வழக்கத்தில் வந்தபோது, லத்தீன் மொழியில் திருமறையின் பல மொழிபெயர்ப்புகள் வரலாயின. புனித நூலின் ஒழுங்கீனமான மொழிபெயர்ப்புகள் பல தோன்றுவது நல்லதன்று. ஆதலால் போப்பு டமாஸஸ் அந்நாளில் பெரும் மேதைகளில் முதன்மையானவரான யெரோம் என்பவரை ஒரு தகுதிபெற்ற மொழிபெயர்ப்புச் செய்யுமாறு பணித்தார். கி.பி.384-404க்கு இடைப்பட்டக் காலத்தில் யெரோமின் மொழிபெயர்ப்பு பல பகுதிகளாக வெளிவரலாயிற்று. பொதுமக்கள் வாசிக்குமளவில் இம்மொழிபெயர்ப்பு இருந்தமையால், இது **வல்கேத்து** (V) என்றழைக்கப்பட்டது.

யெரோமின் மொழிபெயர்ப்பு பொதுமக்களிடையே வழங்கிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டதால் அன்று அது ஓர் அதிகாரம் மிக்க இலக்கிய மூலமாக ஏற்பட்டதிலேயே அதன் முக்கியத்துவம் அமைந்திருக்கின்றது. இதன் பொருள் என்ன? இனிமேல் நூலின் வேறுபட்ட மொழிபெயர்ப்புகளுக்குப் பதிலாக அங்கீகாரம் பெற்ற ஒரு மொழிபெயர்ப்பு ஏற்பட ஏதுவானது என்பதேயாகும். அச்சுக்கலை கண்டுபிடிக்கப்பட்டு ஐரோப்பாவில் 15ஆம் நூற்றாண்டில் அறிமுகப்படுத் தப்பட்ட காலம் வரையும் நூல்கள் கையெழுத்திலேயே வெளியிடப்பட்டு வந்தன. பண்டைக் காலத்தில் எழுதப்பட்ட மூலப் பகர்ப்புகள் ஒருவேளை அழிவுற்றிருக்கலாம். நமது விவிலியத்தைப் பொறுத்தமட்டில் பிற்காலத்தில் வெளிவந்த சுவடிகள் நாணற் புல்களில் (papyrii) அல்லது தோல் சுருள்களில் எழுதப்பட்டன. கையெழுத்துச் சுவடிகளில் சில வேறுபாடுகள் இருப்பது இயல்பே. ஆகவே ஒரு தரமான இலக்கிய மூலத்தை அல்லது மொழிபெயர்ப்பினை உருவாக்க, கிடைக்கக்கூடிய எல்லா மூலச் சுவடிகளின் பகர்ப்புகளையும் ஆராய்ந்து, புனித நூலாசிரியர்களின் உண்மையான உரைமூலம் ஏதுவாயிருக்கலாம் என்று ஒருவர் தம்மில் தாமே தீர்மானிக்க வேண்டும். இதனையே யெரோமும் செய்தார்.

பல நூற்றாண்டுகட்கு யெரோம் செய்த இம் மொழிபெயர்ப்பு எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. திரந்து ஆலோசனைக் குழு (Council of Trent) 1546இல் திருமறையின் ஏனைய மொழிபெயர்ப்புகளை அங்கீகாரம் பெறாதவையென தடைவிதித்தது. இந் நாளளவும் யெரோ முடைய மொழிபெயர்ப்பிற்கு அடிப்படையாக அமைந்த உரை மூலங்களும், அதன் லத்தீன் வாசகமும், உரோமன் கத்தோலிக்கரின் புனித நூலாக இருந்துவருகிறது.

கடந்த பல நூற்றாண்டுகளாக உரோமன் கத்தோலிக்கச் சபை உலகமெங்கும் நற்செய்தியைப் பரப்புவதில் ஊக்கத்துடனிருந்தாலும், விவிலிய மொழிபெயர்ப்பினை அது ஊக்குவிக்கவில்லை. உலகமெங்கிலுமுள்ள பல மொழிகளில், பக்தி நலனை முன்னிட்டு விவிவியத்தின் சில பகுதிகள் மட்டும் மொழிபெயர்க்கப்பட்டன. இதன் காரணமென்னவெனில், திருமறையினை விளக்கவே சபை இருக்கிறது என்ற கொள்கையை உரோமன் கத்தோலிக்கச் சபை எடுத்துக்கொண்டதேயாகும். எவருக்காவது தாமாகவே திருமறையை வாசிக்கவும், விரித்துரைக்கவும்

உரிமையளிக்கும்போது பிழைகளும் புரட்டுகளும் மிகுதியாக எழ வாய்ப்பு ஏற்படுகிறது. அண்மைக் காலமளவும் சமஸ்கிருத சமய இலக்கியங்களைக் குறித்து இந்துக்களிடையிலும், அரபு மொழியிலமைந்த குர்ஆன் நூலைக் குறித்து இஸ்லாமியரிடையிலும் காணப்பட்ட எண்ணத்தைப் போன்றதே இதுவும். ஆகவே உரோமன் கத்தோலிக்கச் சபை இம் மனப்பான்மையோடிருந்த காலமளவும் மிகக் குறைவான மொழிபெயர்ப்புகளே ஏற்பட்டன.

2. தற்கால மொழிபெயர்ப்பின் தொடக்கம்

உரோமன் கத்தோலிக்கச் சபையின் செல்வாக்கு முடிவுறுவதற்குச் சற்று முன்னதாகவே வலகேத்து அடைந்திருந்த உன்னத நிலைக்கு எதிர்ப்பு உருவாகியது. 1453இல் கான்ஸ்டான்டிநோபிள் துருக்கியர் கையில் விழுந்தவுடன் கிரேக்க மொழி அறிந்திருந்த பல அறிஞர்கள் ஐரோப்பா போன்ற நாடுகளுக்குத் தப்பியோடி, அம் மொழியின் அறிவைப் பரப்பியதோடு, கலை, இலக்கிய மறுமலர்ச்சி இயக்கத்தினையும் (Renaissance) தொடங்கிவைத்தனர். இவ்வியக்கம் பல நாடுகளுக்குள்ளும் பெரியதோர் அறிவு எழுச்சியை உண்டாக்கியது. மக்கள் பல வேலைகளுக்கு நடுவில் வல்கேத்துக்கு அடிப்படையாயிருந்த கிரேக்க இலக்கிய மூலத்தினை மீண்டும் பெற விரும்பினர். ஆயின், அப்படிஒரு தனிப்பட்ட மூலம் காணப்படவில்லை. ஆகையால் அந்நாளின் கல்வி மேதையான எறாஸ்மஸ் (Erasmus) ஒரு கிரேக்க இலக்கிய மூலத்தினை ஆக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

1516இல் அவரது பதிப்பு வெளியானது. அதிகார வசன எண்களுடன் அதன் திருத்திய பதிப்பு 1551இல் ஸ்தேவனா என்பவரால் வெளியிடப்பட்டது. பெரும்பாலும் அதிலிருந்து அதிக மாறுதல் இல்லாத இன்னொரு பதிப்பு எல்ஸ்விர்ஸ் (Elsvirs) எனப்படும் டச்சு கம்பெனியாரால் அச்சிடப்பட்டு 1624இல் வெளிவந்தது. இது ஏற்றுக்கொள்ளப்பட்ட வாசகம் (Textus Receptus) என்று கொள்ளப்பட்டது. அதாவது வேறு பல சுவடிகள் இருந்தபோதிலும், இந்த இலக்கிய மூலத்தினையே முழு அங்கீகாரம் பெற்றது என்று யாவரும் ஏற்றுக் கொண்டனர். இதற்கு இப்பெயர் வழங்கியவர் ஒரு புத்தக வியாபாரி என அடிக்குறிப்பில் அறியக்கிடந்தபோதிலும் இப் பெயரே இதற்குப் பின்னால் உறுதியாகி விட்டது. இவ்வுரை மூலத்திற்கு ஆதாரமாக 20-25 சுவடிகளே இருந்தன. இது அவ்வளவு சரியான வாசகமும் அல்லவென்பது பிற்கால ஆராய்ச்சியால் தெரிய வருகிறது. இந்த இலக்கிய மூலம் கிரேக்க மொழியினைத் தவிர வேறெந்த நாட்டு மொழிகளிலுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எவரேனும் பு.ஏ.ஐ மொழிபெயர்க்க வேண்டுமெனின் கிரேக்க மொழியினின்று மொழிபெயர்க்க முடியுமேயொழிய, லத்தீனிலுள்ள வல்கேத்திலிருந்து மொழிபெயர்க்க முடியாது.

நாட்டு மொழிகளில் திருமறை மொழிபெயர்க்கப்பட திருத்தமுறை சபையினர் எழும்வரையிலும் காலம் தாழ்த்த வேண்டியிருந்தது. திருத்தமுறைப் பிரிவு அமையப் பெற்றதே போப்பு, ஆலோசனை குழுக்கள் ஆகியவற்றிற்கு மேலாக விவிலியம் இருக்க வேண்டும் என்ற முறையீட்டால்தான். திருத்தமுறை அமையப் பெற்றவுடனேயே ஐரோப்பாவின் நாட்டு மொழிகளில் விவிலியம் மொழிபெயர்க்கப்படத் தொடங்கியது. மார்ட்டின் லுத்தர் பு.ஏ.ஐ 1521ஆம் ஆண்டிலும், முழு விவிலியத்தை பின்னரும், ஜெர்மானிய மொழியில் திருப்பினார். பின்னர் திந்தேல்(Tyndale), கவர்டேல் (Coverdale) ஆகியோரின் ஆங்கில மொழிபெயர்ப்பேடுகள் முறையே 1525இலும் 1528இலும் வெளிவந்தன. எதிர்ப்புகள் துன்புறுத்தல்கள் நடுவில் இவை மொழிபெயர்க்கப்பட்டன. 1560இல் ஜெனிவா விவிலியமும், 1568இல் பிஷப் விவிலியமும் வெளியிடப்பட்டன. அவை திருச்சபையில் ஏற்கப்பட்டு வழக்கிலிருந்தன. மிக்கப் புகழ்பெற்ற ஆங்கில மொழி பெயர்ப்பு 1611இல் வெளியானது. இது உரிமை பெற்ற திருப்புதல் (Authorised Version) என்று அழைக்கப்பட்டது. இது இங்கிலாந்து நாட்டு முதலாவது ஜேம்ஸ் மன்னர் திருப்புதல் என்றும் அறியப்பட்டது. இவ் விவிலியம் வெளிவந்து 50 ஆண்டுகளுக்குப் பின்தான் கிறிஸ்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் ஏற்றுக் கொள்ளப்பட்டபின் மூன்று நூற்றாண்டுகளுக்கு நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டது. உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையில் 19ஆம் நூற்றாண்டுவரை வல்கேத்துக்கு கிடைத்தப் பெருமை இதற்கும் ஆங்கில வாசகரிடையே கிடைத்தது.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் டிஷ்ஷென்டார்ஃப் (Tischendorf) என்பார், சைனாயிட்டிகஸ் (Codex Sinaiticus) என்ற ஏட்டினைக் கண்டுபிடித்தது குறிப்பிடத்தக்கது. இது பீசே (Codex Bezae), வட்டிக்கானஸ் (Codex Vaticanus), அலெக்ஸான்டிரினஸ¥ (Codex Alexandrinus) என்ற ஏடுகளைவிட பழமை வாய்ந்த கிரேக்க உரைமூலங்களைப் படிக்கும் உற்சாகத்தை உண்டாக்கியது. இந்த உரைமூலங்களைக் கற்றவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பெயர்ப்பேடு (Textus Receptus) முதல் தரமானகிரேக்கச் சுவடிகளை அடிப்படையாகக் கொண்டதல்ல என்றும், ஆகவே இது நம்பத் தக்கதொரு மூலவுரை அல்லவென்றும் உணர்ந்தனர். இங்கிலாந்து நாட்டில் வெஸ்ட்காட், ஹார்ட் என்பவர்கள் இத்தகைய தொன்மைமிக்க மூல ஆதார ஏடுகளினடிப்படையிலேயே பு.ஏ.இன் கிரேக்க உரை மூலத்தினை மீண்டும் உருவாக்கினர். 1880 முதல் 1889 வரையுள்ள ஆண்டுகளில் உரிமை பெற்ற திருத்திய ஆங்கில மொழிபெயர்ப்பில் இதுவே பயன்படுத்தப் பட்டது. (இந்தத் தொன்மையான ஆதாரச் சான்றுகள் யாவும் பு.ஏ.இனைக் குறிப்பனவாகும்). ப.ஏ.ஐப் பொறுத்த மட்டில் மொழிபெயர்ப்புகளில் பயன்படுத்தப்பட்ட ஒன்று ஒன்பதாவது நூற்றாண்டுச் சுவட்டினை அடிப்படையாகக் கொண்டதும் முற்றிலும் நம்பத் தகுந்ததுமாகும்.

அதன்பின் சவக்கடல் சுருளேடுகள் கிடைத்தன. அவற்றையும் அடிப்படையாகக் கொண்டு மேலும் ஒரு திருத்தம் செய்து 1952இல் தரமான திருத்திய பதிப்பு (Revised Standard Version) வெளியிடப் பட்டது. 1952 இலிருந்து 1990க்குள் 25க்கு மேல் தரமான மொழி பெயர்ப்புகள் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. 1952இல் வெளிவந்த விவிலியத்தைச் சார்ந்து புதிய தரமான திருத்திய பதிப்பு (New Revised Standard Version) 1989இல் வெளியிடப்பட்டுள்ளது. மொழியியல் மற்றும் மூலச்சுவடிகள் ஆய்வுத்துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் பயனை இப்புதிய மொழிபெயர்ப்பில் காணலாம்.

பொது மக்கள் எளிதில் புரிந்துக் கொள்வதற்கானப் பொருளுக்கு முன்னுரிமை அளித்து பல மொழி பெயர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றுள் நற்செய்தி விவிலியம் (Good News Bible), தற்கால ஆங்கில பதிப்பு (Contemporary

English Version) போன்றவை குறிப்பிடத்தக்கவை ஆகும்.

3. முதல் தமிழ் மொழிபெயர்ப்புகள்

இந்தியாவில் முதன் முதலாக விவிலியம் மொழி பெயர்க்கப்பட்ட மொழி தமிழ்மொழியாகும். எல்லா இந்திய மொழிகளை விடவும் தமிழ்மொழிதான் முதன்மையானதாகக் கருதப் பட்டது என்பதினாலன்று, ஒரு வரலாற்று நிகழ்ச்சியினடிப்படையிலேயே தமிழில் மொழிபெயர்ப்பு உண்டானது. கீழை நாடுகளுக்கு வந்த போர்த்துக்கீசியர்கள் ஆசியாவின் தென் கிழக்கு முனையை வந்து எட்டினார்கள். போர்த்துக்கீசியரைப் பின்பற்றி ஏனைய ஐரோப்பிய இனத்தார் முன்பே நன்கு அறிந்திருந்த இந்தியப் பகுதிகளுக்கு இயற்கையாகவே வந்தடைந்தனர். எனவே தென்னிந்தியா ஐரோப்பியர்களால் நன்கு அறியப்படும் வாய்ப்பினை அடைந்ததோடன்றி, இந்தியாவின் ஏனைய பகுதிகளை விடவும் முன்னதாகவே அன்னாரின் கையின் கீழடங்கியது.

16ஆம் நூற்றாண்டில் உரோமன் கத்தோலிக்கர் போர்த்துக்கீசியரோடு வந்தடைந்தபோதிலும், விவிலியத்தை இந்திய மொழிகளில் பெயர்க்க முயற்சிகள் எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. அவர்கள் அதன் சில பகுதிகளடங்கிய பக்திக்குரிய பலவித நூல்களை மட்டுமே தமிழில் வெளியிடத் தொடங்கினர். விவிலியத்தை ஒழுங்கான முறையில், இந்திய மொழியில் மொழிபெயர்க்க முயன்ற முக்கியமானவர், இலங்கையில் பணியாற்றிய டச்சு அருட்பணியரான பிலிப் பால்டியஸ் (Philip Baldaeus) என்பவராவார். இவர் புனித மத்தேயு நற்செய்தி நூலை தமிழில் மொழிபெயர்த்தார். ஆயின் 1665இல் இவர் இத் தீவை விட்டுப்போக நேரிட்டதால் கூடுதலாக ஒன்றும் செய்ய இயலவில்லை. அச் சமயத்தில் இலங்கையில் அச்சுக் கருவிகளும் இல்லாதபடியால் இந் நூல் அச்சிடப்பட்டதாகவும் தெரியவில்லை. ஆனால் அது பனை ஒலைகளில் எழுதப்பெற்றுச் சுற்றி அனுப்பப்பட்டது.

விவிலியம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதன் உண்மை வரலாறு, 1706இல் தமிழகம் வந்த **பர்த்தலமேயு சீகன் பால்க்** (Bartholomew Ziegenbalg) என்பவரின் வரலாற் றினால் தொடங்கப்படுகிறது. இவர் டென்மார்க் மன்னன் வேண்டுகோட்கிணங்கி தரங்கம்பாடியிலுள்ள டேனிஷ் குடியேற்றத்தில் பணிபுரிய வந்த ஒரு ஜெர்மானியராவார். இவர் கிறிஸ்தவ சமயத்தைப் பற்றி உரைக்க விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டிய தேவையை நன்கு உணர்ந்தார். தமிழ்மொழியை நன்றாகக் கற்றுக் கொண்டதன் மூலம் தம்மை இப் பணிக்காக மிகுந்த ஊக்கத்தோடு தகுதியாக்கிக் கொண்டு, தாம் வந்த இரு ஆண்டிற்குள் மொழிபெயர்ப்பைத் தொடங்கினார்.

இப் பணியில் சீகன்பால்கிற்கு நான்கு இடர்ப்பாடுகளி ருந்தன: (1) ஒரு ஜெர்மானிய ஊழியர் அல்லது குரு தங்கள் நடுவிலிருப்பதை டேனிஷ் அலுவலர்கள் விரும்பவில்லை; ஆதலால் பல இன்னல்களை அவருக்கு விளைவிக்க முன் வந்தனர். (2) சீகன்பால்கும் அவரது நண்பரும் மட்டுமே இந்தியாவில் முதன்முதலாக வந்த திருத்தமுறை அருட்பணியாளராவார்கள். (3) தமிழ் மொழிக்கு இவர் புதியவராக இருந்ததோடன்றி, விவிலி யமுங்கூட தமிழ் மொழிக்குப் புதியதே. இதற்கு முன்பு விவிலியம் இம் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டதில்லை. ஆகவே அந் நாளில் வழக்கத்திலில்லாத பல சொற்களுக்கும், சொல்லமைப்புகளுக்கும் ஈடான தமிழ்ச் சொற்களையும், சொல்லமைப்புகளையும் தேடியறிய வேண்டிய தாயிருந்தது. (4) இந் நாள் வரையும் தமிழ் மக்கள் செய்யுள் நடையிலேயே எழுதிவந்தமையால், வழிகாட்ட பல உரைநடை நூல்கள் இல்லாதிருந்தன.

எனினும், சீகன்பால்க் மன உறுதியுடன் வேலையைத் தொடங்க வேண்டியதாயிருந்தது. 1708, அக்டோபர் திங்களில் பு.ஏ. மொழிபெயர்ப்பினை அவர் தொடங்கினார்; 1710 மார்ச்சுத் திங்களில் அதனை முடித்தார்; இதனை அச்சிட இங்கிலாந்து நாட்டிலிருந்து ஓர் அச்சுக் கருவியினைப் பெற்றார். நற்செய்தி நூல்களும் நடபடி ஏடும் 1714இலும், எஞ்சியவை 1715இலும் வெளிவந்தன. அம் மொழி பெயர்ப்பின் வசனங்களின் எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்படுகின்றன.

18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு முன்பு வெளியான கையெழுத்து முறையினைப் படிக்க நேரிட்ட எவரும், இம் முறைக்கும் தற்கால எழுத்து முறைக்கும் இடையே உள்ள சில தெளிவான வேற்றுமைகளைக் கண்டு திடுக்கிட நேரிடும். முதலாவது, மெய்யெழுத்துக்களுக்கு மேல் புள்ளிகள் எதுவும் இல்லை. இரண்டாவது, 'ர' வுக்கு கீழ்நோக்கிச் செல்லும் வால் குறியில்லை. மூன்றாவதாக, நெடிலாக ஒலிக்கப்படும் 'ஆ'வும், 'ஒ'வும், 'அ', 'ஒ' எனக் குறிலாக எழுதப்பட்டுள்ளன. எ.கா. 'போலே பேசினேன்' என்பதற்குப் பதிலாக பொலெ பெசினென என்றெழுதப் பட்டிருந்தது. மெய்யெழுத்துக்களுக்கு மேலாக இடப்படும் புள்ளிகள் இலக்கண ஆசிரியர்களால் இடப்பட்டன் ஆனால் ஒலையில் எழுதப்படவில்லை. நாம் இப்போது பயன்படுத்தும் சீர்திருத்தங்கள் வீரமாமுனிவர் என்றழைக்கப்பட்ட பேரறி ஞரான கத்தோலிக்கக் குரு, வணக்கத்திற்குரிய கான்ஸ் டான்டைன் பெஸ்கி என்பவரால் உண்டானவையாகும். பெஸ்கிக்குப் பின்பும் இத்தகைய சீர்திருத்தங்களைக் கையாளுவதற்கு பல ஆண்டுகளாயின. சீகன்பால்குவின் காலத் தமிழினைக் காண அவர் மொழிபெயர்ப்பின் ஒரு பகுதியினை இங்குத் தருகிறோம்.

1. கொரி. 13.11-13 வருமாறு:

நான குழநதைப பிளளையாயிருநதபொது குழநதைப பிளளையைபொல பெசினென குழநதைப பிள்ளைக கொதிருகிற புதியைகொணடிருநதென் குழநதைப பிளளையைபபொலெ விசாமிடடென ஆனாலப புருஷ்னான பிறபாடு குழநதைப பிள்ளைக குணடானதை விடடென அதெ தெனறால நாஙகளிபபொகணணாடியைக கொணடு மறை பொருளைக காணகிறொம ஆனாலபபொழுது முக முகமாய காணபொமயியபொ பஙகு பஙகாயறிகிறென ஆனாலபபொ நான அறியப படடாபொலெ யறிநதிருபபென அபபடியெ விசுவாசமும பொறுதியும சினெகமும பிறநத மூணுபுணணியஙகள நிலைகொணடிருககு அனாலிது களுகளுளெ சினெகமானது பிரதான புணணியமாயிருககுது. (இத்தகைய வடிவில் எழுத்துக்கள் இருக்கவில்லை).

சீகன்பால்க் தம்மைச் சுற்றி வாழ்ந்த சில கிறிஸ்தவர்களின் எழுத்து நடையைப் பின்பற்றினார். ஆகவே ஒரு பண்பட்ட தமிழ் அறிஞரின் எழுத்து நடையின் திறத்திற்கு மிகத் தாழ்ந்த நிலையிலேயே. இவரது நடை இருந்தது. எனவே, வீரமாமுனிவரின் குற்றச்சாட்டுகளுக்கு இவரது மொழிபெயர்ப்பு

தலை வணங்க வேண்டியதாயிற்று. எனினும் தமிழ்ச் சபைக்கு அதன் மொழியில் பு.ஏ.ஐ ஆக்கியமைத்துத் தந்த பெருமையை சீகன்பால்க்கிடமிருந்து எவரும் எடுக்க இயலாது.

மேலும் சீகன்பால்க் தாமாகவே ப.ஏ.இல் தொடக்கநூல் முதல் விடுதலைத் தலைவர்கள் நூல் வரையும் தமிழில் மொழிபெயர்த்திருந்தார். இவர் முடிக்காதுவிட்ட எஞ்சிய வேலைகளைத் தரங்கம்பாடி மிஷனில் சேர்ந்து கொண்ட பெஞ்சமின் ஷுல்ட்ஸே என்ற வேறொரு ஜெர்மானிய அருட் பணியாளர் ஏற்றுக்கொண்டார். 1723-1728ஆம் ஆண்டுகளுக்கு இடைமில் ப.ஏ. வெளிவந்தது. ஷுல்ட்ஸே (Schultze) இப்பணிக்குத் தம்மைத் தகுதியாக்கிக் கொள்ளவில்லையாதலால், இதில் எழுந்த இடர்ப்பாடுகளின் அளவைக் குறைத்து மதிப்பிட்டார். பிற்காலத்தில் விவிலியத்தைத் தமிழில் பெயர்த்துத் தந்த பெப்ரிசியஸ் (Fabricius), ஷுல்ட்ஸேயின் மொழிபெயர்ப்பு 'வருந்தத்தக்கது' என்று குறிப்பிட்டுள்ளார். ஷுல்ட்ஸேயின் மொழிபெயர்ப்பில் காணப்படும் சில வேடிக்கையான சொற்றொடர்களுக்காக அது இன்று நினைவுகூரப்படுகின்றது. கீழ்வரும் சொற்றொடர்களை அதில் காணலாம். 'அப்பம்' என்பதற்குக் 'கஞ்சி', அத்தியிலைக்கு 'வாழையிலை', கழுதைக்கு 'நீச வாகனம்', ஒய்வு நாளுக்கு 'சாவது', ஆவிக்கு 'ஸ்பிரித்து'.

பல ஐரோப்பிய நாடுகளிலிருந்து சிலர் மிகத் துணிச்சலுடன் போர்த்துக்கீசியரைப் பின்பற்றி கிழக்குநாடுகளுக்கு வரத்தொடங்கினர். அன்னாருள் டச்சுக்காரரும் உண்டு. இவர்கள் ம்லாகாவின் கடற்காலுக்குக் கீழ்ரீகவும், இலங்கையின் கடற்கரையோரம் காணப்படுகிற மாகாணங்களிலும் கிழக்கு இந்திய கம்பெனியை ஏற்படுத்தினர்.

போர்த்துக்கீசியர்கள் உரோமன் கத்தோலிக்கத்தைப் பரப்புவதில் எடுத்துக்கொண்ட ஊக்கத்தினைப்போல டச்சுக் காரர்களும் திருத்தமுறைப் பிரிவினரும் தங்கள் கொள்கையைப் பரப்புவதில் ஊக்கங்கொண்டனர். 17 ஆவது நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து அவர்கள் பு.ஏ.ஐ மொழிபெயர்ப்பதில் ஈடுபட்டிருந்தனர். எனினும் இம் முயற்சி உல்லியம் பாரன் வான் இம்ஹாஃப் (William Baron van Imhoff) இலங்கை கவர்னர் ஆகும் வரையிலும் ஊக்குவிக்கப்படவில்லை. இவரது முயற்சியால் புதிய மத்தேயு நற்செய்தி நூல் 1741இல் வெளிவந்தது. அடுத்த ஆண்டிலேயே நான்கு நற்செய்தி நூல்களும் திருத்தூதுவர் நூலும் வெளிவரலாயின. இவ் வேலையை முழுமையடையச் செய்யவும், பு.ஏ.இன் முழு மொழிபெயர்ப்பை ஒழுங்குபடுத்தி அமைக்கவுங்கூடிய தகுதிபெற்ற ஒருவரை டச்சு கிழக்கிந்திய கம்பெனியின் அரசு காண நேரிட்டிருக் காவிட்டால், இப்பணி மேலும் முன்னேற்றமின்றி ஒரு நிலையிலேயே நிற்க நேரிட்டிருக்கும். இப்பணியை ஏற்றவர் பிலிப்பு டே மெல்கோ (Philip de Melho) என்னும் தமிழறிவு பெற்ற அறிஞராவார். இவர் தமது சொந்த மொழியை மட்டுமன்றி பல ஏனைய மொழிகளையும் நன்கறிந்தவர்; இறையியலிலும் தத்துவத்திலும் புலமை பெற்றவர். இவர் முயற்சியால் பு.ஏ. முழுவதும் 1759இல் வெளிவந்துவிட்டது.

இலங்கை மொழிபெயர்ப்பாளர்கள் சீகன்பால்கின் மொழிபெயர்ப்பைப் பெரிதும் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் தரங்கம்பாடி மொழிபெயர்ப்பிலிருந்தும் அவர் களின் மொழிபெயர்ப்பு பெரிதும் முன்னேற்றத்தைக் காட்டிற்று. எனினும் மொழிபெயர்ப்பின் எழுத்துநடை வேடிக்கையாகயிருந்தது. விவிலியத்தை மொழிபெயர்க்கத் தொடங்கிய நாள்களிலிருந்து அவர்கள் மூலத்தினை ஒட்டியே மொழிபெயர்க்க வேண்டியதாயிருந்தது. மிக நீண்ட சொற்றொடர்களால் எழுதப்பட்ட அவர்களது அறிமுகத்தினை வாசிக்கும்பொழுது, அந்நாள் வழக்கில் நீடித்திருந்த எழுத்து நடையின் சிறப்பியல்பு இந்த மொழிபெயர்ப்பில் நமக்குத் தெளிவாகத் தென்படவில்லை.

திரு விவிலியத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் தொடக்கத்தில் எதிர் நோக்கிட்ட பிரச்சனைகளில் ஒன்று கடவுள் என்ற சொல்லை முறையாக மாற்றியமைப்பது பற்றியதாகும். சமய இலக்கியம் மிகுதியாகவுள்ள தமிழ் போன்ற மொழிகளுக்கு இது பழக்கமற்றதாகத் தோன்ற லாம். ஆனால் இப் பிரச்சனையே கிறிஸ்தவ சமயத்திற்கும் இந்து சமயத்திற்கும் இடைப்பட்ட வெளிப்படையான அடிப் படை வேற்றுமை. பலவகைப்படும் தெய்வங்களின் தனிப்பட்டப் பெயர்கள் இந்து சமயத்தில் மலிந்துள்ளன. ஆயினும் எல்லாம் வல்ல கடவுளைக் குறிக்கும் ஒரு சொல் யாவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அங்குக் கிடையாது. எல்லாத் தெய்வங்களுக்கும் மேலான கடவுளைக் குறித்த ஈஸ்வரன் என்ற சொல்லும், யாவும் கடந்த மெய்ப் பொருளைக் குறித்த பிரம்மன் என்ற சொல்லும், 9ஆம் நூற்றாண்டில் புகழ்பெற்ற இந்து சமய ஆசிரியர் சங்கராச்சாரியாரால் அழிவெய்தியது. மக்கள் தொழு கைக்கு ஒரு காட்சிப்பொருள் தேவையானால் ஈசுவரனைப் பற்றி ஒரு பொதுக்கருத்து அறியப் பெற்றால் போதுமானது என்றார் இவர். உண்மையில் ஈசுவரன் இருந்திருக்கவே முடியாது. பிரம்மனைப் பற்றி அவர் குறிப்பிடும்போது இது உண்மையானதே; ஆனால் இதற்கென்று ஒரு தனியான குணம் கிடையாது ஆகவே தொழுகைக்குத் தகுதியற்றது என்றார் ஆனால் சைவ, வைணவப் பக்திச் சமயங்களில் கடவுள், இறைவன், பரன், பராபரன், தேவன், நாதன், பிரான், பெருமான் முதலிய பல்வேறு பெயர்கள் இலக்கியத்திலும் வழிபாட்டிலும் வழக்கி லிருந்தன.

இந்நிலையில் கிறிஸ்தவ அருட்பணியாளர்கள் பெரும் இடர்ப்பாடொன்றிற்குள்ளாயினர். கடவுளைக் குறித்த இச் சொற்கள் ஒன்றுமே தாங்கள் அறிவிக்க வேண்டிய கடவுளைக் குறிப்பதற்குப் பயன்படவில்லை. போர்த்துக்கீசிய அருட்பணியாளர்கள் முதன்மையாக தம்பிரான் என்ற சொல்லைப் பயன்படுத்தினர். பிற்பாடு ஈசுவரன் என்ற சொல்லுக்கு முன்பாக சர் என்ற அசையினைச் சேர்த்துச் சர்வேசுரன் என்றனர். சீகன்பால்க் இச் சொல்லை அவர்களிடமிருந்து பெற்றுப் பயன்படுத்தினார். டச்சு கிழக்கிந்திய கம்பெனியைச் சார்ந்த மொழிபெயர்ப்பாளரும் இவரைப் பின்பற்றினர். இச் சொல்லையே உரோமன் கத்தோலிக்கர் அண்மைக்காலம் வரை பயன்படுத்தி வந்தனர்.

18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து திருத்தமுறை சபையினர் பராபரன் என்ற சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கினர். இச் சொல்லைச் சுற்றி குறளடி பாடிய தாயுமானவர் எனும் தமிழ்ப் புலவரிடமிருந்துதான் இச் சொல்லை எடுத்தாண்டிருக்க வேண்டுமென்று நினைக்க ஏதுவுண்டு. உரோமன் கத்தோலிக்காரிடமிருந்து புரோட்டஸ்தாந்தினர் வேறானவர்கள் என்பதைக் குறிப்பிடுவதற்காகவே இம் மாற்றத்தை எடுத்தாண்டனர் என்பது வெளிப்படை. பிற்காலத்தில் மொழிபெயர்ப்பாளர் கள், மற்ற வேறுபட்ட சொற்களுக்கு மாறினார்களெனினும்,

லுத்தரன் சபையார். பராபரன் என்ற சொல்லை இன்றளவும் பயன்படுத்திவருகின்றனர். இதன் பிற்பாடு வந்த மொழிபெயர்ப்பாளர்கள் பயன்படுத்திய சொல்லினைப் பின்பு நோக்குவோம்.

4. பெப்ரிசியசின் மொழிபெயர்ப்பு

அடுத்து செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு தமிழ்த் திருமறை வரலாற்றிலேயே மிகவும் புகழ்பெற்ற மொழிபெயர்ப்பாகும்.

இது முக்கியத்துவம் பெற இதற்கு ஐந்து தகுதிகள் உள: (1) தமிழ்மொழியில் முழு விவிலியத்தையும் மொழி பெயர்ப்பதில் எடுத்துக்கொள்ளப்பட்ட முழுமையான முயற்சி இதுவேயாகும். (2) பல மாற்றங்கள் இதில் செய்யப்பட்டபோதிலும். இதனைத் தொடர்ந்து வந்த மொழிபெயர்ப்பேடுகள் யாவற்றிலும் இதுவே தரம் மிகுந்தது. (3) இந்தியக் கிறிஸ்தவர்களில் ஒரு பிரிவினர் (லுத்தரன்) இம் மொழிபெயர்ப்பேட்டினையே ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளாக தங்கள் ஒரே மொழிபெயர்ப் பேடாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். (4) கிறிஸ்தவத் தமிழ் என்றழைக்கப்படும் இலக்கிய நடையினை உண்டாக்கி யதே இம் மொழிபெயர்ப்புத்தான். மேலும் அந் நாள் வரையிலும் தமிழில் வெளியிடப்பட்ட உரைநடை வெளியீடு களில் பெரும்பகுதியான உரைநடைநூல் இதுவேயாகும்.

பெப்ரிசியஸ் இருபது ஆண்டுகள் பு.ஏ.இற்கு மட்டும் செலவிட்டு 808 பக்கங்கள் கொண்ட அதன் மொழிபெயர்ப்பை 1772இல் வெளியிட்டார். ப.ஏ.இன் முதல் பகுதி ஐந்து ஆண்டுகட்குப் பின்னரும், கடைசிப் பகுதி 1796இலும் வெளிவந்தன. சீகன்பால்கின் மொழிபெயர்ப்பு வசனங்களுக்கும், நமக்குப் பழக்கமான மொழிபெயர்ப்பு களுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. ஆயினும், பெப்ரிசியசின் மொழி பெயர்ப்பினைப் படிக்கும்பொழுது நமக்கு அது பழக்கப்பட்டதுபோன்ற உணர்வை அளிக் கிறது. அவர் பயன்படுத்திய பராபரன் என்ற சொல்லைக் காண நேரிடும்போது மட்டுமே நாம் பயன்படுத்தி வருகிற ஒன்றிலிருந்து வேறான ஒன்றினை வாசிக்கிறோம் என்ற உணர்வு ஏற்படுகிறது. இன்று சபைகளில் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டுவருகிற மொழிபெயர்ப்பேட்டை ஆக்கிய ளித்த குழுவின் உழைப்பினளவிற்கு ஈடாக பெப்ரிசியஸ் பு.ஏ.இல் செலவு செய்த 20 ஆண்டு உழைப்பானது அவருக்குப் பெரும் அனுபவத்தினை அளித்தது. மேலும், இக்குழு பொதுவாக இவருடைய பாட வேறுபாடுகளை ஒருவித மாற்றமுமின்றி தன்னுடையதாகச் சேர்த்துக் கொள்ள முடியும் என்று கண்டுகொண்டது.

பெப்ரிசியசின் மொழிபெயர்ப்பினைப் பிந்திய மொழி பெயர்ப்பாளர்கள் பெருமையாக மதிக்கக் காரணம், முதலாவதாக, உரைமூலத்திற்கு மாறுபடாத அவரது பதி லுரைகளும். இரண்டாவதாக, இயல்பான தமிழ்ப் பேச்சு நடை என்று தாம் கருதியவற்றில் மூலக்கருத்தினை எழுதிய அவரது ஆற்றலுமேயாகும்.

பிற்காலத்தில் அவர் எதிலிருந்து மொழிபெயர்த் திருந்தாரோ அந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட வாசகம்தான் (Textus Receptus) திட்பநுட்ப விவாதத்திற்குட்படலாயிற்று. அவருடைய தமிழ் எழுத்து நடை திருமறை நூலுக்கு ஏற்புடைத்தான மதிப்பினின்றும் தாழ்ந்த நிலையிலிருப் பதாகக் கருதப்பட்டது. எவ்வகையிலேனும் அதுகாறும் ஆக்கப்பட்ட மொழிபெயர்ப்புகள் எல்லாவற்றிற்கும் மேலான இடம் வகிக்க இது தகுதிபெற்றது என்பதற்கு ஐயமில்லை.

அவரது மொழிபெயர்ப்புகளிலிருந்து இரு வசனங் களைக் கீழே தருகிறேன்.

மத்தேயு 6:1மு.

மனுஷராலெ காணபபடுவதறகு அவாகள முனபாக உஙகள தறுமதை செயயாதபடிககு எசசரிககையாயிரு ஙகோள மறறபடி பரமணடலஙகளிலிருகிற உஙகள பிதாவினிடத்தில உஙகளுககு பலனிலலை.

ஆனபடியா நீ தறுமஞசெயகிறபொது, மாயகாறா தாஙகள மனுஷராலெ புகழபபடுவதறகு ஆலயஙகளிலும வீதிகளிலுஞ செயகிறபோலெ உன முனபாகத தாரை ஊதுவியாதே மெயயாகவே உஙகளுகுச சொலலுகிறேன அவா தஙகள பலனை அடைநது தீநதது.

நீயோவெனிலத தறுமஞசெயகிறபோது உனது தறுமம அநதரஙகமாயிருகிறதுகாக உன் வலது கை செயகிறதை உன இடது கை அறியாதிருகக கடவது.

5. 19ஆம் நூற்றாண்டின் மொழிபெயர்ப்புகள்

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்து நாட்டில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி எல்லா இடங்களிலுமுள்ள மொழிபெயர்ப்புகள் அனைத்தையும் ஆதரிக்கும் நிலையில் காணப்பட்டது. 1804இல் பிரித்தானிய வெளிநாட்டு வேதாகமச் சங்கம் (British and Foreign Bible Society) லண்டன் மாநகரில் நிறுவப்பட்டது. இதன் கிளைகள் இந்தியாவிலும் நிறுவப்பட்டன. 1811இல் இந்திய கிளை கலகத்தாவிலும், 1820இல் அதன் துணைச் சங்கம் சென்னையிலும் தொடங்கப்பட்டன. எனவே ஏற்பு பெற்ற திருமறை மொழிபெயர்ப்புகளை விநியோகிப்பது அந்தந்த வேதாகமச் சங்கங்களின் பொறுப்பாகியது. தமிழில் விவிலியத்தை மொழிபெயர்ப்பது சென்னை துணைச் சங்கத்தின் பொறுப்பாக்கப்பட்டது.

தமிழில் ஏற்கெனவே திருமறையின் மொழிபெயர்ப்பு ஒன்றிருந்தமையால், இம் மொழியில் இன்னுமொரு மொழிபெயர்ப்பு முதலில் தேவையானதாகத் தோன்ற வில்லை. ஆயினும் விநியோகிப்பதற்குப் போதுமான பகர்ப்புகளில்லை. ஆகவே, இயன்ற அளவிற்கு பல மொழிகளில் விவிலியத்தை மொழிபெயர்ப்பதில் தீவிர ஊக்கத்தோடு உழைத்த செராம்பூரிலுள்ள அதன் பணியாளர்களை இச் சங்கம் பெப்ரிசியசின் மொழி பெயர்ப்பேட்டினை மீண்டும் அச்சிட வேண்டியது.

எவ்வகையிலும் நாள்கள் செல்லச்செல்ல பெப்ரிசியசின் எழுத்து நடை மீதான விருப்பக் குறைவு வளரத் தொடங்கியது. தமது வாழ்க்கையின் துன்பம் மிகுந்த ஆண்டுகளில் ஆக்கப்பட்ட பெப்ரிசியசின் மொழிபெயர்ப் பேட்டின் சொல்லமைப்புகள், நீண்ட காலத்திற்குப் பிறகு பெரிதும் நடை நயங்கெட்டதாகத் தோன்றியது. எனவே நாளுக்குநாள் பெப்ரிசியசின் மொழிபெயர்ப்பேட்டில்

அதிருப்தி பெருகிக்கொண்டே வந்ததால், அம் மொழிபெயர்ப்பில் மாற்றங்கள் எதுவும் செய்யாமல் அவ்வாறே மீண்டும் அச்சடிப்பதற்குப் பதிலாக அம் மொழிபெயர்ப்பேட்டைத் திருத்தியமைக்கலாமென வேதாகமச் சங்கம் கருதியது. இப் பணிக்காக திருநெல்வேலியில் சி.எம்.எஸ். (C.M.S.) சங்கத்தாரால் வேலையில் அமர்த்தப்பட்ட C.T.E. இரேனியஸ் (Rhenius) என்ற ஜெர்மானிய அருட்பணியரை வேதாகமச் சங்கம் நியமித்தது.

பெப்ரிசியசைக் காட்டிலும் இரேனியசுக்கு இரு தன்மைகள் அதிகமாயிருந்தன. பெப்ரிசியஸ் ஒரு பன்மொழி அறிஞராய் இருந்தார் என்பதில் ஐயமில்லை. ஆயினும் இரேனியஸ் என்பவரோ, 14 ஆண்டுகள் தமிழ் கற்று, அவ்வாண்டுகளில் பெரும் தமிழ் அறிஞர்களில் ஒருவர் வாயிலாகக் கலை, இலக்கியம் முதலானவற்றைக் கற்றுத் தேர்ந்தமையால் கலை, இலக்கியம் ஆகியவற்றில் புலமை பெற்றுத் தமிழ்மொழியின்மேல் ஆற்றல் பெற்றவராகத் திகழ்ந்தார். இரண்டாவதாக, பெப்ரிசியஸ் தமது பணியை முற்றிலும் புதிதாகத் தொடங்க வேண்டியிருந்தது (சீகன்பால்கின் மொழிபெயர்ப்பு அவ்வளவு உதவியாக இல்லை). ஆனால் இரேனியசுக்குப் பெப்ரிசியசின் மொழிபெயர்ப்பு பெரும் துணையாக இருந்தது. மேலும், அது ஒரு திட்டவட்டமான மொழி பெயர்ப்பாக இருந்தது. பெப்ரிசியஸோ முற்றிலும் புதிய ஒரு மொழிபெயர்ப்பைப் படைக்க வேண்டியதாயிருந்தது. ஆனால் இரேனியசுக்குப் பழைய ஒன்றிற்குத் திருத்திய வடிவம் ஒன்றே கொடுக்கவேண்டியதாயிருந்தது.

பெப்ரிசியசின் எழுத்து நடையை அக்கால தமிழ்ப் புலமை திறத்தினளவிற்கு இணையாக ஆக்கவேண்டிய பொறுப்பு இரேனியசினுடையதாகும். இரேனியசினுடைய புதிய ஏற்பாடு இரு பகுதிகளாக வெளியிடப்பட்டது. நற்செய்தி நூல்களும் திருத்தூதுவர் நூலும் அடங்கிய பகுதி 1827இலும், முழு பு.ஏ. 1833இலும் வெளியாயின. இவர் பெப்ரிசியசின் நடையின் குறையை நீக்கிவிட்டு மொழிநடையை மிகவும் தூய்மைப்படுத்தினார். குறிப்பாக அஃறிணையின் பன்மை எழுவாய்க்கு ஒருமை வினையைப் பயனிலையாகப் பயன்படுத்திய தமது முன்னோடியின் பழக்கத்தைச் சரி செய்தார். எனினும் இரேனியசின் மொழிபெயர்ப்பேட்டிற்கு ஒரு பெருங்குறை காணப்பட்டது. அவர் கிரேக்க உரை மூலத்தை தாராளப்போங்குடன் கையாண்டுள்ளார் என்பதே அக் குறைபாடாகும்.

இந்நிலையில் களத்தில் இரு மொழிபெயர்ப்பேடுகள் இருந்தன. ஒவ்வொன்றிற்கும் அதனதன் சிறப்பும், குறையும் உண்டு. பெப்ரிசியசின் மொழிபெயர்ப்பேடு திட்பநுட்பம் வாய்ந்தது; எனினும் எழுத்து நடையில் நயங்கெட்டது. இரேனியசினுடையது மரபு மொழியில் தூய்மைபெற்றது; ஆயினும் மொழிபெயர்ப்பில் திட்பநுட்பம் குறைந்தது. இவை ஒவ்வொன்றையும் வியந்து பாராட்டுவோர் காணப்பட்டனர். தஞ்சாவூர், சென்னை லுத்தரன் சபையார், எஸ்.பி.ஜி. (S.P.G.) சபையார் ஆகியோர் பழைய மொழி பெயர்ப்பேட்டைச் சார்ந்தவராவர். மாறாக, வெஸ்லியன் மிஷன், லண்டன் மிஷன், அமெரிக்கன் மிஷன், சபை மிஷன் ஆகியோர் புதிய மொழிபெயர்ப்பினை வரவேற்றுப் பயன்படுத்தி வந்தனர். திருநெல்வேலியைப் பொறுத்த மட்டில், அது இரு பிரிவாகி ஒன்று எஸ்.பி.ஜி. சபைக்குக் கீழும், மற்றொன்று சி.எம்.எஸ். சபைக்குக் கீழுமாக இருந்தது.

இந் நிலைமை தொடர்ந்து நீடிக்காதிருக்க, இரு மொழிபெயர்ப்பேடுகளின் சிறப்பியல்புகளையும் ஒன்றாக்கி, எல்லாரும் புகழ்ந்து வரவேற்குமளவிலான புதிய தொரு மொழிபெயர்ப்பேட்டை வெளியிடும் பொறுப்பை வேதாகமச் சங்கத்தின் யாழ்ப்பாணத் துணைச் சங்கம் ஏற்றுக் கொண்டு, சென்னை துணைச் சங்கத்தின் ஒப்புதலை 1839இல் பெற்றுக் கொண்டது. இப் பணியை ஒழுங்காக மேற்பார்க்க ஒரு குழுவையும் நியமித்தது. லெவிஸ்பால்டிங் (Levi Spaulding) என்ற அமெரிக்க அருட்பணியாளரும், பீட்டர் பெர்சிவெல் (Peter Percival) என்ற பிரித்தானிய மெதடிஸ்ட் சபை அருட்பணியாளரும் இக்குழுவில் முதன்மையானோராவர்.

யாழ்ப்பாண மொழிபெயர்ப்பேட்டிற்குத் தமிழ் விவிலிய மொழிபெயர்ப்பு வரலாற்றில் மட்டுமின்றித் தமிழ் மொழி இலக்கிய வரலாற்றிலுங்கூட தனி இடம் உண்டு. ஏனெனில் இப் பணியில் பெர்சிவலுக்குத் துணையாக இருந்தவர் ஆறுமுக நாவலராவர். இவர் சைவ சமயப் பெரியார் எக்காலத்திலும் பெருந் தமிழறிஞராகக் கருதப்படுகிறவர்களில் ஒருவர். தமிழ் உரைநடையை நன்னிலைக்குக் கொண்டுவந்தவரும் இவரே.

யாழ்ப்பாணத் துணைச்சங்கம் இப் பணியைத் தொடங்கியவுடனே சென்னை துணைச் சங்கம், மொழி பெயர்ப்பானது 1611இல ஆக்கப்பட்ட, உரிமைபெற்ற ஆங்கில மொழிபெயர்ப்பினின்று எவ்விதத்திலும் விலகிச் செல்லக் கூடாதென்று ஒரு முடிவை நிறைவேற்றியது. இம் முடிவு புது மொழிபெயர்ப்புகள் உரிமை பெற்ற மொழி பெயர்ப்பேட்டின் மொழிநடைக்கும், நிறுத்தக் குறியீடுகளுக்கும் ஒத்தனவாயிருக்கவேண்டுமென்று 1841ஆம் ஆண்டில் செய்த முடிவிற்குப் பெரிதும் பலனை அளித்தது. பல பகுதிகளிலிருந்து எழுந்த புரட்சிக்குப் பின்பு, சிறப்பான காரணங்களை முன்னிட்டன்றி யாழ்ப்பாண துணைச் சங்கம் எவ்வகையிலும் உரிமைப்பெற்ற மொழிபெயர்ப்பினின்று சிறிதும் விலகக்கூடாது என்ற முன்னைய முடிவில் சிறிது மாற்றம் செய்யப்பட்டது.

யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு பல பகுதிகளாக வெளிவரத் தொடங்கியபோது சென்னையில் அதிருப்திக் குறிகள் உண்டாயின. இதற்குப் பல காரணங்கள் உண்டு. உரைமூலத்திற்கு யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு தேவையான அளவிற்கு உண்மையுள்ளதாயிருக்கவில்லையென்பது ஒன்று. யாழ்ப்பாணத் தமிழ் தென்னிந்தியத் தமிழிலிருந்து வேறுபட்டது என்பது மற்றொன்று. யாழ்ப்பாண அருட் பணியாளர்கள் இத் திறனாய்வுக்கு மறுமொழியாக தமது திறனாய்வாளர்கள் நல்ல தமிழ் அறியாதவர்களென்றும், அவர்களது தமிழறிவு பெப்ரிசியசின் நடையிலிருந்து உருவானதென்றும் கூறினர்.

யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு 1848இல் முற்றுப் பெற்றது. பால்க் கடலிடுக்கின் இரு பக்கத்தாரும் இம் மொழிபெயர்ப்பை ஏற்றுக் கொள்வதற்காக, பெர்சிவலும், ஸ்பால்டிங்கும் சென்னை சங்கத்தின் இரு பிரதிநிதிகளோடு வந்து உழைத்தனர். இதனை அந் நாளில் தமிழ்ப் பேரறிஞர்களில் ஒருவரும், உயர்புகழ் எய்தியவருமான மாலுவை மகாலிங்கம் ஐயரிடம் ஒப்புவித்தனர். 1850இல்

இது அச்சினின்று வெளியானது.

அக் கால இந்திய கிறிஸ்தவர்களின் தமிழ் நடை பெப்ரிசியசிடமிருந்து வாரிசாகப் பெறப்பட்டதாகும். இவர்களது நடை கிறிஸ்தவரல்லாத தமிழர்கள் பங்கு பெறாத ஓர் செயற்கை நடையாகும். ஆயினும் யாழ்ப்பாண மொழி பெயர்ப்பேட்டின் தமிழ்நடை பெரிதும் கிறிஸ்தவரல்லாத தமிழறிஞர்களின் உழைப்பாலானதாகும். இது தென்னிந்தியக் கிறிஸ்தவத் தமிழர்களின் செவிகட்குப் பழக்கப்படாததாகவும், வேறாகவும் ஒலித்தபடியால், அவர்கள் இந்த யாழ்ப்பாண மொழிபெயர்ப்பின் பகர்ப்புகளை வாங்கவும் மறுத்து விட்டனர்.

யாழ்ப்பாண மொழிபெயர்ப்பை முற்றிலுமாகப் புறக்கணித்ததற்குச் சில காரணங்கள் தேடியாக வேண்டும். முதல்தரமான இலக்கியவளம் வாய்ந்த தமிழ் மொழியோடு இது சேர்க்கைகொண்டது என்று கூறி விடுவது போதாது. யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு அதிக அளவில் வடமொழிச் சொற்கள் கலந்துள்ளது என்று கூறப்பட்டது. ஆயினும் யாழ்ப்பாண அருட்பணியார்கள் சென்னை துணைச் சங்கம் பிற்பாடு இயற்றிய மொழி பெயர்ப்பேட்டில் தங்கள் மொழிபெயர்ப்பில் காணப்பட்ட அளவு வடமொழிச் சொற்கள் நிறைந்துள்ளன என்பதை நிறுவினர். யாழ்ப்பாண மொழிபெயர்ப்பேட்டில் புனித மத்தேயு நற்செய்தி நூலில் வடமொழிச் சொல்லின டிப்படையில் பிறந்த 2994 சொற்களும், சென்னை மொழிபெயர்ப்பேட்டில் 2856 சொற்களும் காணப்பட்டன.

கடவுள் என்ற சொல்லை மொழிபெயர்ப்பதில் பெர்சிவெல் மொழிபெயர்ப்பு (அல்லது பரீட்சை மொழி பெயர்ப்பு) குறிப்பிடத்தகுந்த இரு செயல்களைச் செய்தது: பெப்ரிசியஸ், இரேனியஸ் என்பார் பயன்படுத்திய பராபரன் என்ற சொல்லை விட்டுவிட்டு தேவன் என்ற சொல்லைப் பயன்படுத்தியது. இச் சொல் துவக்கத்திலேயே பல கருத்து வேறுபாடுகளுக்குட்பட்டது. இது அண்மை யில்கூட கடவுளைக் குறிக்க கிறிஸ்தவர்கள் சிறப்பாக பயன்படுத்தி வந்த சொல்லாகும். இச்சொல் கிறிஸ்தவ சொல் அட்டவணையில் அறிமுகப்படுத்தப்பட்டது 1850தான் என்பதையும், அதுவும் புறக்கணிக்கப்பட்ட மொழிபெயர்ப் பால என்பதையும் நமது மக்கள் உணரவில்லை. திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங்களில் மகாதேவன், தேவாதி தேவன், திருப்பெருந்துறைத் தேவன் என்று அடைமொழியுடன் இச்சொல் வழங்கப்பட்டிருக்கிறதேயன்றி பெரும்பாலும் முழுமுதற் கடவுளைக் குறிக்க அது தனியாக வரவில்லை. இச்சொல் பெண்பாலுக்கும் (தேவி), பலவின் பாலுக்கும் (தேவர்கள்) இடமளிப்பதால் ஓர் ஆபத்தானச் சொல்லாகும். கிறிஸ்தவரின் கடவுள் பல தேவர்களில் ஒருவர் என்பதைக் காட்ட ஆறுமுக நாவலர் செய்த சூழ்ச்சியின் விளைவாக இரண்டாவதாக, இது கர்த்தர் என்ற பெயரை மொழி பெயர்க்க மறுத்துவிட்டு யெகோவா என்ற எபிரேயப் பெயரைப் பயன்படுத்தியது.

கிறிஸ்தவ சமயம் ஐரோப்பிய ஈடுபாடுகொண்ட தமிழ் மொழியோடு பிணைக்கப்பட வேண்டிய தேவை இல்லை யென்றும், அதனை நல்லதோர் இலக்கிய வளம் மிகுந்த மொழிநடையில் வெளிப்படுத்த முடியும் என்பதையும் இந்தத் தற்காலிக மொழிபெயர்ப்பு உலகிற்குச் சுட்டிக் காட்டிற்று. இது புறக்கணிக்கப்பட்டாலும், இதற்குப் பின்னால் எழுந்த மொழிபெயர்ப்புகள் மேல் இது அதிக ஈடுபாட்டை ஏற்படுத்தியது. மொழிபெயர்ப்பாளர்கள் தங்கள் முன்னிலையில் எப்போதும் இத் தற்காலிக மொழி பெயர்ப்பை (Tentative Version) வைத்திருந்தனர்.

தற்காலிக மொழிபெயர்ப்பு ஒரே மாதிரியான மொழிபெயர்ப்பு உருவாவதை இல்லாமல் செய்ததோடு, நிலைமையை மேலும் மோசமாக்கி விட்டது. ஏனெனில், இப்பொழுது களத்தில் இரு மொழிபெயர்ப்புக்களுக்குப் பதிலாக தமிழ்க் கிறிஸ்தவர்களின் பற்றுறுதியைக் குலைக்க மூன்று மொழிபெயர்ப்புகள் காணப்பட்டன. வேதாகமச் சங்கம் இப் பிரச்சனைக்குத் தீர்வுகாண முற்பட்டது. இது செய்த மிக முக்கியமான முடிவுகளில் ஒன்று. இந்தியாவில் உழைத்துக்கொண்டிருக்கும் முக்கியமான எல்லா திருத்தமுறை அருட்பணி இயக்கங்களும், தங்கள் பிரதி நிதிகளை மொழிபெயர்ப்புக் குழுவிற்கு அனுப்பி இத் துணிகரச்செயலில் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொண்ட தாகும். எஸ்.பி.ஜி-யைச் சேர்ந்த மறைத்திரு. H. பவர் (Bower - இவர் தந்தை பிரஞ்சுக்காரர், தாய் இந்திய மாது) என் பார் தலைமை மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டார்.

1858இல் புதிய மொழிபெயர்ப்பினை ஆக்கும் வேலை தொடங்கியது. இக்குழுவில் பேரறிஞர் கால்டுவெல், E. சார்ஜன்ட் (பின்னாள் பேராயர்) என்பவர்கள் பவருக்குத் துணையாக இருந்த முக்கிய உறுப்பினர்களாவர். இவ்வேலை தொடங்கப்பெற்று மூன்று ஆண்டுகளுக் குப்பின்னர், புலவர் கிருஷ்ணபிள்ளையின் சகோதரர் நு.முத்துப்பிள்ளை பவருக்குத் துணையாக ஏற்படுத்தப்பட் டார். ப.ஏ. மொழிபெயர்ப்பில் எஸ்.பி.ஜி./யைச் சேர்ந்த T.பிரதர்டன் என்பவர் பெரும் தொண்டாற்றினார். பெப்ரி சியசின் மொழிபெயர்ப்பை, இக்குழு தங்கள் வேலைக்கு அடிப்படையாகவும், 1611இல் உரிமைபெற்ற ஆங்கில மொழிபெயர்ப்பை சொல் நடையின் எளிமைக்கும் இனிமைக்கும் மாதிரியாகவும் கொண்டிருந்தது. இம் மொழிபெயர்ப்பினை எல்லாரும் ஏற்றுக்கொள்ளுமாறு பவர் அண்மையிலும் வெகுதூரத்திலுமிருந்தவர்களிட மிருந்து கருத்துக்களைப் பெற்று, அவற்றினை மிகக் கவனத்தோடு ஆழ்ந்து ஆராய்ந்து வந்தார்.

இரு திசைகளிலிருந்து சிக்கல் எழுந்தது. பெப்ரிசியசின் மொழிபெயர்ப்பில் மாற்றங்கள் செய்வதற்கெதிராக லுத்தரன் சபையினர் புரட்சி செய்தனர். அன்னார் மிக அண்மையிலுங்கூட அம் மொழிபெயர்ப்பினையே தொடர்ந்து பயன்படுத்தி வந்தனர். மற்றொரு பக்கத்தில், பவர் தங்கள் மொழிபெயர்ப்பைப் புறக்கணித்துவிட்டு பெப்ரிசியசின் மொழிபெயர்ப்புக்குத் திரும்பவும் செல்கிறார் என்று யாழ்ப்பாண அருட்பணியாளர் குறைப்பட்டுக் கொண்டனர். ஆகவே, அவர்கள் தங்களுக்கென ஒரு மொழிபெயர்ப்பை ஆக்குவதாக அச்சுறுத்தினர். இப் பிரச்சனைகளுக்கிடையில் 1868இல் பவர் குழுவின் வேலை முற்றுப்பெற்றது. வேதாகமச்சங்கம் இதற்கு யாவருடைய ஒருமுகமான ஒப்புதலையும் பெற விரும்பியது. லுத்தரன் சபையினரோடு சண்டையிட்டு இப்பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியாது என்ற முடிவுக்கு வந்தது. ஆனால், யாழ்ப்பாண அருட்பணியரோடு செய்த வாதத்தால், இப்பிரச்சனைக்கு ஒரு வழி கண்டது. பவர் குழுவிற்கும் யாழ்ப்பாண அருட்பணியாளருக்குமிடையில் ஏற்பட வேண்டிய கருத்தொற்றுமையின் தேவையை, யாழ்ப்பாண

அருட்பணியாளரது எச்சரிப்பு சென்னை துணைச் சங்கத்திற்கும் லண்டனிலுள்ள தாய்ச் சங்கத்திற்கும் மெய்ப்பித்துக் காட்டியது.

பேரறிஞர் கால்டுவெல், பவர், முத்துப்பிள்ளை என்பவர்கள் சென்னை சங்கச் சார்பிலும், பேரறிஞர் லெவி ஸ்டால்டிங், ஜான் கில்னர் என்பவர்கள் யாழ்ப்பாணச் சங்கச் சார்பிலும், 1869 ஏப்ரல் திங்களில் வேப்பேரியில் இரு வாரங்கள் கூடினர்; விவிலியத்தின் சில பகுதிகளை மட்டும் எடுத்துக் கொண்டு, பவர் பின்பற்றிய சில மூலக் கோட்பாடுகளை நிலை நிறுத்தினர்; புனித மத்தேயுவில் மட்டும் யாழ்ப்பாண அருட்பணியர்கள் தெரிவித்த கருத்தின்படி 468 பிழைத்திருத்தங்கள் செய்தனர். இவர்களுள் ஏற்பட்ட ஒரு கருத்தொற்றுமை, யாவே என்ற சொல்லை மொழிபெயர்க்க கர்த்தர் என்ற சொல்லைப் பெரிய எழுத்தால் எப்போதும் அச்சிட வேண்டும் என்பதாகும்.

பவர் ஆக்கிய மொழிபெயர்ப்பு 1871இல் அச்சிலிருந்து வெளியாகியது; இது ஐக்கிய மொழி பெயர்ப்பேடு (Union Version) எனப்பட்டது. ஏனெனில் பொதுவாக முக்கியமான திருத்தமுறைப் (லுத்தரன் சபையாரைத் தவிர) பிரிவினர் யாவரும் இதனை ஆக்குவதில் பெரிதும் உதவினர். இம் மொழிபெயர்ப்பு பின்னால் இருமுறை மறு ஆய்வு செய்து சீராக்கப்பட்டபோதிலும், இன்றும் தமிழ்நாட்டில் சபையாகவும், தனியாராகவும் பல மக்கள் இதையே பயன்படுத்தி வருகின்றனர். இதில் ஒரு புள்ளியையாவது அல்லது தலைப்பினையாவது மாற்ற பலர் பல ஆண்டுகளாக எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. அன்னார் கடவுளுடைய வார்த்தையினை புரட்டுகிறார்கள் என்று கூறுமளவிற்கு இந்த ஐக்கிய மொழிபெயர்ப்பேடு தனக்கென்று ஒரு தனி இடத்தினை ஏற்படுத்திக் கொள்ளலாயிற்று.

இந் நிலையினை இது அடையப் பெற்றதற்குக் கீழ் வருவன காரணங்களாகும்:

1. பல அருட்பணிச் சங்கங்கள் இதனை ஆக்க உதவின. ஒவ்வொன்றும் இதன்பால் தனக்கு உரிமை உண்டு என்ற எண்ணம் கொள்ளலாயிற்று.

2. பெரும்பான்மையோர் இதனை ஏற்றுக்கொள்ளுமாறு பல பகுதிகளிடமிருந்தும் வந்த கருத்துக்களை ஏற்றுக் கொண்டு குழு ஆழ்ந்து ஆராய்ந்தது.

3. இது அந்நாளில் கிடைக்கப்பெற்ற நல்லறிவினைக் கொண்டு கவனமாக ஆக்கப்பட்ட ஒரு படைப்பாகும்.

4. இது பொதுவாக கிறிஸ்தவர்கள் நடுவிலுள்ள எளிய தமிழ் உரையாடல் நடையின் சேர்க்கையாகும்.

5. வேதாகமச் சங்கம் ஏனைய மொழிபெயர்ப்புகளை அச்சிடுவதைக் கைவிட்டது.

6. 20ஆம் நூற்றாண்டு மொழிபெயர்ப்புகள்

ஐக்கிய மொழிபெயர்ப்புக் குழு தான் எக் காலத்திற்கும் பொருந்தத்தக்க விவிலியத்தின் ஒரு தமிழ் மொழிபெயர்ப் பேட்டைப் படைத்துவிட்டோம் என மனதிற் கொண்டிருந்தது. எனினும், அரை நூற்றாண்டிற்குள்ளாகவே ஒரு புதிய மொழிபெயர்ப்பின் தேவை இன்றியமையாதது என்பதை அறிஞர் பல காரணங்களால் நிலைநாட்ட முற்பட்டனர். முதலாவதாக, ஐக்கிய மொழிபெயர்ப்பேட்டை ஆக்குவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியில் ஒத்துழைக்காமலும், அதனைப் படைத்தபிறகு ஏற்றுக் கொள்ளாமலுமிருந்த லுத்தரன் சபையார் இப்பொழுது தமிழ்நாடு முழுமைக்கும் ஒரே மொழிபெயர்ப்பு ஏற்பட்டிருக்க வேண்டிய தேவையை உணரலாயினர். இரண்டாவதாக, இந்தியாவின் நாட்டுப் பற்றின் எழுச்சியானது வெளிநாட்டு அருட்பணியாளர்களுடைய தமிழறிவோடு ஆக்கப் பெற்ற மொழிபெயர்ப்பில் அதிருப்தி கொள்ளச் செய்ததோடு, இலக்கியவளம் மிகுந்த தமிழ் நடையோடு ஒத்ததொரு மொழிபெயர்ப்பு வேண்டும் என்ற உணர்வையும் உண்டாக்கியது. மூன்றாவதாக, இந்த ஐக்கிய மொழி பெயர்ப்பைப் பயன்படுத்தியவர்களுடைய, அல்லது பயன் படுத்தாதவர்களுடைய விருப்பம் எதுவாயிருந்த போதிலும், அறிஞர்கள் இம் மொழிபெயர்ப்புகள் பயன்படுத்திய கிரேக்க மொழியின் அடிப்படையில் சில மாற்றங்கள் செய்தாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

இதற்கான காரணங்களில் முதல் இரண்டும் ஒரு குறிப்பிட்ட மொழியில் குறிப்பிட்ட ஓர் மொழிபெயர்ப்பேட்டில் தொடர்பு கொண்டதாகும். மூன்றாவது காரணம் உலகெங்குமுள்ள எல்லாத் திருமறை மொழிபெயர்ப்பு வேலைக்கும் பொருந்துவதாகும். 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் டிஷ்ஷென்டார்ஃப் (Tischendorf) என்பார், சைனாயிட்டிகஸ் (Codex Sinaiticus) என்ற ஏட்டினைக் கண்டுபிடித்தது குறிப்பிடத்தக்கது. இது பீசே (Codex Bezae), வட்டிக்கானஸ் (Codex Vaticanus), அலெக்ஸான்டிரினஸ் (Codex Alexandrinus) என்ற ஏடுகளைவிட பழமை வாய்ந்த கிரேக்க உரைமூலங்களைக் கற்றவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயர்ப்பேடு (Textus receiptus) முதல்தரமான கிரேக்கச் சுவடிகளை அடிப்படையாகக் கொண்டதல்ல என்றும், ஆகவே இது நம்பத்தக்கதொரு மூலவுரை அல்லவென்றும் உணர்ந்தனர். இங்கிலாந்து நாட்டில், வெஸ்ட்காட், ஹார்ட் என்பவர்கள் இத்தகைய தொன்மைமிக்க மூல ஆதார ஏடுகளினடிப்படையிலேயே புதிய ஏற்பாட்டின் கிரேக்க உரை மூலத்தினை மீண்டும் உருவாக்கினர். 1880 முதல் 1889 வரையுள்ள ஆண்டுகளில் உரிமை பெற்ற திருத்திய ஆங்கில மொழிபெயர்ப்பில் இதுவே பயன்படுத்தப்பட்டது. (இந்தத் தொன்மையான ஆதாரச் சான்றுகள் யாவும் பு.ஏ.ஐக் குறிப்பனவாகும். ப.ஏ.ஐப் பொறுத்தமட்டில் நமது மொழிபெயர்ப்புகளில் பயன்படுத்தப்பட்ட ஒன்று ஒன்பதாவது நூற்றாண்டுச் சுவட்டினை அடிப்படையாகக் கொண்டதும் முற்றிலும் நம்பத் தகுந்ததுமாகும்.)

திருத்தியமைக்க வேண்டுமென்று நாளுக்கு நாள் வலுப்பெற்று வந்த கோரிக்கைக்கு வேதாகமச் சங்கம் தலை சாய்த்தது. ஆயினும் முதலாம் உலகப் போர் இன்னும் நடந்துகொண்டிருந்ததால் உடனடியாக ஒன்றும் செய்ய முடியவில்லை. திருத்தியமைக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்த சமயத்தில்தான் ஐக்கிய மொழி பெயர்ப்பு, கிறிஸ்தவ சமுதாயத்தில் ஒரு பெரும்பற்றுதலை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. மேலும் பழைய மொழி பெயர்ப்புகளெல்லாவற்றையும் உருகும் பானையில் போடும்போது எஞ்சுவது எதுவாக இருக்கும் என்ற

அச்சமும் மிகுந்திருந்தது. ஆகவே இதில் எடுத்துக் கொள்ளும் கொள்கை முற்றிலும் புதியதோர் மொழி பெயர்ப்பினை அடைவதன்று. ஒரு திருத்திய அமைப்பை அடைவது மட்டுமே என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

பெரும்பாலான அருட்பணிச் சங்கங்களும் இந்தத் திருத்தியமைப்புக் குழுவுக்குப் பிரதிநிதிகளை நியமித்தனர். 1923இல் நன்முறையில் தேடி ஆராய்ந்த பிறகு வேதாகமச் சங்கம் பங்களூரில் உள்ள ஐக்கிய இறையியற் கல்லூரியின் அன்றையத் தலைவரான பேரறிஞர் L.P. லார்சன் என்பவரை முதன்மையான மொழிபெயர்ப்பாளராகத் தெரிந்தெடுத்தது. இந்நியமனத்தை ஒப்புக்கொள்வ தற்குமுன் பேரறிஞர் லார்சன் சில அடிப்படையான சொற்களை மொழிபெயர்ப்பதில் பவரிடமிருந்து மாறுபடும் உரிமையினையும், தமது உடன் மொழிபெயர்ப்பாளரைத் தெரிந்தெடுக்கும் உரிமையினையும் பெற்றுக்கொள்ள விரும்பினார். இவற்றில் தேவையான உறுதிப்பாடுகளைப் பெற்ற பின்பு லார்சன், சென்னை ஒய்.எம்.சி.ஏ.இல் முன்பு முன்ஷியாக இருந்த G.S.துரைசாமிப் பண்டிதரைத் தேர்ந்தெடுத்தார். இவரும் 1924இல் பணியைத் தொடங்கினார்.

பு.ஏ.இன் பகுதிகள், அவைகள் முற்றுப்பெற்றவுடன் வெளிவரத் தொடங்கின. திருத்தியமைப்பே தேவையில்லை என்று வாதித்தவர்களின் அச்சத்தை இவை மெய்ப்பிப்பன வாகத் தோன்றின. 1928இல் முழு பு.ஏ.ம் வெளியாயிற்று. ஒரு பெருங்கண்டனக் குரலுக்கும் ஏதுவாயிற்று. எஸ்.ஏசுவடியான், ஒய்.சாமுவேல் போன்ற தலைவர்கள் இக் கண்டனக் குரலுக்கு எண்ணெய் வார்த்தனர். பின்னவரின் திங்கள் வெளியீடான நல்ல சமாரியன் இப் புதுமொழிப் பெயர்ப்பேட்டிற்கு எதிராக பெரும் எதிர்ப்பினை உரு வாக்கப் பெரிதும் உதவியது. இடைவிடாது அவர்கள் எழுதிக்கொண்டிருந்தமையால், கிறிஸ்தவர்களின் பொது வான கருத்தை அவர்கள் தங்கள் வயமாக்கிக் கொள்ள முடிந்தது.

லார்சனுடைய மொழிபெயர்ப்புக்கெதிரான இவர்களது கிளர்ச்சிக்கு மூலதனம் என்னவெனில், இது பவரினுடைய மொழிபெயர்ப்பன்று என்பதே. அவர்களது எதிர்ப்பினை வாசித்த பெரும்பான்மையோர் லார்சன் மொழிபெயர்ப் பைக் கண்டதே இல்லை. அவர்களுக்கு பவரினுடைய மொழிபெயர்ப்பு வழியாக அறியப்பெற்ற கடவுளுடைய வார்த்தை மாற்றப்பட்டிருக்கிறது என்பதினை மட்டும் அறியப் பெற்றது போதுமானது. இவ் வெதிர்ப்புக் கருத்தோடு தங்கள் வீடு செல்லுமாறு ஏசுவடியானும் அவரது நண்பர்களும் லார்சனுடைய இறையியல் கருத்துக் களையும், அவரது மொழிபெயர்ப்பிற்கு இணையான உரிமைப்பெற்ற ஆங்கில மொழிபெயர்ப்பினை ஆக்கிய குழுவின் உறுப்பினர்களின் கருத்துக்களையும் தாக்க முயற்சித்தனர். இப்பொழுது அறிஞர்கள் தங்கள் முழு நம்பிக்கையையும் வைத்த ஏடுகளைக் (Codices) காட்டிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஏடுதான் (Textus Receptus) மிகவும் நம்பத்தகுந்த ஒன்று எனக்கூறி. இத்தகைய உண்மை களைப்பற்றி ஒன்றும் அறியப் பெறாத தங்கள் வாசகர் களைத் தங்கள் கருத்திற்கு உடன்படச் செய்தனர்.

பேரறிஞர் லார்சனோடு வேதாகமச்சங்கம் மிகுந்த உறுதியுடனிருந்தது அவரோடு ஒத்துழைத்து ப.ஏ.ஐ 1932இல் முடித்து, 1935இல் வெளியிட்டது. ஆயின், லார்சனுக்கெதிரான கூட்டத்தின் எதிர்ப்பு ஆற்றல், இம் மொழிபெயர்ப்பேட்டினை மிகச் சிலரே வாங்கச் செய்ய மளவிற்கு வெற்றியடைந்தது.

இந்நிலையினைக் கண்ணுற்றபொழுது, பவரினுடைய மொழிபெயர்ப்பின் தகுதி பல நிலைகளில் சிறப்பாக விளங்கினது. பேரறிஞர் லார்சனின் மொழி பெயர்ப்பு இவ் வெதிர்ப்புக்குள்ளானது இரங்கத் தக்கதேயாகும். அறியாத ஒன்றினைக் குறித்துத் திகிலுண்டாக்குவது எளிது; ஆகவே லார்சனுடைய மொழிபெயர்ப்பினை வாசிக்காத வர்களை, அதனை வாசிக்கக் கூடாது என்று அவர்களைத் தன் வயமாக்குவதும் மிக எளியதே. சான்றாகக் குறிப்பிடும் எல்லா வாதத்தினையும், ஏற்றுக்கொள்வதற்குத் தேவைப் படும் அறியாமை இம் மக்களிடம் இருக்கும்போது குறிப்பாக அது மிகவும் எளியதாகி விடுகிறது. ஆனால் இன்னொன்றும் நாம் அறிய வேண்டும். இக்குற்றத்தினை, மாறுதலை விரும்பாத தலைவர்கள்மேல் முழுவதும் சுமத்திவிட முடியாது. பேரறிஞர் பவர் பொதுமக்களின் கருத்தினைத் தம்பால் ஈர்த்துக்கொள்ள பெரும் முயற்சி எடுத்துக் கொண்டதும், முன் ஆதார ஏட்டின் பல கருத்துக்களைக் கலந்தாலோசித்ததும் நோக்கற்பாலது. பொதுமக்களின் கருத்தினை மனதிற்கொள்ளாது ஆக்கப் பெற்ற தற்காலிக மொழிபெயர்ப்பு ஒப்புக்கொள்ள மறுக்கப்பட்டதெவ்வாறு என நிறுவப்பட்டபின் பவர் தமது மொழிபெயர்ப்பை உருவாக்கினார். பேரறிஞர் லார்சனோ பல ஆண்டுகளாக எதிர்ப்பின்றி நிலைத்திருந்த மொழி பெயர்ப்பின் சூழ்நிலையில் பணியாற்றலானார். தாம் ஒரு மொழி பெயர்ப்பை ஆக்க, அதனை எல்லோரும் ஏற்றுக் கொள்வர் என்று அவர் எண்ணினார்.

லார்சன் மொழிபெயர்ப்பில் செய்யப்பட்ட இரு முக்கிய மாற்றங்கள் என்னவெனில், தேவன் என்பதற்குப் பதிலாக கடவுள் என்றும், கர்த்தர் என்பதை யெகோவா என்றும் மாற்றியதாகும். முதல் மாற்றம் தேவையானதே, பொருத்தமற்றச் சொல்லிற்குப் பதிலாகப் பொருத்தமான சொல்லே பயன்படுத்தப்பட்டது. இரண்டாவது மாற்றம் சரியான தன்று. அது ஐரோப்பிய மொழியின் பொதுவான நடைமுறைக்குட்பட்டதாயிருந்தும் உள்ளூர் வட்டாரத்தின் எதிர்ப்புக்கு ஆளாக வேண்டியிருந்தது. 23ஆம் சங்கீதத்தில் கர்த்தர் என்பதற்குப் பதில் யெகோவா என்று லார்சன் மொழிபெயர்ப்பில் இருந்தமையே எதிர்ப்புக்கு முதன் மையாக காரணம் என்று கூறப்படுகிறது.

எனினும், லார்சன் மொழிபெயர்ப்பினால் உண்டான நன்மைகளைப் பாதுகாக்கவா அல்லது அவரது மொழி பெயர்ப்பில் ஒப்புதல் பெறாத மூலப்பொருட்களை ஒதுக்கவா என்ற பிரச்சனைக்குத் தீர்வுகாணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பிடப்பட்ட இவ்விரண்டும் வேற்றுமையுள்ள உழைப்பு அல்லவென்றும், பின்னதற்குத் தீர்வு காண்பதன்மூலம் முன்னதற்கும் வழி காணலாம் என்றும் சங்கம் உணர்ந்தது. புதிய கிரேக்கமூல உரையோடு, மக்களை ஒருமைப்படுத்தும் மேலான வழி யாதெனில், கூடியவரையிலும் பழைய தமிழ் உரைமூலத்தி னையே வைத்துக்கொள்வதாகும். ஆகவே அடுத்துவரும் மொழிபெயர்ப்பு இயன்ற அளவில் பவரின் மொழிக்கு நெருங்கியதாக இருக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. லார்சனுடைய மொழிபெயர்ப்பு பவரினு

டைய திருத்திய அமைப்பாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இப்போது புது மொழி பெயர்ப்பு லார்சனுடைய திருத்திய அமைப்பாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் லார்சன் மொழிபெயர்ப்பு பவர் மொழிபெயர்ப்பினைப் போன்ற தோற்றத்தினையளிக்க வேண்டும்.

1939இல் புதிய மொழிபெயர்ப்பிற்கான வேலை மெதடிஸ்ட் அருட்பணியாளரான சி.எச். மோனகனின் தலைமையின்கீழ் தொடங்கியது. பு.ஏ.பகுதிக்காக இக் குழுவில் தொண்டாற்றியவர்கள் பேராயர் ஸ்டீபன் நீல், பேராயர் அசரையா, எச்.கே.மோல்ட்டன், எச். ப்ஜெரும், ஜே.எஸ்.மாசிலாமணி, எஸ்.தேவப்பிரசாதம், அருள் தங்கையா ஆகியவராவர். ப.ஏ.பகுதிக்கு அருள்திரு. எம்.எச். ஹாரிசனும், மார்க்கஸ் வார்டும், மோல்ட்டனுடன் மாறிமாறி துணை புரிந்தனர்.

தாங்கள் ஆக்கும் மொழிபெயர்ப்பு பொதுமக்களின் ஒப்புதலைப் பெற்றாகவேண்டும் என்பதை, லார்சனுடைய மொழிபெயர்ப்பிற்கு நேர்ந்த விளைவிலிருந்து குழு கற்றுக் கொண்டது. இப்பொதுக் கருத்தினைப் பெற அது மூன்று வழிகளைக் கையாண்டது:

1. சமய மாறுபாடற்ற இறையியல் கொள்கையைத் தாங்கள் பாதுகாக்கிறோம் என்பதைச் செய்தித்தாள் முகமாக மக்கள் அறிய வகை செய்தனர்.

2. பல கட்டுரைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாசகம் (Textus Receptus) கடவுளின் வார்த்தையல்லவென்றும், தூய்மையான கிரேக்கமூலத்திற்குத் திரும்ப முயற்சிப்பதே முதலாவதாக எழுதப்பட்ட கடவுளுடைய வார்த்தைக்கு உண்மையாகத் திரும்ப முயற்சிப்பதாகுமென்றும் விளக்கம் தர முற்பட்டனர்.

3. இயன்ற அளவில் பவரினுடைய நடையைப் பிழையின்றிக் கையாண்டனர்.

கடவுள் என்ற சொல்லின் பயனை உறுதியாகப் பற்றிக்கொண்டபொழுதிலும் யெகோவா என்ற சொல்லை விடவும் சரியான கர்த்தர் என்ற சொல்லிற்குத் திருப்பினர்.

1941இல் புதிய ஏற்பாடும், 1949இல் முழுத் திருமறையும் வெளிவந்தன. பவரினுடைய மொழிபெயர்ப்பிற்குக் கிடைக்கப்பெற்ற வரவேற்பும் ஒப்புதலும் இப் புதிய மொழி பெயர்ப்பிற்குக் கிடைக்கவில்லை. ஏனெனில் 1871இல் எல்லோரும் ஒருமுகமாக ஏற்றுக்கொண்ட மொழிபெயர்ப்பு வேறொன்றுமில்லை. எனின் லார்சன் மொழிபெயர்ப்பிற்கு ஏற்பட்டது போன்ற எதிர்ப்பினை இது சந்திக்கவில்லை. ஏனெனில் கடவுளுடைய வார்த்தைக்கும் குறிப்பிட்ட மொழிபெயர்ப்புகளுக்கும் இடைப்பட்ட வேற்றுமையினை மக்கள் உணரத் தொடங்கினர். எனினும் லுத்தரன் சபையினரே இதனைப் பெரிதும் பயன்படுத்தினர் இதனையே தரங்கம்பாடி யூபிலிப் பதிப்பென்று வெளியிட்டனர். உண்மையை உணரா ஏனையத் தமிழ் கிறிஸ்தவர்கள் தங்கள் அறியாமையினாலும், சில தனி நபர்களும் பக்திக்குழுக்களும் செய்த தவறான விளம்பரத்தினாலும் இதனை எதிர்த்தனர். மதுரையில் 1969இல் உருவாகிய தமிழ்நாடு இறையியல் கல்லூரி மோனகன் மொழி பெயர்ப்பையே வழிபாட்டிலும் வகுப்பிலும் பயன்படுத்தியது. லுத்தரன் மாணவர்களும் அங்கு பயின்றபடியால் இவ்வாறு செய்வது எளிதாயிற்று. ஆயினும் தென்னிந்தியத் திருச்சபை மாணவர்கள் தயக்கத்துடனேயே இதனைப் பயன்படுத்தினர். அவர்கள் தங்கள் சபைகளுக்குத் திரும்பிச் சென்றதும் பவர் மொழிபெயர்ப்பை மட்டுமே பயன்படுத்த முடிந்தது. மோனகன் மொழிபெயர்ப்புக்கு இறையியல் கல்லூரி கொடுத்த ஆதரவு முன்னிட்டு அதுவும் கிறிஸ்தவர்களின் தாக்குதலுக்கு உள்ளாயிற்று. வேதப் புரட்டு, விசுவாசக் கேடு முதலிய சொற்கணைகள் அதன்மேல் வீசப்பட்டன. உண்மையை விளக்கிட கல்லூரி முதல்வரும் பிற ஆசிரியரும் செய்த முயற்சிகள் போதிய பலனளிக்கவில்லை. இந்தக் கட்டத்தில்தான் கல்லூரி முதல்வரும், ப.ஏ.பேராசிரியருமான சாமுவேல் அமிர்தம் திருமறை மொழியாக்கங்கள் தேவையா? என்னும் சிறு நூலை எழுதி வெளியிட்டார். மேலும் மோனகன் மொழிபெயர்ப்பை மட்டும் வெளியிட்டு பவர் பெயர்ப்பை இனி அச்சடிக்காமலிருப்பது என்ற இந்திய வேதாகமச் சங்கத்தின் முடிவு முறியடிக்கப்பட்டது. விளைவாக, மோனகன் பதிப்பை வெளியிடாமல் பவர் பதிப்பையே அது தொடர்ந்து வெளியிட்டது. மோனகன் பதிப்பு கிடைக்காத படியால் 1985க்குப் பின் தமிழ்நாடு இறையியல் கல்லூரிக்கு வந்த மாணவர்கள் பவர் மொழிபெயர்ப்பைத் தான் பெருவாரியாக பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது. ஆயினும் புதிய மொழிபெயர்ப்புச் செய்யும் பணியை வேதாகமச்சங்கம் நிறுத்திவிடவில்லை.

நூல் ஒன்று ஒருமுறை எழுதப்பெற்றால், ஒருவேளை அதன் ஆசிரியர் சில மாற்றங்களைச் செய்தாலும் அது தொடர்ந்து நீடித்திருக்கும். ஆயின் மொழிபெயர்ப்பென்பது முற்றிலும் வேறுபட்ட ஒன்று. பல திசைகளிலிருந்து வரும் திறனாய்வுகளுக்கு இது உடன்பட வேண்டியதாயிருக்கும். ஆகவே மோனகன் திருப்புதலைத் திருத்தி அமைப்பதெற்கென இந்திய வேதாகமச் சங்கம் அருள்திரு. தே.இராசரீகம் தலைமையில் 1961இல் ஒரு குழுவை அமைத்தது. அதன் செயல்முறைக் கொள்கைகள்: (1) சொற்பிழைகள், இலக்கணப் பிழைகள், வீண் வடசொற்கள் இவற்றை நீக்குதல். (2) பிறமொழி மரபுத்தொடர்களின் நேர் பொருளுக்குப் பதிலாக அவற்றின் கருத்தைத் தெளிவுபடுத்தும் தமிழ் மரபு வழக்குகளைப் பயன்படுத்தி, தமிழ்மொழியின் தனிச் சிறப்பியல் பிற்கிசைய வாக்கியங்களை அமைத்தல். (3) எளிய நல்ல தமிழில் பொருள் தெளிவுபட மொழிபெயர்த்தல் முதலியனவாகும். பு.ஏ. 1975இல் வெளிவந்தது. நற்றமிழ் விரும்பிகள் இதனைப் போற்றினும் கிறிஸ்தவர்கள் பயன்படுத்த முன்வரவில்லை.

7. கத்தோலிக்க மொழி பெயர்ப்பு

இக்கட்டுரையில் தமிழ் விவிலிய மொழிபெயர்ப்பில் திருத்தமுறை சபையின் முயற்சிகளையும் பதிப்புக்களையுமே பெரிதும் குறிப்பிட்டோம். கத்தோலிக்கரின் ஒரு சில தொடக்க முயற்சிகளையே சுட்டிக்காட்ட முடிந்தது. இங்கு சில தகவல்களைக் குறிப்பிடுவோம். இயேசு சபையைச் சேர்ந்த போர்த்துக்கீசிய அருள்தொண்டர்கள் 16ஆம் நூற்றாண்டிலேயே சில நற்செய்திப் பகுதிகளைத் தமிழில் பெயர்த்து கையெழுத்துப் பிரதிகளாக ஞாயிறு வழிபாட்டில் பயன்படுத்தினர். என்றீக்கஸ் என்பவர் தொகுத்த சில

விவிலியப் பகுதிகளும் இறைவேண்டல்களும் **தம்பிரான் வணக்கம்** என்னும் தலைப்பில் 1578இல் அச்சிடப்பட்டது. ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய டச்சுத் தொண்டர் பல்தேயுஸ் மத்தேயு நற்செய்தி நூலின் தமிழ்ப்பெயர்ப்பை 1665இல் கையெழுத்துப் பிரதியாக அமைத்தார். அவருக்குப் பின்வந்த டிமேன்பவர் 1692இல் முழுப் பு.ஏ.யையும் கையெழுத்துப் பிரதியாக உருவாக்கினார். இவரையடுத்து யாழ்ப்பாணம் வந்தோர் பு.ஏ.இன் சில பகுதிகளை மட்டும் தமிழில் மொழிபெயர்த்தனர்.

பாரீஸ் அற்றிய வேத போதக சபை 1857இல் லத்தீன் வல்கேத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்த பு.ஏ. தமிழகத்தின் வடபகுதியில் வழக்கிலிருந்தது. திரிங்கால் சாமி 1891இல் உருவாக்கிய பு.ஏ. தென்பகுதியில் வழங்கியது. பொத்தோரோ என்பவர் வல்கேத்திலிருந்து ப.ஏ.ஐ தமிழில் மொழிபெயர்த்து இரு பகுதிகளாக 1904இல் வெளியிட்டார். எல்வெஸ் என்பவர் நான்கு நற்செய்தி நூல்களை தனியாக 1911-13இல் மொழி பெயர்த்தார். அவ்வாறே பு.ஏ. முழுவதையும் 1922இல் ஞானப்பிரகாசர் உருவாக்கினார். எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழக ஆயர்களின் மொழிபெயர்ப்புக் குழு கிரேக்கத்தினின்று தமிழில் மொழிபெயர்த்து பு.ஏ.ஐ 1970இல் வெளியிட்டது; முழு விவிலியத்தையும் (பரிசுத்த வேதாகமம்) 1973இல் வெளியிட்டது. தொடர்ந்து உருவாக்கப்பட்ட திருத்திய பு.ஏ. வேதாகமச் சங்கம் வெளியிட்ட (இராசரீகம்) பு.ஏ.க்கு இணையாக இருந்தது. தொடர்ந்து இரு சாராரும் ப.ஏ.ஐயும் மொழிபெயர்க்கும் திட்டத்தில் இறங்கியபோது பொது மொழிபெயர்ப்பு பற்றிய காட்சி கிடைத்தது.

8. பொதுமொழிபெயர்ப்பு

விவிலியச் சங்கங்களின் இணையமும் (United Bible Societies) வத்திக்கான் ஒன்றிப்புச் செயலகமும் (Secretariate for Christian Unity) இணைந்து பொது மொழி பெயர்ப்பு செய்யும் கோட்பாட்டை 1968இல் வெளியிட்டன. அதன் அடிப்படையில் 1972ஆம் ஆண்டு தமிழ் விவிலியப் பொது மொழிபெயர்ப்புப் பணி தொடங்கியது. உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை சார்பில் தமிழ்நாடு விவிலிய ஆணைக் குழுவும் பிற திருச்சபைகளின் சார்பில் வேதாகமச் சங்கமும் இப்பணியைச் செய்தன. பல்வேறு திருச்சபை மரபுகளைச் சேர்ந்த தமிழ், எபிரேய, கிரேக்க மொழிகளில் புலமைபெற்ற மொழிபெயர்ப்பாளர்கள் பங்கு கொண்டார்கள்.

ப.ஏ. எபிரேய பாடமான **பிபிலியா எபிராயிக்கா** நூலையும் (Biblia Hebraica, Stuttgart Edition, Masoretic Text). பு.ஏ. விவிலிய சங்கங்களின் இணையத்தின் வெளியீடான கிரேக்க புதிய ஏற்பாட்டு நூலின் மூன்றாம் பதிப்பையும் (The Greek New Testament, UBS third edition) சார்ந்து மொழிபெயர்க்கப்பட்டன.

பழமையும் தரமுமான மூலப்பாடங்களையே அடிப்படையாகக் கொண்டாலும் மரபு மொழிபெயர்ப்புகளுக்கு மதிப்புத் தரும் வகையில் சில இடங்களில் காலத்தால் பின்னையப் பாடங்களும் இடம்பெறுகின்றன. அவை சதுர அடைப்புக்குறிக்கு (square bracket) இடப்பட்டுள்ளன. ஒன்றுக்கு மேற்பட்ட முறையில் மொழிப்பெயர்க்கத்தக்க சொற்றொடர்கள் வருமிடத்து மாற்று மொழிபெயர்ப்புகள் அடிக்குறிப்புகளில் தரப்பட்டுள்ளன. மூலச்சொல்லின் பொருள் தெளிவிலலாதபொழுது பழங்கால மொழிபெயர்ப்புகள், இணைமொழிச்சொற்கள் ஆகியவற்றின் உதவியுடன் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. அவ்விடத்து மூலச்சொல்லின் பொருள் அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளது. நீண்ட ஆய்வுக் குறிப்புகளும் விவாதத்துக்குரிய கொள்கை விளக்கங்களும் அடிக்குறிப்புகளில் தவிர்க்கப்படுகின்றன. ஒவ்வொரு நூலிலும் முகவுரை, துணைத்தலைப்புக்கள், இணைவசனங்கள் ஆகியவை தரப்பட்டுள்ளன. இவை நூல்களைப் புரிந்துகொள்ள உதவியாக அமையும்.

இம்மொழிபெயர்ப்பில் இயல்பான, தரமான, எளிய தமிழ்மொழிநடை இடம் பெற்றுள்ளது. தெளிபொருள் மொழிபெயர்ப்பு முறைக்கு (Dynamic Equivalence) முன்னுரிமை வழங்கப்பெற்றுள்ளது. வழக்கற்ற சொற்களும், வட்டாரச் சொற்களும் இயன்றவரை தவிர்க்கப்பட்டுள்ளன. கவிதைப்பகுதிகள் முடிந்தவரை கவிதை நடையில் அமைக்கப் பெற்றாலும், பொருள்தெளிவே இன்றியமையாததாகக் கருதப்பட்டுள்ளது.

கலைச் சொற்களும் பெயர்ச்சொற்களும் நூல் தலைப்புகளும் பல்வேறு கலந்துரையாடல்களுக்குப் பின் மேல்மட்டக்குழுவின் (High Power Committee) ஒப்புதல் பெற்றுக் கையாளப்பட்டுள்ளன. பெயர்ச்சொற்கள் அனைத்தும் ஒலிபெயர்ப்பே (translite ration) செய்யப்பட்டன. அவை தமிழில் ஒலிப்பதற்கு எளிமையான, இயல்பான இறுதி வடிவம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ப.ஏ. பெயர்கள் பு.ஏ.இல் வரும்போது ப.ஏ. ஒலிவடிவத்தையே பெறுகின்றன. (எ.கா பிலயாம்/பாலாம், Βαλααμ בִּלְעָם பிலயாம்). தற்கால வழக்கிலுள்ள பெயர்கள் விவிலியத்தில் வேற்றுப்பெயர்களாக இருந்தாலும் அவை தற்கால வடிவிலேயே கையாளப்பட்டுள்ளன (எ.கா. மிஸ்ராயிம் מִצְרַיִם, எகிப்து). அவ்வாறே நீட்டலளவைகளுக்கும் நிறுத்தலளவைகளுக்கும் பல இடங்களில் தற்கால வழக்கிலுள்ள மெட்ரிக் இணை வழங்கப் பட்டுள்ளன.

மரபு காரணமாக முதல் ஐந்து நூல்கள் கிரேக்கவழி தலைப்புகளையும், மற்ற எல்லா நூல்களும் எபிரேயவழி தலைப்புகளையும் கொண்டு உள்ளன. அனைத்து நூல்களின் வசன எண்கள் உலகப் பொது வழக்கு மொழி பெயர்ப்புகளின் (STANDARD VERSIONS) அடிப்படையில் அமைந்துள்ளன.

தமிழின் சிறப்புப் பண்பான மரியாதைப் பன்மையை (Honorific plural) மனதிற்கொண்டு விவிலியத்தில் பெரும் பாலோர்க்கும் மரியாதைப்பன்மை வழங்கப்படுகிறது. நோயுற்றோர், உடல் ஊனமுற்றோர், செல்வாக்கற்ற பணியாளர், பெண்டிர் ஆகியோரை மதிப்பின்றி வழங்கும் முறை மாற்றப்படுகிறது. எ.கா. குருடன் என்னும் சொல் பார்வையற்றவர் என்று மாற்றம் பெறுவதோடு மரியாதைப் பன்மையும் பெறுகிறது. இறைத்திட்டத்திற்கு எதிரானவரைக் குறிப்பிடும்போதும் பழித்துரைக்கும் சூழலிலும், நெருங்கிய நட்புறவை வெளிப்படுத்தும் போதும் மரியாதைப்பன்மை தவிர்க்கப்படுகிறது.

திருவிவிலியத் துணை நூல்

இருபாலார்க்கும் பொதுவான கருத்துகள் மூல நூலில் ஆண்பால் விகுதி பெற்று வந்தாலும் இருபாலார்க்கும் பொருந்தும் முறையில் (Inclusive language) மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு மூலமொழியிலும், தமிழ் மொழியிலும் காணப்படும் பண்பாட்டு ஏற்றத்தாழ்வு களையப்படுகிறது.

இணைத்திருமுறை நூல்களை மொழிபெயர்த்து வெளியிடும் பொறுப்பை உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையே ஏற்றுக்கொண்டுள்ளது. ப.ஏ.க்கும் பு.ஏ.க்கும் இடையே இந்நூல்கள் இடம்பெறும் வகையில் ஒரு பதிப்பும், இந்நூல்கள் இடம்பெறாத வகையில் வேறொரு பதிப்பும் வெளியிடப்படுவது இவண் குறிப்பிடத்தக்கது.

இம் மொழிபெயர்ப்பு பல கட்டங்களைத் தாண்டி வந்துள்ளது. அடிப்படை நகல் தயாரித்த மொழி பெயர்ப்பாளர். திருத்தம் அளித்த பரிசீலனைக் குழுவினர். மாற்றுக்கருத்துக்கள் வழங்கிய ஆலோசனைக்குழுவினர். ஆயர்களும் தலைவர்களும் அடங்கிய மேலமட்டக் குழுவினர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இம்மொழி பெயர்ப்பு இறுதி வடிவம் பெற்றுள்ளது. மேலும், முன்னோட்டப் பதிப்புகள் (Trial Editions) வழியாக ஆயிரக்கணக்கானோரின் கருத்துகள் வரவேற்கப்பட்டுள்ளன. இறுதியாக இணைத்திருமுறை உள்ள பதிப்பு ஆயர்களின் அனுமதியும் (Imprimatur) அவை இல்லாதபதிப்பு வேதாகமச் சங்கத்தின் ஒப்புதலும் (Imprint) பெற்று திருவிவிலியம் என்னும் தலைப்புடன் வெளியிடப் படுகின்றது.

தூய ஆவியாரின் ஆற்றலோடும் மிகுந்த உழைப்போடும் இறைவேண்டலோடும் கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக திருச்சபையின் கண்காணிப்பில் முப்பத்தைந்து இறைத் தொண்டர்கள் செய்து இவ் வாண்டு (1994) வெளியிடப்படும் இம் மொழிபெயர்ப்பை இயேசு விரும்பும் ஒற்றுமையை வளர்க்கும் நோக்கில் கிறிஸ்தவர்கள் அனைவரும் பயன்படுத்துவர் என நம்புகிறோம்.

பொருள் துல்லியம், தெளிவு, எளிமை, மக்கள் மொழிநடை, மனிதநேயம், இருபால் சமத்துவநோக்கு ஆகியவற்றைக் கண்முன்கொண்டு செய்யப்பட்ட இம் மொழியாக்கம் கிறிஸ்தவ சமுதாயம் மட்டுமன்று, தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் இறையுளத்தை அறிந்து செயல்படத்தூண்டும் என நம்புகிறோம். திருவிவிலியம் திருச்சபை வழிபாடுகளிலும், கருத்தரங்குகளிலும், விவிலியப் பள்ளிகளிலும், வீதிகளிலும் பயன்படவேண்டும்.

துணை நின்ற நூல்கள்

1. வேதாகமம், அதன் உபயோகமும் அதைப் பகிர்ந்து கொடுத்தலும், Bible Society. Madras. 1955.
2. சபாபதி குலேந்திரன், கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு, இந்திய வேதாகமச் சங்கம், பங்களூர், 1967.
3. சாமுவேல் அமிர்தம், திருமறை மொழியாக்கங்கள் தேவையா? தமிழ்நாடு இறையியல் கல்லூரி, மதுரை, 1974.
4. திருமறை நூல், தமிழ் பொது மொழிபெயர்ப்பு, கருத்தரங்கு, கொடைக்கானல், 29-30 ஏப்ரல் 1986, தமிழ்நாடு விவிலிய ஆணைக்குழு, தமிழக ஆயர் பேரவை+இந்திய வேதாகமச் சங்கம்.

திருத்திப் புதுப்பித்தவர்கள் : இஸ்ரயேல் செல்வநாயகம்.
ஜே. ஜெயக்குமார்.

2

விவிலியத்தின் ஒருமைப்பாடு

தோ. சா. காரட்

1. விவிலியத்தினுள் வேறுபாடு

விவிலியத்தின் ஒருமைப்பாட்டை நாம் சரிவர வரையறுக்கவேண்டுமானால், முதலாவது அதில் அடங்கியிருக்கிற வேற்றுமைகளை அறிந்துகொள்வது அவசியம். குர்ஆனில் உள்ள சூராக்கள் (கவிகள்) எல்லாம் முகம்மதால் உரைக்கப்பட்டதுபோல், நம் மறைநூல் ஒரே நூலாசிரியரால் உரைக்கப்பட்டதுமில்லை, எழுதப்பட்டதுமில்லை. மேலும், பல நூலாசிரியரால் எழுதப்பட்ட சில நூல்களிலே நாம் காணாத ஓர் ஒருமைப்பாடு இருக்கலாம். அந்த நூலாசிரியர் எல்லாரும் ஒரு காலத்தில் வாழ்ந்து, ஒரு கழகத்தில் சேர்ந்து, ஒரே மனப்பான்மை அல்லது ஒரே கொள்கை உடையவர்களாய் இருக்கலாம். ஆனால் அத்தகைய ஒற்றுமையையுங்கூட விவிலிய மறையில் காணோம். அதில் அடங்கியுள்ள இந்த இந்த நூல்களை இன்னார் இன்னார் எழுதினார் என்பதைப் பற்றி சில ஐயப்பாடுகள் உண்டு. ஆனால் இவர் இவர் இந்நூலை எழுதினார் என்னும் மரபை நாம் ஏற்றுக்கொண்டாலும், அந்தப் பல நூலாசிரியர் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான வெவ்வேறான காலங்களில் வாழ்ந்து, வெவ்வேறான கொள்கைகளை, வெவ்வேறான முறைகளில் அறிவித்தார்கள் என்பது புலப்படுகிறது.

அவாகள எழுதிய எபிரேய மொழியிலும், கிரேக்க மொழியிலும் பல்வேறு மொழிநடைகள் இருந்ததாகத் தெரிகிறது. இந்த மொழிநடை வேற்றுமை ஒருவாறு நம் மொழிபெயர்ப்புகளினால் மறைக்கப்பட்டிருக்கிறது; ஆனால் முழுவதும் மறைக்கப்படவில்லை. ஏனெனில் நாம் கவனத்துடன் மொழிபெயர்ப்புகளை வாசித்தால் ஒரே ஒரு நூலுக்குள் வெவ்வேறான பகுதிகளில், வெவ்வேறான வார்த்தைகள் காணப்படுகின்றன என்பதும், ஒரே நிகழ்ச்சிக்கு வெவ்வேறான விவரங்களையும், வெவ்வேறான விளக்கங்களையும் நூலாசிரியர்கள் தருகிறார்கள் என்பதும் புலப்படுகிறது.

பல நூல்களில் மட்டுமல்ல, ஒரே ஒரு நூலுக்குள்ளும் இந்தப் பலதரப்பட்ட வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆகவே ஐஞ்சுருள் என்று சொல்லப்படும் முதல் ஐந்து நூல்களும் வேறு சில நூல்களும் பல மூலங்களிலிருந்து சேர்க்கப்பட்டன என்று விவிலிய ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அதாவது வாய்மொழியான பல மரபுகளும், எழுதப்பட்டுள்ள பல மூலப் பிரதிகளும் கடைசி நூலாசிரியரால் ஒரே நூலில் பின்னப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, வரலாற்று நூல்களில் இதைக் காண்கின்றோம். ஆனால் இறைவாக்கு நூல்களிலும் திருப்பாடல்களிலுங்கூட இந்தப் பலதரப்பட்ட நிலைமையை நாம் உணர்ந்துகொள்ளலாம்.

இதுவரை நாம் ப.ஏ.ஐப் பார்த்தோம். ஆனால் பு.ஏ. இலுங்கூட ஒரேவிதமான வேறுபாட்டை நாம் காண்பதுண்டு. சமநோக்கு நற்செய்தி நூல்களில் மத்தேயுவும், லூக்காவும் மார்க் எழுதிய நற்செய்தி நூலையும், வேறு சில ஏடுகளையும் மரபுகளையும் தாங்கள் எழுதிய நற்செய்தி நூல்களில் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டார்களா என்ற வினா எழுந்திருக்கிறது. மேலும், எழுதப்பட்டுள்ள நற்செய்தி நூல்களும், அவைகளில் அடங்கியிருக்கிற எழுதப்பட்ட மூலங்களும் எழுதப்படுமுன், வாய்மொழியான மரபுகள் பல்வேறு முறையாகப் பரவியிருந்ததாகத் தெரிகிறது. பு.ஏ.இன் நூல்களை எழுதியவர்கள் யார்? ஒவ்வொரு நூலையும் ஒவ்வோர் ஆசிரியர் எழுதினார்? ஒரு நூலுக்குப் பல நூலாசிரியர்கள் இருந்தார்களா? இத்தகைய கேள்விகள் இன்று எழுந்திருக்கின்றன.

பு.ஏ.இன் இறையியலை நாம் கவனித்தால் அது பண்டைக் காலத்து நம்பிக்கைகளில் துவங்கி, பின் வந்த காலத்தில் எழுந்த கொள்கைகள் வரைக்கும் வளர்ச்சியடைவதை நாம் காண்கிறோம். குறிப்பாக, கிறிஸ்தியலிலும், இறுதியியலிலும் இதனைக் காணலாம். மேலும் சபையின் ஒழுங்கு, அதாவது அதன் சட்ட அமைப்பும் அதன் திருப்பணி முறையும் பு.ஏ.இன் காலத்திற்குள்ளேயே மாறிமாறி வளர்ந்தேறுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, பு.ஏ.இல் நமக்கு விவரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள், குறிப்பாக இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையின் நிகழ்ச்சிகள், பின்வந்த கிறிஸ்தவர்கள் கொண்ட கொள்கையோடும் விளக்கங்களோடும் எவ்வளவாகக் கலந்திருக்கின்றன என்னும் கேள்வி எழுந்திருக்கிறது. இயேசு கிறிஸ்து எதைச் சொன்னார், எதைச் செய்தார் என்று கண்டுபிடிக்கும்படி பு.ஏ.இன் நூலாசிரியர் கொடுத்த விளக்கத்தின் திரையைத் திறந்து வைத்து, அதன் பின்பக்கத்தில் அந்த உண்மையை நாம் தேட வேண்டுமா என்பதே அந்தக் கேள்வி.

2. ஒருமைப்பாட்டை உண்டாக்கும் கருத்துக்கள்

மேற்கூறிய வினாக்களை ஆய்வு செய்வதானால், நாம் கிறிஸ்தவ நம்பிக்கைக்கும், வாழ்க்கைக்கும் விவிலியம் ஒரு நல்ல வழிகாட்டி என்று எண்ணாமல், அதைப் பலவிதப் பகுதிகளாகத் துண்டித்திருக்கிறோம் என்பதுபோல் ஒருவேளை தோன்றலாம். எனினும் திருமறையினால் நமக்கு அளிக்கப்பட்ட வெளிப்பாடு இன்னது என்றும், அதன் பல்வேறு பகுதிகளில் அடங்கியிருக்கிற ஒருமைப்பாடு இன்னது என்றும் நாம் அறிந்துகொள்வதற்கு இந்த ஆய்வுகள் இன்றியமையாதவைகள். விவிலியத்தை வர்சித்

தினால், அல்லது அதிலிருந்து சில வசனங்களை ஒன்றாகச் சேர்த்துக்கொண்டதினால் நமது பற்றுறுதி அறிக்கைகளையும், கொள்கைகளையும் அவை நேரே காட்டிட இயலாது.

விவிலியத்துக்குள் கருத்து வேற்றுமை காணப்படுகிறது. பிற்காலத்தில் வாழ்ந்த விவிலியத் தொண்டர்கள் இஸ்ரயேலர் பண்டைக் காலத்தில் வைத்திருந்த கொள்கைகளையும் பின்பற்றி வந்த சடங்காசாரங்களையும் சீர்தூக்குகிறார்கள். எல்லாவற்றிலும் மேலாக பழைய உடன்படிக்கை கிறிஸ்தவ நற்செய்தியில் மறுஉரு அடைகிறது. அல்லது புதிய மெருகேறுகிறது. ஆகவே விவிலியத்திலிருந்து நாம் நேரடியாக நம் கிறிஸ்தவக் கோட்பாடுகளை வரையறுக்க முடியாது. விவிலியத்தில் நமக்குக் கிடைக்கும் செல்வம் யாதென்றால், பலதரப்பட்ட பகுதிகளை ஒன்றாகச் சேர்த்துக்கொள்ளும் சில கருத்துக்களாகும். இவைகளை நாம் ஒன்றன்பின் ஒன்றாகக் கவனிக்க வேண்டும். எனினும் அவைகளில் ஒன்றையும் மற்றவற்றிலிருந்து தனியாக எடுத்துக்காட்ட வேண்டாம். ஏனென்றால் இந்தப் பொருள்கள் எல்லாம் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கின்றன; ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன; ஒரே ஒருமைப்பாடாகப் பின்னப்பட்டிருக்கின்றன.

(அ) வெளிப்பாடும், அதை வெளிப்படுத்துகிற கடவுளும்

விவிலியத்தில் எங்கும் காணப்படுகிற கடவுள் வாழும் கடவுள்தான். தம் மக்களைப் பார்த்துப் பேசி, அவர்கள் நடுவில் செயலாற்றுகிற கடவுள் அவரே. அவர் ப.ஏ.இல் மோசேயின் வழியாக இஸ்ரயேலரை அழைத்தார்; பு.ஏ.இல் கிறிஸ்துவில் மானிட வாழ்க்கையை ஏற்றுக்கொண்டார். அவர் தமது வார்த்தையைப் பேசி செயலாற்றின மிக முக்கியமான நிகழ்ச்சிகள் இவைகளே. இவ்விரண்டு அடிப்படையான நிகழ்ச்சிகளும் தரும் வெளிச்சத்தில், வேறு சமயங்களில் கடவுள் மக்கள் நடுவில் செயலாற்றுவதையும், மக்களைப் பார்த்துப் பேசியதையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

திருக்காட்சிகள், கனவுகள், அசரீரி வாக்குகள் இவைகளைப் பற்றி விவிலியத்தில் நாம் படிப்பதுண்டு. ஆனால் வெளிப்பாட்டின் மூலப்பொருள் இவைகள் என்று எண்ணுவது தவறு. வரலாற்றில் நடைபெறும் நிகழ்ச்சிகளும் வெளிப்பாட்டின் மூலப்பொருள்தாம். ப.ஏ.இல், இஸ்ரயேலர் செய்த விடுதலைப் பயணமும், அவர்கள் அனுபவித்த சிறையிருப்பும், சிறையிருப்பிலிருந்து அவர்கள் திரும்பிவந்ததும் குவிய மையமாகவே நிற்கின்றன. அதேவிதமாக பு.ஏ.இல் கிறிஸ்துவின் வாழ்க்கையும், அவரடைந்த இறப்பும் உயிர்த்தெழுதலும் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருக்கின்றன. இந்த வரலாற்று நிகழ்ச்சிகளில் கடவுள் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார் என்று புலப்படுகிறது.

நாம் ஒரேயொரு நிகழ்ச்சியை முக்கியப்படுத்தி அதுதான் வெளிப்பாட்டின் கருவி, அதற்கு முன்வரும் நிகழ்ச்சிகளும் பின்வரும் நிகழ்ச்சிகளும் வெளிப்பாட்டைத் தருவதில்லை என்பது தவறு. மேற்குறிப்பிட்ட முக்கிய நிகழ்ச்சிகளாகிய விடுதலைப் பயணமும், சிறையிருப்பும், கிறிஸ்துவின் சிலுவையும் ஒரு நீண்ட வரலாற்றின் தொடர்ச்சியில் அடங்கி இருக்கின்றன. அவைகளுக்கு முன்வரும் நிகழ்ச்சிகளும் உள்ளன. ஆகையினாலதான் ஆதாமில் தொடங்குகிற மனுக்குலத்தின் வரலாற்றிலும், ஆபிரகாமில் தொடங்குகிற இஸ்ரயேலரின் வரலாற்றிலும் கடவுள் தமது இயல்பையும் நோக்கத்தையும் மக்களுக்கு அறிவித்து, தாம் திருவுளங்கொண்ட அவர்களின் மீட்பை நிறைவேற்றுகிறார் என்னும் வெளிப்பாட்டின் தொடர்ச்சி விவிலியத்தில் அடங்கியிருக்கிறது. திருநூல்களை எழுதின ஆசிரியர்கள் எல்லாருக்கும் இந்த உண்மை நன்கு தெரிந்தது. அதைப்பற்றி அவர்கள் கொண்ட பொதுக் கொள்கை திருமறையின் ஒருமைப்பாட்டில் அடிப்படையான ஒரு கூறாய் இருக்கிறது.

(ஆ) ஆவியினால் ஏவப்பட்ட விளக்கம்

திருநூல் ஆசிரியர்கள் இந்த உண்மையை நன்கு உணர்ந்து கொண்டனர் என்று சொல்லும்போது நாம் வெறும் நிகழ்ச்சியைக் கடந்து, அந்த நிகழ்ச்சியின் கருத்தை எடுத்துரைக்கும் விளக்கத்தைச் சுட்டிக் காட்டியிருக்கிறோம். மேலும், நாம் ஒரு நிகழ்ச்சியைக் கண்டு அதை விவரிக்கும்போதெல்லாம், அதன் கருத்தை நமக்கும் மற்றவர்களுக்கும் விளக்கிக் காட்டுவோம். கருத்தும் விளக்கமும் இல்லாது ஒரு நிகழ்ச்சியை விவரிப்பது நம்மால் இயலாது.

பிற நூல்களில் நாம் காணாத அளவில் இந்த விளக்கமுறை விவிலியத்தில் ஒரு தனிச்சிறப்பு அடைந்திருக்கிறது. அதன் பயனாக அதில் அடங்கியிருக்கிற வரலாறு சாதாரண உலக வரலாற்றைப் போலன்று என்பது தெளிவாகிறது. வரலாற்று நிகழ்ச்சிகளில் பெரும்பகுதியைக் கவனியாமல் சில குறிப்பான நிகழ்ச்சிகளைத் தெரிந்துகொண்டு அவைகளின் உள்ளானக் கருத்தைத் திருநூலாசிரியர்கள் எடுத்துக்காட்டுகிறார்கள். மீட்பின் வரலாறு என்னும் பெயரினாலே திருமறையில் அடங்கியிருக்கிற வரலாற்றின் தனிப்பட்டத் தன்மையை நாம் வரையறுக்கலாம்.

பொது வரலாற்றுக்கும் மீட்பின் வரலாற்றுக்கும் வேற்றுமை ஏது? பின்வரும் எடுத்துக்காட்டுகளினால் அதை அறிந்து கொள்ளலாம்: முதலாவதாக, பண்டைக்காலத்து எகிப்து நாட்டிலே விடுதலைப் பயணத்தின் வரலாற்றை விவரிக்கும் ஒரு சாசனத்தையாவது சுருளையாவது அறிஞர்கள் கண்டுபிடிக்கவில்லை. அதுபோலவே, கி.பி.முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பேர்பெற்ற வரலாற்று ஆசிரியர் தேசிற்றஸ (Tacitus) உரோமைப் பேரரசின் வரலாற்றை எழுதுகையில், கிறிஸ்தஸ 'Χριστος' என்னும் பெயர் உள்ள மனிதன் பொந்தியுபிலாத்து யூதேயா நாட்டு ஆளுநராக இருக்கையில் மரண தண்டனைக்கு ஆளானான் என்று கூறி, பின்வரும் கூற்றைக் கூறுகிறார்: கிறிஸ்தஸ் என்பவன் தலைமை வகித்த அந்த மோசமான மூடநம்பிக்கைக்குழு கொஞ்சகாலம் மறைக்கப்பட்ட போதிலும் மீண்டும் வெளிப்பட்டது. விவிலியத்தில் மிகவும் முக்கியமான செய்திகள் என்பதாக நாம் மதிக்கிற இந்த நிகழ்ச்சிகள் நம்பிக்கையில்லாத எகிப்தியருக்கும் உரோமருக்கும் அற்ப நிகழ்ச்சிகள்போல் தோன்றின. மோசேயும் இறைவாக்கினரும் விடுதலைப் பயணத்திற்கு விளக்கம்

கொடுத்த வகையிலும். கிறிஸ்துவும் அவரது அடியாரும். தமது வாழ்க்கை வரலாற்றில் நற்செய்தியின் கருத்தை நமக்கு அறிவித்த வகையிலும். இந்த நிகழ்ச்சிகள் கடவுள் செயலாற்றின் மீட்பின் அடையாளங்களாக நமக்கு இருக்கின்றன.

(இ) உடன்படிக்கையும். நினைவுகூருதலும்

கடவுள் செயலாற்றின நிகழ்ச்சிகளுக்கும். இறைவாக்கினர் கூறிய விளக்கத்துக்கும் மக்கள் இணங்கி மறுமொழி அளிக்காவிட்டால் கடவுளின் வார்த்தை முற்றுப் பெறுவதில்லை. இப்படியிருக்க. விவிலியத்துக்கு ஒருமைப் பாட்டைக் கொடுக்கும் இன்னொரு மூலக் கருத்து உடன்படிக்கை ஆகும். அந்த உடன்படிக்கையினால் கடவுள் இஸ்ரயேல்ரைத தம் சொந்த மக்களாகத் தெரிந்து. அந்தத் தெரிதலுக்கு முத்திரை இடுகிறார். அதற்கு மறுமொழியாக நம்பிக்கையிலும். வழிபாட்டிலும். வாழ்க்கையிலும் இஸ்ரயேலர் கடவுளுடைய தொண்டர்களாய் இருக்கக் கட்டுப்படுகிறார்கள். இந்தக் கட்டுப்பாட்டை முதலாவதாக பற்றுறுதி அறிக்கையில் காண்கிறோம். **யாவே** என்னும் கடவுள் இஸ்ரயேலரைத் தெரிந்துகொண்டு. அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டிருக்கிறார். ஆகையால் அவர்கள் அவரையல்லாமல் வேறொரு கடவுளையும் வணங்கக் கூடாது என்பதே அந்த பற்றுறுதி அறிக்கை.

அதுபோலவே இஸ்ரயேலின் வழிபாடும் உடன்படிக் கையைச் சார்ந்து. அந்த உடன்படிக்கைக்கு மறுமொழியாய் இருக்கிறது. அந்த வழிபாட்டில் அடங்கியிருக்கிற எல்லாத் திருவிழாக்களிலும் வேள்வி சடங்காசாரங்களிலும். கடந்த காலத்தில் கடவுள் நிறைவேற்றிய மீட்பு **நினைப்பூட்டப் பட்டிருக்கிறது**. அதாவது கடந்த நிகழ்ச்சிகள் நினைவு கூருதல் வழியே நிகழ்காலத்துக்குக் கொண்டுவரப் படுகின்றன. மேலும். அறம் சார்ந்த சட்டம் உடன் படிக்கையின் சட்டந்தான். இஸ்ரயேலர் கடைப்பிடித்துவந்த நெறி ஒழுங்கெல்லாம் தங்களுக்காக கடவுள் நிறைவேற்றின செயல்களின் மறுமொழியாயிருந்தது. ஒவ்வொரு செய்கை யிலும். உறவிலும் கடவுளுக்கும் இஸ்ரயேலருக்கும் இருந்த தொடர்பை மக்கள் நினைவுகூர்ந்து வாழ்க்கையில் அந்தத் தொடர்பையும். அதனால் உண்டான உடன்படிக்கையையும் எடுத்துக்காட்டினார்கள்.

(ஈ) வாக்குறுதியும். நிறைவேறுதலும் முந்தியப் பத்தியிலே நாம் ப.ஏ.ஐ மட்டும் குறிப்பிட்டிருக்கிறோம். ஆனால இறைவனின் செயலாற்றலுக்கும். அதை விளக்கிக்காட்டும் தொண்டர்களுடைய மொழிக்கும் மறுமொழி அளிக்கும் உடன்படிக்கையும் அதன் நினைவு கூருதலும் பு.ஏ.உக்குங்கூட அடிப்படையானவைகள். புதிய ஏற்பாட்டில் இந்தக் கருத்துக்கள் இன்னொரு கருத்தோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கருத்து பு.ஏ.இல் மட்டும் காணப்பட்டபோதிலும். அது ப.ஏ.இலிருந்து தொடர்ந்து வந்து இரு ஏற்பாடுகளையும் இணைக்கும் ஒன்றாக இருக்கிறது. அதாவது ப.ஏ.இன் வாக்குறுதிகளும் இறை வாக்குகளும் கிறிஸ்துவிலும் அவரது சபையிலும் நிறைவேறுதல் அடைந்திருக்கின்றன என்று பு.ஏ.இன் நூலாசிரியர்கள் சாதிக்கின்றார்கள்.

பு.ஏ. எழுத்தாளர்களின் கருத்துப்படி இந்த வாக்குறுதிகள் நிறைவேறுவது மட்டுமல்ல. அவை மறுஉருவாக்கப்பட்டு. ப.ஏ. கருத்துக்களையும் கடந்து போகின்றன. எ.கா. இஸ்ரயேலுக்குக் கடவுள் அளித்த மீட்பின் வாக்குறுதி கிறிஸ்துவில் நிறைவேறுதல் அடைந்த தினால் அது புது உருவத்தில் காணப்படுகிறது. இனிமேல் கடவுள் ஒரு குலத்தை மட்டும் தெரிந்துகொள்ளாமல் எல்லா இனங்களிலிருந்தும் வரும் பற்றுறுதியாளர்களைத் தெரிந்து கொண்டு தமது சபையை உண்டுபண்ணுகிறார். எரேமியா இறைவாக்கினர் முன்னறிவித்ததும். இயேசு கிறிஸ்து ஏற்படுத்தினதுமான புதிய உடன்படிக்கைக்கு முன்பாகப் பழைய உடன்படிக்கை பொருளற்றுப் போகி றது. இனிமேல் உடன்படிக்கையின் முத்திரை விருத்தசேத னமன்று. கிறிஸ்துவின் மரணத்துக்குள் திருமுழுக்குப் பெற்று அவரோடு புதிய வாழ்வுக்கென்று உயிர் பெறுவதாகும்.

பாஸ்காவினாலும் வேறு யூத விழாக்களினாலும் மோசேயினால் ஆன விடுதலைப் பயணத்தை நினைவு கூருதலுக்குப் பதிலாக. நமக்காக வேள்வியிடப்பட்ட பாஸ்கா ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவை நினைவுகூரும் திருவிருந்து தொடருகிறது. கிறிஸ்துதான் திருச் சட்டத்தின் நிறைவு. அவர்மேல் நம்பிக்கைகொள்ளும் எவரும் கடவு ளுக்கு ஏற்புடையவர் ஆவார் (உரோ.10:4). எனினும். அவர் அழித்துப் போடவன்று. நிறைவேற்றவே வந்தார் (மத்.5:17).

பழைய திருச்சட்டத்திற்குப் பதிலாக கிறிஸ்துவின் சட்டம் என்று சொல்லக்கூடிய அன்பின் புது அறநெறி என்பது இயேசுவின் போதனையிலும். திருத்தூதர் போதனையிலும். வெளியாக்கப்படுகிறது. மொத்தத்தில். கிறிஸ்துவின் வாழ்க்கையின் வல்ல செயல்களுக்கும். அவைகளை விளக்கிக் காட்டும்படி அவரும் அவர் சீடர்களும் உரைத்த நற்செய்திக்கும் மறுமொழியாக திருச்சபையின் நம்பிக் கையும். வழிபாடும். நல்லொழுக்கமும் காணப்படுகின்றன.

(உ) தொடக்கமும். முடிவும் விடுதலைப் பயணம். சிறையிருப்பு. சிலுவை. உயிர்த்தெழுதல் பெந்தெகொஸ்தே நாள். மீட்பின் வரலாற்றின் வேறெந்த நிகழ்ச்சியானாலும் சரி. இவற்றிலெல்லாம் நிகழ்காலத்தில் கடவுள் தமது மக்களைச் சந்திக்கிறார் என்பது விளங்குகிறது. விவிலிய வெளிப்பாட்டின் அடிப்படை அதுவே. நிகழ்காலத்தில் வாழும் கடவுளைச் சந்தித்து அவர் ஆற்றிய வல்ல செயல்களை அனுபவித்தவர்களே நிகழ்காலத்தில் கடவுள் தொடக்கத்தின் கடவுளும் முடிவின் கடவுளுமாய் இருக்க வேண்டும் என்னும் நம்பிக்கைக்கு வருவார்கள். இதனால் தான் கடவுள் படைப்பாளரும். இறுதியில தமது நோக்கத்தை நிறைவேற்றுகிறவருமாய் இருக்கிறார் என் னும் நம்பிக்கைக்குத் விவிலியம் சான்றாக இருக்கிறது.

மீண்டும் விவிலியத்திலெல்லாம் காணப்படும் இந்தப் பொருளுக்கு ஒரு நிறைவை நாம் பு.ஏ.இல் காண்கிறோம். தொடக்கத்தில் கடவுள் படைத்தார் என்பது தொடக்க நூலின் முதல் கூற்று. யோவான் எழுதிய நற்செய்தி நூலோ இந்தக் கூற்றுக்குப் புது விளக்கம் கொடுக்கிறது: தொடக கத்தில் வாக்கு இருந்தது(தார்). அவர் வழியாய் எல்லாம் உண்டாயிற்று... வாக்கு மனிதர் ஆனார்... (யோ. 1:1-14)

மேலும் எதிர்காலத்தில் கடவுள் இஸ்ரயேலுக்கும் மனுமக்களுக்கும் தாம் கொண்ட திருநோக்கத்தை நிறை

வேற்றுவார் என்று ப.ஏ. திரு மொழித் தொண்டர்கள் நம்பிக்கையோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். புதிய ஏற்பாட்டுக் கருத்துப்படி இந்தத் தொண்டர்கள் முன்னறிவித்த இறையாட்சி கிறிஸ்துவினால் துவக்கம் பெற்றிருக்கிறது. எதிர்கால நம்பிக்கையுங்கூட பு. ஏ.இல் இருக்கிறது: அனைத்தும் கிறிஸ்துவைத் தலையாகக் கொண்டு அவருக்குள் கூட்டிச் சேர்க்கப்படவேண்டுமென்பதே கடவுளின் திட்டம் (எபே.1 19). கிறிஸ்து தொடக்கமும் முடிவுமாய் காட்டப்படுகிறார்.

(3) விவிலியத்தின் ஒருமைப்பாடு கிறிஸ்துவே

விவிலியத்தின் பல்வேறு பகுதிகள் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுகின்றன அல்லது கிறிஸ்துவிலிருந்து புறப்படுகின்றன என்பதில்தான் விவிலியத்தின் ஒருமைப்பாட்டை நாம் புரிந்துகொள்ளலாம். பற்றுறுதி அறிக்கைகளிலும். கோட்பாடுகளிலும் நாம் விவிலியத்தின் செய்தியை விளக்குவது சரியே. ஆனால் விவிலியத்தின் வார்த்தைகளோ. வாக்காகிய கிறிஸ்துவில் நிறைவேறுதல் அடைகிறதினால்தான் இறைவாக்கு ஆகின்றன. அவரில் வெளிப்படுத்தப்பட்ட கடவுளுடைய திருநோக்கத்துக்கும் குணத்துக்கும் அந்த வார்த்தைகள் பொருத்தமாக இருந்தாலொழிய அவைகளைத் திருவாக்காக நாம் ஏற்றுக்கொள்ளலாகாது. அதுபோலவே இவ்வுலகத்தில் வாழுகிற திருச்சபையின் நம்பிக்கையும். வழிபாடும். வாழ்க்கையும் கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பின் கீழ் நிற்கின்றன. வழியும் வாய்மையும் வாழ்வுமாகிய அவருக்கு. அவை உண்மையாக இருக்கின்றனவா அல்லது அவரிடத்திலிருந்து விலகிப் போகின்றனவா என்பதை நாம் நிதானித்தறிய வேண்டும்.

துணை நின்ற நூல்கள்

1. Rowley. H.H., *The Relevance of the Bible*, James Clarke & Co., 1941.
2. Richardson, Alan, *Biblical Authority for To-day*, London, S.C.M., 1951.
3. Rowley, H.H., *The Unity of the Bible*, London, Carey Kingsgate Press, 1953.
4. K. Koch, *The Book of the Books,* West Minister Press, 1968.
5. F.F. Bruce, *This is That*, Paternorter, 1975.
6. F.F. Bruce, *The Books and the Parchments,* Pickering, 1971.
7. W. Zimmerli, *Outlines of O.T. Theology*, SPCK. 1983.
8. J.W. Wenham, *Christ and the Bible,* Baker, 1984.
9. J. Stott, *Understanding the Bible*, CLS. 1978.

3

விவிலியத்தின் அதிகாரம்-இறைவெளிப்பாடு

ஆ. தே. மனுவேல்

1. முன்னுரை

அதிகாரம் என்றால், தற்காலத்தில் பலர், பகுத்தறிவுக்கு மாறானவற்றைக் கொடுமையாய் மக்களிடைத் திணிப்பது எனக் கருதுகின்றனர். ஆகவே அதிகாரம் என்றதும் பலருக்கு வெறுப்பு ஏற்படுகிறது. சமயத் துறையிலும், அதிகாரத்திற்கடங்கிய சமய முறைகளை விட ஆவிக்குரிய முறைகள் சிறந்தவை என்பாருண்டு. ஆனால் புதிய ஏற்பாட்டில் அதிகாரத்திற்கு விரோதமாய் ஆவி என்ப தாய்க் காணாமல், அதிகாரத்திற்குப் பிறப்பிடம் ஆவி என்று காண்கிறோம்.

அதிகாரத்தின் அடிப்படைப் பொருள் உண்மையைப் பற்றிய ஓர் அறிக்கை அல்லது கருத்தைக் குறித்து ஒருவர் பொறுப்பேற்றல் ஆகும். குறிப்பாக, அதிகாரம், தகுதியும் பெற்றுப்பும் வாய்ந்தவர் கூறும் கருத்தைக் குறிக்கும். இச்சொல்லின் இலத்தீன் மூலச்சொல் (auctorites). மூப்பர் ஒரு பிரச்சனையைக் குறித்துச் செய்து அருளிய தீர்ப்பைக் குறிக்கும். இத்தகையத் தீர்ப்பு நேர்மை வாய்ந்ததாகவும் அதிகாரம் வாய்ந்ததாகவும் இருக்கும். இத்தகைய அதிகாரத்தின் அடிப்படையில்தான் கூட்டுவாழ்க்கை அமையப் பெறுகிறது. ஒவ்வொரு துறையிலும் அப்படியே அதிகாரம் இடம் பெறுகிறது. எ.கா. இராசுத்துறையில் அதிகாரத்துடன் தரத்தை வரையறுக்கும் உரிமை சில ருக்குரியதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அதுபோலவே, சமயத்துறையிலும் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்று, அவரது வெளிப்பாட்டை உணரும் உணர்வை ஆவியின் ஈவாகப் பெற்ற இறையடியார் கூட்டத்தினருக்கும். அவரது சாட்சிப்பத்திரத்திற்கும் சிறபபு அதிகாரம் உண்டு.

2. இறுதியான உண்மையில் தான் இறுதி அதிகாரம்

அதிகாரம், தனி முதல் தன்மையில், அதாவது பிறிதொன்றில் சாராது தனித்து இருப்பதாகக் கருதப்படும் நிலையில், உண்மையில் மட்டுமே உளது. அவ்வுண்மை கடவுள் மட்டுமே ஆவர். அவரது திருவுளத்திலும் அவரது திருநோக்கிலும் மட்டுமே அத்தகைய இறுதி அதிகாரம் அமைகிறது. கடவுள் மட்டுமே உண்மைக்குப் பிறப்பிடமும், அதற்கு அடிப்படையாகவுமிருப்பதால், அவரது உதவியின்றி உண்மையை அறியவியலாது. மேலும், அத்தகைய இறுதி அதிகாரம் வாழ்க்கையின் எல்லாக் கூறுகளின்மேலும் செயலுரிமை வாய்ந்த அதிகாரமாய் இருத்தல் வேண்டும். அத்தகைய அதிகாரம் கடவுளுக்கு மட்டுமே உண்டு.

கிறிஸ்தவ நம்பிக்கையில் வரலாற்றுக் கண்கூடான செயலில் இத்தகைய அதிகாரம் நமக்கு அறிவுறுத்தப்படுகிறது. அது கடவுள் கிறிஸ்து பெருமானில் மானிட மீட்புக்காக நடத்திய மாபெருஞ் செயலில் அடங்கியுள்ளது. அவரது அதிகாரம் இச்செயல் மூலமாய் உயிர்த் துடிப்பும் முனைப்பும் வாய்ந்த முறையில் நம்மை ஆட்கொண்டு, நீங்கள் உங்களுடையவர்களல்லர். . . .கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார் (1கொ. 6:19,20) என்று அறிவுறுத்துகிறது. ஆகவே, வரலாற்று முறையில் ஆண்டவர் கிறிஸ்துவுக்கு முழு அதிகாரம் உண்டு (உரோ. 1:5).

3. இறுதி உண்மையான கடவுளின் அதிகாரத்தை ஏற்பதின் விளைவு

கடவுளின் அதிகாரத்தை ஏற்கும்போது, வாழ்க்கை மாறுதல் பெற்று, பணிவுடன் அவருக்குக் கீழ்ப்படிவதாக மாறுகிறது. அவருக்கு நம்மேல் முழு உரிமையுண்டு., நம்பிக் கைக்குரியவர். அவர் நமது ஆண்டவர்; தமது அன்பால் நம்மைச் சிலுவையில் மீட்டவர். நாம் அவருக்குரியோர். அவரது பணி செய்வதே நமது கடன் என்ற உணர்வு நம்மை இயங்கச் செய்யும்.

இப்படி எண்ணும்போது, அதிகாரத்தின் தன்மை, அதன் அடிப்படையில் மாறுதல் அடையும். அது ஏதோ சட்ட திட்டம் வாய்ந்த ஆட்சியாதிக்கம் என்று கருதுவதற்கு இடமில்லாமற்போகும். அதிகாரம், ஆள் தொடர்புள்ளதாக மாறும். பலர் கருதுவதுபோல் அது ஒரு கட்டுப்படுத்தும் எல்லையாயிராமல், வல்லமைக்குப் பிறப்பிடமாகும். அது ஆக்கத்திறன் வாய்ந்ததாகும். உண்மையான கீழ்ப்படி தலினால் நம் வாழ்க்கை வளம் பெற்று வலிவடையு மேயன்றிச் சுருங்கிப் போகாது. நமது சிறந்த அதிகாரம் நாம் முன்னேறிச் செல்ல ஆற்றல் அருளுவதாயிருக்க வேண்டும்; உயிரற்ற, கடந்த காலச் சட்டதிட்டத்துக்கு நம்மைக் கட்டுப்படுத்துவதாயிருத்தல் கூடாது. அது திருச் சட்டத்தினால் அமையாது, அருளால் அமையும். அது ஒரு கோட்பாடாகவோ, ஒரு நூலாகவோ, ஒரு நிறுவனமா கவோ இருக்கமுடியாது. ஆள்களுக்கு அது ஓர் ஆளாக மட்டுமே இருக்க முடியும். இந்த அதிகாரம் (கடவுள்) நமக்கு வாழ்வு அளிப்பவரும், வாழ்வுக்கு ஆண்டவரு மானவர் என உணரும்போது, அவருக்கு விரோதமாகக் கலகஞ்செய்ய இடமில்லை. ஏனெனில் கலகம் பண் ணுவதற்குக் காரணம், வாழ்க்கை செழுமை பெறுவதற்குத் தடை ஏற்படுத்துவதாகும்., கிறிஸ்துவில் அத்தகைய எல்லைக் கட்டுப்பாடான அதிகாரத்தை நாம் காண்பதில்லை. அவரின் அதிகாரமோ நாம் வாழ்வை நிறைவாகப் பெறு வதற்காயுள்ளது (யோ.10:10).

இத்தகைய இறுதி அதிகாரம் படைத்த கடவுள், நம்மைத் தம் அன்பின் ஆட்சிக்குட்படுத்த வரலாற்றில் செயலாற்றியுள்ளார். எப்படி இச்செயல்களின் வழியாய்த் தம்மை வெளிப்படுத்தியுள்ளார் என்பதைக் காண்போம்.

4. இறைவழி வெளிப்பாடு

இறைவழி வெளிப்பாட்டைப்பற்றிச் சிந்திக்குங்கால், இந்து சமயத்தில் பொதுவாக இப்பொருள்பற்றி நிலவும் கருத்துக்கள் யாவை என அறிந்து தெளிதல் நலம். இந்துசமயம் பற்றுறுதி அறிக்கை ஒன்று இல்லாத சமயம் என்பதைக் குறித்து, பல இந்து சமயஅறிஞர் பெருமை பாராட்டுகின்றனர். அவர்களது எண்ணத்தின்படி, இந்து சமயத்தின் சனாதனதர்மம் எக்காலத்திற்கும் உரியது. அதற்குத் தொடக்கமும் முடிவும் இல்லை. அதனுள் பழங்கால உயிர்ப்பொருள் வணக்கம், பல தெய்வ வழிபாடு, பக்தி வழியான ஒரிறைக் கோள், அத்துவைதம், ஒருமையாளர் நெறி முதலான பற்பல வகை சமயங்களுக்கும் இடமுண்டு. இவை ஒன்றுக்கொன்று முரண்படும் சமயங்கள்போல் தோன்றினும், அடிப்படையில் அவை யாவும் நான்கு கூறுகளை நம்புகின்றன. அவையாவன:

(1) இறுதி மெய்ப்பொருள் அதன் உள்ளியல்பில் அறியக் கூடாதது. இது ஒருவித சமய ஐயுறவுக் கொள்கை. இறுதி மெய்ப்பொருளின் மெய்ம்மையை மறுக்காமல் பல முறையாய் விளக்குகின்றனர். இம் மெய்ப்பொருளும், மனித ஆன்மாவும் ஒன்றே என்ற எண்ணமும் உண்டு. நாம் கடவுளை அறியக்கூடும். ஆனால் அவ்வறிவு அரைகுறையானது. அவர் இருக்கிறபடி நாம் அவரை அறிய ஒருபோதும் இயலாது. கடவுளைப் பல தோற்றங்களிலும் அறியக்கூடும். ஆனால் அவையெல்லாம் அரைகுறையானவை, ஒன்றிலாவது முழு உண்மையில்லை. (2) இறுதி மெய்ப் பொருளின் தன்மையைப் பற்றிப் பற்பல இறையியல் விளக்கங்கள் இருக்க, அவைகளில் ஒன்றும் முழுவதும் உண்மையானது என்பதற்கில்லை. ஒவ்வொரு சமயத்திலும் மெய்ப்பாடும் பிழைப்பாடும் கலந்தே வருகின்றன. ஒரு சமய நெறியும் முற்றிலும் மெய்ம்மை ஆகாது. ஆதலால், ஒரு சமயம் தனிச் சிறப்பானது என்பதற்கில்லை. இதுபற்றியே இந்து சமயம் **இத்தகைய பற்றுறுதி அறிக்கையை (நம்பிக்கைச் சட்டத்தை) ஒருவர் ஏற்றுக்கொண்டால் மட்டுமே, அவர் இந்துவாகலாம்** என்பதில்லை. (3) எல்லாச் சமயங்களும் ஒரளவே உண்மையுடையன. ஆதலால், ஒருவர் கடவுளைப் பற்றியும், இறுதி மெய்ப்பொருள் பற்றியும், பல விளக்கங்களை ஏற்றுக் கொள்வாராயின், ஒரு சமயம் மட்டும் போதிக்கும் அரைகுறையான உண்மையை விட்டு, எல்லாச் சமயங்களிலுமுள்ள அரைகுறையான உண்மையை ஒருங்கே சேர்த்து, நலம் அடைவார். இப் பல சமயக் கலவையைப் புரிந்து கொள்ளுவது பிற சமயத்தினருக்கு அரிதாயினும், இந்து ஒருவருக்குச் சமய அடிப்படை உண்மைகளை இவ்வாறு ஒருங்கு திரட்டுவது பொருத்தமான செயல். அதன் மூலமாய் இறைத் தொண்டர் பலருடைய சமய அனுபவங்களைக் காணக்கூடும். (4) அவரவர் விருப்பத்திற்கிசைந்ததும், சமுதாய சூழ்நிலைக்கேற்றதுமான வாழ்க்கை நெறியைப் பின்பற்றலாம் என்பது இந்து சமயப் போதனை. ஆதலால், ஒருவர் **இதை நான் நம்புகிறேன், இதை நான் நம்பவில்லை** எனச் சொல்ல இடமுண்டு. **ஆனால் நான் நம்புவது முற்றிலும் உண்மை. நான் நம்பாதது முற்றிலும் பொய்ம்மை** என்பது இந்து சமயப் போக்கன்று.

இச்சூழ்நிலையில் கிறிஸ்தவ வெளிப்பாட்டின் தன்மை யாது எனக் கணிக்கவேண்டும். அதன் அடிப்படை உண்மை, கடவுள் தம்மை மனிதருக்கு வெளிப்படுத்துகிறார் என்பது. படைப்பில் கடவுளைப் பற்றிய அறிவு வெளியாகிறது. இத்தகைய வெளிப்பாடு ஆதாம காலம் முதல இருந்துவந்தது; நோவாவின் காலத்தில் புதுப்பிக்கப்பட்டது (தொ.நூ. 9:1-7). இதற்கு எடுத்துக்காட்டாக, மன்பதை அனைத்துக்கும் உரிய சமய உணர்வு நிலை, மனச்சான்று போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தாம் படைத்த ஒருவரையும் விட்டுவிடாமல், எல்லாரையும் பற்பல விதமாய்ச் சந்தித்துக் கடவுள் ஈடேற்றி வருகிறார். கடவுளைப்பற்றி அறியக் கூடியதெல்லாம் அவர்களுக்குத் தெளிவாக விளங்கிற்று. அதை கடவுளே அவர்களுக்குத் தெளிவுறுத்தியிருக்கிறார். எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய என்றுமுள வல்லமை, தெய்வத்துவம் என்பவைகள், படைக்கப்பட்டவைகளின் மூலமாய், உலகப்படைப்பு முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும் . . . (உரோ. 1:19பி; மேலும் உரோ. 2:14,15; திருத்தூ. 14:15-18; 17:24பி; யோபு. 40:1 -42:6; திரு. 19:29; ஏசா. 40:12-31 காண்க). இத்தகைய கடவுள் அறிவைப் பொது வெளிப்பாடென்பர். ஏனெனில், அது மனிதருக்கு குறிப்பிட்ட வரலாற்று நிகழ்ச்சிகளின் வாயிலாய் வெளிப்படுத்தப்படவில்லை என்பதினால், அவ்வறிவு, காலம், இடம் சார்ந்தது அன்று.

சிறப்பு வெளிப்பாடு என்பது வரலாற்று நிகழ்ச்சிகளின் வழியாய், இறுதியாக, கிறிஸ்துவில் கடவுள் தம்மை முழுமையாய் வெளிப்படுத்தியுள்ளார் என்பதில் அடங்கியுள்ளது. கிறிஸ்தவத் திருமறையில் அடங்கியுள்ள வரலாற்று நிகழ்ச்சிகள், இவ்வகைச் சிறப்பு வெளிப்பாட்டைச் சார்ந்தவை. இச் சிறப்பு வெளிப்பாட்டிலுள்ள மீட்பின் திட்டம் மூலம், கடவுள், பொது வெளிப்பாடு தரக்கூடாது, ஓர் ஈவைத் தந்துள்ளார். கிறிஸ்துவின் சிறப்பு வெளிப்பாடு, பொது வெளிப்பாட்டின் உயர்குறிக்கோளையும், மதிப்புக், குரிய கூறுகள் யாவையும், நிறைவு செய்வதுமட்டுமின்றி, அவற்றைச் சீர்தூக்கி, தீர்ப்பிட்டு, தள்ளவேண்டியவற்றைத் தள்ளி, திருத்தவேண்டியவற்றைத் திருத்தி, உயர் நிலைக்கு மாற்றும். கிறிஸ்துவின் சிறப்பு வெளிப்பாடின்றி, எந்த உண்மையையும், நாம் கோணலான முறையிலேயே காணக்கூடியவராயிருக்கிறோம். இக் குறையைப் பொது வெளிப்பாடு தவிர்க்க இயலாது. ஆகவே, சிறப்பு வெளிப்பாடு பொது வெளிப்பாட்டோடு ஏதோ சிறிதைக் கூட்டுவது எனலாகாது. நாம் அறிந்து கண்டுவிட்டோம் என்பவற்றை மாற்றும் ஆற்றல் படைத்தது கிறிஸ்துவின் வெளிப்பாடு ஆகும். கிறிஸ்துவின் மூலமாய் அடையும் மனமாற்றம், நம்முடைய நோக்கம் முழுவதிலுமே மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அத்தகைய மாற்றத்தைக் கண்டவர் கூறும் சான்றுரை, நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன் என்பது. கிறிஸ்துவையன்றித் தன்னியல்பான மனிதர் அறிகிற அறிவு உண்மையில் பாதி என்று சொல்லாமல், திரிபுபட்ட மெய்ம்மை என்று கூற வேண்டும் என்கிறார் எமில் புருனர். கிறிஸ்துவின் சிறப்பு வெளிப்பாட்டின் மூலமாகவே பொது வெளிப்பாட்டின் மதிப்பைப் கணிக்கக்கூடும். ஆனால் இன்றையப் பல்சமயச்

சூழலில் இவ்வாதம் பொருந்தாது என்போர் உளர்.

5. கிறிஸ்துவின் சிறப்பு வெளிப்பாட்டுக் கூறுகள்

சிறப்பு வெளிப்பாட்டில் கடவுளின் மனம், அவரது எண்ணம், திருவுள்ளம் ஆகியவை வெளிப்படுத்தப்படுகின்றன. எனினும் அவற்றைக் கடவுளைப்பற்றிய செய்திகள் என்று கொள்ளல் கூடாது. அதன் பொருள், கடவுள் தாமே இயேசுகிறிஸ்துவில் தம்மை வெளிப்படுத்தினார் என்பதாம். வில்லியம் டெம்பிள் இது பற்றிக் கூறுவது: **ஒரு குறிப்பிட்ட வெளிப்பாட்டில் அறிந்துகொள்ளும்படி அருளப்படுவது வாழும் கடவுளேயன்றி, அவரைப் பற்றிய சித்தாந்தம் அன்று . . . வெளிப்படுத்தப்பட்ட உண்மை என்று கூறுவதற்கு ஒன்றுமில்லை . . . வெளிப்பாட்டைப் பற்றிய உண்மைகள் உண்டு. அவை வெளிப்பாட்டைப் பற்றித் தகுந்த முறையில் சிந்திப்பதால் விளையும் சித்தாந்தங்கள். ஆனால், அவை நேரடியாக வெளிப்படுத்தப்பட்டவையல்ல.** வெறுங்கருத்தை இறைவழி வெளிப்பாடெனக் கருதாமல் கடவுளின் செயல்களில் வெளிப்பாட்டைக் காண வேண்டும். வாழும் கடவுள் மனித மீட்பை விரும்புகிறவர். இத்தகைய கடவுளது அன்பைத் தெய்வீகச் செயலில் மட்டும்தான் வெளிப்படுத்த இயலும். செயலாற்றுவது கடவுளின் தன்மையாயிருப்பதால், அவர் தம்மைத் தமது செயல்களில் வெளிப்படுத்துகிறார். ஆகவே, இறைவழி வெளிப்பாடு வரலாற்றில் அவர் நிகழ்த்தும் செயலில், உச்ச நிலையாக கிறிஸ்துவில், தெரியவருகிறது. இதுபற்றிக் கார்ல் பார்த்து கூறுவது: **நம்மைப்போல் ஒருவராக கடவுள் நம்மோடு உறைந்தார். அவரது வார்த்தை நமது சதையில் சதையும் இரத்தத்தில் இரத்தமுமானார். அவரது மாட்சி நமது இடர்ப்பாடான நிலையில் விளங்கிற்று. ஆண்டவரின் மாட்சியால் விளங்கப் பெற்றமையால் நம் துன்பநிலை எத்துணை இடர்ப்பாடானது என்பது தெரியலாயிற்று . .** இது நடந்ததொரு நிகழ்ச்சி. இச் செய்தியைத்தான். பழைய ஏறபாடு இறைவாகின் வார்த்தையாகவும், புதிய ஏற்பாடு நிறைவேறிய வார்த்தையாகவும் உரைக்கின்றன. இரண்டிலும் இந் நிகழ்ச்சி இறுதியாகவும், முழுமையாகவும், போதுமானதாகவும் நடந்தேறி விட்டது என்பதே வலியுறுத்தப்படுகிறது.

ஆள் தொடர்புக்கிடையில் மட்டும் தோன்றக் கூடிய தான ஒரு கூறுபாடும், இவ்வெளிப்பாட்டில் அடங்கியுள்ளது. பெரியார் ஒருவர் பற்றிக் கேட்டு அல்லது வாசித்து அறிந்திருப்பதற்கும், அவரைக் கண்டு, சந்தித்து அவருடன் பழகி வாழ்ந்த அனுபவத்திற்கும் பெரும் வேறுபாடு உண்டு. இப் பிந்திய வகை அனுபவம், ஓரளவுக்கு வெளிப்பாட்டின் உண்மைத் தன்மையை விளக்க உதவும். இறுதி நிலையில் இறைவழி வெளிப்பாடு, இறைவனோடு தொடர்பு கொள்ளுதல் அல்லது இறைவனைச் சந்தித்தல் ஆகும். கிட்டல் அகராதி இது பற்றிக்கூறுவது: **பழைய ஏற்பாட்டில் இறைவழி வெளிப்பாடென்றால், அது இயற்கை கடந்த அறிவைப் புகட்டுவதன்று, பக்திக்குரிய உணர்ச்சிகளை எழுப்புவதும் அன்று. இறைவழி வெளிப்பாடு அறிவைப் பிறப்பிக்கலாம், பக்தி உணர்ச்சிகளுடன் கலந்தும் வெளிப்படலாம். ஆனால் இவையே வெளிப்பாடு எனலாகாது. யாவேயின் செயலே வெளிப்பாட்டின் சாரம். அதில் அவரது மறைந்திருக்கும் தன்மை வெளிப்படுகிறது. தம்மையே அவர் உறவுக்கு உட்படுத்தி அடியார்க்குத் தந்தருள்கிறார்.** புதிய ஏற்பாட்டிலும், இயற்கை கடந்த அறிவைப் புகட்டுவதாகக் கருதப்படாமல் கடவுள் தம்மைத்தாமே வெளிப்படுத்துவதாகவே, வெளிப்படுத்தல் அறியப்பட்டிருக்கிறது.

6. சில பழங்கருத்துக்கள்

கடவுள் தம்மைப் பற்றி அறிவுட்டுதல், வரலாற்று உண்மைகளைத் தெரிவித்தல் போன்றவைதான் வெளிப்பாடு என்ற கருத்து பண்டைக்கால முதல் நிலவி வந்துள்ளது. யூத ரபீமார் பழைய ஏற்பாட்டை இப்படிக் கருதினர். இதன் அடிப்படையில், விவிலியத்தின் பொருளடக்கமே வெளிப்பாடு என்னும் கொள்கை தோன்றியது. உரோமைச்சபை, திரெந்து மகாநாடு, திருவிவிலியம் முழுவதும், எழுதப்படாத சபை மரபின் திரட்டும், தூய ஆவியாரின் ஒப்ப எழுதக் கூறுதலால் (dictation) எழும்பின எனவும், அவைகளிலேயே வெளிப்பாடு அடங்கியுள்ளதெனவும் முடிவு செய்தது. சீர்திருத்தமுறை சபைகளில் வெளிப்பாட்டைப் பற்றி இரு தவறான கருத்துக்கள் வலுப் பெற்றன: (1) வெளிப்பாட்டின் மூலமாய் அடையப்பெறுவது கடவுளைப் பற்றிய உண்மைகள் அல்லது சித்தாந்தங்கள். (2) திருவிவிலியத்தின் பொருளடக்கமே வெளிப்பாடு. ஆனால், இவ்வெண்ணம், திருச்சபை கருவூலம் போற்போற்றிப் பேணும் மெய்யான இறைவழி வெளிப்பாட்டிற்கு முரணானது. திருச்சபை, இத்தகைய எண்ணத்தை ஏற்றதற்குக் காரணம், கிரேக்க மெய்யியல் ஞானத்தில் மிதமிஞ்சிய அளவு அறிவுக்கு இடங் கொடுத்தலைக் கிறிஸ்தவ இறையியலிலும் ஏற்ற தினாலேதான். மேலும், திருவிவிலியம் வெளிப்பாடு என நேரடியாகத் தொடர்புபடுத்திக் கூற முற்படின் விவிலியத்துக்குத் தவறானவகையில் மதிப்பளிப்பதாகும்.

கடவுள், முதலில் தம்மைத் தமது மக்களுக்கு வெளிப்படுத்துகிறார். மானிடர் மீட்புக்காகத் தமது உண்மையையும், திருத்திட்டத்தையும், திருவுளத்தையும், அவர்களைச் சந்தித்து, அவர்களுடன் உறவு கொள்வதால் வெளிப்படுத்துகிறார். இந்த வெளிப்பாட்டை அடிப்படையாகக் கொண்டே, கிறிஸ்தவர் நம்பும் உண்மைகள், திருச்சபையின் கோட்பாடுகள் பிறந்தன.

7. வெளிப்பாடும், பக்குவப்பட்ட மனமும்

வரலாற்று நிகழ்ச்சிகளில் கடவுள் தம்மை வெளிப்படுத்துகிறார். இச் செயல்களிலுள்ள வெளிப்பாட்டைக் கடவுள் எப்படி மககள் அறிந்துகொள்ள விரும்புகிறாரோ அப்படி அறிந்து கொண்டால் மட்டுமே, வெளிப்பாடு உண்மை வெளிப்பாடு ஆகும். ஆகவே, செயலையும், அச்செயலைப் புரிந்து கொள்ளும் மனத்தையும் உள்ளடக்கியதே வெளிப்பாடு என வில்லியம் டெம்பிள் கூறுகிறார்: **உறுதியான வெளிப்பாடு நேருவதற்கு இறைச் செயலும், அதன் பொருளைக் கணிக்கும் பக்குவம் பெற்ற மனமும் இன்றியமையாதவை . . . செயலும், (செயல்) உண்மையை உணர்தலும், சேர்ந்து இணையும்போதே, இறைவழி வெளிப்பாடு ஏற்படும்.** வெளிப்பாட்டுச் செயல்களின் போக்கை மட்டுமன்றி, அவற்றின் செம்பொருளைக் காணும்படியாக மனத்தைப் பண்படுத்துவதும் கடவுளின்

செயலே. இப்படி மனத்தை ஒளிரச் செய்தல், இறைவந் தூக்கல் அல்லது இறை ஆவியால் ஏவப் பெறுதல் (inspiration) எனப்படுகிறது. இறைவாக்கினராகிய தம் ஊழியருக்குத் தமது மறைபொருளை வெளிப்படுத்தாமல் இறைவனாகிய ஆண்டவர் ஏதும் செய்வதில்லை (ஆமோஸ் 3:7). இவ்வாறு இறைவழி வெளிப்பாடும் இறைவந்தூக் கலும் அணுக்கத் தொடர்புள்ளவை.

8. இறைவந்தூக்கல்

இறை ஆவியால் ஏவப்படுவது என்பதுபற்றிக் கருத்து வேறுபாடு நிலவுகிறது. ஒரு கருத்து, மெய்யியல் மேதைகள், கவிஞர் போன்றவரைத் தூண்டச் செய்யும் ஆவி இறையாவியாயிருக்கலாம் அல்லது ஒருவருடைய ஆவியின் சிறப்புத் தன்மையாகவே இருக்கலாம் என்பர். சில சமயங் களில், திருமறை சார்ந்தவை இறைவனால் மட்டுமே ஆனவை என்ற கருத்து இருக்கிறது. எ.கா. இஸ்லாம் சமயத்தில், குரானில் இருப்பவை அல்லா முகமது நபிக்குச் சொல் சொல்லாகச் சொன்ன திருவார்த்தைகள் ஆகும் என்று நம்பப்படுகிறது. இந்து சமய நம்பிக்கைக்கு ஆதர வாய், வேதமானது ஈஸ்வரனுடைய மூச்சுக்காற்று. . . அதா வது ஈஸ்வர ரூபம். வேதம் இல்லாமல் கடவுள் இல்லை, கடவுள் இன்றி வேதம் இல்லை. . . வேதத்திற்குத் தொடக் கம் இல்லை. மூச்சுக்காற்று இல்லா விட்டால் எப்படி மனிதர் உயிர்வாழ முடியாதோ, அப்படியே வேதம் இல்லையென்றால் கடவுளும் இல்லை. . . வேதமே ஈஸ் வரன் என்று கூறப்படுகிறது. இத்தகைய சூழலில் கிறிஸ் தவத் திருமறை எப்படி இறைஆவியால் ஏவப்பட்டது என்பதைத் தெளிவுற விளக்குவது அவசியம்.

கிறிஸ்தவத் திருமறையின் மையம் இயேசுகிறிஸ்து. இயேசுகிறிஸ்து இறைஆவியால் ஏவப்பெற்றார். அம் முறையிலிருந்து திருமறையும் எப்படி இறைஆவியால் ஏவப் பெற்றது என அறிய முயல்வதே பொருத்தமாகும். இயேசு எப்படி ஏவப் பெற்றார் எனும்போது நாம் கேட்கிற கேள்வி, அவரது அருளுரைகள், அருட் செயல்கள், அவரது ஆட்தன்மை இவை யாவற்றிற்கும் காரணம் யாது என்பதே. நற்செய்தி நூல்கள் இக்கேள்விக்குத் தரும் விடை, இயேசு நாதரின் ஆதாரம், அவரது திருப்பணிக்கருளப்பட்ட ஆற் றல் யாவும், கடவுள் என்பதாகும். இயேசுவின் பணியின் தொடக்கத்திலேயே ஆவியானவர் அவர்மேல் வந்திறங்கியது அவரது பணி இறைவந்தூக்கலால் ஆனது என்பதைக் காட்டுகிறதல்லவா? ஆகவே, இயேசுவைப் பொறுத்தளவில், அவர் இறை ஆவியால் ஏவப் பெற்றார் என்றால், இறை ஆவி அவரில் தங்கி அவரை ஆட்கொண்டார்; அவர் கடவுளோடு தனிச் சிறப்பான தொடர்புகொண்டிருந்தார்; ஆகவே, அவரிலும், அவரது சொற்களிலும், செயல்களிலும் கடவுள் தாமே வெளிப்படுத்தப்பட்டார் என்பதே பொருள். ஆனால் புதிய ஏற்பாட்டைக் கவனமாய்ப் படிக்குங்கால் நாம் காணும் இன்னொரு உண்மை, இயேசு கடவுளோடு இத்தகைய அணுக்கத்தொடர்பு கொண்டிருந்தபோதிலும் அவரது மனிதத் தன்மை ஒழிந்து போகவில்லை என்பதாகும். தூய ஆவியால் பிறந்தவராயினும் அவர் கன்னிமரியம்மாளிடம் பிறந்தவர்; மனித வாழ்க்கையின் கட் டுப்பாடுகளுக்குள் அடங்கியவர்; இறைத் தயவிலும், மனிதத் தயவிலும், ஞானத்திலும் வளரவேண்டியவராயிருந்தவர்.

புதிய ஏற்பாட்டில், இயேசுவின் இறைத் தன்மையும், மனி தத் தன்மையும் இணைந்து வருகின்றன. அந்த இணைப் பைப் பிரிக்கலாகாது.

அப்படியே திருவிவிலியத்திலும் இறைவனின் பங்கும் இறைவந்தூக்கலால் ஆட்கொள்ளப்பட்ட மனிதனின் பங்கும் ஒருங்கே சேர்ந்து அமையப் பெற்றுள்ளன. இந்த இணைப்பையும் பிரிக்கலாகாது. திருவிவிலியத்தில் சிலவி டங்களில் இறைத்தன்மை மட்டும் வலியுறுத்தப்பெறுவது மெய்யே. எ.கா. கடவுள் சொல்லச் சொல்ல மோசே பத்துக் கட்டளைகளைப் பெற்றார். திருவெளிப்பாடு நூலை எழுதியவர் திருக்காட்சியில் ஆண்டவரிடமிருந்து நேரடியாகச் சபைகளுக்குச் செய்தியைப் பெற்றார். ஆனால் திருவிவிலியம் முழுவதையும் காண்போமானால், இயேசு கிறிஸ்துவைக் குறித்தாற் போலவே, இரட்டைச் சாட்சியைக் - அதாவது இறைத் தன்மைக்கும் மனிதத் தன்மைக்கும் சாட்சியைக் - காண்கிறோம்.

அப்படியே இறைவழிபாட்டில் கடவுளது செயலும் அவரது செயலைப் புரிந்துகொள்ளும் பக்குவப்பட்ட மனமும் இணைந்து நிற்கின்றன.

கடவுள் தமது செயலை எப்படி அறிந்து கொள்ள வேண்டுமென விரும்புகிறாரோ, அப்படி அறிந்து கொண்டால் மட்டுமே, வெளிப்பாடு உண்மை வெளிப் பாடாகும். ஆகவே வில்லியம் டெம்பிள், செயலையும், அச்செயலைப் புரிந்துகொள்ளும் மனத்தையும் கொண் டதே வெளிப்பாடு எனக் கூறுகின்றார். அவரது விளக்கப்படி, இறைவழி வெளிப்பாடு ஏற்படுவதற்குத் தேவையானவை, பொருள் செறிந்துள்ள இறைவனின் செயலும், அதன் செம்பொருளைப் புரிந்து கொள்ளக் கூடிய மனமும் ஆகும்.

9. வெளிப்பாட்டில் மனிதரின் பங்கு

வெளிப்பாட்டு நிகழ்ச்சிகள் வரலாற்றில் நிகழ்கின்றவை. இவற்றைத் தொடங்கி வைக்கிறவர் கடவுள். அவர் தம் வல்ல செயல்களை மனிதர் மூலமாகவே நடப்பிக்கிறார். எ.கா. இஸ்ரயேலருக்குத் தம்மைக் கடவுளாக வெளிப்படுத் தியதில் தலைமை வாய்ந்த செயல், எகிப்திலிருந்து பெற்ற விடுதலையும், பாலைநிலத்தின் வழியாய் அவர்களை வழி நடத்தி, வாக்களித்த திருநாட்டுக்குக் கூட்டிச் சென்றது மாகும். இஸ்ரயேலர் இத்தகைய பயணத்திற்கு முற்பட இசையாதிருந்தால், கடவுள் அவர்களை நடத்தியிருக்க முடியுமா? ஒரு மனிதர் - இங்கு மோசே - கடவுளின் திரு வுளத்தை உணர்ந்து, மக்களின் எதிர்ப்புகளை அடக்குவது அவசியம் ஆயிற்று. ஆகவே இறைவழி வெளிப்பாட்டில் கடவுளின் பங்கும் மனிதப் பங்கும் கலந்தே காணப் படுகின்றன.

10. கிறிஸ்துவின் முழுவான வெளிப்பாடு

இயேசுகிறிஸ்துவில் இறைவழி வெளிப்பாடு முழுவான முழுமையான தன்மை பெற்றுள்ளது. மெய்யான கடவுளும், மெய்யான மனிதருமாகிய இவரில், வெளிப்பாட்டின் இறைத் தன்மையும், மனிதத் தன்மையும் ஒருங்கே கலந்து காணப்படுகிறது. நான் என் சுயமாய் வரவில்லை (யோ. 7:28) நான் உங்களுக்குச் சொல்கிற வசனங்களை நானாக

பேசவில்லை. என்னில் நிலைத்திருக்கிற தந்தையே தமது செயல்களைச் செய்கிறார். (யோ. 14:10). இத் திருவசனங் களில் ஊனுடல் தாங்கி வந்த அவர், தம் முழுமையான சுதந்திரநிலையில் கடவுளுக்கு உகந்தவற்றைச் செய்ய முற்ப டுகிறார் என்பதைக் காண்கிறோம். அவருக்கு உகந்த வற்றை நான் எப்பொழுதும் செய்கிறேன் (யோ.8:29) நான் என் வாழ்வைக் கொடுக்கிறபடியினால் தந்தை என்னில் அன்பாயிருக்கிறார். திரும்பப் பெற்றுக்கொள் ளும்படி நான் அதைக் கொடுக்கிறேன். ஒருவரும் அதை என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளார். நானே அதைக் கொடுக்கிறேன் (10:17.18). இதனால் தந்தையின் உதவி யின்றி, அவர் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற முயன்றார் என எண்ணல் கூடாது. அவர் கடவுளால் அனுப்பப்பட்டது எவ்வளவு உண்மையோ, அவ்வளவுக்குத் தந்தையின் உதவி அவரின் பிரியமான வாழ்வுக்குக் கொடுக்கப்பட்டதும் உண்மை. என்னை அனுப்பினவர் என்னோடே இருக்கிறார். அவருக்கு உகந்தவற்றை நான் எப்பொழுதும் செய்கிறபடியால், அவர் என்னைத் தனியே விட்டதில்லை (8:29). இவ்வாறு, இறைத் தன்மையும், மனிதத் தன்மையும் இணைந்து வருவதே, கடவுள் ஊனுடல் தாங்குதலின் மெய்ப்பொருள். மனிதவாழ்க்கையில் மட் டுமே வெளிப்பாட்டின் முழுத் தன்மை வெளியாகக்கூடும். ஏனெனில், மனிதர் ஆளியல்புடையவர். ஆளியல்புடையவர் ஒருவரின் மூலமாகவே தான் ஆளியல்புடையனவற்றை அறிந்துகொள்ளக்கூடும். மேலும், கடவுளும், ஆளியல்பு வாய்ந்தவர். ஆகவே அவரும் ஆளுமையின் வழியாகவே தம்மை முழுவதுமாய் வெளிப்படுத்தக்கூடும்.

மேலும் வெளிப்படுத்துகிறவர் தம் பணியை நிறை வேற்ற முழுத் தகுதி படைத்தவராயிருப்பதற்கு, அவர் தாம் வெளிப்படுத்தும் கடவுளுடன் ஒன்றுபட்டிருத்தல் வேண்டும். அதனால் கடவுள் ஊனுடல் தாங்கி உலகில் வந்தால் அல் லாமல் முழுமையான வெளிப்பாடு கிடையாது. இவ்வாறு கடவுள் தம்மை வெளிப்படுத்த இயேசுகிறிஸ்துவில் மனித னர்னார் என்பதே கிறிஸ்தவ நம்பிக்கை. ஆகவே கடவுள் வெளிப்பாட்டின் உச்ச நிலையை இயேசு பெருமானில் காண்கிறோம். அவரே முழுமையும் இறுதியுமான இறை வழி வெளிப்பாடு. ஏனைய வெளிப்பாடுகளனைத்தும் அவ ருக்குள்ளேயே அடங்கி நிற்கின்றன.

இறைவழி வெளிப்பாடு இயேசுவில் முழுமையுடன் விளங்கியதை உணர்ந்த பவுல், இறைத்தன்மையின் முழு நிறைவும் உடலுருவில் கிறிஸ்துவுக்குள் குடி கொண்டிருக் கிறது என்றார். (கொலோ. 2:29). வாக்கு என்பார் ஊனுடல் கொண்டார். திருவருளும் உண்மையும் நிறைந்த வராய் நம்மிடையே உறைந்தார் என்றார். யோவான் 1:14. இயேசுவில் தான் இறுதியானதும் எல்லா வெளிப்பாட் டையும் உள்ளடக்கியதுமான வெளிப்பாடு ஏற்பட்டுள்ளது என்பது, எபிரேய திருமுகஆசிரியரால் தெளிவுறுத்தப்படு கிறது. எபி. 11:2 முற்காலத்தில் பலமுறை பலவகைகளில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள் இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார். இவ்வெளிப்பாட்டைக் குறித்தே, தொடக்கமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களால் கண்டதும், நாங்கள் காட்சி பெற்றதும், எங் கள் கைகளால் தொட்டதுமான வாழ்வின் வார்த்தையைப் பற்றி, உங்களுக்கு அறிவிக்கின்றோம். வாழ்வு வெளிப் பட்டது. நாங்கள் அதைக் கண்டோம் (1 யோ. 1:1,2) என்ற சான்றைக் கேட்கிறோம்.

இயேசுவின் வாழ்க்கையில் அவரது இறப்பில், உயிர்த்தெழுதலில், இறைவழிவெளிப்பாடு நமக்கு அருளப் பட்டுள்ளது. இவ்வெளிப்பாடு தனிச் சிறப்புடையது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நடந்ததுபோன்ற நிகழ்ச்சிகளில் மட்டுமல்ல, ஒருவரில் அதாவது தமது திருமைந்தரின் வழி யாய்த் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். அவர் திருமைந்த ராயிருந்தது, அவர் வழியாய்க் கிடைக்கப்பெறும் வெளிப் பாட்டுக்கு மாபெரும் வேற்றுமையை உருவாக்கியது. ஏனைய இறைவாக்கினரைப்போல, மற்ற நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி இறைவன் செயல்களின் செம்பொருளை எடுத்துரைப்பார் போல் மட்டும் இருந்தார் அல்லர் அவர். அவர் திருமைந்தரானதால் அவரே இறைவழி வெளிப் பாடு, அவரே கடவுளின் வார்த்தை. அவர் வழியாகவே கடவுள் சிறப்பானவிதமாக மக்களைச் சந்தித்துள்ளார்.

11. இறைவழி வெளிப்பாடும், மனித மறுமொழியும்

கடவுள் சமுதாயமாயமைந்த மனிதருக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். வெளிப்படுத்தலை ஏற்ற மக்கள் அதன் செம்பொருளைத் தங்கள் இறைவழிபாட்டிலும், சமுதாய வாழ்க்கையிலும், தனிப்பட்ட நடத்தையிலும் செயல்முறைக்குக் கொண்டுவருதல் அவசியம். இந் நோக் கத்திற்காக இறைவழி வெளிப்பாடு இறைவனின் உரிமைக் கோரிக்கையாக விளங்குகிறது. இறைவனின் ஒவ்வொரு வெளிப்பாடும் ஓர் உரிமைக் கோரிக்கை ('every revelation of God is a demand') என்கிறார் வில்லியம் டெம்பிள். யூத மேதையான மார்ட்டின் பூபர், ஒவ்வொரு இறைவழி வெளிப்பாடும், ஓர் அழைப்பும் உரிமைக் கட்டளையுமாம் (every revelation is a call and commission') என்கிறார்.

வெளிப்பாடு, நம்மைச் செயலாற்றத் தூண்டுகிறது என் பதால் நற்செயலால் மீட்பைச் சம்பாதிப்பது என்பது பொருள் அன்று. ஏனெனில், இறைவழி வெளிப்பாட்டில் வரும் உரிமைக்கோரிக்கை தனிப்பண்பு வாய்ந்தது. இறை வன் தம்மையே தருவதை, மனிதர் ஈவாக ஏற்கவேண்டும். கடவுள் கேட்பது, நாம் என்னென்ன செய்து அவரைப் பிரியப்படுத்த வேண்டும் என்பதன்று; கடவுள்தாமே எல்லா வற்றையும் நமக்காகச் செய்து முடிக்க முற்றிலுமாய் அவருக்கு இடம் கொடுக்க வேண்டுமென்பதே கிறிஸ்து பெருமானில் வந்த வெளிப்பாட்டின் கோரிக்கை.

இதற்கு இசைவு தரும்போது, நமது வாழ்க்கை, இறைவழிபாடு, நல்லொழுக்கநெறி எல்லாம் பாதிக் கப்படும். பழைய ஏற்பாட்டுக்கால்த்தில், இஸ்ரயேலர் யாவே தங்களுக்கருளிய எகிப்திய விடுதலையில் எவ்வாறு தங்களைச் சந்தித்தார், அதில் தமது மாபெருஞ்செயலால் தம்மை எப்படி வெளிப்படுத்தியுள்ளார் என்பதை உணர்ந் தனர். ஆகவே, இஸ்ரயேலர் தங்களுடைய சேர்ப்பின் விழாவில், இறைவனை வழிபடும்போது, அவரது இச் செயலை நினைவுகூர்ந்தனர். அத்துடன் அவர்கள், அவரது திருமுன்னர் செய்த அறிக்கை: என் தந்தை சிரியா நாட்டி னர் நிரந்தரக் குடியற்றவர் அவர் எகிப்துக்குப் போய் அவ்விடத்தில் அன்னியனாய் இருந்தார்; அவரைச்சேர்ந் தவர்கள் மிகச் சிலரேயாயினும், அவர் பெரிதும் வலிமை

மிக்கதுமான திரண்ட மக்களினமானார். எகிப்தியர் எங்களை ஒடுக்கி எங்களைச் சிறுமைப்படுத்திக் கடினமான அடிமை வேலையை எங்கள்மேல் சுமத்தின போது, எங்கள்மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவரை நோக்கிக் கூக்குரலிட்டோம்; ஆண்டவர் எங்கள் குரலைக் கேட்டு, நாங்கள்பட்ட சிறுமையையும் வருத்தத்தையும் ஒடுக்கத்தையும் பார்த்து, தமது புயவலிமையாலும், ஓங்கிய கையாலும், அஞ்சத்தக்க பேராற்றலாலும், அடையாளங்களாலும் எங்களை எகிப்திலிருந்து வரச்செய்து, இவ்விடத்துக்குக் கொண்டுவந்து, பாலும் தேனும் வழிந்தோடுகிற நாடாகிய இந்த நாட்டை எங்களுக்குக் கொடுத்தார். ஆதலால், ஆண்டவரே நீர் எனக்கு அருளின நிலத்தின் கனிகளில் முதற்பலனைக் கொண்டு வந்தேன் (இணை.26:5-10). துதியுடன் செய்த இந்த அறிக்கையில், எகிப்தின் அடிமைத் தனத்தினின்று மீட்ட யாவேயின் வல்ல செயலையும், அதற்கு அவரது அடியாராகிய மோசே தந்த விளக்கத்தையும் நினைவுகூர்ந்து வருவதைக் காண்கிறோம். இது இஸ்ரயேலருக்கு எவ்வளவு முக்கியம் என்பது இறைவழி பாட்டிற்குரிய திருப்பாடல்களில் மேலும் காணக்கிடக்கிறது (திரு. 136:10.11., 66:6. 78:15-53).

யாவேயின் வல்ல வெளிப்பாட்டுச் செயல்கள், இறைவழிபாட்டிற்கு மட்டுமன்றி, வாழ்க்கைக்கும் அடிப்படை ஆகும். இஸ்ரவேலர் சமயம் நல்லொழுக்க நெறியை எத்துணை வலியுறுத்துகின்றது என்பது தெரிந்ததே. அவர்களது சமயத்தில் பத்துக் கட்டளைகள் சிறப்பிடம் பெற்றுள்ளன. அவற்றின் தொடக்கமும் யாவேயின் வல்ல செயலை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கையினால் எழுந்தது. அடிமைத்தன வீடாகிய எகிப்து நாட்டிலிருந்து உன்னைக் கொண்டுவந்த உன் கடவுளாகிய ஆண்டவர் நானே. அதன் பின்னரே, என்னையன்றி வேறே கடவுள் உனக்கு இருக்க வேண்டாம் (இணை.5:6,7) என்ற கட்டளை இஸ்ரயேலரை மீட்டதும், அதில் தம்மையே வெளிப்படுத்தியதுமான செயல் எத்தகைய முக்கியம் வாய்ந்தது அதுவே இஸ்ரயேலரின் வாழ்க்கைக்கு அடிப்படை என்பது இணை.6:20-25இல் நன்கு விளக்கப்படுகிறது. இதிலிருந்து ஆண்டவர் வரலாற்றில் நிகழ்த்தும் செயலும், அதில் வெளிப்படும் இறை வெளிப்பாடும் வாழ்க்கை நெறிக்கு எத்துணைச் சிறந்த அடிப்படையாக அமைகின்றன என்பது தெளிவு. மேலும் இணை15:1212-15. 5.15. ஆமோஸ் 3:1.2 9:7. ஒசே.2:14,15. 11:1. எரே.2:2-7. எசே.20:5,6 காண்க.

பு.ஏ.இலும், இறைவழி வெளிப்பாடும் அதற்குரிய விளக்கமும், (வெளிப்பாட்டிற்கிசைய புதிய ஏற்பாட்டுச்) சபையின் வாழ்க்கையில் அமையப் பெறுவதைக் காண்கிறோம். பழைய ஏற்பாட்டுக் கால இறைச் செயல்கள் புதிய ஏற்பாட்டு மாபெருஞ் செயலை எதிர் நோக்கி நிற்கின்றன. அச்செயல்களின் நிறைவேறுதலாக, இதுகாறும் வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் வார்த்தையின் முழுமையாக, கடவுள் இயேசுவில் செயலாற்றி, மனுக்குலத்திடம் சிறப்பு முறையில் பேசியுள்ளார். இயேசு பெருமான் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் இவையாவும், மாபெரும் கடவுட் செயல்கள். இவ்வெளிப்பாட்டில் ஒரு குறிப்பிட்ட தனிச்சிறப்பு, கடவுள் தமது திருமைந்தர் வழியாக, தம்மை முழுமையாக வெளிப் படுத்தியுள்ளார் என்பதாகும்.

ப.ஏ.காலத்தில், இந்நிகழ்ச்சிகளின் செம்பொருளை இஸ்ரயேல் மக்களுக்கு இறைவாக்கினர் எவ்வாறு எடுத்துக் காட்டினரோ, அவ்வாறே பு.ஏ.காலத்திலும், திருத்தூதர், இயேசு பெருமானில் எவ்வாறு இறைவழி வெளிப்பாடு முற்றுப்பெற்று முழுமை அடைந்தது என விளக்கினர். அந்த இறைச் செயலே நற்செய்தி; அதன் சாரம் கிறிஸ்து, வார்த்தையானவர் ஊனுடல் தாங்கினார் என்ற நிகழ்ச்சியின் அடிப்படையில் (யோ.1:18, கலா.1:16) திருச்சபையின் வாழ்வு அமைக்கப்பட்டது. மேலும் எபி.1:1.2 திரு.2:14-36. 3:11:26 காண்க. திருச்சபையின் வாழ்க்கை, கிறிஸ்துவில் கடவுள்மனிதரைச் சந்தித்து ஆள் தத்துவமுறையில் தந்த வெளிப்பாட்டின் மறுமொழியாகவே அமைகிறது. அதாவது, நம்பிக்கை மூலமாய்க் கடவுளின் மீட்பின் செயலை மக்கள் ஏற்று இசைவு தருவதால் அவர்களது வாழ்க்கையின் நடுநாயகம் கிறிஸ்துஆவார். இந்திய மரபில் வரும் வேதாந்தம் அனைத்தையுங் கடந்து, இறுதியாக, திட்டமாக, ஒப்பற்ற வண்ணமாக, வரலாற்றில் மீண்டுமொருமுறை மனிதருக்குக் கொடுக்க வேண்டாதபடி, முற்றுமுடிவாக, முற்றிலுமாகக் கொடுத்துத் தீர்த்த விடை ஒன்றே ஒன்று. அது இறைமைந்தனாகிய இயேசுகிறிஸ்து உலகத்தில் தோன்றி, உலகத்துக்குத் தம்மையே தந்த அன்பின் செயலேயன்றி வேறு இல்லை. இந்த உண்மையைத் தொடக்கச் சபையினர் ஆழந்து உணர்ந்து வந்தனர் (திரு.4:12. 2கொ.1:19,20).

ப.ஏ. காலத்தில், இஸ்ரயேலர் எகிப்திய அடிமைத் தனத்திலிருந்து தங்களை விடுவித்த யாவேயை நினைத்து தங்கள் வாழ்க்கை முழுவதையும் அவருக்கிசைய எப்படி அமைக்க வேண்டுமென்று ஏவப்பட்டனரோ. அப்படியே பு.ஏ.இல் கிறிஸ்துவின் மூலமாய்ப் பாவத்திலிருந்து விடுதலை பெற்ற மக்கள், உயிர்த்தெழுந்த அந்த நாதரின் பலத்தால் அவருக்கு உகந்தவராக அழைக்கப்பட்டனர்:

நீங்கள் கிறிஸ்துவோடு எழுப்பப்பட்டதுண்டானால், கிறிஸ்து கடவுளின் வலதுபக்கத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே சிந்தியுங்கள். ஏனென்றால், நீங்கள் இறந்தீர்கள். உங்கள் வாழ்வு கிறிஸ்துவோடு கூட கடவுளுக்குள் மறைந்திருக்கிறது. நமது வாழ்வாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நீங்களும் அவரோடு மாட்சிமையில் வெளிப்படுவீர்கள் (கொலோ.3:1-4. மேலும் எபே.4:32., 5:2 காண்க).

12. இறைவழி வெளிப்பாடும் திருமறையும்

திருச்சபையில் திருமறையின் அதிகாரம்: திருமறை தோன்றிய வரலாறு. அது அங்கீகாரம் பெற்ற முறை இவை பற்றி இந்நூலில் ஏனைய கட்டுரைகளில் விளக்கம் பெறலாம். முதலாம் நூற்றாண்டிலிருந்தே கிறிஸ்தவர், திருவிவிலியத்தின் அதிகாரத்தை ஏற்று அங்கீகரித்தனர். பு.ஏ. இன்னும் எழுதப்படாமலிருப்பினும், ப.ஏ. திருச்சபைக்கு மறைநூலாயிருந்தது. கிறிஸ்தவ மறை நூல் யூத மறைநூலான பழைய ஏற்பாடும், அதனுடன் சேர்ந்திணைக்கப்பட்ட புதிய ஏற்பாடுமாகும். எப்படி யூதருக்கும், முதல் கிறிஸ்தவருக்கும், யூத மறைநூல் அதிகாரம் வாய்ந்ததாக இருந்ததோ, அப்படியே பழைய புதிய ஏற்பாடுகள் அமைந்த கிறிஸ்தவ மறைநூல் திருச்சபைக்கு அதிகாரம் வாய்ந்ததாய் இயங்கியது.

பு.ஏ. ஆசிரியரும், ப.ஏ.ஐ அதிகாரம் வாய்ந்த மறை

நூலாகக் கருதினர். யூதர். தங்களது மறைநூல் கடவுளின் வழியாய்க் கொடுக்கப்பட்டது என்று எண்ணினர். இப்படி யாக, குலத்தந்தையர், இறைவாக்கினர் முதலியோருக்கு முன்னர் அருளிய வெளிப்பாடு பின் வழிமரபினருக்குத் தெரிவிக்கப்பட்டது. திருத்தூதர் காலத்து திருச்சபையும் இப்படியே கருதியது என்பதை 2 தீமோ.3:15-17 இல் காண்கிறோம்.

தூய ஆவியின் ஏவுதலால். கடவுளின் அடியார் தங் களுக்கு அருளப்பட்ட வெளிப்பாட்டைப் பின் வழிமர பினருக்குப் பயன்படும்படி எழுதிவைத்தனர். (திருத். 4:25). அதனால், மறைநூல் சொற்கள் கடவுள் சொன்னவையாக வும்(எபி.5:6), தூய ஆவியர் சொன்னதாகவும்(எபி.3:11) குறிக்கப்படுகின்றன. திருத்தூதத் திருச்சபை. கடவுள் தமது தன்மையையும், தமது திருநோக்கு திட்டத்தையும், குலத் தந்தையருக்கும் இறைவாக்கினருக்கும் வெளிப்படுத்தியுள் ளார் என்றும். இந்த வெளிப்பாடு எழுதிவைக்கப்பட் டுளவையே யூத மறைநூல் எனவும் நம்பியது. ஆனால், இயே சுவில் காண்கிற நிறைவேறுதலைக் கொண்டுதான் யூத மறைநூலைப் புரிந்துகொள்ளுதல் கூடும் (லூக்.24:27, 44.45). **மறைநூற்களை ஆராய்ந்து பார்க்கிறீர்கள். ஏனெனில், அவைகளில் உங்களுக்கு நிலைவாழ்வு உண்டென்று நீங்கள் எண்ணுகிறீர்கள். என்னைக் குறித்துச் சான்று பகர்பவை அவையே** (யோ.5:39). இயேசுவே மறைநூலின் திறவுகோல் ஆவார். யூத மறைநூல் இனிவரும் கிறிஸ்துவைக் குறித்த இறைவாக்கினரின் சான்று அடங்கியது. ப.ஏ. சபை நசரேயனாகிய இயேசுவே அக்கிறிஸ்து எனச் சான்று பகர்ந்தது. இதை ஏற்காத யூதருக்கு ப.ஏ. மறைநூலாக உள்ளது.

ஆகவே. திருத்தூதத் திருச்சபை இறைவழி வெளிப் பாட்டை மறைநூலில் எழுதப்பட்டிருப்பதாக நம்பி மறை நூலுக்கு அதிகாரம் கொடுத்தது. ஆனால் இறை வழி வெளிப்பாடு அறிவிக்கப்பட்ட வழிவகைபற்றி யாதொரு கொள்கை விளக்கமும் தரப்படவில்லை. கடவுள் மறைநூல் மூலம் பேசியுள்ளார் என்று அது நம்பியது. ஆனால் இறை ஆவியால் தூண்டப்பட்டு எழுதப்படுதல்பற்றி முதல் சபையில் ஒரு கொள்கை இருந்ததெனச் சொல்வதற் கில்லை. 2 தீமோ. 3:16இல் மட்டும் **மறைநூல் ஒவ்வொன்றும் கடவுளின் தூண்டுதலினால் அருளப்பட்டி** ருக்கிறது எனக் காண்கிறோம். அதன் பொருள். உலர்ந்ததும் உயிரற்றதுமான சொற்களுக்குள், கடவுள் **உயிர்மூச்சை ஊதியுள்ளார்** (ஆதி.2:7) என்பதே. ஆதலால் மறைநூல் உயிரளிக்கும் கடவுளின் ஆவியின் வல்லமை எய்தப்பெற்றது. ஆனால் முதல் சபை இறை ஆவியால் தூண்டப்பட்டு எழுதப்பெற்றதால்தான் மறைநூல் அதி காரம் வாய்ந்தது எனக் கருதியது எனச் சொல்ல இயலாது.

19ஆம் நூற்றாண்டுவரை மறைநூலின் அதிகாரம் அங்கீகரிக்கப்பட்டே வந்தது. ஆனால் எம்முறையில் அதி காரம் வாய்ந்தது என்பதைப் பற்றிய கொள்கை விளக்கம் யாதும் திருச்சபையில் பிறக்கவில்லை. மார்சியோன் என்ப வர் பழைய ஏற்பாட்டின் அதிகாரத்தைக் குறித்து கேள்வி எழுப்பினார். ஓரிகென். அலெக்சாந்திரியாவின் கிலமெந்து முதலியோர் எழுத்தின்படி மறைநூலை விளக்குவதில் ஏற்பட்ட பிரச்சனையைத் தீர்க்க ஞானப்பொருள் கொடுக்க முயன்றனர். மேலும், கிறிஸ்துவின் தன்மையைக் குறித்து கடும் வாதாட்டங்கள் ஏற்பட்ட காலத்திலுங்கூட மறை நூலின் அதிகாரம் குலைக்கப்படவில்லை. இடைக்காலத்தி லும், சீர்திருத்தக் காலத்திலும் மறைநூலின் அதிகாரத்தை எதிர்த்து எழும்பிய பிரச்சனை இல்லாதிருந்தது. மறைநூல் பிழையற்றதும், கிறிஸ்தவ நம்பிக்கைக்கு அதிகாரம் படைத்ததுமாகிய அரண் என்று மக்கள் எண்ணி யிருந்தனர்.

13. புதிய சூழ்நிலையும், புதுக் கேள்வியும்

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, ஒரு மாறுபட்டச் சூழ்நிலை தோன்றியது. பார்இயல் (geology) வல்லுநர் நிலத்திலுள்ள பாறைகள் இதுகாறும் கிறிஸ்தவ மக்கள் எண்ணிய காலத்திற்கு (சுமார் கி.மு. 6604) முற்பட்டவை எனக் காண்பித்து, மறைநூல் புலவரின் கருத்து தவறென்றனர். பல கிறிஸ்தவர் இதனால் மறை நூலின் அதிகாரம் குலைந்தது என எண்ணினர். உயிர் நூல் அறிஞர் (biologist) மானிடன் உலகில் தோன்றியதுப் பரிணாமவாதம் அல்லது உள்ளது சிறத்தல் (evolution) என்ற கொள்கையின்படி விளக்கியதால், கிறிஸ்தவர் அதிர்ச்சியடைந்து, **கடவுள் மனிதரைத் தமது சாயலாகப் படைத்தார்** என்ற மறைநூலின் உண்மையை அவமாக் குவதாகக் கருதினர். தொல்பொருள் ஆராய்ச்சியாளர் (archarologist) பல பிரச்சனைகளைத் தங்கள் ஆராய்ச்சி யின் பலனாகக் கூறினர்.

அறிவியலாளரின் கண்டுபிடிப்பால், வழிவழியாக மறைநூலுக்கு இருந்துவந்த அதிகாரம் அசைவு கண்டது. கிறிஸ்தவ மறைநூல் அறிஞர், மறைநூலை நுணுக்கிய முறையில் ஆராய்ந்தனர். பகுத்தறிவைக் கொண்டு உலக நூல்களைச் சீர்தூக்கியதுபோலவே, அவர்கள் மறை நூலையும் ஆராய்ந்து பல முடிவுக்கு வந்தனர். எ.கா. **ஐந்தருளை மோசே எழுதியிருக்கமுடியாது; அதில் அவரது இறப்பு குறிக்கப்பட்டிருக்கிறதே** (இணை.34:5,6) என்றனர். ஒரே நிகழ்ச்சியைப் பற்றி இரு விளக்கங்கள்இருப்பதை அவர்கள் எடுத்துக் காட்டினர். எ. கா. படைப்பு வெள்ளப்பெருக்கு, இஸ்ரயேலர் செங்கடலைக் கடத்தல், யோசேப்பு எகிப்துக்கு அடிமையாகச் செல்லல் முதலியவை பற்றி வேறுபட்டச் செய்திகள் அறிஞர்கள் எசாயா இறைவாக்கு நூல் குறைந்த அளவில் மூன்று பேரால் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்றனர்; பு.ஏ.இல் சமநோக்க நற்செய்தி நூல்களுக்கும், நான்காம் நூலுக்குமுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டினர். இயேசு திருக்கோவிலைச் சுத்திகரித்தல், நான்காம் நற்செய்திநூலில் தொடக்கத்தில் கூறப்பெற்றிருக்க, ஏனையநூல்களில் அது அவரது திருப்பணியின் இறுதிக் காலத்தில் நிகழ்ந்ததெனக் காண்கிறோம். இந்த வேற்றுமை ஒரு புறமிருக்க, சமநோக்கு நற்செய்தி நூல்கள் தாமும் ஒன்றையொன்று தழுவி எழுதப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

கிறிஸ்தவருக்குள் **மறைநூல் உண்மைதானா?** என்ற கேள்வி திகைப்புடன் எழும்பிற்று. வாழும் கடவுள் அதிகாரத்தோடு மறைநூல் இன்றும் நம்முடன் பேசுகின்றது என்று மீண்டும் உறுதிப்படுத்த கிறிஸ்தவ இறையியல் வல்லுநர் பல காரணங்களைக் காட்டினர்.

14. சில விடைகள்

(1) இச் சூழலில் வைதீகக் கிறிஸ்தவத்திற்கு ஆதரவு தேடிய சிலர், மறைநூலின் அதிகாரம் அது இறை ஆவியால் தூண்டப்பெற்று எழுதப்பட்ட செயலில் அடங்கியுள்ளது என வலியுறுத்தினர். அவர்களுள் ஒரு

சாராள் திருமறைநூற்சொற்கள் தாமும் தூய ஆவியினால் தூண்டப்பட்டவை என்றனர். இக்கொள்கையின்படி, மறைநூலிலுள்ள செய்திகள் கடவுள் சொல்லச் சொல்ல அதற்கு ஏற்ப எழுதப்பட்டவை (verbal inspiration), பு.ஏ.உம், ப.ஏ.உடன் சேர்ந்து, கிறிஸ்தவ மறைநூலாக கருதப்பெற்றக் காலத்தே ப.ஏ.ஐக் குறித்து இப்படி எண்ணியது, பு.ஏ.ஐக் குறித்தும் உண்டாவது இயல்பே. இக்கொள்கையின் மூலமாய் மறைநூல் முழுமையானது, தவறற்றது என்றனர் விளக்கம் தரும்போது, பொருளைத் தெளிவுபடுத்த பல திருவாசகங்களுக்கு ஞானப் பொருளைக் கொடுத்தனர். ஆனால் தற்காலத்தில் மறைநூல் ஒவ்வொரு கருத்திலும் பிழையற்றது என்று தீவிரவாதிகள் சிலர் எதிர்பார்க்கிற வண்ணமாக, அறிவியல் முறைப்படி மறைநூலின் ஆசிரியர் அதை எழுதிவைத்தார் இலர். தொடக்கநூலை எழுதியவர் படைப்பின் நோக்கைக்கொண்டு எழுதினாரேயன்றி, அறிவியல் முறையில் உலகம் எப்படி உண்டாக்கப்பட்டது என்று கூற முற்படவில்லை. இம்முறையில் மறைநூலின் வழுவா அதிகாரத்தை நிலைநாட்ட முற்படுவோர், மறைநூலின் சொற்கள், எழுத்துக்கள், நிறுத்துக் குறிகள் யாவும், கடவுள் சொன்னபடி இருக்கின்றன என்று கூறுவது மட்டுமன்றி, இன்னொரு கேள்வியையும் எழுப்புகின்றனர். அதாவது, **கடவுள் எவ்வாறு மனிதருக்குள் செயலாற்றுகிறார்?** என்பது. இத்தகையோரின் கூற்றுப்படி, கடவுள் மனிதரின் சிந்தனையாற்றலில் தலையிட்டு, அது செயலாற்றாதபடி தடுத்து, தமது ,கருத்துக்களும் சொற்களும் மட்டுமே வெளிப்படச் செய்கின்றார் என்பது. அப்படியானால் ஆவியினால் தூண்டப்பெற்றவர் ஓர் இயந்திரம் போலாவார். அப்பொழுது மறைநூல் பிழையின்றி, முற்றிலும் கடவுள் சொன்ன வார்த்தைகளாக அமையும். இப்படிப்பட்ட அதிகாரம்வாய்ந்த மறைநூலைப் பெறக்கூடுமானால், மனிதர் அத்தகைய அதிகாரத்திற்குள் பாதுகாப்படைவது இயல்பே. ஆனால் அப்படிச் செய்ய மறைநூல் இடந்தரவில்லை. ஏனெனில், மறைநூலினுள் கடவுள் தன்மையைப்பற்றி முரண்பாடான கருத்துக்களைக் காண்கிறோம். (cf.விடு.ப.34:7, எசே.34:4, தொட.1:11பி, 2:8பி, லேவி.24:20 மத்.5:38 மேலும் நீதி.9:23 1சாமு.6:19 2சாமு.6:6,7 1சாமு.25:38 திருப்.137:9 காண்க). இதனால் மறைநூலின் அகச் சான்றுகள் மறைநூலைக் கடவுள் தாமே முற்றிலுமாய் பிழையின்றி எழுதிவைத்தார் என்று கூற இடந்தராது. ஆகவே, மனிதரையும், அவர்தம் மனம், சிந்தனை, ஆற்றல் இவற்றை அழித்து, கடவுள் செயலாற்றி, பிழையற்ற மறைநூலைத் தந்தார் எனலாகாது. அதே சமயத்தில் இறைத் தன்மை அமைந்துள்ள மறைநூலைத் தந்துள்ளார் என்பதில் ஐயமில்லை. ஆதலால், மறைநூலில் நாம் காண்பது யாதெனின், கடவுளால் தூண்டப்பெற்று, கடவுளின் திருவார்த்தைக்குச் சான்றாக நிற்கும் மக்களின் வார்த்தை, அது கடவுளின் செயலால் கடவுள் திருவார்த்தை ஆகின்றது. ('It is their word we have evoked by and witnessing to His word, and becoming at His will and pleasure His word to us"- J.S.K. Reid).

(2) இறை ஆவியால் மறைநூல் எழுதப்பெற்றது என்பதின் பொருள், எழுதப்பட்ட செய்திகளை அல்ல, அச் செய்திகளை எழுதினவரையே கடவுள் ஏவினார் என்பார் சிலர். இக்கருத்தின்படி, ஒவ்வொரு சொல்லும் கடவுள் சொல்லச் சொல்ல எழுதப்பட்டது என்று எண்ண வேண்டியதில்லை. முந்திய கூற்றின்படி மறைநூல் இறைஆவியால் தூண்டப்பட்டது என்றிருக்க, இக்கூற்றின்படி, மறைநூல் இறை ஆவியால் தூண்டப்பட்ட மக்களால் எழுதப்பெற்றது என்பதாகும். இதனால், குறிப்பிட்ட சிலர் எழுதியவை, கடவுளின் தன்மையையும், அவர் மக்கள்பால் செலாற்றும் முறைமையையும்பற்றி, ஏனைய இலக்கியங்களைவிட முழுமையாகவும், தூய்மையாகவும், ஆற்றல் வாய்ந்ததாகவும் எடுத்துக்காட்டுகின்றன.

இப்படி இறை ஆவியினால் ஏவப்பட்டவர் எழுதிய நூல்கள் எம்முறையில் அதிகாரம் வாய்ந்தவை, மோசே, எரேமியா, பவுல் போன்றவர் தோன்றி மறைந்து விட்டனரே; பின்னர், எப்படி அவர்கள் நூல்கள் நம்முடனே பேசக்கூடும? என்று கேட்டால், அதற்கு விடை, அந்நூல்களை நாம் வாசிக்கும்போது நாமும் தூண்டுதல் பெறுவோம், அவரது முன்மாதிரியைப் பின்பற்ற ஏவப்படுவோம், அவர் நுகர்ந்த ஆன்மிக அனுபவங்களின் கவர்ச்சியால் ஈர்க்கப்படுவோம் என்பதாம். ஆனால், இக்காரணத்திற்காக மறைநூல் தூய ஆவியால் தூண்டப்பெற்றிருத்தல் வேண்டுமா? மறைநூல் நல் மதிப்பை மட்டும் பெறுமேயன்றி சிறப்பு அதிகாரம் பெறாதுபோகுமே. மறைநூலை வாசிப்பவரில் சிலர் தாம் மறைநூலில் தூண்டப்படவில்லையென்றோ அல்லது அதில் சிறுபகுதிகள் தம்மைத் தூண்டும் தன்மை வாய்ந்தவை அல்ல என்றோ கூறினால், மறைநூலின் அதிகாரத்திற்குப் பங்கம் ஏற்படுமன்றோ? மேலும், மறை நூலின் அதிகாரம் பெரும்பாலும் தூய ஆவியினால் தூண்டப்பெற்றவரின் அனுபவ அதிகாரத்தைச் சார்ந்ததாகும். இத்தகைய அதிகாரம் உறுதியானதொன்றன்று.

மேலும், தூய ஆவியர் இன்னும் செயலாற்றிவருகிறார். ஆகவே இன்றும் அவரால் தூண்டப்பெற்று, எழுதப்பெறும் நூல்கள் எழும்ப இடமுண்டு. இவைகளுக்கும்(எ.கா. **கிறிஸ்துநாதர் அனுசாரம், மோட்சப் பிரயாணம், திருவடி உபதேசம்**) மறைநூலுக்கும் சமநிலை அளிக்க வேண்டாமா என்ற கேள்வியும் எழும்.

மறைநூலில் இறை ஆவியால் தூண்டப்பட்டு, கிறிஸ்துவின் சிந்தையுடன் (1கொ.2:16) எழுதியவரும், வரலாற்று ஆராய்ச்சிப் போக்குடன் எழுதியவரும் (லூ.1:3,4) உளர்.

ஆதலால், மறைநூலின் அதிகாரத்திற்குக் காரணம் அந்நூல் தூய ஆவியால் தூண்டப்பட்டவரால் எழுதப்பெற்றது என்பதில் மட்டும் சார்ந்திருக்காமல், தனது சிறப்பு அதிகாரத்தை கிறிஸ்துவினால் மட்டுமே பெறுகின்றது. கிறிஸ்து தாமே அதற்குத் தலைவராயும், பொருளாயும் இருப்பதால் மட்டும், அது சிறப்புள்ள அதிகாரம் பெற்றதாய் இயங்குகின்றது.

(3) மறைநூல் கடவுளின் வெளிப்பாட்டை அடக்கியுள்ளது அதில் படிப்படியான முன்னேற்றம் இருக்கிறது என்ற கொள்கையால் அது அதிகாரம் வாய்ந்தது என்பாரும் உளர். முன்னேறும் வெளிப்பாடு மனிதரின் பகுத்தறிவுக்கு ஏற்றதாயும் அறநெறி உணர்ச்சிக்கு இணைந்து போவதாயுமுள்ளது. ஆதலால் மக்களின் மறைநூல் இசைவைப் பெறத் தூண்டுகின்றது. ஆதலால் அதிகாரம் வாய்ந்தது என்பது கருத்து. இக் கருத்தின்படி மறைநூலில் எல்லாப் பகுதிகளும் ஒரே அளவில் இறை ஆவியால் தூண்டப்பட்டுள்ளன என எண்ணத் தேவையில்லை. அது ஒரு சிறப்பு; ஏனெனில் சில மறைநூற் பகுதிகள் நல்லெண்ணம் ஊட்டுவதில்லை.

(அ) இக் கருத்தில் இறைவழி வெளிப்பாட்டைப் பற்றிக் குறைவான கருத்து அடங்கியுள்ளது. அது யாதெனின், வெளிப்பாடு கடவுளைப்பற்றிச் செய்தி அறிக்கைகள் என்ற தவறான கருத்து. இக் கருத்தினர் பு.ஏ.இல் ப.ஏ.ஐவிடச் சிறப்பும் மிகவும் நம்புதற்குரியதுமான செய்தி இருக்கிறது என்பர். மறைநூல் ஆசிரியரோ, இறைவெளிப்பாட்டை கடவுளைப்பற்றி இரகசியமான விவரங்களாக அல்ல, கடவுள் தமது செயல்களின் வழியாக மக்களைத் தம்மோடு ஓர் உறவுநிலைக்கு உயர்த்துகின்றார் என்றே அறிந்து அனுபவித்தனர்.

(ஆ) இறைவழி வெளிப்பாடு கடவுளைப்பற்றிய செய்தி அறிக்கைகள் அல்ல என்பார் தாமும். இக்கொள்கையை ஆதரித்து வேறு விளக்கஞ் செய்வர். அதன்படி பு.ஏ. நெடுங்காலமாக வளர்ச்சி பெற்று வந்துள்ள ஓர் உச்ச நிலை முடிவிடம். கடவுளைப்பற்றிய குறைபாடான எண்ணங்களைக் (எ.கா. அமலேக்கியரை கடவுள் அழித்தல், 1சாமு. 30:8.17). களைந்து. உயரிய கருத்துக்கள் (எ.கா. கடவுள் மனதாரிடம் எதிர்பார்க்கும், நியாயம், இரக்கம், மனத்தாழ்மை., மீகா 6:8) வளர்ச்சி பெற்று. இயேசுவின் உயிர்த் தியாகத்தில் சிகர நிலை அடைகின்றன.

இவ்விளக்கத்திலே தானும் குறைபாடுகள் இல்லாமல் இல்லை:

(1) இறைவழி வெளிப்பாடு பல தருணங்களில் கொடுக்கப்படுவதொன்று. கடவுள் தம்மை ஓரளவு மட்டுமே காண்பித்து, எஞ்சியுள்ள தமது தன்மையைப் பின் ஒரு காலத்தில் காட்டுவதுபோல். இவ் விளக்கம் அவ் வெளிப்பாட்டை அறியச் செய்கிறது. தம்மை மறைத்திருக்கும் திரையைக் கடவுள் சிறிது சிறிதாய் மட்டும் திறக்கின்றார்போலும். ஆனால், இறைவழி வெளிப்பாட்டின் சாரம் கடவுள் தம்மையே தருவது தான். கடவுளைப் பொறுத்த அளவில் அவர் தம்மை முற்றுமுடிய வெளிப்படுத்த விருப்பங்கொண்டுள்ளார். தங்குத் தடை என்பது மனிதர் சார்பில் மட்டுமே உளது. இறை வழி வெளிப்பாட்டைப் பெறுவதிலும், அதை எழுதி வைத்தலிலும் மனிதரே குறைவுள்ளவர். ஆகவே, வெளிப்பாட்டில் முன்னேற்றம் என்று கூறாது. அதைப் புரிந்து எழுதி வைப்பதில் முன்னேற்றம் இருக்கிறதென்றால் பொருந்தும். விவிலியத்தில் இறைப் பகுதியும், மனிதப் பகுதியும் உள. குறைபாடுகள் மனிதப் பங்கின் கூறுபாடேயன்றி, இறைப் பங்கில் கலந்து வருகிறதென்று சொல்லல் ஆகாது.

(2) வெளிப்பாடு அதைப் பெறுவோரது பக்குவ மனநிலையைச் சார்ந்திருக்கிறது என்ற உண்மையைத் தவறாக அறிதலும் கூடும். வெளிப்பாட்டைப் பெறுவோரின் பெறற்குரிய ஆற்றலே வெளிப்பாட்டின் சிறப்புக் கூறு ஆகுமா? ஆனால், வெளிப்பாட்டின் அடிப்படை உண்மை, கடவுளால் மட்டுமே கடவுள் அறியப்படக் கூடும் என்பது (1கொ. 2:14). ஆதலால், கடவுள் தாமே முன்னரே செயலாற்றி, தமது திருவருளால் முந்தியே மக்களைப் பக்குவப்படுத்தி, தம்மை அறிந்துகொள்ளக்கூடிய சூழ் நிலையில் மக்களை வைக்கின்றார். மக்கள், அவ் வெளிப்பாட்டைப் புரிந்துகொள்ளுவதில், தமக்குரிய பற்பல சூழ்நிலை, ஆற்றல் முதலியவற்றால் பாதிக்கப்படுவதால், வெளிப்பாட்டை அவர்கள் எழுதிவைப்பதிலும், அதை வெவ்வேறு பிரச்சனைகளுக்கு ஏற்பச் செயல்படுத்துவதிலும் படிப்படியாக முன்னேற்றம் ஏற்படலாம். ஆனால், வெளிப்பாடோ மாறாத் தன்மையுடையது. அது இறைவனின் வெளிப்படுத்தும் திருச்செயலில் அமைகிறது.

(3) இன்னொரு குறைபாடு. வெளிப்பாடு தொடக்கத்தினும் பார்க்க இறுதியில் அதிகமாய்த் தரப்படும் என்பது. இத்துடன் இணைந்து தலைகாட்டும் மற்றொரு குறைவு. இறுதியில் முழுமையான வெளிப்பாடு பெற்ற பின்னர், முன்னர்த் தந்தருளிய வெளிப்பாட்டைத் தள்ளிவிடலாம் என்பது. விவிலிய மறைநூல் வெளிப்பாட்டின்படி, இயேசுபெருமானில் வெளிப்பாட்டின் நிறைவைக் காண்பதால், அவர் அவதரிப்பதற்கு முந்திய வெளிப்பாடுகள் தேவை இல்லை; ஆகவே, பழைய ஏற்பாட்டைத் தள்ளிவிடலாம் என்பது இக் கொள்கையின் விளைவு. ஆனால் வரலாற்று அடிப்படையில் வெளிப்பாட்டை அறிந்துகொள்ளும் முறையை ஏற்றவர் பழைய ஏற்பாட்டைத் தள்ளிவைப்பது கூடாத செயல்.

(4) விவிலிய மறைநூலில், இறைவழி வெளிப்பாட்டைப் பற்றி ஒரு நடைமுறை அல்லது போக்கு இருக்கின்றது. ஆனால், அது அரைகுறை நிலைமையில் இருந்து முழுமையான நிலைமைக்கு வந்துள்ளது என்று கூறாமல், வாக்குறுதி நிலையிலிருந்து நிறைவேறுதல் அடையும் நிலையே இவ் வெளிப்பாட்டின் போக்கு என எண்ண வேண்டும். (எபி.11:39,40). வாக்கு நிறைவேறுதலாக வளர்ச்சியுற்றது என்று கூறாமல், நறைவேறுதல் வாக்கோடு தொடர்பு கொண்டது என்று கூறுவதே பொருந்தும். நிறைவேறுதல் ஒரு தனிச் சிறப்பான செயல். இந்த அடிப்படையில் கணிக்கும்போது ப.ஏ.உக்கும் பு.ஏ.உக்கும் இடையில் ஓர் இணைப்பும் பிணைப்பும் இருக்கிறது. அவை இரண்டையும் ஒன்று சேர்ப்பவர் ஆண்டவர் இயேசு. ப.ஏ. மக்களுக்குக் கிறிஸ்து வாக்குறுதியாக அருளப்படுகிறார். பு.ஏ. மக்களோ அவரை நிறைவேறுதலாகப் பெற்று மகிழ்கின்றனர். இதிலுள்ள வேற்றுமை பொரிது. யூதர் இதை ஒத்துக்கொள்ள வில்லையெனினும். நற்செய்தியாளரின் விளக்கப்படி கிறிஸ்தவ நம்பிக்கையில் இது ஓர் அடிப்படையாக உள்ளது.

இது தொடர்பாக நாம் ஒரு கருத்தை ஏற்க இயலாது. அதாவது, திருமறையையும் இறைவழி வெளிப்பாட்டையும் ஒன்றென்று கருதுவது. விவிலிய மறைநூல் இறைவழி வெளிப்பாட்டுக்குச் சான்றாக அமைகின்றதேயன்றி, அது நேர்முக வெளிப்பாடு என்று சொல்லுதல் கூடாது. எனினும், மறைநூலை கடவுள் தம்மை வெளிப்படுத்தும் கருவியாகப் பயன்படுத்தக்கூடும்.

(5) இன்னும் சிலர், சிறப்பாக ஆஸ்டின் பரார், தாராளக் கொள்கைக்குச் சிறப்பிடம் அளிப்போமானால், மறைநூலின் அதிகாரம் குலைந்துவிடும் என்றெண்ணி, விவிலியம் இறைஆவியால் தூண்டி எழுதப்பெற்றது என்பதைக் குறித்து, வேறொரு விளக்கத்தைத் தர முற்பட்டனர். இவர்கள், மறைநூல் ஆசிரியர் மனம் தூய ஆவியால் ஏவப்பட்டது என்றும், அவர்கள் இறைவழி வெளிப்பாட்டின் உண்மைகளை அறிந்து, அவைகளை எழுத்தின்படி புரிந்துகொள்ளக்கூடியதான உரைநடையில் எழுதவில்லை என்பர். மறைநூலை எழுத்தின்படி மட்டும் வலியுறுத்துபவர் தவறாகப் புரிந்துகொள்ளும் முறையை இக்

கொள்கை தவிர்க்கிறது. அதற்குப் பதிலாக வெளிப்பாட்டு உண்மைகள் இறைவந்தூக்கலால் ஏற்பட்ட உருவகங்கள் அல்லது உருவக் காட்சிகள் (images) மூலமாய்ப் பெறலாயினோம் என்பர். இத்தகைய உருவக் காட்சிகள், செய்யுள், நாடகம், அல்லது உவமை, எவ்வாறு உண்மையை எடுத்துரைக்கின்றனவோ, அவ்வாறு இதனை இக் காலத்தில் எடுத்துரைக்கின்றன என்பர் (புல்த்மான் போன்றவர். நற்செய்தியின் சாரத்தை, அது பொதிந்து தரப்படும் உவமை. மற்றும் அக் காலத்துக் கருத்துக் களினின்று பிரிக்கவேண்டும் என்று கூறும் போக்கு, இச்சாரார் தரும் விளக்கத்திற்கு மாறானதாகும்).

இக் கொள்கையின் சிறப்பு, வெளிப்பாட்டிற்குச் சிறந்த மதிப்பளித்தலும், எழுத்தின்படி விவிலியத்தைப் புரிந்து கொள்ளுதலைத் தவிர்த்தலும் ஆகும். ஆனால், இக்கொள்கையில் ஒத்த பொருள் அல்லது அடையாளப் பொருள் (type) விளக்கும் முறை மிதமிஞ்சிப்போகலாம். மேலும், இக்கொள்கை இடந்தரும் ஞானப்பொருள் கூறுவதற்கும் எல்லை வகுக்க இயலாது. ஆகவே, இக் கொள்கையின்படி, மறைநூலின் அதிகாரம் கவிதை முறைப்படி . தூய ஆவியர் விவிலிய ஆசிரியரைத் தூண்டி எழுதச் செய்த வகையில் அமைந்துள்ளது என்பது, மறைநூலின் அதிகாரத்தை ஏற்ற முறையில் வலியுறுத்தும் வகை என்று கூறவியலாது.

மேற்கூறிய கொள்கைகள் விவிலியத்தின் அதிகாரத்தை வலியுறுத்த எழும்பியவை. ஆனால் அவை, கடவுள்தாமே உலக வரலாற்றில் செயலாற்றியுள்ளதற்குப் போதிய முக்கியத்துவம் தரவில்லை. இக்குறையைத் தவிர்க்க, நாம் இயேசுவிலும், அவர் நிறுவிய திருச்சபையிலும், உச்ச நிலையடைந்த இஸ்ரயேலரின் வரலாறு, ஒரு தனிச் சிறப்பான வரலாறு என்று கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் விவிலிய அதிகாரத்தை வகுக்கும்முன், அதன் அதிகாரத்தையும் திருச்சபை மரபுகளின் அதிகாரத்தையும் தொடர்புபடுத்திக் காணல் வேண்டும்.

15. மறைநூலின் அதிகாரமும், திருச்சபை மரபுகளின் அதிகாரமும்

கிறிஸ்தவ விவிலியம் கிறிஸ்தவ நம்பிக்கைக்கடுத்த உண்மைகளை அளந்து மதிப்பிட தலைசிறந்த ஏது ஆகும். ஆனால், கிறிஸ்தவம், உலக வரலாற்றில் வளர்ச்சி பெற்று, தனக்கே உரிய ஒரு தனி வரலாற்றுடன் இயங்குகின்றது. ஆதலால், மறைநூலை மட்டும் வலியுறுத்தி, அதுவே எல்லாவற்றிற்கும் போதியது எனக் கூறி, கிறிஸ்தவ வரலாற்றிலிருந்து கிடைக்கப்பெறும் சான்றுகளை ஏற்காதிருப்பது நேரிதன்று.

இது தொடர்பாகத் திருச்சபைக்கும் இடமுண்டு, திருச்சபைக்கும் ஓர் அதிகாரம் உண்டு என்று கருதினால், விவிலியத்துக்குரிய சிறப்பிடத்திற்குப் பங்கம் ஏற்படும் என எண்ணவேண்டாம். மறைநூலே அதாவது கடவுளின் திருவார்த்தையே திருச்சபையை உருவாக்கிற்று. கடவுளின் திருவார்த்தை கடவுளின், மக்களின் தோற்றத்திற்கு முற்பட்டது. இறைவாக்கினர், ஆண்டவர் சொல்லுகிறார் என்றே இஸ்ரயேலருக்கு இறைவாக்குரைத்தனர் எனினும், ப.ஏ. கடவுள் மக்களும், பு.ஏ. கடவுள் மக்களுமாகிய திருச்சபையும், மறைநூலை உருவாக்குவதில் பங்கு கொண்டுள்ளதை முன்னர்க் கண்டோம். எ.கா. புதிய ஏற்பாட்டுத் திருமுகங்கள் வெவ்வேறு திருச்சபைகளுக்க, கிறிஸ்தவக் கூட்டு வாழ்க்கையில் எழுந்த பிரச்சனைகளுக்குப் பெரும்பாலும் விடை காண்பவையாக அமைந்துள்ளன. துவக்கத் திருச்சபையிலேயே ஒரு பொது மரபு உருவாகி நிலவியது. இறைவழிபாடு, இறையியல் விளக்கங்கள், இவை எல்லாம் திருச்சபையில் செவிவழி மரபுகளாகவும், ஒழுங்கு முறையாகவும் ஏற்கப்பட்டு, கடைப்பிடிக்கப்பெற்று வந்துள்ளன. மறைநூல் ஆசிரியர் அவற்றை எழுதித் தந்துள்ளனர். இறைவனின் வெளிப்பாட்டுச் செயலுக்குப் பதிலாக எழுந்த மரபாக மறைநூல்கள் எழுதப்படுமுன், அவற்றின் முக்கியமான பொருள் திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

ஆகவே, திருச்சபை ஒரு முறையில், மறைநூலுக்கு துணை ஆதாரமாக அமைகின்றது. மறைநூலின் மரபுகளின் அதிகாரம் திருச்சபையின் அதிகாரத்தோடு இணைந்து வருகிறது கீழைத் திருச்சபையில் இது தொடர்பாகத் திருச்சபை, மறைநூல், மரபு இம்மூன்றும் பிரிக்கப் பெறாமல் இணைந்து நிற்கின்றது குறிப்பிடத் தக்கது. திருச்சபை, மறைநூலுக்கு தாய் என்று கூறுவது பொருத்தமன்று என்றும், அதே சமயத்தில் மறைநூலே திருச்சபைக்குத் தாய் என்று கூறுவதும் நேரிதன்று என்றும் இச் சபையினர் கொள்வர். இச்சபையின் கொள்கைப்படி, மறைநூலுக்கும் மரபுகளுக்கும் பிறப்பிடமாகவும், பாதுகாப்பாகவும், அதிகாரப் பூர்வமான சான்றாகவும் திருச்சபை இயங்குகிறது. இம்மூன்றுக்கும் உரிய அதிகாரம் கடவுளிடமிருந்தே பிறக்கிறது என்பதையும் இச்சபை வலியுறுத்துகிறது.

இதை மேலும் விளங்கிக் கொள்வதில், திருத்தூதர் மரபு மறைநூற்பொருளை எடுத்து விளக்கவும், அதற்குத் துணைக் கருவியாகவும் விளங்குகிறது. மேலும், மறைநூல் திருச்சபையில் தோன்றியதாலும் திருச்சபைக்கே அது உரியதாலும், திருச்சபையிலேதான், மரபின் உதவியுடன் அதைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். திருச்சபை எல்லா உண்மைக்குள்ளும் வழி நடத்தப்படுமாறு, தூய ஆவியர் அதனுள் உறைகிறார் (யோ. 16:13).

திருச்சபை, மரபுகள் இவற்றுக்கும் மறைநூலுக்கும் தொடர்பு இப்படியிருக்க, மறைநூலின் சிறப்பதிகாரம் எப்படி அமைகிறது என்பதைக் காண்போம்.

16. விவிலிய மறைநூலின் அதிகாரம்

(1) **கிறிஸ்து பெருமானின் அதிகாரம்:** மறைநூலுக்குத் தனிச் சிறப்பான அதிகாரம் உள்ளது. எவ்வாறு திருச்சபைக்கு இயேசுபெருமான் நாயகரோ, அவ்வாறே மறைநூலுக்கு அவர்தாமே ஆண்டவராய் இருப்பதால், அவ்வதிகாரம் ஏற்படுகிறது கிறிஸ்து அல்லாமல் வேறுவகையாய் மறைநூலுக்கு அதிகாரம் இல்லை. மறைநூல், ஏனைய நூல்களைப் பற்பலக் கூறுகளில் ஒத்திருக்கலாம். அது எழுதப்பெற்ற முறை, பல நூல்கள் எழுதப்படும் முறையாயும் இருக்கலாம். ஏனைய நூல்களைப் போலவே, கிறிஸ்தவ மறைநூலும் இலக்கிய வரலாற்று முறையான திறனாய்வுக்குட்பட வேண்டுவதாயிருக்கிறது. மறைநூலில் கடவுளைப்பற்றிக்

காணும் சிறந்த கருத்துக்கள். குறிப்பாக, அவர் அன்புள்ளவர் என்பது. வேறு நூல்களிலும் காணக் கிடக்கிறது. எனினும், கிறிஸ்தவ மறைநூலுக்கு தனிச் சிறப்புண்டு. அச் சிறப்பு இயேசு பெருமானினின்று மட்டுமே பெறலாகிறது. இயேசு பெருமான் ஒரு சாதாரண மனிதர் என்றால், அவரைப்பற்றிய கிறிஸ்தவ மறைநூலும் ஒரு சாதாரண மறைநூலே ஆகும். அதற்குமேல் அதற்குச் சிறப்புரிமையும் அதிகாரமும் தேடக்கூடாது. ஆனால் கிறிஸ்து பெருமான் தனிச் சிறப்பானவரும், வரலாற்றுக்குத் திறவுகோலுமான இறைவழி வெளிப்பாடு ஆவாரானால், அவரைப்பற்றிய நூலும் தனிச் சிறப்பானதே ஆகும்.

அந்நூலின் ஆண்டவர் என்னும் முறையில், இயேசு அதில் அங்கும் இங்கும், தமது அரசுரிமையுடன் உலாவுகின்றார். எவர் எந்தப் பகுதியை வாசிக்கின்றாரோ, அவருக்கு அந்தப் பகுதியை அவர் உயிர்ப்பித்துக் கொடுத்து, அதைத் தமது வாழ்வின் வார்த்தையாக்க அவர் ஆற்றல் கொண்டுள்ளார். மோசே தமது ஆடுகளை அன்று மேய்த்துக்கொண்டிருந்த காலத்தில், தம்மைச் சூழப் பல முட்செடிகள் இருக்கக் கண்டார். ஆனால் ஒன்று மட்டுமே திடீரென தீப்பற்றி எரியலாயிற்று. அச்செடியில் யாவே மோசேயைச் சந்தித்தார். அதுபோலவே, மறைநூல் முழுவதிற்கும் மேலதிகாரம் பெற்ற இயேசுவும், அதில் எத் திருவசனத்தையும் பயன்படுத்தி, அதன் வழியாய் எந்த மக்களையும் சந்தித்து, அவர்களுடன் பேசுதல் கூடும்.

(2) மறைநூல் ஆண்டவர் இயேசுவுக்குச் சான்று பகரும் திருநூல்: கிறிஸ்தவ மறைநூல் தொடக்கத்திலிருந்து முடிவு வரை, ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை, கிறிஸ்துவைப்பற்றியதொரு திருநூல் என்றார், அலன் ரிச்சர்ட்சன். பு.ஏ. அளவிற்குப் ப.ஏ.ஐக் குறித்து இப்படிச் சொல்ல இயலாவிடினும், பொதுப்பட இப்படிச் சொல்வது பொருத்தமேயாம். கிறிஸ்துவை எடுத்துக்காட்டுவதில், மறைநூல் சாட்சிகள் அரைவட்ட வடிவில் அமைகின்றனர் எனலாம். இயேசுநாதரை மையத்தில் வைத்து அவரைச் சூழ இருக்கும் ஓர் அரை வட்டம் ப.ஏ. ஆசிரியரைக் குறிக்கும். அவர்கள் வருங்காலத்தை குறித்துச் சுட்டிக் காட்டி நிற்கின்றனர். கடவுளின் செயல்களில் எல்லாம் தலைசிறந்தது ஆகிய அவரது மாபெருஞ்செயலை எதிர்நோக்கி, அதைக் குறித்து அவர்கள் சான்று பகிர்ந்து நிற்கின்றனர்.

மற்றொரு அரை வட்டம், புதிய ஏற்பாட்டுச் சாட்சிகளைக் குறிக்கும். இவர்களும் ப.ஏ. ஆசிரியரைப் போலவே இயேசுவைச் சுட்டிக் காட்டுகின்றனர்; ஆனால் வரப் போகிறதைக் குறித்துச் சுட்டிக்காட்டாது, வந்து நிகழ்ந்த கடவுளின் மாபெருஞ் செயலைக் காட்டி நிற்கின்றனர். அவர்களது அக்கறை தங்களைக் குறித்தது அன்று; இயேசுவைக் குறித்தது. கடவுள், இயேசுநாதரில் ஊனுடல் தாங்கி வந்த திருச்செயல் இவ்வாறு மையமான இடம் வகிக்கிறது. இவ்வாறு மறைநூல் சாட்சி திருநூல் ஆகின்றது. ப.ஏ.இல் அது வாக்குறுதியால் அமையும் இறைவாக்கின் சான்றும் பு.ஏ.இல் வாக்குறுதி நிறைவேறியதைக் குறிக்கும் திருத்தூதரின் சான்றுமாக அமைகிறது. இவ்வாறு கடவுள் தம்மைத் தமது திருமைந்தராகிய இயேசுவில் வெளிப்படுத்திய செயலுக்கு மறைநூல் முக்கியமும் முதன்மையுமான சான்றாவதால், அதற்குரிய அதிகாரம் பெரிதும் தனிச் சிறப்பும் வாய்ந்தது.

இத்தகைய அதிகாரம், மறைநூல் கிறிஸ்துபெருமானின் தனிச் சிறப்பைக் குறித்து விவாதிப்பதனால் ஏற்படுவதன்று. மறைநூலில் கடவுள் இருக்கிறார் என்பதற்குக் காரணங்கள் காட்டி, உண்மையை விளக்குவதை நாம் காணவில்லை. கடவுள் ஆற்றியுள்ள செயல்களைக் குறித்து மட்டும் சான்று பகர்ந்து நிற்கிறது கிறிஸ்தவ மறைநூல்.

இந்த அளவில், கிறிஸ்தவ மறைநூல் ஏனைய சமய மறைநூல்களுக்கு வேறுபட்டது. எ.கா. இந்து சமயத்திற்கு வேதங்கள் அதிகாரம் வாய்ந்தவை: அவை இந்து சமயத்தின் அடிப்படையாக இயங்குகின்றன. ஆனால், இவ்வதிகாரத்தை இந்து வேதங்கள் எப்படிப் பெறலாயின என்னும் கேள்வியை நாம் எழுப்புவோமானால், கிறிஸ்தவ மறைநூல் இறைவழிவெளிப்பாட்டுச் செயல்களின் பதிவுச் சான்றாக விளங்குவதுபோல், அவை அமையாமல், சப்தக் கொள்கையால அதிகாரம் பெறுகின்றவை என்பது வெளியாகிறது. இந்து சமயத்தில் இறைவழி வெளிப்பாடும் வேதமும் ஒன்றென ஏற்கப்படுகிறது. சப்தக்கொள்கையே இறைவழி வெளிப்பாட்டைப் பற்றிய இந்து சமய விளக்கம். சப்தம் என்றால், வெறும் ஒலி என்பதன்று. பொருள் தரும் ஒலி என்பதாம்; அதாவது, பொருளமைந்த சொற்களின் ஒலி. இக் கொள்கையின்படி, இறைவாக்கினர், இறையடியார், அறிவாளிகளுக்குக் கடவுள் தமது மனத்தைச் சொற்களால் வெளிப்படுத்துகிறார். ஆகவே, இறைவழி வெளிப்பாடு சொற்களால ஆனது; கேட்கப்படுவதும் ஆகும். இப்படி வெளிப்படுத்தப் பட்டவைகளை இந்து வேதங்களில் காணலாம்.

கிறிஸ்தவ நம்பிக்கையில் மறைநூலும் இறைவழி வெளிப்பாடும் அல்லது இறைவனும் ஒன்றுதான் எனக் கூறப்படாமல், வெளிப்பாடு கடவுளின் செயல்களால் ஆகின்றது எனவும், அச் செயல்களின் பதிவுச் சான்றே கிறிஸ்தவ மறைநூல் என்றும் கொள்ளுகிறோம்.

17. மறைநூல் கடவுள் வார்த்தை என்பது எப்படி?

மறைநூல் கிறிஸ்துவைக் குறித்துச் சான்று தரும் திருநூல். இச் சான்று இரண்டு முறைகளில் அமைவது ஒரு சிறப்பு. ஒன்று, கடவுளின் மாபெருஞ் செயல்களை இறைவாக்கினர், திருத்தூதர் போன்றவர், கடவுளின் ஆவியால் தூண்டப்பெற்று, அறிவுறுத்தப்பெற்று, அவை மீட்பின் செயல்கள் எனக் கற்பிக்கப்பெற்று, அவற்றைக் குறித்துச் சான்று பகருதல் ஆகும். மற்றொன்று, கடவுள் அருளும் மீட்பைக் குறித்துத் தூய ஆவியானவர் நமது இருதயங்களில் சான்று பகருவதற்கு மறைநூல் கருவியாயிருப்பது ஆகும். மறைநூலை இங்ஙனம் மதிக்கும்பொழுது, அது கடவுளுடைய வார்த்தையாகவும், மனித வார்த்தைகளாகவும் விளங்குகிறது. இவ்விரண்டு கூறுகளையும் நாம் மனத்திற்கொண்டு மறைநூலின் சிறப்பை அறிந்து கொள்ளுவது அவசியம். எப்படி கிறிஸ்துவின் மெய்த் தன்மையை அறிந்துகொள்ள அவரின் இறைத் தன்மையையும், மனிதத் தன்மையையுடம் அறிந்துகொள்ள வேண்டுமோ, அப்படியே கிறிஸ்தவ மறைநூலிலும் இரு கூறுகளைக் காண்கிறோம்.

(1) **மறைநூல் கடவுளின் வார்த்தையே:** எப்படியெனில் கடவுள் உலகத்துக்குக் கூறும் மீட்பின் வார்த்தை அதில் அடங்கியுள்ளது. அம் மீட்பின் வார்த்தை இயேசுவே என்பது யோவானின் விளக்கம். அவரை முன்னிட்டு. கிறிஸ்தவ மறைநூல் மட்டுமே அதிகாரம் மிக்கதும். வரலாறு சார்ந்ததுமான சான்று நூல். உண்மையில் கடவுளுடைய வார்த்தை எனும்பொழுது. அது இயேசுபிரானை மட்டுமே குறிக்கும். அவரே கடவுளுடைய திருவார்த்தையானவர் இவ்வுண்மையில் இருந்து இன்னொரு உண்மை வெளியாகிறது. அதாவது அவரைக் குறித்த திருநூல், அவரால் அதிகாரம் பெற்ற திருநூல், அவரையே தன் உட்பொருளாகக் கொண்டு திகழ்தலால், அத் திருநூலையும் கடவுளுடைய வார்த்தை எனலாம். கடவுளுடைய ஆளியல்புடைய இயேசு பெருமான் மட்டுமே; எனினும், தம்மைப் பற்றிய மறைநூலின் மூலமாய், அவர் மக்களை நேர்முகமாகச் சந்திக்கிறார்; தமது நியாயத் தீர்ப்பின் வார்த்தையையும், மன்னிப்பின் வார்த்தையையும், அதன் மூலமாய் வெளியிடுகிறார். அங்கு அவரது இருக்கையை மக்கள் உணர்ந்தறிகின்றனர்.

(2) **மறைநூல் மனிதரின் வார்த்தைகளாம்** மறைநூலில் நாம் காணும் வார்த்தைகள் மனிதரால் எழுதப்பட்டவை. மனிதருக்குரிய குறைபாடுகள், சிறுமை போன்ற தன்மையால், அவ வார்த்தைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அம் மனிதர் தாங்கள் வாழ்ந்த காலத்துக் குறைபாடுகளால் பாதிக்கப்படாதவர் அல்லர். அவற்றின் நடுவில் அவர்கள் தாங்கள் கண்டதைக் குறித்துச் சான்றாக எழுதியுள்ளனர். ஆகவே கடவுளைப்பற்றிய மாபெருஞ்செய்தியைக் கூறி அறிவித்தபோதிலும். அவர்கள் தங்களியல்புக்குரிய கட்டுப்பாடுகள் நிறைந்தவர்களே. இவ்வுண்மையை மறத்தல் மறைநூலை அறிந்துகொள்வதில் பல தவறான எண்ணங்களுக்கு வழி நடத்தக்கூடும் என்பதை முன்னர்க் கண்டுள்ளோம். வலிமையற்ற மனிதரின் சான்றுக் கருவியின் மூலமாய், நாம் கடவுளைக் கிறிஸ்துவில் கண்டுகொள்வது, கடவுளின் திருத்திட்டத்தில் வியத்தகு செயலேயாகும்.

இந்த எண்ணத்தைத்தான் லுத்தர் மனத்திற்கொண்டவராய், மறைநூல் சொற்கள் கிறிஸ்துவைப் பொதிந்து வைத்திருக்கும் துணிகள் என்று கூறினார். இத் துணிகள் குறைபாடுள்ளவை, எளிமையானவை, தாழ்மையானவை. ஆனால், அவைகளுள் இருக்கும் கருவுலமோ மிகவும் அருமையானது. ஆகவே, மறைநூலில் மனித வார்த்தைகள் இருப்பதை மறுத்தலோ மறத்தலோ பொருந்தாது. யாவே ஒரு தாழ்வான அடிமை மக்களினத்தைத் தேர்ந்தெடுத்து அதைத் தமது மீட்பின் திட்டத்திற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்திய வண்ணம், மறைநூல் ஆசிரியரின் உரைகளையும் பயன்படுத்த வல்லவர்.

எமில் புருனர் இறையியல் வல்லுநர். மறைநூலை ஓர் இசைத்தட்டுக்கு ஒப்புவமித்துப் பேசியுள்ளார். இசைத் தட்டை வைத்துப் பாட்டையோ இராகத்தையோ இரசிக்கும்பொழுது, சில கனத்த ஒலிகளை நாம் கேட்கிறோம். அவை தலைவரின் குரல் அல்ல. ஊசி இசைத்தட்டில் ஒன்றுக்கும் உதவாது என்று வெறுத்துத் தள்ள வேண்டாம். ஏனெனின், அத்தகைய இசைத்தட்டின் வாயிலாகவே தலைவரின் குரலைக் கேட்கக் கூடும். அதுபோலவே, மறைநூலும் அமைகின்றது. நமது ஆண்டவராகிய தலைவரின் குரலையே அவர் நமக்குச் சொல்ல விரும்புபவற்றையே, நாம் கேட்கச் செய்கிறது கிறிஸ்தவ மறைநூல்.

மானிடப் பலவீனத்தின் பங்கு இல்லாததினாலன்று, இருப்பதினாலேயே இறையச்சமும் தாழ்மையும் நமக்குப் பெருக வேண்டும். பலவீனரான மனிதரின் எழுத்துக்களின் வாயிலாக இறைவன் தம்மைப் பற்றிய சாட்சியத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்பதில் அவரது ஆற்றலும் அருஞ்செயலும் வெளிப்பட்டுள்ளன. எனவே எழுத்துக்கெழுத்தாக விவிலியத்தை ஏற்பது, மரபு வழி வரும் விளக்கத்தையே பிடித்துக் கொண்டிருப்பது முதலிய செயல்களும் ஒருவித சிலைவணக்கம் எனலாம். இதை உணர்வோர் தாழ்மையுடனும் அறிவுக்கூர்மையுடனும் தூய ஆவியர் எல்லா உண்மைக்குள்ளும் தங்களை வழிநடத்திட திறந்த மனத்தவராயிருப்பது இன்றியமையாதது. விவிலிய அதிகாரம் என்பதை வைத்து ஆதிக்க உணர்வுகளை வளர்க்கக் கூடாது. பல்வேறு சமயங்கள், மறைநூல்கள் இருக்கும் சூழலில் நம் மறைநூலின் செய்தியை, அதன் தனிச்சிறப்பை அன்புடனும் பணிவுடனும் பகிர்ந்திட முன்வரவேண்டும்.

துணை நின்ற நூல்கள்

1. Rowley, H.H. *The Authority of the Bible*, Overdale College, Sellyoak, 1949.
2. Davidson, F., Stibbs, A.M., Kevan, E.F., *The New Bible Commentary*, articles on *The Authority of Scripture, Revelation and Inspiration*, IVF, London, 1954.
3. Reid, J.K.S., *The Authority of Scripture*. Methnen, London, 1957.
4. Abba Raymond, *The Nature and Authority of the Bible*, James Clarke, London. 1958.
5. Burnaby, John, *Is the Bible Inspired?* S.P.C.K., London, 1959.
6. Smart, James D., *The Interpretation of Scripture*, S.C.M. Press, London, 1967.
7. Black, Mathew and Rowley, H.H., *Peake's Commentary on the Bible*, relevant articles. Thomas Nelson, London, 1962.
8. Manuel, Albert, *An Introduction to the Study of Christian Theology* (Tamil), C.L.S., Madras 3, 1964.
9. C.H. Dodd, *The Authority of the Bible*, Collins, 1969.
10. J.I. Packer, *Fundamentalism and the word of God*, IVP, 1970.
11. J.W. Wenham, *Christ and the Bible*, Baker, 1984.
12. D. Carson, *Hermenutics, Authority and Canon*, IVP, 1986.

4

விவிலியத்தைப் படிப்பதெப்படி?

லெஸ்லி நியுபிகின்

1. முகவுரை

பலவகைகளில் விவிலியம் தனித்தன்மை வாய்ந்த நூல்; ஒரு சிக்கலான நூல். நாம் வசிக்கும் இன்றைய உலகச் சூழ்நிலையினின்று முற்றும் வேறுபட்ட சூழ்நிலையில் தோன்றிய தொன்மைமிக்க நூல். அதில் சில பகுதிகள் நமக்குப் புரியவில்லை; சில பகுதிகள் சுவை அற்றவை. விவிலியத்தில் காணப்படும் நீண்ட தலைமுறை அட்டவணைகளையும். மிக விரிவான சடங்காசாரச் சட்ட திட்டங்களையும் இதற்கு எடுத்துக் காட்டுக்களாகக் கூறலாம். பாலஸ்தீனா மீது படையெடுத்த இஸ்ரயேலர் அந்நாட்டு ஆண்களையும் பெண்களையும் குழந்தைகளையும் கொன்றுகுவித்த கொடுஞ்செயல் நம் காலத்திய அறநெறி ஒழுங்கிற்கு முரணானது. விவிலியத்தில் கட்டளைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் பலவற்றை இன்று ஒரு கிறிஸ்தவர் கடைப்பிடித்தொழுகுவாராயின், அவர் எல்லாராலும் ஒழுக்கக் கேடானவர் என்று பழிக்கப்படுவார் என்ற போதிலும். விவிலியம் தலைமுறை தலைமுறையாக உயிருள்ள கடவுளுடைய திருவாக்காகத் தொடர்ந்து இயங்கி வந்திருக்கின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. முந்திய காலங்களில் நிகழ்ந்தது போலவே நம் காலத்திலும். கிறிஸ்தவ மக்களுக்குப் புதுயிரூட்டும் இயக்கங்கள் அனைத்தும் விவிலிய ஆராய்ச்சியின் விளைவாகவே தோன்றியுள்ளன. உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையில் இன்று காணப்படும் கிளர்ச்சிகூட, மக்கள் தாமாகவே விவிலியத்தைப் படிப்பதிலிருந்தே தோன்றியிருக்கிறது. நாள்தோறும், எங்கேனும் யாரேனும் ஒருவர் மனம் மாறிக் கிறிஸ்துபிரானிடம் திரும்பி வருகின்றார் என்றால், அது அவர் விவிலியத்தை ஊன்றிப் படித்ததினாலேயே ஏற்பட்டுள்ளது.

இத்தகைய தனித்தன்மை வாய்ந்த இந்நூலைப் படிப்பது எப்படி? அதற்கு நம்மீதுள்ள அதிகாரம் எத்தன்மையது? அதிலுள்ள ஒவ்வொரு சொல்லும் கடவுளுடைய சொல் என்று ஏற்றுக்கொள்ளாவிடில், அதனை எக் கருத்தில் கடவுளின் திருவாக்கு என்று ஒப்புக்கொள்வது? விவிலியம் வாயிலாக கடவுள் நம்மோடு பேசுவதைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு அதனை எவ்வாறு பொருள் விளக்கம் செய்ய வேண்டும்? இக் கேள்விகள் மிகவும் கடினமானவைகளே. இந்தக் கட்டுரையில் இந்தக் கேள்விகளுக்கு உண்மையான விடை காண, சில கருத்துக்களை ஆலோசனையாகக் கூறுவோம்.

2. மறைநூல் என்றால் என்ன?

ஒன்றை நம்பி, தாம் நம்பியதைக் கடைப்பிடித் தொழுகுகிற மக்களுடைய நூலே மறைநூல். வானத்திலிருந்து மக்கள் கையில் போடப்பட்ட ஒரு நூல் அன்று. அது தலைமுறைதோறும் மக்களால் போற்றிப் பேணி வளர்க்கப்பட்ட நூல்; ஒரு தலைமுறையால் மறுதலைமுறைக்குப் பாதுகாத்துத் தரப்பட்ட நூல். அது தாம் நம்புகிற, நம்புவதைக் கடைப்பிடித்தொழுகுகிற சமுதாயத்தின் நூல். அந்தச் சமுதாயம், விவிலியத்தில் கண்ட நிகழ்ச்சிகள், சொற்கள் ஆகியவற்றின் வழியாகக் கடவுள் தம் திருவுளத்தை வெளி படுத்தியிருக்கிறார் என்ற அறிந்து கொண்டது. அவ்வாறு கடவுள் அருளிய ஒளியில் நடக்கவும், அந்தச் சமுதாயம் தன்னை ஒப்புக்கொடுத்துள்ளது.

ப.ஏ.ன் வாயிலாக நமக்குக் கிடைத்துள்ள தொன்மை மிக்கப் பாடல்கள், போர்க்கதைகள், பயணக் கதைகள், அரசர் வரலாறுகள், இறைவாக்கின் உரைகள் ஆகிய வற்றைப் பொறுத்தவரையிலும் இது உண்மையே. இந்த ஏடுகளில் உயிருள்ள கடவுளின் திருச்செயல்களும், உயிருள்ள கடவுளின் திருவாக்குகளும் பொறிக்கப்பட்டுள்ளன என்று நம்பிய சமுதாயத்தால் இவை எழுதப்பட்டன; போற்றிப் பாதுகாக்கப்பட்டன; பின் வழியாக வழங்கப்பட்டன. சில சமயங்களில் இது பெருஞ்செலவில் நிகழ்ந்தது.

பு.ஏ.ஐப் பொறுத்தவரையிலுங்கூட இது மெய்தான். ப.ஏ.இன் மிகப் பழமையான எழுத்துக்கள் அல்லது முதன்முதலாக எழுதப்பட்டவை புனித பவுலின் திரு முகங்கள் முதலியவை சபைகளில் வாசிக்கப்படும்படியாக எழுதப்பட்டவை. இவை பலவேறு சபைகளுக்கு அனுப்பப்பட்ட சுற்றுக் கடிதங்கள். இவற்றிற்குப் பிறகுதான் இயேசுபிரானின் திருப்பணி, சிறப்பாக அவரது பாடு, மரணம், உயிர்த்தெழுதல் முதலியவற்றைப் பற்றிய திருத்தூதர் போதகர்களின் தொகுப்புரைகள் தோன்றின. நம்பிய சமுதாயத்திற்குள் தான் இவை இறுதியான வடிவங்கொண்டன; பாதுகாக்கப்பட்டன. வழிமரபினராக வழங்கப்பட்டன. எந்தச் சமுதாயத்தில் அவை எழுதப் பட்டனவோ அந்தச் சமுதாயத்தின் அனுபவங்களின் செல்வாக்கு அவற்றில் தெளிவாகக் காணக்கிடக்கின்றன. அவை இயேசுவின் திருவாக்குகளின் பதிவுநாடாக்க ளுமல்ல அல்லது அவரது திருச்செயல்களின் படப்பிடிப்புக்களுமல்ல. இவற்றை நம்பி, நம்பியதைக் கடைப்பிடித்தொழுகிய மக்கள்தம் சாட்சியமே இவ்வெழுத் துக்கள் வாயிலாக நமக்கு அருளப்பட்டிருக்கிறது. இயேசுவுக்கு முற்றும் உண்மையாயிருக்க நாடுவதே அந்தச் சாட்சியம். அவரைக் கண்ணாரக் கண்டதும் அவரை மனதார நம்பியதும், அவரைப் பற்றி அறிவித்ததும், அவருடைய பெயருக்காக சொல்லொண்ணாத் துன்பங்கள் அடைந்த துமான ஒரு சமுதாயத்தால், இயேசு யார் என்று காட்டு வதே அந்தச் சாட்சியத்தின் உள்நோக்கம்.

இவ்விதமாக உருவாகி. பாதுகாக்கப்பட்ட விவிலியத்தை அது தோன்றிய சூழ்நிலையில்தான் சரியாகப் புரிந்துகொள்ள இயலும். அது வாழ்க்கைப் பயணிகளுக்கு உயிரூட்டும் உணவு. நைல்ஸ் விளக்கமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறது போல. மலையேறுவதற்காக ஆயத்தம் செய்யப்பட்ட. மனைப்புறக் கட்டுச்சோறு அல்லது வன உணவு. மலை ஏறும்போது உட்கொண்டால்தான் சுவையாயிருக்கும். ஆனால் அதனை வீட்டில் உண்டால் அது சுவையற்றதாகவே இருக்கும். அதுபோலவே இயேசுவை நம்பிய. அவரைப் பற்றி அறிவித்த. அவரது பெயருக்காகத் துன்புற்ற. சமுதாயத்தின் சான்றாக எந்தச் சூழ்நிலையில். எந்த நோக்கத்தில் விவிலியம் எழுதப்பட்டதோ. அந்தச் சூழ்நிலையில். அந்த நோக்கத்தில் அதனை ஏற்றுக் கொள்ளும்போதுதான் அதன் மெய்யான சுவையை நாம் ருசிக்க இயலும்.

இங்கு ஒருவர் தவறாகப் பொருள் விளக்கம் செய்யாதபடி எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். திருச்சபையின் படைப்பே புதிய ஏற்பாடு என்று சில சமயங்களில் பேசப்படுகிறது. ஒரு கருத்தில் இது மெய்தான். அத்துடன் இன்னொன்றும் கவனிக்கப்படல் வேண்டும். அதாவது திருச்சபையின் சான்றே பு.ஏ.என்பதும். திருச்சபை தான் கொடுத்த சான்றாலேயே அது படைக்கப்பட்டது என்பதும் மெய்யே. பு.ஏ.திருநூற்சட்டமாக அல்லது திருச்சபையின் ஒப்புதல் பெற்ற ஏடாக உருவாகும் காலம் வந்தது. அதாவது இயேசு கிறிஸ்து வழியாக கடவுள் செய்த மீட்பின் செயல்களைப் பற்றிய அதிகாரமிக்க திருத்தூதர் சான்றுக்கு எந்நூல்கள் பொருத்தமானவை என்று தேர்ந்தெடுக்கும் காலம் வந்தது. அப்போது திருச்சபையானது தன் விருப்பம்போல். தன் உறுப்பினர்தம் சமய உணர்ச்சிகளை நிறைவு செய்யும் நூல்களை மட்டும் தோந்தெடுக்க வில்லை. அதற்கு மாறாக. கண்ணாரக் கண்டவாகளும். திருவசனத்தின் ஊழியர்களுமான (லூ. 1:2) முதல் திருத்தூதர் தம் அதிகாரமிக்கச் சான்றுகளாக எந்நூல்கள் இருந்தனவோ அந்நூல்களை மட்டுமே கடமை உணர்வோடு திருச்சபை தேர்ந்தெடுத்தது. திருச்சபை தனது சமயக் கூர்மதியால் விவிலியத்தைப் படைக்கவில்லை. எந்தச் சான்றால் திருச்சபை உருவானதோ அந்தச் சான்றுக்குத்தான் தன் அதிகார ஒப்புதலை திருச்சபை வழங்கிற்று.

நம்பிய. நம்பியதைக் கடைப்பிடித்தொழுகிய மக்கள் வாழ்ந்த சூழ்நிலையில் தான் விவிலியம் படித்தல் வேண்டும் என்று நாம் கூறும்போது. விவிலியமும் மரபும். என்ற பிரச்சனையை எழுப்புகிறோம். இது ஒரு கடினமான பிரச்சனைதான். ஆயினும் அதனைத் தவிர்க்க இயலாது. ஒவ்வொரு புதிய தலைமுறையின் கையிலும் விவிலியம் ஒப்படைக்கப்படுதலும் விவிலியம் கடவுளின் திருவாக்கு என்று அந்தத் தலைமுறை ஏற்றுக்கொள்ளுதலும். விவிலியம் சான்றாயிருக்கிற நம்பிக்கையை அறிக்கை செய்யும்போதுதான் நடைபெறுகின்றன. ஆனால் இந்த அறிக்கை பல்வேறு கிறிஸ்தவத் தொகுதிகளிலும் பல்வேறு விதங்களில் இருக்கும். அவ்வாறாயின். விவிலியத்தின் அதிகாரத்திற்கும். பல்வேறு கிறிஸ்தவத் தொகுதிகளிலிருந்தும் வந்த மரபின் அதிகாரத்திற்கும் உள்ள தொடர்பு யாது?

3. திருவிவிலியமும் மரபும்

பிலிப்பு எத்தியோப்பிய அண்ணகனை நோக்கி. நீர் வாசிக்கிறது உமக்கு விளங்குகிறதா? என்று வினவினார். அதற்கு அவர். ஒருவர் எனக்கு வழிகாட்டினாலன்றி அது எப்படி விளங்கும்? என்றார். பற்றுறுதியுடன் ஒருவரது வழிகாட்டுதலின்றி எவரும் விவிலியத்தை ஆழ்ந்து படிக்க இயலாது. விவிலியம் ஒன்றே தன் வழிகாட்டி என்றும். மரபிற்கு இடமே இல்லை என்றும் வாதம செயபவர்கூட. உண்மையில் விவிலியத்தை விளக்குவதற்கு ஒரு மரபைச் சார்ந்திருக்கின்றனர். பிறிதொரு மரபைச் சேர்ந்தவர்களோடு ஒரு குறிப்பிட்ட விவிலிய வசனத்தின் பொருள்பற்றி விவாதிக்கும் போது. இது தெற்றெனப் புலப்படுவது மலைமேல் விளக்கு. விவிலியத்தை விளக்குவதற்கு அடிப்படையான சில விவிலிய பகுதிகளையே நம்புகிறோம். அப்படிப் பட்டவற்றைக் கொண்டே எஞ்சிய விவிலியப் பகுதிகளைப் பொருள் விளக்கம் செய்கிறோம். பொதுவாக நடை பெறுவது இதுதான்.

பற்றுறுதியால் நீதியராக்கப்படல் என்பதே விவிலியத்தின் மையப் போதனை என்று மார்ட்டின் லுத்தர் நம்பினார். இந்தக் கொள்கைக்கு விவிலியத்தில் எம்மட்டும் அடித்தளம் இருக்கிறது என்று அறிய. விவிலியம் முழுவதையும் மார்ட்டின் லுத்தர் ஆராய்ந்தது பலர் அறிந்த செய்தி இந்த அடிப்படையில் விவிலியம் முழுவதையும் ஒருவர் ஆராயலாம் என்றும். அவ்வாறு ஆராயும்போது. கோதுமை மணியையும். கோதுமைப் பதரையும் வேறுபடுத்தலாம் என்றும் லுத்தர் கண்டார். யாக்கோபின் கடிதம் வெறும் வைக்கோல் என்று அவர் முடிவு செய்தது யாவரும் அறிந்ததே. உண்மையில் கிறிஸ்தவருள் பலர் அத்தகைய முறையைக் கையாளவே கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். வேறுபடுத்தப்படாத கடவுள் கட்டளைக் கூட்டம் என்று விவிலியம் முழுவதையும் கொள்ள இயலாது. எந்த ஒரு கிறிஸ்தவரும் **வெள்ளாட்டுக்குட்டியை அதன் தாயின் பாலிலே சமைக்க வேண்டாம்** என்ற கட்டளையையும் (விடு. 23:19) **உன்கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக** (இணை 11:1) என்ற கட்டளையையும் சமமாகக் கருதமாட்டார். எந்த ஒரு கிறிஸ்தவரும் நோவா குடிவெறியிலிருந்தார் என்ற கதை இயேசுவின் பாடு மரண வரலாற்றைப்போல. தம் வாழ்க்கைக்கு முக்கியமானது என்று கருதமாட்டார். விவிலியத்தில் உள்ள செய்திகள் அனைத்திலும் எவை முதல்தரமானவை. எவை இரண்டாம் தரமானவை என்று ஆழ்ந்து சிந்தித்து முடிவு செய்ய வேண்டிவர்களாயிருக்கிறோம்.

எனினும் இதில் அபாயங்கள் உண்டு. ஒவ்வொரு மரபும் திருநூற் சட்டத்திற்குள்ளேயே ஒரு திருநூற் சட்டத்தை நிலைநாட்ட முயல்கிறது என்றே இது பொருள்படும். வேறுவிதமாகச் சொன்னால் விவிலியம் முழுவதும் கொள்கை அளவிலேயே திருச்சபையின் அதிகார நூலாக ஒப்புக்கொள்ளப்படுகிறது; நடைமுறையில் விவிலியத்தில் ஒரு பகுதியே அதிகாரமுடையது. எஞ்சியிருப்பன எம்மட்டும் அதிகாரமுடையன என்பது இவ்வாறு நடைமுறையிலிருக்கும் ஒரு பகுதியின் அடிப்படையில் தான் முடிவு செய்யப்படுகிறது. இம்முறையில் உள்ள அபாயத்தை எளிதில் அறியலாம். நாம் மேலே கண்ட எடுத்துக்காட்டினைத் தொடர்ந்து ஆராய்வோமாயின். விவிலியச் செய்தி முழுவதற்கும் பற்றுறுதியால்

நீதியராக்கப்படல் என்ற கொள்கை மையமானது. உயிர்க் கூறானது என்பதை ஒத்துக் கொண்ட போதிலும். இந்த நோக்கு நிலையிலிருந்துதான் விவிலியம் முழுவதையும் விளக்க வேண்டும் என்பதை நாம் ஒத்துக்கொள்ள இயலாது. அவ்வாறு செய்வோமாயின். நாம் விவிலியத்தை விளக்காது விவிலியத்துக்குப் பதிலாகப் பிறிதொன்றையே பொருள் விளக்கம் செய்கிறோம்.

இந்தக் கட்டத்தில்தான் விவிலியத்தை திருநூற் சட்ட மாக்கல் நம்பிக்கை கொள்வோருக்கு பாதுகாப்பாக அமைகிறது. விவிலியத்தின் முழு நிறைவான பல்வேறு வகைப்பட்ட செய்திகளுக்குப் பதிலாக. மாற்றுப் பொருள் நிலையாக ஒரு தனிப்பட்ட கொள்கையைப் புகுத்துவதற்கு எதிராகத்தான். நம்பிக்கையாளருக்கு திருநூற் சட்டம் பாதுகாப்பாகிறது. விவிலியத்தில் பல்வேறு வகைப்பட்ட செய்திகள் மட்டுமல்லாது. ஒன்றுக்கொன்று முரண்படுகிற செய்திகளும் இருக்கின்றமையால். விவிலியத்தில் பலவித வேறுபாடுகளுக்கும் திருச்சபையில் போதுமான இடம் இருத்தல் வேண்டும். எ.கா. 91ஆம் திருப்பாடலும் யோபின் நூலும் இறைப் பாதுகாப்பைப பற்றி ஒன்றுக் கொன்று முரண் பாடான போதனையைத் தருகின்றன. என்றபோதிலும் அவை இரண்டிற்கும் திருநூற் சட்டத்தில் இடமளிக்கப்பட்டிருத்தல். அவையிரண்டையும் கவனித்துக் கேட்க நம்மைக் கட்டாயப்படுத்துகிறது.

இதனை அல்லது அதனை நீக்கிவிடுவதன் மூலமாக இம் முரண்பாட்டிற்குக் குறுக்கு வழியில் தீர்வு காண இயலாது. இவை இரண்டும் திருநூற சட்டத்தினுள ஒன்றாக இருப்பது. இறையடியாருக்கு இங்கு இடையறாத போராட்டம் உண்டு என்பதற்கும். அப்போராட்டம் உலக முடிவிற்கு முன் முடிவுறாது என்பதற்கும் சான்றாயிருக்கிறது. சிலுவை வழியை விட்டு விலகும படி இயேசுவைத் தூண்டுவதற்கு 91ஆம் திருப்பாடலையே சாத்தான் பயன்படுத்தினான் என்பதற்காக அப்பகுதியை விவிலியத்திலிருந்து நீக்கிவிட இயலாது. நம்புகிற நம்பியதைக் கடைப்பிடித்தொழுகுகிற சமுதாயத்தில் இருந்துகொண்டுதான் நம் நம்பிக்கையைப் பாதிக்கும் தீமையோடு போராடல் வேண்டும்.

ஆனால் விவிலியத்தில் பல்வேறுவிதச் செய்திகளும். ஒன்றுக்கொன்று முரண்படுகிற செய்திகளும் உண்டு என்பதை ஒத்துக்கொள்வோமாயின். விவிலியத்திற்கு நம் மீது அதிகாரம் உண்டு என்ற கருத்து என்ன ஆகும்? விவிலியத்தின் அதிகார உரிமை எதில இருக்கிறது?

4. திருவிவிலியத்தின் அதிகாரம் என்ற பிரச்சனை [1]

முதற்கண். எத்தகைய அதிகாரத்தை நாம் ஏற்றுக்கொள்ள விரும்புகிறோம்? அதிகாரம் பற்றி ஏற்கனவே நமக்குள்ள கருத்தினைச் சோதித்துப் பார்த்தல் வேண்டும். விவிலியமே எல்லா அதிகாரமும் உடையது என்று கருதுகிற சிலர். 'அவ்வதிகாரம் இவ்வுலகிற்கப்பாற்பட்டது. இவ் வாழ்க்கையோடு தொடர்பற்றது. இவ்வுலக விதிகளிலும் வேறுபட்ட விதிகளை உடையது. வேறு உலகிற்குரியது' என்பர். இதன்படி நோக்கின் விவிலிய ஆராய்ச்சிக்கு இடமே கிடையாது. அவர்கள் மேலும். விவிலியம் இவ்வாறு கூறுகிறது. அதனை நாம் புரிந்து கொண்டாலுஞ்சரி. புரிந்துகொள்ளாவிட்டாலுஞ் சரி அது தான் உண்மை என்பர். ஆனால் இது தவறான கருத்து. இந்தக் சருத்துக்கு விவிலியத்தில் ஆதரவே இல்லை. இது விவிலியப் போதனைக்கு முரணானது. விவிலியமே எல்லா அதிகார உரிமையும் உடையது என்றால். கடவுள் இயேசு கிறிஸ்து வழியாகத் தம்மை வெளிப்படுத்தியிருக்கவேண்டிய அவசியமே இல்லை. விவிலியத்தின் அதிகாரமே போதும் என்றிருந்திருக்கலாம். அவ் வெளிப்படுத்தல் ஒரு தாழ்மையான மனித வாழ்க்கை மூலம் அருளப்பட்டது. தம்மிலிருந்து நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கடவுள் விரும்புகிற அதிகாரம் நாம் புரிந்துகொண்டதும். இலவசமாகப் பெற்றுக் கொண்டதுமான அதிகாரமாகும்.

இந்த உண்மை விவிலியத்தின் அதிகாரம்பற்றிய பிரச்சனைகும் பொருந்தும். நாம் விவிலியத்தை விளங்கிக் கொண்டாலும். விளங்கிக்கொள்ளாவிட்டாலும் விவிலியம் தான் நம்மீது அதிகாரமுடையது என்று ஒப்புக்கொள்வது தவறான வழியில செல்வதாகும். இதற்கு மாறாக நம்புகிற. நமபியதைக் கடைப்பிடித்து ஒழுகுகிற மக்களின் சான்று வடிவிலேயே கடவுள் வாக்கு நமக்கு அருளப்பட்டிருக்கிறது. அந்தச் சான்றுநெறி போராட்டங்களும். முரண்பாடுகளும். எதிர்ப்புக்களும். ஐயப்பாடுகளும். தோல்விகளும் நிறைந்ததாயிருக்கிறது. இந்தப் போராட்டங்களில் நாம் ஈடுபடும்போதுதான் நம்பியதைக் கடைப் பிடித்தொழுகுகிற மக்களாக ஆக நாம் முனையும் போதுதான். மெய்யாகவே நாம் கடவுள் வாக்கின் அதிகாரத்திற்கு உள்ளாகிறோம். காலாகாலங்களாக இடையறாது தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் இறையடியார் தோழமையில் கடவுளோடு நாம் கொள்ளும் ஐக்கியத்தின் பகுதியாகவே விவிலிய ஆராய்ச்சி அமைகிறது. விவிலிய நிகழ்ச்சிகளை முதன்முதலாகக் கண்ணாரக் கண்டவர்கள். திருவசனங்களைக் காதாரக் கேட்டவர்கள். அவற்றைப் பிற்காலத்தில் பொருள்விளக்கம் செய்து புதிதாகப் பதிப்பித்தவர்கள். காலங்கள் தோறும் தொடர்ந்து. அவற்றைப் போற்றிப் பாதுகாத்துப் பொருள்விளக்கம் செய்துவருகிறவர்கள். இப்போது இந்தத் தலைமுறையின் அனுபவம். அறிவு ஆகியவற்றின் சூழ் நிலைக்கேற்பப் பொருள்விளக்கம் செய்ய முயல்கிறவர்கள் ஆகியோரே இங்குக் குறிக்கப்படும் இறையடியார் ஆவர். இத்தகைய தோழமையில்தான் கடவுள் தம்முடைய திருவாக்கின் அதிகாரத்தை நம வாழ்கைகளில் நிலைநாட்டுகிறார்.

5. திருவிவிலியத்துக்குப் பொருள் விளக்கம் தருவதில் பற்றுறுதி. வரலாறு ஆகியவற்றின் இடம்

நம்பியதைக் கடைப்பிடித்தொழுகுகிற மக்களின் திருநூல் என்ற முறையில். விவிலியம் ஒரு முதல்நிலையான வரலாற்று நூலாகும். கடவுள் தம்முடைய மக்களோடு கொண்ட செயல்தொடர்பே வரலாறாகும். எனவே. அவ் வரலாற்றில் கடவுளுடைய இயல்பும். நோக்கமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வெளிப்படுத்துதலை

[1] இப்பகுதியில் ஆ.தே.மனுவேல் எழுதிய விவிலியத்தின் அதிகாரம் என்ற கட்டுரை (3) காண்க

நம்பினால் மட்டும்தான் பயன்படுத்த இயலும். இப்படியாக, விவிலியம் ஒரே சமயத்தில் பற்றுறுமையின் நூலும் வரலாற்று நூலும் ஆகிறது. இவ்விரண்டிற்கும் இடையே போராட்டமும் இருக்கும்.

ஒருவகையில் விவிலியத்தை முழுக்க முழுக்க வரலாற்று அடிப்படையில் படிக்கலாம். பிற நூல்களை ஆராய்வதற்குப் பயன்படுத்துவதுபோலவே வரலாற்று ஆய்வு முறைகளை விவிலிய ஆராய்ச்சிக்கும் பயன்படுத்தலாம். மரபின பல்வேறு நிலைகளைத் தனித்தனியாகப் பிரிக்கலாம். பல்வேறு எழுத்தாளர் மீது செல்வாக்கு செலுத்திய காரணக்கூறுகளையும் மதிப்பீடு செய்யலாம். தனிப்பட்ட மூலஏடுகளின் குறைபாடுகளைச் சரிப்படுத்திக் கொள்ளலாம். இறுதியில் உண்மையில் என்ன நடந்தது என்பதப் பற்றி ஒரு தற்காலிகமான முடிவிற்கு வரலாம். இந்தக் கருத்தில் ஒருவர் கைதேர்ந்த விவிலியப் புலவர் ஆகலாம். ஆனால் அவர் இந்த வரலாற்று ஏடுகளை எழுதுவதற்குக் காரணமாயிருந்த கடவுளைக் காணாத குருடராகவும் இருக்கலாம். இந்த மாதிரியான விளக்கவுரை வல்லுநர்களும் இன்று இருக்கின்றனர். எ.கா. கலாத்தியர் திருமுக விளக்கவுரையாளர் பலர் இந்தத் திருமுகம் யாருக்கு, எப்போது எழுதப்பட்டது என்பதைப் பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சி செய்கிறார்கள். ஆனால் இத் திருமுகத்தை எழுதத் தூண்டிய அவசரப் பிரசினையான பற்றுறுதியைப் பற்றி அன்னார் எதுவும சொலவதில்லை.

இன்னொரு வகையில் சமய. அறநெறி உண்மைகளை விளக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்ட கதைக் கொத்தாகச் சிலர் விவிலியத்தை ஆராயக்கூடும். இதற்குத் திட்டவட்டமான வரலாற்றுப் புலமை தேவையில்லை. இவர்கள் திருவசனங்களை உருவக முறையில் பொருள் விளக்கம் செய்வர். உண்மையாக நடந்ததைப் பொறுத்தே உயிர்க் கூறானவை அமையும் என்பதை இவர்கள் கவனிபபதிலலை. வரலாறறு அறிஞரின ஆராய்ச்சி முடிவுகளைபபற்றி இவர்கள் அக்கறை காட்டுவதுமிலலை. இவ்விதமாக விவிலியமானது இநதுப் புராணங்களின் நிலைக்குத் தாழ்த்தப்படுகிறது. இந்துப் புராணங்களின் ஒரே ஒரு பயன் யாதெனில். நுண்ணறிவு படைத்த விரிவுரையாளரால சமய. அறப்போதனைகளை அவற்றிலிருந்து வலிந்து கொள்வதாகும். இவ்வுலகின் மீட்பைப் பற்றி இம்முறை கவலைப்படுவதில்லை.

இவ்விரு தீவிர நோக்குகளும் பயனற்றவை. விவிலியமாணவர் வரலாற்று ஆராய்ச்சி முடிவுகள். இலக்கிய ஆராய்ச்சி முடிவுகள் ஆகிய இரண்டையும் பொறுப்புணர்வோடு பயன்படுத்தல் வேண்டும். அத்துடன் நம்புகிற. நம்பியதைக் கடைப்பிடித்தொழுகுகிற அடியாருடைய சூழ்நிலையில் விவிலியத் திருவசனத்தைப் பொருள்விளக்கம் செய்யும் இறையியல் புலவரது ஆராய்ச்சி முடிவுகளையும் பயன்படுத்தல் வேண்டும். இந்த நிகழ்ச்சிகள் வாயிலாய் கடவுள் செயலாற்றினார் என்பதும். முழு வரலாற்றின் பொருளையும் நோக்கத்தையும் அறிய இந்நிகழ்ச்சிகளே திறவுகோல் என்பதுமே நம் நம்பிக்கை.

ஒரு புறம் உண்மையாகவே என்ன நடந்தது என்ற கேள்வி மிக மிக முக்கியமானது. எனவே வரலாற்று. ஆராய்ச்சி முடிவுகளை அசட்டை செய்யலாகாது அசட்டை செய்வோமாயின். நாம் நம் நம்பிக்கையையே காட்டிக் கொடுக்கிறவர்களாயிருப்போம். இறையடியார்கள் விவிலிய நிகழ்ச்சிகள் நடுவில் எவ்வாறு போராடினார்களோ. அவ்வாறே நாமும் போராடி.. மனுக்குலத்திற்கும் படைப்பு முழுமைக்கும் கடவுள் கொண்டுள்ள நோக்கத்திற்கு இந்நிகழ்ச்சிகளும். இத் திருவசனங்களும் என்ன பொருள்படும் என்று அறிய முயல்தல் வேண்டும். கடவுள் தம்முடைய தன்னையும விருப்பத்தையும் இந்நிகழ்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தினார் என்று நமபிய மக்கள் தம் சான்றாக விவிலியம் நமக்குத் தநதுள்ள அறிவைப் பயன்படுத்தி, விவிலியத்தில் நாம் வாசிக்கும் பகுதிகளைப் புதிதாகப் புரிந்துகொள்ள நாட வேண்டும்.

நாம் படிக்கின்றவற்றின் பொருளைப் புதுமை மலர்ச்சியுடன் பெற்றுக்கொள்ள நாம் விரும்புகிறோம். இதற்காக இலக்கிய வரலாறு ஆராய்ச்சிகள் மூலம் கிடைத்துள்ள் எல்லா ஏதுக்களையும் நாம் பயன்படுத்து கிறோம். அன்று செயலாற்றிய அதே கடவுள். இன்றும் செயலாற்றி வருகிறார்; இயேசுவில் தாம் கொண்ட நோக்கத்தின் நிறைவுக்கு நேராக வரலாற்றை வழிநடத்தி வருகிறார். இந்நிலையில் இக்கடவுளுக்கு விவிலியம் தந்த இந்தச் சான்று இன்று நாம் அவரைக் குறித்துக் கொடுக்கும் சான்றின் ஒரு பகுதியாக உருவாகுமட்டும் நாம் வாளாவிருக்க முடியாது.

6. மொழிபெயர்ப்புப் பிரச்சனை

வெகு காலத்திற்குமுன் வாழ்ந்த மக்களிடமிருந்தும், பழம்பெரும் பண்பாட்டிலிருந்தும்தான் விவிலியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. சிறப்பாக ப.ஏ. எழுதப்பட்டிருக்கிற மொழியானது வெகு காலத்திற்கு முன் வாழ்ந்த மக்களின் அனுபவங்களால் உருவான மொழி; நம் சூழ்நிலையினின்றும் முற்றும் வேறுபட்ட சூழ்நிலையில் தோன்றியது. இவ்வாறு உருவான மொழியிலுளள விவிலியச் செய்தியை, இன்றைய மக்கள் வாசித்து அதன்படி நடக்குமாறு, எவவாறு விவிலியததை அதிகாரமுடையதாக, பொருளுடையதாக மொழிபெயர்க்க முடியும்? மொழிபெயர்ப்பு எனற சொல்லை வழக்கமாக அச் சொல்லுக்கு தரப்படும் பொருளைவிட அகன்ற. ஆழ்ந்த கருத்திலேயே நான் இங்கு பயன்படுத்தியிருக்கிறேன். மூல பாடத்தின் முக்கிய செய்தியையும். அதனைக் கூறும் பண்பாட்டு முறைகளையும் எவ்வாறு ஒருவர் வேறுபடுத்திக் காட்ட முடியும் என்பதே கேள்வி. இதற்கு இரண்டு எடுத்துக்காட்டுக்களை இங்குக் கூறலாம். இந்த உலகம் தட்டையானது, சமதளப் பரப்புடையது, எபிரேயர் நினைத்த பாதாளம் என்ற கீழுலகம் இவ்வுலகின் அடியில் இருக்கிறது; பரந்த நீர்த்தேக்கங்கள் இந்த மண்ணுலகத்துக்கு மேல் இருக்கின்றன. அவை மண்ணுலகின்மேல் விழுந்துவிடாதபடி வான முகடு அவற்றைத் தாங்கிக் கொண்டிருக்கிறது - என்று விவிலிய எழுத்தாளர் கருதியிருக்கிறார்கள். ஆனால், இக்கருத்து நாம் இன்று அறிந்துள்ள அறிவியல் உண்மைக்கு முரணானது என்பது நமக்குத் தெரியும். இப்படிப்பட்ட வாசகங்களை நாம் வாசிக்கும்போது. இவற்றில் மறைந்து கிடக்கும் உண்மையை. அது விளக்கப்பட்டுள்ள உலகியல் மொழிநடையியிலிருந்து வேறுபடுத்திக் காணல் வேண்டும்.

இரண்டாவது எடுத்துக்காட்டாக. படைப்பு பற்றிய கதைகளை எடுத்துக் கொள்ளலாம். பாபிலோனிய மக்களிடமிருந்தும் பிற மக்களிடமிருந்தும் இக்கதைகள் வந்திருக்கின்றன

என்று அறிவோம். இக்கதைகள் படைப்பை விவரிக்கும் விதத்தையும், விவிலியம் படைப்பை விவரிக்கும் விதத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான், தொடக்கநூலின் தொடக்க அதிகாரங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மையையும் நாம் தெளிவாகபுரிந்து கொள்ள இயலும்.

ஆனால் இந்த மொழிபெயர்ப்புப் பணி எம்மட்டும் செல்லக்கூடும்?

விவிலியத்தின் முக்கிய செய்தியைச் சிதைவுபடுத்தாமல் இஸ்ரயேல் மக்கள் எழுதிய படைப்பு வரலாற்றை நீக்கி விட இயலும் என்று நாம் ஒத்துக் கொண்டாலுங்கூட, மனிதரைப் பற்றி, விவிலியம் கூறுவதை நாம் தள்ளிவிட முடியுமா? அல்லது சிலர் கருதுகிறபடி விவிலியச் சமயத்தை நீக்கிவிட்டு, சமயமே இல்லாத கிறிஸ்தவத்தை வைத்துக் கொள்ள முடியுமா? இன்றைய இறையியல் புலவருள் சிலர் கருதுகிறபடி ஒப்புயர்வற்ற மெய்ப் பொருளானவரும், எல்லாவற்றையும் படைத்தவருமான ஆளியலபுற்ற கடவுளைப் பற்றி விவிலியம் தரும் கருத்திற்கேற்றபடி விவிலியத்தைப் பொருள் விளக்கம் செய்கிறோம் என்று சொல்லலாமா?

இத்தகு கேள்விக்கு எளிதான விடை கிடையாது. ஓர் எபிரேய மூல பாடத்தைத் தமிழில் மொழிபெயர்ப்பதாயிருந்தால் கூட, மூலபாடமும் மொழிபெயர்ப்பும் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று திட்டவட்டமாய்க் கூறப் பொதுவிதி எதுவும் வகுக்கஇயலாது. மூல பாடத்தின் சொற்கள் அவற்றைப் பயன்படுத்திய மக்கள் தம் அனுபவங்களால் உருவானவை. அவற்றுள் அம் மக்களுடைய பண்பாடும் அடங்கியிருக்கிறது. அம் மூலபாட மொழிபெயர்ப்பிலுள்ள சொற்களோ முற்றும் வேறுபட்ட காலத்திலும் பண்பாட்டிலும் உள்ள மக்கள் தம் அனுபவத்தால் உருவாகியிருக்கும். மொழிபெயாப்பும் மூல பாடத்தின் சரிநிகர் சமானமானதாயிராது. புதிய பண்பாட்டுச் சூழ்நிலைக்குள்ளிருந்துகொண்டு மூல பாடத்திற்குப் பொருள் விளக்கம் தருவது. நம்பி, நம்பியதைக் கடைப்பிடித்தொழுகுகிற சமுதாயத்தின் இடையறாத சமயப்பணி ஆகும். இந்தச் சமூகம் உலகிலிருந்து பிரிந்து, தனக்கே உரித்தான ஒரு சூழ்நிலையைத் தெரிந்து கொண்டு, மரபின் மூலம் தான் பெற்ற கடந்த காலத்தின் இலக்கியப் பண்பாட்டுக் கூறுகளைப் பேணிக் காக்க முடியும்தான்; ஆனால் அப்படிச் செய்வது சாவுக்குச் சமம்.

இந்தச் சமுதாயமானது கடவுள் மீதுள்ள விவிலிய நம்பிக்கையைத் தற்காலத்திய பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் வெளிப்படுத்த நாடினால், இந்த நம்பிக்கை விளக்கப் பட்டுள்ள மொழியைத் தான் வாழும் காலத்திய மொழியில் மொழி பெயர்க்கும் ஆபத்து நிறைந்ததான முயற்சியில் ஈடுபட வேண்டியிருக்கும்.

மீண்டும், இடையறாது தொடர்ந்து நம்புகிற தங்கள் நம்பிக்கையைக் கடைப்பிடித்தொழுகுகிற சமுதாயத்தின் வாழ்க்கையே விவிலியத்தை நாம் விளங்கிக் கொள்வதற்குத் திறவுகோலாகும். இடையறாது புதிது புதிதாகப் பொருள் விளக்கம் செய்வதானது, சிதைவுறாத, இடையறாத, அனைத்துலகத் திருச்சபையின் ஐக்கியத்திற்குள் தொடர்ந்து நடைபெற வேண்டும். முந்திய தலைமுறையினர் விவிலியத்தை விளங்கிக் கொண்ட விதத்தின் மீதும் விவிலிய ஆராய்ச்சியாளர் கண்ணோக்கமாயிருத்தல் வேண்டும். விவிலியத்தின் திருநூற்சட்டம் மிகவும் விரிவானது. அதன் நூல்கள் பலவகைப்பட்டவை முரண்பாடு களுடையவை. அதைப் போலவே திருச்சபையும் விரிவானது, அதன் நம்பிக்கையாளர் தங்கள் நம்பிக்கையைச் சரியாய்ப் புரிந்து கொள்ளவும், தாம் வாழும் உலகில் பிறருக்கு விளக்கிக்கூறவும் பாடுபடல் வேண்டும்.

7. விவிலியப் பொருள்விளக்கத்தில் நேற்று, இன்று, நாளை

நம்புகிற, நம்பியதைக் கடைப்பிடித்தொழுகுகிற கடவுளுடைய மக்கள்தம் நூலே விவிலியம் என்று மீண்டும் மீண்டும் கூறியுள்ளோம். இந்நூல் எதிர் காலத்தை நோக்கிச் செலலும் பயணிகள் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவே கடந்த காலமாகிய நேற்று நடந்தவற்றைப்பற்றிக் கூறுகிறது. இதனால் எழுகின்ற பிரச்சனைகளைப் பற்றி ஆராய்ந்திருக்கிறோம். அந்நிகழ்ச்சிகள் நடந்த காலத்திலிருந்து தூரத்தில் போகப்போக, தலைமுறைதோறும் அப் பிரச்சனைகள் கடுமையாகின்றன. இவை கடந்த கால நிகழ்ச்சிகள் என்ற போதிலும் விவிலியத்தின் சாரம் எதிர்காலத்தையே சுட்டிக் காட்டுகிறது. கடவுளின் இயல்பையும், நோக்கத்தையும் வாக்குறுதிகளையும் வெளிப்படுத்திய நிகழ்ச்சிகளைப் பற்றிய இறையடியாரின் சான்றுரையே விவிலியம். ஒவ்வொரு தலைமுறைக்கும், ஒவ்வொரு பண்பாட்டிற்கும் புதிது புதிதாகப் பொருள் விளக்கம் செய்யப்பட வேண்டும்என்பதும், தலைமுறை தோறும் மனித வரலாற்றைப் பொருள் விளக்கம் செய்வதற்கும், ஒரே குடும்பத்தின் சுற்றெல்லைக்குள், ஒன்றின்பின் ஒன்றாக வரும் பண்பாடுகளுக்கும் தி·கோல விவிலியமே என்பதுமே கிறிஸ்தவரின் நம்பிக்கை. விவிலியத்தின் முழுப்பொருளும் படிப்படியான வெளிப்படுத்தலில் அடங்கியிருக்கிறது என்பதும் கிறிஸ்தவ நம்பிக்கை. ஒளிமயமான கடவுள்தம் விவிலியத்திலிருந்து இன்னும் அதிக ஒளியை அருளுவார் என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். கடவுளின் கடந்த மீட்புச் செயல்களைப் பற்றித் தம எழுத்துக்கள் வாயிலாகச் சான்று தந்துள்ள தொடக்ககால எழுத்தாளருக்கு ஆற்றல் அருளிய அதே ஆவியர், நம்புகிற அடியாரை எல்லா உண்மைகளுக்குள்ளும் தொடர்ந்து வழிநடத்தி வருகிறார்; இயேசுவே ஆண்டவர் என்று உணர்த்தி வருகிறார் என்று கிறிஸ்தவர் நம்புகின்றனர்.

எனவே, விவிலிய ஆராய்ச்சியாளர் ஒருபுறத்தில் மிக மிகத் தொன்மையில் தோன்றிய விவிலியத்தைப் புரிந்து கொள்ள அயராது அரும் பாடுபடுகிறார்; மறுபுறத்தில் பொருள் விளக்கம் செய்வதில் அவர் போராடுகிறார்; இதற்கு முன் எவரும் முயன்றிராத அளவிற்கு விவிலியச் செய்தியை இன்றையப் **புது நாளைக்கு**. இன்றைப் **புதிய சூழ்நிலைக்கு** ஏற்ப மொழிபெயர்க்க முற்படுகிறார். அனைத்துலகத் திருச்சபையின் தோழமைக்குள் கிறிஸ்துவுக்குத் தம்மை ஒப்புக் கொடுத்த சீடராக, ஆண்டவருடைய சாட்சியாக, இதனை அவர் செய்கிறார். இவை யாவற்றிலும் அவர் இறைவாக்கினர்க்கும், திருத் தூதருக்கும் ஆற்றல் அருளிய அதே தூய ஆவியரால் உண்மையான சான்று கொடுக்க வழிநடத்தப்படுகிறார். உண்மையான விவிலிய ஆராய்ச்சியாளர் ஓர் எல்லைப் புறப்பணியில் ஈடுபட்டுள்ளார். இன்று கடவுள் ஆற்றும் செயல்களையும் எதிர்காலத்திற்குரிய அவரது வாக்குறுதிகளையும் உண்மையாக வெளிப்படுத்தத்தக்கதாக அவர் கடந்த காலத்தில் கடவுள் செய்த செயல்களுக்குப் பொருள்விளக்கம் தர நாடுகிறார்.

துணை நின்ற நூல்கள்

1. Kenyon, Frederic, Sir, *The Reading of the Bible*, London, John Murray, 1944.
2. Neil, William, *The Rediscovery of the Bible*, Hodder and Stoughton, 1954.
3. Niles, D.T., *Reading the Bible To-day*, London, Lutterworth Press, 1955.
4. Dodd, C.H., *The Bible To-day*, Cambridge University Press, 1956.
5. Weerasinghe, S.J., *Reading the Bible Effectively*, C.L.S., 1965.
6. எ. சாம், *மலரும் திருமறை*, சி.எல்.எஸ்., 1976.
7. J. Barr, *The Bible and the Modern World*, SCM, 1973.
8. J. Stott, *Understanding the Bible*, CLS, 1978.
9. A. Berlin, *Poetics and Interpretation of Biblical Narrative*, Almond, 1983.
10. R. Alter, *The Art of Biblical Narrative*.
11. N.K. Gottwald, *The Tribes of Yahweh*, SCM, 1984.
12. R.S. Sugirtharaja, *Asian Biblical Interpretation*.

5

திருநாட்டின் நில அமைப்பு

கொ. செல்வமணி

1. முன்னுரை

திருவிவிலியம் தரும் வரலாற்றின் செயற்களமாக, குறிப்பாக, கடவுள் மனிதரான நற்செய்தியின் பிறப்பிடமாக விளங்கிய பாலஸ்தீனாவையே இங்குத் திருநாடென்கிறோம். பாலஸ்தீனாவின் புவியியலறிவு அந்நாட்டைப்பற்றி அறிய மட்டுமன்றி, விவிலியத்தைப் புரிந்துகொள்ளவும் இன்றியமையாததாகும். விவிலியம் குறிப்பிடும் உலக மீட்பின் வரலாற்றின் முதற் பகுதி அங்குச் செயல்படுத்தப்பட்டதால் அதைத் தழுவியே நம் ஆராய்ச்சி அமையும். இவ் வரலாறு இஸ்பானியாவிலுள்ள தர்சீசு, பாரசீகக் குடா, எத்தியோப்பியா, காஸ்பியன் கடல் ஆகியவற்றின் இடையில் அமைந்த பரந்தப் பரப்பளவில் நிகழ்ந்தது. பாலஸ்தீனா இப்பகுதியின் மையத்திலுள்ளது.

இதன் மேற்கு எல்லையான எகிப்தின் புவியியல் கானான் நாட்டினின்று மிக வேறுபட்டது. நீ உடைமையாக்கிக் கொள்ளப் போகும் நாடு நீ விட்டு வந்த எகிப்து நாட்டைப் போன்றதன்று. . . ஆண்டின் துவக்க முதல், ஆண்டின் முடிவு வரை உன் கடவுளாகிய ஆண்டவர் எப்பொழுதும் அதன் மேல் கண்ணோக்கமாயிருப்பார் (இணை. 11:14. ஆமோஸ் 4:7 செக்.14:17, மத். 5:45). கி.மு. 4000 ஆண்டிலிருந்தே இவ்விரு நாடுகளுக்கும் பல முறைகளில் தொடர்பு இருந்தது. உரியா எகிப்திற்குத் தப்பியோடினான், எரே. 26:21). எபிரேயர் உணவுப் பொருள்கொள்ள அங்குச் சென்றனர் (தொட. 42). தங்கள் அடிமைகளை அதற்கு விற்றனர் (தொட. 39; இணை. 17:16). தங்களுக்கு மிக அருகாமையிலிருந்த வல்லரசு எகிப்தாகையால் எபிரேயர், 'பேதையான புறாவைப்போல (ஒசே. 7:11) அதன் படைபலத்தில் பல கட்டங்களில் நம்பிக்கைக்கொண்டனர். இத் தவறான உறவால் அசிரியர், பாபிலோனியர், கிரேக்கர் போன்ற எதிரிகளால துன் புறுத்தப்பட்டு, பின்னர் எசாயா கூறியது உண்மையென்று உணர்ந்தனர் (எசா. 36:6).

கிழக்கு எல்லையான மெசப்பொத்தோமியா, ஐப்பிராத்து, தைகிரிஸ் என்னும் ஆறுகளால் வளம்பெறும் நாடு. அக் காரணத்தால் நான்கு திசைகளிலுமிருந்தும் பலர் காலா காலங்களில் அங்குப் புகுந்தனர்.

சிரியா கானான் நாட்டின் வட எல்லையும், சின்ன ஆசியா, ஐரோப்பா, மெசப்பொத்தோமியா போன்ற நாடுகளிலிருந்து எதிரிகள் உட்புகுந்த வாசலுமாகும் எனலாம். கி.மு. 13ஆம் நூற்றாண்டில் அது அரமேயரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்ததால் அந்நாடு ஆராம் என்ற ழைக்கப்பட்டது. லெபனோன் மலைத்தொடரிடையே அமைந்த பள்ளத்தாக்கினின்று யோர்தான், ஒறான்டேஸ், லித்தனி என்னும் ஆறுகள் தோன்றுகின்றன. சிரியாவின் கடற்கரையோரம் அக்ரே (Acre), தீரு, சீதோன் முதலிய துறைமுகங்களைக் கொண்டது. 10,000 அடி உயரமுள்ள உச்சிகளைக் கொண்ட லெபனோனில், 5,000 அடி உயரம் வரையிலும் அடர்த்தியான கர்வாலி மரக்காடுகள் இருந்தன. எர்மோன் மலையினின்று தோன்றும் அப்னா, பர்பார் எனும் சிற்றாறுகள் (2 அர. 5:12) தமஸ்குவுக்குத் தண்ணீர் தருகின்றன.

கானான் நாட்டின் தென் கிழக்கு எல்லைகள் பாலைநிலங்களாகும். கிழக்கே சிரியா பாலைநிலத்திலும், தெற்கே அரேபியா பாலைநிலத்திலும் ஆங்காங்கேயுள்ள பாலைப்பசுந்திடல்களில் மக்கள் நெருங்கி வாழ்கிறார்கள். இப்பகுதிகள் பாலஸ்தீனாவுக்கு அரண் போல் அமைந்திருந்தும் அவை தீய ஆவிகளின் உறைவிடமென மக்கள் அஞ்சினர். மேலும், நாடோடிக் கொள்ளைக் கூட்டத்தினர் வேளாவேளைகளில் அங்கிருந்து வந்து தொல்லை கொடுத்தனர் (நீதித். 6:1மு.).

மேல்புற எல்லையாயிருந்த மத்தியதரைக் கடலும் அவர்களுக்குத் திகைப்பையும், திகிலையும் தருவதாகவே இருந்தது. அதில் துறைமுகங்கள் ஒன்றும் இல்லாததால் இம் மக்களுக்குக் கடல் பழக்கம் ஏற்பட ஏதுவில்லாதிருந்தது. ஆதலால் அக் கடல் அன்னாருக்குப் பிற நாட்டினரோடு தொடர்பு ஏற்படுத்துவதற்குப் பதிலாக அவர்களினின்று பிரித்து வைக்க ஏதுவாயிற்று. கடல் அவர்கள் அஞ்சுவதற்குக் காரணமாயிருந்தமையால், பரதீசு கடலில்லாத இடமென அவர்கள் நம்பினர் ;கடலையும் அதன் அலைகளையும் அடக்கி ஆள்வதும், அதற்குக் கடவாதிருக்கும் எல்லையை ஏற்படுத்தியதும் கடவுளின் அளவற்ற வல்லமைக்குச் சான்றெனக்கொண்டனர் (எண். 34:6).

அனைத்துலகத்துக்குமான தமது திட்டத்தை நிறைவேற்ற, கடவுள் ஒரு மக்களினத்தை மட்டுமன்று, ஒரு நாட்டையும் தேர்ந்துகொண்டார். தேர்ந்து கொள்ளப்பட்ட நாடு இரு சிறப்புப் பண்புகளையுடையது: ஒன்று, பல நாடுகளுக்கும் மையமானது; மற்றொன்று, பாதுகாவலானது. இவையிரண்டும் ஒருங்கே அமைவது மிக அபூர்வமாயினும், பாலஸ்தீனாவில் அது சாத்தியமாயிருந்தது. தவிரவும் அக் கால வரலாற்றில் அறியப்பட்ட எல்லா நாடுகளையும்விட பாலஸ்தீனாவில் வாழ்ந்த எபிரேயரின் வரலாறு தெளிவாய், தொடர்ச்சியாய் நமக்குக் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

2. நாட்டின் பெயர்

யூதர் வசமிருந்த நாட்டுப் பகுதி இஸ்ரயேலர் நாடு என விவிலியத்தில் அழைக்கப்படினும், ப.ஏ. அதற்குப்

பொதுவாக வழங்கும் பெயர் கானான் நாடு என்பதாகும். கானான் என்றால் பள்ளம் என்பது பொருள். இச் சொல் மக்கள் பயன்படுத்தும் கருஞ்சிவப்பு வண்ணச் சாயத்தையும் குறிக்கலாம். ஆனால் இது பண்டைய காலம் முதலே வழங்கப்பட்டுவந்த பெயர். இஸ்ரயேலர் குடியேறுமுன் அங்கு வாழ்ந்துவந்த மக்களனைவரையும், யோர்தானுக்குக் கிழக்கே வாழ்ந்த சீகோன் மன்னனின் குடிகளையும், குறிப்பாக இஸ்ரயேல் துரத்திவிட்ட ஒருமக்களினத்தையும் இப் பெயர் சுட்டுவதைப் ப.ஏ.இல் நாம் பார்க்கிறோம்.

அண்மைக்காலம் வரை வழங்கப்பட்ட பாலஸ்தீனா என்னும் பெயர் கி.மு.13ஆம் நூற்றாண்டின் இறுதியில் அங்குக் குடிபுகுந்த பெலிஸ்தியரிடமிருந்து இடவாகு பெயராக வந்தது. சிரியாவின் வட பகுதியினின்றுத் தென்பகுதியைப் பிரித்துக்காட்ட முதலாவதாக கிரேக்கர் இப்பெயரை வழங்கினர். பின்பு உரோமர் இதை ஒரு மாகாணத்தின் பெயராக மாற்றியமைத்துக் கொண்டனர்.

3. எல்லைகள்

இந்நாட்டின் மாற்றமில்லாத திட்டவட்டமான எல்லை அதன் மேற்கேயுள்ள மத்தியதரைக் கடல் ஒன்றே. மற்றவை மாறி மாறி அழைக்கப்படுபவைதான். தெற்கு எல்லையாக காத்சாவுக்கும் சூயஸ் கால்வாய்க்கும் மத்தியிலுள்ள எல் அரீஸ் (Wadi-el Arish) எனும் சிற்றாறும், பெயர்செபாவும் குறிக்கப்படினும் இவற்றிற்குத் தெற்கேயுள்ள பரந்த சீனாய்ப் பாலைநிலத்தோடு இணைக்கும் தொடர்புகள் இவை எனவும் கருதப்படலாம். ஏனெனில் இந்த நாடும், அந்தப் பாலைநிலமும் வரையறையான பாகப் பிரிவின்றி ஒரு தொடர்ச்சியாகவே காட்சியளிக்கின்றன.

வடக்கில் கர்மேலின் அடிவாரத்திலுள்ள எஸ்டிரேலோன் பள்ளத்தாக்கும், நாசரேத்தின் குன்றுகளும் இயற்கையான எல்லைகளாய் அமைந்திருந்தபோதிலும் வரலாற்று அனுபவத்தில் அவை எல்லைகளென ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஆனால் ப.ஏ. மேரோம் ஏரிக்கு (Lake Hule) வடக்கே செசரியா பிலிப்புக் கருகேயுள்ள தாணையும் (நீதித். 20:1) லெபனோன் பள்ளத்தாக்கில் ஆமோத்திற்குப் போகிற வழி பிரியும் இடத்தையும் (1 அர. 8:65) வட எல்லையாகக் குறிப்பிடுகிறது. கிழக்கே யோர்தானை எல்லையாகக் கொள்ளலாம். ஆனால், இஸ்ரயேல் குலங்கள் யோர்தானின் இரு பக்கங்களிலும் குடியிருந்தனர் என்பது தெரிந்ததே.

விவிலியம் கூறுவதற்கிணங்க தான், பெயேர்செபா, மத்தியதரைக் கடல், யோர்தான் ஆகியவற்றை எல்லைகளாக நாம் ஒப்புக்கொண்டால், பாலஸ்தீனாவின் நீளம் 130 மைலும், அகலம் வடக்கே ஏறக்குறைய 40 மைலும், தெற்கே 60 மைலுமாகும். எனவே, பாலஸ்தீனாவின் பரப்பளவு 6,000 சதுர மைல். அதில் 3,000 சதுர மைல் மட்டுமே விவசாயத்திற்கு ஏற்றது.

4. கால நிலை

பாலஸ்தீனா வெப்ப மண்டல அண்மையிடத்தின் (Sub-tropical Zone) வட எல்லையிலுள்ளது. குளிர் காலத்தில் மைய மண்டலங்கள் தென் திசை நேராய் நகர்வதால் நடுவெப்பநிலை மண்டலக் கோளாறுக்குள் அமைகிறது. எனவே, வேனிற்காலம், குளிர் காலம் எனும் இரு பருவங்கள் பாலஸ்தீனாவுக்கு உண்டு. வேனிற் காலம் மிதமான காற்றுடன், மழையின்றி, சூரிய வெளிச்சமும் மிதமான வெப்பமுமுடையது. குளிர் காலம் சில்லென்று குளிர்ச்சியாய் மழையும் புயலும் கொண்டது. இவ்விரு பருவக் காலங்களுக்குமிடையே வெளியில் முன் மாரியும், பின் மாரியும் பெய்கின்றன (எரே. 5:24).

தவிரவும், பாலஸ்தீனா, விரிவான பெரும் நிலப் பகுதிக்கும், நீண்ட கடற்கரையோரத்திற்கும் இடையே நடுவிலுள்ளது. நீர்ப்பரப்பு நிலப்பரப்பைவிட எளிதாக சூடாகவோ குளிராகவோ ஆகக் கூடியதாகையால இந்நாடு பாதிக்கப்படுகிறது. கரையோரப் பகுதியில் குளிர் காலத்தில் பருவ மழை பெய்கிறது. கோடையில் வெயிலில் வெது வெதுப்பான நீராவி நிறைந்த காற்று வீசுகிறது. ஆனால் இவை பாலஸ்தீனாவின் கீழ் நாட்டுப் பகுதிக்கு இப்படிக் கிடைப்பதில்லை. ஏனெனில் உயரமான மலைத் தோடர்கள் இவற்றைத் தடை செய்கின்றன. எனவே, பாலஸ்தீனாவில் மக்கள் பாலைநில வெப்பத்துக்கும் கடற்கரையோர இயல்புக்குமிடையே மாறக்கூடிய கால நிலையில கடவுளின் அருளைச் சார்ந்தே வாழ வேண்டியுள்ளனர்.

கால நிலை இப்படியிருந்தாலும் பாலஸ்தீனாவில் காற்று வீசுவதில் ஓர் ஒழுங்கு இருந்தது எனலாம். குளிர் காலத்தில் மேற்கிலும், தென் மேற்கிலுமிருந்து மேகமும், மழைக் காற்றும் தோன்றும் (லூக். 12:54). கோடையில் வட மேற்கிலிருந்து வீசும் காற்று மழை கொண்டு வருவதில்லை; எனினும் வெப்பத்தைத் தணிக்கும். கிழக்கிலும் தெற்கிலுமிருந்து வீசும் வசந்தகாலக் காற்று மிக வெப்பமானது. இது ஏப்ரல் முதல் ஜூன் தொடக்கம் வரையிலும், செப்டம்பர் முதல் நவம்பர் வரையிலும் வீசும் (எரே. 4:11, யோனா 4:8, லூக். 12:55). அது சிரோக்கோ (Sirocco) என்று அழைக்கப்படுகிறது (12:55). இது மிக வறட்சியானது (எசே. 17:10). பயனிலாமைக்கு அடையாளமாகவும் இக் காற்று சொல்லப்படுகிறது (எரே. 4:11). ஏராளமான தூசியை அடித்துவரும் இக் காற்ற சிறு கப்பல்களை நொறுக்கக் கூடிய வலுவோடு வீசுகிறது (திருப். 48:7). கோடையில் காலைதோறும் வெயில் ஏற ஏற வெப்பம் அதிகமாவதால் மக்கள் வீடுகளுக்குள்ளோ அல்லது திராட்சைத் தோட்டங்களில் கட்டியுள்ள சிறு குடிசைகளிலோ இருப்பார்கள். மாலையில் கடற்காற்று வேகமாய் வீசும். அவ் வேளையில் வெப்பம் தணியும். களத்தில போரடித்துத் தானியத்தை வேறுபடுத்துவார்கள் (1:4).

வறட்சியான நீண்ட கோடைக்குப்பின் அக்டோபர் மாத அளவில் மழை மேகங்கள் தோன்றுகின்றன. மழை பெய்யும் குளிர் காலத்திலும் எல்லா இடங்களிலும் ஒன்று போல் மழை பெய்வதில்லை (ஆமோஸ் 4:7,8). ஆனால் பெய்யும்போது கடும் மழை பெய்து பெருவெள்ளம் வரலாம் (மத். 7:27). பொதுவாகக் கூறுமிடத்து, பாலஸ்தீனாவின் தெற்குப் பகுதியைவிட வடக்குப் பகுதியில் மழை அதிகம். கடற்கரையோரத்தை விட்டு அகன்றுச் செல்லச் செல்ல மழை குறைந்துகொண்டே போகும். மலைத்தொடரின் மேற்குப் பகுதியைவிட கிழக்குப் பகுதியில் மழை குறைவு.

இதைத் தவிர பாலஸ்தீனாவின் இயற்கை அமைப்பில் காணும் வேறு இரு கூறுகளும் தட்ப வெப்ப நிலையை மிகவாய்ப் பாதிக்கிறவையாகும். ஒன்று, காற்றின் போக்கைக் குறுக்கிட்டுத் தென் வடக்காகச் செல்லும் நீண்ட மலைத் தொடர்கள். இன்னொன்று, திணை நிலத்தின் (terrain) தன்மையும், நில மட்டத்தில் காணும் மிகுந்த வீழ்ச்சிகளுமாகும். இவற்றின் பயனாக நாட்டுப்பகுதிகளுக்கிடையே மிக வேறுபட்டக் கால நிலை இருப்பதைக் காணலாம். எருசலேம் வட்டாரத்தில் ஆண்டிற்கு 26 1 அங்குலம் மழை பெய்திருந்தும், 15 மைல் தூரத்திலுள்ள சவக்கடற் பகுதியில் 3.4 அங்குலம் மழை மட்டும் பெய்கிறது. ஆகவே காலத்திற்குக் காலம் மட்டுமன்று. இடத்திற்கிடமும் தட்பவெப்பநிலை வேறுபட்டுள்ளது. 49 டிகிரி முதல் பாலைநில வெப்பம் வரையான வெப்ப நிலை இச் சிறு நாட்டிற்குள்ளிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வளவு வேற்றுமையான தட்பவெப்ப நிலைக்குள் பழகிய மக்கள், பிற்பாடு அங்கிருந்து சிதறடிக்கப்பட்டபோது உலகத்தின் வெவ்வெறு பகுதிகளில் சென்று வாழ்வது அவர்களுக்குக் கடினமாயிருக்கவில்லை.

5. வண்மை வள வாய்ப்புகள்

விவசாயம்: பாலஸ்தீனாவின் குடிகள் வான நிலையைச் சார்ந்து வாழ்ந்தவர்களெனக் கண்டோம். சில காலங்களில் எதிர்பார்த்த மழை பெய்யாததால் அவர்களுக்கு அதிக வறட்சியும், பஞ்சமும் ஏற்படுவதுண்டு (எரே. 4:1-5). எனினும், அந்நாட்டின் பொருளாதாரம் பொதுவாக விவசாயத்தைச் சார்ந்திருந்தது. உழைப்பும் குறைந்த வருமானமும் அன்னார் வாழ்க்கையின் பொதுவிதி எனலாம்.

அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்யும் முன்மாரி பயிர் செய்யவும், ஏப்ரல், மே மாதங்களில் வரும் பின்மாரி தானியம் முதிர்ச்சியும், திரட்சியும் பெறவும் உதவுகின்றன (இணை. 11:14). சில காலங்களில் முன்மாரி பிந்தவோ, பெய்யாமலிருக்கவோ நேரிடலாம். ஏப்ரல மாதத் துவக்கத்தில் கோதுமை முதற் பலன்கள் கிடைக்க ஆரம்பமாகும். பாஸ்காப் பண்டிகை ஆசரிக்கப்படும் காலம் இது. இக் காலத்தில் இஸ்ரயேலர், முதற் கதிர்க் கட்டுகளை கடவுளுக்குப் படைத்து, எகிப்திலிருந்து விடுதலை பெற்றதையும் நன்றியுடன் நினைவுகூருவார்கள் (லேவி.23:4-14). ஏழு வாரங்களில் அறுவடை முடிவடையும். அப்போது பெந்தேகொஸ்தே பண்டிகையை ஆசரிப்பார்கள்.

பாலஸ்தீனாவின் மேற்குப் பகுதியில் ஏராளமான தானிய வகைகள் பயிராயின. எஸ்டிரேலோன், பெலிஸ்தியா ஆகிய இடங்கள் பரவலான கோதுமை நிலங்களைக் கொண்டவை. கிழக்குப் பகுதி தானியங்கள் ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உற்பத்தி செய்ததோடு பரவலாக ஒலிவ, திராட்சைத் தோப்புகளை உடையதாகவும் இருந்தது. ஆனாலும் விவசாயத்தால் பாலஸ்தீனா செல்வச் செழிப்பெய்துவது சாத்தியமன்று. இறைவாக்கினர் தோன்றிய காலம் வணிகர்கள் பெருகியதையும், அவர்கள் செல்வந்தராகி ஏழைகளை ஒடுக்கியதையும் நாம் விவிலியத்தில் வாசித்தறிகிறோம். அதற்குக் காரணம் யாதெனில், ஒரே மட்டமான வளம்கொண்ட நிலம் குறைவாயிருந்ததுதான். பெய்த மழையில் ஒரு பங்கு கொடிய தூரிய வெப்பத்தால் நீராவியாகச் சென்றது. நிலம் சுண்ணாம்புக் கல் கலப்பாயிருந்தது. பல இடங்களில் மண்ணின் பரப்புக்கருகேயே இக் கல் படிவங்கள் இருந்தமையால் பயிர்கள் வேர்கொள்ளக் கூடாமலிருந்தது (மார். 4:5).


மந்தை மேய்த்தல்: பாலஸ்தீனாவின் ஒரு பெரும் பகுதி இயற்கையாகவே ஆடு, மாடு, ஒட்டகங்கள் மேய்வதற்குரிய மேய்ச்சல் நிலங்களாயிருந்தன. எனவே ஆடு-மாடு மேய்த்தல் ஒரு முக்கிய தொழிலாயிருந்தது. நாபால் ஆடு மாடுகளையுடைய செல்வந்தனாக இருந்தான் (1 சாமு. 25:2). மோவாபின் மன்னனாகிய மேசா ஏராளமான ஆடு மாடுகளை உடையவனாக இருந்து, ஆகாபுக்கு ஆடுகளையும் ஆட்டு மயிரையும் கப்பமாகச் செலுத்தினான் (2 அர. 3:4). சாலமோனின் அரண்மனைச் செலவுக்கு ஏராளமாய் ஆடு-மாடுகள் தேவைப்பட்டன (4:22,23). பண்டிகைகளுக்கும் பலிகளுக்கும் ஆடு மாடுகள் தேவைப்பட்டன (8:5, 62-64). ஆமோஸ் இறைவாக்கினர் ஆடுகளை மேய்த்து வந்தார். மக்கள் அரசரை மேய்ப்பர் எனச் சிலவேளைகளில் அழைத்தனர். இறைவாக்கினரின் போதனைகளிலும், ஆண்டவரின் உவமைகளிலும், சொற்களிலும் ஆடும், மேய்ப்புத் தொழிலும் சிறப்பான இடம் பெற்றிருந்தன.

மீன் பிடித்தல்: கடலும், ஆறும் பக்கத்திலிருந்தும் மீன் பிடிப்புத் தொழிலில் எபிரேயர் அதிகமாய் ஈடுபடவில்லை. மக்கள் கடற்கரையை விட்டுத் தள்ளி வாழ்ந்ததும், போக்குவரவுக்கேற்பட்ட வசதிக் குறைவும், எபிரேயருக்குக் கடலைப் பற்றியிருந்த அச்சமும் இதற்குக் காரணங்களாயிருக்கலாம். உரோமருடைய ஆட்சியின் காலத்தில் கலிலேயா, உலர்த்திய மீன் வியாபாரத்தில் பெயர் பெற்றிருந்தது. அக் காலச் செம்படவரில் சிலருடைய பெயர்களைப் பு.ஏ.இல் நாம் காண்கிறோம். சிறையிருப்புக்குப்பின் எருசலேமில் மீன் வாசல் இருந்ததாகவும் நாம் வாசிக்கிறோம் (நெகே. 3:3).

தொழில் துறை : தாதுப் பொருட்களும் பாலஸ்தீனாவில் மிக அரிதாயிருந்தன. அரிதமாகக் கிடைத்துவந்த செம்பு, இரும்பு முதலியவற்றைத் தோண்டி எடுக்கவும், பண்படுத்தவும் செலவு மிக அதிகமாயிருந்தது. சாலமோனின் காலத்திலும் (அர 9:26; 22:48), அமத்சியா, யோதாம் என்பவர்களின் காலத்திலும் ஏற்பட்ட செழிப்புக்கு இந்தச் சுரங்கங்கள் காரணமாயிருந்தன. எனினும் அந்த வருமானம் நீடிக்கவில்லை.

விவசாயிகளின் சமூகத்திற்குத் தேவையான தொழில் நிபுணர்கள் பாலஸ்தீனாவில் இருந்தனர். இதற்கு மிஞ்சின தேவைகளுக்குத் தொழிலாளர்களை வெளி இடங்களிலிருந்து தேட வேண்டியிருந்தது. ஹீராமின் நிபுணர்கள் சமாரியாவின் மதில்களைக் கட்டினர். தந்தவேலை செய்ய சிரியாவினின்று வேலையாட்கள் தருவிக்கப்பட்டனர்.

பாலஸ்தீனாவில் மிக எளிதில், ஏராளமாகக் கிடைத்த பொருள் பலதரப்பட்ட சுண்ணாம்புக் கற்களே. இதோடு எரிமலைப் பாறை வகைகளுமிருந்தன. இவை கட்டடப் பணிக்குப் பயன்படுத்தப்பட்டன. பாத்திரங்கள் வனைவதும் ஒரு முக்கியத் தொழிலாயிருந்தது.


திருநாட்டின் நிலவள அமைப்பு
பயிர் நிலங்கள்
மலை நிலம்
புல்வெளிகள்
காடுகள்
பெனிக்கேயா
லெபனோன்
காதேஷ்
ஹாசோர்
பாசான்
கலிலேயாகலிலேயா
கடல்
காபேல்
நாசரேத்
நாபோத்
யாபேசு கிலியாத்து
ஏபால்
மோவாபு
பெயோர்சேபா

பாலஸ்தீனா வளம் மிகுந்த நாடெனக் காட்ட இணைசட்ட ஆசிரியர் அதை வாக்குறுதி நாடெனவும், பாலும்;தேனும் ஒடும் நாடெனவும் சுட்டிக் காட்டுகிறார். (இணை 11.8-12:26.9). இந்த இருபதாம் நூற்றாண்டைவிட கி.மு.ஏழாம் நூற்றாண்டு பாலஸ்தீனா அதிக செழுமையுடையதாயிருந்திருக்கக் கூடுமெனினும், இணைச் சட்ட ஆசிரியர் நிலைமையை மிகைப்படுத்திக் கூறுவதுபோல் தோன்றுகிறது.

பாலஸ்தீனா பாலும் தேனும் ஒடும் நாடல்லவெனினும் அதன் ஓர் ஒப்பற்ற சிறப்புத் தன்மை குறிப்பிடத் தகுந்தது. பாலஸ்தீனா ஒரு மிகச் சிறிய நாடாயிருந்தும், உலகின் பல்வேறு திசைகளின் தன்மைகளையும், தன்னுளடக்கியது எனப் பொதுவாய்ச் சொல்லலாம். மிதமிஞ்சிய தட்ப வெப்ப நிலையும் கடுங்குளிரும் இங்குக் காணப்படலாம். பனிக்கட்டி ஒருபுறமிருக்க, போசச மரம போன்ற இன (Palms) மரங்களும் மறுபக்கம் இருக்கும். வெப்பம் மிகுந்த பிளவுப் பள்ளத்தாக்குக்கும், கோடையிலும் மூடுபனி பெய்யும் எர்மோன், லெபனோன் மலைகளுக்குமிடையில் சிறிது தூரமேயுள்ளது. மிகச் செழிப்பான பகுதிகளும், பாலைநிலம் போன்ற பகுதிகளும் அக்கம்பக்கமாய் இணைந்தாற்போலிருப்பதைக் காணலாம். நகரவாசிகளும், விவசாயிகளும், மந்தை மேய்ப்பர்களும், நாடோடிகளும் அடுத்திருப்போராய் வசித்தனர். எல்லா தட்ப வெப்ப நிலைக்கும் பொருத்தமான உணவுப் பொருட்கள் அங்கு உற்பத்தியாயின. இங்ஙனம் பல்வகை நிலைமை பொருந்திய ஒரு நாட்டில் விவிலியம் எழுதப்பட்டிருப்பதால் இது எல்லா நாட்டவருக்கும் பொதுவான ஒன்றாகவும், எவரும் புரிந்துகொள்ளக்கூடிய கூறுகளைக் கொண்டதாகவும் இருக்கிறது.

6. இயற்கை அமைப்பு

நாட்டைத் தென் வடக்காக நான்கு பகுதிகளாகப் பிரிக்கும் இயற்கைப் பிரிவுகள் மிகத் தெளிவாய் இருக்கின்றன. அவையாவன: கடற்கரைச் சமவெளி, மத்திய மலைத்தொடர், யோர்தான் பள்ளத்தாக்கு, கிழக்கத்திய மலைத்தொடர். இவையும், இவற்றைக் குறுக்கிட்டுச் செல்லும் மலைத்தொடர்களும், பள்ளங்களும், இந்நாட்டை, பள்ளத்தாக்குகளிலும், மலைகளிலும் பாய்கின்ற ஆறுகளனைத்தும், நீரோட்டங்களும், ஊற்றுக்களும், மடுக்களுமுள்ள நாடாக்கியுள்ளது. (இணை 8:7). தவிரவும் இதன் பயனாக நாட்டில் பலவகையான மண்அமைப்பும், வெவ்வேறான தட்பவெப்பக் கூறுகளும் உண்டு.

(அ)கடற்கரைச் சமவெளி

இது மத்தியதரைக் கடலுக்கும் மத்திய மலைத்தொடருக்குமிடையே தென் வடக்காய்ச் செல்கிறது. இதன் அகலம் பற்பல இடங்களில் வேறுபட்டுள்ளது. தீருவின் ஏணிப்படி (Ladder of Tyre) எனப்படும் சிரியாவின் ஒரப்பகுதியில், கலிலேயாவின் குன்றுகள் கடல் வரை செல்வதால் அங்கே சமவெளிப் பகுதி இல்லை. அதற்குத் தெற்கே சமவெளி துவங்கி தெற்குநோக்கிச் சென்று அக்ரேயில் (Acre) ஐந்து மைல் அகலமுடையதாகிறது; பின் இன்னமும் அகலமாகி ஹய்பா (Haifa) என்னுமிடத்தில் எஸ்டிரேலோன் பள்ளத்தாக்கைச் சேர்கிறது. எஸ்டிரேலோன் எஸ்ரியேல் முதல் யோர்தான் மட்டும் நீண்டுகிடப்பதாகையால் அதைச் சந்திக்குமிடத்தில் கடற்கரைச் சமவெளி யோர்தானோடும் தொடர்புடையதாகிறது. ஹய்பாவுக்குப் பின் கர்மேலுக்கு ஒன்பது மைல் தெற்கே சமவெளிப் பகுதி 2 மைல் மட்டுமே அகலமுடையது. ஆனால் அங்கிருந்து அது படிப்படியாய் விரிவடைந்து தெற்குக் கோடியில் 30 மைல் அகலமுடையதாகிறது.

சமவெளியின் கடலையொட்டிய பகுதி மணல் பாங்கானது. போக்குவரவுக்கேற்ற ஆறுகளோ, பாதுகாவலான இடங்களோ இல்லாததால், கர்மேலுக்குத் தெற்கே துறைமுகங்கள் இல்லை. அதற்கு வடக்கே ஹய்பா துறைமுகமும் பெரிய கப்பல்கள் வரக்கூடிய ஆழம் உடையதன்று. ஏனெனில் நீல நதியின் ஒழுக்கின் வேகத்தால் வடக்கே கரையோரமாய் அடித்துக் கொண்டுவரப்படும் சேறும், தெற்கே பாலைநிலத்திலிருந்து காற்றால் அடித்துவரப்படும் மணலும் சேர்ந்து கரையோரப் பகுதியை நிரப்பிக் கொண்டேயிருக்கிறது. ஆகவே நல்ல துறைமுகங்கள் அமைவது கடினம். மாரிகாலத்தில் பெய்யும் வலுத்த மழையால் மத்திய மலைத்தொடரினின்று, மேற்கே செழிப்பான மண், அடித்துவரப்படுகிறது. அதின் பயனாக இச் சமவெளி பாலஸ்தீனாவின் மிகச் செழிப்பான பகுதிகளில் ஒன்றாக்கப்பட்டுள்ளது.

கடற்கரைச் சமவெளி (Maritime plain) மூன்று பகுதிகளாய்ப் பிரிக்கப்படலாம்: (1) பெலிஸ்திய சமவெளி, (2) சாரோன் பள்ளத்தாக்கு, (3) கர்மேலுக்கு வடபகுதி. 1. பெலிஸ்திய சமவெளி: இது 40 மைல் நீளம் கொண்டது. பாலைநிலம் என்று அழைக்கப்படும் இதன் தென்கோடி மாரிகாலத்திற்குப்பின் அகலமான மேய்ச்சல் நிலமாகிவிடுகிறது. ஆபிரகாமும் அவர் மகனும் இங்கு ஆடு மேய்த்து கிணறுகள் தோண்டினர். (தொட. 26). மழைத்தண்ணீரைச் சேமித்து வைத்துப் பயன்படுத்தித் திரளான மக்கள் அங்கு வாழந்தனர். பெயேர்செபாவுக்கு 30 மைல் தெற்கிலும், கிணறுகளையொட்டி பல சிற்றூர்கள் இருந்தன. அவற்றில் ஒன்றான எஸ்பெயிற்றா (Esbaita) வில் மூன்று கிறிஸ்தவ வழிபாட்டுமனைகள் இருந்ததற்கான தடயங்களை இன்னமும் காணலாம்.

காத்சாவிற்கு வடக்கே கடலோரத்தையொட்டி பழவகைகளும், உட்பகுதிகளில் கோதுமையும் பயிர்செய்யப்படுகின்றன. அங்கே கிணறுகள் ஏராளம். அளவான தட்பவெப்பமுடையது. அக்டோபர் முதல் ஏப்ரல் வரையிலும் தென் மேற்கு மழைக்காற்று போதுமான மழை தருகிறது. கீழ்ப்பாலைநிலத்தினின்று வீசும் வெப்பக் காற்று, மத்திய மலைகளால் தடைசெய்யப்படுவதால் இப்பகுதி அதிகமாய்ப் பாதிக்கப்படுவதில்லை.

பெயேர்செபாவுக்கு வட மேற்கில் கடற்கரையருகில் கேரார் எனும் நகரமிருந்தது. இது முற்கால பெலிஸ்திய நகரங்களில் ஒன்று. ஆபிரகாமின் காலத்தில் அபிமலேக்கு அதன் அரசனாயிருந்தான். பெலிஸ்தியரின் ஐந்து முக்கிய நகரங்களான காத்சா, அஸ்கலோன், அஸ்தோத்து, எக்ரோன், காத்து என்பவை இப்பகுதியிலுள்ளவை.

இவைகளில் காத்சா மிகத் தெற்குக் கோடியில் கடலினின்று மூன்று மைல் தொலைவிலுள்ளது.

கானானியரின் தெற்கு எல்லையாக எண்ணப்பட்டிருந்தது. (தொட.10:19). பெயர்செபாவினின்று ஏலாத்திற்குச் செல்லும் பெரும் பாதையும், எகிப்து, சிரியா நாடுகளினின்று வரும் நெடுஞ்சாலைகளும் இங்குச் சந்திக்கின்றன. தெற்கேயிருந்து பாலஸ்தீனாவுக்குள் வரும் படைகள் இவ்வழிதான் வரவேண்டும். எருசலேமிலிருந்து காத்சாவுக்குச் செல்லும் பாதையில், பிலிப்பு எத்தியோப்பிய அண்ணகனைச் சந்தித்து ஆண்டவரிடம் திருப்பினார். (திருத்.8:26). மார்னாவைத் தொழுவதற்கு ஒரு கோவில் இங்கிருந்தது. அது கிறிஸ்தவ நற்செய்தி வேர்கொள்ளாத் தடையாயிருந்தது. பின்பு ஒரு கிறிஸ்தவ வழிபாட்டு மனை கட்டப்பட்ட அந்த இடத்தில் இப்பொழுது ஒரு மசூதி இருக்கிறது.

அஸ்கலோன்: காத்சாவுக்கு 17 மைலுக்கு வடக்கே கடலோரத்திலுள்ளது. அங்கிருந்த ஐந்து நகரங்களிலும் இது மிக அழகானது. சிம்சோனின் வாழ்க்கை இதோடு தொடர்பு கொண்டிருந்தது (நீதி 14:19). இது இந்த ஐந்து நகரங்களுக்குமான ஒரே துறைமுகமாக இருந்ததும், மேற்குத் தீவுகளோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அஸ்தோத்து: இது ஓர் உள்நாட்டு நகரம். தற்போது மணலால் மூடப்பட்டுப் போயிருக்கிறது. பு.ஏ.இல் இது ஆசோத்து என்றழைக்கப்படுகிறது. இது அஸ்கலோனுக்கு வடக்கே எக்ரோனுக்குத் தென் மேற்கேயுள்ளது. அஸ்தோத்தினின்று செல்லும் பாதையின் ஒரு பிரிவு வடக்கே யோப்பா (Joppa) வுக்கும் சோரேக்கு பள்ளத்தாக்குக்கு ஐந்து மைல் வடக்கே எக்ரோனினூடே வித்தாவுக்கும் செல்லுகிறது. உடன்படிக்கைப் பெட்டி பிடிக்கப்பட்டு, அங்குக் கொண்டு வைக்கப்பட்டது (1 சாமு.5:1).

காத்து: இது அஸ்கலோனுக்குக் கிழக்கேயும், இஸ்தோத்துக்குத் தென் கிழக்கேயும் உள்ளது; அரக்கர்களின் நகரம்; கோலியாத்தின் சொந்த ஊர். பெலிஸ்திய நகரங்களில் முதலாவதாக அழிந்தது இதுவே (ஆமோஸ் 6:2). ரெகபெயாம் அதை அரணான நகரமாகக் கட்டினான் (2 குறி.11:8). கி.மு. எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் மறைந்தது. இது இருந்த இடம் திட்டமாய்த் தெரியாமற் போயிற்று. உடன்படிக்கைப் பெட்டி அங்கேயும் கொண்டுவரப்பட்டது (1 சாமு.5:8).

எக்ரோன்: இது அஸ்தோத்துக்கு வட கிழக்காய் அஸ்கலோனுக்கு வடக்கேயுள்ளது. பெலிஸ்தியருடைய நகரங்களில் இஸ்ரயேலருக்கு மிக அண்மையிலிருந்தது.

யோப்பா: எருசலேமுக்குப் புகை வண்டிப் பாதை இதன் ஊடே செல்லுகிறது.

பெலிஸ்தியாவின் கிழக்கே கடற்கரை சமவெளிக்கும் மத்திய மலைத்தொடருக்கும் மத்தியில் தென் வடக்காய்க் கிடக்கும் திறந்தவெளி ஷெபேலா (Shephelah) என அழைக்கப்படுகிறது. ஷெபேலா என்றால் சமவெளி, பள்ளம் என்பது பொருள். இது பல சிறு குன்றுகளாலானது. பெலிஸ்தியருக்கு அண்மையிலிருந்தும், இது அவர்களுக்குச் சொந்தமானதன்று (2 குறி.28:18). அய்யலோன் பள்ளத்தாக்கு இதன் வட எல்லை எனலாம். குன்றுகளாலான இச் சமநிலை நாட்டினூடே பாயும் பல வறண்ட காட்டாறுகள் (Wadi) அங்குப் பல கணவாய்களை அமைக்கின்றன. இக் கணவாய்களில் காவலுக்கென எபிரேய வரலாற்றில் மிகச் சிறப்பிடம் பெறும் பல நகரங்கள் இக் குன்றுகளின் மேல் கட்டப்பட்டிருக்கின்றன. வறண்ட காட்டாறுகளினால் அமைக்கப்பெற்ற ஐந்து திறப்புகள் அங்குண்டு.

இத்தாழ்நிலத்தின் தென் கோடிக்கு அருகேயுள்ளது **எல்ஹெஸி** (el-Hesy) எனும் பள்ளத்தாக்கு. இலாக்கீசு எனும் முக்கிய நகரம் அதன் தொடக்கத்திலுள்ளது. எகிப்தையும் யூதேயாவையும் இணைக்கும் நகரமிது. ஆகவே யூதேயா எகிப்தைச் சார்ந்து நிற்க முயல்வதைக் கண்டிக்க மிக்கா இறைவாக்கினர் இலாக்கீசு எனும் பெயரை வக்கணையாய்ப் பயன்படுத்தினார் (மீக். 1:13).

எல்ஹெஸி என்னும் பள்ளத்தாக்கு அதற்குச் சற்று வடக்காகவுள்ள எல் அஃ பறஞ்ச் (Wady el Afranj) என்ற பள்ளத்தாக்கோடு இணைகின்றது. மீகா எலியேசர் என்னும் இறை வாக்கினரின் ஊரான மோரேசத்து இங்குள்ளது (மீகா.1:1,15, 2 குறி 20:37).

ஏலா பள்ளத்தாக்கு இதற்கு வடக்கேயுள்ளது. இங்கேயிருந்து சாலைகள் தென் கிழக்காய் எபிரோனுக்கும், வட கிழக்காய் எருசலேமுக்கும், கிழக்கே கிபியாவுக்கும், பெத்லகேமுக்கும் செல்கின்றன. லிப்னா என்னும் பிறை வடிவமான சுண்ணாம்புக் குன்று அதன் தொடக்கத்திலிருக்கிறது. இங்கேயே தாவிது கோலியாத்தைக் கொன்றார். கோலியாத்தோடு வந்த சேனைகள் மறைந்திருந்த சோக்கோ இதன் பின்பக்கத்திலுள்ளது. அந்தப் பள்ளத்தாக்கில் 12 மைலுக்கப்பால் அதுல்லாம் என்னும் குன்றின் அடிவாரத்தில் பலகுகைகள் உள்ளன. அவற்றில் ஒன்று கெகிலா.

லிப்னாவுக்குச் சற்று கிழக்கே கடல் மட்டத்தினின்று 940 அடி உயரத்தில் அசேக்கா (Azekah) என்னும் கோட்டையும்,. அதன் வடக்கே 5 மைல்களுக்கப்பால் சோரேக்கு பள்ளத்தாக்கும் உள்ளன. இங்குள்ள சோராவூரில், தாண் குல வீரரான சிம்சோன் பிறந்தார். சோராவுக்கு எதிராக பெத்சமேசு என்னும் ஊரும், சிம்சோன் சிங்கத்தைக் கொன்ற திம்னாவும், அவர் நரிகளைக் கொண்டு தீக்கிரையாக்கிய பெலிஸ்தியரின் திறந்த பயிர் நிலங்களுமிருந்தன. கீரியாத்து பெயாரிம்: இதற்கு மிகவும் அருகாமையிலிருந்த இஸ்ரயேலரின் நகரம் (எரே.26:20). சோரேக்கு பள்ளத்தினின்று பெத்சமேசு கிரியாத்து எயாரிம் என்னுமிடங்களுக்குப் பெரும்பாதையொன்று சென்றது.

சோரேக்கு பள்ளத்தாக்குக்கு வடக்கே ஷெபேலாவின் ஐந்தாவது பள்ளத்தாக்காகிய **அய்யலோன்** உள்ளது. கேசேர் என்னும் நகரம் இதன் நுழைவாயைக் காக்கிறது. இங்கிருந்து எருசலேமுக்குச் செல்லும் பாதை ஒன்றுண்டு. யோசுவா கானானியரைத் துரத்தியபோது சூரியனை நிற்கச்செய்த இடம் இது (யோசு 10:12). எப்ராயிம் பெலிஸ்தியரை இங்கே தாக்கினது (1 குறி 8:13). பெலிஸ்தியர் இதனூடே நுழைந்து, இஸ்ரயேலரை மேற்கொண்டு, அவர்கள் தங்கள் படைக்கலங்களைப்

பழுதுபார்க்க தங்கள் நாட்டிற்கு வரச் செய்தனர் (1சாமு 13:9,20). சிறையினின்று மக்கள் திரும்பி வருகையில், இதனூடேயே கடந்து வந்தனர்.

ஷெபேலாவினூடே கிழக்கு மேற்காய்ச் சென்ற இந்தப் பள்ளத்தாக்குகள் இப்பகுதியின் தனிச் சிறப்பாகும். தவிரவும் இக்காட்டாறுகள் அவற்றின் கரையோரப் பகுதிகளை வளம்பெறச் செய்தன. அய்யலோனுக்கு வடக்கேயுள்ள பள்ளத்தாக்குகள் கிழக்கு மேற்காய்ச் செல்லாமல் தெற்கு நோக்கியே தென் கிழக்காக மத்திய மலைத்தொடரோடு இணைந்து செல்கின்றன. இப்படிச் செல்வதால் இவை மத்திய மலைத் தொடரை எளிதில் பாதுகாக்க மிகவும் உதவியாயிருக்கின்றன. அன்றியும் பிற பண்பாடுகள் அங்கு எளிதில் புகாமலும், அவை தடை செய்கின்றன.

ஷெபேலாவின் இத் தனித்தன்மை, குன்றுகள் மேல் அமைக்கப்பெற்ற யூதேயாவின் வரலாற்றிலும், சமய இலக்கிய வளர்ச்சிகளிலும், முக்கிய இடம்பெற்றுள்ளது. பரவலாக உள்ள இக்காட்டு ஆறுகள் மாரிகாலத்தில் பெருக்கெடுத்து, ஆழமான கால்வாய்களைத் தோற்றுவிப்பதால் போக்குவரவுக்கான சில பாதைகளைக் கட்டுப்படுத்தி விடுகின்றன. எனவே, பாதுகாவல் மிக இலகுவாயிற்று. இவ்விதக் காவலுக்கென பல கோட்டைத் தொடர்கள் கிழக்கு மேற்காய் அமைக்கப்பட்டிருந்தன. காத்து, இலாக்கீசு, எபிரோன், லிப்னா, அசேக்கா, சோக்கோ, பெத்சமேசு, கிரியாத்து, எயாரிம், எருசலேம், எக்ரோன் அய்யலோன், பெத்ஆரான் மிக்மாசு போன்ற கோட்டை வரிசைகள் யூதேயாவுக்கு மிகப் பாதுகாவலாயிருந்தன.

2. சாரோன் பள்ளத்தாக்கு: அய்யலோன் பள்ளத்தாக்குக்கு வடக்கே யோப்பாவிலிருந்து செசரியா வரையுள்ள பாலஸ்தீனாவின் கடற்கரைச் சமவெளி சாரோன் என அழைக்கப்படுகிறது. இது 44 மைல் நீளமும், 8 முதல் 12 மைல் வரை அகலமுமுடையது; கடற்கரையினின்று 250/300 அடி வரை உயரமுள்ளது. இது மிகச் செழுமையான பகுதி; சிறந்த மேய்ச்சல் வளத்துக்கும், செழுமையான பழத்தோப்புகளுக்கும், தானிய வயல்களுக்கும் பெயர் பெற்றது (1குறி 27:29; எசா.35:2; 65.10). பல புராதீனக் கணவாய்கள் இங்குத் தோன்றி, கர்மேல் மலைத் தொடரைக் கடந்து எஸ்டிரேலோன் பள்ளத்தாக்கில் செல்கின்றன. அவற்றில் மிக விரிவானது யோசேப்பின் சகோதரர்கள் ஆடுகளை மேய்த்து இஸ்மவேலரைச் சந்தித்த தோத்தான் சமவெளியினூடே சென்று (தொட.37:17) ஜெனின் (Jenin) என்னுமிடத்தில் எஸ்டிரேலோன் பள்ளத்தாக்கைச் சேர்கிறது.

லித்தா: இது யோப்பாவுக்குத் தென் கிழக்காய், சாரோன் சமவெளியிலுள்ளது. சமாரியாவிலிருந்து இதைப் பிரித்து யூதேயாவுடனே சேர்த்தது யோனத்தான். இது பழைய ஏற்பாட்டில் லோத்து என அழைக்கப்பட்டது (1குறி 8:12, நெகே7:37) தற்போது லுத்தா (Ludda) என அழைக்கப்படுகிறது. எருசலேமினின்று யோப்பா போகும் புகைவண்டிப் பாதை இதனூடே செல்கிறது. ஜனேயாவை குணப்படுத்திய பேதுரு இங்கே தங்கிச் சென்றார்.

யோப்பா: இது சாரோன் சமவெளியின் தெற்குத் ஓரத்தில் அமைந்திருக்கும் துறைமுகம் (2 குறி2:16) தாண், எப்ராயிம் குலங்களிடையே எல்லை போன்றுள்ளது. இது முற்றிலுமே யூதர்கள் வாழ்ந்திருந்த நகரம். தாண் எல்லையிலுள்ள இதினின்று (யோசு.19:46) யோனா கப்பல் பயணமானார். (யோனா1:3). பேதுரு தோர்க்காளை இங்கு உயிருடனே எழுப்பினார். (திருத் 9:40). கொர்நேலியு அனுப்பிய தூது ஆள்கள் பேதுருவை இங்கே சந்தித்தார்கள்.

செசரியா: இது கர்மேல் முகட்டிற்குத் தெற்கில் உள்ள துறைமுகம். பெரிய ஏரோது இதைக் கட்டினார். ஏராளமான உரோமர்கள் இங்கே தங்கியிருந்தனர். பல்லாண்டு பாலஸ்தீனாவின் தலைநகர்போன்றிருந்த இந்த நகரம் பாழாக்கப்பட்டது. பிலிப்பு இங்கு நற்செய்தியை அறிவித்தார் (8:40). கொர்நேலியு திருமுழுக்குப் பெற்ற இடம் இது (10). பேலிக்ஸ் பவுலை ஈராண்டுகள் இங்குக் காவலில் வைத்தான் (24:27).

3. கர்மேலுக்கு வடபகுதி: இது கடற்கரைச் சமவெளியின் மூன்றாவது பகுதி. இது ராஸ் என் நக்கூரா (Ras-en-Naqura) முதல், கர்மேல் வரையுள்ள கடலோரப் பகுதி. கர்மேல் மலை இதன் தென் கோடியில் குறுக்கிட்டு அக்கோ (Acco) என்னுமிடத்தில் கடலுக்குள்ளே வரை செல்கிறது. இப்பகுதிக்குத் தனிப் பெயர் வேறொன்றும் கொடுக்கப்படவில்லை. நக்கூராவில் துவங்கும் இதன் அகலம், மிகவும் அகலமான இடத்தில் ஐந்து மைலுக்குமேல் கிடையாது. இது அக்கோவுக்குச் அருகில் கலிலேயா மலைகளுக்குப் பின்னாகச் சென்று எஸ்டிரேலோன் பள்ளத்தாக்கையடைகிறது. அக்கோவின் கரையோரத்தில் மணல் குன்றுகளும், அதற்குப் பின் பகுதியில் சதுப்பு நிலத்தையுமுடைய பகுதி இது. அக்கோ என்னும் நகரம் இப்பெயரையுடைய சமவெளியில் இருக்கின்றது (நீதித். 1:31). இது ஆசேர் குலத்தின் எல்லைக்குட்பட்ட ஒரு பெனிக்கேய நகரம்.

தீரு: பெனிக்கேயா நாட்டின் கடலோரமாயுள்ள ஒரு தீவில் இது அமைந்துள்ளது; சீதோனுக்கு 25 மைல் தெற்கில் உள்ளது; ஆசேர் குலத்திற்கு அருகாமையிலுள்ளது (யோசு. 19:29). மகா அலெக்சாந்தர் இதனை நிலப்பரப்புடன் ஓர் அணை மூலம் இணைத்தார். இது வணிகத்துறையில் புகழ்பெற்ற இடம் (எசா. 23:1). உம்ரியின் மகன் ஆகாபு தீருவின் இளவரசி ஏசபேலை மணந்தான் (1 அர. 16:31). இந் நாட்டின் மன்னன் ஈராம் தாவீதுக்கும் சாலமோனுக்கும் வேலையாட்களை அனுப்பினார் (2 சாமு. 5:11; 1 அர. 5:16). பவுல் இவ்விடத்துக் கிறிஸ்தவர்களைச் சந்தித்தார் (திருத். 21:3).

சாரிபாத்து: இது ஒரு பெனிகேய நகர்; சீதோனுக்கு ஆறு மைல் தெற்கில் உள்ளது. சாரிபாத்து சரெப்தா என்றும் அழைக்கப்படுகிறது. இது கண்ணாடித் தொழிற்சாலைக்குப் பெயர்பெற்றது. இவ்விடத்து விதவையின் மகனை எலியா உயிரோடு எழுப்பினார் (1அர. 17:22,23).

சீதோன்: தீருவுக்கு 25 மைல் வடக்கிலுள்ள இது பெனிக்கேயா நாட்டின் துறைமுகம்; தொன்மை மிக்க நகரம் (யோசு. 19:28). வடக்கிலும் தெற்கிலும் துறைமுகங்கள் உண்டு; கடல் வணிகத்தில் பெயர்பெற்றது (எசா. 23:2,4). சீதோனைப் பற்றிய இறைவாக்கினரின்

கண்டன உரையை யோவேல் 3:4 முதல் பார்க்கலாம். பவுல் தமது உரோமாபுரிப் பயணத்தில் சீதோனின் துறை வழியாகச் சென்றார் (அப். 27:3).

எஸ்டிரேலோன்: இது சமாரியாவையும், கலிலேயாவையும் இணைக்கிறதென்றோ அல்லது பிரித்துவைக்கிறதென்றோ சொல்லத்தகுமெனினும், இது கலிலேயாவுடன் சேர்ந்ததெனக் கருதப்படுகிறது. இது கடற்கரைச் சமவெளியில் துவங்கி மத்திய மலைத்தொடரைப் பிரித்துக் கொண்டு யோர்தான் சமவெளியை அடைகிறது. இஸ்ரியேல் பள்ளத்தாக்கு யோர்தான் சமவெளியையும், எஸ்டிரேலோன் பள்ளத்தாக்கையும் இணைக்கிறது. இது மலையிலுள்ள ஒரு பிளவின்வழியாய்க் கடற்கரைச் சமவெளியோடு இணைகிறது. இப் பிளவினூடே கீசோன் ஆறு பாய்ந்து அக்கோ சமவெளியைச் சேருகிறது. முக்கோண வடிவமான இந்நிலப்பகுதி செபுலோன், மனாசே, இசக்கார் என்னும் மூன்று குலங்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தும். இதன் பெரும்பகுதி இசக்காருக்கே சொந்தமானது (யோசு. 19:17-23; தொட. 19: 14). இச் சமவெளியின் மையப்பகுதி கடல் மட்டத்தினின்று 200 அடி மேலெழும்பியிருந்தும், படிப்படியாகத் தணிந்து 12 மைல் சென்று பேத்சானில் யோர்தான் சமவெளியைச் சேரும்போது கடல் மட்டத்தினின்று 400 அடி கீழே செல்கிறது. இச் சமவெளி மூன்று பகுதிகளாயுள்ளது. இச் சமவெளிக்கு வடக்கில் மோரே மலையும், மேற்கில் கில்போவா மலையும் உள்ளன. இந்நிலப்பகுதி சதுப்பு நிலமாயுள்ளது; செழிப்பு வாய்ந்தது வட கிழக்கிலிருந்து தென் மேற்காக இதனூடே செல்லும் பாறைத் தொடர் ஓர் ஊடுபாதை போல் அமைந்துள்ளது. இப் பாதைக்கு வடகிழக்கே தாபோர் மலையும், தென்மேற்கு ஓரத்தில் மெகித்தோ என்ற நகரும் உள்ளன. இஸ்ரியேல் (நீதித். 6: 33). மெகித்தோ என்னும் சமவெளிகள் இதன் பகுதியாயமைகின்றன. எஸ்டிரேலோனுக்குள் நுழையக் கூடிய ஐந்து திறப்புகள் இருந்ததால், அது அண்டை நாடுகளுக்கு ஒரு முக்கிய போர்க்களமாயமைந்ததெனலாம். அத்துடன் அரேபியக் குழுக்களும் அடிக்கடி உட்புகுந்து தொல்லை செய்தன. கீசோன் ஆறு கலங்கலாய், ஆழமான பள்ளத்தினூடே பாய்ந்ததால் அது அவ்வளவாக விவசாயத்துக்குப் பயன்படவில்லை.

(ஆ) மத்திய மலைத் தொடர்

இம் மலைத்தொடர் நாட்டின் கெட்டியான முதுகெலும்பு போல் லெபனோன் மலைத்தொடரில் தோன்றி தெற்கு நோக்கிச் செல்கிறது. இது பல சுண்ணாம்புக் கற்குன்றுகளால் ஆனது. இது கலிலேயா, சமாரியா, யூதேயா என்னும் தெளிவான மூன்று பிரிவுகளைக் கொண்டது. லித்தனி ஆற்று மலைச்சந்தும், எஸ்டிரேலோன் பள்ளத்தாக்கும் இதைக் குறுக்கிட்டுச் செல்கின்றன. உயரத்தில், இடத்திற்கிடம் வேறுபடும் இக் குன்றுத்தொடர், ஓரிடத்தில் 3600 அடி உயர்ந்துள்ளது. கீழ் நாட்டு வெப்பக் காற்று ஒருபுறம் இருப்பினும் பொதுவாக வெதுவெதுப்பான தட்பவெப்ப நிலையுடையது. தென் ஓரத்தைத் தவிர மறு பகுதியில் மழை ஏராளமாகப் பெய்கிறது.

யூதேயா: மத்திய மலைத்தொடரின் தென் கோடியிலுள்ள இப்பகுதி 1,350 சதுரமைல் பரப்புள்ளதாயினும், அதன் பாதிப் பகுதி வெறும் பாலைநிலமே. பெயேர்செபா முதல் பெத்தேல் வரை அதன் நீளம் 55 மைல் ஆகும். அதன் மிக அதிகமான அகலம் 25 மைல். மேற்கில் பல கோட்டை வரிசைகளும், கிழக்கில் யோர்தானும் இதற்கு நல்ல பாதுகாப்பு அளிக்கின்றன. இது மிருதுவான சுண்ணாம்புக் கற்களாலான ஒரு பீடபூமி. மிருதுவான மண்ணானதை நீர் அரித்து ஏராளமான பள்ளங்கள் தோன்றியுள்ளன. மிக ஆழமான பள்ளங்களையுடைய அதன் கிழக்குப் பக்கம் செங்குத்தானதும், பாலைநிலப் போங்குடையதுமாகையால் அங்கு விவசாயத்திற்கு வாய்ப்பு இல்லை. இங்கு மந்தை மேய்த்தல் ஒரு முக்கிய தொழிலாயிருந்ததால் மக்களின் சிந்தனையிலும், போதனையிலும் ஆடும், மேய்ப்பனும் சிறப்பிடம் பெற்றிருந்தன.

எபிரோனிலிருந்து, பெத்லகேம், எருசலேம் வழியாய்ச் சவக் கடலுக்குச் செல்லும் பகுதி வறண்டு, விடாய்த்துப் போய்க் காட்சியளிக்கிறது. எனவே இது எஷிமோன் அல்லது பாழ்நிலம் என அழைக்கப்படுகிறது (இணை. 32:10). மாவோன், எபிரோனுக்குக் கீழ், சீப், எருயேல், தெக்கோவா என்னும் பாலைநிலங்கள் இதனுள் அமைந்துள்ளவைகளாம். இறைவாக்கினர்களான எரேமியாவும் ஆமோசும் அனதோத்து தெக்கோவா என்னும் பாலைநிலங்களிலிருந்து வந்தவர்கள். இந் நிலப்பகுதியில் மண் ஆழமில்லாததால் கோடையில் தாவரங்கள் பட்டுப் போகின்றன. மழைக்குப்பின் ஆமோஸ் மேய்த்தவை போன்ற திறந்தவெளிகளில் வளரக்கூடிய புற்கள் ஆடுகளுக்கு நல்ல மேய்ச்சலாகும். இம் மேய்ச்சலிடங்கள் மலையோரங்களையொட்டியிருந்ததால் காட்டு விலங்குகள் ஆடுகளைத் தாக்குவது உண்டு (1 சாமு. 17:34; யோ. 10:12,13).

பெயேர்செபா: யூதேயாவின் தெற்குக் கோடியிலுள்ள பெயேர்செபா பாலைநிலப் பாங்கானது. அது நெகேப்பு (Negeb) என்னும் தென்னாட்டின் (தொட 12:9) மையத்திலுள்ளது. சூயஸ், சீனாய் செங்கடலோரத்திலுள்ள அக்காபா போன்ற இடங்களுக்குச் செல்லும் பெரும்பாதைகள் அதன் வழியாய்ச் செல்லுகின்றன. ஆபிரகாமுடன் தொடர்புபடுத்தப்படும் கிணறுகள் பல அங்கே உண்டெனினும், தண்ணீர் மிக அரிது. அனைத்துலக மாநாடு அரேபியருக்கு வழங்கிய இப் பகுதியையும் எபிரோனுக்கு நேராக 20 மைல் நிலப்பகுதி முழுவதையும் 1949 ஆம் ஆண்டில் இஸ்ரயேலர் எடுத்துக்கொண்டனர்.

பெயேர்செபாவிலிருந்து குன்றுகள் படிப்படியாய் உயரத்தொடங்கி எபிரோனைச் சேரும் போது 3,000 அடி வரையெழும்பி, அதன்பின் பெத்லகேமருகில் 2,550 அடியாக இறங்குகிறது. பெயேர்செபா வழிபாட்டிற்கு முக்கிய தளமாகப் பெயர் பெற்றிருந்தது. யூதா, சிமியோன் குலத்தினருக்குக் கொடுக்கப்பட்ட நகரங்களுள் இதுவும் ஒன்றாகும் (யோசு. 15:28; 19:2).

எபிரோன்: இந்நகரம் எருசலேமுக்கு வட மேற்கேயுள்ளது. முற்காலத்தில் கிரியத்து அர்பா எனப் பெயர் வழங்கினது (நீதித் 1:10). இங்கிருந்து இரு பாதைகள் புறப்பட்டு, ஒன்று கடற்கரை சமவெளிக்கும் இன்னொன்று 15 மைலுக்குள் 4,050 அடி கீழ் நோக்கியும் சென்று சவக் கடலோரத்தில் எருசலேமுக்கும்

செல்கின்றன. பெயர்செபாவினின்று எபிரோனுக்குப் போகும் பாதையின் மேற்குப் பாகத்தில் தெபீர் (Debir) அல்லது கிரியத்து சேபீர் என்னும் இடமுள்ளது. யூதாவும், காலேபும் துவக்க காலத்தில் இதைத் தாக்கினர்.

எபிரோன் சக்கரங்களில் வனையும் மண்பாண்டங்களுக்குப் பெயர்சிறந்தது. குலத் தந்தையின் கல்லறைகளைக் கொண்ட மக்பேலா என்னும் குகை இங்கேயுள்ளது. இது காலேபுக்கு வழங்கப்பட்டது (யோசு 15:54). இது ஒரு அடைக்கல நகர் (20:7); தாவீதின் முதல் தலைநகர் (2சாமு 2:1). ரெகபெயாம் அதின் அரண்களைப் பலப்படுத்தினான் (2 குறி 11:10). சிறையிருப்பிற்குப்பின் இங்கு மீண்டும் மக்கள் குடியேறினர் (நெகே 11:25). எபிரோனுக்கு வட கிழக்கே, பெத்லகேமுக்கு 6 மைல் தெற்கே தெக்கோவா ஊர் உள்ளது. இது கடல் மட்டத்திற்கு 2,780 அடி உயரமுள்ளது. இது ஆமோஸ் இறைவாக்கினரின் பிறப்பிடம்.

பெத்லகேம்: ஒரு நகரமாவதற்கான இயற்கையான வாய்ப்புகளில்லாத ஒரு சிற்றூர். தட்டையான ஒரு மேட்டு உச்சியில் இது அழகுற அமைந்துள்ளது. இரவில் மேய்ப்பர்கள் மந்தையைக் காக்கும் வயல்வெளி எதிரே தெரியும். அக்குன்றின்மேல் கட்டப்பட்டிருக்கும் பிறப்பின் தொழுகைகூட கோபுரத்தினின்று சவக் கடற்கரையிலுள்ள கும்ரானையும் (Qumran). அதிலுள்ள துறவிகள் மடத்தையும் பார்க்கலாம். அங்கு வாழ்ந்த துறவிகள் விட்டுப்போன இலக்கியச் செல்வங்கள் அங்குள்ள குகைகளினின்று கண்டெடுக்கப்பட்டன. பெத்லகேம் ரூத்தின் சொந்த ஊர் (ரூத் 1:19); தாவீதின் பிறப்பிடம் (1 சாமு 16:1). இதற்கண்மையில் ராகேல் இறந்து அடக்கம் பண்ணப்பட்டார் (தொட. 35:14). கிறிஸ்துபிரான் இங்கு பிறந்தார் (மத். 2:1).

எருசலேம்: இந்நகரம் பெத்லகேமுக்கு 6 மைல் வடக்கேயுள்ளது. பல போர்கள் நடந்த போர்க்களமும், சமாதான பிரபு கொல்லப்பட்டதுமான இடம் இது. சாலைக்கு மேற்கே இரப்பாயிம் பள்ளதாக்கிருக்கிறது. இங்கே பெலிஸ்தியர் தாவீதுக்கு எதிராய்ப்பாளையம் இறங்கினார்கள். இதனூடே கடற்கரையினின்று வரும் புகை வண்டிப் பாதை கடந்து செல்கிறது.

முந்தின எருசலேம் நகரும், ஆலய வளாகமும், முப்பக்கமும் மிக ஆழமான பள்ளத்தாக்குகளால் சூழப்பெற்ற ஒரு குன்றின் மேல் காட்சியளிக்கின்றன. இதற்குத் தெற்கே நகரத்தின் குப்பைக் கூளங்களைச் சுட்டெரிக்கும் இன்னோம் பள்ளத்தாக்கு உண்டு. பொல்லாதவர் அடையும் மறுமையின் வாழ்வை வடிக்கும் கெஹன்னா என்னும் பெயர் இதினின்று தோன்றியது. கிழக்குப் பக்கத்திலுள்ள கீதரோன் அல்லது யோசபாத்தின் பள்ளத்தாக்கினூடே ஒலிவ மலைக்கும், பெத்தானியாவுக்கும் பாதை ஒன்று செல்கின்றது. குன்றின் மேற்குச் சரிவில் நீரூற்றுகளைச் சூழ அழகிய சிற்றூர்கள் உள்ளன. அவற்றில் ஒன்றான அமின்காீம், முழுக்குநர் யோவானின் பிறப்பிடமாகும். நீண்ட காலமாய்க் கீழ்நாட்டுச் சபையைச் சேர்ந்த ருஷ்ய நாட்டுக் கிறிஸ்தவப் பெண் துறவியின் இருப்பிடம் இது.

எருசலேம் முற்காலத்தில் எபூசியருக்குரியதாயிருந்தது (யோசு. 15:18,63). தாவிது அதைக் கைப்பற்றித் தலைநகராக்கி உடன்படிக்கைப் பெட்டியை அங்குக் கொண்டு வந்தார் (2 சாமு 5:6,7, 6:12). சாலமோன் அதன் திருக்கோவிலைக் கட்டினார் (1 அர. 6 மு). சிறையிருப்பிற்குப் பின் மறுபடியும் கட்டப்பட்ட திருக்கோவிலை நான்காம் அந்தியோகஸ் அவமதித்து அசுத்தமாக்கினான். இயேசுபிரான் சிறுவனாக அங்கு அழைத்துச் செல்லப்பட்டார். எருசலேமில் அவர் இறந்து உயிர்த்தெழுந்து தூய ஆவியரை அனுப்பினார். எருசலேமிலிருந்து திருச்சபை பரவலாயிற்று (திருத் 8:1).

எருசலேமுக்கு வடக்கே 2,000-3,000 அடி உயரத்தில் சிற்றூர்கள் நிறைந்துள்ளன. ஆங்காங்கே பயிர் நிலங்கள் ஆட்டு, மாட்டு, மந்தைகள், பாறைப்போங்கான இடங்கள் ஆகியவற்றையுடைய மேட்டுச் சமவெளிதான் யூதேயாவின் மையம். யூதேயா, இஸ்ரயேல் நாடுகளுக்கிடையே எல்லையாக அமைந்த கோட்டைகளால் பாதுகாக்கப்பட்டிருந்த ஏராளமான சிற்றூர்கள் இங்கிருந்தன. பொதுப் பாதைக்குக் கிழக்கே அனதோத்து, கிபியா, இராமா, மிக்மாசு என்னும் ஊர்களும், மேற்கே மிஸ்பாவும், சாலமோன் அரச திருப்பொழிவு செலுத்திய கிபியோனும் உள்ளன (2 குறி 1:3).

எரிகோ: இந்நகரம் எருசலேமுக்கு வட கிழக்கில் உள்ளது. இது யூதேயாவின் மிகச் செழுமையான இடம் எனலாம் (இணை 34:3, நீதித் 1:16). கி.மு. 7000 ஆண்டுக்கு முன்னே இது ஒரு நகராய் இருந்தும் எதிரிகளின் தாக்குதலுக்கு எதிர்நிற்க மாட்டாதது. வடக்கேயிருந்து எதிரிகள் எளிதில் நுழையவும், தண்ணீர் வசதியைத் தடைபண்ணவும், ஏற்ற ஒரு பெருந்திறப்பு இந் நகரின் விழுதலுக்குக் காரணமாயிருந்தது. இஸ்ரயேலர் அதைக் கைப்பற்றி அழித்தனர் (யோசு 6). ஈயேல் அதை மீண்டும் கட்டினான் (1அர.16:34). இது இராகாபு வாழ்ந்த இடம் (யோசு. 2:1); எலியா, எலிசா ஆகியோர் தங்கிச் சென்ற இடம் (2 அர.4:4மு). பு.ஏ.இல் கூறப்பட்டிருக்கிற எரிகோ, ப.ஏ.இன் நகருக்குச் சற்று தெற்கில் இருந்தது. இங்கு இயேசுபிரான் பர்திமேயுவைச் சந்தித்தார்; சகேயுவுடன் உணவருந்தினார் (மார். 10:46, லூக். 19:1).

சமாரியா: மத்தியமலைநிலத் தொடரின் இரண்டாவது பகுதி சமாரியா. இது எப்ராயிம் எனவும், எப்ராயிம் மலைநாடு எனவும் அழைக்கப்படுகிறது (யோசு 17:15, 19:50). அய்யலோன் பள்ளத்தாக்கு அதன் தென் எல்லையும், எஸ்டிரேலோன் பள்ளத்தாக்கின் தென் ஓரம் அதன் வட எல்லையுமாகும். அது மேற்கே சாரோன் முதல் கிழக்கே யோர்தான் வரை எட்டுகிறது. தென் வடக்காய் இதன் நீளம் 40 மைலும், அகலம் 35 மைலுமாகும். இந்த மேட்டுப் பகுதி ஒரே குன்றுபோல் தோற்றமளித்தாலும், அது பல குன்றுகளின் ஒரு குவியலாக அமைந்துள்ளது. 3,000 அடி உயரமுள்ள இக்குன்றின் மேற்குச் சரிவு படிப்படியாக சாய்ந்து 18 மைல் சென்று சாரோனை அடைவதற்குள் 1,800 அடி குறைகிறது. ஆங்காங்கே உள்ள சில ஒலிவத் தோப்புகளைத் தவிர அந்த நிலப்பகுதி வெறும் தரிசு, பாறை நிலம்தான். மிகச் சில சிற்றூர்களே அங்குள்ளன. இம் மேட்டின் கீழ்ப் பக்கச் சரிவு செங்குத்தானது; 9 மைலுக்குள் 2,800 அடி வீழ்கிறது.

எப்ராயிம் மலைநாடு பல குன்றுகளால் ஆனதெனினும், அது தோத்தான், சீகேம் போன்ற பல சமவெளிகளையும், பள்ளத்தாக்குகளையும், புல்வெளிகளையும் கொண்டது. பெத்தேல், சீலோ, செக்கேம் என்னும் மூன்று தொன்மை

மிக்கத் துய தலங்கள் இங்குண்டு. யோசுவா படையெடுக்கப் பயன்படுத்தினதெனக் கருதப்படும் சாலை ஒன்று எரிகோவினின்று மிக்மாசு, ஆயி என்னும் நகரங்கள் வழியாய் பெத்தேலுக்குச் செல்லுகிறது. யூதேயாவைப் போன்று பாதுகாவல் இல்லாமல் சமாரியா திறந்திருந்தமையால் பகைவர் எளிதில் தப்பித்துகொள்ளக் கூடாமல் போயிற்று. தவிரவும் பிற சமயங்களின் செல்வாக்கும், வெளித் தொடர்புகளால் ஏற்பட்ட செல்வக் கொழிப்பும் அதற்கிருந்தது.

பெத்தேல்: இந்நகர் சமாரியாவின் தெற்கு எல்லையில் எருசலேமுக்கு வடக்கேயுள்ளது. பல முக்கிய பாதைகள் இங்கு சந்திக்கின்றன. இது பெண்யமின் குல நிலப்பகுதியின் எல்லையில் உள்ளது. இதன் இயற்பெயர் லூசு (தொட.28:29). ஆபிரகாம், யாக்கோபு என்போர் இங்கு வந்தனர் (18:8; 28:19). நாட்டு மக்களுக்கென ஒரு தொழுகைத்தலத்தை முதலாம் எரொபெயாம் (1அர 12:29) கட்டினான். யோசியா மன்னன் அத்தலத்தைத் தகர்த்துப் போட்டான் (2 அர 23:15).

சீலோ: பெத்தேலுக்கு 10 மைல் வடக்கே பெரும்பாதைக்குக் கிழக்கில் சீலோ இருக்கிறது. தங்கள் உரிமைச் சொத்தைப் பங்கிட்டுக் கொள்ள இஸ்ரயேலர் சபை இங்குக் கூடியது (யோசு 18:1.18; 19.51). இது நீதித்தலைவர்களின் காலத்தில் மார்க்கச் சம்பந்தமான முக்கியத்துவம் பெற்றிருந்தது (நீதி 18:31; 21:12). ஏலியின் பாதுகாப்பில் இங்கு வைக்கப்பட்டிருந்த உடன்படிக்கைப் பெட்டியை (1 சாமு 1:3; 3:2) பெலிஸ்தியர் கைப்பற்றவே ஏலி இங்கு மாண்டார் (4:18). 11ஆம் நூற்றாண்டில் சீலோ அழிக்கப்பட்டிருந்தும் எரேமியாவின் காலத்திலும் அது சமய முக்கியத்துவம் உடையதாயிருந்திருக்கிறது (எரே.4:1,5).

சீலோவை விட்டு வடக்கே போகப்போக திறந்த செழிப்பான குன்றுகள் உள்ளன. கிழக்கேயும், மேற்கேயும் செல்லும் காட்டாறுகள் ஆழம் குறைந்தனவாகையால் வளம் பொருந்திய சமவெளிகள் பரவலாய் உள்ளன. வடக்கே செல்லும் சாலை அடுத்த 10 மைல் தூரத்திற்குத் திடீரென கீழே இறங்கி பலாத்தா (Balata) அல்லது முற்கால செக்கேமை அடைகிறது. செக்கேம், ஏபால் (3,077 அடி.), கெரிசீம் (2,850 அடி.) மலைகளுக்கிடையிலுள்ள ஒடுங்கிய கணவாயும், கிழக்கு ஓரத்திலுள்ளது. எல்லாத்திசைகளினின்றும் வரும் பாதைகள் அங்குச் சந்திக்கின்றன.

எகிப்தின் 18ஆவது அரசு மரபினர் ஹிக்ஸாஸ் என்பவர்களைத் துரத்தியது முதல் செக்கேம் எகிப்தியர் வசமானது. இது மனாசேயின் மக்களுக்களிக்கப்பட்டது (யோசு. 17:2). இலேவியருக்கும் உரியது (21:21); அடைக்கல நகரும் ஆகும் (20,7). யோசுவாவும் மக்களும் இங்கே கூடி உடன்படிக்கை செய்தனர் (24). ரெகபெயாம் தன் அரச பதவியை இங்கே உறுதி செய்தான் (1 அர. 12:1,25). நாடு இரண்டாகப் பிளவுபட்டதும் இங்கேதான். சமாரியர் தங்கள் வருடாந்திர பாஸ்காவை இங்குள்ள கெரிசீம் மலையில் ஆசரித்தனர்.

உம்ரி மன்னன் வட நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிய போது தன் தலைநகரைச் சமாரிய நாட்டின் வட மேற்குப் பகுதியிலிருக்கும் சமாரியா என்னும் நகரில் அமைத்தான் (16:24). எருசலேமைப் போலவே இவ்விடமும் மூன்று பக்கங்கள் குன்றுகளால் பாதுகாக்கப்பட்டிருந்தன. ஆகையால் ஆசீரியர்கூட அதைக் கீழ்ப்படுத்த மூன்று ஆண்டுகள் தேவைப்பட்டன (2 அர. 17:5).

ஆகாபு பாகாலுக்கென ஒரு கோவிலை இங்குக் கட்டினான் (1 அர. 16:32). ஏகூ அதை அழித்தார் (2 அர. 10:27). அசீரியர் அதைக் கைப்பற்றியபின் வேற்றின மக்கள் அங்குக் குடியேற்றப்பட்டனர் (17:24). வட நாட்டுக்குத் தலைநகராய் இருந்த சமாரியா சிறையிருப்பிற்குப்பின் பாரசீக மாகாணத்தின் அரசாங்கத் தலைமைப் பீடமாயிற்று. யோவான் ஹிர்க்கானஸ் இதை அழித்தபின் பெரிய ஏரோது இதை மீண்டும் கட்டினான். பிலிப்பு இங்கு நற்செய்தியைக் கூறியிருக்கலாம் (திருத். 8:5). இங்கிருந்து சாலைகள் கடற்கரைக்கும், வளைந்து நெளிந்து குன்றின் சரிவு வழியாய்த் தோத்தான் சமவெளிக்கும், யாப்போக்குப் பள்ளத்தாக்கின் எதிர்ப்புறமாயுள்ள யோர்தான் கடவுத் துறைக்கும் செல்கின்றன.

சமாரியாவின் சமவெளிகள் யூதேயாவிலுள்ளவைகளை விட விரிவானவை; வளமானவை. படைகளுக்கும் வணிகர்களுக்கும் திறந்திருந்தது போலவே எகிப்து, மெசப்பொத்தேமியா நாடுகளின் பண்பாடுகளும் சமயக் கருத்துக்களும் எளிதில் ஊடுருவின. தென்னாட்டைவிட இந்நாடு வடக்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் இருந்த வேற்றினத்தவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. எனவே ரெகபெயாமுக்கு எதிராக சமாரிய நாட்டார் செய்த புரட்சி, குலத்திலும், புவியலிலும், சூழ்நிலையிலும், மொழியிலும், தென்னாட்டிடமிருந்து வேறுபட்ட ஒரு மக்களினம் தாவீது, சாலமோன் என்பவர்களுடைய 80 ஆண்டு இராணுவ ஆதிக்கத்தை எதிர்த்துச் செய்த ஓர் போராட்டம் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

என்கன்னீம்: இந்நகர் தோத்தானின் வடகிழக்கு ஓரத்தில் உள்ளது. இங்கே தோத்தான் பள்ளத்தாக்கு சிறு குன்றுகள் மூலம் எஸ்டிரேலோன் பள்ளத்தாக்கோடு சேர்கிறது. இந்நகர் இசக்கார் குலத்தின் தெற்கு எல்லை ஆகும் (யோசு. 21:29). இது இலேவிய நகர்களில் ஒன்றெனவும் (29:21) அறிகிறோம். இது சமாரியாவுக்கும் கலிலேயாவுக்கும் நடுவிலுள்ள எல்லையாகவும் இருக்கிறது.

சீகார்: இச் சிற்றூர் செக்கேமுக்கு அருகில் உள்ளது. அது இருந்த இடம் திட்டமாய்த் தெரியாவிடினும் இங்கே யாக்கோபின் கிணறு இருந்ததாகவும், அதினண்டை இயேசுபிரான் சமாரியப் பெண்ணைச் சந்தித்ததாகவும் பார்க்கிறோம் (யோ. 4:5).

இஸ்ரியேல்: இந் நகர் என்கன்னீமுக்கு 7 மைல் வடக்கில் உள்ளது. கடற்கரையினின்று யோர்தானுக்கும், எகிப்தினின்று தமஸ்குவிற்கும் செல்லும் நெடுஞ்சாலைகள் இங்குச் சந்தித்தன. இந் நகரின் பெயர் அந்தப் பள்ளத்தாக்குக்கும் வழங்கப்பட்டது (2 சாமு. 2:9). இது இசக்கார் குலத்திற்குரியது (யோசு. 19:18). சாலமோனது பேராட்சியின் ஐந்தாம் மாவட்டத்தில் அமைந்தது (1 அர. 4: 12). இஸ்ரியேலில் ஆகாபின் அரண்மனையை அடுத்து நாபோத்தின் திராட்சைத் தோட்டம் இருந்தது (21:1).

மெசித்தோ: இஸ்ரியேலுக்கு வட மேற்கில் இந்நகர்

கி.மு.4000 ஆண்டை அடுத்துக் கட்டப்பட்டது. இது மனாசே குலத்திற்கு வழங்கப்பட்டதெனினும், இசக்கார் குலத்தின் எல்லைக்குள் அமைந்துள்ளது (யோசு. 17:11). சிசெரா இங்குத் தோற்கடிக்கப்பட்டான் (நீதித். 5:19). யோசியா மன்னர் இங்கு மாண்டார் (2 அர. 23:29).

கர்மேல்: எஸ்டிரேலோன் பள்ளத்தாக்கின் மேற்குப் பகுதியில் உள்ள இந்த மலை ஆசேர் குலத்தின் எல்லைக்குள் இருந்தது (யோசு. 19:26). இது சமய முக்கியத்துவம். வாய்ந்தது. இங்கு எலியா இறைவாக்கினார் பாகால் வணக்கத்தின் மேல் வெற்றி பெற்றார் (1 அர. 18). இது எழிலுக்கும் பூம்பொழிலுக்கும் பேர்பெற்ற இடம் (எசா. 35:2; ஆமோஸ் 1:2).

கலிலேயா: இது மத்திய மலைநிலத்தொடரின் மூன்றாவது பகுதியாகும். கலிலேயா என்றால் வளையம் எனப்பொருள்படும். தெற்கே எஸ்டிரேலோனும், வடக்கே லித்தனி ஆறும், மேற்கே பெனிக்கேயா கரையோரமும், கிழக்கே யோர்தானும், கெனசரேத்து கடலும் இதன் சுற்றெல்லைகள் எனலாம். இதில் பெனிக்கேயா கடற்கரைப் பகுதி இசக்கார், செபுலோன், ஆசேர், நப்தலி எனும் குலங்களுக்குக் கொடுக்கப்பட்டது. தென்வடக்காய் இதன் நீளம் 50 மைலும், அகலம் 25 முதல் 30 மைலுமாகும். ஆக, கலிலேயாவின் பரப்பளவு 1,600 சதுர மைல். எஸ்டிரேலோனுக்கு வடக்கேயுள்ள இந்நிலப்பகுதியை தென்கலிலேயா, வடகலிலேயா எனும் இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். தென் கலிலேயா 1,850 அடி வரை உயரமுள்ள இணைவான பல மலைத்தொடர்களையும், அவைகளுக்கிடையில் அமைந்த பள்ளத்தாக்குகளையும் கொண்டது. வட கலிலேயா பல பீடபூமிகளால் ஆனது. இப்பீடபூமிகளைச் சூழ, 2,000-4,000 அடி உயரமான குன்றுகள் உள்ளன.

மத்திய மலைத்தொடரின் இப் பகுதியின் மேற்குக் கரை தோத்தான் கணவாயைக் கடந்து 1,800 அடி மேல் எழும்பி கர்மேலை அடைகிறது. கிழக்கு எல்லை யோர்தானினின்று வரும்இரண்டு பள்ளத்தாக்குகளால் துண்டிக்கப்படுகிறது.

கலிலேயாவுக்கும் சமாரியாவுக்கும் நடுவிலுள்ள இஸ்ரியேல் பள்ளத்தாக்கின் வடக்கே இம் மலைநிலம் ஊனேம், நாயீன் என்னும் ஊர்களுக்கிடையே 1,700 அடி எழும்புகிறது. ஆனால் எந்தோரில் இவ்வுயரம் தணிகின்றது. கலிலேயாவைக் குறுக்கிட்டுச் செல்லும் ஒரு பள்ளத்தாக்கு எந்தோரில் துவங்கி யோர்தான் வரை செல்கிறது. எந்தோரின் வடமேற்குக் கோடி இன்னமும் 1,850 அடி உயரத்திலுள்ளது. தாபோர் மலை காட்டுப்பாங்கான அதன் சரிவுகளினின்று தெபோராவின் படை கீசோன் சதுப்பு நிலங்களில் சிக்கித் தவித்த சிசெராவின் தேர்களைத் தாக்கின. கலிலேயாவைக் குறுக்கிட்டுச் செல்லும் இன்னொரு பள்ளத்தாக்கு இன்னும் ஐந்து மைலுக்கு வடக்கே அதாமாவினின்று (Adamah) கலிலேயாக் கடலின் தெற்கு முனைக்குச் செல்கிறது. கடல் மட்டத்திற்கு 200 அடி உயரத்தில் இருக்கும் இச் சமவெளி முக்கோண வடிவமானது. 20 மைல் அகலமான அதின் அடித்தளம் கர்மேல மலைத்தொடரின் அடிவாரத்தையொட்டித் தொடங்கி வட கிழக்காய்ச் செல்கிறது. 15 மைல் வீதம் நீளம் உள்ள அதன் மற்ற இரு பக்கங்களில் ஒன்று 1,000 அடி செங்குத்தாய் அமைந்த நாசரேத்து குன்றுகளின் அடிவாரத்தை அடைகிறது; இன்னொன்று கீழ்ப்பக்கமாகச் செல்கிறது. பாலஸ்தீனாவின் மிக வளப்பமான பகுதிகளில் சில இங்கே உள்ளன. இது இந்நாட்டின் முக்கிய போர்க்களமாகவும் இருந்தது.

சமாரியாவினின்று வடக்குமுகமாய்ப் பார்க்கும்போது, படிப்படியாய் எழும்பிப் படியடுக்கைப் போன்று காட்சியளிக்கும் கலிலேயா வட ஓரத்தில் லெபனோனுக்கருகில் 4,000 அடி உயரமுள்ளது. பொதுவாக அது மிதமான தட்ப வெப்ப நிலையுடையது. திபேரியாக் கடலருகே சில இடங்களில் கந்தக நீரூற்றுகள் இருந்திருந்தன. உலக முக்கியத்துவம் வாய்ந்த பல பெருஞ் சாலைகளும் கலிலேயாவைக் கடந்து சென்றன. ஆண்டவர் சொல்லிய பல உவமைகளில் இச் சாலைகள் குறிக்கப்படுகின்றன. சமாரியாவினின்று வடக்கே செல்லும் பெரும்பாதை குன்றுகளினூடே வளைந்து நெளிந்து நாசரேத்தினூடே கானா சென்று, அங்கிருந்து கிழக்கே திரும்பி மகதலா, கப்பர்நகூம் என்னும் இடங்களைத் தாண்டி, சிரியா நோக்கிச் செல்கிறது.

கலிலேயா பிற இனத்தாரின் கலிலேயா என்று அழைக்கப்பட்டது (எசா. 9:1; மத். 4:14). ஏனெனில், கி.மு.எட்டாம் நூற்றாண்டில் அசீரியா இஸ்ரயேலரை வெளியேற்றிவிட்டு, வேற்றுநாட்டாரை இங்குக் குடியேற்றினர். ஏராளமான உரோமர்கள் திபேரியாவின் குளிர்கால வீடுகளிலும், கலிலேயாக் கடலோரத்திலும் வந்து தங்கினர். பு.ஏ. காலத்தில் நாசரேத்தும், கப்பர்நகூமும், மக்கள் நெருக்கமான நகர்களாய் இருந்தன. மக்கள் பொதுவாகச் சண்டை செய்யும் குணம் படைத்தவர்கள். செலோத்தேயரில் பெரும்பான்மையான போர் வெறியரும் அங்கிருந்து வந்தனர் (லூ. 9:54; நீதித். 5:18).

நாசரேத்து: இந்த ஊர் தென் கலிலேயாவில் எஸ்டிரலோனை ஒட்டி அதன் வட பக்கடாய்த் தாபோர் மலைக்கு மேற்கே உள்ளது. இது குன்றுகளால் சூழப்பெற்று, அதன் நடுவே ஒரு கிண்ணம்போல் அமைந்துள்ளது (லூக். 4:29). இக் குன்றுகள் விவிலியத்தில் சொல்லப்படும் பல நிகழ்ச்சிகளோடு தொடர்பு உடையவை. யோர்தானுக்கு அப்பால் ஆரானிலிருந்து தானியம் சுமந்துவரும் ஒட்டகங்கள் நாசரேத்துப் பக்கமாய்க் கடந்து சென்றன. வனப்பாய் அமைந்திருந்த இக் குன்றுகளின் சரிவுகள் ஆடுகளின் மேய்ச்சலிடங்களாய் இருந்தன. சாலமோன் தன் சகல மேன்மைகளிலும் அழகுபடுத்திக் கொள்ளக்கூடாவண்ணம் வனப்பானவை (மத். 6:29). அக் குன்றுகள் அவைகளுக்கிடையே அமைந்த நகர்களைப் பிரித்ததுமன்றி, ஒன்றையொன்று காணாவண்ணம் மறைக்கவும் செய்தன என்பது ஒரு சிறப்புக் குறிப்பாகும். ஆண்டவர் நாசரேத்தினின்று துரத்தப்பட்டபோது அதற்கருகாமையிலிருந்த தொடர்பற்ற கானா போன்ற வேறிடங்களுக்குத் தப்பிச் செல்வது இலகுவாயிருந்தது. ஆண்டவர் அங்கு தொழுகைமன்றத்தில் நற்செய்தியைக் கூறினார். ஆனால் அவ்வூர் மக்கள் அவரைக் கொல்ல வழி தேடினர் (லூக். 4:16).

கானா: கானா என்று அழைக்கப்பட்டப் பல இடங்கள் உள்ளதால் (யோசு. 16:8; 19:28). பு.ஏ.இல் கலிலேயாவிலுள்ள காஸா என்ற இடம் வேறுபடுத்திக்

காட்டப்பட்டது (யோ. 2:1; 21:2). இது நாசரேத்துக்கு 9 மைல் வடக்கே உள்ளது. பன்னிரு சீடர்களில் ஒருவரான நாத்தானுவேலின் ஊர் இது (21:2). இங்குக் கலியாண வீட்டில் ஆண்டவர் தமது முதலாம் அமையாளச் செயலைச் செய்தார் (2:1-11).

மகதலா: மகதலா என்றால் கோபுரம் அல்லது அரண் எனப் பொருள்படும். இந்த ஊர் திபேரியாவுக்கு மூன்று மைல் வடமேற்கில் திபேரியாக் கடற்கரையில் உள்ளது. அர்பேலா என்னும் மலைச் சந்து அதன் பிற்பகுதியில் உள்ளது. இதுவே ஏரோது செலோத்தேயரைக் கொலை செய்த இடம். எருசலேம் திருக்கோவில் விற்பனைக்கான புறாக்கள் ஏராளம் இங்கிருந்து சென்றன. இது மகதலேனா மரியாளின் சொந்த ஊர் (மத். 15:39). இயேசு இங்குச் சென்றார். சில கட்டங்களில் இது தல்மனூத்தா என்றும் அழைக்கப்படுகிறது (மார். 8:10).

திபேரியா: கலிலேயாவின் தலைநகராக ஏரோது அந்திப்பா கட்டின இந் நகர் திபேரியு என்னும் உரோமை இராயனின் நினைவாக எழுப்பப்பட்டது. இது மகதலாவுக்குத் தென் பக்கம் கடற்கரையோரத்திலுள்ளது. கடல் மட்டத்தினின்று 700 அடி கீழேயுள்ள இந் நகர் சிறு மலைகளால சூழப்பட்டது. மேற்கத்திய காற்று தடைபடுத்தப்படுவது மட்டுமன்று அங்குள்ள கந்தக நீரூற்றுகளாலும் இது பாதிக்கப்படுகிறது. பெத்சாயிதா, கப்பர்நகூம் போன்ற நகர்கள் அழிந்தபோதிலும் இந் நகர் அழிக்கப்படாமலிருக்கிறது.

கப்பர்நகூம்: கலிலேயாக் கடலின் வட மேற்குக் கரையில் அமைந்த இந் நகர் ஆண்டவரின் வாழ்க்கையோடு மிக நெருங்கியத் தொடர்புடையது (மத். 4:13; மார். 2:1; யோ. 2:12). பேதுரு, அந்திரேயா என்பவர்களின் ஊர் இது (மத். 8:14; மார். 1:19). ஆண்டவர் அருஞ்செயல்கள் செய்த பெயர்பெற்ற ஒரு தொழுமன்றம் இங்கு உண்டு (1:21-28; 2:1-12; மத். 8:5-13; யோ. 4:46).


கோராசீன்: கலிலேயாக் கடலின் வட் மேற்கில் உள்ள இந் நகர் கப்பர்நகூமுக்கு இரண்டு மைல் வடக்கே ஒருவகையான எரிமலைப் பாறைமேல் கட்டப்பட்டிருந்தது; கோதுமைக்குப் பெயர்பெற்ற இடமென்று அறியப்பட்டிருந்தது. ஏட்டில் பொறிக்கப்படாத, இயேசுவின் பல அருஞ் செயல்கள் இங்கு நடைபெற்றன (மத். 11:21; லூக். 10:13). எனினும் நம்பிக்கையின்மை காரணத்தால் பெத்சாயிதாவோடு இதுவும் ஆண்டவரின் கண்டனத்திற்குள்ளானது.

வட கலிலேயா: லெபனானின் தாழ்வாரத்திலுள்ள இப் பகுதி தென் கலிலேயாவை விட உயரமுள்ளது; சில இடங்களில் 4,000 அடி எழும்பி நிற்கிறது. இந்த உயரமான மேட்டு நிலம், நீர்வளம் பொருந்தியது; வெதுவெதுப்பான தட்ப வெப்ப நிலையுடையது. சிற்றூர்கள் பரவலாக இருந்தன. அதன் பல செங்குத்தான உச்சிகள், அதைப் பெனிக்கேயரிடமிருந்து தற்காத்தது. லித்தனி என்னும் ஆறு அதன் வட எல்லையாக இருந்தது. இது நப்தலி குலத்திற்கு வழங்கப்பட்டது. செபுலோன் நப்தலி குலங்கள் தங்களைப் பாதுகாக்க எளிதான பகுதியில் வாழ்ந்தனர். நப்தலி குல மக்கள் கானானியரைத் துரத்திவிடாமல் அவர்கள் நடுவிலேயே குடியிருந்தனர். தென் குலத்தாரினின்று எஸ்டிரலோன் பள்ளத்தாக்கின் மூலம் துண்டுப்படுத்தப்பட்டிருந்த இவர்கள் செழுமையாய் வாழ்ந்து, தங்கள் சொந்த வழியே சென்றனர். முதல் முதலாய்ச் சிறைபிடிக்கப்பட்டுப் போனவர்கள் இக் குலத்தினரே (2 அர. 15:29).

காத்சோர்: கலிலேயாக் கடலுக்கு 9 மைல் வடக்கே, மேரோம் ஏரிக்கு 5 மைல் மேற்கே பழங்கால நகரான காத்சோரின் அழிந்த நிலையைப் பார்க்கலாம். அதின் 170 ஏக்கர் பரப்புடைய ஒரு மேட்டுப்பகுதி குறிப்பிடத்தக்கது. அதன் மேற்குப் பகுதி உறுதியான மண் சுவராலும், மற்ற மூன்று பக்கங்களும் இடுங்கிய கணவாய்களாலும் பாதுகாவலுடையன. 30,000 குதிரைவீரர்களையும் தேர்களையும் உள்ளடக்கத்தக்க இந்த அரண் ஹிக்சாஸ் மரபின் ஆட்சிக்குச் சின்னமாய் விளங்குகிறது. காத்சோர் கானானிய நகர். அதன் மன்னனான யாபீன் பல அரசர்களைச் சேர்த்துக்கொண்டு, இவ்விடத்தில் யோசுவாவை எதிர்த்துத் தோல்வியுற்றான் (யோசு. 2:1-15; 12:19) ஒரு நூற்றாண்டுக்குப்பின் இன்னொரு மன்னனோடு யாபீன் மரபின் தெபோராள், பாராக்கு என்பார் சண்டை செய்தனர் (நீதித். 4:5). ஹ்யூலே சமவெளியின் பாதுகாவலுக்கென சாலமோன் காத்சோரைத் திரும்பவும் கட்டினார். இது பின்னால் அழிக்கப்பட்டுப் போயிற்று.

கெதேசு: இது இன்னொரு கானானிய நகர். இப் பெயருள்ள பல இடங்கள் உள்ளன (யோசு. 21:28; 15:23). எனவே, இது, கலிலேயாவிலுள்ள கெதேசு என அறியப்படுகிறது. யோசுவா அதின் தன்னனை வென்றார் (11:22). இது நப்தலி குலத்திற்கு வழங்கப்பட்டது (19:37). இது லேவியருக்கு ஒதுக்கப்பட்டதுமாகும் (21:32); அடைக்கல நகராகவும் இருந்தது (20:7). பாராக்கின் சொந்த ஊர் இது (நீதித்.4:6). சிசெராவை எதிர்த்துத் தெபோராவும் பாராக்கும் தங்கள் படையை இங்குத் திரட்டினர் (4:1-10).

லெபனோன்: மத்திய மலை நிலத்தொடரின் வட கடைசி லெபனோன் ஆகும். லெபனோன் மலைகள் ஏறக்குறை 100 மைல் நீளமும் 7,000 அடி உயரமும் உடையவை. உயர்ந்த பல உச்சிகள் அதில் உண்டு. அவற்றில் மிகவும் உயரமான உச்சி 11,024 அடியாகும். லெபனோன் என்றால் வெண்மையான என்பது பொருள். ஏனெனில் அதன் அடிவாரம் கோடைபோன்று வெப்பமுடையதெனினும் ஆண்டின் பெரும்பகுதியும் அதன் உச்சிகள் பனிமூடி வெண்மையாயிருக்கும். லெபனோனின் கடற்கரையோரச் சரிவிலன்றி ஆள்கள் வசிப்பதில்லை. லெபனோன் மலைகளுக்கிடையே பள்ளத்தாக்குகள் உண்டு. விவசாயத்திற்கு ஏற்ற மண்போக்குள்ளதால் திராட்சைப் பயிர் செய்யப்படுகிறது. லெபனோனின் கேதுருக்கள் உலகப் பெயர் பெற்றவை (1 அர. 4:33). எருசலேம் திருக் கோவிலுக்கும், சாலமோனின் அரண்மனைக்குமான கேதுருக்கள் அங்கிருந்து தருவிக்கப்பட்டன (1 அர. 5:6மு.). அங்கே மேய்ச்சல் வெளிகளும் பரவலாக உண்டு. லெபனோன் பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படும் சிறந்த பள்ளத்தாக்கு லெபனோன், எதிர் லெபனோன் என்னும் மலைத் தொடர்களுக்கு இடையில் உள்ளது. லித்தனி ஆறு இங்குத் தோன்றி தெற்கு முகமாய்ச் செல்கிறது. அதன்


திருநாட்டின்
முக்கிய நகர்கள்
தான்
ஆசேர்
நப்தலி
பாசான்
சேபுலோன்
இசக்கார்
யாபேசு கிலயாத்து
மனாசே
மனாசே
எப்ரயிம்
சீலோ
காத்
அம்மோன்
பெத்தேல்
பென்யமின்
தான்
எரிகோ
எருசலேம்
கில்கால்
பெத்லகேம்
அஸ்தோத்து
எக்ரோன்
ரூபன்
அஸ்கலோன்
பெலிஸ்தியா
காத்து
அர்னோன்
காசா
யூதா
மோவாபு
ஏதோம்
கெபெயொத்சேபா

பள்ளத்தாக்கு 6-10 மைல் அகலமுடையது. ஒறான்டேஸ் என்னும் ஆறு வட திசையில் பாய்கிறது. எர்மோன் மலை சிரியாவின் மிக உயரமான மலை உச்சி. இது எதிர் லெபனோன் தொடரின் தென் ஓரத்தை ஒட்டியுள்ளது. இதற்கு சிரியோன் எனவும் பெயர் உண்டு (இணை. 3:9; திருப். 29:6). செனீர் என்பதும் அதன் இன்னொரு பெயர் (எசே. 27:5). இணை. 3:9; க.க. 4:8). உறைபனி நிறைந்த இதன் உச்சி வெகு தூரத்திலிருந்தே தெரியும். எர்மோனின் தென் பகுதி 9,100 அடி உயரமுடையது.

(இ) யோர்தான் பள்ளத்தாக்கு

லெபனோன் தொடங்கி அக்காபாகுடாக்கடல் வரை ஓடும் இப் பள்ளத்தாக்கு 350 மைல் நீளமுடையது. இதனுள் அமையும் மூன்று ஏரிகளை வைத்து இதை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். 9,100 அடி உயரமான எர்மோன் மலை அடிவாரத்தில் எழும்பும் பல நீரூற்றுகளே யோர்தான் ஆற்றின் தொடக்கம் ஆகும். லெபனோனுக்கும் எதிர்லெபனோனுக்கும் நடுவிலுள்ள பள்ளத்தாக்கு எர்மோன் அடிவாரத்தில் கிழக்கே திரும்புவதால் அம்மலையினின்று புறப்படும் வெள்ளம் இந்த ஆற்றுக்குள் சேர்கிறது. பாலஸ்தீனாவின் ஆறுகளிலெல்லாம் மிகவும் நீளமான இவ் ஆறு தோற்றுவாயினின்று சவக்கடல் மட்டும் (இரு ஏரிகளின் நீளத்துடன்) 97 மைல் நீளம் கொண்டது. லெபனோனுக்கு அருகே இது கடல மட்டத்தினின்று 1,700 அடி உயரத்திலிருந்து பாய்கிறது. யோர்தான் கலிலேயாவிற்குத் தெற்கே 90-100 அடி அகலமுடையது. வசந்த காலத்தில் அதன் ஆழம் 3-10 அடி மட்டுமே. கால்நடையாய்க் கடக்கத்தக்க கடவுத் துறைகள் அதில் அறுபதுக்குக் குறையாமல் உண்டு. தாண் அல்லது லாகீசினின்றும் செசரியா பிலிப்பியினின்றும் எழும்பும் இரு சிற்றாறுகள் யோர்தான் மேரோம் ஏரியில் சேரும் நுழைவாய்க்கருகில் அதோடு சேருகின்றன. யோர்தானின் தோற்றுவாயினின்று மேரோம் ஏரிமட்டும் அது ஏழு மைல் நீளமுடையது. இந் நிலப்பகுதி வெதுவெதுப்பான தட்பவெப்ப நிலையைக் கொண்டது. நிலப் பரப்பையொட்டியே தண்ணீர் பாய்ந்து செல்வதால் அது சதுப்புநிலப் பகுதியாயுள்ளது. கோரை போன்ற புற்களும். குறிப்பாய் நாணற் புல்லுமே இங்கு ஏராளம். நாணற் புல்லும் நாணற் சுருளும் இங்கிருந்து வெளியிடங்களுக்கனுப்பப்பட்டன. ஹியூலே ஏரி கடல் மட்டத்தினின்று 230 அடி உயரத்திலுள்ளது. முக்கோண வடிவமான இந் நீர்த்தேக்கம் வடக்கே அதிக அகலமுடையது. இதன் நீளம் 3 மைலும். மிக அதிக அகலம் 2 மைலும் ஆகும். இது 9 முதல் 16 அடி வரை ஆழமுள்ளது. யோர்தான் பள்ளத்தாக்கின் இந்த ஏரி வரையுள்ள பகுதியில் வடக்கிலிருந்து வரக்கூடிய இரு நுழைவாயில்கள் தானும். பிலிப்பி செசரியாவுமே. எனவே. வரலாற்றில் அவை முக்கியமான இடம் பெற்றுள்ளன.

தாண்: பாலஸ்தீனாவின் வட எல்லையாய் இது அமைந்துள்ளது. எர்மோன் மலையின் தெற்குச் சரிவில் உள்ள இந்நிலப் பகுதியினின்று தோன்றும் ஒரு சிற்றாறு யோர்தானுக்கு வளமூட்டுகிறது. இது தீருவையும் தமஸ்குவையும் இணைக்கும் முக்கிய பெரும் பாதையின் காவல்வாயில் போன்றுள்ளது. இந் நிலப்பகுதியின் குன்றுப் பகுதி ஏறத்தாழ 1,500 அடி நீளமுடையது. அதன் கீழ்ப் பகுதி மேற்பகுதியைவிட உயரமுடையது. கி.மு.3,000 முதலே அங்கு மக்கள் குடி வாழ்ந்தனர். கானானியரின் காலத்தில் இது லாயிஷ் என அழைக்கப்பட்டது (நீதித். 18:7,14). தாண் குலத்தினர் அதைக் கைப்பற்றி மீண்டும் கட்டியபோது அதற்குத் தாண் என்று மறுபடியும் பெயரிட்டனர் (18:29). முதலாம் எரொபெவாம் அரசின் ஆதரவு பெற்ற ஒரு தொழுகைத் தலத்தை இங்கு அமைத்து ஒரு பொன் கன்றுக்குட்டியைச் செய்து வைத்தான் (1 அர. 12:29). ஆமோஸ் அதைக் கண்டித்தார் (8:14).

செசரியா பிலிப்பி: இந்நகர் யோர்தான் பள்ளத்தாக்கின் வட கடைசியில் கடல் மட்டத்தினின்று 1,150 அடி உயரத்தில் உள்ளது. யோர்தானைச் சேரும் ஒரு சிற்றாறு இங்கு உற்பத்தியாகிறது. மிகப் பழமை வாய்ந்த ஒரு தொழுகைத் தலம் இங்கே உண்டு. காற்பங்கு ஆளுநராகிய பிலிப்பு இதனைக் கட்டிவைத்தார். பேதுரு பற்றுறுதி அறிக்கை செய்த இடம் இதுவே (மத். 16:13). மேரோம் ஏரியின் தென் பக்கத்தில் அருவியரித்த இடுங்கிய மலைச் சந்துக்குள் யோர்தான் நுழைகிறது. பின் அது பண்படுத்தக் கூடிய சமவெளியையும், சதுப்பு நிலங்களையும் கடந்து மத்திய தரைக்கடல் மட்டத்திற்கு 696 அடிக்குக் கீழே கலிலேயாக் கடலை அடைகிறது. இவ்விரு ஏரிகளுக்கிடையே யோர்தானின் நீளம் 10 மைல் ஆகும்.

கலிலேயாக் கடல்: பல பெயர்களால் இது அழைக்கப்படுகிறது. கி.மு. 5ஆம் நூற்றாண்டு முதல் இது கின்னரேத்து என அறியப்பட்டது. அதன் கரையில் முன் காலத்திலிருந்த கின்னரேத்து என்னும் நகரினின்று இப்பெயர் வந்தது (யோசு. 11:2; 19:35). பு.ஏ. இன் காலத்தில் இது கெனசரேத்து என அழைக்கப்பட்டது (லூக். 5:1). அந்திப்பா மன்னன் கட்டிய திபேரியா என்னும் பெயரின் அடிப்படையில் இரண்டாம் நூற்றாண்டில் இது திபேரியாக் கடல் எனப் பெயர்பெற்றது (யோ. 6:1, 21:1). ஆனால் பெரும்பாலும் இது கலிலேயாக் கடல் என்று அறியப்படுகிறது.

கலிலேயாக் கடல் 13 மைல் நீளமும், அதிக அகலம் கொண்ட இடத்தில் 8 மைல் அகலமுமுடையது. முற் காலத்தில் எர்மோன் முதல் சவக்கடல் வரையிலும் இது ஒரே கடலாய் இருந்ததென நம்பப்படுகிறது. குன்றுகள் அதைச் சூழ இருக்கின்றன. கிழக்குக் கரையிலுள்ள குன்றுகள் 200 அடி உயரமாய்ச் செங்குத்தாய் இருக்கின்றன. தரைமட்டமே கடல் மட்டத்திற்கு ஏறத்தாழ 700 அடி கீழிருப்பதால் கடல் ஒரு குண்டாபோல் காட்சியளிக்கிறது.

கலிலேயாக் கடலின் தென் மேற்குக் கரையில் மத்திய மலை நிலத்தொடரோடு சேர்ந்து 3 மைல் நீளமும் 2 மைல் அகலமும் உள்ள கெனசரேத்து சமவெளி உள்ளது. இதனூடே பல சிற்றாறுகள் பாய்ந்து கலிலேயாக் கடலில் விழுகின்றன. மேரோம் ஏரி என அழைக்கப்படுவது இவற்றுள் முக்கியமானது (யோசு. 11:5). ஹியூலே என்பதும் இதுவே. கலிலேயாக் கடலின் அடித்தளத்தின் தென் பகுதியில் பல கந்தக நீரூற்றுகள் உள்ளன. சிலவேளை அவை சுரந்து தண்ணீரைச் சூடாக்குவதோடு நீரோட்டங்களைத் தோற்றுவிப்பதும் உண்டு.

கலிலேயாக் கடற்கரைப் பகுதி விரும்பக்கூடிய தட்ப வெப்பமுடையதாகையால் உரோமர் ஆட்சிபுரிந்த காலத்தில்

அது குளிர்கால வசிப்பிடம் ஆயிற்று. மீன் பிடிப்புத் தொழில் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தமையால் யூதரில் பலர் அங்கு வசித்தனர். எனவே ஆண்டவர் சொன்ன பல கதைகளும் உவமைகளும் அங்குச் சொல்லப்பட்டன. ஆண்டவரின் திருப்பணியில் புகழடைந்த நகர்கள் தற்போது மறைந்து போயிருக்கின்றன வெனினும் அவர் சுட்டிய இயற்கை வனப்புகள் இன்னமும் காணக்கிடக்கின்றன. வெப்ப மண்டல அண்மையிடத்துக்கேற்ற (sub - tropical) தாவரங்கள் கடலைச் சூழ உள்ள செழிப்பான நிலங்களில் வளருகின்றன.

பெத்சாயிதா: இது கலிலேயாக் கடலின் வட கிழக்குக் கரையில் உள்ளது. இது ஒரு மீன் பிடிப்புச் சிற்றூர். அகுஸ்து இராயனின் மகளான யூலியுவின் பெருமைக்கென அதை ஒரு நகராக அமைத்தார் பிலிப்பு. பெத்சாயிதாவின் சரியான இடம் எது என்பதைப் பற்றி இரு கருத்துகள் உள்ளன. ஒன்று யோர்தான் ஆறு கலிலேயாக் கடலில் சேருமிடத்தில் கீழ்ப் பக்கமாய் உள்ள ஓர் இடத்தைக் குறிக்கிறது. இன்னொன்று இரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள ஓர் இடத்தைச் சுட்டுகிறது. இவ்விரு இடங்களையும் ஒரு சாலை இணைக்கிறது. விவிலியத்தில் சொல்லப்படுவது இந்தக் கடலோர நகரென்று நம்பப்படுகிறது. இது பேதுரு, பிலிப்பு, அந்திரேயா என்பவர்களின் சொந்த ஊர் (யோ. 1:44). பல திருத்தூதர் அங்கிருந்து வந்திருந்தும் ஆண்டவரின் பணி அங்கு ஏற்கப்படாததால் அது கண்டிக்கப்பட்டது (மத். 11:21; லூக். 10:13). பார்வையற்ற ஒருவருக்கு இயேசு இங்கே பார்வையளித்தார் (மார். 8:22). யோவான் கொல்லப்பட்டதை இயேசு கேள்விப்பட்டபோது விலகி அங்குச் சென்றார். ஆண்டவர் 5,000 பேருக்கு உணவளித்ததும் அங்கேயே.

யோர்தான் ஆறு: கலிலேயாக் கடலினின்று தென் பக்கத்தின் பள்ளத்தில் குப்புற மூழ்கும் வேகத்தால் அதற்கு யோர்தான் (the descender) எனும் பெயர் வழங்கப்படுகிறது. இப் பகுதியில் ஒரு மைலுக்கு 40 அடி ஆழத்தில் ஆறு இறங்குகிறது. கலிலேயாக் கடலுக்கும் சவக்கடலுக்கும் இடையே யோர்தான் படிப்படியாய் 590 அடி பள்ளத்தில் செல்வதால் ஒரு மைலுக்குச் சராசரி 9 அடி வீதம் அது இறங்குகிறதைப் பார்க்கிறோம். கலிலேயாக் கடல் முதல் சவக் கடல் வரையும் இப் பள்ளத்தாக்கு 65 மைல் நீளமும், 3 முதல் 14 மைல் வரை அகலமுமுள்ளது. ஆனால் இதன் ஊடே பாயும் ஆறு வளைந்து நெளிந்து செல்வதால் அதன் நீளம் 200 மைல் ஆகிறது. கலிலேயாக் கடலினின்று வெளியேறும்போது இதன் அகலம் 95 அடி மட்டுமே. நீரும் தெளிந்தே இருக்கும். ஆனால் ஐந்து மைலுக்குத் தெற்கே யார்முக்கு ஆறு கிழக்கேயிருந்து வந்துசேர்ந்து ஆற்றின் வேகத்தைக் கூட்டுவதோடு நீரையும் கலங்கலாக்கிவிடுகிறது. இந்த அகலமான யோர்தான் பள்ளத்தாக்கினூடே பாயும் ஆறு 90 - 100 அடி அகலமும். 3 முதல் 12 அடி ஆழமும் உடையது. தண்ணீர் கலங்கலாய்ப் பலவகை உப்புப் பொருட்களை யுடையதாய், சிலவேளைகளில் கசப்புச் சுவையுடையதாய் இருக்கிறது. ஆற்றின் கரையோரங்களில் பலவகை நச்சுப் பூண்டுகளும் முட்புதர்களும் செழித்து வளருகின்றன. ஏப்ரல் மாதத்தில் நீர்மட்டம் உயர்ந்து மேல் படுகையை நிரப்பிக் கரை புரண்டோடுவது யோர்தானின் பெருமை எனப்படுகிறது (யோசு. 3:15; எரே. 12:5; 49:19; 50:44; செக. 11:3).

ஆற்றின் இரு கரைகளிலும் ஏறத்தாழ இருநூறு அடி அகலம்கொண்ட (சில இடங்களில் 1 மைல் வரை அகலமுள்ள) பழைய ஆற்றுப்படுகை உண்டு. ஆறு சவக்கடலை நெருங்கும்போது படுமைகள் படியடுக்குப்போல் காட்சியளிக்கின்றன. முதல் படுகைக்கு சோர் (Zor) என்பது அரேபியர் வழங்கும் பெயர். அதில் பூண்டுகளும் முட்களும் மிக அடர்த்தியாய் வளருகின்றன. இந்த வனக் காடுகளில் வன விலங்குகள் ஏராளம் உண்டு. சோர் என்னும் இக் காட்டுப் பகுதியின் வெளியோரம் குன்றுகளாய் இருக்கின்றன. இங்கு விவசாயத்திற்கு வாய்ப்பு இல்லை. அடர்த்தியான இந்தக் காடு யோர்தான் கரை புரண்டோடும் போது நீரில் மூழ்குகின்றது.

சோர் என்னும் இக்காட்டுப் பகுதிக்கு மேல் படுகையாக கோர் (Ghor) என வழங்கப்படும் இன்னொரு அகலமான படுகை உண்டு. இது மிகச் செழிப்பானது. இருகரைகளிலுமுள்ள மிக உயரமான மலைகளின் அடிவாரமாகவும் கோர் என்னும் இப் பகுதி அமைந்துள்ளது. சவக்கடலை அடுத்த கொஞ்ச தூரம் கோர் நிலப்பகுதி உப்பு மயமானதாகையால், அங்கு விவசாயமோ ஆடு மாடு மேய்த்தலோ கூடாதது. கோர் என்னும் இப் பகுதியை உள்ளடக்கி யோர்தானின் இரு கரைகளிலும் உயரமான மலைகள் உள்ளன. மேற்குப் பக்கத்தில் கலிலேயா, சமாரியா என்னும் நாடுகளின் மலைகள் 800 - 1,500 அடி வரை எழும்பி நிற்கின்றன. கிழக்குப் பக்கத்தில் 2,000 அடி உயரமான கிலயாது மலைகள் உள்ளன. மலைச் சரிவில் உள்ள கோர் என்னும் இப் பகுதிதான் நாட்டில் மக்கள் முதன் முதலாக குடியேறின பகுதியென ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. பாலஸ்தீனாவின் வளம் மிகுந்த பகுதிகளில் சில இங்கிருந்ததால் இது, **ஆண்டவரின் தோட்டம்** என அழைக்கப்பட்டது (தொட. 13:10). கிறிஸ்துவுக்கு 4,000 ஆண்டுகளுக்கு முன்பே அது மக்கள் நெருங்கி வசித்த நிலப் பகுதியாயிருந்ததென பழைய அழிவுகள் காட்டுகின்றன. கிழக்குக் கரையில் மட்டும் இவ்வித அழிவுக் குவியல்கள் 70 க்கு மேல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகளில் யாப்போக்கு ஆற்றுக் கரையிலுள்ள டெல்-எட்-டமியே (Tell-Ed-Damiyeh) மிகப்பெரியதாகவும் ஆற்றைக் கடக்கும் ஒரு கடவுத் துறைபோலுமுள்ளது. சாலமோன் மன்னனின் காலம் முதற்கொண்டு கி.மு. 6 ஆவது நூற்றாண்டு வரையிலும் உலோகப் பொருள் தூய்மிகள் இயங்கி வந்ததாக அங்குக் காணப்படும் உருக்கிய சுரங்கப் பொருட் குவியல்கள் காட்டுகின்றன. கலிலேயாக் கடலுக்கும் சவக்கடலுக்குமிடையேதான் யோர்தானில் கினை ஆறுகள் சேர்கின்றன. யார்முக்கு என்னும் ஆறு கலிலேயாக் கடலுக்குச் சற்று தென்பக்கத்தில் யோர்தானில் விழுகிறது. யோர்தானில் வடியும் நீரளவு தண்ணீர் யார்முக்கினின்றும் சேர்கிறது. இன்னமும் சற்று தெற்கே சில சிறு ஆறுகளும், குறிப்பாக, யாப்போக்கு ஆறும் யோர்தானை அடைகின்றன. யார்முக்கு ஆற்றுக்கு ஏறக்குறைய 8 மைலுக்குத் தெற்கே யாலூது (Jalud) என்னும் ஒரு சிறு ஆறு மேற்கிலிருந்து யோர்தானில் விழுகிறது. அதுபோல ஃபாரா (Farah) என்னும் ஆறுமேல் திசையினின்று யாப்போக்கு ஆற்றின் தெற்கில் யோர்தானை அடைகிறது. இவைகளைத் தவிரவும் பல சிற்றாறுகள் யோர்தானுக்குள் பாய்கின்றன. பழங்கால நகர்கள் பெரும்பாலும் இந்த ஆறுகளையொட்டி கட்டப்பட்டிருந்தன.

பெத்சான் (பேத்சியான்): இது எங்கிருந்தது என்பது பற்றி கருத்து வேற்றுமைகள் உள்ளன. மெகித்தோவோடு சேர்ந்ததாய் மனாசே குலத்திற்கு வழங்கப்பட்ட எல்லைக்குள் இருந்தது எனவும் (நீதித். 1:27). இஸ்ரியேல் சமவெளியிலுள்ளதெனவும் (யோசு. 17:16). கில்போவா மலையையொட்டி பெலிஸ்தியருக்குரிய நகரம் என்றும் (1 சாமு. 31:10) குறிப்பிடப்பட்டிருப்பினும் அது யாலூது எனும் வற்றாத ஆற்றின் கரையில் யோர்தான் பள்ளத்தாக்கில் கடல் மட்டத்தினின்று 500 அடிக்குக் கீழேயுள்ள ஒரு கானானிய நகர் என்று பெரும்பாலோர் ஒத்துக்கொள்கிறார்கள் (யோசு. 17:16). எகிப்தினின்று வரும் ஒரு பெரும் பாதை தமஸ்குவினின்று அரேபியா நாட்டுக்குச் செல்லும் பாதையை இங்குச் சந்தித்ததால், இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நகர் ஆகும். நல்ல நீர்ப் பாய்ச்சல் உடைய பண்பட்ட நிலமும் விரும்பக்கூடிய தட்பவெப்பமுடையது. பெத்சானில் குடியிருந்த கானானியருக்கு இருப்புத் தேர் இருந்தமையால் (17:16) மனாசே குலத்தினர் அவர்களைத் துரத்திவிடக்கூடவில்லை (நீதித். 1:27). பெத்சானின் அலங்கத்தில் சவுலின் உடல் பெலிஸ்தியரால் தொங்கவிடப்பட்டது (1 சாமு. 31:10). கி.மு.10 ஆம் நூற்றாண்டில் இது முழுவதுமாய்ச் சாலமோனின் ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது.

கீல்கால்: இது கல்வளையம் எனப்பொருள்படும். இப்பெயருடன் பல இடங்கள் பாலஸ்தீனாவில் இருந்தன.

(1) எலியா, எலிசா என்போருடைய ஊர் (2 இரா. 2:1; 4:38). இது மத்திய மலைத்தொடரில் பெத்தேலுக்கு 7 மைல் வடக்கேயுள்ளது. இங்கிருந்துதான் எலியாவும், எலிசாவும் யோர்தானுக்குச் சென்றனர்.

(2) கானானிய மன்னரின் பட்டியலில் தரப்படும் கில்கால் (யோசு. 12:23) இது சமாரிய மலைத்தொடரில் உள்ளதெனக் கருதப்படுகிறது.

(3) இணை. 11:30 இல் சொல்லப்படும் கில்கால் செக்கேமுக்கு அருகில் கெரிசிம், ஏபால் மலைகளுக்கு நடுவில் உள்ளதாக இருக்கலாம்.

(4) எரிகோவுக்கு அருகில் உள்ள கில்கால் விவிலியத்தில் பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது (யோசு. 4: 19,20; 5:9; 9:6; நீதி. 2:1; 3:19; 1 சாமு. 7:16; 2 சாமு.19:15; ஒசி. 4:15; ஆமோ. 4:4; மீக். 6:5). பென்யமீன் குலத்திற்கு வழங்கப்பட்டிருந்த இந்த நகரம் தேசீய சமய முக்கியத்துவம் வாய்ந்தது. இது தற்கால எரிகோவுக்கு 2 1/3 மைல் கிழக்கில் உள்ள ஒர் இடத்தையோ பழைய எரிகோவுக்கு 1 1/4 மைல தொலைவிலுள்ள ஒர் இடத்தையோ அல்லது பெரும்பாலும் எரிகோவை யொட்டியுள்ள ஒர் இடத்தையோ (யோ.4:19) குறிக்கலாம். யோர்தானைக் கடந்து இஸ்ரயேலர் முதலாவது பாளையம் இறங்கி (யோசு.3:4) யோர்தானிலிருந்து எடுக்கப்பட்ட கற்றூண்களை இங்கு நிறுத்தினர் (4:20-24). இங்கு யோசுவாவுக்கு கடவுள் திருக்காட்சி அருளினார் (5:2,9). யோசுவா பாஸ்கா ஆசரித்தார். கிபயோனியரோடு உடன்படிக்கை செய்தார் (9:3). சாமுவேல் இதை நியாயம் விசாரித்தார் (1 சாமு. 7:16). சவுல் இங்கு அரசராக்கப்பட்டார். அரச பதவியினின்று தள்ளப்பட்டார் (11:14; 13:4-15; 15:7-31). 8ஆம் நூற்றாண்டு இறைவாக்கின் இவ்விடத்தைக் கண்டித்தனர் (ஒசே. 4:15; ஆமோஸ்4:4).

கதரா: இது தெக்கப்போலியைச் சேர்ந்த ஒரு நகரம். பேய் பிடித்த ஒருவனை ஆண்டவர் இங்குச் சுகப்படுத்தினார் (மத். 8:28). இந் நிகழ்ச்சி நடந்த இடத்தை கதரா, கொசேனர் நாடு, கெர்கசேனர் நாடு என்றெல்லாம் குழப்பிச் சொல்லியிருக்கக் காண்கின்றோம் (மார். 5:1; லூக். 8:26,31). கெதரா கலிலேயா கடலுக்கு 5 மைல் தென் கிழக்கில் இருந்தாலும் யார்முக்கு ஆற்றின் வடபக்கம் வரையிலும் அதன் எல்லைக்குள்ளிருந்தது.

எபல்லா: தெக்கப்போலி என்ற பத்து நகர்களில் இதுவும் ஒன்று. இஸ்ரயேலர், நாட்டைக் கைப்பற்றுமுன் இது அழிக்கப்பட்டிருந்தும், கிரேக்கர் அதைத் திரும்பவும் கட்டினர். கி.பி. 66இல் உரோமரை எதிர்த்துப் புரட்சி ஏற்பட்டபோது கிறிஸ்தவர்கள் தப்புவதற்கு அங்குச் சென்றனர். அது முதல் அது திருச்சபைக்கு முக்கியமான ஒரு மையமாகவும், தொடக்க நூற்றாண்டுகளில் ஒரு பேராயரின் இருப்பிடமாகவும் இருந்தது.

யாபேசு கிலயாது: இது பெத்சானிலிருந்து 19 மைலுக்குத் தென் கிழக்கே கீலயாது நாட்டிலுள்ள ஒரு நகர். சவுலின் வாழ்க்கையோடு மிகத் தொடர்புடையது. கீலயாதியரும் பென்யமினரும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் (1 குறி. 7:15). பென்யமினரோடு நடந்த போரில் இவர்கள் பங்குகொள்ளவில்லை (நீதித். 21:8 மு). அம்மோனியனாகிய நாகாசிடமிருந்து சவுல் அதைக் காப்பாற்றினார். சவுலும் மக்களும் கொலையுண்டபோது யாபேசின் வீரர்கள் உடலகளைக் கைப்பற்றி அவர்களுடைய எலும்புகளை அங்கே புதைத்தனர் (1 சாமு. 31:11). தாவிது பிற்காலத்தில் அந்த எலும்புகளைக் கொண்டுவந்து சேலா ஊரில் அடக்கம் செய்விதார் (2 சாமு. 21:12-14).

பெத்நபாரா: கடவுத் துறை எனப் பொருள்படும் இப்பகுதி யோர்தானுக்குக் கிழக்கே யோவான் திருமுழுக்காட்டிக் கொண்டிருந்த இடமாகும் (யோ. 1:28). எனினும் இது திட்டவட்டமாய்க் குறிப்பிடப்படவில்லை; யோர்தான் ஆறு சவக் கடலில் சேரும் நுழைவாய்க் கருகாமையிலுள்ளது என்பது பலரின் கருத்து.

சவக்கடல்: எரிகோவிற்குத் தெற்கே யோர்தான் பள்ளத்தாக்கு 14 மைல் அகலமுடையது. அங்கே ஆறு சவக் கடலில் சேர்கிறது. மத்தியதரைக் கடலினின்று இக்கடல் 1,292 அடி கீழேயுள்ளது. கடலின் ஆழம் அதன் வட பகுதியில் 1,300 அடிக்கு அதிகமாயுள்ளது. இங்ஙனம் சவக்கடல்தான் உலகிலேயே மிக ஆழமான பகுதியாய் இருக்கிறது. இக்கடல் 53 மைல் நீளமும் அதிக அகலமான இடத்தில் 10 மைல் அகலமுமுடையது. வட கிழக்குப் பகுதியில் 1,300 அடி ஆழமுள்ள இக் கடலின் ஆழம் படிப்படியாய்க் குறைந்து தெற்கே செல்லும்போது 8-14 அடி மட்டும் உள்ளது. இதற்கு வடிகால்கள் இல்லை; நீர் ஆவியாகவே செல்லவேண்டியிருக்கிறது.

இக்கடலுக்கு மிகப் பழமையாய் வழங்கப்பட்டு வந்த பெயர் **உப்புக் கடல்** என்பது (தொட. 14:3; எண் 34:3) **அராபாக் கடல்** என்பது இன்னொரு பெயர் (இணை. 3:17; யோசு.3:16; 12:3). பிந்திய கால ஏடுகளில் குறிப்பிடப்படும் இன்னொரு பெயர் **கீழ்க் கடல்** என்பது (எசே. 47:18; யோவே. 2:20; சக.14:8). தொடக்க காலத்தில் இக்கடல் இஸ்ரயேல் மக்களின் கீழ்எல்லையாகக் கருதப்பட்டிருந்தது.

யோர்தான் ஆறும் அதைச் சேரும் மற்ற ஆறுகளும், இக்கடலில் நேரடியாக விழும் வேறு ஆறுகளும் பாய்ந்துவரும் பகுதிகளில் பலவகையான உப்புகளும், தாதுப்பொருட்களும், பாறை எண்ணெய் ஊற்றுகளும் உள்ளன. இவ்வாற்றாலும் கொண்டுசேர்க்கும் இவ்வகைப் பொருட்களோடு கடலின் அடித்தளத்திலுள்ள கந்தக நீரூற்றுகளிலிருந்து ஏராளமான கந்தகம் நீரில் சேருகிறது. கடற்கரையோரம் நிலக்கீல் மயமானதால் நிலநடுக்கம் ஏற்படும் போதெல்லாம், அது சார்ந்த படிவங்களை கடல் நீர்மேல் மிகுதியாகக் காணலாம்.

கடலுக்கு வடிகால்கள் இல்லையெனினும் அப்பகுதியின் கடும் வெப்பத்தால் கடலினுள் சேர்ந்துகொண்டிருக்கும் அளவுக்குச்சமமான நீர், நீராவியாகச் சென்று கொண்டு மிருக்கிறது. எனவே, இக்கடலின் நீர் நாளுக்கு நாள் பல்வகைப் பொருட்களை உருவாக்கி செறிவுடையதாய் வளர்ந்து கொண்டே இருக்கிறது. இப்படி உலகத்தின் மற்ற கடல்களின் நீர்களைவிட இதன் நீர் ஐம்மடங்கு அடர்த்தியுடையது. இக்காரணத்தால் பொருட்கள் எளிதில் அதனுள் அமிழ்வதில்லை. கடலின் வட, தென் பகுதிகளினின்று வணிகத்திற்கென உப்புகள் எடுக்கப்படுகின்றன; நீர் கசப்பாகவும், கண்களுக்கு வலிதரக் கூடியதாகவும், தொடுவதற்கு எண்ணெய் மயமாகவும் உள்ளது. ஆறுகள் கடலினுள் சேரும் நுழைவாயில்கள் அல்லாமல் மற்றப் பகுதிகளில் கடல் பிராணிகள் வாழ்வதில்லை.

சவக் கடலின் மேற்குக் கரை 2,500 அடி உயரமுடைய மலைத்தொடரால் ஆனது. இதற்குப் பின்னாக யூதேயா பாலைநிலம் உள்ளது. இம்மலைத் தொடரைக் கடந்து கடலைச் சேரும் ஆறுகள் ஒன்றும் அங்கு இல்லை. ஆனால் கடலின் வடமேற்குக் கரைப்பகுதியில் கும்ரான் (Qumran) துறவி மடத்தருகே ஒன்றும், அதற்குத் தெற்கே என்கேதிக்கருகே ஒன்றுமாக இரண்டு சிறந்த நீரூற்றுகள் இருந்தன. எனவே, இப்பகுதிகள் மிகச் செழிப்பான பாலைநிலச் சோலைபோலிருந்தன (க.க. 1:14). என்கேதிக்கு 10 மைலுக்குத் தெற்கே 2,000 அடி உயரமான இடத்தில் மசாதா என்ற இடத்தில் மக்கபேயரின் வலுத்தக் கோட்டை ஒன்று உண்டு. மசோதாவுக்கு எதிராக உள்ள கடல் பகுதி 2 மைல்களுக்கும் குறைவான அகலமே உள்ளது. மசாதாவில் உள்ள ஒரு பழங்காலச் சாலை, இந்த இடம் முன் காலத்தில் கடலைக் கடக்கும் ஒரு கடவுத் துறையாய் இருந்திருக்கலாம் என எண்ணக் காரணமாயுள்ளது.

இதற்குத் தெற்கே கடல் ஏறக்குறைய 15 அடி மட்டும் ஆழமுடையது. இப்போது கடலாக உள்ள இப்பகுதி முழுவதும் அல்லது பெரும் பகுதியும், முற்காலத்தில் சோதோம் கோமோரா என்று அறியப்பட்ட நகர்களாகவும் சிக்கீம் பள்ளத்தாக்காகவும் அறியப்பட்டு வந்த பகுதியேயென பெரும்பாலான பண்டிதர் கருதுகின்றனர் (தொட.14:10). இப்பகுதி எரிமலைப் பகுதியாய் இருந்ததற்குப் போதியச் சான்றுகள் உள்ளன. இன்னொரு கோட்பாடு யாதெனில், சவக் கடலின் மேற்குக்கரை மோரா சமவெளிக்குப் பின்னாக உள்ள குன்றுத் தொடர்களுக்கிடையேதான் சோதோம், கோமேரா, அத்மா, செபோயிம், சோவார் என்னும் நகர்கள் (14:2) அமைந்திருந்தன என்பதாகும். ஆகவே இந் நகர்கள் இருந்த இடம் நமக்குத் திட்டவட்டமாகத் தெரியாது; அவை அழிக்கப்பட்டுவிட்டன என்று மறைநூல் குறிப்பிடுகிறது (19:24-28).

இதற்குத் தெற்கே கடலோரப் பகுதியில் ஏறக்குறைய ஐந்து மைல் தூரம் 100 அடி அளவு உயரமுள்ள பளபளப்பான ஒரு வகை உப்புப் படிவங்கள் உள்ளன. அங்குள்ள இவ்வகை உப்புக் குவியல் ஒன்று லோத்தின் மனைவி என்று சொல்லப்படுகிறது (19:26).

கடலுக்குக் கீழ்க்கரையில் 2,500 முதல் 3,000 அடியளவு உயரமுள்ள மலைகள் உள்ளன. யார்முக்கு ஆறு வரையிலும் சிறுசிறு ஊர்கள் மட்டுமே இருந்தன. எனினும் ஆங்காங்கே பயிர் நிலங்கள் இல்லாமலில்லை. பொதுவாக பாலைநிலம் என்று இப்பகுதி அழைக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் கோடை காலத்தில் 104 டிகிரி முதல் 118 டிகிரி வரை இங்கு வெப்பம் ஏற்படுகிறது.

சவக் கடலுக்குத் தெற்கே நிலமட்டம் உயர்ந்து சவக் கடலுக்கும் செங்கடலுக்குமிடையே கடல் மட்டத்தினின்று 300 அடி உயரமடைகிறது. இப்படி இல்லாவிடில் செங்கடலினின்று தண்ணீர் பள்ளமான சவக் கடல் பகுதியில் வடிந்திருக்கும். கடலுக்குத் தெற்காக உள்ள இந் நிலப்பகுதி எல் அராபா என வழங்கப்படுகிறது. கடலுக்கு வடக்கே எரிகோ பகுதிக்கும் இப்பெயர் முன்பு வழங்கப்பட்டிருந்ததெனினும் (இணை. 11:30). இது பெரும்பாலும் தென் பகுதிக்கே உரியது (1:17). மழைக்குப் பின் புல் முளைக்கும் போது மந்தை மேய்ப்பவர்கள் அங்குத் தங்குவது தவிர மற்றக் காலங்களில் மக்கள் அங்குத் தங்குவதில்லை. உரோமர் ஆட்சி புரிந்த காலங்களையொட்டி அங்கு பயிர்த்தொழில் விரிவாகச் செய்யப்பட்டதென அங்கிருந்த நீரூற்றுகளும் இடிந்த வண்ணமாகக் கிடக்கும் மதில்களும் காட்டுகின்றன.

செங்கடலினின்று தமஸ்குவுக்குச் செல்லும் பாதை அராபா வழியே செல்கிறது. அங்கே செம்பு, இரும்பு சுரங்கங்களும், உருக்கும் ஆலைகளும் இருந்ததாகப் புதைப் பொருள் ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன. அராபாவின் குன்றுகளில் காணப்படும் செம்பு, இரும்புப் படிவங்களைக் கொண்டுதான் இணைச்சட்ட ஆசிரியர் எழுதினார் போலும் (8:9). சாலமோன் ஆட்சி புரிந்த காலத்தில் அராபாவில் தொழில்துறை மிகவும் வளர்ச்சியடைந்திருந்ததென அக்கால மண்பாண்டங்கள் காட்டுகின்றன.

(ஈ) கிழக்கத்திய மேட்டு நிலம்

யோர்தான் பள்ளத்தாக்குக்கும் சிரியா பாலைநிலத் திற்குமிடையே வடக்கே, எர்மோன் மலை முதல் தெற்கே

சவக் கடலின் தெற்கு எல்லை வரையிலும் 150 மைல் நீளமும், 30 - 80 மைல் வரை அகலமும், ஏறத்தாழ 2,000 அடி உயரம்கொண்டதுமான இந்த மேட்டு நிலம் பாலஸ்தீனாவின் நான்காவது இயற்கைப்பெரும் பிரிவாகும். பொதுவாக இப்பகுதி மேற்குப்பகுதியைவிட அதிக மழையும் பனியும் மேகங்களும் கிடைக்கப்பெறுவது. எனவே அப்பகுதியை விட மிதமான தட்பவெப்ப நிலையுடையது. வற்றாத நீரோடைகளும். நீரூற்றுகளும் நிலத்தை வளப்படுத்துவதோடு ஏராளமான புல்வெளிகளையும் தருகின்றன. ஆகவே இந்தப் பகுதி சிறந்த மேய்ச்சல் நிலமாய் இருந்தது. இங்கு ஆடு மாடுகளும் ஒட்டகங்களும் திரளாய் இருந்தன (எண். 32:1; எசா. 60:6). இவற்றால் கவர்ச்சிக்கப்பட்டு ரூபன் அங்குத் தங்கிவிட்டார். தெபோரா அதைக் கண்டித்தார் (நீதித். 5:16).

இம்மேட்டு நிலத்தின் இன்னொரு தன்மையாதெனில், கிழக்கிலும் தெற்கிலும் உள்ள பாலைநிலங்களோடு அதற்கிருந்த தொடர்பு ஆகும். இஸ்மவேலர், மிதியானியர் போன்ற நாடோடிகள் அடிக்கடிக் குடிபெயர்ந்து கொண்டிருந்ததால் நாடு நாடோடிகளின் தொல்லைக்குத் தப்பக்கூடாதிருந்தது. அவர்கள் மேற்குப் பாலஸ்தீனாவைக் கூட பல தடவை தாக்கினர். இஸ்ரயேலரைத் தாக்க பாலாக்கு இஸ்மவேலரின் உதவி பெற்றான். நீதித்தலைவர்களின் காலத்தில் மிதியானியர் தந்துவந்த தொல்லையினின்று கிதயோன் இஸ்ரயேலரை விடுவித்தார் (நீதித். 8:12).

ஆகவே இப்பகுதி செழிப்புற்று வளத்திற்கேற்றதாயிருந்தும் வேற்று நாட்டாரின் தாக்குதலுக்கும் தொல்லைக்கும் உட்பட்டிருந்த காரணத்தால் தொடர்ச்சியான நாகரிக வளர்ச்சி இங்கு ஏற்படக் கூடாமற்போயிற்று; புகழ்பெற்ற நகர் ஒன்று தோன்றி நிலைக்கக் கூடாமற்போயிற்று.

கிழக்கத்திய மேட்டு நிலத்தினூடே நான்கு முக்கிய ஆறுகள் பாய்கின்றன. வாடி ஹெஸா (Wadi Hesa), அர்னோன், யாப்போக்கு, யார்முக்கு என்னும் ஆறுகள் ஏற்படுத்தும் மிக ஆழமான மலைச் சந்துகள் இப்பகுதியைப் பல துண்டுகளாய்த் துண்டிக்கின்றன. இவற்றின் தெற்குக் கோடியிலுள்ளது ஏதோம்.

அரபு நாடு செங்கடலோரப் பகுதிகளினின்று தோன்றும் பாலை நிலங்கள். ஏதோமிய மேட்டு நிலங்களைத் தழுவிக் கிடக்கும் செங்குத்தான குன்றுகள் வரையிலும் செல்கின்றன. அக்குன்றுகளும் அவைமேல் அமைக்கப்பட்டிருந்த பல கோட்டைகளும் ஏதோமின் தென் பக்கத்தில் கடத்தற்கரிதான தடையரண்களாய் இருந்தன. இக்காரணத்தாலேயே இஸ்ரயேலர் ஏதோமைச் சுற்றி வரவேண்டியதாயிற்று. வாடி ஹெஸா என்பது செரேத்து நீரோடையாய் இருக்கலாம் என்றும் (இச. 2:13). அதன் தென் கிழக்குப் பக்கமாகத்தான் இஸ்ரயேலர் ஏதோமிய நாட்டைக் கடந்து மோவாபிய நாட்டில் புகுந்தனர் என்றும் கருதப்படுகிறது. ஏதோமின் கீழ் எல்லையும் அரண்களால் பாதுகாக்கப்படுகிறது. போஸ்ரா (ஆமோஸ் 1:2) அராபாவிலுள்ள மிக அரணான கோட்டைகளில் ஒன்றாகும்.

வாடி ஹெஸாவுக்கும் அதன் வடக்கேயுள்ள அர்னோனுக்கும் இடையிலுள்ள நிலப்பகுதி மோவாபு என அழைக்கப்படுகிறது. மோவாபின் வட பகுதியும், வட கடைக்கோடியுமான பகுதி அர்னோனுக்கும் யாப்போக்குக்கும் இடையில் உள்ளது. அங்கிருந்த எமோரிய மக்களை இஸ்ரயேலர் துரத்தி சீகோனை முறியடித்தபோது அவர்கள் மோவாபின் இந்தத் தென் பகுதிக்குச் சென்றனர். பிற்காலத்தில் இந் நாட்டின் ஒரு பக்கத்தை இஸ்ரயேலரிடமிருந்து அவர்கள் திருப்பிக்கொண்டனர் (2 எரா.3).

மோவாபு வளப்பமானது; ஏராளமான நீரூற்றுகள் இங்குண்டு. குன்றுகளின் சாய்வாரத்தில் படிஅடுக்கு முறை விவசாயம் செய்யப்பட்டிருந்ததற்குப் போதுமான தடயங்கள் இன்றும் காணப்படுகின்றன.

1,700 அடி ஆழமும், மேற்பரப்பில் 2 மைலும், அடித்தளத்தில் 40 அடியும் அகலமுடைய ஒரு மலைச் சந்தினூடே அர்னோன் பாய்கிறது. அதன் தோற்றுவாயினின்று 13 மைல் தூரத்தில் அச்சந்து இரண்டாகப் பிரிந்து, ஒன்று வட கிழக்குத் திசையிலும் இன்னொன்று தென் கிழக்கையும் நோக்கிச் சென்று அவை மறுபடியும் பிரிகிறதால் நாடு பரவலாக நீர் வளம் பெறுகிறதுமன்றி கிழக்கேயுள்ள கெதேமோத்து என்னும் பாலைநிலத்தினின்று பாதுகாவலும் பெறுகிறது (இணை. 2:26).

மீசோர் அல்லது சமவெளி எனவும் (3:10; 4:43). பாதி கிலயாது எனவும் (யோசு. 12:2) அழைக்கப்பட்ட பகுதி அர்னோனுக்கு வடக்கேயுள்ளது. பு.ஏ.இல் இதன் பெயர் பெரேயா என்பதாகும். இஸ்ரயேலர் உட்புகுந்த காலத்தில் இந் நிலப்பகுதியின் மேற்பகுதி யோர்தான் பள்ளத்தாக்கு வரையிலும் சீகோன் அரசன் வசம் இருந்தது. கீழ்ப்பகுதியாகிய அம்மோன் இரப்பா அம்மோனைத் தலைநகரமாகக் கொண்டு தனியாய் இருந்தது. யாப்போக்கு ஆறு தென் வடக்காகப் பாயுமிடத்தில் அது இவ்விரு நாடுகளையும் பிரிக்கும் எல்லையாக இருந்திருக்கலாம். மரங்கள் இல்லாத விரிவான பொட்டல் பெருவழி போன்ற பீடபூமி ஒன்று இங்கே உண்டு. இந்நாடு நல்ல மேய்ச்சல் நிலங்களாய் இருந்தது. ரூபன் தன் ஆடுகளை இங்கு மேய்த்தான் (நீதித். 5:16). மோவாபின் அரசனான மேஷாவின் ஆடுகள் இங்கு மேய்ந்தன (2 அர.3:4).

அதில் சவக் கடலுக்கெதிரான பகுதியில் நெபோ என்னும் இரண்டு மைல் நீளமான மலைத்தொடர் உள்ளது. மோசே இறக்குமுன் இங்குள்ள ஒரு உச்சியினின்று வாக்குறுதியின் நாட்டைப் பார்த்தார். தெய்வங்களின் பெயர்களைக் கொண்டிருந்த நெபோ, பேயோர் என்னுமிடங்கள் மக்களைச் சபிப்பதற்குப் பிலயாம் அழைத்துச் செல்லப்பட்ட இடங்களென நாம் அறிகிறோம். மக்கேறஸ் என்ற கோட்டை இப்பகுதியில் தான் இருந்தது. ஏரோது அதைப் புதுப்பித்தான். முழுக்குநர் யோவான் இங்குக் கொலைசெய்யப்பட்டார். மோசே என்னும் முதல் இறைவாக்கினரும் 13 நூற்றாண்டுகளுக்குப் பின் தோன்றிய இறுதி இறைவாக்கினர் யோவானும் ஒரே இடத்தில் மாண்டனர் என்பதும், எலியா உடலோடு எடுத்துக்கொள்ளப்பட்டதும் இதற்கருகாமையிலேயே என்பதும் கவனத்திற்குரியன.

கிழக்கத்திய மேட்டு நிலங்களைப் பற்றிக் கூறுமிடத்து கிலயாது என்ற வரையறையில்லாத ஒரு பகுதியை நாம்

காண்கின்றோம். மோவாபு, அம்மோன் என்னும் பகுதிகளை உள்ளடக்கிய இப்பகுதியின் தெற்கு எல்லை அர்னோன் ஆறும், வட எல்லை யார்முக்கு ஆற்றுக்குச் சற்று தெற்கு வரையிலும் உள்ளது. சில கட்டங்களில் இதன் வட எல்லை பாசான் நாட்டையும் உள்ளடக்கி யார்முக்கு நதியையும் கடந்து செல்வது போன்றும் நாம் காண்கிறோம். சில இடங்களில் இப்பகுதி 3,300 அடி வரை உயர்ந்துள்ளது. கிலயாதின் வட பகுதி யாப்போக்கு, யார்முக்கு என்னும் ஆறுகளுக்கிடையேயுள்ளது. இதுவும் பு.ஏ. இல் பெரேயா என அழைக்கப்படும் ஓர் இடத்தின் பகுதியே.

இங்குள்ள சுண்ணாம்புக் கற்குன்றுகளில் மரங்கள் மிக அடர்த்தியாய் வளர்ந்திருக்கும். அப்சலோமின் தோல்விக்குப் படைவீரரைவிட இம்மரங்களே காரணமாயின (2 சாமு. 18:8). தானியங்கள், பழங்கள் போன்றவை விளையும் ஏராளமான தோட்டங்களோடு, சுகந்தம் தரும் நறுமணப் பூண்டுகளும் அங்கு ஏராளம் (எரே. 8:22) மருந்து வகைகளும் வாசனைப் பொருட்களும் அங்கிருந்து கீழ்த்தேசத்திற்கு அனுப்பப்பட்டன.

யோர்தானுக்குக் கிழக்கேயுள்ள பகுதிகளில் இஸ்ரயேலருக்குச் சொந்தமாய் இருந்தது கிலயாது இதன் வடபக்கத்தில் ஆரானும் தெற்கே மோவாபும் பகைவருடையவையாயிருந்தும் காட்டுப்பாங்கான இந்த கிலயாதுப் பகுதியினின்று இஸ்ரயேலர் துரத்தப்படக் கூடவில்லை. இதை இஸ்ரயேல் நாட்டின் ஒரு பகுதி போன்றே ஓசேயா இறைவாக்கினர் பேசுகின்றார் (ஓசே. 6:8; 12:11). கிதியோன், எப்தா, சவுல் என்போர் இந்நாட்டைச் சேர்ந்தவர்கள் எலியா கிலயாதிலுள்ள திஸ்பியாவைச் சேர்ந்தவர் (1 அர.17:1). கோலீத்து நீரோடை இங்கேயுள்ளது (17:3,5). கி.மு. 734 இல் அசிரியர் அதை அழித்தனர். அது திருப்பி எழுப்பப்படுமென செக்கரியா முன்னுரைத்தார் (செக். 10:10).

யாப்போக்கு ஆறு இதனூடே குறுக்கிட்டுச் செல்கிறது. இது 60 மைல் நீளமுடையது.இதன் கரையோரம் மிக வளமையுடையது; மலைச் சந்துகளைத் தவிர மற்ற இடங்களைக் கால்நடையாய்த் தாண்டக் கூடியது. யாக்கோபு அதன் கரையில் கடவுளோடு மன்றாடினார். சுக்கோத்து யாப்போக்குக்கு ஒருமைல் வடக்கில் உள்ளது.

தெக்கப்போலி என்று அழைக்கப்படும் தொகுப்பின் முக்கிய நகர்களும் கிலயாதில் உள்ளவை. கிலயாதின் நகரங்கள் எல்லாம் திட்டவட்டமாய் அடையாளம் கண்டுகொள்ளப்படவில்லை. ஆயினும் நாட்டை ஊடுருவிக் கிழக்கு, மேற்காய் கிடக்கும் பாறைகளும், நாட்டின் வட கிழக்காய்ச் செல்லும் பண்டைக்கால அரசப் பாதையும் (எண். 21:22) இன்னமும் அப்படியே கிடக்கின்றன.

யாபேசு கிலயாது: இது கிலயாதில் உள்ளது, சவுலின் வரலாற்றோடு மிகவும் தொடர்புடையது; மிகவும் செழிப்பான பகுதி. இராமோது கிலயாது கிலயாத்தின் வடபகுதியில் உள்ளது. இது இலேவிய நகரங்களில் ஒன்றும், கிழக்குப் பகுதியில் ஒலு அடைக்கல நகரும் ஆகும்; பிற்காலத்தில் சிரியாவோடு இணைக்கப்பட்டுப்போயிற்று.

மிஸ்பா என்ற பெயருடைய பல இடங்கள் இருந்தன (யோசு. 11:3; 15:38; 18:26; 1சாமு. 10:17; 22:3). கிலயாதிலுள்ள மிஸ்பா பெயர் பெற்றது (தொட. 31:49; நீதித். 10:15 யாக்கோபு லாபானுடன் உடன்படிக்கை செய்த இடம். எப்தா ஒரு தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம்). இன்னமும் மகனாயீம், சுக்கோத்து, பெல்லா, கெரலா என்பவையும் கிலயாத்தை சேர்ந்தவைகளே. தெக்கப்போலி என்னும் பத்து நகரங்களும் எஸ்டிரலோன் பள்ளத்தாக்கு யோர்தானைச் சேரும் இடத்திற்கு எதிரே கிழக்குப் பக்கத்தில் பெருஞ்சாலைகளை ஒட்டியிருந்தன. பெல்லா, கதரா, ஹிப்போ என்பவை தமஸ்குவுக்குச் செல்லும் சாலை அருகே உள்ளவை. இந்நகரங்களின் ஒரு பொதுக் குறிப்பு யாதெனில், அவைகளில் உள்ள பொது விளையாட்டரங்குகளும் கிரேக்கச் சமயம் தழுவும் கோவில்களுமாகும். நமதாண்டவரின் காலத்தில் இந்நகர்கள் புகழ் பெற்றிருந்தன. கி.பி.70 இல் எருசலேம் அழிக்கப்பட்டபோது யூதேயாவிலிருந்து கிறிஸ்தவ அகதிகள் உயிர்தப்ப பெல்லா என்ற நகருக்குச் சென்றனர்.

கதரா என்பது தெக்கப்போலி நகர்களில் ஒன்று. கலிலேயாக் கடலுக்கு 6 மைல் தென் கிழக்கில் உள்ளது. அதன் பிராந்திய எல்லை கடல் வரைக்கும் இருந்திருக்கலாம் (மத். 8:28). ஆனால் சில பகுதிகளில் கெர்கனேசர், கெரசேனர் என்று கதராவுக்குப் பதிலாகக் கையாளப்பட்டிருக்கிறது (மார். 5:1; லூக். 8:26).

கிழக்கத்திய மேட்டு நிலங்களில் உள்ளவைகளில் மிகப் பெரிய ஆறு யார்முக்கு என்பது. இது கிலயாதின் தென் கடைசிக்கு அருகாமையினின்று புறப்பட்டு வடக்காக ஒடி ஆரான் நிலப்பகுதிகளினின்று வரும் பல கிளை ஆறுகளால் வளமாக்கப்பட்டு மேற்குத் திசையில் சென்று, கலிலேயாக் கடலுக்குத் தென் பக்கம் யோர்தானில் செருகிறது. ஆரான் பகுதிகளினின்று வரும் தண்ணீர் செங்குத்தான வீழ்ச்சிகளினூடே அதிவேகமாய் வருவதால் யோர்தானின் நீர் கலங்கலாகிறது.

பாசான்: இது கிழக்கத்திய மேட்டு நிலத்தின் வட தெர்டகலில் உள்ள பகுதியின் பெயராகும். தென் வடக்காய் இதன்நீளம் 50 மைலும், இதன் அகலம் 20 மைலும் ஆகும். வடக்கே எர்மோனும் தெற்கே யார்முக்கு ஆற்றினின்று 6 மைல் தெற்கே வரையிலும் உள்ளடக்கிய இப்பகுதி பாசான் என்றும் (இணை. 3), ஆரான் (எசே. 47:16) எனவும், சில கட்டங்களில் சிரியா எனவும் (1 அர. 19:15; எசா. 7:2) அழைக்கப்பட்டது. பு.ஏ. இல் இத்துரேயா, திராகோனித்தி, அபிலேனே (லூக். 3:1) என்று அழைக்கப்படும் பகுதிகள் பாசானுக்கு உட்பட்டவை. இந்நாட்டை இஸ்ரயேலர் பாசான் அரசனான ஓகினிடமிருந்து பிடித்து எடுத்தனர்.

பாசான் நாட்டின் பெரும் பகுதியும் 1,600-2,300 அடி உயரமான ஒரு பீடபூமியாக அமைந்துள்ளது. இது எரிமலை கொண்டிருந்த நாடெனச் சொல்ல சான்றுகள் உள. யோர்தான் பள்ளத்தாக்கின் கீழ்க் கரையோரத்திலும், கிழக்குப் பாலைநிலக் கரையோரத்திலும், செயலற்றுப் போயிருக்கும் எரிமலை வாய்கள் காணப்படுகின்றன. இது எரிமலைப் பகுதியின் வளம் கொண்ட நிலமாகையால் கோதுமை ஏராளம் விளைவதோடு செழிப்பான மேய்ச்சல் நிலங்களுமுடையது. இங்குள்ள மண் தண்ணீரை சேமித்துப் பயன்படுத்தும் தன்மையுடையதாகையால் அண்மைக் கிழக்கத்திய நாடுகளின் போரடிக்கும் களமும் களஞ்சியமும் எனப்

திருவிவிலியத் துணை நூல்

பாசான் பகுதி பழமொழியாய் அழைக்கப்படலாயிற்று. பாசானின் பலத்த காளைகள் பல என்னைச் சூழ்ந்து கொண்டன, பாசானின் கொழுத்த எருதுகள் என்னைச் சுற்றி வளைத்தன (திருப். 22:12) என்னும் பாடல் வரி இவண் கருதத்தக்கது. பாசானின் பசுக்கள் சமாரியா வின் சுகபோகமான பெண்களுக்கும் (ஆமோஸ். 4:1) உவமையாகக் கூறப்படுகின்றன. பல்லாயிரம் ஆண்டுகளாய் வளமிக்க நாடாகவே இருந்துவரும் இப் பகுதி இன்னமும் சிற்றூர்களாலேயே நிறைந்து வருகிறது. பல நகர்கள் இங்கே தோன்றுவதற்கான பாதுகாவலான ஒரு நிலை இதற்கில்லை. அரான் நகாராயீம் (தொட. 24:10) அல்லது பத்தான் ஆராம் (தொட. 28:2) என அழைக்கப்பட்ட இந்நாட்டினின்று ஈசாக்கும் யாக்கோபும் பெண் கொண்டனர் (இணை. 26:5).

முடிவுரை

திருநாட்டின் புவியியல் ஆராய்ச்சி இவ்வாறு பல சீரிய உண்மைகளைத் தெளிவுபடுத்துகிறது. நாட்டின் தனித் தன்மை வாய்ந்த நில அமைப்பு அதைப் பிற அரசுகளுடன் தவிர்க்க இயலாத வகையில் தொடர்பு படுத்தினபோதிலும், தன்னில் வாழ்ந்த மக்கள் தங்கள் தனிச் சிறப்பைப் பேணிப் பாதுகாக்கவும் போதிய வாய்ப்பளித்தது என்று காண்கிறோம். அத்துடன் அம்மக்கள் எப்பக்கத்திலும், எந்தகைய சூழலிலும் பொருந்தி வாழத்தக்க பயிற்சியையும் கொடுத்தது.

இஸ்ரயேல் மக்கள் இந்நாட்டில் நுழைந்த வகை, இந்நாட்டைச் சொந்தமாக்கிக் கொண்ட முறை, நாடு பிளவுற்று வட, தென் பிரிவுகளான நிலை, சிறைப்பட்ட அழிவு ஆகிய யாவற்றிற்கும் இதன் புவியியலும் ஒரு காரணம் என்று காணலாம். விவிலியத்தில் கூறப்படும் பல வரலாறுகளைத் தெளிவுறப் புரிந்துகொள்ள இப் புவியியல் ஆய்வு இன்றியமையாதது என்பது தெற்றெனப் புலப்படும். எ.கா. சிங்கம், கரடி முதலான வன விலங்குகள் கால்நடைகள் மேல் பாய்தல், செங்கடல், யோர்தான் ஆகியவற்றைக் கடத்தல், சோதோம், கொமோரோ அழிவுகள், சீனாய், நிகழ்ச்சிகள் முதலியன. அப்படியே பு.ஏ. இல இயேசுவின் போதனைகளைப் புரிந்து கொள்ளவும் இப்புவியியல் அறிவு பெரிதும் உதவுகிறது. சுருங்கக் கூறின், அனைத்துலக மீட்பின் வரலாற்றில் திருநாட்டின் தனிச் சிறப்புமிக்க இடத்தை அதன் புவியியல் ஆராய்ச்சி தெளிவுற எடுத்துக்காட்டுகிறது. எனினும் இப்போது இஸ்ரயேல் நாட்டவர்க்கும் பாலஸ்தீனியருக்கும் இடையே நடந்துவரும் அமைதிக்கான உரையாடல் அங்குள்ள நில அமைப்பின் எல்லைகளில் பல மாறுதல்களை ஏற்படுத்தும் என்பதை நினைவிற் கொள்க.

துணை நின்ற நூல்கள்

1. MC Cown, C.C., *Geography of Palestine* - article in Interpreter's Dictionary of the Bible, Vol.3.
2. Schofield, J.N. *The Geography of Palestine* - article n Peake's Commentary on the Bible (Revised).
3. Smith G.A., *Historical Geography of the Holy Land.*
4. Baly, D., *Geography of the Bible.* 1957.
5. Rowley, H.H., *Students Bible Atlas.*
6. Y. Aharoni, *The Land of the Bible*, Burns and Oats, 1973.
7. Y. Aharoni, *Atlas of the Bible*, MacMillan, 1973.
8. R.D. Vaux, *Ancient Israel*, D.L.T. 1973.
9. D. Hopkins, *The Highlands of Canoan*, Almond, 1985.
10. W. Brueggeman, *The Land*, SPIK, 1978.

6

விவிலியமும் அகழ்வியலும்

அ. மினாசோன்

1. முகவுரை

அண்மையில் எகிப்து, சின்ன ஆசியா, அரேபியா, மெசப்பொத்தாமியா, பாபிலோனியா, அசீரியா போன்ற நாடுகளில் பல மேடுகளைத் தோண்டிப் பார்த்து அவற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பொருள்களை அறிவியல் ரீதியாக அறிஞர் ஆராய்ந்தனர்; அவற்றின் காலம், அவற்றைப் பயன்படுத்திய மக்களின் பண்பாடு, சமய நம்பிக்கை, சடங்குகள், இலக்கியம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை நிறுவினர். விவிலியத்தின் பல பகுதிகளுக்குக் கூடுமானவரை விளக்கம் காணுவதே இந்த அகழ்வியலின் நோக்கம். இதன் முடிவுகளை வைத்துக் கொண்டு விவிலியத்தின் உண்மைகளை அகழ்வியல் நிறுவுகின்றது என்றோ, அகழ்வியல் விவிலியத்தைத்தான் மெய்ப்பிக்க வேண்டுமென்றோ எவரும் கருதக்கூடாது. இது தேவையுமன்று, அகழ்வியலின் நோக்கமுமன்று, விவிலியத்தின் வரலாறு எந்த அளவுக்கு அகழ்வியலோடு துணை போகிறது, எந்தெந்த விதங்களில் மாறுபட்டு இருக்கிறது என்பதை அலசி ஆராய்ந்து மக்களுக்குத் தருவதே அகழ்வியலின் தனிச் சிறப்பாகும்.

பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, இஸ்ரயேல், டென்மார்க் முதலிய நாடுகளிலிருந்து அகழ்வியல் குழுக்கள் பல புது உண்மைகளைக் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளன. வட்ட வடிவமான குன்றாகத் தோன்றும் இடங்களையோ, பழமையான மண்மேடுகளையோ இக் குழுக்கள் தெரிந்து கொண்டு அவற்றைக் குறுக்கே வாய்க்கால்போல் தோண்டிக்கொண்டே போகும்; கிடைக்கும் தடயங்களைப் பத்திரமாகக் குறிப்பேட்டில் பதிவுசெய்து கொள்ளும். இவை சிறு சிலைகளாக, பானை ஓடுகளாக, களிமண் பலகைகளாக, போர்க் கருவிகளாகஇருக்கலாம். கருத்தியல் என்னவென்றால், ஒரு நாடு உருவாக்கப்படுகிறது, நாளாவட்டத்தில் அம் மக்கள் அழிந்துபடுகின்றனர்; மீண்டும் அந்நாடு கட்டப்பட்டுகிறது. இவ்வாறு அடுக்கடுக்காக ஒரே இடத்தில் பற்பல கால வரம்புகளில், பற்பலச் சூழ்நிலைகளில் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் பயன்படுத்திய பொருட்களைக்கொண்டு அவர்களின் பண்பாட்டை ஓரளவு புரிந்து கொள்ளவும், நமது விவிலிய வரலாறுகளின் உண்மையைப் பிற ஏதுக்களின் மூலம் உரைத்துப்பார்க்கவும் சாத்தியமாகின்றது. இந்தப் பழமையான மண்மேடுகள் தெல் (Tell) எனப்பெயர் பெறும். தெல்-அபீபு (எசே. 3:15 காண்க) இலாக்கீசு, மெகித்தோ தோத்தான் ஆகிய இடங்கள் இத்தகைய மண்மேடுகள்தாம்.

தடயங்கள் கிடைக்கும் என்ற ஊகத்தால் அகழ்வாராய்ச்சியாளர் சில இடங்களைத் தோண்டுவர்; விவிலியப் பெயரால் அழைக்கப்படும் பகுதிகளைத் தோண்ட முற்படுவர் பெயர் சிதைந்தும், திரிந்தும் இருந்தால் ஏறத்தாழ அரேபிய பெயர்களைக்கொண்டும், நாடோடி மக்களின் குறிப்புக்களைக்கொண்டும், ஓரிடத்தைத் தோண்ட முனைவர். தோண்டும் இடம் மக்கள் வாழும் இடங்களுக்கு அருகாமையில் இருப்பின் கடினம் இராது. அவைகளுக்கு அப்பால் கடுவெயில் இருக்குமானால் தொல்லை அதிகம். இவ்வாறு அகழ்ந்து கிடைத்த முடிவுகளைப் பின்வரும் காலப் பிரிவுகளாகக் கூறலாம்:

2. அகழ்வும் பண்டைய பண்பாடும்

காலப்பிரிவு	ஆண்டு	தடயம்
1. பழைய கற்காலம்	கி.மு. 6,00,000	நன்கு செதுக்காத கைப்பிடியுள்ள கல் ஆயுதம்
2. நியண்டர்தால் (Neanderthal)	கி.மு. 1,80,000	செதுக்கிய மரத்துண்டு குகை ஓவியம்.
3. இடைக் கற்காலம்	கி.மு. 10,000	சிறு கல் ஆயுதங்கள்.
4. புதுக் கற்காலம் (Neolithic Age)	கி.மு. 7000	வழவழப்பான கல் ஆயுதங்கள், பானை ஓடுகள்
5. தாமிரக் காலம் (Chalcolithic)	கிமு. 4000	கயிறு, கடைசல் கருவிகள்.
6. பித்தளைக்காலம் (Bronze Age) I	கி.மு. 3200	பானை வனையும் சுழல் வட்டு.
" " II	கி.மு. 2050	முக்காலி.
" " III	கி.மு. 1350	பால் பாத்திரம்.
7. இரும்புக் காலம் (Iron Age) I	கி.மு. 1200	பெலிஸ்தியர் ஓவியங்கள்.
" " II	கி.மு. 900	பெரிய சாடிகள்.
8. பாரசீகக் காலம்	கி.மு. 600	காசுகள், சுடு மட்பாண்ட சவப் பெட்டிகள்.
9. கிரேக்கர் காலம்	கி.மு. 300	கும்ரான் சாடி போன்றவை.
10. உரோமர் காலம் I	கி.மு. 50	கும்ரான் சாடிகள், வட்ட விளக்குகள்.
" " II	கி.பி. 200	செந்நிறக் கலங்கள், அச்சுப்பதித்த பொருள்கள்.

குறிப்புகள்: (1) இந்தக் காலங்கள் அனைத்தையும் ஒன்றன் பின் ஒன்றாக ஒவ்வொரு நாட்டிலும் அடுக்கடுக்காகக் காண முடியாது. (2) சில இடங்களில் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குத் தாவுவதும் சாத்தியமே. (3) கற்காலத்தை இன்னும் உட்பிரிவுகளாகப் பிரித்துக் கூறுவதும் வழக்கம். (4) கி.மு. 10,000-3200 காலத்தை, அதாவது, காலப்பிரிவு 3,4,5,ஐ செரமோலிதிக் என்றும் அழைப்பர்.

செரமோலிதி பண்பாட்டுக் கூறுகள்: (1) கல்கருவிகளில் நல்ல முன்னேற்றம் காணப்படும். (2) சிற்றூர்கள் அல்லது காட்டுப்பகுதிகளில் மக்கள் வாழத் தலைப்படுவார்கள். (3) உணவைச் சேகரிக்கும் வழக்கத்தைவிட உணவு உற்பத்தி செய்வதே மக்களிடையே அதிகம் காணப்படும். வேட்டையாடுதல், கனி சேகரித்தல் ஓரளவு குறைந்து பயிர்த்தொழில், விலங்குகளைப் பழக்கி அவற்றால் வேலைப் பளுவைச் சமாளித்தல் முதலியவை இப் பண்பாட்டின் கூறுகளாகும்.

எரிகோவில் சுமார்	கி.மு. 6000
ஈராக்கில் ஜார்மோ	கி.மு. 6000
ஹஸ்ஸுனா தைக்ரிஸ் ஆற்றுக்கு மேற்புறம்	கி.மு.6000
எகிப்தில் ஃபய்யும்	கி.மு.4200

சாக்கோலிதிக் பண்பாடு: பாலஸ்தீனாவில் மட்டும் உள்ள பண்பாட்டின் பெயர் W.F. அல்ப்ரைட் கூறுகள்: (1) கல் கருவிகள் குறைந்து தாமிரக் கருவிகள் அதிகரித்தல். (2) பண்பாட்டில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. எழுதும் முறையைக் கற்றுக் கொண்டு, நகர்கள் கூட்டு நகர்கள் அமைத்து வாழத் தலைப்படல். இப் பண்பாட்டின் உட்பிரிவுகள்:

(அ) ஹலாஃபியன் பண்பாடு	சுமார்	கி.மு.	4000
(ஆ) ஒபெய்டான் பண்பாடு	-	-	3800
(இ) வர்க்கா பண்பாடு	-	-	3500
(ஈ) ஜெம்டெட்ராஸர் பண்பாடு	-	-	3000

கண்டுபிடிக்கப்பட்டப் பானையோடுகளின் நிறம், அமைப்பு, வழவழப்பு முதலியவற்றை நுணுகிச் சோதித்து உத்தேசமாகக் காலத்தைக் கணிக்கின்றபோது இந்தப் பாகுபாடுகள் எழுகின்றன.

சுமேரியர் எழுதும் முறையைக் கண்டுபிடித்தாலும், நல்ல அமைப்பு முறை சமூகத்தில் இருந்ததாலும் இப்பண்பாடும் ஒரு மாதிரிப் பண்பாடு ஆகியது. இத்துடன் தொடர்பு கொண்டது மொஹஞ்சதாரோ-ஹரப்பா பண்பாடு என்று சில நூல்வல்லார் கூறுவர். எகிப்தில் பாதாரியப் பண்பாடு இதே காலத்தில் இருந்தது. ஹீரோக்லிபிக்கு எழுத்துக்கள் மூலம் கருத்தை வெளியிட்டனர். இந்த எழுதும் முறையைச் சுமேரியரிடமிருந்து எகிப்தியர் கற்றனரா அல்லது தாமாகவே தெரிந்து கொண்டார்களா? இது ஆராய்ச்சிக்கு உரிய ஒரு கேள்வி. ஆகவே உலகில் மூன்று இடங்களில் பண்பாடு சிறந்திருந்தது. அவை 1. எகிப்து, 2. மெசப்பொத்தாமியா, 3. மொஹஞ்சதாரோ-ஹரப்பா. இவை எங்ஙனம் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு இயங்கியது என்பதை வரையறுப்பது கடினம். எகிப்துக்கும் மெசப்பொத்தாமியாவுக்கும் இடையில் உள்ள பாலஸ்தீனம் இப் பண்பாடுகளால் பாதிக்கப்பட்டது.

(அ) எகிப்து

நிலவியல் அளவில் எகிப்து தனித்திருந்த போதிலும், வணிகம் செய்யும் பொருட்டுப் பாலஸ்தீனாவைக் கடக்க வேண்டியிருந்தது. எகிப்தின் படைகள் சிரியாவிலும், பாலஸ்தீனாவிலும் இருந்தன. பெனிக்கேயருடன் வணிகத் தொடர்புமிருந்தது. யுகாரிட் என்னும் பெனிக்கேய நகரில் எகிப்தின் பொருள்கள் விற்பனையாயின. குலத் தந்தையரின் காலத்தில், எகிப்து நாட்டினுள் ஹிக்சாஸ் என்னும் இனத்தார் நுழைந்து அவாரிஸ் என்னும் இடத்தைத் தலைநகராக்கினர். துத்மோசே 1 (1530), III (1483) அரசர்கள் காலத்திய எகிப்தியத் தாயத்துகள், வண்டு இலச்சினைகள், சிற்பங்கள், அரச விளம்பரங்கள் முதலியன பாலஸ்தீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தெல் எல் அமார்னா கடிதங்கள் எங்ஙனம் பாலஸ்தீனாவில் ஹபிரு என்னும் இனத்தார் ஊடுருவினர் என்பதை விளக்குகின்றன. எகிப்தில் பரவலாக இருந்த, "அரசனே தெய்வம்" என்னும் கருத்து பல கோணங்களில் சடங்கு, வழிபாடு நூல்பகுதிகளில் தெளிவாகின்றன. இவற்றை எவ்வளவு தூரம் இஸ்ரயேலர் ஏற்றனர் அல்லது ஏற்கவில்லை என்பது இன்னும் முடிவுகட்டப்படவில்லை. அமென் எம் ஒபெத்தின் ஞானம் என்னும் எகிப்திய ஞான நூலின் பாணியில் இஸ்ரயேலர் சிந்தித்தனர்.

யூதர்கள் பல நாடுகளில் சிதறிக் குடியேறியபோது, எகிப்தில் குடியேறியவர்களைப் பற்றிய தகவல்களை நீலஆற்றின் முகத்துவாரத்தில் நடத்திய அகழ்வுகளால் அறிய முடிகிறது. வணிகக் குறிப்புகள், சாதாரண கடிதங்கள், பானையோட்டிலும், பாப்பைரியிலும் கொச்சை கிரேக்க மொழியில் எழுதப்பட்ட செய்திகள் கிரேக்க-உரோமர் காலத்திய சமூகப் பண்பாட்டை ஊகித்துக்கொள்ள உதவுகின்றன. பவுலின் திருமுகங்கள் எழுதப்பட்ட பின்னணியையும் இவற்றால் நாம் உணரலாம்.

எகிப்தில் வாழ்ந்த யூதக்குடிகளின் மறைநூற் பகுதியாக நாஷ் பாப்பைரஸ் என்ற பத்துக் கட்டளைத் தொகுப்புகளை அகழ்வு வெளிக்கொணர்ந்தது. இதன் காலம் சுமார் கி.மு.100 என்றும் (அல்ப்ரைட்), சுமார் கி.பி.100 என்றும் (காஹ்லே) கூறுவர். வேறுபல செப்துவஜிந்து பிரதிகளின் பகுதிகளும் கிடைத்துள்ளன. இவ்வளவு விவரமும் எகிப்து இஸ்ரயேல் தொடர்பையும், பண்பாட்டு மோதல் அல்லது இணைவையும் தெரிவிக்கிறது.

(ஆ) மெசப்பொத்தாமியா

தென் மெசப்பொத்தாமியா சுமேர் எனப் பெயர் பெறும். கி.மு. 4000 அளவில் தெற்கு ஈரானில் உள்ள மேட்டு நிலங்களிலிருந்து ஓர் இனத்தார் சுமேரில் குடியேறினர். இவர்கள் நாகரிகம் மிகமிகத் தொன்மை வாய்ந்தது. இவர்கள் அமைத்த மாடக்கோபுரங்கள் (சிக்குரத்), கோவில்கள், வீடுகள், ஊர் என்னும் இடத்தில் நடத்திய பரிபாலன முறை, வடிகால்கள், சிதைந்த சுமேரியரின் பண்பாட்டைக் காட்டுகின்றன. வர்க்கா, சூருப்பக், இலகஸ், கபாஜே, நிப்பூர், கீசு போன்ற இடங்களில் களிமண்

பலகைகளில் காணப்படும் படவெழுத்துக்கள் பிற்காலத்தில் எழுந்த ஆப்பெழுத்துக்களுக்கு முன்னோடிகளாகும். கி.மு. 3500இல் உள்ள இந்நாகரிகத்துக்கும், மொஹஞ்சதாரோ-ஹரப்பா நாகரிகத்துக்கும் உள்ள தொடர்பை இனிவரும் அகழ்வுகள் எடுத்துக்காட்டும்.

சுமேரியர் கருத்துக்களை இஸ்ரயேலர் நேரடியாக எடுத்துக்கொண்டார்களா? இஸ்ரயேலரின் மூதாதையாகிய ஆபிரகாம் ஊர் (மெசப்பொத்தாமியாவில் உள்ளது) நகரில் வாழ்ந்தபோது, உலகத் தோற்றம் பற்றிய புராணம், காரணம் காட்ட எழும் கதைகள், சடங்குப் பாடல்கள், சடங்குப் புராணங்கள் இவற்றைச் சுமேரியரிடம் இருந்து கேட்டிருக்க வேண்டும். இத்தகைய சுமேரிய ஏடுகளைச் செமித்தியர் அறிந்திருந்தனர். இவை பல்வேறு முறைகளில் திரிந்தும், மாறியும் வழக்கில் இருந்தன. நினிவேயில், அசர் பானிபல் (கி.மு. 604-626) நூலகத்தில், 100 ஆண்டுகளுக்கு முன்னர் இத்தகைய ஏடுகள் இருந்ததை அகழ்வாராய்ச்சி மூலம் கண்டுபிடித்துள்ளனர். எனவே, சுமேரியரின் மரபுக் கதைகளை, அசிரியர்மூலம் எபிரேயர் அறிந்தனர். இஸ்ரயேலர் சுமேரியரிடமிருந்து நேரடியாகவன்று, அசிரியர் மூலமாகப் பெற்றனர் எனலாம்.

சுமேரியர் பெருவெள்ளம் குறித்த புராணங்களை அறிந்திருந்தனர். இந்த உண்மையைப் பல முத்திரைப் படங்கள் காட்டுகின்றன. எனினும் கில்காமேஸ் புராணக்கதை தொடக்க நூலில் சுமேரியப் பாணியில் அன்று, அக்காடியப் (அசிரிய-பாபிலோனிய அல்லது வட சுமேரிய) பாணியில் காணப்படுகிறது. இந்த அக்காடியப் புராணக் கதைதான் நினிவேயில் அசூர் பானிபல் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டது. இந்த அக்காடியப் புராணக் கதையின் மூலம் சுமேரியப் புராணத்தில் இருக்கிறது. இந்த மூலக் கதைகளில் நம் விவிலியத்தில் வரும் நோவா, (1) உட்நபிஸ்டிம், (2) சியுசுட்ரா, (3) சிசுத்ராஸ், (4) அட்ரகசிஸ் என்று வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறார். கி.மு.2000ஐ அடுத்த ஆண்டுகளில் சுமேரிய உருளை முத்திரைகளில் வெள்ளத்துக்குத் தப்பிய மனிதன் ஒருவன் படகில் இருப்பதுபோன்ற கருத்துப் படங்கள் இருக்கின்றன. சுமேரிய அரச அட்டவணைகளும் பெருவெள்ளத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இந்தப் பெருவெள்ளம்தான் நிகழ்கால வரலாற்றையும் தொடக்கக் கால வரலாற்றையும் பிரிக்கிறது. இந்த அட்டவணைப் பெயர்களில் இடம்பெற்ற சிலரது வயது விவிலியத்தில் வரும் கூடுதல் வயதினரான மெதுசெலாவின் வயதைவிட அதிகம்.

தென் மெசப்பொத்தாமியாவில் வெள்ளம் வந்ததற்கு சான்று இருக்கிறது. கி.மு.4000ஐ அடுத்து தென் மெசப்பொத்தாமியாவில் ஒரு நகர அமைப்புக்கும் மறு நகர அமைப்புக்கும் இடையில் சுமார் எட்டு அடி இடைவெளிப் பரப்பு இருக்கிறதை உல்லி (Sir Leonard Wolley) கண்டார். இந்த இடைவெளிப் பகுதி மண்ணை ஆராய்ந்தபோது இது வெள்ளத்தால் ஏற்பட்ட களிமண் அன்று, கடுங்காற்றால் ஏற்பட்டதென்பது புலனாயிற்று. கீசு, வர்க்கா, தெல்ஃபாரா (சூரூப்பக்கு) முதலிய இடங்களில் காணும் இடைவெளிப் பகுதி மண் காலத்தால் ஊர் நகரின் இடைவெளிப் பகுதி மண்ணை விட வேறுபட்டது. ஊர் நகருக்கு நாலே மைல் தொலைவில் உள்ள உபைது (Ubaid) நகரில் இடைவெளிப் பகுதி மண் வேறு காலத்தைச் சுட்டுகிறது. எனவே, வெள்ளம் அனைத்து உலக வெள்ளமன்று; அவ்வட்டார வெள்ளம் என்பது உறுதியாகிறது. மேலும், இந்த வெள்ளக் கதைகள் தென் மெசப்பொத்தாமியாவில் அடிக்கடி ஏற்பட்ட வெள்ளம் ஏற்படுத்திய சேதங்களையும் மனிதர் வென்று, அஞ்சாது சதுப்பு நிலங்களையும் வாழும் இடங்களாக்கிய வீர வரலாற்றைக் கூறுகின்றன எனலாம். மேலும், பாபிலோனியப் படைப்புக் கதையில் வருவது போன்று, கடலை அடக்கி ஒழுங்கை ஏற்படுத்திய (ஏனூமா ஏலிஸ் என்ற புராணம்) பாணியில் வெள்ளக் கதையும் கூறப்பட்டிருக்கலாம்.

சுமார் கி.மு.2200 அளவில் மெசப்பொத்தாமியா முழுவதையும் அக்காது நகரிலிருந்து செமித்திய இனத்தார் ஆளத் தொடங்கினார்கள். சர்கோன் (கி.மு.2300), நரம்சின் என்பார் வரலாற்றில் இடம் பெற்றுவிட்ட பேரரசர் களாவார்கள். இந்த அக்காது நாட்டின் புகழ் இரானிய மேட்டு நிலங்களிலிருந்து வந்த காட்டு மிராண்டிக் கூட்டத்தினரால் அழிந்தது. அழிந்த நாட்டைப் பட்டமரம் மீண்டும் துளிர்ப்பதொப்ப சுமேரிய மூன்றாம் குலத்து ஊர் நகரில் நிறுவியது. இந்த ஊர் நாடுதான் ஆபிரகாமுடன் தொடர்புடையது. எனவேதான் இங்குக் கிடைக்கும் எந்த அகழ்வுப் பொருளும், அது கலைப் பொருளாயினும் சரி, அரசர் சமாதிகளாயினும் சரி வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது. ஊன்றிப்பார்த்தால், குலத் தந்தையருக்கும் இந்த அகழ்வுப்பொருட்களுக்கும் இடையே 1000 ஆண்டுக் கால இடைவெளி இருக்கிறது புலனாகும். சுமேரியக் கலையை விளக்கும் இந்த அகழ்வுகள் சுமேரியப் பண்பாட்டைக் காட்டுகிறதேயன்றி, எபிரேயர் சுமேரியப் பண்பாட்டை ஏற்றுக் கொண்டார்கள் என்பதை மெய்ப்பிப்பதில்லை.

ஊர் நகரை ஆண்ட மூன்றாம் வழிமுறையினர் காலத்தில் சுமேரியப் பொருட்கள், பானை ஓடுகள், முத்திரைகள், உலோக வேலைப்பாடுகள் ஆகியவை மெசப்பொத்தாமியா-சிரியா வழியாக அனாட்டோலியாவுக்குச் சென்றதை அகழ்வு மெய்ப்பித்துள்ளது. ஊர் நகர் அழிந்தது. சுமேரிய நகர்களாகிய இசின், லார்சா, பாபிலோன் ஆகியவை வலிமை பெறத் தொடங்கின. இறுதியில் பாபிலோன் வலிமை மிகப் பெற்றது. பாபிலோனை எதிர்க்க முற்பட்ட நகரங்கள் தோல்வியுற்றன. இவையெல்லாம் அக்காடிய ஆப்பெழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. மேலும் மாரி என்னும் இடத்தில் 2,5000 களிமண் பலகைஏடுகளில் ஒரு பகுதி இவற்றை உறுதிப்படுத்துகின்றன. கம்முரபி அரசன் காலத்தில் வாழ்ந்த சிம்ரிலிம் (கிமு.1700) சிற்றரசனின் சிதைந்த மாளிகையிலிருந்தும் இவற்றை அறியலாம்.

சுமேரியப் பண்பாட்டைச் செமித்தியர் விரைந்து ஏற்றனர்; சுமேரிய ஆப்பெழுத்து அசைகளைச் செமித்திய சொல்லசைகளாக மாற்றினர். அறிஞரும் பூஜ்யரும் சுமேரிய மொழியைக் கற்றனர். இம்மொழி 1400,1300 ஆம் ஆண்டுகளில் இராஸ் சாம்ரா (யுகாரிட்) நகரில் கானானிய மொழியுடன் கலந்தும் இணைந்தும் காணப்படுகிறது.

ப.ஏ. ஆராய்ச்சிக்கு மெசப்பொத்தாமிய அகழ்வுகள் துணை செய்கின்றன. அக்காடிய ஏடுகளில் காணப்படும் கில்காமேஷ் புராணம், மார்தூக் தெய்வத்துக்கும் தியாமத்துக்கும் உள்ள போர், உயர இருந்து (Enuma

Elish) என்று தொடங்கும் பாபிலோனியப் படைப்புப் புராணம் - இவையெல்லாம் புத்தாண்டின் போது வசந்த விழா வழிபாட்டுப் பாடல்களாயிருந்தன. இவற்றை அசூர் பானிபல் நூலகத்தில் கண்டெடுத்துனர். எனினும், கருத்தாலும், மொழிநடையாலும், கி.மு.2000 ஆம் ஆண்டிலேயே இவை இருந்திருக்கவேண்டும்என்று கருதப்படுகின்றது. யோபு திருநூலைப் போன்ற ஞான நூலும் சரி, கம்முரபி சட்டமும் சரி - மந்திரங்களும், மந்திரத்துக்குப் பதில்மந்திரமானாலும் சரி, இறைவேண்டல் களானாலும், புலம்பலானாலும், தென் மெசப்பொத்தாமியாவில் கி.மு.2000ஆம் ஆண்டிலும், அசீரியாவில் 900-700 ஆம் ஆண்டிலும் காண முடிகிறது. இவற்றையெல்லாம் மாரியிலும், நூசியிலும் கண்டுபிடிக்கும் முன்னமே அசூர் பானிபல் நூலகத்தில் கண்டுபிடித்தாயிற்று. இவற்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட எல்லா ஆப்பெழுத்து ஏடுகளும் எவ்வளவு துரிதமாக மொழிபெயர்க்கமுடியுமோ அவ்வளவு மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.

வரலாற்று ஏடுகள், அரச சாசனங்கள், வரலாற்றுக் குறிப்புக்கள், தூண் வாசகங்கள், அடிக்கல் நாட்டுகையில் எழுதிய வாசகங்கள், அசிரிய அரசர்களின் வீர நிகழ்ச்சிகள், செயல்கள் - எல்லாம் நமக்கு முன்பே தெரியும். அண்மையில் அகழ்ந்த அசிரிய மண்மேடுகள் முன்பு நமக்குத் தெரிந்த தகவல்களையே உறுதிப்படுத்துகின்றன. நபோபொலாசார், நெபுகாத்நேசர் ஆகியோர் நடத்திய திடீர் தாக்குதல் விவரிப்புகள் நமக்கு இஸ்ரயேல் யூத அரசுகளின் காலஒருமிப்பைக் காண்ண உதவுகின்றன; யூத அரசின் இறுதிக் காலத்தை, அதாவது யோசியாஅரசனின் இறப்பு முதல் எருசலேம் வீழ்ச்சி வரை(கி.மு.597) கட்டம் தவறாமல் புரிந்துகொள்ளவும் உதவுகின்றன. எந்தெந்த விதங்களில் இவை (பிற வரலாற்றுக் குறிப்புக்கள்) உதவுகின்றன என்பதைப் பின்னர் பார்க்கலாம்.

சென்ற நூற்றாண்டில் பாபிலோனியாவில் கிடைத்த அகழ்வுகளை மையமாக வைத்துத்தான் **அனைத்தும் பாபிலோனிய மயம்** என்ற கருத்து ஒரு சில அறிஞரிடையே எழத் தலைப்பட்டது. இக்கருத்தை எதிர்த்தவர்களும் இருந்தார்கள்.

சிரியா-பாலஸ்தீனம் எவ்வாறு நாடோடி மேய்ப்பர்களால் ஆக்கிரமிக்கப்பட்டதோ அவ்வாறே அரேபியப் பகுதிகளிலிருந்து செமித்திய இனத்தவர் தாக்குதலுக்கும் ஆக்கிரமிப்புக்கும் மெசப்பொத்தாமியா களமாகியது. இவ்வாறு தாக்கியவர் எமோரியர் என்க. எபிரேயர், கானானியர், அரமேயர் ஆகியவர் இன வழியிலே மெசப்பொத்தாமிய செமித்தியருடன் ஒன்றுபட்டவர். எனவே, ஒரு சாராருடைய பழக்க வழக்கங்கள், சமய உணர்வுகள், சமயச் சடங்குகள், தொழுகை முறைகள், மறு சாராரிடையேயும் காணப்பட்டன. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு கம்முரபி சட்டமாகும். இந்தச் சட்டம் கறுப்புத் தூணில் எழுதப்பட்டு சூசா என்னும் இடத்தில் இருந்தது. இதை அசிரிய சட்டத்தோடு வைத்து ஒப்பிடும்போதும், எபிரேய சமூகச் சட்டத் திட்டத்தோடு இணைத்துப் பார்க்கும்போதும் (விடு. 20: 23-23:33) இவற்றின் தொடர்பு நன்கு புலனாகும்.

இச்சட்டங்களிடையே இணைவு காணப்படினும் சில நலல வேற்றுக்கூறுகளையும் இவற்றில் காணலாம். மெசப்பெத்தாமியா சட்டத்திட்டங்களை எடுத்துக்கொண்டால், நகர்ச் சூழ்நிலையையும், அவை சுமேரியச் சட்டத்திலிருந்து உருவான விதத்தையும் காணலாம். இந்தச் சுமேரியச் சட்டம் ஊர் நகரத்தில் மூன்றாம் வம்சத்தைத் தோற்றுவித்த ஊர் - நம்மு (கி.மு.2050) என்ற அரசனால் உருவானவை. ஊர்

நம்முவின் சட்டத்திட்டம் கி.பி.1952இல் தான் அகழ்வால் வெளிவந்தது. கம்முரபி அரசனுக்கு 100 ஆண்டுகள் முற்பட்ட **லிப்பிட் இஸ்தார்** சட்டத்தின் பகுதி ஏடுகள் மட்டும் நிப்பூரில் கண்டுபிடிக்கப்பட்டன. **எஷ்நுன்னா** சட்டம் பாக்தாதுக்குக் கிழக்கே டெல் -அபு - ஹிர்மில் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

பொதுவாக, மெசப்பொத்தாமியச் சட்டங்களில் சொத்துக்கு மதிப்பும், செல்வர்- வறியர் என்ற பாகுபாடும், கடுமையான தண்டனைகளும் இடம்பெற்றன. எபிரேயச் சட்டத்திலோ மெசப்பொத்தாமியச் சட்டத்தின் கருவமைப்பு காணப்பட்டபோதிலும், பேராசிரியர் அல்ட் கூறுவதைப் போல மனிதரை மனிதராக மதிக்கும் மாண்பினைக் காணலாம். பேதமற்ற சமுதாயத்தையும் காணலாம். உடன்படிக்கையின் வட்டத்தின் உள்ளே இறைவனைத் தொழுவதில் ஒன்றித்துத் திகழும் உறுதியைக் காணலாம்.

அல்ட் கூறுவதுபோல, சட்டங்களை இருவகையாகப் பகுக்கலாம்: (1) வல்லுறுதிச் சட்டம்; (2) வழக்குச் சட்டம்; வல்லுறுதிச் சட்டத்தை எபிரேயச் சட்டத்தில்தான் காண இயலும். வழக்குச் சட்டத்தையோ மெசப்பொத்தாமியச் சட்டத்திலும் காண முடியும். வல்லுறுதிச் சட்டம் கடவுளின் ஆணையைக் கூறுகிறது. வழக்குச் சட்டமோ மனிதர் சமூகத்திற்கு விதிக்கும் சட்டத்தைக் கூறுகிறது. வல்லுறுதிச் சட்டங்கள் கடவுளின் ஆணைகளே. இந்த ஆணைகளை மீற, மாற்ற, தளர்த்த மனிதர் எவராலும் என்றும் இயலாது. அகழ்வியல் விவிலிய ஆராய்ச்சிக்குத் தந்த சிறந்த கருவூலக் கருத்து இது.

விவிலியத்தின் புனிதத்தன்மை பாழ்பட்டுவிட்டதெனச் சிலர் ஏங்குவர். ஏனென்றால், படைப்பின் கதைகள், இங்கு மட்டுமல்ல, அங்கும் உண்டு என்றும் வெள்ளக் கதைகள் இங்கு மட்டுமல்ல, அங்கும் உண்டு என்றும் அகழ்வியல் கூறுவதைத் தவறாகப் புரிந்துகொள்ளுகிறவர் எவரேனும் இருந்தால் அவர்கள் இதை உணரட்டும். பொதுவான கூறுகள் இருப்பதால், நாய் நரியாகிவிடாது; சிறப்பான கூறுகளையும் நாம் மறக்கலாகாது. திருச்சட்டத்தைப் பொறுத்தமட்டில் பொதுக் கூறுகளைப் பார்ப்பதோடு சிறப்புக் கூறுகளையும் ஒருவர் நோக்க வேண்டும். இதே கோணத்தில்தான் படைப்பின் கதைகளையும், வெள்ளத்தின் கதைகளையும் ஒருவர் அறிந்து தெளிய வேண்டும். கில்காமேஸ் புராணத்தில் அறக்கூறு ஒன்றும் இல்லை. விவிலியப்குதியோ மனிதரின் பாவம் கடவுளுக்கு அருவருப்பு என்று காட்டுகின்றது. எபிரேய எழுத்தாளர்கள் இந்தக் கதைகளையும் தம் கருவிகளாகப் பயன்படுத்தினர். கடவுள் தங்களைத்தான் தேர்ந்து கொண்டார் என்ற நினைவு ஒருபோதும் அவர்கள் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை.

இஸ்ரயேலர் வெற்றி எக்களிப்பில் ஆண்டவரை மறந்து விடவில்லை; தோல்வி அடைந்தபோதும் துவண்டு விடவில்லை; தோல்வியைத் திரித்து வெற்றியாய்க் காட்டவும் இல்லை. அசீரியர் வரலாற்றிலே எத்தனை எத்தனை

விவரிப்புகள், வெற்றிகள், சூறையாடுதல், சிறைபிடித்தோர் பட்டியல்கள், திட்டங்கள், சாதனைகள் இடம்பெற்றன. புது பாபிலோனிய வரலாறு நிகழ்ச்சிகளின் விளைவை விவரித்து எழுதும். அசிரிய வரலாறும் சரி, பாபிலோனிய வரலாறும் சரி, வரலாறு சுட்டிக்காட்டும் இலக்கைக் காட்டுவது கிடையாது. இந்தச் சிறப்பியல்பு இஸ்ரயேலுக்கே உரியது. இதில் இஸ்ரயேலர் எகிப்தையும், மெசப்பொத் தாமியாவையும் மிஞ்சிவிட்டார்கள்.

பண்டைக்கால காலவரிசையை நிறுவவும் மெசப்பொத்தாமிய அகழ்வியல் துணை புரிகிறது. அசீரியர் தங்கள் தலைவர்களின் பெயர், பதவிப் பட்டியலை வைத்திருந்தார்கள், முக்கிய நிகழ்ச்சிகளையும் எழுதி வைத்திருந்தார்கள். இவற்றை இன்னொரு நாட்டின் கால வரிசையோடும் பட்டியலோடும் ஒத்துப் பார்த்தால் **கால இணைவு** புலனாகும். தழுவுதற் காலப் பட்டியல் (Relative Chronology) என்று இதற்குப் பெயர். இவ்வாறு ஒத்துப்பார்க்காமல், ஒரு நூல சுட்டும் சான்றுகளையே வைத்துக் காலத்தைக் கணித்தால் அதற்கு 'முடிவான காலப்பட்டியல்' (Absolute Chronology) என்று பெயர். அசிரிய அரசர் பட்டியலும், அவர்கள் காலமும் என்ற விவரம் கி.மு. 738இல் எழுதப்பட்டது. இதை இன்னொரு அரசர் பட்டியலுடன் இணைத்துப் பார்த்தபோது சரியான தகவல் என்று மெய்ப்பிக்கப்பட்டது. சிம்னு மாதத்தில் ஏற்பட்ட சூரியக்கிரகணத்தை ஆதாரமாக வைத்து கி.மு.763 ஜூன் 15ஆம் தேதி என்று கணக்கிட்டு இத்துடன் ஆண்டுகளைக் கூட்டி அல்லது குறைத்துக் கால வரிசையைக் கணிக்கலாம். இதே கால வரிசை இஸ்ரயேலர் வரலாற்றையும், அசிரிய, பாபிலோனிய, பாரசீக, கிரேக்க கால வரிசையையும் இணைக்கின்ற காரணத்தால் இஸ்ரயேலர் வரலாற்றின் எந்தப் பகுதிக்கும் ஏற்ற காலம் எதுவெனக் கூறுவது கடினமன்று.

(1) **இஸ்ரயேலரின் அண்டைய இனத்தார்:** [1] *ஊரியர், ஏத்தியர் என்ற இனத்தவர்கள் குறித்து அகழ்வாராய்ச்சி அதிகத் தகவல்களைத் தந்துள்ளது. மெசப்பொத்தாமியா விலிருந்து எடுக்கப்பட்ட அக்காடிய ஏடுகளில் ஊரியர் வினோதமான பெயர்களால குறிக்கப்படுகிறார்கள் (கி.மு.2060). இவர்கள் அர்மீனியா மலைகளிலிருந்து வந்தவர்கள், மேல் மெசப்பொத்தாமியாவில் குடியேறினார்கள் (சுமார் கி.மு.2000); 1700-1600ஆம் ஆண்டு திக்ரிஸ் ஆற்றின் கிழக்குப் புறம், வடசிரியா, பாலஸ்தீனா, ஏத்திய நாடுகளில் கூட்டங்கூட்டமாக குடியேறினர். நூசி நாடு கி.மு. 1500இல் ஊரியரால் நிறைந்திருந்தது. வடசிரியாவில் உள்ள அலாலக் நகரில் கி.மு.1700இல் ஊரியர் மிகுந்திருந்தனர். சுமார் கி.மு.1400இல் ராஸ்சாம்ரா(யுகாரிட்)வில் ஊரிய மொழியில் பல ஏடுகள் கண்டெடுக்கப்பட்டன. அமார்னா கடிதங்கள் கூட ஊரியத் தலைவர்களைப் பற்றிச் சொல்லுகின்றன. எகிப்தியர் சில சமயங்களில் சிரியாவையும், பாலஸ்தீனத்தையும், ஹுரு என அழைத்தனர். ஊரியரின் அரசு மித்தன்னி அரசாகும். இதன் தலைநகரம் வஸ்சுக்கன்னி ஆகும். எந்த இடம் இது என்பதில் ஐயம் எழுந்துள்ளது.*

கம்முரபி காலத்திய ஊரிய ஏடுகள் மாரி என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. போகஸ்கே என்னும் இடத்தில் கில்காமேஷ் புராணம் (முழுவதுமல்ல) ஊரிய ஏடுகளில் எடுக்கப்பட்டன. இத்திய ஏடுகளிலும் சிறு ஊரிய வாசகங்கள் உள்ளன. நீண்ட ஊரிய ஏடுகளில் சிறு இத்திய வாசகங்களும் உள்ளன. காரான் ஊரில் நிங்கல் என அழைக்கப்பட்ட சீன் என்னும் நிலாத் தெய்வத்தின் மனைவியே நிக்கல். ஊரிய சமயத்தில் நிக்கலைப் புகழ்ந்து பாடும் பாடல் புகழ் வாய்ந்தது.

இத்தியர்கள் வைத்துச் சென்ற பொருட்களிலும், ஏடுகளிலும் இருந்து, அவர்களைப் பற்றிய விவரம் வெளியாகியுள்ளது. இத்தியப் பண்பாடு பெலிஸ்தியர் உருவாவதற்கு முன்பே கி.மு.1200 அளவில் அழிந்தது. சிரியாவில் எகிப்திய செல்வாக்கு இருக்கவேண்டுமா அல்லது இத்திய செல்வாக்கு நீடிக்க வேண்டுமா என்ற விவாதம் இருந்ததாக எகிப்தின் XVIII, XIX இனக் குறிப்புகள் காட்டுகின்றன. இவ்வாறு விவாதம் இருந்ததற்கு ராஸ்சாம்ராவில் உள்ள அக்காடிய ஏடுகளும் காரணம் காட்டுகின்றன. யுகாரிட் எகிப்துடனும் இத்தியருடனும் நல்லுறவு கொள்ளவே விழைந்தது. இத்தியர், நாட்டு சுய ஆட்சிப் முறையை மதித்ததால், யுகாரிட்டின் உள் நிர்வாகத்தில் தலையிடவில்லை.

விவிலியம் இத்தியர் என்று குறிப்பிடுபவரை இரண்டு விதங்களில் அறிந்துகொள்ள வேண்டும். யூதேயா மலைகளில் வாழ்ந்தவர்கள் எனறும், சிரியாவில் வாழ்ந்தவர்கள் என்றும் வேறுபடுத்துவது நல்லது. முன்னவர்கள் பாலஸ்தீனாவை எபிரேயர் பிடித்தபோது அழிந்தனர் (யோசு.1:2-4). இத்தியர் என்ற சொல ஊரியரையும் குறிக்கலாம். உரியா ஓர் இத்தியன் (2சாமு. 11:6). உரியா, ஊரியர் ஒலி ஒற்றுமை காண்க.

இத்திய ஏடுகள் அக்காடிய மொழியில் எழுதப்பட்டவை. இனங்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை இவை விளக்குகின்றன. இந்த இன உடன்படிக்கைக் கூறுகள் எபிரேய உடன்படிக்கையின் மூலம் என்று துணியலாம். விக்டர் கொரோசெக் (கி.பி.1931), ஜார்ஜ் மெண்டன்கால் (கி.பி.1954), கிளவுஸ் பால்ட்சர் (கி.பி.1969) ஆகியோர் இவற்றை ஆராய்ந்து ஆறு கூறுகளாக்கி அவற்றிற்கும், விடு.20, யோசு. 24க்கும் உள்ள தொடர்பை வெளியிட்டுள் ளார்கள். எபிரேய யாவே உடன்படிக்கை, இத்திய அரச - சிற்றரச உடன்படிக்கைப் பாணியைப் பின்பற்றியிருக்கிறது என்பது இவர்கள் முடிவு. வேறுபாடுகளையும் உணர வேண்டும். (1) இத்தியக் குறிப்புகளில் உடன்படிக்கையை முனைந்து நடத்துபவரின் பெயர் இல்லை. ஆனால் விவிலியத்தில் மோசேயின் பெயர் எங்கும் வருகிறது. (2) சுமேர், கட்டி மொழிகளில் மாமிது, அல்லது அடே என்ற சொல்லின் வேர்ப்பொருள் ஆணை அல்லது சபதம் எபிரேய பெரீத்து சொல்லின் வேர்ப்பொருள் வேள்வித் தொடர்பானது. எனவே, இத்தியரின் ஆணையை, சொல்லை, வலியுறுத்துகையில், எபிரேயர் வேள்விச் சடங்கை வலியுறுத்தினர். மாரி ஏடுகளில் கழுதையைக் கொல்க என்றால் உடன்படிக்கை செய்க எனப் பொருள். ஆகவே எபிரேய வழக்கு, இத்தியரிடமிருந்து வந்தது என்பதைவிட எமோரியரிடமிருந்து (மெசப்பொத்தாமியா) வந்தது என்பது சரியாகும்.

[1] ஊரியரே ஏவியர் என்க (ஆதி.10:16). ஹுகோவின்க்லர் ஆரியர் என்பார்.

பெலிஸ்தியர்: இவர்கள் கி.மு.1225க்குப் பிறகு யோப்பா அருகே கடலோரப் பகுதிகளில் வாழத் தொடங்கினர். இவர்கள் பயன்படுத்திய மட்கலங்கள் (சாயம் பூசியவை) இதற்குச் சான்றாகும். இவை கி.மு.1300இல் உருவாக்கப்பட்ட சைப்ரஸ், ரோட்ஸ், மைசீனே மட்கலம் போன்றுள்ளவை. இந்த பெலிஸ்தியர் மொனெப்டா, இராம்சேசு IIIஐ எதிர்த்ததாகவும், தோல்வியுற்று கானான் தெற்குக் கடலோரத்தில் குடியேறியதாவும் கூறுவர். இவர்கள் தாகோன் என்னும் தெய்வத்தை வணங்கினர். யுகாரிட் புராணம் இத் தெய்வத்தைப் பற்றிக் கூறுகிறது.

எமோரியர்: இவர்கள் பற்றிய குறிப்பு கி.மு.2500இல் சுமேரிய, அக்காடிய ஏடுகளில் காணப்படுகிறது. இவர்கள் நாடோடிகள், செமித்திய இனத்தைச் சேர்ந்தவர்கள். தென் மெசப்பொத்தாமியர் இவர்களை மிலேச்சராய் மதித்தனர். கி.மு.2000இல் இவர்கள் திக்ரிஸ் யூப்ரத்தீஸ் சமவெளியில் ஊடுருவினார்கள். எமோரியரது பெயர்கள் நாட்டு ஆளுநர்களின் பட்டியலில் இடம்பெற்றது. லார்சர் நாடு எமோரியர் வசமாயிற்று. அதூர் நாட்டிலும் எமோரியர் ஆளத் தொடங்கினர். தாடியுடன், மழித்த உதட்டுடன், நீண்ட பட்டைச் சட்டையுடன் இவர்கள் தோற்றத்தை பெனிகசன் கல்லறை ஓவியம் காட்டுகிறது; மாரி நாட்டிலும் ஆட்சி செய்தனர். கி.பி.1936இல் கண்டுபிடித்த ஆப்பெழுத்துப் பலகை ஏடுகள் இவர்கள் பண்பாட்டைச் சொல்லுகின்றன. எமோரியரிடம் தேர்கள் இருந்ததற்கான குறிப்புகளனிக்கற்பாலது. பாபிலோன் நகரில் முதல் இனத்தைத் தோற்றியவன் எமோரியனே. இதில் ஆளும் அரசன்தான் கம்முரபி. இந்த எமோரியர் ஆபிரகாம் காலத்தில் வாழ்ந்தவர்கள் (தொட.14:1-16). அமார்னா கடிதங்கள் அமூர்ரு என்று சீரிய-பாலஸ்தீனாவையே அழைக்குமளவிற்கு உயர்ந்தனர். நாளடைவில் ஒரான்டஸ் ஆற்றருகே வாழ்ந்தவர்களை எமோரியர் எனக் குறிக்கத் தொடங்கினர்.

எமோரியர் (1) கானானியரைக் குறிக்கும் பொதுப் பெயராகவும் (2) தனி இனத்தவராகவும் (யோசு. 11:3, நீதித். 3:5) குறிக்கப்படுகின்றனர். சவுலின் காலத்தில் (கி.மு.1000) எமோரியர் செல்வாக்கு இழந்தனர் (1 அர.9: 20,21). காசியரும், ஊரியரும், அரமேயரும் வெவ்வேறு இடங்களில் அவர்களை முறியடித்தனர்.


கானான் என்னும் சொல் அவிரி நிறத்தைக் குறிக்கும். பெனீக்கியா என்பது கிரேக்கச் சொல். மெகித்தோ, ஆத்சோர், சிரியா கடலோரம்-கானான் எனப்படும். கார்மேல் மலைப் பகுதியில் பழங்குடி மக்கள் (Natufians) வேட்டையாடி, மீன் பிடித்து வாழ்ந்தார்கள். அங்குக் காணும் நாயின் எலும்புக்கூடு, விலங்குகளை அவர்கள் பழக்கினர் என்பதற்குச் சான்று; அரிவாள், அவர்கள் பயிர்த்தொழிலும் செய்தனர் என்று காட்டுகிறது. கார்மேல் மலைக்குகையொன்றில் மாட்டுத்தலை எலும்பால் வரையப்பட்டிருந்தது. கலையார்வம் காண்க: கார்பன் 14 சோதனை சுமார் கி.மு. 7800 என மதிப்பிடுகிறது.

கானான் என்னும் சொல் அமார்னா கடிதங்களில் வருகின்றது. இது பண்பாட்டுப் பெயர்; இனப்பெயர் எனக் கருதவேண்டும். இவர்களுடைய புராணக் கருத்துக்களை (கி.மு.1400-1300) இராஸ்சாம்ரா ஏடுகளில் காணலாம். கானானியர் பண்பாடு, சமயம் முதலியவற்றை விளக்கும் அவ்வேடுகள் விவிலியக் கருத்துக்கள். கதைகள் முதலியவற்றின் ஆழத்தைக் காட்டுகின்றன.

ஏதோம், மோவாப், அம்மோன் முதலான நாடுகளும் இனங்களும் விவிலியத்தில் இடம்பெறுகின்றன. ஏதோமும், மோவாபும் எபிரேய கருத்துப்படி கி.மு. 1225க்கு முன்னரே நிறுவப்பட்டன., இஸ்ரயேலில் முதல் அரசன் தோன்றுவதற்கு முன்னர் எட்டு அரசர்கள் ஏதோமில் இருந்ததாக தொட. 36:31-39 கூறுகின்றது. நெல்சன் குளூக் நடத்திய அகழ்வுகள் இதையே உறுதிப்படுத்துகின்றன. கி.மு. 1900-1300வரை மிக மிக மந்த நிலையில் ஆட்சி நடைபெற்றது. ஆனால் கி.மு.2300-2000 ஆண்டுகளில் சிறந்த பண்பாடு இருந்தது. இது அழிக்கப்பட்டது. அகழ்ந்தெடுத்த மட்கலங்கள் பித்தளை - இரும்புக் காலங்களில் பயன்படுத்தப்பட்டவை(1300-1200). மேலும், சாலமோன் காலத்தில் எசியோன் கேபரைத் துறைமுகமாகக் கொண்டு உலோகம் உருக்கும் ஆலைகளும் இருந்தன.

ஏதோமிலும் அம்மோனிலும் சில மனிதர்களின் பெயர்களைத் தவிர கல்வெட்டோ, சாசனமோ இதுகாறும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் மோவாபிலுள்ள தீபோனிலிருந்து மேஷா அரசனின் கல்வெட்டுக் குறிப்பு கிடைத்துள்ளது. இது 2அர. 3ஆம் அதிகாரத்துடன் தொடர்புடையது. ஒம்ரி - ஆகாபு அரசரின் அரசு பரந்திருந்த பான்மை, மொழிநடை, மரபுத் தொடர்கள், அரசுக்கே உரிய வாசக நயம், போரில் தீட்டான பொருட்களை அழித்துவிடும் போக்கு, இஸ்ரயேலின் சமய நோக்கு (யோசு.6:17-19, 1சாமு. 15:3,13மு.) இவை வெளிப்படுகின்றன.

அரமேயரைப் பற்றிய குறிப்பு முதலில் அசிரிய அரசன் திக்லாத்பிலேசர் (கி.மு.1112-1074) ஏடுகளில் வருகின்றது. இவர்கள் அஹலமு (Pநாடோடிகள்) என முன்னரே வரலாற்றில் இடம் பெற்றவர்கள் தாம் என்பது சிலர் கருத்து. சிரியாவின் பாலைநிலங்களில் திரிந்த இனம், நாளடைவில் நாடு பிடித்து ஆளலாயினர். 1200-1100 ஆம் ஆண்டுகளில் அசிரியா வலிமை குன்றியிருந்தபோது, வடசிரியா, தென் பாபிலோனியா பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டனர். இவர்களைப் பண்பாட்டில் சிறந்தவர்கள் எனக் கூற முடியாது; சமயக் கருத்து இதுதான் என வரையறுக்கவும் இயலாது. சில வாசகங்கள் கானானிய, மெசப்பொத்தாமிய தெய்வங்களின் இணைவைக் காட்டுகின்றன. பாகாலுக்குப் பல பெயர்கள் இருந்தன. ஹடாட் என்ற புயல் தெய்வம் (பென் ஹடாட், பெனாதாது என்னும் பெயர்களை ஒப்பு நோக்குக). **ஷாமாஷ்** என்னும் மெசப்பொத்தாமிய சூரிய தெய்வம், **தம்முஸ்** என்னும் செத்து உயிருடன் வாழும் செழுமைத் தெய்வம் முதலியன அரமேயர் வணங்கிய ஒரு சில தெய்வங்களின் பெயர்களாகும். அரமேயருக்கும் எபிரேயருக்கும் நெருங்கிய உறவு இருந்தது. ஆராம் ஷேமின் மகன் (தொட. 10:22) ஆபிரகாமின் சகோதரர் நாகோர் ஆராம் நகரயிமில் வசித்தார்(24:10). நக்ரினா, நகரினா என்ற எகிப்திய, அமார்னா சொற்கள் வட சிரியாவைச் சுட்டும். யாக்கோபு, லாபான் ஆகியோர் அரமேயர் என்க (இணைச். 26:5), தொட. 25:20).


விவிலிய
அகழ்விடங்கள்
மத்திய தரைக்கடல்
செங்கடல்
காஸ்பியன் கடல்
பாரசீக குடா
யூதா
சமாரியா
கலிலேயா
கார்மேல்
மெகிதோ
தானாக்
மெகிதோ
தாத்தனாய்
சூசா
எக்படானா
திப்சா
மாரி
ஆசூர்
ஆசூர்
ஆசூர்

3. அகழ்வும் விவிலிய நிகழ்ச்சிகளும்

குலத் தந்தையரின் காலம் 2200-1800 என உத்தேசமாக அகழ்வியல் தெரிவிக்கிறது. பண்பாடு குன்றிய காலம் கி.மு. 2200. எமோரியர் ஊடுருவிய காலம் கி.மு. 1800. **எகிப்திய சாப ஏடுகளில்** [1] எருசலேம், செக்கேம் போன்ற நகரங்களின் பெயர்கள் இருக்கின்றன. இந்த நகர்களுக்கிடையேதான் குலத் தந்தையர் திரிந்துகொண்டிருந்தனர். இங்ஙனம் குலத் தந்தையர் தெற்கு, வடக்கு மெசப்பொத்தாமியாவில், பாலஸ்தீனத்தில் திரிய இயல்வதான ஆதாரம், எகிப்திய சாப ஏடுகளில் (கி.மு.2000) இருக்கிறது. ஆபிரகாம் இனத்தைச் சேர்ந்த தேராகு, நாகோர், செரூக்கு போன்ற ஆட்பெயர்கள் அனத்தோலியாவிலுள்ள மெசப்பொத்தாமிய வணிகர் பெயர்ப்பட்டியலிலும், [2] **கப்படோக்கிய ஏடுகளிலும்** (கி.மு.2000), மாரி மெசப்பொத்தாமிய வணிகர் பெயர்ப்பட்டியலிலும், ஆபிரகாமின் இனத்தைச் சார்ந்த தேராகு, நாகோர், செரூகு போன்ற ஆட்பெயர்களுக்குச் சமமான பெயர் ஒலிகள் மிகுந்தும் உள்ளன. மாரி ஏடுகளில் ஹபீரு, பின்-யமினி, ஹாத்சோர், நாகூர், துரகி,சரூகு போன்ற பெயர்கள் முறையே எபிரேயர், பெயன்யமீன், ஆசோர், நாகோர், தேராகு, செரூகு என்ற விவிலியப் பெயர்களுக்குச் சமமாகும். கடவுளுக்கு இறைவாக்கினர் ஒருவர் உண்டு, அவர் கடவுளின் பெயரைக் கூறுவார் என்ற கருத்தும், ஒப்பந்தம், உடன்படிக்கைக் கருத்தும் மாரி ஏடுகளில் இருக்கின்றன.

மகவு இல்லையேல் மறுமனையாட்டிகொள்ளும் மரபும் இருந்தது. நூசி ஏடுகள் [3] மகப்பேறில்லையேல் அடிமைப் பெண்ணை மனைவியாய் ஏற்கும் வழக்கத்தைச் சுட்டுகின்றன (ஆபிரகாம்-ஆகார், யாக்கோபு-பில்கா மண உறவை நோக்குக). தந்தையின் மறுமனையாட்டி மகன் எக்காரணம் கொண்டும் துரத்தப்படக் கூடாது என்றும் நூசி ஏடுகள் குறிப்பிடும். மூன்று ஆடுகளுக்காக ஒருவன் தன் பிறப்புரிமையை இழந்தான் (ஏசாவைப்போல!). தெய்வச் சிலைகளை எவர் வைத்திருக்கிறாரோ அவருக்கே சொத்துரிமை உண்டு. இந்தப் பின்னணியில் ராகேல் சிலைகளைப் பதுக்கினது ஏன் என்பது புலனாகும் (தொட. 31:34). சாகும் தருவாயிலும் ஒருவர் தம் வாய்மொழியால் சட்டம் வழியாகச் சொத்தை மாற்ற இயலும். மணவிலக்கு, அண்ணனின் மனைவியை அண்ணன் இறந்தால் தம்பி மணத்தல், தத்துப்பிள்ளை எடுத்தல், அடிமை விதிகள் முதலியன விவிலிய நிகழ்ச்சிகளைக் கற்பனை மெருகாக அன்று, வரலாற்றுக்கூறுகளாய்க் காட்டுகின்றன.

எகிப்தில் ஹிக்சாஸ் இனத்தார் 1730இல் குடியேறியதும், 1580இல் அவர்கள் விரட்டப்பட்டதும் இஸ்ரயேலர் எகிப்தில் யோசேப்பால் சிறந்தும், பின்னர் யோசேப்பை அறியாத பார்வோன் மூலம் அஞ்சியும் வாழ்ந்த விதத்தை இவை வடிக்கின்றனவா? பதினெட்டாவது குலமரபு ஆட்சியில், அதிலும் 16ஆம் நூற்றாண்டில் செங்கடல் தாண்ட வாய்ப்பே இல்லை. இது அகழ்வு கூறும் முடிவு.

ஒரு பாப்பைரஸ், செமித்திய இனத்தினன் ஒருவன் யோசேப்பைப் போல் பார்வோனுக்குப் பணியாளாய் இருந்தான் என்கிறது. ஆனால் இது ஹிக்சாஸ் காலத்துக்கு முந்திய காலம். **ஹோரம் ஹெப்** என்ற 19ஆவது குல பார்வோன் நீல ஆற்று முகத்துவாரத்தின் கிழக்கே பல ஆசியக்குடிகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறான். செங்கடல் தாண்டிய ஆண்டைக் கணிக்க இத்தகவலும் துணை செய்வதில்லை.

ஆனால் அகழ்வின் முடிவுகளைத் தொகுத்துப் பார்த்தால் இஸ்ரயேலர் கடலைத் தாண்டிய ஆண்டு 1282-1225க்குள் இருக்கவேண்டும். (அ) ஏறத்தாழ 1250இல் எரிகோவில் எந்த மக்களும் வாழ்ந்ததாகத் தெரியவில்லை என காத்லின் கென்யன் கூறுகிறார். இது இஸ்ரயேலர்தாம் எரிகோவை 1411-1385இல் அழித்தனர் என்ற கார்ஸ்டங் கூற்றுக்கு மாறாகிறது. (ஆ) ஆட்சோர் (1200), இலாக்கீசு (1400-1300), தெபீர் (1400-1300) பெத்தேல் (1250), ஆயி (2000 -1200) ஆகியவை அழிக்கப்பட்டன என்று அகழ்வுகள் கூறுகின்றன. (இ) பித்தோம் இரண்டாம் இராம்சேசால் (1290-1224) கட்டப்பட்டது இராம்சேசு நகர் இராம்சேசு ஐஆல் கட்டப்பட்டது (1309-1290). (ஈ) ஏதோம், மோவாபு நாடுகளை இஸ்ரயேலர் அழித்தனர் (எண். 20.22). ஆனால் நெல்சன் குளூக் கி.மு.1300க்கு முன் எந்த நாடும் இருந்ததாக அகழ்வு தொிவிக்கவில்லை என்கிறார். எனவே, கடல் தாண்டல் 13ஆம் நூற்றாண்டில் அல்லது அதற்குப் பின்னர் நிகழ்ந்திருக்கவேண்டும். (2) அமார்னா கடிதங்கள் ஹபிரு இனத்தார் தாக்குவதைக் குறிப்பிடுகிறது. எனவே அது நிகழ்ந்தது 13ஆம் நூற்றாண்டு. (ஊ) மெர்னெப்டா (1220) கல்தூண், இஸ்ரயேலரை இனம் எனக் கருதும் வண்ணம் எழுதியது. ஆக இத்தனையும் கடல் தாண்டிய ஆண்டு 13ஆம் நூற்றாண்டே எனக் காட்டுகின்றன.

சாலமோன் நிறுவிய செம்புருக்கும் ஆலையை அராபாவிலும், கப்பல் துறையை எசியோன்கெபரிலும் காணலாம். மெகித்தோ IV, லாகீஷ், கெசர், ஹாத்சோர் இவற்றை சாலமோன் அரண் செய்தார். மெகித்தோவிலுள்ள குதிரை லாயங்கள் சாலமோன் காலத்தவையல்ல. எகிப்து அரசன் சீஷாக் (ஷெஷான்க் I) கி.மு.925இல் யூதா மீது படையெடுத்து, கார்னக் கோவில் சுவர்களில் வெற்றிகொண்ட பாலஸ்தீன நகர்களின் பெயர்களையும் பொறித்தான் (1 அர. 14:25,26).

சல்மனாசர் III என்ற அசீரிய அரசனின் குறிப்புமூலம் ஆகாபு சிரியாவுடன் உறவுபூண்டு ஒரான்டஸ் ஆற்று கரையிலுள்ள கர்க்கார் (853) என்னும் இடத்தில் 2,000 குதிரைவீரருடன் போர்புரிந்தது புலனாகிறது. சாலமோன் குதிரைப்படை அமைக்க வித்திட்டார் என்பதைப் பற்றியும் ஏகூ (841), ஆகாபு மரணம் (853) பற்றியும் முக்கிய அசிரியக் குறிப்பு வெளியாக்கியது.

மெனகேம், ஒசேயா அரசர்கள் அசிரியருக்குக் கப்பம் கட்டினர், இது திக்லாத்பிலேசர் III கி.மு.732இல் எழுதி

[1] எகிப்தில் எதிரிகள் அழிந்துப் போக மட்கல்ங்களில், சிறு சிலைகளில் மந்திரித்துச் சாப மொழி எழுதினர் (கி.மு. 2000).

[2] இவை பல்லாயிரம் வணிக ஏடுகளும் கடிதங்களும் ஆகும். அங்காராவுக்கு 150 மைல் தெற்கே அசிரிய வணிகரால் அக்காடிய ஆப்பெழுத்தில் வரையப்பட்டன.

[3] அக்காடிய மொழியில் கி.மு. 1400 அளவில் ஊரியரால் நூசி நகரில் 20,000 ஏடுகளில் எழுதப்பட்டவை.

வைத்த குறிப்பிலிருந்து புலனாகிறது. இரண்டாம் சர்கோன், 27,290 சமாரியா வாழ் மனிதரைச் சிறைபிடித்த விவரத்தை எழுதியுள்ளான். பெலிஸ்தியர் குடியிருந்த கடலோரப் பகுதிகளில் நிகழ்ந்த பின்வரும் உண்மைகளை அகழ்வுகள் காட்டுகின்றன: அகழ்வுகள்: (1) அசிரியா நாட்டுக்கு எப்போதும் எகிப்தின்மீது ஒரு கண் இருந்தது. (2) அசிரியர் சிற்றரசரையும், கைப்பாவையாக ஆடக்கூடிய படைத் தலைவரையும் நியமித்தனர்; (3) சமாரிய நகரைப் போன்ற மட்கல வனைவுகள் இருந்தன; (4) அசிரியரை எதிர்த்தும் சில கிளர்ச்சிகள் எழுந்தன; (5) கெசர் அருகே கி.மு. 649இல் எகிப்து செல்லும் பெருவழியில் அசிரிய ஆப்பெழுத்தில் அசிரியர் பலத்தைத் தெரிவிக்கும் இரு வாசகங்கள் உள்ளன.

எசேக்கியா அரசன் காலத்திய சீலோவாம் கல்வெட்டு (2 அர.20:20, 2 குறி. 32:30) கிதரோனிலிருந்து கீகோன் நீரோடைக்குத் தண்ணீர் கொண்டுவந்த விவரத்தைக் கூறுகிறது. கி.மு.701இல் சனகெரிபு என்ற அசிரிய அரசனுக்கு எதிராகப் பயனற்ற கிளர்ச்சியை எசேக்கியா நடத்தினார் என்றும் அசிரிய ஏடுகள் சாற்றுகின்றன. எருசலேமும், அதைச் சுற்றியுள்ள சில பகுதிகளும்தான் எசேக்கியாவின் உடைமை என்று அசிரிய ஏடுகள் கூறும். சனகெரிபு திடீரென்று தன் படைவீரரை அழைத்துக்கொண்டு திரும்பிவிட்டதற்குக் காரணம் என்ன? இரண்டு வெவ்வேறு அசிரியப் படை யெடுப்புகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது என்க. **லாமிங் மக்காடம்** என்பார் சூடானில்[1] திராக்கா அரசனைப் பற்றிய தகவலைத் தருகிறார். கி.மு.701இல் அவன் மிக இளைஞன். எனவே இவை வெவ்வேறு படையெடுப்புக் களாயிருக்க வேண்டும் என்று W.F. அல்பிரைட் கருதுகிறார்.

கெட்ட அரசனாகிய மனாசே அசிரிய ஏடுகளில் முழுவதும் அசிரிய ஆணைக்குக் கட்டுப்பட்டவனாக வடிக்கப்படுகிறான். சிரியா, ஏதோம், மோவாபு முதலிய அரசர்களோடு மனாசேயும் நினிவேயில் தங்கியிருந்தான். கி.மு.668இல் எகிப்துக்கு விரோதமாக அசிரியா நடத்திய படையெடுப்பில் மனாசேயும் கலந்து கொண்டான் என்று அசூர் பானிபல் வாசகம் கூறுகிறது.

யோசியா செய்த சீர்திருத்தம் அசிரியர் வலிமை குன்றியிருந்தபோதும், தம் உள்நாட்டு அமைதியைக் காக்க முனைந்து நின்றபோதும் ஏற்பட்டது. கடலோர வெளியில் யோசியா எவ்வளவு தூரம் அச்சமின்றி ஆட்சி செலுத்த முடிந்தது? இந்த வினாவுக்கு விடையளித்தல் கடினமே.

யூத அரசு எங்ஙனம் நலிவுற்றிருந்தது என்று பாபிலோனிய வரலாறு எடுத்துரைக்கிறது. நினிவே கி.மு.612இல் வீழ்ந்தது. காரான் கி.மு.610இல் வீழ்ந்தது. எகிப்திய படை யூப்ரத்தீஸ் ஆற்றைக் கடந்து காரானை மீண்டும் பிடிக்க மிகவும் முனைந்தும் முடியவில்லை. இவ்வாறு பார்வோன் நேகோ செல்லும் வழியில் குறுக்கிட்டதால்தான் யோசியா அரசன் மெகித்தோவில் கொல்லப்பட்டார் (கி.மு.609). யோசியா மரணத்திலிருந்து, யூத குலத்தில் துளிர் இனி துளிர்க்குமா என்ற ஐயம் மேலோங்கியது. யோசியாவின் மகன் யோவகாசு அரசுரிமை இழக்க நேகோ வழிவகுத்தான். கி.மு.609இல் இது நடந்தது.

பாபிலோனுக்கும் எகிப்துக்கும் கடலோரத்தில் நடந்த போர் விவரத்தைப் பாபிலோனிய வரலாறு விவரிக்கிறது. எருசலேம் முற்றுகை டிசம்பர் 598 முதல் மார்ச்சு 597 வரை நீடித்தது. பின்னர் எருசலேம் வீழ்ந்தது. யோயாக்கீன் சிறைப்பட்டார். மூன்றே மாதங்கள் தாம் அவர் ஆட்சி நீடித்தது (2 அர. 24:8).

தெல்-எத்-துவைர் என்ற இடத்தில் அகழ்வுகள் **இலாக்கீசு** கடிதங்களைக் கண்டன. இவற்றில் ஐந்து, துண்டுக் கடிதங்களாகும். எனவே, எச்சரிப்புடன் இவற்றின் குறிப்பை அறிதல் வேண்டும். (1) ஐய நிலைமை யூதாவில் நீடித்தது; (2) ஐய நிலையில் மனிதர்கள் திரியலாயினர் (எரே. 38:13-21); (3)உளவாளிகளைக் காவலில் வைத்துவிடுவரோ என்னும் அச்சம் இருந்தது; (4) இலாக்கீசு கடிதங்கள் படைத்தலைவரால் எழுதப்பட்டிருக்கலாம்; (5) எரேமியா நூலுக்கு நல்ல விளக்கம் தருகின்றன இலாக்கீசு கடிதங்கள்; (6) அக்காலத்திய மொழிநடையைப் புரிந்துகொள்ளவும் உதவிசெய்கின்றன.

மேலும், இரு முத்திரைகளில் உள்ள வாசகங்கள் கெதலியாவையும், யாசனியாவையும் பற்றியவை ஆகும். எரேமியாவின் வாழ்க்கையில் தொடர்புகொண்ட இவர்களு டைய பெயர்களை முத்திரைகளில் வாசிக்கவும் முடிகிறது. இவை கி.மு.586ஆம் ஆண்டுச் செய்திகளாகும் (2 அர.24:23).

யூதர் பாபிலோனுக்கு நாடு நடத்தப்பட்ட நிகழ்ச்சி விவிலியத்தில் கூறப்பட்டபோதிலும் இந்நிகழ்ச்சியை அகழ்வாலும் மெய்ப்பிக்க இயலும். யூதாவின் எந்த நகரை அகழ்ந்தபோதிலும், இக்காலத்தில் அழிவு இருப்பதை மறுக்க முடியாது. எருசலேம் அழிவுக்குப் பின்னர் ஒருமுறை மிஸ்பா **தெல் என நஸ்பே** தலைநகராயிருந்தி ருக்கலாம். ஏனெனில் அதில் அழிவுச்சின்னம் இல்லை! பாலஸ்தீனம் எவ்வாறு ஆளப்பட்டது என்று அறியத்தக்க ஆதாரக்குறிப்புகள் இதுகாறும் கிடைத்தில. நெபுகத்நேசர் ஆண்ட பாபிலோனில் அடித்தளத்தில் சில ஆப்புஏடுகள் கி. பி.1939இல் வெளியிடப்பட்டன. இவற்றில் கைதியாயிருந்த யோயாக்கீன் அரசனும் அவன் குடும்பத்தாரும் பெற்ற உணவுப் பங்கீடு (2 அர 25-30) குறிக்கப்பட்டுள்ளது. பாலஸ்தீனம், சிரியா, பெலிஸ்தியா பகுதிகளிலிருந்து சிறை வைக்கப்பட்ட வேறு சிலரின் பெயர்களும் பொறிக்கப் பட்டுள்ளன (24:14).

கி.மு.539இல் சைரசு வெற்றிபெற்ற பின்னர் பாலஸ்தீனா ஆற்றுக்கு அப்பால் ஐந்தாவது சாத்ராப்பாக நிருவகிக்கப்பட் டது. யூதா ஒரு நிருவாக வட்டமானது. சமாரியா, அம்மோன், அஸ்தோத்து, அராபியா, இலாக்கீசு முதலியன பிற நிருவாக வட்டங்களாகும்.

யூதாவின் பழைய அரண்மனையிலேயே பெர்சியர் காலத்தில் அரேபியனாகிய கஸ்மு, சமாரியாவைச் சேர்ந்த சன்பல்லாத்துடனும், அம்மோனைச் சேர்ந்த தொபியாவுடனும் வாழ்ந்திருக்கலாம் (நெகே.2:19). கிஷெம், **கேஷெம்** என்னும் பெயர் ஒரு வெள்ளிக் கூஜாவில் செதுக்கப்பட்டுள்ளது. இது வட அரேபிய தேவதை ஹன்-அல்லாட்டுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. நெகேமியாவின் பரம எதிரியான கஷ்மு ஒருகால் தென் பாலஸ்தீனத்

[1] 2 அர. 19:9 எசா. 37:9 காண்க.

தையே ஆளாமல், அராபிய மாகாணத்தை மட்டும் ஆண்டிருக்கலாம்.

சன்பல்லாத்து சமாரியாவின் ஆளுநர் என்று எலிபந்தீன் (யூத-அரமேயக் குடியிருப்பு-கி.மு. 410) ஏடுகள் சுட்டும். கி.மு. 444இல் நெகேமியாவை முழுமூச்சுடன் எதிர்த்த சன்பல்லாத்து, தன் ஆட்சிப் பரிபாலனத்தைத் தன் மைந்தரிடம் தந்துவிட்டுச் சென்றிருக்கலாம். தொபியா யார் என்ற குறிப்பு இன்னும் கிடைக்கவில்லை; தொபியாவின் பெயர் பாப்பைரஸ் கடிதமொன்றில் கிடைத்துள்ளது. ஒரு குடும்பச் சமாதியில், எரிகோவுக்கு வடகிழக்கே 20 மைல் தொலைவில் அவன் பெயர் காணப்படுகிறது. இது அரமேய மொழியில் காணப்படுகிறது; காலம் சுமார் கி.மு.300 என்க. அவன் செல்வாக்குப் படைத்தவன் என ஊகிக்கலாம்.

அஸ்தோத்தில் பலதரப்பட்ட மக்கள் வாழ்ந்தனர். அசிரியர் மெசப்பொத்தாமியாவிலிருந்து படைகளை வருவித்து இங்கு வைத்தனர். ஏதோமியர். ஏரோதுவின் குடும்பம் உட்படப் பலர் இங்குக் குடியேறலாயினர். பெனிக்கியர் வாழ்ந்த பண்பாட்டுத் தடயங்கள் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டன. திருத்தூதுவராகிய பிலிப்பு இங்குதான் ஊழியம் செய்தார். யூத மாவட்டம் யெஹூத் எனப்பெயர்பெற்றது. அரசு இலச்சினை, பெயர் செதுக்கிய ஜாடித்துண்டுகள் காண்க. பாரசீக ஆளுநருக்கு உட்பட்ட ஆட்சி நடைபெற்றது. இதற்கு எலிபந்தீன் ஏடுகள் சான்று பகர்கின்றன. யூதத் தலைமைக் குரு காசுகள் அடிக்கும் உரிமை பெற்றார். பேத்தூரில் இக்காசுகள் கிடைத்துள்ளன.

தென் மெசப்பொத்தாமியாவில் நிப்பூரில் ஆப்பெழுத்தேடுகளில் சிதறிய யூதர்களைப் பற்றிய குறிப்புகள் உள. யூதப்பெயர்கள் செல்வாக்கடைந்த சிறப்பு நிலையைக் காட்டுகின்றன. எகிப்திலும் யூதர் சிறந்த வாழ்க்கை நடத்திய விதத்தை உரோமை வரலாற்றிலும் பாப்பைரி ஏடுகளிலும், பைலோ எழுத்திலும் காண்கிறோம்.

எலிபந்தீன் ஏடுகள்: இவை கி.பி. 1893 இல் சார்ல்ஸ் எட்வின் வில்பரால் நைல் ஆற்றில் அஸ்வானுக்கு எதிரே யெப் தீவில் கண்டுபிடிக்கப்பட்டன. எகிப்தில் குடியேறிய யூதரால் எழுதப்பட்டவை. இவர்கள் பார்வோன் கொப்ரா (கி.மு. 588-569) அல்லது அமாசிஸ் (கி.மு. 569-525) காலத்தில் குடியேறினர். காம்பிசஸ் எகிப்தைப் பிடித்து (கி.மு. 525) இணைத்துக்கொண்ட பின்னர், யூதர் நிலைமை மோசமாகியது. க்னூம் என்னும் எகிப்திய தெய்வத்தின் அர்ச்சகர் எலிபந்தீனில் உள்ள யாஹூ கோவிலை கி.மு. 410இல் அழித்துவிட்டனர். இடிந்தக் கோவிலைப் புதுப்பிக்கவே இக் கடிதங்கள். பாலஸ்தீனாவிலுள்ளவர்களுக்கு (எருசலேம்-சமாரியா) எழுதப்பட்டன; கோவில் புதுப்பிக்கப்பட்டது (கி.மு. 402). யாகூவுடன், அனும்பெத்தேல், கெரம்பெத்தேல், அனாத்பெத்தேல் முதலிய பெயர்களும் இடம்பெறுகின்றன. ப.ஏ.இன் ஒரிறை வழிபாட்டிலிருந்து இது விலகியதைக் காணலாம்.

கிர்பெத் கும்ரான். அயின் பெஸ்கா என்னும் இடங்களில் (கி.பி.1947) முகம்மத்-எத்-தீப் என்னும் த்அமிரா இனத்தைச் சேர்ந்தவன், சவக்கடல் சுருள்களைக் கண்டுபிடித்தான். இவை எஸ்ஸீனரால் எழுதப்பட்டவை. கிறிஸ்துவின் காலத்திய பக்திச் சூழ்நிலையை உணர இச்சுருள்கள் உதவுகின்றன: (1) ஒழுங்குச் சட்ட நூல் (Manual of Discipline), (2) நன்றிப் பாடல்கள் (The Thanks-giving Hymns), (3) ஒளியின் பிள்ளைகளுக்கும் இருளின் பிள்ளைகளுக்கும் நடக்கும் போர் (The War Scroll), (4) செம்புச் சுருள் (The Copper Scroll), (5) ஆபகூக்கு விளக்க நூல், (6) எசாயா சவக்கடல் சுருள்கள், (7) தொடக்கநூல் விளக்கக் கதைகள் முதலியன மிக முக்கியமான சவக்கடல் சுருள்களாகும். இந்தச் சுருள்களால் ப.ஏ இன் பல வசனங்களுக்குக் காணப்படும் பாட பேதங்களை நன்கு ஆராய்ந்து எந்த வாசகம் தொன்மை வாய்ந்தது என அறியும் வாய்ப்பு கிடைத்துள்ளது. யூத சமயத்தில் பழைய/புதிய ஏற்பாடுகளுக்கிடையேயுள்ளக் காலத்திய மெசியா நம்பிக்கையும் வெளிப்படுகின்றது.

கி.மு. 63 இல் உரோமர் வலுத்த அரசாக ஆட்சி செய்த விவரங்கள் யோசிபஸ் வரலாற்றாசிரியர் வரைந்த **யூத குலத் தொன்மைகள்**, **போர்கள்** முதலிய நூல்களில் காணப்படுகின்றன. யோசிபஸ் வரலாற்றாசிரியர் சொல்வதை நன்கு சலித்துப் பார்த்த பின்னர்தான் வரலாற்று உண்மையை அறிய முடியும். அகழ்வு ஆராய்ச்சிகள் இனி வரலாற்று கூறுகளுக்குப் பக்க பலமாகச் சான்று தேடித் தருகின்றன.

மகா ஏரோது கி.மு.40இல் பாலஸ்தீனா முழுவதற்கும் அரசனாக உரோமை ஆளும் சபையால் நியமனம் பெற்றான் (The Senate); கி.மு. 4 வரை ஆண்டான். மகா ஏரோதுவின் காலத்திய சிதைவுப் பொருள்கள் கிரேக்க-உரோமைப் பாணியில் உள்ளன; இலத்தீன், கிரேக்க வாசகங்கள் தாங்கியவை. சமாரியா நகரம் அகுஸ்து பேரரசரால் ஏரோதுவுக்குப் பரிசாக வந்தது. ஏரோது இங்கு நிறுவிய கோவிலின் சிதைவை இன்றும் காணலாம். எரிகோவில் நீந்தும் தடாகம், அழகுச் சோலைகள். இவற்றையடுத்த அரச மாளிகை ஆகியவற்றை அகழ்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. இங்குத் தான் ஏரோது இறந்திருக்க வேண்டும். பாலைநிலங்களில் ஏரோது கட்டிய கோட்டைக் கொத்தளங்களும், மனித நடமாட்டமில்லாத இடங்களில் யூத எதிர்ப்புக் களைச் சமாளிக்க ஏரோது முன் எச்சரிக்கையாகக் கட்டிய அரண்களும் இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எரிகோவின் அருகில் உள்ளு குப்ராஸ், சவக்கடல் அருகே உள்ள மகேரஸ் இத்தகைய அரண்களில் சிலவாகும். இந்த மகேரஸ் அரணில்தான் முழுக்குநர் யோவான் கொலை செய்யப்பட்டதாக யோசிபஸ் கூறுகிறார். மசாதா கோட்டையில் கி.பி. 70க்குப் பின்னர் யூதப் புரட்சியாளருக்கும் உரோமருக்கும் இடையே இறுதிப்போர் நடைபெற்றது. மசாதா கோட்டையைப் பற்றிய அகழ்வுகளை இஸ்ரயேல் அரசு ஏற்று நடத்துகிறது. மசாதா அரண்மனையில் ஏரோது கட்டிய அரண்மனையின் வரைபடம் மிக முக்கியம் வாய்ந்தது. சாளரங்கள், கிணறுகள், இவை முற்றுகைக் காலங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

ஏரோது எருசலேம் திருக்கோவிலைப் புதுப்பித்தான்; அத்துடன் எபிரோனுக்கு அருகில் ஆபிரகாம் தங்கிய மம்ரேயிலும் பழைய தூய இடத்தைப் புதுப்பித்தான். இன்று எருசலேம் கோவில் சுவர்களில் உள்ள பெருங்கற்கள். புலம்பும் சுவர் ஆகியவை நிச்சயமாக ஏரோதுவின் காலத்தைச் சார்ந்தவை. பிலாத்துவின் முன்னர் இயேசு நின்ற இடமாகிய அந்தோனியா கோட்டை இன்றும் உள்ளது. சுண்ணாம்பு பாவிய தரை, போர் வீரர்கள் பொழுதுபோக்குக்காக உருட்டி விளையாடிய ஒரு வகை தாய ஆட்டம், தேர்களின் தடங்கள் இன்றும் உள்ளன. சீயோன் சகோதரிகளின் மடத்தில் இவை

இருக்கின்றன. யோப்பா வாசலுக்கருகே ஏரோது கட்டிய மூன்று கோபுரங்களின் அடித்தளங்கள் அகழப்பட்டுள்ளன. எருசலேம் மேற்குக் குன்றின் கிழக்குப் பகுதி கிறிஸ்துவின் இறப்புடன் தொடர்புடையது. இங்குதான் தூய பேதுரு சேவல் கூவியதும் மனம் வெதும்பியழுத கோவில் இருக்கிறது. காய்பாவின் வீடு இங்கு இருந்திருக்கலாம். இயேசு விசாரிக்கப்பட்டது, சவுக்கால் அடிபட்டது, காலை வரை காவலில் வைக்கப்பட்டது அனைத்தும் இந்தப் பகுதிகளில் நடைபெற்றிருக்கலாம். வீடு, வீட்டின் படிகள் மிகப் பழமை வாய்ந்தவை என்பதில் ஐயமில்லை.

கலிலேயா ஊர் கானான், திபேரியாவில் உள்ள ஏரோது அந்திப்பாவின் அரண்மனை, கப்பர்நகூம், கோராசீன், பெத்சாய்தா, மக்தலா முதலிய ஊர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கப்பர்நகூம் தொழுகைக்கூட சிதைவுகள் கிறிஸ்துவின் காலத்தைச் சார்ந்தவையல்ல. கலிலேயாக் கடலின் இன்றைய நீர்மட்டத்தைவிட கிறிஸ்துவின் காலத்திய நீர் மட்டம் மிகத் தாழ்ந்திருக்கவேண்டும். மக்தலாவில் உராமர் காலத்திய நடைபாதை (சுமார் 30 அடி அகலம், 300 அடி நீளம்) பதினைந்தடி ஆழத்தில் இருந்ததை அகழ்வு மெய்ப்பித்துள்ளது.

இயேசுவின் கல்லறை எது? இது பற்றி அறிஞரிடையே ஒருமித்த கருத்து காண்பது கடினம். அந்தோனியா கோட்டையும், ஏரோதுவின் அரணும், ஏரோதுவின் காலத்திய மதிற்சுவர்களும் அமைந்திருக்கும் விதத்தை நன்கு பார்த்தால், இன்றைக்கு நகருக்கு உள்ளிருக்கும் கொல்கொதா இயேசுவின் காலத்தில் வடக்கு மதிற்சுவரின் வெளியே இருந்திருக்க வேண்டும். நாசரேத்தில் கி.பி. 10இல் கல்லறைகளைச் சூறையிடுபவர்களுக்கும், அதைத் திசை திருப்பி வைப்பவர் களுக்கும் பயங்கர தண்டனை விதிக்கப்படும் என்ற குறிப்பு இருக்கிறது. இதன்படி பார்த்தால் மத். 28:11-15இல் பிலாத்து போர்வீரரைக் கல்லறையைக் காக்க அனுப்பிய காரணம் புலனாகும். கல்லறையில் சடலம் காணப்படாததால் சீடர் வெகுண்டு மயங்கிய காரணமும் புலனாகும். ஏனெனில் சடலக் களவுக்குப் பெருந் தண்டனை அக்காலத்தில் வழங்கப்பட்டது.

இயேசுவுக்குப் பின்னர் சுமார் 100 ஆண்டுகள் எனக் கணிக்கப்பட்ட கல்லறைகள் அகழப்பட்டன. இவற்றிலிருந்து புதுமையான எந்தத் தகவலும் வெளியாகவில்லையெனினும், தற்செயலாக இருந்த எபிரேய எழுத்துக்களின் சாய்வைக் கொண்டு சவக் கடல் சுருள்களின் காலத்தை நிறுவ முடிந்தது. நாணயங்கள், எழுத்தின் வடிவம், பானையோடுகள் இவையெல்லாம் இதே காலத்தைச் சுட்டின. சில பெயர்கள் யவீரு, மிரியாம், மார்த்தா, சீமோன், யோனாவின் மகன் என்று இருக்கின்றன. இவை யூதக் கிறிஸ்தவப் பெயர்களாயிருக்கலாம். இவ்வாறு பெயர் பொறித்த சவப்பெட்டிகள் இயேசு கோவில் நகரைப் பார்த்து அழுத கோவிலின் அருகாமையில் இருக்கிறது. கல்லறைகளைத் தோண்டிச் சவப்பெட்டிப் பெயர்களை ஆராய்வதன் மூலமும் நற்செய்தி நிகழ்ச்சிகளின் பழமையை உணரலாம்..

செசரியா நகர் பாலஸ்தீனத்தில் பண்டைப் பெருமையும் புகழும் வாய்ந்தது; கி.மு. 25 முதல் 13 வரை மகாஏரோதுவால் கட்டப்பட்டது. கிரேக்க-உரோமைப் பண்பாடும், கலை அரங்கு, திறந்தவெளி அரங்கு, அகுஸ்துராயனுக்குக் கோவில் முதலியன இங்கு இருக்கின்றன. இங்கு உள்ள இரண்டு மண்மேடுகள் கப்பல் செலுத்துவதற்காகக் கடலை ஆழப்படுத்தியபோது ஏற்பட்டிருக்கலாம். இவை எழும்பியது ஏரோதுவின் காலம் எனலாம்.

கிரேக்க-உரோமை உலகத்தைப் பற்றியும், பவுலின் பயணங்களைப் பற்றியும் நாம் இலத்தீன் நூல்களில் படிக்கலாம்; எகிப்தியப் பாப்பைரஸில் பார்க்கலாம்; பழமையான நினைவுச் சின்னங்களில் காணலாம்; பழைய வாசகங்களில் காணலாம். பண்டைக் கிறிஸ்தவ சபைக்கும், இந்த அகழ்வுகளுக்கும் சில சமயங்களில் தொடர்பு இருப்பதும் உண்டு. இதை வைத்துக்கொண்டு திருத்தூதுவர் நடபடிகளின் நேர்மையை உணரலாம். சீப்ரு கி.மு.22ல் தனி மாகாணமாகப் பிரிக்கப்பட்டது. திருத். 13:7இல் சொர்கியு பவுல் தலைவனாயிருந்தார் என வாசிக்கிறோம். தனி மாகாணத்திற்குத் தனி ஆட்சியாளர் இருந்தார் என்ற உண்மை இதனால் மெய்ப்பிக்கப்படுகிறது. பாப்போவில் உள்ள வாசகம் பவுல் ஆட்சியாளராயிருந்த காலத்தில் என்று இருக்கிறது. தெசலோனிக்காவில் பல நகரத்து அதிகாரிகள் (17.6) இருந்தார்கள் என்ற உண்மைக்குப் புறச் சான்றும் இருக்கிறது.

18:12இல் கல்லியோன் அகாயா நாட்டின் ஆட்சியாளர் என்று வாசிக்கிறோம். லூசியு ஜூனியஸ் கல்லியோ என்ற ஒருவனைப் பற்றியக் குறிப்பும் காலமும் கொரிந்துவில் பவுல் இருந்த காலத்தை அறிய உதவுகின்றன. இவ்வாறு அகழ்வு ஒருபுறத்தில் விவிலியத்தின் சிறப்பையும், மறுபுறத்தில் பண்பாட்டு மாண்பினையும் காட்டுகிறது.

கொரிந்துவில் அகழ்ந்த ஓரிடத்தில் மேடையொன்று இருக்கிறது. இந்த மேடையில்தான் கல்லியோனை பவுல் சந்தித்தார் என அறிஞர் பலர் ஊகிக்கின்றனர். பொதுப்பணித்துறையில் வல்லவராயிருந்த எராஸ்து என்பவரைப் பற்றி ஒரு குறிப்பு இருக்கிறது. இந்த எராஸ்துதான் 2 தீமோ. 4:20 அல்லது உரோ. 16:23இல் வரும் எராஸ்து ஆக இருக்கலாம்.

4. அகழ்வியலும், இஸ்ரயேலர் பண்பாடும்

இஸ்ரயேலருடைய பண்பாட்டுப் பின்னணியை பாபிலோன், மாரி, அசிரியா போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஏடுகள் விளக்கியுள்ளன. ராஸ்-சாம்ரா-ஏடுகளை ஷேபர் கி.பி.1929இல் கண்டுபிடித்தார். விரோலாய்ட், நுகைரோல் முதலியோர் வெளியிட்டுள்ளனர். இஸ்ரயேலர் கானானில் முடியாட்சியை நிறுவுவதற்கு முன்னால் கானானியர் கருத்தையறிய ராஸ்-சாம்ரா-ஏடுகள் உதவுகின்றன. வெண்கலக் காலத்தியப் பண்பாட்டை (கி.மு.3200-1350) மெகித்தோ, தானாக்கு, பேத்ரான், தெல்-பேத்து, மிஸ்ரிம், தெல்-எத்துவர், தெல்-ஏல்-அஜ்ஜூல், தெல்-ஜெம்மே, தெல்-ஏல்-பாரா, ஆட்சோர் முதலிய இடங்கள் விளக்குகின்றன. செழுமை வழிபாட்டை வலியுறுத்தும் பேத்சான் தெய்வங்கள், ஹாடாட், அனத், அஸ்தர்த்தே முதலானவை வெளிக்கொணரப் பட்டுள்ளன. களிமண்ணாலும், உலோகத்தாலும் இச்சிறு சிலைகள் செய்யப்பட்டன. கானானிய பாகால் சிலை ராஸ்-சாம்ரா தூணில் பதிந்துள்ளது; வெண்கலச் சிலைகளும் உள. கானானியப் பூசை இடங்கள் சில சிறு மாறுதல்களுடன் பல இடங்களில் காணப்படுகின்றன. அலெப்போவுக்கு அருகில் தெல்-தைனட் என்னும் இடத்தில் பிற்கால இரும்புக் காலத்தில் காணப்படும் கானானிய தொழுகை இடம் சாலமோனின்

கோவிலுக்கும் அவர் கட்டிய அரண்மனைக்கும் முன்னோடியாக இலங்குகிறது. ஆட்சோரில் பிற்கால வெண்கலக் காலத்தில் கட்டப்பட்டக் கோவில் வெளிச்சுற்று, உள் சுற்று, மா தூய தலம் என்ற பாகுபாடுகளுடன் காணப்படுகிறது. எரிவேள்விகளுக்கு உதவும் பீடங்கள், தூபம், நிலைத்தூண்கள் முதலியவை அக்கால கானானிய வழிபாட்டை ஒரளவு நாம் சீர் தூக்க உதவுகிறது. இந்த நிலைத் தூண்கள் முன்னோர் நினைவுக் கம்பங்களாக இருக்கலாம் அல்லது தெய்வத்தின் இருப்பினை மனிதருக்கு விளக்க எழுந்த சாதனங்களாயும் இருக்கலாம். கோட்டைகள், அரண் செய்த பாதைகள், கானானிய நகரச் சுவர்கள், வாழ்ந்த மக்களின் உறைவிடங்கள், தொழில் கூடங்கள், கல்லறைகள், கல்லறைகளுக்கு இடையே வைக்கப்பட்ட பொருட்கள், மட்கலங்கள், போர்வீரர்கள் பயன்படுத்திய போர்க்கருவிகள் இவையனைத்தும் கானானிய பண்பாட்டைப் பறையறிவிக்கின்றன. ஏறத்தாழ கி.மு.1500இல் செக்கேமிலும், தானாக்கிலும் ஆப்பெழுத்து ஏடுகள் இருந்திருக்கின்றன. சீனாயிலும் பீப்லாசிலும் கானானியத் துண் டுப் பிரதிகள் பண் டைய வாிவடிவத்தில் காணப்படுகின்றன. **கோலனிஸ்ஷெப் பாப்பைரஸ்** (சுமார் கி.மு.1100) பாலஸ்தீனத்திலும், சிரியாவிலும் எகிப்திய தூதுவர் அடைந்த இடர்ப்பாடுகளை எடுத்துரைக்கின்றன. இந்தப் பாப்பைரஸ் பிப்லாஸ் அரச ஆவணக் காப்பகத்தில் (Royal Archives) இருந்து மேற்கோள்கள் காட்டுகின்றன. பாலஸ்தீனத்தின் புவியியல், நாட்டின் நிலை, சமயம், பண்பாடு கி.மு.1400 அளவில் அமார்னா கடிதங்களில் கூறப்படுகின்றன. இவற்றிற கெல்லாம் மகுடம் வைப்பதுபோல ராஸ்-சாம்ரா ஏடுகள் நேரிடையாகவே கானானியப் பண்பாட்டை விளக்குகின்றன.

ராஸ்-சாம்ரா ஏடுகள் பலவகைப்பட்டவை. அவை மெசப்பொத்தாமியாவுக்கு அடுத்தபடியாக நிறைந்த அளவில் அரசகள் வடிவிலும், எழுத்து வடிவிலும் ஆட்சிப் பேணுதலை எடுத்துரைக்கின்றன. அரசனின் மதிப்பு, குடிகளின் நிலை, வரிவகூல் விவரம் காணப்படுகிறது. அரசை வடிவில் உள்ள சட்ட ஏடுகள் கானானியச் சட்டத்தின் சாரம் என்று சொல்ல முடியாவிட்டாலும், அரசனின் அதிகாரம், சிற்றரசர்களின் கடமைகள், நிலத்தை விளைச்சல் நிலமாக்க உதவும் விதிமுறைகள் இவையெல்லாம் எபிரேய முடியாட்சி முறை எங்ஙனம் வளர்ந்திருக்கக் கூடும் என்று நாம் ஊகிக்க உதவுகின்றன.

புராணக்கதைகள், பண்டைய அரசர்களின் பெருங்கதைகள் (கேரட், டானெல் நெடுங்கதைகள்) புராண நெடியுடன் கூடியவை. திருமணம், இறப்பு, பிறப்புச் சடங்குகள், விருந்தோம்பல், புகலிடம் தருதல் ஆகியவற்றிற்கும் எபிரேயர் கருத்துக்கும் மிகுந்த ஒற்றுமை காணப்படுகிறது.

மெசப்பொத்தாமிய ஏடுகளும், கானானிய, எகிப்திய ஏடுகளும் பண்டைக் காலத்தில் அரசனின் தெய்வீகக் கூறினை உறுதிப்படுத்துகின்றன. இந்த அரசனே ஆண்டவன் என்னும் கருத்தினை எந்த அளவுக்கு இஸ்ரயேலர் ஏற்றனர் அல்லது நிராகரித்தனர்? இந்தச் சுவையான விவாதம் அறிஞரிடையே கருத்து வேற்றுமையைத் தந்திருக்கிறது. எகிப்தியரைவிட, அசிரியரைச் சார்ந்துதான் இஸ்ரயேலர் கருத்து இருந்தது. அசிரியாவில் அரசன் மக்கள் அனைவரின் பதிலாளாக கடவுளுக்கு முன் நின்றான். அரசன் மூலம்தான் கடவுள் மக்களுக்கு ஆசி வழங்கினார். சமூகத்தில் அரசனுக்குப் பெருஞ்செல்வாக்கு இருந்தது. தொழுகையில் அரசன் முக்கிய பங்கெடுத்தான். உண்ணா நோன்பின் போதும், மக்கள் புலம்பிய போதும் மக்களின் சார்பாக அரசன் பாடுபட்டான். இந்தப் பின்னணியில்தான் சில எபிரேயத் திருப்பாடல்களை (திருப். 29:45) புரிந்து கொள்ள முடியும். எகிப்துவில் நிலவிய கருத்து இதுதான்: ஹோரஸ் என்னும் செழுமைத் தெய்வத்தின் அவதாரம்தான் பார்வோன். இந்தக் கருத்து இஸ்ரயேலரிடமும் உண்டு என்று சில திருப்பாடல்களை ஆராய்வதன் மூலம் அறியலாம். இதே கருத்து ராஸ்-சாம்ரா ஏடுகளிலும் இருக்கிறது. இவை சாலமோன் காலத்தில் நுழைந்திருக்கலாம்; அரச அவைகளில் அங்கீகாரம் பெற்றிருக்கலாம்.

இஸ்ரயேலில் அரசன் ஆண்டவனுக்குச் சமம் ஆனவன் என்றோ, ஆண்டவனின் அவதாரம் என்றோ துணிந்து கூறச் சான்றுகள் இல. தாவிதின் இனம் எருசலேமில் உறுதிப்படுத்தப் பட்டது, இதைப்போல வட நாட்டில் ஒம்ரி குலம் சமாரியாவில் உறுதிப்படுத்தப்பட்டது. ஆண்டவனின் அருள்வரத்தால் அரசன் வரலாற்றில் எழ முடியும் என்று இஸ்ரயேல் நம்பியது; ஏற்படும் சிக்கலைத் தீர்க்க, ஆண்டவனின் அருள்வரம் அரசனை மட்டுமன்று, அரச மரபையே தோற்றுவிக்க முடியும் என்பது யூத நாட்டின் கருத்து. அரசனைப் பற்றிய கருத்து இதுதான் என்று வரையறுப்பதற்குக் கானான் நாட்டின் பண்பாடும் அண்மைக் கீழ்நாட்டின் பண்பாடும் நமக்குப் பல சான்றுகளைத் தந்துதவியுள்ளன.

5. அகழ்வியலும், இஸ்ரயேலரின் சமயமும்

ராஸ்-சாம்ரா புராணங்கள் கானானியக் கவிதைகளால் ஆக்கப்பட்டவை. இந்தக் கானானிய மொழியின் பல சொற்கள் எபிரேயர் பயன்படுத்தியவை. எபிரேயர் கானான் நாட்டினைப் பிடித்து அங்குக் குடியேறியபோது கானானியரின் சமயத்தைப் பற்றி நேரிடையாக நமக்கு ராஸ்-சாம்ரா ஏடுகள் விவரம் தருகின்றன. கானானிய சமயத்தைப் பற்றிய சில சொற்கள் (அசேரா, ஏல் முதலானவை) விவிலியத்தில் வந்த போதிலும், கானானிய சமயத்தை இறைவாக்கினர் கடிந்துரைத்த போதிலும், இவையனைத்தும் கானான் சமயத்தினரை இழித்தும், பழித்தும் (ஒருவேளை திரித்தும்) கூறிய யூதக் கண்ணோட்டத்தில்தான் நாம் படிக்க முடிகிறது. ராஸ்-சாம்ரா ஏடுகள் மூலம் கானானியரே தங்கள் கருத்துக்களை எவ்வாறு வெளியிட்டனர் என அறியும் நல்வாய்ப்பு நமக்குக் கிடைத்துள்ளது. பாகாலின் பல சிறப்புப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. பாகால் என்றால் ஆண்டவன் எனப் பொருள். ஹடாட் என்றால் இடி இடிக்கச் செய்பவன் எனப் பொருள் (வருண பகவான் போல என்க). நாட்டில் செழுமையை அதிகரிக்கும் ஆற்றல் பாகாலுக்கு உண்டு. இந்தப் பாகால்தான் இயற்கையின் கூறுகள் தடைபடாது நீடிக்கவும், மழை பொழியவும் செய்கின்றான்; கொந்தளிக்கும் கடலை வென்று, வானை சூடி அரசனாக முடி சூட்டிக் கொள்ளுகிறான். இந்தப் பொருளை மையமாக வைத்தேதான் பல்வேறு வடிவங்களில், கற்பனை மெருகூட்டிப் புராணங்கள் புனையப்பட்டன. இவற்றில் சிலவற்றை இஸ்ரயேலர் ஏற்றனர். இறைவாக்குப் பகுதிகள் (எசா. 51.9) இவற்றையே குறிப்பிடுகின்றன. திருப்பாடல்களும் கவிதை நூல்களும் இவற்றையே காட்டுகின்றன. கடவுள் வரலாற்றில் செயலாற்றுகிறார் என்ற அனுபவத்துடன் இந்தக் கானானியப் புராணக் கருத்தும் குழைத்துத் தரப்படுகிறது. புத்தாண்டுப் பெருநாளின் போது கடவுள் அரசனாகத் தோன்றுகிறார் என்ற கருத்தை ராஸ்-சாம்ரா ஏடுகளில் பெருமளவில் காணலாம்.

பாகாலும் மோத்து என்ற மரண தேவதையும் கடும்போர்

புரிகின்றனர். பாகால் இறந்து உயிருடன் எழுந்திருக்கும் பயிர்த் தெய்வம் ஆவான். தம்முஸ், ஒசிரிஸ், டயனிசியு போன்ற தெய்வங்களின் கூறுதான் பாகால் ஆகும். பாகாலுக்கு கோவில் இடி இடிக்கும் முன்மாரிக் காலத்தில் கட்டப்படுகின்றது. 1 அர. 8.2இல் இதே காலத்தில்தான் சாலமோன் அரசனும் திருக்கோவிலை அர்ப்பணம் செய்கிறார். மோத் என்னும் மரண தேவதையை அழிக்கும் சடங்கு இலேவி. 2.14இல் ஒருவேளை குறிக்கப்பட்டிருக்கலாம். இந்தப் பாகால் புராணங்கள் புத்தாண்டில் புதுமையும் செழுமையும் வளமும் கொழிக்க வேண்டும் என்ற ஆர்வ அடிப்படையில் மக்களால் தொழுகையில் பாடப்பட்டன. இஸ்ரயேலர் ஓரளவு இந்தக் கானானியக் கருத்தை ஏற்றபோதிலும், இறந்து உயிர்த்து எழும் பாகால் புராணக் கருத்தை ஏற்கவேயில்லை. இது இஸ்ரயேலருக்கேயுரிய தனிச் சிறப்பு எனலாம். எதைக் கொள்ளுவது, எதைத் தள்ளுவது என்பதில் இஸ்ரயேலருக்கு நிகர் இஸ்ரயேலரே.

இத்தகைய புராணச் சடங்குகளைக் கானானியர் கைக்கொண்டதன் மூலம் கடவுளைத் தங்கள் விருப்பத்துக்கு இணங்கத் தூண்டினர். சமயச் சார்பு அல்லது வேறு பல கானானிய இலக்கிய ஏடுகள் இருந்திருக்கலாம். அவை இதுகாறும் நமக்குக் கிடைத்தில.

செழுமை வழிபாட்டின் மூலம் கானானியர் கொண்டிருந்த சமய நம்பிக்கைகள் எங்ஙனம் இஸ்ரயேலரை வயப்படுத்தியது என்று இதுகாறும் நாம் பார்த்தோம். இஸ்ரயேலர் எங்ஙனம் தங்கள் நம்பிக்கையை, வரலாற்றில் உறுதி செய்யப்பட்ட நம்பிக்கையை ஊன்றிக்கொண்டார்கள் என்றும் பார்த்தோம். இதேபோல மெசப்பொத்தாமிய சமயத்தையும் நாம் ஊன்றிப் பார்க்க வேண்டும். இதுகாறும் புலனாகாத, புரியாத பல கருத்துக்கள், விளக்கங்கள் இத்தகைய ஆராய்ச்சியால் நமக்குக் கிடைக்கும்.

மெசப்பொத்தாமியாவில் எங்ஙனம் கடவுள் அழிவுச் சக்திகளை வெல்லுகிறார் என்று புராணம் விவரித்து கூறும். தியாமத் என்ற கடல் தெய்வத்தை மார்துக் (மெரோதாக்... ஒசை ஒருமை காண்க) என்ற நல்ல தெய்வம் வெல்லுகிறது; இவ்வாறு ஒன்று மற்றொன்றை வென்று வாகை சூடுவதன் மூலம் வளமும் பொலிவும் புத்தாண்டில் பொங்கும் என்றே மெசப்பொத்தாமியர் நம்பினர். இதைப் புத்தாண்டு வசந்த விழா எனலாம். இந்த மையக் கருத்தைத் திருப்பாடல்களிலும், இறைவாக்குகளிலும், ஞான நூல்களிலும் காணலாம். இந்தப் புராணக் கருத்து இஸ்ரயேலில் உருவானது அன்று. பிற நாட்டினரிடம் இருந்து கடன் வாங்கிய கருத்து என்று துணிந்து கூறுவதில் பிழை இருக்க இடமில்லை. புலம்பல் திருப்பாடல்களையும் நோன்பின்போது பாடப்பட்ட பாவ அறிக்கைப் பாடல்களையும், வேறு பாடல்களையும் நுணுகி ஆராய்ந்தால் தெய்வம் பல அடைமொழிகளால் அழைக்கப்படுவதைக் காணலாம் அல்லது தெய்வம் சாதித்த பல வீரச் செயல்களைக் காணலாம். மெசப்பொத்தாமிய வழக்கு செமித்திய இன வழக்கான காரணத்தால் இஸ்ரயேலருக்கும் உரியதாக மாறியது. மந்திரித்தலும், பதில் மந்திர உச்சாடனம் செய்தலும் மெசப்பொத்தாமியப் போக்காகும். மந்திரத்தால் மனிதரை, மனிதரின் போக்கை மாற்றலாம் அல்லது மசியவைக்கலாம் என்று மெசப்பொத்தாமியர் கருதினர். அசிபு அல்லது அர்ச்சகன் இத்தகைய மந்திரங்களைச் செய்வான். பண்டைக்கால இறைவேண்டல்களில் இப்போக்கு காணப்படும். இதே போக்கு எரேமியாவிலும், புலம்பலிலும், யோபிலும், சில திருப்பாடல்களிலும் காணப்படுகின்றன. இத்தகையப் பாடல்களில் உயர்வு நவிற்சியைப் பார்க்கலாம் நாடோடி வழக்குக்குரிய மரபுத் தொடர்களைப் பார்க்கலாம். எ.கா. பகைவர் விழுங்குவது, நாவு உலர்ந்தது, மேல் வாயுடன் ஒட்டிக்கொண்டது போன்ற தொடர்களை ஒப்பு நோக்குக. பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் இத்தகைய சொல் வழக்கு காணப்படும். இதை முழுவதும் எழுத்துக்கெழுத்து பொருள்படுத்துவதைவிடச் சூழ்நிலையில் பொருள் கொள்ளுவதே சிறப்பாகும். மெசப்பொத்தாமிய ஏடுகள் இவ்வாறு சூழ்நிலைப் பொருள் கொண்டு விளங்கிட இடம் தருகின்றன.

பாரு (Baru) எனப்படும் மெசப்பொத்தாமிய அர்ச்சகர்களைப் பார்க்கலாம். இவர்கள் தெய்வத்தின் செய்தியை விண்மீன், அம்புகள், தண்ணீரில் விழும் எண்ணெய்த்துளிகள் மூலம் கூறிவந்தனர். இவை கடவுளின் திருவுளத்தை மறைமுகமாக மக்களுக்கு அறிவித்தன. மாரி ஏடுகளில் மாஹ்ஹி (Mahhe) என்னும் ஒருவகை ஆவேச வயப்படும் கூட்டத்தினரைப் பார்க்கிறோம். இவர்கள் நேரடியாகவே கடவுளின் விருப்பத்தைக் கூறி வந்தனர். இந்த மாஹ்ஹி கூட்டத்தினருக்கும் பரவச இறைவாக்கினருக்கும் ஒற்றுமை இருந்தது. மாபெரும் இஸ்ரயேல் இறைவாக்கினருக்கு முன்னோடிகளாக இந்த பாரு அர்ச்சகரும் மாஹ்ஹி அர்ச்சகரும் இருந்தனர். எசாயா இறைவாக்கினரின் காலத்தைச் சேர்ந்த கல்டு என்னும் அசிரிய ஏடும் இஸ்ரயேல் இறைவாக்கினருக்கும் மாஹ்ஹி அர்ச்சகர்களுக்கும் உள்ள இணைவைக் காட்டுகின்றன.

14.13 ஆம் நூற்றாண்டுகளில் இத்திய அரசர்கள் செய்த சமூக உடன்படிக்கைகள் புதுப்பொருள் தருகின்றன. கீழை நாடு முழுவதும் இந்த உடன்படிக்கைக் கருத்து பரவியிருந்தது. இஸ்ரயேலர் உடன்படிக்கையின் சாயலில் இருந்தது. விவிலியத்திலுள்ள பேரரசர் ஒருவர் வலிமை இழந்த சிற்றரசர் ஒருவருடன் செய்யும் உடன்படிக்கை, வலியவர் வலிமை யிழந்தவரின் மிது சுமத்தும் விதிகள்-நிபந்தனைகள், கீழ்ப்படிந்தால் வரும் ஆதாயத்தை விளக்கும் கூறுகள், பேரர்சரின் பெயர் இவையெல்லாம் உடன்படிக்கையின் பல கூறுகளாகும். பேரரசர் கட்டுக்கு இணங்கி நடக்கச் சிற்றரசர் மனம் விரும்பி ஒப்புதல் தருவார். விண்ணும் மண்ணும் இந்த ஒப்புதலுக்குச் சான்றுகளாகும். இச. 27 காண்க.

உடன்படிக்கை கடவுளிடம் இருந்து வந்தது; அதன் நிபந்தனைகள் கடவுளின் தன்மையைக் காட்டுகின்றன. கடவுளின் அன்பையும், மக்களுக்கு இருக்க வேண்டிய பற்றுறுதியையும் சீனாய் உடன்படிக்கை காட்டுகிறது. அசிரிய உடன்படிக்கை ஏடுகளாயினும் சரி, இத்திய உடன்படிக்கை ஏடுகளாயினும் சரி இவையெல்லாம் பேரரசரின் நலன் கருதிச் செய்யப்பட்டவையாகும். சீனாய் உடன்படிக்கைக்கும் இத்தியப் பேரரசர் - சிற்றரசர் உடன்படிக்கைக்கும் மிகுந்த ஒற்றுமை உண்டு. இதே ஒற்றுமை அசிரிய ஏடுகளில் உள்ள உடன்படிக்கைக்கும் சீனாய் உடன்படிக்கைக்கும் கிடையாது; அசிரியர் காலம் பிற்பட்டது; இத்தியர் காலம் முந்தியது. இஸ்ரயேலரிடையே எழுந்த உடன்படிக்கைக் கருத்து மிகப் பழைமை வாய்ந்தது; முடியாட்சிக்கு முன்னரே எழுந்தது. இந்தப் பழைய உடன்படிக்கைக் கருத்தைத்தான் வரிவடிவில் முடியாட்சியின் போது எழுதினர்.

6. அகழ்வியலும், விவிலியமும்

பண்டைய இலக்கியமும், இலக்கியத்தின் பல்வகை [illegible]

அவற்றின் வடிவங்களும், சொல்லும் முறையும், சொல்லப்பட்ட சந்தர்ப்பச் சூழ்நிலையும் விவிலிய ஆராய்ச்சிக்குப் புதுப்பொலிவு தந்துள்ளன. பாபிலோனியப் புராணங்கள், கானானிய நெடுங்கதைகள், கடவுளை அரசனாகப் பாவிக்கின்றன. இவற்றை இஸ்ரயேலர் சில திருப்பாடல்களிலும் இறைவாக்கு நூல்களிலும் எடுத்தாண்டிருக்கின்றனர். மெசப்பெத்தாமிய புலம்பல் பாடல்கள், மந்திர உச்சாடனங்கள், எதிர் மந்திர உச்சாடனங்கள் நம் புலம்பல் பாடல்களுக்குப் புதுப்பொருள் தருகின்றன. இஸ்ரயேலர் எந்தெந்த விதங்களில் கடன் வாங்கத் தயங்கவில்லை என்பதும் நமக்கு விளங்குகிறது. கில்காமேஸ் புராணம், அக்காகு கேரட் நெடுங்கதை, பாகால் புராணம் விவிலிய இலக்கியத்தை, இலக்கிய நடையை விமர்சிக்கத் துணை புரிகின்றன.

பாடபேதங்கள் ஏற்படும் பகுதிகளில் ராஸ்-சாம்ரா ஏடுகளின் துணையைக் கொண்டு மூலபாடத்தை நிறுவ முடியும். ப.ஏ.இல் பல இடங்களில் ஒரே முறைதான் ஒரு சொல் பயன்படுத்தப்பட்டிருக்கும். இதற்கு ஹபக்ஸ் லெகோமெனன் எனப் பெயர். இத்தகைய சொற்களுக்குப் பொருள்கோடல் எளிதன்று. ஆனால் இதே சொற்கள் வேறு சூழல்களில், வேறு ஏடுகளில் காணப்படுவதனால் அவற்றின் பொருளை மெய்ப்பிப்பது கடினமன்று. கருகலான சொற்களுக்கும் இவ்வழிகளில் செம்பொருள் காணலாம். ஒரு காலத்தில் செப்பம் (Emendation) செய்தல் மூலம் சிலர் வாசகத்தை நிறுவி வந்தார்கள். ராஸ்-சாம்ரா ஏடுகள் இவ்வாறு செப்பம் செய்வது சரியன்று என்றும், மஸ்ஸோரா ஏடு (Masoretic Text- மரபுவழிவரும் எபிரேய பாடம்) சிறந்தது என்றும் பல இடங்களில் மெய்ப்பித்துள்ளது.

கும்ரான் சுருள்கள், அதாவது சவக்கடல் சுருள்கள், மக்கபேயர் காலத்திலிருந்து எருசலேம் நகரின் அழிவு வரை (கி.பி.70) எஸ்ஸீனர் என்னும் யூத சமய உட்பிரிவினர்தம் அறநெறி, இறுதிகால நம்பிக்கைகள், விவிலியத்தை விளக்கியப் பான்மை, இயேசு கிறிஸ்துவின் காலத்திய இறையியல் ஆகியவற்றை விளக்குகின்றன. விவிலியப் பகுதிகள் எஸ்ஸீனரிடமும் இருந்தன. இவற்றிற்கும் இன்று நமக்கு உள்ள எபிரேயப் பிரதிக்கும் உள்ள வேறுபாடுகள் முக்கியம் வாய்ந்தவை. சீனாய் கிரேக்கப் பிரதி, வாடிக்கன் கிரேக்கப் பிரதி ஆகிய இரு பழம்பெரும் பிரதிகளுக்கும் சுமார் 300 ஆண்டுகள் தொன்மை வாய்ந்தன இந்தச் சவக்கடல் சுருள்கள். மேலும், இவை மரபான எபிரேயப் பிரதியைப் பெரும்பாலும் ஒத்துக்கொள்ளுகின்றன; சில இடங்களில் வழக்கமான எபிரேயப் பிரதியின் வாசகத்தை மாற்றி செப்துவஜிந்து பிரதியை ஏற்கின்றன; முராபத்அத் நீரோடையருகே கண்டுபிடிக்கப்பட்ட பாப்பைரி கி.பி.312 ஆம் ஆண்டுக் காலத்திய லூசியன் கிரேக்கப் பிரதியையும் தழுவு கின்றன. இங்ஙனம் காணப்படும் வேறுபாடுகளுக்குக் காரணம் அறிவது எளிது. வாசகம் இதுதான் என்று வரையறுக்கப்பட வில்லை. வாசகத்தை நிறுவும் இலக்கை நோக்கி நகரத்தொடங் கிவிட்டனர். விவிலியத்தின் அடிப்படைக்கொள்கையைப் பாதிக் கும் அளவுக்கு எந்தச் சவக் கடல் சுருளும் இடம் தரவில்லை.

7. அகழ்வியலும், புதிய ஏற்பாட்டு வசனமும்

எகிப்து நாட்டின் தட்ப வெப்ப நிலை பாப்பைரஸ் துண்டுகளை மிகப் பத்திரமாகச் சேமித்து வைப்பதற்கு உதவியுள்ளது.

யோவான் நற்செய்தியின் பழைய பகுதிகள் (18:31-33,37,38) சுமார் கி.பி. 150ஆம் ஆண்டைச் சேர்ந்தவை. மிகப் பழமையான ப.ஏ. பாப்பைரஸ் துண்டு இச. 23:24-24:3; 25:1-3; 26:12, 17-19; 28:31-33 ஆகும். இவை கி.மு. 150ஆம் ஆண்டைச் சேர்ந்தவை. மேலும், கி.பி. இரண்டு முதல் நான்கு நூற்றாண்டளவில் எழுதப்பட்ட ப.ஏ.இன் ஒன்பது நூல்களும், பு.ஏ.இன் பதினைந்து நூல்களும், தள்ளுபடியாகமத்தைச் சேர்ந்த ஏனோக்கு நூலும் சர் அல்பிரெட் செஸ்டர் பியட்டி என்பவரால் வாங்கப்பட்டன. அவர் பெயரையே இப்பிரதிகள் இன்றும் தாங்கிநிற்கின்றன.

போட்மர் (Bodmer) பாப்பைரி சுமார் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. லூக்கா, யோவான், 1 பேதுரு ஆகிய நூல்கள் இதுகாறும் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றை ஆதாரமாக வைத்து சீனாய், வாடிக்கன் கிரேக்கப் பிரதிகளின் பாடத்தை மறு ஆய்வு செய்ய வேண்டிய தேவை இப்போது எழுந்துள்ளது.

விவிலிய நூல்களைத் தவிர வேறு சில நூல்களும் கிடைத்துள்ளன. கிரீன்பெல', ஹண்ட் ஆகிய இருவர் கி.பி. 1896இல் ஆக்சிரின்ச்சிஸ் என்னும் இடத்தில் கிறிஸ்துவின் உரைகள் என்ற கி.பி. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நூலைக் கண்டுபிடித்தனர். இந்த உரைகள் விவிலிய அடிப்படையில் எழுந்தவை. சில விளக்கங்கள் ஆகும்; சிந்தனையினின்றும் சில எழுந்தன. இன்னும் சில கிறிஸ்துவின் உரைதானா என்ற ஐயத்தையும் தோற்றுவிக்கும். திரு. 20:35 இல் லூக்கா நான்கு நற்செய்திகளும் கூறாத கிறிஸ்துவின் உரையைக் கூறுகிறார் அல்லவா? எனவே, இத்தகைய இயேசுவின் உரைகள் அனைத்தும் போலியா, உண்மையா என்று முடிவு கட்டுவதற்குப் போதிய ஆய்வும், நிதானமும், இறைப்பற்றும் தேவைப்படுகின்றன. கிறிஸ்துவின் போதனையைச் சற்று மெரு கூட்டியிருக்கலாம்; எகிப்தில் 2ஆம், 3ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்த்தப்பட்ட அருளுரைகளின் பாணியில் இவை எழுதப் பட்டிருக்கலாம். மத்தேயுவும் லூக்காவும் பார்த்து எழுதிய பகுதியாயும் இருக்கலாம். மரபுக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் சரி, நற்செய்திகளின் கோணத்தில் எடை போட்டாலும் சரி, சில உரைகளைத் தவிர மற்ற உரைகளை இயேசு மொழிந்திருக்கக்கூடும்.

இன்னும் சில பாப்பைரி தனிப்பட்டவர்களது கடிதங்களாகும்; கிறிஸ்தவர்களால் எழுதப்பட்டன; இயல்பான வாழ்வுபற்றியவை, ஆட்சியாளர் எழுதிய கடிதங்கள், பானையோட்டிலாவது, பாப்பைரசிலாவது எழுதிய ரசீதுகள். இவையெல்லாம் கிரேக்க-உரோமர் பண்பாட்டை விளக்கி நிற்கின்றன; பவுலின் காலத்திய கிரேக்க மரபுத் தொடர்புகளை ஊகிக்க உதவுகின்றன.

பேதுருவின் நற்செய்தியும் பேதுருவின் திருக்காட்சியும் கி.பி. 1885 இல் கண்டுபிடிக்கப்பட்டன. இவை பெரும்பாலும் பிற்காலத்தில் எழுதப்பட்டவை, நம் நான்கு நற்செய்திகளின் மாதிரியைப் பின்பற்றுகின்றனவேயன்றிப் புதுமையாக எதையும் கூறுவதில்லை. இவை கி.பி. 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. கி.பி. 1934இல் காணப்பட்ட ஒரு பிரதி சுமார் கி.பி.150 ஆம் ஆண்டைச் சார்ந்தது. லூக். 1:1ஐ ஊன்றிப் பார்த்தால் இயேசுவின் பணியைப் பற்றிய நூல்கள் பல இருந்தன என்பது தெரியவரும். எனவே, காய்தல் உவத்தலின்றி அகழ்வு தரும் இந்நூல்களைப் பொறுமையாக ஆய்வது நலம் பயக்கும்.

மேல் எகிப்துவில் நாக் ஹம்மாடி அருகே உள்ள செனோபொஸ்கியான் என்னும் இடத்தில் தோலில் சுற்றப்பட்ட 44 பாப்பைரஸ் எழுத்துப் பிரதிகள் உள்ளூர்வாசிகளால்

கண்டுபிடிக்கப்பட்டன. கி.பி. 1947இல் கண்டுபிடிக்கப்பட்ட செனோபொஸ்கியான் பிரதிகள்: (1) வாய்மைச் நற்செய்தி (2) பிலிப்புவின் நற்செய்தி (3) தோமாவின் நற்செய்தி எனப் பெயர் பெறும். இவற்றிற்கும் நம் நான்கு நற்செய்தி நூல்களுக்கும் தொடர்பே இல்லை. கிறிஸ்து நிகழ்த்தியதாகக் கூறப்படும் உரைத் தொகுப்புகள் இவை, கி.பி.4ஆம் நூற்றாண்டைச சார்ந்தவை. காப்டிக் மொழியில் உள்ளவை; கிரேக்க மூலத்தின் மொழிபெயர்ப்பாகும். இந்தக் கிரேக்கமூலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டு எழுந்தது என்று சில அறிஞர் கூறுவர். இவர்கள் கூற்றுக்கு ஆதாரம் இல்லை. இவை குனோஸ்திகக் கிறிஸ்தவ உட்பிரிவினரால் தொடக்கத்தில் எழுதப்பட்டவை. இவற்றைப் பு.ஏ. பகுதியில் ஆராய்வதை விடத் திருச்சபை வரலாற்று வகுப்பில் ஆராய்வது சாலப் பொருந்தும்.

துணை நின்ற நூல்கள்

1. Albright, W.F., *New Horizons in Biblical Research*, London, Oxford University Press, 1966.
2. Albright, W.F., *The Archaeology of Palestine*, Penguin Books, 1949.
3. Burrows, M., *What mean these Stones*, T.T.Clark, 1941.
4. Gray, J., *Archaeology and the Old Testament World*, 1962.
5. Kenyon, K.M., *Archaeology in the Holy Land*, 1960.
6. Saggs, H.W., *The Glory that was Babylon*, 1962.
7. Wright, G.E., *Biblical Archaeology* , London, Duckworth & Co.Ltd., 1957.
8. Y. Aharoni, *The Land of the Bible, Burns and Oats*, 1973.
9. D.W.Thomas, *Archeology and O.T.Theology*, OVP, 1967.
10. R.K.Harrison, *OT.T.Survey*, IVP, 1983.
11. R.D.Vaux, *Archeology and Dead Sea Scrolls*, OVP, 1973.
12. J.B.J.B.Prtechard, *Ancient Near Eastern Texts*, Princeton, 1970.

7

விவிலியம் உருவாகிய காலத்தில் வழக்கிலிருந்த அளவுகள், நாணயங்கள், பஞ்சாங்கங்கள்

ஞான இராபின்சன்

1. அளவுகள்

(அ) நீட்டல் அளவு; விவிலியத்தில் தூர அளவுகள் சற்றுத் தொலை (தொட.35: 16), தப்படி (2 சாமு. 6 :13), அடி (1 சாமு. 20 :3), அம்பு எறி தூரம் (தொட.21 :16), கல்லெறி தூரம் (லூக்.22 :41), ஒரு நாள் பயணம் (2 :44) என்று பலவாறாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

எபிரேயர், பெரும்பாலும் உடலின் உறுப்புக்களைக் கொண்டே குறிப்பாக கையின் பகுதிகளைக் கொண்டே தூர அளவுகளைக் குறிப்பிட்டனர். நீட்டல் அளவின் மிகச் சிறிய அளவு விரற்கடை (எட்ஸ்கஃஹ்)எனப்பட்டது. இது பெருவிரல் அளவு 3/4 இஞ்சு நீளத்தை குறிப்பிட்டது. எரே. 52 :21இல் மட்டுமே வருகின்றது. ஆனால் விவிலியத்துக்கு வெளியில் தால்முட் முதலான பல இலக்கியங்களில் காணப்படுகிறது. பெருவிரல் தவிர்த்து பிற நான்கு விரல்களும் சேர்ந்த அளவு நாலு விரற்கடை அல்லது கையளவு (தெபகு அல்லது தோபகு - Palm or hand breadth) எனப்பட்டது. இது மூன்று இஞ்சு நீளத்தைக் குறித்தது; சாதாரண முழமொன்றின் 1/6 பகுதி (1 அர. 7 :26 காண்க).

விரித்த கையில் பெருவிரல் முனையிலிருந்து சிறு விரல் முனை மட்டுமுள்ள தூரம் சாண் (செரத்து-Span) எனப்பட்டது. இது 9 இஞ்சு நீளத்தைக் குறித்தது. சாதாரண முழத்தில் பாதி (விடு. 28 : 16, 39 9, 1 சாமு. 17 : 4, எசா. 40 : 12)

இரண்டு சாண் ஒரு முழம் (அம்மா - Cubit). இது கை முட்டியிலிருந்து நடுவிரல் முனை வரையுள்ள தூரம் (தொட. 6:15; 7:20; இணை. 3:11மூ.). கீழை அண்மை நாடுகளிலும் கிரேக்க-உரோமை நாடுகளிலும் இது வழக்கிலிருந்து வந்தது.

சீலோவாம் கல்வெட்டு சீலோவாம் சுரங்கத்தின் நீளம் 1,200 முழம் என்று குறிப்பிடுகிறது. தற்கால அளவுப்படி இது 1,749 அடியாகும். இதன்படி ஒரு முழம் என்பது ஏறத்தாழ17. 5 இஞ்சு ஆகும். நீதித். 3.16இல் கூத்தின் வாள் ஒரு கோமெட் நீளமெனப்பட்டது. இச் சொல் இங்கு மட்டும்தான் வருகிறது. இதன் பொருள் தெரியாது. ஒருவேளை இது, சாண் அளவுக் கான இன்னொரு சொல்லாக இருக்கலாம். நீட்டல் அளவைக் கருவிகளாக அளவுகோல்களும் (எசே. 40:3; திருவெ. 21 :15) அளவு நூல்களும் (செக்.2 :1) பயன்படுத்தப்பட்டு வந்தன.

பிற்காலத்தில் கிரேக்க, உரோமை அளவுகளான பகுதி அல்லது பர்லாங் (600 அடி; திருத். 27 :28), மைல் (8 பகுதிகள் மத். 5:41) ஆகிய அளவுகளும் வழக்கிலிருந்தன என்று அறிகிறோம்.

(ஆ) பரப்பளவு பரப்பளவைக் குறிப்பிடும் சொற்கள் எபிரேய மொழியில் இல்லை. ஒரு சதுரத்தின் நீளம், அகலம் அல்லது குறுக்களவைக் குறிப்பிட்டு அதன் பரப்பு தரப்பட்டது (1 அர., 6:2,3; 7:23; 2குறி.4:12; எசே.40:47,49; 41,2. 41 மூ).

இலேவியருக்காக ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் நிலம், 1,000 சதுர அடி அகலத்தில் காணப்படவேண்டுமெனப்பட்டது (எண்.35 :4,5). விவசாய நிலங்களின் பரப்பு நடைமுறைக்கேற்ப குறிப்பிடப்பட்டது. ஓர் ஏக்கர் (செமட்) என்பது ஏர்மாடுகள் ஒரு நாள் உழும் நிலப்பரப்பு ஆகும். இது ஓர் ஏர் நிலம் எனப்பட்டது (எசா.5:10). மெசப்பொத்தாமியாவில் இது 6,480 சதுர அடி எனறு கணக்கிடப்பட்டது. விதை விதைக்கிற அளவைக்கொண்டும் பரப்பு கணக்கிடப்பட்டது. இரண்டு படி விதை விதைக்கத்தக்க நிலத்தின் அளவு மெசப்பொத்தாமிய கணக்கீட்டின்படி இது 10,000 சதுர அடியாகும்.

(இ) நிறுத்தல் அளவு விலையுயர்ந்தப் பொருட்கள், உலோகங்கள் யாவும் நிறுத்து எடுக்கப்பட்டன.

எபிரேயர் நிறுத்தல் அளவுமுறைகளைக் கானானிய ரிடமிருந்து எடுத்ததாகத் தெரிகிறது. கானானியர் இதனை பாபிலோனிய வணிகரிடமிருந்து பெற்றிருக்கலாம். பாபிலோனியரிடையில் நிறுத்தல், ஆறு என்ற எண்ணின் பெருக்குத்தொகையில் காணப்பட்டது. நிறைபடிகளாக இம் மக்கள் பெரும்பாலும் கற்களைப் பயன்படுத்தினர். இக்கற்கள் ஒரு பையில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன (இணை. 25:13; மீக். 6:1; 1நீதித். 16:11).

சாகல் என்றால் நிறுத்தல் என்று பொருள்படும். இதிலிருந்து எழுந்த சேக்கல் என்ற சொல் எபிரேயரின் முக்கிய நிறுத்தல் அளவைக் குறிப்பிட்டது. இது செமித்திய மக்களிடையில் பொதுவான ஓர் அளவு (விடு. 30: 13,24; 38: 24 -26; இலேவி. 5:15; 27:3,25; எண். 3:47, 50; 2 சாமு. 14:26). இதன் மறுபடிகள் மினா (இராத்தல், 1 அர.10:17). கிக்கார் (தாலந்து யாத் 37:24) என்று அறியப்பட்டன. திருமறையில் சேக்கலின் பல பகுதிகள் குறிப்பிடப்படுகின்றன. அரைச் சேக்கல் (விடு.30:13), சேக்கலில் மூன்றில் ஒரு பகுதி (நெகே. 10:33), சேக்கலில் நாலில் ஒரு பகுதி (1 சாமு. 9:8). சேக்கலை விடக் குறைவான நிறுத்தல் அளவைகளின் பெயர்களும் தரப்படுகின்றன. தொட. 24:22; யாத். 38:26 இல் பெக்கஹ் என்ற சொல் அரைச் சேக்கல் அளவைக் குறிக்கிறது. கேரா

என்பது மிகச் சிறிய நிறுத்தல் அளவு (விடு.30:13; இலேவி. 27:25; எண். 3:47; 18:16; எசே.45:12). 1 சேக்கல் இருபது கேரா எனப்பட்டது. 1 சாமு. 13:21; செக். 13:8 ஆகிய பகுதிகளில் பாமீம் என்ற ஒரு சொல் வருகிறது. தொல்பொருள் ஆய்வாளருக்குப் பழக்கமான ஒர் அளவு இது. இது சேக்கலின் மூன்றில் இரு பகுதிகளைக் குறிப்பிடுகிறது. விவிலியத்தில் காணப்படும் இன்னொரு சொல் தானி. 5:25,28இல் மட்டும் வரும் பெரஸ் என்ற அரமேயச் சொல். இது அக்கேடிய மொழியில் பழக்கமாயிருந்தது. இதன் இருமைப் பன்மை (dual) பார்சின் என்பது. இது மினா அல்லது சேக்கலின் அரைப் பகுதியைக் குறிக்கலாம்.

இறுதியாக யாக்கோபு செக்கேமின் புதல்வர் கையில் வாங்கிய நிலத்திற்குக் கிரயமாக சீத்தா என்ற அளவையின்படி வெள்ளியை நிறுத்துக் கொடுத்ததாகக் காணலாம். இச்சொல் யோசு. 24:32; யோபு 42:11 ஆகிய இடங்களில் வருகிறது இதற்கு மேல் இந்த அளவைப் பற்றி நாம் வேறு எதுவும் அறியவில்லை.

இந்த அளவைகளில் முக்கியமானவை இஸ்ரயேலருடைய அண்டை நாட்டாரிடையிலும் காணப்பட்டன. மெசப்பொத்தாமியாவில் இவை ஆறின் பெருக்கு எண்களாகக் கொள்ளப்பட்டன.

1. தாலந்து = 60 மினாக்கள் = 3,600 சேக்கல்கள். யுகாரிட் என்னுமிடத்தில் ஒரு தாலந்து 3,000 சேக்கல்கள் என்று கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது. யுகாரிட் ஏடுகளில் மினாவின் அளவு என்ன என்பது தெளிவாகக் கூறப்பட வில்லை. ஆனால், சூழல்களை வைத்துக் கணக்கிடும்போது 50 சேக்கல்களாகக் கொள்ளப்பட்டிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. இதன்படி ஒரு தாலந்துக்கு 60 மினாக்கள் உண்டு. விவிலியத்தில் விடு. 38:25,26இன்படி ஒரு தாலந்து 3,000 சேக்கல் பெறுமதிப்புள்ளது எனத் தெரிகிறது. பெக்கஃஹ் என்பது அரைச் சேக்கல். 20 கேராக்கள் கொண்டது ஒரு சேக்கல் (இலேவி. 27:25; எண். 3:47; 18:16; எசே. 45:12). விவிலியத்தில் மினாவின் அளவு என்ன என்பது தெளிவாக இல்லை. எசே. 45:12இன்படி ஒரு மினா என்பது 60 சேக்கல் என்பதாகத் தோன்றுகிறது (20+25+15).

(ஈ) முகத்தல் அளவு ஹோமெர் தானியங்களை அளக்கும் ஓர் அளவு. ஒருவேளை இது ஒரு கழுதைப் பாரத்தைக் குறிக்கலாம். ஹமோர் என்றால் கழுதை என்று பொருள். (இலேவி. 27:16; எசே.45:13; ஒசே. 3:2). பாலைநிலத்தில் காடைகளை அளப்பதற்கு இது பயன்படுத்தப்பட்டதாக அறிகிறோம் (எண்.11.:32). இன்னொரு பெரிய அளவு கோர் என்பது (மரக்கால் 1 அர. 5:11; 2 குறி. 2:10). இது சாதாரணமாக மாவு, தானியம் ஆகியவற்றை அளக்கப் பயன்படுத்தப்பட்டதுபோலும். எண்ணெயும் இதன்மூலம் அளக்கப்பட்டது (1 அர.5:11; எசே.45:14).

லெருக் என்பது இன்னொரு தானிய அளவு (கலம்). இது ஒசே. 3:2இல் மட்டும் தான் வருகிறது. இலத்தீன் மொழி பெயர்ப்பின்படி (Vulgate) இது ஹோமெர் அல்லது கோர் அளவில் பாதி ஏப்பா (Ephah) இன்னொரு தானிய அளவு படி. இலேவி. 19:36; இணை. 25:15; செக். 5:6-10 இன்படி ஒரு பெண் உள்ளிருக்கத்தக்க அளவில் இது ஒரு பெரிய பாத்திரம் என்று தெரியவருகிறது.

ஏப்பாவுக்குச் சரியான திரவ அளவு பத் என்பது (குடம் 1 அர. 7:26; 2குறி. 2:9; 4:5) குடமும். படியும் ஹோமெரில் பத்தில் ஒரு பகுதி. ஷாலீஷ் என்பது இன்னொரு அளவு எசா. 40:12; திருப். 80:6); ஓர் அளவின் மூன்றில் ஒரு பகுதி. செயா என்பது மாவு தானியங்கள் அளப்பதற்கான இன்னொரு படி (தொட. 18:6; 1சாமு. 25:18; 1அர. 18:32; 2அர. 7:1). ஹின் என்பது இன்னொரு திரவ அளவு (விடு. 30:24; எண். 15:9; எசே. 45:24).

ஓமெர் என்னும் ஓர் அளவு மன்னாவைப் பற்றிய வரலாற்றில் மட்டும் வருகிறது (16:36). இது ஏப்பாவில் பத்தில் ஒன்றெனக் குறிக்கப்படுகிறது.

இஷ்ஷாரோன் என்றால் பத்தில் ஒன்று, தசமபாகம் என்று பொருள். இது ஓர் உணவளவாகக் குறிப்பிடப்படுகிறது (29:40; இலேவி. 14:10,21). கப் என்னும் இன்னோர் அளவு 2அர. 6:25இல் மட்டுமே குறிப்பிடப்படுகிறது. இது காற்படி எனப்பட்டது. லோகு என்னும் திரவ அளவு தொழுநோயாளர் தூய்மைப்படுத்தலைப்பற்றிய கட்டளைகளில் வருகிறது (அரைப்படி; இலேவி. 14:10,12,15,21,24).

2. நாணயங்கள்

ஆரம்ப நாள்களில் கொடுக்கல்-வாங்கல் யாவும பொருள் மாற்றத்தினால் நடந்தன. ஆனால் விரைவிலேயே உலோகங்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டன (2 அர. 15:19; 18:24). முக்கியமாகக் கப்பம் கட்டுவதற்காக உலோகங்கள் பயன் படுத்தப்பட்டன (15:19; 18:14); நிலம் வாங்கவும் உலோகங்கள் நிறுத்துக் கொடுக்கப்பட்டன (தொட. 23:4 மு; 2சாமு. 24:24; 1 அர. 16:24). முக்கியமாக செம்பு, வெள்ளி, பொன் உலோகங்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டன; வெள்ளியே அதிகமாக வழக்கிலிருந்து வந்தது.

நாணயங்களைப் பற்றி முதன் முதலாக எஸ்ரு, நெகேமியா நூல்களிலேயே பார்க்கிறோம் (எஸ்ரு 2:69; நெகே. 7:69 மு). கிரேக்கர் ஆட்சி காலத்தில் கிரேக்க நாணயங்கள் வழக்கி லிருந்து வந்திருக்க வேண்டும். ஹாஸ் - மோனியர் ஆளுங்கக் காலத்தில் யூதர்கள் ஒருவேளை தங்களுக்கே சொந்தமான நாணயங்களை முதன் முதலாகச் செய்திருக்கலாம்.

கொடுக்கல் - வாங்கல் யாவற்றிலும் இஸ்ரயேலர் நீதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது திருச்சட்டம்.

நீதி விசாரணையிலும், அளவிலும், நிறையிலும், படியிலும் அநீதி செய்யாதிருங்கள்; அளவு சரியான தராசும், அளவு சரி யான நிறைகல்லும், அளவு சரியான மரக்காலும், அளவு சரி யான படியும் உங்களுக்கு இருக்க வேண்டும். உங்களை எகிப்து நாட்டினின்று வெளிக்கொணர்ந்த உங்கள் கடவுளாகிய ஆண்டவர் நானே. என் விதிமுறைகள் யாவற்றையும், என் கட் டளைகள் யாவற்றையும் நீங்கள் கைக்கொண்டு நடக்க வேண்டும். நான் ஆண்டவர் என்று சொன்னார் (இலேவி. 19:35-37).

3. பஞ்சாங்கங்கள்

இஸ்ரயேலரின் இடைப்பட்டக் காலத்தைக் குறித்து உயர்ந்தக் கருத்துக்கள் காணப்பட்டபோதிலும், அன்னாரிடையில் நிலையான பஞ்சாங்கம் நெடுங்காலமாகக் காணப்படவில்லை.

ஆண்டு, மாதங்கள் ஆகியவற்றின் கணக்கீடு அன்னாருக்குப் பிரச்சனையைக் கிளப்புவதாகவே உள்ளது. விவசாய ஆண்டொன்று கால நிலைக்கு ஏற்ப வேறுபடுவதாக இருந்தது. கதிரவன், விண்மீன்கள் ஆகியவற்றின் போக்கை 365 1/4 நாள்கள் (Solar year) என்று கணக்கிடுவது இயலாதக் காரியமாகக் காணப்பட்டது. நிலா பூவுலகை ஒருமுறை சுற்றி வரும் காலம் 29 1/2 நாள்கள். இவ்வாறு 12 முறை சுற்ற 354 1/4 நாள்கள் (Lunar year) ஆயின. இது சூரியக் கணக்கீட்டுடன் முரண்படுவதாக உள்ளது. இவ்வாறுள்ள பிரச்சனைகளின் இடையே இஸ்ரயேலரின் பஞ்சாங்கக் கணக்கீடு படிப்படியாகவே வளர்ச்சியடைந்தது என்று காணலாம். இவ்வளர்ச்சியில் கானானிய, அசிரிய, பாபிலோனிய காலக் கணக்கீடு முறைகள் இஸ்ரயேலருக்கு உதவின எனலாம்.

இஸ்ரயேல் மக்கள் தொடக்கக் காலத்தில் கானானிய பஞ்சாங்கத்தையே பின்பற்றி வந்திருக்கக்கூடும். இப் பஞ்சாங்கம் பிற்காலத்தில் பெனிக்கிய நாடுகளிடையில் வழக்கிலிருந்து வந்த சூரியப் பஞ்சாங்கத்தை (Solar calendar) தழுவினதாகவே இருந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் சந்திர-சூரியக் கணக்கீட்டை இணைத்த சந்திர-சூரியப் பஞ்சாங்கம் (Lunar Solar calendar) கிழக்கு நாடுகள் யாவற்றிடையிலும் வழக்கிலிருந்து வந்ததாகக் காணலாம். ஒருவேளை இத்தகையக் கணக்கீடும் இஸ்ரயேலரிடையில் முன்னாலிருந்தே வழக்கிலிருந்து வந்திருக்க வேண்டும். பாபிலோனியர் இத்தகையப் பஞ்சாங்கத்தையே கொண்டிருந்தனர். கி.மு. 1830-1550க்கிடையில் இவர்கள் சந்திர-சூரியப் பஞ்சாங்கத்தை ஏற்றுக் கொண்டிருந்தனர். இவர்களுடைய ஈடுபாட்டால் சிறையிருப்புக்கு முன்னும் இஸ்ரயேலரிடையில் காணப்பட்டிருக்கக்கூடியதே. பாபிலோனியக் கணக்கீட்டின்படி ஓராண்டானது, ஒரு வசந்தகால சமஇரவு நாளிலிருந்து (Vernal Equinox) இன்னொரு வசந்தகால சமஇரவு நாள் வரை கணக்கிடப்பட்டது. இந்தச் சந்திர மாதங்கள் சாதாரணமாக முப்பது நாள்களைக் கொண்டவை.

பாரசீகக் காலமளவும் பஞ்சாங்கக் காலங்களைக் கணக்கிட வானசாஸ்திரமே (astronomy) உதவி வந்தது. ஆனால் பாரசீகக் காலத்திலிருந்து இதற்குக் கணித சாஸ்திரம் அதிகமாகப் பயன்பட்டுவந்தது.

(அ) **ஆண்டு:** கானானியர், வடமேற்குச் செமித்தியர் ஆகியோரிடையில், ஆண்டு இலையுதிர்கால சமஇரவு நாளில் (Autumn equinox) தொடங்கினதாக அறியப்படுகிறது. பாபிலோனியரிடையில் ஆண்டானது, வசந்தகால சமஇரவு நாளில் (Vernal equinox) தொடங்கினதாக அறிகிறோம்; இஸ்ரயேலரிடையில் வெவ்வேறு காலங்களில் இரு புத்தாண்டு நாள்கள் வழக்கிலிருந்து வந்ததாக அறிகிறோம் ஒன்று வசந்தகால சமஇரவு நாளிலும், மற்றொன்று இலையுதிர்கால சமஇரவு நாளிலும் அமைந்ததாகக் காணலாம்.

சாலமோன் தம் ஆட்சிக் காலத்தில் பெனிக்கியரிடமிருந்து சூரியப் பஞ்சாங்கத்தை எடுத்திருக்கலாமென்று கருதப்படுகிறது. இதன்படி சாலமோன் ஏத்தானீம் (Etanim) மாதத்தில், இலையுதிர் கால சமஇரவு நாளில் புத்தாண்டு நாளைக் கொண்டாடினதாக 1 அர. 8:2 க்குரிய அரமேய மொழிபெயர்ப்பு குறிப்பிடுகிறது (Targ; 1 Kings 8:2). இப்பஞ்சாங்கத்தின்படி ஆண்டின் முதல் மாதம் ஏத்தானிம் எனக் கொள்ளப்பட்டிருக்கலாம். பிற்காலத்தில் இது ஏழாம் மாதம் என்று கொள்ளப்பட்டதுபோலும். இம்மாற்றம் ஒருவேளை கி.மு. ஏழாம் நூற்றாண்டளவில் அசிரிய ஈடுபாட்டினால் மாதங்கள் எண்களால் அறியப்பட்டதுடன் ஏற்பட்டிருக்கலாம். இதன்படி ஆண்டின் பிறப்பு ஏழாம் மாதம் பத்தாம் நாளில் அமைந்தது (இலேவி. 15:29; 25:8-10; எசே. 40:1). இந்த மாதம் இஸ்ரயேலருக்கு மிகவும் முக்கியமானதாகக் காணப்பட்டது. சாலமோனின் கோவில் அர்ப்பண விழா இந்த நாளில் உச்ச நிலையடைந்தது (1 அர. 8:10,11,65). ஆரோனிய குருக்களும் சந்திப்புக் கூடாரமும் இம்மாதத்திலேயே அர்ப்பணம் செய்யப்பட்டதாக அறியப்படுகிறது (இலேவி.9:1; 10:2). இப்படியாக இலையுதிர்காலத்தில் தொடங்கும் ஓர் ஆண்டின் கணக்கீடு அரசமைப்பின் காலத்திலும் அதற்குப் பின்னும் இஸ்ரயேலரிடையில் அறியப்பட்டுவந்ததென்று இன்னும் அநேகப் பகுதிகளின் மூலம் நாம் காணலாம் (2அர. 6: 1,37,38; 2அர. 22:3; நெகே. 1:1)

இது தவிர, வசந்த காலத்தில் தொடங்கும் இன்னோர் ஆண்டின் கணக்கீடும் அன்னாரிடையில் காணப்பட்டிருக்கிறது. இத்தகையக் கணக்கீடு இஸ்ரயேலரிடையில் மிகப் பழங்காலத்திலிருந்தே இருந்துவந்திருக்கக்கூடும் என்றும் கருத இடமுண்டு. விடு. 12:2,18 இல் பாஸ்கா ஆண்டின் தொடக்கத்தில் **(ஆபிபு நிசான்)** வைக்கப்படுகிறதாகப் பார்க்கலாம். அறிஞர் இது பிற்காலத்தில் புகுத்தப்பட்டதென்று கொள்ள முயல்வர். ஆனால், ஆபிபு மாதம் இஸ்ரயேலருக்கு நினைவு கூருவதற்குரிய மாதம் என்பது பல இடங்களிலும் கூறப் படுகிறதைக் காணலாம் (13:3,4; 23:15; 34:18; இணை. 16:1). மாதங்கள் எண்களால் குறிப்பிடப்படும் இடங்களிலெல்லாம், ஆண்டு இலையுதிர் காலத்தில் தொடங்குவதாகக் கொள்ளப்பட்ட இடங்களிலும், அவை யாவும் வசந்த காலத்திலிருந்து கணக்கிடப்படுவதும் இதையே காட்டக்கூடும். இவற்றிலிருந்து பாபிலோனியர் ஈடுபாட்டுக்கு முன்பே, ஒருவேளை மூதாதையர் காலத்திலேயே, வசந்த காலத்தில் தொடங்கும் வருடக் கணக்கீடு யூத மக்களிடையில் பெருவழக்கு பெற்றது. ஆயினும் இக்கணக்கீடு இலையுதிர் காலத்தில் தொடங்கும் ஆண்டுக்கு கணக்கீட்டை அப்புறப்படுத்தமுடியவில்லை. இப்படியாக ஒன்பதாம் மாதம் (கிஸ்லேவ், செக். 7:1) குளிர்காலத்தில் வந்ததாக எரேமியா குறிப்பிடுகிறார். இந்த இருவிதக் கணக்கீடும் அன்னாரிடையில் இருந்து வந்ததென்று காணலாம்.

(ஆ) **மாதம்** மாதத்தைக் குறிப்பிடும் பழமையான எபிரேயச் சொல், யெராக் (Yerah) என்பது (விடு. 2:2; யோபு 39:2;செக். 11:8). இது சந்திரன் என்று பொருள்படும் யாரேயக் (Yareah) என்னும் சொல்லிலிருந்து எழுந்தது. பிற்காலத்தில் ஹோதேஸ் (hodesh) என்னும் வேறொரு சொல முக்கியத்துவமடைந்தது. இது புதுப்பித்தல் என்று பொருள்படும் காதஸ் என்னும் மூலச் சொல்லிலிருந்து எழுந்தது. இது அமாவாசை அல்லது மாதம் என்று பொருள்படும் (New moon 2 அர. 4:23; எசா. 1:13; ஆமோஸ் 8:5 Month தொட. 38:24; எண். 11:20,21; நீதித். 11:37,39 முதலியன).

இஸ்ரயேலர் சந்திர மாதங்களையே (lunar months) எக்காலத்திலும் பயன்படுத்தி வந்தனர் என்று தோன்றுகிறது. ஒரு மாதத்திற்கு 29 1/2 நாள்கள் இருக்க வேண்டும். கணக்கீட்டின்போது 30 நாள்களைக் கொண்ட மாதங்கள் என்றும், 29 நாள்களைக் கொண்ட மாதங்கள் என்றும் அன்னார் கொண்டிருத்தல் கூடும். பொதுவாக மாதங்கள்

முப்பது நாள்களை உடையனவாகவும், (தொட. 7.31. 8.3,4 எண். 20:29; இணை. 21:23; 34:8; எஸ்தர் 4:11; தானி. 6:7). ஓராண்டானது பன்னிரெண்டு மாதங்களைக் கொண்டன வாகவும் (1 அர. 4:7; 1 குறி. 27:1-15) கொள்ளப்பட்டன.

மாதங்கள் சந்திரனின் தோற்றம், மறைவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டன. ஆதலால் மாதத் தொடக்கம், அதாவது சந்திரன் தோன்றும் முதல்நாள் முக்கியமானதாகக் கொண்டாடப்பட்டது. (1 சாமு. 20:5,18,24; 2அர. 4:23; எசா. 1:13,14; எசே. 46:3; ஓசே.2:11; ஆமோஸ். 8:5).

இஸ்ரயேலர் மூன்றுவகையான மாதக் கணக்கீட்டை அறிந்திருந்தனர் என்பதாகக் காணலாம்.

கானானிய மாதக் கணக்கீடு: கானானிய மாதங்கள் விவசாயக் காலங்களுடன் தொடர்புடையனவாகக் காணப்பட்டன. ப.ஏ.இல் கானானிய மாதங்களில் நான்கு மட்டுமே காணக்கிடக்கின்றன. **ஆபிபு** (விடு. 13:4; 23:15; 34:18; இணை. 16:1) முதலாம் மாதம் பாஸ்காவுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. (March- April).

சிபு (1 அர. 6:1,37) மாட்சிமை என்பது பொருள் வசந்த காலத்தின் மாட்சியைக் குறிப்பிடுகின்றது. இது இரண்டாவது மாதம் (April-May).

ஏத்தானிம் (8:2) என்றென்றும் இலையுதிர் காலத்திலும் ஒடிக்கொண்டிருக்கும் நீரோடைகளைக் குறிப்பிட்டது. இது ஏழாவது மாதம் (September-October).

பூல் (6:38) பலன்கள் (Produce) கன்று காலிகள் என்று பொருள்படக்கூடும். இது எட்டாவது மாதம் (October-November).

எண்ணிக்கைக் கணக்கீடு: ஒரு வேளை அரசமைப்பின் காலத்திலேயே கானானிய மாதங்கள் முக்கியத்துவத்தை இழந்திருக்கலாம். வணிகங்கள், கொள்வினைக் கொடுப்பினைகள் அதிகரிக்கவே மக்கள் எண்ணிக்கைக் கணக்கீட்டை அதிகமாக விரும்பியிருக்கலாம். முதலாம் மாதமும் ஏழாம் மாதமும் அதிகமாகக் குறிப்பிடப்படுகின்றன. இது சிறையிருப்பின் காலமளவும் நீடித்தது. விவிலியத்தில் முக்கியமாகப் பிந்திய இலக்கியங்களில் இந்த எண்ணக் கணக்கீட்டைக் காணலாம் (தொட. 7:11; 8:4,5,14; இலேவி. 16:29; எண். 1:1; இணை. 1:3 முதலியன).

பாபிலோனிய கணக்கீடு இக்கணக்கீடு இஸ்ரயேலரிடையில் சிறையிருப்புக்குப் பின்னரே ஏற்பட்டது எனலாம். வசந்தகாலத்தில் தொடங்கின பாபிலோனிய ஆண்டுகளின் மாதங்கள் பின்வருமாறு.

1. **நிசானு** (Nisanu, March-April).
2. **அயாரு** (Ayaru, April-May).
3. **சிமானு** (Simanu, May-June).
4. **டு வுசு** (Du Uzu, June-July).
5. **அபு** (Abu, July-August).
6. **எலுலு** அல்லது **உலுலு** (Elulu, or Ululu August-September).
7. **தெஷ்ரிது** (Teshritu, September-October).
8. **அரஹ் சம்னா** (Arah, Samna October-November).
9. **கிஸ்லீமு** (Kislimu, November-December).
10. **தெபீத்து** (Tebitu, December-January).
11. **ஷாபாத்து** (Shabatu, January-February).
12. **அதாரு** (Adaru, February-March)/

இவற்றின் பொருள் என்னவென்பது நமக்குத் திட்டமாகத் தெரியாது. ஏதாவது புராணங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். இஸ்ரயேலரிடையில் இந்தப் பாபிலோனிய மாதங்கள் பின்வருமாறு அறியப்பட்டன.

1. **நிசான்** (Nisan: நெகே. 2:1; எஸ். 3:7; 1எஸ்திராஸ்5:6).
2. **இய்யார்** (Iyyar: விவிலியத்தில் கூறப்படவில்லை).
3. **சீவான்** (Sivan: எஸ். 8:9).
4. **தம்மூஸ்** (Tammuz: விவிலியத்தில் கூறப்படவில்லை).
5. **ஆப்** (Ab: விவிலியத்தில் கூறப்படவில்லை).
6. **எலூல்** (Elul: நெகே. 6:15; 1மக். 14:27).
7. **திஷ்ரி** (Tishri: விவிலியத்தில் கூறப்படவில்லை).
8. **மர்கேஷ்வான்** (Marchshvan: விவிலியத்தில் கூறப்படவில்லை).
9. **கிஸ்லேவ்** (Chislev: நெகே. 1:1; செக். 7:1; 1 மக். 1:54).
10. **தேபேத்** (Tebeth: எஸ். 2:16).
11. **ஷெபாத்** (Shebat: செக். 1:7; 1மக். 16:14).
12. **ஆதார்** (Adar:எஸ்ரு. 6:15; எஸ். 3:7,13; 8:12; 9:1,15,17,19,21 1எஸ்திராஸ். 7:5 முதலியன).

இப்படியாகப் பாபிலோனிய மாதப் பெயர்களில் ஏழு, பழைய ஏற்பாட்டில் காணக் கிடக்கின்றன. இவை யாவும் பிற்காலத்தைச் சார்ந்த இலக்கியப் பகுதிகளிலேயே காணக்கிடக்கின்றன.

சந்திர சூரியக் காலக் கணக்கீட்டு வேறுபாட்டைச் சரிக்கட்டல் இப்படியாக 12 சந்திர மாதங்கள் எனும் போது மொத்தம் 354 1/4 நாள்கள் வருகின்றன. ஆனால் சூரிய வருடம் 365 1/4 நாள்களைக் கொண்டது. கிட்டத்தட்ட 11 நாள்கள் வேறுபாடு ஏற்படுகின்றது. இந்த வேறுபாடு சரிக்கட்டப்பட வேண்டும். பாபிலோனியர்கள் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடுதலாக ஒரு மாதத்தைச் சேர்த்து இந்த வேறுபாட்டைச் சரிக்கட்டினர். இஸ்ரயேலரும் இம்முறையைப் பின்பற்றினர். இதைப் பற்றிய நேரடியான தகவல் விவிலியத்தில் நமக்குத் தரப்படவில்லை. ஆனால் இஸ்ரயேலரிடையில் இது வழக்கிலிருந்தது என்பதில் ஐயமில்லை. எண். 9:11; 2குறி. 30:2மு. ஆகிய பகுதிகளில் இத்தகைய சரிக்கட்டலை நாம் காணக்கூடும் என்பதாகக் கருதப்படுகிறது. அப்படியே 1 அர. 12:32,33 இலும் **எரொபவம்** தன்னுடைய ஆட்சியின் முதல் ஆண்டில் பண்டிகைக்கான இன்னொரு மாதத்தைக் கூட்டிய நிகழ்ச்சி குறிப்பிடப்படுவதாகக் கொள்வர் சிலர். இப்படி ஒரு மாதம் கூட்டப்பட வேண்டியிருந்தபோது தோற்றத்தில் இது நிசான் மாதத்திற்குப் பின்னால் கூட்டப்பட்டு வந்தபோதிலும் (2குறி. 30:2மு). பிற்காலத்தில் கடைசி மாதமாகிய ஆதாரே இருமுறை கணக்கிடப்பட்டது. பிற்காலத்திய இரபிமார் ஆளுகைக் காலத்தில் 19 வருடங்களில் ஏழு வருடங்களுடன் ஒவ்வொரு மாதம் கூட்டிக் கணக்கிடும் திட்டமான ஒழுங்கு காணப்பட்டது.

(இ) வாரம்: ஷா பூ அ என்ற எபிரேயச் சொல் (Shabuac) ஏழுநாள் காலம் அல்லது வாரம் என்று பொருள்படும் (தொட. 29:27,28; லேவி. 12:5; தானி. 9:24-27; 10:2,3). ஒரு வாரத்தின் நாள்கள் எண்களால் முதல் நாள்

இரண்டாம் நாள் என்று அறியப்பட்டது (விடு. 20:10; 23:12; 31:15; 34:21). பின்னால் இது சப்பாத் (Shabbath) என்று அறியப்பட்டது. இதனால் பிற்காலத்தில் இச்சொல் சில இடங்களில் வாரத்தையும் குறித்து நின்றது (இலேவி. 23:15; எசா. 66:23).

J. மோர்கென்ஸ்டன் (Morgenstern) பண்டிதர் இந்த வாரத்தின் தோற்றம் விவசாயச் சூழ்நிலையில் எழுந்ததாக இருக்கவேண்டுமென்று கருதுகிறார். மக்கள் ஆறு நாள்கள் வயல்களில் வேலை செய்து ஏழாம் நாள் ஓய்ந்திருந்தனர் என்பது இவர் கூற்று. இது கேள்விக்குரியதே. ஏழாம் நாளும் அதன் பின்வரும் நாள்களும் கீழ்நாட்டு மக்களிடையில் கருநாள்கள் என்றும், இதனால் இந்நாள்களில் மக்கள் முக்கியமான அலுவல்கள் எதையும் செய்வதில்லையென்றும் இந்த நாள்கள் இஸ்ரயேலரைப் பொறுத்தமட்டில் அன்னாருக்கு விழா நாள்களாக மாறின என்றும் கண்டோம். ஒருவேளை இதுவே வாரங்களின் தோற்றமாகவும் இருந்திருக்கலாம். ஏழு வாரங்கள் முடிவுற்ற ஐம்பதாவது நாளும் விழா நாளாக ஆசரிக்கப்பட்டதாக அறிகிறோம். இதுவும் ஒரு காலக் கணக்கீட்டைக் குறிப்பதாக இருக்கலாம். இப்படி ஏழு ஐம்பது நாள் விழாக்களுடன் இரு வார விழாவையும் சேர்த்து அவை முடிவுறும்போது அடுத்த ஒரு நாள் புத்தாண்டு நாளாகக் கொண்டாடப்பட்டு இவ்வாறு ஆண்டுக்கு 365 நாள்களாக எண்ணப்பட்டன.

(ஈ) நாள்: என்பது யோம் என்னும் எபிரேயச் சொல் (Yom) பன்னிரெண்டு மணி நேரத்தைக்கொண்ட பகலையும், இருபத்தினான்கு மணி நேரத்தைக் கொண்ட நாளையும் குறிப்பிடுவதாகக் காணலாம். இஸ்ரயேலரிடையில் ஒரு நாள் காலை முதல் காலை வரையும், மாலை முதல் மாலை வரையும் கணக்கிடப்படும் இருமுறைகள் இருந்து வந்திருக்கின்றன என்று தெரியவருகிறது.

முதலில் கானானிய ஈடுபாட்டினால் காலம் சூரியப் பஞ்சாங்கத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டபோது நாள்கள் காலை முதல் காலை மட்டும் கணக்கிடப்பட்டு வந்திருக்கலாம். E. கோணிக் (E. Konig) பண்டிதர் பகலும் இரவும் என்னும் தொடர் அடிக்கடி வருவதை இதற்கு ஆதாரமாகக் காட்டுவார் (தொட. 1:5பி.,8பி., 13,19,23,31 பி.). இது தவிர வேறு பல சான்றுகளும் நாள் காலையிலிருந்து கணக்கிடப் பட்டு வந்ததென்பதை வலியுறுத்தக்கூடும்.

ஒரு வசனத்தில் *பனி இரவில் பெய்கிறது,* என்று உள்ளது. ஆனால் அடுத்த வசனத்தில் *மறுநாள் கிதியோன் எழுந்த போது* என்று குறிப்பிடப்படுகிறது. இங்கு இரவு முந்தின நாளைச் சார்ந்ததாகக் காணப்படுகிறது. மறுநாள், காலையுடன் தொடங்குவதாகப் பார்க்கிறோம் (நீதித். 6:37,38). 19:6-9 தரும் வரலாற்றிலும் நாள் காலையில் தொடங்குவதாகக் காணலாம். சவுல் இரவில் தாவிதின் இருப்பிடத்தைக் காவல் செய்து மறுநாள் காலையில் அவனைக் கொன்று விடத் திட்டமிட்டிருக்கிறார். இதையறிந்த மீகாள் தாவிதிடம், *நீர் இன்று இரவே உமது உயிரை தப்புவித்துக் கொள்ளாவிட்டால் நாளைய தினம் உமது உயிர் இராது* என்று சொல்லியனுப்புகிறாள் (1 சாமு. 19:11). இங்கும் நாள் என்பது காலையில் தொடங்குவதாகக் காணலாம். இன்னும் பல பகுதிகள் இதனை வலியுறுத்துகின்றன (நீதித். 21:2-4; 1சாமு. 5:2-4; 28:8,19,25; 2சாமு. 24:13-15 முதலியன).

இலேவி. 19:13பி; இணைச். 24:14,15 ஆகிய பகுதிகளைச் சேர்த்துக் காணும்போது ஒரு வேலைக்காரனுடைய கூலி அந்த நாளிலேயே அதாவது பொழுது போகுமுன்னே கொடுக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தப்படுவதாகக் காணலாம். இதிலிருந்து கட்டளையின் காலமளவும் நாள் காலையிலிருந்து காலைமட்டும் கணக்கிடப்பட்டு வந்ததாக நாம் அறியக்கூடும் (இலேவி. 23:5,6; எண். 33:3 காண்க).

ஆதலால் நாளென்றால் மாலையிலிருந்து மாலைமட்டும் கணக்கிடப்படும் முறை குருத்துவ மரபிற்குப் (P) பின்னால் தோன்றினதாகத்தான் கொள்ளப்பட வேண்டும்.

ஒருவேளை நெகேமியாவின் காலத்தையடுத்து (கி.மு.432) இது வழக்கிலிருந்திருக்கலாம். இப்படியாக நெகே. 13:19இல் ஒய்வுநாள் தொடங்குமுன் எருசலேமின் வாயில்கள் இருட்டாகும் போதே, கதவுகளைப் பூட்டவும் ஒய்வுநாள் முடியுமட்டும் அவற்றைத் திறவாதிருக்கவும் வேண்டுமென்று கட்டளை யிட்டேன் என்று காண்கிறோம் (வ. 20,21 காண்க). P பகுதியாகிய விடு.12 இல் நாள் மாலையிலிருந்து தொடங்குவதாகக் காண்கிறோம். இங்குப் பாஸ்கா ஆடு முதலாம் மாதம் 14ஆம் தேதி மாலை அடிக்கப்படுகிறது (விடு.12.6). அப்படியே புளிப்பில்லா அப்பத்தையும் மக்கள் பாஸ்கா வுடனேயே அதே நாள் மாலையில் சாப்பிட வேண்டும் (வ. 7,8). அதிலிருந்து 7 நாள்கள் தொடர்ந்து சாப்பிட்டு 21 ஆம் தேதி மாலை வரையிலும் சாப்பிடவேண்டும் (வ. 18). இங்கு புளிப்பில்லா அப்பம் 14ஆம் தேதியிலேயே தொடங்கி ஆசரிக்கப்படும்போது ஏழாம் நாள் 20ஆம் தேதி மாலை யிலேயே முடிவடைகிறது என்றும் காணலாம். ஆனால் பிற பகுதிகளில் பாஸ்கா 14 ஆம் தேதியிலும், புளிப்பில்லா அப்பம் 15 ஆம் தேதி காலையிலும் (எண். 28:23) தொடங்கி 21 ஆம் தேதி மட்டும் செல்லுகிறதாகக் காணலாம்.

விடு. 12 உடன் இலேவி 23:32; இணை. 1:33; 28:66; 1 அர. 8:29; எசா. 27:3; 34:10; திருப். 55:18; 91:5; 104:9 ஆகிய பல பகுதிகளும் நாள் மாலையிலிருந்து தொடங்குவதாகக் குறிப்பிடுகின்றன. சந்திர மாதத்திற்கு 29 1/2நாள்கள் உண்டு. அமாவாசைக்குப் பின் 14 3/4நாள்களுக்குப்பின், அதாவது 15 ஆவது நாளில் முழு நிலா தோன்றிய மாலை முதல் மறு மாலை மட்டும் இருக்கும். அதிலிருந்து பண்டிகை ஆசரிக்கப்பட்டதாகப் பார்க்கிறோம் (இலேவி. 23:32). ஒருவேளை மாலை முதல் மாலை வரை நாள் கணக்கிடும் வழக்கமும் இதிலிருந்து தோன்றினதாக இருக்கலாம்.

(உ) இஸ்ரயேலர் வழிபாட்டுப் பஞ்சாங்கங்கள் இஸ்ரயேலர் வரலாற்றின் பிற்பகுதியில் ஒன்றிற்கு மேற்பட்ட வழிபாட்டுப் பஞ்சாங்கங்கள் இஸ்ரயேலருடைய வழிபாட்டு ஒழுங்குகளைக் குறிப்பிட்டு வழக்கிலிருந்தன என்று காணலாம். இவ்வாறு H. P. கட்டளைகள் தரும் பஞ்சாங்கங்கள் முக்கியமானவை. எசேக்கியல் தரும் பஞ்சாங்கம் ஒருவேளை வழக்கிலிராது., எழுத்தளவிலேயே இருந்து வந்திருக்கலாம்.

தூய கட்டளைப் பஞ்சாங்கம் (H) இது இலேவி 23இல் காணப்படுகிறது. இவ்வதிகாரத்திலும் வ.4:8,21, 23-38 ஆகியவை பகுதிகளாகக் கொள்ளப்படுகின்றன. இவ்வசனங்களை

எடுத்துவிட்டால் கோவில் விலங்கு வேள்வி செலுத்துவதற்கான ஒழுங்கெதனையும்H கட்டளை குறிப்பிடவில்லையென்று காணலாம். இதில் பின்வரும் நிகழ்ச்சிகள் குறிப்பிடப் பட்டுள்ளன.

1. ஏழாம் நாள் தூய மகா சபை கூடும் ஓய்வு நாள் (வ. 3).

2. ஓய்வுநாளுக்கு மறுநாளில் கதிர்க்கட்டை ஆரத்தியாக்கும் வேள்வி (வ.10-14).

3. ஏழாம் ஓய்வு நாளுக்கு மறுநாளாகிய ஐம்பதாவது நாள் பெருவிழா (வ.15-20).

4. ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஏழு நாள் கூடார விழா (VII: 15-21. வ.39-43). H கட்டளையில் தோற்றத்தில் பாஸ்கா புளிப்பில்லா அப்ப விழாவையும் (Passover mazzot festival), வார விழாவையும் (Shabuot), கூடார விழாவையும் (Sukkot) ஆகிய மூன்று விவசாயப் பெருவிழாக்களும் காணப்பட்டன என்றும், பாஸ்கா புளிப்பில்லா அப்பவிழாவை ஒரு வீட்டு விழாவாக H குறிப்பிட்டதால், P அதனை மாற்றித் தன்னுடைய ஒழுங்கை அதனுள் புகுத்தினதென்றும் கொள்வர். அறிஞர் (வ.5-8). பிற்காலத்தில் பாஸ்கா ஆசரிப்புப் பெருமளவில் மாற்றமடைந்ததென்று கண்டோம். (விடு. 12:1-20; இணை. 16:1-8). அப்படியே ஆரத்திப் பலியாக்கும் விழா, கூடார விழா ஆகியவையும் ஆரம்பத்தில் வீடுகளிலேயே ஆசரிக்கப்பட்டு வந்திருக்க வேண்டும். அறுவடைக் காலத்தில் கதிர்க்கட்டை ஆரத்தியாக்குவதற்காக மக்கள் எருசலேமுக்கு வந்து செல்வது எளிதல்ல. H மூலம் இவ்விழாக்கள் கோவிலில் தான் ஆசரிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடவில்லை.

விழாக்கள் பற்றிய விவரங்களை முன்னால் காண்க.

குருத்துவப் பிரமாணப் பஞ்சாங்கம் (P): P மரபில் இருவித காலக் கணக்கீடு காணப்படுவதாகக் கருதப்படுகிறது. தொட. 7:11; 8:3,4 ஆகிய பகுதிகள் தரும் கணக்கீட்டைப் பார்க்கும் போது P இன் மாதங்கள் முப்பது நாள்களைக் கொண்டவை என்று தோன்றுகிறது. இத்துடன் 8:13, 14 ஐயும் ஒப்பிட்டுக் காணும்போது 365 நாள்களைக் கொண்ட சூரிய ஆண்டினை P அறிந்திருந்தது தெரிய வருகிறது. அதே வேளையில் இப்பகுதிகளில் வருடம் இரண்டாம் மாதம் 17ஆம் தேதியிலிருந்து இரண்டாம் மாதம் 27ஆம் தேதி மட்டும் கணக்கிடப்படுவதைக் காணலாம் (7:11; 8:14). இதன்படி 354 அல்லது 355 நாள்களைக் கொண்ட சந்திர ஆண்டையே P குறிப்பிடுகிறது எனலாம்.

இத்தகைய சந்திர ஆண்டில் ஒவ்வொரு மாதமும் 30 நாள்களைக் கொண்டிருத்தல் கூடாத ஒன்று. இப்படியாக Pஇல் இருவித காலக் கணக்கீடு காணப்படுகிறதெனலாம்: ஒன்று 12 மாதங்களைக் கொண்ட 365 நாள்களுடைய வருடம்; ஐந்து நாள்கள் ஒருவேளை சில மாதங்களுடன் சேர்க்கப்பட்டிருக்கலாம். இன்னொன்று 29 அல்லது 30 நாள்களை மாறி மாறிக் கொண்ட 12 மாதங்களுடைய 354 அல்லது 355 நாள்களைக் கொண்ட சந்திர ஆண்டு. P இன் வழிபாட்டுப் பஞ்சாங்கத்தைப் பற்றிய விவரங்கள் இலேவி. 23; எண். 28,29 ஆகிய பகுதிகளில் காணக்கிடக்கிறது. இதன்படி விழாக்களின் ஒழுங்கு பின்வருமாறு.

பாஸ்கா: முதலாம் மாதம் பதினான்காம் தேதி (எண். 28:16).

புளிப்பில்லா அப்ப விழா: முதலாம் மாதம் பதினைந்தாம் தேதி காலையிலிருந்து இருபத்தொன்றாம் தேதி காலை வரையிலும் (எண். 28:17-25).

வாரங்களின் விழா (Shabuot) P இல் முதற்பலன்களின் விழா எனப்படுகிறது (28:26). இலேவி 23:15-21இல் எப்பெயரும் குறிப்பிடப்படவில்லை. விடு. 23:16 இதனை அறுவடை விழா எனக் குறிப்பிடுகிறது. விடு. 34:22 இல் முதற்பலன்களைச் செலுத்தும் வாரங்களின் விழா என்று காண்கிறோம். இணைச்.16:16 இல் மட்டுமே ஏழாம் வாரத்து விழா (Shabot) எனப்படுகிறது. இதனால் இப்பெயர் இவ்விழாவுக்கு பின்னால் சூட்டப்பெற்ற ஒன்றென்பது தெரியவரும்.

எக்காள முழக்க நாள்: ஏழாம் மாதம் முதல் நாள் (எண். 29:1); பிற்காலத்தில் இது புத்தாண்டு நாளாகக் கொண்டாடப்பட்டது. P ஆசிரியர் இதனை இங்கு புத்தாண்டுநாளாகக் குறிப்பிடாவிட்டாலும் இதனை ஒரு சிறப்பான நாளாகக் குறிப்பிடுகிறார் என்று காணலாம்.

பாவக்கழுவாய் நாள் இது ஏழாம் மாதம் பத்தாம் தேதி (இலேவி. 16:23; 27-32; எண். 29:7-11). இது கானானியர் பெனிக்கியரிடையில் முன்னாள்களில் வழக்கிலிருந்துவந்த சூரிய ஆண்டுத் தொடக்க நாளாகும். இது ஏத்தானீம் மாதம் முதல் நாள் என்று கண்டோம். பின்னால் வசந்த கால சம இரவு நாளில் தொடங்கும் சந்திர-சூரிய ஆண்டு வழக்கில் வந்த பின்னும் இந்த இலையுதிர் கால நவ வருட தினம் மக்களிடையில் முக்கியத்துவம் வகித்திருந்தது. இது புதியக் கணக்கீட்டின்படி ஏழாம் மாதம் பத்தாம் தேதியாகக் காணப்பட்டது. இந்த நாள் பாவக்கழுவாய் நாள் அல்லது ஈடேற்ற நாளாகக் கொண்டாடப்பட்டது.

கூடார விழா ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி தொடங்கி இருபத்தொன்றாம் தேதி மட்டும் இது கொண்டாடப்படும் (VII: 15-21; எண். 29:12-34). இங்குக் கூடுதல் ஒருநாள் (22ஆம் தேதி) விழா கூட்டப்படுகிறது. மறு (இலேவி. 23:36; எண். 29:35) நாளென்பது மாலையிலிருந்து மறு மாலைவரைக் கணக்கிடப்பட்டபோது. விழா நாள்களில் ஏற்பட்ட வேறுபாட்டை சரிக்கட்டுவதற்காக இந்நாள் கூட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. கடவுள் காலத்தைக் கடந்து நிற்கிறவர் என்பது இஸ்ரயேலரின் மாறாத இறை நம்பிக்கையாகும். அவர் தொடக்கத்தில் இருந்தவர் (தொட. 1:1); என்றென்றும் இருக்கிறவர் (21:33; இணை. 32:40; எசா. 40:28) காலங்களையும் நேரங்களையும் மாற்றுகிறவர் அவரே; அவர் வரலாற்றின் கடவுள்; அவரே மன்னர்களைத் தள்ளி அரசர்களை ஏற்படுத்துகிறார் (தானி. 2:21). காலங்கள் மாறினபோதும், வரலாறுகள் கவிழ்ந்து எழுந்த போதும் இஸ்ரயேலரின் இறை நம்பிக்கை அசையாது காணப்பட்டதற்குக் காரணம் இதுவேயெனலாம்: மண்ணுலகின் கடையாந்திரங்களைப் படைத்த தொடக்கமற்ற கடவுள் சோர்ந்துபோவதுமில்லை, களைப்படைவதுமில்லை. இதை நீ அறிந்ததில்லையோ. இதை நீ கேட்டதில்லையோ (எசா. 40:28).

துணை நின்ற நூல்கள்

1. Sellers, O.R.,*Weights and Measures*, I.D.B., IV, Abingdon Press, 1962.
2. De Vries, S.J., *Calendar*, I.D.B., I, Abingdon Press, 1962.
3. D.Vaux, *Ancient Israel*, D.L.T., 1973.
4. F.F.Bruce, "Calendar", *New Bible Dictionary*, IVP, 1987,
5. J.Kraus, *Worship in Israel*, Blackwell, 1977.
6. இராபின்சன், ஞான. *இஸ்ரவேலர் சமயம்*, த.இ.நூ.கு., சி.எல்.எஸ். சென்னை-3. 1969

8

விவிலிய ஒழுக்க வழக்கங்கள்

பியாண் பியாஸ்டட்

1. மாறுபடும் ஒழுக்க வழக்கங்கள்

ஒழுக்க வழக்கங்கள் மாறுகின்றன. பாலஸ்தீனாவைப் பொறுத்தமட்டில் முற்காலத்தில் மட்டுமன்று இக் காலத்திலும் இது உண்மை. ஏனெனில், அந்நாடு கிழக்கிலுள்ள பெருஞ்சாலைகள் குறுக்கிடுகின்றதும், பல நாகரிகங்களால் சூழப்பட்டதுமானதொரு நாடாகும். அது கிழக்கும் மேற்கும் சந்திக்கும் ஒரு நாடு.

ப.ஏ.இன் துவக்க காலத்து நூல்களில் நாம் சந்திக்கும் மக்களின் சூழ்நிலையை, மாறுதல், வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் விளக்கலாம். இந்நிலை பிற்காலங்களில் தொடர்ந்து செல்கிறது.

ப.ஏ.இலும் பிற யூத ஆதாரங்களிலும், இஸ்ரயேல் மக்களின் வரலாற்றை கடவுள் தாமே தொடக்கத்திலிருந்தே ஓர் இலக்குக்கு நேராக நடத்துகிற வரலாறாகப் பார்க்கும் ஓர் இறையியல் எண்ணத்தை நாம் காண்கிறோம். எல்லா மாறுதல்களிலும் வளர்ச்சிகளிலும் ஒரு கருத்து உண்டு. கடவுள் தமது மக்களை, மெதுவாக, ஆனால் உறுதியான கையால் நடத்திக்கொண்டிருக்கிறார். இவ்வரலாற்றில் கடவுள் தம்மை அவர் வெளிப்படுத்தி மனிதருக்கு அவர்களது அமைவு நோக்கத்தை வெளிப்படுத்துகிறார்.

முதலாவது, சொந்த நாடின்றித் தங்கள் மந்தையைச் சார்ந்து, அவற்றை மேயவிடக்கூடிய இடங்களுக்கு அவைகளைப் பின்செல்லுகிற மேய்ப்பர்களும் நாடோடிகளுமான மக்களை நாம் சந்திக்கிறோம். எனவே, குடும்பமாக வாழ்ந்த இக்குலத்தார் தலைவரோடும், சமூகத்தின் எல்லா உறுப்பினர்களோடும் தங்கள் சுயமான வாழ்க்கையை நடத்தினார்கள். எனினும், பிற இனங்களையும் குலங்களையும் இடையில் சந்தித்து வந்தனர். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் இத்தகைய சிறு சங்கங்களின் தலைவர்களாயிருந்தார்களென்று அறிகிறோம்.

இஸ்ரயேல் மக்களை நாம் கவனிக்குமிடத்து, அவர்கள் சிறிது காலத்திற்குப்பின் நாடோடி வாழ்க்கையை விட்டுவிடத் தொடங்கி, குடியிருக்கத் துவங்குகின்றனர். யாவேயின் மக்களுக்கு எது சரியான வாழ்க்கைத் தொழில்? காயீன் ஆபேல் வரலாறு, அதைப் பற்றிய விவாதம் இருந்ததென்பதைக் காட்டுகிறது. ஆய்வாளர்களின் எண்ணத்தின்படி காயீனின் வேளாண்மைத் தொழில் நற்தொழிலன்று என்று கடவுள் விடை அளிக்கிறார். எவ்வாறாயினும், யூதர்களுக்கு நிகழ்ந்தது கவர்ச்சிகரமானதொரு வரலாறு. இவ்வரலாற்றை கடவுள் தம்மைப் பற்றி அருளும் ஒரு வெளிப்படுத்தலாகவும், தமது மெசியாவின் வருகைக்குத் தம் மக்களை ஆயத்தப்படுத்தும் ஒரு வரலாறாகவும் விவரித்தாலும் அல்லது சாதாரண ஒரு வரலாறாக எண்ணி யூத சமயத்தின் பின்னணியையும் கிறிஸ்தவ சமயத்தையும் விவரித்தாலும், இவ்வரலாற்றின் அசாதாரண வடிவத்தை எவரும் மறுக்க முடியாது.

முதலாவது, அரேபியா, சீனாய் பாலைநிலம் ஆகிய இடங்களின் சுற்றுப்புறங்களிலுள்ள இன மரபுக் குழுக்களோடும் நாகரிகங்களோடுமுள்ள இம்மக்களின் கட்டமைவற்ற தொடர்புகளையும் விவாதங்களையும் ஆராய்வோம். பின்னர், எகிப்துக்கு அவர்கள் சென்றதும், அங்கே அடிமைத்தனத்திற்கு வழிநடத்தப்பட்டதும் பின் தொடருகின்றன. நானூற்று முப்பது ஆண்டுகள் எகிப்தில் அவர்கள் தங்கியது அவர்களது எண்ணங்களையும் ஒழுக்கங்களையும் பாதித்தது. அதன் பின்னர், மோசேயின் மூலம் அவர்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டு வாக்குறுதி நாடாகிய கானான் வரையுள்ள நாற்பது ஆண்டு பாலை நில வாழ்வைத் துவக்குகின்றனர்; மீண்டும் தங்களுக்கில்லாத ஒரு புதிய நாகரிகத்தோடு தொடர்பு கொள்கின்றனர். இப்புதிய ஆற்றல்களோடு மக்கள் போராட வேண்டியதிருந்ததெனப் ப.ஏ. இன் மூலம் அறிகிறோம். அவற்றில் சில யாவேயின் திருவுளத்திற்கு மாறான அறிவீன வழக்கங்களென்று தள்ளப்பட வேண்டியனவாயிருந்தன. வேறு சில எடுக்கப்பட்டுப் புதிய கருத்துடன் மாறுதல் செய்யப்பட்டு, கடவுளின் திருவுளத்திற்கும் அறிவீன பழக்கத்திற்குமுள்ள வேறுபாட்டைத் தெளிவாக்க வேண்டியதாயிருந்தது. பல ஆண்டுகளாக பாலைநிலத்தில் அலைந்து திரிந்தபின் பாலஸ்தீனாவில் விவசாய வாழ்க்கையைக் கடைப்பிடிக்கையில், அன்றாட வாழ்க்கையில் முக்கிய மாற்றங்கள் விளையக்கூடுமென்பது விளங்கக்கூடியது.

எருசலேமின் வீழ்ச்சியும், பாபிலோனிய சிறையிருப்பும் அவர்களது நிலைமைகளை முற்றிலும் மாற்றின.சிறையிருப்புக்கு எல்லாரும் கொண்டுசெல்லப்படாவிடினும், உயர்தர வகுப்பிலும் நடுத்தர வகுப்பிலுமிருந்து மிகுதியான மக்கள் பிடித்துக் கொண்டு போகப்பட்டனர். பாபிலோனில் அவர்கள் புதிய தொழில்களைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. நாட்டில் தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டவர்கள் தங்கள் தலைவர்களை இழந்து - புதிய தலைவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியதாயிற்று. அதுவுமன்றி, வேறு நாடுகளிலிருந்து கூட்டம் கூட்டமான மக்களும் இஸ்ரயேலரோடு கலக்கும்படி பாலஸ்தீனாவுக்கு அனுப்பப்பட்டனர்.

இஸ்ரயேலர் பாலஸ்தீனாவைக் கைப்பற்றி அதில் குடியிருந்தனர். அதுபோல அவர்களுக்கும் நேரிடும்படியாயிற்று. பாலஸ்தீனாவினூடே பெரும் வாணிகச் சாலைகள் கடந்து

சென்றன. வேற்று நாடுகளிலுள்ள பல வேற்று அரசர்களுக்கு வாணிகத்திற்காக நாட்டைக் கைப்பற்றும் எண்ணம் பிந்தியக் காலத்தில்தானுண்டானது. மீண்டும் மீண்டும் பாலஸ்தீனா பெரிய வல்லரசர்களுக்கு ஒரு போர்க்களமாயிருந்தது. தெற்கில் எகிப்தியரும், கிழக்கில் செலூக்கியரும், பாரசீகரும், வடக்கில் கிரேக்கரும், இறுதியாக, மேற்கில் உரோமரும் இப்போர்களில் ஈடுபட்டனர். அன்றாட வாழ்க்கையில் பெரிய மாறுதல்களை இது சில வேளைகளில் செய்யக்கூடியதாயிருந்தது என்பது எளிதில் விளங்கும். படையெடுத்தவர்கள் புதிய சூழ்நிலையில் புகுத்தின புதிய வாழ்க்கை முறையை மக்கள் பின்பற்றினர். சிலரோ புதியனவற்றைக் கடுமையாகவும், வெளிப்படையாயும் எதிர்த்தனர். எனினும், சில காலத்துக்குப் பின் புதிய பழக்கங்களில் மக்களுக்குப் பிடிப்பு உண்டானபின், அவற்றில் சில ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இவ்வாறாக, சாதாரணமானவற்றிலிருந்து கடினமானவை வரையிலும், கடினமானவற்றிலிருந்து சாதாரணமானவை வரையிலும் மாறுதல்கள் ஏற்பட்டன என்பதை நாம் கவனத்தில் வைக்க வேண்டும். அச்சமயங்களிலெல்லாம் வளர்ச்சியை மாற்றி அமைக்கவும் உறுதிப்படுத்தவும் சூழ்நிலை தூண்டுதலளித்தது.

2. சமயமும், சமூகமும்

சமயத்தையும் சமூகத்தையும் வேறுபட்டவைகளாக நாம் கருதுவது இயல்பு. விவிலியத்தில் கொள்கை அளவில் மட்டுமாயினும், அரசும் சமயமும் ஒன்று என்னுமொரு நாகரிக முறையைச் சந்திக்கிறோம். கடவுளின் சட்டங்களையும் ஒழுங்குகளையும் கொண்டுள்ள ஒரு சமூகத்தை நாம் காண்கிறோம். குலத்தலைவர் சமயத் தலைவருமாவார்.

வாழும் நாள்களிலேயே தொழுகைக்காக அவர்கள் ஓர் ஒழுங்கான முறையில் கூடுவதற்கு தூய இடங்கள் இருந்தன. சான்றாக, சீனாய் மலை இத்தகையதோர் இடமாக வெகுகாலம் இருந்ததாகத் தெரியவருகிறது. அது யாவேயின் இடமாக ஒரு குலத்தினருக்கு அல்லது சில குலத்தினருக்கு அறியப்பட்டிருந்தது.

கானானில் குடியேறிய பின்பு அவர்கள் ஓரிடத்திற்குக் கட்டுப்பட்டவர்களாயினர். அதன் விளைவாக பல நிலையான தொழுகை இடங்கள் உண்டாயின. நாட்டப்பட்ட ஒரு கல்லோ அல்லது ஒரு கற்குவியலோ தூய இடத்தைக் காட்டியது. அத்தூய இடங்களில் பல்வேறு வேள்விகள் செலுத்தப்பட்டன; ஆட்டு மந்தையிலிருந்தோ மாட்டு மந்தையிலிருந்தோ முதலீற்று அல்லது நிலத்தின் முதற்கனிகள் கடவுளுக்கு எரி வேள்வியாகச் செலுத்தப்பட்டன. வேள்வி செலுத்தினபின் ஓர் கூட்டு விருந்தும் இருந்தது. வேள்வியின் ஒரு பங்கிலான உணவில் கடவுளும் வேள்வி செலுத்தினவர்களும் பங்கு பெற்றனர். இது கூட்டுறவுக்கும் பாவங்களின் கழுவாய்க்குமுரிய விருந்து.

ஏறக்குறைய இதோடு சேர்ந்துள்ளது யூதர்களுக்குள்ளிருந்த விருத்தசேதன முறைமை. இதுவும் ஒருவித வேள்வியேயாகும். விவிலிய வரலாற்றுக் காலங்களில் இச் சடங்கு கட்டாயமாய் அனுசரிக்கப்படவேண்டிய ஒன்றாயிருந்தது. பிறந்த எட்டாம் நாளில் எல்லா ஆண் பிள்ளைகளுக்கும் விருத்தசேதனம் செய்யப்பட்டது. பிற்காலத்தில் வேள்வியைப் பற்றிய எண்ணம் பின்னடைந்து, பிரிக்கப்படுதல் என்னும் எண்ணம் முக்கியத்துவம் பெற்றது. கடவுளுக்குச் சேவை புரியவும் வரலாற்றில் அவரது கருவியாயிருக்கவும் யூதர்கள் பிற இனத்தாரிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டனர்.

பாலை நிலத்திலிருந்த காலத்தில் தொழுகையானது உடன்படிக்கைப் பேழை வைக்கப்பட்டிருந்த சந்திப்புக் கூடாரத்தை நடு மையமாய்க் கொண்டிருந்தது. உடன்படிக்கைப் பேழை இறையிருப்பைக் கொண்டுள்ளதென்று நம்பப்பட்டது. பாளையத்திற்கு நடுவிலே அது இருக்கையில் கடவுள் தமது மக்களோடிருந்து அவர்களைக் காக்கிறாரென்னும் கடவுளின் வாக்குறுதியை அடையாளப்படுத்தியது.

பாலஸ்தீனாவில் குடியிருந்தபின் தொழுகை பல இடங்களில் நடந்தேறியது. ஆனால், காலஞ்சென்றபின் வேள்வி செலுத்துதல் நடுத் தொழுகை இடமாகிய எருசலேமுக்குக் கட்டுப்படுத்தப்பட்டது. இக்காலத்தில் யூதர் பலர் பாலஸ்தீனாவுக்கு வெளியே வாழலாயினர். பாலஸ்தீனாவிலுள்ள பல மக்களும் அடிக்கடி எருசலேமுக்கு வரக்கூடாததாயிருந்தது. எனவே, தொழுகைக் கூடம் என்னுமொரு புதிய முறைத் தொழுகை வளரலாயிற்று. தொழுகைக் கூடத்தொழுகையில் பாடல், இறைவேண்டல் திருச்சட்டமும் இறைவாக்குகளும் வாசித்தல், அவற்றைச் சார்ந்த உரை, விளக்கம் ஆகியன இடம்பெற்றன. இத்தொழுகைக்கு ஒரு குரு தேவையற்றதாயிருந்தது. கட்டடத்தையும் தொழுகையையும் கவனிக்க ஒரு தொழுகைக் கூடத்தலைவர் இருந்தார். அவருக்கு உதவியாளர்கள் இருந்தனர். அவர்கள் வழிபாட்டுக்கு ஒழுங்குசெய்வதிலும், விவிலியத்தினின்று பாடங்கள் வாசிக்க சுருள்களை ஆயத்தமாய் வைப்பதிலும் உதவி செய்தனர். பெண்கள் ஒரு திரைக்குப்பின் ஒரு வேறுபட்ட அறையில் அமர வேண்டியதாயிருந்தது. இது ஆண்களுக்குரிய வழிபாடு. எவரும் வசனங்களை வாசித்து விளக்கம் கொடுக்கலாம். தொழுகைக்கூடத் தலைவர் யாரிடமாவது அப்படிச் செய்யக் கேட்பார். அவ்வாறு கேட்கப்படுவது ஒரு பெரிய மதிப்பாக எண்ணப்பட்டது.

மிகச்சிறந்த வழிபாடு ஓய்வுநாளில் நடத்தப்பட்டது. ஆனால் வாரத்தின் இரண்டாம், ஐந்தாம் நாள்களிலும் வழபாடுகள் நடத்தப்பட்டன. சில இடங்களில் அன்றாட வழிபாடுகள் நடந்தன. தொழுகைக் கூடங்கள் வார நாள்களில் பாடசாலைகளாகவும் வழக்கு மன்றங்களாகவும் பயன்படுத்தப்பட்டன.

இம்முறையான தொழுகை, மக்கள் பாபிலோனில் சிறைக்கைதிகளாக எருசலேம் கோவிலுக்கு வெகு தூரத்திலிருந்தபோது அதிக முக்கியத்துவமடைந்தது. ஏனெனில், கோவிலும் எதிரிகளால் அழிக்கப்பட்டது. அவ்வாறு, உரோமரால் கோவில் அழிக்கப்பட்டபோது, தொழுகைக்கூடத் தொழுகையே அவர்கள் அனுசரிக்கக்கூடிய ஒரே வழிபாட்டு முறையாயிருந்தது. வேள்விகளும் ஒருமுறை மட்டும் அனுசரிக்கப்பட்டது; அதாவது, ஒவ்வொரு யூத இல்லத்திலும் பாஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்து உண்பதாகும்.

எருசலேமிலிருந்த கோவில் தொழுகைக்கு நடு இடமாயிருந்தது. மூன்று முக்கிய பகுதிகளுள்ளதாக அது கட்டப்பட்டிருந்தது. வெளிச்சுற்றுப்பகுதி ஒன்றிருந்தது. அதில் எரி வேள்விகளுக்குரிய மேடையிருந்தது. அது பொதுவான தொழுகையிடமாகும். அதிலிருந்து யாகீன், யோவாஸ் என்னும் இரு தூண்கள் (1அர. 7:21) வழியே சென்றால் உட்சுற்றிருந்தது; அதில் தூய சமூகத்தப்பம் வைக்கப்பட்டிருந்தது;

பின்பு மகா தூய இடம் என்னும் மிகத் தூய இடமுமிருந்தது. இவ்வறையில் கடவுளின் பேழை வைக்கப்பட்டிருந்தது. தலைமைக் குரு மட்டும் ஆண்டுக்கொருமுறை பெரிய பாவக் கழுவாய் நாளில் இவ்வறையினுள் செல்ல அனுமதிக்கப பட்டிருந்தார். அப்பொழுது தமக்காகவும் தமது குடும்பத் திற்காகவும் மக்களுக்காகவும் அவர் வேள்வி செலுத்தினார் (இலேவி. 16:3-28). அன்றாட வேள்விகளுக்காகவும் கோவிலைக் கவனிப்பதற்காகவும் குருக்களும் இலேவியர்களும் இருந்தனர். காலை. மாலை வேள்விகள் இருந்தன. இதற்கு மேலாக. பிறப்பு. விருத்தசேதனம் ஆகியவற்றிற்காக வேள்விக ளைச் செலுத்த அல்லது சிறப்பான கட்டங்களில் நன்றி வேள்விகள் அல்லது குற்றம் போக்கும் வேள்விகள் செலுத்த மக்களால் கொண்டுவரப்பட்ட விலங்குகளை அவர்கள் கவனிக்க வேண்டியதாயிருந்தது.

சமயப் பணிகளுக்காக தொடக்கத்தில் பன்னிருக் குலங்களில் ஒன்றாகிய இலேவி குலத்தைச் சேர்ந்தவர்கள் பிரித்தெடுக் கப்பட்டிருந்தனர். ஆகவே. பாலஸ்தீனாவில் குடியேறியபின் அவர்களுக்கு நிலப்பகுதி எதுவும் கொடுக்கப்படவில்லை. சிறையிருப்புக் காலத்திற்குப்பின் ஆரோன் குடும்பமாகிய ஒரு குடும்பத்திலுள்ள புதல்வர் இத்தூயக் கடமைகளை நிறைவேற்ற அனுமதிக்கப்பட்டனர். பிற இலேவியருக்கும் கோவிலில் சிறிய பணிகள் கொடுக்கப்பட்டன. வேள்வி சேர்ந்த தொழுகை எருசலேமுக்கு மட்டும் கட்டுப்பட்டிருந்தபோது எருசலேமுக்கு வெளியே வேள்விகள் செலுத்தப்படாதிருக்க எல்லா இலேவியரும் அங்கேயே பணி செய்ய அழைக்கப்பட்டனர். எருசலேம் அதிகாரிகளின் அதிகாரத்துக்குட்படாத இடங்களில் பல அவதூறுகள் நடந்ததே இதற்குக் காரணம்.

குருக்களும் இலேவியர்களும் இருபத்துநான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முறை முறையே தத்தம் கடமைகளை நிறைவேற்றினர். எருசலேமுக்கு வெளியே எல்லா வேள்விச் சடங்குகளும் செயல்முறையில் நின்றுவிட்டனவோ என்பது ஐயத்திற்குரியது. இருபத்துநநான்கு பிரிவுகளிலுள்ள மிகுதியான உறுப்பினர்கள் எருசலேமுக்கு வெளியே வாழ்ந்து, தங்கள் கடமைகளைச் செய்வதற்காக மட்டும் கோவிலுக்கு வந்தனர் என்று தோன்றுகிறது. அவர்கள் வாழ்ந்த இடங்களில் சமயத் தொடர்பான பணிகள் இருந்திருக்கலாம்.

மிகவும் முந்தின காலத்திலேயே குருக்கள் வழக்குரைஞர்களாகவுமிருந்தனரென்று நாம் வாசிக்கிறோம். மக்கள் தங்கள் இடத்திலுள்ள தொழுகை. இடத்திற்குச் சென்று, கடவுளுடைய கட்டளையின்படி தங்கள் வழக்குகளைத் தீர்க்க குருக்களிடம் கேட்டனர். சமயமும் அரசும் ஒன்றாகவும். கடவுளின் தூய கட்டளைகளின்படி சமூகத்தின் அமைப்பு ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும் இருக்கும் சூழ்நிலையில் இது இயற்கையானதே. குருக்கள் கடவுளின் வார்த்தைகளை பொருள்படுத்துகிறவர்களாகவும் அதே சமயத்தில் சமூகத்தில் நியாயத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டியவர்களு மாயிருக்கின்றனர்.

இஸ்ரயேலருக்கு அரசர்களிருந்தபோது அவர்கள் மேலான சமயத் தலைவர்களாகவும் நீதியை நடப்பிப்பதற்கு உயரிய அதிகாரிகளாகவும் இருந்தனர். இதனால் அரசுக்கும் சமயத்திற்கும் மிக நெருங்கிய உறவு உண்டாயிற்று. உண்மையில். அரசும் சமயமும் பிரிக்கப்பட முடியாதவை.

ஓர் அரசன் இல்லாதபோதிலும். அரசுத் தொடர்பான குருக்களின் பணியினால் பாதுகாக்கப்பட்டது. அரசனுக்கும் குருவுக்கும் சமய விழாக் கொண்டாட்டங்களில் முக்கியமான கடமைகள் இருந்தன. நாடும் சமயமும் ஒன்றானபடியால் விழாக் கொண்டாட்டங்களில் எளியவர் முதல் பெரியோர் வரை எல்லாரும் பங்குபெற வேண்டியதாயிருந்தது.

3. விழாக் கொண்டாட்டங்கள்

பல விழாக் கொண்டாட்டங்கள் இச் சமயம் சார்ந்த சமூகத்தில் இருந்தன. அவற்றில் சில பிறவற்றைவிட முக்கியமானவை.

1. எல்லாவற்றிலும் முதன்மையானது **பாஸ்கா விழாக் கொண்டாட்டம்:** இது கோவிலிலுள்ள வேள்விகளோடு தொடர்புடைய ஒரு முக்கியமான குடும்பக் கொண்டாட்டம். உண்பதற்கு ஓர் ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுத்து, வீடுகளிலிருந்து எல்லாப் புளித்தமாவையும் நீக்குவதோடு அது துவங்குகிறது. இதுவே பாஸ்காவுக்கு ஆயத்தம் செய்தல். அப்பொழுது எல்லா வீடுகளும் நன்கு சுத்தம் செய்யப்பட்டு, புளித்தமா ஒன்றுமில்லாமல் எல்லாம் எறிந்துவிடப்படும். நிசான் மாதம் 14 ஆம் நாள் (மார்ச் ஏப்ரல் உயிர்த்தெழுதல் நாள்) கதிரவன் மறைவுக்குமுன் ஆட்டுக்குட்டி கொல்லப்படவேண்டும். துவக்கத்தில் அது குடும்பத் தந்தையால் செய்யப்பட்டது. ஆனால். பிற்காலத்தில் பற்றார்வமுள்ள யூதர் அது எருசலேமிலுள்ள கோவிலில் செய்யப்பட வேண்டுமென்று ஏற்படுத்தினர். எனவே, மக்கள் அக்கொண் டாட்டத்திற்காக எருசலேமுக்குச் சென்று, ஒரு நண்பருடைய வீட்டிலோ அல்லது இயேசுவும் அவரது சீடரும் செய்தது போல முன்னேற்பாடு செய்யப்பட்ட வீட்டிலோ தங்க வேண்டி யதாயிருந்தது. ஆகவே, பு.ஏ.க்காலங்களில் எருசலேம் உயிர்த்தெழுதல் காலத்தில் மக்களால் நிறைந்திருந்தது.

எவ்வகையான ஆட்டுக்குட்டி பயன்படுத்தப்பட வேண்டுமென்பதற்குச் சில சட்டங்கள் இருந்தன. அது பழுதற்றதாயிருக்க வேண்டும்; கொல்லப்படும்போது ஒரு எலும்பும் முறிக்கப்படலாகாது. ஆட்டுக்குட்டியானது நெருப்பில் எரிக்கப்பட்டு புளிப்பில்லாத அப்பங்களோடும் கசப்பான கீரையோடும் உண்ணப்பட்டது; மீதியாக விடப்பட்ட யாவும் மறுநாள் விடியுமுன் நெருப்பில் சுட்டெரிக்கப்பட வேண்டும். இஸ்ரயேலில் ஒவ்வோர் ஆணும் இவ்வுணவில் பங்குபெற வேண்டும்.

உணவு வேளையில் எகிப்திலிருந்து விடுதலையடைந்த வரலாறு குடும்பத் தலைவரால் மூத்த மகனுக்கு எடுத்துரைக்கப்பட்டது. அவன் முறையே அதை அடுத்த தலைமுறைக்கு எடுத்துரைக்க வேண்டும். தங்கள் கதவு நிலைகளில் ஆட்டுக்குட்டியின் உதிரத்தைப் பூசி அடையாளமிட கடவுள் கட்டளையிட்டுத் தமது மக்களை விடுவித்துள்ளார் (விடு. 12).

ஏழைகள் ஓர் ஆட்டுக்குட்டி வாங்க முடியாதிருக்கும் நிலை அடிக்கடி இருந்தது. கலிலேயாவிலிருந்து பலர் எருசலே முக்குச் செல்வதற்கும். அங்கே தங்குவதற்கும் செலவு செய்ய இயலாதவர்களாகவும் இருந்தனர். எனவே. தங்களுக்கு வசதியான ஏதாவது இடத்தில் அப்பமும் மீனும் சாப்பிட்டு பாஸ்காவை ஆசரித்தனர். ஆண்டவர் திபேரியா கடற்கரையில் அளித்ததாக யோவான் 21 இல் கூறப்பட்டுள்ள திருக்காட்சிக்கு இது சிறப்பான கருத்தை அளிக்கிறது.

இந்நாளுக்குப்பின் ஏழு நாள்கள் புளிப்பில்லாத அப்பமே சாப்பிடப்பட்டது.

2. இஸ்ரயேலரின் வரலாற்றோடு தொடர்புள்ள மற்றொரு விழாக் கொண்டாட்டம் திஸ் (செப்டம்பர்-அக்டோபர்) மாதத்தில் நடைபெற்ற கூடார விழாக் கொண்டாட்டம். இவ்விழாவில் முக்கியமானது குருத்தோலைகளாலோ வேறு மரங்களின் கிளைகளினாலோ கூடாரங்களைச் செய்தல். பொதுவாக, வீடுகளின் தட்டையான கூரைகளில் கூடாரங்கள் செய்யப்பட்டன; வாக்களிக்கப்பட்ட நிலப்பகுதியில் முதன் முதல் அவர்கள் குடியிருந்தபோது வீடொன்று கட்டப்படுமுன் தற்காலிகமான குடில்களில் வாழ வேண்டியிருந்ததை அது அவர்களுக்கு நினைவுபடுத்தும்.

இந்நாள்களில் சீலோவாம் குளத்திற்கு ஊர்வலமாக செல்லுதல் ஒரு முக்கியமான சடங்காயிருந்தது. அங்கிருந்து பொற்பாத்திரங்களில் நீர் மொண்டு, குருக்கள் பாட, எக்காளங்கள் தொனிக்க பெரும் ஆரவாரத்துடன் கோவிலுக்குக் கொண்டுசெல்லப்பட்டது. யோவான் கூறுகிறபடி, இக் கொண்டாட்ட சமயத்தில்தான் இயேசு தம்மை வாழ்வுதரும் தண்ணீருக்கு ஒப்பிட்டு வெளிப்படையாய்க் கூறினார் (யோ. 7:37).

3. வாரங்களின் விழாக் கொண்டாட்டம் அல்லது பெந்தெகொஸ்தே விழாக் கொண்டாட்டம்:

இக்கொண்டாட்டம் பாஸ்கா விழாக் கொண்டாட்டத்திற்கு ஐம்பது நாள்களுக்குப்பின் ஆசரிக்கப்பட்டது. முன்னே அறுப்பின் விழாக் கொண்டாட்டமாக இருந்த இவ்விழா பிந்தைய காலங்களில் ஆபிரகாமுக்கும் மோசேக்கும் உடன்படிக்கையைப் பற்றிக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளோடு இணைக்கப்பட்டது. இவ்வாறு, ஏனைய பெரும் இரு கொண்டாட்டங்களைப் போல இதற்குமொரு வரலாற்றுப் பின்னணியம் கொடுக்கப்பட்டது.

யூதருடைய வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும் வேறுபல கொண்டாட்டங்களும் இருந்தன. அவற்றில் பெரும் பான்மையானவை சிறையிருப்புக் காலத்திற்குப் பின் புகுத்தப்பட்டன. அவற்றில் முக்கியமானது முன்னே குறிப்பிடப் பட்ட பாவக்கழுவாய் ஆகும். இது மகா தூயநாள் என்றும் அழைக்கப்பட்டது. அந்நாளிலே ஒவ்வொரு இஸ்ரயேலரும் மற்றெல்லா வேலைகளையும் விட்டு விட்டுத் தம் ஆன்மாவை ஒடுக்க வேண்டும்.

பூரிம் விழாக் கொண்டாட்டம்: இது பாபிலோனின் சிறையிருப்புக் காலத்தில் ஆமானிடமிருந்து யூதர்கள் அடைந்த விடுதலையை நினைவுகூரும்படி, ஆதார் (பெப்ருவரி-மார்ச்) மாதத்தில் கொண்டாடப்பட்டது (எஸ். 9:26-32).

அந்தியோகு எப்பிப்பானசின் அறிவீன வேள்விகளால் கோவில் தீட்டுப்பட்டபின் திருக்கோவில் சுத்திகரிக்கப்பட்டதை நினைவுகூரும்படி, திருக்கோவில் அர்ப்பண கொண்டாட்டம் நடந்தது (1மக்க. 4:52-59.; 2மக்க. 10:6.; யோ. 10:22).

இஸ்ரயேலரின் வரலாற்றில் நடந்த சோக நிகழ்ச்சிகளை நினைவுபடுத்த சில நோன்பு நாள்களும் அனுசரிக்கப்பட்டன.

இவ்வாறாக, இஸ்ரயேலர் தங்கள் தூய வரலாற்றையும் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களாக பிற மக்களுக்கு வழிகாட்ட, கடவுளின் கருவியாயிருக்க வேண்டிய தங்களது பொறுப்பையும் பற்றி நினைவுபடுத்தப்பட்டனர்.

4. நாட்டுப்புறத்தில் அன்றாட வாழ்க்கை

வேளாண்மையே மத்திய கிழக்கு இடங்களில் முக்கிய வாழ்க்கைத் தொழில். இயேசுவின் போதனையில் பயன்படுத்தப்பட்ட சான்றுகள் ஏற்கெனவே இருந்த நாட்டுப்புற வாழ்க்கையிலிருந்தே எடுக்கப்பட்டவை. அவை மிக அறிமுகமானக் காட்சிகள்.

இஸ்ரயேலரின் விவசாயத் தொழில் முறையைப் பற்றி அதிக விளக்கம் தேவையில்லை. கிழக்கு முழுவதிலும் ஒரே மாதிரி முறைகள் கையாளப்பட்டுவருவதை நாம் காண்கிறோம். அவை அதிகமாக மாறவில்லை. பாலஸ்தீனாவுக்கு அந்நாள் களில் எடுத்துக்காட்டாயிருந்தவைகளைத் தற்காலத்தில் இந்தியாவின் நாட்டுப்புறங்களிலும் காண்கிறோம்.

பாலஸ்தீனாவில் ஆண்டானது இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அக்டோபரிலிருந்து ஏப்ரல் வரை உழுவதற்கும், விதைப்பதற்கும், பரம்படிப்பதற்கும், களைபிடுங்குவதற்கு முரியக் காலம். ஏப்ரல் முதல் அக்டோபர் வரை அறுப்பதற்கும், அரிகளைச் சுமப்பதற்கும், கூடடிப்பதற்கும், சேர்த்து வைப்பதற்குமுரிய காலம்; வேளாண்மைக்குரியக் காலங்கள் இடத்திற்கு இடம் வேறுபட்டு இருந்தன. மிகுதியான வேலை விவசாயிகளாலும், அவர்களது குடும்பத்தினராலும் செய்யப்பட்டது. ஆனால், வேளாவேளைகளில், வேறு வேலையாட்களைக் கூலிக்கு அமர்த்த வேண்டியதாயிருந்தது. இதன் காரணத்தால் வேலை செய்யும் கூட்டத்தார் வேலைக்காக இடம் விட்டு இடம் சென்றனர் (மத். 20). இவ்வேலையாட்களுக்கு உணவளிக்கப்பட வேண்டியதாயிருந்தது. புளிப்பான திராட்சைப் பிழிவில் தோய்க்கப்பட்ட அப்பமாக அமைந்த சாதாரண உணவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. நாம் சாதாரணமாக எண்ணுவதைவிட மேலான அளவில் இது தூய திருவிருந்து ஏற்பாட்டுக்கு மற்றொரு பின்னணியத்தைக் கொடுக்கலாம். கூலிக்காரர் அருந்தின உணவு விண்ணுலக உணவைக் குறிக்கும் ஒரு பாடமாகிறது.

அன்றாட வேலையாட்களைத் தவிர வேறு இரு வகுப்பினரான வேலையாட்களும் இருந்தனர். அவர்கள் விலங்கிடப்படாத அடிமைகளும், விலங்கிடப்பட்டு ஒரு காவலனின் கீழ் வேலை புரியும் அடிமைகளுமாவர். ஏற்கெனவே, அவர்களில் திறமையுள்ளவர்களும், திறமையில் குறைந்தவர் களும், திறமையற்றவர்களும் இருந்தனர். திராட்சைத் தோட்டத்து வேலையாட்களும், காளை ஒட்டுபவர்களும், உழவர்களும், குதிரை வளர்ப்பவர்களும் திறமையான கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

வயல்களில் வேறுபட்ட பலவகையான உரங்கள் பயன்படுத்தப்பட்டன; விதைகள் பருமனுக்கும் தன்மைக்கும் ஏற்றதாக தேர்ந்தெடுக்கப்பட்டன; அழிவு செய்யும் கிருமிகளிலிருந்து பாதுகாக்க விதைகளை மருந்தில் மூழ்க வைக்கலாமென்பதும் அப்பொழுதே கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

அப்பம் உணவில் முக்கியமான ஒன்றாயிருந்தமையால், பல்வேறு தானியங்கள் பயிர் செய்யப்பட்டன. பயிற்றினங்களும்,

கால்நடைத் தீனிப் பயிர்களும் இருந்ததாக அறிகிறோம். திராட்சைப் பிழிவு அன்றாடப் பானமாமிருந்தமையால், தானியப் பயிர்க்காலங்களுக்கிடையே திராட்சைப் பயிரில் மக்கள் கவனம் செலுத்தினார்கள்.

நாட்டுப்புறத்தில் ஆடு, மாடு, குதிரை ஆகியவற்றைப் பராமரித்தல், கோழி வளர்த்தல், மீன்பிடித்தல், தேனீ வளர்த்தல் ஆகியவற்றின் வேளாண்மை ஒரு முக்கிய வாழ்க்கைத் தொழிலா யிருந்தது. இருவேறு இனங்களைக் கலக்கச் செய்து புதிய கலப்பினங்களைப் பிறப்பித்தல் முக்கிய நடவடிக்கையாயிருந்தது.

ஆயர்களைப் பற்றிக் கவனிக்குமிடத்து, பாலஸ்தீனாவிலுள்ள ஆயர் தம் மந்தைக்கு முன்சென்று வழிநடத்துவார். அவர் அவற்றை ஒட்டமாட்டார். ஆடுகள் அவரது குரலுக்குச் செவிகொடுத்து புத்திக் கூர்மையான விலங்குகளைப் போல் நடந்து கொள்ளும்; ஆட்டிடையர் சீழ்க்கை ஒலி செய்வதாலோ, புல்லாங்குழல் வாசிப்பதாலோ ஆடுகளைத் தங்களிடம் அழைக்கவோ, சிதறச் செய்யவோ கூடும். ஆடுகளும் உடனே கீழ்ப்படியும். ஆயருக்கும் மந்தைக்குமுள்ள தொடர்பு நம்பிக்கையிலும் நெருங்கியத் தொடர்புடைய நிலையிலும் அமைந்திருந்தது. ஆடுகள் கண்மூடித்தனமாக ஒட்டப்படாமல் அறிவால நடத்தப்பட்டன. பு.ஏ. இல் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள ஆயர்-மந்தை என்னும் படத்தை விளக்குகையில் இது கவனத்துக்கு எடுக்கப்படலாம்.

மேலும், ஆடு மாடுகளின் பால், பாலாடைக்கட்டி செய்ய பயன்படுத்தப்பட்டது. எனினும் வெண்ணெய் அதிகமாக பயன்படுத்தப்படவில்லையென்று காணப்படுகிறது. ஒலிவ எண்ணெய் அதற்கு ஒப்ப பயன்படுத்தப்பட்டது.

தேனீ வளர்த்தல் சாதாரணமாயிருந்தது. சர்க்கரை இல்லாத சமயம் இனிப்பூட்ட தேன் பயன்படுத்தப்பட்டது.

தோட்டங்களும் போடப்பட்டன. ஆனால் உயர்நிலை மக்களது தோட்டங்கள் மகிழ்வுக்குரியத் தோட்டங்களாகவும், பூங்காக்களாகவும் அமைந்திருந்தன. இம்முறையான தோட்டம் போடும் எண்ணம் கிழக்கிலிருந்து வந்தது. காய்கறித் தோட்டங்களும் இருந்தன.

5. நாட்டுப்புறங்களுக்கும் நகர்களுக்கும் இடைநிலை

பாலஸ்தீனா நாடானது கிழக்கிலிருந்து மேற்கே கடற்கரை வரையிலும், வடக்கிலிருந்து தெற்கே எகிப்து வரையிலும் பெரிய வாணிகப் பாதைகளால் குறுக்கிடப்பட்டுள்ள நாடு. பல நூற்றாண்டுகளாக பாலஸ்தீனா பெரும் வல்லரசுகளினூடே ஓர் இடைத்தடுக்கு நாடு. எனவே, நாட்டில் அதிகாரஞ் செலுத்தினவர்களுக்கு இராணுவப் போக்குவரத்து எளிதாயிருப்பதற்குப் பெருஞ்சாலைகள் ஒழுங்காக நல்ல முறையில் அமைக்கப்பட்டிருந்தன. பு.ஏ. காலங்களில் உரோமர் நாட்டில் குடியிருந்தனர். ஆகவே, உரோமை அரசாங்கத்தின் ஏனைய பகுதிகளில் இருந்தது போல விரிவான சாலை அமைப்பு முறைகள் இருந்தன. இப்புதிய சாலைகள் தரை மட்டத்திலிருந்து சற்று உயர்ந்ததாகவும் நேரான வைகளாகவும் உண்டாக்கப்பட்டிருந்தன (லூக். 3:4-6).

பு.ஏ.காலங்களில், குறிப்பாக, மக்கள் அடிக்கடியும் அதிகமாகவும் பயணம் செய்தனர்; பயணம் செய்வது பொதுவாக வசதிகரமாயிருந்தது. புகை வண்டிகள், ஊர்திகள், விமானங்கள் இல்லாத காலத்திலும் மக்கள் பெருமிதமான தூரத்திற்குச் செல்லக்கூடியவர்களாமிருந்தனர். திருத்தூதுவர்கள் மத்திய தரைப் பகுதிகளில் பயணங்கள் சென்றதை நினைக்கும் பொழுது அது தெரியவரும். இயேசுவும் அவரது சீடர்களும் தெற்கு வடக்காகத் திரிந்ததும் நமக்குத் தெரியும். அவ்வாறு சுற்றித் திரிவது மிக எளிதென்று நமக்குப் புலப்படுகிறது. மேலும், பல நிகழ்ச்சிகளிலிருந்து இது அசாதாரணமான தல்லவென்றும் நாம் அறிகிறோம். பெரும் விழாக்கள் நடந்த காலங்களில் பாலஸ்தீனாவின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து மக்கள் பங்கு பெறுவதற்காக எருசலேமுக்குச் சென்றனர்.

அதே விதமாக மத்தியதரைக் கடலில் கப்பல்களில் செல்வதும் எளிதாயிருந்தது. முக்கியமான துறைமுகங்களை ஒன்றாக இணைக்க பல கடற்பாதைகள் இருந்தன. ஆக்கில்லாளும் பிரிஸ்கில்லாளும் கிரேக்க நாட்டிலிருந்து உரோமாபுரிக்குச் சொற்ப ஆண்டுக்குள் நான்கைந்து தடவைகள் சென்றதையும் நாம் இங்கு சிந்திக்கலாம்.

முக்கியமான சாலைகள் வழியாகப் பல பயணிகள் விடுதிகளும் உண்டிச்சாலைகளும் இருந்தன. ஆனால், அவை அடிக்கடி மோசமானத் தரத்தில் காணப்பட்டன. சில வேளைகளில் அவை நெறியற்றதும் குற்றத் தீர்ப்புக்குரியதுமான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. அதற்கு நீங்கலாக வேண்டுமானால் பயணி நல்ல நிலையுடைய வராயிருத்தல் வேண்டும்.

மலை நாடான பாலஸ்தீனா பெரும் பளு இழுக்கும் வண்டி கள் செல்லுவதற்கு ஏற்றதன்று. கடற்கரையிலோ, சமவெளிக ளிலோ அவைபயன்படுத்தப்பட்டன.சாதாரணமாக, இரு உருளைகளைக் கொண்டுள்ள மர அச்சுள்ள வண்டிகளே பயன்படுத்தப்பட்டன. ஓர் ஆள் சுமந்து கொண்டு போகப்படக் கூடிய சிவிகை, குன்றுகளில் பயன்படுத்தப்படக் கூடியதாயிருந்தது, ஆனால் உயரின மக்களே அவற்றில் போகஅனுமதிக்கப்பட்டனர்.

மொத்தத்தில், யூதரைப் பற்றி நாம் நினைக்கும் பொழுது பயணஞ்செய்யும் மக்களாகவே அவர்களை நாம் மனதிற் கொள்ள வேண்டும். அவர்கள் அடிக்கடி வணிகர்களாகவும் அலுவலர்களாகவும் வருவதும் போவதும், ஒய்வுக்காகவோ பணியை முன்னிட்டோ தங்குமிடங்களில் ஒருவரையொருவர் சந்திக்கிறவர்களாகவும் தோற்றமளிப்பர். தொழுகைக் கூடம் ஏற்கெனவே, ஒருவரையொருவர் சந்திப்பதற்கு ஏற்ற இடம். மத்தியதரைக் கடலைச் சுற்றியுள்ள ஒவ்வொரு நகரிலும் தொழுகைக் கூடத்தைக் காணக்கூடும்.

பழைய காலங்களில் தனிமையாகப் பயணஞ்செய்வது அபாயமுள்ளதாயிருந்திருக்கலாம். ஆனால் பு.ஏ. காலங்களில் பொதுவாக இடையூறில்லாதிருந்தது. உரோமர் குடியிருந்த நாடுகளுக்கு நியாயத்தையும் ஒழுங்கையும் கொண்டுவந்தனர். எனினும், பு.ஏ.காலங்களிலும் சில இடங்களில் சற்று இடறுண்டாகக்கூடியதாயிருந்ததென்று நல்ல சமாரியன் உவமையிலிருந்து புலப்படுகிறது.

வேற்றினத்தாருடைய ஆட்சிக் காலத்தில் ஆட்சியிலிருந்த அலுவலர்கள் பெருஞ்சாலைகள் வழியாகப் பயணஞ் செய்கையில் நாட்டினரில் எவரையாவது தங்களுக்கு உதவி செய்யக் கேட்டார்கள். ஏனெனில் அவர்கள் அதற்குக் கீழ்ப்படியாதிருக்கக் கூடாது.

திருத்தூதுவர் காலத்திற்கு முன்னுள்ள நூற்றாண்டுகளில் கூட்டம் கூட்டமான மக்கள் பாலைநிலப் பகுதிகளில் குடியிருந்தனரென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஒரு சமயஞ்சார்ந்த சமூகமாகத் தங்களை அமைத்து கடுமையானச் சட்டதிட்டங்களையும் விதிகளையும் அனுசரித்தனர். அவர்கள் வாழ்ந்த சில இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுத் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன; புனிதப் போருக்காகத் தங்களை ஆயத்தப்படுத்தி மெசியாவின் வருகைக்காக ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்ததாகத் தோன்றுகிறது; சமூகத்தின் இயல்பானத் தன்மையிலிருந்தும், குறிப்பாக, சமய அதிகாரிகளிடமிருந்தும் எதிர் மறுப்பாக சமூகத்தினின்றும் தங்களை விலக்கிக் கொண்டிருந்தனர். பாலைநிலத்தில் வாழ்ந்து ஏற்ற வேளையில் கடவுளுக்குச் சேவை புரிய தம்மை ஆயத்தப்படுத்தின திருமுழுக்கு யோவான் போன்றவர்களையும் சந்திக்கிறோம்.

6. நகர் வாழ்வு

ப.ஏ. நூல்களில் இஸ்ரயேலரை முதலாவது நாம் சந்திக்கும் பொழுது தற்பொழுது இருக்கும் நகரங்களைப் போல் அவர்கள் வாழ்ந்த காலத்திய நகரங்களைக் குறித்துப் பேச முடியாது. பெத்லகேம், எருசலேம் ஆகியவை மிகப் பெரிய இடங்களாயிராமல் சிறியவைகளாகவே இருந்தன. ஆனால், படிப்படியாக நிலைமை மாறுகிறது. சாலமோனின் காலத்தில் நாடு வாழ்வடைந்தது. எருசலேமில் ஒரு கோவிலும் அரச அரண்மனையும், நிச்சயமாக, வேறு பல முக்கிய கட்டடங்களும், பலரையும் கவரத்தக்க அழகிய வீடுகளும் உண்டாயின. ஆனால் முதலாவது கிரேக்கர் மூலமாகவும் கிரேக்க நாகரிகத்தின் மூலமாகவும் நகர்கள் ஒரு புதிய தோற்றத்ததைப் பெற்றன.

கிரேக்கரே முதலில் நகர் ஒழுங்கமைப்பை ஆரம்பித்தனர். இத்திட்டத்திற்கிசைய சிரிய அந்தியோகியா நன்கு திட்டமிடப்பட்ட தூண் வரிசைகளுள்ள சாலைகளோடும், பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்ட நடைபாதைகளோடும் அமைக்கப்பட்டது. குளிப்பகங்களும், அரங்கசாலைகளும், நீர்த்தாரைகளும், கோவில்களும், சந்தைகளும் அங்கு அமைக்கப்பட்டிருந்தன; இரவில் தீபங்கள் ஏற்றிவைத்தலும் ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாறு பாலஸ்தீனா கிரேக்க மயமாக்கப்படுவதை அங்குள்ளப் பலர் கடுமையாக எதிர்த்தனர். ஆயினும், கலிலேயாக் கடலுக்கு வட கிழக்கிலுள்ள பத்து நகர்களால் அமைந்துள்ள தெக்கப்போலி கிரேக்க நகர்களாகும். எருசலேமும் புதுமையான கிரேக்க எண்ணங்களால் அதிகம் பாதிக்கப்பட்டது. அரண்மனை வட்டாரங்களிலும் குருத்துவ உயர் வகுப்பினருக்குள்ளும், சதுசேயருக்குள்ளும் புதியவற்றை ஆதரிக்கும் பலர் இருந்தனர். பெரிய ஏரோது திரளான பணத்தைக் கொண்டு அலங்கரித்துப் புதிய கட்டடங்களைக் கட்டினார்; ஒரு மாளிகையைக் கட்டி, கோவிலையும் புதுப்பித்துப் பல துறைகளில் கிரேக்க நாகரிகத்ததைப் புகுத்தப் பணமும் கொடுத்தார்.

எனினும், ஏழை மனிதரின் இல்லம் எளிதில் இல்லாமற் போகக் கூடிய பொருட்களால் கட்டப்பட்டது, சாதாரணமாக இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட ஒரே அறை அவர்களுக்கிருந்தது. அவற்றில் ஒன்று மற்றதைவிட உயர்ந்த மட்டத்திலிருந்தது; உயர்ந்தப்பகுதி படுக்கைகளுக்காகவும், பெட்டிகளுக்காகவும், அடுக்களைப் பாத்திரங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டது; கீழிலுள்ளப் பகுதி இரவில் பணியாட்களுக்காகவும், பகலில் ஒருவித தொழில் அறையாகவும், குழந்தைகளின் விளையாட்டு அறையாகவும் பயன் படுத்தப்பட்டது.

வீட்டின் கூரை தட்டையாகவும், மரத்தடிகள் குறுக்கே வைக்கப்பட்டு களிமண்ணால் மூடப்பட்டதாயுமிருக்கும். எனவே, கூரையைப் பிரித்து ஒருவரை அதன் வழியாய் இறக்குவது மிகவும் எளிதானது; இரவில் அக்கூரையின் மேல் பகுதியில் உறங்கலாம்; பகலில் தானியங்களையும், காய்கறிகளையும் உலர வைக்கலாம். நாட்டுப்புறங்களில் செல்வந்தரான மக்களுக்கும் அம்முறையான வீடுதானிருந்தது. ஆனால் அவர்களுக்குப் பொதாகவும், வேறு சிறு அறைகள் பல சேர்ந்ததாகவும் இருந்தது.

ஆனால், நகரங்களில் செல்வந்தர் வேறுபட்ட பயன்களுக்கு, வேறுபட்ட அறைகள் கொண்ட வீடுகளில் வசித்தனர். அதாவது, உணவறை, படுக்கையறை, படிப்பறை ஆகியவையுள்ள கிரேக்க மாதிரி வீடுகளை அமைத்திருந்தனர். வெளியிலுள்ள சூரிய வெப்பத்தைத் தடுக்கவும், திருடர்கள் எளிதில் உட்புகாதபடியும் வீடுகளுக்குச் சிறிய சன்னல்கள் இருந்தன; பல நகர வீடுகளுக்கு தெருவுக்கு எதிராயிருந்த கீழ் அறையில் விற்பனைக் கடைகள் இருந்தன. வீட்டின் உரிமையாளர் அதை வைத்துக் கொள்வார். சிலர் அதை வேறு வணிகர்களுக்கு வாடகைக்குக் கொடுத்து ஊதியம் பெற்றனர்.

நாட்டுப்புறங்களில் மக்கள் பாயையோ, மெத்தையையோ தரையில் விரித்துத் தூங்குவார்கள். ஆகவே, படுக்கையை எடுத்துக் கொண்டு நடப்பது எளிதான செயல். உறங்குவதற்கு மக்கள் கட்டிலை பயன்படுத்தினாலும், அதுவும் சாதாரண மரத்தில் செய்யப்பட்டு சுமக்க எளிதானதாயிருக்கும்.

குளிர் காலத்தில் வீடுகள் அனல் மூட்டப்பட வேண்டும். சாதாரணமாக, அறையின் நடுவிலுள்ள ஒரு துவாரத்தில் எரிகின்ற கரியை நிறைத்து வைத்துப் பின்னர் துவாரம் அடைக்கப்படும். அதனால் அறை வெகு நேரத்திற்குச் சூடாயிருக்கும்.

பொந்தியுபிலாத்து போன்ற உயர்தரத்து உரோமை அரசு அலுவலர்கள் தங்கள் இல்லங்களில் மையமான தலைவாயிலிலிருந்து குழாய்களின் மூலம் செல்லும் சுடு நீர் அல்லது நீராவியால் கட்டடத்திற்குள் வெப்பம் உண்டாக்கும் முறையைப் பயன்படுத்தினர்.

நீர் வழங்கீட்டிற்காக பெரும்பான்மையோர் வாளிகளால் மொண்டு கொள்ளத்தக்க, திறந்த கிணறுகளை நம்பியிருந்தனர். எனினும், நகர்களில் நகராண்மைக் கழகம் கால்வாய்கள் மூலம் நீர் வழங்கீட்டை ஒழுங்கு செய்தனர். மலைகளிலிருந்து குழாய் வழியாக நீர் நகரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அதற்காக வரி கொடுத்தவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

ப.ஏ. இல் தூய்மைப்படுத்துதல் பற்றி பல விதிகள் இருந்தன. நோய்க்கும் அழுக்குக்குமுள்ளத் தொடர்பை மோசேயின் திருச்சட்டம் காட்டுகிறது. பு.ஏ. காலங்களில் கிரேக்க உரோமைத் தொடர்புகள் மனிதத் தூய்மையை ஆதரித்தபடியால் நகர்களில் தனி இடங்களிலும், பொது இடங்களிலும் குளிப்பு இல்லங்கள் இருந்தன. பல யூதர்கள் பொது குளிப்பறைகளுக்குச் செல்ல

மனமற்றவர்களாயிருந்தனர்; ஏனெனில், விளையாட்டு அரங்குகளில் உடற்பயிற்சிக் களியாட்டுகளில் உடையில்லாமல் பங்கு பெறுவதை அவர்கள் வெறுத்தனர்.

குழாய்கள் மூலம் குளியல் அறைகளுக்குச் சூடான நீர் வழங்கும் முறை ஏறத்தாழ கி.மு. 70 இல் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. முதலாவது பொது நீராடும் அறைகள் தாழ்ந்த வகுப்பினருக்காக ஏற்படுத்தப்பட்டன. உயர்தர மக்களுக்கு அவர்களது இல்லங்களிலேயே அவை அமைக்கப்பட்டிருந்தன. எனினும் பிற்காலத்தில் எல்லாரும் பொதுக் குளிப்பிடங்களுக்குச் சென்றனர். பேரரசர்களும் அங்கே சென்றனர். பேரரசர்களால் கட்டப்பட்ட சில பொது நீராடும் மனைகள் மிகப் பெரியவைகளாகவும், அணிநலம் பொருந்தினவைகளாகவுமிருந்தபடியால் பெருஞ் செலவு பிடிக்கிறதாயிருந்தன.

பாலஸ்தீனாவின் பெரிய நகர்களில் குறிப்பாக, எருசலேமிலும் செசரியாவிலும், வடிகால்கள் அமைப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நகர்களும் திட்டமிடப்பட்டன. எனவே, தாங்கள் விரும்பியபடி கட்டடம் கட்ட மக்கள் அனுமதிக்கப்படவில்லை. பல விதிகள் அனுசரிக்கப்பட வேண்டியதாயிருந்தன. சில நகர்களில் முக்கிய தெருக்களில் இரவில் ஒளியூட்டும் ஒழுங்கான அமைப்பு இருந்தது.

7. தினசரி வாழ்க்கையின் விவரங்கள்

விவிலிய வரலாற்றுக் காலங்களில் எவ்வாறு மக்கள் உடை உடுத்தினரென்று கூறுவது சற்று கடினமானது. யூத வரலாறுகளில் அவை கூறப்பட்டிருக்கின்றன. ஆனால், எல்லாரும் அவ்வாறு அனுசரித்திருந்தனரோவென்று நாம் கூற இயலாது. முழு உடலையும் மூடக்கூடிய ஒருவித நீண்ட பருத்தி ஆடை பயன்படுத்தப்பட்டதென்று தோன்றுகிறது. ஆண்கள் தங்கள் தலையில் மென்பட்டுத் தலைக் கவிகைத் தொப்பியை அணிந்து, ஒரு துண்டுத் துணியை மடித்து நீண்ட கச்சையாகத் தலையைச் சுற்றிலும் கட்டியிருந்தனர்; இடுப்பில் ஓர் அரைக் கச்சையும் கால்களில் மிதியடிகளும் பயன்படுத்தினர். சிலர் ஆட்டு மயிரினாலோ, ஒட்டக மயிரினாலோ அல்லது முரட்டுச் சணல் துணியினாலோ செய்யப்பட்ட மேற்சட்டை போடுவது வழக்கமாயிருந்தது.

சில வேளைகளில் மேற்சட்டையானது முற்பக்கத்தில் திறப்பாகவும், அரைக் கச்சை இல்லாததுமான ஓர் அங்கி போன்றதாயிருக்கும்; சட்டைக் கைகள் நீண்டு விரிந்த தாயிருக்கும். கற்றவர்களும் அலுவலர்களும் இத்தகைய ஆடையை அணிந்ததாகத் தோன்றுகிறது.

பெண்களுடைய ஆடை, ஆண்களின் ஆடையிலிருந்து அதிகம் வேறுபாடுடையதன்று; நிறங்களும் அலங்காரங்களும், குறிப்பாக உயர் வகுப்பினரிடம் வேறுபட்டவைகளாயிருக்கும்.

ஏற்கெனவே, நகரிலுள்ள பலர் கிரேக்கிலிருந்தோ, உரோமையிலிருந்தோ மிகவும் பிற்பட்டப் பாணியைத் தெரிந்தெடுத்தனர். உயர் குலப் பெண்கள் உடையிலும், அணிகலன்களிலும், தலையணிகளிலும், முடி அலங்காரித்தலிலும் கிரேக்கப் பாணியைப் பின்பற்றினார்கள். முன் கூறப்பட்டது போல பல யூதர்கள் வேற்றினத்தாரின் பழக்கங்களுக்கு எதிராயிருந்து, ப.ஏ. உடைகளையே அணிந்தனர். யூத ஆண்கள் சட்டைக்கு மேல் ஒரு சிறிய கழுத்துக் குட்டை அணிவார்கள். அது சிவப்பு கலந்த நீலமாகப் பருத்தித் துண்டுத் துணியாலானது. அதற்குக் குறிப்பிடத்தக்க காரணமொன்றும் கிடையா. பெரிய கழுத்துக் குட்டை பருத்தித் துண்டினாலோ, கம்பளித் துண்டினாலோ உள்ளதாய் அணிகளுள்ளதாயிருக்கும்; தொழுகைக் கூடத்தில் இறைவேண்டலின் போது மூட போர்வையாய பயன்படுத்தப்பட்டது.

யூதர்கள் தாடியுள்ளவர்கள். இப்பழக்கத்தில் அவாகள் துப்புரவாகச் சவரம் பண்ணின உரோமருக்கு வேறுபட்டவர்கள். யூதர்கள் தங்கள் முடியை நீளமாக வைத்தனர். பலர் மீசை வைத்திருந்தனர்.

சிலர் ஆண்ணையெடுத்துக் கொண்டு முடியை நீளமாக வளர்த்தனர். தங்கள் மயிரை நீளமாக வைக்கவும் திராட்சைப் பிழிவினைக் குடியாமலிருக்கவும் கடவுளிடம் ஒப்பந்தம் பண்ணிய நசரேயரைக் குறித்து வாசிக்கிறோம். அதற்கு மாறாக பவுல் எருசலேமில் நிறைவேற்ற வேண்டிய ஆணை முன்னிட்டு தம் முடியைக் கத்தரித்தார்.

பெண்கள் சிங்காரிப்பதிலும், அணிகலன்கள் அணிவதிலும் பலவிதப் பாணிகளைப் பின்பற்றினார்கள்; உதட்டுச் சாயம் போன்ற அழகுச் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன.

8. உணவுகள்

யூதர்கள் பிற இனத்தாரோடு உணவு உண்ணவில்லை. உணவுக் கட்டுப்பாடுகள் முன்னிட்டு அவர்கள் வேறு உண்வை உண்டனர். அவர்கள் யூதர் மரபுணவையே உண்டனர். அது இரத்ததமில்லாதபடி சமைக்கப்பட்ட இறைச்சி உணவு. சில தூய்மையற்றவை என்று மோசேயின் நீதிச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இறைச்சியை சாதாரணமாக வேக வைத்து, கொண்டாட்ட நாள்களில்தான் மக்கள் உண்டனர். எனினும், பாஸ்கா ஆட்டுக்குட்டி வாட்டப்பட்டது. பல காய்கறிகள் பச்சையாகவோ, எண்ணெயில் வேக வைத்தோ பயன்படுத்தப்பட்டன. இனிப்புண்டாக்க முந்திரிப்பழ வற்றல், அத்திப்பழம், தேன், பேரீச்சம் பழம் ஆகியவை பயன்படுத்தப்பட்டன. ஏனெனில் சர்க்கரை அக்காலத்தில் அறியப்படாதிருந்தது; பல பழங்கள் உலர்த்தி உண்ணப் பட்டன.

பானமாக திராட்சைப் பிழிவு நீரில் கலந்து பயன்படுத்தப்பட்டது. சமய மரபில் அவ்வளவு உறுதியில்லாதவர்களிடையில் திராட்சைப் பிழிவில் நறுமணப் பொருட்களால் நறுஞ்சுவையூட்டப்பட்டது.

மீன், உணவுக்கு ஒரு முக்கிய பங்கீடாக இருந்தது. கலிலேயாவிலுள்ள மீனவர்களில் பெரும்பான்மையோர் பாலஸ்தீனாவிலும் வெளிநாடுகளிலும் அனுப்புவதற்காக உப்பிட்டு உலர வைத்த மீன்களை விற்கிற தொழிலாளிகளாயிருந்தனர். ஒலிவ மரங்கள் மிக முக்கியமானவை. குடியானவர்களுக்கு அவை இறைச்சியாகவும்; எண்ணெயாகவும் அமைந்தன. எண்ணெய் சமையலுக்கு பயன்படுத்தப்பட்டது.

பாலஸ்தீனாவில், சாதாரணமாக, நண்பகலிலும் மாலையிலுமாக இரு முறைப்படியுள்ள உணவுகள் இருந்தன. காலையுண்டி ஒழுங்கில் சாராதது.

சாய்ந்து கொண்டு உணவுண்ணும் பழக்கம் ஒருவேளை கிழக்கத்திய நாட்டுக்குரியது. ஆனால் ப.ஏ. காலங்களில் மேசையைச் சுற்றி தரையிலோ நாற்காலியிலோ உட்காருவர். பு.ஏ. காலங்களில் சாய்ந்து கிடக்கும் பழக்கத்தைப் பற்றி அறிகிறோம். இது கிரேக்காமிருந்து வந்ததாகச் சொல்லப்பட்டது. கிரேக்கர் கிழக்கிலிருந்து அதைப் பழகிக் கொண்டனர்.

9. சில விவிலியப் பகுதிகளை விளக்கும் பாலஸ்தீனா நாட்டு வழக்கங்கள்

இப்பொருளை நாம் கவனமாய் ஆராயுங்கால், அக்காலத் திற்கும் இக்காலத்திற்குமுள்ள வேறுபாடு அவ்வளவு அதிகமல்ல என்பது தெளிவாகும். வாழ்க்கைக்குப் பல வசதிகளை அளிக்கும் தொழில்துறை சார்ந்த புதிய கண்டுபிடிப்புக்களை எண்ணும் போது பல துறைகளில் முன்னேற்றம் உண்டாயிருக்கிறது. ஆனால் சில தளங்களில் ஒரு முன்னேற்றமும் உண்டாகவில்லை யென்பது மட்டுமன்றி, பின் தங்கிய நிலையே உண்டாயிருக்கிறது எனலாம்.

எனினும், ப.ஏ. களிலுள்ள பகுதிகளைப் புரிந்து கொள்ள இஸ்ரயேலருடைய சுற்றுப் புறங்களில் அவர்களுக்கு முக்கியமாயிருந்த சில பழக்க வழக்கங்களைக் குறிப்பிடுவது நன்று.

ரொட்டியானது கத்தியால் வெட்டப்படலாகாது; எளிதில் துண்டுகளாக முறிக்கத்தக்கதாக செய்யப்பட்டது. பு.ஏ.இல் அப்பம் பிட்குதல் என்பதின் கருத்து இதனால் நமக்கு விளங்குகிறது. ரொட்டித் துண்டுகள் மேசையின்மேல் நடுவில் ஒருபொது பாத்திரத்தில் திராட்சைப்பிழிவில் தோய்க்கப்பட்டன.

இருளில் ஒளி தோன்றுவதுபோன்ற படம் விவிலியம் முழுவதிலும் காணப்படும் ஒரு மையப்பொருள். மக்கள் இருளில் உறங்காமல் இருளை ஒளிமயமாக்க ஓர் எண்ணெய் விளக்கை வைத்திருப்பது இக்கருத்தை விளங்கச் செய்கிறது.

சாதாரணமாக, நாட்டுப்புறத்தில் முழுக் குடும்பமும் ஒரே படுக்கையில் படுத்தனர். வெளியில் எவரும் கதவைத் தட்டினால் அவர்களிலொருவர் எழுந்து செல்வது கடினமாயிருந்தது.

ஓர் அந்நியர் தாகத்துக்குத் தண்ணீர் கேட்பது போன்ற காரணங்களுக்காக அன்றி வேறெதற்காகவும் ஒரு பெண்ணோடு பேசலாகாது. எனவே, இயேசு ஓர் அறியாத பெண்ணோடு உரையாடியது சீடர்களுக்கு அவதூறாய்ப் புலப்பட்டது (யோ. 4:27).

ஓர் ஆண் தண்ணீர்குடம் சுமந்து செல்ல மாட்டார்; ஏனெனில் தண்ணீர் சுமந்து செல்லுதல் பெண்களின் வேலை. இயேசு தமது சீடர்களைத் தண்ணீர் குடம் சுமந்து வருகிற ஓர் ஆணையும் தொடர்ந்து போக அனுப்பிய போது (மார். 14:13), பாஸ்கா விழாக் கொண்டாட்டமாதலால் தெருக்கள் மக்களால் நிறைந்திருந்தபோதும், அவனைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு வருத்தம் ஒன்றும் இருந்ததில்லை.

மிதியடிகள் கோவிலிலும், வீடுகளிலும், கழற்றப்பட வேண்டும். ஆனால் தொழுகைக் கூடம் கோவிலைவிட தூய்மையில் குறைந்ததென்று காட்ட தொழுகைக்கூடத்தில் அவை எடுக்கப்பட வேண்டாம். இறைவனிடம் வேண்டும்போதும், ஒரு மேலதிகாரியோடு பேசும்போதும் தலை மூடப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் பு.ஏ.சபைகளில் பெண்கள் மட்டும் தங்கள் தலைகளை மூடுதல் வேண்டும். ஆண்கள் மூடலாகாது என்ற நியதி இருந்தது.

10. கல்வி

ப.ஏ. உலகத்தையும், பு.ஏ. உலகத்தையும் பற்றி சிந்திக்கையில், கல்வி முறை மிகவும் கவர்ச்சிகரமானவற்றிலொன்று என அறியலாம்.

யூத சமயத்தின்படி தொழுது கொள்ளுகிறவர்கள் எழுத, வாசிக்க அறிந்தவர்களாயிருக்க வேண்டும். விவிலியத்திலுள்ள கடவுள் வார்த்தையை ஆண் குழுந்தைகள் படிக்கத்தக்கதாக அவர்களது பெற்றோர் அவர்களுக்கு எழுத, வாசிக்கக் கற்றுக் கொடுப்பது மிக முக்கியமானது.

முந்தைய காலங்களில் கற்றுக்கொடுப்பது பெற்றோரின் கடமை; பிந்தைய காலங்களில் தொழுகைக்கூடங்கள் கற்றுக் கொடுப்பதற்குரிய மைய இடம். அங்கே திருச்சட்ட அறிஞர் பலர் சீடர்களுக்குக் கற்றுக் கொடுத்தனர். ஆசிரியர் நாற்காலியில் அமர, சீடர்கள் தரையில் அவர் பாதத்தருகில் அமர்ந்திருப்பார்கள்.

சில புகழ்பெற்ற திருச்சட்ட அறிஞருக்கு கற்றுக் கொடுப்பதற்குரிய வீடு இருந்தது. பல சீடர்கள் ஒவ்வொரு நாளும் அங்கே செல்வார்கள். எருசலேமில் ஆசிரியர் தங்கள் சீடர்களை கோவிலின் தூண்களிடையேயுள்ள பாதைகளில் கூட்டுவார்கள்.

யாவும் தூய திருச்சட்டத்தை மையமாய்க் கொண்டிருக்கும். வாய்மொழியால் அறிவை ஒருவரிலிருந்தொருவருக்குக் கடத்தும்முறை படிப்பில் அழுத்தப்பட்டது. ஆசிரியரது சொந்த வார்த்தைகளைச் சீடர்கள் மனனம் பண்ணவேண்டியதாயி ருந்தது. ஆசிரியர் அதே பொருளை மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்வார். புதிதாகத் துவங்கியவர்கள் அதே வார்த்தைகளை மனப்பாடம் பண்ணும் வரையிலும் மீண்டும் மீண்டும் படிக்க வேண்டியதாயிருந்தது. கற்றுக் கொடுப்பதில் ஏதாவதொன்றைத் தெளிவுபடுத்திக் கொள்ள பழைய மாணவர்களுக்கு அதே பொருள் சிறிது வேறுபாடுகளோடு கற்றுக்கொடுக்கப்பட்டது. எனவே, விவிலியத்திலுள்ள வசனத்தை வாசித்து மனப்பாடம் பண்ணுவதில் அவர்களது கற்றல் அமைந்திருந்தது. அதன் பின்னர் விளக்கம் கொடுக்கப்பட்டது. அதுவும் மனனம் செய்யப்பட வேண்டும்.

மக்களில் ஒவ்வோர் ஆணும் எழுத, வாசிக்கத் தெரிந்தவர் களாயிருக்க வேண்டும். தொழுகைக்கூடத்தினரால் வாசிக்கக் கேட்கப்படுவார். அதற்கு அவர் ஆயத்தமாயிருத்தல் வேண்டும்.

கடவுளுடைய வார்த்தை எபிரேய மொழியிலிருந்தது. ஆனால், அவர்கள் தினசரி பயன்படுத்திய மொழி அரமேய மொழி. ஆகவே, ஒவ்வொரு யூதரும் இரண்டு மொழிகள் அறிந்திருக்க வேண்டும். நாட்டிலிருந்த பழைய கிரேக்க மரபின்படியும், கிரேக்க மொழி அச்சமயத்தில் கல்வியறி

ஞர்களுக்குரிய மொழியாய் இருந்த காரணத்தாலும், பலர் சிறிது கிரேக்க மொழியும் அறிந்திருந்தனர். அலுவலர்கள் கிரேக்க மொழி பேசினார்கள். உரோமைப் பணித் துணைவர்கள் அரமேய மொழியை பயன்படுத்தவே மாட்டார் கள். தங்கள் போர்வீரருக்குரிய மொழியாகிய இலத்தீன் மொழியையும் மிக அரிதாகப் பேசினார்கள். பொந்தியுபிலாத்து கிரேக்க மொழிமட்டும் பேசினார். விசாரணையில் அவர் இயேசுவோடு பேசியது கிரேக்க மொழியாயிருந்தது. இயேசு வுக்குக் கிரேக்க மொழி தெரிந்திருந்தது இயற்கைதான். இயே சுவின் போதனை துவக்கத்திலிருந்தே ஓரளவு கிரேக்க மொழி யிலிருந்ததென்று நம்ப ஏதுவுண்டு. அவரது சீடர்களில் இருவரா வது கிரேக்க மொழி பேசப்பட்ட இடத்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் பேதுரு, அந்திரேயா என்பவர்களாவர். அவர்கள் கிரேக்க மொழியை நன்கறிந்தவர்கள் என்பது உறுதியே.

இயேசுவும் அவருடைய சீடர்களும் கல்லாதவர்களேயென்று மக்கள் சொன்னதாக நாம் பு.ஏ. இல் (திருத்.4:13) வாசிக்கும் போது அவர்கள் எழுத்தறியாதவர்களென்பது பொருளேயல்ல. இரபிமாரின் கலைக்கழகத்தில் இரபிமார்களிடமிருந்து பயிற்சி பெறவில்லை என்பதுதான் அதன் பொருள். பல்கலைக்கழக மட்டத்திற்கு அவர்கள் வரவில்லை. பவுல் பண்டிதர் தரத்தில் பயிற்சிபெற்ற ஓர் இரபி. ஒரு தொழிலுக்குப் பயிற்சி கொடுப்பது தந்தையின் கடமை. மகன், சாதாரணமாக தந்தையின் தொழிலையே பின்பற்றுவான். திருச்சட்டத்தைக் கற்றுக்கொடுக்க பயிற்சி பெற்றவர்களும், இரபிமாரும் ஒரு தொழிலையும் கற்றிருக்கவேண்டும். பவுல் தன் தந்தையைப்போல கூடார வேலை செய்கிறவராயிருந்தாரென்பது நமக்குத் தெரியும்.

11. வாழ்க்கையின் காலவட்டம்

ப.ஏ.இல் குழந்தைகள் ஒரு நற்பேறாக எண்ணப் பட்டிருந்தனர். எனவே, பல பிள்ளைகளை முக்கியமாகப் புதல்வரை விரும்பினார்கள். பிறப்பை ஒட்டிப் பல விதிகளும் சடங்குகளும் இருந்தன. புதிதாகப் பிறந்த யூதக் குழந்தை நீரில் நீராட்டப்பட்டு உப்பினால் உரசித் தேய்க்கப்பட்டது; பின்பு, கந்தைத் துணிகளில் பொதியப்பட்டது. இவ்வாறு கந்தைத் துணிகளில் பொதிவதற்குக் காரணம், தொடக்கத் திலேயே கை, கால்களைத் தடுத்து வைக்காவிடில் அவை நேராகவும் பலமுள்ளவைகளாகவும் வளராது என்பதே

ஆண் பிள்ளைகளுக்கு எட்டாம் நாள விருத்தசேதனம் செய்யப்பட்டுப் பேரிடப்படும்; இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் தாயின் பாலிலேயே பிள்ளை வளரும். கூடிய சீக்கிரத்திற்குள், அதாவது ஆறு வயதிற்குள், ஆண் பிள்ளைகள் படிப்பைத் தொடங்குவார்கள். பெண்கள் வீட்டிலேயே கற்றுக் கொடுக்கப்பட்டனர். ஏறத்தாழ, பன்னிரண்டு வயதில் தந்தை திருமணத்திற்கு ஒழுங்கு செய்யவேண்டும். விதுரனில்லாவிட்டால் திருமணஞ்செய்கிறவன் பதினெட்டு முதல் இருபது வயது வரை இருக்கலாம்.

மாண்டவர் மனைவியை அவரின் உடன்பிறந்தார் மணந்து கொள்ளும் திருமணமானால் பெண்ணுக்கு வயது கூடினதா யிருக்கலாம். இத்தகைய திருமணம் கணவர் பிள்ளை யில்லாமல் இறந்தால் அவருடைய சகோதரர் விதவையாய் விடப்படவரை மணஞ்செய்யலாம். அவருக்குச் சந்தானம் கொடுப்பதே, அதாவது, ஒரு மகவை கொடுப்பதே அதன் நோக்கம்.

சாதாரண நிலைமைகளில் நியமிக்கப்படுதல் இரண்டு சாட்சிகளுக்குமுன் செய்யப்பட்டது. சீதனம் கொடுக்கப்பட்டு, மோதிரங்கள் ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கியபின் ஆசி கூறப்பட்டது. இதற்குப்பின், இருவரும் சட்டப்படி திருமணஞ் செய்தவர்களாக எண்ணப்படுவர். நியமிக்கப்பட்டவர் இறந்துவிட்டால், பெண் விதவையாகிவிடுவார். சட்டப்படி ரத்து செய்தல் உண்டாகலாம். பெண் வேறொருவரோடு சேர்ந்தால் அவர் விபசாரி என்று எண்ணப்பட்டார். திருமணத் திற்குமுன் கணவர் இறந்தால், அவருடைய உடன்பிறப்பு அவரை மணஞ்செய்யும் முறை கடைபிடிக்கப்பட்டது.

சில காலத்திற்குப்பின்னரே மறுதிருமணம் நடைபெற்றது சாதாரணமாக, ஆறு மாதத்திற்குப்பின் அது நடைபெறும். மணமகள் அவருடைய தந்தை வீட்டிலிருந்து மணமகனின் தந்தையின் வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவ்வேளையில் ஓர் ஊர்வலமும், அத்துடன் நடனமும், ஆடல்-பாடலுமிருந்தன.

அதற்குப்பின், கணவரது குடும்ப வீட்டில் திருமண விருந்து நடைபெற்றது. உணவும் திராட்சைப்பிழிவும் அளவில்லாமல் கொடுக்கப்பட்டது. அவ்வேளையில் திராட்சைப்பிழிவு குறைவுபட்டால் அது பெரும் அவமானமாக எண்ணப்பட்டது. மணமகனின் தோழர் செய்த முக்கியமான பங்கிருந்தது; முதலாவது, மணமகளை மணமகனிடம் கொண்டு செல்லுவார்; பின்பு, மண அறைக்கு வெளியே நின்று மணமகள் கன்னிமை கெடாதவள் என்பதாகச் சான்று பகருவார்; மணமகளது மகிழ்ச்சியான ஆரவாரத்தைக் கேட்டால் எல்லாம் நன்மையாய் முடிந்ததென்பதை அறிந்து கொள்வார்.

பெண் கன்னிமை கெட்டவள் என்று அறியப்பட்டால் மணமகன் அடுத்த நாள் காலையில் வழக்கு மன்றத்தில் முறையிடுவார். வழக்குமன்றங்கள் வெள்ளிக்கிழமைகளில் கூடினமையால் கன்னியரோடுள்ள திருமணம் வியாழக் கிழமையன்று நடத்தப்பட்டது. ஏனெனில், மணமகனின் தோழர் சான்று பகரவேண்டியதிருந்தது (யோ. 3:23 முதலுள்ள வச னங்களைக் கவனிக்க). ஒருவர் இறந்த தம் சகோதரரின் விதவையோடோ அல்லது வேறு ஒரு விதவையோடோ, திருமண ரத்து செய்யப்பட்ட பெண்ணோடோ செய்யப்படும் திருமண மானால் வாரநாள் எதிலும் செய்யப்படலாம்.

ஆணுக்கு மனைவியைத் தள்ளிவிடுதல் மிக எளிதாயிருந்தது. இதற்காக அவர் தள்ளுதற் கடிதமொன்றை எழுதித் தம் மனைவிக்குக் கொடுக்க வேண்டும். அதில் அப்பெண் வேறு எவருக்கும் வாழ்க்கைப்படலாமென்பதை அவர் மனம் ஒப்பி அறிக்கையிடுவார்; திருமண ரத்து செய்யக் காரணம் இருத்தல் வேண்டும். ஆயினும், சில தரத்தாருக்குள் மனைவி வடிசாற்றைக் களைதல் கூடப் போதுமான காரணமாயிருந்ததென்று சொல்லப்பட்டது. சாதாரணமாக, யூதர் திருமண ரத்து செய்யவில்லை. மனைவி தானாக தள்ளுதற் கடிதம் கொடுக்க முடியாது. ஆனால் சில தருணங்களில், வழக்குமன்றத்தின்மூலம் கணவன் தள்ளுதற்கடிதம் கொடுப்பதற்குத் தூண்டலாம்.

இறுதியாக, மக்கள் இறந்தபொழுது, உடனே இறுதிச் சடங்கு செய்யப்பட்டது. உடல் கழுவப்பட்டு, எண்ணெய் பூசப்பட்டு, சிறப்பான ஆடைகளால் சுற்றப்பட்டது. பொதுவாக, யூதருக்குள் அடக்க வழிபாடு நடத்தப்படவில்லை; கூலிக்காக அழுது புலம்புகிறவர்கள் இருந்தனர். உடல் ஒரு கல்லறைக்குள் வைக்கப்பட்டது. யூதர் பலரும் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வைத்தனர், சிலரோ அப்படி நம்பவில்லை.

துணை நின்ற நூல்கள்

1. Bertholet, Alfred, *A History of Hebrew Civilization*, George G. Harrap and Co., 1926.
2. Dodd C.S. *History and the Gospel*, London Nisbet & Co. 1938.
3. Lofts, Norah, *Women in the Old Testament*, New York MacMillan Co., 1949.
4. Heaton, E.W., *Every day life in Old Testament Times*, London, B.T. Batsford Ltd., 1956.
5. De Vaux R., *Ancient Israel*, London, Longman and Todd, 1961.
6. G.J. Wenham, *The Book of Leviticus*, Nico, 1980.

9

விவிலிய ஒழுக்கவியல்

டேவிட். காலப்

1. முன்னுரை

விவிலிய ஒழுக்கவியலைப் பற்றி இரண்டு வகையில் ஆராயலாம். ஒன்று. ப.ஏ. ஒழுக்கவியலிலும். பு.ஏ. ஒழுக்கவியலிலும் காணப்படும் சிறந்த பகுதிகளின் பொதுவானத் தன்மையைக் காண்பது. இதில் வரலாற்றுச் சூழ்நிலையும் வளர்ச்சியும் பற்றியக் கேள்விகள் எழுப்பப்பட மாட்டா. கிறிஸ்தவர் ஒருவர் சிறந்த ஒழுக்கவியல் என்று கூறும்போது, தமது கட்டளைக் கல்லாக இயேசு கிறிஸ்துவைக் கொள்வது இயல்பேயாகும்.

இரண்டாவது வகை. பெரும்பாலும் பகுத்து ஆராய்வதாகும். இது வரலாற்று ஆய்வு. அமைப்பு ஆய்வு முதலான கருவிகள் மூலமாய். விவிலிய ஒழுக்கவியலின் வளர்ச்சியைக் காணும் முயற்சியாகும். இதில் வெவ்வேறு வரலாற்றுச் சூழ்நிலையும். சமுதாயச் சூழ்நிலையும் யூத சமயத்து ஒழுக்கவியலையும். கிறிஸ்து சமய ஒழுக்கவியலையும் எவ்வாறு பாதித்துள்ளன என்பது இயன்றமட்டும் எடுத்துக் காட்டப்படும்..

இக் கட்டுரையின்கண் இந்த இருவகைகளும் எடுத்துக் காட்டப்படுகின்றன. முன்னது முகவுரைப் பகுதியிலும், பின்னது பகுத்து ஆராய்வது பற்றிய வளர்ச்சியிலும் அடங்கியுள்ளன.

2. பொதுப்படையான நோக்கு

நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டுமென்ற கேள்விக்கு விடையாக, யூத சமய வழிபாட்டு வாசகமாகிய ஷெமாவும் (shema - இணை. 6:5), இலேவி. 19:18உம், திருச்சட்டத்தின் தொகுப்பாக லூக். 10:27 இல் இணைக்கப்பட்டுள்ளன. இந்த விடை திருச்சட்ட மாணவரும், திருச்சட்ட அறிஞருமாகிய சமயத் தலைவர் ஒருவரால் தரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இயேசுவின் காலத்திலேயே இவ்விரு வசனங்களும் யாரோ ஓர் இரபியினால் இணைக்கப்பட்டிருந்தன. இயேசு தான் இந்தத் தொகுப்பினைச் செய்தார் என்பதற்கில்லை. சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது யாதெனில், தன்னலமற்ற அன்புதான் எல்லாச் செயல்களின் நோக்கமாக வேண்டும் என்று இயேசு உறுதியுடன் வற்புறுத்தியதுதான் (லூக். 10:29-37, 42 அ). பவுலடியாரும் இதனைச் சரியாக 1 கொரி. 13 இலும் உரோ. 13.10 இலும் நினைப்பூட்டுகிறார்.

விவிலியத்தில் ஒழுக்கவியலும் சமயமும் பிரிக்கப்படாதவையாக உள்ளன என்று வற்புறுத்துவது மிகையாகக் காணப்படலாம் (திருப். 51:18,19). மனு உருவேற்புக்கு முன்பே கடவுள் உயிருள்ள ஆளாக அறியப்பெற்றுள்ளார். மெய்யியற் கருத்துப் பொருளாக அல்லர். அவர் உடன்படிக்கை செய்யும் கடவுள். அவருடைய விதிகள் தம்மால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்கள் தம்மைச் செம்மையாய்ச் சேவிக்க அவர்களுக்கு அவர் அளித்த ஈவேயாகும். இறைவாக்கினர் அடிக்கடி வற்புறுத்தியபடி, ஒழுக்கத் தூய்மையும் சடங்குத் தூய்மையும் ஒன்றுதான் (எசா. 5:1-30; 58:1-9; ஆமோஸ். 5:18-24; மீக. 6:6-8). நீதி. இரக்கம். அன்பு. ஆகிய கடவுளின் இயற்கைப் பண்புகள் அவருடைய சாயலில் படைக்கப்பட்ட மனிதரிடத்தும் வேண்டப்படுகின்றன. தெய்வீக அன்பு மானிட அன்பை நாடித்தேடுவதாக ஓசேயா குறிப்பிடுகையில், அவர் கிறிஸ்தவ உட்கருத்தைக் கிட்டத்தட்ட எட்டிப்பிடிக்கின்றார் என்று கூறலாம் (ஓச. 2:14-16; 6:4-6; 11:1-4.8.9).

இஸ்ரயேலுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள கடவுளின் நீதியைப் பற்றி அறிந்தாலொழிய, இயேசு கிறிஸ்துவில் ஏற்பட்ட உடன்படிக்கையின் நற்செய்தியை முற்றிலுமாகப் புரிந்து கொள்வது ஓரளவிற்கிடமாகும். கடவுளின் அன்பை உதறித்தள்ளிவிட்டு, அவருடைய திருவுளத்திற்குக் கீழ்ப்படியாமை பாவம் எனப்படும். கடவுளுடைய இறைமையைக் கைப்பற்றிக் கொண்டு, உடன் மக்களோடு செம்மையான தொடர்புகொள்ள இயலாதிருத்தல் மானிடருக்கு வழக்கமாகிவிட்டது. அவர்களின் கீழ்ப்படியாமையும், சிலை வழிபாடும் அவர்களை கடவுளினின்றும் பிரித்துவிடுகின்றன (தொட. 3:8; எரே.13:15 17; 3:11-13; சிறப்பாக உரோ. 1:18-32 பார்க்க). நன்மை தீமைகளைப் பற்றிய அவர்களின் அறிவும் அவர்களுக்கு பயன்படாது (தொட. 3) அவர்கள் இன்னும் தன்னலம் உள்ளவராய் இருப்பதால், அவ்வறிவு அவர்களின் போராட்டத்தை மிகுதிப்படுத்து கிறது. அவர்கள் கடவுளோடு ஒன்றுபட்டு இராததினாலே, தம் மீட்பிலே கருத்துள்ளவராய் தற்பெருமையுடன் நன்மை செய்கிறார்கள். ஆனால் பிறரிடத்துத் தன்னலமற்ற, அளவு கடந்த அக்கறைக் கொள்ளுவதுதான் ஒன்றுபட்ட மனிதருடைய அடையாளமாகும் (மத். 7:21-25; லூக். 10:25-42). இப்படிப்பட்ட வாழ்க்கை நடத்துதற்குரிய ஆற்றல் நம்மிடம் இல்லை. ஆனால் கிறிஸ்துவில் ஓர் அருள் ஈவாக அதனை கடவுளினிடமிருந்துப் பெற்றுக் கொள்ளலாம் (2கொரி. 5:16- 21). கிறிஸ்துவோடு இணைந்து வாழ்வது அல்லது நம்மில் கிறிஸ்துவைக் கொள்வது கடவுளோடு ஒன்றுபடுவதாகும் (2 கொரி. 2:16), மக்களை மீட்கும்படியாக வாழ்வதற்குரிய ஆற்றலைப் பெறுவதுமாகும் (கலா. 5:13-26).

ப.ஏ., பு.ஏ. ஆகிய இரண்டிலும் ஒழுக்கவியல் சமுதாயத் தொடர்புடையது. இஸ்ரயேல் மக்கள் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். தனி ஆள்களல்ல. கூட்டு நலன், தனி மனிதர் ஒருவருடைய கீழ்ப்படியாமையினாலே அச்சுறுத்தப்படுகின்றது (இணை. 7:6-16; 28:58.59; யோசு. 7:2-26; திருத். 4:32; 5:12; 1 கொரி. 5: 1-3). பற்றுறுதி கொண்டோர் எல்லோரையும் குறித்த பொறுப்பு விவிலியத்தில் எரேமியாவிலிருந்து முக்கிய மடைந்து வரும் தனியார் பொறுப்புடன் ஈர்ப்பு நிலையில் எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டும் (எரே. 31:29-34). தனி ஒருவர் நற்செய்தியை அறிந்து கொள்வதில் அல்லது தள்ளுவதில் அவருடைய மீட்பு அடங்கியிருக்கிறதென்று நற்செய்தி நூல்களில் அடிக்கடிக் கூறப்படுவதால், பாதிக்கப்படும் சமுதாயத்தில் எழும் சிக்கலைப் புறக்கணிக்கும் ஒரு போக்கு நமக்குள்

ஏற்படுகிறது. பிலிப்பி நகரத்துச் சிறைச்சாலைக் காவலன் கதை, தனி மனிதர் ஒருவரையும் அவர் குடும்பத்தோடு ஒன்று பட்டுள்ளதையும் நமக்கு நினைவூட்டுகிறது (திரு. 16:33,34).

நீதியைப் பற்றிய கருத்து சிறப்பாகப் ப.ஏ. இல் சமுதாய உணர்வோடு பிணைக்கப் பெற்றுள்ளது. இது இணைச்சட்ட பதிப்பாசிரியரால் மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. அவர், ஒரு நாட்டின் ஆக்கம் கீழ்ப்படிதலினால் உண்டாகிறது; அதன் அழிவுகள் பாவத்தின் தண்டனை என்கிறார். இக் கொள்கையினை நாடுகளின் வரலாறு எடுத்துக்காட்டுகிறது. அடிக்கடி இவை ஒரு நாட்டின் அரசனுடைய வாழ்க்கையில் மையங்கொண்டுள்ளன. பிற்காலத்து இறைவாக்கினர் தனிஆன்மா மீது சற்று கவனம் செலுத்தியபோதிலும் (எசே. 18) ஒரு மக்கள் இனத்துக்கே, அல்லது ஒரு நாட்டுக்கே பொதுப்படையாக முதன்மைத் தரப்பட்டுள்ளது (எசா. 25:8; எசே. 37:1-4; ஒச. 13,14). இஸ்ரயேலருடைய நாட்டு உணர்வும், தாங்கள் தனிச் சிறப்புடைய மக்கள் என்ற உணர்வும் உடன்படிக்கைக் கருத்தினால் வலுப்பெறுகிறது. அவ் உடன்படிக்கை ஒற்றுமையின் ஆதாரமாகவும், தனி மனிதருடைய நடத்தைக்குத் துணையாகவும் ஒரு சேர அமைகிறது. கடவுளுக்கும் அவரால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் விதிகள் பத்துக் கட்டளையில் தொகுக்கப்பட்டுள்ளன. இந்தப் பத்துக்கட்டளை சமயப் பற்றுமையிலிருந்து ஒழுக்கவியலைப் பிரிக்க முடியாது என்பதனைத் தெளிவாய் எடுத்துக்காட்டுகிறது. பற்றுறுதி, பயபக்தி, சேவை இவைகள் வேண்டப்படுகின்றன. விடுதலைப் பயணம் 20ஆம் அதிகாரத்திலுள்ள ஐந்தாம், ஒன்பதாம் கட்டளைகளில் மனிதருக்குச் செய்யும் கடமையை எடுத்துக்காட்டுவதன் மூலமாய் கடவுளுக்குச் செய்யும் கடமை விவரிக்கப்பட்டுள்ளது. ப.ஏ.இன் தவிர்க்கமுடியாத உண்மை யாதெனில், நாம் ஒருவரோடொருவர் நடந்துகொள்ளும் விதத்தினால் கடவுள் இன்பமோ, துன்பமோ அடைகிறார் என்பதேயாம். இறைவாக்கினர் ஒழுக்கக்கடமைகள் புறக்கணிக் கப்படுவதைப் பொதுப்படையாகக் கண்டிக்கிறதும் உண்மைதான் (எசா. 1:11; எரே. 6:20மு; 7:21மு; ஒசே.6:6; ஆமோ.5:21மு.).

ஆனால், கடவுளுடன் நேர்மையாயிருப்பதென்பதில் மனிதருக்கு நீதி செய்து இரக்கம் காட்டுவது மட்டுமன்றி கடவுளைச் செம்மையாக வழிபடுவதும் அடங்கியுள்ளது என்னும் உண்மையினை நாம் புறக்கணிக்கக் கூடாது (விடு. 20:23; திருப். 15:24). நேர்மையற்ற மனிதர் ஒருவரது வழிபாடு தெய்வ நிந்தனையாம் (இறைப்பழிப்பேயாம்).

நம்மால் எதிர்பார்க்கப்படும் இவ்வித நடத்தை, ப.ஏ.ஐப் பரவலாகப் படிப்பதினின்று மிகத் தெளிவாகப் புலனாகிறது. ஏழைகளுக்கும் அன்னியருக்கும் இரக்கம் காட்டுவது (அர. 10:18மு; 15:7-11; 24:17மு; யோபு. 31:6மு; திருப். 41:1; எசா. 58:6மு; எரே. 7:5மு; 22:3; செக். 7:9). அங்கவீனமுடைவர்களுக்கு இரக்கம் காட்டுவது (இலேவி.19:14), பெற்றோருக்கும், முதியோருக்கும் மரியாதை செலுத்துவது (விடு.20:12; இணை. 15:16; இலேவி. 19:32) எல்லாம் இதில் அடங்கும். முதியோர் தங்கள் பிள்ளைகளுக்குப் பொறுப்பாளிகள்; சிறப்பாக அவர் களுக்குக் கல்வி புகட்டி, வழிகாட்ட வேண்டும் (விடு.13:8,14; இணை. 4:9; 6:7,20-25; 11:9; 31:12மு; 32:46; திருப்.78:5மு.).

தொடக்கத்தில் ஆயர் சமுதாயமாக இருந்து, பின்னர், பெரும்பாலும் உழவரான சமுதாயத்தில், விலங்கினங்களைச் செம்மையாய் நடத்துவதில் அக்கறை காட்டப்படுகிறது (விடு. 23:11; இலேவி. 25:7; இணை. 22:4,6; 25:4; திருப். 104:11மு; 148:10; நீதி. 12:10; யோனா.4:11).

நீதிமொழிகள் நூலில் நற்குணங்கள் கூறப்பட்டுள்ளன. சுறுசுறுப்பு (6:6-11), தூய்மை (9:6), ஈகை (14:21), உண்மை (17:7), முன்யோசனை (24:27) என்பன 31ஆம் அதிகாரத்தில் நற்குணமுள்ள மனைவி பற்றிய விவரிப்பு காணப்படுகிறது. ஒரு நல்ல அரசர் 2சாமு. 23:3 முதல் அடங்கிய பகுதியிலும் திருப். 45,72இலும் சித்தரிக்கப்பட்டுள்ளார். ஒரு நாட்டின் வளம் அந்நாட்டின் அரசருடைய குணவியல்போடு பிணைக்கப் பட்டுள்ளது என்பதற்குப் பின்னது சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

அருளைப் பற்றிய கோட்பாட்டினால் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் ப.ஏ. ஐயும், பு.ஏ. ஐயும் பிரித்துக் காட்டுவதற்குரிய போக்கு தென்படலாம். எல்லா மக்கள் இனத்தினின்றும் அற்பமான ஒரு மக்கள் இனத்தைத் தேர்ந்தெடுத்து அத்துடன் உடன்படிக்கை ஏற்படுத்த முன்வந்த கடவுளின் அருளை ஏற்றுக் கொள்வதையே யூத சமயமும் வலியுறுத்தியது. திருச்சட்டம் கொடுங்கோன்மையுள்ள ஒரு கடவுளை மகிழ்விக்க உருவாக்கப் பட்ட மானிட சூழ்ச்சித் திறன் அல்ல, தமது மக்கள் தம்மைச் செவ்வையாய்ச் சேவிக்கும் பொருட்டு அருளப்பட்ட இரக்கமுள்ள கடவுள் ஒருவருடைய ஈவேயாகும். ப.ஏ. முழுவதிலும் விடாது வற்புறுத்தப்படுகிற பொருள் கடவுளுடைய பொறுமை, நீடிய சாந்தம், தமது மக்கள் அடிக்கடிக் கீழ்ப்படியாதிருந்தும் அவர் அவர்களிடம் காட்டும் இடையறா அன்பு என்பதேயாம். அது ஓசயாவின் நூலில் உச்ச நிலையை அடைகிறது. கீழ்க்காணும் வாக்கியங்களிலும் அது காணப்படுகிறது. திருப். 25:6,7; 103:6-14; எசா. 63:9; எரே. 3:12 -15; 31:3; 33:7-9; மீகா. 7:18-20.

அப்படியானால் ப.ஏ. ஒழுக்கவியலின் சிறப்புதான் என்ன? மத். 5:17இலும், உரோ.3:31இலும் ப.ஏ. உட்கருத்துக்களின் சிறந்தப்பகுதி மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது. ஆனால் கடவுளோடு நேர்மையாயிருக்க நாடுபவர்களுக்கு இப்போதைய சூழ்நிலை முந்தயதைக் காட்டிலும் சிறந்தது என மத்தேயு கூறுகின்றார். ஏனெனில் முந்தையதின் உறுதிமொழி பிந்தையதில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மத். 11:11; 13:17,35,52; மார். 2:21,22இல் கூறப்பட்டுள்ள புதுத் துணி, புதுத் திராட்சை ரச தோல் பைகளின் உவமைகள் இயேசுவின் போதனை ப. ஏ. இலிருந்து தீவிரமாகப் பிரிந்து போவதைக் குறிக்கின்றன. ஆனால், கிறிஸ்துவில் அடையப்பெறும் புது வாழ்க்கையின் உச்சமான சாத்தியங்களைப் ப.ஏ.இன் சமய உணர்வின் மிகைப்பாட்டினின்று நேர்மையற்ற முறையில் வேறுபடுத்திக் காட்டுவதில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். இயேசு உண்மையிலேயே அம்மிகைப்பாட்டினை எதிர்த்தார். மக்களை மீண்டும் உண்மையான நம்பிக்கைக்கு அழைப்பதில் முழுக்குநர் யோவானோடு அவருக்கு ஓரளவு உடன்பாடு உண்டு. எனினும், திருச்சட்டம், உடன்படிக்கை ஆகியவற்றின் மெய்க்கருத்தை அவர் தீவிரமாகப் புரிந்துகொண்டது தனிச் சிறப்புடையது. கிறிஸ்துவின் நுண்ணறிவு முற்றிலும் புதுமையன்று என்று சிலர் கூறலாம். எனினும் அந் நுண்ணறிவை வற்புறுத்தியதில் அவர் காட்டிய உறுதிப்பாடு புதுமைதான் (யோ. 13:34,35).

திருமுழுக்குயோவான் யூத சமய எல்லையைக் கடந்து அப்பாற் செல்லும்போது கிறிஸ்துவின் மனப்பாங்கு உலகம் முழுவதையும் கவரும் இயல்பினை மிகவும் தெளிவாகக் கண்டு கொள்ளத்

தொடங்குகிறோம். ப.ஏ. ஒழுக்கவியல் பற்றி நாம் இது வரைக்கும் சொல்லியிருப்பது இஸ்ரயேலர் சமுதாயத்திற்கு மட்டும்தான் பொருத்தமுடையது. ஆனால் இயேசு தமது திருத்தொண்டின் பொருளையும், போக்கையும் அந்த வாசகங்களில் கண்டார். எடுத்துக்காட்டாக எசா. 49:1-6இல் உள்ள பாடுபடும் தொண்டரைப் பற்றிய வாசகங்களையும் 61: 1, 2இல் உள்ள இறைவாக்கையும் கூறலாம். இவைகளும், ரூத், யோனா என்னும் நூல்களும் அந்நியர், பிற இனத்தார் ஆகிய மற்றவர்கள் மீது அக்கறை கொள்ளும் சமய இயல்பினைச் சுட்டுகின்றன (லூக். 19:1-10; சகேயு). யோ. 13:34இல் காணப்பெறும் ஒருவரில் ஒருவர் அன்பு கூர வேண்டும் என்னும் புதிய கட்டளை இறைப்பற்று கொண்ட குடும்பத்தாருக்கு மட்டும்தான் பொருந்தும் என்ற கருத்து புரிந்துகொள்ளக் கூடியதே. ஆனால் உண்மை அனுபவத்தில் கிறிஸ்துவில் அனுபவிக்கப் பெறும் கடவுளின் அன்பு, பேதுருவும் மற்ற திருத்தூதுவரும் கண்டுகொண்டபடி எல்லை கடந்து சென்றது (திருத். 10:34,35). இதனையே பவுலும் தொடர்ந்து அறிவித்தார்.(எபே. 2:13-22).

புதிய திராட்சைரசத்தைப் பழையத் தோல்பைகளில் சேர்த்து வைக்கமுடியாது என்னும் கூற்றை மறுத்துரைப்பவர் போன்று எபிரேயத் திருமுக ஆசிரியர், திருக்கோவிலில் நடைபெறும் யூத சமய அனுபவத்தை இணைத்துக்காட்ட பெருமுயற்சி செய்துள்ளார். எனினும் அவருடைய இலக்கிய வெற்றி, பழைய முறைகள் புதிய மெய்ம்மையினைத் தம்மிடையே திருப்தியாக அடக்கிக்கொள்ள முடியாது என்பதனைத் தான் மிகத் தெளிவாக் காட்டுகின்றது.

ப.ஏ.ஐயும் பு.ஏ.யையும் பொதுப்படையாக வாசிக்கும்போது மானிடத் தன்மையின் துன்பியல் நோக்குப் பு.ஏ.இல் அதிகமாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். மக்கள் விரும்பினால் தங்களைத் தாங்களே சீர்திருத்திக் கொள்ளலாம் என்னும் கருத்து ப.ஏ.இல் உள்ளது. அங்கே திருச்சட்டம் உண்டு. இறைவாக்கினரும் பேசுகிறார்கள். மக்கள் மனம் மாறிக் கீழ்ப்படியட்டும். அப்படியேதான் முழுக்குநர் யோவானும் கூறினார் (மார். 1:4; மத்.3:7-10); குறிப்பிட்டச் செயல்களுக்குக் குறிப்பிட்ட போதனைகளையும் எடுத்துரைத்தார் (லூக். 3:10-14). மக்கள் திருச்சட்டத்தை அறிந்திருந்தாலும், அறியாதிருந்தாலும், தன்னலமற்ற செய்கைகளைச் செய்யக்கூடும் என்று இயேசு சமநோக்கு நற்செய்தி நூல்களில் குறிப்பிடுகிறார் (10: 33; மத். 25:37-40). எனினும் திருத்த முடியாத அளவுக்குப் பிடிவாதமாகச் சேற்றில் அழுந்திக் கிடப்பவர்களையும் அவர் காண்கிறார் (லூக். 16:29-31). யோவான் நற்செய்தி நூலிலும் திருமுகங்களிலும், மனிதருடைய மடமையும் பாவமும் கடவுளின் அருட்செயலினால் தூய ஆவியினால் ஒளிரச் செய்து (யோ. 14: 15-17; 17:1215), வழிகாட்டி நடத்துகிறார் (உரோ. 8:26,27; கலா. 4:8,9; 5:13-26).

பு.ஏ.இல் மானிடரின் நிலைமையையும் கடவுளுடைய மீட்பின் செயலையும் எடுத்துக்காட்ட வழங்கப்பெறும் சொற்கள் பெரும்பாலும் ப.ஏ.இலிருந்து எடுக்கப்பெற்றவையே. பாவம் என்பது குறிதவறுவது. அது வன்செயல், மீறுதல், மாசுபடுதல், கலகம், அது எங்குமுள்ளது. பாவத்தின் வல்லமைக்குள் அடங்கிய எங்குமுள்ள மானிடரின் நிலைமையை எடுத்துக் காட்டுவதற்கு பவுலடியார் உரோ.3:10 முதலிய வாக்கியங்களில் 10, 14, 36, 53, 140 ஆம் திருப்பாடல்களையும், ஏசா. 59:7,8 ஆகிய வசனங்களையும் மேற்கோள் காட்டுகிறார்.

பாவம் என்பது சமுதாயச் சிதைவுமாகும்; அதன் பலன் மனிதரை மனிதரினின்றும், மனிதரைக் கடவுளினின்றும் பிரிப்பது. சமுதாயத்தின் மேல் வைக்கப்பெற்றுள்ள இப் பெரும் மதிப்பு ப.ஏ.இலிருந்து நேரடியாகப் பெற்றது (திருத். 4:32-5:11). மீட்பு என்பது ஒன்றுபடுவதாகும் (2கொரி. 5:18-21). கடவுளின் அருளைப் பெறுவதாவது கிறிஸ்துவின் ஆன்ம உடலாக அமையும் கிறிஸ்தவர்களுடைய தோழமைக்கு அழைக்கப்படுவதாகும் (எபே. 2:14-22; 1பேது. 2:9,10). புதிய இஸ்ரயேல் என்னும் தொடர்மொழி விளக்கமாக வழங்கப்படா விட்டாலும், அக்கருத்துத் தெளிவாகப் புலப்படுகிறது.

3. பழைய ஏற்பாடு

ஆறாகம ஆசிரியர்கள்: ப.ஏ.இன், சிறப்பாக ஆறாகமத்தின் (தொட., விடு., இலேவி., எண்., இணை., யோசு.,) ஒழுக்கவியல் கீழக் காண்பவைகளால் பாதிக்கப்படுகின்றன.

(அ) பழைய மூலங்கள்: இவற்றிலிருந்து நூலாசிரியர்களும், பதிப்பாசிரியர்களும் எடுத்துக்காட்டுகள் தருகின்றனர். இவை வெவ்வேறு பண்பாடுகள், வரலாறுகள், நில இயல்களினின்றும் தோன்றியுள்ளன.

(ஆ) கடவுளை அறிவது அல்லது வரலாற்று மெய்யறிவு பற்றித் தாங்கள் கொண்டுள்ள வெவ்வேறு கருத்துக்களுக்கேற்ற படி தங்கள் மூலங்களை மாற்றியமைக்கும் நூலாசிரியர்கள், பதிப்பாசிரியர்கள், தொகுப்பாசிரியர்களின் விருப்பங்கள், சில வேளைகளில் ஓர் ஆசிரியரின் விருப்பு வெறுப்புக்கள் அவர் பயன்படுத்தும் மூலங்களுக்கும் மாறுபட்டுக் காணப்படும்.

(இ) இஸ்ரயேலர், கானானியருடைய மரபுகள்:

1. எனினும் சிறப்பாக யாவேயோடு செய்த உடன்படிக்கைக்கும் அதனோடு தொடர்புடைய சமுதாயக் கருத்துக்களுக்கும் பழங்காலத்தில் தரப்பட்ட முதன்மை.

2. அரசியலில் மாற்றங்கள் தோன்றும்போது, இவைகளும் மாறுதல் அடைகின்றன.

(i) கானானியர் தொடர்புக்கு முற்பட்ட இஸ்ரயேலர் பிற்பட்ட இஸ்ரயேலர்.

(ii) பெலிஸ்தியர் நெருக்கடியினால் அரசுகள் ஏற்பட்டன. சாலமோனுக்கு பின்னர் பிளவு ஏற்பட்டது.

(iii) சிறையிருப்புக்கு பிற்பாடு ஏற்பட்ட மீட்பு.

(ஈ) சமயத் தலைவர்களின் அனுபவங்கள்: தனி மனிதக் கோட்பாட்டின் வளர்ச்சி புறப்பொருள் கோட்பாட்டியல், கூட்டு மனிதக் கோட்பாட்டியல் பற்றிய மன நிறைவின்மை.

முதன் முதலாக, மேலே கூறப்பட்டவற்றுக்குச் சில எடுத்துக்காட்டுகள் காண்போம். பைபர் (Peiffer) விவரித்துள்ள (Introduction to the Old Testament) கிரைப் வெல்காவுசன் (Graff-welhausen) மூலக் கொள்கையினை ஏற்றுக்கொண்டால், கீழ்க்காணும் விளக்க அட்டவணையை அமைத்துக் கொள்ளலாம்:

இவ்வட்டவணை, 450 ஆண்டுகளுக்கு மேற்பட்டு 4 பெரும் பதிப்பாசிரியர்கள், தங்கள் மூலங்களை வெவ்வேறாகக் கையாண்டு வந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றது. J இல் உள்ள ஏதோமிய மூலம் ஓரளவு துன்பியல் நோக்குடையது. பண்பாட்டுக் கலப்பில் அது வளர்ச்சியினைக் காட்டுகிறது.

இழிநிலையில் எந்த வித வளர்ச்சியும் அது காண்பதில்லை. அதற்கு மாறாக, பண்பாட்டு வளர்ச்சி, மிகுந்த இழிநிலையையும், வருத்தத்தையும் பிறப்பிப்பதாகத் தென்படுகிறது. ஏதேன், பாபேல் கதைகளில் கடவுள் பொறாமையுள்ள, அடக்கியொடுக்கும் தெய்வமாகக் காணப்படுகிறார். அவர் மானிடரைப் பற்றிக் கருதும்போது, அவர்களின் அறிவைத் திருடுவதாலும், தெய்வங் களைப்போல் ஆவதாகப் பயமுறுத்துவதாலும், அவர்கள் மீது பகைமை கொள்ளுகிறார். மானிடரின் பெருமையும் சிறுமையும் அவர்களுடைய எதிர்ப்போடு தொடர்பு கொண்டுள்ளன.ஏதோமிய ஆசிரியர் அறிவற்ற பணிவைப் பார்க்கிலும் அறிவை நாடுகிறார்; எனவே, ஒரு நாகரிகத்தை ஏற்படுத்த, அறியாத ஓர் இடத்துக்குப் புறப்பட்டுச் செல்லும் காயீனை வியந்து பாராட்டுகிறார். இந்தக் கருத்தின் அறிகுறிகள் பின்னர் யோபிலும் (அதில் கடவுள் மானிடரை எவ்விதக் காரணமுமின்றி வதைக்கலாம்; அவர்கள் தேடும் படைப்பின் அறிவை அவர்களுக்கு மறைத்து வைக்கலாம்), சபை உரையாளரிலும் காணப்படுகின்றன. அளவுக்கு மிஞ்சிய போராட்டத்திலே சபை உரையாளருக்கு தென்படவில்லை (சபை. 3:20; 12:7).

நாம் 'S' என்று குறிப்பிடும் ஏதோமியர், பத்தாம் நூற்றாண்டில் சாலமோன் ஆட்சியில் எழுதியிருக்கலாம். ஆனால் அவர் மிக முந்தைய காலத்து நாட்டுப்புற மரபுகளைப் பயன்படுத்துகிறார். கற்காலத்து ஏதேன் கதை வேளாண்மை மூலம் ஒன்றைச் சுட்டலாம். உழுவன் வறண்ட நிலத்தோடு எழுச்சியுற்றுப் போராடி, சில சமயம் கசப்போடு கதறுகிறான். ஆனால், வெண்கலக் காலத்துக் காயீன் கதை நாடோடிச் சூழ்நிலையைச் சுட்டுகிறது. இதில் இரண்டு வேறுபட்ட கருத்துக்கள் காணப்படு கின்றன. ஒன்று, காயீன் ஒரு கொலைகாரனாக ஒட்டமெடுக்கிறான். நிலம் அவனுக்குத் தன் பலனை அளிக்கவில்லை (தொட. 4:12). மற்றொன்றில் அவன் கூடாரவாசிகளின் பெருமை மிக்க முன்னோனாகக் காட்சியளிக்கிறான் (தொட. 4:17-22). தாங்கள் பழிவாங்கும் வீரச் செயல்களைப் புகழ்ந்துரைக்கும் பெருமிதக் குலத்தினர் அவர்கள் (தொட. 4:23).

மூலம்	உத்தேசக் காலம்	உட்பிரிவுகள்	தனிச் சிறப்பியல்புகள்
J	சு. 850	J^1 & J^2 (S^1 & S^2)	ஏதோமிலிருந்து தோன்றியிருக்கக் கூடிய. பழைய தெற்கத்திய மூலமாகிய S என்பதிலிருந்து Jஇன் பெரும்பகுதி உருவாக்கப்பெற்றுள்ளது
E	சு. 750	தொடக்கமூலமான Eயோடு பிற்காலத்துச் சேர்க்கைகளும் அதிகம் கூட்டப்பெற்றுள்ளன.	E வடக்கே எப்பிராயிமிலிருந்து கிடைத்திருக்கக்கூடும். வட நாடு உச்ச நிலையில் இருந்தபோது எழுதப்பட்டது; நாட்டுப்பற்றை வெளிப்படுத்துகிறது; வெற்றியும், வளமும் கடவுள் தயவின்றி ஏற்படுபவை என்ற உறுதி தென்படுகிறது.
RJE	சு. 650	Jயும், Eயும் பதிப்பாசிரியர் ஒருவரால் இணைக்கப்பெற்றுள்ளன.	
D	சு. 621	621இல் திருக்கோவிலில் கண் டெடுக்கப்பட்ட மோசேயின் ஆக மங்களுக்குக் கருவான. மூலமாகிய Dயோடு, மற்ற இணைச்சட்ட ஆசிரியர்கள் கூட்டியிருக்கிறார்கள்	D எருசலேமியரான ஒரு பூசாரி, பெரிய இறைவாக்கினர் விடுத்த இலட்சிய, நன்னெறிக்குரிய ஆன்மிக வேண்டுகோள்களை, நடைமுறைக்கேற்ற சமயச்சட்டங்களாக, அமைத்திருக்கிறார்.
RJED	சு. 600/500	இணைச்சட்டத்தைச் சிதைவுறாமல் ஒரு பெரும் மூலமாகக் கொண்டு, J,E,D இணைக்கப்பெற்றுள்ளன.	
P	சு. 500/450	தூய்மை விதிகள் (இலேவி.17/26) விடு.35/40 இலேவி.8/10 P^1,P^2 கதைகளையும் விதிகளையும் கூட்டியிருக்கின்றன.	பூசாரிகளின் நலன்களையும், அவர்கள் எழுதிய காலங்களையும் எடுத்துக்காட்டு கின்றன.
RJEDP	சு. 400	இன்றைய ஐந்தாகமத்துக்குரிய (தொட.; விடு.; இலேவி.; எண்.; இணை..) சட்டம் அமைக்கப்பட்டது.	

நாம் J என்று குறிப்பிடும் பதிப்பாசிரியர் S என்னும் தெற்கத்தித் துன்பியல் மூலத்தை இஸ்ரயேல் நாட்டுப் பற்றைக் குறிக்கும் பற்றுமை வாசகமாக மாற்றுகிறார். கடவுள் அப்படிப்பட்டவராகவோ, ஒடுக்குபவராகவோ இருப்பதில்லை. அவர் இந்த மேலான மக்களை முந்தைய காலத்தில் காத்து நடத்தியிருக்கிறார். எதிர்காலப் பெருமைக்கும் அவர் வழிநடத்துவார் (பிந்தைய இணைச் சட்ட ஆசிரியர்கள் J ஐ எடுத்துக்கொண்டு அதிலிருந்து இஸ்ரயேலர் கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் என்னும் துணிச்சலான எண்ணத்தை விடுக்கின்றனர். இந்த எண்ணம் பிற்காலத்தில் மானிடரை யூதர் என்றும் பிற இனத்தார் என்றும் பிரிக்கும் வன்மையான போக்குக்கு வழி வகுத்தது. ஆனால் J இல் அந்நியர்களிடம் அதிக இகழ்ச்சி காணப்படுவதில்லை. எனினும் கானானியர் மீதும் (தொட. 24:3,37), ஏதோமியர் மீதும் (25:27-34), நாடோடிகள் மீதும் (16:12) கொண்டுள்ள வெறுப்புக் குறிகள் காணப்படுகின்றன. அரமேயர்கள் மீது நம்பிக்கை இல்லாவிட்டாலும், அவர்களை வியந்து பாராட்டுகிறது. J இல் பழங்காலத்து பாலைநில ஒழுக்கமுறை தென்படுகிறது. அது ஒரு குலத்தவருக்கோ, இனத்தவருக்கோ தான் பொருந்தும். எனவே அந்நியரை ஏமாற்றுவதும், தாக்குவதும் கண்டிக்கப்பெறவில்லை. எடுத்துக்காட்டாக, ஆபிரகாம் சாராவைக் காக்கும் பொருட்டுப் பொய் சொல்கிறார் (12:9). அவர் சாரா ஆகாரைத் துன்புறுத்த அனுமதிக்கிறார் (16:6). அப்படியே ஈசாக்கும் ரெபேக்காவைப் பற்றிப் பொய் சொல்லுகிறார் (26:7-10). யாக்கோபு ஏசா மீது வலிந்து நயமடைகின்றார் (25:29-34), லாபானை ஏமாற்றிச் செல்வர் ஆகிறார் (30:37-43). மோசே எகிப்தில் ஒருவனைக் கொன்றார் (விடு. 2:11-15). ஏசா ஏதோமியரையும், லாபான் அரமேயரையும் குறிக்கிறார்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

தமது நூல்களில் பழையனவும், புதியனவுமாகப் பல்வேறு மரபு இழைகள் பின்னிக்கிடக்கின்றன என்பதைத் தெரிந்துகொண்டால், சில இடங்களில் யாவே ஏன் அந்நியர்களோடு தொடர்புடைய ஒரு இஸ்ரயேலனைப் போலக் காட்சி தருகின்றார் என்பது நமக்கு எளிதில் விளங்கும். வேறுசில இடங்களில் வழிபாட்டில் வெளிச் சடங்குகள் சிறிதளவே வற்புறுத்தப்பெறுவதும், குறுகிய மனப்பான்மை சிறிதளவே கொண்டதுமான சமயம் ஒன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தொட. 12:17-20இல், பார்வோன் சாராவைக் களங்கமின்றி எடுத்துக் கொண்டதற்கு யாவே அவனைத் தண்டிக்கிறார். விடு. 5:1 இல இஸ்ரயேலர் திரும்பிவரக் கருதாத விழாக் கொண்டாட்டத்திற்கு அவர்களை அனுப்பி வைக்கும்படி பார்வோனிடம் வஞ்சகமாக உத்தரவு கேட்கும்படி மோசேயை அவனிடம் அனுப்புகிறார்.

ஆனால் மறுபுறம், தொட. 12:3ஆ, 12:3 அ, -உக்கு முரண்பட்டு, பல நாட்டு நலனைக் கருதுவதாகத் தெரிகிறது. 18:25உம் பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது. 34:3,7இல் கானானியப் பண்பாடு தள்ளப்பட்டிருப்பதாகத் தென்பட்டாலும் 18:22ஆ, 33அ, J இலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டாலும் மேன்மையான நன்னெறி நோக்கு ஒன்று உடையதாகத் தெரிகிறது. இத்தகைய நோக்கு எரேமியாவுக்கு (627-580) முன்னர்த் தோன்றியது கிடையாது.

ஆமோசுடைய காலத்துக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பு எழுதப்பட்ட J தனது மூலத்துக்கே மாறுபட்டுக் காணப்படுகிறது. தொட. 12:7; 13:8; 26:25இல் ஆபிரகாம் வேள்விமேடைகளைக் கட்டுகிறார். 21.33இல் மரம் ஒன்றை நடுகிறார்; ஆனால் அவைகளில் வேள்வியிடவில்லை. உண்மையிலேயே வழக்கத்திலிருந்த விலங்கு வேள்விக்குப் பதிலாக இறைவேண்டல் ஏறெடுக்கப்படுகிறது (விடு. 13:13,15; 20:24; 30:20).

வரலாறு Jஐச் சில கேள்விகளால் திணற வைக்கிறது. ஆதாம் ஏவாளுடைய கீழ்ப்படியாமையே எல்லாத் துன்பத்திற்கும் காரணமாகும் எனக் கொள்வது சுவையானக் கொள்கையாகலாம். ஆனால் போரின் கொடுமைகள் அதனோடு அடிக்கடிப் பொருந்துவதில்லை (1சாமு. 11:2; 27:9 பார்க்க). தொட. 18:25இல் நீதியரை தீயோருடன் அழிக்கக்கூடாது என்னும் நயவுரையைக் காண்கிறோம் (யோபு 9:22ஐயும், சபை 8:14 ஐயும் ஒப்பிடுக). விடு. 7:3 இல் பார்வோனுடைய மனத்தைக் கடினப்படுத்தியவர் கடவுள் என்றால், பாவங்களுக்கு தொடக்க காரணம் கடவுளேயாம். இவை திரும்பத் திரும்பத் தோன்றும் புதிர்கள் (எசே. 20:25,26ஐயும், உரோ.1:24 மு.ஐயும் ஒப்பிடுக). இருந்தபோதிலும் கடவுளுடைய வாக்குறுதிகளை நம்பி, அவருக்குக் கீழ்ப்படிவதே சரியான ஒழுக்க நெறியின் மனப்பாங்காகும் என்பது J யின் திடமான கூற்றாகும். ஆபிரகாம் ஒரு மாதிரி இஸ்ரயேலர். கடவுளை நம்புவதில் அவர் எல்லாவற்றையும் இழக்கிறார். அதற்கு மாறாக இஸ்ரயேலர் பாலைநிலத்தில் முறுமுறுக்கவும் தயங்கவும் செய்கின்றனர்.

J யைப்பற்றி இந்தவிதமான ஆராய்ச்சி தலைமுறை தலைமுறையாகப் ப.ஏ. ஒழுக்கவியலை உருவாக்கிய சில அடிப்படையான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறது;

1. இஸ்ரயேலரின் விதி யாவேயின் கையில் உள்ளது; அவர்களோடு அவர் உடன்படிக்கை செய்திருந்தார். அவர்களை முன்னிட்டு அவர் வரலாற்றில் குறுக்கிட்டார் என்ற நம்பிக்கை J யினால் நன்கு நிறுவப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கை தொடர்பு கடவுளுக்கும் உடன்படிக்கைச் சமுதாய அங்கத்தினரிடையேயும் உண்மையாயிருக்கும் கடமைக்கும் ஆதாரமாயிருக்கிறது.

2. சமூக ஒற்றுமையுணர்ச்சி - சமுதாயப்பொறுப்பு- இவற்றின் ஒழுக்கவியல், அவ்வுடன்படிக்கை உரிமையின் ஒரு பகுதியாகும். இது அந்நியர்களுக்குப் பொருந்தாது. இது அவர்கள் கானானில் குடியேறுமுன், அரைகுறை நாடோடி இனத்தினராக பாலை நிலத்தில் பெற்ற அனுபவத்திலிருந்து தோன்றியிருக்கலாம்.

3. ஆடு மாடுகளை மேய்த்துத் தண்ணீர் காட்டும் உரிமைகளைப் பற்றிய உடன்படிக்கைகளும் ஏற்பாடுகளும் இத்தகைய குலத்தினருக்குத் தேவையே; மேலும் ஆயர்களாலே கொண்டாடப்படும் உரிமை, குடியாட்சி இவற்றைப் பற்றிய உணர்வினை அனுபவிக்காத, நிலத்தோடு கட்டுண்ட உழவர்களைப் பார்க்கிலும் தாங்கள் மேம்பட்டவர்கள் என்று கருதுவது இப்படிப்பட்ட மக்களுக்கு இயல்பேயாம் (தொ.நூ. 4:3-5).

4. சீர்திருத்தும் இறைவாக்கினர் இஸ்ரயேலரை அடிக்கடி தெளிவான பாலைநிலத்துக் குடியாட்சிக்கும் சமயத்திற்கும் திரும்ப அழைப்பதாகத் தொகிறது (ஆமோஸ். 2:6-16). பிந்தைய காலமாகிய கி.மு. 6 ஆம் நூற்றாண்டிலேயும் இம் மரபுகளை விடாது கைக்கொள்ள முயலும் பகுதியினரும் இருந்தனர் (எரே. 35 - ரேகாபியர்).

இந்தப்பாலைநில ஒழுக்கமும், உடன்படிக்கைச் சமுதாயமும், கானானிய உழவர்களுடைய மரபுக்கும் நலன்களுக்கும் முதலிலிருந்தே முரண்பட்டுக் காணப்பட்டன. ஏனெனில் பின்னவர்களுக்கு, தலைமுறை தலைமுறை முந்தையோரால் பண்படுத்தப்பட்டு வந்த நிலம், பாதுகாக்கப்பட்டு வந்து, தங்கள் பிள்ளைகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய அருமையான அடைக்கலப் பொருளாகும். ஒருவர் தம் நிலத்துக்குப் பக்கத்திலோ, தம் வீட்டுக்கு அடியிலோ அடக்கம் பண்ணப்படுவார். அந் நிலத்திற்குப் பதிலாக அரசனே நல்ல மாற்றுப் பொருள் ஏதாவது அளித்தாலும், அந்நிலம் குடும்பத்தினின்று கைமாறலாகாது (1 அர.21:2,3). ஏதாவதோர் அவசரத்தை முன்னிட்டோ, நெருக்கடியை முன்னிட்டோ, அந் நிலம் விற்கப்பட வேண்டியதிருந்தாலும், யூபிலி ஆண்டு ஏற்பாட்டின்படி அந்நிலம் சொந்தக்காரனிடம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் (இலேவி. 25:8 மு). இந்த நிலம் கோட்டைச் சுவரால் பாதுகாக்கப்பட்ட நகரத்துக்கு உள்ளே இருப்பதன்று, திறந்தவெளியிலுள்ளது.

திருப்பயணம் மேற்கொண்ட மக்களுடைய யாவே தம் அடியார்களைப் போன்றே அலைந்து திரிந்த அவர் (விடு. 20:24) பாகால்களுக்கு முற்றிலும் மாறுபட்டவர்; கடுங்காற்று, வெள்ளம், வெட்டுக்கிளி, மானிடப் பகைவர்களினின்றும் மக்களைக் காத்து, அவற்றை வளமுறச் செய்தவர் (ஒசே.2.15). பாகாலுக்குப் படைக்கப்பட்ட காணிக்கைகள் விளைபொருட் பகுதிகளாகிய கப்பமே; தமது மக்கள் பொருட்டுச் செயலாற்ற முற்பட்ட ஒரு கடவுளோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் சின்னமாகவன்று. சமயச் சடங்குகளும் நிலத்தின் வளத்தைப் பற்றியனவாகவே காட்சியளித்தன. ப.ஏ. காலக் கானானில் பாகாலுக்கும் அஸ்தரோத்துக்கும் (Astarte or Ashtoreth) நடைபெற்ற திருமணத்தைப் போன்று, இந்தியாவில் நமது கோவில்களில் ஆண்டுதோறும் நடைபெறும் திருமணங்கள் நமக்கு நன்கு தெரியும். அவற்றின் உட்பொருள் கவனிக்கப் பெறாமலுமிருக்கலாம்.

J க்கும், E க்கும் இடையே காணப்படும் வேறுபாடுகள் தனி ஆட்களைப்பற்றிய வேறுபாடோ (J தெற்கத்தி சாதாரண மனிதராக இருக்கலாம். E பெத்தேலில் உள்ள ஒரு பூசாரி) அல்லது காலம் பற்றிய வேறுபாடோ (J 9ஆம் நூற்றாண்டு E 8ஆம் நூற்றாண்டு) மட்டுமல்ல, அவர்கள் ஒவ்வொருவரும் கானானிய மரபுகளை நோக்கும் காட்சியியல்பிலும் வேறுபாடுகள் உள்ளன எனக் கருதுவது நலமாகத் தோன்றலாம். E சடங்காச் சாரங்களில் ஈடுபாடு காட்டுகிறது. J அவற்றைப் புறக்கணிக்கிறது (தொட. 32:32). E வெவ்வேறு கோவில்களிலும், பத்தில் ஒன்றிலும், (28:22), பானபலியிடுவதற்குரிய கற்றூண்களிலும் ஈடுபாடு காட்டுகிறது. (28:18; 35:14). ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிட விரும்புவது முன்மாதிரியாகக் கருதப்படுகிறது (22:1-13. 19;J இக்கதையினை முற்றிலுமாகத் தள்ளிவிடுகிறது). E ஆமோசின் காலத்தது ஆயினும் அந்த இறைவாக்கினரின் அறவுரைகள் அதில்காணப்படவில்லை. அவர் பெத்தேலைக் குறித்து மிகக் கண்டித்துரைப்பது (ஆமோஸ் 7:10-13) எதிர்ப்பும், மறுப்புமாகக் காணப்படும்.

இறைவாக்கினர்

விவிலிய ஒழுக்கவியல் என்னும் துணியில் நெய்யப் பட்டுள்ள இன்னொரு பண்பாடு என்னும் இழையும் உள்ளது. அது நகர்வாசிகள், மரபுகள் மீது கொண்டுள்ள செல்வாக்கு நாம் ஆமோசையும் மீக்காவையும் படித்துப் பார்க்கும்போது, அச் செல்வாக்கு அவைகளில் காணப்படுவதிலலை. ஏனென்றால் இந்த இறைவாக்கினர் நகரங்களில் மிகுந்துக் காணப்பட்ட வணிகச் சுரண்டல்களை எதிர்த்து உடன் படிக்கை மரபுகளைச சுட்டிக்காட்டுகிறார்கள். பல நகர்கள் முற்காலத்தில் கானானியர் வசித்து வந்த இடங்கள் (எருசலேம்; 2 சாமு. 5:6 மு), மீண்டும் தாவீது, சாலமோன் காலங்களில் கட்டப்பட்டவை (எரிகோ; 1அர.16:34). இவை உண்மையில் கைத்தொழில் பொருட்களுக்கும், கைத் தொழில்களுக்கும், பல்நாட்டு வணிகத்துக்கும் மையங்கள் (20:34). இராணுவக் கொத்தளங்கள் 22:39). அவற்றில் உள்ள கோவில்கள் கலைகளை வளர்த்தன. வணிகத்தோடு வேற்றுநாடுகளுடன் அறிவுத்துறையிலும் பரிமாற்றம் ஏற்பட்டது. இந்த விதமாகத்தான் ஞானத்தின் செல்வாக்கு யூத மறைநூலில் இடம் பெற்றது.

இப்போது போன்று அப்போதும் செல்வத்தின் ஏற்றத்தாழ்வுகள் நகர்களில் மிகுதியாகக் காணப்பட்டன (ஆமோஸ் 3:15; 6:4). தேவையுடையோர், கைம்பெண்கள், அனாதைகளுடைய நலனைக் கருதும் உடன்படிக்கைக்கு மாறுபட்டு, செல்வர், ஏழைகளையும், எளியவர்களையும் கடனுக்குட்படுத்திக் கொடுமை செய்தனர் (விடு. 22:25,26; 21:7; இணை. 15:12மு.). ஒரு மனிதரை ஒரு சோடிச் செருப்புக்கு விற்கும் பேராசையை வன்மையுடன் கண்டித்ததை ஆமோஸ் 2:6இல் (எசா. 15:8; மீக். 2:1மு.) காண்கிறோம். ஒரு பக்கம் செல்வர்களையும், இறையச்சமற்றவர்களையும், மறுபக்கம் ஏழைகளையும் இறைவனுக்கு அஞ்சி நடப்போரையும் கண்ட இறைவாக்கினரின் மனப்போக்கைப் பு.ஏ. சுட்டுகின்றது (லூக். 16:19மு; 19:22மு.). விடு. 21:1மு.இல் அடிமைத்தனத்தின் கொடுமையினைக் குறைக்கும் முயற்சி காணப்படுகிறது. ஓர் எபிரேய அடிமையின் நிலைமை இங்குச் சுட்டப்படுகின்றது.

இணைச்சட்ட ஆசிரியர்

நகரச் செழுமையின் உச்சக் கட்டத்தில், சிறப்பாக வடக்கே, எட்டாம் நூற்றாண்டு இறைவாக்கினர் தன்னலத்தையும், உணர்வின்மையையும், மாயச் சடங்குகளையும் கண்டித்து உரைத்தார்கள். ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர், எருசலேமிலுள்ள ஒரு பூசாரி, இறைவாக்கினரின் போதனையினால் நன்குக் கவரப்பட்டு, தமது காலத்தில் சடங்காசார வழியையும் இறைவாக்கினர் சிறந்த நன்னெறி அறைகூவலையும் ஒன்றாய் இணைக்க முயன்றார். அவர்தான் கி.மு.621 இல் திருக்கோவில் உண்டியல் பெட்டியில் கண்டெடுக்கப்பட்ட மோசேயின் திருநூல் என்னும் நூலில் இணைச் சட்ட ஆசிரியர் (இணை. 4:84-8:20; 10:12-11:25;12:26; 28:1-24 43,46; 29:1). அவர் மீக் 6:7 மு. இல் கண்டுள்ள இறைவாக்கினரின் தீவிர நன்னெறி வழி பொதுமக்களின் பல சமயப் பலியீட்டு வழி ஆகிய இவ்விரண்டு வழிகளுக்குமிடையே காணப்படும் முரண்பாடு. இரு தரத்தாரும் விட்டுக் கொடுப்பதால் மட்டுமே தீர்க்கப்பட முடியும் என்பதனைப் புரிந்துகொண்ட நடைமுறை மெய்ம்மையாளர் ஆவார்.

வரலாற்றுச் சூழ்நிலையை மனத்தில் நாம் கொள்ள வேண்டும். யூத அரசர்கள் 722 இல் சமாரியாவுக்கு நேரிட்ட கதியைத் தவிர்க்கும் பொருட்டு, 700-625 இல் அசிரியாவுக்கு அடிபணிந்தார்கள். அக் காலத்தில் பல ஆண்டுகளாக ஆட்சி புரிந்த மனாசே கப்பம் கட்டினான். வேறு எந்த நோக்கமில்லாவிட்டாலும் அரசியல் நோக்கங்களுக்காக அசிரியப் பண்பாட்டினையும், சமயப் பழக்கங்களையும் புகுத்தினான் (எரே.7:30). விண்மீன் வழிபாட்டு முறைகளும் பொதுவாக வழக்கிலிருந்தன (2அர.23:12; செப்.1:5; எரே. 8:2; 19:13; 32:29; ஒப்புநோக்க வேண்டியவை. எரே. 7.18.44. 5-19). பின்னால், எசேக்கியா காலத்திலும் (593-563) தாவரக் கடவுளாகிய தம்மூசையும், சூரியக் கடவுளாகிய சாமாசையும் (Shamash) பாராட்டி, எருசலேம் திருக்கோவிலில் சடங்குகள் நடைபெற்றன (எரே. 8:14,16). இறைவாக்கினரின் முறையீடுகளைக் கேட்பாரில்லை. மக்கள் யாவேயைப் புறக்கணிக்க எண்ணவில்லை. ஆனால் தகுந்த பலிகள் அவருக்குச் செலுத்தப்படும் வரைக்கும், பிற தெய்வ வழிபாட்டை அவர் பொறுத்துக் கொள்வதில்லை என்பதை அவர்கள் நம்ப முடியவில்லை. இறைவாக்கினர் யாவே **நேர்மையைக்** கேட்கிறார் என்றார்கள். மக்கள் அவர் **வேள்வியைக்** கேட்கிறார் என்று சொல்லி, அவருடைய கோபத்தைத் தணிப்பதற்குச் சாதாரண வேள்விகள் தகுந்தவையல்ல என்று தோன்றினபடியால், எருசலேமுக்குச் சற்று வெளியே, தோப்பேத்து என்னும் சிறு கோவிலில் வெகு காலமாகச் செலுத்தாது வழக்கமற்றுப் போன முதற்பேற்று வேள்வியைப் புதுப்பித்தார்கள் (எரே. 7:31; 19:6,13; 32:35).

இணைச்சட்ட ஆசிரியருடைய சிறந்த சாதனை இறைவாக்கினர் வலியுறுத்தும் ஒழுக்கத்தையும், பொதுமக்களுடைய வழிபாட்டு முறைகளையும் ஒன்றுபடச் செய்ததேயாகும். இறைவாக்கினரின் சமயத்தைத் தொடர்ச்சியான சட்டங்களாக முறைப்படுத்தி, பொதுமக்கள் வழிபாட்டில் காணப்பட்ட புறச் சமயத்துப் பகுதிகளுக்கு ஞானப் பொருள் தந்தனர். ஆமோசின் நீதிக் கொள்கை (ஆமோஸ் 5:24) D இல் இந்தக் கட்டளைகளையெல்லாம் கைக்கொள்ள கவனமாயிருப்பது என்று ஆகிவிடுகிறது (இணை.6:25). ஒசேயா, D என்னும் இரண்டிலும் உண்மைச் சமயத்தின் சாரமாவது கடவுளில் அன்பு கூருவதே; ஆனால் D கருத்துப்படி அன்பு என்பது கடவுளுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுவதாம் (7:9;10:12மு.; 11:1,13,22; 19:9). காணிக்கைகள் இனிமேல் ஏறுமாறான ஒரு கடவுளுக்குக் கட்டும் கப்பமன்று, நன்றி, மகிழ்ச்சி ஆகியவற்றின் வெளிப்பாடாகும் (5:15; 12:11மு.; 18; 14:26; 16:1-5; 26:10மு.). உடன்படிக்கை ஒழுக்க முறையினையும், வழிபாட்டு முறையினையும் இப்படி இணைத்து, யூத சமயத்தை சிறப்பாயமைத்து அதை மறையவிடாமல் சிறுமையினின்றும் காத்த பெருமை இணைச் சட்டத்திற்குரியது.

பிற்கால நிலை

பிற்காலத்திய இணைச்சட்ட ஆசிரியர்கள் வரலாற்றையும் ஒழுக்கவியலையும் எளிமையாகக் கருதியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றனர். மேலே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் அதனைக் குறிப்பிடுகின்றன. 1,2 அரசர்கள் அதனைச் சுருக்கிக் கூறுகின்றன. இணைச்சட்ட கோட்பாட்டின்படி கடவுளுக்கு உண்மையாயிருப்பது (அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்வது) அருள் வரத்தையும் செழிப்பையும் நல்க வேண்டும் (1 அர. 13:33,34; 15:11மு.; 16:18-20). ஆனால் வரலாறும் தனி ஆட்களின் அனுபவமும் அத்தகைய நியாயமான திட்டத்தை மெய்ப்பிக்கவில்லை. குற்றமற்றவர்கள் துன்பப்படும் புதிரைப் பற்றி D வருந்துவதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். எரேமியா கடுந்துயருற்று எழுதுவதும், யோபு நூடகமும் இந்தச் சிக்கலுக்கு இரண்டு முதல்தரமான சான்றுகள்.

ப.ஏ.இன் முந்தைய ஒழுக்கவியலின் மிகுதியானப் பகுதி கூட்டுப் பொறுப்புணர்ச்சியினின்றும் தோன்றியது. ஒருவருடைய பழி அவரது தொகுதி முழுவதற்கும் அழிவை உண்டாக்கும் (யோசு.7:11). தொகுதிமின் ஒருமைப்பாடு மிகவும் மதிப்புடையது. இதுதான் செல்வர்களுக்கும் ஏழைகளுக்கும் சம உரிமை கோரும் அக்கறைக்கும் (விடு. 23:1மு.), ஒரவஞ்சத்தையும், லஞ்சத்தையும் கண்டிப்பதற்கும் (இணை. 1:17; 16:19) ஆதாரமாகும். முதாதையர் திராட்சைக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்பது இந்த நிலைமையை எடுத்துக்காட்டுகின்றது (எசே.18). ஆனாலும் இந் நிலைமை எப்போதும் எதிர்பார்க்கப்படாமல் இருந்ததில்லை. **எசேக்கியேலில்** மேலே காட்டிய மேற்கோள் அதற்கு ஓர் எடுத்துக் காட்டு. நாடும் மக்களும் அனுபவித்த கேடானது ஐயப்பாட்டை வளர்த்த சிறையிருப்புக் காலத்தில் எசேக்கியேல் தமது வாதக் கருத்தை எழுதியது குறிப்பிடத்தக்கது. என்றாலும், மெசப்பொத்தாமியா, எகிப்து ஆகிய நாடுகளின் ஆரவாரப் பண்பாடுகளுடன் கொண்ட தொடர்பின் மூலமாய் பெரும்பாலும் ஏற்பட்ட விளைவுகளினால் இத்தகைய கேள்விகள் முன்பும் தோன்றியுள்ளன. நமது **நீதிமொழிகள்** சிறையிருப்புக்குப் பிற்பட்டதாகலாம். எனினும், அதன் ஒரு பகுதி (22:17-24:22) தாவிது, சாலமோன் காலத்திற்கு முற்பட்ட எகிப்திய ஞான நூல்கள், ஒருவர் தம் பாவ உணர்ச்சி வாழ்க்கையிலும், முதியோருக்கு மதிப்பு காட்டுவதிலும், கடவுளுக்கு முன்பாகக் கண்ணியமாய் நடப்பதிலும், தனிப்பட்ட ஒழுக்கத்தைக் கற்பித்தன.

எரேமியாவின் ஒழுக்கவியல் சிக்கல் (15:15மு.; 20:7மு.) தனி மனிதருடைய பொறுப்புணர்ச்சியினின்று கிளம்பியது. அவர் தமது சொந்த அனுபவத்திலிருந்து அறிவு இருப்பதினால் மட்டும் செய்யும் திறமை தானாக வந்துவிடாது என்று கண்டார் (இணை. 30:15 ஒப்பிடுக). திருப்.7:3 இப்பிரச்சனையைச் சுட்டும் இன்னொரு எடுத்துக்காட்டாகும். யோபுவின் நூலில் எழுப்பப்பட்ட அதே கேள்வி இங்கும் எழுப்பப்படுவதால் இது ஒரு ஞானப் பாடல் எனப்படுவதுண்டு. ஆனால் இது தரும் விடையின் ஒரு பகுதி கடவுள் அண்மையிலிருக்கிறார் என்ற இறைவாக்கினரின் நம்பிக்கைக்கு நேரே நம்மை இழுத்துச்செல்லுகிறது. கடவுள் அண்மையிலிருக்கிறார் என்ற இந்த உணர்வே சில இறைவாக்கினர் சமயச் சடங்குகளைக் குறித்து அவ்வளவு கவலைகொள்ளாதிருப்பதற்கும் (எசா. 1:10மு.; ஆமோஸ். 5:21மு.), ஏழைகளைக் குறித்து அக்கறைகொண்டு ஆடம்பரத்தையும் (6:1) செல்வத்தையும் (2:6) சாராதிருப்பதற்கும் காரணமாயிருந்தது. மேலும், இதுவே தனிப்பட்ட இறைவாக்கினரை ஆட்கொண்டு நின்றதோர் உணர்ச்சியின் பிறப்பிடமுமாகும். அன்னார் மரபுகள் சிலவற்றை, குறிப்பாக உடன்படிக்கையின் தொடர்புள்ள மரபுகளை வலியுறுத்தி நின்றாலும், புதுமைக் கருத்துடையவர்களாகவும் காணப்பட்டனர்.

கூட்டுப் பொறுப்புக்குப் பதில் தனியார் பொறுப்பின் முக்கியத்துவம் வளரவே ஒருவகையான சந்தேக நிலை உருவாகலாயிற்று. இறையருள் நிகழ்த்தக்கூடிய ஓர் அருஞ்

செயலின் மேல் எரேமியாவின் நம்பிக்கை வைக்கப்படுகிறது. தானியேல் நூல் ஆசிரியர் (12:2,3) வரப்போகும் ஓர் உலகின் மேலுள்ள நம்பிக்கையின் மூலம் இந்தச் சந்தேக நிலையை அகற்ற முயலுகிறார்.

4. புதிய ஏற்பாடு

பு.ஏ.இல் எரேமியாவின் கனவு நனவாகிறது. தானியேல் தாமதமாகக் கிடைப்பதாகக் கொண்ட வெகுமதி, மரணத்திற்கு முன்பே ருசிக்கும் அனுபவமாகிறது. இறையருளின் விந்தை நிகழும் (யோ.3:1-17). கிறிஸ்தவ அன்பின் வாழ்க்கை இதற்கான அடையாளமாகும் (1 யோ.5:1). தனியாள் ஒவ்வொருவரும் தூய ஆவியாகிய இறையாற்றலால் அல்லது தங்களுக்குள் செயலாற்றும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் சமூகத்தால் தாங்கப்பட்டனர் (2 கொரி. 5:17; கலா.2:20; யோ.15:1-5).

பு.ஏ.இல் தனியார் பொறுப்பும், கூட்டுப்பொறுப்பும் எப்பொழுதும் ஓர் இழுவை நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளது. ஒன்றைத் தள்ளி இன்னொன்றை வலியுறுத்துவது சீர்கேட்டை உண்டாக்கும். திருச்சபையின் வரலாறே இதற்குச் சான்று பகரும். இருப்பினும், இந்த ஆபத்தை உணர்ந்தவர்களாக, ஆராய்ச்சிக்காக நாம் இந்தக் கட்டுரையில் இந்த இரு கூறுகளையும் தனித் தனியாகக் காண்போம்.

முதற்கண், தனியாளின் எல்லையில்லா முக்கியத்துவத்தைப் பு.ஏ. எவ்வாறு வலியுறுத்துகிறது என்பதைக் காண்போம். லூக். 15:4-7 இல் வரும் மேய்ப்பனையும், காணாமல் போன ஓர் ஆட்டையும் பற்றிய உவமையில் இந்த உண்மை தெளிவாக விளக்கமுறுகிறது. காணாமல்போன காசு, திருந்திய மைந்தன் ஆகிய உவமைகளிலும், யோ.10:14; லூக். 12:4-7 ஆகிய பகுதிகளிலும் இவ்வுண்மையே விளக்கமுறுகிறது. ஒவ்வொருவர் தலையிலுள்ள முடிகூட எண்ணப்பட்டிருக்கிறது.

நற்செய்தி நூல்கள் இயேசுபிரான் தனியாரைக் குறித்து எவ்வளவு தூரம் அக்கறைகொண்டிருந்தார் என்பதை விளக்குகின்றன (4:40). அவர் கும்பல்களுக்கல்ல, தனிப்பட்டோருக்கே பணிவிடை செய்கிறார். அடியாரைத் தேர்ந்து கொள்தல், நிக்கோதேமுவுடன் உரையாடல், சமாரியப் பெண்ணைச் சந்தித்தல் ஆகிய நிகழ்ச்சிகளில் இவ்வுண்மை தெளிவாக விளங்குகின்றது (யோ.1:35மு.; 3:1மு.; 4:7மு.). திருத்தூதர் திருநூல் (எ.கா. 8:36-39; அதி.16). திருமுகங்கள் ஆகியவற்றில் சிறப்புமிக்க தனியாட்கள் பலர் குறிப்பிடப்படுவதை நாம் காண்கிறோம்.

தனியாரை முக்கியப்படுத்தும் இச் செயலில் ப.ஏ. நிழலாட்டமாய்க் கண்ட ஒரு கூறு உச்சநிலையடைவதைக் காண்கிறோம். புறம்பான செயலுக்குப் பின்னால் மறைந்திருக்கும் உள்ளான நோக்கமே இந்தக் கூறாகும். மலைப் பொழிவில் திருச்சட்டம் என்பது நுட்பமானதாகவும், பாவம் என்பது பயங்கரமானதாகவும் காட்டப்படுகின்றது. ஏனெனில் நினைவும் சொல்லும் கூட செயலைப்போல கண்டனத்துக்குரியவை எனப்பட்டது. கோபம் கொலையைப்போல் கொடியது (மத்.5:21). அழுக்காறுமிக்க நினைவு விபசாரத்தைப் போல் தீயது (மத்.5:28). மாய்மாலம் எவ்வளவு சிறந்த காணிக்கையையும் பயனற்றதாக்கிவிடும் தன்மையுடையது (6:1; 1கொரி. 13:1-3). வெறும் செயல் பயன் பயக்காது. அது மீட்பை அருளாது. அது கடவுளுக்குத் துதியாவதற்குப் பதிலாக, இழிவாகக் காணப்படும் (மத்.12:35 - 37; அதி.23). பரிசேயனையும் ஆயக்காரனையும் பற்றிய உவமை இதனையே விளக்குகிறது. லூக். 16:5; யோ.4:23 ஆகிய வசனங்களில் கூறப்பட்ட உண்மையை இவ்வுவமை அழகாக வடிக்கிறது.

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளிலிருந்து கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஒருவர் தனியாகக் கடவுளுடன் கொள்ளும் உறவுமட்டுமன்று என்பதையும் காண்கிறோம் (மத்.6:4,18.; 1கொரி. 13:12,13). ஒருவர் கடவுளுக்கு நேர் செலுத்தும் அன்பு, மனிதருக்கு நேர் வெளிப்பட வேண்டும். ஒருவர் தம் சகோதாருக்கு நேர் காட்டும் அன்பே அவர் பாவத்தின்மேல் வெற்றிகொண்டதற்கும் கடவுளுடன் ஒப்புரவானதற்கும் (2 கொரி. 5) உரிய அடையாளமாக அமைகிறது: அதாவது, மறுபிறப்பிற்குரிய புதிய படைப்பிற்குமுரிய அடையாளம் சகோதர அன்பே (1 யோ.5:1,2). திட்டமிட்டு பிறருக்கு உதவியாகச் செயல்படுவதே இந்த அன்பின் வெளிப்பாடு. மத்.25:41-43 இல் அன்பின் குறிப்பான செயல்கள் பலதரப்பட்டுள்ளன: உணவு, உடை, தண்ணீர் கொடுத்தல்; அந்நியரை உபசரித்தல்; பிணியாளிகளையும், சிறைப்பட்டோரையும் சந்தித்தல். கிறிஸ்தவ அன்பு பிறருக்கு உதவுவதைத் தன்னுள் கொண்டது (லூக். 16: 19-31). அதைவிடக் கூடுதலாக அது பிறருடைய வாழ்க்கையில் ஈடுபடுவதை எதிர்பார்க்கிறது (10:25-37). நல்ல சமாரியனைப் பற்றிய உவமையும், 1 கொரி. 13 ஆம் அதிகாரமும் இதனை விளக்குகின்றன. எபே. 4:28,29 இல் குறைவுள்ளவருக்குக் கொடுக்கத்தக்கதாகத் தமக்கு உண்டாயிருக்கும்படி, தம் கைகளால் நல்ல வேலை செய்து உழைக்கக் கடவர் என்று ஆலோசனை கூறப்பட்டது. இணைச்சட்ட ஆசிரியர் குருத்துவ இறைவாக்கின் சிந்தைகளை உடன்படிக்கையைக் காத்து நடத்தல் என்னும் தம் கொள்கையில் ஒன்றாக இணைத்துத் தந்தது போல, யாக். 1:27; எபி.13:16 ஆகிய பகுதிகளில் அந் நூற்களின் ஆசிரியர்கள் கிறிஸ்தவத்தின் புதிய சூழலை நன்மை செய்து பகிர்ந்து கொடுக்க ஏற்பட்ட ஒன்றாகக் குறிப்பிடுவதைக் காண்கிறோம். தூய சமயம் என்பது, திக்கற்றோரையும் விதவைகளையும் சந்தித்து சுயநல உலகால் கறைப்படாதிருத்தலைக் குறிக்கிறது.

கிறிஸ்தவ அறம் என்பது திருச்சபைக் கோட்டையினுள் மண்டிக்கிடக்கும் ஒன்றன்று; குடும்ப வாழ்க்கையிலும், உலக வாழ்க்கையிலும் வெளிப்படும் ஒன்றாகும். எபே. 5:22-6:9 இல் கணவரும் மனைவியரும், பெற்றோரும் பிள்ளைகளும், தலைவரும், வேலைக்காரரும் ஒருவருக்கொருவர் பாராட்ட வேண்டிய அன்பைக் குறித்து பவுல் குறிப்பிடுகிறார். கணவன் மனைவி உறவை, கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமுள்ள உறவுடன் ஒப்பிட்டு, ஒருவர் மற்றவருக்காகத் தம்மை கொடுத்தலைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது சிறந்ததோர் வெளிப்பாடு ஆகும். இவ்வுண்மை இக் காலத்தில் அவ்வளவாக வலியுறுத்தப்படவில்லை (கொலோ. 3:18-4:1 காண்க).

திருச்சபையின் ஒருமைப்பாட்டைக் காக்கவும், அதன் அன்பின் செயல்களைப் வலுப்படுத்தவுமே திமுகங்கள் எழுதப்பட்டன. தனியாளாகவும் கூட்டுறவாகவும் மக்கள் கிறிஸ்துவுக்குள் வளர்வதைத் தடைசெய்வதான எந்தச் சுயநலமும், பெருமை பாராட்டலும் பேய்த்தனமானவையே. பிறருடைய உணர்வுகளை மதித்தல் (உரோ.14), ஒருவர் பாரத்தை ஒருவர் சுமத்தல் (கலா. 6:2), தவறு செய்தவரை மன்னித்தல், ஐக்கியக் குலைவை உண்டாக்கும் காரணங்களை அகற்றல், எல்லாருடைய சேவைகளையும் திறன்களையும் ஏற்றுக் கொள்ளல் - ஆகிய இந்தக் கூறுகள் கடவுளின் குடும்பத்தாரிடத்தில்

காணப்பட வேண்டும். கிறிஸ்துவின் உடலாகிய இந்த ஐக்கியத்தில் ஒருவர் துன்புற்றால் அத்துன்பத்தில் எல்லாரும் பங்கு கொள்வர். ஆவியின் கனிகள் (கலா. 6) தனியார் மீட்பின் அடையாளங்களாக அல்ல. இந்த ஐக்கியத்தைப் வலுப்படுத்துவதறகாகவே கொடுக்கப்பட்டுள்ளன. தூய பவுலடியாரைப் பொறுத்தமட்டில் திருச்சபையின் இநத ஐக்கியத்தில் இல்லாமல் கிறிஸ்துவுக்குள் இருப்பது என்பது கூடாத செயலாகும்.

அரசுக்கு நேரான பு.ஏ.கருத்தை அறிய. கி.பி.முதலாம் நூற்றாண்டில் மக்களிடையில் காணப்பட்ட மறைபொருள் வெளிப்பாட்டு எதிர்நோக்கு. உரோமை அரசுக்குக் கீழ் பாலஸ்தீனா இருந்த நிலை. இவற்றிடையில் உள்ள உறவில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவற்றை நாம் மனத்தில் கொள்ள வேண்டும.

பவுல் தாம் ஓர் உரோமைக் குடிமகன் என்பதில் எவ்வளவு பெருமைகொண்டார எனபதை அவருடைய திருமுகங்கள வெளிப்படுத்துகின்றன. உரோமை அரசு நீதியானதென்றும். நன்மைக்கேதுவானதென்றும். அவர் கொண்டார் (உரோ. 13: 1-7; 1 பேது. 2:13-3:13 காண்க). இதனால் சமூக. பொருளாதார. அரசியல் புரட்சிகளை மேற்கொள்ள விரும்புவோருக்கு பவுலின் திருமுகங்களோ. புதிய ஏற்பாடோ வெளிப்படையான எந்தப் போதனையையும் தரவில்லை. ஆனால் பண்பாடு பழக்க வழக்கங்களுக்கு எதிரான ஒரு போங்கு இவற்றில் காணப்படுகிறது என்பது உண்மையே. இதற்கான சிறந்த எடுத்துக் காட்டு பவுல் பிலமோனுக்கு எழுதிய திருமுகமேயாகும. இத் திருமுகம் அடிமைத்தன பழக்கத்தை வன்மையாகக் கண்டிக்கிறது. ஆனால. பவுல் இதனை உணர்ந்திருந்தாரா என்பது சந்தேகமே.

நற்செய்தி நூல்கள் அரசின் பின்னணியிலேயே தம் வரலாற்றை வடிக்கின்றன. நற்செய்தி நூல்கள் எழுதப்பட்ட காலத்தில் கூட இராயனுடையதை இராயனுக்கும். கடவுளுடையதைக் கடவுளுக்கும் கொடுங்கள் (மார். 12:14-17) என்னும் கூற்று. சொல் நுட்பத்திற்காக அதிகமாகப் பாராட் டப்பட்டதே தவிர. அதிலடங்கின வாதத் திறமைக்காக அல்ல.

நான்காம் நற்செய்தி நூல் எழுதப்பட்டக் காலத்தில் திருச்சபையானது எருசலேமின் அழிவையும். யூதர். கிறிஸ்தவர் ஆகியோரது துன்பத்தையும் கண்டிருந்தது. உரோமை அரசு கடவுளுகுரியனவறறை அபகரித்து வந்தது என்பது தெளிவாகத தெரிந்தது. மக்கள் பேரரசனை வழிபட வேண்டுமென்று அது கேட்டுக் கொண்டது. இதற்கு உடன்படாதபோது கிறிஸ்தவர்கள் கலகக்காரர்களாகக் கொள்ளப்பட்டனர். இவர்கள் யூத சமயத்தின் ஒரு பிரிவாகக் கொள்ளப்படவில்லை.

திருவெளிப்பாடு நூல் புதிய விண்ணகத்தையும் . புதிய மண்ணகத்தையும் நிகழ்கால துன்பங்களற்ற கடவுளுடைய நகரத்தையும் எதிர்நோக்கும்போது. அது அக்கால அரசைக் குறித்து எவ்வளவு வெறுப்புடன் இருந்தது எனபது தெரியவருகிறது.

முதல் நூற்றாண்டுக்குப்பின் வந்த பல நூற்றாண்டுகளிலும் கிறிஸ்தவர்கள் தாங்கள் நடுநிலைமையில் இருப்பதற்கோ. உலக அரசை வெறுதது மறுமையைக குறிதது மட்டும் கவலையுற்றிருப்பதற்கோ அலலது அரசின நடவடிக்கைகளிலிருந்து விலகியிருப்பதற்கோ. தங்களுக்குப் பு.ஏ.இல் ஆதாரம் இருப்பதாகக் கொண்டனர். ஆனால் 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில். திருமுகங்களில் குறிப்பிடப்படும் அசப்லோ (அன்பு) என்பதற்கும் காய்னோனியா (ஐக்கியம்) என்பதற்குமிடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. நற்செய்தி நூல்கள் தரும் கடவுளின் மீட்பைப் பற்றிய செய்தியும் ப.ஏ. இறைவாக்கினர் தரும் சீர்திருத்தத்தைப் பற்றிய செய்தியும் ஒரே வட்டதிறகுள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இறுதியாக இரண்டு உண்மைகள்:

பு.ஏ.அறம் தனக்கென்று ஒரு மாதிரியையும் அளவுகோலையும் கொண்டுள்ளது. அது இயேசுவே. கிறிஸ்தவர் கிறிஸ்துவைப் போல வளர்ந்து கொண்டே செல்ல வேண்டும். அவர் பின் பற்றுவதற்கான சட்ட நியதிகள் ஒருவேளை இல்லாதிருப்பினும் (மத்தேயுவின் நற்செய்தி நூல் இயேசுபிரானின் போதனைகளைச் சட்டத்தைப் போல் தொகுத்துத தருகின்றது என்றாலும்). தம்மை மறந்து பிறருக்காக வாழும் கிறிஸ்துவின் மாதிரி அவருக்கு எப்போதும் உண்டு (பிலி.2:7-11). குறிப்பிட்ட ஒரு செயலைப் பற்றிக் கருத்து வேறறுமைகள இருக்கலாம் (1கொரி.8). ஆனால் எல்லாவற்றுக்கும் அடிப்படை நியதி ஒன்றாகத்தான் இருக்க முடியும். அன்பால் அடுத்தவருக்காக அக்கறை கொள்ளலே அந்த நியதியாகும். பவுலடியார் சொன்னது போல கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்கக்கடவது.

இரண்டாவதாக. பு.ஏ.இன் அன்பு அறம் (love - ethic) மானிட நடைமுறைக்கு அப்பாற்பட்டது என்பதையும் நாம் கூற வேண்டும். ஆனால் நற்செய்தி புதியதோர் வாழ்க்கைக்கான ஓர் அழைப்பை மட்டும் கொடுக்கவில்லை; அது ஏமாறுவ தற்கான ஓர் அழைப்பாக முடியும். கடவுளுக்குள் எல்லாம் ஆகும் என்பதே அந்த நற்செய்தியாகும். மனித ஆற்றல்கள் மட்டுமல்ல. கடவுளுடைய உதவியும் அடியாருக்குக் கிடைக்கும் (2 கொரி. 5:17). கிறிஸ்துவுக்குள்ளான ஒருவருக்குப் புதிய வாய்ப்புகள் கிடைக்கின்றன. கடவுள் அவா மூலம் செயலாற்றுவார். நான்காம் நற்செய்தி நூலின் ஆசிரியர் தம் அனுபவத்தைக் கிறிஸ்து இயேசுவின் வார்த்தைகளால் தருகிறார்: என்னில் நம்பிக்கை கொள்பவர் நான் செய்கிற செயல்களைத் தானும் செய்வார். இவற்றைப் பார்க்கிலும் பெரியனவற்றையும் செய்வார் (14:12; 16:7 உம் காண்க).

துணை நின்ற நூல்கள்

1. *Hastings Dictionary* (The article on Biblical ethics is the same in the recent edition as the old edition).
2. The Interpreters Bible Dictionary, Vol. 2, Abingdon Press, New York, 1962.
   'Ethics in the Old Testament', by J.Hempel, pp.153-161.
   'Ethics in the New Testament',, by W.D.Davies, pp. 167-176.
3. Pfeiffer, Robert, H., *Introduction to the Old Testament*, Harper and Bros., New York, 1948.
   Particularly Part II: The Pentateuch, pp. 129-289.
4. Harkness, Georgia, *Christian Ethics*, Abingdon Press, New York, 1957.
5. E.A.Martins, *Plot and Purpose in the OT*, IVP, 1981.
6. W.C.Kaiser, *Toward and OT Theology*,
7. J.G.Mc Conville, *Law and Theology in Deuteronomy*, JSOT, 33, 1984.
8. E.W.Davies, *Prophecy and Ethics*, Jsot, 1981.

10

விவிலிய வரலாற்று நோக்கு

ஈ.சி.ஜாண்

1. வரலாறு என்னும் சொல்

வட மொழியில் வரலாறோடு தொடர்புள்ள இரு சொற்கள் இருக்கின்றன: இவற்றில் ஒன்று இதிகாசம் என்பதாகும். இதன் பொருள் அது இவ்வாறு நிகழ்ந்தது என்பது. இப்படியாக மகாபாரதம். இராமாயணம் என்பவை இரு இதிகாசங்களாகின்றன (வீரகாவியங்கள்). பிற விவரங்களோடு அரச குடும்பங்களின் வரலாற்றினை இவை கூறுகின்றன. இரண்டாவது. சரிதம் எனப்படுவது. இதன் பொருள் நடத்தை அல்லது வரலாறு என்பது. எ.கா. இராமச் சரிதம். புராணங்களில் (அதாவது பழைய கதைகள் எழுத்தின்படி புராதன காலங்களிலிருந்து உயிரோடிருப்பது என்பதாகும்). படைத்தல். அழித்தல். திரும்பவும் படைத்தல். தெய்வீக குல மரபு அட்டவணைகள். அரசர்களின் குலமரபு அட்டவணைகள் முதலியனபற்றிய கதைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இப்போது இருக்கும் புராணங்களில் ஒரு சிறிய பகுதி மட்டுமே மேற்கூறிய பொருட்களில் ஒன்றையோ. அதற்கு மேற்பட்டவைகளையோ பற்றிக் கூறுகின்றன.

இநது சமய இலக்கியத்தில் வரலாற்று உணர்வில்லையென அடிக்கடிக் கூறப்படுகிறது. இந்த எதிர்மறை மதிப்பீடு சரியானதல்லவெனினும். இந்து சிந்தனையில் வரலாறானது மையமானதன்று என்பது உண்மையே. (பண்டிதர் சமர்த்தா எழுதிய வரலாறு பற்றிய இந்து சமயக் கருத்து என்னும் நூல் பார்க்க).

வரலாறு என்பதற்குரிய ஆங்கிலச் சொல்லானது ஹிஸ்டரீ (Historie) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இது நுண்காட்சியினால் முயன்று பெற்ற அறிவைக் குறிக்கும். இது செடிகள் விலங்குகள் முதலியன பற்றிய அறிவாயிருக்கலாம் அல்லது அரிஸ்டாட்டில் இயல் வரலாறு என்று கூறுகின்ற மக்களைப் பாதிக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றிய அறிவாயுமிருக்கலாம். எவ்விதமும் இவ்வாறு கிடைக்கப்பெற்ற அறிவானது இறுதியில் கண்களினால் பார்க்கப்பட்டு எழுதி வைகைப்பட்டவைகளையே குறிக்கும. அதாவது வரலாறு என்பது கண்களினால் கண்ட நுண்காட்சிகளைக் கூறுவதாகும்.

ப.ஏ.இல் வரலாறு என்பதற்கு மிகவும் நெருங்கின சொல். நிகழ்ச்சித் தொகுப்பு அல்லது குறிப்பேடுகள் என்பதாகும் (Dibhere Hayyamim *1 அர. 11:41, 14:19* முதலியன). இவை அரசவையில் வைக்கப்பட்டிருந்த அரசனின் வாழ்க்கையின் நிகழ்ச்சிகள் பற்றிய அனுதின அறிக்கைகளாகின்றன. இதற்கொத்த சொல் பு.ஏ. இல் இல்லை. எனினும். வரலாறு எனும் கருத்து பு.ஏ.இலும் இடம் பெறுகிறது.

பொதுவாக. வரலாறு என்பதற்கு பொது நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியான, முறையான பதிவேடு என்பது பொருள் (ஆக்ஸ்போர்டு அகராதி). ஆகவே. வரலாறு என்பது முக்கியமாக ஓர் இனம் அல்லது நாடு அல்லது குறிப்பிட்ட இடத்திலுள்ள மக்கட் தொகுதியின் தொடக்கம். வளர்ச்சி. மேம்பாடு முதலானவை தொடர்பான நிகழ்ச்சிகளின் தொடர்பான கூற்றாகும் (எனினும் இச் சொல்லின் பயன் ஒரு நாடு அல்லது மக்கட் தொகுதியை மட்டும் குறிப்பதன்று. எ.கா. ஓர் இயக்கம் அல்லது ஒரு நிறுவனம் அல்லது ஒரு குடும்பம். இசை. கலை முதலியனவற்றின் வரலாறு பற்றியும் நாம் பேசுகிறோம்). வரலாறு எழுதுதல். மெய்ப்பிக்கக் கூடிய ஆதாரக் குறிப்புகள். எழுதப்பட்ட ஏடுகள் அல்லது மெய்ப்பிக்கக்கூடியதான பிற கல்வெட்டுகள். பழம்பொருள் கண்டுபிடிப்புக்கள முதலியவற்றிலிருந்து கிடைக்கும் செய்தி மூலங்கள் ஆகியவற்றில் அடிப்படை பெற்றுள்ளது. வரலாறானது ஏறத்தாள திட்டமாக அறியப்பட்ட ஒரு காலக் கட்டத்தில் உறுதிப்படுத்தப்படக்கூடிய நிகழ்ச்சிகளைப் பற்றியதாகும். வரலாற்றினை எழுதும்போது. அவ் வரலாற்றினைத் தொடர்ந்த நிகழ்ச்சிகளின் உறவும் வெளிக் கொண்டுவரப்படும். இல்லையேல். இலக்கியப் பயன் வெறும் செய்திப்பட்டியலாய் ஆகிவிடும.

கற்பனைக் கதைகள். புராணக்கதைகள். புனைவுரைகள் ஆகியவை வரலாற்றிலிருந்து தெளிவாக பிரித்தறியப்பட வேண்டும். கற்பனைக் கதைகள் ஆள்களையும் கடந்தகால நிகழ்ச்சிகளையும் பற்றிய வாய்மொழி மரபுகளாய் வருகின்ற மக்கள் பாராட்டுகின்ற கூற்றுகளாம். வரலாற்றின் மூலங்கள் இலக்கிய அல்லது பிற அமைப்புகளில் கிடைக்கின்றன. அவைகளை அலசி ஆராய்வதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆனால் அதே முறையில் கற்பனைக் கதைகளில் கூறப்படும் வரலாறுகளைத் தேர்வாய்வு செய்ய இயலாது. இதனால் கற்பனைக் கதைகள் பொய்கள் என்றாகாது. புனைவுரைகளும். ஏதோ சில உண்மைகளைப் போதிப்பதற்காக ஏற்பட்டவைகளே. எ.கா. வேதாளத்தைக் கொல்லும் கடவுள் (*எசா. 51:9*). புனித ஜியாஜும வேதாளமும் முதலியன. புனைவுரைக் கதைகளின் முகியப் பாத்திரங்கள் இயல்நிலை கடந்தவர்களாவர். கற்பனைக கதைகள் வரலாற்று நிகழ்ச்சிகளைப் பிரதிபலிக்கும் அளவுக்கு அவை வரலாறு சார்நதவை என விவரிக்கலாம் ஆனால புனைவுரைகளை இவ்வாறு விவரிக்க இயலாது.

திருவிவிலியமானது தொடக்கத்தில் கடவுள் உலகத்தை எவ்வாறு படைத்தார்.. மறைநூலின் மேல் வாழ (தொடக்க நூல்) மனிதரை எவ்வாறு உருவாக்கினார் என்று கூறி புதிய விண்ணகம். புதிய மண்ணகம் பற்றிய காட்சியோடு முடிகிறது. விவிலியம் முழுவதிலும் விளங்கும் நடுப்பொருள் கடவுளின் ஆளுகை என்பதாகும். படைக்கப்பட்ட உலகை அவர் நிலைப்படுத்திக் காத்தல். மனிதரதும் நாடுகளுடையதுமான நடப்புகளை அவர் கட்டுப்படுத்துதல் என்பதாகும். ப.ஏ. எழுத்தாளர்களின் முக்கிய அக்கறை இஸ்ரயேல் மக்களோடு கடவுளின் செயல் தொடர்பின் கதையைக் கூறுவதாகும். பு.ஏ. எழுத்தாளர்கள் கடவுள் தம்மை இயேசுகிறிஸ்துவின் வாழ்கை

இறப்பு, உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் எவ்வாறு ஒரே தடவை திட்டமாக வெளிப்படுத்தினார் எனக் காண்பிப்பதாகும். திருச்சபையின் வாழ்வில் கடவுளின் செயல்கள் தொடரப் படுகின்றன. அதன் மாட்சியான நிறைவேறுதலைத் திருச்சபை யானது எதிர்நோக்கியிருக்கிறது. ஆகையால் விவிலியம் பழைய, புதிய இஸ்ரயேலரின் வரலாற்றை வரைவது மட்டுமன்றி, இஸ்ரயேலரோடும் நாடுகளோடும் கடவுளின் செயல் தொடர்புகளைக் கூறுவதும் என்ற பொருளில் ஒரு வரலாற்று நூலாயிருக்கிறது. விவிலியத்திலிருக்கும் நூல்களின் தொகுதிக்கு இயற்கையின் மேலும் வரலாற்றின் மேலும் கடவுளின் ஆட்சியாற்றல் ஒருமைப்பாடளிக்கிறது.

வரலாற்றில் கடவுள் ஆற்றும் செயலினை அளவுக்கு மிஞ்சி வற்புறுத்தி. படைப்பிலும் இயற்கையிலும் அவர் செயலாற்றுவதை நெகிழவிடாதிருக்க நாம் விழிப்பாயிருக்க வேண்டும. வரலாற்றிலும் இயற்கையிலும் செயல்படும் கடவுளின் அருள் நலமானது ப.ஏ. இலும் பு.ஏ.இல் சிறப்பாக இயேசுவின் போதனையிலும் தரப்படுகிறது.

2. தொடக்கக் கால எபிரேய வரலாற்று மரபு

கி.மு. பத்தாம் அல்லது ஒன்பதாம் நூற்றாண்டில் தமது ஏட்டினைத் தொகுத்த யாவே மரபு (J. Yahwist) எழுத்தாளரும். அதைவிட மிகப் பிந்திய காலத்தவரான குருத்துவ (Priestly) P எழுத்தாளரும். எபிரேய வரலாறு பற்றிய தங்களது நூல்களைப் படைப்பிலிருந்து. அதாவது தொடக்கங்களிருந்து துவங்குகின்றனர். இது முழு நிறைவு (totality) என்னும் அவர்களது கருத்திலிருந்து எழுந்தது என்பதில் ஐயமில்லை (வெஸ்டர்மன்). புனிதர் யோவான். புனிதர் பவுல். சில திருச்சபைத் தந்தைகள் ஆகியவர்களின் ஏடுகளிலும் இக்கருத்து காணகிடக்கிறது. மனிதர்களோடு கடவுளாற்றும் செயல்கள் பற்றிய பரந்த கருத்து அவர்களுக்கிருக்கிறது. ஆகையால் அவர்கள் தொடக்கத்திலிருந்து துவங்கி. உலக உற்பத்தியின் கதை, மானிடர் படைக்கப்படுதல். மானிடரின் சாதனைகள். அவர்களின் தோல்விகள். முதலானவை எழுதப்பட்ட காலம் வரை மன்பதையின் இலட்சியத்துக்கு நேராக அவர்களைக் கடவுள் வழிநடத்திய முறை ஆகியவற்றைக் கூறுகின்றனர். பண்டைக்கால வரலாற்றின் குலமரபு அட்டவணைகள். J.P. ஆகிய விவிலிய மூலங்களில் (தொட.1-11) முக்கிய இடம் பெறுகின்றன. அவை தனியாட்கள். குடும்பங்கள். நாடுகள். முதலானவற்றைப் பற்றிக் கூறி ஆதாம் முதல் ஆபிரகாம் வரை மனபதையின பரநத அகலத்தையும். ஆழத்தையும் விவரிக்கின்றன.

J.E (இவரது வரலாறு தொட. 15 இல் ஆபிரகாமிலிருந்து தொடங்குகிறது) P ஆகிய எழுத்தாளர்கள் தங்கள் அறிவு விரிவடைந்த அளவுக்குத் தக்கதாக மனுக்குலத்தின் இருக்கையை முழுமையுமாக அறிந்திருந்தனர். அவர்களது சிறப்பு ஆர்வமானது. அவர்களது முன்னோர்களான ஆபிரகாம். ஈசாக்கு. யாக்கோபு (12-36). யோசேப்பு (37-50) ஆகியோர் அடைந்த நல்வாய்ப்புகள். அவர்கள் எகிப்துக்கு ஒடியது. கடவுளின் பேரருளின் தலையீட்டினால் அவர்கள் விடுதலை அடைதல். இறுதியில் தங்கள் மூதாதையருக்கு வாக்களிக்கப்பட்ட நாடாகிய கானானைத் தாங்கள் சொந்தமாக்கிக்கொள்ளல் என்பவைகளில் காணப்பட்டன என்பதில் ஐயமில்லை. இந்தக் குழுவினர் விட்டுச் சென்ற மரபில் வேறுபட்ட அழுத்தங்கள் இருக்கின்றன என்பதிலும் ஐயமில்லை. ஆனால். வரலாற்றிலே விளங்கும் கடவுளின் அருள் நலம் என்னும் பொருள் எல்லா மூலங்களுக்கும் பொதுவானதாகும். இப்பொருளானது இணைசட்டத்தில் காணப்படும் புராதன பற்றுறுதி அறிக்கையில் அடங்கியுள்ளது.

அப்பொழுது நீ உன் கடவுளாகிய ஆண்டவர் முன்னிலையில் நின்று சொல்ல வேண்டியது: என் தந்தை சரியா நாட்டார், அலைந்து திரிந்தவர், அவர் எகிப்துக்குப் போய் அவ்விடத்தில் அன்னியராய் இருந்தார். அவரைச் சேர்ந்தவர்கள் மிகச் சிலரேயாயினும். அவர் பெரிய வலிமைமகு திரளான மக்களினத்தைக் கொண்டவர் ஆனார். எகிப்தியர் எங்களை ஒடுக்கி எங்களைச் சிறுமைப்படுத்திக் கடினமான அடிமை வேலையை எங்கள் மேல் சுமத்தின போது. எங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவரை நோக்கிக் குரல் எழுப்பினோம். ஆண்டவர் எங்கள் குரலைக் கேட்டு. நாங்கள் பட்டத் துன்பத்தையும். வருத்தத்தையும். ஒடுக்கத்தையும் பார்த்து. தமது வலிய கையினாலும். ஒங்கிய புயத்தாலும் அஞ்சத்தக்க பேராற்றலினாலும் அடையாளங்களினாலும் அருஞ்செயல் களாலும் எங்களை எகிப்திலிருந்து வரச் செய்து. இவ்வி டத்துக்குக் கொண்டு வந்து. பாலும் தேனும் வழிந்தோடுகிற நாடாகிய இந்த நாட்டை எங்களுக்குக் கொடுத்தார் (இணை. 26:5-9).

இதைவிட விரிவான பற்றுறுதி அறிக்கை வேண்டுமாயின் யோசு. 24:2-13 பார்க்க.

இந்த இரு பற்றுறுதி அமைப்புகளுக்கும் மையம் என்னவெனில். மக்கள் எகிப்திலிருந்து பெற்ற விடுதலையும். கடவுள் தமது இரக்கத்தில் அவர்களது துன்புற்ற முன்னோர்களின் சார்பில் தலையிட்டார் என்ற அறிவுமாகும். (இந்த பற்றுறுதி அறிக்கைகளில் மக்கள் தங்கள் புயபலத்தை அழுத்தாமல். தங்களது எளிமையான தொடக்கததை அறிந்து. கடவுள் தங்களுக்கு என்ன செய்திருகிறார் என்பதை அறிக்கையிடுகின்றனர்). இந்தப் புராதன பற்றுறுதி அறிக்கையை. ஒசேயா அறிந்திருக்கிறார். ஒரு இறைவாக் கினரைக் கொண்டு ஆண்டவர் இஸ்ரயேலை எகிப்திலிருந்து அழைத்து வந்தார் (ஒசே. 12:13).

எகிப்திலிருந்து பெற்ற விடுதலையின் வரலாறானது. ப.ஏ. இல் வேறெந்த பொருளுக்கும் அருளப்படாத முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. ப.ஏ. முழுவதும். இறைவாக்கில். திருப்பாடல்களில். திருச்சட்டத்தில். தொழுகையில். திருநாட்களில் அடங்கியிருக்கிறது.

இஸ்ரயேலரது நம்பிக்கையின் முதல் கொள்கைக் கூற்றாவது. அவர்களை எகிப்து நாட்டிலிருந்து கொண்டு வந்தது யாவே என்பது (விடு. 20:2; ஆமோஸ். 2:10; ஒசே.11:1; திரு. 80:8 முதலியன). ஆகையால். இஸ்ரயேலர் இதர கலாசாரங்களில் இருந்தவைகளுக்கு ஒத்த புராதன திருநாட்களுக்கு. எகிப்திலிருந்து வெளியேறிப் பயணம் செய்த அனுபவத்தின் அடிப்படையில் மறுவிளக்கம் அளித்தனர். இந்த அனுபவம் தலைமுறைத் தலைமுறையாக வந்த ஒன்றாகும். நிகழ் காலத்திலும். வருங்காலத்திலுமம கடவுளின் விடுதலையில். பற்றுறுதி ஏற்பட இது நம்பிக்கையின் நங்கூரமாக ஆகிவிடுகின்றது. G. பன்றாட் (Von Rad) இஸ்ரயேல். வரலாற்றிலே கடவுளின் சில முகிய தலையீடுகளின வெளிச்சத்தில். தன் வரலாற்றினைப் புரிந்து கொள்வதில முழுநேரமும் ஈடுபட்டிருந்தது என்று சரியாகக் கணக கிட்டிருக்கின்றார்.

3. யோசுவா-2அரசர்கள் நூல்கள் தரும் புராதன வரலாற்று மரபுகள்

வரலாற்றில் கடவுளின் தலையீட்டின் வரலாற்றை விடுதலை வீரர்கள் அல்லது நீதித்தலைவர்களின் வரலாறுகளில் தொடாந்து காணலாம். இணைச்சட்டத்தின் வரலாற்றாசிரியர் தாம் அமைத்த வரையறைச் சட்டத்தினுள் இஸ்ரயேலரது கடந்த காலத்துக்குத் திட்டம் சார்ந்த விளக்கம் தருகிறார். இஸ்ரயேலர் சமயக் கொள்கைகளை மீறுதல். அதன் விளைவான கடவுளின் கோபம். அவர் மகக்களைச் எதிரிகளின் கைகளில் விட்டுக்கொடுத்து விடுதல். தங்களது ஆபத்தில் இஸ்ரயேலர் கடவுளிடம் அபயமிடுதல். கடவுள் நீதித்தலைவர்களை எழுப்பி மக்களை விடுவித்தல் என்பதே இந்தத் திட்டமாகும். இந்த விடுதலையைத் தொடர்ந்து திரும்பவும் மீறுதல் வந்தது. வரலாறு முன்போல் நிகழ்ந்தது (சிறப்பாக நீதித். 2:11-3:14 பார்க்க). இணைசட்ட வரலாற்றாசிரியர் தமது நூலில் தனிப்பட்டத் தலைவர்கள் மூலமாக கடவுளின் தலையீட்டின் புராதன மரபுகளையும் சேர்த்துள்ளார். எ.கா. யாபீன் மேலும் அவனது ராணுவத்தின்மேல் தெபோரா பாராக்கு என்பவர்களின் வெற்றி பற்றிய பகுதிகள் (அதி. 4). கடவுள் அருளும் விடுதலைக்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்தும் துதிபாடல் (அதி.5). மீதியானியா மேல் கிதியோனின் வெற்றியை பற்றிய பாகங்கள் (அதி.6.7). அம்மோனியர்மேல் யெப்தாவின் வெற்றி (அதி. 11), அம்மோனியர்மேல் சவுலின் வெற்றி (1 சாமு.23) முதலியன. இந்த ஒவ்வொரு கட்டத்திலும் போர் யாவேயுடையது; இஸ்ரயேலின் கையில் எதிரியைக் கொடுப்பவரும் அவரே. தாவிது அதிகாரத்துக்கு வந்தது பற்றிய பகுதியில் வாசகர் (1 சாமு. 16-2.சாமு. 5) செயலாற்றும் கடவுளின் கரத்தைக கண்டுணருகிறார். கடவுளால் ஏற்படுத்தப்பட்ட விடுதலை வீரர் தாவிது என்றும். அவரது குலவம்சம் நிலைவரப்படும் என்றும் நாத்தான் என்னும் இறைவாக்கினரால் உறுதிப்படுத்தப்பட்டு. தாவிதுக்கு அளிக்கபபட்ட வாக்குறுதியில் அது முடிவுறுகிறது. 2 சாமு. 9-20; 1 அர. 1.2 (மரபுரிமைப் பகுதிகள்). இவை குலமரபு அரசியல். தாவிதின் மரபு இறைவனால் நியமிக்கப்பட்டது என்று காண்பிக்கும் இடையிடையான குறிப்புகளாலான அரசியல விளம்பரம என்பது மூலத்தில் ஒரு தனிப்பட்ட பகுதியாகும் (2 சாமு. 14:17; 18:28; 1 அர. 1:17,19).

எலியா வரலாற்றின் பொருள் முக்கியமாக. இஸ்ரயேலின் கடவுளாகிய யாவேயின் வல்லமைக்கும் கானானியரின் செழிப்பின் தெய்வமாகிய பாகாலுக்குமுள்ள போராட்டமாகும். இரு அரசியல். பொருளாதார அமைப்புகள் இதன் பின்புலத்தில் உள்ளன. படைப்பிலும். இயற்கையிலும். வறட்சிபோன்ற நெருக்கடியின் காலங்களிலும் மக்களுக்கு யாவே ஆண்டவராயிருக்கிறார். அவர் கட்டளை விடுக்க. அவரது இறைவாக்கினர் மூலமாக யாவேயின் வார்த்தை நிறைவேறுகிறது.

எலிசா கதைகள் முற்றிலும் வேறுபட்ட ஒரு படத்தைத் தருகின்றன. மக்கள் தேவையின் நேரங்களில் நாடி வரக்கூடிய கடவுளின் அடியார் எலிசா. கடவுளின் மனிதராக அவருக்கு தெய்வீக ஆற்றல் இருக்கிறது. ஏற்பட்ட ஆபத்திலிருந்து மனிதருக்கு விடுதலையளிக்க அவர் வல்லவராயிருக்கின்றார் (கோடரி மீட்டல். தண்ணீரைச் சுத்திகரித்தல் முதலிய கதைகள் காண்க). எலியா. எலிசா பகுதிகள் யாவே. வரலாற்றின் ஆண்டவர் மட்டுமன்று. இயற்கையிலும் ஆண்டவராயிருக்கிறார் எனப் போதிக்கின்றன. தேவையின் நேரங்களில் அவரது விடுதலையை அனுபவிக்க இயலும்.

4. வரலாறு பற்றிய இறைவாக்கு விளக்கம்

ப.ஏ. இறைவாக்கினரின் செய்தியில் முக்கியமான ஒரு பகுதி என்னவெனில். யாவே வரலாற்றின் ஆண்டவர் என்பதாகும். அவர் இஸ்ரயேலின் வாழ்க்கையை (destiny) மட்டுமன்று. எல்லா நாடுகளின் வாழ்க்கையையும் வழிநடத்துகிறார். கடவுளின் தலையீடு நெருங்கியிருக்கிறது என்ற உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் தவிர்க்க இயலாதவாறு பேசுவதற்கு அவர்கள் வற்புறுத்தப்பட்டனர். இஸ்ரயேலின் பாவத்தினால தண்டனையளிக்கும் அவரது தலையீடு ஏற்படுகிறது. மன்னித்துப் புதுப்பிக்கும் அவரது வாக்குறுதியானது. அவரது இரக்கத்திலும். பரிவிலும் அடிப்படை பெறுகிறது. இறைவாக்கினரின் தண்டனைத் தீர்ப்பும் வாக்குறுதியும் அடங்கிய முழுச் செய்தியையும் ஒருவர் பார்க்கும்போது. மனிதரோடுள்ள கடவுளின் செயல்பாடுகளில் இந்த இரட்டைத் தன்மை தெளிவாகிறது.

அவர்கள் தண்டனைத் தீர்ப்பைப்பற்றிப் பேசும் போது. நிகழ்கால வரலாறானது அதன் உடனடியான வருங்காலத்தில் என்ன நிகழவிருக்கிறது என நம்பப்பட்டதோ, அதன் அடிப்படையில் புரிந்துகொள்ளப்பட்டது. எ.கா. ஆமோசின் இறைவாக்குகள் என் மக்களாகிய இஸ்ரயேலுக்கு முடிவு வந்தது (ஆமோஸ் 8:2) என்ற உறுதியான நம்பிக்கையிலிருந்து எழுந்தன. மன்னிப்பின் காலம் சென்று போயிற்று (7:8 ஒப்பிடுக எரே. 15:1.2). தண்டனையளிக்க கடவுளின் வருகையின் திட்டமான நேரம் அடுத்துவிட்டது.

சிங்கம் கர்சனை செய்கின்றது. அஞ்சி நடுங்காதவன் எவன் (ஆமோஸ் 3:8)

நான், நானே அவர்களைக் கவ்விப்பிடிப்பேன், தூக்கிக் கொண்டு போவேன். விடுவிப்பவன் எவனுமே இரான். (ஒசே. 5:14 பி.).

வருங்காலம் முற்றிலும் யாவேயின் கைகளிலிருக்கிறது. அவர் கட்டுப்பாட்டில் வரலாறு இருக்கிறது. நிகழ்ச்சிகளின் போக்கினை மாற்றிட வேறொருவராலும் தலையிட இயலாது (5:14) தண்டனைத் தீர்ப்பை அறிவிப்பதின் அமைப்பிலுங்கூட இது தெளிவாக வருகிறது. அதற்கு இரு பகுதிகள் இருக்கின்றன. அவையாவன: குற்றச்சாட்டும் (எசா. 8:6). அதன் பயனான இறைவனின் தலையீடுமாகும்.

இதோ பெருக்கெடுத்துப் புரண்டோடும் ஆற்றை (யூபிரத்தீஸ்).
அதாவது. அசிரிய அரசனையும் அவனுடைய மேன்மையான படைத்திரள் அனைத்தையும்
ஆண்டவர் அவர்மேல் புரளப்பண்ணுவார்
அது வாய்க்கால்களையெல்லாம நிரப்பி.
கரைபுரண்டு.
யூதா நாட்டுக்குள் பாய்ந்து.
அதன் கழுத்தை எட்டும் (8:7,8· ஒப்பிடுக 28:2-4).

கடவுள் செய்யவிருக்கும் செயலைப் பற்றி மக்கள் அற்பமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள் (5:19). ஆனால். கடவுள் தமது வேலையைச் செய்வார் என்பது எசாயாவுக்கு நிச்சயமானது (28:29). அவர் தமது முழுத்திட்டத்தையும் நிறைவேற்றுவார்

(10:12அ. ஒப்பிடுக எரே.23:20. ஆமோஸ் 4:12). சீயோனையும். கடவுளால் திருப்பொழிவு செய்யப்பட்டவரையும், நடுவாகக் கொண்ட எருசலேம் மரபுகளில் ஊறிப்போன எசாயா. அண்மையிலிருக்கும் தண்டனைத் தீர்ப்பை ஒரு புதுமையான செயல் என்று மட்டும் கருதினார்.

தண்டனைத்தீர்ப்பளிக்கும்படி கடவுளின் தலையீடு எச்சரிப்பின்றி வருவதில்லை. அது இறைவாக்கினர்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது. இணைச்சட்ட முறையான ஒரு ஒழுங்கமைப்புபோல ஆமோசில் இந்த உண்மையானது கீழ்க் காணும் வகையில் தரப்படுகிறது.

> இறைவாக்கினர்களாகியத் தம் ஊழியருகுத் தமது மறைபொருளை வெளிப்படுத்தாமல். ஆண்டவராகிய இறைவன் ஏதும் செய்யா (ஆமோஸ்.3:7; 1அர.22:17; எரே. 23:18).

ஆகையால். இறைவாக்கினர் அடையாளச் செயல்கள் என அழைக்கப்படும் விந்தையான செயல்களைச் செய்தனர். வெறுங்காலில் பிறந்தமேனியுடன் நடந்து போவது (எசாயா). நுகத்தையணிந்துக் கொள்வது (எரேமியா). பாத்திரத்தை உடைத்தல் (எரேமியா) போன்ற செயல்கள் மூலமாக வருங்காலத்தில் என்ன வரவிருக்கிறது என மனத்தில் மக்கள் பதிய வைத்தனர்.

நிகழ்கால வரலாற்றினை வருங்காலத்தில் நிகழவிருப்பதிலிருந்து புரிந்து கொள்வதில். கடந்த காலத்தினை தண்டனைத் தீர்ப்பாகவும். வாக்குறுதியாகவும் சிந்திப்பது இடம் பெறுகிறது.

தண்டனைத் தீர்ப்பாக பஞ்சம். வறட்சி. பயிர்கள் அழிக்கப்படுதல். கொள்ளைநோய். போர் (ஆமோஸ் 4:7-11) ஆகிய வரலாற்று நிகழ்ச்சிகள். கடவுள் இஸ்ரயேலரோடு பேசி அவர்களை எச்சரிக்கும் தருணங்களாயிருந்தன. வாக்குறுதியாக கடவுள் மக்களை மறுபடியும் தம்மோடுள்ள அவர்கள் வாழ்க்கையில். அவர்கள் எங்கிருந்து புறப்பட்டார்களோ அந்த பாலை நிலத்துக்கு நடத்திச் செல்வார் (ஒசே. 2:14பி.). புனித நகரத்தை நீதியுள்ள தலைவர்களினாலும் ஞானமுள்ள ஆலோசகர்களாலும் புதுப்பிப்பார் (எசா. 1:26). ஈசா என்னும் அடிவேரிலிருந்து ஒரு கிளை எழும்பும் (11:1). ஈசாயின் மகனாகிய தாவிதைத் தெரிந்து கொள்ளும்போது நடந்தது போல. இது நிறைவேறும்.

வரலாற்றின் முடிவு தண்டனையன்று என்பது இதன் பொருள். ஆகையால். இறுதிகால நிகழ்ச்சிகள் என்னும் கருத்தைப் பெரிய இறைவாக்கினரின் செய்தியோடு சேர்க்க இயலாது. தண்டனைக்குப் பின்னே ஒரு தொடக்கம் இருக்கிறது. பழையதுடன் ஒப்பிடக் கூடியதாயினும், புதிதான ஒரு ஆரம்பம் இது. எ.கா. எரேமியா ஒரு புதிய உடன்படிக்கையைப் பற்றிப் பேசுகிறார் (31:31-34). சிறையிருப்பின் இறைவாக்கினர் ஒரு புதிய பயணத்தைப்பற்றிப் பேசுகிறார் (ஏசா.43:14மு.). கடவுளின் புதிய செயல் ஒருவருக்குப் பழையதை நினைவுபடுத்திய போதிலும் (48:20,21; 52:11). புதியதைப் பழையதுடன் ஒப்பிட இயலாது (43:18மு; 52:12 நீங்கள் விரைந்து புறப்படுவ தில்லை). ஆகையால் இங்கே ஒரு தொடர்ச்சியும், தொடர்ச்சியின்மையும் ஏற்பட்டு, வரலாற்றில் கடவுளின் எல்லாச் செயல்களுக்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துகின்றன.

ஆகவே. இறைவாக்கினர் ஒரு முழு வரலாற்று அளவைக் காண்பிக்கிறார்களேயன்றி. பிரிந்து நிற்கும் தனி நிகழ்ச்சிகளைத் தரவில்லை. வரலாறானது மாற்ற முடியாதபடி உறுதிப்படுத்தப்பட்ட கடவுளின் மாறுதலில்லாத திருவுளத்தைச் சார்ந்திருக்கவில்லை. இது விளைவு எதுவாயினும் தம் நோக்கங்களை நிறைவேற்றும் எதேச்சாதிகாரியின் விருப்பத்தைச் செயல்படுத்துவதன்று. ஆள்தன்மை சாராத மெய்யியல் போன்ற கர்மவினையை. அதாவது செயலுக்கும். அதன் விளைவுக்குமுள்ள தொடர் பாகிய பழிவாங்கும் நீதியை செயல்படுத்துவதுமன்று. ஏனெனில். தண்டனைத்தீர்ப்பின் செய்தியின் நோக்கமும் கேட்கிறவர்களில் ஒரு மாறுதலை விளை விப்பதாகும (எரே. 26:2,3; 36:3; சக. 1:4; யோனா. 3:8மு.). தனடனைத தீர்ப்பையும் வாக்குறுதியையும் யாவே தமது மக்களுக்கு ஆற்றும் இலவசமான மீட்பின் செயலின் கட்டத்தில் மட்டும் சரியாகப் புரிந்து கொள்ள இயலும்.

வரலாற்றில் கடவுளின் ஆளுகை என்ற இறைவாக்கின் செய்தியானது முக்கியமாக இஸ்ரயேலரின் வரலாற்றைக் குறிப்பிடுவதாகக் காணப்பட்டபோதிலும். இங்கு கடவுள் உலக வரலாற்றையும் தொடங்கி வைக்கிறவராகக் கொள்ளப்படுகிறார். இஸ்ரயேலரையும் பிற மக்களையும் இடம் பெயரச் செய்தவர் கடவுளே (ஆமோஸ் 9:7). முழு உலகின் நீதியுள்ள நீதிபதியாக அவர் நாடுகளை நியாயந்தீர்க்கிறார். இஸ்ரயேலின் பகைவர்களின் இயக்கத்தையும் அவரே நடத்துகிறார். அசிரியா யாவேயின் சினக்கோலாகவும். சைரஸ் அவரால திருப்பொழிவு பண்ணப்பட்டவராகவும் எண்ணப்பட்டனர் (எசா.45 ஒப்பிடுக 41:25). இஸ்ரயேலின் சிறப்புத் தன்மையைக் காண்பிப்பது ப. ஏ. இன் முக்கிய நோக்கமானபோதிலும் உலக வரலாற்றைப் பற்றியும் இங்குப் பொதுவாகக் கூறப்படுகிறது (எசே.36:23; எசா. 40:5; 43:8மு; 2:2மு. முதலியன காண்க).

உலக வரலாறு மட்டுமன்று. இயற்கையுங்கூட கடவுளின் நேரடியான முழுக் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது (ஆமோஸ் 1:2; 4:13; எசா. 41:17-19; 43:2 முதலியன). இறைவாக்கினர் கடவுளை படைப்பு முழுவதற்கும் ஒரே ஆண்டவராக கண்டுணர்ந்தனர் எனக் குறிப்பிடுகிறார். ஹல்ஃப் என்னும் அறிஞர்.

யோசுவாவின் நூலானது ஐஞ்சுருளிலடங்கியுள்ள மூலங்களின் (ஹெக்ஸ்பெல்ட்) தொடர்ச்சியாகும் என்ற கருத்துக்கு நேர் எதிராக. நாத் என்பவரது. ஆராய்ச்சியைப் பின்பற்றி. யோசுவாவின் நூலிலிருந்து நீதித்தலைவர்கள். 1:2 சாமுவேல். அரசர்களின் நூல்களில் தொடரும் வரலாற்று நூல் துவங்குகின்றது எனப் பெரும்பாலான அறிஞர்கள் கூறுகின றனர். யோசுவா முதல் 2 அரசர்கள் வரையுள்ள இந்த வரலாற்றிற்கு இணைச்சட்ட வரலாறு என்பது பெயர். ஏனெனில். இதின் இறையியல் போக்கானது. இணைச்சட்ட நூலின் கருத்தை ஒத்திருக்கிறது. இப்பகுதியில் கானானில் குடியேறியது முதல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட துரத்தப் பட்டது வரையுள்ள இஸ்ரயேலரது வரலாறு இடம் பெறுகிறது.

இணைச்சட்ட வரலாற்று ஆசிரியர். தமது நூலை வாய்மொழி மரபுகளாகவும். எழுதப்பட்ட மூலங்களாகவும் இருந்தனவற்றிலிருந்து எடுத்துத் தொகுத்துள்ளார் (2 சாமு. 1:18; 1அர.11:41; 14:29; 16:20 காண்க). தோற்றத்தின்படி மாற்றமின்றி அவர் பயன்படுத்தியிருக்கின்ற பெரும் கூட்டுத்

தொகுதியான மூலங்களில், தாவிது அதிகாரத்துக்கு உயர்ந்த நிகழ்ச்சி (1சாமு. 16 - 2சாமு. 5). பதவி கைப்பற்றும் பகுதி (2 சாமு. 9-20; 1 அர. 1.2). எலியா. எலிசா கதைகள் (1 அர. 7-2; 2அர. 2-13) ஆகியவை சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

கானானில் இஸ்ரயேலரது வரலாற்றின் தொடக்கங்கள் இருக்கைக்கான அவர்களது போராட்டம் தாவிது தலைவராகி பெரும் பேரரசை நிறுவுவதுவரை அவர்களுடைய பகைவர்களோடுள்ள அவர்களது போர், நாடு பிரிதல், வட நாடான இஸ்ரயேல் கி.மு. 722 இல் சடுதியாக விழுதல், தென்னாடான யூதா கி.மு. 598-587 இல் அழிவுக்குள்ளாதல், அதன் நம்பிக்கைகள் அனைத்தும் தகர்தல் ஆகிய வரலாறுகள் யாவும் இங்குக் காணப்படுகின்றன. இஸ்ரயேலரது இந்த வரலாற்றினை, கடந்த காலம் பற்றிய அன்னார் கதையினை, நிரந்தரமான நூல் வடிவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோட இணைச்சட்ட வரலாற்று ஆசிரியர் எழுதவில்லை. ஆனால் வரலாற்றில் கடவுளின் செயல்பற்றிய சில பாடங்களைப் போதிக்கும் நோக்கத்தோடேயே அவர் எழுதினார். வட இஸ்ரயேலின் வரலாற்றின் நாயகர் முடிவில் வரலாறுபற்றிய தமது கருத்தினை தெளிவாகத் தந்துள்ளார் (2 அர. 17:7-18). அசிரியரால் வட நாடு அழிக்கப்பட்டது, கடவுளுக்கு எதிரான இஸ்ரயேலரின் பாவம், கட்டளைகளை அவர்கள் மீறுதல், இறைவாக்கினரின் எச்சரிப்புக்குச் செவி கொடுக்க மறுத்தல் ஆகியவற்றிற்குக் கடவுள் தந்த தண்டனையின் பலனாகும்.

நாட்டை இஸ்ரயேலர் சொந்தமாகக் கொண்டதும், ஒரு நாடாக அவர்கள் ஆனதும் கடவுளின் அன்பு, பராமரிப்பு ஆகியவற்றினாலேயாம். மோசேயின் மூலம் கூறப்பட்ட (இணை. 32:46பி.) தெய்வீக வார்த்தைக்குக் கீழ்ப்படிவதிலேயே அவர்களது வாழ்வு சார்ந்திருக்கிறது. இணைச்சட்ட ஆக்கியோர் தாம் சொன்னவற்றை ஒரேவிதமாகத் திரும்பத் திரும்பச் சொல்லி அறிவுறுத்துவதில் சோர்வடைவதில்லை.

இந்தத் திருச்சட்ட நூல் உன் வாயை விட்டு அகல வேண்டாம். இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி. இரவு பகலாக அதைத் தியானித்துக் கொண்டிரு. அப்பொழுதுதான் நீ செல்லும் இடம் எல்லாம் நலம் பெறுவாய். வெற்றி காண்பாய் (யோசு. 1:8மு.).

இஸ்ரயேலரின் செழிப்பானது, உடன்படிக்கையின் சட்டத்துக்குக் கீழ்ப்படிவதைச் சார்ந்திருந்ததேயானால், அதைத் தள்ளிவிடுதல் அவர்களுக்கு அழிவைக் கொண்டுவரும் (யோசு. 23:15மு.).

1.2 குறிப்பேடு நூல்கள், எஸ்றா நெகேமியா ஆகிய நூல்கள் முக்கியமாக ஒரே கையிலிருந்து வருகின்றதெனப் பெரும்பாலான அறிஞர்கள் சம்மதிக்கின்றனர். அவரது வரலாறு, இணைச்சட்ட வரலாற்றைப்போல், நாட்டைச் சொந்தமாக்கினதிலிருந்தல்ல, முடியாட்சி நிறுவப்பட்டு, திருக்கோவில் கட்ட தாவிதின் திட்டத்துடன் வழிபாடு ஒழுங்குபடுத்துதலிலிருந்தே துவங்குகின்றது. ஒரு முகவுரை என்ற முறையில் சவுலைப்பற்றி சுருக்கமாகச் சொல்லிவிட்டு (1 குறி. 10). ஆசிரியர் தமது முக்கிய பொருளான தாவிதுக்குக் கடந்து செல்லுகிறார். தாவிதுக்கு 19 அதிகாரங்களும் (1 குறி. 11-29), சாலமோனுக்கு 9 அதிகாரங்களும் (2 குறி. 1-9) தரப்பட்டுள்ளன. 2 குறிப்பேட்டின் மீதியான பகுதி யூதாவின் வரலாற்றை விவரிக்கிறது. இஸ்ரயேலாகிய வடநாடு முற்றிலும் விடப்படுகிறது. யூதா, இஸ்ரயேல் என்றும் கடவுளின் மக்களென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாபிலோன் சிறையிருப்பு, சைரசின் விளம்பரம் ஆகியவை வரை இந் நிலைமை இருக்கிறது. எஸ்றா நெகேமியாவில் வரலாறு தொடரப்படுகிறது (எஸ்றா 1:1மு; 2 குறி. 36:22மு.). திருச்சட்டத்தை எஸ்றா வாசிப்பதுடன் மக்கள் நிறைவேற்றும் ஒரு உடன்படிக்கையில் இது முடிகிறது.

இணைச்சட்ட வரலாறு இருக்கும்போது, தாமே அதை ஒப்புக்கொண்டு அதிலிருந்து தாராளமாகக் கடனெடுத்த போதிலும், இஸ்ரயேலின் கடந்த காலை வரலாறு பற்றி குறிப்பேட்டு ஆசிரியர் எழுதுவானேன்? தாம் வாழ்ந்த காலம் வரையிலுள்ள வரலாற்றினை முழுமைப்படுத்த அவர் விரும்பியிருந்தால் (கி.மு. 4000) அவருக்கு முந்தினவர்விட்ட இடத்திலிருந்து அவர் தொடங்கியிருக்கலாமே! இக் கட்டுரையின் வரையறையானது விவரமான விவாதத்தைத் தடை செய்கிறது. குறிப்பேட்டு ஆசிரியர் இஸ்ரயேலில் கடவுளின் ஆளுகை பற்றிய தம் கருத்தில் இதன் பதிலைத் தருகிறார். தாவிது, சாலமோன் ஆகியோரின் ஒற்றுமையான பணியில், வரலாற்றில், கடவுளின் அரசானது உணரப்பட்டது. இந்த வரலாற்றிசிரியர் யூதாவை யாவேயின் நாடாகக் கொண்டார் (2 குறி. 13:8). எனினும், தாவிதின் அரியணையில் பின்வந்தவர்களின் கீழ்ப்படியாண்மையினால், இது தொடரவில்லை என்று கண்டார்.

5. இறைவாக்கிலிருந்து எழுந்த மறைபொருள் காட்சி

தனிப்பட்ட நாடுகளின் அழிவு பற்றி முன்னறிவிக்கும் இறை மொழிகள் பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். எ.கா.நாகூமில் நினிவே, ஒபதியாவில் ஏதோம். அதோடு நாடுகள் பற்றி பெயர் சொல்லி அறிவிக்கப்பட்ட இறைமொழிகளின் சேர்க்கைகளும் இருக்கின்றன. எ.கா. எசா. 13-23 இல் பாபிலோன், மோவாபு, தமஸ்கு, எத்தியோப்பியா, எகிப்து ஆகியவற்றிற்கு எதிராகவும்எரேமியா 46-51இல் எகிப்து, மோவாபு, அம்மோன், ஏதோம், பாபிலோன் ஆகியவற்றுக்கு எதிராகவும், எசேக்கியேல் 25-32 இல் அம்மோன், பெலிஸ்தியா, தீரு, எகிப்து ஆகியவற்றிற்கு எதிராகவும் இவை கூறப்பட்டன. இப் பட்டியலிலுள்ள நாடுகள் ஒரு சமயத்தில் அல்லது இன்னொரு காலத்தில் இஸ்ரயேலரது எதிரிகளாயிருந்தார்கள் என்பதைக் கண்டுணர ஒருவரும் தவறலாகாது. அவர்களது அழிவு இஸ்ரயேலின் நல் வாழ்வாகவும், புதுப்பித்தலாகவும் விளையுமென்று நம்பப்படுகிறது.

எசா. 24-27 இலும், 9-14 இலும், தனிப்பட்ட நாடுகளின் அழிவிலிருந்து பிற இனத்தார் உலகத்தின் அழிவும், அதிலிருந்து திருநாட்டில் கடவுளின் மக்கள் திரும்பவும் ஏற்படுத்தப்படுதலும் என்ற மாறுதல் இருக்கிறது. செக்காரியாவில் இஸ்ரயேலரின் பகைவர்களை அழித்தல் என்பது, தாவிதின் வம்சம் திரும்பவும் ஆளுகையில் அமர்த்தப்பட, மண்ணுலகு அனைத்திற்கும் அரசனாக நாடுகளெல்லாம் யாவேயை ஏற்றுக்கொள்ள கடவுளின் அரசு இறுதியாக ஏற்படுத்தப்படுவதின் ஒரு பகுதியாகும். இப்பொழுது கடவுளின் மக்கள் துன்பம் அனுபவிக்கின்றனர். ஆனால், அவர்கள் விடுவிக்கப்படும் காலம் அதிக தூரத்தில் இல்லை (எசா. 24-27). உலக அழிவானது அகிலாண்ட அளவு பொதுவாகி

விண்மீன்கள் மண்ணுலகின் அரசர்கள் எல்லாரையும் பாதிக்கிறது. இங்கேயும் நேர்மையாளர்கள் தங்களது நிச்சயமான விடுதலைக்காகப் பொறுமையோடே காத்திருக்கின்றனர் (ஆதி. 26). கடவுளின் மக்கள் செழித்து. உலகெங்கும் பரவுவார்கள். நாடுகடத்தப்பட்ட வர்கள் எருசலேமில் சேர்க்கப்பட்டுவார்கள். அங்கே சீயோனில் அவர்கள் யாவேயை வழிபடுவார்கள் (ஆதி. 27).

மறைபொருள் காட்சி இலக்கியத்தினை இறைவாக்கின் குழந்தை (Rowley) என்று கருத இயலாத போதிலும், மேலே கூறப்பட்ட இறைவாக்குகளில். தானியேல். 1 ஏனோக்கு. எஸ்ட்றாஸ் சிபிலைன் தெய்வ மொழி III முதலியன போன்ற மறைபொருட்காட்சி நூல்களை நினைவுபடுத்தும் தன்மைகள் இருகின்றன. மறைபொருட் காட்சி இலக்கியத்தின் முக்கிய தன்மை தொடக்க கால இறைவாக்குகளை விட. சிறப்பாக வரலாறு பற்றிய கருத்தில். வேறுபட்டதாகும்.

மறைபொருட்காட்சி உலகில். வரலாறானது பல காலக் கட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது. எதிரிகளால் துனபுறுத்தப்படும் நேர்மையான கடவுள் சடுதியாகத் தலையிட்டு எதிரிகளை அழித்து நீதியின் என்றுமுள்ள அரசினை ஏற்படுத்துவதற்குப் பொறுமையோடே காத்திருக்கின்றனர். பொன். வெள்ளி. வெண்கலம். இரும்பு. களிமண் (தானி. 2) ஆகியவற்றால் ஆக்கப்பட்ட சிலையின் காட்சியில் ஒன்றன்பின் ஒன்றாக எழுந்த பாபிலோனிய. மேதிய. பாரசீக. கிரேக்க பேரரசுகளின் காலங்களை நம்பிக்கையாளர் கண்டுணர்கின்றனர். அவ்வாறே. நான்கு விலங்குகள் பற்றிய காட்சியில் (தானி. 7) நான்காவது விலங்கே மிகவும் கொடியது. நான்காவது விலங்கின் சிறிய கொம்பானது. தூயவர்களுக்கும். உன்னதமான கடவுளுக்கும் எதிரியான அந்தியோகஸ் எப்பிபானஸைக் குறிக்கும். அவன் திடீரென அழிக்கப்பட்டு. அரசானது உன்னதமானவருடைய தூயவர்களுக்கு அருளப்படும் (7:26.27). வரலாற்றின் இறுதி. கடவுளுக்கும் அவரது பகைவருக்குமிடையிலுள்ள மோதல் அகற்றப்படுதல். உயிர்த்தெழுதலின் பொன்யுகம் தொடர்தல். பிரதிபலன். நீதித் தீர்ப்பு ஆகியவைகளில் கவனம் குவிகின்றது. இந்தக் கடவுளின் பகைவர்கள் நம்பிக்கையாளரின் உண்மையான (வரலாறு சார்ந்த) பகைவராயிருக்கலாம் அல்லது அகிலாண்ட அளவுள்ள கோர உருவுள்ள விலங்காகிய எதிரியாயிருக்கலாம். இறைவாக்கு களில இருப்பதுபோல. நீதியர்கள் தீமையின் ஆளுகையை அனுபவித்தபோதிலும் வரலாறானது கடவுளின் கட்டுப்பாட்டினுள் இருக்கிறது. ஆனால் குறிக்கப்பட்டக் காலம் வரை கடவுள் அதில் தலையிடுவதில்லை.

6. புதிய ஏற்பாடு

இயேசு கிறிஸ்துவும் அவரைப் பற்றிய செய்தியும் பு.ஏ. முழுவதிற்கும் ஒரு ஒருமைப்பாட்டினை அளித்தபோதிலும். ப. ஏ. ஐப்போலவே. பு.ஏ. உம் ஒருங்கிணைந்த ஓர் இறையியல் நூலாகாது. வேறுபட்ட நூல்களையும் மரபுகளையும் சிறப்பாகப் படிப்பது தேவை.

நற்செய்தி நூல்கள். இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்று முதனிலைக் குறிப்புகளைப் போல் காட்சியளித்த போதிலும். அவை வாழ்க்கை வரலாறுகளல்லவே. இயேசுவே கிறிஸ்து என்பதும். கடவுளின் மைந்தர் என்பதும். கிறிஸ்துவில் நம்பிக்கை வைப்பதால் ஒருவர் நிலை வாழ்க்கையைப் பெற்றுக் கொள்கிறார் என்பதுமான நம்பிக்கை வாசகர்களில் ஒளிரச் செய்வதே அவற்றின் முக்கிய நோக்கமாகும் (யோ. 20:31). இயேசுவின் பின்னடியாருக்கும் மன்பதை முழுவதற்கும் அவர்களது இருக்கைக்கு இன்றியமையாததான ஒரு நிகழ்ச்சியினை நற்செய்தி எழுத்தாளர்கள் சுட்டிக் காண்பிக்கின்றனர்.

சமநோக்கு நற்செய்தி நூல்களைப் பற்றிய ஆராய்ச்சியானது பெயர் சூட்டும் மத்தேயு. மாற்கு. லூக்கா ஆகிய நற்செய்தி நூல்களில் கூறப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் முதல் அறிவிப்பு இதற்கு ஏற்ற ஓர் எடுத்துக் காட்டாகும்.

காலம் நிறைவேறி விட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது (மார். 1:15).

அதாவது. இறையாட்சி ஆரம்பிக்கப்படும் இறுதியான் வேளை வந்துவிட்டது. இறையாட்சியின் தொடக்கம் நடந்தேறியாயிற்று. விதையானது தானாக வளர்வது போல. மனிதரது எவ்வித உதவியுமின்றி இது முற்றிலும் கடவுளின் செயலாகும். அவருக்குத் (அதாவது. மனிதருக்கு) தெரியாமல் விதை முளைத்துப் பயிராவது போலிருக்கும் (automate 4:27பி.).

பாசிலுயு டவ் தியவ் என்ற கிரேக்கச் சொற்றொடரானது பொதுவாக இறையாட்சி என மொழிபெயர்க்கப்படுகிறது. இது ஓர் அரமேயச் சொற்றொடரிலிருந்து வருகிறது. இதன் பொருள் இறைவன் ஆட்சி புரிகின்றார் என்பதாகும். இது ஆட்சி புரிகின்றவர் இறைவனே என்னும நம்பிக்கையை வெளிப்படுத்தும் ஓர் இறையியல் கருத்து. இது. அரசியல் அல்லது புவியியல் சார்ந்த கருத்தன்று. இரபிகளின் இலக்கியத்தில் இரண்டு சொற்றொடர்கள் இருக்கின்றன: 1. இறைவனின் ஆட்சியின் நுகத்தை ஏற்றுக்கொள்ளுதல், அதாவது பிற தெய்வங்களை மறுதலித்தல். 2. இறைவனின் குதிரை வெளிப்படும். அதாவது. நுகத்தை ஏற்றுக் கொண்டபடியால், துவங்கப்பட்டிருப்பது நிறைவேறுதல் பெறும் என்ற இறுதிகால நம்பிக்கையைக் குறிப்பது. மெசியா இந்த நிறைவேறுதலுக்கு முன்னரே தோன்றிய போதிலும் அவரைப் பற்றிய கருத்து சில வேளைகளில் இதோடு உறவுபடுத்தப்படுகிறது.

இயேசுவின் முழுச் செய்தியின் சுருக்கமாக மார். 1:15 தரப்படுகிறது. மரணப் படுக்கையிலிருக்கும் ஒருவர் என் மரண வேளை வந்தது என்று கூறுவதுபோல இந்த பகுதியில் இயேசுவின் போதனையில் இறையாட்சியானது உண்மையில் விவரிக்கப்படுகிறது: நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஒட்டுகிறேன என்றால் இறையாட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா. (லூக். 11:20). ஆண்டவருடைய வேண்டலில் உம்முடைய ஆட்சி வருக என்பது நிச்சயமாக வருங்காலத்தைக் குறிக்கும். இந்த ஆட்சியைக் கொண்டுவருவதில் மனிதருக்கு ஒரு பங்குமில்லை. கடுகு விதை. புளித்தமாவு ஆகிய உவமைகளில் சிறய தொடக்கம். இறுதிப் பருவம் ஆகியவை பற்றிய குறிப்பினைச் சிறப்பாகக் கவனிக்கவும.

நிகழ்கால உண்மை. அதன் வருங்கால நிறைவேறுதல் என்ற இரு தன்மைகளும ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இருமை நிலைமை ஒன்று இவண் இருக்கிறது. தீயோனோடுள்ள போரில் இயேசு ஈடுபட்டிருக்கிறார். இது இறுதிவரை மாறாத இருமை அல்ல. ஏனெனில். பேய்களைத் துரத்துவதிலும். நோய்களைக் குணமாக்குவதிலும் இயேசு தீயோனின் வல்லமையை அழிக்கிறார். இப்பொழுது. முன்னர்

என்பனவற்றிற்கிடையே இழுவை நிலவுகின்றது. இப்பொழுது நிகழ்வது நிச்சயமான இறுதி நிகழ்ச்சியாகும். இதற்கு இறுதிகால அளவு உண்டு. இதன் தொடர்ச்சியானது நடைபெறும் இயலுலக்கத்திலல்ல, கடவுளின் செயலின் தொடர்ச்சியிலிருக்கிறது. பேசுகின்றவரும் செயலாற்று கின்றவரும் தமது வார்த்தையை நிறைவேற்றுகிறவருமாகிய கடவுளைப் பற்றிய இறைவாக்கின் வற்புறுத்தலை இவண் தெளிவாகக் கண்டுணரலாம்.

மானிட மகன். (மானிட மகள்) என்ற சொற்றொடரை உபயோகிப்பதிலும் மறைபொருள் காட்சிக் கூறு இருக்கிறது. இவர் உலகின் நீதிபதியாகத் தோன்றுகிறார் (லூக். 16:26-30). மானிடமகனை வரப்போகிற உலகத்தின் நீதிபதியாக இயேசு எதிர்பார்த்தார். மானிடமகன் என்ற கருத்தோடு உயிர்த்தெழுதல் சிந்தனை (மார். 12:18-27). தண்டனைத தீர்ப்பின் நெருப்பு (9:43; 10:28). புது யுகத்தின் நீதித் தீர்ப்புக்குப்பின் நிலைவாழ்வு மத். 19:28 இல் புது யுகத்திலிருந்து நிகழ் யுகதிற்கு வரும் யுகத்திற்கிடையிலுள்ள வேறுபாடு (மார். 10:30) ஆகியவை தொடர்புபடுத்தப்பட வேண்டும். கும்ரான் சமுதாயத்தினர் நீதியின் குருவுக்கு உத்தமமாய் இருப்பவர்கள் விடுவிக்கப்பட்டு தேர்ந்துகொள்ளப்பட்டவர்களின் கைகளினால் தீயோர் தண்டிக்கப்படும் நீதித் தீர்ப்பு வருவதற்குக் காத்திருந்தனர். இதுபோன்ற மறைபொருட் காட்சிக் கருத்துக்கள் இயேசுவின் போதனையில் முக்கிய இடம் பெறவில்லை.

வரலாற்றைவிடவும். நிகழ்காலத்தைப் புதிய முறையில் புரிந்து கொண்டமை முக்கியமான அழுத்தமாகும். திட்டமான இறுதி வேளை வந்துவிட்டபடியால், மக்கள் அதனை ஒட்டியோ. வெட்டியோ முடிவெடுகக வேண்டும். காலத்தைப் பற்றிய இவ்வித கருத்தின் தொடர்பு என்னவெனில், வரலாறானது ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்பதும், ஒரு பதிய வரலாறு துவங்குகிறது என்பதுமாகும். இதனால் வருங்காலமும், முக்கியத்துவமும் பொருளும் பெறுகிறது. அது இயேசுவுக்கு மனிதர் அளிக்கும் மறுமொழியைப் பொறுத்து வாக்குறுதியாகவோ அச்சுறுத்தலாகவோ அமைந்திருக்கும். வரலாறு பற்றிய இறைவாக்கின் விளக்கம் இங்குத் திரும்பவும் காட்சியளிக்கிறது. உறுதியாய் நிகழவிருக்கும் (மேலே பார்க்கவும்) வருங்காலத்தின் அடிப்படையில் நிகழ்காலம் விளக்கப்படுகிறது. மனம் மாறுவதற்கான அழைப்பினை வரப்போகும் இறையாட்சியின் உறுதியிலிருந்து புரிந்துகொள்ள வேண்டும். இறையாட்சியின் அண்மை நிலைமையின் கோணத்தில் கடந்த காலம் நியாயந்தீர்க்கப்பட்டுக் கண்டிக்கப்படுகிறது. இந்த அழைப்பு வருமுன்னர் மனிதர் தமக்காக, தம் தீய செயல்களில் வாழ்ந்தனர் (மத். 7:11; மா. 8:38 முதலியன). இதன் பொருள் என்னவெனில் நிகழ்கால, வருங்கால மனித வரலாறானது, விடியும் அரசாகிய இறுதிகால நிகழ்ச்சியின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படுவதாகும்.

சமநோக்கு மரபில் தரப்படுகிறபடி இயேசுவின் செய்தியானது தனிப்பட்ட ஒரு குலத்தவரின் வரலாற்றில் இறையாட்சி நிறைவேறுவதன்று. மாறாக, இறையாட்சி என்பது மக்களின் இன வரையறைகளைத் தாண்டி நிற்பதாகும். இந்த அரசு, அமைதி, நீதி ஆகியவைகளை வரலாற்றின் சட்ட அமைப்புக்குள் நிறைவேற்றுவதிலோ, வரலாற்றினுள் காலத்தின் போக்கில் படிப்படியாய் வளருவதிலோ இருப்பதில்லை. இது வரலாறு முடியுமிடத்து ஆற்றலுடன் வருகின்ற, இயற்கைக்கு மேற்பட்ட தன்மையுள்ள, மீட்பின் புதியயுகமாகும். கடவுளின் இந்த ஆளுகை நியதி மனிதர் சார்பில் எவ்வித முயற்சியுமின்றி நிறைவேறுகிறது (டிங்க்ளர்). மரபினாலும், கடந்த காலத்தினாலும், பாவத்தினாலும், நோயினாலும், பேயினாலும் கட்டப்பட்ட மனிதருக்கு இறையாட்சியின் செய்தி கூறி அறிவிக்கப்படுகின்றது. அவர்கள் விடுவிக்கப்பட்டு மன்னிக்கப்படுகின்றார்கள். இயேசுவின் போதனையில் வரலாறு பற்றிய இறையியல் வெளிப்படையாக எடுத்துக்கூறப்படவில்லை. ஆனால் இறையாட்சியும், அதோடு வரலாற்றின் முடிவும் வந்து விட்டன என்ற அவருடைய செய்தி மனிதருக்கு வரலாற்றிலிருந்து மீட்பைக் கொண்டுவருகிறது.

லூக்கா-திருத்தூதர்: இயேசு செயலாற்றவும் போதிக்கவும் செய்தவற்றிலிருந்து தொடங்கி, உரோமாபுரி வரையிலும் திருச்சபையின் பரவுதலோடு முடிவுறும் தொடர்பான வரலாற்றினைத் தருவதாக உரிமை பாராட்டும் ஒரே புதிய ஏற்பாட்டு எழுத்தாளராக லூகா இருகிறபடியால், புனிதர் லூக்காவின் இரு நூல்களாகிய, லூக்காவுக்குரிய நற்செய்தி நூல், திருத்தூதரருடைய செயல்கள் ஆகியவை சிறப்புக் கவனத்திற்குத் தகுதியுடையவையாகும் (திருத். 1:1 ஒப்பிடுக லூக். 1:1-4; திருத். 28:30.31). வரலாறு எழுதும் கிரேக்க முறைகள் லூக்காவுக்கு அறிமுகமானவைகளாயிருந்தன. முழு கிறிஸ்தவ வரலாற்றின் திட்டமான, ஒழுங்கான அறிக்கையினைத் தருவது அவரது அக்கறையாயிருக்கின்றது. அவர் வரலாற்றினை மூன்று பகுதிகளாகப் பிரிக்கிறார். இஸ்ரயேலரது வரலாறு, இயேசுவின் வரலாறு, தொடக்கத் திருச்சபையின் வரலாறு என்பனவாம்.

நற்செய்தி நூல்களில் அவர் தொடக்க முதல் கிறிஸ்தவ மரபினைத் தொகுக்கிறார். ஆனால் பல கட்டங்களில் வரலாறு பற்றிய அவரது கருத்து வெளிப்படுகின்றது. உடனடியான இரண்டாம் வருகைபற்றிய எதிர்பார்ப்பிற்கு எதிராக மக்களை அவர் எச்சரிக்கிறார் (லூக். 21:8). மறைபொருட் காட்சிக் கூறானது பின்வலிக்கப்படுகிறது. (மார். 13:14 ஒப்பிடுக லூக். 21:20). கிறிஸ்துவின் வாழ்வானது சில காலமாக நடைபெற்ற ஒரு வரலாற்று உண்மையாகும். திருநூலின் நிறைவேறுதலாக இயேசுவின் வாழ்க்கையினைப் பின்னோக்கிப் பார்க்க இயலும் (லூக்.22:37,44; திருத்.1:16). ஒரு சார்பில் பரமேறுதல் என்பது இயேசுவின் வாழ்வின் முடிவாகும் (பாரட் எழுதிய அண்மைக் கால ஆராய்ச்சியில் வரலாற்றாசிரியர் லூக்கா, பக். 56 பார்க்க). ஆகவே, நற்செய்தியானது பரமேறுதலின் விளக்கத்துடன் முடிவுறுகிறது (24). ஆனால் இன்னொரு வகையில், பரமேறுதல் என்பது புதிதான ஒன்றின். அதாவது, திருச்சபையின் வரலாற்றின் துவக்கமாகவுமிருக்கிறது. இந்தக் கருத்துக் கோணத்திலிருந்துதான் திருத. 1 இல் பரமேறுதல் பற்றிய விளக்கம் புதிதாய்த் தரப்படுகிறது (பாரட்). தாம் திரும்ப வருமளவும் கிறிஸ்து கடவுளின் வலது பக்கத்தில் அமர்ந்திருக்கிறார் (1:10; 2:33பி; 5:31,7.55பி.). தமது ஆவியினால் மண்ணிலே திருச்சபையின் பணியினை அவர் நடத்துகிறார். நற்செய்தியில் இயேசு ஒரு சமயத்தை நிறுவுபவராகத் தரப்படுகிறார். திருச்சபையின் வரலாறானது சிறப்பான அல்லது தானே இயங்குகின்ற ஒன்றன்று. அது இயேசுவின் வாழ்க்கையின் விளைவாகும் (பாரட்). கிறிஸ்து குறிப்பிட்ட ஒரு காலத்திலும் இடத்திலும் செய்தவற்றிலும், தமது திருச்சபையில் ஆவி மூலம் அவர் நிறைவேற்றி வருவனவற்றிலும் வரலாறானது பொருள் பெறுகிறது. வரலாறு பற்றிய லூக்காவின் கருத்தின்படி, மீட்பு வரலாற்றுத் தன்மையுடையது. கட்டளைச் சட்டமாக ஆவதோடு, இறுதியியலானது மிகவும் நீண்ட காலக் கட்டமாக நீடிக்கும்

ஒரு காலத்தின் இறுதி அதிகாரமாக அறியப்படுகிறது (டிங்க்லர்). வரலாற்றில் கிறிஸ்துவின் தொடர்பான செயல். கிறிஸ்துவின் அரசின் கீழ் திருச்சபை வாழ்தல். கூறி அறிவிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும் வார்த்தையின் மூலம் விரிவடையும் கிறிஸ்துவின் இறைமை ஆகியவைபற்றி லூக்கா திட்டமான அறிவுடையவராய் இருந்தார்.

தூய யோவான்: புனிதர் யோவான், புனிதர் லூக்காவைப் போலல்லாமல், தமது நூல்களில் (நற்செய்தி நூல், திரு முகங்கள்) வரலாற்றினைக் கால அட்டவணை முறையில் சிந்திக்கவில்லை. எனினும், வரலாற்றினைக் கடவுள் கட்டுப்படுத்துகிறார் என்பது அவருக்குத் தெளிவாயிருக்கிறது. ஆகையால் முன்னுரையில் (Prologue) வாக்கின் (லோகாஸ்) முந்துரிமையையும், வாக்கின் மூலம் உலகம் படைக்கப்பட்டதை யும், இருளிலே பிரகாசிக்கும் ஒளியினையும், கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு மனிதரையும் (முழுக்கு முனிவர்யோவான்), இந்த உலகத்தில் வந்த எந்த மனிதரையும் பிரகாசிக்கச் செய்யும் உண்மையான ஒளியையும் பற்றி நாம் வாசிக்கிறோம்.

யோவானைப் பொறுத்தவரையில், வரலாற்றிலே கடவுளின் தீர்வான செயல் என்பது கிறிஸ்து உலகில் வருவதும், அவர் தந்தையிடத்தில் செல்வதுமாகும் (யோ. 3:1-21; 3:1-6; 7:15-36). வருங்காலம் ஒன்றையும் கொண்டுவராது என்ற காரணத் தினால், கிறிஸ்துவின் திரு அவதாரமானது இறுதி சார்ந்தது என்றழைக்கப்படலாம். கிறிஸ்துவுக்கு மக்கள் எவ்வாறு பதிலிறுக்கிறார்கள். அவர்கள் நம்புகிறன்றார்களா அல்லது நம்பிக்கையின்மை கொள்கின்றார்களா என்ற அடிப்படையில் மீட்பு அல்லது நீதித்தீர்ப்பு, வாழ்வு அல்லது சாவு இப்பொழுதே தீர்ப்பளிக்கப்படுகின்றது (3:18பி; 5:24பி; 9:39; 11:25பி; 12:13 காண்க). யோவானின் சிந்தனையில், கடந்த காலமும் வருங்காலமும் ஒருமையாக்கப்படுகின்றன என்ற டிங்க்லரின் கருத்தை ஏற்றுக்கொள்ளலாம். நிகழ்கால வரலாறானது நாடகத்தின் இறுதி நிகழ்ச்சிக்கு நேராக நடத்துகின்ற நீண்ட இயக்கத்தின் ஒரு பகுதியன்று. ஆனால் கிறிஸ்துவின் வாக்கினைக் கேட்கின்றவர்களுக்கு இப்பொழுதே உயிர்ததெழுதலும் வாழ்வும் அளிக்கப்படுகின்றதில் முடிவே வெளிப்படுகிறது. (11:25பி.) உயிர்ததெழுதல் அனுபவத்திற்காக ஒருவர் இரண்டாம் வருகை வரையிலும் காத்திருக்க வேண்டியதில்லை. இந்த உலகத்தின் ஆட்சியாளன் இப்பொழுதே நியாயந்தீர்க்கப்படும்போதே மனித வாழ்க்கையின் இலட்சியம் அல்லது நோக்கு தீர்வான முறையில் மாறும் நிகழ்ச்சி நடைபெறுகிறது (12:31; 16:11). தொடக்கத் திருச்சபையில் நிலவிய யூத மறைபொருட்காட்சிச் சிந்தனையினை தூய யோவான் திட்டமாக மறுக்கிறார் என்பது இதன் பொருள்.

தூய யோவானிலிருக்கின்ற இருமைக் கோட்பாட்டைக் குறித்து ஒரு வார்த்தை சொல்லப்பட வேண்டும். அவர் இந்த உலகத்தின் ஆட்சியமைப்பு பற்றி பேசுகிறார். இது புனிதர் யோவானில் மட்டும் காணப்படும் ஒரு சொற்றொடராகும் (12:31; 14:30; 16:11). இதோடு புவலின் சொற்றொடர்களான இந்த யுகத்தின் தேவன் (2 கொரி. 4:4) பிசாசு, கிறிஸ்துவின் மேல் பற்றின்மை கொண்டு அவரைப் புறக்கணித்த யூதர்களின் தந்தை (8:44) என்பனவற்றை ஒப்பிடுக. யூதாஸ் இயேசுவை மறுதலித்த செயலுக்கும் இவனே காரணம் என்று அவர் கூறுகிறார் (6:70; 13:2).

ஒளியும் இருளும், உண்மையும் பொய்யும் ஆகிய சொற்றொடர் களில் இருமைவாதம் சார்ந்த பண்புகளைக் காணக் கூடும். பிந்தைய யூதேயத்தில் பாரசீக இருமை வாதக் கோட்பாட்டின் செல்வாக்கு ஏற்பட்டது என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால், பாரசீக சமயத்திலோ, அறிவு நெறிக் கோட்பாட்டிலோ (Gnosticism) இருக்கிறது, போல யோவானின் இருமை என்றென்றுமுள்ளதன்று. அறிவு நெறிக்கோட்பாட்டின்படி மீட்பர் உவமைக் கருத்திலிருந்து யோவானின் இருமைக் கோட்பாடு வந்தது என புல்த்மான் கருதுகின்றார். அவருடைய கருத்தானது கும்ரான் சமுதாயத்தினரின் கருத்துக்கு மிகவும் நெருங்கியதாகும். அதன்படி, உண்மையின் ஆவியும், பொய்யின் ஆவி என்ற இரு ஆவிகளினால் மக்கள் நடத்தப்படுகின்றனர். இந்த இரு ஆவிகளும் கடவுளால் படைக்கப்பட்டவையாம். உண்மையின் ஆவியும் பொய்யின் ஆவியும் மக்களது நடத்தையிலே தங்களைத் தாங்களே காண்பிக்கின்றன. ஆகையால், இது ஒர் இயலுலக அண்டத்துக்குரிய இருமையன்று; அறநெறி சார்ந்த இருமையாகும். இயேசுவின் வார்தைகளை மக்கள் கேட்கவோ, கேட்க மறுக்கவோ செய்கின்ற முறையிலே அவர்கள் யாருக்குச் சொந்தம் என்பது தெளிவாகிறது.

தூய பவுல்: காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனை. . . அனுப்பினார் (கலா. 4.4பி.) என்ற இக் கூற்றானது வரலாற்றினைப் பற்றிய பவுலின் கருத்தை அறிவதற்கு மையமானதாகும். பவுலின் கருத்தின்படி, கிறிஸ்து நிகழ்ச்சியானது ஓர் இயக்கத்தின் உச்சநிலையாகும். பவுலின் சிந்தனையின்படி கிறிஸ்து வரலாற்றின் இறுதி என்கிறார் டிங்க்லர். இதை நாம் ஏற்றுக் கொள்ளலாம்.இயேசு கிறிஸ்துவின் பணியில் கடவுளின் மக்களின் மீட்பானது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவில் கடவுளின் மீட்கும் செயலிலிருந்தே கடந்த கால, நிகழ்கால வருங்கால வரலாறானது பொருள் பெறுகிறது. இஸ்ரயேலின் நம்பிக்கையினை நிறைவேற்றுதலானது மனிதருக்குப் புதிய ஒரு தகுநிலை எனவும் பொருள்படுகின்றது. இப்படியிருக்க, ஒருவர் கிறிஸ்துவோடு இயைந்திருக்கும்போது அவர் அங்கே புதுப்படைப்பு, பழையன ஒழிந்துபோயின. இதோ எல்லாம் புதிதாயின (2கொரி. 5:17) என்று பவுல் எழுதுகின்றார். இயேசுகிறிஸ்துவில் கடவுள் நிறைவேற்றின செயலின் விளைவு என்னவெனில், நம்பிக்கையாளரின் வாழ்வில் ஒரு யுகம் முடிவதும், முற்றிலும் புதிய ஒரு யுகம் உள்ளே வருதலும் ஆகும். இது வரலாற்றின் வரம்பிற்குள் நிகழ்ந்தபோதிலும், காலமும் வரலாறும் தொடர்ந்த போதிலும் மீட்கும் நிகழ்ச்சியானது இறுதியியல் சார்ந்ததாக அறியப்படுகிறது. இந்த இறுதியியல் சார்ந்த அனுபவத்தில் நம்பிக்கையாளர் மாத்திரமே பங்கு பெறுகின்றனர். வெளியிலிருக்கின்ற வர்கள். பாவத்தின் ஆதிக்கத்தில், அடிமைத்தனத்தின் கீழ் வாழ்ந்து கிறிஸ்துவினால் குற்றவாளிகளேனத் தீர்க்கப் படுகின்றார்கள். ஏனெனில் இப்பொழுது அவர்களுக்கு அளிக்கப்படும் அருளின் காலத்தினை, மீட்பின் நாளை, அவர்கள் நிராகரித்து விடுகின்றார்கள்.

வரலாற்றைப்பற்றிய மேற்கூறிய கருத்தோடே பவுலில் வேறொரு கருத்தும் கூறப்படுவதை நாம் பார்க்கின்றோம். அதாவது, இரண்டாம் வருகை என்னும் உலகின் சடுதியான பெரும் அழிவு சார்ந்த உலக முடிவினை நம்பிக்கையாளர் காத்திருக்கிறார். முந்திய திருமுகங்களில் (1 தெச; 1கொரி.) இப்பொருளானது மறைபொருட்காட்சிகளில் விவரிக்கப் படுகின்றது. நிகழ்காலம் என்பது இறுதியான நிறைவேறுதலுக்

காகக் காத்திருக்கும் காலமாகும். ஆகையால், இப்பொழுது என்பதற்கும், வரப்போவது என்பதற்கும் இடையில் இழுவை ஒன்று இருக்கின்றது.

இப்பொழுது, வரப்போவது என்பவைகளின் உறவு பற்றிய இக்கருத்தைக்கொண்டு, எபே. 1:10; 3:9 இல் காணப்படும் கடவுளின் மீட்பின் திட்டம் பற்றிய பவுலின் (oikovomin) சிந்தனையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தொடக்ககால திருச்சபைத் தந்தையராகிய இக்நேசியஸ், ஜஸ்டின் மார்டர், இரனியஸ் ஆகியோர் இப்பொருள்பற்றி எழுதினர். இப்பொழுது என்பதற்கும் இறுதி என்பதற்குமிடையிலுள்ள காலமானது இறை அமைப்பு அல்லது இறைத் தேர்ந்தெடுப்பு, முன் குறித்தல் என்பதின் ஒரு பகுதியாகப் புரிந்துகொள்ளப்படுகிறது.

உரோமர் 9 முதல் 11 வரையுள்ள பகுதியிலே, வாக்குறுதியைப் பெற்றுக்கொண்டவர்களாகிய இஸ்ரயேலர் தள்ளப்பட்டு விட்டார்களோ என்ற கேள்வி தூய பவுலால் எழுப்பப்படுகிறது. மனித இயல்பின்படி, இஸ்ரயேலர் இறுதியாகத் தள்ளப்படவில்லை என்பது அன்னாரது விடையாகும் (11:1பி.). அதை ஒரு மறைபொருள் என்று அவர் கருதுகிறார். இந்த மறைபொருளை நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனமில்லை. அதென்னவெனில், பிற இனத்தாரின் நிறைவு வரும்வரைக்கும் இஸ்ரயேலரின் ஒரு பங்குக்குக் கடினமான மனம் உண்டாயிருக்கிறது (11:25பி.). பிற இனத்தாரின் முழு எண்ணிக்கை உள்ளே வருமளவும் என்ற குறுகிய காலத்தில் மட்டுமே இஸ்ரயேலரின் அவநம்பிக்கையும் கடினமும் நிலைத்திருக்கும் என இந்த வாக்கியம் கூறுகின்றது. எல்லார் மேலும் இரக்கமாயிருக்கவேண்டுமென்று கடவுள் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள் அடைத்துப் போட்டார் (11:32) என அவர் கூறும்போது, பவுலின் சிந்தனையில் ஓர் அனைத்துலக நிலைமை இருக்கிறது.

வரலாறு பற்றிய பவுலின் கருத்தில் கடந்தகாலத்திற்கும், நிகழ்காலத்திற்கும், வருங்காலத்திற்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. நிகழ்காலம் கடந்தகாலத்தின் இறுதியாயிருக்கிறது. கிறிஸ்துவின் பணி கடவுளுக்கு ஏற்புடையராவதை அவர் அளிப்பது. இவற்றோடு காலத்தின் நிறைவேறுதல் வந்துவிட்டது. நிகழ்காலம் வருங்காலத்துக்கு நேராகச் செல்லுகிறது. நிகழ்காலமும் வருங்காலமும் கடவுளின் மீட்பின் திட்டத்தின் பகுதிகளாயிருக்கின்றன.

எபிரேயருக்கு எழுதின திருமுகம்: எபிரேயர் திருமுக ஆக்கியோரைப் பொறுத்தவரையில், இந்த உலகமும் வரலாறும் கடவுளின் செயலாற்றும் களமாயிருக்கின்றன. மைந்தராகிய கிறிஸ்து மீட்பின் கருவியாயிருக்கின்றார்; உலகமானது அவரது வாக்கின் வல்லமையினால் நிலை பெற்றிருக்கிறது (1:3). கிறிஸ்து அகிலாண்டத்தின் ஆண்டவர். எனினும், எல்லாம் அவருக்குக் கீழ்பட்டிருப்பதைப் பார்க்க நம்பிக்கை கொண்டோரால் இயலவில்லை என்ற உண்மையை அவர்கூட ஏற்றுக் கொள்கிறார் (2:8). நிகழ்கால உலக வரலாற்றில்லல்ல. இனிமேல் வரவிருக்கும் வாழ்விலேயே கிறிஸ்துவின் ஆளுகை அழுத்தப்படுகிறது. ஊனுடலில் கிறிஸ்துவின் தோற்றத்துக்கு முந்தைய காலமாகிய கடந்த காலத்தோடுள்ள தொடர்பில், நிகழ்காலமானது, அதாவது, கிறிஸ்து தோன்றிய யுகமானது புதிய ஒரு யுகமாகும் (1:2) அல்லது அது யுகத்தின் முடிவாகும் (9:26). பழைய ஒரு யுகத்திலிருந்து புதிய ஒரு யுகத்துக்குள் மாறுதல் நிகழ்ந்துவிட்டது (டிங்க்லர்). அதே அவளையில் புது யுகமானது ஒரு பிரச்சனையாகிவிட்டது. ஏனெனில், உலகமானது இதுவரையிலும் கிறிஸ்துவை ஆண்டவராக அறிந்து ஏற்றுக்கொள்ளவில்லை. வரப்போகும் உலகிலேயே கிறிஸ்து முழுக்க முழுக்க ஆண்டவராயிருக்கிறார்.

சென்ற காலத்தில் கடவுள் பங்கு பங்காகப் பேசினார். ஆனால், நிகழ்காலம் ஒரு புது யுகமாகும்; ஏனெனில் இப்பொழுது திருமைந்தர் வழியாக திட்டவட்டமான வார்த்தை முடிவாகப் பேசப்பட்டாயிற்று; மோசேயாலும், வேறொரு வராலும் செய்ய இயலாததைக் கிறிஸ்து இங்கு செய்துவிட்டார். கிறிஸ்தவவருக்குள் பழைய வாக்குறுதி நிறைவேறத் துவங்கிவிட்டது (12:22). ஆனால் அது எம்முறையிலும் முழுமையடையவில்லை. வாக்குறுதி பெற்ற நாட்டிற்காக அல்லது இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதற்காகக் காத்திருந்த இஸ்ரயேலரைப்போல் கிறிஸ்தவர்களும் காத்திருக்கின்றனர். மண்ணுலகில் அவர்கள் அந்நியரும் திருப்பயணியருமாயிருக்கிறார்கள். அவர்களது தாய்நாடு விண்ணுலகமாகும் (13:14).

எனவே, அவரது போக்கானது இறுதிகால இயசை சார்ந்ததாயிருக்கிறது. மீட்பை நிறைவுபடுத்துவதற்காக கிறிஸ்து திரும்பவும் வருவார் (9:28). திருச்சபையின் கோட்பாட்டின் ஒரு பகுதியாக அவர் இறந்தோர் உயிர்த்தெழுதலிலும் என்றுமுள நடுத்தீர்ப்பிலும் நம்பிக்கை வைக்கிறார் (6:2). உலக வரலாறானது முடிவுறும்; ஆனால் உலக வரலாறு எவ்வாறு, எப்பொழுது முடிவுறும் என்று அவர் சொல்லவில்லை. தூய பவுல் சமநோக்கு நற்செய்தி நூல்களைப் போலல்லாமல், கிறிஸ்துவின் இறுதி வருகையின் அவசரத்தைப் பற்றி பரபரப்படையவில்லை. இரண்டாம் வருகை காலதாமதமாகுதல் ஒரு நம்பிக்கைப் பிரச்சினையாகிவிட்டது. கிறிஸ்தவர்கள் பொறுமையோடே காத்திருக்க வேண்டும் (10:35மு.). அவர் பேரிலுள்ள தங்கள் நம்பிக்கையை அவர்கள் உறுதியாகப் பற்றிப பிடித்துகொள்ள வேண்டும். வரப்போகும் நகரத்தையும், அவர்களது விண்ணுலக உரிமைப்பேறையும் நாடவேண்டும்.

யோவானின் திருக்காட்சி: யோவானின் திருச்சட்ட நூல் பெரும்பாலும் பேரரசன் தொமிதியான் (Emperor Domitian) கி.பி. 81-96 காலத்தில் பேரரசன் வணக்கம் திணிக்கப்பட்டு கிறிஸ்தவர்கள் கொடூரமாகத் துன்புறுத்தப்பட்ட பின்னணியில் எழுதப்பட்டிருக்கவேண்டும். இந்நூல் தானியேலின் நூல், சிறிய மறைபொருள் நூல் (Little Apocalypse, மத். 13:3-27; 24:3-36; லூக். 21:7-36) ஆகியவற்றில் வெளிப்படும் மறைபொருள் வெளிப்பாட்டு வரலாற்று நோக்கை தன்னுள் கொண்டிருக்கிறது. இரண்டாம், மூன்றாம அதிகாரங்களில் ஆசியாவின் ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்கள் இருக்கின்றன. நூலின் மீதியானப் பகுதி யோவான் கண்ட பல காட்சிகள், மூன்று வகையான துன்பங்கள் ஆகியவற்றைத் தருகிறது. முதல் வகையான துன்பம் ஏழு முத்திரைகளோடு தொடர்புடையதாகும் (6:1-8:5). இரண்டாவது வகை ஏழு எக்காளங்களையும் ஊதுவதோடு தொடர்புடையது (8:6-15:8). மூன்றாவது வகை ஏழு பாத்திரங்களையும் குறிப்பதாகும் (அதி.16). இது பாபிலோன் அல்லது உரோமாபுரியின் விழுகையைக் குறிப்பதாகும். (ஆதி. 17-19). ஆயிரம் வருட ஆளுகையும், இறுதி நடுத்தீர்ப்பும் 20ஆம் அதிகாரத்திலும், புதிய விண்ணகம், புதிய மண்ணகம், புதிய எருசலேம் ஆகியவை தோன்றுதல் 21,22ஆம் அதிகாரங்களிலும் தரப்படுகின்றன.

சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களின் நோக்கம் நடைபெறுவைகளையும், நடக்கப்போகிறவைகளையும், விரைவாக நிகழ வேண்டியவைகளையும், வாசகர்களுக்குக் கூறுவதாகும் (1:11;2:26; 4:1; 14:15; 17:10; 22:6-10). கடவுளின் பேரில் அதாவது அல்பாவும்,ஒமேகாவும், துவக்கமும் முடிவுமாகிய, இறைமை சார்ந்த ஆண்டவர் பேரிலுள்ள நம்பிக்கையானது நிலைநிற்க வேண்டும். அந்த விலங்கும் (சாத்தான், பேய், அந்திக்கிறிஸ்து) அதைச் சார்ந்தவர்களும் (உரோமும், சீசர்களும்) வெளிப்படையான வெற்றி பெறும்போது, முடிவானது சீக்கிரமாக வரும் என்பதை வற்புறுத்தி அவற்றை எதிர்க்க வேண்டும் (22:6.10). தீமையின் ஆளுகை சில காலம் மட்டுமே இருக்கும் (17:10).

மானிட மகனை மேகத்தின் மேல் தலையில் மகுடம் அணிந்தவராகவும், கையில் கூர்மையான அரிவாளை வைப்பவராகவும் நம்பிக்கையாளர் காண்கிறார்கள். அவர் சீக்கிரமாக அறுவடை செய்வார். அதாவது, அவர் வந்து தம்மை எதிர்க்கிறவர்கள்மேல் நடுத்தீர்ப்பை நிறைவேற்றுவார். அறுக்கிறதற்குக் காலம் வந்தது. ஆகையால், உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் (14:15). ஆக்கியோர், உரோமாபுரியின் வல்லமையையும் அதின் சீசர்களுடைய வல்லமையையும், ஏழு தலைகளையும் ஏழு கொம்புகளையும் கொண்ட சிவப்பான விலங்கின் மேல் (உரோமாபுரி) அமர்ந்திருக்கும் பெண்ணின் உருவத்தில் வடிக்கிறார். அந்த ஏழு தலைகளும் ஏழு அரசர்களாவர். இவர்களில் ஐந்துபேர் ஏற்கனவே இறந்து போனவர்கள். ஆறாமவர் இப்போது அரசு புரிகின்றார்; ஏழாமவர் வர இருக்கிறார். (இது இறந்துபோன சீசர் திரும்ப வருவதைக் குறிக்கிறது.) அவர் நேரோவா அல்லது தொமிதியானா என்பது திட்டமாகத் தெரியாது. ஆனால், பத்து கொம்புகளைப் போல அவனது ஆளுகை (அதி.13) சிலகாலம் மட்டும் இருக்கும். ஆட்டுக் குட்டியானவர் அவை களை எதிர்த்து வெற்றியடைவார். ஏனெனில் அவர் ஆண்டவருக்கெல்லாம் ஆண்டவர், அரசருக்கெல்லாம் அரசர் (17:14 ஒப்பிடுக. 18:9; 19:1 காண்க). கிறிஸ்து விரைவில் வருவார், அவர் துவக்கமும், இறுதியுமாக இருக்கிறார் என்ற உறுதியில் நூல் முடிவடைகிறது (22:12மு; 22:20).

7. முடிவுரை

விவிலியத்தின் பல்வேறு நூல்களிலும் இறையியல மரபுகளிலும தரப்படுகின்ற வரலாறு பற்றிய கருத்தின சுருக்கம் யாதெனில், கடவுள் வரலாற்றைக் கட்டுப்படுத்தி ஆளுகிறார் என்பதே முழு விவிலியப் போதனையின் மையம் என்பதாகும். இப்பொருளானது திருச்சபைத் தந்தையர், இறையியல் அறிஞர்கள் ஆகியோரின்

கவனத்தை வெகுவாய்க் கவர்ந்து வந்துள்ளது. மீட்பின் வரலாறு என்றழைக்கப்படும் சிந்தனைக் குழுவைச் சார்ந்த ஒரு முந்தைய தலைமுறையின் அறிஞர்கள் இந்தக் கூறுபாட்டை அளவுக்குமிஞ்சி வற்புறுத்தி, தமது சொந்த மக்களுக்கு சலுகை அளிக்கும் ஒரு கடவுளைப் பற்றிய படத்தைத் தந்தனர். விவிலிய எழுத்தாளர்கள் பலரும் வரலாறுபற்றிய தங்கள் பலவேறு கருத்துக்களைப் பலவேறு முறைகளில் தெரிவித்திருக்கின்றனர் எனபதை நாம் இக்கட்டுரையில் கண்டோம். யாவே மரபினர் (Jahwustuc) இறைவாக்கு மரபினர், லூக்கா, பவுல் ஆகியோர் கடவுளின் அக்கறையின் வட்டாரத்தினுள் பல நாடுகளைக் கொண்ட உலகைக் காண்கின்றனர். மேலும், முன்னுரையில் குறிப்பிட்டதுபோல வரலாற்றின் மேல் கடவுளின் ஆளுகையைக் காண்பதோடு வாழ்க்கையை நிலைவரப்படுத்தி தொடர்வதிலும், சங்கத்தில் நல்வாழ்வையும், நிறைவையும் அளிப்பதிலும், இயற்கையின்மேல் கடவுளுக்குள்ள ஆளுகையையும் நாம் இணைத்துக் காணல் வேண்டும்.

ஒரு சமூகம் அல்லது நாட்டின் தோற்றம், வாழ்வு ஆகியவற்றைப்பற்றிய உணர்வு இருக்கிற இடத்தில் வரலாறு மைய இடம் பெறுகிறது. சிறப்பாக விவிலியத்தில் படைக்கப்பட்டு, மீட்கப்பட்டு கடவுளால் நிலைவரப்படுத்தப்படும் அவரது மக்களுக்கான அக்கறையோடு இது விளங்குகிறது. இந்து சமயத்தில் விடுதலையைத் தேடுவது சங்கமல்ல, தனி மனிதரே. ஆகையால், அதன் சமயச் சிந்தனைக்கு வரலாறு மையமாய் இருக்க முடியாது. தேசத்துவத்தின் (nationhood) சுய உணர்ச்சியானது நாட்டின் வரலாற்றினை எழுதுவதை உற்சாகப்படுத்தி கடந்தகால நிகழ்ச்சிகளுக்கு மறுவிளக்கம் தர ஏவியுள்ளது. அறிவியல், தொழில்துறை ஆகிய முன்னேற்ற இயக்கங்களின் வேகமான மாறுதல்களின் அழுத்தத்தினால், நமது தற்கால உலகின் அமைப்பையும், வருங்கால வாழ்க்கையையும் வரையறுக்கும் வரலாறு சார்ந்த காரணங்கள், சூழ்நிலைகள் ஆகியவை பற்றிய புதியதோர் உணர்வு ஏற்படும். மண்ணுலகின் எல்லா உயிரினங்கள் யாவும அழிவதற்கான வாய்ப்புகள் இன்று திறந்திருப்பதினால விவிலியத்தின் மறைபொருளையும், வெளிப்பாடு வரலாறு நோக்கையும் பொருத்தமற்றதென்று தள்ளிவிட முடியாது.

துணை நின்ற நூல்கள்

1. North, C.R., *Old Testament Interpretation of History*, Bangor, 1946.
2. Deutan, R.C., (ed.), *The Idea of History in the Ancient Orient*, London, 1955.
3. Samartha, S.J., *Hindu View of History*, Bangalore, 1959.
4. Rowley, H.H., *The Relevance of the Apocalyptic*, London, 1963.
5. Ziock, H., *Men Will One Day Reach the Point*, Bombay, 1970.
6. G.W.Anderson, (ed.), *Tradition and Interpretation*, Oxford, 1979.
7. N.K.Gottwald, *Tribes of Yahweh*, Orbin, 1986.
8. F.V.Filson, *A New Testament History*, SCM, 1964.
9. N.k. Gottwald, (ed.), *The Bible and Liberation*, Orbis, 1989.
10. D.S.Russel, *Between the Testaments*, SCM, 1970.

11

விவிலியப் பொருள் விளக்க வரலாறும் அடிப்படைத் தத்துவங்களும்

சஃபீர் பி. அத்யால்

1. முன்னுரை

விவிலியம் எக்காலத்திலும், எச்சிறந்த முயற்சிகளாலும் வெறுமையாக்க இயலாத செல்வங்களின் சுரங்கம் போல காடசியளிக்கிறது. அது தன் பொருளை மறைத்து வைப்பதுபோல தோற்றமளித்துத் திடீரெனப் புரட்சிகரமான விளைவுகள் ஏற்படும்படி, தன்னைத் திருச்சபைக்குத் திறந்து காண்பிக்கிறது. ப.ஏ.இன் பல பகுதிகள், ப.ஏ. கால இறைமக்களால் அரைகுறையாகவே புரிந்துகொள்ளப்பட்டன. பு.ஏ.காலத்து எழுத்தர்களும், இரபிமாரும் புனித ஏடுகளைக் கவனமாய்ப் படிப்பதில் இரவு பகலாய் ஈடுபட்டனர். ஆனால் இவர்களைப் பற்றி ப.ஏ. வாசிக்கப்படுகையில் அதே முக்காடு இந்நாள் வரைக்கும் நீங்காமலிருக்கிறது என பவுல் கூறியிருக்கிறார் (2 கொரி. 3:14). மத்திய காலத்தில் (Middle Ages) பிரபல இறையியல் வல்லுநர்களும் அறிஞர்களுமிருந்தனர். எனினும் சீர்திருத்தக்காலம வரை விவிலியம் அடிப்படை உண்மைகளின் பெருமபகுதியும் திரும்பக கண்டுபிடிக்கப்படாதிருந்தது. 20ஆம் நூறறாண்டின் விவிலியப் புலமையானது. விவிலிய நூல்கள் செய்தி ஆகியவைபற்றி அதுவரை அறியப்படாத புது ஒளியைத் தந்தது. எனினும், விவிலியக் கல்வித் துறைகளில் நாம் இன்னமும் ஒரு புதிய யுகத்தின் தொடக்கத்தில்தான் இருக்கிறோம் என இக் காலத்தில் உணருகிறோம். திருச்சபை காலாகாலத்தில் கடவுளுடைய வார்த்தையைத் திரும்பக் கண்டுபிடிக்கிறது. ஒவ்வொரு தடவையும் அதன் செய்தியின் அறிவானது புதுமையாக அமைகிறது.

திருஏடுகள் அவைகள் எழுதப்பட்ட காலத்து நிலைமைகள் மனநிலைச் சாபுகள். பிரசசனைகள் ஆகியவற்றைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. காலஞசெல்லுந்தோறும் கடவுளுடைய வார்த்தையானது அதிகாரமுள்ளதாகத் தொடரவேண்டுமானால், ஒவ்வொரு தலைமுறைக்கும் ஏற்ப அதற்குப் பொருள் விளக்கம் கொடுக்கப்படவேண்டும் என்பது இன்றியமையாததாகும். கிறிஸ்தவரல்லாத சமயங்களும், தங்கள் மறை நூல்களுக்குப் பல முறைகளில் விளக்கம் தந்து அவை ஒவ்வொரு தலைமுறைக்கும் பொருந்தியதெனக் காண்பிக்க முயற்சியெடுப்பதை நாம் காணலாம். இந்துக்களின் வேதங்கள் பொருள் விளக்கத்தில் பல பருவங்களைக் கடந்து வந்திருக்கின்றன. முதலில் அவை கதை பொதிந்த புனைவுகளாகவும். (Myths) வரலாற்றுக் கதைகளாகவும் (Legends), பின்னர் பகுத்தறிவுவாத அடிப்படையிலும், பின்னர் மெய்யியல் அடிப்படைமிலும். தற்காலத்தில் அறிவியல், இக்காலச் சிந்தனைத் தொகுதிகள் இவைகளின் (Schools of thought) வெளிச்சத்திலும் விளக்கப்படுகின்றன. இசுலாமியரின் மறைநூலை (Koran) விளக்குபவர்களில் மறைஞானிகள், பகுத்தறிவாளர்கள், புலமைக் கொள்கையினர் (Scholastics) என்போர் பலர் இருக்கின்றனர்.

விவிலியமானது, பண்டைய காலத்தில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும் இறைவாக்கினரின் மூலமாய் நமமுடைய மூதாதையருக்கு திருவுளம் பற்றினவரும், இந்தக் கடைசி நாள்களில் மகன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினவருமான (எபி.1:1) கடவுளின் வெளிப்படுத்தலின் பதிவேடாகும். (record). கடவுள் பேசியவை காலாகாலமாய் மாறாதிருப்பினும், அதைப்பற்றிய மனிதரது விளக்கமானது, பல்வேறு வகைப்பட்டதாகும். இயற்கையுங்கூட, முன்னிருந்தது போலவே இன்றுமிருப்பினும், அதைப்பற்றிய இக்காலத்திய நமது அறிவானது பழங்காலத்தவர் அறிவைவிட எவ்வளவு வித்தியாசமானது! இயற்கை அமைப்பைப்பற்றிய (Natural order) தம்முடைய விளக்கத்தில் மனிதர் அடிக்கடி வழி தவறியதுபோலவே, வரலாறு முழுவதும் விவிலிய விளக்க ஆய்வாளர்களும், தங்களது காலங்களின் கோரிக்கைகளுக்கேற்ற விவிலிய ஏடுகளின் பொருள் விளக்கத்தில் அடிக்கடித் தவறிழைத்திருக்கின்றனர்.

விவிலியப் பொருள் விளக்கத்தின் வரலாற்றினைப் படிப்பது விவிலியத்தை அணுகுவதில் நாம் இன்னமும் பயன்படுத்தக்கூடிய சில தகுதியான தத்துவங்களைத் தருவதோடு சோதனை செய்யப்பட்டு, குறைவுள்ளவை என்றறியப்பட்ட சில முறைகளையும் தத்துவங்களையும் பற்றி நம்மை எச்சரிக்கவும் செய்கிறது.

2. பொருள் விளக்க வரலாறு

இஸ்ரயேலரது வரலாற்றின் அதிமுக்கிய நிகழ்ச்சிகள் அவர்களது வாழ்க்கையின் பிந்தைய பருவங்களிலேயே பொருள் விளக்கம் பெற்றன. எ.கா. எகிப்திலிருந்து எபிரேயர் விடுதலையுற்றதும் (Exodus), பாலைநிலப் பயணமும் பலதரப்பட்ட விவிலிய எழுத்தர்களுக்கு முக்கிய இறையியற் பொருள்களாகிவிட்டன. மோசேயின் திருச்சட்டம், உடன்படிக்கையின் நூல் போன்றவை இவற்றின் உட்பொருள் எனச் சொல்லவும், விளக்கவும்படுகின்றன (2 அர. 2:3; மலா. 4:4; எரே.15:1). விவிலிய நூல்களை உறுதியாகப் படிப்பதினால் உண்டாகும் தொடர்பான மகிழ்ச்சியைப் பற்றி திருப்பாடல்கள் ஆக்கியோர் (Psalmists) பேசுகின்றனர் (திருப். 19, 119).

திருச்சட்டத்தை ஒழுங்கு நிறையுடன் (Systematic) பயிலுதற்கு முக்கியத்துவம் அளித்தது எஸ்ராவின் முக்கிய சேவையாகும்.

பாபிலோனிய யூதர்கள் எபிரேய மொழிக்குப் பதிலாக அரமேய மொழி பேசினபடியால், மக்களது மொழியில் விவிலிய நூல்களை எஸ்ரா விளக்கவேண்டியதாயிற்று. திருக்கோவிலையும் அதோடு சேர்ந்த தங்களது சமயத்தின் தேசியத் தன்மையையும் அவர்கள் இழந்தபோது அன்னார் தங்களது புனித நூல்களிலேயே நம்பிக்கை வைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. சிறையிருப் பிலிருந்து, திருச்சட்டம் முதன்மை பெற்று அதன் பொருள் விளக்கத்திற்குப் படிப்படியான முக்கியத்துவம் தோன்றியது.

(அ) யூதரின் பொருளுரை விளக்கம்

யூத இரபிமார் மரபு அறிஞர் (Rabbinic School) எஸ்ராவையும் பெரிய தொழு மன்றத்தையும்[1] பின்பற்றி, சிலை வணக்கத்தை அடியோடு அழித்து விட்டபோதிலும், எழுத்தின்படி திருச்சட்டம் என்னும் புதுமுறை சிலை வணக்கத்தை வளரச் செய்தனர். யூதகுருமாரின் பொருள்விளக்க நடைமுறை முழுவதிலும் திருச்சட்டத்தை உயர்வுபடுத்தும் முயற்சியை நாம் பார்க்கிறோம். நன்மை, தீமை எவை என்ற தீர்ப்பானது எண்ணிறந்த மரபுகள், திருச்சட்டத்தின் கருத்துமாறாட்டப் பொருள்விளக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் எழுந்தது.

இறைவாகுகளும், புனித எழுத்தேடுகள் (writings) என்றழைக்கப்படும் நூல்களின் கருத்துக்களும் திருச்சட்டத்தில் அடங்கியிருப்பதாகக் கருதப்பட்டது. அது என்றுமுள்ளதென்றும் மதிக்கப்பட்டது. இரபி யூதா என்பவரின் கூற்றின்படி கடவுள்கூட தினமும் மூன்று மணி நேரம் திருச்சட்டம் படிப்பதில் செலவிடுவதாகக் கருதப்பட்டது.

திருச்சட்டத்திற்கு இத்துணை உயர்வுரிமை கோரிய பின்னர், அதனைச் சரியாக விளக்குவதற்குத் தனித் திறமையுள்ளவர்கள் தேவை என இரபிமார் (யூத குருமார்) உறுதியாக அறிந்தனர். ஆகவே, செயலளவில் திருச்சட்டத்துக்குச் சமமான இடத்தைப் பொருள் விளக்குபவர்களும் அடைந்து விடுகின்றனர். தங்கள் குரலே இறைவனின் குரல் என அவர்கள் உரிமை பாராட்டினர். தங்களது விளக்கவுரையில் இருவித நோக்கத்தை நிறைவேற்ற யூத குருக்கள் முயன்றதாகத் தோன்றுகிறது. அதாவது, திருச்சட்டத்தை உயர்வுபடுத்துவதும், அதன் வாயிலாக அதன் பொருளை விளக்குபவர்களையும் உயர்வுபடுத்துவதுமாகும்.

யூத இரபிமார் குழாத்தினரில் முக்கியமானவர்களில் மாண்புமிக்கவர்கள் ஐவராவர். கில்லேல் (Hillel). இவர் பாபிலோனில் பிறந்தவர். இவர், இயேசு கிறிஸ்துவுக்குச் சமகாலத்தவராகச் செல்வாக்குச் செலுத்தியவர். யூத குருக்களில் இவர் தலைசிறந்தவர். இவர் யூத குருக்களின் விளக்கவுரை முறையின் (rabbinical system) தோற்றமுன்னவர் என்று கருதப்பட்டு மதிக்கப்படுகிறார். அன்னாரின் சேவை இருவகைப்பட்டது. முதற்கண், திரளாய்க் கிடந்த வாய்மொழி மரபுகளை ஆறு தொகுப்புகளாக அவர் வகைப்படுத்தினார். இதுவே மிஸ்னா (Mishna) என்று யூதத் திருச்சட்டத்திற்கு அடிப்படையாயிற்று. அடுத்தது, இவர், விளக்கவிதிகள் ஏழு ஏற்படுத்தினார். இவை பிற்கால யூதப் பொருள் விளக்கவுரை முறைகளின் அடிப்படைகளாயின.

சம்மாய்: இவர் கில்லேலின் உறுதியான எதிராளி (போட்டியாளர்). மிகவும் நுண்ணியச் சட்டங்களுக்கு அதி உறுதியான முறைகளில் இவர் பொருள் விளக்கம் அளித்தார். இவரது அதி தீவிர நெளிவிழைவின்மை, சம்மாய் கட்டினார் கில்லேல் அவிழ்த்தார் என்னும் யூத முதுமொழியில் விளங்குகிறது.

சக்காயின் மகனான யோகனான் (Johanan Ben Zakkai): கில்லேலின் மிக முதன்மையான மாணவர்களில் யோகனான் ஒருவராவார். இவர் திருச்சட்டத்தில் பற்றார்வமுள்ள மாணவர். உரோமர்கள் எருசலேமை முற்றுகையிட்டபோது, செத்த மனிதனைப்போல் பாடையில் சுமந்து செல்லப்பட்டு, ஆபத்தான முறையில் உயிர் பிழைத்தார். பின்னர், இவர் உரோமரால் நன்முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, எருசலேமுக்கு அண்மையில் பள்ளி ஒன்று நிறுவும்படி உரோமரால் பணிக்கப்பட்டார். தோல்வியுற்று, நம்பிக்கையிழந்த நிலையிலிருந்த யூத நாட்டிற்கு, திருக்கோவிலுக்குப் பதிலாக திருச்சட்டத்தையும், ஆரோனின் குடும்பத்திற்குப் பதிலாக கில்லேலின் குடும்பத்தையும் இவர் அளித்தார்.

அகிபா (Rabi Akiba): யூத இரபிமாரின் கோட்பாட்டை (rabbinism) ஒழுங்குபடுத்தி அமைத்ததற்குரிய பாராட்டு இவருக்கே உரித்தாகும். நெருப்பினைப் பல தீப்பொறிகளாகப் பிரிக்கும் சம்மட்டியைப்போல விவிலிய நூல்களின் ஒவ்வொரு வார்த்தைக்குமுள்ள பல பொருள்களை வெளியே கொண்டுவர வேண்டும் என்பது இவர் நோக்கு. புனிதமான விவிலிய நூல்களின் ஒரசைச் சொல் ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட ஏதாவது ஒரு பொருளை இவர் கண்டார். ஒவ்வொரு எழுத்திலும், எழுத்தின் ஒவ்வொரு உறுப்பிலும ஆழ்ந்த உட்பொருள் இருந்ததாக உணர்ந்தார். ஓர் எழுத்து, பிற எழுத்துக்களைவிட பொிதாகவோ, சிறிதாகவோ, தலைகீழாகவோ, தொங்கவிடப்பட்ட நிலையிலோ, மீண்டும் தோன்றவோ, விடப்படவோ இருந்தால் அதற்கு அவர் ஒரு தனிச்சிறப்பு அளித்தார். மோசே அறியாத எந்தச் சட்டமும் அகிபாவுக்குத் தெரியும் என அன்னாரின் சீடர்கள் பறை சாற்றினர்.

யூதா என்ற ரூபி (Rabi Juda): வாய்மொழிச் சட்டத்தை எழுத்துருவில் அமைத்தவர்களில் இவர் முதல்வராவர். கில்லேலின் ஆறு வரிசை முறைகளில் இவர் ஒழுங்குபடுத்திய தொகுப்பானது பிற்காலத்தில் மிஸ்னா அல்லது யூத மறைக் கட்டளைத் தொகுதி எனப்பெயர்பெற்றது.

விவிலிய நூல்களின் பொருள் விளக்கப்பணியில் மரபாக வந்த தெளிதிகளைத் தொகுத்த யூதப் புலவர்களின் (Massoretes) பணி தவிர, விளக்கவுரைத் தன்மையுள்ள பல்வேறு குழாத்தினரின் பங்களிப்பை, எபிரேய மறையின் பழமையான அரமேய மொழிபெயர்ப்புகள் (Targums), மரபுவழிச் சட்டங்கள், கதைகள் ஆகியவற்றின் தொகுப்புநூல் (Talmud), யூத மறைப் பகுதிக்குரிய பண்டை விளக்கம் (Midrashim) ஆகியவைகளில் காணலாம். இவற்றில் விளக்கவுரைத் தன்மையுள்ளவை அனைத்தும் மூன்று வகையாக அமைகின்றன.

கலாகா (Halakah): நீண்ட விவாதங்களின் பலனாக எடுக்கப்பட்ட முடிவுகள் இதில் உட்படுகின்றன. எழுதப்பட்ட சட்டத்திற்குத் துணை நிறைவாகவும், (supplement), விளக்கமாகவும், செயல்முறையிலிருந்த மக்களிடையிலுள்ள தனிப்பட்ட தொடர்புபற்றியதும் (civil) சமயம் தொடர்புடையதுமான ஒழுங்குகளை இது வரையறுத்துக் கூறுகிறது. இவ்வாறு, மனத்தால் நினைக்க இயலும் ஒவ்வொரு

[1] ஞான இராபின்சன் எழுதிய இஸ்ரயேலர் சமயம் என்ற நூலில் பக். 311மு. காண்க.

நிலைமைக்கும் தேவையான விரிவான விதிகள் பெருமளவில் வளர்ந்துவிட்டன.

ஹகாதா (Haggadah) : எபிரேய மொழி வழக்கில் யூத சட்டப் புராணப் பகுதி. திருச்சட்டத்தை ஏதாவது ஒரு முறையில் விளக்குவதாகக் கருதப்பட்ட கட்டுக் கதைகள், புராணக்கதைகள், முதுமொழிகள், மக்கள் மரபுவழிப் பழக்க வழக்கக் கோட்பாட்டுத் தொகுதிக் (folk-lore) கவிதைகள் ஆகியவற்றின் மிகப் பெரிய தொகுப்பு இதில் உட்படுகிறது. எனினும், கட்டுப்படுத்தும் அதிகாரம் இதற்கு இல்லை.

கபாலா (Qabbalah) : உட்பொருள் சார்ந்த (mystical) பொருள் விளக்கங்கள் இப்பிரிவில் உட்படுகின்றன. கருத்துக்களுக்கும், அவற்றைத் தெரிவிக்கும் வார்த்தைகளின் எழுத்துக்களுக்குச் சமமான எண்ணிக்கைப் (numerical equivalance of the value) பெறுமதியின் கருத்துக்களுக்கு மிடையிலுள்ள ஆழ்ந்த உட்பொருள் சார்ந்த உறவுகள் போன்ற வைகளும், ஒரு வார்த்தையின் எழுத்துக்களை இடம்மாற்றி அமைத்துப் புதிய பொருள் விளக்கம் அளிக்கும் முறையும் இதில் இடம்பெறுகிறது.

இந்த விளக்கவுரை முறைகள் விவிலிய நூல்களின் எழுத்தின் படியான பொருளுக்கு யூத குருமார் அளித்த அளவுகடந்த அழுத்தத்திற்கும், ஆவண மூலத்தை (Script) அவர்கள் வழிபடமையையும் சுட்டிக் காண்பிக்கிறது. யூத அறிஞர்களின் விளக்கவுரை முறைகளில் நான்கு கூறுகளிருந்தன. அவை:

1. எழுத்தின்படியான பொருள் அல்லது மேலே விவரிக்கப்பட்டது போல அளவுக்கு மிஞ்சி எழுத்தின் படி பொருள் கொள்ளுதல்.
2. கலாக்கா என்ற பெயரில் வளர்ச்சியடைந்த மறைமுகப் பொருள் அல்லது சாடைக் குறிப்பு (hint).
3. ஹகாதா என்ற பெயரில் வளர்ந்த சமய நற்போதனைகள்.
4. கபாலா என்பவற்றில் அடங்கியுள்ள அகநிலைப் பொருட்கள்.

பொதுவாக யூதர்கள், எழுத்தின்படி பொருள் கொள்ளுதல் (letterism) என்று விவரிக்கக்கூடிய பொருள் விளக்கமுறையைப் பின்பற்றிய போதிலும், உருவக (allegorical) பொருள்விளக்க முறை போன்ற பிறமுறைகளைச் சிறப்பாகப் பயன்படுத்திய சில சுயாதீன யூத விளக்க வுரையாளர்களுமிருந்தனர். யூத உருவகங்கள், சிறப்பாக பாலஸ்தீனுவிலுள்ளவைகள் இரண்டு காரணங்களினால் சமய மாறுபாடற்ற (Orthodox) குழுக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளவில்லை. (1) இதே முறைகளைத் தங்களது விவிலிய நூலகளை விளக்குவதில் கிறிஸ்தவர்கள் பயன்படுத்தி, அவர்கள் யூதர்களைவிட உயர்வுள்ளவர்கள் என்று காண்பித்தனர். (2) எழுத்தின்படியான திருச்சட்டத்தின் முக்கியத்துவத்தை இது குறைத்தது.

(ஆ) கும்ரான் சமூகத்தின் விவிலிய விளக்கவுரை

1947 ஆம் ஆண்டிலும், அதைத் தொடர்ந்த ஆண்டுகளிலும் சவக்கடல் ஓரத்தில் கும்ரான் பகுதியில் 2000 ஆண்டுகள் பழமையான சுருள்களும், பல நூல்களின் பகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தக் கண்டுபிடிப்புகளில் நாளதுவரை கிடைத்த ப.ஏ.இன் மூல ஏடுகளில் (manuscripts) மிகவும் பழமையானவை காணப்பட்டன. விவிலிய நூலகளைக் கவனமாய படிப்பதில் இச்சமுதாயத்தின் அக்கறையையும் அவர்களது பொருள் விளக்க முறையையும் இவற்றில் காண்கிறோம். நீதியின் ஆசிரியர் (The Teacher of Righteousness) என்னும் சமயப்பிரிவின் தோற்றக்காரணர் (founder) ஒரு விவிலிய விளக்கவுரையாளர் ஆவார். தம் பணியாளர், இறைவாக்கினர் ஆகியோரின் வார்த்தைகளை விளக்க, கடவுளின் இதயத்தின் ஞானத்தைப் பெற்ற குரு என்றும் அல்லது தம் பணியாளர், இறைவாக்கினரின் வார்த்தைகளின் எல்லா மறை பொருள்களையும் கடவுளால் அறிந்த நீதியுள்ள ஆசிரியன் என்றும் குறிப்பிடப்படுகின்றார்.

இச் சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் Doresh அல்லது திருச்சட்ட விளக்கவுரையாளராய் இருந்தனர். யோசு. 1.8க்கு எழுத்தின்படியான கீழ்ப்படிதலின் செயலாக, குறைந்தது பத்து ஆட்களைக் கொண்ட குழுவில் நாள்தோறும் 24 மணி நேரமும் திருச்சட்ட விளக்கம் நடத்தப்பட்டது. வார்த்தையின் மறைவான உண்மைகளை வெளிப்படுத்தக்கூடியவர்கள் மட்டுமே இச் சமுதாயத்தின் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். ஒவ்வொரு விளக்கவுரையாளரின் கருத்துரையும் குழுவின் தேர்வுக்கு (vote) விடப்பட்டு, பெரும்பாலான ஆதரவு பெற்ற பொருள் விளக்கங்கள் மட்டுமே உண்மையானவை என ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அவர்களது விளக்கவுரை முறையைப் படிப்பதற்கு ஆபசூக்கு நூலைப்பற்றிய விளக்கநூல் முக்கியமாகக் கிடைத்திருக்கிறது. பெரும்பாலும் இந்தச் சமூகத்தின் வாய்மொழி விளக்கவுரைகளின் விளைவே இவ் விளக்கநூல் எனலாம். விவிலிய நூலிலுள்ள எல்லாவற்றிலும் மறைவானதும் இறுதி காலத்திற்குரியதுமான (Eschatological) பொருள் இருப்பதாகக் கையாளப்பட்டது. உருவக முறை அடிக்கடி பயன்படுத்தப் படுகிறது. வார்த்தைகளுக்கும் பகுதிகளுக்கும் ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்கள் அடிக்கடி கொடுக்கப்படுகின்றன. ஒரு வார்த்தையின் எழுத்துக்களைத் திருப்பி ஒழுங்குபடுத்தி அதற்குப் புதிய பொருள் கொடுக்கப்பட்டது. அடிக்கடி, வார்த்தைகள் தனிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றிற்கு மறு விளக்கம் கொடுக்கப்பட்டது. வடிவத்தில், ஒத்திருக்கும் எழுத்துக்கள் மாறி மாறி பயன்படுத்தப்பட்டன. எண். 6:24-26 இல் வரும் ஆரோனின் ஆசி மொழியில் காணப்படுவதுபோல் விவிலியப் பகுதிகளை எடுத்து மாற்றி இணைக்கும் செயல் முறையை இச் சமூகத்தில் காண்கிறோம்.

இவ்விதமாக, கும்ரான் சமயப் பிரிவினர் வழக்கமாக ஒப்புக்கொள்ளப்பட்ட பொருளிலிருந்து வேறுபட்டப் பொருள் கொடுக்க விவிலியப் பகுதிகளுக்கு விளக்கமளித்தபோதிலும் அடிப்படையில் யூத குருமாரின் முறையையே இவர்களும் பின்பற்றினார்களென நாம் பார்க்கிறோம்.

(இ) புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு

இரு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்டக் காலத்தில் தோன்றிய இவ்வித பலவித விளக்கவுரை முறைகளின் செல்வாக்கைப் பு. ஏ. காலத்துக் கிறிஸ்தவ ஆசிரியர்களிலும் காண்கிறோம். அதே வேளையில் பு.ஏ.விளக்கமானது அவர்களது சமகாலத்து யூதர்கள் உட்பட்டிருந்த வரையறைகளைக் கடந்து சென்று இயேசு கிறிஸ்து கடவுள் தம்மை மனிதருக்கு வெளிப்படுத்தியதின் நிறைவு என்ற அவர்களது அறிவின் அடிப்படையில் புனித நூல்களைக் கண்ணோக்குகிறது.

பனிரு வயது பையனாக இயேசுபிரான், விவிலிய நூல்களை நேரடியாகப் பயில்வதற்குரிய தமது உரிமையை உறுதிப்

படுத்தினார் (லூக். 2:46-50). ஒரு பக்கம் விவிலிய நூல்களுக்கும், மறு பக்கம் அவற்றிற்கு ஒப்ப யூதருக்கு அதிகாரமுள்ள வைகளாய் அமைந்த எண்ணற்கரிய சட்டங்களுக்கும், மரபு களுக்குமிடையில் கூரிய வேறுபாட்டை இயேசு ஏற்படுத்தினார். விவிலிய ஏடுகளை அவர் உயர்வாயமதித்தபோதிலும் அவற்றிற்கு யூத ஆசிரியர்கள் கொடுத்த பொருள் விளக்கங்களை அவர் அதிகமாக மதிக்கவில்லை. முந்தையதை அவர் பெரிதாய் மதித்தபோதிலும், பிந்தையதைப் பொறுத்தவரையிலும் அவர் சட்டமற்ற மனிதராக (lawless man)த் தோற்றமளித்தார்.

விவிலிய ஏடுகளைப்பற்றிய அவருடைய அறிவும் விளக்கமும் தொழிலுக்குரிய முறையில் (Professional) அல்ல, எப்போதும் செயல் முறையிலேயே (practical) அமைந்திருந்தது. ஓய்வுநாள் தெய்வீக ஏற்பாடு என்பதை அவர் ஏற்றுக் கொண்ட போதிலும், மனிதர் ஓய்வுநாளைவிட மேலானவர் என்று அவர் கருதினார் (மார். 2:27). அவருக்குப் பலியின் சட்டமானது இரக்கத்தின் சட்டத்திற்குக் கீழ்ப்பட்டதாயிருந்தது (மத். 9:13). விவிலிய நூல் கள் தொழுநோயாளரை நடத்தவேண்டிய முறையைப் பற்றிக் கூறிய கட்டளையானது அவர்களைத் தொடவும், அவர்களை குணப்படுத்தவும், சடங்காச்சார சுத்திகரிப்பிற்காக குருவினிடத் தில் முதலில் செல்லாத சமாரிய தொழு நோயாளியின் நன்றியை ஏற்றுக்கொள்ளவும் தடையாயிருக்கவில்லை.

திருச்சட்டம், இறைவாககு புனித எழுத்தேடுகள் ஆகியவற்றை ஒரே முழுமையாக இயேசு கருதினார். தமது வாழ்வு,மரணம் ஆகியவை பற்றிய குறிப்பீடுகளை (allusions) விவிலிய நூல்களில் அவர் கண்டார். பிற பல பகுதிகளோடு, திருப்.118; யோனா 1:17; எசா. 53; செக். 13 ஆகிய பகுதிகளும் தமது வாழ்வுப் பணித்திட்டத்தை முன் குறித்துக் காட்டுகின்றவை என அவர் பேசுகிறார். இவ்வாறு, ப.ஏ. இன் மெசியா பற்றிய கூறுகளுக்கு அவரது புதிய பொருள் விளக்கமானது, அக்காலப் போக்கிற்கு வேறுபட்டதாக, அவரது தவறாத ஆன்மீகக் காட்சியில் அடிப்படை பெற்றதாயிருந்தது.

பு.ஏ எழுத்தாளர்கள் தங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் வாழ்வு, பணி ஆகியவற்றின் வெளிச்சத்தில் ப.ஏ. ஐ நோக்கினர். தங்கள் காலங்களில் நிலவிய விளக்கவுரை முறைகளை அவர்கள் சிறிதளவே பயன்படுத்தினர். எ.கா. மெய்ப்பிக்கும் வாககியங்களை பயன்படுத்தல் (proof text) உரோ. 9:24-26 அல்லது எபி. 2:13-14), அல்லது மூலப்பொருளைக் கடந்து செல்லுதல் (1கொரி. 9:8-10 அல்லது எபி. 7:1-3) அல்லது உருவக முறையை பயன்படுத்தல் (கலா.4:21-31).

ஆனால், பு.ஏ. எழுத்தாளர்கள் இயேசு கிறிஸ்துவுக்குள், அவர் மூலமாகத் தாங்கள் பெற்றுக் கொண்ட நுண்ணறிவு, அறிவு ஆகியவற்றினால் தங்களது யூத நண்பர்களைவிட மேம் பட்டு விளங்கினர். ப.ஏ.ஐ அவர்கள் பயன்படுத்திய முறையில் எக்காலத்திலும் விவிலிய விளக்கத்தின் நோக்கமாய் அமைய வேண்டியதின்படி, நுண்ணியச் சட்டங்களின் எண்ணற்கரிய விவரங்களை விட்டுவிட்டு, விவிலிய நூல்களின் முக்கிய கருப்பொருளையும் (purport) நோக்கையும் (spirit) புரிந்து கொண்டனர்.

(ஈ) அலெக்சாந்திரியாவின் துவக்கக்கால உருவக மொழிநடை எழுத்தாளர்

உருவக முறையென்பது தரப்பட்ட ஒரு பகுதியின் உண்மையான பொருளானது வெளிப்படையான அல்லது எழுத்தின்படியானதன்று. ஆனால் மறைவானதும் ஆழ்ந்த உட்பொருளுடையதுமாயிருக்கிறது என்ற ஊகத்தில் அடிப்படை பெற்றுள்ளது. பனியன் எழுதிய மோட்சப் பயணம் இத்தகைய உருவகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.பாலஸ்தீனாவிலும், பாபிலோனிலும் வேறுபட்ட விளக்கவுரை முறைகள் பின்பற்றப்பட்டபோதிலும், அலெக்சாந்திரியாவிலுள்ள யூதர்கள் உருவக முறையை மேம்படச் செய்தனர். யூதரல்லாத கலாச்சாரத்திற்கும் அறிவுக்கும் நேராக அவர்கள் திறந்த மனதுள்ளவர்களாயிருந்தனர். அலெக்சாந்திரியப் போக்கானது நமக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், தொடக்கத்தில் பல நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்களின் விவிலிய விளக்கத்தை இது அதிகமாகப் பாதித்தது.

உருவகம் தோன்றுவதற்கான முக்கிய காரணமாவது, கிரேக்க மெய்யியலையும், சட்டங்களையும் இசைவுபடுத துவதாகும். அலெக்சாந்திரியாவிலுள்ள யூதர்கள், கலப்பற்ற மோசேயின் முறைமைகள் (Pure Mosaism) முற்றிலும் செயல் படுத்த இயலாத ஒரு காலத்திலும், நிலையிலும் வாழ்ந்தனர். சிதறடிக்கப்பட்ட யூதர்கள் தாங்கள் வாழ்ந்த கலாச்சாரத்திற்கும், தங்கள் நம்பிக்கைக்கும், ஏதாவது இணக்கம் கண்டுபிடிக்க வேண்டியதாயிருந்தது. அலெக்சாந்திரிய உருவகப் பயன்பாட் டிற்கு இதுவே முக்கிய செயல் நோக்கமாயிருந்தது (motive).

அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த யூதர்கள் இந்த முறையைத் தோற்றுவிக்கவில்லை. ஏனெனில், இது ஏற்கெனவே பயன்பாட்டிலிருந்தது. பல்லாண்டுகளாக ஸ்தோயிக்கரால் இம்முறை பயன்படுத்தப்பட்டது. தன்னுடைய ஆழ்ந்த ஆராய்ச்சி எல்லையிலிருந்து கோமரை விட்டுவிட்டபோதிலும் அன்னாரது நூல்களை, உருவக முறையைப் பயன்படுத்தித் தங்கள் காலத்திற்கு ஏற்றதாக (contemporary) ஸ்தோயிக்கர்கள் அமைத்தனர்.

அரிஸ்தோபுலஸ் (Aristobulus) என்பவர் உருவகப் பொருள் விளக்க முறையைத் துணை கொண்டு, கிரேக்க மெய்யியல் அறிஞர்களின் போதனைகள் சிறப்பாக அரிஸ்டாட்டிலின் போதனைகள் திருச்சட்டத்திலும், இறைவாக்குகளிலும் காணப்படலாமென்ற முடிவுக்கு வந்தார். உருவக முறையை பயன்படுத்தியவர்களில் மிகப் பெரியவரான பைலோ (Philo) என்பவர் அரிஸ்தோபுலஸின் முறையாலும், சிந்தனையாலும அதிகமாய் பாதிக்கப்பட்டார்.

பைலோ திருச்சட்டத்திற்குப் பெரும் மதிப்பளித்தார். வெளிக் கலாச்சாரத்தோடு பொதுவான ஒற்றுமையைக் (common ground) கண்டுபிடிக்கத் தேடியதோடு கிரேக்க மெய்யியல் அறிஞர்களின்மேல், மோசேயும் இறைவாக்கினரும் ஆன்மிக மேம்பாடுள்ளவர்கள் என்று காட்ட முயற்சித்தார். விவிலிய நூல்களின் வாக்கியங்களுக்கு இருவித பொருள் உண்டு. எழுத்தின் படியான ஒரு பொருள், உருவக முறையில் பெரும்பாலும் விளக்கப்படுகின்ற கூர்ந்து கவனித்தாலன்றி தெரியாத பிறிதொரு பொருள் என இவர் கருதினார். உருவக முறையை இவர் எந்தவித மறைப் புமில்லாமல் பயனபடுத்துகின்றார். விவிலிய நூல்களிலுளள பெயர்கள், தேதிகள், எண்கள், வரலாற்று நிகழ்ச்சிகளின் விவரங்கள், விதிமுறைக் கட்டுப்பாட்டுக்குரிய ஒழுங்குகள் (Prescriptional rules) ஆகிய எல்லாவற்றையும் உருவக முறைப்படி அவர் பொருள் கொள்கிறார்.

எடுத்துக்காட்டாக, படைப்பின் கதையைச் சொல்லுமிடத்து ஏழாம் நாளில் கடவுள் ஒய்ந்திருக்கவில்லை. ஆனால் பொருள் என்னவெனில், ஏழு என்ற எண்ணின் கணக்குப்படி தூய்மையுள்ள பகுத்தறிவானது (reason) ஆன்மாவுக்குள்

நுழைகிறது. இவ்வாறு எண் 6 அல்லது வாழ்வுக்குரியவைகள் தடுக்கப்பட்டு, இளைப்பாறச் செய்யப்படுகின்றன. பசுமையான பூண்டுகள் என்பது மனதில் ஏற்றுக் கொள்ளும் பகுதிகளைக் குறிப்பிடுகிறது. மழை பெய்யவில்லை என்பதற்கு கடவுள் மெய்யறிவைக் கொடுக்கவில்லை என்பதே பொருள். ஏதேன் தோட்டத்தை நடுதல் என்பது மனிதனில் நில உலகிற்கேற்ற நற்குணங்களை நடுதல் என்றும், ஆறு என்பது, இனத்திற்குரிய நற்குணம் என்றும், நான்கு தலைகள் மனுக்குலத்திற்குரிய நான்கு முக்கிய நற்குணங்கள் என்றும் பொருள்தரப்படுகின்றது. ஒய்வு நாள் சட்டங்கள், விழாக்கள், விருத்தசேதனம், திருக்கோவிலின் தூய்மை முதலியன எழுத்தின்படியும், உருவமைப்புப்படியும் (Figurative) உட்பொருள் உள்ளவை களாகக் கருதப்படுகின்றன.

ஒரு வார்த்தை இரு முறை திருப்பிக் கூறப்பட்டால் அதற்கு ஏதாவது உட்பொருள் கொடுக்கப்படுகிறது. அடிக்கடி நிறுத்தற்குறிகளின்றி (Punctuations) வார்த்தைகள் விளக்கப்படுகின்றன. ஒரு கூற்றானது கடவுளுக்குத் தகுதியற்றதாயிருந்தாலோ, உருவகப் பொருள் தெளிவாயிருந்தாலோ, அதின் எழுத்தின்படியான பொருள் தவிர்க்கப்பட வேண்டும். ஆழமான ஒரு பொருளை வெளிப்படுத்த, சொல்லணிகள் (Play on words) ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இடைச் சொற்கள், வினையடைகள், முன்னிடைச் சொற்கள் ஆகியவைகளுக்கும் ஆழ்ந்த உட்பொருள்கள் கூறப்படுகின்றன. பைலோ என்பவர் பொதுவாக எபிரேய உரைமூலத்தையன்று (Text), செப்துவசிந்துவையே பயன்படுத்துகிறார் என்பது வெளிப்படை. யூத இரபிகளும் பைலோவும் பயன்படுத்திய விளக்கவுரை முறைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது (உள்ளுயிர்ப்பு (Inspiration) என்னும் பொருளில் நிலவும் பொதுவான இசைவைத் தவிர) கீழ்வரும் குறிப்புகளைக் கவனிக்கலாம்:

1. பெரும்பாலும் எப்பொழுதும் யூத குருக்கள் தங்கள் நோக்குகளைப் பின்தாங்க பிற மேற்கோள்களை எடுத்துக்காட்டாய் பயன்படுத்துகின்றனர்; பைலோ அப்படிச் செய்வதில்லை.

2. யூத இரபிமார் தனிப்பட்ட வாக்கியங்களுக்கும், வார்த்தைகளுக்கும் விளக்கம் தருகின்றனர்; பைலோ அடிக்கடி பத்திகளுக்கு விளக்கம் தருகிறார்.

3. பைலோவுக்கு அணி இலக்கணம் சார்ந்த பாணியின் மேலுள்ள விருப்பு யூத இரபிகளுக்கில்லை.

4. யூத இரபிமார் எபிரேய மூலத்தை மட்டும் பயன் படுத்துகின்றனர்; பைலோ, முழுவதும் இல்லாவிடினும், பெரும்பாலும் கிரேக்க மூலத்தையே சார்ந்து எழுதுகிறார்.

5. யூத இரபிமார் முக்கியமாக எழுத்தின்படியான பொரு ளையே அழுத்துகின்றனர்; பைலோ உருவக முறையை அழுத்துகின்றார்.

தொடக்கக் கிறிஸ்தவ விளக்க உரையாளர்கள் யூதர்களோடு அவர்களுக்கிருந்த வாத எதிர்வாதத்தில் ப.ஏ.இன் உண்மையான பொருள் இயேசுகிறிஸ்துவில் நிறைவேறிற்று எனக் காண்பிக்கும்படி உருவகமுறையைப் பின்பற்றினார்கள். அதே வேளையில் மார்சியன் என்பவர் கிறிஸ்தவத் திருச்சபைக்கு ப. ஏ. பயனற்றது என்று தள்ளுபடிசெய்தபோது, ப.ஏ.கடவுளின் உண்மையான வெளிப்படுத்தல் என்றும், ஆகையால், அவை தங்களுடைய புனிதமான விவிலிய ஏடுகள் என்றும் உயர்த்திக் காட்டவேண்டியதாயிற்று.

விவிலியத்தின் எந்தப் பகுதிக்கும் பின்வரும் ஐந்து பொருள்கள் அல்லது இயலறிவு நிலைகள் உண்டு என அலெக்சாந்திரியா நகரத்து கிலமெந்து என்பவர் கூறினார்:

1. வரலாற்றுப் பொருள் அல்லது எழுதப்பட்டபடியே உண்மையான நிகழ்ச்சி.

2. சித்தாந்தப் பொருள். இதுவே தெளிவான இறையியற் போதனை.

3. இறைவாக்குப் பொருள் அதாவது முன் அறிவித்தலும் மாதிரிப்படிவ வரன்முறையுமான (typological) பொருள்.

4. தத்துவப் பொருள். அதாவது இயலுலகொடு சார்ந்த (Cosmic) உளநூல் சார்ந்த பொருள்.

5. இறுதியாக, ஆழ்ந்த உட்பொருளடங்கிய பொருள். அதாவது, ஆழமான ஆன்மிகப் பொருள்கள் (Values).

கிலமெந்தின் சிறப்புமிக்கப் பின்னடியாராக கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் துவக்ககாலத்தில் எழுந்த ஓரிகென் என்பவர், மனிதரின் மும்முறை இயல்பிற்கு ஏற்ப விவிலிய நூல்களுக்கும் மூன்று பொருள்கள் உண்டு என்கிறார்:

1. எழுத்தின்படியான பொருள். இது உடலுக்கு ஒப்பிடப்படுகிறது. இம்முறையானது சாதாரண மனிதருக்கு பயனுடையது. பயனுள்ளபோதெல்லாம் அவர் இம்முறையைப் பயன்படுத்தினார்.

2. ஒழுக்கப் பொருள். இது ஆன்மாவுக்கு ஒப்பிடப்படுகிறது. கிறிஸ்துவுக்குள் ஒருவர் வளருவதற்கு இது பயனுள்ளது.

3. ஆன்மிக அல்லது ஆழ்ந்த உட்கருத்துள்ள மறைபொருள் இது மனிதரின் ஆவிக்கு ஒப்பிடப்படுகிறது. முழுமையான மனிதருக்கு இது பயனுள்ளது. ப.ஏ. ஐ எழுத்தின்படியான பொருளில் மட்டும் பயில்வதாயிருந்தால் கிறிஸ்தவர்கள் யூதர்களைவிட எந்த விதத்திலும் மேலானவர்களாயிருக்க இயலாது. யோசுவா 2 ஆம் அதிகாரத்தை விளக்குமிடத்து வேவுகாரர்கள் கிறிஸ்துவின் முன்னோடிகள் என்றும், இராகாபு ஆயக்காரர்கள் பாவிகளின் பிரதிநிதி என்றும், சிவப்பு நூல் கிறிஸ்துவுக்குள் ஒருவர் வளருவதற்கு இது பயனுள்ளது. இராகாபின் இல்லம் திருச்சபை என்றும் கூறினார். ஓரிகெனின் உருவகப் பொருள் விளக்க முறைகளின் செல்வாக்கு அவருக்குப்பின் பல நூற்றாண்டுகள் திருச்சபையில் நிலவியது.

(உ) அந்தியோகியாவில் காணப்பட்ட எழுத்தின்படி பொருள் கூறுபவர்கள் (The Literalists of Antioch)

அந்தியோகியாவிலுள்ள சீரியக் குழுவினர் யூத ஏற்புடைச் சமய உறுதியில் (Orthodoxy) இருந்தும் அலெக்சாந்திரியர்களின் உருவகத்திலிருந்தும் தங்களைக் காத்துக் கொண்டனர். இவர்கள் விவிலிய ஏடுகளை எளிதான தெளிவான பொருளின்படி விளக்கினார்கள், உருவமைப்புச் சார்ந்த சொற்றொடர்களை அவற்றின் தெளிவான பொருளின்படி விளக்கினார்கள். ப.ஏ. நிகழ்ச்சிகள் அடையாளங்களல்ல: உண்மையான நிகழ்ச்சிகள் என்று இவர்கள் ஏற்றுக்கொண்டனர். உருவகக் கற்பனைகளிலல்ல, கிறிஸ்துவிலேயே விவிலிய நூல்களின் ஒருமைப்பாட்டினை இவர்கள் கண்டனர். இக்குழுவின் செல்வாக்குமிக்க விளக்கவுரையாளர் கிறிசொஸ்தம் என்பவராவார். இவர் உருவகப் பொருளுக்கு இடங் கொடுக்கும்போதும் அதை எழுத்தின்படியான பொருளுக்குக் கீழ்ப்படுத்தினார். இக்குழுவின் மரபானது பிந்தைய நூற்றாண்டுகளில் சில அறிஞர்களில் தொடர்ந்தபோதிலும் சீர்திருத்தக் காலம் வரையிலும் எழுத்தின்படி பொருள் கொள்ளும் முறை வெற்றி பெறவில்லை.

(ஊ) இடைக்காலமும் உருவக மொழிநடையின் ஆட்சியும்

மத்திய காலத்தில் உருவக மொழிநடையே ஒரே சிறப்பான பொருள் விளக்கத் தந்துவமாயிருந்தது. தோமா ஆக்குவீனோ சொல்லியபடி விவிலிய நூல்களின் எழுத்திற்கும் உருவகத்திற்குமுள்ள உறவானது தண்ணீர் முழுக்கிற்கும், ஆன்மிகப் பிறப்பிற்குமுள்ள உறவு போன்றதாகும். எழுத்தின்படியான பொருள் கைவிடப்படாத போதிலும் பொதுவான ஒழுங்காக பழைய, புதிய ஏற்பாடுகள் மாதிரிப்படிவ வரன்முறையாக (Typologically) விளக்கப்பட்டன. அதாவது, திருச்சபையின் பல சித்தாந்தங்களுக்கு ஆதாரங்கூறி. அவற்றினை விளக்குவதற்காக ஒழுக்கப் பொருளிலும், உருவகப் பொருளிலும் பயன்படுத்தினர்.

இக் காலத்தில் விவிலியப் புலமையானது வல்கேட் (Vulgate) என்ற இலத்தீன் மொழிபெயர்ப்பில் அடிப்படை பெற்றது. அதிகாரப்பூர்வமான விளக்கவுரையாளராய்த் திருச்சபை திகழ்ந்தது. சித்தாந்தம் தொடர்பானவைகளில் திருச்சபையின் அதிகாரபூர்வமான நிலையை மறுத்துப் பேச ஒரு விளக்க வுரையாளருக்கும் உரிமை இல்லாதிருந்தது. ஒவ்வொரு நூலின் ஆக்கியோர், காலம் முதலியவை பற்றிய திருச்சபையின் கருத்தை ஒருவரும் எதிர்க்கவில்லை. ஒரு பொருளில் விவிலிய நூல் தெளிவாய் இல்லாவிடின் மரபும் அதோடு சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அகுஸ்தீனின் சம காலத்தவரான வின்சென்ட் என்பவர். எல்லா இடத்திலும், எப்போதும், எல்லாராலும் நம்பப்பட்டவைகளையே நாம் ஒப்புக் கொள்ளும்படி. கவனம் செலுத்த வேண்டும் என்று கூறினார்.

மக்கள் பொதுவாகக் கல்வியறிவற்றவர்களாயும் வாசிக்கத் தெரியாதவர்களாயுமிருந்தனர். ஆகையால் விவிலியத்தின் முக்கிய விவரங்களை நிறக் கண்ணாடிகளில் உருவப்படமாய் எழுதியும் வார்ப்புப் படிமங்கள். சுவர் ஓவியங்கள் மூலமாகவும் விளக்கினர். சாதாரண மனிதர் தங்களுடைய விவிலிய நூல்களின் போதனைகளின் தன்மையை அறிய திருச்சபை மேதாவிகளின் வழிநடத்துதலை உதவியற்ற நிலையில் முற்றிலும் சார்ந்திருந்தனர். உருவக முறை இடம் தந்த சுயாதீனத்தைக் கொண்டு திருச்சபையானது தேவை என்றும், பயனுள்ளவை என்றும் காணப் பெற்ற போதனைகளையும், சித்தாந்தங்களையும் விவிலிய நூல்களுக்குள் புகுத்தினது.

(எ) சீர்திருத்தக்காரர்களும், விவிலிய நூல்களும்

கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து பிரிந்து சென்ற சீர்திருத்தக்காரர்களின் முன்னோடியான ஜான் விக்லிப்பு என்பவர் எழுத்தின் படியான பொருளின் உயர்வை வற்புறுத்தியபோதிலும், தமது போதனையில் ஓரளவு உருவக விளக்கங்களையும், பயன்படுத்தினார். நூறு போப்பாண்டவர்கள் இருந்தாலும், ஒவ்வொரு துறவியும் ஒவ்வொரு திருத்துணைவராயிருப்பினும் (Cardinal) பற்றுறுதி தொடர்பாக விவிலிய நூலில் அடிப்படைபெற்ற சிந்தனையே செல்லுபடியானதாகும் என இவர் உணர்ந்தார்.

மார்டின் லுத்தர். அவரது வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் உருவகத்தில் நிபுணராயிருந்தார். எழுத்தின் படி பொருள்கொண்டபடியால் எல்லா விளக்கவுரையாளர் களையும்விட அதிகமாக லைறாவை (Lyra) நான் வெறுத்தேன். ஆனால் இப்போது எல்லாரிலும் மேலானவராக அவரை மதிக்கிறேன் என அவர் கூறினார். சிலவேளைகளில் அவர் உருவகத்தைச் சகித்துக் கொண்டார். ஆனால் அதை ஓர் அணி செய்தல் (decoration) என்று அழைத்தார். ஏனெனில், அணி செய்தல் மெய்ப்பொருளன்று. எழுத்தின்படியான பொருளிலேயே உருவகப்படுத்திக் கூறுதல் முற்றிலும் அடிப்படை பெற்றிருக்க வேண்டும். விவிலியத்தின் ஒரு பகுதிக்குப் பல பொருள்கள் அளித்தல் என்பது, விவிலிய நூல்களின் அதிகாரத்தைத் தள்ளிவிடுவதற்கு ஒப்பாகுமென அவர் கூறினார்.

பொருள் விளக்கக இயலுக்குப் பின்வரும் முக்கிய தத்துவங்களை அவர் ஏற்படுத்தினார்:

1. பற்றுறுதி, இறைவேண்டல் ஆகியவற்றின் முக்கியத்துவம். ஒருவருக்குள்ளிருக்கும் தூய ஆவியரே விவிலிய ஏடுகளை விளக்கும் ஆற்றலுள்ளவர். ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் பொருள் விளக்கம் கூறும் உரிமை உண்டு.

2. எழுத்தின்படியான பொருளை விரும்பித் தேர்ந்து கொள்ள வேண்டும். உரோமன் திருச்சபையின் உருவக முறையை அவர் மறுத்துவிட்டார். அதோடு மூலமொழிகளைப் படிப்பதின் முக்கியத்துவத்தையும், விவிலிய நூல்களின் வரலாற்றுக் கட்டடங்களைப் படிப்பதையும் விறுவிறுப்புடன் ஆதரித்தார். அவர்தாமே ஆண்டில் இருமுறை விவிலியத்தை வாசித்து முடித்தார்.

3. எல்லா பற்றுறுதியாளரின் குருத்துவமும், திருச்சபையின் தலையீடின்றி விவிலிய நூல்களைப் புரிந்து கொள்ள ஒவ்வொருவரும் தகுதியுள்ளவரே என்னும் தத்துவம்.

4. எல்லா விவிலிய நூல்களுக்கும் கிறிஸ்துவே மையம். பு.ஏ. ஐ மட்டுமன்று, ப.ஏ.ஐயும் புரிந்துகொள்வதற்கு இதுவே வழிநடத்தும் தத்துவமாயிருக்கின்றது.

திருச்சபையின் வரலாற்றிலே ஜான் கால்வின் என்பவரே முதன் முதல் அறிவியல் சார்ந்த விளக்கவுரையாளராவார். தமக்கு முன்னிருந்த எல்லாரையும்விட அதிகமாக விவிலிய நூல்களின் எழுத்தின்படியான, வரலாற்று, இலக்கணப் பொருளை அவர் வற்புறுத்தினார். லுத்தரைப் போலவே இவரும் உருவக முறையை மறுத்தார். விவிலிய நூல்களை விளக்குவதற்கு ஒவ்வொரு பற்றுறுதியாள ருக்குமுள்ள உரிமையை உறுதிப்படுத்தினார். ஒருவர் புரிந்து கொள்வதற்கு ஆவியின் ஒளி அடிப்படையான தேவை என்று கூறினார்.

விவிலிய நூல்களை விவிலிய நூல்களைக் கொண்டே விளக்கும் முறையை இவர் உற்சாகப்படுத்தினார். சிறப்பாக, இரண்டு ஏற்பாடுகளிலும், பிந்தைய பகுதிகளைக் கொண்டு முந்தைய பகுதிகளைப் புரிந்து கொள்ளுதல், ப.ஏ.ஐ விளக்குவதற்குப் பு.ஏ. ஐ பயன்படுத்தல் ஆகியவற்றை இவர் ஊக்குவித்தார். விவிலிய நூல்களில் எடுக்க எடுக்கக் குறையாத நிலைமையானது பொருள்களின் வளத்தில் அமைவதில்லை. ஒருவர் உண்மையான தெளிவான பொருளுக்கு, உண்மையுள்ளவராய் இருக்க வேண்டும். விளக்கவுரையாளரின் சிறப்புக் கடமையென்னவெனில், எழுத்தாளரின் நோக்கை எடுத்துக் காட்டுவதாகும் என அவர் கூறினார்.

உரோமன் திருச்சபைக்கு எதிராக லுத்தரும் கால்வினும், மரபை விட விவிலிய நூல்களே தனித்த ஒரே அதிகாரமுள்ளவை என்பதை உறுதியாகக் கடைப் பிடித்தனர். எழுத்தின்படியான வரலாற்றுப் பொருளை எடுத்துக் கொண்டு உருவக முறையை

மறுத்தனர்; திருச்சபையின் தலைமீடின்றி விவிலியத்தை விளக்கும் பற்றுறுதியாளரின் உரிமையை வெகுவாய் ஆதரித்தனர். நவீன காலத் திறனாய்வுப் பிரச்சனைகள் அவர்கள் இருவருக்கும் எழவில்லை. சிறப்பாக, வாதத்திற்குரிய நோக்கத்தோடே இருவரும் சித்தாந்தப் பொருள் விளக்கத்தைப் பயன்படுத்தினர். ஆனால் லுத்தரைவிட கால்வின் தமது இறையியல் நிலையில் உணர்வு சார்பற்று தன்னுரிமையுடன் (objective) விளங்கினார். விவிலியமானது சமயக் கொள்கைகளின் நூலல்ல; அது ஒவ்வொரு பற்றுறுதியாளருக்கும் அருளப்படும் கடவுளின் வெளிப்படுத்தலாகும். எழுத்தின்படி பொருள் கொள்ளுதல் இதை இல்லாமல் செய்கிறது என்றார். இவ்வாறு லுத்தர், கால்வின் ஆகியோர் பிற்காலத்திறனாய்வுப் புலமையின் வாயிலைத் திறந்துவைத்தனர் எனலாம்.

(ஏ) தற்காலத் திறனாய்வாளர்

சீர்திருத்தக்காரர்களின் காலத்திற்குப் பின்னர் நாம் கடவுளுடைய வார்த்தை என்று புரிந்து கொள்ளும் பகுதியின் சரியான மூல ஏடு எது என்றும், அவ்வேட்டில் அடங்கியுள்ள கருத்துக்கள், வார்தைகள் ஆகியவற்றின் சரியான பொருள் என்னவென்றும், திடடமாய் அறியும் அக்கறை வளர்ந்தது அது வரையிலும் அறியப்படாததும் அண்மை ஆண்டுகளில் கண்டு பிடிக்கப்பட்டதுமான மூலஏடுகளின் உதவியாலும், பல ஆரம்ப கால மொழி பெயர்ப்புகளின் உதவியாலும். விவிலிய ஏடுகளை தொடக்க மூலத்திற்கு எந்த அளவு சரியானவையாய் அமைக்கக் கூடுமோ, அந்த அளவுக்கு அவற்றை அமைப்பதற்காக முயன்றனர். விவிலிய மொழிகளையும், சிறப்பாக எபிரேய மொழியையும் அவற்றின் இன மொழிகளின் வெளிச்சத்தில் கற்றனர்.

அப்படியே, இலக்கியம் சார்ந்த திறனாய்வுக் களத்தில் (Literary Criticism). ஆய்வின்றி நூல்களின் ஆக்கியோர் யார் என்பதை ஏற்றுக்கொள்வதை மறுத்துவிட்டு விவிலிய நூல்கள் உருவாக்கப்பட்ட முறைகளைக் குறித்து அவர்கள் ஆராய்ந்தனர். மேலும் விவிலியமும் இலக்கிய முறைகளும் கவனமாகப் படிக்கப்பட்டன

இஸ்ரயேலரது சமயத்தைக் கலாச்சார வரலாற்றுப் பின்னணியத்தின் கட்டத்திலும் பழைய அண்மைக் கிழக்கு நாடுகளைப் பற்றிய தற்கால விரிவான அறிவின் வெளிச்சத்திலும் அவர்கள் புதிதாய்க் கண்ணோக்கினர். 19 ஆம் நூற்றாண்டின் திறனாய்வு ஆரர்ய்ச்சிகள் அக்காலத்திய முற்கோள்களின் அடிப்படையில் இருந்தன; இப்போது, அவைகள் தவறானவை என்றும் ஏற்றுக் கொள்ளக்கூடாதவை என்றும் தெரிகிறது. எனினும், தற்கால ஆராய்ச்சிகள் விவிலிய அறிவிற்குத் தந்த வளமான பங்களிப்புகளை விவிலிய மாணவர் ஒருவரும கவனிக்கத் தவறலாகாது.

இருத்தல் கொள்கைக் குழுவினர் (The Existential School) ஒவ்வொரு வாசகருக்கும் வெளிப்படுத்தல் கிடைக்கும் நேரமாகிய கடவுளோடு உரையாடலில் ஈடுபடுவதை விவிலியத்தைப் படிப்பதில் அதிகமாக வற்புறுத்தினர். உளதாந்தன்மையோடு வாசிக்கும்போது விவிலியமானது, ஒவ்வொருவருக்கும் கடவுளின் வார்த்தையாக அமைகிறது. எந்தப் பொருள் விளக்கமும், விளக்கவுரையாளரிலிருந்து வேறுபட்டு நிற்பதில்லை. மூல ஏட்டிற்கும் விளக்கவுரையாளருக்கும் ஒரு தொடர்பிருக்கிறது. இதற்கு பொருள் விளக்கம் சார்ந்த வட்டம் என்பது பெயர் (Hermeneutic Circle). விவிலியம் எந்த அளவு, ஒருவரின் வாழ்வின் மேல் கடவுளின் உரிமையைப் பகிர்நதளித்து அவருக்குள் கிறிஸ்து நிகழ்ச்சி நிகழச் செய்கின்றதோ அந்த அளவு அது அவருக்கு அதிகாரமுள்ளதாயிருக்கும். தனியாகப் பிரிந்து நின்று ஒருவர் வரலாற்றினைப் புரிந்து கொள்ள இயலாது. **புல்த்மான்** (Bultmann) என்பவரால் தெளிவு படுத்தப்பட்டு, அவரது பின்னடியாரால் வளர்க்கப்பட்ட இந்த அழுத்தங்கள் கடவுளின் வெளிப்படுத்தலின், தன்னில்தானே செல்லுபடியாகும் நிலைமை, வரலாற்று அறிவு ஆகியவை பற்றி மிக முக்கிய கேள்விகளை எழுப்புகின்றன.

இதே குற்றச்சாட்டு புல்த்மான் என்பவரின் புனைவு நீக்கம் (Demythologisation) என்னும் கருத்திற்கும் பொருத்தமான்தாகும். பு.ஏ. பழங்கதைப் போக்கான பேச்சு முறை, சிந்தனை அமைப்புகள், அனுபவங்கள் ஆகியவற்றால் எழுதப் பட்டிருக்கிறது. இம் மொழியானது தற்கால மனிதருக்குப் பொருளறற்ுக் காணப்படுகிறது. எழுத்தின்படி எடுத்துக் கொண்டால், மனிதரால், இவை இக்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவை அல்ல. இவை தற்கால மனிதரின் கிறிஸ்துவைப் பற்றிய அனுபவத்திற்கு ஏற்ப மொழியாக்கம் செய்யப்பட வேண்டும். ஒருவர் எதை நற்செய்தி அறிவிப்பு (Kerygma) என்று புரிந்து கொள்வாரோ அது அவருக்குச் செல்லுபடியாகும். எது புனைவு நீக்கம் செய்யப்படுகிறதோ, அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஒருவரது சுய அறிவினால் ஏற்படும் உண்மைக்குப் பொருத்தமாயிருக்கும் விளக்கமே உண்மையென கருதப்படவேண்டும். ஆனால் கிறிஸ்தவ நம்பிக்கைக்கும் இறையியலுக்கும் அடிப்படையானது இருத்தல் கொள்கை சார்ந்த சிந்தனையல்ல, வரலாற்றில் நிகழும் கடவுளின் மீட்கும் செயல்களும், வார்த்தைகளிலும், செயல்களிலும் தம்மைப்பற்றி அவர் அளிக்கும் சுய வெளிப்படுத்தலுமாகும்.

3. அடிப்படைத் தத்துவங்கள்

(அ) நேர்மையான நோக்கு

விளக்கவுரையாளர் ஒருவர் விவிலிய நூல்களுக்கு நேராக, நேர்மையான நோக்குடையவராயிருக்க வேண்டும். கடவுளின் வார்த்தையினிடத்தில் வரும்போது அவர் ஒரே வேளையில் பார்வையாளரும் கேட்கிறவருமாயிருக்கிறார். பார்வையாளர் என்ற முறையில் அவர் திறனாய்வு ஆராய்ச்சிகள், இறையியல், வார்த்தைகளின் பொருள், வரலாற்றுச்சூழல் முதலியவற்றைத் துணையாகக் கொண்டு, விருப்பு வெறுப்பின்றி (objectively) மூல ஏட்டைப் படிக்கிறார்.

ஆனால் கேட்கிறவர் என்ற முறையில் கடவுளின் வார்த்தையிடத்து நம்பிக்கையோடும், ஒப்படைப்போடும் (Commitment) அவர் வருகின்றார். விவிலியத்தின் மிக உயரிய அதிகாரத்தையும், கடவுளின் வெளிப்படுத்தல் என்னும் அதின் தன்மையையும் அவர் முன்னதாக மெய்யென ஒப்புக்கொண்டவராக அதின் செய்திக்குத் தன்னை அர்ப்பணித்துவிடுகிறார். அவர் எதிர்பார்ப்போடும் ஏறறுக கொள்ளும் மனநிலையோடும் அதனைப் படிக்கின்றார்.

விளக்கவுரையாளர் தம்மை வழிநடத்தும்படி தூய ஆவியரைச் சார்ந்திருக்க வேண்டும். கடவுளுடைய வார்த்தைக்கு அகத்தூண்டுதலளிக்கிறவர் அவர் என நாம் பிம்பினால் அதனை நாம் புரிந்து கொள்வதிலும் அவர் தெளிவுபடுத்த இடமளிக்க வேண்டும். விவிலிய நூல்களின் கருகலான பகுதிகளின் பொருள் விளக்கம் பற்றித் தாம் போராடியபோது, தோமா, ஆக்குவினோ நேர்ன் பிருந்து இறைவனிடம் வேண்டுவது வழக்கம் எனக் கூறப்படுகின்றது.

அதோடு கற்றுக் கொள்ளவும், திருத்தப்படவும் ஒருவர் ஆயத்தமுள்ளவராயிருக்க வேண்டும். விவிலிய நூலின் ஒரு பகுதி தெளிவாயிராவிடில் தமது குறைபாட்டை ஒப்புக்கொள்ள விருப்பமுள்ளவராயிருக்க வேண்டும். யூத குருக்களின் ஓர் எச்சரிப்பு என்னவெனில், எனக்குத் தெரியாது என்று கூற உன் நாவுக்குக் கற்றுக்கொடு என்பதாகும். விவிலியத்தில் தெளிவாகக் கற்பிக்கப்படுகிறவைகளைக் கடந்த ஓர் அறிவை நாம் ஒருவரும் எதிர்பார்க்க இயலாது என ஒப்புக்கொள்ள நாம் விருப்பமுள்ளவர்களாயிருந்தால், நம்மிடையில் பல கருத்து மாறுபாடுகளை நாம் தவிர்த்திருக்கக்கூடும்.

(ஆ) வரலாறு, கலாச்சாரம் சார்ந்த பின்னணியத்தைப் புரிந்து கொள்ளுதல்

விவிலியமானது, கடவுளைப் பற்றிய மனிதரின் ஊகங்கள் அல்லது புனைவுகளின் பதிவேடன்று, ஆனால், கடவுளின் மீட்கும் செயல்கள், தேவையின் உண்மையான கட்டங்களில் பேசப்பட்ட அவரது வார்த்தைகள் ஆகியவற்றின் பதிவேடாகும். கடவுளின் செய்தியானது, அந்தந்தக் காலங்களில் மனிதர் புரிந்துகொள்வதற்கு ஏற்ற சிந்தனைத் தோரணை (pattern of thought) வாயிலாக மனிதருக்கு வந்தது. இவ்வாறு எழுதப்பட்ட வார்த்தையில் மாறிப்போகும் தகவுகளும், என்றென்றுமுள்ள தகவுகளுமிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, இஸ்ரயேலர் நம்பின அரசர்களின் தெய்வீக உரிமை என்பது இக்காலத்துக்குப் பொருந்தாது. அப்படியே சமய நம்பிக்கைக்குத் தேசிய அடிப்படை என்பதும் இனிமேல் செல்லுபடியாகாது. கொரிந்திய சபைக்குத் தாம் எழுதிய கடிதத்தில் தூய பவுல் பலவிதப் போதனைகளை அந்தத் தனிப்பட்ட சபையின் தனிப்பட்ட நிலைமைக்கு ஏற்றவாறு சிபாரிசு செய்து கூறுகிறார். இயேசுநாதர் என்னுடைய அரசு இவ்வுலகிற்குரியதல்ல என்று கூறியபோது ப.ஏ. மெசியா பற்றிய இறைவாக்குகளின் வெளித்தோற்றமான வரம்பு (Frame work) அல்லது அச்சை (mould) நிராகரித்தார். பொருள் விளக்கவுரையாளர்கள் கடவுளின் வார்த்தையின் செய்தியையும், அமைப்பையும் பிரித்தறிவது அவர்களின் பணியாகும்.

சூழலைப் படிப்பதில் பிறிதொரு முக்கியக் கூறு என்னவெனில், விவிலியக் காலங்களுக்கும் நமது நாள்களுக்குமுள்ள பெருத்த கலாச்சார, மொழி வேறுபாடாகும். விவிலியக் காலங்கள் என நாம் அறியும் பகுதி கூட பெரிய வேறுபாடுகளுள்ள பல நூற்றாண்டுகளைக் கொண்டதாகும். விவிலிய வரலாற்றின் பல காலங்களிலிருந்து வருகின்ற எண்ணற்கரிய ஆதாரங்கள் இன்று கிடைத்திருக்கின்றன. இவற்றின் மூலம் விவிலியப் பதிவேடுகளைப் பற்றிக் கூடுதல் அறிகிறோம். கடந்த பல்லாண்டுகளில் ஏற்பட்ட புதைபொருள் கண்டுபிடிப்புகள் மூலம் முழுவதும் புதிதான பண்டைச் சமீப கிழக்கு இப்பொழுது நமக்கு முன் திறந்திருக்கிறது.

பழைய, புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தைப் பற்றிய நமது தற்கால அறிவானது பு.ஏ. ஆக்கியோர் விளக்கம் தராது எழுதிய பு.ஏ. போதனைகளின் பல கூறுகளை நாம் அறிந்துகொள்ள உதவுகிறது.

கடவுளின் வார்த்தையின் பொருள் விளக்கவுரையாளர் ஒருவரும் விவிலியப் பதிவேடுகளின் வரலாற்று, கலாசார சமயப் பின்னணிபற்றிய ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட இயலாது.

(இ) உருவகம், பு.ஏஇன் செய்திகள் யாவும் இன மாதிரிகளாகப் பழைய ஏற்பாட்டிலேயே குறித்துக் காட்டப்பட்டுள்ளன என்று கருதும் கோட்பாடு, அல்லது அமைப்பொப்பு (Allegory. Typology or Homology):

பல நூற்றாண்டுகளாகக் கிறிஸ்தவத் திருச்சபை உருவகப் பொருள் விளக்க முறையைப் பின்பற்றிய போதிலும், எக் காலத்திலும், சிறப்பாக சீர்திருத்தத்திற்குப் பின்னர் சிறந்த மனிதர்கள் எழுத்தின்படியான பொருளையே உயர்வாய் வைத்திருந்தனர். மூல ஏட்டின் எழுத்தின்படியான பொருளில் அடிப்படை பெற்ற உருவகத்தை அவர்கள் பயன்படுத்தினர். பொருள் விளக்கவுரையாளரின் முதல் கடமை, எழுதப்பட்டப் பகுதி ஆக்கியோருக்கு மெய்யாகவே என்ன பொருள் கொடுத்தது எனக் கண்டுபிடிப்பதேயன்றி, பலவிதமான வேறுபாடுகளோடே பன்மடங்கான பொருள்களை மூல ஏட்டில் புகுத்துவது அல்ல. திருச்சபை அல்லது ஒவ்வொரு பற்றுறுதியாளரும் அனுபவத்தில் வளர்ச்சியடைந்து புதிய மதிப்பீடுகளையும் பொருள்களையும் மேம்படுத்தக்கூடும் என்பது உண்மையே. ஆனால் இவை கடவுளின் வார்த்தையின் முதல் மூல ஏட்டில் இயல்பாக இருந்தன என்று சாதிக்க ஒருவருக்கும் உரிமையில்லை.

கவின்மிகு கவிதைகளுக்கு பொருள் விளக்கம் கூறும் போதும், அந் நூலைக் கடவுளால் ஏவப்பட்டது என்று கருதுவதற்கு எழுத்தின்படியான பொருளை உதறித் தள்ளுவதற்கு ஒரு காரணமுமில்லை. எ.கா. இந் நூலில் காணப்படும் ஆண்-பெண் காதலின் ஆழம், மனித உடலின் அழகு போன்றவற்றை எழுத்தின்படியே புரிந்துகொள்வதில் தவறில்லை. திருமண வைபவங்களில் அருளுரையாற்ற இந்நூலை இப்போது செய்வதைவிட அதிகமாகப் பயன்படுத்த வேண்டும். கடவுளுக்கும் இஸ்ரயேலருக்குமிடையில் அல்லது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமிடையிலுள்ள அன்பு என இந் நூலிற்கு உருவக விளக்கம் கொடுப்பதாயிருந்தால், அது இந்த இடத்தில் உண்மையாயிருப்பதுபோல, விவிலிய நூல்களின் மொத்தமான போதனையில் முற்றிலும் அடிப்படை பெற்றிருக்கவேண்டும்.

பு.ஏ. இன் செய்திகள் யாவும் இனமாதிரிகளாகப் ப.ஏ. இலேயே குறித்துக் காட்டப்பட்டுள்ளன என்று கருதும் கோட்பாட்டிற்கும் (Typology) உருவக முறைக்கும் (Allegory) வேறுபாடுண்டு. ஏனெனில், இம் முறையில் ஏற்கெனவே மூலத்தில் இல்லாத ஒரு வேற்றுப் பொருளை ஒரு பகுதிக்குக் கொடுக்க இயலாது. ஆனால், உருவக முறையில் ஆன்மீகப் பொருள் விளக்கத்தில் மிகுதியான உரிமை இருக்கிறபடியால், ஒரு பகுதியிலிருந்து, ஒருவர் விரும்பும் எதையும் வலிந்து பொருள் புகுத்தி எடுக்க வாய்ப்புண்டு. எழுத்தின்படியான பொருள் ஆதரிக்கும் ஆழமான ஆன்மிகப் பொருள் ஒரு பகுதியில் தொக்கியிருக்கலாம். அவ்விதமிருந்தால் இதை எடுத்துக் கூறாதிருக்கக் காரணம் எதுவுமில்லை.

ப.ஏ. இல், நிகழ்ச்சிகளுக்கும் புதிய அனுபவங்களின் வெளிச்சத்தில் முன் நடந்தவற்றை நினைவுகூருதலுக்குமிடையிலுள்ள பொருத்தத்தை ஏற்றுக்கொள்ளுதலை நாம் காண்கிறோம். எகிப்தின் விடுதலை, பாலைநிலப்பயணம் ஆகியவை கடவுளின் திரும்பத் திரும்ப நிகழும் விடுதலையின் செயல்களைத் தெளிவுபடுத்த இறைவாக்கினரால் பயன்படுத்தப்படுகின்றன. பழைய நிகழ்ச்சிக்கும், புதிய நிகழ்ச்சிக்கும் இடையிலுள்ள உறவு மீட்கும் செயல்களில் கடவுளின் அமைப்பு முறையாயிருக்கிறது. முந்தையதில் பிந்தைய

காலத்தில் நிகழவிருக்கும் ஒரு முழுமையான நிறைவேறுதலைப் பற்றிய வாக்குறுதி அமைந்திருக்கிறது. இவ்வாறு, மாதிரிப் படிவத்திற்கும், மாதிரிப் படிவ மூலத்திற்கும் (The type and the anti-type) இடையில் உறவின் உள்ளான ஒப்புமையிருக்கின்றது. படிவமென்பது ஓர் இறைவாக்கு அடையாளமாகும்.

பு.ஏ.இன் செய்திகள் யாவும் இனமாதிரிகளாகப் ப.ஏ.இலேயே குறித்துக் காட்டப்பட்டுள்ளன என்று கருதும் மாதிரி ஒப்புமை விளக்கத்தின் அதிமுக்கிய ஆதரவாளரான G. வன்ராட் (Von Rad) என்பவர் இந்த முறையின் பின்வரும் நலன்களை எடுத்துக் கூறுகின்றார்:

1. இது ப.ஏ. இன் தன்னறிவைக் கடந்து செல்லுகிறது; ஏனெனில், ப.ஏ. இல் பு.ஏ.க்குரிய ஓர் ஆயத்தத்தை நாம் காண்கிறோம். கிறிஸ்துவைப்பற்றிய ப.ஏ. சான்றைப் புரிந்துகொள்ள இம்முறையை நாம் இன்னமும் பயன்படுத்த வேண்டியுள்ளது.

2. இம்முறை ப.ஏ. பொருளுரை விளக்கத்தை ஆன்மிக மயமாக்கும் நிலையிலிருந்து விடுவிக்கிறது. இது ப.ஏ. அனைத்தையும், தெரிந்துகொள்ளப்பட்டப் பகுதிகளை மட்டுமல்ல, முழுமையாக நோக்கிப் பார்க்க உதவுகிறது. இது ப.ஏ.இன் வரலாற்றின் விவரங்களையல்ல, ப.ஏ. நற்செய்தி அறிவிப்பையே முக்கியப்படுத்துகிறது.

3. வரலாற்றுத் திறனாய்வுப் பொருள் விளக்கத்தை மாதிரி ஒப்புமை (Typology) விளக்கத்திலிருந்து பிரிக்க இயலாது. ஏனெனில் விவிலியததின் உள்ளார்ந்த ஒருமைப்பாடு இதன் அடிப்படையாகும்.

4. இம்முறை, ப.ஏ. இலும், பு.ஏ. இலும் பயன்படுத்தப்பட்டிருப்பதை நாம் பார்க்கின்றோம்.

இம்முறை (Typology) விவிலியத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பது எந்த அளவு நியாயமோ, அந்த அளவு இது செல்லுபடியாகுமென்று நாம் கூறலாம். நமது முறை, விவரங்களையல்ல முழுமையைத் தொடர்புபட்டதாயிருக்க வேண்டும். எ.கா. சந்திப்புக் கூடாரத்தின் முழுமை இவ்வித விளக்கத்திற்கு (Typological) இடமளிக்கக்கூடும். ஆனால், சந்திப்புக் கூடாரத்தின் விவரங்கள் இந்த முறைக்கு இடமளிப்பதில்லை. மேலும், நமது அடிப்படைச் சித்தாந்தங்களை இந்த முறையான விளக்கங்களின்மேல் நாம் நிறுவுவதில்லை.

அண்மை ஆண்டுகளில் மேலே விளக்கியபடி இந்த முறையை பிரதிநிதித்துவப்படுத்த அமைப்பொப்பு(Homology) என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. அமைப்பொப்பில் இரு பொருள்களிடையிலுள்ள ஒப்புமை, அவற்றின் முக்கிய ஒருமைப்பாட்டில் அடிப்படை பெற்ற உண்மையான, உயிர்நிலையான பொருத்தமாகும். இறுதி ஆதாம், ஆபிரகாமின் வழிமரபு, கடவுளின் இஸ்ரயேலர், நமது பஸ்காவாகிய கிறிஸ்து, புதிய உடன்படிக்கையின் அப்பம், விண்ணுலக எருசலேம், முதலியவற்றின் பு.ஏ. பயன் இந்த வகையினத்தைச் சேர்ந்தவையாகின்றன.

சில அறிஞர்களின் கூற்றின்படி, பு.ஏ. இல் மாதிரி ஒப்புமை எனப் பொதுவாகக் கருதப்படுகின்றவை முற்றிலும் எடுத்துக்காட்டு முறையான பயன்பாடாகும் என்பதை குறிப்பிட வேண்டும். கலா. 4:22-31, எபி. 7:1-3 ஆகிய பகுதிகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

(ஈ) வரலாற்று-இலக்கணப் பொருள்

ஒரு விவிலியப் பகுதியின் உண்மையான பொருள் என்பது தெளிவான இயல்பான பொருளேயாகும். ஏறத்தாழ நூறு ப.ஏ. நிகழ்ச்சிகள் பு.ஏ. இல் குறிப்பிடப்படுகின்றன. அவற்றின் வரலாற்றுத் தன்மை இயல்பானதாகக் கருதப்படுகிறது. அவை தம்மில் வேறான (objective) உண்மையான நிகழ்ச்சிகள் என்பதின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் கையாளப்படுகின்றன. மறைவான அல்லது ஆழ்ந்த உட்பொருளுள்ள விளக்கம் அவற்றுக்கு அளிக்கப்படவில்லை. அப்படியே பெருமளவில் பு.ஏ. இல் வரும் ப.ஏ. மேற்கோள்களின் பயனும் அவற்றின் இயல்பான தெளிவான பொருளால் அமைந்திருக்கிறது. பு.ஏ. எழுத்தாளர்கள் விவிலிய நூல்களின் எழுத்தின்படியான பொருளுக்கு முதலிடம் அளிக்கும் தத்துவமே நமது பொருள் விளக்கத்திற்கும் அடிப்படையாயிருக்க வேண்டும்.

விவிலியத்தில் பலதரப்பட்ட இலக்கியங்கள் காணக் கிடக்கின்றன. இவற்றின் சாதாரணப் பொருள் தெளிவாயிருக்கிறது. யூதாவின் சிங்கம் அல்லது ஆண்டவரின் வாயிலிருந்து வெளிவரும் வான் என்பவை போன்ற அடையாள மொழியிலும் எழுத்தின்படியான பொருள் என விளக்கப்படுவதே தெளிவான, இயல்பான பொருளாகும். உருவகங்கள், அடையாள அல்லது கவிமுறைகள் விவிலியத்தில் திரளாய்க் காணப்படுவது இந்தப் பேச்சு முறை தர முயற்சிக்கும், உண்மையைத் தேடும் விளக்கவுரையாளரைக் குழப்பத் தேவையில்லை. ஆக்கியோர் கொண்ட அல்லது சொல்ல விரும்பிய முதற்பொருள் எழுத்தின்படியானதேயாகும்.

விவிலியத்தைப் பொறுத்தவரையில் எழுத்தின்படியான பொருளைப் பற்றி நாம் பேசும்போது கடவுளின் வார்த்தைகள், வரலாற்றில் அவரின் செயல்கள் ஆகியவற்றைக் குறித்தே பேசுகிறோம். இப் பொருளில் இது, புனித வரலாறு அல்லது மீட்பின் வரலாறு ஆகும். ஆகையால், எழுத்தின்படியான பொருள் இயல்பாகவே ஆன்மிக அல்லது இறையியல் பொருளுக்கு நேராக நடத்துகிறது. ஒரு பொருளில், பிந்தையது முந்தையதை ஒத்ததும் அதிலிருந்தே பெற்றுக் கொள்ளப்படுவதுமாயிருக்கிறது. இவை இரண்டும் சேர்ந்ததே வார்த்தையின் உண்மையான பொருள். உருவக முறையிலுள்ள தவறு யாதெனில், ஒவ்வொரு பகுதியும் பன்மடங்கு மறைவானதும் உட்பொருள் கொண்டதுமான, சில வல்லுநர்களால் மட்டும் வெளிப்படுத்தக் கூடியதுமான பொருள்கள் கொண்டது என்ற ஊகமாகும். எந்தத் திருவிவிலியப் பகுதிக்கும் ஆழமான ஆன்மிகப் பொருள் இருக்கலாம் என்பது உண்மையே. ஆனால், அது வரலாற்று-இலக்கணப் பொருளிலிருந்து வருவதேயன்றி வேறாயிருக்கக்கூடாது.

ஒரு பகுதியின் உண்மையான பொருளைக் கண்டுகொள்ளும் முயற்சியில் பல அடிப்படைத் தத்துவங்களை நாம் நினைவுகூர வேண்டும்.

1. மூல மொழிகளின் முதன்மை, மொழிபெயர்ப்புகளை இரண்டாவது நல்லவையென பார்ப்பது, ஒப்புமை மொழி அறிவு (Comparitive linguistics), இலக்கணச் சொற்றொடரியல் ஆராய்ச்சிகள் முதலியவற்றின் அடிப்படைமில் வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் அடிச்சொல் வரலாற்றின்படி ஆராய்தல் ஆகியவை பொருள் விளக்கத்திற்கு அடிப்படையாகும்.

2. ஒவ்வொரு பகுதியின் கலாசார, வரலாற்றுச் சூழலை ஆராய்தல்; கடவுள், கொடுக்கப்பட்ட சில காலங்களின் மொழிகள், வார்த்தைகள், கருத்துக்களை பயன்படுத்தி தமது வார்த்தையைப் பேசினார். இவ்வாறு, கடவுளின் செய்தி தனிப்பட்ட ஒரு யுகத்தினால் கட்டப்பட்ட ஒரு முறையில் நமக்கு வருகிறது. சூழலை மிகவும் கவனமாய் ஆராய்வதிலிருந்தே இக் காலத்திற்குப் பொருளுள்ள செய்தியின் பொருளடக்கத்தை வெளிப்படுத்த இயலும்.

3. இறையியலையும் சித்தாந்தங்களையும் சந்தேகப்படாததும், விவிலிய நூல்களின் முழுமைக்கும் பொருத்தமானதுமான விளக்கங்களில் அடிப்படைப்படுத்துதல் புரிந்துகொள்ள கடினமான பகுதிகள் பல விவிலியத்தில் இருக்கின்றன. விவிலியத்தின் இறையியல் ஒருமைப்பாட்டினால், இவற்றில் சிலவற்றைப் புரிந்துகொள்ள, விவிலிய வாக்கியத்தைக்கொண்டு விவிலிய வாக்கியத்தைப் புரிந்துகொள்ளுதல் என்னும் தத்துவத்தை நாம் பயன்படுத்தலாம். ஆனால் எந்தச் சித்தாந்தமும் தெளிவில்லாத அல்லது தனியான பகுதிகளில் அடிப்படை பெறக்கூடாது. விவிலியத்தின் எந்தப் பகுதியின் பொருள் விளக்கமும் வார்த்தையின் மொத்தமான போதனைகளோடு முக்கியமான ஒருமைப்பாடுள்ளதாயிருக்க வேண்டும்.

4. விவிலியப் பகுதிகளை அவற்றின் இலக்கிய வகையின்படி படித்தல்: கவிதை, கதை, சட்டம், நாடகம், உருவகம், இறைவாக்கு, எடுத்துக்காட்டு, வாழ்க்கை வரலாறு முதலிய பல வகையான இலக்கியங்கள் விவிலியத்தில் அமைந்திருக்கின்றன. ஒவ்வொன்றையும் அவற்றின் முறையின் அடிப்படையில் படிக்க வேண்டும். எ.கா. இறைவாக்கைப் படிக்கும்போது, அமைப்பையும் பொருளடக்கத்தையும் வேறுபடுத்த வேண்டும். மெசியாவைப்பற்றிய இறைவாக்குகளின் பொருள் கிறிஸ்துவில் நிறைவேறுதல் பெற்றபோதிலும், அதன் அமைப்பு அகற்றப்பட்டு, எழுத்தின்படியான பொருளின்படி, செல்லாததாகிவிடுகிறது. கடவுளின் நாள் பற்றிய கருத்து நமது தற்கால எண்ணங்களைக் கவிந்து நிறைவேறுதல் பெறும்: கிறிஸ்துவின் வருகை, மெசியா பற்றிய ப.ஏ. இறைவாக்குகளைப் பற்றி முற்றிலும் புதியதொரு காட்சியைக் கொண்டு வந்துவிட்டது.

அல்லது ஓர் உவமையின் பொருள் விளக்கத்தில் அது தரும் ஒரே மைய உண்மையில் கவனம் செலுத்தவேண்டுமே யன்றி, ஒவ்வொரு விவரங்களுக்கும் ஆன்மிகப் பொருள் கண்டுபிடிக்க முயற்சித்தல் கூடாது. இயேசுவின் எல்லா உவமைகளும் இறையாட்சி என்னும் ஒரே பெரும் பொருளைப் பற்றியவையாம். அவை ஒவ்வொன்றின் பொருள் விளக்கமும் கிறிஸ்துவின் போதனைகளின் பொதுவான போக்கிற்கு இசைந்ததாய் அமைய வேண்டும்.

4. முடிவுரை

விவிலியப் பொருள் விளக்கத்தின் குறிக்கோள் என்னவெனில், கடவுளின் வார்த்தையை நிகழ்காலத்திற்குப் பொருத்தமும் பொருளும் உள்ளதாக்குவதேயாகும். கடவுள் பேசியிருக்கிறார் என்றும், அவர் பேசியவை புனித விவிலிய நூல்களின் மூலம் வந்திருக்கின்றன என்றும் நாம் நம்புகிறோம். உண்மையில், கடவுள் சொன்னது என்ன என்றும், நமக்கு இன்று அவர் என்ன சொல்கிறார் என்றும் கண்டுபிடிப்பது விளக்க உரையாளரின் பணியாகும்.

கடவுளின் மக்களின் வரலாற்றில் விவிலியம் எவ்வாறு காலத்திற்குக் காலம், புதிய புரட்சிகரமான பொருளோடு தன்னைத் திறந்து காண்பிக்கிறது என நாம் முன்னர் பார்த்தோம். ஒவ்வொரு பற்றுறுதியாளரின் வாழ்க்கையிலுங்கூட இது உண்மையாகும். கடவுளுடைய வார்த்தை திரும்பவும் திரும்பவும் புதிய ஒளி, புத்துயிர், புதிய அறைகூவல்களோடு நேருக்குநேர் நம்மைச் சந்திக்கின்றது. விவிலியத்தை நாம் நெருங்கி வரும்போதெல்லாம் அதன் செய்தியையும் செல்வங்களையும் இயல்பானவைகளாய்க் கருதாமல் எப்பொழுதும் புதிதாய்த் தொடங்கவேண்டும்.

விவிலிய நூல்களில் வெளிப்படுத்தல் என்பது தெய்வீகத் தற்கொடை (Divine self-giving) என மோவிங்கல் கூறினார். இங்கே ஒருவர் கடவுளை நேர்முகமாய் எதிரிட்டு, தமது ஆண்டவரையும், தலைவரையும் சந்திக்கிறார். வார்த்தையின் விளக்கவுரையாளர் ஒரே வேளையில் கேட்கிறவரும், வார்த்தையில் பங்கு பெறுகிறவருமாயிருக்கிறார். கற்றுக்கொள்ளும் ஆவியோடும், பற்றுறுதியோடும் அவர் வார்த்தையின் அண்மையில் வருகிறார். அவ்வாறு வரும்போது வார்த்தை, கடவுளின் மனிதர் முழுமையானவராகி, எந்த நற்செயலையும் செய்ய முழுப்பக்குவமடைவதற்கேதுவாய், அது போதிப்பதற்கும், கடிந்துகொள்வதற்கும், சீர்திருத்துவதற்கும், நீதியைக் கற்பிப்பதற்கும் பயனுடையது எனக் கண்டுகொள்கிறார் (2தீமோ. 3:16,17).

துணை நின்ற நூல்கள்

1. J.Rogerson, *Understanding the OT*, SPCK, 1986.
2. B.Chilton, *Beginning NT Study*, SPCK, 1986.
3. I.H.Marshall, *NT Interpretation*, Paternester, 1979.
4. N.K.Gottwald, *Tribes of Yahweh*, Orbis, 1986.
5. (ed.), *The Bible and Liberation*, Orbis, 1989.
6. D.J.A.Clines, D.M.Gunn, A.J.Hauser, (eds.), *Art and meaning: Rhetoric in Biblical Literature*, JSOT 19, 1982.
7. G.W.E.Nickelsburg, *Jewish Literature Between the Bible and the Mishnah*, SCM, 1981.
8. A.Berlin, *Poetics and Interpretation of Biblical Narrative*, Almond, 1983.
9. D.Carson, *Hermeneutics, Authority and Canon*, IVP, 1986.
10. R.R.Ruether, *Sexism and God-Talk*, SCM, 1989.

12

இந்தியக் கிறிஸ்தவ இறையியலில் திருவிவிலியம் பெற்றுள்ள இடம்

ஆர்.எயிச்.எஸ்.பாயிடு

1. முன்னுரை

1706ஆம் ஆண்டில் சீகன்பால்கு தரங்கம்பாடியில் வந்து சேர்ந்தார். அதுவரை இந்தியத் திருச்சபையில் விவிலியப் போதனை முகிய இடம் பெற்றிருக்கவில்லை. சீரியத் திருச்சபை விவிலியத்தை சீரிய மொழியில் (பெஷித்தா-திருப்புதல்) பெற்றி ருந்தது.[1] எனினும் சாதாரண கிறிஸ்தவர்களுக்கு விவிலியம் மூடப்பட்ட ஒரு நூலாகவே இருந்தது. அவர்கள் புரிந்துகொள்ளக் கூடாத ஒரு மொழியில் அது எழுதப்பட்டிருந்த காரணத்தால். 1321இல் தானாவில் இரத்தச்சாட்சியாக உயிர்துறந்த டொமினிக்கர்கள் காலம் முதல். 1542இல் ஃபிரான்சிஸ் சேவியரால் தொடங்கப்பட்ட இயேசு (Jesuit) தூதப் பணிகாலம் அடங்க. அண்மைக்காலம் வரை உரோமன் கத்தோலிக்கத் தூதங்களைப் பொறுத்தவரையில் இது உண்மையாகவே இருந்து வந்தது. இக்காலத்தில்தான் பெரும் மாற்றங்கள் நிகழத் தொடங்கியுள்ளன.

ஐரோப்பாவில் 16ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட திருச்சபைச் சீரமைப்பின் பெரும்பயனாகப் பொதுமக்கள் திருவிவிலியத்தைத் தங்கள் மொழியில் பெற்றனர். அச்சு இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டது; எந்த கிறிஸ்தவரும் தனிப்பட்ட ஆய்வுக்கும் தியானத்திற்கும் வாங்கக்கூடிய விலையில். பெரும் அளவுக்கு விவிலியப் பிரதிகள் அச்சிடப்பட்டன. மேலும் சீரமைப்புக் காலத்தில் எழுதப்பட்ட மாபெரும் பற்றுறுதி அறிக்கைகள் விவிலியக் கோட்பாட்டிற்கு முதலிடம் கொடுத்தன. எ.கா. வெஸ்ட்மினிஸ்டர் அறிக்கை (1647) திருவிவிலியத்தைப் பற்றிய முதல் அதிகாரத்துடன் துவங்குகிறது. இந்த நம்பிக்கை அளவுகோலை அல்லது சட்டத்தை நிறுவியபின்னரே கடவுளையும் மும்மையையும் பற்றிய கோட்பாடுகள் கூறப்பட்டன. கிறிஸ்தவ நம்பிக்கையைச் சரியாகப் புரிந்துகொள்ள விவிலியமதான் திறவுகோல் எனச் சீர்திருத்தத் தந்தையர் முற்றிலும் நம்பினர். கடவுளை மாட்சிப்படுத்தவும் அவரில் மகிழவும் தங்களுக்குத் துணையானே ஒரே சட்டம் பழைய. புதிய ஏற்பாடுகளில் அடங்கியுள்ள கடவுளின் வார்த்தையே என அவர்கள் நம்பினர். விவிலியத்தை உதறித்தள்ளும் திருச்சபையில் ஊழல்கள் நிரம்பிவிடும் என்று அவர்கள் கண்டனர். இனிமேல் இவ்வாறான தவறுகள் நிகழக்கூடாதென முடிவெடுத்துக்கொண்டனர்.

இது எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் உரிய ஓர் அடிப் படையான கிறிஸ்தவ நம்பிக்கை ஆகும். 1706இல் தரங்கம் பாடியில் வந்திறங்கிய லுத்தரன் நற்செய்தித் தூதுவரும். 1நம்பியிருந்தனர். இவ்வடிப்படையில் அன்னார் இந்நாட்டு மொழிகளைப் புரிந்துகொள்ளத் தொடங்கியவுடன் விவிலியத்தை மொழிபெயர்ப்பதைத் தங்கள் முதற்கடனாகக் கொண்டு செயலாற்றினர். 1711இல் சீகன்பால்கு பு.ஏ.ஐ தமிழ் மொழியில் மொழிபெயர்த்தார். செராம்பூர் சேர்ந்த சில ஆண்டுகளுக்குள் கேரி விவிலிய மொழிபெயர்ப்புக்கு என ஒரு பெரும நிறுவனத்தை அமைத்தார். 30 மொழிகளில் விவிலியத்தை மொழிபெயர்க்க ஆரம்பித்தார். மக்களுக்கு விவிலியப் பகுதிகள் வழங்குவதும். பிலிப்பு எத்தியோப்பிய அமைச்சருக்கு உதவியதுபோல (இதுவே இலக்கிய நற்செய்திப் பணியைக் குறித்து எழுதப்பட்டுள்ள முதல் நிகழ்ச்சி) படிக்கும் மக்கள் புரிந்துகொள்ள உதவுவதும் இம்மொழிபெயர்ப்புப் பணியுடன் நடந்தேறின. 1804இல் பிரித்தானியா வெளிநாட்டு விவிலியச் சங்கமும் அதன் பிறகு அதன் இந்தியக் கிளையும் நிறுவப்பட்டன; அதிலிருந்து இப்பணி ஆற்றலுடன் முன்னேறியது.

2. இராம் மோகன் இராய் (1772-1833)

இராம் மோகன் இராய் கிறிஸ்தவ சமயத்தில் ஆர்வம் காட்டிய ஆரம்ப நாள்களில் கேரி. மார்ஷ்மன் போன்ற பெருந்தகையாருடன் சமய உரையாடல் ஆற்றிவந்தார். விவிலியம் இறை அகத்தூண்டல் (inspiration) பெற்றதெனவும். கிறிஸ்தவப் பற்றுறுதிக்கும். வாழ்க்கைக்கும் முக்கியமான அளவுகோல் எனவும் அவர்கள் நம்பியிருந்தனர். இராம் மோகன் இராய் விவிலியத்தை ஆழமாக. விரிவாகக் கற்றார். இதற்கென்று கிரேக்கம். எபிரேயம் எனும் மொழிகளையும் கற்றார். அவரது ஆய்வுகள் மூலமாகவும் நண்பர்கள் மூலமாகவும். மேனாட்டு ஒருமைக் கொள்கையைப் (அக்காலத்தில் ஆரியக் கொள்கை என அறியப்பட்டு வந்தது) பற்றி அறிந்து கொண்டார். விவிலியத்தைப் பற்றிய அவரின் கருத்துக்கள் ஆரியப் போகைகச் (Arianism) சார்ந்து காணப்படுகின்றன. விவிலியத்தில் சில பகுதிகளை மட்டுமே இராய் தேர்ந்தெடுத்தார். இயேசுவின் போதனைகள (Precepts of Jesus, 1820) எனும் தமது நூலில் முதல் மூன்று நற்செய்தி நூல்களை ஏற்று உயிரிய கிறிஸ்தியல் (Christology) உடைய (கிறிஸ்துவின் தன்மையை உயர்வாகக் கூறும்) தூயயோவான் நற்செய்தியை விட்டுவிட்டார். பிற்காலத்திய இந்திய இறையியல் வல்லுநர்கள் பக்திமரபில் நின்று யோவான் நற்செய்தியை மிக விரும்பி ஏற்றுக்கொண்டனர். இராம் மோகன் இராயோ சந்தேகத்துக்கு இடந்தரும் பகுத்தறிவு

[1] C.P. Matthew and M.M. Thomas, *The Indian Churches of St. Thomas*, I.S.P.C.K., 1967, p. 45.

சார்ந்த மனப் போக்கு உடையவர். அவர் கற்பனைகளுக்குச் சிறப்பு வழங்குவதில்லை, செயல் முறையையே வற்புறுத்தினார். பெரும் சமூகச் சீர்திருத்தவாதியான அவர் விவிலியத்தை ஒரு நன்னெறி நூலாகவே ஏற்றுக்கொண்டார். நானறிந்த வேறெதைக்காட்டிலும் இயேசுவின் போதனை நன்னெறிக்கு ஏற்றதாகவும், பகுத்தறிவுவாதிகளுக்கு மிகப் பொருத்தமானதாகவும் இருப்பதைக் கண்டுகொண்டேன் என்று அவர் எழுதியிருக்கிறார். தற்காலத்தில் கிறிஸ்துவை விரும்பும் பல இந்துக்கள் உளர். காந்தியடிகள் அவருள் மிகப் பெரியார். அவரது ஆன்மிகப் பயணத்தில் இயேசு கிறிஸ்துவின் மலை அருளுரை பேரிடம் பெற்றுள்ளது. ஆனால் இம்மரபு இராம் மோகன் இராய் தொடங்கியது எனலாம்.

இராம் மோகன் இராயைப் போன்ற பகுத்தறிவு சார்ந்த நன்னெறிவாதிகளாயிருப்பினும் சரி (Rationalists), தானியேல், திருக்காட்சி நூல்களின் இறைவாக்குகள் நிறைவேறுதலையே முக்கியமாகக் கருதும் (இறையியலை மிகைப்படுத்தும்) விவிலிய அடிப்படைவாதிகளாயிருப்பினும் சரி (Biblicists), விவிலியத்தின் ஒரு பகுதியை மட்டும் தவறற்ற வழிகாட்டியாக ஏற்றுக்கொள்வது அபாயமானதாகும். மார்ஷ்மனும் மற்ற செராம்பூர் நற்செய்தித் தூதுவரும் இராம் மோகன் இராயிடம் பரிவுகாட்டவில்லை என்று நாம் குறை கூறலாம். எனினும் முழுமைக்குப் பதிலாக பகுதியை ஏற்கக்கூடாது அன்றோ! எனவே, இயேசுவின் போதனை (Precepts) போன்று விவிலியத்தின் பகுதிகளைத் தேர்ந்து தொகுத்து விவிலியமெனப் போற்றுதல் தவறு என அவர்கள் வற்புறுத்தியது சரியே.

3. நெகேமியா கோரே (1825-1895)

மார்ஷ்மனுக்குச் சாதகமாக இராம் மோகன் இராயை எதிர்த்த ஒரு போக்கை கோரேயிடம் நாம் காண்கிறோம். மன மாற்றத்துக்குமுன் அவர் ஓர் இந்து அறிஞராக இருந்தார். வேதங்களைப் பற்றிய அவரது அன்பையும் அறிவையும் தாம் புகுந்த புதுச் சமயத்திற்குள் அவர் கொண்டுவந்தார். விவிலிய ஆய்வில் அவர் பயிற்சி பெற்றிருந்தார். ஆனாலும் இராம் மோகன் இராயைப் போல சந்தேகப் போக்கை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. பிரம்மசமாசத்து உறுப்பினருடன் அவர் சமய உரையாடலில் ஈடுபட்டார். அவர்களுக்கென அவர் வெளியிட்ட கட்டுரை நூல்களில் பகுத்தறிவுப் போக்கை மறுத்தார். கனோனைச் சேர்ந்த நற்செய்தி நூல்களையும் தள்ளப்பட்ட நற்செய்தி நூல்களையும் விரிவாக ஆராய்ந்து, கனோன் நற்செய்தி நூல்கள் நம்பகமானவை, எனவே அவை இயேசுவின் அருஞ்செயல்களும் உயிர்த்தெழுதலும் உண்மையென மெய்ப்பிக்கின்றன எனும் முடிவுக்கு கோரே வந்தார். விவிலியத்தை ஆராய்ந்து கற்றதன் காரணமாக கிறிஸ்தவ கோட்பாட்டின் முழுமையை அவர் கண்டுகொண்டார்.

கடவுளால் கொடுக்கப்பட்ட சுருதி என்ற காரணத்தில் இந்து சமயத்தில் வேதங்களுக்கு மறுக்க முடியாத அதிகாரம் உண்டு. கிறிஸ்தவ மறைநூலுக்கும் இவ்வதிகாரம் உண்டென கோரே கூறினார்.[1] திருச்சபைத் தந்தையாரின் நூல்களை ஸ்மிருதி (Smriti)யுடன் ஒப்பிட்டார். விவிலியம் முழுவதும் இறை அகத்தூண்டல் பெற்றது உண்மையானது, நம்பகமானது என அவர் கருதினார். இராம் மோகன் இராயைப் போலன்றி ப.ஏ.க்கு அவர் சிறப்பிடம் கொடுத்தார். ப.ஏ.மக்களும் நிகழ்ச்சிகளும் புதிய உடன்படிக்கைக்கு அடையாளம் எனவும் நம்பினார். தமது காலத்துப் போக்குக்கு ஏற்ப கிறிஸ்தவ சமயத்தின் இறையுளப்படியானத் தோற்றத்திற்கு ப.ஏ. இறைவாக்குகள் சான்று எனவும் கோரே கண்டார். விவிலியத்தின் இறை அகத் தூண்டலைப் பற்றி அவர் கூறியது, விவிலியப் பெரியார் தங்கள் பகுத்தறிவையும் சிறப்பு நடை முதலியவற்றையும் பயன்படுத்தினார்கள் என நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் கடவுளின் ஆவியார் தமது திருவுளத்தை நிறைவேற்ற அவர்களின் தனிச் சிறப்புக்களையும், பகுத்தறிவையும் ஆட்கொண்டார்.[2]

விவிலியப் பகுதிகளை விளக்கும்போது கோரே சொற்களின் தெளிவான பொருளைக் கண்டுபிடித்து ஒட்டுவமை (allegorical) விளக்கங்களைத் தவிர்க்கிறார். சிறப்பான இந்திய விளக்க முறைகளை அவர் பயன்படுத்த முயற்சிக்கவில்லை. அவரது ஆங்கிலேய, கத்தோலிக்க நண்பர்களின் முறையுடன் அவர் விளக்கமுறை நெருங்கிய தொடர்புடையது.

4. கிருஷ்ணமோகன் பேனர்ஜி (1813-1885)

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்து இறைவாக்கினரின் உரைகளின் நிறைவேறுதலை கிறிஸ்தவத்தில் காணலாம் எனும் ஒரு சிந்தனைப்போக்கு தோன்றிற்று. இந்து சமயத்தின் மகுடம் (Crown of Hinduism) எனும் பார்க்குகாரின் கொள்கைக்கும் இதற்கும் பெருத்த வேறுபாடு உண்டு. இந்த முந்தைய காலத்து எழுத்தாளர்கள், குறிப்பிட்ட இந்து இறைவாக்கினரின் முன்னுரைகளும், ஆவல்களும் தெளிவாக கிறிஸ்தவத்தில் நிறைவேறின என்று கூறினர். பல்வேறு இந்து சமய மரபுகளின் மறைநூல்கள் நற்செய்திகளுக்குத் தெளிவான ஆயத்தம் என்றனர், அவை இந்திய பழைய ஏற்பாடு என்று கூறவும் முற்பட்டனர்; இந்திய மக்களின் இதயங்களை இயேசுவுக்கென ஆயத்தப்படுத்தின என்று இந்துக்கள் நம்பினர். சில மேனாட்டு நற்செய்தித் தூதுவரும் மேற்கூறிய இந்து இறைவாக்கினரின் முன்னுரைகளைக் கண்டனர், குறிப்பிட்டனர். ஆனால் அவர்களில் பெரும்பாலான இறையியல் வல்லுநர் இப்போக்கை ஆதரிக்கவில்லை. இந்தியச் சிந்தனையாளரே இதனை வலியுறுத்தினர். இக் காலத்தில்தான் ஆரியசமாச நிறுவரான சுவாமி தயானந்த சரஸ்வதி இந்தியாவின் உண்மையான சமயம் வேதங்களில்தான் அடங்கியிருக்கிறது, பின்மரபுகளில் அல்ல என்று கூறித் திரிந்தார். தயானந்த சரஸ்வதி வேதங்களுக்குக் கொடுத்த விளக்கம் சரியன்று என்று சில கிறிஸ்தவர்கள் கூறினார்கள். எனினும், பல கிறிஸ்தவச் சிந்தனையாளர்கள் வேதங்களில் காணப்படும் சமயம் பிற இந்து மரபுகளைக் காட்டிலும் கிறிஸ்தவத்திற்கு நெருங்கியது என நம்பினர். கிறிஸ்து ஒருவரே வேதங்களின் முன்னுரைகளை நிறைவேற்றினார் என்பதை விளக்கிப் பல துண்டுப்பிரதிகள் இக்காலத்தில் பல்வேறு மொழிகளில் வெளிவந்தன.[4] சில கிறிஸ்தவ குடும்பங்கள் திரிவேதி, சதுர்

[2] Nehemiah Corah, *Rational Refutation of Hinduism*, p. 42.
[3] Goreh, *Letter to the Brahmos*, p. 77.
[4] எ-டு: *The Way of Vedic Religion*, published in Gujarati in 1863.

வேதி எனும் இந்துப் பெயர்களுக்கு மாறாக சத்வேதி எனும் பெயரை ஏற்றுக்கொண்டனர். கிறிஸ்தவத் திருமறைதான் மெய்யானது என்பதை இதன் மூலம் அவர்கள் காட்டினர்.

கிறிஸ்தவ, இந்து மறைநூல்களை இவ்வாறு தொடர்புபடுத்தும் பல முயற்சிகள் தொடர்ந்து எழும்பின. மறைநூல்களுக்கு மட்டுமல்ல. பிற சமய மரபுகளுக்கும் இதுபோன்ற விளக்கங்களைக் கொடுக்க முற்பட்டனர். குஜராத் வகால்ஜி பெக்கார் (Vahalji Bechar) எழுதிய கபீர் சமயத்தின் மூலங்கள் (Sources of the Kabir Religion, 1881) எனும் நூல் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இந்நூலில் கபீர் சாகப் தான் கிறிஸ்து என ஆசிரியர் வாதிடுகிறார். குஜராத்தில் நாகலாங் அவதார் (Nakalank Avatar) கூட்டத்தாரின் பஜனைகளைப் பகுத்தாய்ந்து அவை எவ்வாறு கிறிஸ்துவில் நிறைவேறின என்று விளக்கினார்.[5] சில மைசூர் லிங்காயத்துப் பிரிவினரின் திருஎழுத்துக்களும் இத்தகைய விளக்கம் பெற்றன. பிற பல எடுத்துக்காட்டுக்களையும் கூறலாம். இஸ்லாம் இலக்கியத்தையும் இக்கண்ணோட்டத்துடன் பலர் ஆய்ந்தனர்.

வங்காளத்தைச் சார்ந்த கிருஷ்ணமோகன் பேனர்ஜி இம்முறையைப் பின்பற்றியவர்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தவர். 1875இல் இறையியல் ஆசிரியப் பணியிலிருந்து ஒய்வு பெற்றபின் ஆரிய சான்று (The Aryan Witness) எனும் ஒரு நூலை இவர் வெளியிட்டார். ப.ஏ.க்கும் குறிப்பாக தொடக்கநூலுக்கும் வேதங்களுக்குமுள்ள ஒருமைப்பாட்டைக் காட்டுவதே இந்நூலின் குறிக்கோள். வேதங்களில் காணப்படும் கலப்பற்ற மூல இந்துசமயம் ஏறத்தாழ கிறிஸ்தவமே என்று காட்ட இவர் முயன்றார். இந்தியாவின் பிரமாணக்கால ஆரியர்கள் நற்செய்தியின் அடிப்படை உண்மைகளைக் கண்டுஉணர்ந்து ஏற்றுக்கொண்டவர்கள் என்றும் வேதங்களின் ஆசிரியர்கள் இவ்வுலகத்திற்குத் திரும்பவந்தால் இந்தியக் கிறிஸ்தவர்கள் தங்கள் வழிமரபினர் என உடனே உணர்ந்து கொள்ளுவார்கள் என்றும் இவர் எழுதுகிறார்.[6]

படைப்பு, வீழ்ச்சி, பெருவெள்ளம் போன்ற வரலாறுகளில் மறைநூல்களுக்கும், கிறிஸ்தவ மறைநூலுக்கும் இசைவு இருப்பதை பேனர்ஜி எடுத்துக்காட்டினார். மகா பாரதத்தில் பாம்புப் பகுதியில் நகுஸ்தா அரசனின் (யுதிஸ்திரா) கதையைக் கூறி, சத்பதா புராணத்தில் பெருவெள்ளக் கதையைக் கூறி, மனு, நோவா எனும் பெயர்கள் ஒரே வேர்ச்சொல்லினின்று தோன்றியவை என்று பேனர்ஜி கூறினார். இவற்றைவிட முக்கியமாக, கிறிஸ்துவின் மரணத்துடன் பிரஜாபதியின் பலியை ஒப்பிட்டு, படைப்பின் ஆண்டவர் பலியிடுபவர் மட்டுமல்லர் பலியும் ஆனார் என்று கூறுகிறார். ப.ஏ.ஐ விட வேதங்கள் புஏ.இற்கு மிக நெருங்கியுள்ளன என்கிறார். அவர் கருத்துப்படி படைப்பின் ஆண்டவர்தாமே ஆரம்பத்தில் பிறந்தவரான புருஷா தேவர்களுக்குத் தம்மைப் பலியாக அளித்தார் என வேதங்களின் ஆசிரியர்கள் தெளிவாகக் கண்டனர். படைப்பின் ஆண்டவர் அரை மனிதன்-அரை தெய்வம் என அவர்கள் கூறுகின்றனர். நமது இம்மானுவேல் கருத்துடன் இது நெருங்கிய தொடர்புடையது என அவர் எழுதுகிறார்.[7]

பேனர்ஜி, வகால்ஜி பெக்கார் போன்றோரின் விளக்கங்களை இன்று நாம் ஏற்பதற்கில்லை. ஆனால் அவர்களது காலத்தில் முன்னுரைகளின் நிறைவேறுதல் ஒரு முக்கிய கிறிஸ்தவ விளக்க முறையாக மேனாட்டில் இருந்துவந்தது என்பதை நாம் நினைவுகூரவேண்டும். மேலும் கிறிஸ்தவ இறையடியார்கள் பிரம்மசமாசம், ஆரிய சமாசம், கபீர்பந்து போன்ற இயக்கங்களுடன் பயனுடைய உரையாடல் (இச் சொல் புதியது) நடத்தவேண்டுமென்று விரும்பினார்கள். இம்முறை சிலவேளைகளில் நல்ல பயனை அளித்தது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. பிரம்மசமாசம், கபீர்பந்து போன்றவற்றின் மூலமாகவும் சிலர் கிறிஸ்துவின் திருப்பாதத்தண்டை வந்து சேர்ந்தனர்.

5. பரானந்தரின் விவிலிய விளக்க நூல்கள்

சுவாமி விவேகானந்தரின் சீடரான பரானந்தர் எழுதிய மத்தேயு நற்செய்தி விளக்கவுரை ஒன்று 1888ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது. 1902இல் யோவானின் நற்செய்தி விளக்கவுரையையும் இவர் எழுதினார். இந்நூலில் யோவானை சைவ சித்தாந்தியாக இவர் வரைந்தார். முழுக்க முழுக்க இந்துக்களால் எழுதப்பட்ட விளக்க நூல்கள் எனும் காரணத்தால் இவற்றைக் கற்பது அவசியம். கிறிஸ்தவர்கள் இந்திய விளக்கம் கொடுக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளைக் காட்டிலும் இது வேறுபட்டது.

விவேகானந்தரின் அத்துவைத அமைப்புக்குள் விவிலிய வாக்கியத்தைப் பொருத்தி பரானந்தர் விளக்கமளித்தார். பொருந்தாதவற்றைத் தவறெனத் தள்ளிவிட்டார். பெயர் தெரியாத ஓர் இந்திய குருவிடம் கற்ற, அறிவுமிக்க ஆசிரியராக யோகப் பயிற்சி செய்து காட்டியதாலும் இயேசு தமது சீடரை கடவுளுடன் ஒன்றுபடச் செய்ய வல்லவரானார்., இவ்வொன்றுபடும் நிலையில் தனிச் சிறப்புக்கள் அகன்று விடுகின்றன என்று அவர் விளக்கினார். இடம் போதாத காரணத்தால் ஓர் எடுத்துக்காட்டை மட்டும் கூறுவோம்: மத். 27:50இல் இயேசு தமது ஆவியை ஒப்புக் கொடுத்தார் எனப்படுகிறது. யோகப் பயிற்சியில் (ஆன்மிக ஐக்கியம்) பேச்சும் மூச்சும் அடங்கிவிடுகின்றன. ஆனால் இது மரண நிலையன்று. ஏனெனில் சிறிது நேரம் சென்றபின் நாம் மீண்டும் சலனம் பெறுகிறோம். பரானந்தர் கருத்துப்படி இயேசு வெளிப்படையாகக் கூறினார்: நானே என் உயிரைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதைத் திரும்ப பெற்றுக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு (யோ.10:18). இந்த வித்தையை கடவுளின் பெயரால் வந்த தம் குருவிடம் கற்றிருந்தார். எனவே சரியாகக் கூறவேண்டுமாயின் இயேசு உரத்தக் குரலுடன் கூப்பிட்டபின் இறந்துப் போனதாகத் தோற்றமளித்தார்.

விவிலிய விளக்கத்திற்கு ஏற்ற விதிகள் எவை என வரையறை செய்வது எவ்வளவு முக்கியம் என்பதை பரானந்தரின் நூலினின்று அறிந்து கொள்ளலாம். ஏனெனில் உருவக, அறநெறி விளக்கங்களை விரும்பும் ஒரு போக்கை இந்திய இறையியலாரிடம் காணலாம். ஓரிகென் அப்படிச் செய்யவில்லையா! இவர்கள் நேரடியான பொருளைத் தேடுவதில்லை. இயற்கையான, நேரடிப்பொருளை மிக முக்கியம் என கோரே வற்புறுத்தியதின் சிறப்பை நாம் இங்கே உணர்ந்து கொள்ளலாம்.

[5] R.H.S. Boyd, *Indian Journal of Theology*, p. 94.
[6] K. Baago. *Pioneers of Indigenous Christianity*, p. 14.
[7] *ibid.*, p. 16.

6. பிரம்மபந்தாவ் உபாத்யாய (1861-1907)

இந்தியக் கிறிஸ்தவ இறையியல் உருவெடுக்கக் காரணமாயிருந்த சிறந்த சிந்தனையாளரில் ஒருவர் பிரம்மபந்தாவ் உபாத்யாய. எனவே அவரது வாழ்க்கையைக் குறித்து ஒரிரு உண்மைகளைக் கூறுவோம். அவர் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்தவர். அதுவும் அச்சபைப் பொதுமக்கள் விவிலியத்தைப் படிக்க இன்று போல் ஆதரவு கொடுக்காதிருந்த காலம். தொழுகை. இறையியல் கல்வி யாவும் இலத்தீன் மொழியில் நடைபெற்றாக வேண்டும் என்ற கட்டாயம் இருந்த காரணத்தால் விவிலியத்தின் வார்த்தைகளை மக்கள் அறியாதிருந்தனர். எனவேதான் இந்தியக் கிறிஸ்தவ இறையியலைப் பொறுத்தவரையில் உரோமன் சபை மிக சொற்ப சாதனையையே செய்துள்ளது என உரோமன் கத்தோலிக்க அறிஞர் ஒருவர் கூறியது உண்மையே. பிரம்மபந்தாவின் இறையியல் மிகச் சிறந்தது தான். ஆனால் கடவுள் வார்த்தையுடன் நெருங்கியதால் (கோரேயின் இறையியல் அப்படிப்பட்டது) பிறந்த இறையியல் அன்று. விவிலியத்தைக் குறித்து அவர் ஒன்றும் சொல்லக்காணோம். பெரும்பாலான உரோமன் கத்தோலிக்கரைப் போல விவிலியத்துக்கு அவர் மையமான இடம் அளிக்கவில்லை.

7. சாது சுந்தர்சிங் (1889-1929)

சாது சுந்தர்சிங்கின் வாழ்க்கை வேறுவிதமாக அமைந்தது. சிறு பருவத்தில் விவிலியத்தை அவர் நெருப்பினால் சுட்டு அழித்தவர். இந் நினைவு வாழ்க்கை முழுவதும் அவரை விட்டு அகலவில்லை. அவரது நீண்ட பயணங்களில் அவர் கொண்டுசென்ற ஒரே நூல் புதிய ஏற்பாடு. ஆனாலும் விவிலியத்துக்கு மட்டுக்கு மிஞ்சிய சிறப்புக் கொடுத்தார் என அவரைக் குறைகூற முடியாது. இயேசு கிறிஸ்துவுக்கு விவிலியம் சான்று பகருவதுதான் அதன் சிறப்பு என அவர் எண்ணினார். நற்செய்தியை நான் படிப்பதால் கிறிஸ்துவை நான் அறியவில்லை. ஆனால் அவர் தம்மை எனக்கு வெளிப்படுத்திய தாலேயே வாய்மையும் வாழ்வுமான அவரைக் காட்டும் நீட்டிய கரமாக கடவுளின் வார்த்தை இருக்கிறது[8] என்றார் அவர்.

சுந்தர்சிங்கின் இறையியலின் அடிப்படை இயேசு கிறிஸ்துவைப்பற்றிய நேரடியான அனுபவமே. இயேசு கிறிஸ்துவின் மூலமாக கடவுளுடன் ஐக்கியப்படும் பரவச நிலையை அவர் அடிக்கடி அனுபவித்தார். ஆன்மிக உலகத்தின் காட்சிகளை அடிக்கடி கண்டு மகிழ்ந்தார். ஆனால் அவரின் இவ்வனுபவங்கள் விவிலியப்போதனையுடன் ஒத்திருக்கின்றன என்று நினைவு கூர்ந்தால் விவிலியத்தில் அவர் எவ்வளவு ஊறி இருந்தார் என நாம் உய்த்துணரலாம். விவிலியத்தின் சான்றுக்கு ஒவ்வாத காட்சிகளையும். கருத்துக்களையும் பரவச நிலையில்கூட அவர் பெறவில்லை. பிராமணர்களையும். புத்த சமயத்தினரையும் போல தியானத்திலும். தன்னுணர்வு நிலையிலும் அவர் தன்னை மறந்துவிடவில்லை. விவிலியப் பகுதி ஒன்றை தியானித்த பின்னரே சுந்தர்சிங் இறைவேண்டல் செய்வார்.[9] அவர் பு.ஏ.ஐ நன்கு தியானித்தவர். உள்ளான ஒருமைப்பாடு பெற்ற ஒரு பெரியாரின் இயற்கையான சொற்கள் தாம் அவரது போதனை என நூல் ஆசிரியர் ஸ்டிரீட்டரும் அப்பாசாமியும் கூறுகின்றனர்.[10] இந்து மறைகளின் கதைகளை அவர் நன்கு அறிந்திருந்தார். இயற்கையின் அழகினை அவர் நன்கு பருகினார். இயற்கையினின்று பல உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் பயன்படுத்தி விவிலியத்தின் போதனையை விளக்கினார். விவிலியதின் செய்தி எளிதானது. நேரானது. நேரடியானது. இயற்கை எனும் நூலின் செய்தியையோ எடுத்து விளக்க வேண்டியிருக்கிறது என்று கூறினார் சுந்தர்சிங்.[11] அவர் ஒரு காட்சியின் மூலம் இயேசுவை ஏற்றுக்கொண்டவர். ஆனால் பெரும்பாலான மக்களுக்கு விவிலியம் மூலமாகவே கடவுள் தம்மை வெளிப்படுத்துகிறார் என அவர் உணர்ந்தார். தமது தூய வார்த்தையின் மூலமாகவே கடவுள் தம்மை முழு மனத்துடன் தேடும் மக்களுக்கு வெளிப்படுத்துகிறார். என்னைப் போன்ற அனுபவத்தை ஆயிரக்கணக்கான மக்கள் பெற. நம் ஆண்டவரும் மீட்பருமான அவருடன் ஒன்றுபட விவிலியமே துணையாக அமைந்தது என்றார் சுந்தர்சிங்.[12]

விவிலிய விளக்கத்தைக் குறித்து சுந்தர்சிங் கூறும் உவமைகள் நமது கவனத்துக்குரியவை. கிறிஸ்துவின் இரு தன்மைகளை அவர் பின்வருமாறு இதற்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். தூய ஆவியரே திருவிவிலியத்தின் மெய்யான ஆசிரியர். ஒவ்வொரு கிரேக்க. எபிரேயச் சொல்லும் கடவுளின் அகத்தூண்டல் பெற்றது என நான் கூறவில்லை; எனது உடை நான் அல்ல. அதேபோன்று விவிலியத்தின் சொற்கள் கடவுளின் சொற்கால்ல, மனிதரின் சொற்களே. கிறிஸ்து கூறுவதுபோல் மனுக்குலத்தை மீட்டுக்கொள்ள அவர் மனுவுரு அணிந்ததைப் போல. ஆவியும். வாழ்வுமான அவரின் சொல் மனித மொழியில் எழுதப்பட்டுள்ளது. விவிலியத்தில் இறை அகத்தூண்டல் பெற்றக் கூறுகளும் கலந்துள்ளன.[13]

விவிலியம் சாதாரண மககள் ஆவியாரின் அகத்தூண்டல் பெற்று எழுதியதுதான் என்பதை விளக்க பரவச நிலையில் அவர் கடவுளுடன் உறவாடும் அனுபவத்தை ஒப்பிட்டுக் கூறுகிறார். நான் பரவச நிலையில் வான தூதுவர் புனிதர்களோடு பேசுவது இவ்வுலக மொழியல்ல. இயற்கையாக வரும் ஆன்மிக மொழியிலேயே, நான் சொல்லைக் கூறுமுன் உதடுகளை அசைக்குமுன் பொருள் வந்துவிடுகிறது. விவிலியத்தின் ஆசிரியர்களும் இம்மொழியிலேயே உண்மையைப் பெற்றுக்கொண்டனர். தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதை எடுத்துக்கூற சொற்களை அவர்களே தேடிக் கண்டு கொண்டனர். சரியான சொல் சில வேளையில் அவர்களுக்குக் கிடைக்காமலிருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் கூற முயற்சிக்கும் பொருள் அகத்தூண்டல் பெற்றதே.[14]

விவிலியத்துக்கு அகத்தூண்டல் அளித்த தூய ஆவியர் தாம் அதன் பொருளைச் சரியாகப் புரிந்து கொள்ள துணை புரிகிறார். கடவுள் வார்த்தையின் மொழி ஆன்மிகமானது. ஆவியால் பிறந்தவர்கள்தாம் - குழந்தையாயினும் சரி. அறிஞராயினும் சரி - அதைச் சரியாகவும் முழுமையாகவும் புரிந்து கொள்ளக்கூடும்.[15]

[8] F. Heiler, *Gospel of Sunder Singh*, p. 194.
[9] *ibid*, p. 103.
[10] streeter and Appaswamy, *The Sadhu*, p. 53.
[11] *ibid*, p. 193.
[12] Heiler, *op. cit.*, p. 196.
[13] *ibid*, p. 198.
[14] Streeter and Appaswamy, *op. cit.*, p. 53.
[15] Heiler, *op. cit.* p. 20.

சுந்தர்சிங்கின் காட்சிகளின் பின்னணியும் உட்பொருளும் விவிலியம் சார்ந்தவையாகும். அவரது இக்காட்சி அனுபவமும், பரவச உள்ளுணர்வும் (பிரத்தியட்சா) விவிலியத்தைப் போன்ற அதிகாரமுடையவையென அவர் கருதவில்லை. கேசுப் சந்திரசெனோ தமது ஆதேஷ் இத்தகைய அதிகாரம் உடையது என நம்பினார். அவருடைய நண்பரும், வாழ்க்கை வரலாற்று ஆசிரியருமான பேராயர் அப்பாசாமி எழுதுகையில், தமது பிரத்தியட்சம் விவிலியத்துக்குக் கீழானது என்பதை அவர் (சுந்தர்சிங்) வலியுறுத்தினார். விவிலியத்துடன் ஒத்திருந்தால் மட்டுமே அதை ஏற்றுக்கொண்டார் எனச் சான்று கூறிச் செல்கிறார்.[16]

அப்பாசாமியைப் போன்று சுந்தர்சிங்கும் விவிலியம் தான் முக்கியமான, இறுதியானச் சட்டம் என்று நம்பினார்.

வேறு பலரைப்போன்று சாது தூய யோவானின் நற்செய்தியைச் சிறப்பாக விரும்பிக் கற்றார். ஆனால் இது மெய்நூல் சார்ந்த பற்றுதல் அன்று. அதற்குரிய காரணத்தை அவரே கூறினார்: தூய யோவான் பிற திருத்தூதுவரை விட கிறிஸ்துவை அதிகமாய் நேசித்தார்.[17]

சுருங்கக்கூறின் சுந்தர்சிங்கின் கிறிஸ்தவப் பட்டறிவு விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டது. தம்முடைய தாயாரிடமிருந்து அவர் பெற்ற ஆற்றலும் அதற்குச் சாதகமாக இருந்தது. கீதை, உபநிடதங்களை அவர் கற்றதும், சில மேனாட்டு நண்பர்களிடமிருந்து நற்செய்தி சார்ந்த இறையியலை அவர் பெற்றதும் இதற்கு வழி வகுத்ததெனலாம். அவரது போதனை முற்றிலும் விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டதேயன்றி சிந்தனை அடிப்படையில் எழுமபியதன்று. கிறிஸ்தவப் பற்றுறுதியை எடுத்துக்கூறும் முறையில்தான் நாம் அவரது இந்தியமயத்தைக் காண்கிறோம்.

8. பி. செஞ்சையா (1886-1959)

இராம் மோகன் இராயைப் போல செஞ்சையாவும் விவிலியத்தின் சில பகுதிகளை மட்டும் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துகிறார். நற்செயதி நூல்களாலும தூய பவுலடியாரின் கடிதங்களாலும் அவர் இழுக்கப்பட்டார். சிறப்பாக ஒருவர் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவர் புதுப் படைப்பு (2கொரி. 5:17) எனும் வசனம் அவரைக் கவர்ந்தது. புதுப் படைப்பு எனும் கருத்து அவருடைய இறையியலுக்கு அடிப்படையாயிற்று. ப.ஏ. ஐக் குறித்து இவர் அக்கறையற்றவராகக் காணப்பட்டார். மார்சியனின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டார். யாவேக்கும் இயேசுவின் தந்தைக்கும் எவ்வித ஒற்றுமையுமில்லையென மார்சியன் கூறியதை ஒப்புக் கொள்ளாமலிருக்க மிகுந்த துணிச்சல் வேண்டும் என்று அவர் எழுதினார்.[18]

ப.ஏ. பு.ஏ. ஐக் காட்டிலும் மிகக் கீழ்த்தரமானது; கிறிஸ்தவப் பற்றுறுதியைப் புரிந்து கொள்ள அது அவசியமில்லை; மீட்புக்கு முற்றிலும் தேவையற்றது என்பதுதான் ப.ஏ.ஐக் குறித்து செஞ்சையாவின் கருத்து. இறைவாக்கினர்களின், அறநெறிப் போதனையையும், சில திருப்பாடல்களின் போதனையையும் அவர் போற்றுகிறார். எனினும் அவர் கேட்கிறார்; ஒரு கிரேக்கரோ உரோமரோ புரிந்து கொள்ள முடியாதது ஏதாவது இயேசுவின் போதனையிலும் வாழ்க்கையிலும் உண்டா? மலைப்பொழிவைப் புரிந்து கொள்ள ப.ஏ. இன் அவசியம்தான் யாது? இயேசுவைப் பின்பற்ற விரும்பும் ஓர் இந்து பவுலின் சிக்கலான இறையியலை ஏன் கற்க வேண்டும்?[19]

கிறிஸ்துவின் மனுவுருவேற்பைப் புரிந்து கொள்ள ப.ஏ. எவ்விதத்திலும் நமக்குத் துணை புரியாது. இஸ்லாமும் யூத சமயமும் அறியாத ஒரு கருத்து இது ஆயிற்றே என்று அவர் கூறுகிறார். எருசலேம் மன்றத்தில் யூதரல்லாதோர் விருத்தசேதனம் செய்ய வேண்டாம் என்று எடுக்கப்பட்ட தீர்மானம் யூதரல்லாத கிறிஸ்தவர்களுக்குப் ப.ஏ. தேவையில்லை என்பதைக் காட்டுகிறது; பவுலும் அவ்வாறே நம்பினார் என அவர் கூறுகிறார். பிற இனத்தாருக்குரிய சட்டம் மோசேயின் சட்டமன்று; அவர்களுடைய இதயங்களில் வரையப்பட்ட சட்டமே. ஒரு கிறிஸ்தவர் பற்றுறுதியிலே யூதராக இருக்கவேண்டுமா என்பதுதாம் பவுலுக்கும், பேதுருவுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு. தொடக்கத் திருச்சபை பவுலுடன் சேர்ந்து உறுதியாக இதனை மறுத்தது.[20] இதைத் தொடர்ந்து, இந்து மறைநூல்கள் இந்திய மக்களுக்கு ஏன் நற்செய்திக்கு ஆயத்தமாக இருக்கக்கூடாது என்ற வினாவை செஞ்சையா எழுப்புகிறார். யூத மக்களுடன் கடவுள் தொடர்பு கொண்ட முறைமை ப.ஏ. என்று கூறுகிறோம். பகுத்தறிவும் சிந்தனை ஆழமும் கொண்டு பார்த்தால் ஏன், என் நாட்டு மக்களுடன் கடவுள் தொடர்பு கொண்ட முறைமை எனது ப.ஏ. ஆக அமையக்கூடாது?[21] என்ற வினா எழும்பும்.

மத்தேயுவும் பிறரும் இயேசுவைக் குறித்த இறைவாக்கினர் உரைகளை நிகழ்ச்சிகளுக்குப் பின்னரே தேர்ந்தெடுத்தனர். அதேபோன்று கிறிஸ்துவின் வருகையைக் குறித்த இறைவாக்கினர் உரைகளை இந்து மறைநூல்களிலும் காணலாம் (K.M. பேனர்ஜி, வகால்ஜி பெகார் போன்றவர்கள் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் கூறியது போல) என வாதிடுகிறார் செஞ்சையா. இயேசுவின் போதனை, வாழ்க்கை ஆகியவற்றின் அடிப்படையில், இந்து சமயத்தில் ஒரு ப.ஏ.ஐ அமைக்கும் அளவுக்கு இந்து மறைநூல்களிலிருந்து பகுதிகளைத் தேர்ந்தெடுக்க என்னால் முடியும். தொடக்கக்கால கிறிஸ்தவர்கள் இதையே செய்தனர். கிறிஸ்தவ சமயத்தைத் தழுவும் இந்துக்களும் இதனையே செய்ய வேண்டும் என்று அவர் எழுதுகிறார்.

செஞ்சையாவின் விவிலிய அறிவும் ஆய்வுத் திறனும் அவரது இறையியல் தெளிவுக்கு ஒத்தவண்ணம் அமையவில்லை என்பது தெளிவு. இரண்டு எடுத்துக்காட்டுகளை மட்டும் கூறுவோம். பு.ஏ. இன் இந்திய மொழியாக்கங்கள் கிரேக்கத்தைச் சார்ந்தனவாக இராமல் இயேசு முதலாவது கூறிய அரமேய சொற்களைச் சார்ந்திருக்க வேண்டும் எனும் பயனற்ற கருத்தை அவர் நிறுவ முயலுகிறார்.[22]

மேலும் இயேசுவின் மலைப்பொழிவையும் அவரின் வேறு சில கூற்றுக்களையும் தவிர சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சனைகளுக்கு விவிலியத்தைப் படிப்பதால் விடை காண்பதற்கு முடியாது என்று ஓர் இடத்தில் கூறுகிறார்.[23] ப.ஏ.ஐ.

[16] In a letter to the present writer, 11-3-1966.
[17] Heiler, *op. cit.*, p. 200.
[18] *Guardian*, 20-2-1947.
[19] *ibid.*
[20] *ibid.*
[21] *ibid.*
[22] *Guardian*, 27-2-1947.
[23] *Rethinking Christianity.*

சிறப்பாக இறைவாக்கு நூல்களை அவர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதனையே இது காட்டுகிறது. மேலும், விவிலியத்தின் ஒருமையை உணர்ந்துகொள்ளாமல் சில பகுதிகளை மட்டும் தேர்ந்தெடுக்கிறார் எனும் குறையினையும் கூறலாம். அதே வேளையில் பவுலின் மையப் போதனைக்கு அவர் அளித்த புது ஆற்றல்மிக்க விளக்கத்தை நாம் நினைவுகூர வேண்டும். கிறிஸ்துவுடன் பற்றுறுதியினால் ஒன்றுபடுவதால் ஒரு புது மனுக்குலமும், புது உலகமும் உருவாகின்றன என்று அவர் விளக்கினார். ஸ்ரீ அரவிந்தோ, பெர்க்ஸன், சொந்த குருவான கும்பகோணம் மாஸ்டர் சி.வி.வி. என்பவர்களுடைய செல்வாக்கினை இவர் பவுலை விளக்கும் முறையில் காணலாம். படைப்பு, கிறிஸ்துவின் ஆள்தன்மை, மும்மை, தூய ஆவியர் போன்ற கொள்கைகளில் அவர் ஆர்வம் காட்டுகிறார். எனவே, திருச்சபையின் கீழ்நாட்டு மரபுடன் தொடர்புடையவராக அவர் காணப்படுகிறார். தூய அகுஸ்தினைச் சார்ந்துவந்த மேனாட்டு மரபுடன் கூடிய மீட்பை மையமாகக் கொண்ட விவிலிய விளக்கமுறைமையை அவர் விரும்பவில்லை. உயிர்த்தெழுதலை மூலைக் கல்லாகக் கொண்டு இறையியல் அமைப்பினைக் கட்டி எழுப்ப இந்திய இறையியல் துணிபு கொள்ளுகிறது. இதற்கும் சிலுவையை மையமாகக் கொண்ட உரோமன் கத்தோலிக்க இறையியலுக்கும் பெருத்த வேறுபாடு இருக்கத்தான் செய்யும். இரண்டு அமைப்புகளும் வெவ்வேறான முறைமைகளிலும் வெவ்வேறான நோக்கத்திற்கெனவும் பயன்படுத்தப்படுகின்றன.[24]

செஞ்சையாவின் இறையியலைப் புதுப்படைப்பு எனும் சொல்லால் குறிப்பிடுவதுண்டு. படைப்பு என்பது உருவாகும் போக்கில் ஒரு புதிய புரட்சி. இயேசு ஒரு புதிய படைப்பின் ஆதி புருஷர் என்று அவர் எழுதுகிறார்.[25] இக் கருத்து 2கொரி. 5:17ஐ அடிப்படையாகக் கொண்டது. விவிலியத்தினின்று ஒரு முக்கிய சொற்றொடரைத் தெரிந்தெடுத்து அதற்கு வலிந்து தோற்றுவிக்கப்பட்ட ஒரு புதிய விளக்கத்தை அளித்து, தம் இறையியலுக்கு இதனை அடிப்படை அமைப்புக் கொள்கையாக செஞ்சையா ஏற்றுக்கொள்ளுகிறார். இது அவரது சிறப்பு. கிரேக்கத்தில் க்டிஸிஸ் (Ktisis) என்ற சொல்லை எடுத்துள்ளார். க்டிஸிஸ் என்னும் சொல்லை கிறிஸ்துவைப் பொறுத்தவரையில் ஒரு பொருளிலும், மனிதரைப் பொறுத்தவரையில் மாறுபட்ட பொருளிலும் பயன்படுத்தலாமா என்பது இங்கு விவாதத்திற்குரிய ஒரு வினா.

கிறிஸ்துவுடன் ஒன்றுபடுவதால் புதுப்படைப்பு உருவாகின்றது எனும் கருத்தை ஆதரிக்க செஞ்சையா எடுத்துக்கொள்ளும் மற்றொரு முக்கிய வசனம். இதோ எல்லா நாள்களிலும் நான் உங்களுடன் கூட இருக்கிறேன் (மத். 28:20) என்பது. மனுக்குலத்துடன் தொடர்ந்து செயலாற்றும் கிறிஸ்துவின் மனுக்குலம் அவரது கிறிஸ்தியலில் வற்புறுத்தப்படுகிறது. கிறிஸ்துவில் கடவுள் மனிதரானார். இன்னும் மனிதராகவே செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். இதோ உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன் என்றால், விண்ணுலகத்தினின்று கடவுள் துணை செய்கிறார் என்பதன்று; கடவுள் மண்ணுலகில் நிலைநாட்டப்பட்டுவிட்டார் என்பதே அதன் பொருள்[26] என்பது அவர் கருத்து. இந்து சீர்திருத்தவாதிகள் அளிக்கும் விளக்கத்திற்கும் மாறுபட்ட ஒரு விளக்கத்தை நாம் இங்கே காண்கிறோம். கடவுள் மனிதராகிய கிறிஸ்துவைத் தள்ளிவிட்டு கடவுளுடன் ஒன்றுபடுதல் கூடாது என்பதை செஞ்சையா உறுதியாக நம்புகிறார். கடவுள் முற்றிலும் கடந்து நிற்பவர் (Transcendent) எனும் செமித்திய கருத்தை அவர் மறுத்து கடவுள் உள்ளுறைந்து நிற்பவர் எனும் ஆரியக் கருத்தை ஆதரிக்கிறார். எனவே, தற்காலத்தில் கிறிஸ்துவைப் பிறருக்கான மனிதர் (Man for others) என்ற முறையில் விளக்க முற்படும் சில மேனாட்டு இறையியல் போக்குகளுடன் இவர் கருத்து ஒத்திருக்கிறது.

விவிலியத்தைப் பற்றி மரபுவழிவந்த சீர்திருத்தத் திருச்சபையின் கோட்பாட்டினை அதிகமாக தாம் மதிக்கவில்லை என்பதை செஞ்சையா அஞ்சாமல் கூறுகிறார். தமது இறையியல் கருத்துக்களோடு ஒத்திருந்ததால், சில தீவிர விவிலிய ஆய்வாளர்களின் முடிவுகளையும் அவர் ஆர்வத்துடன் ஏற்றுக்கொள்ளுகிறார். இயேசு திருவருட்சாதனங்களையோ (Sacraments), வேறு நிறுவனங்களையோ தம் சீடர்களுக்கு அமைத்துச் சென்றார் என்பது சந்தேகத்திற்கு இடமானது என அவர் எழுதியிருக்கிறார்.[27] திருமுழுக்கையும், திரு விருந்தையும் விட்டுவிடலாம். எழுதப்பட்ட விவிலியத்தைப் போன்று, கிறிஸ்துவின் பச்சையான மெய்ம்மையைக் (The Raw fact of Christ) கிறிஸ்தவர்கள் அறிந்துகொள்ளத் தடுக்கும் தடைகள் இவை என வாதிடுகிறார். கிறிஸ்துவைப் பற்றிய இந்த உண்மையை நேரடியான உள்ளுணர்வு (பிரதியட்ச) மூலம் பெற்றுக்கொள்ளலாம். விவிலியமும் திருவருட் சாதனமும் தேவையில்லை என்பது அவரது கருத்து. இன்று கடவுள் நம்முடன் பேசிக்கொண்டிருக்க இருபது நூற்றாண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட ஒரு நூல் வாயிலாக நாம் ஏன் இன்று அவர் சொற்களைக் கேட்கவேண்டும்?[28]

செஞ்சையா விவிலியத்தைப் பயன்படுத்தும் முறையைச் சுருங்கக் கூறினால், அவர் விவிலியம் சார்ந்த ஓர் இறையியலார் அல்லர் என்றே கூற வேண்டும். விவிலிய வசனங்களை ஆய்ந்து துழாவிக் கற்க முற்படாமல் ஒரு சில முக்கிய வசனங்களை மட்டும் தேர்ந்தெடுப்பதோடு அவர் நின்று விடுகிறார். கிறிஸ்தவ நம்பிக்கையை அவர் எந்த அளவுக்குப் புரிந்துகொண்டாரோ அந்த அளவுக்குமட்டுமே அவ் வசனங்களுக்கு விளக்கம் தருகிறார். அவரது நூல்கள் சிந்தனையைத் தூண்டுபவை. ஆனால் கெசுப் சந்திரசென்னைப் போல விவிலியத்தை விட தம் சொந்த அனுபவம் உயர்ந்த அதிகாரமுடையது என்று நம்பியிருந்தார் போலும்!

9. வி.சக்கரை (1880-1958)

பல இந்திய இறையியலாருடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, விவிலியத்தைப் பற்றிய இவரது கருத்து பழமை சார்ந்தது என்றே கூற வேண்டும். விவிலியத்தைக் கிறிஸ்தவ சுருதி என இவர் குறிப்பிடுகிறார். ப.ஏ. இல்லாவிடில் தான் பு.ஏ.ஐப் புரிந்துகொள்ள முடியாது[29] என்று கூறி, ப.ஏ.க்குச் சிறப்பிடம் கொடுக்கிறார். புதுக் கருத்துக்களுக்கு இடம் அளிக்காமல், எழுத்துப் படி, விவிலியத்தைப் புரிந்துகொள்ளும் கோட்பாட்டினை ஏற்றுக்கொண்டு விவிலியத்தின் ஒவ்வொரு சொல்லும் எழுத்தின்படி அகத்தூண்டல் பெற்றது என

[24] *Guardian*, 23-1-1947.
[25] Quoted in *N.C.C. Review* (1945). p. 363.
[26] *Rethinking*, p. 160.
[27] *ibid*, p. 99.
[28] *Guardian*, 13-2-1947.
[29] *Guardian*, 2-12-1943.

நம்புகிறார்.[30] இவரது கருத்தின்படி விவிலியம்தான் ஒரே இறுதியான சட்டம். திருச்சபையில் சார்ந்து நிற்காமல் விவிலியம் தனித்து நிற்கிறது. எனது கருத்து இந்தியக் கருத்து. இதுவே சீர்திருத்த சபையில் இருந்து வந்த கருத்து. கிறிஸ்தவப் பற்றுறுதிக்கு ஆதாரமான ஒரே அதிகாரம் விவிலியமே. இதுவே அதன் முடிவான சட்டம். அதன் விளக்கங்களைக் குறித்து வேறுபட்ட கருத்துக்களை இறையியல் கல்லூரிகளும். தனிப்பிரிவினரும் கூறலாம். எனினும் சுருதியின் தவறாத முடிவான அதிகாரத்தை இந்தியக் கிறிஸ்தவர்கள் ஒத்துக் கொள்ளுவார்கள் [31] என்று அவர் எழுதுகிறார்.

அவருடைய பட்டறிவின் அடிப்படையிலேயே விவிலியத்துக்கு இத்தகைய முதலிடம் அளித்தார். விவிலியத்தைப் படிப்பதன் மூலமாகத்தான் அவர் கிறிஸ்துவைச் சந்திக்க வாய்ப்புக் கிட்டியது. எனது அனுபவத்தில் விவிலியம் முதலிடம் பெற்றது, மற்றவை துணையிடம் பெற்றன[32] என்று எழுதுகிறார். மேலும். விவிலியத்தைப் படித்தபோது இயேசு கிறிஸ்து என்னைக் கவர்ந்துகொண்டார். சிறிதுசிறிதாக அவரது சிறப்பு, சொல்ல முடியாத அவரது அழகு. அந்த கலிலேயரின் அமைதி இவை அனைத்தும் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. வர லாற்று மனிதர், இப்போதும் வாழ்பவராக மாறிவிட்டார்[33] என்று கூறுகிறார். எழுதப்பட்ட சொல்லில் உயிருடைய வார்த்தை யாக விளங்குகிறார் எனும் கார்ல் பார்த்தின் கருத்தை இங்கே காண்கிறோம். ப.ஏ.இன் பொருள் உயிருடைய வார்த்தையாகிய கிறிஸ்துவில்தான் தெளிவாகிறது. அவர் கூறுகிறார்: கிறிஸ்துவின் காலத்தில் வாழ்நத யூதருக்கு தோரா கடவுளின் குரலாக, அவரது விருப்பத்தின் உருவாக அமைந்தது. ப.ஏ.இல் வெளிப்படுத்தப்பட்டு. மறைவல்லுநரால் விளக்கப்பட்ட சட்டம். கடவுளின் உயிருடைய குரலுக்குப் பதில் பொருளாக மாறிவிட்டது, கடவுளின் மனுவுருவேற்பிற்கே பதில் பொருளாக மாறிவிட்டது. கடவுளின் மக்களாக விளங்கவேண்டிய இஸ்ரயேல், நூலின் மக்களாக மாறிவிட்டனர். மாபெரும் ஞானி கூறுவதுபோன்று, வாக்கு மனிதர் ஆனார். அருளும் உண்மையும் நிறைந்து மக்களிடை தங்கினார். உயிரற்ற சொற்களில் விளக்கம் மறைந்தது. என்றுமுள வாக்கு மனுவுருவேற்றுத் தோன்றியது.[34]

ப.ஏ. இந்தியத் திருச்சபைக்கு மிகுந்த பயனளிப்பது. அதை ஒதுக்கிவிடக்கூடாது என்று சக்கரை மிகவும் வாதிடுகிறார். அவர் ஒரு செயல்வாதி, அரசியல், நாட்டு வாழ்விலும், தொழில் இயக்கத்திலும், மிகவும் பங்கெடுத்துக்கொண்டவர். எனவே சமூகநீதி, அறநெறி வாழ்க்கை போன்றவற்றைக் குறித்துப் ப.ஏ. என்ன போதிக்கிறது என்பதை ஆர்வத்துடன் தேடினார். அறம் காக்கும் ஆளுநர் அறநெறியாட்சி நடத்துவதை[35] ப.ஏ. காட்டுகின்றதால், அது மிகச் சிறப்புடையது. கடவுளின் நீதியை இவ்வுலகில் நிறுவுவதே சனாதன தர்மம் என்று கூறி, இக் கருத்திற்குப் புதியதோர் ஆக்கல்திறன் படைத்த விளக்கத்தை சக்கரை தருகிறார்.[36]

இஸ்ரயேல் இறையடியார்களின் உள்ளத்தைக் காட்டும் திருப்பாடல்களின் பக்தியிலும் சக்கரை மகிழ்ச்சி கண்டார். இதுவே சமயப் பற்றுறுதி என்று எழுதுகிறார்.

நமது இறையியல் முற்றிலும் விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டது என்று நிறுவிய பின்னர், தம் கீழ்நாட்டு மனப் போங்கையும் அவர் காண்பிக்கத் தவறவில்லை. வரலாற்று விளக்கத்தைக் காட்டிலும் ஆன்மிக விளக்கத்தையே அவர் விரும்பினார். பகுத்தறிவு சார்ந்த விளக்கத்தைக் காட்டிலும் இறைப்பற்று சார்ந்த விளக்கத்தையே விரும்பினார்.[37] ஆனால் அவர் விளக்கங்களை வலிந்து கொடுக்க முற்படவில்லை. எபே. 5:1-33ஐ இறைப்பற்று முறையில் காதலுறவு கொடுத்து விளக்கும் சோதனையைத் தவிர்த்து, திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்குமுள்ள தொடர்பை வற்புறுத்தி விளக்கம் அளிக்கிறார்.[38]

இவர் தம் மைத்துனரான செஞ்சையாவைக் காட்டிலும் தமது இறையியலில் விவிலியத்துக்கு அடிப்படையான முக்கியத்துவம் வழங்குகிறார். இவரது இறைப்பற்று சிலுவையை மையமாகக் கொண்டது. பவுல் கூறும் நம்பிக்கையால் ஏற்புடையராகுதல் எனும் கருத்தினை இறைப்பற்று அடிப்படையில் இவர் விளக்குகிறார். மீட்பைப்பற்றிக் கூறுகையில், சோதனைகளை வென்றதால் கிறிஸ்து வெற்றி வீரர் எனக் காட்டுகிறார். மீட்கும் பொருள் (மார். 10:45). பதிலேற்பு. (எசா. 42; 53) என்னும் சொற்களுக்கும் இவர் அழகிய விளக்கம் தருகிறார். வரலாற்றில் வாழ்ந்த இயேசுவுக்கும், நம்பிக்கையில் வணங்கப்படும் கிறிஸ்துவுக்கும் உள்ள தொடர்பை விளக்க, என் கடவுளே, என் கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர் (மார். 15.34) எனும் வசனத்தைப் பயன்படுத்துகிறார். இதனை பிலிப்பியர் 2ஆம் அதிகாரத்துடன் தொடர்புபடுத்தி கிறிஸ்துவின் வெறுமையாக்கலை (Kenosis) அழகுடன் விவரிக்கிறார்.

இயேசு கிறிஸ்துவும் தூய ஆவியரும் ஒருவரே என அவர் கூறுவதற்கும் விவிலியச் சான்றுகள் காட்டுகிறார். மனித ஆள்தன்மையில் செயலாற்றும் இயேசுவே தூய ஆவியர்[39] (2கொரி. 3:17). ஆண்டவர் ஆவியரே எனும் வசனத்தை அவர் விளக்கிக் கூறுகிறார். மேனாட்டுத் திரித்துவக் கோட்பாடு களை அறியாத இந்தியக் கிறிஸ்தவர்கள் பு.ஏ.ஐ அறியும்போது தூய ஆவியரைத் தங்களுக்குள் செயலாற்றும் கிறிஸ்துவாக உணர்ந்துகொள்ளுவர். எனவே அவர் கூறுகின்றார்: கடவுளின் மனுவுருவேற்பு இயேசு கிறிஸ்து. மனிதப் பட்டறிவில், இயேசு கிறிஸ்துவில் தூய ஆவியர் அமைந்துள்ளார்.[40]

உயிர்த்தெழுதல் மிக முக்கியமானதென சக்கரை நம்புகிறார். மனு உருவேற்ற கிறிஸ்துவின் அன்பு (பக்தி) ஆவியரின் அளவற்ற ஆன்மிக ஆற்றலாக (சக்தி) எவ்வாறு மாறியது என்பதையே உயிர்த்தெழுதல் தெளிவுறுத்துகிறது என்று அவர் கூறுகிறார். உரோ. 1:4 தான் அடிப்படையான வசனம். கிறிஸ்து உயிர்த்தெழுந்ததால் தூய ஆவியால் ஆட்கொள்ளப் பட்ட நிலையில் வல்லமையுள்ள இறைமகன் என்று நிறுவப்பட்டவர். தேற்றரவாளர், குரு, வெளிப்படுத்துபவர் என யோவான் ஆவியரைப் பற்றிக் கூறுவதையும் இவர் தமது விளக்கத்தில் பயன்படுத்துகிறார். பெந்தெகொஸ்தே நிகழ்ச்சியின்போது, ஆண்டவரின் ஆவி ஆற்றலாக உருப்பெற்று[41] புலன்களால் உணர்ந்துகொள்ளக்கூடிய வகையில் வெளிப்பட்டது என்று லூக்கா விளக்குகிறார். சக்கரையின் கிறிஸ்தியலை ஆவியின் கிறிஸ்தியல் என நாம் அழைக்கலாம். அவரது போதனையின் அடிப்படை எப்போதும்

[30] *ibid.* [31] *ibid.* [32] *ibid.* [33] *Guardian*, 29-5-1947. [34] V. Chakkarai, *Jesus the Avatar*, p. 3. [35] *Guardian*, 16-6-1947. [36] *ibid.* [37] *Rethinking*, p. 75. [38] V. Chakkarai, *The Cross and Indian Thought*, p. 238 f. [39] *Avatar*, p. 117. [40] *ibid*, p. 121. [41] *ibid*, p. 157.

விவிலியமே. வேறு கருத்துக்களும் சிந்தனைப்போக்குகளும் இங்கே இடம் பெறவில்லை.

வரலாற்று இயேசு எனும் பொருள்பற்றி இந்நூற்றாண்டின் துவககப் பகுதியில் நடந்த ஆராய்ச்சியைக் குறித்து சக்கரை நன்கு அறிந்திருந்தார். அவரது முந்தைய கட்டுரைகளைப் படிக்கையில் இது விளங்கும். ஆய்வு நோக்குடன் இவரும் பு. ஏ. ஐக் கற்றார் என்பதும் தெளிவு. ஆனால் செஞ்சையாவைப் போல் புரட்சிகரமான முடிவுகளை அவர் ஏற்கவில்லை. அருஞ் செயல்களும் உயிர்த்தெழுதலும் உண்மையான நிகழ்ச்சிகள் என அவர் கூறுகிறார்.

சக்கரையின் இறையியல் செஞ்சையாவின் இறையியலைப்போன்று புதுமை வாய்ந்தது, இந்தியப் போக்கைப் பொறுத்தவரையில் எவ்விதத்திலும் அதற்குக் குறைந்ததுமல்ல. ஆனால், ஒரு தனிச்சிறப்புப் பெற்றது, விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டது. அவரது விளக்கங்கள் சில வேளைகளில் ஏற்றுக்கொள்ளபடகூடாதவையே. ஆனால் எப்போதும் விவிலியத்தினின்று தொடங்க அவர் தவறுவதில்லை. சுருதியை அடிப்படையாகக் கொண்டு அனுபவத்திலிருந்து தொடங்கி அவ்வடிப்படையில் இறையியலை விளக்க முற்பட்ட ஒரு பெரியார் இவர்; முற்றிலுய இந்தியச் சொறகளையும் தத்துவக் கருத்துக்களையும் பயன்படுத்துகிறார். இவருடைய சிந்தனைப்போக்கு இந்திய இறையியலுக்கு அழகியதோர் எடுத்துக்காட்டு.

10. ஏ.ஜெ. அப்பாசாமி (1891)

தூய யோவானின நூல்களை ஆய்ந்து கிறிஸ்தவமும் பக்தி மார்க்கமும் (1928). மோட்சம் என்றால் என்ன? (1931) எனும் இரண்டு நூல்களைத் தமிழ் பக்திக் கவிதைகளின் பின்னணியில் பேராயர் அப்பாசாமி முதலாவது வெளியிட்டார். என்னில் நிலைத்திருங்கள்; நானும் உங்களில் நிலைத்திருப்பேன் (யோ. 15:4) எனும் மகா வாக்கியத்தில் கிறிஸ்துவை அனுபவிப பதின் உயரிய நிலை அடங்கியிருக்கின்றது என அவர் கருதுகிறார். இராம் மோகன் இராயைப் போன்றே இவரும் தந்தை -மகன் உறவை விளக்கி கிறிஸ்துவுக்கும் பற்றுறுதியாளருக்குமிடையே அமைந்த உறவு இதுபோன்றது எனக் கூறுகின்றார். [42] ஆனால் இவ்வுறவு மெய்யியல் நிலை சாந்தது அன்று; மெய்ப் பொருள் சாந்தமன்று, அறநெறி சாந்தது (moral) என்கிறார். இந்தியச் சிந்தனையின் பக்திப் போக்கை இங்கே காணலாம். தந்தையும் மகனும் ஒருவரே எனும் அத்துவைதப் போக்கை அப்பாசாமி மறுக்கிறார். இராமானுசரின் விசிஷ்டாத்துவைத முறையிலுள்ள இணைப்பற்றை ஒப்புக் கொள்ளுகிறார். அவர்க ளெல்லாரும் ஒன்றாயிருக்கவும். நீர் என்னிலும் நான் உம்மிலும் இருக்கிறதுபோல அவர்கள் நம்மிலிருக்கவும் வேண்டிக் கொளளுகிறேன் (17:21). தநதை என்னிலும் பெரியவர் (14:28) போன்ற பசனங்களை இம்முறையில் அவர் விளக்குகிறார்.

யோவான் நற்செய்தி நூலின் முன்னுரையில் காணும் லோகாஸ கோட்பாட்டிற்கு அவர் சிறப்பிடம் கொடுக்கிறார். அவர் உலகத்தில் இருந்தார் (1:10) எனும் வசனத்துக்கு மனு வுருவேற்ற கிறிஸ்து உலகத்தில் வருவதற்கு முன்பே அந்தர் யாமினாக உலகத்தில் இருந்தார். எல்லா சமயத்தைச் சேர்ந்த மக்களுக்கும உள்ளொளி அளித்துவந்தார் என விளக்கம் அளிக்கிறா. உள்ளார்ந்த கிறிஸ்துவாக. ஆரம்ப காலத்திலிருந்தே கடவுள எல்லா மக்களிலும் இருக்கிறார். ஆனால் மக்கள் அவரை முழுவதுமாகப் புரிந்துகொள்ளவில்லை. எனவே. கடவுளின் வெளிப்படுத்தலாக கிறிஸ்து உருவெடுத்தார். இந்து சமயத்தின் அறியப்படாத கிறிஸ்து (1964) எனும் நூலில் இரே. பணிக்கர் இக்கருத்தை வெளியிட்டுளளார.

கடவுளுக்கும் உலகத்திற்குமிடையே உள்ள தொடர்பு யாது? இராமானுசருடைய மெய்யியலின் துணையுடன். யோவான்-1 இன் அடிப்படையில் அப்பாசாமி இதற்குச் சிறப்பான முறையில் விடையளிக்கிறார். கிறிஸ்தியல். திருச்சபை. திரு விருந்து போன்றவற்றைக் குறித்த இவரது சிந்தனைக்கு இது அடிப்படையானது. கடவுளும் உலகமும் ஒன்றல்ல; ஆனால் கடவுள் உலகத்தில் செயல்படுகிறார்; மனித ஆன்மா உடலில் செயல்படுவது போன்று உலகம் படைக்கப்பட்டது முதல் இதுமட்டும் உள்ளார்ந்து நின்று அதனை நடத்தும் ஆற்றல் மனுவுரு எடுத்து இயேசுவாக மக்களிடையே வாழ்ந்தது... காலம் தொடங்கிய நாள்தொட்டு. கூறப்போனால் காலம் தோன்றாததற்கு முன்னிருந்தே. அமைந்திருந்த இப்பெரும் உறவைப் பற்றிய ஒரு காட்சியைத்தான் நற்செய்தி நூல்களில் நாம் காண்கிறோம்[43] என்று எழுதுகிறார்.

நான்காவது நற்செய்தி நூலின் விளக்கத்தில் மற்றொரு சிறந்த உண்மையையும் அப்பாசாமி காட்டுகிறார்: அறிவு எனும் சொல்லின் கிரேக்கம்-கினாசிஸ், சமஸ்கிருதம்-ஞானம். யோவான் கூறும் ஞானம் இந்து சமயம் கூறும் ஞானமார்க்கத்தினின்றும் வேறுபட்டது, அது இறையுடன் நேரடித் தொடர்பு கொள்ளும் பக்தியென்று கூறுவதே சரி; மோட்சம் அடையும் வழி சிந்தனையுமன்று. தியானமுமன்று. நேரடியான அறிவுடன் வரும் இறையன்பே. இது கிறிஸ்துவில் வெளிப்பட்டது என்கிறார்.

அப்பாசாமி பாவக் கழுவாய் பெறுவதைக் காட்டிலும் பற்றுறுதியாளரின் ஐக்கியத்தையே வலியுறுத்துகிறார்; யோவான் நூலுக்கு அவர் சிறப்பிடம் அளிப்பதால் இதனை நாம் எதிர்பார்க்கக்கூடியதே. முதல் மூன்று நற்செய்திகளிலும் கிறிஸ்துவின் இரத்தம் பாவமன்னிப்புக்கென சிந்தப்பட்டதெனக் கூறப்பட்டது. ஆனால் இந்திய இறையியலுக்கு நெருங்கிய யோவான் நூலில் இது பற்றி ஒன்றும் கூறப்படவில்லை; கிறிஸ்துவுடன் பெறும ஐக்கியத்தின் தன்மை, நிலை வாழ்வு, ஐக்கியம் நிலைத்திருப்பதற்கு வழி எனும் பொருள்களே இடம்பெறுகின்றன. இயேசுவின் உடலும் இரத்தமும் எப்படி மனிதருக்கு உணவும் பானமும் ஆகின்றன எனும் போதனையே இந்நூலில் அடங்கியுள்ளது.[44]

விவிலியத்தின் அதிகாரத்தைப்பற்றி அவர் கூறுவதும் கவனிக்கத்தக்கது. இந்து சமயத்தின் மூன்று அறிவு மூலங்கள் விவிலியம் (சுருதி). அனுபவம். பகுத்தறிவு (அனுமானம்) என்பவை. இவற்றுள் விவிலியத்துக்கு இவர் தயங்காமல் முதலிடம் வழங்குகிறார். இயேசுவைக் குறித்த அறிவிலை நாம் நேரிடையாகப் பெற்றுக்கொள்ள முடியுமா? அல்லது விவிலியம். திருச்சபை. மரபு இவற்றின் மூலமாக மட்டுந்தான் பெற முடியுமா? எனும் செஞ்சையாவின் வினாவிற்கு அவர் விடையளிக்க முற்படுகிறார், தெளிவுடன் கூறுகிறார்: விவிலியமே நமது நம்பிக்கையின் அளவுகோல். இதுவே முதல் அறிவு மூலம். எவருக்கும் முறையீட்டிடம். அடிப்படையான வெளிப்படுத்தல் நற்செய்தி நூல்களில் அடங்கியுள்ளது. பவுல். யோவான் போன்ற இயேசுவின் திருத்தூதுவர்களின் விளக்கமும்

[42] *What is Moksa?* pp, 56,57. [43] *ibid*, p. 169. [44] *Bhakti Marga*, p. 70 f.

முக்கியமானதே; ஆனால் இயேசுவின் வாழ்வுக்கும் போதனைக்கும் உரிய சிறப்பு இவற்றிற்கு கிடையாது. வரலாற்றில் நிகழ்ந்த மனுவுருவேற்புக்குப்0 பின்னணியாக விளங்குவதால் ப.ஏ.உம் சிறப்பானதே.

வீட்டுவாசலின் இருபக்கங்களிலும் கதிர் ஒளிவீசும் ஒர் ஒளியைக் குறித்து வடமொழி நூல்கள் பேசுகின்றன. வெளிப்பாட்டின். நீண்ட வரலாற்றியக்கங்களை ஒளிரப் பண்ணும் ஒளியாக கிறிஸ்துவின் வாழ்வும் இறப்பும் போதனையும் முன்னும் பின்னும் விளங்குகின்றன. அவரிடமிருந்து ஒளிரும் ஒளியில், அவருக்கு முன்னும் பின்னும் வாழ்ந்த அறிஞருடைய பக்தியில் சிறப்பானவற்றையும் பெருமையானவற்றையும் காண்கிறோம். அப்பாசாமியின் சிந்தனை இயேசு கிறிஸ்துவை மையமாகக் கொண்டுள்ளது என்பதற்கு இவ்வழகிய விளக்கம் ஒர் எடுத்துக்காட்டு. விவிலியத்தின் மையம் கிறிஸ்து. பழைய, புதிய ஏற்பாடுகளில் அவரது ஒளியையே படிக்கிறோம். விவிலியம் முழுவதும் அவருக்குச் சான்று பகர்வதால் விவிலியம் நமது நம்பிக்கைச் சட்டமாக, கட்டளையாக விளங்குகின்றது.

கிறிஸ்தவம் பக்தி மார்க்கம் எனும் நூலில் விவிலியத்தைக் குறித்த விரிவான கோடபாட்டைக் காண்கிறோம். மரபு வழி வந்த சில கருத்துக்களுடன் துவங்கி, புதுமையான முடிவுகளுக்கு நம்மை இழுத்துச செல்கிறார் அப்பாசாமி. என்னை அனுப்பிய தந்தை தாமே எனனைக் குறித்துச் சான்று பகர்ந்திருக்கிறார் (யோ. 5:37) எனும் வசனத்தை எடுத்து இந்தச் சான்றின் தன்மை யாது என்பதை அவர் விளக்கிக்காட்டுகிறார். கிறிஸ்தவ வெளிப்படுத்தல் அடிப்படையாக விவிலியத்தில் அடங்கியுள்ள வெளிப்படுத்தலே. தந்தையின் சான்று அவ்வப்போது அவர் அளிக்கும் நேரிடையான வெளிப்படுத்தல் அன்று. விவிலியத்தில் அடங்கியுள்ள வரலாறு சார்ந்த வெளிப்படுத்தலே.[45] நாம் கிறிஸ்துவை நேருகமாய் அங்குச் சந்திக்கிறோம் என்பதே விவிலியத்தின் சிறப்பு. கிறிஸ்தவ மறைநூலின் முக்கிய உட்பொருள் கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு. வரலாற்றில் வெளிப்பட்ட இறைவனுடன் தொடர்புகொள்ள அது நமக்குத் துணை புரிகிறது.[46] விவிலியத்தில் தனித்தியங்கும் வாழ்வு கிடையாது. ஆனால் கிறிஸ்துவின் வாழ்வில் கடவுள் தம்மை வரலாற்றுக்குள் வெளிப்படுத்தினார் என்பதற்கு அது சான்றாக விளங்குகிறது. அவர் கூறுகிறார்: விவிலியம் தன்னில் தானே வாழ்வு பெற்றிருக்கவில்லை. ஏதோ அதற்குள்ளேயே வாழ்வளிக்கும் ஆற்றல் இருக்கிறது என எண்ணுவது தவறாகும். கால வரையறைக்குள் வெளிப்பட்ட இறைவனண்டை நடத்துவதே அதன் முக்கியக் கடமையாகும்.[47]

அப்பாசாமி ப.ஏ.க்கு முக்கியத்துவம் அளிக்கிறார். செஞ்சையாவைப்போல் இந்து மறைநூல்களால் அதை நீக்கி அல்லது மாற்றிவிடலாம் என அவர் எண்ணவில்லை. ஆனால், இந்து சாஸ்திரங்களும் பயனுடையவையே; விவிலியத்தின் பல பகுதிகளைத் தெளிவுபடுத்த இவை உதவுகின்றன. கிறிஸ்தவ நம்பிக்கையின் சில கூறுகளை வலியுறுத்த துணைபுரியும். இவை ப.ஏ.ஆ அகற்றாது. அகலப்படுத்தும் என்கிறார்.[48]

இந்தியாவின் பழைய மறைநூலில் உறுதியுடன் நாம் தள்ளிவிட வேண்டிய பல பகுதிகள் உள. ஆனால் நாம் ஏற்றுக்கொண்டு, கிறிஸ்துவில் முழுமை பெறச் செய்ய வேண்டிய பல கோட்பாடுகளும் கருத்துக்களும்கூட அதில் உண்டு.[49] இந்த இணைப்பிசைவு நோக்கத்துடன். இந்து சமய இலக்கியங்களிலிருந்து தேர்ந்தெடுத்த பகுதிகளை, 1930இல் கோவில் மணிகள் எனும் நூலாக அப்பாசாமி வெளியிட்டார். பல கிறிஸ்தவர்கள் தம் பக்தி வாழ்க்கைக்கு இதனைப் பயனுடையதாகக் கண்டுகொண்டனர்.

விவிலியத்தின் முடிவான தன்மையைக் குறித்து அப்பாசாமி என்ன சொல்கிறார்? விவிலியத்தின் எழுத்துக்கு அதிக பக்தி செலுத்தும் போக்கை அவர் கண்டிக்கிறார். புது வெளிப்படுத்தல்களுக்கு நமது கண்களை மூடிவிடக் கூடாது என அவர் விரும்புகிறார். கடவுளிடம் முற்றிலும் அன்புகூரும் படி இதயத்தை ஆயத்தம் செய்ய விவிலியம் மிகவும் துணை புரிகிறது. ஆனால் எக்காலத்திலும் மாறாத அறநெறி பக்திநெறிச் சட்டங்கள் என விவிலியத்தைக் குறித்து எண்ணுவது சரியன்று. எழுத்து கொல்லும், ஆவியோ உயிர்ப்பிக்கும். எனவே, விவிலியத்தின் எழுத்தின்படி நடப்பது அடிமைத்தன வாழ்வாகும்.[50] ஆவியர், முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார் (யோ. 16:13) என்பதன் பொருள் என்ன?

வருங்காலத்தில் புதிய உண்மைகள் வெளிப்படுமா? வெளிப்படுத்தல்கள் இன்னும் பெறுவதற்குண்டா? அல்லது நாம் ஏற்கெனவே பெற்றிருக்கும் விவிலிய விளக்கம்தான் இறுதியா? அவை முற்றிலும் புதிய உண்மைகளானால், விவிலியத்தில் ஏற்கெனவே அடங்கியுள்ள உண்மைகளைக்காட்டிலும் இவை மேம்பட்டவைகளாக இருக்கலாமன்றோ? இறந்தகாலத்தால் நாம் கட்டப்பட்டவர்களாக இருக்காமல், அதனால் ஏவப்பட்டு எல்லையற்ற பேரழகு நிறைந்த நிலைமைகளுக்கு இழுத்துச் செல்லப்பட வேண்டும். நாம் நேரிடையாக ஐக்கியம் கொள்ளும் தூய ஆவியர், விவிலியத்தை நமக்கு விளக்கிக் காட்டுவதுடன், இதுவரை கண்டறியாத சிந்தனை மண்டலங்களுக்கு நம்மை நடத்திச் செல்கிறார். புதிய சிக்கல்களுக்கு புதிய முறையில் விடை காண அவர் துணைபுரிகிறார். எல்லை இல்லாத அழகுக் காட்சிகளை நம் முன் கொணர்கிறார்[51] என்று அப்பாசாமி எழுதுகிறார். இப்போர்ப்பட்ட வெளிப்படுத்தல்களைக் குறித்தச் சட்டம் யாதென நாம் கேட்கலாம். திருச்சபையின் சீரமைப் பாளர்கள் கூறியதுபோல், தூய ஆவியர் உள்ளத்தினுள் காட்டும் சான்றுதான் இச்சட்டம் என நாம் கொள்ளலாமா? அப்பாசாமி விவிலியம் தான் முக்கியச் சட்டம் எனக் கூறியதற்கு இது முரண் இல்லையா?

அப்பாசாமி விவிலியத்தின் மீது உண்மையான பற்றுக் கொண்டிருப்பினும், சில இடங்களில் விவிலியப் பகுதிகளுக்கு வலிந்து விளக்கம் கொடுப்பதுண்டு எனக் கூற வேண்டியிருக்கிறது. எ.கா. அவர் தமக்குரியவர்களிடம் வந்தார் (யோ. 1:11).[52] கடவுளால் பிறந்தவர்கள் (1:13).[53] நொறுங்கிய, நலிந்த நெஞ்சத்தினரோடும் நான் வாழ்கிறேன் (எசா. 57:15).

[45] *ibid*, p. 55.
[46] *ibid*, p. 156.
[47] *ibid*, p. 161.
[48] *ibid*, p. 166.
[49] *ibid*.
[50] *ibid*, p. 168.
[51] *ibid*, p. 169.
[52] *Moksa*, p. 72.
[53] *The Gospel and India's Heritage*, p. 78.

இவ்வசனத்தில் உடையவர்களோடு என்பதை, உள்ளவர்களுக்குள் (in them) என மாற்றி கடவுள் உள்ளுறைந்து நிற்கின்றார் எனும் பொருள்பட விளக்குகிறார்.

11. சில தற்காலச் சிந்தனைப் போங்குகள்

சில தற்கால அறிஞர்களுடைய நூல்களில் காணப்படும் போங்கைப் பார்ப்போம்.

பேராயர் ச. குலேந்திரன்[54] பவுல்-அகுஸ்தீன்-லுத்தர் மரபைப் பின்பற்றுகிறார். அருளைக் குறித்த பவுலின் போத னைக்கு அவர் கொடுக்கும் விளக்கம் மிகச் சிறந்தது. இவ் விளக்கத்தில் சிறப்பான இந்தியக் கூறுகள் வேண்டுமென்றே குறைக்கப்பட்டன. பேராசிரியர் தாஞ்சிபாய் பக்கீர்பாய் இந்திய விளக்கத்திற்குச் சிறப்பிடம் கொடுக்கிறார். முற்றிலும் விவிலிய விளக்கம் தருகிறார். இவர் விவிலியத்தின் சான்று காட்டாமல் இறையியலில் ஒரு வாசகம்கூட எழுதுவதில்லை. அவர் விவிலியத்தை விளக்க முறையில் படிப்பதைக் காட்டிலும் பக்தி முறையிலேயே படித்தார்.

இந்திய நற்செய்தி ஒருமைப்பாட்டு மன்றம் மூலமாகவும், புத்தெழுச்சியை வலியுறுத்தும் சில இறையியல் கல்லூரிகள் மூலமாகவும் நற்செய்தி தீவிரக் கோட்பாடு அண்மையில் இந்தியாவில் செல்வாக்குப் பெற்றுவருகிறது. இவர்கள் மேனாட்டு நற்செய்தி தீவிர மரபு விளக்கங்களையே ஏற்றுக் கொள்ளுகின்றனர். ஆனால் பால் சுதாகர். பக்தசிங் போன்றவர்கள் இந்திய மணங்கமழும் வகையில் விவிலியத்தை விளக்கிக் கூறுகிறார்கள். பக்தசிங் எடுத்துக்காட்டுகளில் அவரது இந்தியத் தன்மை அதிகம் ஒளிர்கிறது. சுதாகர் முற்றிலும் விவிலியத்தைச் சார்ந்தே நின்றாலும், இந்து சமயத் துறைச் சொற்களைத் தீவிரமாகப் பயன்படுத்துகிறார்.

பொதுவாக நோக்கினால், விவிலிய விளக்கத்திற்குத் திட்டமான ஒரு முறை இதுவரை இந்தியாவில் தோன்றவில்லை. இது ஒரு பெருங்குறைபாடு. பயன்படக்கூடிய சில விளக்க நூல்கள் வெளிவந்துள்ளன என்பது உண்மைதான். சென்ற தலைமுறையில் தொடர்ந்து வெளிவந்த இந்திய திருச்சபை விளக்க நூல்களையும் இக்காலத்தில் தொடர்ந்து வெளிவரும் கிறிஸ்தவ மாணவர் நூலகத்தையும் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இந்த நூல்களின் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாட்டவரே. வட்டார மொழிகளில் பாட நூல் வரிசையாக இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் விளக்க நூல்களில் சில தனிச்சிறப்பு வாய்ந்தனவாக இருக்கலாம்.

அனைத்துலக உடன்படிக்கையை (Cosmic, Covenant) வலியுறுத்தும் மற்றொரு சிந்தனைப் போங்கும் குறிப்பிடத் தக்கது. சிறப்பாக பணிக்கர், அபீட்சிக்தானந்த், பீடெகிரிபெத்ஸ் போன்ற உரோமன் கத்தோலிக்க அறிஞர்கள் இதனை ஆதரிக்கின்றனர். இவர்கள் பிறசமய மக்களுடன் உரையாடலில் ஈடுபட ப.ஏ.இல் காரணம் காண்கின்றனர். நோவா, மெல்கிசேதேக்கு என்பவர்களுடன் கடவுள் செய்த உடன்படிக்கை - இது ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு முன்னர் நிறுவப் பட்டது எசா. 65; உரோ. 10:20; திருத். 17:23 மு. போன்ற பகுதிகள் எல்லா மனிதரும் கடவுளைத் தேடுகின்றனர் எனப் போதிக்கின்றன. இந்து சமய ஆன்மிக இயல்புகளையும் மதித்து அவற்றைப் புரிந்து கொள்ள இப்போக்கு முயற்சிக்கிறது, வரவேற்கக் கூடியதே. அந்தந்தப் பகுதிகளின் சூழ்நிலையில் இவ்விளக்கமும் சரியே. ஆனால் விவிலியத்தின் அடிப்படையான செய்தியைப் புரிந்து விளக்கிக்கூறும் முதல் கடமையினின்று தவறாதபடி கவனித்துக் கொள்ளவேண்டும். விவிலியத்தின் ஒருசில பகுதிகளை மட்டும் ஆய்ந்து ஆர்வம் காடுதல் இறைவாக்கினர் நூலாயினும் சரி, திருவெளிப்பாடு நூலாயினும் சரி, ஆவியின் வரங்களாயினும் சரி, பரவசப் பேச்சு அனைத்து லக உடன்படிக்கை, மனுவுருவேற்பு, பாவக் கழுவாய் எதுவானாலும் சரி-எளிது, தவறானது. திருச்சபை சீரமைப்புக் காலத்தில் சிறப்பாக நாம் காண்பதைப் போன்று முழு விவிலியத்தையும் ஆழ்ந்து சமநிலையுடன் கற்பது இக்காலத்தின் பெருந்தேவையாகும்.

12. விவிலிய மொழிபெயர்ப்பும் இறையியலும்

1706 இல் தரங்கம்பாடி நற்செய்தித் தூதுவர்கள் விவிலியத்தை இந்திய மொழியில் திருப்பத் துவங்கினார்கள். இதுகாறும் அப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தொடக்கக்காலத்தில் மொழிபெயர்த்தவர்கள் இந்து சமயக் கருத்துக்களுடைய சொற்களைத் தவிர்த்தனர். சொர்க்கம் எனும் சொல், புலனின்பங்கள் நிறைந்த இந்திரனின் சொர்க்கத்தைக் குறிக்கும் என்ற காரணத்தால் அறிஞர் ஜான் வில்சன் இச்சொல்லைப் பயன்படுத்த மறுத்தார். இதைக்காட்டிலும் தேவலோகம் எனும் சொல் தகுந்தது எனக் கருதினார். எனினும் பெரும்பாலான மொழியாக்கங்களில் சுவர்க்கம் எனும் சொல் பயன்படுத்தப்பட்டது. அது இப்போது கிறிஸ்தவச் சொல்லாக மாறிவிட்டது.

விவிலியச் சொற்கள் சிறு பருவம்தொட்டு மக்கள் மனத்தில் ஆழமாகப் பதிந்துவிடுகின்றன, மாற்றும் முயற்சிகளை மக்கள் வரவேற்கவில்லை. எனவே ஒவ்வொரு மொழி வட்டாரத்திலும் கிறிஸ்தவ மக்கள் கானான் நாட்டு மொழி பேசுகின்றனதையும், பிறர் அதைப் புரிந்துகொள்ள முடியாமல் தவிப்பதையும், தவறாகப் புரிந்து கொள்வதையும் காண்கிறோம். அண்மையில் மொழிபெயர்ப்பாளர்கள் துணிந்து அதிகமான இந்திய சொற்களைப் பயன்படுத்துவதைப் பார்க்கலாம். குறிப்பாக, உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் மொழியாக்கங்கள், முந்தைய மொழியாக்கங்களுக்குக் கட்டுப்பட்டிராத காரணத்தால் இத்துறையில் சிறந்து விளங்குகின்றன. எந்த மொழிபெயர்ப்பிலும் கிரேக்க, எபிரேய மூலமொழிகளுக்கு இசைந்திருப்பதா என்ற பிரச்சனை எழும்புகிறது. பண்பாட்டுச் சூழ்நிலையில் உள்ள இறையியல், மெய்யியல் சொற்களைப் பயன்படுத்தவேண்டுமா வேண்டாமா எனும் மற்றொரு வினாவும் எழும்புகிறது. பல்வேறு பண்பாடுகள் நிறைந்த இந்தியா போன்ற நாட்டில், இது மொழிபெயர்ப்பாளர்க்கு பெரும் அறைகூவலாக விளங்குகிறது. கருத்துக்களை விவிலியத்தின் செய்திக்கும் நாட்டின் பண்பாட்டிற்கும் உண்மையான முறையில் இக்கால வாசகர்களை மனத்தில் கொண்டு எடுத்துக்கூறுவது இறையியல் வல்லுநருடைய அரும்பணியாகும். தொடர்ந்து நடைபெறும் விவிலிய மொழியாக்கங்கள் இந்திய இறையியலைச் செறிவுட்டுகின்றன. இந்திய இறையியல் சொற்கள் விவிலிய மொழிபெயர்ப்புக்குத் துணைபுரிகின்றன.

[54] *Gace, A Comparative Study of the Doctrine in Christianity and Hinduism*, p. 1964.

13. முடிவுரை

இந்திய இறையியலில், விவிலியக் கோட்பாட்டைக் குறித்து நாம் காண்கின்ற புதிய கருத்துக்கள் எவை?

முதலாவதாக, விவிலியத்தை சுருதி என மதிப்பதைக் கூறலாம். சுருதிக்கு திருமறை, வெளிப்பாடு என இரு பொருள்கள் உண்டு. சுருதி கேட்டல் என்னும் வேர்ச்சொல்லினின்று தோன்றியது. எனவே கருத்துச் செறிந்த முறையில் இச் சொல்லைக் கிறிஸ்தவர்கள் பயன்படுத்தலாம். இந்திய சமய மரபிலே-கிறிஸ்தவமும் உள்ளடங்க-பார்வைமூலம் வெளிப் படுத்தல் பெறுவதற்குச் சிறப்பிடம் உண்டு (Revelare - மறைவு நீக்கல்) உயிரோடெழுந்த இயேசு கிறிஸ்துவின் காட்சியை சாது சுந்தர்சிங் பெற்றார். எனினும் கிறிஸ்தவ வெளிப்படுத்தல் சாதாரணமாக கேட்பதின் மூலமே, விவிலியத்தை கேட்பதன் மூலமே அளிக்கப்படுகின்றது. ஆவியர் பேசுவதை விவிலிய ஆசிரியர்கள் கேட்டு எழுதினர். இந்து சமய ரிஷிகளும் சுருதியைக் கேட்டுப் பின்னர் எழுதினர். பார்வையை மட்டும் குறிக்கும் வெளிப்படுத்தல் எனும் சொல்லைக்காட்டிலும் சுருதி எனும் சொல் தகுந்தது எனக் கூறலாம்.

இரண்டாவதாக, அப்பாசாமியின் அறிவுமூலம்(பிரமாணம்) எனும் இந்து சமயக் கருத்தைக் கூறலாம். கிறிஸ்தவப் பற்றுறுதியை இந்துக்களுக்கு எடுத்துரைக்க இது அதிகம் பயன்படும். அப்பாசாமி ஒத்துக்கொள்ளும் சுருதி, அனுபவம், பகுத்தறிவு (அனுமானம்), சபை, (திருச்சபையும் சித்தாந்தங்களும்) எனும் நான்கு பிரமாணங்கள் சித்தாந்தங்களைச் சோதிப்பதற்கு ஏற்ற அளவுகோலாகும். ஒரு சித்தாந்தத்தை அல்லது சமயக் கோட்பாட்டினை ஆய்ந்து பார்க்கும்போது பின்வரும் வினாக்கள் எழும்புகின்றன:

1. விவிலியம் (சுருதி) கூறுவது என்ன?
2. கிறிஸ்துவைப்பற்றிய எனது சொந்த அனுபவம் கூறுவது என்ன?
3. சென்ற காலத்து இறையியல் வல்லுநர் கூறியது என்ன?
4. திருச்சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதனை எது?

இவ்வித வினாக்களைக் கொண்டு சோதிக்கும்போது, விவிலியத்துக்கு இசையாத கற்பனை சார்ந்த இறையியலை எளிதில் கண்டுபிடித்துவிடலாம். சில கொள்கைகளில் மாறுபட்டிருப்பினும் சக்கரையும் அப்பாசாமியும் விவிலி யத்துக்கு முதலிடம் கொடுப்பதில் ஒரே கருத்தினைக் கொண்டிருக்கின்றனர். இந்திய மரபுப்படி விவிலியம்தான் நம்பிக்கைக்கு ஒரே உறுதியான அதிகாரம், வழுவற்ற முடிவான திருச்சட்டம் என்று கூறுகின்றனர்.

மூன்றாவதாக ப.ஏ.க்குக் கொடுக்கும் சிறப்பினையும் இந்து மறைநூல்கள் பக்தி நூல்களாகப் பயன்படுத்துவதையும் நாம் குறிப்பிடலாம். செஞ்சையாவின் மார்சியக் கொள்கையைப் பலரும் அறிவர். ஆனால் இந்தியக் கிறிஸ்தவ இறையியலில் இப் போக்கினை நாம் அதிகமாகப் பார்க்கமுடியாது. பல அறிஞர்கள், இதைப் பொறுத்தமட்டில் தங்கள் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். போர் வெறி கொண்டு, வஞ்சம் தீர்க்கும் யாவேயைக் குறித்துக் கூறும் ப.ஏ. மனுடாவதாரத்தைப்பற்றி எந்த முன்னடையாளத்தையும் கூறவில்லை; இந்தியக் கிறிஸ்தவர்களுக்குத் தேவையுமற்றது; அவர்களுடைய சாஸ்திரங்களே நற்செய்திக்கு ஆயத்தமாக விளங்குகின்றன. இது செஞ்சையாவின் கருத்து. மார்சியனைப் போல ப.ஏ.இலும் தமது கருத்துக்களுக்கு ஒவ்வாத பகுதிகளை அவர் நீக்கமுற்பட்டார். இந்து சமய இறைவாக்குகளிலிருந்தும் பக்தி நூல்களிலிருந்தும் ஒரு ப.ஏ. ஐ உருவாக்க முடியும் என அவர் நம்பினார். செஞ்சையாவின் இக்கருத்தினை இந்தியத் திருச்சபை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, சமூகநீதி, உலக ஒழுங்கு போன்றவற்றில் ப.ஏ. இன் தனிச்சிறப்பை சக்கரை உணர்ந்திருந்தார். எனினும் பொதுவாகக் கூறுமிடத்து, ப.ஏ. க்குப் போதுமான சிறப்பை இந்திய இறையியல் அறிஞர் அளிக்க முன்வரவில்லை என்றே கூற வேண்டும். இப்போக்கு சரிப்படுத்தப்பட வேண்டும். ப.ஏ. ஐப் புரிந்து கொள்ள ப.ஏ. இன்றியமையாததாகும். மேலும் இந்தியாவில் படைப்பு, கடவுளின் ஆள்தன்மை, மனிதரின் ஆள்தன்மை, நீதி, வரலாற்றின் பொருளும் நோக்கமும் போன்றவற்றைக் குறித்துப் ப.ஏ. இன் போதனையைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

செஞ்சையாவின் இந்து சமய ப.ஏ. ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதன்று. ஆனால், இந்து சமய மறைநூல்களிலிருந்து சிறப்பாக உபநிடதம், பக்தி நூல்கள் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் தனிப்பொதுத் தியானத்திற்கு மிகப் பயனுடையன எனப் பலர் உணர்கின்றனர். அப்பாசாமி, உமின்சிலோ, கிங்பஸ்ரி, பிலிப்ஸ், நிக்கல் மேக்னிக்கல் என்பாரின் தொகுப்புகள் இப்போக்கிற்கு நல்ல எடுத்துக்காட்டுகள். அத்தேனேயில் நற்செய்தியைக் கூறியபோது அராத்து, எபிமெனிடஸ் போன்ற பக்தரின் அறிவு எப்படி பவுலுக்கு உதவியாயிருந்ததோ, அதேபோன்று இந்து மறைநூல்களை அறிந்திருத்தல் கிறிஸ்தவச் செய்தியை இந்தியாவில் கூறுவோருக்குத் துணைபுரியும். இந்து மறைநூல்கள் கிறிஸ்தவர்களின் சுருதி ஆகா, ஆனால் தியானத்திற்கு உறுதுணையாகின்றன. மாணிக்கங்கள் வெட்டி எடுக்கப்படும் சுரங்கங்கள் அவை எனலாம். தோண்டி எடுக்கப்பட்ட கற்கள் புதுச் சூழ்நிலையில் அதிகமாக ஒளிரும்; நிரந்தரமான புதிய சிறப்புப்பெறும். இப்பாடல்களில் காண்கின்ற பக்திச் செறிவும் இறைப்பற்றும் இந்தியத் திருச்சபையின் இசையிலும் பக்தியிலும் இடம் பெறலாம்.

இந்தியத் திருச்சபையில் நன்முறையான விவிலிய விளக்கம் வேண்டும் என்பதையும் இறுதியாகக் கூற வேண்டும். ஓரிகன், அகுஸ்தீன், கால்வின், வெஸ்லி, பார்த் என்போரின் காலத்தில் ஆழ்ந்த, உண்மையான, திண்மையான விவிலிய ஆய்வு, அக் காலங்களில் தோன்றிய திருச்சபை இயக்கங்களுக்குக் காரணமாக அமைந்தன. இந்தியத் திருச்சபையில் விவிலியத்தை மக்கள் பயபக்தியுடன் படிக்கின்றனர். பாமரக் கிறிஸ்தவர் களுக்கும் ஆழமான விவிலிய அறிவு உண்டு, தெளிவான விவி லிய அருளுரைகளைக் குருமார் ஆற்றுகின்றனர். சிறந்த முறையில் மொழியாக்கங்கள் செய்யப்படுகின்றன. எனினும் தேர்ந்த முறையில் எழுதப்பட்ட விவிலிய விளக்க நூல்கள் குறைவு, விளக்க அருளுரைகளும் குறைவு. நற்செய்தி அருளுரைகள் என்று நாம் அடிக்கடி கேட்பவை பக்தி உணர்ச்சி ததும்பியவையேயன்றி விவிலியம் சார்ந்தவை அல்ல.

இந்திய விளக்கம் என்ற பெயரில் மூல வசனத்தின் பொருள் யாது என்று பெருமுயற்சியெடுத்துப் புரிந்து கொள்ளாமல் இக்காலத்தில் கடவுள் பேசுவது யாது என்பதையும் உய்த்துணராமல், பரானந்தரைப்போல் கொடுக்கப்படும் விளக்க உரைகள் இன்றைய தேவையைப் பூர்த்தி செய்யா. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் கார்ல் பார்த் ரோமருக்கு உயிர் நிறைந்த மெய்யான ஒரு செய்தியை வழங்கினார். ஆழ்ந்த விவிலிய விளக்க முறையைப் பின்பற்றி அச் சூழ்நிலையில்

வாழ்ந்த மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் விவிலியத்தின் செய்தியை அவர் எடுத்துக்கூறினார். அவ்வாறே பிறர் எடுத்துக் கூறவும் தூண்டினார். இன்றைய இந்திய இறையியல் மாணவர்கள் இரு திசைகளில் இழுக்கப்படுகிறார்கள். ஒரு பக்கத்தில் மிகத் தீவிரமான விவிலிய ஆய்வு முறைமை; மறு பக்கத்தில் அதேபோன்று தீவிரமான எழுத்தின்படி விளக்கும் முறைமை. நவீனவாதிகள் (modernists). அடிப்படை வாதிகள் (fundamentalists) எனும் இரு குழுக்கள் உருவாகும் விரும்பக்கூடாத சூழ்நிலையைக் காண்கிறோம். இந்தியத் திருச்சபையின் தேவைகளை இந்நிலைமை பூர்த்தி செய்யாது. மூல வசனங்களைப் படித்துப் புரிந்து கொண்டு இந்தியப் பண்பாட்டின் பின்னணியில், காலப்போக்கினை மனத்தில் கொண்டு, விளக்கும் அமைதியான நடுநிலைமையான புதிய விவிலிய ஆய்வு முறைமை உருவாக வேண்டும்.

இது மிக அவசியம். சூழ்நிலையை நன்குணர்ந்த நுட்பமான விவிலிய விளக்கமிருந்தால் மட்டுமே இறையியல் வளர முடியும். சரியாகப் புரிந்துகொள்ள அதற்குரிய உபநிடதங்களையும் பாஷ்யங்களையும் புரிந்துகொள்வது அவசியம். கிரேக்கத்தையும் எபிரெயத்தையும் நன்கு கற்றவர்களும் இந்தியப் பண்பாட்டினை நன்கு அறிந்தவர்களுமான இந்திய அறிஞர்கள் இப்பணியைச் செய்தாலன்றி இத்துறையில் முன்னேற்றம் காணமுடியாது.

இந்திய முறையில் விளக்கம் கொடுப்பதற்கான விதிகள் எவை? கோரே கூறியதுபோல வரலாறு சார்ந்து வசனத்தின் நேரடியான பொருளைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அத்துடன், சக்கரை தெளிவுறுத்தியதுபோல, சுந்தர்சிங் செய்துகாட்டியதுபோல, ஆன்மிக, பக்திசார்ந்த விளக்கமும் இடம்பெறவேண்டும். பிற சமயத்தினருக்கு எடுத்துக் கூறுகையில் ஒப்புமை மொழிநடையில் விளக்கம் கொடுத்தால் மேனாட்டு உயிரற்ற உரைநடையைத் தவிர்த்து அது மிகுந்த பயனளிக்கும். இந்து சமயத்துடன் நிகழ்த்தும் உரையாடல் சூழ்நிலையாக இருக்கலாம்; இந்து பண்பாட்டின் நடுவில் வளர்ந்து வரும் இளந் திருச்சபையின் சூழ்நிலையாக இருக்கலாம்; நவீன இந்தியாவில் எழும்பிவரும் சமயச் சார்பற்ற சூழ்நிலையாக இருக்கலாம்; எதுவாக இருப்பினும், இந்திய விவிலிய விளக்க முறைமை குறிப்பிட்ட ஒரு சிறப்பான சூழ்நிலையிலிருந்து எழும்பவேண்டும். தூய யோவானின் விளக்க நூல்களில் சிறந்த நூல் இந்தியாவிலிருந்து தோன்றவேண்டும் எனப் பேராயர் வெஸ்ட்காட் விரும்பினார். பேராயர் அப்பாசாமி அந்த ஆசையை நிறைவேற்றினார். பார்த் எழுதியது போன்ற உரோமர் விளக்க நூல் ஒன்று இந்தியாவில் தோன்ற காலம் நெருங்கிவிட்டது என நாம் எதிர்பார்க்கலாம்.

துணை நின்ற நூல்கள்

1. Andrews, C.F., *The Renaissance in India,* London, 1912.
2. Streeter, B.H. and Appasamy, A.J., *The Sadhu*, London, 1921.
3. Heiler,F., *Gospel of Sundar Singh,* London, 1927.
4. Chakkarai,V., *Jesus the Avatar*, Madras, 1932.
5. Chakkarai,V., *The Cross and Indian Thought*, Madras 1932.
6. Baago,K., *Pioneers of Indigenous Christianity,* CISRS, 1967.
7. Thomas,M.M., *The Acknowledged Christ of the Indian Renaissance*, Madras, 1970.
8. R. Boyd, *Indian Christian Theology,* CLS, 1980.
9. R.S. Sugirtharaja (ed.), *Voices from the Margin*, SPCK, 1990.
10. R.S. Sugirtharaja (ed.), *Asian Biblical Interpretation*, 1991.
11. *Indian Journal of Theology,* (Special issue on Biblical Hermeneutics), Vol.3, 1982.

13

இஸ்ரயேலின் வரலாறு

ஞான இராபின்சன்

1. இஸ்ரயேலர் தோற்றம்-மூதாதையரின் மரபு

இஸ்ரயேலின் தோற்றத்தைப்பற்றிய வரலாறு தெளிவாக இல்லை. எப்படியும் இவர்கள் திடீரென்று தோன்றியவர்கள் என்பதற்கில்லை. உண்மை வரலாற்றரங்கில் நாம் இவர்களை மோசேயின் காலத்தில்தான் சந்திக்கிறோம். என்றாலும். இவர்கள் மோசேயின் காலத்திற்கு முன்பே ஓர் இனமாக வாழ்ந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. மோசேயின் காலத்திற்கு முன் இவர்கள் எங்கு வாழ்ந்தார்கள்? எப்படி வாழ்ந்தார்கள்?

இக் கேள்விகளுக்கு விடையாக விவிலியம் மூதாதையர் வரலாற்றைத் தருகின்றது. தொிந்துகொள்ளப்பட்ட ஆபிரகாம். ஈசாக்கு. யாக்கோபு ஆகிய மூதாதைகளின் வழிமரபாக **இஸ்ரயேல்** என்கிறது அது. விவிலியம் தரும் இந்த வரலாற்றை நாம் எந்த அடிப்படையில் புரிந்துகொள்வது?

இன்று நாம் **வரலாறு** என்று குறிப்பிடும் அடிப்படையில். மூதாதையர் வரலாறு உண்மையான வரலாறன்று. ஏனெனில். இது வரலாற்றடிப்படையில் எழுதப்பட்டதன்று. வரலாற்று முறையில் மெய்ப்பிக்கப்படக்கூடியதுமன்று. மாறாக. உண்மையான வரலாற்று அடிப்படையில் உருவாகி. பல காலம். வாய்மொழி மரபாக வழக்கிலிருந்து. அந்நிலையில் கூட்டவும் குறைக்கவும் மாற்றவும்பட்டுப் பிந்தியதொரு காலத்தில் பலர் கைப்பட எழுதப்பட்ட குல மரபு வரலாறே இது எனலாம். ஆனால். இதற்குப் பின்னால் மறைந்திருக்கும் உண்மையான வரலாற்றுப் பின்னணி இன்னதென்பது தான் தொியவில்லை.

ஆபிரகாம் என்ற சொல்லுக்குப் பெரிய இனத்தின் **தந்தை** என்பது பொருள். அப்படியே யாக்கோபும் இஸ்ரயேலின் தந்தை என்பது நம்பிக்கை. ஆதலால். இவர்களைப் பற்றிய வரலாறு தனித் தனிக் குலங்களின் வரலாறா அல்லது ஒரே குலத்தின் வரலாற்றைக் குறித்து வழக்கிலிருந்துவந்த வெவ்வேறு மரபுகளா என்பதும் கேள்வி.

இன்றும் சிற்றூர்களில் சென்று அங்குள்ள முதியோர்களைக் கேட்டால். அன்னார் தங்கள் முன்னோர்களைப் பற்றிய வரலாறுகள் பலவற்றை ஆர்வத்துடன் சொல்லக் கேட்கலாம். இவற்றில் சில ஒன்றிற்கொன்று முரண்பாடுடையனவாகவும் இருக்கலாம். ஆயினும். இவற்றிற்குப் பின்னால் அந்தச் சிற்றூர் மக்களுடைய முன்னோர்களைக் குறித்த உண்மைகள் புதைந்து கிடக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே விதமாக. இங்கும் இஸ்ரயேலின் முன்னோரைக் குறித்த பல உண்மைகள் மறைந்து கிடக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. இதனைத் தொல்பொருள் ஆராய்ச்சியும் உறுதி செய்துள்ளது.

இஸ்ரயேலின் முன்னோர் நாடோடி மக்கள். **என் தந்தை சிரியா நாட்டைச் சேர்ந்தவர், அலைந்து திரிந்தவர்** என்பது அன்னார் பற்றுறுதி அறிக்கையின் ஒரு கூறுபாடு (இணை. 26:5).இவ்வாறாக, மூதாதையர் அலைந்து திரிந்தவர்களென்றும். அன்னார் பழங்காலத்தில் சிரியாவுடன் தொடர்புடைய வர்களென்றும் காணலாம் (தொட. 25:20; 28:5; 31:20,24). இவர்கள் பாலஸ்தீனாவுக்குள் வந்த பின்னும் சிரியா நாட்டிலுள்ள பதான் அராமுடன் (Paddan Aram) நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் என்று காண்கிறோம் (24:10; 25:20). பதான் அராம் மெசப்பொத்தாமியாவில் (24:10) ஐப்பிராத்துக்கும் தைகிரிசுக்கும் இடையிலுள்ளதோர் இடம். இங்குள்ள முக்கிய நகரம் **காரான்** (Haran 11:31; 28:10). மூதாதையருக்கு இந் நகரத்துடன் உள்ள தொடர்பைத் தொல்பொருள் ஆய்வு உறுதிப்படுத்தியுள்ளது. மூதாதையர் வரலாற்றுடன் தொடர்புள்ள பல பெயர்கள் இந்தப் பகுதியிலுள்ள இடங்களின் பெயர்கள் என்பதாகக் காணலாம். ஆபிரகாமுடைய சகோதரர்களில் ஒருவரது பெயர் ஆரான் என்று காண்கிறோம். இதுவும் காரான் என்பதும் ஒன்றே. முதல் எழுத்து மட்டுமே வேறுபட்டது. இன்னொரு சகோதரர் பெயர் நாகோர் (24:10). இப்பெயருள்ள நகர் கி.மு.13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மாரி ஏடுகளில் வருகிறது. ஆபிரகாமின் தந்தை தேராகின் பெயர் **தில் துராகி** (Til Turakhi) என்னும் ஒரு நகரத்தின் பெயரில் இடம் பெறுகின்றது. இப்படியே. பேலேகு (Peleg 11:18). செருகு (11:20) என்ற பெயர்கள் பேலிகா, சரூகி என்னும் இடப் பெயர்களில் காணக் கிடக்கின்றன.

மேலும். ஆபிரகாம் **ஊர்** என்னும் கல்தேயர் நகரத்தை விட்டுப் புறப்பட்டு வந்ததாகக் காணலாம் (11:31). இதுவும் தொல்பொருள் ஆராய்ச்சியால் உறுதி செய்யபட்டுள்ளது. இதன்படி. கி.மு. 2000ஐ அடுத்த காலத்தில் அரேபிய பாலைநிலப் பகுதிகளில் வாழந்து வந்த செமித்திய நாடோடி மக்கள். மூன்று நான்கு கூட்டங்களாக. வெவ்வேறு காலங்களில். மேய்ச்சல்தேடி வளம்பிறை என்று அறியப்படும் நிலப்பகுதிகள் வழியாக. வடமேற்கு நிலப்பகுதிகளுக்குச் சென்றதாக தெரிகிறது. இவர்களில் ஒரு கூட்டத்தார். வட சிரியா. மெசப்பொத்தாமியா நிலப்பகுதிகளில் குடியேறினர். இவர்கள் **அமோரியர்** (Amorites) அல்லது **எமோரியர்** என்று அறியப்பட்டனர். இவர்களே

கானானியருக்கு முன்னோர். இக் கூட்டத்தார் கி.மு. 1700 ஆம் ஆண்டளவில் பாபிலோன் முழுவதையும் ஆண்டதாக அறியப்படுகிறது. இக்காலத்திலேயே கம்மூரபி ஆட்சி செய்தார். மாரி, காரான், நாகோர், யுகாரிட் ஆகிய இடங்கள் இக்காலத்தைச் சார்ந்தவைகளாகும்.

இதற்குச் சற்று பிந்திய காலத்தில், அரேபிய பாலைநிலப் பகுதிகளிலிருந்து வடமேற்கு நோக்கிச் சென்ற இன்னொரு செமித்தியக் கூட்டத்தாரே இஸ்ரயேலருக்கு முன்னோடிகள் என்பது கருத்து. பல காலம் இம் மக்கள் நிலையான இருப்பிட மில்லாமல் அலைந்து திரிகிறவர்களாகக் காணப்பட்டனர்.

இவர்கள் அமோரியரிடையில் சில காலம் வாழ்ந்திருக் கின்றனர். ஆபிரகாம் என்னும் பெயர் அபாம்ராம் (Abamram) என்றும், யாக்கோபு என்னும் பெயர் யாக்கபெல் (Jacobel) என்றும் இம் மக்களிடையில் வழக்கிலிருந்ததாக அறிகிறோம்.

மாரியில் கபீரு (Hapiru) என்னும் ஒரு கூட்டத்தார் வாழ்ந்து வந்ததாக அறிகிறோம். 14:13 இல் ஆபிரகாம் எபிரேயர் என்று குறிப்பிடப்படுவதாகக் காணலாம். மேலும், ப.ஏ.இல் மூதாதையர் காலத்திலும், எகிப்தில் வாழ்ந்திருந்த காலத்திலுமே இஸ்ரயேலருக்கு எபிரேயர் என்ற பெயர் அதிகமாக வழங்கப்பட்டு வருகிறது. இச் சொல் இஸ்ரயேலரின் முன்னோர் நாடோடிகளாக அலைந்து திரிந்ததைக் குறிப்பிடும் ஒரு சொல். இதுவும் மூதாதையர் அலைந்து திரியும் நாடோடிக் கூட்டங்களிலிருந்து வந்தவர்கள் என்பதை வலியுறுத்தும்.

மேலும், நினிவே நகருக்குத் தென் கிழக்கான நூசி (Nuzi) என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள ஏடுகள், மூதாதையர் காலத்திலிருந்து வந்த வாழ்க்கை வழக்குச் சட்டங்களை (Customary laws) ஒத்த சட்டங்களைத் தருகின்றன. 15:2மு. இல் ஆபிரகாமின் குடும்பத்திற்கு வெளியேயுள்ள தமஸ்கு ஊராராகிய எலியேசர் ஆபிரகாமின் உரிமைப்பேறு பெற்றவர் என்பதாகக் காண்கிறோம். இதனையொத்த வழக்கத்தை நூசி ஏடுகளும் குறிப்பிடுகின்றன. இந்த ஏடுகள் கி.மு. இருபதாம் நூற்றாண்டை அடுத்து எழுந்தனவாகும். குழந்தைகள் இல்லாத ஒருவர் இன்னொருவரை மகனாக ஏற்றெடுக்கலாம். இந்த ஏற்பு மகன் அந்தப் பெற்றோருக்கு உணவும் உடையும் கொடுத்து, சாகுமட்டும் அவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும். அதற்கு ஈடாக அவர்களுடைய சொத்துக்கு இவர் உரிமையாளராவார். இவர் உயிருடன் வாழுவே, அந்தத் தம்பதிகளுக்குச் சொந்தமான மகன் பிறந்தால், இந்தச் சொத்து இருவருக்குமே உரியதாகிறது. ஆனால் வீட்டுத் தெய்வங்கள் சொந்த மகனுக்கு உரிமையாகும். மகவேற்பைக் குறித்த நூசியின் ஏடொன்று இதனை விளக்குகிறது. ஆபிரகாமின் வரலாற்றில் சாரா இஸ்மவேலை வெளியாக் குவதின் நோக்கம் இதனால் விளங்கும். சாரா, இந்த அடிமைப் பெண்ணின் மகன் என் மகனாகிய ஈசாக்கோடு உரிமைப் பேறு பெற்றவன் இல்லை என்று கூறுகிறதற்குப் பின்னால் மறைந்து கிடக்கும் வாழ்க்கை வழக்குச் சட்டம் இதுவே (21:10).

ஏசா தனது தலைமகன் உரிமையை விற்பதையொத்த (25:30-34) நிகழ்ச்சியும் இவ்வேடுகளில் காணக்கிடக்கின்றது. யாக்கோபு சதியினால் பெற்றுக்கொண்ட ஆசியின் பயனை ஈசாக்கினால் அழிக்க முடியவில்லை என்று அறிகிறோம் (27:33). மாரி, நூசி ஏடுகளிலும் ஆசியைப் பற்றிய இத் தகைய எண்ணங்கள் காணப்படுகின்றன. ஒருவருடைய ஆசி சட்டத்தைப்போல், நீதி விசாரணையின்போதும் எடுத்துக் கூறப்பட்டதாக இங்குக் காணலாம்.

மேலும், ப.ஏ. மரபுக் கதைகளில் பலவும்-படைப்பு வெள்ளப்பெருக்கு, பாபேல்-எகிப்து, கானான் ஆகிய அண்டைய நாடுகளைச் சார்ந்து காணப்படாது, பாபிலோனிய நிலப் பகுதிகளைச் சார்ந்து காணப்படுவதும், மூதாதையரின் தோற்றம் மெசப்பொத்தாமியா பகுதிகளை சேர்ந்ததாக இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்துவதாகும். பாபேல் கோபுர வரலாறு பாபிலோனில் சிக்குரத் (Ziggurat) கட்டடங்கள் அதிக வழக்கிலிருந்த காலத்தில் (கி.மு. 1800-1600) எழுந்ததாக இருக்க வேண்டும். மேலும், விவிலியம் தரும் வெள்ளப்பெருக்கு வரலாற்றை ஒத்த பாபிலோனிய வரலாறு கி.மு. 3000 ஆம் ஆண்டளவிலேயே வழக்கிலிருந்ததாக அறியலாம். இந்த மரபுகள் மூதாதையர் காலத்திலிருந்தே இஸ்ரயேலரிடையே அறியப்பட்டுள்ளன எனலாம்.

பாலஸ்தீனாவில் ஆபிரகாம் மம்ரேயை அடுத்தும் (13:18), ஈசாக்கு பெயர்செபாவிலும் (26:23; 28:10), யாக்கோபு பெத்தேல் செக்கேம், யோதான் (33:18; 35:1; 37:17) ஆகிய இடங்களிலும் கூடுதலாக அலைந்துதிரிந்ததாக அறிகிறோம். தொல் பொருள் ஆய்வு இந்த இடங்களில் கி.மு. 2000-1700ஐ ஒட்டி மக்கள் வாழ்ந்ததாகக் கூறி விவிலிய வரலாற்றை உறுதி செய்துள்ளது.

இப்படியாக, விவிலியம் தரும் அடிப்படைகளிலிருந்தும், தொல்பொருள் ஆய்வின் சான்றுகளிலிருந்தும், கி.மு. 2000க்கும் 1500க்குமிடையில், இஸ்ரயேல் மக்களின் முன்னோர் நாடோடிகளாக மெசப்பொத்தாமியா நிலப்பகுதிகளிலிருந்து புறப்பட்டு, பாலஸ்தீனாவில் வந்து குடியேறினர் என்று அறிகிறோம். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்னும் பெயரையுடைய தலைவர்கள் இவர்களிடையில் எழுந்திருக்கலாம். இப்பெயர்களைச் சுற்றி, இம் மக்களின் முற்கால மரபுகள் யாவும் தரப்பட்டன என்பதே எமது முடிவு.

அதைத் தொடர்ந்து யாக்கோபும் அவர்தம் பிள்ளைகளும் பஞ்சம் முன்னிட்டு எகிப்தில் சென்று வாழ்ந்ததாக விவிலியம் கூறுகிறது. பாலஸ்தீனாவிலிருந்த இஸ்ரயேல் குலங்கள் எல்லாமே எகிப்திற்குச் சென்றனவா, அல்லது ஒரு சில குலங்கள்தான் சென்றனவா என்பது கேள்வி. பல அறிஞரும் சில குலங்கள் பாலஸ்தீனாவிலேயே இருந்து வந்திருக்க வேண்டும் என்று கருதுவர். அமென்சோதபு என்னும் அரசன் காலத்திலும் (கி.மு. 1413-1377), அகனட்டான் காலத்திலும் (1377-1360), கானானிய சிற்றரசர்கள் கப்பீரு என்னும் ஓர் இனத்தார் தங்களுக்குத் தொல்லை கொடுப்பதாக எகிப்திய பார்வோன்களுக்கு எழுதின கடிதங்கள் கிடைத்துள்ளன. இங்கு கப்பீரு என்பதற்கும், விவிலியத்தில் எபிரேயர் என்பதற்கும் தொடர்பிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. இந்த அடிப்படையில், கி.மு. 14 ஆம் நூற்றாண்டுக்கு முன்னமே எபிரேய குலங்களில் சில கானானில் புகுந்திருக்க வேண்டும் என்று எண்ண இடமுண்டு. இது மூதாதையர் மரபுக்கு பின்னால் காணப்படும் உண்மை வரலாற்றுப் பின்னணி எனலாம்.

2. வரலாற்றரங்கில் இஸ்ரயேலர் - மோசே

(அ) எகிப்தில் இஸ்ரயேலர்

யாக்கோபு (இஸ்ரயேல்) பஞ்சம் முன்னிட்டு வாழ்வுதேடி

தம் குடும்பத்துடன் எகிப்திற்குச் சென்றார். அங்கு, அப்பொழுது வாழ்ந்த பார்வோனின் ஆதரவுடன் அவரின் குடும்பம் பலுகிப் பெருகிற்று. பின்னால், யோசேப்பை அறியாத பார்வோன் ஒருவன் தோன்றி, இந்த எபிரேயர்கள் (அன்னியர்கள்) பலுகிப் பெருகுவதைக் கண்டு அஞ்சி அன்னார் வளர்ச்சியைத் தடைசெய்யத் திட்டமிட்டான். முக்கியமாக, அவர்களை அடிமை வேலை செய்யப் பண்ணிக் கொடுமைப்படுத்தினான். இஸ்ரயேலின் அபயக்குரல் கடவுள் சமுகத்தை எட்டிற்று. அவர் இலேவி குலத்திலிருந்து மோசே என்ற ஒருவரை எழுப்பி, தம்மை அவருக்கு வெளிப்படுத்தி, அவர் வழியாக இஸ்ரயேல் மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி, அவர் தலைமையில் அன்னாரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, செங்கடலை விந்தையாகக் கடக்கச் செய்து, நாற்பது ஆண்டுகள் பாலை நிலத்தில் நடத்தி, சீனாய் மலையில் அன்னாருடன் உடன்படிக்கை செய்து, ஒரு மக்களினமாக அவர்கள் வாழ்வதற்குரிய திருச்சட்டத்தைத் தந்து, கானான் மட்டும் வந்து சேரச் செய்தார். இது இஸ்ரயேல் மக்களின் மாறாத சமய நம்பிக்கை.

இந்த நம்பிக்கை விவிலியத்தில் முன்னும் பின்னும் எடுத்தாளப்படும் வகையிலிருந்து இது அன்னாருக்கு எவ்வளவு முக்கியமாகக் காணப்பட்டதென்பது தெரிய வரும் (15:13,14; விடு. 20:2; இணை. 26:5; திருப். 114:1,2). இஸ்ரயேலருக்கு இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இவ் வரலாறு எகிப்தியருக்கு அற்பமாகக் காணப்பட்டதுபோலும், ப.ஏ. இல் இதைக் குறித்து இவ்வளவெல்லாம் சொல்லப்பட்டபோதிலும் எகிப்திய ஏடுகள் இதைக் குறித்து எதுவும் குறிப்பிடாதிருத்தல் வியப்புக்குரியது.

இஸ்ரயேலர் எகிப்தில் இருந்தனரென்பதும், மோசேயின் தலைமையில் அங்கிருந்து புறப்பட்டு வந்தனரென்பதும் வரலாற்று உண்மைகள் என்பதில் சந்தேகமில்லை. ஓர் இனம் தான் அடிமையாக இருந்ததைக் குறிப்பிடும் இழிவான ஒரு வரலாற்றைப் பொய்யாகப் புனைந்திருக்க முடியாது. வேறு யாராவது அப்படிப் புனைந்திருந்தாலும் அதனை போற்றிப் பேணியிருக்கவும் முடியாது. இந்த அடிமைத்தன வரலாறு தங்களால் மறுக்கவும், மறக்கவும் இயலாத அளவிற்கு முக்கியத்துவம் உடையதாகக் காணப்பட்டதாலேயே அன்னார் அதனைப் பேணிக்காத்தனர்.

மேலும், ப.ஏ. இல் காணப்படும் பல எகிப்தியப் பெயர்களும் இதற்குச் சான்றளிக்கின்றன. முதற்கண், மோசே என்பதே ஓர் எகிப்தியப் பெயர். இந்த அடிச்சொல் துத்மோசே (Thutmose). இராம்சேசு (Rameses) என்னும் எகிப்தியப் பெயர்களில் வருவதாகக் காணலாம். இது தவிர, பினகாசு, ஒப்னி, பஸ்கூர் (Pashhur), மெராரி ஆகிய எகிப்தியப் பெயர்கள் இலேவியின் குலப் பட்டியலில் காணப்படுகின்றன. இதனால் எகிப்திற்குச் சென்ற குலம் இலேவி குலமாக இருக்கக் கூடுமென்று கருதுகிறார் T.J. மீக் பண்டிதர்.

மேலும், எகிப்தைக் குறித்துத் தரப்பட்ட விவரங்கள் யாவும் இயல்பாகக் காணப்படுகின்றன. எகிப்தை நேரடியாக அறிந்தவர்களே அவற்றைக் கூறியிருக்க வேண்டும். யோசேப்புக்கு போர்த்திபார் அளித்த பதவி (தொட. 39:5), பானப்பாத்திரக்காரரின் தலைவன், உணவுபரிமாற்றத் தலைவன் ஆகிய பதவிகள் (40:2) யாவும் எகிப்திய நாட்டில் அறியப் பட்டனவாகும். விவிலியத்தில் கூறப்படுவதைப்போல, பார்வோனின் பிறந்தநாள்களைக் கொண்டாடுவதும், அந் நாளில் குற்றவாளிகளுக்கு விடுதலையளிப்பதும் எகிப்திய வழக்கம் (40:20மு.). எகிப்திலே மந்திரவாதிகள் ஏராளம் உண்டு என்பதும் உலகறிந்த உண்மை (41:8). யோசேப்பு வாழ்ந்த காலம் 110 ஆண்டுகள் (50:22) என்று அறிகிறோம். எகிப்தியரிடையில் இக்காலம் ஆசி பெற்ற ஒருவரின் ஆயுள் காலம் என்பதை எகிப்தியக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இறந்தவர்கள் உடலுக்குச் சுகந்தவர்க்கமிட்டுப் பாதுகாப்பதும் எகிப்தியப் பழக்கமே (50:2மு., 26). தவிர, பத்து வாதைகளைப்பற்றிய வரலாறும் அக்கால எகிப்தின் சுகாதார நிலைமையுடன் பொருந்துவதாகவுள்ளது (விடு. 7-12). எகிப்திலே இயற்கையின் வாயிலாக அடிக்கடி இவ்வாறு அழிவுகள் ஏற்படுவதுண்டு.

கி.மு. 1500க்கும் 1200க்குமிடையில் (வெண்கல யுகத்தின் பிற்பகுதி), இஸ்ரயேலர் எகிப்தில் வாழ்ந்தனர் என்பதற்குப் போதுமான சான்றுகள் இருக்கின்றன. எகிப்தின் எல்லை அதிகாரிகள் பஞ்ச காலத்தில் பாலஸ்தீனா, சீனாய்ப் பகுதிகளிலுள்ள மக்கள் கோசேன் பகுதிகளில் வந்து வாழ அனுமதி அளித்து வந்தனர் என்பதை இரண்டு எகிப்திய ஏடுகள் உறுதி செய்கின்றன (தொட. 46:28மு. காண்க). இந்த ஏடுகள் **கோசேன்** என்பதற்குப் பதிலாக **இராம்சேசின் நாடு** என்றும் (47:11). **சோவான் வெளி** என்றும் குறிப்பிடுகின்றன (திருப். 78:12). இப்பெயர்கள் நைல் முகத்துவாரத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள ஒரு நகரத்தைக் குறிக்கின்றன. எகிப்திய ஏடுகளில் இந்த இடம் அடிக்கடிக் குறிப்பிடப்படுகின்றது. இது இப்பொழுது வாடி துமிலாத் (Wadi Tumilat - துமிலாத்தின் வறண்ட காட்டாறு) எனப்படுகிறது. இது இப்பொழுதும் எகிப்தின் செழிப்பானதோர் இடம் (தொட. 47:11). எபிரேய மேய்ப்பர்கள் எகிப்தில் எங்கேயாவது தங்கியிருந்தனரென்றால், அது இந்த இடமாகத்தான் இருக்க வேண்டும். மேலும் கி.மு. 1350ஐச் சார்ந்த எகிப்திய எல்லைப் பாதுகாவலர் ஒருவர் இவ்வாறு எழுதுகிறார். பிழைக்க முடியாத சிலர் உம்முடைய அரசில் இருப்பிடம் கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்ய வந்திருக்கின்றனர். உமது மூதாதையர் காலத்திலும் துவக்க முதல் இப்படிப்பட்டவர்கள் வந்துகொண்டி ருக்கிறார்கள். இதுவும் எபிரேயர் எகிப்திற்குச் சென்றனர் என்பதற்குச் சான்று பகரக்கூடும்.

கிக்சாஸ் என்னும் ஓர் இனத்தார் கி.மு. 1700 ஐ அடுத்து எகிப்தில் புகுந்து ஏறத்தாழ 150 ஆண்டுகள் எகிப்தை ஆண்டதாக அறியப்படுகிறது. இவர்கள் ஆட்சிக் காலத்தில் எபிரேயர் எகிப்திற்குச் சென்றதாகக் கருதப்படுகிறது. இந்த அரசர்கள் பழைய தலைநகரான **தீப்ஸ்** (Thebes) நகரத்தை விட்டு, நீல நதி முகத்துவாரத்திலுள்ள அவாரிஸ் (Avaris) என்னும் நகரத்தைக் கட்டி அங்கிருந்து ஆட்சி புரிந்ததாக அறியப்படுகிறது. இந் நகரம் கி.மு. 1500க்குமுன் அவாரிஸ் என்றும், கி.மு. 1300-1100இல் **இராம்சேசின் நாடு** என்றும், கி.மு. 1100க்குப்பின் **இதானிஸ்** அல்லது **சோவான்** என்றும் அறியப்பட்டு வந்தது. இங்கு கிக்சாஸ் கோட்டைகள் பல தோண்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும், இந்நகரம் கிக்சாஸ் அரசரால் கட்டப்பட்டதை நினைவுகூரும் 400ஆம் ஆண்டு விழாவிற்காக இரண்டாம் இராம்சேயால் எழுப்பப் பட்டதோர் கல்வெட்டொன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக் கல்வெட்டு கி.மு. 1320-1300 ஐச் சார்ந்ததாகையால், இந்த நகரம் கி.மு. 1720-1700இல் கட்டப்பட்டிருக்க வேண்டுமெனலாம்.

எண். 13:22இல் எபிரோன் கட்டப்பட்டபோது எகிப்திலுள்ள சோவான் இருந்ததில்லை. அது ஏழு ஆண்டுகள் கழித்தே

கட்டப்பட்டது என்று காண்கிறோம். இதன் மூலம் சோவான் என்னும் நகர் கட்டப்பட்டபோது எபிரேயர் எகிப்தில் இருந்தார்கள் என்று அறியலாம். அதாவது, கிக்சாஸ் காலத்தில் எபிரேயர் எகிப்தில் இருந்தார்கள்.

எகிப்திலுள்ள கல்லறை ஒன்றில் ஒரு படம் காணப்படுகிறது. இது கி.மு. 1900ஐச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. இதில் எமோரியக் குடும்பம் ஒன்று எகிப்துக்குள் குடியேறப்போவதாக வடிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அணிந்துள்ள ஆடைகள் யாக்கோபு யோசேப்புக்குக் கொடுத்த ஆடைபோல காணப்படுகின்றன. இதுவும் இஸ்ரயேலர் எகிப்துக்குள் வந்து தங்கியதைக் காட்டக்கூடும்.

மேலும், விடு. 1:11இல் இஸ்ரயேல் அடிமைகள் பார்வோனுக்காக பித்தோம், இராம்சேசு என்னும் பண்டசாலை நகர்களைக் கட்டினார்கள் என்று காண்கிறோம். இதுவும் தொல்பொருள் ஆய்வினால் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந் நகர்கள் இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இராம்சேசு நகர் முதலாம் சேதி, இரண்டாம் இராம்சேசு ஆகியோர் தலைநகரென்றும், இது இராம்சின் வீடு என்று அழைக்கப் பட்டதென்றும், கி.மு. பதினொராம் நூற்றாண்டுக்குப்பின் தானிஸ்(Tanis) என்று அறியப்பட்டதென்றும் தெரியவருகிறது. கபீரு (Hapiru) என்னும் ஓர் இனத்தார் இரண்டாம் இராம்சேசுக்காகக் கற்களைச் சுமந்து கோவில்களைக் கட்டினர் என்று எகிப்திய ஏடுகள் குறிப்பிடுகின்றன. இந்தச் சான்றுகள் யாவும் இஸ்ரயேலர் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்தனர் என்பதை வலியுறுத்தும்.

(ஆ) மோசே

இஸ்ரயேலர் எகிப்திலிருந்த வரலாற்று உண்மையென்பது போலவே, எகிப்தில் அன்னாரை ஒன்று திரட்டி, அவர்களுக்கு விடுதலை வாங்கித் தந்து, அவர்களைப் பாலைநிலத்தில் வழிநடத்திவந்த மோசேயும் ஒரு வரலாற்று மனிதரென்பதும் வரலாற்று உண்மையாகும். ப.ஏ. இன் மிகப் பழைய மரபுகள் சில மோசேயின் பெயரைக் குறிப்பிடவில்லை (விடு. 15:21). ப.ஏ. இன் பற்றுறுதி அறிக்கைகளும் மோசேயின் பெயரைக் குறிப்பிடவில்லை (இணை. 26:5-9; 6:20- 24; யோசு. 24:2ஆ). பின்னால் எழுந்த நூல்களும் மோசேயின் பெயரை அவ்வளவாக எடுத்தாளவில்லை. இக் காரணங்களால் மோசே வரலாற்று நபராக இருக்க முடியாதெனச் சந்தேகிப்பர் சிலர். இஸ்ரயேலர் இறந்தோருக்கு முக்கியத்துவம் கொடாதிருத்தல் மோசேயைப் பற்றி அன்னார் பிற்காலத்தில் அதிகமாகக் குறிப்பிடாதிருப்பதற்குக் காரணமாக இருக்கலாம். பற்றுறுதி அறிக்கைகள் இப்பெயரைக் குறிப்பிட வில்லையென்பதும் மோசேயின் வரலாற்றுத் தன்மையை மறுக்கப்போதுமான காரணமன்று, ஏனெனில், அந்த அறிக்கைகள் வேறு எந்த பெயரையுமே குறிப்பிடவில்லை.

மரபு வரலாற்று ஆசிரியர்களும் மோசேயைக் குறித்த பிரச்சனையைக் கிளப்பியுள்ளனர். மோசேயைப் பற்றி எல்லா மரபு வரலாறுகளும் குறிப்பிடுவதால், மோசேயைப் பற்றிய மரபு பின்னால் சேர்க்கப்பட்டிருக்கவேண்டுமென்று கருதுகிறார் மார்டின் நோத் (Martin Noth) பண்டிதர். சீனாய் மரபில் மோசேயின் வரலாறு தோற்றத்தில் காணப்பட வில்லை. இது பின்னால் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பது இவர் கருத்து.

நோத்தின் இக்கூற்று ஒப்புக் கொள்ளக்கூடியதன்று. சீனாய் மலையில் வரலாற்று நிகழ்ச்சியொன்று நடந்தது உண்மையானால், அந் நிகழ்ச்சிக்குக் காரணமான வரலாற்று நபர் ஒருவர் காணப்பட்டிருக்கவேண்டும். தவிர, எல்லா மரபுகளும் மோசேயைக் குறிப்பிடுவது, மோசே தவிர்க்க இயலாத அளவிற்கு அவ்வளவு முக்கியமான வரலாற்று மனிதர் என்பதையே காட்டுகிறது. மோசே வரலாற்று மனிதர் அல்லர் என்போமானால், இஸ்ரயேலர் ஓர் இனமாக உருவானதை விளக்குவதற்கு நாம் இன்னொரு நபரைக் கண்டுபிடித்துத்தான் ஆகவேண்டும்.

மோசே வரலாற்று நபர் என்றதும், மோசேயைப்பற்றி ப. ஏ. கூறுவதெல்லாம் வரலாறென்று யாம் கூறத் துணியவில்லை. அவை, ஒரு தனி நபர் வாழ்க்கையைச் சூழ எழுந்துள்ள மரபு எனலாம்.

மோசே வாலிபரானபோது எகிப்திய கன்காணி ஒருவரை கொன்றதால் அஞ்சி, வடகிழக்கு அரேபியாவிலுள்ள மிதியானுக்கு வருகிறார். இங்கு மிதியானின் குரு ஒருவரின் மகளாகிய சிப்போராளை மணக்கிறார்.

ஓரேபு அல்லது சீனாய் மலைக்கருகில் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும்போது, யாவேயின் வெளிப்பாடு எரிகிற முட்செடியில் அவருக்களிக்கப்படுகிறது (விடு. 3:1மு.). யாவே இஸ்ரயேலை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும் பொறுப்பினை மோசேக்களிக்கிறார். அதிலிருந்து யாவேயுடன் இஸ்ரயேலை மீட்கும் பணியில் இறங்குகிறார் மோசே. ஓர் உண்மையான தலைவராக, இறைவாக்கினராக, குருவாக நின்று செயலாற்றி, இஸ்ரயேலரை ஒன்றுதிரட்டி, விடுவித்து, சீனாய் மலையில் உடன்படிக்கை உறவுக்குள்ளாக்கி, அன்னாரை ஓர் இனமாக அமைத்த சிறப்பு மோசேயையே சாரும்.

(இ) விடுதலைப் பயணம்

இஸ்ரயேலர் எகிப்திலிருந்து புறப்பட்டக் காலத்தை நிர்ணயிக்கப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. திட்டவட்டமான காலம் தரமுடியாவிட்டாலும், புறச் சான்று களைக் கொண்டு கி.மு. 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்நிகழ்ச்சி நடந்திருக்கக் கூடுமென்று ஊகிக்கலாம்.

1 அர. 6:1 இல் இஸ்ரயேலர் எகிப்து நாட்டிலிருந்து புறப்பட்ட நானூற்று எண்பதாம் வருடத்தில், சாலமோன் இஸ்ரயேலின்மேல் அரசரான நாலாம் வருடம் அவர் ஆண்டவரின் கோவிலைக் கட்டத் தொடங்கினார் என்பதாகப் பார்க்கிறோம். சாலமோனின் நாலாம் ஆண்டு கி.மு. 958 என்பதாக அறிகிறோம். அதற்கு, 480 வருடங்களுக்கு முன் என்னும்போது, விடுதலைப் பயணம் கி.மு. 15ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த ஒன்றாதல் வேண்டும். தொல்பொருள் ஆய்வளிக்கும் சான்றுகள் அனைத்தும் இதற்கு எதிராக இருப்பதால் இக்கருத்து இன்று கைவிடப்பட்டுள்ளது.

கி.மு. 1550 ஆம் ஆண்டளவில் அமோசே (Ah - Mose I கிமு. 1570-1545) என்னும் அரசர் கிக்சாஸ் ஆட்சியை அகற்றி தலைநகரைத் திரும்பவும் தீப்சுக்கு மாற்றினார். இவர் தாம் யோசேப்பை அறியாத பார்வோன் போலும் (விடு.1:8). இவர் காலத்திலும், இவருக்குப் பின்வந்த முதலாம் துத்மோசே

(Thutmose I, கி.மு. 1525-1495) என்பவர் காலத்திலும் எகிப்து செழிப்புற்றிருந்தது. ஐப்பிராத்து மட்டுமுள்ள நாடுகள் கைப்பற்றப்பட்டன. மூன்றாம் துத்மோசே (கி.மு. 1490-1495) இவ்வாறு 16 படையெடுப்புகள் நடத்தி, கிக்சாஸ் கூட்டத்தாரை முழுவதுமாக முறியடித்ததாகக் காணலாம். கி.மு. பதினான்காம் நூற்றாண்டில் எகிப்து பலவீனமுற்றது. பதிமூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அதாவது எகிப்தின் 19ஆம் ஆட்சியில் திரும்பவும் மறுமலர்ச்சியுற்றது. முதலாம் சேதி (Sethi I, கி.மு. 1318-1301), இரண்டாம் இராம்சேசு (Ramases II, கி.மு. 1301-1234) ஆகியோர் காலத்தில் நாடு செழிப்புற்றது.

மெர்-னெ-ப்தாவின் நடுகல் (The Stele of Mer- he- Ptah, கி.மு. 1230) கி.மு. பதிமூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இஸ்ரயேலர் பாலஸ்தீனாவில் இருந்திருக்க வேண்டுமென்பதைக் காட்டுகின்றது. இக் கல்வெட்டில், மெர்னெ-ப்தா ஆசிய நாடுகளில் அடைந்த வெற்றிகளைப் பாராட்டுமிடத்தில் இஸ்ரயேல் அழிவுற்றது, அது வழிமரபற்றுப் போனது என்று கூறப்படுகிறது. இஸ்ரயேல் என்ற பெயர் வரும் ஒரே எகிப்திய ஏடு இதுதான். கி.மு. 1230ஆம் ஆண்டளவில் மெர்-னெ-ப்தா இஸ்ரயேலரைப் பாலஸ்தீனாவில் சந்தித்தாரென்றால், அன்னார் அதற்கு முன்னாலேயே எகிப்தை விட்டுப் புறப்பட்டுவிட்டனர் என்பது பொருள். ஆதலால், முதலாம் சேதியின் காலத்தில் இஸ்ரயேலரின் அடிமைத்தனம் தொடங்கினதென்றும், இரண்டாம் இராம்சேசு காலத்தில் அது உச்ச நிலையடைந்ததென்றும், மெர்-னெ-ப்தாவின் காலத்தில் (கி.மு. 1234-1222) இஸ்ரயேலர் விடுதலையடைந்து எகிப்திலிருந்து புறப்பட்டனர் என்றும் கருத இடமுண்டு. இப்படியாக, விடுதலைப் பயணத்தின் காலம் கி.மு. 1234க்கும் 1222க்கும் இடைப்பட்டதாகக் கொள்ளப்படுகிறது.

மரபு வரலாற்று (Tradito-Historical) ஆராய்ச்சியாளர்கள் விடுதலைப் பயணத்தைக் குறித்த வரலாற்றில், வெவ்வேறு சூழ்நிலைகளிலிருந்தெழுந்த இரண்டு மரபுகள் காணப்படுவதாகக் கருதுகின்றனர். பஸ்காப் புராணமொன்றிலிருந்தெழுந்த விடுதலைப் பயண மரபு (Exodus Tradition), உடன்படிக்கை புதுப்பித்தல் விழாவொன்றிலிருந்தெழுந்த சீனாய் மரபு (Sinaic Tradition). முன் மரபுகள் அனைத்தும் விடுதலையையும் கானானுக்குள் வழிநடத்துதலையும் மட்டுமே குறிக்கின்றன, இவற்றில் சீனாய் மரபு எதுவும் காணப்படவில்லை என்பது இவர்கள் கூற்று (இணை. 26:5-9; 6:20-24; யோசு. 24:2-13). இதனால் சீனாய் மரபு பொய்யென்பதன்று. விடுதலைப் பயண மரபைப் போலவே இதுவும் உண்மையானதாக இருக்கலாம். ஆனால், இனனொரு மரபு வழியாக இது வழங்கப்பட்டுவந்திருக்க வேண்டுமென்பது கருத்து.

ரிங்க்ரன் (Ringgren) என்னும் அறிஞர் சீனாய் மரபு முழுவதுமே வட நாட்டிலிருந்து எழுந்திருக்கக் கூடும் என்று கருதுகிறார். ஏனெனில், உடன்படிக்கைப் புதுப்பிக்கப்படும் விழா வடநாட்டில் எழுந்ததாகக் கருதப்படுகிறது. இவ்விழா செக்கேமில் நடைபெற்றுவந்ததாக அறிகிறோம் (இணை. 27; யோசு. 24).

இஸ்ரயேலர் தாங்கள் காதேஸ் பர்னேயாவில் தங்கிய நிகழ்ச்சியைப் பின்னால் நினைவுகூர்ந்து வந்தனர். இந்த நிகழ்ச்சி எபிரோனை மையமாகக் கொண்ட தென் நாட்டில் பிரபலமடைந்திருந்தது. ஆதலால், விடுதலை மரபு இந்த மக்களிடையிலிருந்து தோன்றி செக்கேமின் உடன்படிக்கை மரபுடன் பின்னால் இணைந்தது என்கிறார் H.H. குத்ரி (Guthrie) என்னும் பண்டிதர். [1]

வட நாட்டிலும் தென் நாட்டிலும் எகிப்தின் விடுதலையைக் குறித்த இரு மரபுகள் இருந்து வந்தன. ஆனால் இவற்றை குத்ரி சொல்வது போல், அவ்வளவு திட்டவட்டமாக வரையறுத்துப் பிரிக்க முடியாது. சீனாய்த் திருக்காட்சி இரு மரபுகளுக்குமே பொதுவெனக் காண்கிறோம். இப்படியாக, ஒரு மரபு சீனாய் எனவும், இன்னொரு மரபு ஒரேபு எனவும் திருக்காட்சி கிடைத்த மலையைக் குறிப்பிடுகின்றன. இரு மரபுகளிலும் பொதுவான நிகழ்ச்சிகள் யாவும் காணப்பட்டன. ஒன்று சீனாய் நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவமளித்தது. இன்னொன்று விடுதலைப் பயண நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவமளித்தது எனல் பொருந்தும்.

3. யோசுவா, நீதித்தலைவர்கள் காலம்

இக்கால வரலாற்றை, நாம் ஒருவாறு திட்டமாக அறியத்தக்கதான சான்றுகள் நமக்குக் கிடைத்துள்ளன. முதலாவது, விவிலியத்தில் பல பழங்காலப் பகுதிகள் பாதுகாக்கப்பட்டுள்ளன (எ.கா. தெபோராவின் பாடல், நீதித். 5); இத்துடன் தொல்பொருள் ஆராய்ச்சியும் நமக்கு உறுதுணையாகவுள்ளது. பெத்தேல், இலாகீசு, தெபீர் போன்ற பழங்கால நகர்கள் பல தோண்டி ஆராயப்பட்டுள்ளன. இவ்வாராய்ச்சியால், இந் நகர்கள் கி.மு. 12ஆம் நூற்றாண்டளவில் அழிக்கப்பட்டுள்ளன என்றும், அங்கு வாழ்ந்த மக்களைவிட நாகரிகத்தில் குறைவுற்ற ஓர் இனத்தார் அங்கு வந்து குடியேறினர் எனவும் தெரிய வருகிறது. மேலும், கி.மு.14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தெல்-எல்-அமார்னா ஏடுகளும் இஸ்ரயேலர் கானானுக்குள் புகுமுன் கானானில் காணப்பட்ட சமூக, சமய நிலையைப்பற்றி நாம் அறிய உதவுகின்றன. இஸ்ரயேலரைவிட கலாசாரத்திலும், தொழில் நுணுக்கத்திலும் கானான் பெருமளவில் முன்னேறியிருந்தது என்று இவற்றின் மூலமாகத் தெரியவருகிறது. இக்காலத்தில் கானானியருக்கு இத்தியர் ஒரு பக்கமிருந்தும், இன்னோர் இனத்தார் மறுபக்கமிருந்தும் தொல்லை கொடுத்து வந்ததாகக் கூறப்படுகிறது. இந்த இன்னோர் இனத்தார் இஸ்ரயேலராக இருக்கலாமென்று கருதப்படுகின்றது.

யுகாரிட் (இராஸ்-சாம்ரா) ஏடுகளும் கானானிய சமயத்தைக் குறித்த பல உண்மைகளை அறிய உதவுகின்றன. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த எலிபன்தீன் ஏடுகள் பிற்காலத்தைச் சார்ந்தனவாக இருப்பினும், முற்கால சமயக் கூறுகளைப் பாதுகாத்து வந்துள்ளன என்று காணலாம்.

இத்தகைய சான்றுகளால் யோசுவா, நீதித்தலைவர்கள் வரலாற்றை நாம் ஓரளவு நம்பிக்கையுடன் ஆராயலாம்.

தலைவர் யோசுவா

மோசேயும் ஆரோனும் கானானுக்குள் வந்து சேர முடியவில்லை. யாவே கற்பாறையிடம் பேசச சொல்ல, மோசே

[1] God and History in the Old Testament, p. 18.

அவ்வாறு பேசாமல், அதனை அடித்ததன் காரணம் என்ன என்று வினவுகிறார் Pஆசிரியர் (எண். 20:1-13; 27:14.. விடு. 17:1-7 காண்க). மோசே மோவாபு நாட்டிலே இறந்து பெத்பகோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம் செய்யப்பட்டதாக அறிகிறோம் (இணை. 34:6). ஆரோன் ஏதோம் நாட்டின் எல்லையிலிருக்கிற ஓர் என்னும் மலையில் இறந்தார் (எண். 33:38).

மோசே தாம் இறக்குமுன்னே, தமக்குப் பின் இஸ்ரயேல் மக்களை வழிநடத்தத்தக்க ஒரு தலைவராக யோசுவாவை நியமித்தார் (27:15-23). கடவுளும் யோசுவாவுக்குத் தம்மை வெளிப்படுத்தினார் (இணை: 3:14மு. 23). கடவுளுடைய வெளிப்படுத்தல் மோசேயின் இறப்புக்குப் பின்னும் தொடர்ந்து யோசுவாவுக்குக் கிடைத்தது என்று காட்டுவதே இணைச்சட்ட மரபு ஆசிரியரது நோக்கமாகும்.

மோசே இறக்கவே, யோசுவா யோர்தானைக் கடந்து இஸ்ரயேலரை கானானுக்குள் வழிநடத்திச் செல்ல கட்டளை பெறுகிறார் (யோசு. 1:1-4). ரூபனியர், காத்தியர், மனாசேயின் பாதிக் குலத்தார் ஆகியோர் யோர்தானுக்குக் கீழ்ப்புறத்தில், மோசே தங்களுக்கு வாக்களித்த இடத்தில் தங்கினர் (1:12-15; 13:8). அக் குலங்களிலுள்ள ஆண்கள் பிற குலங்களுடன் புறப்பட்டுத் தங்கள் சகோதரருக்காகப் போராட யோர்தானின் அக்கரை செல்கின்றனர் (அதி. 3).

(அ) கானானைக் கைப்பற்றல்

இஸ்ரயேல் மக்கள் கானானைக் கைப்பற்றியதைக் குறித்த இரு மரபுகள் யோசுவா, நீதித்தலைவர் நூல்களில் பின்னிக்கிடக்கின்றன.

இஸ்ரயேல் மக்கள் கானானில் புகுந்த உடனேயே எவ்விதச் சிரமமுமின்றி நாட்டை முழுவதுமாகக் கைப்பற்றினர். நாட்டின் பழங்குடியினரையும் அன்னார் வழிபாட்டையும் அடியோடு நிர்மூலமாக்கினர். இவையாவும் அவர்கள் கடவுளான யாவேயின் அருஞ்செயலே, யாவேயே இஸ்ரயேலருக்காக போர்புரிந்தார் என்று காட்டுவதே இணைச்சட்ட மரபு ஆசிரியரது நோக்கம் (யோசு.2:9-11; 9:9-11; 10:40-43; 11:20-23; 23:1; 3:10).

இணைச்சட்ட மரபு ஆசிரியரைப்போலவே குருத்துவ மரபு ஆசிரியரும் வரலாற்றில் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை. நாட்டைக் கைப்பற்றியதைக்காட்டிலும் நாட்டைப் பங்கிட்டதும், குலங்களுக்கான எல்லைகளைக் குறித்ததுமே இவருக்கு முக்கியமாகக் காணப்பட்டன (எண். 34:1-12).

ஆனால், மற்றொரு மரபு நாடு முழுவதையும் பிடித்தடக்க இஸ்ரயேலரால் கூடவில்லையென்றும், எபூசியர் (யோசு. 15:63;நீதித். 1:21). அனாக்கியர் (யோசு. 14:12). கெசரில் வாழ்ந்த கானானியர் (16:10; நீதித். 1:29). எஸ்ட்ரேலோன் பள்ளத்தாக்கில் வாழ்ந்த கானானியர் (யோசு. 17:11-13; 19:27) ஆகியோரும், இன்னும் பலரும் (நீதித். 1). இஸ்ரயேலரிடையில் இன்னமும் வாழ்ந்துவந்தனரென்றும் கூறுகின்றது. இந்த மரபே உண்மையை அடுத்ததாக இருக்கிறது. இது J மரபாக இருக்கலாமென்று கருதப்படுகிறது.

இப்படி, இஸ்ரயேலர் கானானியரை முறியடிக்காமற் போனதற்குப் பல காரணங்கள் தரப்படுகின்றன.

1. இஸ்ரயேலர் கானானியரோடு கலப்பு மணம் செய்து உறவாடினதால் இப்படி நேரிட்டது (யோசு. 23:12; நீதித். 3:5,6).

2. ஆண்டவர் மோசேயைக் கொண்டு மூதாதையருக்கு விதித்த கட்டளைகளுக்கு இஸ்ரயேலர் கீழ்ப்படிவார்களோ என்று கண்டறியும்படி இஸ்ரயேலரை அவர்களாலே சோதிப்பதற்காக அவர்கள் விடப்பட்டிருந்தார்கள் (2:21-;3. 1-4).

3. இஸ்ரயேலரில் போர்ப்பழக்கமற்றவர்களுக்கு போர்ப் பயிற்சியளிக்க இந்த இனத்தாரை கடவுள் விட்டுவைத்தார் (3:1,2).

கானான் முழுவதையும் தொடக்கத்தில் இஸ்ரயேலரால் கைப்பற்ற முடியவில்லை என்பது உண்மை. தாவிதின் காலமளவும் கானானியர் இஸ்ரயேலரிடையில் வாழ்ந்து வந்தனர். இஸ்ரயேலரின் கை ஓங்கிய வேளையில் அன்னார் கானானியரைத் தங்கள் பணியாட்களாக நடத்திவந்தனர் (1:28,33,35).

(ஆ) இஸ்ரயேல் குல மக்கள் கூட்டமைப்பு

இஸ்ரயேல் குலங்களின் எண்ணிக்கை, அவற்றின் கூட்டமைப்பு ஆகியவை அறிஞரிடையில் ஒரு பிரச்சனையாகவே காணப்படுகின்றன. ப.ஏ. இக் குலங்களின் எண்ணிக்கையைப் பற்றிப் பல தகவல்களைத் தருகின்றது. எண். 1:26 எப்ராயிம், மனாசே ஆகிய யோசேப்புக் குலங்களை இரண்டாகக் கணக்கிட்டு, 12 குலங்களைத் தருகின்றது. இங்கு இலேவி குலம் விடப்பட்டுள்ளது. மோசேயின் ஆசிமொழிகளில் (இணை. 33) இலேவி குலத்தையும் சேர்த்து 10 குலங்களை மட்டுமே குறிப்பிடப்படுகின்றன. சிமியோன், இசக்கார் குலங்கள் விடப்பட்டுள்ளன. 1 அர. 11:31,32இல் எரொபவாமுக்குப் பத்து குலமும், தாவிதின் வழிமரபுக்கு ஒரு குலமுமாக 11 குலங்கள் குறிப்பிடப்படுகின்றன. தொட. 46:8மு; 48:5மு. ஆகிய பகுதிகளில் 13 குலங்களைக் குறித்து வாசிக்கிறோம். இப்படியாக ப.ஏ. இன் துவக்கத்தில் குலங்களைப் பற்றிய திட்டமான விவரம் தரப்படவில்லையென்று காணலாம்.

எப்படியும், நாளடைவில் 12 குலங்கள் என்ற மரபு வளரலாயிற்று. பெரும்பான்மையான பட்டியல்களும் 12 என்னும் எண்ணிக்கையைப் பாதுகாத்து வந்துள்ளன (35:22-26; இணை. 27:12,13; குறி. 2:1,2; எசே. 48:1மு.). சில இடங்களில் வலிந்தாவது இந்த எண்ணிக்கைப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இப்படியாக எப்ராயிம், மனாசே என்று இரு குலங்கள் எழுந்தபோதிலும், இவை பாதிக் குலங்களாகக் கணக்கிடப்பட்டு 12 என்னும் எண்ணிக்கை பாதுகாக்கப்பட்டுள்ளதாகக் காணலாம்.

பன்னிரண்டு என்னும் எண்ணிக்கைப் பழங்கால கிரேக்க, சுமேரிய சமூகக் கூட்டமைப்பிலிருந்து வந்திருக்கலாமென்று கருதப்படுகிறது. முன்னாள் கிரேக்க நாடுகளில் ஒவ்வொரு வழிபாட்டுத் தலத்தையும் சுற்றி 12 நகர்கள் காணப்பட்டன. இவை ஒவ்வொன்றும் முறையாக இந்தக் கோவிலைப் பரிபாலிக்கும் பொறுப்புடையன. இத்தகைய சமூக அமைப்புகள் சுமேரியாவிடையிலும் காணப்பட்டதாக அறியப்படுகிறது. குலக் கூட்டமைப்பாகிய இந்த அமைப்பை (amphictyony) இஸ்ரயேலர் ஒருவேளை இத்தகையதோர் பின்னணியிலிருந்து பெற்றிருக்கலாம்.

இஸ்ரயேல் குலங்கள் எல்லாம் எகிப்திற்குச் சென்றிருந்தனவா என்பதும் கேள்விக்குரியதாகும். நாம் முன் குறிப்பிட்டபடி, இன்றைய ப.ஏ. ஆராய்ச்சி எல்லாக் குலங்களும் எகிப்திற்குச் செல்லவில்லையென்றே ஒரே முகமாகக் குறிப்பிடுகிறது. ஆசேர் முதலான சில குலங்கள் பாலஸ்தீனாவிலேயே இருந்து வந்திருக்கவேண்டுமென்று கருதப்படுகிறது. இஸ்ரயேலர் கானானுக்குள் புகுந்ததாகக் கருதப்படும் கி.மு. 12ஆம் நூற்றாண்டில் செக்கேம் என்னும் நகரம் அழிவுறவில்லை என்று தொல்பொருள் ஆராய்ச்சி சான்று பகருகிறது. ஒருவேளை இந்த இடத்தில் இஸ்ரயேல் குலங்கள் சில வாழ்ந்து வந்திருக்கலாம். இவர்கள் எகிப்திலிருந்து திரும்பிய குலங்களை ஏற்று அவர்களுடன் இணைந்திருக்கலாம். யோசுவா இந்த இடத்தில் வைத்து குலங்களைக் கூட்டிச் சேர்த்து உடன்படிக்கை செய்வது இதனை வலியுறுத்தக்கூடும்.

மேலும் இக் குலங்கள் யாவும் யாக்கோபின் வழிமரபில் தோன்றினவையா என்பதும் கேள்விக்குரியது. விடு. 12:38; எண். 11:4 ஆகிய வசனங்களில் இஸ்ரயேலரோடு பல இன மக்கள் போனார்களென்றும், இவர்கள் இச்சையுள்ளவர்களாகக் காணப்பட்டார்களென்றும் வாசிக்கிறோம். இஸ்ரயேல் பெண்ணுக்கும், எகிப்திய ஆணுக்கும் பிறந்த ஒருவர் இஸ்ரயேலரின் பாளையத்திலிருந்தார் (இலேவி. 24:10). மிதியானியரும் இஸ்ரயேலரோடு சேர்ந்து கொண்டனர் (எண். 10:24-32); பிற்காலத்தில் அவர்களோடு வாழந்தனர் (நீதித். 1:16; 4:11). காலேபு, ஒத்னியேல் என்னும் கெனாசியரும் (கெனாசியர் ஏதோமியரில் ஒரு வகுப்பார், தென்னாட்டைச் சார்ந்தவர்கள்) இஸ்ரயேலரோடு வாழ்ந்தனர். காலேபியருக்கு எபிரோன் நகர் உரிமைப்பேறுக்கே கொடுக்கப்பட்டது (யோசு. 15:13-19; நீதித். 1:11-15). கிபயோனியர் உடன்படிக்கை மூலம் இவர்களுடன் இணைந்தனர் (யோசு. 9) இவர்களைத் தவிர, கேனியர், எருகுமவேலியர் என்னும் இனத்தாரும் இவர்களுடன் கூடி வாழ்ந்தனர் (நீதித். 1:16; 1சாமு. 27:10; 30:26-31).

செக்கேம் (யோசு. 24; 2 குறி. 10) அல்லது சீலோவில் (யோசு. 18:1மு; 21:2; 1 சாமு. 1-4) நடந்த ஓர் உடன்படிக்கையின் மூலம், பிரிந்திருந்த இந்த மக்கள் யாவரும் ஒன்றாக ஒரு சமூகக் கூட்டமைப்பாகச் (amphictyony) சேர்க்கப்பட்டனர் எனலாம்.

(இ) கானானைப் பங்கிடுதல்

இக் குலங்களுக்கு யோசுவா கடவுளின் திருவுளப்படி சீட்டுப்போட்டு நாட்டைப் பங்கிட்டுக் கொடுப்பதாகக் கூறப்படுகிறது (எண். 33:51-54; யோசு. 13-22). இப்பங்கீட்டைக் குறித்து விவிலியம் தரும் வரலாறு பிரச்சனைக்குரியது.

நாடு முழுவதும் கைப்பற்றப்படும் முன்னாலேயே யோசுவா நாட்டைப் பங்கிட்டுக் கொடுக்கிறார். நாடு தாவீதின் காலமளவும் முழுவதுமாக இஸ்ரயேலருக்குச் சொந்தமாகவில்லையென்று அறிவோம். ஆக, இந்தப் பங்கீடு அன்னாருடைய இலட்சிய விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டதேயொழிய உண்மை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதல்ல.

குலங்கள் எல்லாம் குறிக்கப்பட்ட எல்லைகளின் பின்னால் வாழவில்லையென்பதும் இதையுணர்த்தும். தாணுக்கு முதலாவது குறிக்கப்பட்ட எல்லை யூதாவுக்கு வடக்காகவுள்ளது (19:40மு.). ஆனால் நீதித். 18:2 இல் அந்த நாள்வரை அவர்களுக்கு இஸ்ரயேல் குலங்கள் நடுவே உரிமைப்பேறு கிடைக்கவில்லை என்பதாகவும், அவர்களின் நாட்டை வேவு பார்த்து வடக்காகவுள்ள இலாயிசு என்னும் நகரத்தைப் பிடித்து அங்குக் குடியேறினதாகவும் காண்கிறோம் (18:29).

சிமியோனியர் மத்திய பாலஸ்தீனாவில் தமக்கு ஒதுக்கப்பட்ட இடத்தைவிட்டுத் தென்பகுதியில் சென்று வாழ்ந்தனர். ரூபனியர், காத்தியர், மனாசே பாதி குலத்தார் ஆகியோருக்கு யோர்தானின் மேற்கில் இடம் வாய்க்காததால் கிழக்கில் குடியேறினர்.

பிற்காலத்தில் யூதா உரிமையாகப்பெற்ற இடங்கள் அனைத்தும் இங்கு யூதாவின் பங்காகக் குறிக்கப்படுகின்றன (யோசு. 15:1-12). காலேபு சிமியோன் குலங்களுக்கு ஒதுக்கப்பட்ட எல்லைகளும் இதனுள் காணப்படுகின்றன. யூதாவின் வட எல்லையும் பென்யமீனின் தென் எல்லையும் ஒன்றே (18:15-19).

இலேவி குலத்தாருக்கு உரிமைப்பேறு ஒன்றும் ஒதுக்கப்படவில்லை. மேய்ச்சலுக்காகச் சில ஊர்கள் மட்டும் ஒதுக்கப்பட்டன (அதி. 2). இது ஏன் என்பதும் கேள்விக்குரியது. பிற்கால இஸ்ரயேலரின் சமயம், கடவுளே அவர்களின் உரிமைச் சொத்து என்றும் (13:14); அன்னார் யாவேயுடையவர்கள் என்றும் (எண். 3:12; 8:14) இதற்குப் பல காரணங்களைக் காட்டிற்று. ஆனால், இதற்குப் பின்னாலுள்ள உண்மை வரலாற்றுச் சூழ்நிலை என்ன என்பது தெரியாது. இரு உண்மைகளை நாம் ஊகிக்கலாம். (1) இலேவியர் என்று ஒரு தனிப்பட்ட குலம் தோற்றத்தில் காணப்படவில்லை. வழிபாட்டுப் பணிவிடைக்கென்று ஒதுக்கப்பட்ட ஒரு கூட்டத்தார் பின்னால் குல அமைப்பைப் பெற்றனர். அல்லது (2) இலேவி குலம் இயல்பிலேயே பலவீனமானதோர் குலம். போரில் திறமையில்லாததால் இவர்கள் போர் செய்து நாட்டைக் கைப்பற்ற இயலவில்லை, ஆனால், இவர்கள் இனத்தாரான பிற குலத்தார் நாட்டைப் பிடித்தபோது, இவர்கள்மேல் அனுதாபப்பட்டுத் தங்கள் உரிமைச் சொத்தில் இவர்களும் தங்க இடமளித்தனர். ஆனால், அதற்கு ஈடாகத் தங்கள் வழிபாடுகளில் இவர்கள் உதவியை நாடினர் எனலாம் (இலேவியரைப் பற்றிய கூடுதல் விவரங்களைப் பின்னால் காண்க).

(ஈ) நீதித் தலைவர்

கானானுக்குள் புகுந்த இஸ்ரயேலர் தாங்கள் எதிர்பார்த்தபடி நாட்டின் பழங்குடிகளை முழுவதுமாகத் துரத்த முடியவில்லை. கானானியர் அவர்களிடையில் வாழ்ந்துவந்தனரென்று கண்டோம். விவிலிய ஆக்கியோர் இதற்கு இஸ்ரயேலர் யாவேயின் சட்டத்திற்குக் கீழ்ப்படியாமற்போனதே காரணம் என்று காட்டுகின்றனர். நீங்கள் வழிவிலகி உங்களுக்குள்ளே எஞ்சியிருக்கிற இந்த வேற்றினத்தாருடன் சேர்ந்து, அவர்களோடு கலப்பு மணம் செய்து நீங்கள் அவர்களிடத்திலும் அவர்கள் உங்களிடத்திலும் உறவாடினால் உங்கள் கடவுளாகிய ஆண்டவர் இனி இந்த வேற்றினத்தாரை உங்களுக்கு முன்பாகத் துரத்திவிடமாட்டார். உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கொடுத்த இந்த நல்ல நாட்டிலிருந்து நீங்கள் அழிந்துபோகுமட்டும், அவர்கள் உங்களுக்குக் கண்ணியும், வலையும், உங்கள் விலாக்களுக்குச் சவுக்கும் உங்கள் கண்களுக்கு முள்ளுமாவார்கள். இதை உறுதியாய் அறிந்து கொள்ளுங்கள் என்றார் இணைச்சட்ட மரபு ஆசிரியர் (யோசு. 23:12,13). இஸ்ரயேலர் இந்தச் சட்டத்தைவிட்டு வழுவி நடந்தார்கள். ஆதலால், பகைவர்களின் தொல்லைக்கு ஆளானார்கள் என்று காட்டுவதே நீதித்தலைவர்கள் நூல் ஆசிரியர் நோக்கம்.

மக்கள் பாகாலையும், அஸ்தரோத்தையும் சேவித்து யாவேக்குச் சினமூட்டவே. அவர் சுற்றிலும் இருந்த அவர்களின் எதிரிகளின் கையில் அவர்களை விற்றுப்போடுவார். இப்படியாக, இஸ்ரயேலர் மிகவும் நெருக்கப்பட ஆண்டவர் பரிதாபம் கொண்டு, அவர்களை மீட்கும்படி ஒரு நீதித்தலைவரை எழுப்புவார். நீதித்தலைவரை எழுப்பும்போது, ஆண்டவர் நீதித்தலைவரோடிருந்து, அந்தந்த நீதித்தலைவரின் நாள்களிலெல்லாம் அவர்கள் எதிரிகளின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவித்துவருவார். அந்த நீதித்தலைவர் இறந்தபொழுது மக்கள் திரும்பவும் மரபு தெய்வங்களை சேவித்து இழிவாக நடப்பார்கள். இதுவே இணைச்சட்ட மரபு ஆசிரியர் தரும் வரலாற்று ஒழுங்கு (நீதித். 2:16-23).

இப்படியாக, அபிமலேக்கை விட்டால் (9:1-37) ஒத்னியேல் (3:7-11), ஏத்து (3:12-20), சம்கார் (3:31), தெபோரா-பாராக்கு 4:4மு.), கிதயோன் (6-8), தோலா (10:1,2), யாசேர் (10:3-5) இயப்தாகு (12:6-12:7), இப்சான் (12:8-10), ஏலோன் (12:11,12), அப்தோன் (12:13-15), சிம்சோன் (13-16) ஆகிய பன்னிரு தலைவர்கள் இஸ்ரயேலரைப் பற்பல பகைவரிடமிருந்து மீட்டு விடுவித்தார்கள் என்று அறிகிறோம். சாமுவேல் கடைசி நீதித்தலைவராகக் கருதப்படுகிறார் (1சாமு. 1-12).

இந்த நீதித்தலைவர்கள் வரலாறு இஸ்ரயேலில் அரசு ஏற்படுவதற்கு முன்னுள்ள ஓர் ஆயத்த நிலையைக் காட்டுகிறது எனலாம். இஸ்ரயேலர் கிதயோனை அரசராக்க முனைந்தார்கள், ஆனால் கிதயோன் மறுத்துவிட்டார் (நீதித். 8:22,23). அவருக்குப் பின் அவரது வைப்பாட்டியின் மகனான அபிமலேக்கு (8:31) தம்மை அரசனாக்கிக் கொண்டாரென்று காண்கிறோம் (9). இப்படியாக, அரசர் வேண்டுமென்ற ஓர் எண்ணம் இஸ்ரயேலரிடையில் ஏற்கெனவே உருவாகி விட்டதெனக் காணலாம்.

4. அரசமைந்த காலம்

(அ) அரசின் தோற்றம் (கி.மு. 1000ஐ அடுத்து)

இஸ்ரயேலர் வரலாற்று வளர்ச்சியில் அரசு இயல்பாக ஏற்பட்ட ஓர் ஆட்சியமைப்பு எனலாம். இம்மட்டும் குலத் தலைவர்களே (Tribal Chiefs) மக்களை ஆண்டுவந்தனர். யோசுவாவின் காலத்திற்குப் பின், குலங்கள் பிரிந்திருந்ததால் மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டனர். இக் காலத்தில் அன்னாரைக் கூட்டி இணைத்தது யாவே நம்பிக்கை ஒன்றே. இந் நம்பிக்கையின் மூலம் சில விழாக்களின் போது, இம் மக்கள் ஒன்றாகக் கூடிவந்தனர். இது தவிர, அன்னாரை ஒன்று சேர்க்கும் ஓர் அமைப்போ, கூட்டுப் பாதுகாப்பு ஒழுங்கோ அவர்களுக்குள் காணப்படவில்லை.

நாட்டின் பல பகுதிகளிலும் கானானியரும் பிற பல மக்களும் காணப்பட்டனர். சமயம் வாய்க்கும்போதெல்லாம் இவர்கள் அந்நியராக எண்ணப்பட்ட இஸ்ரயேலருக்குத் தொல்லைகள் கொடுக்கத் தயங்கவில்லை. இவர்களைத் தவிர எகிப்து, சிரியா, அசிரியா ஆகிய நாடுகளும் வியாபார வழியான பாலஸ்தீனாவின் மேல் எப்பொழுதும் கருத்தாயிருந்தன.

இப்படிப் பகைவர்கள் தோன்றின காலத்தில் இறையருள் பெற்ற தலைவர்கள் (Charismatic leaders) எழும்பி, தலைமை தாங்கி மக்களை மீட்டு வழிநடத்தினர். ஆனால், இவர்களால் நிலையானதோர் ஆட்சியமைப்பை மக்களுக்குக் கொடுக்க முடியவில்லை.

கடைசி நீதித்தலைவராக எழுந்த சாமுவேல் தம் ஆயுள் காலமெல்லாம் இஸ்ரயேலரை நியாயம் விசாரித்து வந்தார் (1 சாமு. 7:15-17). ஆனால், அவரின் புதல்வர் அவரின் வழிகளில் நடக்கவில்லை. இந்நிலையில் ஒன்றிற்கு மேற்பட்ட பகைவர்கள் தோன்றி இஸ்ரயேலருக்குத் தொல்லைகள் கொடுக்கலாயினர் - பெலிஸ்தியர் (13:19-21), அம்மோனியர் (11:1,2), அமலேக்கியர் (14:48). இத்தகையச் சூழ்நிலையில் பிறநாடுகளில் காணப்பட்டதைப்போல் தங்களுக்கும் தங்களை ஆள, தங்களைப் போரில் தலைமை தாங்கி நடத்த ஓர் அரசன் இல்லையே என்று இஸ்ரயேல் மக்கள் ஏங்கியிருத்தல் இயல்பே.

ஆதலால், இஸ்ரயேலின் மூப்பர் சாமுவேலை அணுகி பிற இனத்தாரிடையும் இருக்கிறபடி, தங்களுக்கும் தங்களை ஆள ஓர் அரசன் வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர் (8:4-6). மக்கள் தங்களுக்கு ஓர் அரசன் வேண்டும் என்று கேட்டது ஆண்டவருக்கு வருத்தமாயிருந்தது. எளிமையான, தற்காலிகமான தலைமையோடு தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அவர் மக்களின் இந்தக் கோரிக்கை தம்மையே புறக்கணிப்பதாகக் கருதினார். எனினும் எச்சரிப்பு கொடுத்து அனுமதித்தார். சாமுவேல் பென்யமின் குலத்தாராகிய சவுலை அரசனாகத் திருப்பொழிவு செய்தார் (9:1,17; 10:1). அதைத் தொடர்ந்து சவுல் அம்மோனியர் படையெடுப்பிலிருந்து யாபேஸ் கிலயாதின் மக்களை மீட்கவே, மக்கள் சவுலின் வீரத்தைப் பாராட்டி, கில்காலில் ஆண்டவருடைய சந்நிதியில் அவரை அரசராக ஏற்றுக்கொண்டனர் (11:15). சவுல் கிபியாவிலுள்ள தம் வீட்டிலிருந்து ஆட்சி செய்யலானார் (11:4).

சவுல் ஓர் அரசனுக்குரிய முழுச் சிறப்புடன் காணப்பட்டார் என்பதற்கில்லை. அவர் ஆட்சியமைப்பு குலத் தலைவர்களுக்கும் ஆளுகைக்கும், தேசிய அரச ஆளுகைக்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் காணப்பட்டது எனலாம். இவருடன் இவருடைய இனத்தாராகிய பென்யமின் குலத்தார் மட்டுமே இணைந்திருந்ததாக அறிகிறோம். பிற குலங்கள் இன்னமும் ஒன்றாக இணைக்கப்படவில்லை.

பவுல் ஆட்சியிலிருக்கையிலேயே யூதா குலத்தைச் சார்ந்த தாவிது என்னும் இளைஞர் வலிமையுற்றுவந்தார். அத்துடன் சவுல் சாமுவேலைப் பகைத்துக் கொள்ளவே (15:34,35), சாமுவேல் மறைமுகமாக சவுலுக்கு எதிராக தாவிதை இஸ்ரயேலின்மேல் அரசராக திருப்பொழிவு செய்தார் (16:13). இவற்றால் உளம் நொந்த சவுல் மனநோய்க்கு ஆளானார் (16:14).

தாவிது ஓர் இசைக் கலைஞர். ஆதலால், சவுலின் மன நோயைத் தீர்க்க அரசவைக்கு அழைக்கப்பட்டார். இவ்வேளையில் பெலிஸ்தியர் படையெடுக்கவே, தாவிது பெலிஸ்திய வீரனான கோலியாத்தைக் கொன்று தம் புகழை நிலைநாட்டினார் (18:7). ஏற்கெனவே, மனநோய்க்காளாகியிருந்த சவுலுக்கு இது வெந்த புண்ணில் வேலிடுவதுபோலிருந்தது. பொறாமையுற்று தாவிதைக் கொல்ல வகை தேடினார் (18:9,11).

தாவிது நுண்ணறிவு உடையவர். அத்துடன் கடவுளுக்கு அஞ்சி வாழ்பவர். இஸ்ரயேல் குலங்கள் அனைத்துடனும் அவர் விவேகமாய்ப் பழகி, அன்னார் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொண்டார் (18:13). ஆதலால், சென்ற இடமெல்லாம் அவருக்கு வெற்றி கிட்டிற்று. மேலும், சவுலின்

மகள் மீகாளை மணந்ததால், அரசவட்டங்களில் நெருங்கி ஈடுபடும் வாய்ப்பும் அவருக்குக் கிட்டிற்று (18:27). அத்துடன் சவுலின் மகன் யோனத்தான் தாவிதை அன்பு கூர்ந்து அவருடன் நட்பின் உடன்படிக்கை செய்துகொண்டதும் தாவிதின் வெற்றிக்கு அடிகோலியது. இதனால், சவுலின் இரகசியங்கள் பலவற்றை அறியும் வாய்ப்பு தாவிதுக்குக் கிட்டிற்று (20:8).

தாவிதின் முன்னேற்றத்தை இனிமேல் தடைசெய்ய இயலாது என்றுணர்ந்த சவுல், வரவர நலிவுற்றுத் தன்னிலேயே தோற்றவராகி, பெலிஸ்தியருடன் போரிட்டு மடிந்தார் (31).

(ஆ) ஐக்கிய அரசு (கி.மு. 1000-922)

1. தாவிது (கி.மு. 1000-961). சவுல் இறந்து விட்டார் என்று கேள்வியுற்றதும், தாவிது யூதாவிலுள்ள எபிரோனுக்கு வந்து அங்கே யூதா குலத்தாரின் மேல் அரசனாகி, ஏழு ஆண்டுகளும், ஆறு மாதங்களும் ஆட்சி புரிந்தார் (2 சாமு. 2:1-4,11). சவுலின் மகன் இஸ்பொசத்து வட குலங்கள்மேல் அரசரானார் (2:8). சவுலின் குடும்பத்துக்கும், தாவிதின் குடும்பத்துக்கும் இடையில் நெடு நாள் போர் நடந்தது (2; 3:1).

இக் காலத்தில் இஸ்ரயேலரில் சிலர் தாவிதின் பக்கம் சேர ஆவலாயிருந்தனர் (3:17). இஸ்பொசத்துக்கும், அவருடைய தளபதி அப்னேருக்கும் மனவருத்தம் உண்டாகவே (3:7,8), அப்னேரும் தாவிதின் பக்கம் சேர விரும்பினார் (3:17-21). இவ்வேளையில் அப்னேர் இறக்கவே, அவரின் கீழிருந்த இரு தளபதிகள், தாவிது தங்களைப் பாராட்டுவார் என்றெண்ணி இஸ்பொசத்தைக் கொன்றுவிட்டனர் (4:6). தாவிது இஸ்பொசத்தின் இறப்புக்குத் தாம் பொறுப்பாளியல்ல என்பதைக் காட்டும்பொருட்டு, அந்த இருவரையும் கொன்று வட குலங்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொண்டார். எஞ்சியிருந்த சவுலின் இன்னொரு மகன் முடவன். ஆதலால், இஸ்ரயேலர் அனைவரும் தாவிதினிடம் வந்து, தங்களையும் ஆளும்படி கேட்டுக்கொண்டனர். அப்படியே, தாவிது அவர்களுடன் உடன்படிக்கை செய்து, இஸ்ரயேல் யூதா நாடுகள்மேல் அரசராகி முப்பத்துமூன்று ஆண்டுகள் ஆட்சி புரிந்தார் (5:1-5). இப்படியாக, தாவிதின் காலத்தில் இஸ்ரயேலின் ஐக்கிய அரசு உருவாயிற்று.

இஸ்ரயேல் அனைத்தின்மேலும் அரசரானதும், தாவிது எபூசியர் நகரான எருசலேமைக் கைப்பற்றி அதற்குத் தாவிதின் நகரம் என்று பெயரிட்டார் (5:6-10). தீரு அவருடன் சமாதான உடன்படிக்கை செய்தது (5:11,12). பெலிஸ்தியர் முறியடிக்கப்பட்டனர் (5:13-25). அண்டை நாடுகள் பலவும் தாவிதின் வல்லமைக்குள் வந்தன (8). பகையின் அச்சுறுத்தலின்றி நாடு வளர்ந்தது (7:1). இதனால், தாவிதின் அரசு என்றென்றும் நிலைத்திருக்குமென்று நம்பப்பட்டது (7:13,14).

பாகாலே யூதா (கிரியத்து எயாரிம்) என்னுமிடத்திலிருந்த ஆண்டவரது பேழை எருசலேமுக்குக் கொண்டுவரப்பட்டது (6:2,16). தாவிது எபூசியனாகிய அரவுனாவின் நிலத்தில் வேள்விமேடை ஒன்றைக் கட்டினார் (24:18-25). எருசலேமில் திருக்கோவில் கட்டுவதற்கான ஆலோசனை எழுந்தபோது அது மறுக்கப்பட்டது (7:6).

தாவிதின் காலத்தில் சாதோக்கு, எப்யாதார் (அபியத்தார்) என்பவர்கள் குருக்களாயிருந்தனர் (20:26; 1அர. 1:32; 2:27). நாத்தான் இறைவாக்கினராக இருந்தார் (2சாமு. 12:1அர. 1:32).

தாவிதின் முதுமைக்காலத்தில், அரசுக்கான வாரிசைக் குறித்த சில கலகங்கள் எழும்பின (2 சாமு. 13-20). எப்படியும் முடிவில் பத்சேபா மூலம் தாவிதுக்குப் பிறந்த சாலமோனுக்குப் பட்டமளிக்கப்பட்டது. மொத்தத்தில் அரசாட்சி ஏற்படுத்திய இராணுவக் குவிப்பு, வரித் திணிப்பு, அரியணைப் பிடிக்க நடந்த தில்லுமுல்லுகள் அனைத்தும் அரசாட்சி முறையை ஆண்டவர் விரும்பவில்லை என்ற மரபை உறுதிசெய்வதாகவே பட்டன.

2. சாலமோன் (கி.மு. 961-922). இவர் எதிர்க்கட்சியினர் பலரை ஒழித்துத் தம் அரசை உறுதிப்படுத்திக்கொண்டார் (1அர.2).

சாலமோனை அரசியல் நிபுணர் என்பதைவிட அவரை ஒரு கலைஞர் எனல் தகும். அவர் ஒரு ஞானி (4:20-34; அதி. 10), அறிவைப் பருகினார், அழகை இரசித்தார். தம் படைகளில் பல நூதனமானக் கூறுகளைப் புகுத்தினார் (9:26-28; 10:26), கட்டட வேலைகளைத் தொடங்கி நடத்தினார் (3:1,2), கோட்டைகள் கட்டினார் (9:15-19) திருக்கோவிலுடன் பிற பல அரண்மனைகளையும் கட்டினார் (6:7), கப்பல்கள் செய்தார் (9:26-28, 10:1-10,14).

மேலும், சாலமோன் பல பெண்களை விரும்பினார், எகிப்தியர், மோவாபியர், அம்மோனியர், ஏதோமியர், சீதோனியர், இத்தியர் ஆகிய பல வேற்றுப் பெண்களை விரும்பினார். இவர்கள் மூலமாக வேற்று தெய்வங்களைப் பின்பற்றும்படி, அவர் இதயம் வழுவிப்போனது (9:16, 11:1-4).

இவ்வாறு, இவரது கலைவேட்கை கருவூலத்தைக் காலியாக்கிவிட்டது. அதனால், அரசர் தம் ஆடம்பர வாழ்வுக் காகக் குடிகள் மேல் அதிக வரி சுமத்தினார் (4:7-19), கட்டாய வேலை செய்ய வற்புறுத்தினார் (12:4). இதுவே, அரசு பிளவுபட அடிகோலியது எனலாம். ஏதோம் பிரிந்து சென்றது (11:14), எரொபவாம் என்னும் எப்ராயிமியர், ஆகியா என்னும் இறைவாக்கினரின் தூண்டுதலால் புரட்சி செய்தார் (11:25-36).

சாலமோன் காலத்தில் அசரியா (4.2), சாதோக்கு, அபியத்தார் ஆகியோர் குருக்களாயிருந்தனர் (4:4 - இது 2:27 உடன் முரண்படுகிறது காண்க). மொத்தத்தில் சாலமோனின் துவக்கம் சிறப்பாக இருப்பினும் முடிவு கொடிய விளைவையே தந்தது.

(இ) பிளவுற்ற அரசு (கி.மு. 922-586)

சாலமோன் இறந்தபின் ரெகபெயாம் அவர் இடத்தில் அரசரானார் (11:43). தந்தையின் ஆட்சியில் அதிருப்தியடைந்த மக்கள் மைந்தராவது தங்கள் மேல் வைக்கப்பட்ட சுமையை இலகுவாக்குவார் என்ற எதிர்பார்ப்புடன் அவரை அண்டினர். அவர் பதில் பயனற்றதாக அமையவே எரொபவாமின் தலைமையில் வடகுலங்கள் யாவும் பிரிந்து சென்றன. யூதா, பென்யமின் குலங்கள் மட்டும் ரெகபெயாமின் கீழ் நிலைத்திருந்தன (அதி. 12).

இப் பிளவு இஸ்ரயேல் அரசை வலிமை குன்றச் செய்தது எனக்கூறத் தேவையில்லை. சிரியா விடுதலை பெற்றது. காத்து தவிர பிற பெலிஸ்திய நகர்கள் விடுதலையடைந்தன. இஸ்ரயே

லும். யூதாவும் அடுத்த இரு நூற்றாண்டுகளாக ஒன்றையொன்று மோதி வலிமை குன்றியிருந்தன (14:30; 15:6-16).

இஸ்ரயேல் (கி.மு. 922-721) வட நாடாகிய இஸ்ரயேல் ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகள் நிலைத்திருந்தது. இக் காலத்துக்குள் பின்வரும் இருபது அரசர்கள் இதனை ஆண்டார்கள்.

1. எரொபவாம் (கி.மு. 922-900: 12:25-14:20).
2. நாதாபு (கி.மு. 901-900: 15:25-28).
3. பாசா (கி.மு. 900-877: 16:1-7).
4. ஏலா (கி.மு. 877-876: 16:8-14).
5. சிம்ரி (கி.மு. 876: 16:15-18).
6. திப்னி (கி.மு. 876: 16:21,22).
7. ஒம்ரி (கி.மு. 876-869: 16:23-28).
8. ஆகாபு (கி.மு. 869-849: 16:28-22:38).
9. அகசியா (கி.மு. 849: 2அர. 1:1-18).
10. ஆகாபுவின் மகன் யோராம் (கி.மு. 849-842: 2அர. 3:1-9:37).
11. ஏகூ (கி.மு. 842-815: 9:11-10:36).
12. ஏகூவின் மகன் யோவகாசு (கி.மு. 815-801: 13:1-9).
13. யோவகாசின் மகன் யோவாசு (கி.மு. 801-786: 13:10,11).
14. யோவாசின் மகன் எரொபவாம் (கி.மு. 786-746: 14:23-29).
15. செக்காரியா (கி.மு. 746: 15:8,9).
16. சல்லூம் (கி.மு. 746: 15:13,14).
17. மெனாகேம் (கி.மு. 745-738: 15:14-21).
18. பெக்காகியா (கி.மு. 738-737: 15:23-26).
19. பெக்காகு (கி.மு. 737-732: 15:27-30).
20. ஏலாவின் மகன் ஓசேயா (கி.மு. 732-724: 17:1-18:12).

முதலாம் எரொபவாம் திறமை மிக்கவர். தம் ஆட்சியை உறுதிப்படுத்தத் தேவையான எல்லா ஒழுங்கையும் செய்தார். இஸ்ரயேலர் எருசலேம் கோவிலுக்குச் செல்வது தமக்கு நலமாயிராது என்று உணர்ந்து, தம் எல்லைக்குள்ளேயே தாண், பெத்தேல் என்னும் இடங்களில் தொழுகைத் தலங்களை ஏற்படுத்தி, பொன்னினால் கன்றுக்குட்டிச் சிலைகள் இரண்டைச் செய்து அங்கு வைத்தார். யூதாவில் கொண்டாடப்பட்ட விழாக்களுக்கு ஒப்பான உரிமைகளை அங்கு ஏற்படுத்தினார். மேடைகளுக்கான குருக்களையும் நியமித்தார். இணைச்சட்ட மரபு ஆசிரியர் ஒரிட வழிபாட்டை வலியுறுத்தினமையால், எரொபவாமின் இச் செயல்களை வன்மையாகக் கண்டித்தனர். இதினால் இவர் வழிவந்த எல்லா அரசர்களும் கடவுளுடைய பார்வையில் தீமையானதைச் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது.

ஒம்ரி சமாரியாவைத் தலைநகராக்கினார். இதிலிருந்து வடநாடு சமாரியா என்றும் அறியப்பட்டது. இவரின் மகன் **ஆகாபு** திறமையுள்ள அரசர். இவர் சிரியரை முறியடித்து நாட்டை வலுப்படுத்தினார். சீதோனிய பெண்ணான ஏசபேலை மணம் செய்ததின் மூலம் பாகால் வழிபாடு நாட்டில் பரவ இடமளித்தார். எலியா, மீக்காயா ஆகிய இறைவாக்கினர் இவர் காலத்தில் பணியாற்றினர். யோராம், யோவகாசு ஆகிய அரசர் காலத்தில் எலிசா பணியாற்றினார்.

இரண்டாம் எரொபவாம் காலத்தில் வேற்று நாடுகளின் தொல்லை இல்லாததால் நாடு செழிப்புற்றிருந்தது. **ஆமோஸ், ஓசேயா** ஆகியோர் பணியாற்றினர்.

ஓசேயா அரசர் காலத்தில் சல்மனாசர் IV சமாரியாவை 3 ஆண்டுகளாக முற்றுகையிட்டார். இக் காலத்தில் இவர் இறக்கவே சார்கன் II சமாரியாவைப் பிடித்து, அங்குள்ள 2,79,000 மக்களையும் அசிரியாவிற்குக் கொண்டுபோய்க் குடியேற்றினார். அதற்குப் பதிலாக அசிரிய மக்களை சமாரியாவில் கொண்டு குடியேற்றினார். இப்படியாக, கி.மு. 721/722இல் வட நாடாகிய இஸ்ரயேல் அழிவுற்றது.

யூதா (கி.மு. 922-586). யூதா இஸ்ரயேலைவிடக் கூடுதலாகக் கிட்டத்தட்ட மூன்றரை நூற்றாண்டுகள் நிலைத்திருந்தது. இக் காலத்தில் பின்வரும் 19 அரசர்களும், ஓர் அரசியும் இதன்மேல் ஆட்சி புரிந்தனர்.

1. ரெகபெயாம் (கி.மு. 922-915: 1அர. 14:21-29).
2. அபியாம் (கி.மு. 915-913: 15:1-7).
3. ஆசா (கி.மு. 913-873: 15:8-23).
4. யோசபாத்து (கி.மு. 873-849: 15:24-22:50).
5. யோசபாத்தின் மகன் யோராம் (கி.மு. 849-842: 22:50-2அர. 8:22).
6. அகசியா (கி.மு. 842: 8:25-29).
7. அத்தலியா (கி.மு. 842-837: அதி. 11).
8. அகசியாவின் மகன் யோவாஸ் (கி.மு. 837-800: அதி. 12).
9. அமத்சியா (கி.மு. 810-783: 14:1-20).
10. அசரியா அல்லது உசியா (கி.மு. 783-742: 15:1-13).
11. யோதாம் (கி.மு. 742-735: 15:32-38).
12. ஆகாசு (கி.மு. 735-715: 16:1-20).
13. எசேக்கியா (கி.மு. 715-687: 6:18-20).
14. மனாசே (கி.மு. 687-642: 21:1-18).
15. ஆமோன் (கி.மு. 642-640: 21:19).
16. யோசியா (கி.மு. 640-609: 21:4-23:29).
17. யோவகாசு (கி.மு. 609: 23:31-33).
18. யோயாக்கிம் (கி.மு. 609-598: 23:34-24:5).
19. யோயாக்கின் (கி.மு. 598-7: 24:8-16).
20. செதேக்கியா (கி.மு. 597-586: 24:18-25:27).

இவர்களில் யோசபாத்து, யோவாசு, அமத்சியா, உசியா, யோதாம், எசேக்கியா, யோசியா ஆகிய அரசர்கள் கடவுளுடைய பார்வையில் நேர்மையாக நடந்துகொண்டதாகக் கூறப்பட்டது. அதாவது, இவர்கள் யாவே வழிபாட்டைப் பேணி வேற்று வழிபாடுகளை அகற்றப் பாடுபட்டனர் என்பது பொருள்.

ரெகபெயாமின் மதியீனத்தால் நாடு பிளவுற்றது. உசியா, யோதாம், ஆகாசு ஆகியோர் காலங்களில் எசாயா, மீக்கா ஆகிய இறைவாக்கினர் பணியாற்றினர். ஆகாசு சிரிய நாட்டு வேள்வி மேடைகளை எருசலேம் திருக்கோவிலுள் வைத்தார். எசேக்கியா இவற்றை அகற்றிப் பல சீர்திருத்தங்கள் செய்தார். மனாசே மீண்டும் வேற்று வழிபாட்டைப் புகுத்தினார். யோசியா இதை அகற்றி திருக்கோவிலைச் சுத்திகரித்து, எருசலேம் திருக்கோவிலில் மட்டுமே வழிபாடு நடக்கவேண்டும் என்ற ஒழுங்கைச் செய்தார். எரேமியா இவர் காலத்தில் இறைவாக்கு உரைக்கத் தொடங்கி, இஸ்ரயேலர் சிறைப்பட்டுப் போகும்வரை பணியாற்றினார்.

யோயாக்கிம் காலத்தில் நெபுகத்நேசர் எருசலேமுக்கெதிராகப் படையெடுத்து வந்தார். இவர் எருசலேம் வந்து சேருமுன், யோயாக்கிம் இறந்துபோக அவரின் மகன் யோயாக்கின் அரசரானார். கி.மு. 597இல் நெபுகத்நேசர் அவரைச் சிறைப்பிடித்து, அவருடன் சிறந்த மக்களையும், கருவூலங்களையும் பாபிலோனுக்குச் சிறையெடுத்துச் சென்றார். யோயாக்கினின் இடத்தில் யோசியாவின் இன்னொரு மகன் மத்தனியாவைச் செதெக்கியா என்ற பெயருடன் அரச

னாக்கினார். சில ஆண்டுகளுக்குப்பின் (கி.மு. 586) செதெக்கியா எகிப்தின் தூண்டுதலுடன் பாபிலோனுக் கெதிராகக் கலகம் செய்ய, நெபுகத்நேசர் தம் முழு இராணுவத்தோடும், எருசலேமுக்கு எதிராய் வந்து நகரையும், கோவிலையும் அழித்து, மக்களுள் சிறப்பானவர்களைச் சிறைப்பிடித்துச் சென்றார். இது இரண்டாம் சிறையெடுப்பு. இப்படியாக யூத அரசும் முடிவுக்கு வந்தது.

5. சிறையிருப்பும், அதற்குப் பின்னும்

(அ) பாபிலோனியர் காலம்: எட்டாம் நூற்றாண்டு இறைவாக்கினர் முன்மொழிந்த அழிவு ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிறைவேறியது. கி.மு. 597, 586 ஆம் ஆண்டுகளில் பாபிலோன் அரசராகிய நெபுகத்நேசர் நடத்திய படையெடுப்புக்களின் மூலம் எருசலேம் அழிவுற்றது. திருக்கோவில் தரைமட்டமானது, இஸ்ரயேல் அரசு முடிவுற்றது. யூதாவின் சிறப்பான குடிகளும் செல்வங்களும் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டுசெல்லப்பட்டன (24:1-25:21). எரே. 52:30இன்படி நெபுகத்நேசர் கி.மு. 582இல் மூன்றாவது தடவையாக, யூதேயாவிலிருந்து இன்னொரு யூதக்கூட்டத்தினரைச் சிறைபிடித்துச் சென்றார் என்று அறிகிறோம். இவ்வாறு, சிறையாகக் கொண்டுசெல்லப்பட்டவர்கள் தவிர வேறுபலர் தாங்களாகவே வேறு புகலிடங்களை நாடினர். இப்படிச் சென்றவர்களில் ஒரு கூட்டத்தினர் எகிப்திற்குப் போனார்கள் (2அர. 25:26; எரே. 42:43). இப்படியாக, கி.மு. 580ஆம் ஆண்டளவில் யூத மக்களில் ஒரு பெரும் பகுதியினர் பாபிலோனிலும், இன்னொரு பகுதியினர் பாலஸ்தீனாவிலும், வேறுபலர் எகிப்திலும், பிற நாடுகளிலும் பரவியிருந்தனர் என்று அறிகிறோம். இக்கால நிலையைப் பற்றி எரேமியா, புலம்பல், எசேக்கியேல், இரண்டாம் எசாயா ஆகிய நூல்கள் ஒருசில உண்மைகளை நமக்குத் தருகின்றன.

தூறையாடப்பட்ட பாலஸ்தீனா வெறுமையுற்றுக் காணப் பட்டது. மக்கள் பசியினாலும் பட்டினியாலும் வாடி மடிந்தனர் (புல. 2:11,12,19-21; 4:9,10). அங்கு மக்கட்தொகை குறைவாகவே காணப்பட்டது. அன்னாரை ஆள பாபிலோன் ஓர் ஆட்சியாளரை ஏற்படுத்தியிருக்கலாம்.

யூதாவின் வலுவற்ற நிலையை தங்களுக்குச் சாதகமாக்கி, அண்டைநாடுகள் அதனைச் தூறையாட எத்தனித்தன. அம்மோன் (எரே. 49:1-6; எசே. 25:1-7; செப். 2:8-10), ஏதோம் (எரே. 49:7-22; எசே. 25:12-14; 35:1-15; 36:1-5), மோவாபு (எசே. 25:8-11; செப். 2:8).

திருக்கோவில் அழிவுற்ற நிலையில் காணப்பட்டது. அதனைத் திரும்பக் கட்டும் வசதி மக்களுக்கு இல்லை. ஆதலால், மக்கள் யாவே வழிபாட்டினின்றும் பிறழலாயினர். மேடை வழிபாடுகள் இன்னமும் தொடர்ந்து நடத்தப்பட்டுவந்தன (எரே. 7:17-19, 6:13; 32:25). வேற்று தெய்வ வழிபாடுகளும் காணப்பட்டன (எசே. 6:6; 8:14,16). சமூக ஒழுக்கமும் கெட்டு காணப்பட்டது (5:5-10; 22:1-31; 33:21-29).

பாபிலோன் வாழ் யூதர் நிலையைப்பற்றி எசேக்கியேல் நூல் ஒரு சில உண்மைகளைத் தருகின்றது. சிறை சென்ற சில ஆண்டுகளுக்குள் யூதர்கள் எரேமியாவின் தூண்டுதலின் பேரில் (எரே. 29), நிலையை உணர்ந்து வேற்று நாட்டிலேயே தங்கள் வாழ்க்கையை நிலைப்படுத்தலாயினர். இவர்கள் பாபிலோனில் கேபார் ஆற்றின்கரை, தெலாபிபி, தெல்மெலாகு, தல்கர்சா, கெருபு, அத்தோன், இம்மோ (எசே. 1:1; நெகே. 7:61) ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்தனர். இக்காலத்தில் இவர்கள் வணிகத் துறையில் வளர்ந்தனர் என்று காணலாம். பலர் செல்வந்தராயினர் (எசுறா 2:64-67).

கி.மு. 721இல் அசிரியாவினால் கொண்டுவரப்பட்ட இஸ்ரயேலர் (2 அர. 18:9-11) பாபிலோனில் பல இடங்களிலும் காணப்பட்டனர். இம் மக்களுடன் யூதர்கள் இக்காலத்தில் உறவுகொண்டிருத்தல் வேண்டும். எசேக்கியேல் இவ்விரு சாரார் நடுவிலும் ஊழியம் செய்து வந்தாரெனக் காணலாம் (எசே. 16:53-58).

எகிப்துக்கு எரேமியாவுடன் சென்ற யூதர் அங்கு தகப்னகேசு (Tahpanhes) என்ற இடத்தில் தங்கினர் (எரே.43:7). ஏனையோர் மிக்தோல், நோபு, பத்ரோசு என்ற கீழ் எகிப்திய நகர்களில் தங்கினர் (44:1). மோவாபு, அம்மோன், ஏதோம் போன்ற அண்டை நாடுகளிலும் யூதர்கள் சிதறி வாழ்ந்துவந்தனரென்றும், அவர்களில் பலர் கெதலியாவின் காலத்தில் தாய்நாடு திரும்பினரென்றும் அறிகிறோம் (40:11மு.).

நெபுகத்நேசர் கி.மு.562இல் இறந்தார். அவருக்குப்பின் அவ ரைப்போல் உறுதியுள்ள அரசர் எவரும் எழவில்லை. பாபி லோனின் கடைசி அரசராகிய நபோனிதசு (கி.மு. 556- 539) பாரசீக அரசராகிய சைரசால் முறியடிக்கப்பட்டார். :கி.மு. 538இல் சைரசு பாபிலோனுக்குள் வெற்றி வீரராக நுழைந்தார்.

(ஆ) பாரசீகக்காலம்: கி.மு.539இல் பாபிலோன் வீழ, சைரசு பாரசீக வல்லரசின் தலைவராக அர்மீனியாவிலிருந்து பாலஸ்தீனா வரை பரந்து கிடக்கும் பெரிய ஒரு வல்லரசின் அரசரானார். இவர் பெரும் வெற்றிபெறுவதற்குக் காரணம், இவர் ஆட்சி முறையில் காணப்பட்ட சிறப்பே எனலாம்.

இதற்கு முன்னால் வந்த வல்லரசுகள் யாவும் தாங்கள் கைப்பற்றின நாடுகளை அழிப்பதிலும், அவற்றின் கலாசாரம், மொழி, சமயம் ஆகியவற்றை அப்புறப்படுத்துவதிலுமே தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தின. இப்படிச் செய்ததால், அவை அந்நாட்டு மக்களின் அதிருப்தியையே தேடிக் கொண்டன. சைரசின் ஆட்சிமுறை இவற்றினின்றும் முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. இவர், தாம் பிடித்தடக்கின நாட்டு மக்களுடைய சமயம், மரபானப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை மதித்து நடந்தார்.

அரசியல் அதிகாரம் முழுவதையும் தம் கைகளில் வைத்துக்கொண்டு, அந்தந்த நாட்டு மக்கள் தங்கள் தங்கள் பண்பாட்டையும், சமயத்தையும் வளர்க்க சைரசு உதவினார்; அந்நாட்டு மக்களுடன் தம்மையும் ஒருவராகக் காட்டிக் கொண்டார். இப்படியாக, இவர் பாபிலோனைப் பிடித்தபோது, தம் வெற்றி யாவும் பாபிலோனின் தெய்வமான மார்துக்கின் தயவினால் ஏற்பட்டதென்று கூறி, மார்துக்கைத் தம் தெய்வமாக ஏற்றுக்கொண்டார். இதனால், பாபிலோன் மக்கள் இவரைத் தங்களில் ஒருவராக எண்ணியிருத்தல் கூடும். இப்படியே, யூதர்களையும் மகிழ்ச்சியூட்டுவதற்காக யூதர்களின் கடவுளையும் மதித்து, அவர் கட்டளைக்கும் தாம் கீழ்ப்படிவதாகக் காட்டியதால் (எசுறா 1:1-4), யூதர்களின் நல்லெண்ணத்தையும் பெற்றுக்கொண்டார். அவர்கள், கடவுள் தங்களுக்கு ஏற்படுத்திய அவர்தம் அடியாரே சைரசு என்றெண்ணி நடக்குமளவிற்கு அவர்களது நல்லெண்ணத்தைப் பெற்றிருந்தார் (எசா. 44:28; 45:1). இத்தகைய கொள்கை பாரசீக ஆட்சி முழுவதி

லும் நீடித்திருந்ததெனலாம். சைரசுக்குப் பின்னால் எழுந்த பாரசீக அரசர்களும் இக் கொள்கையையே பின்பற்றினர். மக்களின் மொழியை ஆதரித்தனர்; அன்னார் சமய உணர்ச்சிகளை மதித்தனர்.

சைரசு கி.மு. 529இல் இறக்கவே, இவரின் மகன் காம்பீசஸ் (Cambyses) அரசரானார் (கி.மு. 529-522). இவர் காலத்தில் எகிப்து பாரசீக ஆட்சிக்குள் வந்தது. எகிப்திலிருந்து திரும்பும் வழியில் ஆரான் என்னுமிடத்தில் இவர் இறக்க நேரிட்டது. இவரைத் தொடர்ந்து முதலாம் தரியு (கி.மு. 518-486) புரட்சியொன்றை அடக்கித் தம் ஆட்சியை உறுதி செய்தார். இவர் தம் வல்லரசை இருபது மாகாணங்களாகப் பகுத்து, அம் மாகாணங்களின்மேல் ஆளுநர்களை நியமித்தார் (தானி. 6:2இல் 120 ஆளுநர்கள் என்று காண்கிறோம்). இந்த ஆளுநர்களுக்குச் சமுதாய நடப்புகளைக் கவனிக்கும் பொறுப்பு மட்டுமே கொடுக்கப்பட்டது. படைபலம் நேரடியாக அரசரின் கண்காணிப்புக்குள்ளேயே இருந்தது. இவர் காலத்தில் திருக்கோவில் கட்டப்பட்டதாக அறிகிறோம். (கி.மு. 520-516). இவர் கி.மு. 486இல் இறக்கவே, இவரின் மகன் முதலாம் செஸ்டா அரசரானார் (கி.மு.485-465). இவரை அர்த்தபானசு என்பவர் நஞ்சிட்டுக் கொன்றார். செஸ்டாவின் மகன் முதலாம் அர்த்தசெஸ்டா அர்த்தபானசைக் கொன்று அரசரானார் (கி.மு. 464-424). எசுறா, நெகேமியா நூல்கள் தரும் வரலாற்றின்படி, இவர் காலத்தில்தான் நெகேமியா, எசுறா ஆகியோரின் பணி நடந்தது.

இவருக்குப்பின், இரண்டாம் செஸ்டா (கி.மு.424), இரண்டாம் அர்த்தசெஸ்டா (கி.மு.359-338), மூன்றாம் தரியு ஆகியோர் அரசாண்டனர். கி.மு.334இல் அலெக்சாந்தர் கிழக்கு நோக்கிப் படையெடுத்து, கி.மு.330இல் மூன்றாம் தரியுவை முறியடித்தார். பாரசீக ஆட்சி இத்துடன் முடிவுற்றது; கிரேக்க ஆட்சி யூதர்களின் வரலாற்றில் இடம் பெறலாயிற்று.

பாபிலோன் வல்லரசைக் கைப்பற்றிய சைரசு கி.மு. 538இல் சிறையிலிருந்த யூதர்கள் தாங்கள் விரும்பினால் தாயகம் திரும்பலாமென்று ஓர் ஆணை பிறப்பித்தார். இந்த ஆணையின் முக்கியப் பிரிவுகள் இன்னவை என நமக்குத் தெரியாது (எசுறா 1:2-4). எசுறா நூல் தரும் வரலாறு அப்படியே நம்பகமானதன்று. இது குறிப்பேட்டின் ஆசிரியர் நோக்கத்திற்கிசைய சில மாற்றங்களையடைந்திருக்கலாம். எப்படியும் சைரசின் ஆட்சியில் யூதரின் விடுதலைக்கான ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. ஆனால், எசுறா 1:2-4 தரும் வகையில் சைரசு இந்த ஆணையைப் பிறப்பித்தாரா என்பதே சந்தேகத்திற்கிடமானது. உண்மை வரலாற்றின்படி, சைரசு, யூதர்கள் தாய்நாடு திரும்புவதற்கானதோர் ஆணையைப் பிறப்பித்திருத்தல் வேண்டும். திருக்கோவிலின் இடத்தை முக்கியப்படுத்த விரும்பிய குறிப்பேட்டின் ஆசிரியர், பின்னால் தம் நோக்கத்திற்கிசைய சில கூறுகளை இத்துடன் சேர்த்தார் எனல் பொருந்தும். உண்மை வரலாற்றின்படி, கோவில் பணி, ஆகாய், செக்கரியா காலங்கள் வரை (கி.மு. 520) துவங்கவில்லை என்பது இதனை உணர்த்தும்.

எப்படியும், சைரசு பிறப்பித்த ஏதோ ஓர் ஆணையின்படி, பாபிலோன் வாழ் யூதர்களில் பலர் சேஸ்பத்சாரின் தலைமையில் தாய்நாடு திரும்பினார்கள் (எசுறா 1:8-11). இப்படித் திரும்பியவர்கள் எத்தனைபேர் என்பது திட்டமாகத் தெரியாது. எசுறா 2, நெகே. 7 ஆகிய பகுதிகள் பிற்காலத்தில் எழுந்தனவாதலால், இவை தரும் எண்ணிக்கைகள் சந்தேகத்திற்கிடமானவை. அத்தனை திரளான மக்கள் பாலஸ்தீனாவுக்குத் திரும்பியிருக்க முடியாது. ஏனெனில், அக் காலத்தில் வாழ்ந்தவர்களில் ஒரு சிலர் மட்டுமே எருசலேமைக் குறித்த பழைய நினைவுடையவர்களாக இருந்திருத்தல் வேண்டும். அத்தகையோரும் நெடுந்தூரப் பயணத்திற்கு இயலாதவராய், முதியோராய் இருந்திருத்தல் வேண்டும். மேலும், பாபிலோனில் வாழ்ந்த யூதர்கள் வறுமையின்றி வாழ்ந்துவந்தனர். அன்னாருக்கு பாலஸ்தீனாவின் பாழடைந்த நிலை கவர்ச்சியாக இருந்திருக்காது. கோவில் வேலைக்குக்காக, ஒருவேளை, பொருளுதவிகள் செய்ததுடன் தங்கள் கடமைகள் தீர்ந்தனவென்று அன்னார் நிறைவடைந்திருக்கக்கூடும். எப்படியும் ஒரு சிலர் தாய்நாடு திரும்பினர் என்பது சந்தேகத்திற்கப்பாற்பட்டது.

இவர்கள் சேஸ்பத்சார் தலைமையில் புறப்பட்டனர். சைரசு இவரை ஆளுநராக ஆக்கியிருந்தார் (எசுறா 5:14). இவர் பொறுப்பு என்ன? இவர் என்ன செய்தார்? தாய்நாடு திரும்பிய யூதர்கள் உடனடி செய்ததென்ன? இவற்றைப்பற்றிக் குறிப்பேட்டு ஆசிரியர் தரும் வரலாற்றில் பல குழப்பங்கள் காணக் கிடக்கின்றன. இக் குழப்பங்களை மனத்தில்கொண்டு, எசுறா 1-6 தரும் விவரங்களை ஆராயும்போது, உண்மையில் தாய்நாடு திரும்பிய யூதர்களின் தொடக்கக் காலம் அவ்வளவு கவர்ச்சி நிறைந்ததாக இருக்கவில்லை என்பது புலப்படும். பெரிய எதிர்பார்ப்புகளுடன் வந்த மக்கள் (எசா.56:1-8; அதி. 60; 61; 62; 65:17-25) பல ஏமாற்றங்களை அடைந்தனர். நாட்டில் வறுமை தாண்டவமாடியது (ஆகாய் 1:9-11; 2:15-17). சமாரியருக்கும் யூதருக்குமிடையில் சமாதான உறவு காணப்படவில்லை (2:10-14). கோவில் பணி ஒருவேளை துவக்கப்பட்டிருந்தால் அதைத் தொடர்ந்து நடத்த மக்களுக்கு வசதியில்லை. சைரசு உதவியளிப்பதாக வாக்களித்தது உண்மையானால் அவ்வுதவி இன்னமும் கிடைக்கவில்லை (எசுறா 5:13முமு; 6:3-5). இதனால் சோர்வுற்ற பல மக்கள் சமய ஒழுக்கங்களை விட்டு வழுவி நடக்கலாயினர். சோர்வுற்றுக் காணப்பட்டனர் (எசா. 58:1-12; 59:1-11; 66:5). யாவேயின் குறுக்கிடலுக்காக மன்றாடினர் (செக். 1:12; திருப். 44:85).

இப்படிச் சோர்வுற்றுப் பின்வாங்கிப்போகும் நிலையிலிருந்த மக்களுக்கு ஆகாய், செக்கரியா இறைவாக்கினர் உற்சாகமூட்டி, கோவில் பணியைத் தொடங்க அன்னாரை ஏவியெழுப்பினர். இவர்களின் உற்சாகமூட்டும் இறைவாக்கினாலும், செருபாபேல், யோசுவா ஆகியோர் முயற்சியினாலும், பல எதிர்ப்புக்கள், நடுவிலும் கோவில் வேலை கி.மு.520இல் துவங்கி, கி.மு.516இல் முடிக்கப்பட்டது (எசுறா 5:1-6:18).

நெகேமியா பாரசீக அரசராகிய முதலாம் அர்த்த செஸ்டாவின் காலத்தில் (கி.மு.464-424) பணி செய்ததாகக் கொள்ளப்படுகிறது. இது உண்மையானால், இவர் கி.மு. 444இல் பாபிலோனிலிருந்து எருசலேம் திரும்பியிருத்தல் வேண்டும். எருசலேமின் அவல நிலையை அறிந்த இவர், அரசரின் அனுமதி பெற்று எருசலேமுக்கு நேர்ந்த அழிவை சீர்செய்வதற்காகத் தாய்நாடு திரும்பினார் (நெகே.1:4-2:8); அதைத் தொடர்ந்து யூதாவின் ஆளுநராகவும் நியமனம் பெற்றார் (5:14; 10:1).

சமாரியர் நெகேமியாவின் வருகையை விரும்பவில்லை. ஆதலால், இவருக்கு அதிகம் தொல்லைகொடுத்தனர் (2:10; 4:7; 6:1). இவை ஒன்றாலும் நெகேமியா சோர்ந்துபோகவில்லை.

எருசலேமுக்கு வந்த ஐம்பத்திரண்டு நாள்களுக்குள் எதிர்ப்புக்களனைத்தையும் சமாளித்து, அலங்கங்களைப் பழுதுபார்க்கும் வேலையை முடித்தார் (12:27-43). தம் சகோதரராகிய கனானியையும், கோட்டைத் தலைவராகிய கனனியாவையும் எருசலேமின் காவலுக்காக ஏற்படுத்தினார் (7:1-3). இப்படியாக, அலங்கம் நகருக்குப் பாதுகாப்பாகிவிட்டது. இனிமேல் இந்த அலங்கத்தைப் பாதுகாக்கக் கூடுதல் மக்கள் தேவை. ஆதலால், நெகேமியா அடுத்ததாக கூடுதலான மக்களைக்கொண்டு எருசலேமில் குடியேற்றினார் (7:4,5).

யூதேயாவுக்குத் தாம் வந்த பன்னிரு ஆண்டுகளுக்குப்பின், அதாவது, முதலாம் அர்த்தசெஸ்டாவின் முப்பத்திரண்டாவது ஆண்டில் (கி.மு. 432இல் 5:14; 13:6) நெகேமியா பாபிலோனுக்குத் திரும்பிச் சென்றார். சில நாள்களுக்குப்பின், அரசனிடத்தில் உத்தரவு பெற்று திரும்பவும் எருசலேமுக்கு வந்தார் (13:6மு.).

இம்முறை இவர் யூதாவின் சமய சீர்திருத்தத்தில் தம் கவனத்தைச் செலுத்தினார். இதைப்பற்றி நெகே. 13இல் காண்கிறோம். நெகேமியாவின் இறுதி நாள்களைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. ஒருவேளை இவரது பணி முடிவடையுமுன்பே எசுறா எருசலேமுக்கு வந்திருக்கலாம். இருவரும் சேர்ந்து சில காலம் பணியாற்றியிருக்கக்கூடும். குறிப்பேட்டு ஆசிரியர் தரும் வரலாற்றின்படி, நெகேமியா எசுறாவின் சீர்திருத்தத்தை ஆதரித்ததாக அறிகிறோம் (8:9; 10:1).

எசுறா ஆரோன் வழி வந்த சாதோக்கின் குருத்துவ வழிமரபில் பிறந்தவர் (1குறி. 6:3-14; எசுறா 7:1-5). திருச்சட்டத்தில் தேர்ந்த திருச்சட்ட அறிஞர் 7:6பி, 21). பாரசீக அரசரின் (அர்த்தசெஸ்டா) நல்லெண்ணத்துக்கு உகந்தவர் (7:6).

ஆண்டவருடைய திருச்சட்டத்தை ஆராயவும், அதன்படி செய்யவும், விதிமுறைகளையும் தீர்ப்புகளையும் இஸ்ரயேலில் போதிக்கவும், எசுறா தம் மனத்தை உறுதியாக்கினார் என்பதாகக் காண்கிறோம் (7:10). இவற்றைக் கவனிக்கையில் இவர் நெகேமியா செய்து விட்டுப்போன பணியையே தொடர்ந்து செய்யத் தம்மை அர்ப்பணித்தார் எனப் பார்க்கிறோம்.

தம் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான அதிகாரத்தை எசுறா அரசரிடமிருந்து பெற்றிருந்தார். எருசலேமுக்குப் போக விரும்புகிற யாவரையும் அழைத்துக் கொண்டு எருசலேமுக்குச் சென்று, கடவுளுடைய திருச்சட்டத்தின்படி யூதேயாவையும், எருசலேமையும் பற்றிய நிகழ்வுகளை விசாரணை செய்யவேண்டும் என்று அரசன் அனுமதியளித்ததுடன், எருசலேமில் குடியிருக்கிற இஸ்ரயேலின் கடவுளுக்கு அவரும், அவர்தம் மந்திரிமாரும் மனப்பூர்வமாய்க் கொடுத்த வெள்ளியையும், பொன்னையும், பாபிலோன் நாடெங்கும் கிடைக்கும் எல்லா வெள்ளியையும், பொன்னையும், சிறைமிருப்பிலுள்ள யூதர்கள் கொடுக்கும் காணிக்கைகளையும், எருசலேமுக்கு எடுத்துச் செல்ல எசுறாவுக்கு அதிகாரமளித்தார் (7:12-20). கோவில் பணியாட்களின்மேல் எத்தகைய வரியும் சுமத்தப்படக்கூடாது என்றும் அறிவிக்கப்பட்டது (7:24). இப்படியாக, எசுறாவினால் யூத சமூகத்தின் நியாய, நீதி, நிருவாகம் யாவும் அன்னாரின் திருச்சட்டத்தின் (Torah) அடிப்படையில் ஏற்படுவதற்கான ஒரு சூழல் எழுந்தது. திருச்சட்டம் வாழ்க்கையின் சட்டமாக்கப்பட்டது (7:13-8:12). இவ்வாறு எசுறா, நெகேமியா ஆகியோர் பணியால் யூதர்களுக்கு ஒரு நல்ல சமூக, சமய அமைப்பு கிடைத்தது.

(இ) கிரேக்க காலம் கி.மு. 330ஆம் ஆண்டளவில் கிரேக்க அரசராகிய அலெக்சாந்தர் பாரசீக மன்னராகிய மூன்றாம் தாரியுவை வென்று, கிழக்கு நாடுகள் யாவற்றின் மேலும் தம் ஆட்சியை நிறுவினார். கி.மு. 323இல் இவர் இறந்தார். இவருக்குப்பின், இவரின் கீழ் தளபதிகளாயிருந்த பலர் பதவிக்காகப் போட்டியிட்டனர். இவர்களில் நான்கு பேர் இறுதியில் ஆட்சியைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டனர். அந்திகோனஸ் என்பவர் மத்தியதரைக் கடலிலிருந்து மத்திய ஆசியா வரையுள்ள இடங்கள் மேலும், செசான்டர் மக்கதோனியாவிலும், தாலமி, லாகி, எகிப்து, தென் சிரியா நாடுகள் மேலும், லிசிமாக்கஸ் திரேசேயின்மேலும் ஆட்சி செலுத்தினர். குழப்பம் இன்னமும் தீர்ந்தபாடில்லை. தாலமியின் தளபதிகளில் ஒருவரான செலூக்கஸ் சிரியாவின் வடபகுதியில் ஆட்சி செலுத்தலானார். பாலஸ்தீனா எகிப்தின் ஆட்சிக்குள் இருந்தது. இதன்மேல் செலூக்கிய அரசர்கள் எப்பொழுதும் நோக்கமாயிருந்தனர். இதற்காக அடிக்கடி சண்டையிட்டும் வந்தனர். கடைசியாக மூன்றாம் அந்தியோகு என்னும் செலூக்கிய மன்னர் கி.மு. 199/8இல் பாலஸ்தீனாவைத் தம் வசமாக்கினார்.

செலூக்கிய ஆட்சியில் நான்காம் அந்தியோகு எப்பிப்பானசின் ஆட்சி யூதர்கள் வரலாற்றில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவந்தது (கி.மு. 175-164). இவர் யூதர்கள் சமய வாழ்க்கையில் அதிகமாகக் குறுக்கிட்டார். அன்னார் சமய ஆசாரங்கள் பலவற்றைத் தடை செய்து, திருக்கோவிலில் கிரேக்க தெய்வ வழிபாட்டைப் புகுத்தினார். கிரேக்க தெய்வங்களுக்குப் பலியிட மக்களை வற்புறுத்தினார். இவ் வேளையில் மோதீன் என்னும் சிற்றூரிலுள்ள மட்டத்தியா என்னும் குருவும், அவரின் புதல்வரும் எப்பிப்பானசிற்கெதிராகக் கலகம் செய்தனர். இதுவே மக்கபேயர் கலகம் எனப்படுகிறது.

மட்டத்தியாவின் மூத்த மகனான யூதாஸ் மக்கபேயுவின் தலைமையில் (கி.மு. 165-160) யூதர்கள் எப்பிப்பானசின் படைகளை கி.மு. 165இல் வென்று, கி.மு. 165ஆம் ஆண்டு டிசம்பர் (கிஸ்லேவ்) மாதம் 25ஆம் நாள் (எப்பிப்பானஸ் கோவிலை தீட்டுப்படுத்திய அதே நாளில்) திருக்கோவிலை தூய்மைப்படுத்தி அர்ப்பணம் செய்தனர் (1மக். 4:36-59). இதன் நினைவாகவே பிற்காலத்தில் அர்ப்பண விழாவென்னும் கனுக்கா விழாவை யூதர்கள் ஆசரித்துவந்தனர்.

இவ்வாறு, நெடுங்காலத்திற்குப்பின் யூதர்கள் ஓரளவு அரசியல் விடுதலையடைந்தனர். யூதாசுக்குப்பின் யோனத்தான் (கி.மு. 159-142), சீமோன் (கி.மு. 142-134) ஆகிய மக்கபேய சகோதரர்கள் தலைமை தாங்கி யூதர்களை நடத்தினர்.

சீமோனின் காலத்தில் முக்கிய நிகழ்ச்சியொன்று நடந்தது. மூன்றாம் ஒனியா என்னும் தலைமைக் குருவுக்குப்பின், முறையாக நியமனம் பெற்ற தலைமைக் குருக்கள் யூதர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆதலால், இந்த குருத்துவ மரபை ஒழுங்குபடுத்த மக்கள் விழைந்தனர். காஸ்மோனியர் என்னும் மக்கபேயர் குடும்பத்திலேயே இதை உறுதிப்படுத்த விரும்பினர். அப்படியே, சீமோன் முறையான தலைமைக் குருவாக ஏற்றுக் கொள்ளப்பட்டார் (1மக்.14:35-41). இப்படியாக, சீமோன் காலத்திலிருந்து யூதர்களுக்குள் குருத்துவமும் அரசாட்சியும் இணைந்ததோர் புதிய ஆளுகை உருவானது.

திருவிவிலியத் துணை நூல்

இது காஸ்மோனியர் ஆளுகை (Hasmonean kingdom) எனப்பட்டது.

இவ்வாளுகையின் இறுதி தலைமைக் குருவான இரண்டாம் அரிஸ்தோபுலஸ் (கி.மு.66-63) காலத்தில், உரோமை அரசரான பாம்பே எருசலேமை அழித்து, இந்த காஸ்மோனிய ஆட்சிக்கு ஒரு முடிவு கட்டினார். இப்படியாக, கி.மு. 63இல் யூதேயா, உரோமை மாநிலமாகிய சிரியாவின் ஒரு பகுதியானது.

கிரேக்க காலத்தில்தான் யூதர், சமாரியர் பிளவு உச்ச நிலையடைந்தது. கி.மு. 721இல் சிரிய அரசராகிய சார்கோன் II வடநாட்டை (இஸ்ரயேலை) அழித்து, இஸ்ரயேலரைச் சிறையாக எடுத்துச்சென்று அவர்களுக்குப் பதில் அசிரிய மக்களை அங்குக் குடியேற்றினார் என்று கண்டோம்.

வடநாட்டில் மீந்திருந்த இஸ்ரயேல் மக்கள் இந்த அசிரிய மக்களோடு கொள்வினை, கொடுப்பினைகொண்டு கலப்பு இனத்தவராயினர். இவர்களே சமாரியர் என்று பின்னால் அறியப்பட்டனர். தென்னாட்டாரான யூத மக்கள் சமாரியர் கலப்பு இனத்தவராதலால் அன்னாருடன் உறவு கொள்வதை நிந்தையெனக்கொண்டனர். இந்த நிலை சிறையிருப்புக்குப்பின், நெகேமியா, எசுறா காலத்தில் மேலும் மோசமானது.

இவ்வாறு, நெடுங்காலமாகப் புகைந்துகொண்டிருந்த நிலை, கிரேக்கக் காலத்தில் பற்றியெரியும் நிலையை எட்டியது. அலெக்சாந்தர் படையெடுப்பின்போது சமாரியர் கெரிசீம் மலையில் தங்களுக்கென்று தொழுகைத் தலமொன்றைக் கட்டிக்கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியுடன் சமாரியர், யூதர் பிளவு முடிவாக ஏற்பட்டது எனலாம் (கி.மு.128இல் இந்த கோவிலை யோவான் ·கிர்க்கானஸ் என்னும் காஸ்மோனிய அரசர் அழித்தார்).

இம்மட்டும் இஸ்ரயேலருடன் ஒரளவு தொடர்புகொண்டிருந்த சமாரியர் இதிலிருந்து தங்களை முழுவதுமாகப் பிரித்துக்கொண்டனர். தங்களுக்கான கோவிலுடன், தங்களுக்கான மறைநூலையும் அன்னார் வைத்திருந்தனர். இம் மறைநூலில் திருச்சட்டம் மட்டுமே (Torah) காணப்படுகிறது. இது சமாரியர் ஐந்நூல் (Samaritan Pentateuch) என்று அறியப்படுகிறது. இதிலிருந்து திருச்சட்டம் கனோன் அதிகாரம் பெற்ற பின், பிற நூல்கள் கனோன் அதிகாரம் பெறுவதற்கு முன் இப் பிளவு ஏற்பட்டது எனலாம். யோவான் 4:9இன் பின்னணி இதுவே.

இஸ்ரயேலரின் வரலாற்றைப் பற்றிய சில வரைக் குறிப்புக்களை மட்டுமே இக்கட்டுரையில் பார்த்துள்ளோம். முக்கியமான வரலாற்றுக் கட்டங்களையே சுட்டிக் காட்டியுள்ளோம். கூடுதல் விவரங்களுக்கு வாசகர்கள் இது தொடர்பான நூல்களை விவிலிய உண்மைகளுடன் இணைத்துப் படித்தல் நலம். மொத்தத்தில் வரலாற்றின் திருப்புமுனைகள், சிக்கல்கள் முதலியவற்றில் மும்முரமாகத் தலையிட்டு இறைவன் தங்கள் சமய-சமூகத்தை ஒரு நோக்குடன் நடத்திவந்தார் என்ற இஸ்ரயேலரின் உறுதிப்பாடு உலகின் ஏனைய மக்களினங்களும் தங்கள் வரலாற்றை ஒரு புதிய பார்வையுடன் அணுக உதவுகிறது எனலாம்.

துணை நின்ற நூல்கள்

1. Browne, L.G., *From Babylon to Bethlehem*, W. Heffer and Sons Ltd., Cambridge, 1951.
2. Noth, Martin, *The History of Israel*, Adam and Charles Black, London. Reprint, 1959.
3. Bright, John, *A History of Israel*, S.C.M. Press, London, 1960.
4. Snaith, N.H., *The Jews from Cyrus to Herod*, The Religious Education Press Ltd., Washinglon. Third Edition, 1963.
5. ஞான இராபின்சன், *இஸ்ரயேலரின் வரலாறு, இரண்டாம் பாகம்*, கிறிஸ்தவ இறையியல் இலக்கிய மன்றம், சி.எல்..எஸ்., சென்னை, 1967.
6. Peter Aleroyd, *Exile and Restoration*, SCM, 1976.
7. N.K. Gottwald, *Tribes of Yahweh*, Orbis: 1981.
8. D.S. Russel, *Between the Testaments*, SCM, 1970.
9. எ. சாம், *இஸ்ரயேலரின் வரலாறு - 1* த.இ.நூ.கு.
10. ஞான இராபின்சன், *இஸ்ரயேலரின் வரலாறு - 2*, த.இ.நூ.கு.
11. ஞான இராபின்சன், *இஸ்ரயேலரின் சமயம்*, த.இ.நூ.கு.

14

பழைய ஏற்பாட்டுக் கனோன்

சாமுவேல் அமிர்தம்

1. முன்னுரை

சில சமயங்கள் தங்கள் நம்பிக்கைக்கு அடிப்படையான மறை நூல்களை உடன்கொண்டு தோன்றியுள்ளன. வேறு சில, தங்களது வளர்ச்சிக் காலத்தில் மறை நூல்களைத் தோற்றுவித்தன. சமய நிறுவனர்களில் சிலர் இம் மறை நூல்களை எழுதி, நம்பிக்கைக்கு அடிப்படையான நூல்கள் இவைகளே என வரையறுத்துச் சென்றதுண்டு. அவர்களது காலம் சென்றபின் நூல்கள் தோன்றி, பிற்கால இறைத் தொண்டர்களால் வரையறுக்கப்பட்டதுமுண்டு. இசுலாம் சமயத்தின் குர்ஆன் நூல் முதல் வகையைச் சார்ந்தது. யூத, கிறிஸ்தவ சமயங்களின் விவிலியம் இரண்டாம் வகையைச் சார்ந்தது. மோசே முனிவரோ, இயேசு பெருமானோ சமய நூல்களை எழுதி வைத்துச் செல்லவில்லை (மோசேயின் காலத்தில் தோன்றிய சட்ட ஏடுகள் உண்டு). ப.ஏ.நூல்கள் இஸ்ரயேல் மக்கள் சமய வரலாற்றுக் கால அளவில் தோன்றியவை. சுமார் கி.மு. 10ஆம் நூற்றாண்டு முதல் இரண்டாம் நூற்றாண்டு வரை எழுதப்பட்டவையாகும். ப.ஏ. நூல்களும் இயேசு பெருமானின் உயிர்த்தெழுதலுக்குப்பின் கி.பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் எழுதப்பட்டன. எனவே, இச் சமயங்கள் நூல்களை ஆதாரமாகக்கொண்டு தோன்றாமல் சில வரலாற்று நிகழ்ச்சிகளின் அடிப்படையில் தோன்றின என்பது தகும். எகிப்தினின்று விடுதலை, சீனாய் மலையில் உடன்படிக்கை, கானான் நாட்டுக் குடியேற்றம் போன்ற இஸ்ரயேல் மக்களின் வரலாற்று நிகழ்ச்சிகள் அவர்களது சமய நம்பிக்கையின் அடிக்கற்களாயின. அதே போன்று இயேசு பெருமானின் வாழ்க்கை, சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவை கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிக்கற்களாயின. இயேசு பெருமானின் போதனை மட்டுமன்று, அவரது முழு வாழ்க்கையுமே கிறிஸ்தவ சமயத்தின் ஆதாரம் என்பது மீண்டும் கூறற்பாலது. இறைவனின் அருட்செயலை இந் நிகழ்ச்சிகளில் மக்கள் பக்திக் கண்ணால் கண்டனர்.

2. கனோன் உருவான முறை

துவக்க நிகழ்ச்சிகளின் வரலாறு, அவற்றின் மூலமாக வந்த இறை வெளிப்பாடு, மக்கள் இவற்றைப் புரிந்து கொண்ட முறைமை, பின் இவை பெற்ற விளக்கங்கள், மக்கள் இவற்றை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்த அல்லது கலகம் செய்த முறைகள், நாட்டு வரலாற்றில் வந்த வெற்றி - தோல்விகள், இறைவாக்கினர் போன்ற தொண்டர்கள் வெளிப்பாட்டைப் புதிதாக வழங்கியது, ஆகியவைகள் எழுதப்பட்டு நூல் வடிவம் பெற்றன. நூல்கள் பல தோன்றின. யூதத் திருச்சபையில் நெடுங்காலமாக இறை வழிபாட்டிலும், தனி பக்தி வாழ்க்கையிலும் இந்நூல்கள் பயன்படுத்தப்பட்டு சிறப்பிடம் பெற்றன. இவை அகத்தூண்டல் (inspiration) பெற்றவை என நம்பப்பட்டன. கால வெள்ள ஓட்டத்தில் இவற்றில் சில மறை நூல்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. விவிலியமெனும் தொகுப்பில் இடம் பெற வேண்டுமெனும் நோக்கத்துடன் ப.ஏ.இன் எந்த நூலும் எழுதப்படவில்லை (சீராக் என்பவரின் ஞானநூல் ஒன்றே இந் நோக்கத்துடன் எழுதப்பட்டது. ஆனால் அது விவிலியத்தில் இடம்பெற வில்லை). ப.ஏ. நூல்கள் எழுதப்பட்ட முறையன்று, எழுதப்பட்டபின் அவை எவ்வாறு விவிலியத்தில் இடம்பெற்றன, விவிலிய நூல்கள் இவை மட்டுமே என எவ்வாறு, எப்போது வரையறுக்கப்பட்டன என்பதையே நாம் இங்கு ஆராயத் துணிவோம். விவிலியம் என வரையறுக்கப்பட்ட நூல் தொகுப்பை ஆங்கிலத்தில் *Canon* எனவும் அவ்வாறு வரையறுக்கும் நிகழ்ச்சி முறையை *Canonisation* எனவும், ஒரு தனிநூல் இவ்வாறு பெற்ற சிறப்புத் தன்மையை *Canonicity* எனவும் கூறுவர்.

மறைநூல் எனும் சிறப்புடன் எந்த நூலும் எழுதப்படவில்லை எனக் கூறினோம்; வழக்கில் நிலவி வந்த நூல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரையறுக்கப்பட்டன என்றும் கண்டோம். இவ்வாறு நூல்கள் வரையறுக்கப்படத் தேவையானது யாது? தொகுக்கப்படக் காரணங்கள் எவை? விவிலியத்தில் ஒரு நூல் இடம்பெற அதன் தகுதி என்ன? எந்த அடிப்படையில் மக்கள் இந் நூல்களை தேர்ந்தெடுத்தனர்? இவ் வினாக்கள் எழும்புகின்றன. (1) அடிப்படைத் தொடக்க நிகழ்ச்சிகளும் அனுபவமும் தொடர்பான மக்களின் நினைவினின்று மாய்ந்துபோகாமல் பிற்கால வழிமரபினருக்கெனப் பாதுகாக்கப்பட (preservation) அவை எழுதப்பட்ட அதிகாரபூர்வமான நூல்கள் எவையென வரையறுக்கப்பட வேண்டியிருந்தன. (2) இந்த வெளிப்பாட்டைப் பெற்ற

குறிப்பு: கனோனுக்கு ஏற்ற சொல் தமிழில் தற்போது கிடையாததால் கிரேக்கச் சொல்லையே பயன்படுத்துகின்றோம். திருநூல் சட்ட வரையறுப்பு, திருநூல் சட்ட ஒழுங்கு, திருநூல் சட்டத் தொகுப்பு என்பவை கனோன் எனும் சொல்லின் ஒவ்வொரு கூறுகளையே காட்டும். கனோன் சொல் பொருளை புதிய ஏற்பாட்டுக் கனோன் எனும் தலைப்பில் காண்க.

மக்கள், அவை தூய்மையுடன் பாதுகாக்கப்படவேண்டுமென்று விரும்பினர் (Conservation). பிற உண்மைகள் கலந்து, பிற்கால விளக்கங்கள் உட்புகுந்து, வெளிப்பாடு திரிபின்றி பாதுகாக்கப்பட நம்பிக்கைக்கு அடிப்படையான நூல்கள் எவையென வரையறுக்கப்பட வேண்டியதாயிற்று. (3) இந்த நம்பிக்கை மரபில் வந்த மக்கள் அன்றாடக் கூட்டு, தனி வாழ்க்கையில் இவ்வெளிப்பாட்டுக்குக் கீழ்ப்பட்டு அடங்கி நடக்க விரும்பினர் (observe). தங்களது சமய நல்லொழுக்க நடத்தைக்கு அளவுகோலென சில நூல்களை ஏற்பது தேவையெனக் கண்டார்கள். சமூக - சமய வாழ்க்கையில், அமைப்பில் இறையதிகாரத்துடன் திட்டமான போதனையளிக்கும் நூல்கள் தேவைப்பட்டன. இவை நம்பிக்கை வழிகாட்டியாக, சட்டமாகச் செயல்படும். (4) நம்பிக்கைக்கு அடிப்படையான நிகழ்ச்சிகள் நிகழ்ந்த காலத்தில் எழுதப்பட்ட நிகழ்ச்சிகளும் அந் நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய மக்கள் எழுதிய நூல்களும் (எ.கா. மோசே எழுதினார் என நம்பப்பட்ட நூல்கள்) பிற்கால வரலாற்றில் உண்மை என மெய்ப்பிக்கப்பட்ட நூல்களும் (எ.கா. இறைவாக்கினரின் நூல்கள்) சிறப்பிடம் பெறுவதும் இயல்பே (nearness to original events). (5) பல நூல்கள் வழக்கிலிருந்து வருகையில், சில நூல்கள் அதிக பாராட்டும், பயனும், மதிப்பும் பெற்றன. இவை எளிதில் கனோனில் இடம் பெற்றன (usage and populatrity). கனோனில் இடம் பெற்றதால் ஒரு நூல் மதிப்புப் பெற்றது எனக் கூறாமல், ஏற்கெனவே மக்களிடையே மதிப்புப் பெற்றிருந்ததால் அது கனோனில் இடம் பெற்றது என்று கூறுவதே முறையாகும். (6) எந்த நூல்கள் இறைஅகதூண்டல் பெற்றவை (inspiration) என்று நம்பப்பட்டனவோ, அவைதாம் கனோனில் இடம் பெற்றன (2 தீமோ. 3:16). இதைக் குறித்து முதலாம் வத்திக்கான் மன்றம் கூறியதை நாம் ஒப்புக்கொள்ளலாம்: ஒரு நூலின் இறை அகதூண்டல பெற்ற தன்மையைத் திருச்சபை ஒப்புக் கொள்வதே அந்நூலின் கனோன் தன்மையாகும் (Canonicity is the acknowledgement by the Church of the inspired quality of a book).

மேற்கூறியவை பொதுப்படையாக உண்மையெனினும், சில குறிப்பிட்ட நூல்கள் எந்த காரணத்தால் இடம் பெற்றன, இடம் பெறவில்லையெனத் திட்டமாகக் கூறுவது கடினம். ஒரு சில குறிப்பிட்ட விதிகளைக்கொண்டு திருச்சபை கனோனை அமைக்காமல், தனது தன்மையைக் குறித்த சுய உணர்வினால் இதனைச் செய்தது என கார்ல் ரானர் (Karl Rahner) எனும் கத்தோலிக்க இறையியல் வல்லுநர் கூறுகின்றார் (The Canon is not so much a deduction based on certain principles, on the part of the Church as an act by which she adverts to another aspect of her being). திருச்சபையின் தன்மைக்கும் கனோனுக்கும் நெருங்கிய உறவு உளதென இதினின்று அறியலாம்.

3. கனோனில் இடம்பெற்ற நூல்கள்

கிறிஸ்தவ சீர்திருத்த சபை, யூதத் திருச்சபைப் மரபுகளின் படி, ப.ஏ. 39 நூல்களைக் கொண்டது. (எபிரேய மறைநூலில் ப.ஏ. என்பது கிறிஸ்தவத் திருச்சபை வழங்கிய பெயராகும்). இது தோரா (Torah) அல்லது சட்டநூல், நபீம் (Nebi"im) அல்லது இறைவாக்கினர், கெதூபிம் (Kethubim) அல்லது திருவெழுத்துக்கள் என மூன்று பகுதிகள் கொண்டது. இப்பகுதிகளின் பெயர்களின் முதலெழுத்துக்கள் சேர்ந்து யூதர்கள் மறைநூலை தனாக்கு (Tanakh) என்று குறிப்பிடுவதுண்டு. ஐஞ்சுருள் நூல்கள் முதற் பகுதியைச் சேர்ந்தவை யோசுவா, நீதித் தலைவர்கள், 1,2 சாமுவேல், 1,2 அரசர்கள் நூல்கள் ஆகிய முந்தைய இறைவாக்கினர் நூல்களும், எசாயா, எரேமியா, எசேக்கியேல், 12 இறைவாக்கினர் ஆகிய பிந்தைய இறைவாக்கினர் நூல்களும் இரண்டாவது பகுதியைச் சேர்ந்தவை (வரலாற்று நூல்கள் என நாம் எண்ணும் சில நூல்களை இறைவாக்கினர் நூல்களென யூதர் கருதியதைக் காண்க. கடவுளின் வரலாற்றுச் செயல்களை விளக்குவதே இறைவாக்கு என அன்னார் நம்பியதால் இப்பெயர் வரலாற்று நூல்களுக்கும் வழங்கப்பட்டது எனக் காண்க. இறைவாக்கினர் இந் நூல்களை எழுதினர் என்ற நம்பிக்கையும் இருந்திருக்கலாம்). திருப்பாடல், நீதிமொழிகள், யோபு, சிறப்பு பாடல், ரூத்து, புலம்பல், சபை உரையாளர், எஸ்தர், தானியேல், எசுறா, நெகேமியா, 1,2 குறிப்பேடு ஆகிய நூல்கள் திருவெழுத்துக்கள் என அழைக்கப்பட்டன.

உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை பயன்படுத்திவந்த ப.ஏ.இல் 46 நூல்கள் உண்டு. இந்தப் பட்டியல் கி.பி.4ஆம் நூற்றாண்டில் எரோம் ஆக்கிய லத்தீன் மொழிபெயர்ப்பாகிய வல்கத்தாவைச் (Vulgate) சார்ந்தது. தோபித்து, யூடித்து, சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம், பாருக்கும் எரேமியாவின் திருமுகமும், 1,2 மக்கபேயர் எனும் ஏழு நூல்களும், எஸ்தர் நூலையும், தானியேல் நூலையும் சேர்ந்த சில பகுதிகளும் இதில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந் நூல்களும் மனாசேயின் வேண்டல், 1,2 எஸ்திராஸ் ஆகிய நூல்களும் சேர்ந்து சீர்திருத்தச் சபையில் அப்போகிரிபா (apocrypha) எனும் பெயரால் அறியப்பட்டுவருகின்றன. கானோனுக்குப் புறம்பான நூல்களைத்தான் அப்போகிரிபா (மறைவு நூல்கள்) எனக் குறிப்பிடுவது வழக்கம். எனவே உரோமன் கத்தோலிக்கச் சபையில் மேற்கூறிய ஏழு நூல்களும் இணை கனோன் நூல்கள் (deutro Canonical) எனவும், சீர்திருத்த சபையின் 39 கனோன் நூல்கள் முதல கனோன் நூல்கள் (proto - canonical) எனவும் பெயர் பெறுகின்றன. கி.மு. 2ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட கிரேக்க மொழி பெயர்ப்பான செப்துவசிந்தில் அப்போகிரிபா நூல்களும், சாலமோனின் பாடல், இறைவேண்டல் பாடல்கள் (odes) எனும் நூல்களும் இடம் பெற்றன.

இவை தவிர ஏனோக்கு, யுபிலி 12 மூதாதையரின் ஏற்பாடு, சாலமோனின் பாடல், சாதோக்கிய ஏடு, மோசேயின் விண்ணேற்பு, எசாயாவின் பரத்துக்கேறல், IV எஸ்திராஸ், பாருக்கின் சிறிய திருக்காட்சி எனும் பாலஸ்தீனாவில் எழுதப் பட்ட நூல்களும், யூத சிபில் (குறிசொல் விளக்க நூல்கள்), III மக்கபேயர், IV மக்கபேயர், III எஸ்திராஸ், ஸ்லாவிய ஏனோக்கு, எரேமியாவின் குறிப்பேடு, யோபின் ஏற்பாடு, சாலமோனின் ஏற்பாடு, எலியாவின் ஏற்பாடு, செப்பனியாவின் ஏற்பாடு, எசேக்கியாவின் அப்போகிரிபா நூல்கள், ஆதாம் - ஏவாளின் வாழ்க்கை, ஆபிரகாமின் தரிசனம், ஆபிரகாமின் அப்போகிரிபா, அசெனாத்தின் நூல் போன்றவை, போலி நூல்கள் அல்லது உண்மை ஆசிரியர் அறியா நூல்கள் (Pseud-epigrapha) எனும் பெயராலும் அறியப்பட்டு வருகின்றன. உரோமன் கத்தோலிக்க சபையில் இவற்றை அப்போகிரிபா என அழைத்தனர். கும்ரான் குகையில் கண்டெடுக்கப்பட்ட வேறு நூல்களும் உள. இவ்வாறு ப.ஏ.இல் இடம்பெறாத யூத சமய நூல்களும் உள என்பதைக் காண்க. இந் நூல்களில் பெரும்பாலும் மரபுவழிவரும் கற்பனைக் கதைகளும், பக்திக் கதைகளுமே இடம்பெற்றுள்ளன. மக்கபேயர் போன்ற நூல்களில் யூத மக்களின் பிற்கால வரலாற்றைக் காணலாம். சாலமோனின் ஞானநூலும், சீராக்கின் ஞானநூலும் நீதிமொழிகள் நூலை ஒத்திருக்கின்றன.

தெளிவு பெறும் பொருட்டு எபிரேய, கிரேக்க, இலத்தீன் தமிழ் மறைநூல்களை வரிசைப்படி கீழே தருகின்றோம்:

சட்டநூல்கள் (தோரா) 5

பாலஸ்தீனா. ப.ஏ.	செப்துவசிந்து. அலெக்சாந்திரியா.ப.ஏ.
எபிரேயம்	கிரேக்கம்
தொடக்கநூல்	தொடக்கநூல்
விடுதலைப்பயணம்	விடுதலைப்பயணம்
இலேவியர்	இலேவியர்
எண்ணிக்கை	எண்ணிக்கை
இணைச்சட்டம்	இணைச்சட்டம்

முந்தைய இறைவாக்கினர் 4 (நபீயிம்)

யோசுவா	யோசுவா
நீதித்தலைவர்	நீதித்தலைவர்
1 சாமுவேல்	1 அரசர்கள்
2 சாமுவேல்	2 அரசர்கள்
1 அரசர்கள்	3 அரசர்கள்
2 அரசர்கள்	4 அரசர்கள்

பிந்தைய இறைவாக்கினர் 11

எசாயா	1 குறிப்பேடு
எரேமியா	2 குறிப்பேடு
எசேக்கியேல்	1 எஸ்ட்றா (கிரேக்க எசுறா)
ஒசேயா	2 எஸ்ட்றா (எசுறா, நெகேமியா)
மலாக்கி	எஸ்தர்
	யூதித்து
	தோபித்து
	1 மக்கபேயர்
	2 மக்கபேயர்
	3 மக்கபேயர்
	4 மக்கபேயர்

திருவெழுத்துக்கள் 11 (கெதூபிம்)

திருப்பாடல்கள்	திருப்பாடல்கள்
நீதிமொழிகள்	இறைவேண்டல் பாடல்கள்
யோபு	(மனாசேயின் இறை வேண்டல் அடங்கியது)
சிறப்புமிகு பாடல்	நீதிமொழிகள்
சூத்து	சபை உரையாளர்
புலம்பல்	சிறப்புமிகு பாடல்
சபை உரையாளர்	யோபு
எஸ்தர்	சாலமோனின் ஞானம்
தானியேல்	சீராக்கின் ஞானம்
	சாலமோனின் பாடல்கள்
	ஒசேயா, மலாக்கி
	எசாயா
	எரேமியா
	பாருக்கு
	புலம்பல்
	எரேமியாவின் கடிதம்
1 குறிப்பேடு	எசேக்கியேல்
2 குறிப்பேடு	சூசன்னா
	தானியேல் (மூன்று தூய பாலகரின் பாடல் அடங்கியது)
	பேலும் வலுப் பாம்பும்
(24 நூல்கள்)	(48 நூல்கள்)

இலத்தீன்(வல்கேட்)	தமிழ்
தொடக்கநூல்	தொடக்கநூல்
விடுதலைப்பயணம்	விடுதலைப்பயணம்
இலேவியர்	இலேவியர்
எண்ணிக்கை	எண்ணிக்கை
இணைச்சட்டம்	இணைச்சட்டம்
யோசுவா	யோசுவா
நீதித் தலைவர்கள்	நீதித் தலைவர்
சூத்து	சூத்து
1 அரசர்கள்	1 சாமுவேல்
2 அரசர்கள்	2 சாமுவேல்
3 அரசர்கள்	1 அரசர்கள்
4 அரசர்கள்	2 அரசர்கள்
1 குறிப்பேடு	1 குறிப்பேடு
2 குறிப்பேடு	2 குறிப்பேடு
1 எசுறா (எசுறா)	எசுறா
2 எசுறா (நெகேமியா)	நெகேமியா
தோபித்து	
யூதித்து	
எஸ்தர்	எஸ்தர்
யோபு	யோபு
திருப்பாடல்கள்	திருப்பாடல்கள்
நீதிமொழிகள்	நீதிமொழிகள்
சபை உரையாளர்	சபை உரையாளர்
சிறப்புமிகு பாடல்	சிறப்புமிகு பாடல்
சாலமோனின் ஞானம்	
சீராக்கின் ஞானம்	
எசாயா	எசாயா
எரேமியா	எரேமியா
புலம்பல்	புலம்பல்
பாருக்கு	
எசேக்கியேல்	எசேக்கியேல்
தானியேல் (தூய பாலகர் பாடல்)	தானியேல்
சூசன்னா, பேலும் வலுசர்ப்பமும்	
ஒசேயா, மலாக்கி	ஒசேயா, மலாக்கி
1 மக்கபேயர்	
2 மக்கபேயர்	
(46 நூல்கள்)	(39 நூல்கள்)

தள்ளுபடியாகமங்களைத் தவிர ஆங்கில, தமிழ் ப.ஏஇன் நூல் வரிசை இலத்தீன் நூலைச் சார்ந்ததெனக் காண்க. இலத்தீனின் தமிழ் மொழிபெயர்ப்பே உரோமன் கத்தோலிக்கருடைய ப.ஏ. ஆகும்.

4. கனோன் வளர்ச்சியின் மூன்று படிகள்

கனோன் வளர்ச்சியை மூன்று படிகளாகப் பகுக்கலாம். (1) நூல்கள் எழுதப்பட்டு சமய வாழ்க்கைக்கு அதிகாரமுடையவை எனும் சிறப்புப் பெறல் (2) சிறப்புப் பெற்றபின் திருச்சட்டம், இறைவாக்கினர் எனும் தொகுப்புகளாக அமைதல். (3) திட்ட மாகக் கனோன் வரையறுக்கப்படல். திருச்சட்டநூல்கள்தாம் முதலாவது கனோன் சிறப்புப் பெற்றன; பின் இறைவாக்கினர் நூல்கள் தொகுக்கப்பட்டு வரையறுக்கப்பட்டன. திருவெழுத்துக் கள் எனும் மூன்றாவது பகுதிதான் முற்றிலும் வரையறுக் கப்படாமல் நீண்ட காலம் வரை அந்நிலையில் இருந்துவந்தது.

திருச்சட்ட நூல்கள்: தொடக்க நூல்களில் அடங்கியுள்ள மிரியாமின் பாடல் (விடு. 15:21), தெபோராளின் பாடல் (நீதித். 5), இலாமேக்கின் பாடல்கள் (தொட. 4:23) போன்ற பகுதிகள் மிக மிகத் தொன்மை வாய்ந்தவை (கி.மு. 13-12ஆம் நூற்றாண்டு). உடன்படிக்கைச் சட்டம் (Covenant Code - விடு. 21-23), வழிபாட்டுப் பத்துக் கட்டளை (ritual decalogue - 34:17-26), பத்துக் கட்டளைகள் (20) போன்ற சட்டத்தொகுப்புகளும் மிகப் பழமையானவை. இஸ்ரயேல் மக்களின் மரபுகளிலும் நினைவிலும் நிலவிவந்ததும், சிறு ஏட்டுத் தொகுப்புகளாக அறியப்பட்டு வந்ததுமான இவ்விதப் பாடல்கள், சட்டங்கள், உண்மைகள், பக்தி வரலாற்றுக் கதைகள், வரலாற்று நிகழ்ச்சிகள் ஆகியவற்றை முதலாவது J ஆசிரியர் குழாம் (J=Jahwist - யாவே எனும் பெயரை ஒழுங்காகப் பயன்படுத்தியதால் இப் பெயர் பெற்றனர். ஐஞ்சுருள் நூல்களின் வளர்ச்சி காண்க). சுமார் கி.மு. 9ஆம் நூற்றாண்டில் தொகுத்து தற்போதிருக்கும் ஐஞ்சுருள் நூல்களின் அமைப்பை வகுத்தனர் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அது போன்று 8ஆம் நூற்றாண்டில் E ஆசிரியர் குழாம் (E=Elohist - எலோகிம் எனும் இறைப்பெயரைப் பயன்படுத்தியதால் இப்பெயர்), 7ஆம் நூற்றாண்டில் D ஆசிரியர் குழாம் (D=Deuteronomist - இணைச்சட்ட நூல் ஆசிரியர். 2 அர. 22.8இல் இணைச்சட்ட நூல் கண்டெடுக்கப்பட்ட வரலாற்றைக் காண்க). 5ஆம் நூற்றாண்டில் P ஆசிரியர் குழாம் (P=Priestly - குருத்துவத்திற்கு முதலிடம் கொடுப்பதால் இப்பெயர்) ஆகியோர் எழுதின வரலாறு களும் அவைகளின் இறையியல் விளக்கங்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு, பதிப்பிக்கப்பட்டு ஐஞ்சுருள் நூல்கள் உருவெடுத்தன. கி.பி. 5ஆம்/4ஆம் நூற்றாண்டு வரையளவில்தான் இந்த ஐந்து நூல்களும் தற்போதைய வடிவம் பெற்று திருச்சட்ட நூல்களென அங்கீகரிக்கப்பட்டன. எசுராவும் அவரைச் சேர்ந்த குருக்களும் இதற்குத் துணையா யிருந்தனர் (எசுரா. 7:14; நெகே. 8:1). சுமார் கி.மு. 350இல் எழுதப்பட்ட குறிப்பேட்டு நூல்களில் இச் சட்டமுறைமைகள் ஒப்புக்கொள்ளப்பட்டு, முந்தைய கால முறைமைகளும் இவற்றிற்கிசைய மாற்றியமைக்கப்பட்டி ருப்பதால் சட்ட நூல்கள் மறை நூலென இக்காலத்திற்கு முன் ஒப்புக் கொள்ளப்பட்டன எனக் காணலாம். மேலும், சமாரியரும் இந்த ஐந்து நூல்களை மறை நூல்களென ஏற்றுக்கொண்டதால் சமாரியரின் பிரிவு நிகழுமுன்னே (சுமார் கி.மு. 300) இந்நூல்கள் விவிலியத்தில் இடம் பெற்றனவென்று காண்க. சமாரிய ஐஞ்சுருள் நூல்களின் எழுத்து வடிவத்தை ஆய்ந்த கிராஸ் பண்டிதர் (F.H. Cross) இவை இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை என்கிறார். எனவே இதன் அடிப்படையில் முன்னே எண்ணிவந்ததுபோல ஐந்தாம் நூற்றாண்டில் சமாரியப் பிரிவு நடைபெறவில்லையெனலாம். மூன்றாம் நூற்றாண்டில் ஐஞ்சுருள் நூல்கள் அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த யூதருக்கென கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டதெனவும் அறிவோம். எனவே ஐஞ்சுருள் நூல்கள் இக்காலத் திற்குமுன் கனோனில் இடம் பெற்றன என்று கூறலாம்.

இறைவாக்கு நூல்கள்: யூத மரபில் யோசுவா, நீதித் தலை வர்கள், சாமுவேல், அரசர்கள் நூல்கள் முந்தைய இறைவாக் கினர் எனும் பெயரால் அறியப்பட்டுவருகின்றன. தற்கால ஆய்வாளர்கள் இணைச்சட்ட வரலாறு (Deuteronomic History) எனும் பெயரால் இந்நூல்களைக் குறிக்கின்றனர். தாவிது, சாலமோன் காலந்தொட்டு, அரண்மனை வரலாற்று எழுத்தாளர்களாலும் இறைவாக்கினர் குழாங்களாலும் இவை எழுதப்பட்டன. இந்நூல்களைப் படித்துப் பார்க்கையில் வேறு பல நூல்களைக் கலந்து இவை எழுதப்பட்டன எனக் காணலாம். எ.கா. யாஷார் நூல் (யோசு. 10:13), இஸ்ரயேல் யூதா அரசர் களின் குறிப்பேடு நூல்கள் (1 அர. 14:29; 15:7, 31; 16:5), நாத்தான், அகியா, சேமாயா, முன்னுரையாளர் இத்தோ எனும் பெயர்களின் திருச்சாட்சி (2 குறி. 9:29; 12:15; 13:22). எனவே இறைவாக்கினர் எழுதின நூல்கள் எல்லாம் விவிலி யத்தில் இடம் பெற்று பாதுகாக்கப்பட்டன எனக் கூறுவதற்கில்லை. இவையெல்லாம் புனித நூல்களாகக் கருதப்பட்டு வீழ்ந்தன. ஆனால் எருசலேமின் அழிவு, சிறையிருப்புக் காலங்களில் இவை அழிந்து போயிருக்கவேண்டும். சிறையிருப்புக்கு முன் எழுதப்பட்ட நூல்களில் விவிலியத்தில் இடம் பெறாத நூல் ஒன்றுமில்லை. மேற்கூறிய நூல்கள் அழியாமல் பாதுகாக்கப்பட்டிருந்தால் விவிலியத்தில் இடம் பெற்றிருக்கும் எனலாம்.

ஆமோஸ் (750) முதல் யோவேல், மலாக்கி, யோனா எனும் பிறகாலத்திய இறைவாக்கினர் வரையுள்ள நூல்கள் ப.ஏ.இன் ஒழுங்கின்படி ஓசேயா - மலாக்கி பிந்தைய இறைவாக்கினர் என யூத மரபில் அறியப்பட்டு வருகின்றன. இவை அந்தந்த இறைவாக்கினராலும் அவர்களின் சீடர்களாலும் (எரே. 36: 4; எசா. 8:16) எழுதப்பட்டன. இறைவாக்கினர் இறைவாக்கு உரைத்த காலத்தில் மக்கள் இவைகளை மதிக்கவில்லை ஆமோசு 7:10-14; எசா. 8:16; எரே. 20:7-18). என்றாலும் சமாரியா, எருசலேம் அழிவிற்குப் பின்னர் இந்த இறைவாக் குகள் நிறைவேறினை என மக்கள் கண்டபோது, புதுபக்தியுட னும், புது மதிப்புடனும் இந் நூல்களைப் பாராட்டிப் பாதுகாத்தனர். சின்ன இறைவாக்கினர் பன்னிரண்டு நூல்களையும் ஒரே நூலென எபிரேயத்தில் எண்ணி வந்தனர். எனவே எபி ரேயத்தில் எசாயா, எரேமியா, எசேக்கியேல், 12 இறைவாக்கினர் என்று மொத்தம் நான்கு சுருள்கள் நான்கு நூல்களாக எண்ணப்பட்டன. சீராக்குவின் மகனான இயேசுவின் ஞான நூலில் பன்னிரண்டு இறைவாக்கினர் (49:10) குறிப்பிடப்பட்டதைப் பார்க்கின்றோம். எனவே, இக் காலத்திலேயே 12 சின்ன இறைவாக்கினரின் நூல்தொகுப்பு முடிவுற்றது என நாம் கருதலாம்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இறைவாக்கு நூல்கள் அனைத்தும் திருநூல்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டி ருந்தன. தானியேல் நூலைப் படிக்கையில் (தானி. 9:2) எரேமியா ஏற்கெனவே நூல் வடிவம் பெற்றிருந்ததென அறிகிறோம். திருச்சட்டங்களும் இறைவாக்குகளும் ஆகிய இருபகுதிகளும் சேர்ந்து 2 மக்கபேயர் 15:9இலும், சீராக்கு நூல் முன்னுரையிலும் கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம். எசேக்கியேல் நூலைக் குறித்து தால்மூடு எனும் யூத மரபு விளக்க நூலில் (கி.பி. 2ஆம் நூற்றாண்டு) சில தடைகள் கூறப்பட்டுள்ளன. எனவே, எல்லாராலும் எல்லா நூல்களும் அங்கீகரிக்கப்படவில்லையெனினும், பொதுவாகக் கூறுமிடத்து இறைவாக்கு நூல்களின் தொகுப்பு கி.மு. 2ஆம் நூற்றாண்டில் முற்றுப் பெற்றதென்றே கூறவேண்டும்.

ப.ஏ.இன் மூன்றாம் பகுதியான பிற நூல்களைப் பொறுத்த வரையில் அவை எப்போது கனோனில் இடம்பெற்றன எனத் திட்டமாக நாம் கூறமுடியாது. பெரும்பாலான நூல்கள் சிறை யிருப்பின் பின்னரே எழுதப்பட்டன. சில திருப்பாடல்கள் மிகத் தொன்மையானவை (எ.கா. திருப்பாடல் 29-13ஆம் நூற் றாண்டு). ஆனால் வேறு சில சிறையிருப்புக்குப் பிந்தையவை யாகும். (எ.கா. 137ஆம் திருப்பாடல். சில கி.மு. பிந்தைய நூற் றாண்டுகளைச் சேர்ந்தவை - திருப். 19). தானியேல், எஸ்தர் நூல்கள் கி.மு. 2ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை. இந் நூல்களை மறைநூல்களாகக் கருதுவதா, இல்லையா என கிறிஸ்துவிற்குப் பின்னான நூற்றாண்டுகளிலும் விவாதங்கள் நடந்திருக்கின்றன; கருத்து வேற்றுமைகளும் இருந்திருக்கின்றன.

திருவெழுத்துக்கள்: சீராக்கு நூலின் முன்னுரை ஆசிரியர் (சீராக்கின் பேரன்) கி.மு. 117இல் திருச்சட்டத்தையும் இறை வாக்கு நூல்களையும் நம்முடைய மூதாதையரின் மற்ற நூல்களை யும் குறித்துப் பேசுகின்றார். மற்றத் திருநூல்கள் இருந்தன வென்று உணர்வதுடன் அவை எவையென பின்வரும் குறிப்பு களினின்றும் அறியலாம். 2 மக்கபேயர் 15:9இல் மற்றத் திரு நூல்களை எதிர்பார்க்குமிடத்தில் குறிப்பு ஒன்றுமில்லை (கி. மு. 100). நீதிச்சட்டங்களையும் இறைவாக்குகளையும் கொண்டு, அவர்களைத் திடப்படுத்தி, முன்னே வெற்றியாக முடிந்த நூல் களை நினைப்பூட்டி அவர்களை திடப்படுத்தினார் எனப்பட்டது. கி.பி. முதல் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்களில் முதன் முதலாக இந் நூல்களின் பெயர்களைப் பார்க்கலாம். லூக். 24:44இல் நீதிச் சட்டங்கள், இறைவாக்குகள், திருப்பாடல்கள் என எழுதப்பட்டுள்ளன. திருப்பாடல்கள் நூல் அல்லது திருப் பாடல்கள் நூலை முதல் நூலாகக் கொண்ட தொகுப்பு ஒன்று இக்காலத்தில் கனோனில் இடம்பெற்றிருந்ததெனக் காண்க. மேலும் பைலோவும் (Philo- கி.பி. முதல் நூற்றாண்டில் அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த ஒரு யூத மெய்யியல் ஆசிரியர்), திருச்சட்டம், இறைவாக்கினர், திருப்பாடல்களுடன் அறிவும் பக்தியும் பெருகி முழுமை பெற உதவக்கூடிய பிற நூல்கள் (De vita Contemp-3:25) எனக் குறிப்பிடுவதினின்று இவ்வுண்மை புலனாகின்றது. யோசிபஸ் இதைக் குறித்து- எழுதுங்கால் 5 சட்ட நூல்கள், 13 இறைவாக்கினர் நூல்கள், கடவுளுக்குப் புகழும், வாழ்க்கைக்கு அறிவுரைகளும் அடங்கிய 4 நூல்கள் என்கிறார் (Ag. Apion 1:7 முதல்). திருப்பாடல், நீதிமொழிகள், சிறப்புமிகு பாட்டு, சபை உரையாளர் என்பவைதான் இந் நான்கு நூல்கள் என்பது சில ஆராய்ச்சியாளரின் கருத்து. தால்முடில் (B.C. 75) இரபி சிமியோன், பென்சொடாக், ச.உ. 7:10; நீதி. 23:25 ஆகிய வாக்கியங்களை மேற்கோளாகக் கூறும் போது, திருவெழுத்துக்கள் கூறுகின்றன என விளக்குகின்றார். திருவெழுத்துக்கள் (Writing) எனும் பெயரும் இந் நூல்களுக்குத் தால்முடில்தான் (Bala Bathra 14b) முதன் முதலில் வழங்கப் பட்டது. கி.மு. முதல் நூற்றாண்டில பிற நூல்கள் அறியப்பட்டதால் யூதத் திருச்சபை இன்னும் இந் நூல்களைத் தொகுத்துத் திட்டமாக வரையறுக்கவில்லையென்பது தெளிவு. மேலும், பிற நூல்கள் பெற்றிருந்த மதிப்பையும், செல்வாக்கையும் இந் நூல்கள் பெறவில்லை எனவும் கூறலாம். எஸ்தர், சிறப்பு மிகு பாடல் ஆகிய நூல்கள் ஏற்கப்படுவதைக் குறித்துச் சில வட்டாரங்களில் கருத்துவேற்றுமை இருந்திருக்கிறது. எஸ்தர் நூலில் கடவுள் எனும் சொல்லே இல்லை. ஆனால் யூத மக்களுக்கு கடவுள் அளித்த வெற்றியை விவரிப்பதால், அது ஏற்றுக் கொள்ளப்பட்டதென்க. சிறப்புமிகு பாடல் நூலுக்குத் தொடர் உருவக முறையில் ஆன்மிக விளக்கம் அளிக்கப்பட்டு, அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் சிறப்புமிகு பாடல் பாஸ்காப் பண்டிகையிலும், ரூத்து வாரப் பண்டிகையிலும், புலம்பல் ஆப் மாதம் 9ஆம் நாள் பண்டிகையிலும், சபை உரையாளர் கூடாரப் பண்டிகையிலும், எஸ்தர் பூரிம் விழாவிலும் வாசிக்கப்பட்டு வந்தமையால் கனோனில் இடம்பெற்றன எனக் கூறலாம். குறிப்பாக ஒருநூல் கனோனில் இடம்பெற அல்லது பெறாமலிருக்கக் காரணங்கள் கூறுவது கடினம். எசுறாவின் காலத்திற்குப் பிந்தைய நூல் ஒன்றும் சேர்க்கப்பட வில்லையென தால்முடில் (Bala Bathra 14b-15b) கூறப்படு கின்றது. சட்டநூல் இறைவாக்கினர் நூல்களில் அவை இடம் பெற அழியாமலிருந்ததே (Survival) தகுதி எனவும், புற நூல் களுக்கு ஆசிரியர் பெயர் மறைவு நிலை தான் (anonymity) தகுதி எனவும் சில ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். நாம் முன்னே கூறிய காரணங்களையும் நினைவில் கொள்க.

2 எஸ்திராஸ் 14:44-48இல் யூதர் வெளியரங்கமாய் ஏற்றுக்கொண்ட நூல்கள் 24 எனப் பார்க்கின்றோம்: இவ்வாறாக, நாற்பது நாள்களுக்குள் தொண்ணூற்று நான்கு நூல்கள் எழுதப்பட்டன. நாற்பது நாள் நிறைவேறினபின்பு, உன்னதர் என்னை நோக்கி, முதலாவது எழுதின நூல்களைப் பாத்திரர், அபாத்திரர் எல்லாரும் வாசிக்கும்படி வெளியரங்கமாய் அறிவி. கடைசி எழுபது நூல்களையோ உன் மக்களில் ஞானிகளுக்கு ஒப்புவிக்கும்படி நீ வைத்துக் கொள். ஏனெனில் அவற்றில் அறிவின் ஊற்றும், ஞானத்தின் கனையும், நுண்மதியின் ஆறும் இருக்கின்றன என்றார். நான் அப்படியே செய்தேன்.

யோசிபஸ் எனும் யூத வரலாற்று ஆசிரியர் (கி.பி. முதலாம் நூற்றாண்டு) மறைநூல்கள் 22 என எழுதுகின்றார். ஒன்றுக்கொன்று ஒவ்வாததும் மாறுபட்டதுமான எண்ணற்ற நூல்கள் எங்களுக்கில்லை (கிரேக்கருக்கிருப்பதைப்போல). பண்டைக் காலங்களின் நிகழ்ச்சி அறிக்கைகளைக் கொண்ட 22 நூல்களே எங்களுக்கு உண்டு. அவை தெய்வீகத் தன்மையுடையன என்று நம்பப்பட்டுவருகின்றன. அவற்றில் ஐந்து மோசேயின் நூல்கள். அவற்றில் சட்டங்களும், மனுக்குலத்தின் தொடக்கம் முதல், மோசேயின் இறப்பு மட்டுமுள்ள சுமார் 3000 ஆண்டுகள்-மரபுகளும் அடங்கியுள்ளன. மோசேயின் இறப்பு முதல் பாரசீக அரசனான கொர்ஸிக்குப்பின் ஆண்ட அர்த்தசெஷ்டா வரை நிகழ்ந்தவற்றை இறைவாக்கினர் 13 நூல்களில் எழுதி வைத்தனர். எஞ்சிய நூல்களில் கடவுளுக்குப் புகழ் பாடல்களும் மனித வாழ்க்கையின் நன்னடத்தைக்கு அறிவுரைகளும் உண்டு. அர்த்தசெஷ்டாவுக்குப்பின் எங்கள் வரலாறு எழுதப்பட்டுள்ளது. ஆனால் மூதாதையரின் முந்தைய நூல்களைப்போல அவைகளுக்குச் சிறப்பு இல்லை. ஏனெனில் இறைவாக்கினர் இக் காலத்தில் இடைவிடாமல் எழும்பவில்லை. சென்ற ஆண்டுகளில், அவற்றினின்று எதையாவது குறைக்கவோ, மாற்றவோ எங்களில் எவரேனும் துணிந்ததில்லை. இந் நூலில் தெய்வீகக் கொள்கை அடங்கியுள்ளது என நம்புவதும், அதைக் கடைப்பிடிப்பதும், தேவைப்பட்டால் அவற்றிற்காக உயிர்துறப்பதும் எந்த யூதருக்கும் பிறப்பிலிருந்தே இயற்கையாகி விட்டன. எங்கள் நாட்டில் இந் நூல்களுக்கு எவ்வளவு சிறப்பைக் கொடுத்துள்ளோம் என்பதற்கு இது தெளிவு. 4 எஸ்திராஸ் நூலாசிரியர் யோசிபஸ் கூறும் 22உடன் 2 நூல்களைக் கூட்டி அல்லது ஒரே நூலை இன்னொரு முறையில் எண்ணி 24 எனக் கூறுகின்றாரா அல்லது யோசிபஸ் 4 நூல்களை இரண்டென எண்ணினாரா என்பது இங்கு எழும் வினா. நீதித்தலைவர்-ரூத்தை ஒரு நூலாகவும், எரேமியா-புலம்பலை ஒரே நூலாகவும் யோசிபஸ் எண்ணி 22 ஆக (எபிரேய அகர வரிசை எண்) குறைத்தார் எனச் சிலர் கருதுகின்றனர்.

மத். 23:35; லூக். 11:50இல் நீதியராகிய ஆபேலின் இரத்தம் முதல், திருக்கோவிலுக்கும் பலிபீடத்திற்கும் நடுவே நீங்கள் கொலை செய்த பரகியாவின் மகனாகிய செக்கரியாவின் இரத்தம் வரைக்கும் எனப் படிக்கின்றோம். தொடக்கநூலின் துவக்கத்தில் கூறப்பட்டுள்ள ஆபேலையும் (தொட.4:1-16) 2குறிப்பேட்டில் கூறப்பட்டுள்ள, கல்லெறிந்து கொல்லப்பட்ட செக்கரியாவையும் (24:20,21) குறிப்பிடுவதால் ஏற்கெனவே விவிலியத்தில தற்போதைய நூல வரிசை உறுதிப்பெற்றிருந்ததெனச் சிலர் கூறுவதுண்டு. ஆனால், இதற்கு வேறு விளக்கமும் தரலாம். முதல் யூத கலக காலத்தில் (கி.பி. 66-70) பெரயாவின் மகன் செக்கரியா எனப்பட்ட ஒருவர் கொல்லப்பட்டதாக யோசிபஸ் கூறுகின்றார் (Bell Jud IV 5,4). இங்கு எந்த செக்கரியா குறிப்பிடப்படுகிறார் என்று தெரியாத காரணத்தால் முதலில் கூறிய விளக்கத்தை முற்றிலும் ஏற்க முடியாதெனக் காண்க. எனவே, பு.ஏ. எழுதிய காலத்தில் ப.ஏ. நூல்கள் இப்போதுள்ள ஒழுங்கைப் பெற்றிருந்தன எனத் திட்டமாகக் கூறலாகாது.

5. கனோன் வரையறுக்கப்படல்

கனோன் வரையறுக்கப்பட்டதைக் குறித்துப் பல யூத மரபுகள் உள. எசுறா பாபிலோனிலிருந்து திரும்பி வந்தபோது இந் நூல்களை எழுதித் தொகுத்துக்கொண்டு வந்தார் என்பது ஒரு நம்பிக்கை. அர்த்தசெஷ்டா அரசரின் காலத்திற்கு முன்னே இந் நூல்கள் அனைத்தும் எழுதப்பட்டன என்று யோசிபஸ் கூறுவதும் இதற்குச் சான்றாகும். குறிப்பாக, 4 எஸ்திராஸ் 14:38 முதல் அடங்கிய பகுதியைப் படிக்கையில், எஸ்திராஸ் 40 நாளாக ஐந்து பேருடன் வனவெளியில் தங்கியிருந்தார் எனவும், அப்போது ஆவியரால் அகத்தூண்டல் பெற்று இந் நூல்களும், மறைக்கப்பட்ட எழுபது நூல்களும் எழுதப்பட்டன எனவும் படிக்கின்றோம்.

மறு நாளிலே, இதோ ஒரு குரலொலி உண்டாகி எஸ்திராசே, உன் வாயைத் திறந்து நான் உனக்குக் குடிக்கக் கொடுப்பதை அருந்து என்று கூப்பிட்டது. உடனே என் வாயைத் திறந்தேன்; இதோ, தண்ணீர் நிறைந்திருந்த பாத்திரம் எனக்கு நீட்டப்பட்டது. அது நெருப்பு நிறமானது. நான் அதை வாங்கிக் குடித்தேன். குடித்தவுடனே, என் இதயம் அறிவால் பொங்கிப் பேசினது, என் உள்ளத்தில் ஞானம் வளர்ந்தது. என் ஆவிக்குள் நினைவாற்றல் அதிகரித்தது. என் வாயும் இனி மூடப்படாமல் திறக்கப்பட்டது. உன்னதர் அவ்வைந்து பேருக்கும் அறிவைக் கட்டளையிட்டார். அவர்கள் தங்களுக்குத் தெரியாத எழுத்துக்களில் தங்களுக்குச் சொல்லப்பட்டவைகளை வரிசையாய் எழுதினார்கள்; நாற்பது நாள்களும் உட்கார்ந்திருந்தார்கள்; பகலிலே எழுதி இரவில் அப்பம் உண்டார்கள். நானோ பகலிலே பேசினேன். இரவிலும் நான் மௌனமாய் இருக்கவில்லை. இவ்வாறாக நாற்பது நாளுக்குள் தொண்ணூற்று நான்கு நூல்கள் எழுதப்பட்டன. இந் நிகழ்ச்சி வரலாறு சார்ந்ததென நம்புவோரில்லை. எனினும் மறைநூல்கள் எழுதப்பட்ட முறைமைகளைக் குறித்த அக் கால நம்பிக்கையை நாம் இங்குக் காணலாம்.

எசுறாவின் குழுவைச் சேர்ந்த முதல் மாபெரும் தொழுகை மன்றப் பெருமக்கள் (the Men of the Great Synagogue) எசுறாவின் தூண்டுதலுடன் கனோனை வரையறுத்தனர் எனும் மரபு 19ஆம் நூற்றாண்டுவரை ஆராய்ச்சியாளரிடையே நிலவிவந்தது. எலியாஸ் லெவீத்தா (E. Levita) எனும் யூத அறிஞர் 1538இல் வெளியிட்ட மசோரெத் ஹா மசோரெத் (Massoreth Ha Massoreth) எனும் நூலில் இக் கருத்தை முதலாவது காணலாம். யோசிபஸ், பைலோ போன்றவர்கள் இக் கூட்டத்தைப் பற்றி ஒன்றும் கூறாததால், இப்படி ஒரு கூட்டம் பெருமக்கள் இருந்தனர் என்பதும் தற்போது சந்தேகத்திற்கு இடமாயிற்று.

சுமார் கி.பி.90ஆம் ஆண்டு, சாம்னியா எனும் இடத்தில் கூடின இரபிமார் கூட்டம் பாலஸ்தீனா கனோனை வரையறுத்தது என்பது மற்றொரு மரபு. இச் சிற்றூர் எருசலேமுக்குத் தென் மேற்கே மத்தியதரைக் கடல் அருகில் உள்ளது. இரபி யோகனான்-பென்-சக்கி (Johananan-ben-Zakki) தமது பள்ளியை கி.பி. முதல் நூற்றாண்டில் இங்கு நிறுவினார். இரண்டாவது கமாலியேல் (கி.பி. 80-117) இங்கு தலைமை இரபியாக இருந்தார். கனோனை வரையறுக்க இவரும், இரபி எலியேசர் பென் அசரையாவும் துணையாக இருந்திருக்கலாம். ஜஸ்பெல்டு (Eissfeldt) போன்ற பல அறிஞர்கள் இக் கருத்தை ஏற்றுக் கொண்டாலும் இப்போது இதற்குப் பல மறுப்புக்கள் கூறப்படுகின்றன: (1) சாம்னியாவில் யூத சமய, விவிலிய ஆராய்ச்சிப் பள்ளி ஒன்று இருந்ததேயன்றி, ஒரு சங்கம் அங்குக் கூடியதாகக் கூற சான்றுகள் இல்லை. (2) நூல்களின் பட்டியல் சாம்னியாவில் வரையறுக்கப்பட்டதாக எங்கும் காணோம். ஆனால் சில நூல்கள் கைகளைத் தீட்டுப் படுத்தும். (அவற்றைத் தொட்டபின் சுத்திகரிப்புச் சடங்கு செய்யவேண்டும்) எனும் கருத்து சாம்னியாவில் தோன்றியதாகக் கூறப்பட்டுள்ளது (Mishnah Yadim 13:2). இது ஏற்கெனவே யோசிபஸ், பைலோ போன்றவர்கள் நூல்களின் எண்களை வரையறுக்கப் பயன்படுத்திய விதியாக இருக்கலாம். (3) சபை உரையாளர், சிறப்புமிகு பாடல் எனும் நூல்களைப் பற்றி மட்டுமே சாம்னியாவில் விவாதம் நடந்ததாகக் கூறப்படுகிறது. (4) சாம்னியாவில் எந்த நூலும் தள்ளப்படவில்லை. ப.ஏ.இல் இடம் பெறாத சீராக்குவின் ஞானம் எனும் நூல்கூட சாம்னியாவில் கற்பிக்கப்பட்டு நகல் எடுக்கப்பட்டுவந்தது.

எனவே, இக் காலத்தில் 22 அல்லது 24 என மறைநூல்கள் வழக்கில் வரையறுக்கப்பட்டு வந்தன, எவ்விதத் தீர்மானமும் எந்தச் சங்கத்தாலும் எடுக்கப்படவில்லை. கிறிஸ்தவத் திருச்சபையின் வளர்ச்சி காரணமாகவும், கிறிஸ்தவ நூல்கள் தோன்றியதாலும் யூதத் திருச்சபையின் மறைபொருள் வெளிப்பாட்டுக் குழுவினர் (apocalyptists) வளர்ந்த காரணத்தாலும் காலப்போக்கில் கனோன் வரையறுக்கப்பட்டது என்று மட்டுமே கூற முடியும்.

கும்ரான் சமூகத்தில் எந்த நூல்கள்மறை நூல்களாகக் கருதப்பட்டன என்று ஆராயும்போது மேற்கூறிய முடிவு வலியுறுத்தப்படுகின்றது. கும்ரான் ஏடுகளில் ப.ஏ. நூல்களுள் எஸ்தர் நூல் மட்டுமே முழுமையாகவோ, பங்காகவோ குறிப்பிடப்படவில்லை. எஸ்ஸீன் (Esssenes) எனும் அக்கூட்டத்தார், இறைவனின் திருப்பெயர் இந்நூலில் காணப்படவில்லையென்ற காரணத்தால இதைத் தள்ளியிருக்கலாம் அல்லது தற்செயலாய் இந்நூலின் பெயர் எங்கும் வராமலிருந்திருக்கலாம். சட்ட நூல்களும் இறைவாக்கு நூல்களும் எபிரேய மறைநூல் வரிசைப்படியே கும்ரானில் காணக்கிடக்கின்றன. ஆனால் திருப்பாடல்கள் நூலில் வேறு திருப்பாடல்களும் இடம்பெறுகின்றன. தற்போது கனோனிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நூல்களில், பூபிலி, ஏனோக்கு, எரேமியாவின் கடிதம் போன்ற நூல்கள் பயன்படுத்தப்பட்டுவந்தன. எனவே, சில நூல்கள் மறைநூல்களெனக் கருதப்பட்டிருப்பினும் கனோன் நூல்கள்,

கனோனில் இடம்பெறாத நூல்கள் எனும் பாகுபாடும், அதற்குரிய விதிகளும் அங்கிருந்ததாகத் தெரியவில்லை.

39 நூல்கள் கொண்ட குறுகிய கனோன் ஒன்று இருந்தது; சீர்திருத்தத் திருச்சபை அதனை ஏற்றுக்கொண்டது. அதிக நூல்கள் கொண்டிருந்த ஒரு கனோனை, செப்துவசிந்து மரபுப்படி உரோமன் கத்தோலிக்கச் சபை ஏற்றுக்கொண்டது என முன்னே கூறினோம். முந்தையது பாலஸ்தீன யூதர் ஏற்றுக்கொண்ட கனோன். அது சாம்னியாவில் வரையறுக்கப்பட்டது எனவும், பிந்தையது வெளிநாட்டிலிருந்து, குறிப்பாக, எகிப்திலிருந்த யூதர்கள் ஏற்றுக்கொண்ட கனோன், அது அலெக்சாந்திரியா நகரத்தில் வரையறுக்கப்பட்டதெனவும் ஒரு கொள்கை அண்மைக்காலம் வரை பெரும்பாலோரால் ஒத்துக்கொள்ளப்பட்டு வந்தது. அலெக்சாந்திரியாவில் இப்படி ஒரு பெரிய கனோன் இருந்து வந்ததென J.E. Grabe (1720) முதலாவது கூறினார். சாம்னிய மரபுக்கு எதிரான மறுப்புகளை ஏற்கெனவே கண்டோம். அலெக்சாந்திரியாவிலும் ஒரு கனோன் வரையறுக்கப்படவில்லையென A.C. சண்டு பெர்கு (A.C. Sund Berg) மெய்ப்பித்துள்ளார். அவர் கூறும் காரணங்களைப் பார்ப்போம்:

1. எழுபத்துநான்கு எருசலேம் விவிலிய எழுத்தாளர்கள் இரண்டாவது ப்தாலமி பிலடெல்பியாவின் ஆதரவுடன் (Ptolemey Philadelphius, கி.பி. 275) எழுபது நாள்களில் ஒன்றுபோன்ற கிரேக்க மொழிபெயர்ப்புச் செய்து முடித்தனர் என அரிஸ்தாவின் (Aristeus) கடிதத்தில் கூறப்படுகின்றது. இது வரலாற்று உண்மையன்று. ஞ்சுருள் நூல்களும் பிற நூல்களும் ஒரே நேரத்தில் மொழிபெயர்க்கப்படாமல் பல ஆண்டுகளாக மொழிபெயர்க்கப்பட்டன.

2. முன்னே கருதப்பட்டு வந்ததுபோல, விவிலியத்தில் இடம்பெறாத நூல்களில் பல, கிரேக்கத்தில் முதலாவது எழுதப்படாமல் எபிரேயத்திலே எழுதப்பட்டன என்று இப்போது கிடைத்துள்ள பல நூல்களின் எபிரேய மூலங்களினால் அறியலாம் (சீராக்கு, யூதித்து, 1 மக்கபேயர், தோபித்து முதலிய நூல்கள் அரமேயத்தில் எழுதப்பட்டன). எனவே இவை பாலஸ்தீனாவிலேயே தோன்றியிருக்கவேண்டும். அலெக்சாந்திரிய கனோனில் மட்டும் இடம் பெற்றிருக்க வழியில்லை.

3. இந் நூல்கள் பாலஸ்தீனாவில் நிலவி வந்தன என கும்ரான் ஏடுகளினின்று அறிகின்றோம்.

4. அலெக்சாந்திரிய யூதர் இதை உள்ளூரப் பற்றிக்கொண்டு, பாலஸ்தீன யூதரைவிட வேறுபட்ட நம்பிக்கைகொண்டிருந்தனர் என எண்ணுவதற்கும் ஆதாரம் இல்லை (அலெக்சாந்திரிய பெரிய கனோனை ஆதரிப்போர் கூறும் வாதம்).

5. செப்துவசிந்து நூல்கள் வெவ்வேறு ஏடுகளில் சில மாற்றங்களுடன் காணப்படுகின்றன. எனவே அலெக்சாந்திரியாவில்கூட ஒரு வரையறுக்கப்பட்ட கனோன் இருக்கவில்லையென்றே கூறவேண்டியிருக்கின்றது.

ஆக, பாலஸ்தீனாவிலும் சரி, அலெக்சாந்திரியாவிலும் சரி, கி.பி. முதல் நூற்றாண்டில் கனோன் வரையறுக்கப்படவில்லை. கனோன் நெகிழ்வுறும் நிலையில்தான் இருந்திருக்கின்றது எனும் சண்டு-பெர்க்கின் முடிவை நாம் ஏற்றுக்கொள்ளலாம். கிறிஸ்தவத் திருச்சபை தெளிவாகப் பின்பற்றக்கூடிய ஒரு யூத கனோன் கி.பி. முதல் நூற்றாண்டில் இருக்கவில்லை

தொடக்கத் திருச்சபையில் பு.ஏ.க்கும் கனோனில் இடம் பெறாத பல நூல்களுக்கும் கருத்துத் தொடர்பு இருப்பதாகக் காண்கிறோம். எ.கா. சீராக்கு, சாலமோனின் ஞானம், 1,2 மக்கபேயர், தோபித்து, சாலமோனின் பாடல்கள், 1,2 எஸ்ட்ராஸ், 4 மக்கபேயர், மோசேயின் உடலேறல் எனும் நூல்களின் கருத்துக்கள் பு.ஏ.இல் சில இடங்களில் காணலாம். யூதா 14இல் ஏனோக்கு நூலினின்று மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. எனவே, ஏனோக்கு நூலை விவிலியத்துக்குரிய சிறப்புடன் யூதக் கிறிஸ்தவர் கருதினர் என நாம் எண்ண இடமுண்டு. மத். 2:32இல் நாம் அறியாத ஒரு ப.ஏ. நூல் குறிப்பிடப்படுகின்றது (நசரேயன் எனப்படுவார்). கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்தான் கனோனை வரையறுப்பதைப் பற்றிய விவாதங்கள் இருந்தனவென அறிகின்றோம். ஜஸ்டின் (dialogue with Trypho 68:7,8; 71மு.), கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் இதுபற்றி வேறுபாடு இருப்பதாகக் கூறுகின்றார். ஏனோக்கு நூலிலிருந்து வாதித்தால் யூதர்கள் அதை ஒத்துக்கொள்ளமாட்டார்கள் என தெர்த்துல்லியன் (கி.பி. 160-220) எழுதுகிறார் (Apparel of women 1:3). போலிகார்ப்பு ஐரேனியஸ், கெர்மாஸ் போன்ற கிறிஸ்தவத் தலைவர்கள் கனோனில் இடம்பெறாத பிற நூல்களினின்றும் மேற்கோள்களைத் தாராளமாய் பயன்படுத்தினர். சர்தை ஊரைச் சேர்ந்த மெலித்தோ பேராயர் (Melito of Sardis - கி.பி. 170) இதை ஆயும்பொருட்டுக் கிழக்கே ஒரு பயணம் சென்று எபிரேய மறைநூலிலிருக்கும் நூல்களே கனோனாகக் கீழ்ச் சபைகளில் வழங்கப்பட்டு வருகின்றன என்று எழுதினார். அவர் கூறும் கனோனில் எஸ்தர் நூல் விடப்பட்டது. ஒரிகன் (Origen - கி.பி. 185-254) கனோன் நூல்கள் 22 எனக் கூறி, 21 நூல்களையே எழுதுகிறார். அதனாசியஸ் (Athanasuis - கி.பி. 296-373) கிறிஸ்தவர்களும் யூதர்களைப் போல 22 நூல்களையே ஏற்கவேண்டும் என்று எழுதினார். யெரோமும் (Jerome - கி.பி. 329-420) எபிரேயக் கனோனைப் பரப்பப் பாடுபட்டார். ஆனால் அவரது இலத்தீன் மொழிபெயர்ப்பான வல்கத்தாவில் தோபித்-மக்கபேயர் தொகுப்பை தொடக்கநூல்-மலாக்கி தொகுப்பின் இறுதியில் சேர்த்தார்.

6. திருச்சபை மன்ற முடிவு

393இல் கிப்போவில் அகுஸ்தீன் தலைமையில் கூடிய திருச்சபை மன்றத்தில் அதிகாரபூர்வமான தீர்ப்பு முதலாவதாக நிறைவேற்றப்பட்டது. கிரேக்க முறைப்படி தொடக்கநூல் - மலாக்கி, தோபித்-மக்கபேயர் நூல்கள் கனோனாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. 397இலும், 419இலும் கார்த்தேஜில் நடைபெற்ற மன்றங்கள் இதனை ஒப்புக்கொண்டன. ஃபளாரன்ஸஸ் மன்றத்திலும் (1446, யாக்கோபியருக்கு எதிராக) திரும்ப உறுதிப்படுத்தப்பட்டது. கீழ்ச்சபைகளில் சிறிய கனோன் வழக்கிலிருந்து வந்தது. யூதத் திருச்சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களே அங்கும் ஏற்கப்பட்டன.

16ஆம் நூற்றாண்டில் சீர்திருத்தம் ஏற்பட்டபோது, லூத்தர் தமது மொழிபெயர்ப்பில் (1534) தோபித்-மக்கபேயர் நூல்களைப் பின் இணைப்பாகச் சேர்த்து, மறைநூலுக்குச் சமமான இடம் இந் நூல்களுக்கு இல்லை, ஆனால் படிக்க நல்லவை, பயனுடையவை என்று எழுதினார். லூத்தரன் சபையின் ஆக்ஸ்பர்க் அறிக்கையில் (1530), கனோனைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. சுவிங்கிலி, கால்வின் போன்றோர் குறுகிய யூத கனோனையே ஏற்றுக்கொண்டனர். உரோமன் கத்தோலிக்கச் சபையோ, திரந்து (Trent) சபை மன்றத்தில்

(1545-1563, ஏப்ரல் 8, 1546) திப்போ. கார்த்தேஜ் முடிவை உறுதிப்படுத்தி. நீண்ட கனோனை ஏற்றுக்கொண்டது. ஆங்கிலேயத் திருச்சபையின் 39 சட்டங்கள் (Thirty-nine articles) தொடக்கநூல்-மலாக்கி நூல்களை கனோனாக ஏற்று. தோபித்து - மக்கபேயர் ஆகிய நூல்கள், 1,2 எஸ்திராஸ், மனாசேயின் வேண்டல் ஆகிய நூல்களை (அப்போகிரிபா) வாழ்க்கைக்கும் நன்னடத்தைக்கும் மாதிரியானவை எனக் கூறியது.

ஸ்காட்லாந்து சபையின் வெஸ்ட்மினிஸ்டர் அறிக்கையில் (1647). இந் நூல்கள் மறைநூலல்லாத காரணத்தால் கடவுளின் திருச்சபையில் அவற்றிற்கு எவ்வித அதிகாரமும் இல்லையெனக் கூறப்பட்டுள்ளது. கீழ்ச் சபையில் இதைக் குறித்த முடிவு செய்யப்படவில்லை. சிரிய மொழிபெயர்ப்பான பெசித்தாவில் யூதக் கனோன் மட்டுமே உண்டு. ஆனால் வழக்கில் பெரும்பாலும் கிரேக்கமுறையே பின்பற்றப்பட்டு வருகின்றது.

1827இல் நீண்ட கால விவாதத்திற்குப்பின் பிரித்தானியா வெளிநாட்டு விவிலியச் சங்கம் அப்போகிரிபா நூல்களை சில அருள்மேடை மறைநூல்களில் தவிர) வெளியிடுவதில்லை எனும் முடிவுக்கு வந்தது.

ஆனால் அடுத்த காலங்களில் அப்போகரிபாவின் நூல்களும் பக்தி வளர்ச்சிக்கேற்றவை எனச் சீர்திருத்த திருச்சபை கண்டு. மறைநூலுக்குரிய இடம கொடுக்காவிடினும். கற்கவும் சிந்திக்கவும் அவை பயனுடையவையென அவற்றைப் போற்றிவருகின்றது.

குறிப்ப கனோனுக்கு ஏற்ற சொல் தமிழில் தற்போது கிடையாததால் கிரேக்கச் சொல்லையே பயனபடுத்துகின்றோம். திருநூல் சட்ட வரையறுப்பு. திருநூல் சட்ட ஒழுங்கு. திருநூல் சட்டத் தொகுப்பு என்பவை கனோன் எனனும் சொல்லின் ஒவ்வொரு கூறுகளையே காட்டும். கனோன் சொல் பொருளை புதிய ஏற்பாட்டுக் கனோன் எனும் தலைப்பில் காண்க.

துணை நின்ற நூல்கள்

1. Ryle, H.E. *The Canon of the Old Testment,* London, 1895.
2. Sundberg, A.C., *The Old Testament of the Early Church,* Cambridge, Mars, 1964.
3. Robert, B.J. `Canon and Text of O.T.' in *peak's Commentary of the Bible,* London, 1962.
4. Turro J.C. and Brown, R.E., `Canonicity' in *The Jeromes Biblical Commentary,* SuglewoodClyp,1968.
5. EiB- feldt, O., *The Old Testament, An Introduction,* Oxford, 1965.
6. B.S. Childs, *Canonical Interpretation,* SCM. 1989.
7. Carson (ed.). *Hermeneutics, Authority and Canon,* IVP.
8. Anderson, *Tradition and Interpretation,* Oxford:

15

ஐந்திருநூல் ஆய்வு

சாமுவேல் அமிர்தம்

1. பெயர்

விவிலியத்தின் முதல் ஐந்து நூல்களும் யூத சமயத்தில் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தவை. யூத ப.ஏ.இன் முப்பெரும் பகுதிகளான திருச்சட்டம் (Law), இறைவாக்கினர் (Prophets), திருவெழுத்துக்கள் (Writings) என்பனவற்றில், இவ்வைநது நூல்களும் திருச்சட்டம் (Torah) எனும் முதல் பகுதியைச் சேர்ந்தவை. யூத சமயத்தின் அடிப்படையான சமய, சமூக, அறநெறிச் சட்டங்களை இந்த நூல்களில் காணலாம். மோசே வாயிலாக இச் சட்டங்கள் வழங்கப்பட்டமையால் மோசேயின் நூல்கள் எனவும் பெயர் பெறும். ஐந்து சுருள்களில் எழுதப்பட்டமையால், கிரேக்கமொழியில் ஐஞ்சுருள்கள் எனும் பொருள்பட, ஆங்கிலத்தில் Pentateuch என அறியப்படுகிறது. இவை தொடக்கத்தில் ஐந்து நூல்களாக எழுதப்படவில்லை. கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்படும் முன்னர்தான், அதாவது, கி.மு. மூன்றாவது நூற்றாண்டிற்கு முன்னர்தான் ஐந்து நூல்களாக பகுக்கப்பட்டன. ஆனால், நூல்பொருளைச் சார்ந்து கிரேக்க, இலத்தீன், ஆங்கில, தமிழ் மொழிகளில் இந் நூல்கள் முறையே தொடக்கநூல் (துவக்க நிகழ்வுகளைக் கூறும் நூல்), விடுதலைப் பயணம் (இஸ்ரயேலர் விடுதலைபெற்று எகிப்தினின்று பயணமானதைக் கூறும் நூல்), இலேவியர் (இலேவியரின் கடமையையும், பணியையும் விளக்கும் நூல்), எண்ணிக்கை (முதற்பகுதியில் எண்களை மிகுதியாகப் பெற்ற நூல்), இணைச் சட்டம் (முன் நூல்களில் கூறப்பட்டனவற்றைத் திரும்பவும் விளக்கும் நூல், இணைநூல்) எனப் பெயர் பெறும். இணை. 17:19ஐத் தவறாக கிரேக்கத்தில் மொழிபெயர்த்த காரணத்தால் இணைச்சட்டம் எனும் பெயர் கிடைத்தது. எபிரேய மூலத்தில் அரசர், திருச்சட்ட நூலைப் பார்த்துத் தமக்காக ஒரு பிரதியை எழுதி, . . . என்றுள்ளது. ஆனால், கிரேக்கத்தில், இரண்டாவது ஒரு நூலை (Deuteronomion) என உளது. இதைச் சார்ந்தே Deuteronomy எனும் பெயர் எழுந்தது.

மூல மொழியான எபிரேய மொழியில் நூலின் முதல் சொல் அல்லது சொற்றொடரே அதன் பெயராக அமைந்துள்ளது. எனவே, பெரைஷித் (தொடக்கத்திலே), ஏஷமோத் (பெயர்கள்), வய்யிக்ரா (கூப்பிட்டார்), பெமித்வார் (பாலைநிலத்தில்), டெவாரிம் (சொற்கள்) என்பவை முறையே இந்நூல்களின் பெயர்களாயின.

இஸ்ரயேல் மக்களின் தொடக்கம், மூதாதையரின் வாழ்க்கை வரலாறு, எகிப்தினின்று விடுதலை, பாலைநில வாழ்க்கை, சீனாய் உடன்படிக்கை, திருச்சட்டம் பெறல், கானான் நாட்டில் குடியேறல் என்பன இந் நூல்களில் விளக்கம் பெறுகின்றன.

மொத்தமாகப் பார்த்தால் அழகிய, ஆழ்ந்த ஓர் அமைப்பினை இந் நூல்களில் காணலாம். ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி : கானான் நாட்டை உரிமையாக்குவாய் என்ற வாக்குறுதி - நிறைவேறுகின்ற முறைமைதான் இவ்வமைப்பு. கடவுளின் வாக்குறுதிகள் அனைத்தும் ஆம் என்பன (2கொரி. 1:20). காலம் தாழ்ந்தாலும், இன்னல்கள் பல வந்தாலும் அவை நிறைவேறியே ஆகும் எனும் அயரா நம்பிக்கையின் அடிப்படையில், அதற்கு விளக்கமாக இந் நூல்கள் அமைந்துள்ளன.

படைப்பு, உலக வரலாற்றின் தொடக்கம் (தொட. 1:1-11) என்பவை இதற்கு முன்னுரையாக மட்டும் அமைந்ததெனக் காண்க. எனவே படைப்புத் தொட்டுப் படையெடுப்பு வரைக்கூறும் இவ்வைந்து நூல்களும் பொருள் சார்ந்த வகையில் ஒரு தொகுதி எனலாம். இணைச்சட்டம் என்பது இணை நூலேயன்றி தனி நூல அன்று. எனவே எண்ணிக்கையுடன் இவ் வரலாறு முடிவடைகிறது; எனவே நான்கு நூல் சுருள் (Tetrateuch) என நாநூல்களைத் தொகுத்துக் கூறுவதே பொருந்தும் என்பார் மார்ட்டின் நோத் பண்டிதர். இல்லை; யோசுவாவின் கீழ் நடந்த படையெடுப்பின் பின்னர்தான் நாடு சொந்தமாயிற்று; எனவே, யோசுவா நூலையும் சேர்த்து நோக்கினால் மட்டுமே வாக்குறுதி நிறைவேறுகிறது; வரலாறு முற்றுப் பெறுகிறது; ஆறுநூல் (Hectateuch) என்று தொகுக்கவேண்டும் என்பர் ஃபோன்ராடு பண்டிதர் போன்றோர். பொருள்சார்ந்து வெவ்வேறான வகைகளாய்ப் பகுக்கக் கூடுமாயினும், யூத சமய மரபின்படி முதல் ஐந்து நூல்களை மட்டிலும் ஒரு தொகுதியாக ஏற்பது வழக்கமாயிற்று.

2. இலக்கிய வகைகள்

எந்த நூலையும் படிப்பதற்கு முன்னர் அது எந்த இலக்கிய வகையைச் சார்ந்தது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இலக்கிய வகையைத் தழுவிப் பொருள் கொள்வதே அந் நூலைச் சரியாகப் புரிந்துகொள்ளும் முறையாகும். எடுத்துக்காட்டாக, நாவல் ஒன்றை வரலாற்று நூல் என்று எண்ணிப் படிப்பது முறையாகாது; சட்ட நூலைப் படிக்கையில் அறிவியல் நூல் என்று எண்ணுவதும் தவறு; கவிதை படிக்கும்போது கவிதை என்றுணர்ந்தால் மட்டுமே அதன் நயத்தையும் பொருளையும் சரியாக அறிந்துகொள்ள முடியும்.

உரைநடைபோல் அச்சிடப்பட்டிருந்தாலும், கட்டுரை என எண்ணிப் படிப்பது தகாததன்றோ! அதே போன்று விவிலியத் திலும் இலக்கிய வகைகளை மறந்து, அனைத்தும் வரலாறு என எண்ணிப் பொருள் கொடுப்பது தவறு; ஆசிரியர்களின் நோக்கத்திற்கும் மாறானது; விவிலியத்தின் செய்தியைப் புரிந்துகொள்வதற்கும் இடையூறாக அமையும். ஐஞ்சுருள் நூல்களில் பின்வரும் இலக்கிய வகைகளைக் காணலாம்.

(அ) வரலாறு

இஸ்ரயேலர் எகிப்திற்குச் சென்று அடிமைகளாக ஒடுக்கப்படல், விடுதலை, கானான் நாட்டின் மீது படையெடுத்தல் ஆகியவற்றைக் கூறும் பகுதிகள். ஆனால், இக்காலத்து வரலாற்று ஆசிரியர்கள் எழுதுவதைப்போல் நிகழ்ந்தனவற்றை அப்படியே குறித்து வைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் மட்டும் இவ்வரலாறு எழுதப்படவில்லை. இறைவன் இவ்வருஞ்செயல்களை எங்கள் வரலாற்றில் செய்தருளினார் எனத் திருப்புகழ் விளக்கும் நோக்குடனேயே இவ்வரலாறு எழுதப்பட்டது. ஆக, இதனை இறைப்புகழ் வரலாறு எனலாம். நம்பிக்கை நோக்குடன் எழுதப்பட்டது; இறைவனே இவ்வரலாற்றின் கதாநாயகர்; இதை மனத்தில்கொண்டு இவ் வரலாற்றினைப் படிக்கவேண்டும்.

(ஆ) சட்டங்கள்

பத்துக்கட்டளைகள் (விடு. 20), உடன்படிக்கைச் சட்டநூல் (விடு. 21-23) போன்ற பகுதிகள் குருக்கள் சந்திப்புக் கூடாரம், வழிபாடு, பலி, சமூக ஒழுக்கம் என்பனவற்றைப் பற்றிக் கூறுகின்றன. சட்டங்கள் பெரும்பாலும் அக் காலத்திற்குரிய சமூக அமைப்பினைச் சார்ந்தவை. பல சட்டங்கள் இடையர்களின் வாழ்க்கையையும், விவசாய சமூக வாழ்க்கையையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை. அவை அவற்றிற்கு மட்டுமே பொருந்தும். ஆனால் பத்துக் கட்டளைகள் போன்ற (அதி. 20; இணை. 5) சட்டங்களும், சமூக நீதி, இரக்கம் இவற்றைக் கூறும் பிற சட்டங்களும் (அதி. 21-23) எக் காலத்திற்கும் எச் சமூகத்திற்கும் உரியனவாகும்.

(இ) கவிதை, பாடல்கள்

பழிவாங்கும் பாடல் (தொட. 4:23,24), யாக்கோபின் ஆசிப் பாடல் (அதி. 49), மோசேயின் பாடல் (விடு. 15:1-18), நீரூற்றுப் பாடல் (எண். 21:17,18), மோசேயின் ஆசிப் பாடல் (இணை. 32:33) முதலியன.

(ஈ) மூதாதையரின் வாழ்க்கை வரலாறு

ஆபிரகாம், ஈசாக்கு, ஏசா, யாக்கோபு, யோசேப்பு போன்றவர்களின் வாழ்க்கை வரலாறுகள்; எபிரோன், பெயர்செபா, பெத்தேல், செக்கேம் போன்ற வழிபாட்டுத் தலங்களின் வரலாற்றுடன் இணைத்து விளக்கப்பட்டன. சில இடங்களில் தனி நபரின் வரலாறு எனக் குல வரலாறு விளக்கம் பெற்றது.

(உ) தொடக்க வரலாறு

தொட. 1-11 அதிகாரங்களில் வரலாற்றுக்கு முற்பட்ட கால நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன. இவை வரலாற்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள் ஆதலால் உவமை நடையில் எழுதப்பட்டன. கடவுள் படைத்தார்; மனிதரைப் படைப்பின் மகுடமாகப் படைத்தார்; மனிதர் கடவுளின் திருவுளத்தை எதிர்த்துப் பாவம் செய்தனர்; பாவம் பெருகியது; கடவுள் மனுக்குலத்தை அழிக்கநேர்ந்தது; நோவா எனும் ஒரு நீதியர் மூலம் புது மனுக்குலம் உருவாயிற்று; ஆபிரகாமில் ஒரு மக்கள் தேர்ந்துகொள்ளப்பட்டனர் எனும் இறையியல் கருத்துக்களைக் கொண்டுள்ள வரலாறு இது.

3. நூல்கள் எழுதப்பட்ட வரலாறு

ஐந்நூல் ஆசிரியர் மோசே எனப் பல நூற்றாண்டுகளாகக் கருதப்பட்டு வந்தது. விடு. 17:14; 24:4; 34:27; எண். 33:1,2; இணை. 31:9 போன்ற இடங்களில், சில பகுதிகளை அல்லது சில சட்டத் தொகுப்புக்களை மோசே எழுதினார் எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதை நாம் காணலாம் (குறிப்பிட்டுள்ள பகுதியை எழுதினார் என இவ் வசனங்கள் கூறுகின்றனவேயன்றி, எல்லா நூல்களையும் எழுதினார் என்று கூறவில்லை). யோசியா அரசரின் காலத்தில் கோவிலில் கண்டெடுக்கப்பட்ட சட்ட நூல் (2 அர. 23:25) மோசேயின் நூல் எனக் குறிக்கப்பட்டுள்ள காரணத்தால், அக் காலத்திலேயே இந் நூல்கள் மோசேயின் நூல்கள் என அறியப்பட்டு வந்தன என்று கூறலாம். பு.ஏ.இலும் மத். 19:8; லூக். 16:29,31; 24:27,44 போன்ற பகுதிகளிலும் இந்நூல்கள் மோசேயின் நூல்கள் எனக் குறிக்கப்பட்டுள்ளன. இயேசுவின் உரைகளிலும் அவ்வாறு காணலாம் (மார். 12:26; யோ. 7:19,23). எவராவது இந் நூல்கள் மோசேயால் எழுதப்படவில்லை என்று கூறினால், அவர்கள் மோட்சத்தில் இடம் பெற மாட்டார்கள் என்று யூதர்கள் நம்பும் அளவுக்கு இம் மரபு உறுதி பெற்றிருந்தது.

ஆனால், இக் காலத்தில் மோசேதான் ஐஞ்சுருள் நூல் எழுதினார் என்று உறுதியுடன் கூற எந்த ஆராய்ச்சியாளரும் முன் வருவதில்லை. நூல்களை உற்று ஆய்ந்து, கற்று நோக்கினால் இக் கருத்தினை நூல்கள் ஆதரிக்கவில்லை என்பது தெளிவுறும். ஜீன் ஆஸ்ட்ரூக் (Jean Astruc) எனும் பிரஞ்சு நாட்டு மருத்துவர் ஒருவர், 1753ஆம் ஆண்டு தாம் வெளியிட்ட ஒரு நூலில் இதுபற்றிய சில பிரச்சனைகளை எடுத்துரைத்தார். இதற்கு முன்னரேயே யூத ஆய்வாளர்கள் மோசே இந் நூல்களை எழுதினார் என்று கூறுவதில் இருக்கும் சில சிக்கல்களைக் கூறியிருந்தனர். ஒரிகன் போன்ற கிறிஸ்தவ சபைப் பெரியாரும் இச் சிக்கல்களைக் கண்டிருந்தனர்.

1. இந் நூல்களைப் படிக்கையில் மோசே எழுதியிருக்க முடியாத சில பகுதிகளை நாம் ஆங்காங்கே காணலாம். எ.கா. இணை. 34:5-12 வசனங்களில் மோசேயின் இறப்பு கூறப்பட்டுள்ளது. எண். 1:1 போன்ற இடங்களில் மோசே அடக்க நிலையில் குறிக்கப்பட்டுள்ளார். 12:3இல் மோசே என்பவர் மண்ணுலகிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவராயிருந்தார் என்று ஒரு நற்சான்று கொடுக்கப்பட்டுள்ளது. இப் பகுதிகள் வேறொருவரால்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

2. பல பகுதிகள் மோசேயின் காலத்திற்குப் பின்னர் எழுதப்பட்டிருப்பதாக நாம் காணலாம். எ.கா. தொட. 12:6ஆம் வசனத்தில் அக் காலத்தில் கானானியர் அந் நாட்டில் இருந்தார்கள் என்று நாம் படிக்கின்றோம். இதிலிருந்து எழுதுங் காலத்தில் கானானியர் அங்கு இல்லை என்பது தெளிவாகிறது. 22:14இல் இந்நாள் வரைக்கும் சொல்லப்பட்டு

வருகிறது என்ற சொற்றொடர் அந்நிகழ்ச்சி நிகழ்ந்து பல காலம் சென்ற பின் இப் பகுதி எழுதப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. 21:34இல் ஆபிரகாம் பெலிஸ்தியருடைய நாட்டில் நெடுநாள் தங்கியிருந்தார் என்று பார்க்கிறோம். ஆனால் ஆபிரகாம் காலத்தில் பெலிஸ்தியர் வாழ்ந்திருக்கவில்லை என்பது வரலாற்று உண்மை. நூல் எழுதப்பட்ட காலத்தில் பெலிஸ்தியர் நாட்டில் வாழ்ந்து வந்தனர். ஆதலினால் ஆபிரகாம் காலத்தில் இருந்தனர் என்று ஆசிரியர் தவறாக எண்ணியிருக்கலாம். இணை. 1:1,3,8 போன்ற வசனங்களில் யோர்தானுக்குக் கிழக்கில் உள்ள நாடு என்று குறிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இஸ்ரயேலர் கானானில் குடியேறின பின்னர்தானே கீழ்நாட்டை இவ்வாறு கூறியிருக்கமுடியும்!

3. ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள் பன்முறை கூறப்பட்டுள்ளன. சில வேளைகளில் அவை ஒன்றிற்கொன்று முரண்பட்டும், சில வேளைகளில் சில மாறுதல்களோடும் மறுமுறை எழுதப்பட்டுள்ளன.

(அ) தொட 1:1-2.4அ. பகுதியில் ஒரு படைப்பின் வரலாற்றினையும், 2:4ஆ-25 பகுதியில் வேறொரு படைப்பின் வரலாற்றையும் நாம் படிக்கிறோம். முதல் வரலாற்றிலே தாவரங்களும், விலங்குகளும் படைக்கப்பட்ட பின்னர் மனிதர் படைக்கப்பட்டனர். ஆனால், இரண்டாம் படைப்பு வரலாற்றிலோ முதலில் மனிதரைப் படைத்து, பின் அவருக்கென விலங்குகளையும், இறுதியாகப் பெண்ணையும் படைத்தார் என்று பார்க்கிறோம்.

(ஆ) வெள்ளப்பெருக்கு கதையில், உயிரினங்களில் ஒவ்வொரு சோடி பேழையில் பாதுகாக்கப்பட வேண்டும் என 6:19 இலும், தூய்மையான விலங்குகளில் 7 சோடியும், தூய்மையற்ற விலங்குகளில் ஒவ்வொரு சோடியும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று 7:2இலும் படிக்கிறோம்.

(இ) ஆபிரகாம் சாராளைத் தம் உடன் பிறந்தார் என்று கூறிய வரலாறு 12ஆம் அதிகாரத்திலும் 20ஆம் அதிகாரத்திலும் இரண்டு தடவைகள் கூறப்பட்டுள்ளது.

(ஈ) பெயேர்செபா என்னுமிடம் அப்பெயர் பெற்ற வரலாற்றை 21ஆம் அதிகாரத்திலும், 26ஆம் அதிகாரத்திலும் இரு தடவைகள் பார்க்கிறோம். 28ஆம் அதிகாரத்திலும், 35ஆம் அதிகாரத்திலும் பெத்தேல் அப்பெயர் பெற்ற விவரமும் இருமுறை கூறப்பட்டுள்ளது.

(உ) பலிபீடங்களை எங்கும் நிறுவலாம் என்று விடு. 20:24இலும். ஆனால் ஒரேயொரு இடத்தில் மட்டுந்தான் பலியிடலாம் என்று இணை. 12:13இலும் நாம் பார்க்கிறோம். இவ்விதச் சிக்கல்களை நாம் வெளியிலிருந்து எழுப்பாமல் விவிலியத்திலிருந்து எழும் சிக்கல்களாகவே காண்கிறோம். இந்தச் சிக்கல்களைத் தவிர்த்து விடை காண முற்படுவது நாம் விவிலியத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளுவதற்கு உறுதுணையாகவே அமையும். இப்படிப்பட்ட வினாக்களை எழுப்பக் கூடாது; அது பக்திக்கு முரண்பட்டது என்று எண்ணுவது நம் பக்திக் குறைவைக் காட்டுகின்றதே ஒழிய வேறன்று.

கி.பி. 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எரோம், கிறிசொஸ்தம் முதலான திருச்சபைத் தந்தையர் மேற்கூறியச் சிக்கல்களைக் கண்டிருந்தனர். அவர்களும் இவற்றைத் தவிர்க்க முற்பட்டனர். ஐஞ்சுருள் நூல் மோசேயினால் எழுதப்பட்டதன்று, யோசியா அரசர் காலத்தில் எருசலேம் திருக்கோவிலில் கண்டெடுக்கப்பட்ட நூலின் ஒரு பகுதியே என்று அவர்கள் தீர்ப்புக் கூறினர்.

இந் நூல்கள் தோன்றிய வகைக்கு விடை காண முற்பட்டபோது யாவே என்று கடவுள் பெயரைக் கூறும் ஒரு மூலமும், எலோகீம் என்று கடவுள் பெயரைக் கூறும் வேறுமூலமும் இருப்பதாக ஆய்வாளர்கள் முதலாவது கண்டுகொண்டனர். ஐக்ஹார்ன் (J.G. Eichhorn) என்ற ஆராய்ச்சியாளர் எலோகீம் (Elohim) எனவும் (E மூலம்), யாவே (Jahweh) எனவும் (J மூலம்) ஆகிய இரண்டு முக்கியமான மூலங்கள் இருந்தன. இவற்றுடன் அரேபியா, மிதியான் நாடுகளில் தோன்றப்பெற்ற வேறு சில மூலங்களையும் சேர்த்து ஐஞ்சுருள் நூல்கள் தொகுக்கப்பட்டன என்று கூறினார். இவை அடிப்படையான ஏடுகளைப் பயன்படுத்தி எழுதப்பட்டன என்று இவர் கூறியதால் முதல் ஏட்டுக் கொள்கை (First Documentary Theory) என்று இதற்குப் பெயர் வரலாயிற்று.

ஃபாற்றர் (Vater) என்பாரும் வேறு சிலரும், இந் நூல்களுக்குள் சிறு சிறு மூலங்களாக, சுமார் 39 மூலங்கள் சேர்ந்துள்ளன, அவற்றுள் கி.மு. 621ஆம் ஆண்டு எருசலேம் திருக்கோவிலில் கண்டெடுக்கப்பட்ட இணைச்சட்ட நூலும் சேர்ந்து இவை அனைத்தும் தொகுக்கப்பட்டு ஐஞ்சுருள் நூல்கள் உருவெடுத்தன என்று வாதித்தார். சிறுசிறு துண்டு மூலங்களைக் கொண்டு எழுதப்பட்டதால் இது துண்டு மூலக்கொள்கை எனப் பெயர்பெற்றது (Fragmentary Theory), 1831ஆம் ஆண்டு ஈவால்டு (Ewald). 1853ஆம் ஆண்டில் கூப்ஃபெல்டு (Hupfeld) என்போர் முதல் ஏட்டுக் கொள்கையைச் சற்று மாறுபடுத்தி, எலோகீம் என்ற சொல்லைப் பயன்படுத்தி இரண்டு மூலங்கள் உண்டு எனக் கண்டுபிடித்தனர்.

ஒராண்டுக்காலம் சென்றபின்னர் ரீம் (Riehm) என்பவர் இணைச்சட்ட நூலைத் தனிமூலம் என்று கொண்டு மொத்தம் 4 மூலங்கள் உள்ளன என்று கூறினார். இவ்வாறு 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஐஞ்சுருள் நூல்களுக்கு அடிப்படையாக மூல ஏடுகள் அமைந்துள்ளன என்பது ஒரளவுக்கு நிறுவப்பட்டது. ஆனால் தெளிவான காலக்குறிப்புகளுடன் இது கிராஃப் (Graf), யூலியஸ் வெல்கௌசன் (Julius Welhausan), ஆபிரகாம் கியூனன் (Abraham Keunen) என்பாரால்தான் உறுதிப்படுத்தப்பட்டது. இணைச்சட்ட நூலினால் உண்டான சிக்கல்களுக்கு விடை காண்பிப்பதால் இதுவே பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. நான்கு மூல ஏடு கொள்கை (Four Documentary Theory) என்று இது பெயர் பெற்றது.

கி.மு. 621இல் யோசியா அரசரால் எருசலேம் திருக்கோவிலில் கண்டெடுக்கப்பட்ட நூல் இணைச்சட்ட நூலின் பெரும்பகுதி என்பதே இந்தக் கோட்பாட்டின் அடிப்படையான வாதம். அதற்குச் சில காரணங்கள் உண்டு:

1. 2அர. 22:12,13 வசனங்களிலே நம்முடைய மூதாதையர் இந்த நூலின் வார்த்தைகளுக்குச் செவி கொடாதவர்களாய், நம் தொடர்பாக எழுதியிருக்கிற யாவற்றின்படியேயும் செய்யாமற்போனார்கள். அதனால் நம்மேல் பற்றியிருந்த ஆண்டவரது சினம் பெரிதாயிற்று என்று நாம் படிக்கிறோம். அத்துடன் கண்டெடுக்கப்பட்ட நூலை வாசிக்கக் கேட்ட

மக்கள் அஞ்சினர்; அரசன் தம் உடைகளைக் கிழித்தார் என்றும் நாம் பார்க்கிறோம். எனவே இந் நூலில் கீழ்ப்படியாமைக்குத் தண்டனையாகச் சில சாபங்கள் எழுதப் பட்டிருக்க வேண்டும். இணை. 28:15ஆம் வசனம் முதல் இப்படிப்பட்ட ஒரு சாபப் பட்டியலை நாம் பார்க்கிறோம்.

2. கண்டெடுக்கப்பட்ட நூலின் அடிப்படையில் பல சமய சீர்திருத்தங்கள் யோசியா அரசரால் செய்யப்பட்டன. ஒரே இடத்தில் பலியிடுதல், பிற பலிபீடங்களை அழித்தல், எருசலேமில் ஆசரித்தல், வான்படை வணக்கத்தை ஒழித்தல், தேவதாசி முறையை ஒழித்தல், சகுனம் பார்த்தல், மந்திரவாதம், குழந்தைகளைப் பலியிடுதல் முதலியவற்றை அகற்றல் ஆகிய சீர்திருத்தங்களை இணைச்சட்ட நூலிலும் நாம் பார்க்கிறோம் (12;16,17;18; 2அர. 23). எனவே, கண்டுபிடிக்கப்பட்ட இந் நூல் இணைச்சட்ட நூல் என்பதை நாம் ஓரளவுக்கு அறிந்துகொள்ளலாம்.

கிராஃப், வெல்கௌசன் என்பாருடைய கொள்கை பின்வருமாறு. கானான நாட்டில் மக்கள் குடியேறிய காலம் முதல் அரச ஆளுகை முறைமை நிறுவப்படும் வரையிலும், பல வாய்மொழி மரபுகள் மக்களிடையே நிலவி வந்தன. அரச ஆளுகை தோன்றி மக்கள் நாட்டு உணர்வு பெற்று நாட்டிலே செழிப்பும், அமைதியும் வளர்ந்தபோது, இம் மரபுகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு J (யாவே என்னும் பெயரைக் குறிப்பிடும் மூலம்), E (எலோகீம் என்னும் பெயரைக் குறிப்பிடும் மூலம்) ஆகிய இரண்டு ஏடுகள் தென்னாட்டிலும், வடநாட்டிலும் முறையே தோன்றின. அரச ஆளுகையின் பிற்பகுதியிலே இவ்விரண்டு ஏடுகளும் ஒன்றாகத் தொகுக்கப்பட்டன. கி.மு. 621ஆம் ஆண்டு இணைச்சட்ட ஏடு D கண்டுபிடிக்கப்பட்டது. இவர்கள் இணைச்சட்ட நூலை எழுதியது மட்டுமல்ல, நீதித்தலைவர்கள் நூல் தொட்டு அரசர்கள் நூல் முடிய இஸ்ரயேல் வரலாற்றையும் தங்களுடைய போக்கிலே விளக்கம் கொடுத்து எழுதினார்கள். சிறையிருப்புக்குப் பின்னர், எருசலேம் திருக்கோவிலில் இருந்துவந்த குருத்துவ பலி வழக்கங்களையும் சட்டங்களையும் தொகுத்து எலோகீம் என்ற பெயரைப் பயன்படுத்திய மூன்றாவது ஏடு P (Priestly) எனப்பட்டது. எசுரா பாபிலோனில் இருந்து திரும்பியபோது ஒரு சட்ட நூலைக் கொண்டுவந்தார் என்று எசுரா 7,8ஆம் அதிகாரங்களில் படிக்கிறோம். அவர்கள் கூடாரப் பெருவிழாவை 8 நாள்கள் ஆசரித்தார்கள் என நெகே. 8:18இலும் இலேவி. 23:36இலும் பார்க்கிறோம். இணை. 16:8இல் 7 நாள்கள் மட்டுமே ஆசரிக்கவேண்டும் என்று பார்க்கிறோம். கோவில் வரியைக் குறித்து நெகே. 10:32இலும், விடு. 30:13இலும் நாம் பார்க்கிறோம். இது போன்ற ஒருமைப்பாடுகள் இருக்கின்ற காரணத்தால் எசுரா பாபிலோனிலிருந்து கொண்டுவந்த சட்ட நூல் P மூலம் என்பது தெளிவாகிறது.

கி.மு. 5ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் P மூல நூல் எழுதப்பட்டது. சில காலம் சென்றபின் இந்த நான்கு மூலங்களும், ஒன்றாகத் தொகுக்கப்பட்டு, தற்போது இருக்கும் முறைமையிலே ஐந்திரு நூல்கள் எழுதப்பட்டன. சமாரியர் யூதரை விட்டுப் பிரிந்துபோன காலத்தில் ஐந்திரு நூல்களையும் எடுத்துச் சென்றனர் என நாம் அறிவோம். எனவே, இந்த இறுதித் தொகுப்பு அதற்கு முன்னர் நிகழ்ந்திருக்கவேண்டும். இந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டால், தொடக்க நூலில் இருக்கும் பல பிரச்சனைகளுக்கு நாம் விடை காணலாம். ஒன்றுக்கு மாறுபட்ட குறிப்புகள் வருமாயின் அவை, வெவ்வேறான ஏடுகளிலிருந்து எழுதப்பட்ட காரணத்தால் அல்லது வெவ்வேறான மரபுகளின் அடிப்படையில் எழுதப்பட்டதால் வந்தன என்று நாம் கூறலாம். பலி செலுத்துவதைக் குறித்து, ஒரே இடத்தில் செலுத்த வேண்டும் என்றும், பல இடங்களில் செலுத்தவேண்டும் என்றும் சட்டங்களில் கூறப்பட்டிருக்கும்போது, பல இடங்களில் செலுத்தலாம் என்பது முந்தைய வழக்கம். ஒரே இடத்தில் செலுத்தலாம் என்பது இணைச்சட்டத் திருச்சட்ட சீர்திருத்தத்தால் வந்தது என்றும் நாம் காணலாம். கால வேறுபாட்டால் சில மாற்றங்களும், சில வேறுபாடுகளும் வந்ததை நாம் தெளிவாக உணரலாம். ஒரே ஆசிரியர் ஒரே காலத்தில் எழுதினார் என்றால் இப்படிப்பட்ட சிக்கல்களுக்கும் முரண்பாடுகளுக்கும் விடைகாண்பது மிகக் கடினமாகும்.

மேற்கூறிய நான்கு ஏடு கொள்கை நூல்களின் இலக்கியத்தை மட்டும் கற்று (literary criticism) அதன் பயனாக அளிக்கப்பட்ட விடையாகும். இந்த முறைமையைப் பின்பற்றி ஆராய்ச்சியைப் பிற்கால ஆய்வாளர்கள் தொடர்ந்து நடத்தினர். ஓரளவுக்கு முரண்பட்ட கருத்துக்கள், மொழிநடை ஆகியவை வரும் இடங்களில் எல்லாம், அவை வெவ்வேறான சிறு மூலங்களிலிருந்து வந்தன என நம்ப J மூலத்தை J_1, J_2 எனவும் (O ஜஸ்பெல்டு), P மூலத்தை P_1, P_2 எனவும் (ஃபன்றாட்), இதைத் தவிர K எனும் (Kenite) ஒரு கேனிய மூலம் உண்டெனவும் (J. மோர்கன் ஸ்டெர்ன், H.H. ரோலி), ஏதோமில் தோன்றிய S (Seir or South) என்னும் ஒரு மூலம் உண்டு எனவும் (R.H. ஃப்பைஃபர்) ஆய்வாளர்கள் கூற முற்பட்டனர். இப்படிப்பட்ட ஆய்வு முறை எந்த விதத் தெளிவான பயனும் கொடுக்காமல் போயிற்று.

மேற்கூறிய இலக்கிய மூல ஆராய்ச்சி முறைகள் மேலும் பயனளிக்காது போகவே வேறு முறைகள் பயன்படுத்தப் பட்டன. குறிப்பாக இலக்கிய அமைப்பு, சூழ்நிலை பற்றிய ஆராய்ச்சி முறைகளைப் (Form Critical Method) பயன் படுத்தி தொடக்கநூலை கற்கத் தொடங்கினர். இலக்கிய ஆராய்ச்சி முடிவுகளை இவர்கள் மறுக்கவில்லை. ஆனால் இலக்கிய ஆராய்ச்சி முடிவுகளைத் தராத வேறு சில உண்மைகளை இவர்கள் இம்முறையின் மூலமாகக் கண்டுகொண்டனர். தொடக்கநூலிலிருக்கும் சிறுசிறு பகுதிகள் அல்லது சிறு இலக்கிய உறுப்புகள் எந்த வழிபாட்டு சமூக வாழ்க்கைச் சூழ்நிலையில் பயன்படுத்தப்பட்டன என்று இவர்கள் ஆய்ந்தனர்.

H. குங்கல் என்பவர் இம் முறையைப் பயன்படுத்தி, திருப்பாடல்கள் நூலைக் கற்றார். திருப்பாடல்கள் பெரும்பாலும் சமூக வழிபாட்டிலும், தனி வழிபாட்டிலும் எழும்பியவை என்பதை அவர் கண்டுகொண்டார். திரும்பத் திரும்ப ஒரே சூழ்நிலையிலேயே அவை பாடப்பட்டக் காரணத்தால் குறிப்பிட்ட எந்தச் சூழ்நிலையில் அவை இடம் பெற்றிருந்தன என்பதையும் அவர் கண்டு முடிவு செய்தார்.

ஆல்பிரக்ட் ஆல்ட் (A.Alt) என்பவர் சட்டத் தொகுப்புக்களை இம் முறையில் ஆய்ந்து நோக்கினார். சட்டங்களில் இரண்டு வகைச் சட்டங்கள்: காரணக் காரியச் சட்டம் (casuistic), வல்லுறுதிச் சட்டம் (apodiectic) இருப்பதை அவர் கண்டுகொண்டார். காரணக் காரியச் சட்டங்கள் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் சார்ந்து வகை வகையாகத் தரப்பட்டிருக்கும். எ.கா. ஒரு மாடு ஒருவனை முட்டினால் அதற்குரிய தண்டனை என்ன? முட்டுகிற மாடாய் இருந்தால் அதற்குத் தண்டனை

என்ன? எதிர்பார்க்காமல் குத்தினால் அதற்குத் தண்டனை என்ன? விடு. 21:28-32இல் தரப்படுபவை இவ்வகைச் சட்டங்களாகும். ஆனால் அதிகாரத்துடன், குறிப்பாக கடவுளின் அதிகாரத்துடன். கூறப்படும் வேறு சில கட்டளைகளும் உண்டு. எக்காலத்திற்கும் அவை பொருந்தியவை. கொலை செய்யாதிருப்பாயாக (20:13) - இது பொதுவான சட்டம். முதல்வகைச் சட்டங்கள் சமீப கீழ்நாட்டு மக்கள் எல்லாராலும் கையாளப்பட்டு வந்தன. அவை சமூகச் சட்டங்கள், எனவே, அச்சட்டங்கள் சமூகச் சூழ்நிலைகளினின்று தோன்றி. மரபுகள் வழி நிலவி நின்ற காரணத்தால் தொகுக்கப்பட்டு எழுதப்பட்டன. ஆனால், வல்லுறுதிச்சட்டங்கள் வழிபாட்டுச் சூழ்நிலையைச் சேர்ந்தவை. குருக்களால் அவை பாதுகாக்கப்பட்டு. வழிபாட்டுச் சூழ்நிலையிலேயே வழங்கப்பட்டுவந்தன.

இம்மாதிரிச் சட்டங்கள் இஸ்ரயேலர் மட்டும் சிறப்பாகக் காப்பாற்றிவந்த சட்டங்களென அறிகிறோம். எனவே, இச்சட்டங்களை எழுதியது யார் என்ற வினாவினை எழுப்பாமல். எந்தெந்தச் சூழ்நிலையில் இவை தோன்றின. எந்தெந்தக் குழுவினரால் இவை பாதுகாக்கப்பட்டு வந்தன என்பன போன்ற வேறொரு வினா இங்கு எழுப்பப்படுகிறது. சட்டங்களில் ஒரு சில சட்டங்கள் (civil law) மூப்பர்களால் பாதுகாக்கப்பட்டு எழுதப்பட்டன என்றும், வேறு வகைச் சட்டங்கள் (religious law) வழிபாட்டினில் குருக்களால் பயன்படுத்தப்பட்டுக் காப்பாற்றப்பட்டு வந்தன என்றும் நாம் அறிகிறோம். ஃபன்றாட் என்ற அறிஞர் ஐஞ்சுருள் நூல்களின் பிற பகுதிகளை ஆய்ந்தார். இங்கு, இணை. 6:10-24; 25:5-9; யோசு. 24:2-13 போன்று சிற்சில தொன்மையான பற்றுறுதி அறிக்கைகள் கூறப்பட்டிருப்பதை அவர் அறிந்துகொண்டார்.

எடுத்துக்காட்டாக, இணை. 26ஆம் அதிகாரத்தில் முதல் பலனை எடுத்துப் படைக்கும்போது, இஸ்ரயேலர் கூறும் அறிக்கையை நாம் பார்க்கிறோம். என் தந்தை சிரியா நாட்டைச் சேர்ந்தவர். அவர் கொஞ்சம் மக்களோடே எகிப்திற்குப் போய், அவ்விடத்தில் அன்னியராய் இருந்தார். அவரைச் சேர்ந்தவர்கள் சிலரேயாயினும் அங்கே வலிமைக்கு பெரிய மக்களினத்தைக் கொண்டவர் ஆனார். எகிப்தியர் எங்களை ஒடுக்கி, எங்களைச் சிறுமைப்படுத்தி, எங்கள்மேல் கடினமான வேலைகளைச் சுமத்தினபோது, கடவுளாகிய ஆண்டவரை நோக்கிக் கூக்குரலிட்டோம். ஆண்டவர் எங்கள் குரலைக் கேட்டு, எங்கள் சிறுமையையும், எங்கள் வருத்தத்தையும் எங்கள் ஒடுக்கத்தையும் பார்த்து ... இது போன்ற பகுதிகளில் ஐஞ்சுருள் நூல்களின் சுருக்கத்தை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட பற்றுறுதி அறிக்கைகள், உடன்படிக்கைப் புதுப்பித்தல் போன்ற விழாக்களில் கூறப்பட்டன.

இப்படிப்பட்ட பற்றுறுதி அறிக்கைகளை நாம் பார்க்கையில், ஒரு சில மரபுகளில் எடுத்துக்காட்டாக திருப். 7:8; 10:5; 13:5; 13:6; விடு. 15 போன்ற பகுதிகளில், சீனாய் உடன்படிக்கையைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. ஆனால் எகிப்து நாட்டிலிருந்து விடுதலை பெற்றதைப் பற்றியும் கானான் நாட்டை உடைமையாக்கிய மரபுபற்றியும் இங்கே கூறப்பட்டுள்ளன. தனித்தனியான இப்பேர்பட்ட மரபுகள் வழிபாட்டுச் சூழ்நிலையிலேயே கூறப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுவந்தன என்றும், J ஆசிரியர் அல்லது அவரது குழு இந்த மரபுகளை எல்லாம் ஒன்றுசேர்த்து மூதாதையரின் கதைகளையும், படைப்பின் வரலாற்றையும் அவற்றுடன் சேர்த்து ஐஞ்சுருள் நூலுக்கு அடிப்படைத் திட்டமும் உருவமும் அளித்தார் என்பது இவர்களது விவாதமாகும். ஒரு தனி ஆசிரியர் எழுதினார் என்ற கருத்து உருவாவதைக் கண்டுகொள்ளுகிறோம். மேலும் இணைச்சட்ட நூல் அருளுரை நடையில் எழுதப்பட்டது எனவும் ஃபன்றாட் கூறுகிறார்.

ஸ்காண்டினேவியா நாடுகளிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் வேறொரு முறையிலே இந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்தனர். கி.மு. 10,11ஆம் நூற்றாண்டிலேயே இந்நூல்களின் முதல் ஏடுகள் எழுதப்பட்டன என்பதனை மறுத்து, சிறையிருப்பின் காலம் வரை இஸ்ரயேலிலே மிகமிகச் சிறிய அளவில் இலக்கியப் பணி நடந்துள்ளது; சிறையிருப்பின் காலத்திற்குப் பிறகுதான் இவை நூல்களாக எழுதப்பட்டன என்று கூறுகின்றனர். எனவே, கி.மு. 5ஆம் நூற்றாண்டு வரை வாய்மொழி மரபுகளாகவே இருந்த காரணத்தால் ஒரு சில மாற்றங்கள், ஒன்றுக்கொன்று முரண்பட்ட குறிப்புக்கள் இருந்தன என்றும், தனித்தனி இடங்களில் இருந்த மரபுகள் ஓரளவுக்கு வேறுபட்டு இருந்தன என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

வாய்மொழி மரபுகளை அவர்கள் முன்றாகப் பகுக்கின்றனர். தொடக்கநூல் முதல் எண்ணிக்கை வரை அடங்கியுள்ள பகுதிகள் குருத்துவ முறைமைகளில் அக்கறை காட்டுவதால் இதற்கு P மரபுகள் எனப் பெயரிட்டனர். இது ஒரு நூல் அன்று, ஒரு மரபுத் தொகுதி என்று அவர்கள் வற்புறுத்துகின்றனர். இணைச்சட்டம் முதல் இரண்டு அரசர்கள் மட்டும் இருக்கும் மரபுகளை D மரபுகள் என அழைக்கின்றனர். குறிப்பேடு முதல் நெகேமியா நூல் வரை குறிப்பேடு மரபுகள் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

யாவே, எலோகீம் எனும் பெயர்களைக்கொண்டு மூல நூல்களைத் தொடக்கத்தில் பகுத்தார்கள் என்று நாம் கூறினோம். இப்படிப்பட்ட பாகுபாட்டினை உப்சாலா ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. நாம் முற்கூறிய சில பிரச்சனைகளுக்கு இம்முறைமை பதில் அளிக்காவிடினும், இக் காலத்தில் எழுதப்படும் நூல்களைப்போன்று ஐஞ்சுருள் நூல்கள் எழுதப்படவில்லை. வாய்மொழி மரபாக இருந்துவந்தது என்பதை இவர்கள் நிறுவினார்கள். இவர்களது பணியின் பயன் அது என்று கூறலாம்.

ஐஞ்சுருள் நூல்கள் ஆராய்ச்சியில் நூலைப் பொறுத்தவரையில் அடிப்படையாக நான்கு ஏடுகளைப் பெரும்பாலான ஆய்வாளர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். வெல்கௌசன் கூறிய முறையிலேயே J,E,D,P எனும் மூலங்களும் அவற்றின் ஆசிரியரும் காலமும் அமைந்துள்ளன என்று நாம் கூற முடியாவிட்டாலும். ஐஞ்சுருள் நூல்களின் சிக்கல்களைப் புரிந்துகொள்வதற்கு இதைவிடப் போதுமான வேறொரு விடை இல்லை என்று துணிவுடன் கூறலாம்.

4. நான்கு மரபுகள்

(அ) J மரபு

கி.மு. 10ஆம் நூற்றாண்டில் இது எழுதப்பட்டது. ஆனால் இது இக் காலத்திலேயே எழும்பியதன்று. பல நூற்றாண்டுகளாக இஸ்ரயேல் மக்களிடம் வழக்கிலிருந்தவை தேர்ந்தெடுக்கப்பட்டு, ஓர் இறையியல் நோக்குடன் எழுதப்பட்ட காலத்தையே இது குறிக்கும். J மரபு சேர்ந்த பகுதிகளில்

குறிப்பிட்ட சொல் அமைப்பு, குறிப்பிட்ட உரைநடை, குறிப்பிட்ட இறையியல் கருத்துக்கள் இருப்பதை நாம் காணலாம். எடுத்துக்காட்டாக, சட்டநூல் வழங்கப்பட்ட மலைக்கு, இந்நூலில் ஒரேபு என்ற பெயர் வழங்கப்படுகிறது. இஸ்ரயேல் மக்களுக்கு முன் பாலஸ்தீனாவில் வாழ்ந்த மக்கள் கானானியர் என அழைக்கப்படுகின்றனர். கடவுளுக்கு மனுவுரு அளித்து வடித்தல் இந்நூலின் ஒரு சிறப்பாகும். (1) கடவுள் மனிதரைத் தமது சாயலாக உருவாக்கினார் (தொட. 1:26, 27; 2:7), (2) மாலை நேரத்தில் ஏதேன் பூங்காவில் சுற்றுலா சென்றார், (3:8). (3) நோவாவின் பேழையின் சாளரத்தை மூடினார் (7:16). (4) நோவாவின் பலியைச் சுகந்த வாசனையாக முகர்ந்தார் (8:21). (5) மக்கள் கட்டும் கோபுரத்தைப் பார்க்கவிண்ணிலிருந்து இறங்கி வந்தார் (11:5,7) போன்றவை இதற்குச் சான்றுகள். குல வரலாற்றைத் தனி நபரின் வாழ்க்கையெனச் சித்தரிப்பதும் இந்நூலின் ஆசிரியரின் ஒரு சிறப்பு என்று கூறலாம். மூதாதையரின் வாழ்க்கையில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளால் சில இடங்கள் முக்கியத்துவம் பெற்று, பிற்காலத்தில் கோவில்களாக அல்லது வழிபாட்டுத் தலங்களாக அவை மாறிய வரலாற்றினையும் இவ்வாசிரியர் கூறி விளக்குகின்றார். எ.கா. செக்கேம் (12:6,7), பெத்தேல் (28:19; 13:3,4,8), எபிரோன் (23:2-5), பெயேர்செபா (26:23,33).

உலகப் படைப்புத் தொட்டு இஸ்ரயேல் மக்கள் கானான் நாடு புகுந்தது வரை உள்ள வரலாற்றினை ஒரு தெளிவான இறையியல் கருத்துடன் J ஆசிரியர் விளக்குகிறார். தாவிது, சாலமோன் அரசர்களின் காலத்தில் தென்னாடு பெற்ற மேன்மையான நிலைமைகளை மறைவாகக் கொண்டு கடவுள் யூதாவை எவ்வாறு தேர்ந்துகொண்டார் எனும் கருத்து ஊடே செல்லும் நூல் போன்று இவ்வரலாற்றில் தொக்கி நிற்கிறது. ஏசாவைத் தவிர்த்து யாக்கோபைத் தேர்ந்தது, சகோதரர்களை விட்டுவிட்டு யூதாவைத் தேர்ந்தது போன்ற பகுதிகளுக்குச் சிறப்பிடம் அளிப்பதால் இவ்வாசிரியர் தென்னாட்டில் வாழ்ந்தார் எனவும் தெளிவுறுகின்றது.

உலகப்படைப்பு, வெள்ளப்பெருக்கு, பாபேல் கோபுரம் எனும் கதைகளால் மூதாதையரின் வரலாற்றுக்கு ஓர் உலகப் பொதுநோக்குப் பின்னணி அளிக்கப்பட்டது. உலகப் படைப்பு முதல் கடவுள் எவ்வாறு அதனை நடத்தி வந்தார் என்பதையும், இஸ்ரயேலைத் தேர்ந்து கொள்வதற்கு அது எவ்வாறு ஒரு காரணமாக அமைந்தது என்பதையும் அவர் விளக்குகிறார். மிக ஆழமான ஓர் இறையியல் கோட்பாட்டை நாம் இவருடைய நூலிலே காணலாம். கடவுளின் திருவுளத்துக்கு மாறாக மனிதர் நடந்துகொண்டபோது கடவுள் அதற்குத் தண்டனை அளிக்கின்றார். தண்டனையுடன் அருளும் இருந்தது என்பதை இவருடைய நூலிலே நாம் பார்க்கலாம். ஆதாம்-ஏவாள் பாவத்திற்குத் தண்டனை கூறப்பட்டது. பின்னர் உடை வழங்கப்படுகிறது, காயின் தண்டனைக்குப் பின்னர் அவனது நெற்றியில் அடையாளம் போடப்படுகிறது. நோவாவின் காலத்தில் வெள்ளப்பெருக்கால் மண்ணுலகை அழித்த பின்னர் வானத்தில் வானவில்லானது அருளின் அடையாளமாக கொடுக்கப் படுகிறது. கடவுளின் அருள், அன்பு, இரக்கம், அவருடைய தண்டனையைக் காட்டிலும் அதிக வலிமையுடையது என்பது J ஆசிரியரின் நம்பிக்கை. இதனை இந்த நூலிலே காணலாம்.

(ஆ) E மரபு

சாலமோன் காலத்திற்குப் பின்னர் வடநாடு, தென்னாடு என்று இஸ்ரயேல் நாடு பிரிந்தது (கி.மு. 932). இம் மரபுகள் வடநாட்டில் தோன்றியிருக்க வேண்டும். எலியா இறைவாக்கினர் மூலமாகப் புகுத்தப்பட்டச் சீர்திருத்தங்கள் இந்த இலக்கியப் பணிக்கு அடிப்படையாக அமைந்தன. J ஆசிரியரைப் போன்று உலகப் படைப்பு முதல் தமது வரலாற்றினை அவர் துவங்காமல், ஆபிரகாம் முதலாக அவர் தொடங்குகிறார். கடவுள் மனிதருக்கு முற்றிலும் அப்பாற்பட்டவர் என்கின்ற எலியா போன்ற இறைவாக்கினரின் கருத்துக்கள் இங்கே இடம் பெறுகின்றன. கடவுளை மனுவுருக் கொடுத்து (J ஆசிரியர்போல்) எழுதாமல் கடவுள் கடந்து நின்று, கனவுகள் மூலமாகவும், விண் தூதுவர் மூலமாகவும், உருவை கொடுக்காமல் மெல்லிய குரல் மூலமாகவும் பேசுகிறார் என்கின்ற கருத்தை நாம் இங்கே காணுகிறோம்.

தொட. 20:7இல் ஆபிரகாம் ஓர் இறைவாக்கினர் என அழைக்கப்படுகிறார். மூதாதையரின் வாழ்க்கையில் வந்த சிறு தவறுகளையும் அவர் பொறுத்துக்கொள்ளாமல், ஆபிரகாம் தமது மனைவியை சகோதரி எனக் கூறியது முற்றிலும் பொய் அல்ல என்று ஓர் அளவுக்கு ஆபிரகாமின் குறைகளை மறைக்கப் பார்க்கிறார் (20 உடன் 26ஐ ஒப்பிடுக). ஒரேபுக்குச் சீனாய் மலை என்ற பெயரும் கானான் நாட்டு மக்களுக்கு அமோரியர் என்ற பெயரும் வழங்கப்பட்டிருப்பதை இந்நூலில் காணலாம். E ஆசிரியரைப் பொறுத்தவரையில் இஸ்ரயேல் வரலாற்றின் உச்சநிலை கடவுள் இஸ்ரயேல் மக்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையே என்று நாம் காணலாம். மறக்க முடியாத வகையிலே இஸ்ரயேல் மக்களின் வரலாற்றிலே கடவுள் செயல்பட்டார். இஸ்ரயேல் மக்களைத் தமது மக்களினமாகத் தேர்ந்துகொண்டார். அவர்களுடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அதற்குப் பதிலாக சட்டங்களை மக்கள் ஏற்றுக்கொண்டனர் என்பதைக் கூறி, இஸ்ரயேலரின் பின்வாழ்க்கைக்கு அடிப்படையான சட்டத்தொகுப்புகளை இந்நூல் வழங்குகிறது. கானான் நாட்டில் வாழ்கின்ற பெருமக்களுடன் கலந்து வாழும் வாழ்க்கையை வெறுத்து பாலை நில வாழ்க்கையைச் சிறப்புடன் விளக்கும் விதத்தினையும் இந் நூலிலே காணலாம். மூதாதையரின் வரலாற்றினைக் கூறுகையில் பெரும்பாலும் வடநாட்டு வழிபாட்டுத்தலங்களுடன் அவர்களைத் தொடர்புபடுத்திக் கூறுவதையும் காணலாம். J, E என்ற இரு மரபுகளும், வடநாட்டின் வீழ்ச்சிக்குப் பிறகு (கி.மு. 721) ஒன்றாகத் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். தென்னாட்டிலே இந்தத் தொகுப்பு தொகுக்கப்பட்ட காரணத்தால் J மரபு E மரபைக் காட்டிலும் முக்கியத்துவம் பெற்றிருப்பதை நாம் காணலாம்.

(இ) இணைச்சட்ட மரபு (D)

யாவே சமயத்தின் தூய்மை ஆபத்திற்குள்ளாகும் ஒரு நிலைமையில், D மரபு நூல் வடிவத்தைப் பெற்றது என்று எண்ணுவதற்கு இடம் உண்டு. கானான் வழிபாட்டு முறைமைகளையும், பல வழிபாட்டுத் தலங்களையும் இம் மரபு முற்றிலும் எதிர்க்கின்றது. வழிபாட்டுத் தூய்மையைப் பாதுகாப்பதற்கென எருசலேமில் மட்டும் பலி செலுத்தப் படவேண்டும் என்ற ஒரு புதுச்சட்டம் இம் மரபால் புகுத்தப்பட்டது. ஆண்டவர் தேர்ந்துகொள்ளும் ஓர் இடத்தில் மட்டும் பலி செலுத்தப்படலாம் என்ற காரணத்தால், சிறு சிறு வழிபாட்டுத் தலங்களில் பணிசெய்து வந்த குருக்கள் வேலை இழந்தனர். எனவே, இப்படிப்பட்டவர்கள் மத்திய வழிபாட்டுத் தலத்திற்கு வந்தால் பலி செலுத்தும் உரிமையையும், பலிப்

பொருளில் பங்கு பெறும் உரிமையையும் பெற்றுக்கொள்வர் என இணைச்சட்டத்தில் நாம் பார்க்கலாம் (18:6-8), மேலும் சிறுகோவிலில் திருப்பணி செய்து வந்த இலேவியருக்கு இப்போது கோவிலில் திருப்பொருள் கிடையாத காரணத்தால் அவர்களுக்குப் பொருள் உதவி செய்யவேண்டும் எனவும் இங்குக் கூறப்பட்டது (16:11). கடவுளுடைய உடன்படிக்கையைக் கைக்கொள்வதால் மட்டுமே வாழ்வு கிடைக்கும் என்பது இணைச்சட்ட நூலின் அடிப்படை நம்பிக்கை.

கடவுள் தமது அன்பினால் இஸ்ரயேல் மக்களைத் தெரிந்துகொண்டார். பெரிய மீக்களினமாக இருந்ததால் கடவுள் தேர்ந்துகொள்ளவில்லை. அன்பினாலேயே தேர்ந்து கொண்டார் என்கிற கருத்து திரும்பத் திரும்ப வற்புறுத்தப் படுகிறது. நீ உன் கடவுளாகிய ஆண்டவரின் தூய மக்களினம். உன் கடவுளாகிய ஆண்டவர் மண்ணிலுள்ள எல்லா மக்களினங்களிலும் உன்னையே தமக்குச் சொந்த மக்களினமாகத் தேர்ந்தெடுத்தார். ஆண்டவர் உங்கள் மீது அன்புகொண்டு உங்களைத் தேர்ந்தெடுத்தது, நீங்கள் எல்லா மக்களினங்களிலும் திரளானவர்கள் என்பதினாலல்ல, நீங்கள் எல்லா மக்களினங்களிலும் மிகச் சிலராயிருந்தீர்களே . . . என இணை. 7:6,7இல் நாம் படிக்கிறோம். எனவே, ஏழைகளிடம் அருளிரக்கம் காட்டுவதை இந் நூல் அழுத்திக் கூறுகின்றது (5:7-18; 16:11; 20:14). மேலும், இவ்வித இரக்க உணர்ச்சிக்கு இறைவனின் இரக்க உணர்ச்சியே அடிப்படையாகக் கூறப்பட்டது. உங்கள் கடவுளாகிய ஆண்டவரே, கடவுளர்க்கெல்லாம் கடவுள். இறைவர்க்கெல்லாம் இறைவன். மாட்சியும் ஆற்றலும் உள்ள அஞ்சுதற்குரிய கடவுள் அவரே. அவர் ஒரவஞ்சனை செய்வதில்லை, கையூட்டு வாங்குவதும் இல்லை. அனாதைகளுக்கும் கைம்பெண்களுக்கும் நீதி கொடுப்பவர் அவரே. அன்னியருக்கு அன்புகாட்டுங்கள். ஏனெனில் நீங்களும் எகிப்தில் அன்னியராய் இருந்தீர்கள் (10:17-19).

ஓய்வுநாள் ஆசரிப்புக்கு எகிப்தின் விடுதலையும், கூலி யாட்களுக்கு ஓய்வின் தேவையும் அடிப்படைக் காரணங்களாகும் (5:14,15) எனும் போதனையை நாம் இங்குப் பார்க்கிறோம். ஒரே கடவுள், ஒரே மக்கள், ஒரே வழிபாடு என்பது இந்நூலின் சாரம் என ஃபன்றாட் பண்டிதர் கூறியதை நாம் ஒத்துக்கொள்ளலாம்.

கி.மு. 721இல் வடநாட்டிலிருந்து வந்த அகதிகளால் இம்மரபுகள் கொண்டுவரப்பட்டிருக்கலாம். வட நாட்டில் தோன்றிய E மரபுடன் நெருங்கிய ஒற்றுமையையும் நாம் காணலாம். இவ்வாறு கொண்டு வரப்பட்ட மரபுகள் காலம் செல்லச் செல்ல ஒழுங்குபடுத்தப்பட்டு, இந்த நூலாக அமைந்தது.

கி.மு. 621இல் வெளியிடப்பட்டாலும் பல காலத்திற்கு முன்னேயே வழக்கிலிருந்த சட்டங்கள் இதில் இடம் பெற்றுள்ளன என்று நாம் கூறவேண்டும். இப்போதுள்ள வடிவத்திலே யோசுவா முதல் அரசர்கள் முடிய உள்ள நூல்களுக்கு இது முன்னுரையாக அமைந்துள்ளது. இந் நூலின் அருளுரை நடையைப் படிப்பவர் உணராமலும் இருக்கமுடியாது. இப்போது, இன்று, உங்களுடன் எனும் சொற்கள் அழுத்தமாகக் கூறப்பட்டு, மக்கள் கீழ்ப்படிதலுக்கு அழைக்கப் படுகிறார்கள். உள்ளத்தைத் தொடும் வகையில் இறையன்புக்கு ஈடு செய்யுமாறு அழைக்கப்படுகின்றனர். இலேவியர் மறைநூலை விளக்கி இஸ்ரயேல் மக்களுக்கு அளித்த அருளுரைகள்தாம் இவை என ஃபன்றாட் பண்டிதர் கூறுவதை நாம் முற்றிலும் ஒத்துக்கொள்ளலாம்.

(ஈ) P மரபு

வழிபாடு, குருத்துவ முறைமைகள், பலி போன்றவற்றில் மிக அக்கறை காட்டுவதால் இம் மரபு குருத்துவ மரபு எனப் பெயர்பெற்றது. குல வரலாறு, காலக் குறிப்புகள், வழிபாட்டு ஒழுங்குகள் போன்றவை இம் மரபில் இடம் பெற்றுள்ளன. J மரபைப் போன்ற மனுவுரு ஏற்பியல் இங்குக் காணப்படாமல் முற்றிலும் கடவுள் மனிதருக்கு அப்பாற்பட்டவர் என்ற கருத்து இங்கு விளக்கம் பெறுகிறது. விடுதலைப்பயண நூலின் பிற்பகுதியும், பெரும்பாலான இலேவியர் திருநூலும், எண்ணிக்கை நூலின் பெரும்பகுதியும் இந்த மரபைச் சேர்ந்தனவாகும்.

பிற மரபுகளைப் போன்றே P மரபும் முற்காலத்திலிருந்து வந்ததாகும். அதன் இறுதி வடிவம் இஸ்ரயேலர் சிறையிருப்புக் காலத்திற்குப் பின்னர் கொடுக்கப்பட்டது. இஸ்ரயேலின் நம்பிக்கை சிறையிருப்பின் மூலமாக ஒரு பெரிய திருப்பத்திற்குள் வந்தது. அதன் அடிப்படையான நம்பிக்கை உண்மைதானா என்ற ஒரு வினாகூட எழுப்பப்பட்டது. ஆனால் கடவுள் உண்மையுள்ளவர்; மனிதத் தன்மை வாய்ந்தவர். இஸ்ரயேல் மக்களுடைய பெயரை முன்னிட்டும், அவர்கள் உடன்படிக்கையில் குறிப்பாக வழிபாட்டு முறைமைகளில் கீழ்ப்படியாததின் காரணமாகவும் இத்தண்டனை வந்தது என்ற நம்பிக்கை இக்காலத்தில் ஆழமாக மக்கள் உள்ளங்களில், குறிப்பாக குருத்துவக் குழுவில், இடம்பெற்று வந்தது. கடவுளின் தூயத்தன்மைக்கு ஏற்ப இஸ்ரயேல் மக்கள் எவ்வாறு வாழக்கூடும் என்பது மிகத் தெளிவாக இம் மரபில் கூறப்பட்டது. இஸ்ரயேலின் விழாக்களைப் பற்றிய தெளிவான குறிப்புக்கள், அவற்றை மக்கள் ஆசரிக்கவேண்டிய முறைமைகள் போன்றவற்றைப் P மரபு தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. P மரபு ஆசிரியர்கள் இஸ்ரயேலர் வரலாற்றை மூன்று உடன்படிக்கைகள் மூலம் முக்கியமான நான்கு பகுதிகளாகப் பகுக்கின்றனர். இவை (1) நோவாவுடன் செய்த உடன்படிக்கை, (2) ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கை, (3) சீனாய் உடன்படிக்கை என்பனவாகும். அவ்வுடன்படிக்கைக் கட்டளைகளின்படி, சந்திப்புக் கூடாரம் நிறுவப்பட்டு ஆரோனும், மக்களும் குருத்துவப் பணிக்கென அருள் பொழிவு செய்யப்பட்டதுடன் இஸ்ரயேலரின் முக்கியமான நிகழ்ச்சி நிறைவேறியது. இனி, கடவுளுக்கும் மனிதருக்கும் ஒழுங்கான தொடர்புக்கு வழி உண்டு என்பதை P ஆசிரியர் அழகுற விளக்குகிறார். எசுறாவால் கானான் நாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம் யூதத் திருச்சபையின் பின் வரலாற்றில் அதன் அடிப்படையான சிறப்பிடம் பெற்றுள்ளது.

நான்கு மரபுகளைப் பற்றிக் கூறினோம். அம் மரபுகள் இலக்கிய உருவெடுத்த காலத்தைப் பற்றியும் கூறினோம். அவை மோசே முனிவர் வாழ்ந்த காலத்திற்கு மிகப் பிந்தியவை என்று நாம் கண்டுகொண்டோம். பிற்காலத்தில் இலக்கிய உருவெடுத்தன என்று நாம் கூறினாலும், இம் மரபுகள் அதற்குமுன் மிக மிகத் தொன்மையான காலத்திலிருந்தே எழும்பின என்பதை நாம் மறந்துவிடலாகாது. இலக்கிய உருவில் ஒருவேளை மோசே பெரும் பகுதிகளைக் கொடுத்தி ருக்க நியாயமில்லை என்பது உண்மைதான். ஆனால் பல மரபுகள் மோசேயின் காலத்திலிருந்தே எழும்பின என்பதை யாரும் மறுக்க முடியாது. மக்களுக்கு யாவே வழிபாட்டைப்

புகுத்தி, அடிமையாக வாழ்ந்துவந்த மக்களுக்கு அரசியல் விடுதலை அளித்து சமயத்தையும் சமூகத்தையும் நிலைநாட்டிய சிறப்பு மோசே முனிவரையே சாரும். நூல் வடிவத்தை மோசே கொடுத்தாலும் கொடுக்காவிடினும், ஐஞ்சுருள் நூல்களின் மரபுகளைத் தோற்றுவித்தவராக, நூல்களின் இறை நம்பிக்கைக்கு அடித்தளம் வகுத்தவராக, இந்த நூல்களின் மையத்திலே மோசே நிற்கின்றார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மேலும் ஐந்திருநூல் சட்டங்கள் மூலமாக பேசுவது மனிதத் தலைவர்கள் எவரும் அல்லர்; அவற்றை வழங்கிய இறைவனே என்பதும் நாம் மனத்தில் கொள்ளவேண்டிய உண்மை. இந்த நூல்களின் அதிகாரம் மோசேயின் அதிகாரம் அன்று, மோசேயைப் பயன்படுத்தி அவர் மூலமாக மக்களை இறையன்புக்கு நேராகத் திருப்பியது இறைவனே ஆவர். மோசேயின் பணியை நாம் சிந்திக்கையில், வரலாற்றிலே அவர் புரிந்த பணிக்கும், இலக்கியத்திலே அவர் புரிந்த பணிக்கும் வேறுபாடு உண்டு என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். யூத வரலாற்றில், சிறப்பாக யூத சமய வரலாற்றில், அவர் செய்த பணியை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இலக்கியத்தில் அவர் எந்த அளவு பணி புரிந்தார் என்பதை அந்த இலக்கியத்தினின்றே நாம் ஆராய்ந்து உணர்ந்துகொள்ள வேண்டும். நாம் மேற்கூறிய ஆராய்ச்சி உண்மைகள் மோசேயின் சிறப்பையோ, அவரது பணியையோ எந்த அளவும் குறைத்துவிடும் என்று அஞ்சத் தேவையில்லை. இம் மரபுகளின் தொடக்கத்தில் மகத்தான பணி மோசே செய்தார் என்கின்ற உண்மையைப் புரிந்துகொண்டு, இந்தக் கருத்திலே மோசேதான் ஐஞ்சுருள் நூல்களுக்கு ஆசிரியர் என்று கூறுவதிலும் தவறு இல்லை.

5. ஐந்திருநூலின் சிறப்புக் கருத்துக்கள்

இறையியல் கருத்துக்கள்: இப்படிப்பட்ட மேற்கூறிய நான்கு மரபுகளும், அவற்றிற்குரிய இறையியல் முறைகளும் ஐஞ்சுருள் நூலில் இடம் பெற்றிருப்பினும் இவற்றை எல்லாம் இணைத்துச் செல்லும் ஓர் ஒருமைப்பாட்டினை இந்த நூல்களில் காணலாம். டிவாக்ஸ் (Devaux) எனும் பண்டிதர் இதைப் பற்றிக் கூறுகையில் வாக்குறுதி, தேர்ந்தெடுத்தல், உடன் படிக்கை, சட்டம் எனும் இந்த நான்கும் பொற்கயிறுகளாக ஐஞ்சுருள்களை இணைத்து வைத்திருக்கின்றன என்று கூறுகிறார்.

வாக்குறுதி: உரிமைப்பேறுபெற்று வாழ்வதற்கு ஒரு நாடு, வாழ்க்கையால் உலகிற்கு ஆசி, வாழ்க்கைக்குப் பின் உரிமையாளர்கள் ஆகியவை ஆபிரகாம் பெற்ற வாக்குறுதிகள். வெள்ளப்பெருக்கிற்குப் பின்னர் நோவாவிற்கும் உலகனைத்திற்கும் ஒரு வாக்குறுதி (தொட. 9:8 முதல்) கொடுக்கப்பட்டது. தொடக்க மனிதர் பாவத்தில் விழுந்தவுடன் மனுக்குலத்தின் இறுதி வெற்றியைக் கூறும் ஒரு வாக்குறுதி கொடுக்கப்படுகிறது (3:15). இவ் வாக்குறுதிகள் இந்த நூல்களுக்கு ஒளிவீசும் விளக்குகளாக விளங்குகின்றன. ஆபிரகாமுக்கு அளித்த வாக்குறுதி நிறைவேறுதலே வரலாற்றின் உட்பொருள் எனும் கருத்தினை J ஆசிரியர் விளக்குகிறார்.

தேர்ந்தெடுத்தல்: மூதாதையர் தேர்ந்தெடுத்துக் கொள்ளப் பட்டனர். அவர்களில் எவ்விதத் தகுதியும் திறமையும் இல்லாதிருந்தபோதும், இறைவன் அவர்களை அழைத்து, அவர்களுக்கு ஒரு தனி நோக்கைக் கொடுத்து, அவர்களை வேறுபடுத்திப் பாதுகாத்து வந்தார் என்று நாம் பார்க்கிறோம். வாழ்க்கையில் இறைவன் கலந்து கொண்டு, முற்றிலும் அவராகவே ஆபிரகாமுடைய வாழ்க்கை வரலாற்றை நடத்துவதை நாம் பார்க்கிறோம். ஈசாக்கும் யாக்கோபும் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்படுவதற்கு எவ்விதத் தகுதியும் உடையவர்களாய் இருந்ததாகத் தெரியவில்லை. இறைவனின் அருள்மட்டுமே காரணம். கொஞ்ச மக்களாயிருந்த இஸ்ரயேலரை கடவுள் தம் அன்பினால் மட்டுமே தேர்ந்து கொண்டார் என வெளிப்படையாக இக்கருத்தை இணைச் சட்டநூல் தெரிவிக்கிறது. இத் தேர்ந்தெடுப்பு கடவுளுடைய முந்தைய வாக்குறுதிகளின் பயனாக விளைந்தது என்று நாம் காணலாம். இந்தத் தேர்ந்தெடுப்பு உடன்படிக்கையின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டது.

உடன்படிக்கை: உடன்படிக்கைகள் அக் காலத்திலே சமூக வாழ்க்கைகளில் ஒரு வழக்கமாக இருந்து வந்தன. ஆபிரகாம் -அபிமலேக்கு, யாக்கோபு-லாபான், தாவிது-யோனத்தான் போன்றவர்கள் உடன்படிக்கை செய்து கொண்டதை நாம் பார்க்கிறோம். இத்தியப் பேரரசர்கள் தங்கள் சிற்றரசர்களுடன் இவ்வாறு உடன்படிக்கை செய்வதை நாம் இத்திய இலக்கியத்தினின்று அறிந்து கொள்ளுகின்றோம். ப.ஏ.இல் நாம் காணும் உடன்படிக்கையின் அமைப்புக்கும் இப்பேர்ப்பட்ட இத்திய உடன்படிக்கை அமைப்புக்கும் நெருங்கிய ஒருமைப்பாடு உள்ளது எனப் பல ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இறைவன் காட்டிய அருளை இந்த உடன்படிக்கை அமைப்பு முறையில் இஸ்ரயேலர் புரிந்து கொண்டனர். இந்த உடன்படிக்கையைத் தொடங்கியவரும் நிறுவியவரும் கடவுளே. இஸ்ரயேல் மக்கள் இந்த உடன் படிக்கையை ஏற்றுக்கொள்ள மட்டுமே முடியும். தாமாக இதை நிறுவ அவர்களால் முடியாது.

திருச்சட்டம்: நான்காவதாக, ஐஞ்சுருள் நூலில் கூறப்படும் முக்கியமான கருத்து திருச்சட்டமாகும். தோரா என்ற சொல் லுக்குப் போதனை என்று பொருள். இஸ்ரயேல் மக்கள் கடவுள் விரும்பும் பாதையில் நடந்துகொள்ளவும், தங்களுடைய புனிதத் தன்மையைப் பாதுகாத்துக் கொள்ளவும் எவ்வழியில் செல்லவேண்டும் என்று அவர்களுக்குப் போதனை அளிப்பது இத் திருச்சட்டம். இச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிவது மகிழ்ச்சியைத் தரும். இறைவனோடு கொண்டுள்ள நெருங்கிய தொடர்பின் அடிப்படையில் இவை கைக்கொள்ளப்பட வேண்டும் எனும் கருத்துக்களே முந்தைய காலத்தில் முதலிடம் பெற்றிருந்தன. சட்டத்தை ஒரு கடமையாகவும் அதற்குக் கீழ்ப்படிதல் கடினமானதாகவும் எண்ணிய மனப்போக்கு பிற்காலத்தில் எழுந்ததாகும். தேர்ந்தெடுத்தல், உடன்படிக்கை, திருச்சட்டம் எனும் இக் கருத்துக்கள் ஐஞ்சுருள் நூல்களில் சிறப்பிடம் பெற்றிருந்தாலும், யாவேயாகிய கடவுள் இஸ்ரயேல் மக்களுடன் ஏற்படுத்திக்கொண்ட உறவு எனும் ஒன்றுதான் இந் நூல்களின் மையமாக அமைந்து விளங்குகிறது. மக்கள் பாவம் செய்தாலும், அதற்கென்று அவர்கள் தண்டனை பெற்றாலும், இவ்வுறவு முறிந்துபோகாமல், இறைவன் பாதுகாத்து வந்த அவரது அருள் இந் நூல்களில் எங்கும் நிறைந்து கிடக்கின்றது.

துணை நின்ற நூல்கள்

1. Pfeiffer, Robert, H., *Introduction to the Old Testament*, Adam and Charles Black, London, 1948.
2. Gerhard Von Rad, *Genesis*, pp. 1-30, S.C.M. Press Ltd., Bloomsbury Street, London, 1961.
3. Hooke, S.H., *Introduction to the Pentateuch*, in Peaks's Commentary on the Bible, Thomas Nelson and Sons Ltd., London, 1962.
4. Eissfeldt, Otto, *The Old Testament - An Introduction*, Basil Blackwell, Oxford, 1965.
5. Maly, Eugene, H., *Introduction to the Pentateuch*, in The Jerome Biblical Commentary, Prentice-Hall, INC. New Jersey, 1968.
6. D.J. Clines. *The Theme of the Pentateuch*, JSOT, 1985.
7. Whybry, *The Pentateuch*, JSOT, 1989.
8. G. Von Rad, *Old Testament Theology*, Vol.1, SCM, 1977.
9. G.A. Nicholoson, *Deuteronomy and Tradition*, Blackwell, 1967.
10. M. Noth, *The Laws in the Pentateuch and other Essays*, SCM, 1966.
11. G. Von Rad, *The Problem of the Hexateuch and Other Essays*, SCM, 1966.
12. C. Westermann, *The Promises to the Fathers*. Fortress: 1980.

16

இறைவாக்கு நூல்கள்

ஞான இராபின்சன்

1. முன்னுரை

எபிரேயரின் இறைவாக்கு தனிச் சிறப்பு வாய்ந்தது. அது மக்கள் வாழ்க்கையிலும், சமயத்திலும் முக்கிய இடம் வகித்தது. இஸ்ரயேலின் பிற்கால வரலாற்றை உருவாக்கியதில் இறைவாக்கினருக்கு ஒப்பானவர் எவரும் இலர் எனல் பொருந்தும். அவர்கள் சமயப் பாதுகாவலராகவும், நாட்டுப்பற்று மிக்கவராகவும் காணப்பட்டனர்; கடவுள் சார்பாக மக்கள் இதயத்தோடும் பேசினர். அன்னார் தங்கள் கால மக்களிடம் பேசினர். எனினும், அவர்கள் கூறிய அறிவுரைகள் அம்மக்களுக்கு மட்டும் அன்றி, எல்லாக் காலத்து மக்களுக்கும் பொருந்துவனவாயுள்ளன. ஏனெனில், அவை இன்றும் என்றும் மக்கள் மனச்சான்றினைத் தூய்மை செய்யும் இறை அருளுரைகளாக அமைந்துள்ளன.

இந்த இறைவாக்கு மரபு ப.ஏ. முழுவதிலும் விரவிக் கிடக்கின்றது. ப.ஏ. நூல்களில் யோசுவா, நீதித் தலைவர்கள், 1,2 சாமுவேல், 1,2 அரசர்கள் ஆகிய நூல்கள் முந்தைய இறைவாக்கினர் எனப்படுவதுண்டு. ஏனெனில் இந் நூல்களில் தெபோரா, சாமுவேல், நாத்தான், அகியா, எலியா, எலிசா ஆகிய இறைவாக்கினரின் பணி தரப்படுகிறது. புலம்பல், தானியேல் என்ற இரு நூல்கள் தவிர எசாயா முதல் மலாக்கி வரை உள்ள நூல்கள் பிந்தைய இறைவாக்கினர் எனப்பட்டன. பிந்தைய இறைவாக்குகளை எழுதினவர்களை இறைவாக்கினர் என்றும் அழைப்பதுண்டு. ஆனால், 1 குறிப். 29:29இல் உள்ளபடி முந்தைய இறைவாக்குகளை எழுதினர் என்பது வெளிப்படை. பிந்தைய இறைவாக்கினர்களில் எசாயா, எரேமியா, எசேக்கியேல் ஆகியோர் பெரிய இறைவாக்கினர் என்றும், ஓசேயா, யோவேல், ஆமோசு, ஒபதியா, யோனா, மீக்கா, நாகூம், ஆபகூக்கு, செப்பனியா, ஆகாய், செக்கரியா, மலாக்கி ஆகிய பன்னிருவரும் சிறிய இறைவாக்கினர் என்றும் அறியப்பட்டனர்.

2. சொல்லும் பொருளும்

இறைவாக்கு என்ற சொல் நாபா (Naba) என்ற எபிரேயச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும்.. நாபா என்ற இச் சொல்லின் பொருள் என்ன என்பது பிரச்சனை. சிலர் பொங்குதல், நுரைத்தல் என்று பொருள் கொள்ளும் ஓர் அடிச்சொல்லிலிருந்து இது எழுந்திருக்கலாமென்று கருதுவர். பரவச வாக்கினர் உணர்ச்சிவசப்பட்டு நுரை பொங்கப் பேசினதினால் ஒருவேளை இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். இப்படியாக சவுல் மேலாடையின்றி சாமுவேலுக்கு முன்பாக பரவசமாகிப் பேசி பகல் முழுவதும், இராமுழுவதும் விழுந்து கிடந்தார் என்று காண்கிறோம் (1சாமு. 19:24). அரேபிய மொழியில் நபி என்ற சொல்லும் இறைவாக்கினர் என்று பொருள்படும். இது தவிர ரோயே, கோசே என்ற சொற்களும் இறைவாக்கினரைக் குறிப்பிடுவதுண்டு இவை தூரக்காட்சியாளர் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. கண்புலனுக்கப்பாற்பட்டதைக் காணும் திறனுடையவர் என்பது பொருள். முற்காலத்தில் தூரக்காட்சியாளர் எனப்பட்டவர் பிற்காலத்தில் இறைவாக்கினர் எனப்பட்டார் (9:9).

3. இறைவாக்கின் தோற்றம்

ப.ஏ. இறைவாக்கின் தோற்றத்தை இஸ்ரயேலருக்கு வெளியில் நாம் காணக்கூடும் என்பர் பெரும்பான்மையான ப.ஏ. அறிஞர்கள். இது எவ்வளவு தூரத்துக்கு முழு உண்மையையும் வெளிப்படுத்தும் கூற்று என்பதை ஆராய வேண்டும்.

இஸ்ரயேலரின் அண்டைய நாட்டாரிடையில் பரவசமாகிப் பேசும் இறைவாக்கினர் கூட்டங்கள் காணப்பட்டன (Ecstatic Prophets). இப்படியாக பாகாலின் தொண்டர் கர்மேலில் பரவசமாகிப் பேசினார்கள், ஆடினார்கள் (1 அர. 18).

இப் பரவச இறைவாக்கு மரபை இஸ்ரயேலர் கானானியரிடமிருந்து பெற்றுக்கொண்டனர் என்பது உண்மையே. அரசமைப்பின் வரலாறு முழுவதிலும் இக் கூட்டத்தார் இயங்கி வந்தனர் என்று காணலாம் (1 சாமு. 10:10; 19:23பி; 1 அர. 18:20; 2 அர. 4:38; ஆமோசு. 7:14).

இப் பரவசக் கூட்டத்தார் சங்கங்களாக கூட்டங் கூட்டமாக வாழ்ந்துவந்தனர். தாங்கள் பரவச நிலையடைய இசை இசைத்தனர் (1 சாமு. 10:5; 2 அர. 3:15); உடலைக் கீறிக் காயப்படுத்தினர், கிந்திக் கூத்தாடினர் (1 அர. 18:21). இப்பரவச நிலை ஒட்டுவாரையொட்டும் தன்மையுடையதாக நம்பப்பட்டது (10:10மு). இவர்கள் ஏதோ ஒருவகை ஆவியால் ஆட்கொள்ளப் பட்டு பேசுவதாகவும் அழுவதாகவும் நம்பப்பட்டது. இஸ்ரயேலரைப் பொறுத்தமட்டில் அன்னார் இந்த ஆவி யாவேயின் ஆவி (11:24,25) என்று நம்பினார்கள் (1 சாமு. 10:5,10; எண். 11:24,25). இவர்களைக் கொண்டு சமூகத்திற்கு ஏதும் பயனில்லை. ஆதலால் இவர்கள் பைத்தியக்காரர்களெனப் பட்டனர் (2 சாமு. 6:20; 2 அர. 9:11; எரே. 29:26).

பிற்கால அறநெறி இறைவாக்கினர் இந்தப் பரவசக் கூட்டத்தாரிலிருந்து தோன்றினர் என்பது சரியன்று. இவர்கள்

இரு சாராருக்குமிடையில் பொதுக் கூறுபாடாகக் காணப்படுவது இவர்கள் யாவேயின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டுச் செயலாற்றினர் என்பதுதான். ஆவியால் ஆட்கொள்ளப்படுதலிலும் இரு சாராருக்குமிடையில் வேற்றுமையிருந்தது எனலாம். பரவசக் கூட்டத்தார் செயற்கையான செயல்கள் மூலம் ஆவியை வரவழைத்தனர் (2 அர. 3:15மு); அந்த ஆவியால் ஆவேசம் வந்தது போல் ஆடினர், செயலாற்றினர். அன்னார் செயல்களால் சமூகத்திற்கு ஏதும் பயனில்லை. ஆனால் பிற்கால அறநெறி இறைவாக்கினர்க்கு ஆவி அருளப்பட்டது. அன்னாரால் அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அன்னார் கூறிய யாவும் சமூகத்துடன் தொடர்புடையனவாகவும் அறநெறி சார்ந்தனவாகவும் காணப்பட்டன.

ஆனால் இஸ்ரயேலரிடையே அறநெறி இறைவாக்கினர் இப் பரவசக் கூட்டத்தாரைச் சார்ந்தவர்களாகக் கொள்ளப்பட்ட குழப்பம் காணப்பட்டது. இப்படியாக அமத்சியா, ஆமோசு இத்தகைய இறைவாக்கினர் சங்கத்தைச் சார்ந்தவர் என்பதாகக் கொண்டார். ஆனால் ஆமோசு அதனை மறுக்கிறார் (ஆமோசு 7:14). இணைச்சட்ட ஆசிரியரும் இக் குழப்பத்தை உணர்ந்து சாமுவேல் நூலில் வாசகர்களுக்கு ஒரு விளக்கம் கொடுக்கிறார். இந் நாளில் இறைவாக்கினர் எனப்படுகிறவர் முற்காலத்தில் திருக்காட்சியாளர் என்னப்பட்டார் (1 சாமு. 9:9). அதாவது, சாமுவேல் போன்ற இறைவாக்கினர்களை பரவசக் கூட்டத்தாராகிய இறைவாக்கினர்களோடு ஒப்பிடாதிருக்கத் தக்கதாக இந்த எச்சரிக்கையை அவர் தருகிறார். முறையான இஸ்ரயேல் இறைவாக்கின் துவக்கம் கானானின் பரவச இறைவாக்கல்ல, இஸ்ரயேலரிடையிலேயே காணப்பட்ட திருக்காட்சி என்று காணலாம். ஒருவேளை இஸ்ரயேலர் இதனை எகிப்தியரிடமிருந்து பெற்றிருக்கலாம். இப்படியாக யோசேப்பு ஒரு குறி பார்ப்பவர் என்பதாக அறிகிறோம் (தொட. 44:5,15). பிற்கால அறநெறி இறைவாக்கினரைப் போலவே ஞானத் திருக்காட்சியாளர் கடவுளுடைய திருவுளத்தை அறிந்து மக்களை எச்சரித்து வந்தார்கள் (2 அர. 17:13).

யோசுவா, நீதித்தலைவர்கள் காலத்தில் பரவச இறைவாக்கினர், திருக்காட்சியாளர் ஆகிய இரு சாராருமே காணப்பட்டனர். தெபோரா ஓர் இறைவாக்கினி எனப்பட்டார். இவர் தெபோராவின் பேரீச்சமரத்தின் கீழே இருந்து இஸ்ரயேலை நியாயம் விசாரித்து வந்தார் (நீதித். 4:4,5). இவர் ஒரு திருக்காட்சியாளர் எனலாம். இறைவாக்கினர் ஒருவர் வந்து கிதியோன் காலத்தில் மக்கள் செய்த தவறுகளை எடுத்துக்காட்டுகிறார் (6:7-10). சாமுவேல் ஆண்டவரின் இறைவாக்கினராகப் பணியாற்றினார் (1 சாமு. 3:20; 9:9). இவர்கள் யாவரும் தூரக்காட்சியாளர் வரிசையில் எழுந்த இறைவாக்கினர் எனலாம்.

சவுல் சாமுவேலை விட்டுப் பிரிந்து செல்லும்போது இறைவாக்கினர் கூட்டமொன்று அவருக்கு எதிர்ப்பட சவுலும் அவர்களோடு சேர்ந்து பரவசமாய்ப் பேசினார் என்று காண்கிறோம் (10:11,13). கானானியரிடையில் காணப்பட்டதைப் போன்ற பரவச இறைவாக்கினர் சங்கத்தார்கள் இவர்கள்.

இஸ்ரயேலரிடையில் இவ்விரு சாராருமே யாவே சமய தீவிரவாதிகளாகக் காணப்பட்டனர். இப்படியாக சாமுவேல் நசீரப் பொருத்தனையுடன் கானானிய கலாசாரத்தை வெறுத்து யாவேக்காகத் தொண்டு புரிகிறதாகப் பார்க்கிறோம்.

இப்படியாக, இஸ்ரயேலர் இறைவாக்கு மரபு பல கூறுகளில் அண்டை நாடுகளின் மரபை ஒத்திருந்தாலும், தொடக்கத் திலிருந்து தனிச் சிறப்பான ஒரு கூறு அதில் காணப்பட்டு வந்தது என்பது வெளிப்படை. இதன் முழுவளர்ச்சியை அரசமைப்பின் காலத்தில் காண்கிறோம்.

4. இறைவாக்கு உரைத்தலின் எழுச்சி

அரசமைப்பின் காலத்தில் யாவே சமயம் அடைந்த வீழ்ச்சிக்கு நிகராக, அதனை ஈடு செய்யும்வகையில் இறைவாக்கு உரைத்தல் எழுச்சி அடைந்தது. இந்த இறைவாக்கு உரைத்தலின் எழுச்சியில் முதன்மையாக நிற்பவர்கள் எலியா, எலிசா ஆகியோராவர்.

எலியாவும் எலிசாவும் இஸ்ரயேலர் இறைவாக்கு மரபின் துவக்க நிலையைக் குறிப்பிட்டு நிற்கின்றனர். இவர்கள் கானானியர் வழிவந்த பரவச இறைவாக்கினர்களும், பிற்கால அறநெறி இறைவாக்கினர்களைப் போன்றவர்களுமல்லர். இவர்கள் இறைவாக்குச் சங்கங்களுக்குத் தலைவர் களாயிருந்திருக்க வேண்டும் (2 அர. 2:15). யாவேயின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமைகளைக்கொண்டிருந்தனரென்று கூறப்படுகிறது. பரவசக் கூட்டத்தாரைப்போன்று சமூகத்தை விட்டு விலகி வாழாது, இவர்கள் அரசியல், சமூக வாழ்க்கைகளில் அதிகமாக ஈடுபட்டு வாழ்ந்தனர் (2 சாமு. 12:1; 1 அர. 21:17-24).

(அ) எலியா கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; வடநாட்டைச் சார்ந்த கிலயாதிலுள்ள திஸ்பே என்னும் ஊரைச் சார்ந்தவர்; யாவேயின் ஆவியின் ஆற்றலால் பல அருஞ்செயல்களை நடப்பித்தார்; பஞ்சத்தை முன் கண்டார் (17:1); சாரெபாத்தில் எண்ணெய் குறையாதிருக்கச் செய்தார் (17:9-16); விதவையின் மகனை உயிருடனெழுப்பினார் (17:17-24 - 2 அர. 4:34,35 காண்க). கர்மேலில் ஓர் அருஞ் செயலை நடப்பித்தார் (1 அர. 18:20-46); விந்தையாக வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் (2 அர. 2:1-12).

பாகால் வழிபாட்டுக்கெதிராக எலியா தீவிரமாகப் போராடினார் (1 அர. 18); பாகால் இறைவாக்கினரைக் கொன்று பாகால் வழிபாட்டை அகற்றினார்; எசபேலின் எதிர்ப்புக்குள்ளாகிப் பல துன்பங்களைச் சகித்து வந்தார்; ஆயினும் மன உறுதியுடன் ஆகாபின் ஆட்சியில் காணப்பட்ட தீமையைச் சுட்டிக்காட்டி யாவே சமயத்திற்காகப் பாடுபட்டு வந்தார்.

பிற்கால இஸ்ரயேலர் வரலாறு எலியாவின் மரபைப் புனிதமாகப் பாதுகாத்து வந்ததென்று காண்கிறோம் (மலா. 4:5; மத். 16:14; லூக். 9:7,8 முதலியன).

(ஆ) எலிசா என்பதற்கு கடவுள் மீட்பர் என்பது பொருள். எலிசா எலியாவின் சீடர். எலியாவால் தம் வாரிசாக அருள்பொழிவு செய்யப்பட்டவர். இவரும் ஒன்பதாம் நூற்றாண்டில் வட நாட்டில் இறைவாக்கு உரைத்தார்.

எலிசா சாப்பாத்தின் மகன். பன்னிரண்டு ஏர் பூட்டி உழும் அளவிற்கு இவர் செல்வந்தராயிருந்தார் (1 அர. 19:19). ஒரு மரபின்படி யாவேயின் கட்டளையின்பேரில் எலியா இவரை இறைவாக்கினராக அருள்பொழிவு செய்ததாகப் பார்க்கிறோம் (19:16,17). இன்னொரு மரபு எலியாவின் சால்வை இவர்

மேல் பட்டவுடன் இவருக்கு எலியாவின் இறைவாக்கு அருள் கிடைத்ததாகக் குறிப்பிடுகிறது (19:19-21; 2 அர. 2:13-15).

ஆகாபின் ஆட்சியின் இறுதியிலிருந்து யோவாசின் ஆட்சியின் தொடக்கம் வரை எலிசா இறைவாக்கு உரைத்தார் (1 அர. 19:1-17; 2 அர. 13:14-19). ஏறத்தாழ கி.மு. 850 முதல் 800 வரை இவர் ஊழியம் அமைந்திருக்கலாம்.

எலியாவைப்போல் எலிசாவும் பல அருஞ்செயல்களைச் செய்தார்; எலியாவின் சால்வையால் யோர்தானை இரண்டாகப் பிளந்தார் (2 அர. 2:13,14); எரிகோவின் ஊற்றொன்றை உப்பினால் சுத்தமாக்கினார் (2:19-22); விதவையொருத்தி தம் கடனை அடைக்க விந்தையாக எண்ணெய் உண்டாக்கினார் (4:1-7); சூனேமியாளுக்குக் குழந்தை கிடைக்கச் செய்தார்; அது இறக்கவே அதை உயிரோடு எழுப்பினார் (4:8-37). ஒரு தடவை உணவில் நஞ்சு கலந்துவிட்டபொழுது எலிசா அந்த நஞ்சை மாற்றினார் (4:38-41). இன்னொரு தடவை நூறு பேருக்கு 20 அப்பங்களையும் சில வாற்கோதுமைக் கதிர்க் குலைகளையும் கொண்டு உணவளித்தார் (4:42-44); நாமானைக் குணமாக்கினார் (5:1-19); கோடரி ஒன்று தவறி தண்ணீரில் விழுந்தபோது எலிசா அதனை மிதக்கச் செய்தார் (6:1-7). சிரிய படையொன்றைக் குருட்டாட்டம் பிடிக்கச் செய்தார் (6:8-23); எலிசாவின் இறப்புக்குப் பின்னும் அவர் கல்லறையில் போடப்பட்ட பிணமொன்று உயிர்பெற்று எழுந்தது (13:20,21). இவை யாவும் எலிசாவைப்பற்றிய வரலாற்றிலுள்ளவை.

எலியாவைத் தொடர்ந்து எலிசாவும் வரலாற்றில் சில அரிய செயல்களைச் செய்வதாகக் காணலாம். அசாபேல் சிரியாவிலும், ஏபகூ இஸ்ரயேலிலும் புரட்சி செய்ய இவர் காரணமாயிருந்தார் (1 அர. 19:15-18; 2 அர. 8:7-15; 9:10). இவர் அரசியல் வட்டாரங்களில் உயர்வாக நடத்தப்பட்டதாக அறிகிறோம் (13:14-19). தம் குருவைப் போல எலிசாவும் யாவே சமயத்தைப் பாதுகாத்து வந்தார். பாகால் இறைவாக்கினருக்கெதிராக யாவே இறைவாக்கினர்களின் ஆற்றலை மிகைப்படுத்திக் காட்டவே புராணக் கூறுகள் வரலாறுகளுடன் சேர்க்கப்பட்டன எனலாம்.

5. எட்டாம் நூற்றாண்டு இறைவாக்கு

ஒன்பதாம் நூற்றாண்டு இறைவாக்கினர் பிற சமயங்களுக்கெதிராக யாவே சமயத்தைப் பாதுகாக்கப் பாடுபட்டனர் என்று கண்டோம். எட்டாம் நூற்றாண்டு இறைவாக்கு மரபில் இன்னொரு திருப்பத்தைக் காண்கிறோம். இக்காலத்தில் இறைவாக்கினர் முக்கியமாகப் பிற சமயங்களுக்கெதிராக அல்ல, இஸ்ரயேல் சமயத்திற்குள்ளேயே காணப்பட்ட சீர்கேடுகளை அகற்றப் பாடுபட்டனர். இம்மட்டும் இறைவாக்கினர், இறைவாக்கினரின் புதல்வராகவோ, இறைவாக்குச் சங்கத்தைச் சேர்ந்தவராகவோ காணப்பட்டனர் (4:38; 6:1). பலருக்கு இது குலத் தொழிலாகவே அமைந்தது. ஆனால், எட்டாம் நூற்றாண்டில் இறைவாக்கினரின் வாழ்க்கையில் கடவுளுடைய அழைப்பு முக்கியத்துவமடைகிறது. நான் இறைவாக்கினன் அல்ல, இறைவாக்கினர் குழுவில் உறுப்பினனும் அல்ல, நான் ஆடு மேய்ப்பவன், காட்டு அத்திமரத் தோட்டக்காரன் என்கிறார் ஆமோசு (7:14). அப்படிப்பட்டவரை கடவுள் அழைத்தார்.

இத்தகைய அழைப்பு இறைவாக்கினரின் தனி வாழ்க்கையில் (ஓசே. 1-3) அல்லது அரசியல், சமய, சமூக வரலாற்றில் ஏற்பட்ட குறிப்பிட்ட சூழ்நிலைகள் காரணமாக (ஆமோசு, மீக்கா, எசாயா) ஏற்பட்டிருக்கலாம்.

மேலும் இக்காலத்தில் இறைவாக்கினரின் வாழ்க்கையும், செய்தியும் அறநெறி சார்ந்தனவாக அமைவதைக் காண்கிறோம். சமயத்தையும் சமூகத்தையும் இணைத்த சிறப்பு இந்த இறைவாக்கினரையே சாரும். கடவுள் பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறார் என்னும் கூற்று இதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. பலி சமயத்தின் புறம்பான ஆசாரங்களைக் குறிப்பிட்டு நிற்கிறது. இரக்கம் சமூகத்தில் மனிதர் கொண்டொழுகவேண்டிய உடன்படிக்கையின் உறவைக் குறிப்பிட்டு நிற்கின்றது. எட்டாம் நூற்றாண்டு இறைவாக்கினர் யாவருமே வாழ்க்கையுடன் தொடர்பற்ற வெறும் சமய ஆசாரங்களைக் கண்டித்தனர் (எசா.1:12-15; ஓசே. 6:6; ஆமோசு. 5:21-25; மீக். 6:6-8). இவ்வாறு இந்த இறைவாக்கினர் யாவேயை அறநெறி சார்ந்த ஒரு கடவுளாகக் கண்டு அவரை வழிபடும் இஸ்ரயேலரும் அறநெறி சார்ந்தவர்களாக இருக்கவேண்டுமென்று வலியுறுத்தினர்.

இரண்டாம் எசாயாவில் வளர்ச்சியுற்றுக் காணப்படும் ஓரிறைக்கோளுக்கு அடிகோலியவர்களும் இவர்களே; வேற்று தெய்வங்கள் எல்லாம் ஒன்றுமில்லையென்றனர் (எசா. 1:27 மு; 8:13; ஓசே. 2:7-10; ஆமோசு. 4:4; 5:5,26). வேற்று தெய்வங்கள் இல்லவே இல்லை என்று வலியுறுத்திக் கூறவில்லையாயினும், யாவேயின் முன் வேற்று தெய்வங்கள் ஒன்றுமில்லையென்றும், யாவே அனைத்துலக தெய்வமென்றும் அவர்கள் வலியுறுத்திக் கூறினர் (ஆமோஸ். 1-3; 9:7).

மேலும், கடவுளுடைய வார்த்தையைப் பற்றிய ஆழமான கருத்துக்கள் இக் காலத்தில் வெளிப்பட்டன. இறைவாக்கினர் கடவுளுடைய வாக்கை சுமந்து செல்லுகிறவர்கள். அன்னார் அழைக்கப்பட்டபோது ஆண்டவருடைய வாக்கு அவர்களுக்கு வந்ததாகக் கொள்ளப்பட்டது (ஓசே. 1:1). ஆதலால் அவர்களும் ஆண்டவர் சொல்லிய இந்த வசனத்தைக் கேளுங்கள் (ஆமோஸ். 3:1; 4:1; 5:1 முதலியன) என்று அறைகூவி அறிவித்தனர்.

யாவே அருள். இறைவாக்கினர் கூறி அறிவித்த இந்த வாக்கு சாதாரண வாய்ப்பேச்சாக மறைந்து போவதல்ல. அது யாவேயின் வல்லமையைச் சுமந்து செயல்படுவதென்று காணலாம். இப்படியாக விவிலியத்தின் பல இடங்களிலும் யாவேயின் வாக்கு ஆளியல்பு பெற்றது போல் குறிப்பிடப் படுதலைக் காணலாம்.

அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கிப் படுகுழியினின்று அவர்களைத் தப்புவித்தார் (திருப்.10; 17:20).

அவர் தமது கட்டளையை உலகினுள் அனுப்புகிறார், அவரது சொல் மிகவும் விரைவாய்ச் செல்கின்றது (147:15).

இங்கு யாவேயின் வாக்கு அவருடைய திருவுளத்தை நிறைவேற்றும் ஒரு பணியாளைப் போல் குறிப்பிடப் படுதலைக் காணலாம். அதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. சிங்கம் கர்ச்சனை செய்கிறது, அஞ்சி நடுங்காதோர் யார்? இறைவனாகிய ஆண்டவர் பேசுகிறார், இறைவாக்கு உரைக்காதோர் யார்? (ஆமோசு 3:8).

ஆண்டவருடைய வாக்கு எனக்கே நிந்தையாயிற்று, நாளெல்லாம் பரிகாசமுமாயிற்று. இனி நான் அதை

நினைக்கவும், அவர் பெயரில் பேசவுமாட்டேன் என்பேனாகில், என் எலும்புகளில் அடைபட்ட நெருப்பாய் என் உள்ளத்தில் அது எரிந்தது என்று கூறுகிறார். அடுத்த நூற்றாண்டில் தோன்றிய எரேமியா (20:9).

இறைவாக்கினரின் வாக்கு ஒன்றுமே வீணாய்ப் போவதில்லை என்று கொள்ளப்பட்டது. என் வாயிலிருந்து வரும் வார்த்தையும் . . . அது வெறுமையாய் என்னிடம் திரும்பாமல் நான் அனுப்பிய நோக்கத்தை நிறைவேற்றும் என்கிறார் ஆறாம் நூற்றாண்டில் தோன்றிய இரண்டாம் எசாயா (55:11).

இப்படியாக இறைவாக்கினருக்கு அருளப்பட்ட யாவேயின் வார்த்தை, அவருடைய நோக்கத்தையும் அதன் நிறைவேறு தலையும் தன்னுள் கொண்டு செயல்படும் வல்லமையுள்ள ஒன்று என்பதாகக் காண்கிறோம்.

மேலும் எட்டாம் நூற்றாண்டு இறைவாக்கினர் காலத்திலிருந்து அடையாள வழியான செயல்முறைப் போதனை வழக்கிலிருந்து வருவதாகக் காண்கிறோம். இப்படியாக ஒசேயாவின் இல்லற வாழ்க்கை யாவேக்கும் இஸ்ரயேலருக்கும் இடையிலுள்ள உறவை விளக்கும் ஓர் அடையாளச் செயலாகக் காணப்பட்டது. எசாயாவின் மகனின் பெயர் செயார் யாசீப் (மீந்தது திரும்பும்) என்னும் செய்தியை அடையாள வழியாக விளக்குகிறார் (7:3). இன்னொரு மகனின் பெயர் மகேர்சாலால் காஷ்பாஸ் (கொள்ளை தூரிதம், சூறை தீவிரம்) என்னும் செய்தியைக் கொடுத்தது (8:3). பின்னால் வந்த எரேமியா, எசேக்கியேல் ஆகியோரின் இறைவாக்குகளிலும் பல அடையாளச் செயல்கள் இடம்பெறுவதைக் காண்கிறோம் (எரே. 13:1ழு; 16:2: 18.19,28; எசே. 3:3,5 முதலியன).

இவ்வாறு சிறப்புடன் பணியாற்றிய எட்டாம் நூற்றாண்டு இறைவாக்கினரில் முக்கியமானவர்கள் ஆமோசு, ஒசேயா, எருசலேம், எசாயா (1-39), மீக்கா ஆகியோராவர். இவர்கள் ஒவ்வொருவரும் தனித் தனியே சிறப்புச் செய்திகளை எடுத்துக் கூறி, யாவே சமயத்தின் மேன்மையைப் பாதுகாத்தனர்.

(அ) ஆமோசு

தெக்கோவா ஊர் மேய்ப்பர்களில் ஒருவர் (1:11). இவர் அத்திமரத் தோப்பையும் கவனித்து வந்தார் (7:14); கி.மு. 760ஆம் ஆண்டையடுத்து வடநாட்டுக்கு எதிராக இறை வாக்கு உரைத்தார். இக் காலத்தில் வேற்று நாடுகளின் தொல்லை சற்று ஒயவே இரண்டாம் எரோபெவாம் நாட்டைப் பலப்படுத்தி, பொருள் வளத்தைப் பெருக்கினான் (2 அர. 14:23-29). இதனால் செல்வந்தர்கள் மேலும் செல்வந்தர்களானார்கள், ஏழைகள் இன்னும் வறியரானார்கள். இந்தப் பொருளாதார ஏற்றத்தாழ்வு சமூகத்தில் பல அநீதிகளை வெளிப்படுத்தியது. ஏழைகள் ஒடுக்கப்பட்டனர்; நீதி புரட்டப்பட்டது (ஆமோசு 2:7; 3:10; 5:10). அத்துடன் இறை வழிபாடும் வெறும் சடங்காசாரமாகக் காணப்பட்டது. யாவே பாகாலைப்போல வழிபடப்பட்டார் (2:7; 4:4; 5:5). இறை வாக்கினரின் எச்சரிக்கைகள் பயனற்றுப்போயின.

இச் சூழ்நிலையில் ஆமோசு வாழ்க்கையில் வெளிப்படும் யாவேயின் நீதியின் தன்மையை மக்களுக்கு எடுத்துக் கர்ட்டுகிறார்; நீதியற்ற புறம்பான வாழ்க்கையில் பயனில்லை என்பதைத் தெளிவாக விளக்குகிறார் (5:21-25). இவ்வாறு இஸ்ரயேலர் நீதியைப் புறக்கணித்து வாழ்வதால் (3:10,15; 4:1; 5:7,10-17), யாவேயின் நீதியின் சீற்றம் அன்னார்மேல் வரும். தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று ஆணவம் கொண்டிருந்த அன்னாரைப் பார்த்து அவர்கள் எத்தி யோப்பியரைப் போலவும், பெலிஸ்தியரைப் போலவும், யாவேயின் பார்வையில் காணப்பட்டனர் என்று சுட்டிக் காட்டினார் (9:7). இஸ்ரயேலர் தேர்ந்துகொள்ளப்பட்டது சலுகைக்கன்று பொறுப்புக்கே. இப் பொறுப்பிலிருந்து அன்னார் தவறும்போது அதிகமாய்த் தண்டனையடைவார் களென்றும் ஆமோசு குறிப்பிட்டார் (3:2); ஆண்டவரின் நாள் அன்னாருக்கு வெளிச்சமானதல்ல, இருள் சூழ்ந்த நாளாகத் தான் இருக்கும் (5:18).

(ஆ) ஒசேயா

ஆமோசின் காலத்தையடுத்து கி.மு. 743ஆம் ஆண்டளவில் ஒசேயா பணிபுரிந்தார்.

ஒசேயா பெயேரின் மகன் எனப்பட்டார் (1:1). இவர் இறைவாக்கு சங்கத்தில் உட்பட்டவரா அல்லது குருத்துவ வகுப்பைச் சார்ந்தவரா என்பது தெரியாது. ஆனால் இறைவாக்கினரோடும் குருக்களோடும் நெருங்கிய பழக்கமுடையராக இருந்தார் என்று தெரியவருகிறது (4:5,9; 5:1; 9:8). அரசைக் குறித்தும் அறிந்திருக்கிறபடியால் இவர் அன்றைய அரசாங்கத்துடனும் தொடர்புகொண்டிருந்தார் எனலாம் (7:3,7; 8:4; 10:3,7; 12:17).

இல்லற வாழ்வில் ஏற்பட்ட ஓர் அனுபவமே ஒசேயாவுக்கு கடவுளின் அழைப்பை உணர்த்திற்று. திபலாயிமின் மகளாகிய கோமேரை ஒசேயா மணஞ்செய்தார். அவள் அவருக்கு மூன்று மக்களைப் பெற்றாள். விரைவிலேயே ஒசேயா தம் மனைவியிடம் நெறிகேடு மறைந்திருப்..தைக் கண்டார். அதனால் தம் பிள்ளைகளுக்கு அடையாள வடிவான பெயர்களைச் சூட்டினார்; இஸ்ரியேல் (=கடவுள் விதைக்கிறார்), லோருகாமா (=இரக்கம் பெறாதவள்), லோ அம்மி (=என் மக்களல்ல). இருவரும் சில காலம் பிரிந்திருக்கின்றனர். இப்பிரிவின் காலம் ஒசேயாவுக்குத் தம் மனைவியின்மேல் தாம் கொண்டிருந்த அன்பைப் புரிந்துகொள்ள உதவிற்று. அன்பு உந்தித்தள்ள, அடிமைக்குரிய பணத்தைக் கொடுத்து கோமேரை அவர் மீட்கிறார். சில காலம் தூய்மைக்காகப் பிரிந்திருந்து பின் கூடி வாழுகின்றனர். நெறிகெட்ட தம் மனைவியின்மேல் தாம் அன்பு செலுத்தக் கூடுமானால், யாவேயும் நெறிகெட்ட இஸ்ரயேலின்மேல் அதிகமாக அன்பு செலுத்தக்கூடுமென்கிறார் இறைவாக்கினர்.

ஆமோசின் செய்தியை ஒரே சொல்லில் நீதி என்போ மானால் ஒசேயாவின் செய்தியை ஒரே சொல்லில் அன்பு எனலாம். ஆமோசைப்போலவே இஸ்ரயேலரிடையில் காணப்பட்ட சீர்கேடுகளை ஒசேயாவும் காண்கிறார் (4:2-5:1பி; 7:1-7; 9:15). ஆனால் ஆமோசு தண்டனைத் தீர்ப்பினால் இஸ்ரயேலைச் சந்திக்கப்போகும் நீதியின் கடவுளைக் காண்கிறார்; ஒசேயாவோ மீட்பினால் இஸ்ரயேலைச் சந்திக்கப்போகும் அன்பின் கடவுளைக் காண்கிறார் (21:4-33; 11:1,8).

ஆமோசைப்போலவே ஒசேயாவும் இஸ்ரயேலுக்கெதிராக இறைவாக்கு உரைத்தார்; இஸ்ரயேலுக்கும் யாவேக்கும் உள்ள உறவைத் திருமண உடன்படிக்கையின் உறவுடன் ஒப்பிட்டுக் காண்கிறார்; அப்படியே இஸ்ரயேலர் வேற்றுத் தெய்வங்களை வழிபட்டுச் சோரம் போவதை விபசாரத்துடன் ஒப்பிடுகிறார் (2:7-12; 4:10,11,15 முதலியன).

ஓசேயா அரசு தீமையானதென்றும், அது கடவுளால் உண்டானதல்லவென்றும் கொண்டார்போலும் (7:1-7; 8:3,4; 9:9; 10:9; 13:11).

இஸ்ரயேலர் சோரம் போவதற்குக் காரணம் குருகுகள், இறைவாக்கினர், அதிகாரிகள் ஆகியோர் சரியான அறிவை மக்களுக்குக் கொடாததே என்பது ஓசேயா சுற்று (4:1,4-9; 5:1).

இஸ்ரயேல் இவ்வாறு அறிவில்லாமையால் சோரம் போனபோதிலும் யாவே அன்னாரைத் தம் உடன்படிக்கையின் அன்பினால் (கெசட்) மீட்டுக்கொள்வார் 2:14-19); ஏனெனில் அவர் கடவுள், மனிதரல்லர் (11:9).

(இ) எசாயா

எசாயா நூல் ஒன்றிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கையிலிருந்து வந்ததென்றும், அதி.1-39இன் பெரும்பகுதியும் எருசலேம் எசாயாவிடமிருந்து வந்ததென்றும் கண்டோம். எருசலேம் எசாயா எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (கி.மு. 742-701) வாழ்ந்தவர்; யூதாவையும், எருசலேமையும் பற்றி இறைவாக்கு உரைத்தவர்.

ஆமோசு, ஓசேயாவைப்போலவே இவரும் சமூக சமய சூழ்நிலைகளின் சீர்கேடுகளைக் கண்டார். ஆமோசு யாவேயின் நீதியையும், ஓசேயா யாவேயின் அன்பையும் முன்வைத்து இஸ்ரயேல் சமூகத்தை நோக்கினரென்றால், எசாயா யாவேயினது தூய்மையை முன்வைத்து அதனைக் காண்கிறார்.

யாவேயின் தூய்மையின் மாட்சியை அவர் தம் அழைப்பின்போது உணர்ந்தார் (அதி.6). யாவே தூயவர் என்று உணர்ந்த உடனேயே எசாயா தமது தூய்மையற்ற நிலையைக் கண்டார் (6:5). இதே அடிப்படையில் அவர் சமூகத்தையும் காண்கிறார். அவரது அரசியல் கண்ணோட்டமும் இதைச் சார்ந்தே காணப்பட்டது.

யாவே தூயவராதலால், அவருடைய மக்களும் தூயவராயிருக்கவேண்டும். தூயவராகிய யாவே ஒருவருக்கே அஞ்சி வாழ வேண்டும். படைகளின் ஆண்டவரையே தூயவரென்று கொண்டாடுங்கள்; அவருக்கே அஞ்சுங்கள், அவருக்கே அஞ்சுங்கள். அவரே புனிதத் தலம் (8.13.14).

யாவேயின் தூய்மையில் எல்லா அறநெறிப் பண்புகளையும் கண்டார் (6:5; 9:17-20). யாவே தூயவரானதால் அவருடைய நகரமாகிய எருசலேமும், திருக்கோவிலும் தூயதெனவும், அவை வேற்றுநாட்டாரால் அழிக்கப்படமாட்டாதென்றும் இறைவாக்கினர் நம்பினார். இதுவே அவருடைய அரசியல் கொள்கையாகவும் அமைந்தது (2அர 18:13-2:21; எசா. 36-39).

எசாயா, யாவேயின் அரச மாண்பையும் கண்டார். உலகனைத்தும் அவருடைய மாட்சியால் நிறைந்திருக்கிறது (6:3). சிலைகள் ஒன்றுக்கும் உதவாதவை (2:8; 18, 20, 21);மனிதருடைய கைவேலை (37:19). யாவே ஒருவரே வரலாற்றை ஆண்டு நடத்துகிறவர் (10:5-19).

யாவேயின் தூய்மைக்கு எதிராக மனிதருடைய பாவங்களை தூய்மையற்றதாகக் கண்டார். இறைவாக்கினர் சமூகம் அனைத்தும் பாவத்தால் நிறைந்திருக்கிறதாகக் கண்டார் (1:2, 4-6). பலி பாவக் கழுவாயைக் கொண்டுவராது (1:11-15). பாவம் கடவுளுடைய நீதித்தீர்ப்பைக் கொண்டுவரும் (2:6-22). பாவத்திலிருந்து விடுதலையடையும் ஒரேவழி கடவுள் மேலுள்ள நம்பிக்கையென்கிறார் இறைவாக்கினர். நீங்கள் நம்பிக்கையற்றுப் போவீர்கள் (7:9; மேலும். 28:16; 30:15 காண்க).

யாவே தூயவர், அவரது நகரம், அவரது திருக்கோவில்கள் யாவும் தூய்மையானவை என்ற நம்பிக்கையிலிருந்தெழுந்ததே எசாயாவின் மெசியாவைப் பற்றிய இறைவாக்கு. எசாயா அக்கால அரசர்களில் நிறைவடையவில்லை. நாட்டின் நிலையைப் பார்க்கையில் அழிவு அண்மையிலிருப்பதை அவர் கண்டார். ஆயினும், யாவேயின் தூய்மையை முன்னிட்டு அவருடைய மக்கள் முழுவதுமாக அழிவுற முடியாது. எஞ்சியிருப்பு ஒன்று உண்டு. நீதித் தீர்ப்பு முடிந்தபின் நீதியுள்ள தம் மெசியாவை யாவே எழுப்புவார், அவர் இஸ்ரயேலை நீதியாக அரசாளுவார் என்று குறிப்பிடுகிறார் இறைவாக்கினர் (9:2-7; 11:1-9).

(ஈ) மீக்கா

யாவேயைப் போன்றவர் யார்? என்பது பொருள் (எரே. 26:18). மீக்கா யூதாவைச் சேர்ந்தவர். ஏறத்தாழ எசாயாவின் காலத்திலேயே வாழ்ந்தவர்.

எசாயா நூலைப்போலவே, மீக்கா நூலும் பல காலங்களில் எழுந்த இறைவாக்குகளைத் தருகிறது. அறிஞர்கள், எட்டாம் நூற்றாண்டு மீக்காவின் உரைகள் அதி. 1-3இல் காணக்கிடக்கின்றனவென்று கொள்வர். இங்கு ஆமோசு, எசாயா ஆகிய நூல்களில் கண்டதைப் போலவே அழிவைப் பற்றிய இறைவாக்குகளே காணப்படுகின்றன. அதி. 4,5இல் வாக்குறுதிகளே தரப்படுகின்றன. 6:1-7:6இல் திரும்பவும் அழிவைப்பற்றிய இறைவாக்கு. 7:7-20இல் மீண்டும் வாக்குறுதிகள். இந்தப் பிந்தையப் பகுதிகளிலும் எட்டாம் நூற்றாண்டு மீக்காவின் உரைகளில் சில காணப்படக் கூடும்.

மீக்கா, ஆமோசு, எசாயா ஆகியோரின் இறைவாக்குகளை அறிந்திருக்கக்கூடும். அவர்களைப் போலவே இவரும் சமூகத்தில் காணப்பட்ட அநீதிகளை, ஏற்றத் தாழ்வுகளை வன்மையாகக் கண்டித்தார் (2.12., 3.1,2). இதனால் இவர் ஏழைகளின் இறைவாக்கினர் எனப்படுவதுண்டு.

இந்த எட்டாம் நூற்றாண்டு இறைவாக்கினர் யாவரும் அரசியல் சூழ்நிலைகளை நன்கு அறிந்திருந்தனர். அழிவு அடுத்துவிட்டது என்று உணர்ந்தனர். அத்தகையதோர் அழிவின் சூழ்நிலையில் இஸ்ரயேல் சமயம் வேருன்றி நிலைத்திருந்ததென்றால் அதற்கு இந்த இறைவாக்கினர்களே காரணமெனலாம்.

6. சிறையிருப்பும் அதற்குப் பின்னும்

இஸ்ரயேலர் சமயத்திற்குச் சிறையிருப்பின் காலம் மிகவும் முக்கியமானது. சிலுவையைப்பற்றிய அறிவிற்கு அடித்தளம் இங்குதான் இருக்கிறதென்கிறார் J.A. சாண்டர்ஸ் (Sanders) பண்டிதர். காலாகாலமாகக் கட்டிக் காத்துவந்த அரசியல், சமய அமைப்புக்களும், ஆசாரங்களும் நொடிப்பொழுதில் இடிந்து சரிந்துபோன நிலையில், துன்பக் கடலினூடே கடந்து இஸ்ரயேல் சமயம் இன்னமும் நிலைத்திருக்கிறதென்

றால் அச்சிறப்பு இக் காலத்தில் பணியாற்றிய சில இறை வாக்கினரையேச் சாரும். இவர்களில் முக்கியமானவர்கள் எரேமியா, எசேக்கியேல், இரண்டாம் எசாயா ஆகியோர்.

(அ) எரேமியா

இஸ்ரயேல் இறைவாக்கு மரபின் முக்கியமானதோர் கட்டத்தில் தோன்றியவர் தாம் எரேமியா. ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகள் ஆதிக்கம் செலுத்திய அசிரியா வரலாற்றரங்கிலிருந்து இறக்கப்பட்டது. பாபிலோன் அதன் இடத்தில் ஆட்சி செய்தது. எகிப்தின் கொட்டம் அடக்கப்பட்டது. ஏதோம், மோவாபு, அம்மோன் ஆகிய நாடுகள் பாபிலோனுக்கு அடிபணிந்து வாழ்ந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட இனமான இஸ்ரயேலின் வழிமரபு சிதறடிக்கப்பட்டது. தூய நகரம் இல்லை, கோவில் இல்லை, பேழை இல்லை, தொழுகை இல்லை, பலி இல்லை; இந்நிலையில் யாவே நம்பிக்கை நீடிப்பதெப்படி? இதற்கு விடையளிப்பதே எரேமியாவின் பணியாக அமைந்தது. எரேமியா கி.மு.626 முதல் பாபிலோனின் சிறைபிருப்பின் காலம் வரை (கி.மு. 586) இறைவாக்கு உரைத்தார் என்று அறிகிறோம். கெதலியா மரணமடையவே, அவர் கட்டாயமாக எகிப்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். இங்கு எவ்வளவு காலம் எரேமியா உயிருடனிருந்தார் என்பது தெரியாது. எரேமியாவின் வாழ்க்கையே அவரது செய்திக்கு உறுதுணையாக அமைந்தது. இறைவாக்குப் பணி முன்னிட்டு பல இன்பங்களை அவர் வெறுத்தார் (12:6; 15:17; 16:1,2); பல இன்னல்களுக்காளானார் (20:2; 26:8; 37:21; 38:6).

இஸ்ரயேல் சமயம் நீடித்திருக்கத்தக்கதாக தம் வாழ்க்கையினாலும், போதனையினாலும் எரேமியா வெளிப்படுத்தின கொள்கைகள் மூன்று:

(i) உள்ளான சமயம்

சமய வாழ்வுக்கு இன்றியமையாதவையாகக் கருதப்பட்ட புறம்பான ஏதுக்கள் பல அழிந்தொழிந்த காலம் அது. ஆண்டவரின் நகரம் என்றறியப்பட்ட எருசலேம் அழிவுறும் நிலையிலுள்ளது (7:4,14, 13:27; 22:29,30; 26:6). ஆண்டவருடைய உடன்படிக்கைப் பெட்டியைப் பற்றிப் பேச வாய்ப்பில்லை (3:16). வேள்வி, காணிக்கைகள் முதலான முறைமைகள் பயனற்றுப்போயின (6:20; 7:21-24; 11:15,16; 17:1,2முத.); கடவுளுடைய உறைவிடம் என்று அறியப்பட்ட திருக்கோவிலும் அழிவுறப்போகிறது (7:4; 26:6). மக்களை நல்வழிப்படுத்துவ தற்காக ஏற்படுத்தப்பட்ட சமயத் தலைவர்கள் பொய்யராயினர் (2:26; 4:9; 6:13; 8:10). அன்னாருடைய போதனை மாய்மாலம் நிறைந்து காணப்படுகிறது (6:13, 8:8முத.). இந்நிலையில் தூய சமய வாழ்வு நடத்துவது எப்படி?

வாழ்க்கையில் காணப்படும் தீங்குகள் யாவற்றிற்கும் காரணம் நினைவுகளின் பிறப்பிடமான இதயமே என்கிறார் இறைவாக்கினர் (3:17; 4:14; 7:24; 17:5,9,10). ஆதலால் இதயமே மாற்றப்படவேண்டும். அது விருத்தசேதனம் அடைய வேண்டும் (4:4; 9:26). அத்துடன் போதனையை ஏற்றுக் கொள்ளத்தக்கதாக காதும் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் (6:10). இப்படியாக, நன்மையைப் பிறப்பிக்கத்தக்க இதயமும், போதனைகளை ஏற்றுக்கொள்ளத்தக்க காதும் இருக்கும்போது மக்கள் பாவத்திற்கு விலகி ஆண்டவரைப் பணிந்துகொள்ளக்கூடும். ஆக, புறம்பான ஏதுக்கள் எதுவும் இல்லாத ஒரு காலத்தில் தூய யாவே சமயம் காக்கப்படத்தக்கதாக உள்ளான காலத்தைப் போதிக்கிறார் இறைவாக்கினர்.

(ii) தனியார் சமயம்

இம்மட்டும் ஒரே மக்களினமாகக் கூடி வாழ்ந்த மக்கள் சிதறடிக்கப்பட்டு வேற்று நாட்டில் வாழநேரிடும் ஒரு சூழ்நிலையைக் காண்கிறார் இறைவாக்கினர். கூட்டு வழிபாடுகளுக்கு வாய்ப்பில்லாத ஒரு சூழ்நிலையில், சமயப் போதனைகளும் வழிநடத்தல்களும் கிடைக்காத ஒரு காலத்தில், மக்கள் பொறுப்புடன் கடவுளைப் பற்றிக்கொள்வதெப்படி என்னும் கேள்விக்கு விடையாக தனியார் சமயத்தைத் தருகிறார் இறைவாக்கினர். தந்தையர் திராட்சைக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாள்களில் சொல்லமாட்டார்கள். அவரவர் தம் தம் குற்றத்தினால் சாவார்; எவர் திராட்சைக் காய்களைத் தின்பாரோ அவருடைய பற்களே கூசிப்போகும் (31:29,30). கடவுள்தாமே ஒவ்வொருவரோடும் பேசி, அவர்களை நடத்துவார். இனி எவரும் தம் அடுத்தவருக்கும், தம் சகோதரருக்கும் போதிப்பதில்லை, சிறியவர் முதல் பெரியவர் வரைக்கும் அவர்கள் எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள் (31:34).

(iii) புதிய உடன்படிக்கை

புதிய உடன்படிக்கையைக் குறித்த எரேமியாவின் போதனை ப.ஏ.இல் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதைக் குறித்து 31:31-34இல் காண்கிறோம். இப் பகுதியை எரேமியா கூறியிருக்க முடியாதென்பர் சிலர். ஆனால் நூலின் போக்கையும், எரேமியாவின் சிந்தையையும் தெளிவுறக் காணும் எவரும் இதை எரேமியா கூறியிருக்கக்கூடுமென்பதில் எத்தகைய ஐயமுங்கொள்ளார். பழைய உடன்படிக்கை (11:1-8). கோவில், வேள்வி முதலிய புறம்பான ஏதுக்களை அடித்தளமாகக் கொண்டது. இத்தகைய புறம்பான அடித்தளங்கள் எடுபட்டு மக்கள் சிதறடிக்கப்படும் சூழ்நிலையில் இந்தப் பழைய உடன்படிக்கையால் எத்தகைய பயனுமில்லை. மேலும், கடந்த கால வரலாறு இந்தப் பழைய உடன்படிக்கையைப் பின்பற்றி மக்கள் வாழ்வது கூடாத செயல் என்பதை மெய்ப்பித்துவிட்டது. இவை யாவற்றையும் நன்கு உணர்ந்த இறைவாக்கினர் புதிய உடன்படிக்கையைக் குறித்த இப்பகுதியைத் தந்திருப்பது அவருடைய தன்மைக்குகந்ததே.

பலவகைகளில் புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையின் அமைப்பைத் தழுவி எழுந்ததாயினும் குறிப்பிடத்தக்க சில வேறுபாடுகளையும் நாம் இதில் காணக்கூடும். முதலாவதாக பழைய உடன்படிக்கை ஒரு மக்களினத்துடன் செய்யப்பட்ட ஒன்றாயிருக்க, புதிய உடன்படிக்கைத் தனி மனிதருடன் செய்யப்படும் ஒன்றெனக் காண்கிறோம். இனி எவரும் தம் அடுத்தவருக்கும், எவரும் தம் சகோதரருக்கும் போதிப்பதில்லை, சிறியவர் முதல் பெரியவர் வரைக்கும் எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் (31.34). இரண்டாவதாக, புதிய உடன்படிக்கை உள்ளத்தில் நிகழும் ஒன்று. என் சட்டத்தை நான் அவர்கள் உள்ளத்தில் வைத்து, அதை அவர்கள் இதயத்தில் எழுதுவேன் (வ.33). புறம்பான ஏதுக்களின் மேல் கட்டப்பட்ட பழைய உடன்படிக்கை பயனற்றுப்போனது; ஆனால் உள்ளத்தில் உருவாக்கப்படும் இந்த உடன்படிக்கை என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் என்கிறார் இறைவாக்கினர். மூன்றாவதாக, புதிய உடன்படிக்கை கடவுள் மன்னிப்பின்மேல் எழும் ஒன்றாகும். பழைய உடன்படிக்கையில் பங்குகொள்ள விரும்பும் ஒருவர் தம்மைத் தூய்மைப்படுத்தவோ, சரிப்படுத்தவோ மனிதருக்குத்

தகுதியில்லையாதலால், கடவுள் தாமே அப் பொறுப்பை ஏற்கிறார். நான் அவர்கள் குற்றத்தை மன்னிப்பேன், அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன் என்கிறார் (வ.34) ப.ஏ.இல் வெளிப்படும் கடவுளுடைய அருள் இங்கு உச்ச நிலையை அடைகிறது. நான்காவதாக, புதிய உடன்படிக்கை வருங்காலத்தில் நிகழப்போகும் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது. இது வருங்கால எதிர்பார்ப்பாகத் தரப்படுகிறது. இறை வாக்கினர் மக்களை ஏமாற்றும் நிலையில் எதையும் கூறவில்லை. சிறையிருப்பின் நிச்சயத்தை அவர் உணர்ந்தார் (29:10). அதற்குப் பின்னாலேயே கடவுள் தம் மக்களுடன் புதிய உடன்படிக்கையைச் செய்வார் என்று நம்பினார். ஏன் இந்தக் கால தாமதம் என்பதற்கு அவர் விளக்கம் தரவில்லை. ஒருவேளை இதெல்லாம் அனைத்தாற்றல் மிகுந்த கடவுளின் ஞானத்துக்குட்பட்டதென்று அவர் எண்ணினார் போலும்.

இஸ்ரயேல் வீட்டாரே, இந்தக் குயவன் செய்தது போல நான் உங்களுக்குச் செய்யலாகாதோ? ஆண்டவர் உரைத்த வாக்கு இதுவே, இதோ! இஸ்ரயேல் வீட்டாரே களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள் (18:6) என்கிறார். வருங்கால நம்பிக்கைக்கு இந்த இடைக்காலம் ஓர் ஆயத்தம் என்று எண்ணினார் போலும்.

நாட்டு. சமய அமைப்புகள் சிதைவுற்றுப் போனதோர் காலத்தில் யாவே நம்பிக்கை நிலைத்து நிற்பதற்கு இந்தப் புதிய உடன்படிக்கையின் போதனை இன்றியமையாததாக இருந்ததெனலாம். புதிய உடன்படிக்கையைக் குறித்த எரேமியாவின் இப்போதனையைப் பிற்கால இறைவாக்கினர்கள் எடுத்துப் பயன்படுத்தியுள்ளனர் (எசா. 37:26; 42:1-12; 49:5-8; 54:7-14; 55:1-5; 59:16-21). இப் போதனையை இயேசு கிறிஸ்து தம்முடைய வாழ்க்கையில் நிறைவேற்றினார் என்று காண்கிறோம். (மார்.14:24; மத். 26:27; 1கொரி. 11:23-26). அவரே புதிய உடன்படிக்கையானார் (எசா. 42:6 காண்க).

(ஆ) எசேக்கியேல்

பாலஸ்தீனாவுக்கு வெளியே இறைவாக்குப்பணி செய்ய அழைக்கப்பட்ட முதல் இறைவாக்கினர் எசேக்கியேல் ஆவார். சிறையிருப்பில் வாழ்ந்த மக்கள் நடுவில் எழுந்த பல சமய, ஒழுக்கப் பிரச்சனைகளுக்கு விடை காண்பதே இவர் பணியின் நோக்கமாகும்.

இவரின் பணிக்காலத்தைப் பற்றியும், இவரின் பணி செய்த இடத்தைப் பற்றியும் அறிஞர்களிடையே கருத்துவேற்றுமைகள் காணப்படுகின்றன. கிமு எட்டாம் நூற்றாண்டிலிருந்து நான்காம் நூற்றாண்டு வரையுள்ள பல காலங்கள் இவருடைய காலமாகக் குறிப்பிடப்படுகின்றன. சிலர் இவர் பாபிலோனில் பணியாற்றினாரென்றும், வேறு சிலர் இவர் பாலஸ்தீனாவில் பணியாற்றினாரென்றும், இன்னும் சிலர் இவர் இரு இடங்களிலுமே பணிபுரிந்தாரென்றும் குறிப்பிடுவர். ஆனால் நூல் தரும் சான்று எசேக்கியேல் சிறையிருப்பின் காலத்தில் பாபிலோனிலேயே தம் இறைவாக்கு அழைப்பைப் பெற்றாரென்பதையும், அங்கேயே தம் பணி முழுவதையும் ஆற்றினாரென்பதையும் உணர்த்தக்கூடும்.

எரேமியாவைப்போல எசேக்கியேலும் சமய வாழ்க்கையில் தனியாள் பொறுப்பை வலியுறுத்தினார். தாங்கள் சிறையிருப்பில் துன்புறுவது தங்கள் முன்னோர் தீவினையினால் என்றெண்ணினர் மக்கள். இதற்கு மாறாக எசேக்கியேல், பாவஞ் செய்கிறவனே சாவான்; மகன் தந்தையுடைய குற்றத்தை சுமப்பதில்லை, தந்தை மகனுடைய குற்றத்தை சுமப்பதுமில்லை, நீதியர் தம் நீதியை அனுபவிப்பார், தீயவர் தம் தீவினையை அனுபவிப்பார் என்கிறார் (எசே. 18:20 - இவ்வதிகாரம் முழுவதும் காண்க).

எசேக்கியேல் காலத்தில் மக்களிடையே எழுந்த முக்கியமானதோர் பிரச்சனை யாவேயின் நீதியைப் பற்றியதாகும். மக்கள் ஆண்டவரின் வழி சரியானதன்று என்றனர் (18:25; 33:10-20). நல்லோரும் தீயோரும் சிறையிருப்பில் ஒருங்கே அவதியுறுவது, கடவுளுடைய இயல்பு, தன்மை ஆகியவற்றில் இப் பிரச்சனையைக் கிளப்பியிருக்கலாம். கடவுளுடைய இயல்பு, தன்மை ஆகியவற்றில் இப் பிரச்சனைக்கு விளக்கம் காண்கிறார் இறைவாக்கினர்.

யாவேயை இஸ்ரயேலர் தங்கள் வாழ்க்கைக்குப் புறம்பாகத் தள்ளிவிட்டனர் (2:1மு; 8:7-13; 13:1-16; 23:2). கடவுளுடைய விருப்பத்திற்குக் கீழ்ப்படியாததால் யாவேயின் மாட்சி அன்னாரை விட்டு விலகிற்று (11:22,23). யாவே விலகினதும் எருசலேம் அழிவுக்கிடமானது. வாழ்வுக்கு ஆதரவாக யாவேயை அன்னார் ஏற்றுக்கொள்ளாதபோது அவர் நீதிபதியாக அன்னாருக்குள் வந்தார் (அதி.6,9,13,16,21). யாவேயின் வழி சரியானதன்று என்கிறார்கள் இஸ்ரயேலர். ஆனால் சரியாயிராதது அன்னார் வழியே (33:17).

யாவே வாழ்வுக்குக் காரணமானவர் (37:1-14; 47:1-12). வாழ்வுக்குக் காரணமானவரை இஸ்ரயேலர் விட்டுவிட்டபோது அழிவு அன்னாரை அண்டியது.

மேலும் யாவே வரலாற்றின் கடவுள் என்பதையும் எடுத்துக்காட்டுகிறார் இறைவாக்கினர். யாவே இஸ்ரயேலுக்கு மட்டும் உரியதோர் கடவுள் என்னும் நம்பிக்கையைக் கடந்து, யாவேயின் வல்லமை எல்லா நாடுகளின்மேலும் உள்ளது என்று அவர் காட்டுகிறார். தாங்கள் வேற்று நாட்டில் சிறையிருப்பதால், யாவேயால் புறக்கணிக்கப்பட்டவர்கள் என்றெண்ணினர் மக்கள். ஆனால் இறைவாக்கினர் அம்மோன் (25:7), மோவாபு (25:8-11), தீரு (29:8,9) ஆகிய பல நாடுகள்மேல் யாவேக்கு உள்ள வல்லமையை எடுத்துக்காட்டி, யாவேயின் வல்லமை சிறையிருப்பிலுள்ள யூதர்கள் மேலும் உள்ளதென்றார். யாவே இஸ்ரயேலரைச் சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுத்ததற்குக் காரணம் அன்னார் அவர் தூய்மையை அவமாக்கினதே! (22:8; 23:38).

யாவே தமது தூயப்பெயரை முன்னிட்டே இஸ்ரயேலரை மீட்பார் என்றும் எசேக்கியேல் கூறினார் (36:22,32). மீட்கப் பட்டவர்களுடன் யாவே தமது அமைதியின் உடன்படிக்கையை ஏற்படுத்துவார், அன்னாருக்குப் புதிய இதயத்தையும் புதிய ஆவியையும் கொடுப்பார். அதனால் மக்கள் அவருடைய விருப்பப்படி நடப்பார்கள் (36:26மு.). இங்கு எரேமியா வைப்போலவே எசேக்கியேலும் உள்ளான சமயத்தைக் காண்கிறார் எனலாம். இத்தகையதோர் புதிய சமய வாழ்வுக்கேற்றதான கடவுளுடைய நகரத்தையும், கோவிலையும் கற்பனையில் காண்கிறார் இறைவாக்கினர் (அதி. 40-48).

(இ) இரண்டாம் எசாயா

எசா. 40-55இன் ஆசிரியர் இரண்டாம் எசாயா என்று அழைக்கப்படுவதாகக் கண்டோம். இவர் எசேக்கியேல் இறைவாக்கினர் காலத்திலிருந்து ஏறத்தாழ ஒரு தலை

முறைக்குப் பின் தோன்றினார். இவரில் ப.ஏ.இன் இறைவெளிப்பாடு உச்சநிலையடைகிறது.

இந்த இறைவாக்கினர் சிறையிருப்பின் இறுதிக் காலத்தில் வாழ்ந்திருக்கவேண்டும். இவர் காலத்தில் யூதர்கள் இன்னும் சிறையிலிருக்கிறார்கள் (42:22,24; 48:20). ஆனால் சைரசு வரலாற்றரங்கில் தோன்றியாயிற்று (44:28; 45:1). யூதர்களின் மீட்பு சமீபமாகத் தோன்றியது (51:14; 52:11).

எரேமியா, எசேக்கியேல் இறைவாக்கினர்கள் செய்ததுபோலவே இந்த இறைவாக்கினரும் அவர் காலத்தில் மக்களிடையே எழுந்த சில பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண முயல்கிறார்.

சிறை சென்ற யூதர்கள் உலகிலேயே பெரியதோர் நகரத்தில் சில காலம் வாழ்ந்து பற்பல சமயங்களைப் பற்றியும், தெய்வங்களைப்பற்றியும் அறிந்திருந்தனர். உலகம் உண்டானதைப்பற்றிய பல புராணங்கள், தெய்வங்களின் தோற்றத்தைக் குறித்த கதைகள் பல அவர்களுக்குத் தெரியும். வானத்தின் ஏதுக்களை ஆராயும் பாபிலோனிய ஞானிகளையும் அவர்கள் கண்டனர். இவை யாவும் யூதர்களிடையே கேள்விகளை கிளப்பியிருத்தல்கூடும். தாங்கள் சிறைப்பட்டதற்கே காரணங்களை அவர்கள் தேடிக் கொண்டிருந்தனர். யாவே உண்மையிலேயே வல்லமையுள்ளவர்தானா என்னும் ஐயப்பாடு அவ்வப்போது அன்னார் உள்ளங்களில் எழாமலில்லை. அதற்குத் தூபமிட்டாற்போல் இப்பொழுது வேற்று தெய்வங்களைப் பற்றிய அறிவு அவர்களுள் பெரும் போராட்டத்தைக் கிளப்பியது. இந்தக் குழப்ப நிலையை இரண்டாம் எசாயா அகற்றுகிறார். யாவே ஒருவரே அனைத்துலக தெய்வம் என்னும் **ஓரிறைக்கோளை** (Monotheism) அவர் வலியுறுத்தி விளக்குகிறார். யாவே ஒப்புவமையற்றவர்; அவர் உலகின் எல்லைகளைப் படைத்த என்றுமுள கடவுள் (40:28; 48:9-18). அனைத்தாற்றல் உடையவர் (40:7; 42:15,16). அவர் ஒருவரே மெய்யான கடவுள்: எனக்குமுன் ஒரு தெய்வமும் உண்டானதுமில்லை, எனக்குப்பின் இருப்பதுமில்லை. நான், நானே ஆண்டவர். என்னைத்தவிர மீட்பர் ஒருவரும் இல்லை (43:10,11; 45:5-7 காண்க). யாவே கை வேலையான யாதொன்றுடனும் ஒப்பிடக்கூடியவரல்லர் (அதி. 44; 46:5).

இப்படியாக யாவே ஒப்புயர்வற்ற ஒரு கடவுளானால் அவரால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள் துன்புறுவதேன் என்பது மக்கள் உள்ளங்களில் எழுந்த இன்னொரு கேள்வி. இக் கேள்விக்கு இரு வகையான விடைகளைத் தருகிறார் இறைவாக்கினர். முதலாவது, மரபும், பிற இறைவாக்கினர்களும் தரும் விடையைத் தருகிறார்; யாவே இஸ்ரயேலைத் தமக்காகத் தேர்ந்துகொண்டார் என்பது உண்மைதான் (43:20மு.). ஆனால் இஸ்ரயேலோ இந்தத் தேர்ந்துகொள்ளுதலுக்கு ஏற்புடையவராக நடந்துகொள்ளவில்லை (43:22). அதனாலேயே அவர் அன்னாரைப் பாபிலோன் கையில் ஒப்புக்கொடுத்தார் (42:24; 47:6).

இரண்டாவதாகத் துன்பப் பிரச்சனைக்கு இறையியல் சார்ந்த ஆழமான ஒரு விளக்கத்தை இறைவாக்கினர் தருகிறார். யாவே இஸ்ரயேலை ஓர் உயரிய நோக்கத்திற்காகத் தேர்ந்துகொண்டார். அன்னார் உலகின் கடை எல்லை வரை என்னால் வரும் மீட்பாக இருக்குமாறு... வேற்றினத் தாருக்கு வெளிச்சமாக ஏற்படுத்தப்பட்டனர் (42:6); மக்களினத்துக்கு உடன்படிக்கையாகவும் வைக்கப்பட்டனர் (49:8). இந் நோக்கத்தை நிறைவேற்றும் பணியில் யாவேயின் பணியாளாகிய இஸ்ரயேல் பாடுபடுகிறார். உலகத்தின் மீட்புக்காக இஸ்ரயேல் பாடுபடுகிறார். இக்கருத்து பாடுபடும் பணியாளைப் பற்றிய பாடல்களில் அதிகமாக வெளிப்படுகிறது (49:7; 50:5-7; 52:14-53:12).

இந்த இறைவாக்கு நூல்கள் தவிர, இக் காலத்தில் பிற சில விவிலியப் பகுதிகளும் தோன்றின என்று கொள்ளப்படுகிறது. குறிப்பாக புலம்பல், எசா. 1-14; 23; ஒப.வ. 1-14; இலேவி. 17-26 ஆகியவற்றுடன், சில திருப்பாடல்களும் இக்காலத்தில் எழுந்துள்ளன. முன்கண்ட மூன்று இறைவாக்கினரின் அரும்பணியினால் இக்காலத்தில் முக்கியமாகத் தனியார் பொறுப்பு, உள்ளான சமயம், ஓரிறைக்கோள், அனைத்துலக மீட்பு ஆகிய உயரிய கூறுகள் இஸ்ரயேல் சமயத்தில் இடம்பெறலாயின.

இவை தவிர, சிறையிருப்புக்குப் பின்னால் எழுந்த பின்வரும் நூல்களையும் ப.ஏ.இல் காண்கிறோம்.

(ஈ) யோவேல்

இந் நூலின் காலத்தைக் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. பொதுவாக, இதன் பெரும்பகுதிகளும் சிறையிருப்புக்குப் பிந்தியவையாகக் கொள்ளப்படுகின்றன. வெட்டுக்கிளியினால் ஏற்பட்டதோர் பெரிய அழிவு கடவுளுடைய நீதித் தீர்ப்பை மக்களுக்கு நினைவுபடுத்தியது போலும். அதைத் தொடர்ந்து மக்கள் நோன்பிற்கும், மன்றாட்டுக்கும் அழைக்கப்படுகின்றனர். ஆண்டவருடைய நாள் சமீபம் என்றும், மனமாற்றத்தினால் அழிவினின்று தப்பலாமென்றும் கூறப்பட்டது. கடைசி நாள்களில் மாந்தரான யாவர் மேலும் ஊற்றப்படப்போகிற ஆவியைக் குறித்த செய்தி இந் நூலின் சிறப்பு அழுத்தமாகும்.

(உ) ஒபதியா

ஏதோமுக்கு எதிராக, சிறையிருப்புக்குப்பின் எழுந்ததோர் இறைவாக்கு நூல்.

(ஊ) யோனா

ஆசிரியர் யார் என்று தெரியாது. இது யோனா என்னும் இறைவாக்கினர் நினிவேயில் ஆற்றின இறைவாக்குப் பணியைக் கூறும் ஒரு நூல். வரலாற்று நோக்கில் இது பயனற்றது. ஆனால் சிறையிருப்புக்குப்பின் உண்டான அனைத்துலக நோக்கை வலியுறுத்தும் ஒரு சிறந்த நூல். இரண்டாம் அதிகாரத்தில் காணப்படும் திருப்பாடல் பழமையானது. ஆனால் நூல் இப்பொழுதிருக்கும் நிலையில் சிறையிருப்புக்குப் பின்னால் தோன்றினதே. இறைவாக்கினரே திருந்தாத நிலையில் நினிவே மக்கள் திருந்துவதையும் கடவுள் மனம் மாறுவதையும் இந் நூல் குறிப்பிடுகிறது.

(எ) நாகூம்

நினிவேக்கெதிரான இறைவாக்கு நூல். கி.மு. 612ஆம் ஆண்டை அடுத்து எழுந்திருக்கலாம். இவ்வாண்டில் நினிவே அழிவுற்றதென்று அறிகிறோம்.

திருவிவிலியத் துணை நூல்

(ஏ) ஆபகூக்கு

முதல் இரு அதிகாரங்களும் கல்தேயருக்கு (பாபிலோன்) வரப்போகும் அழிவைக் குறிப்பிடுகின்றன. மூன்றாம் அதிகாரம் துதிப்பாடல் முறையில் அமைந்திருக்கிறது. இது கி.மு. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியிருத்தல் வேண்டுமெனக் கருதப்படுகிறது. கி.மு. 539இல் பாபிலோன் அழிவுற்றதென்று அறிகிறோம்.

(ஐ) செப்பனியா

எரேமியாவின் காலத்தைச் சார்ந்த இறைவாக்கினர். மூன்று அதிகாரங்கள் ஆண்டவருடைய சினத்தின் நாளைக் குறித்துக் கூறுகின்றன. இங்குக் காணப்படும் ஒருசில நம்பிக்கையளிக்கும் செய்திகள் பிற்சேர்க்கையாகக் கருதப்படுகின்றன.

(ஒ) ஆகாய்

கி.மு. 520ஆம் ஆண்டளவில் வாழ்ந்தவர். இவர் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிய யூதர் கோவில் பணியைத் தொடங்க அன்னாரை உற்சாகமூட்டினார்.

(ஓ) செக்கரியா

ஆகாய் காலத்தவர். இவரும் மக்கள் கோவில் வேலைகளில் ஈடுபடத்தக்கதாக பல காட்சிகளைக் குறித்த வரலாறுகளால் அன்னாரைத் தூண்டப்படுத்தினார். அதி. 1-7. இக் காட்சிகளைத் தருகின்றன. அதி. 9-14 பிற்சேர்க்கை எனப்படுகிறது. இது மறைபொருள் வெளிப்பாட்டு இலக்கியத்தைச் சார்ந்தது. இதனுள்ளும் முந்தைய இறைவாக்குப் பகுதிகள் ஒருசில காணப்படுகின்றன.

(ஔ) மலாக்கி

மலாக்கி என்றால் என் தூதுவர் என்று பொருள். இச் சொல் 3:1இல் வருகிறது. இறைவாக்குகளின் உண்மையான பெயர் தெரியாது. நூல் சிறையிருப்புக்குப் பிந்தியது (கி.மு. 470 - 450). எசுறா. நெகேமியா நூல்களில் காணப்படும் சீர்திருத்தக் கூறுகள் இங்கு வெளிப்படுகின்றன.

7. முடிவுரை

இஸ்ரயேலரின் வரலாற்றிலும் இறையியல் வளர்ச்சியிலும் இறைவாக்கினரின் பங்கு மிகவும் கருதத்தக்கது. பாரவசக் கூட்டத்தவருடன் தொடர்புபட்டு தோன்றிய இறைவாக்கினர் மரபு சமூக ஆய்வுக்கு நேராக வளர்ச்சியடைந்தது. இறைவனின் திருவுளத்தை அறிந்த இறைவாக்கினர் சமூகச சீர்கேடுகளை அகற்றி அறநெறியை நிலைநாட்ட முயன்றனர். யூத சமயமும் கிறிஸ்தவ சமயமும் தொடர்ந்து சுயத் திறனாய்வு செய்வதற்கு இந்த இறைவாக்கினர் தளம் அமைத்தனர் எனலாம்.

இறைவாக்கினர் செய்தியை வெறும் முன்னுரைத்தல் - நிறைவேறுதல் என்ற வரையறைக்குட்படுத்துவது ஆபத்தானது. இவர்கள் தத்தம் காலங்களில் நடந்த நிகழ்ச்சிகளை இறைவழி நின்று திறனாய்வு செய்தனர்; மக்களுக்கு அறைகூவல் விடுத்தனர். அதே நேரத்தில் உடனடியாக அடுத்து வந்த எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதையும் இவர்களால் பகுத்துணர முடிந்தது. எனினும் எதிர்பார்ப்புகள் எப்போதும் எழுத்துக்கெழுத்தாக நடந்தேறவில்லை. எ.கா. சீர்திருத்த ஆளுநரான யோசியா இளமையில் திடீரென்று கொல்லப் பட்டது எரேமியா போன்ற இறைவாக்கினருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. 70 ஆண்டுகள் யூதர் பாபிலோனில் சிறையிருப் பார்கள் என்ற எரேமியாவின் முன்கூற்று அப்படியே நிறைவேற வில்லை. ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்குள் யூதர் சிறைமீண்டனர். மேலும், மெசியாவைப் பற்றிய இறைவாக்கினரின் எதிர்பார்ப்பு இயேசுவில் நிறைவேறியதாக கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். ஆனால் யூதர் இதை ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் மெசியா பற்றிப் பல்வேறு விளக்கங்கள் தருகின்றனர். பெருவாரி யானோர் இனிதான் மெசியா தோன்றுவார் என்று நம்பு கின்றனர். மேலும் புதிய உலகம், புதிய மானிடம் பற்றிய எதிர் பார்ப்புகளையும் காட்சிகளையும் கூட ப.ஏ. இறைவாக்கினர் முன்வைத்தனர்.

ப.ஏ. இறைவாக்கினர் முன்கூறியதனைத்தும் இயேசுவையே சுட்டும் என்ற நிலைப்பாட்டில் பல சிக்கல்கள் உள்ளன. ஆனால் இந்த இறைவாக்கினரின் முற்போக்குச் சிந்தனை, ஆன்மிகப் போராட்டம் முதலியவை இயேசுவை ஓர் இறைவாக்கினராக, இறைவனை வெளிப்படுத்தியவராகக் காண உதவுகின்றன. அத்துடன் இன்றைய கிறிஸ்தவர்களின் சுயத் திறனாய்வுக்கும், சமூகப் பகுப்பாய்வுக்கும் ப.ஏ. இறைவாக்கினரின் வாழ்வும் போதனைகளும் மிகவும் பயனுடையவை என்பதில் ஐயமில்லை.

துணை நின்ற நூல்கள்

1. K. Koch, *The Prophets*, Vol.1 and 2, Fortress: 1982.
2. R. Coggins (ed.), *Israel's Prophetic Tradition*, CVP, 1982.
3. G. Van Rad, *Old Testament Theology*, Vol.2, SCM, 1977.
4. C. Westermann, *The Basic Forms of Prophetic Speeches*, Fortress, 1967.
5. D. Aune, *Prophecy in the Early Christianity*, Eerdmann, 1987.
6. E.W. Davis, *Prophecy and Ethics*, JSOT, 1981.
7. வி. வில்லி, *பழைய ஏற்பாட்டு அறிமுகம் - 2*, த.இ.நூ.கு.
8. பா. ஜெயராஜ், *ஆமோஸ்*, EFI, *1984*.

17

புனித எழுத்தேடுகள்

ஞான இராபின்சன்

ப.ஏ. கனோனின் மூன்றாம் பகுதி புனித எழுத்தேடுகள் அல்லது திருவெழுத்துக்கள் (எபிரேயத்தில் கெதூபீம்) என்று அறியப்படுகிறது. இப்பகுதியில் பின்வரும் 13 நூல்கள் அடங்கும்:

1. ரூத்தின் வரலாறு
2. குறிப்பேடு முதலாம் நூல்
3. குறிப்பேடு இரண்டாம் நூல்
4. எசுறா
5. நெகேமியா
6. எஸ்தர்
7. யோபு
8. திருப்பாடல்கள்
9. நீதிமொழிகள்
10. சபை உரையாளர்
11. சிறப்பு மிகு பாடல்
12. புலம்பல்
13. தானியேல்

இந்த நூல்கள் ப.ஏ. கனோனில் இடம் பெற்ற காலத்தைக் குறித்தும், வகையைக் குறித்தும் பழைய ஏற்பாட்டுக் கனோன் என்னும் கட்டுரையின் கீழ் காண்க. கனோனின் மூன்றாம் பகுதியில். இவை இடம் பெற்றிருப்பதே, இந்நூல்கள் ப.ஏ. இன் சமய இலக்கிய வளர்ச்சியின் இறுதிப் பருவத்தில் உருவானவை என்பதைக் காட்டும். இவை, கனோனின் முந்தைய இரு பகுதிகளையும், குறிப்பாக முதல் பகுதியாகிய திருச்சட்டத்தைச் சார்ந்து எழுந்தவை. திருச்சட்டமும், இறைவாக்கும் கூறியவற்றுடன் இவற்றின் செய்தி எவ்வாறு பொருந்தியுள்ளது என்ற அடிப்படையிலேயே இவற்றில் பலவும் கனோன் அங்கீகாரம் பெற்றன. இங்கு நாம் இந்த நூல்களின் இலக்கிய நடை குறித்துப் பொதுவாகவும், நூல்களின் பொருள் குறித்துத் தனித் தனியாகவும் சுருங்க ஆராய்வோம்.

இப் பகுதியில் ப.ஏ. இன் பல்வகை இலக்கிய நடைகளும் காணப்படுகின்றன எனலாம். ரூத்து, குறிப்பேடு, எஸ்தர் ஆகிய நூல்கள் வரலாற்றுரைகளைச் சார்ந்த நடையில் தரப்பட்டுள்ளன. ஆயினும், இவற்றைச் சாதாரண வழக்கில் கொள்ளும் வகையில் வரலாறு என்பதற்கில்லை. இவை சமய வரலாறுகள் எனலாம். ரூத்து, எஸ்தர் நூல்களுக்குப் பின்னால் உண்மை வரலாறு எவ்வளவாகக் காணக் கிடக்கின்றது என்பது கேள்விக்குரியது. இதைக் குறித்து, அந்த நூல்களின் கீழ் ஆராய்வோம். குறிப்பேடு நூல்கள் உண்மை வரலாற்றுப் பின்வணியில் எழுதப்பட்டவைதான். ஆனால் அவற்றின் ஆசிரியர் வரலாற்று உண்மைகளைத் தம் சமய நம்பிக்கைக்கேற்ப கூட்டிக் குறைத்துக் கூறியுள்ளார் எனல் பொருந்தும். இதைக் குறித்துப் பின்னால் காண்போம்.

வேறு முக்கியமாக, ஞான, கவிதை, மறைபொருள் வெளிப்பாட்டு இலக்கியங்கள் இங்குக் காணப்படுகின்றன. ப.ஏ. இல் காணப்படும் ஒரே மறைபொருள் வெளிப்பாடு நூல் தானியேல் ஆகும். மறைபொருள் வெளிப்பாட்டைக் குறித்து இங்கு நாம் குறிப்பாகப் ப.ஏ.இன் கவிதை, ஞான இலக்கியங்களைக் குறித்துச் சுருங்கக் காண்போம்.

கவிதை இலக்கியம். ப.ஏ. இலக்கியத்தில் மூன்றில் ஒரு பகுதியும் கவிதை நடையில் காணப்படுகின்றது எனலாம். திருப்பாடல்கள், நீதிமொழிகள், சிறப்புமிகு பாடல், புலம்பல், ஒபதியா, மீக்கா, நாகூம், ஆபகூக்கு, செப்பனியா ஆகிய நூல்களும், யோபு, எசாயா, ஒசேயா, யோவேல், ஆமோசு ஆகிய நூல்களின் பெரும் பகுதிகளும் கவிதை நடையில் காணப்படுகின்றன. இவை தவிர, கவிதைகள் ப.ஏ.முழுவதிலும் விரவிக் கிடத்தலையும் காண்கிறோம் (தொட. 4:23.24; விடு. 15:1-18; நீதி. 5 முதலியன).

கவிதைகள் பெரும்பாலும் ப.ஏ.இன் பிந்திய கால நூல்களில் இடம் பெறுவதைக் காணலாம். ஆரம்பக் காலங்களில் கவிதைகள் வாய்மொழியால் வழங்கப்பட்டு, பின்னால் எழுத்து நிலையை அடைந்ததை இது ஒருவேளை காட்டலாம்.

கடந்த சில ஆண்டுகளாக ப.ஏ.க்கவிதைகள் நன்கு ஆராயப்பட்டு, அவற்றின் முக்கியத்துவம் உணரப்பட்டு வருகின்றது. ஓர் இலக்கியப் பகுதியின் குறிப்பிட்டதோர் உருவம் (Gattung = Form) ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைச் சூழ்நிலையில் (Sitz- in- Leben= Peace in life) எழுந்ததாகும் என்ற உண்மை ஓர் இலக்கியத்திற்கும், அந்த இலக்கியத்திற் குரிய மக்களின் வாழ்க்கைக்குமுள்ள நெருங்கிய தொடர்பை அறிந்துகொள்ள உதவுகிறது. ஆம், இலக்கியம் மனுமக்கள் வாழ்க்கையிலிருந்து எழுந்தது. குறிப்பாக, கவிதைகளைப் பொறுத்தமட்டில் இது முழுக்க முழுக்க உண்மை. துக்கத்திலிருப்பவர் துயரப் பாட்டுப் பாடுகிறார்; மகிழ்ச்சியிலிருப்பவர் மங்களப் பாட்டுப் பாடுகிறார்; ஞானி ஞான மொழிகளைப் பேசுகிறார். இவ்வாறு கவிதைகள் ஒவ்வொன்றும் தனித் தனி வாழ்க்கைச் சூழ்நிலைகளிலிருந்து எழுந்தவை என்றால் அது மிகையாகாது. காலத்தின் கையில் அகப்பட்டு இத் தொடர்பு ஒருவேளை இன்று மாறுதல

டைந்திருக்கலாம்; ஆயினும், கவனமாகச் செய்யும் ஆராய்ச்சி பயனில்லாமல் போவதில்லை.

ப.ஏ.இல் சமயச் சார்பற்ற பாடல்களும், சமயச் சார்புள்ள பாடல்களும் காணப்படுகின்றன.

சமயச் சார்பற்ற பாடல்களாகக் குல மரபுக் குழுவின் பாடல்கள் (லாமேக்கின் பாடல்-தொட. 4:23,24;இஸ்ரயேல் மேன்மையைக் குறித்த பாடல்-எண். 21:4,15; 27-30), பாட்டாளிகள் பாடல்கள் (ஊற்றின் பாடல்-21:17,18;சாமக்காவலனின் பாடல்-எசா. 21:11,12), மந்திர உச்சாடனங்கள் (ஆசி மற்றும் சாப மொழிகள் இவ்வகையைச் சாரும்-தொட. 9:25-27; 14:19,20; 24:60), குடிவேளைப் பாடல்கள் (எசா. 22:13;56:12, இச. ணை.1), காதல் பாடல்கள் (சிறப்பு மிகு பாடல்), வெற்றி வாகைப் பாடல்கள் (விடு. 15:21; நியா.5), பழமொழிகள். (1 சாமு. 10:12; 24:13), புலம்பல் பாடல்கள் (2 சாமு. 1:19-27; 3:33,34; எரே. 9:17-22), அரசாங்கப் பாடல்கள் (2 சாமு. 19:35) என்ற பல வகைப் பாடல்களைப் ப.ஏ.இல் காணலாம்.

திருபபாடல்கள், ஞான மொழிகள் இறைவாக்கு மொழிகள் ஆகியவை சமயச் சார்புற்ற பாடல்களாகக் காணப்படுகின்றன.

எபிரேயக் கவிதைகள் பெரும்பாலும் இசைக் கருவிகளுடன் பாடப்பட்டன (விடு. 15:20,21; 1சாமு. 18:6,7; திருப்.33:2,3). ஆதலால், இப் பாடல்கள் பெரும்பாலும் ஓசையொழுங்குடன், தாளத்திற்கிசைய அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். எபிரேயக் கவிதை சீர் (foot), வரி (stich), பகுதி (period, கூறு (strophe) என்ற அமைப்புக்களைக் கொண்டது. ஒரு வரியின் ஓசையழுத்தங்களைக் கொண்டு அவ்வரியின் பகுதிகளை இனங்கண்டு கொள்ளலாம். ஒரு வரியில் மூன்று ஓசையழுத் தங்கள் காணப்படுமானால், அவ் வரியில் மூன்று பகுதிகள் இருக்கின்றன என்போம். சாதாரணமாக, எபிரேயக் கவிதைகள் ஆறு ஓசையழுத்தங்களைக்கொண்ட இருவரிகளைக் கொண்டிருக்கும். இந்த ஓசையழுத்தங்களைக் கொண்டே கவிதையின் தாளம் (metre) கணக்கிடப்படுகிறது.

எபிரேயக் கவிதைகளின் சிறப்புக் கூறுகளில் முக்கியமானது, அதன் ஒரு போகு நிலையாகும் (Parallelism). குறிப்பாகத் திருப்பாடல்களில் இது பல வகைகளில் (ஒரு பொருள் ஒரு போகு நிலை, முரணிசைவு ஒருபோகு நிலை, பல்பொருள் ஒருபோகு நிலை) காணப்படுகின்றது. இது தவிர, அகர வரிசை அமைப்பும் (acrostic form) எபிரேயக் கவிதைகளின் சிறப்புக் கூறுகளில் ஒன்றாகும் (திரு34 :113; 119; புல. 1-4). இவை தவிர, முதலெழுத்து ஒன்றிவரும் மோனையமைப்புகள் (alliterations), செம்மொழிச் சிலேடைகள் (paranomasia), சொற்பொருள் இசைவணி (onomatapocia) ஆகிய கவிதைக் கூறுகளையும் இங்கு காணலாம்.

ஞான இலக்கியம் யோபு, நீதிமொழி, சபை உரையாளர் ஆகிய நூல்கள் ப.ஏ.இல் ஞான நூல்களாக அறியப் படுகின்றன. இவை தவிர பலத் திருப்பாடல்களும் (1:1,2ஆ;32:8-11; 34:12,13), ஆங்காங்கே காணப்படும் பல பகுதிகளும் (தொட. 34 -48) ஞானக் கூறுபாடுகள் கொண்டனவாகக் காணப்படுகின்றன. சிலர் சிறப்புமிகு பாடல், தானியேல் ஆகிய நூல்களையும் ஞான நூல்களாகக் கொள்வர். சிறப்பு மிகு பாடல் முழுவதையும் தொடர் உருவக முறையில் (allegorically) விளக்குவதானால் மட்டுமே. இதனை ஞான இலக்கியமாகக் கொள்ள முடியும். தானியேல் நூலில் ஞானக் கூறுகள் காணப்பட்டபோதிலும், அது ஒரு ஞான நூலாக விளங்குவதற்காக எழுதப்பட்டதன்று என்பதைப் பின்னால் காண்போம். இஸ்ரயேலர் ஞான இலக்கியத்தின் பெரும் பகுதியும் ப.ஏ. கனோனுக்கு வெளியேயே காணப்படுகின்றது.

ப.ஏ, காலத்தில் அண்மைக் கிழக்கு நாடுகளில், குறிப்பாக ஏதோம், எகிப்து, பாபிலோன் ஆகிய நாடுகளில் ஞான இயக்கம் நன்கு வளர்ச்சியடைந்திருந்தது என்பதற்கான சான்றுகள் காணப்படுகின்றன (எரே. 49:7;ஒப.1:8). விவிலியத்தின் சான்றுகளின்படி, இஸ்ரயேலர் மிகப் பழங்காலத்திலிருந்தே எகிப்துடன் தொடர்புகொண்டிருந்தனர் என்று காணலாம். எகிப்தின் ஞானம் பழமைவாய்ந்தது. சிறப்புற்றது (தொட. 41:8;விடு3:11 எசா. 19:11,12). அண்மை யில் நமக்குக் கிடைத்துள்ள எகிப்திய .ஏடுகள், இஸ்ரயே லரிடையே காணப்பட்டது போன்றதோர் ஞான இயக்கம் எகிப்திலும் மிகப் பழங்காலத்திலிருந்தே இருந்து வந்தது என்பதை உணர்த்தும். குறிப்பாக 1926இல் கிடைத்துள்ள *அமெனெ எம் ஒபேத்தின் ஞானம்* என்னும் ஏடு இவ் வுண்மையை வலியுறுத்துவதாயுள்ளது. இதனுடன் நீதி. 22:17-23:14 ஐ ஒப்பிட்டபோது, இத் தொடர்பு மேலும் உறுதியாகி உள்ளது.

அசிரியர், பாபிலோனியரிடையே ஞானம் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது என்று காணலாம் (1 அர. 10:1மு;எசா. 44:25; எரே. 51:57; தானி.2:12மு.). ஏதோம் நாட்டின் வழி இந்த நாடுகளின் ஞானம் இஸ்ரயேலரை அடைந்திருக்கக்கூடும் (எரே. 49:7;ஒப. 1:18). தவிர, சிறையிருப்பின் காலத்திலும் இஸ்ரயேலர் இந் நாடுகளின் ஞான இயக்கங்களோடு ஈடுபாடுகொண்டிருத்தல் கூடும். கானானிலும் ஞானம் ஓரளவு வளர்ச்சியுற்றிருந்தது.நீதி. 5:28-30; 2சாமு. 14:2;20:16). இதையும் இஸ்ரயேலர் பயன்படுத்தியிருக்கலாம்.

இப்படியாக, இஸ்ரயேலர் ஞானம் பிற ஈடுபாடுகளுடன் வளர்ச்சியடைந்தது எனலாம். தோற்ற காலத்தில் விடுகதைகள் (நீதித். 14:12-19) கட்டுக் கதைகள் (9:18), பழமொழிகள் (1சாமு. 10:11,12; 24:13) ஆகியவற்றின் மூலம் ஞான உரைகள் எழுந்தன. கனவுகளுக்குப் பொருள் கூறலும் ஞானியின் கடமையாகக் கொள்ளப்பட்டது (தொட. 41:8மு; தானி. 2).

அரசமைப்பின் காலத்தில் அரச அவைகளில் ஞானம் வளர்ச்சியுற்றது. (எசா.10:12,13; 19:11- 13). தாவிது, சாலமோன் ஆகியோர் ஞான வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தனர் (2 சாமு. 16:23; 17:14; 1 அர. 12:3-14). சாலமோனே பெரிய ஞானியெனப்பட்டார். இப்படியாக, இஸ்ரயேலர் ஞானம் பிற இனத்தாரிடையிலும் புகழடைந்தது (1 அர2:6,9; 3:6-11;4:30;. 5:7; தானி. 2:44). அரசமைப்பின் வழி வளர்ந்த ஞானம் சிறையிருப்புக்குப்பின் பற்பல இடங்களில் தனி நபர்களிடமும், குழுக்களிடமும் வளரலாயிற்று. இறைவாக்குச் சங்கங்களைப்போல, ஞானிகள் சங்கங்கள் எழுந்தன. (நீதி. 2:11; 22:17; 24:13). தேர்ந்த ஞானிகள் மற்றவர்களுக்குப் போதித்து வந்தனர் (13:10,20). வாழ்வின் பிரச்சனைகள் பலவற்றை (துன்பப் பிரச்சனை), மனிதன் ஒழுக்க நெறிகள் பற்றிய கேள்விகள் பலவற்றை அலசி ஆராய்ந்து, மக்களுக்குச் சரியான போதனையைக் கொடுப்பதே ஞானிகளின் கடமை.

கீழை நாட்டு ஞானம் பெரும்பாலும் மனிதருடைய சுய முயற்சியாக இருந்தது. ஆனால், இஸ்ரயேல் ஞானிகள் ஆண்டவருக்கு அஞ்சி நடப்பதே ஞானம் என்று (யோபு 28:28; திருப். 111:10; நீதி. 1:7; 9:10; 15:33) ஞானத்தின் ஊற்றாக கடவுளைக் கண்டனர்.

விவிலியத்தில் நீதிமொழிகள் சாலமோனுடையது என்று குறிப்பிடப்படுகிறது (1:1). சபை உரையாளர் நூலும் சாலமோனுடையது என்பது மரபு. கி.மு. 50 ஆம் ஆண்டளவில் எழுந்ததொரு நூலும் சாலமோனின் ஞானம் என்ற தலைப்பில் காணப்படுகின்றது. இவற்றில் எதுவும் முழுமையாக சாலமோனால் எழுதப்பட்டது என்பதற்கான ஆதாரமில்லை. ஆனால், சாலமோன் பெரிய ஞானி என்ற மரபால் அவரை சிறப்பிக்கும்வண்ணம் அல்லது தங்கள் நூல் பிறரால் ஏற்றுக்கொள்ளும் தகுதி பெறும் வண்ணம் அவர் பெயரால் இந்த நூல்களை மக்கள் வெளியிட்டிருத்தல் கூடும்.

இந்த முன்னுரையுடன் புனித எழுத்தேடுகள் என்று அறியப்படும் நூல்களைப்பற்றிய சில குறிப்புகளை இங்குக் காண்போம்.

ரூத்து: ரூத்தின் நூல் ஓர் உயரிய இலக்கியப் படைப்பாகக் கொள்ளப்படுகிறது. இது பழங்கால மரபுகளைத் தழுவி எழுந்த ஒரு நூல். இப்பொழுது இருக்கும் நிலையில் இது சிறையிருப்புக்குப்பின். கி.மு. 450க்கும் 250க்கும் இடையில் எழுந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது.

யோனாவின் நூலைப்போல இந்நூலும் எசுறா, நெகேமியா நூல்களின் போக்கிற்கு மறுப்பாக எழுந்ததே. நூலின் மையக் கருத்து, ரூத்து ஒரு வேற்றுப் பெண் என்பதாகும் (1:4,22; 2:2,10-13,21; 4:5,10). நெகேமியா, எசுறா ஆகியோர் வேற்றுப் பெண்களைத் திருமணம் செய்வதைத் தடை செய்தனர் என்று கண்டோம் (நெகே. 13; எசுறா 9:1-3).

இணை. 23:3இல் அம்மோனியரும், மோவாபியரும் ஆண்டவருடைய சபைக் கூட்டத்திற்கு வரலாகாது எனப்பட்டது. இச் சட்டத்தையே நெகேமியா எடுத்து அமுல்படுத்தினதாக அறிகிறோம் (நெகே. 13:1). ஆகையால், நெகேமியா, எசுறா ஆகியோர் போக்கிற்கு மறுப்புத் தெரிவித்த ரூத்து நூல் ஆசிரியர், வேண்டுமென்றே தம் கதாநாயகியை மோவாபிய பெண்ணாகத் தேர்ந்து கொண்டார். எந்த இனத்தாரை யூதர்கள் வெறுத்து ஒதுக்கினரோ, அந்த இனப்பெண்ணின் வழியிலேயே, யூதர்களின் பெருமைக்குரிய தாவிது தோன்றினார் என்று காட்டி, கடவுள் வேற்றினத்தாரும் தம்மண்டை வரும் போது அவர்களை ஏற்றுக்கொள்ளுகிறார் என்று விளக்குவதே அவர் நோக்கம் (ரூத்து 1:16; 4:14-22). இந்த அனைத்துலக நோக்கு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தம் எனலாம்.

1,2 குறிப்பேடு: எபிரேய மறைநூலின் இறுதி நூல் இதுவாகும். அரசவையில் ஒவ்வொரு நாளும் நிகழ்ந்த செயல்களின் குறிப்பேடு என்பது தலையங்கத்தின் பொருள். குறிப்பேடு ஆசிரியர் பற்பல மூலநூல்களைப் பயன்படுத்தியுள்ளார். தொடக்க நூல் முதல் யோசுவா வரையுள்ள நூல்கள் 1 குறி. 1-9 அதிகாரங்களுக்கு ஆதாரமாக அமைந்துள்ளன. சாமுவேல், அரசர்கள் நூல்கள் 1 குறி.10. 2 குறி.36க்கு ஆதாரமாகக் காணப்பட்டிருத்தல் வேண்டும். இவை தவிர, இஸ்ரயேல், யூதா அரசர்களைக் குறித்த நூல் (2 குறி. 27:7; 35:27; 36:8), யூதா, இஸ்ரயேல் அரசர்களைக் குறித்த நூல் (16:11; 25:26; 28:26; 32:32) என்னும் ஆதார நூல்களையும், பிற பல மூலங்களையும் ஆசிரியர் பயன்படுத்தியிருக்கலாம்.

தாவிதின் ஆட்சி முதல் யூதாவின் அழிவுமட்டுமுள்ள வரலாறு இந் நூலில் அடங்கியுள்ளது. இணைச்சட்ட வரலாற்றிலிருந்தும் குறிப்பேடு வரலாறு வேறுபட்டது. ஓர் உண்மையான வரலாற்றை எழுதுவது ஆசிரியர் நோக்கமன்று. அன்னார் நம்பிக்கைக்கு வரலாற்று அடிப்படையில் விளக்கம் காண்பதே ஆசிரியர் நோக்கமாகும். வரலாற்று நிகழ்ச்சிகள் பல சமய நம்பிக்கையின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன. சில கூட்டப்பட்டன: சில குறைக்கப்பட்டன. குடிவழிப் பட்டியல்கள், காலக் கணக்கீடுகள் முதலியன இவர் இலக்கியத்தின் சிறப்புக் கூறுகள். கி.மு. 400-350இல் இது எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று கருதப்படுகிறது.

எசுறா, நெகேமியா: இந் நூல்கள் முதலாவது ஒரே நூலாகத்தான் எபிரேய மறைநூலில் இடம் பெற்றிருந்தன. செப்துவசிந்தில் இவற்றிற்கு இரண்டாவது எஸ்திராஸ் என்னும் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. சைரசின் காலத்தில் யூதர்கள் பலர் பாபிலோனிலிருந்து தாய்நாட்டிற்குத் திரும்பி வந்து கோவில் வழிபாட்டைத் தொடங்கியதும், எசுறா, நெகேமியா ஆகியோர் சில சீர்திருத்தங்களை மேற்கொண்டதும் இங்குக் கூறப்படுகிறது. எசுறா, நெகேமியா ஆகியோர் காலம் பிரச்சனைக்கு இடமானது. நெகேமியா முதலிலும், எசுறா பின்னாலும் பணி செய்திருக்கவேண்டும் என்று இன்று பெரும்பான்மையான அறிஞரும் ஒப்புக்கொள்வர். இவற்றின் சமய சிந்தை குறிப்பேடு நூலின் சிந்தையை ஒத்ததே. குறிப்பேடு நூல்கள் எழுந்த காலத்தையொட்டியே இவையும் எழுந்திருக்க வேண்டும்.

எஸ்தர்: பாரசீக அரசராகிய I அகஸ்வேருவின் காலத்தில் (கி.மு. 485-465) எஸ்தர் என்னும் ஒரு யூதப் பெண்ணின் மூலமாக யூத மக்களுக்கு ஏற்பட்ட மீட்பைப் பற்றிக் கூறும் நூல் இது. இதில் குறிப்பிடத்தக்க சிறப்புடைய சமயப் போதனை எதுவும் காணப்படவில்லை. கி.மு. 120க்குப் பின்னரே, இது பழ.திருநூற் சட்டம் ஒழுங்கில் இடம் பெற்றது என்று அறிகிறோம். கடவுள் என்னும் சொல் ஒருமுறைகூட இந் நூலில் வரவில்லை. செப்துவசிந்தில் எபிரேய மூலத்தில் இல்லாத சில பகுதிகள் இதில் கூடுதலாகக் காணப்படுகின்றன. இந்தக் கிரேக்க மூலத்தில் சமயக் கூறுகள் மிகுதியாகக் காணக்கிடக்கின்றன. இது எபிரேய மூலத்தின் வளர்ச்சி என்று கருதப்படுகிறது.

இது ஒரு வரலாறன்று; ஆனால், வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டதோர் புனைவுக் கதை எனலாம். இது எழுந்த காலத்தைக் குறித்துப் பலவகையான கருத்துக்கள் நிலவுகின்றன; கி.மு. இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டளவில் எழுந்திருக்கக்கூடும் என்பது பெரும்பான்மையோர் கருத்து. H.M.ஒர்லின்ஸ்கி என்னும் யூதப் பண்டிதர் இது பாபிலோனிய புராணம் ஒன்றைத் தழுவியெழுந்த கதை என்பார். இதன்படி மொர்தகாய் பாபிலோனிய தெய்வங்களின் தலைவனான மார்தூக்கையும், எஸ்தர் பாபிலோனிய காதற் தேவதையான இஸ்தாரையும் குறிக்குமென்பது இவர் கூற்று.

யோபு: கடவுளின் ஆளுகையைக் குறித்த சில முக்கிய மான பிரச்சனைகளை எடுத்து ஆராய்கிறது இந்நூல். முக்கியமாக, நீதியர் துன்புறுவதேன் என்னும் கேள்வி ஆசிரியர் கவனத்தில் உள்ளது. இலக்கியம் உரையாடல் முறையில் அமைக்கப்பட்டுள்ளது. அமைப்பில் இது பிற பல இலக்கியங்களை ஒத்திருந்தாலும் பொருளில் தனிச் சிறப்புடன் திகழ்கிறது எனலாம். யோபுவைப் பற்றிய மூலக் கதையொன்றை ஆசிரியர் எடுத்துப் பயன்படுத்தியுள்ளார் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. ஏதோம் நாட்டின் ஈடுபாடல் இந் நூலில் அதிகமாகக் காணப்படுகிறது; மூல நூல் ஏதோமிலிருந்து எழுந்திருக்க வேண்டுமென்னும் கூற்று இதனால் உறுதி செய்யப்படுகிறது. இந்நூல் எழுந்த காலத்தைக்

குறித்துத் திட்டமாக எதுவும் கூறமுடியாது. அறிஞர்கள் கி.மு. 700க்கும் 200க்கும் இடையிலுள்ள பல காலங்களைக் குறிப்பிட்டுள்ளனர். இங்குக் காணப்படும் பிற்கால சமயக் கருத்துக்கள் பல இது சிறையிருப்புக்குப்பின் எழுந்திருக்க வேண்டும் என்னும் கருத்தை ஆதரிப்பதாகவுள்ளது. நன்மை செய்தால் மேன்மையுண்டு; தீமை செய்தால் துன்பமுண்டு என்னும் இணைச்சட்ட விதி இங்குக் கேள்விக் குறிக்குள் கொண்டுவரப்படுகிறது. ஒருவர் கடவுளுக்கு அஞ்சி நல்லவராக வாழ்வதற்கான பலன் கடவுளே என்கிறார் ஆசிரியர்.

திருப்பாடல்கள்: 150 திருப்பாடல்கள் காணப்படுகின்றன. செப்துவசிந்தின் சில பிரதிகளிலும், சிரிய மொழிபெயர்ப்பிலும் 151 திருப்பாடல்கள் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பான்மையும் வழிபாட்டுச் சூழ்நிலையில் எழுந்தவை. மோசே, தாவிது, சாலமோன், ஆசாபு, எஸ்ராகியராகிய ஏமான், ஏதான், கோராகு வழிமரபினர் ஆகியோர் பெயர்களுடன் திருப்பாடல்கள் தொடர்புபடுத்தப்படுகின்றன.

தற்கால திருப்பாடல்கள் நூலாராய்ச்சி தனித் தனி திருப்பாடல்கள் எப்பொழுது, யாரால் எழுதப்பட்டன என்பதில் ஆர்வம காட்டாமல், பொதுவாக திருப்பாடல்களின் அமைப்புக்களையும் (Gattungen), வாழ்க்கைச் சூழ்நிலையில் அவற்றின் இடங்களையும் (Sitz- im -Leben) குறித்து அறிவதிலேயே ஆர்வம் காட்டுகின்றது. இப்படியாக துதிப்பாடல்கள், புலம்பல், நன்றியறிதல் பாடல்கள், அரசப் பாடல்கள் என்று திருப்பாடல்கள் பல வகையாகப் பகுக்கப்பட்டுள்ளன.

தனிப்பட்ட திருப்பாடல்களின் காலங்களை வரையறுப்பது இன்று இயலாதது. அறிஞர்களிடையே இதனைக் குறித்துக் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. தாவிதுதான் பெரும்பான்மையான திருப்பாடல்களையும் எழுதினார் என்ற கருத்து அடிபட்டபோது, பெரும்பான்மையான திருப்பாடல்களும் மக்கபேயர் காலத்தில் எழுந்தன என்னும் கருத்து வளரலாயிற்று. ஆனால் இன்று இக் கருத்தும் மறுக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையான திருப்பாடல்களும் சிறையிருப்புக்குமுன் தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்து இன்று புகழடைந்துள்ளது. கும்ரானில் கண்டெடுக்கப்பட்டுள்ள துதிப் பாடல்கள், மக்கபேயர் பாடல்கள் ப.ஏ. திருப்பாடல்களிலிருந்து பொதுளவு வேறுபட்டுள்ளன என்பதைக் காட்டுகின்றன.

விவிலியத்துக்குப் புறம்பான சான்றுகளும் திருப்பாடல்களின் சிறையிருப்புக்கு முந்தைய காலத்தையே ஆதரிக்கின்றன. ப.ஏ. பாடல்கள், அசிரிய, பாபிலோனிய, கானானிய பாடல்களை ஒத்திருக்கின்றன. ஆதலால், இஸ்ரயேலர் பாடல்கள் இயற்றுவதைச் சிறையிருப்புக்குப்பின்தான் கற்றுக்கொண்டனர் என்பது சரியாகாது.

இஸ்ரயேலர் சமய ஆராய்ச்சிக்குத் திருப்பாடல்கள் இரு வகைகளில் முக்கியமானவை. முதலாவது, சிறையிருப்புக்கு முன்னாலுள்ள வழிபாட்டு ஆசாரங்களை அமைக்க இவை உதவுகின்றன. இரண்டாவது, சிறையிருப்புக்குமுன் இஸ்ரயேலரிடையே காணப்பட்ட பற்றுமை வாழ்வு பற்றியும் நாம் அறியத் துணை புரிகின்றன.

நீதிமொழிகள்: இஸ்ரயேலர் ஞான இயக்கத்தில் ஒழுங்கு படுத்தப்பட்டதொரு ஞான நூலாக முதன் முதலாக நீதிமொழிகளைத்தான் காண்கிறோம். இது தற்செயலாக எழுந்ததன்று, முறையாகத் தயாரிக்கப்பட்ட நூலாகும். மேலும், இது ஒருவர் கைப்பட எழுந்த நூலன்று என்பது இன்று பெரும்பாலும் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இதில் குறைந்தது வெவ்வேறு கைகளிலிருந்து வந்த எட்டுப் பகுதிகளாவது இருக்கவேண்டுமென்று கருதப்படுகின்றது. அதி.1-9இல் சற்று வளர்ச்சியடைந்த கருத்துக்கள் காணக்கிடக்கின்றன. இது சிறையிருப்பின் தொடக்கக் காலத்தில் எழுந்திருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது 10:1-22:16, சாலமோனின் நீதிமொழிகள் என்ற தலைப்புடன் தரப்பட்டுள்ளது. இங்குக் குறுகிய அளவையுடைய ஏறத்தாழ 375 ஞான மொழிகள் காணப் படுகின்றன. இவை ஒன்றோடொன்றுக் கருத்து தொடர்புடையனவாகக் காணப்படவில்லை. ஆகையால், இவை தோற்ற நிலையில் மக்களிடையே தனித்தனியாக வழக்கிலிருந்திருக்கலாம். சாலமோன் இவற்றை எழுதினார் என்பது பிற்காலத்தில் எழுந்த மரபாகும். நீதிமொழிகளின் முக்கியக் கூறுகள் சில சாலமோன் கையிலிருந்தோ அல்லது அவர் காலத்திலிருந்தோ வந்திருக்கக் கூடாதென்பதற்கில்லை. 22:17-23:14 எகிப்திய ஞான நூலான அமன் எம் ஒபேத்தின் போதனையைத் தழுவி நிற்கின்றது. பகுதி வேறு 24:23.34; அதி. 25-29; 30:1-33; 31:1-9,10-31 ஆகியன வெவ்வேறு பகுதிகளாகக் கொள்ளப்படுகின்றன. இந் நூலின் கடைசிப் பதிப்பு கி.மு. ஐந்தாம், நான்காம் நூற்றாண்டுகளுக்கிடையில் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பது அறிஞர் கருத்து. அறிவற்றோருக்குக் கூரறிவு அளிப்பதும் இளைஞருக்கு அறிவும் விவேகமும் ஊட்டுவதுமே இந்நூலின் நோக்கம் (1:4).

சபை உரையாளர்: எபிரேய மூலத்தில் இந் நூல் கோகெலெத்து (Qoheleth) எனப்படுகிறது. செப்துவசிந்து இதனை எக்ளிசியாஸ்டீஸ் (Ecclesiastes) எனக் குறிப்பிட்டது. பிற மொழிபெயர்ப்புகள் இதைத் தழுவியே எழுந்துள்ளன. நூலின் மொழிநடை இது பிந்தைய காலத்தைச் சார்ந்தது என்பதைக் காட்டும். அரமேய மொழியின் ஈடுபாடு இதில் அதிகமாகக் காணப்படுகிறது. மக்கபேயர் கால நிகழ்ச்சிகள் எதுவும் குறிப்பிடப்படாததால் இது மக்கபேயர் காலத்திற்கு முன் எழுந்திருக்கலாம் என்று நாம் ஊகிக்கலாம். நூலின் மையக் கருத்து என்னவென்பதில் அறிஞர்களிடையே கருத்துவேறுபாடுகள் காணப்படுகின்றன. முக்கியமாக அவநம்பிக்கையின் கூறுபாடு நூலினூடே இழையோடுவதைக் காணலாம். நல்லவர் அழிவதையும் தீயவர் செழிப்பதையும் கண்ட ஆசிரியர் சந்தேகவாதியாக மாறி, எல்லாம் மாயை என்ற முடிவுக்கு வருகிறார். நூலில் ஆங்காங்கே காணப்படும் சமய நம்பிக்கைகள் பிற்கால உட்புகுத்தல்களாகும்.

சிறப்புமிகு பாடல்: இது ப.ஏ.இல் பிரச்சனை மிகுந்த நூல்களில் ஒன்று. இதன் பொருள் என்ன, அதனை எவ்வகையில் புரிந்துகொள்வது என்பதே முக்கியமான பிரச்சனையாகும். இது காதற் பாடல்களின் தொகுப்பு என்பது இன்று பெரும்பான்மையோரால் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்து. தொடர் உருவக விளக்கத்தின் மூலமே இது யூத, கிறிஸ்தவ சமய நம்பிக்கைகளுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. நூலின் மொழிநடை, சொற்கள் முதலானவை பிற்காலத்தைச் சார்ந்தவையாதலால் இதன் பதிப்பு பிற்காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும் எனலாம். பாலஸ்தீனாவில் அரமேயம் மக்கள் மொழியாக நிலவி வந்ததொரு காலத்தில், அதாவது, கி.மு. ஐந்தாம், நான்காம் நூற்றாண்டுகளில், இந் நூல் எழுந்திருக்கவேண்டும்.

Eyl. C. Davis. B.min, Bed.

புலம்பல்: இது ஐந்து அதிகாரங்களைக் கொண்ட ஒரு சிறிய நூல். இஸ்ரயேல் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைக் குறித்து - குறிப்பாக, பாபிலோனியரால் எருசலேமுக்கு ஏற்பட்ட அழிவைக் குறித்த புலம்பல் நூல் இது. அதி. 1,2,3,4 அகர வரிசை முறையில் ஒரே தாளத்திற்கிசைய (புலம்பலின் தாளம் 3+2) அமைக்கப்பட்டுள்ளது. அதி. 5 அகர வரிசை முறையில் அமைக்கப்படவில்லையாயினும், எபிரேய எழுத்துக்களின் எண்ணிக்கையை ஒத்த வரிகள் அதில் காணக் கிடக்கின்றன.

2 குறி. 35:25இன் ஆதாரத்தில் இது எரேமியாவால் எழுதப்பட்டது' என்பாருளர். எரேமியாவின் சிந்தையை ஒத்த சில பகுதிகள் இதனுள் காணப்பட்டாலும், இது முழுவதும் எரேமியாவினிடமிருந்து வந்தது என்பதற்கில்லை. எரேமியாவின் சிந்தைக்கு மாறுபட்ட கருத்துக்களும் இங்குக் காணக் கிடக்கின்றன. எருசலேமின் அழிவை (கி.மு. 587) அடுத்ததோர் காலத்தில் இது எழுந்திருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது.

தானியேல்: மறைபொருள் வெளிப்பாடு என்னும் கட்டுரையின் கீழ்க் காண்க.

புனித ஏடுகளின் நூல்கள், இலக்கியம், கருத்து ஆகியவை இன்று இந்திய சமய, சமயச் சார்பற்ற இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன.

துணை நின்ற நூல்கள்

1. Frost, S.B., *Old Testament Apocalyptic*, The Epworth Press, New York: 1932.
2. Rankin, O.S., *Israel's Wisdom Literature*, T. & T. Clark, Edinburg, 1936.
3. Robinson, T.H., *The Poetry of the Old Testament*, Duckworth, London, 1947.
4. Rowley, H.H., *The Relevance of Apocalyptic*, Lutterworth Press, 1947.
5. Anderson, G.W., *A Critical Introduction to the Old Testament*, Gerald Duckworth and Co. Ltd., London: 1960.
6. இராபின்சன், ஞான. பழைய ஏற்பாட்டு அறிமுகம், பகுதி3, கிறிஸ்தவ இறையியல் இலக்கிய மன்றம், சென்னை 3, 1966.
7. S. Mounichel, *The Psalms in Israel's Worship*, Blackwell, 1982.
8. C.V. Camp, *Wisdom and the Feminine in the Book of Proverbs*, Almoud, 1985.
9. J.H. Eaton, *Job*, JSOT, 1987.
10. G. Ogden, *Qoheleth*, JSOT, 1987.
11. M. Noth, *The Chronocler History*, JSOT, 1985.

18

மறைபொருள் வெளிப்பாடு

ஞான இராபின்சன்

ப.ஏ.இல் மறைபொருள் வெளிப்பாட்டு நூல் என்று சொல்லத்தக்க நூல் தானியேல் மட்டுமேயாகும். வேறு, யோவேல், எசா. 24-27; எசே. 38,39; செக். 9-11 ஆகிய பல பகுதிகள் மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியக் கூறுகளைக் கொண்டிருந்தாலும், இவை இறைவாக்கு காலத்திற்கும் மறைபொருள் வெளிப்பாட்டுக் காலத்திற்கும் இடைப்பட்டதொரு மாறுதற்காலத்தை (Transitional period) குறிப்பனவாகும். தானியேல் மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியத்தின் முதல் நூல் என்று கருதப்படுகின்றது. பிற மறைபொருள் வெளிப்பாட்டு நூல்கள் யாவும் ப.ஏ.இற்கு வெளியே தள்ளுபடி நூல்களில் காணப்படுகின்றன. (1 ஏனோக்கு அல்லது ஏனோக்கின் எத்தியோப்பிய நூல், யுபிலியின் நூல், மூதாதையர் பன்னிருவர் நூல், சிபிலைன் உரைகள், மோசேயின் விண்ணிற்கேறல், 2 ஏனோக்கு, 4 எசுறா அல்லது 2 எஸ்திராஸ், 2 பாருக்கு). பு.ஏ.இல் யோவானின் திருக்காட்சி நூல் ஆகியவை இந்த மறைபொருள் வெளிப்பாட்டிலக்கிய வகையைச் சேர்ந்தனவாகும்.

1. மறைபொருள் வெளிப்பாடு என்றால் என்ன?

வெளிப்பாடு என்ற சொல் அப்போகாலூப்சிஸ் (apokalupsis) என்னும் கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். இது கடவுள் சமுகத்தின் மறைபொருள்கள் வெளிப்படுத்தப்படுதல் என்பதைக் குறிக்கும். இதன்படி கடவுளுடைய வெளிப்படுத்தல் தொடர்ச்சியாக, ஒன்று இன்னொன்றுக்கு வழி நடத்துவதாக இருத்தல் வேண்டும்.

இப்படியாக விவிலிய வெளிப்பாட்டு வரலாற்றில் இறைவாக்கு மூலம் கடவுளுடைய வெளிப்படுத்தல் நின்று போயிற்று என்று நம்பப்பட்ட காலத்தில், இறைவாக்கின் இடத்தை எடுத்து நின்ற ஒன்றுதான் மறைபொருள் வெளிப்பாடு. இறைவாக்கின் மூலமாகக் கிடைத்து, இப்பொழுது நின்று போனதாக எண்ணப்பட்ட இறை வெளிப்பாட்டை மக்களுக்கு அளிப்பதாக எழுந்த இலக்கியமே மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியம். இது பு.ஏ. வெளிப் படுத்தலுக்கு முன்னோடியாகக் காணப்பட்டது எனலாம்.

2. மறைபொருள் வெளிப்பாடு எழுந்தது எப்படி?

ப.ஏ. அறிஞர்களில் பலர் இறைவாக்கு மரபு மலாக்கி இறைவாக்கினருடன் நின்று விட்டதென்றும், அதன்பின் ப.ஏ.க்கும் பு.ஏ.க்குமிடையில் ஓர் அமைதி நிலவியதென்றும், பு.ஏ. வெளிப்படுத்தல் நேரடியாகப் ப.ஏ. இறைவாக்கு வெளிப் படுத்தலின் தொடர்ச்சியாக எழுந்தது என்றும் கொள்வர். மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியத்தின் இடத்தை அன்னார் உணராது இதனைப் புறக்கணித்து விடுவர். இப்படியாக, A.ஹார்னாக் (Harnack) என்னும் அறிஞர், இந்த மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியம் நாம் யூதர்களிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஒரு கெட்ட உரிமைப்பேறு என்பதாகக் கொள்கின்றார். போர்ட்டர் (Porter) என்னும் இன்னோர் அறிஞர் இறைவாக்கும், மறைபொருள் வெளிப்பாடும் ஒன்றிற்கொன்று எதிரிடையான இரண்டு கருத்துக்களை அல்லது இரண்டு சமயக் கோட்பாடுகளைத் தருகின்றன என்கிறார்.

ஆனால், இன்றைய ப.ஏ. ஆராய்ச்சி இறைவாக்கும், மறைபொருள் வெளிப்பாடும் ஒன்றிற்கொன்று முரணானவையல்ல; மாறாக, இரண்டும் ஒன்றிற்கொன்று அரண் செய்து நிற்கின்றன என்பதை வலியுறுத்தியுள்ளது. இவை இரண்டையும் ஒருதலைசாராத நிலையில் ஆராயும் எவரும் இவை இரண்டிற்கும் பொதுவானதோர் அடித்தளமும் நோக்கமும் காணப்படுதலைத் தவறாது உணர்வர்.

இறை வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்வதில் காட்சிகளும், திருக்காட்சிகளும் பொதுவான வழிகளாகக் காணப்படுகின்றன. மறைபொருள் வெளிப்பாட்டார் இறைவாக்கினரின் அடித்தளத்தின் மேலேயே தங்கள் பொறுப்பைச் செய்து நிறைவேற்றினர் எனலாம். நிறைவேறாத முன்னாள் இறை வாக்குகளை எடுத்து (எ.கா. எரே. 25:11,12; தானி. 9:2), அதன்மேல் தங்களுக்குக் கிடைத்த வெளிப்படுத்தல்களைக் கட்டியெழுப்பி வந்தனர்.

H.H. றோலி (Rowley) என்னும் அறிஞர் மறைபொருள் வெளிப்பாடு இறைவாக்கின் குழந்தை என்றார். கூறி அறிவிக்கப்பட்ட, அல்லது எழுதப்பட்ட, கடவுளுடைய விருப்பத்தை விளக்கும் உண்மைகள் இறைவாக்கு எனப்பட்டன. இது கி.மு. நான்காம் நூற்றாண்டு வரை இறை அதிகாரமுடைய வார்த்தையாக மக்கள் நடுவே நல்ல வரவேற்புப் பெற்று வந்தது. கி.மு. நான்காம் நூற்றாண்டளவில் திருச்சட்டம் (Torah) முக்கியத்துவப்படுத்தப்பட்டது. அக்காலமளவும் எழுந்த இறைவாக்குகள் யாவும் இந்த திருச்சட்டத்தை விளக்கி நிற்பன என்றளவில் அவையும் அதிகாரம் பெற்றன. ஆனால் அத்தகைய இறைவாக்கு வெளிப்படுத்தல்கள் எதுவும் எசுறாவின் காலத்துடன் (திருச்சட்டம் முக்கியத்துவமடைந்த காலம்) நின்று விட்டன என்று நம்பப்பட்டது. அதற்குப்பின் கடவுளுடைய புதிய வெளிப்படுத்தல்கள் எதுவும் கிடையாது

என்று கருதப்பட்டது. இந்நிலையில் யாராவது தாம் இறைவாக்கினர் என்று கூறிமுன்வந்தால்அவருடைய சொற்கள் மறுக்கப்பட்டன. இச் சூழ்நிலையைச் செக்காரியா நூல் நன்றாக விளக்குகின்றது.

எவனாவது மீண்டும் இறைவாக்கினனாகத் தோன்றுவானாகில் அவனைப் பெற்றெடுத்த தந்தையும் தாயும் ஆண்டவரின் திருப்பெயரால் பொய் பேசுவதால் நீ உயிர் வாழக்கூடாது என்று அவனிடம் சொல்லுவார்கள். அவன் இறைவாக்கு உரைக்கும்போதே அவனைப் பெற்றெடுத்த தாய் தந்தையர் அவனைக் குத்திக்கொன்று போடுவார்கள் அந்நாளில் இறைவாக்கினருள் ஒவ்வொருவரும் இறைவாக்கு உரைக்கும்போது தான் கண்ட காட்சியைக் குறித்து வெட்கமடைவான் . . . (செக். 13,3,4).

(திருப். 74:9; 1 மக். 4:46; 9:27; 14:41 காண்க.)

யூத மரபின்படி எசுறாவின் காலத்திற்குப்பின் இறைவாக்கு வரம் விண்ணிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இத்தகையச் சூழ்நிலையில் கடவுளுடைய விருப்பத்தை மக்களுக்கு அறிவிப்பதெப்படி? இறைவாக்கு என்ற பெயரில் வாய்திறந்தால் பேசுகிறவருக்கு இன்னல் வருவது மட்டுமின்றி, மக்களும் காதைத் திருப்பிக்கொள்கின்றனரே! இது இந்த இடைக்கால அடியார் உள்ளங்களில் எழுந்ததொரு பிரச்சனையாகும்.

இப் பிரச்சனைகளுக்கு விடையாக எழுந்ததே மறைபொருள் வெளிப்பாட்டிலக்கிய நடை. புதிதாக எழும் இறைவாக்கினருக்குத்தான் மக்களிடையில் இடமில்லை; ஆனால் கடந்த கால அடியார், இறைவாக்கினர் ஆகியோரைப்பற்றிக் கேட்க, அன்னார் கூறிய உண்மைகளை அறிய, மக்கள் எப்பொழுதும் ஆவலாகவே இருந்தனர். கடவுளுடைய விருப்பத்தை மக்களுக்கு வெளிப்படுத்த விரும்பிய இந்த இடைக்கால அடியார் இதனை உணர்ந்தனர். தாங்கள் கடவுளுடைய விருப்பமாக எடுத்துக்கூற விரும்பிய ஆலோசனைகளைக் கடந்தகால அடியார், இறைவாக்கினர் ஆகியோர் பெயரால், அன்னார் கூறுகிற விதமாக வெளிப்படுத்தலாயினர். கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்குப்பின் எழுந்த வெளிப்பாட்டிலக்கியங்கள் யாவும் உண்மை ஆசிரியர் பெயரையேந்தி நில்லாமல், கடந்தகால இறைவாக்கினர், அடியார் பெயர்களுக்குள் மறைந்து கிடப்பதற்குக் காரணம் இதுவேயாகும். யோவேல், எசா. 24-27., எசே. 38,39, செக். 9- 14 ஆகிய பகுதிகள் இந்த மாறுதல் காலத்தைச் சார்ந்தனவாகும்.

3. மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியத்தின் தன்மைகள் எவை?

(அ) புனைப்பெயர் கொள்ளல் (Pseudonymity)

இந்த மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியங்கள் புனைபெயர்களில் காணப்படுவதற்கான வேறுபல விளக்கங்களும் தரப்படுகின்றன.

H.H.றோலி இது மக்களை ஏமாற்றுவதற்காக வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட ஒரு முறையல்ல வென்றும் இந்தப் புனைப்பெயர் முறை நூலின் தோற்றத்திலேயே ஏற்பட்டதாகும் என்றும் குறிப்பிடுகின்றார். தானியேல் நூலை எடுத்துக்கொள்கையில், றோலியின் கூற்றின்படி, ஆசிரியர் முதலில் தானியேல் என்னும் கதாநாயகனைப் படைத்து, முதல் ஆறு அதிகாரங்களிலும் காணப்படுகிற கதைகளை எழுதினார். அக்கதைகளைப் படித்த வாசகர்கள் ஆசிரியரைக் கதாநாயகனான தானியேலுடன் ஒப்பிட்டுக் கண்டனர். ஆசிரியர் பின்னால், தாம் எழுதின மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியப் பகுதிகளையும், தாம் ஏற்கெனவே படைத்துள்ள கதாநாயகனின் பெயரில் வெளியிட்டார். இப்படியாக வாசகர்கள் மனத்தில் தானியேல் நூலின் ஆசிரியர் தானியேலே என்னும் எண்ணம் பதிந்துவிட்டது. பிற்கால மறைபொருள் வெளிப்பாட்டிலக்கிய ஆசிரியர்கள் தானியேல் நூலைப் பின்பற்றி இது மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியத்தின் தன்மைபோலும் என்று கருதித் தங்கள் நூல்களையும் புனைப்பெயர்களால் வெளியிட்டனர் என்பார். றோலியின் இந்த விளக்கம் தானியேல் நூலைப் பொறுத்தமட்டில் ஒருவேளை பொருத்தமாகக் காணப்படலாம். ஆனால் இப்படி இந் நூலைப் பின்பற்றி பிற்கால ஆசிரியர்கள் புனைப்பெயரில் எழுதத் துவங்கினர் என்ற கூற்றிற்குப் போதுமான சான்றுகள் இல்லை.

D.S. ரசல் இந்தத் தன்மைக்கு இஸ்ரயேலருடைய கூட்டு ஆள்த்தன்மை நம்பிக்கையில் (Corporate personality) விளக்கம் காண முயலுகிறார். இந் நம்பிக்கையின்படி ஒருவருடைய ஆள்த்தன்மை பரந்து விரிந்து (extension of personality) செயல்படுவதாக எண்ணப்பட்டது. இப்படியாக, ஒரு கூட்டத்தின் ஆள்த்தன்மை முழுவதையும் ஒருவர் குறிப்பிட்டு நிற்கக்கூடும். இதன்படி, மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியத்தார் தாங்கள் தங்கள் சமூகத்தின் சார்பாளரென்றும், சமூகத்தின் முன்னாள அடியார்கள், தலைவர்கள் ஆகியோரின் தொடர்ச்சி என்றும் நம்பியதால், தாங்கள் கூற விரும்பின உண்மைகளை முன்னாள் அடியார்கள் பெயரால் வெளியிட்டனர் என்பர். ஒருவரது பெயர், அவரது ஆள்த்தன்மை முழுவதையும் எடுத்துக்காட்டும் என்பது இஸ்ரயேலர் நம்பிக்கை. அப்படியே, ஒரு சமூகத்தின் சார்பாளராக நிற்கும் ஒருவரது பெயர், அந்தச் சமூகத்தின் ஆள்த்தன்மை முழுவதையும் குறிப்பிடும். இப்படியாக, பெயரென்பது ஒரு சமூகக் கருத்து (social concept) என்றும் சுட்டிக்காட்டியுள்ளார் ரசல்.

ரசலினுடைய இந்த விளக்கம் அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. மேலே கூறியது உண்மையானால் முற்கால ஆசிரியர்கள் ஏன் இந்த முறையைப் பின்பற்றவில்லை? ப.ஏ. வெளிப்படுத்தலில் திடீரென்று இப்படியொரு மாற்றம் ஏற்படுவதேன்? பிற்கால மறைபொருள் வெளிப்பாட்டு நூல்களில் (எ.கா. யோவானின் திருக்காட்சி நூல்) இம்முறை காணப்படாதது ஏன்?

சமயச் சூழ்நிலையில் கட்டாயப்படுத்தப்பட்டு எழுந்ததோர் இலக்கியமுறை இதுவென்று நாம் முற்பகுதியில் கண்ட விளக்கத்தைத் தந்தவர் R.H.சார்லஸ் (Charles) என்னும் அறிஞர். பிற விளக்கங்கள் யாவற்றிலும் இதுவே பொருத்தமானதாகத் தெரிகிறது. கி.மு. நான்காம் நூற்றாண்டிற்குப்பின் பு.ஏ.காலமளவும் எழுந்த வெளிப்பாட்டிலக்கியங்கள் மட்டுமே புனைப்பெயர்களில் காணப்படுகின்றன என்ற உண்மை இந்தக் கருத்தை வலியுறுத்தும். இக்காலத்தில் ஏற்பட்ட சமயச் சூழ்நிலையே ஆசிரியர்கள் தங்கள் நூல்களைப் புனைபெயரில் வெளியிடக் காரணமாக இருந்தது. பு.ஏ. காலத்திற்குப்பின் சமயச் சூழ்நிலை மாறியது. ஆசிரியர்கள் இத்தகைய நூல்களைப் புனைப் பெயரில் வெளியிடத் தேவையிருக்கவில்லை; ஆதலால் தங்கள்

பெயராலேயே வெளியிட்டனர் (எ.கா. யோவானின் திருக் காட்சி நூல்).

(ஆ) மறைபொருள்கள்

வெளிப்பாட்டிலக்கியங்களின் பொதுவானதொரு தன்மை மறைவான இரகசியங்கள் வெளிப்படுத்தப்படுதலாகும். ஆசிரியர்கள் தங்கள் நூலின் கதாநாயகனுக்கு கடவுள் பல மறைபொருள்களை வெளிப்படுத்தியுள்ளதாக நூலை அமைக்கின்றனர். காட்சிகள், கனவுகள் மூலமாக விண்ணுலகத்தைக் குறித்தும், கடவுளுடைய சமுகத்து நிகழ்ச்சிகளைக் குறித்தும் பல உண்மைகளை இந்நூல்கள் வெளிப்படுத்துகின்றன. இந்த மறைபொருள் உண்மைகள் நீதியருக்குரிய நூல்களில் வரைந்து வைக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய மறைபொருள் வெளிப்பாடுகளைச் சில கட்டங்களில் கதாநாயகன் ஆவிக்குள்ளான நிலையில் பெறுவதுண்டு (1 ஏனோக்கு 71:1; திகா. 11:12); சில கட்டங்களில் இருக்கிற நிலையிலேயே அத்தகைய அனுபவங்களை அடைய அவன் அழைத்துச் செல்லப்படுவான் (1 ஏனோக்கு 39:3,4); இப்படி அழைத்துச் செல்லப்பட்டவர்களுக்குப் பரம இரகசியங்கள் காட்டப்பட்டதுண்டு.

மேலும், இந்த மறைபொருள்களை முத்திரையிடுவதும் இந்த இலக்கியத்தின் சிறப்பானக் கூறுகளில் ஒன்றாகும். தானி. 12:4இல் தானியேலாகிய நீயோ முடிவு கால மட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து இந்த நூலை முத்திரைபோடு என்று கூறப்படுவதாகக் காணலாம். சட்டங்களை உறுதிப்படுத்தும் வகையில் அவற்றை முத்திரையிடுவது முற்கால வழக்கம் (1 அர. 21:8; எரே. 32:10,11). இத்தகைய வழக்கத்திலிருந்தே இந்தக் கருத்து எழுந்திருக்கவேண்டும். மறைபொருள் இரகசியத் தன்மையை மிகைப்படுத்தி அதை அறிவதற்கான மக்களின் ஆர்வத்தை உச்ச நிலைக்குக் கொண்டுவருவதே ஆசிரியர்களின் நோக்கமாயிருத்தல் வேண்டும். இதன் மூலமாக, இக்காலத்தில் கூறப்படும் உண்மைகள், இன்று நேற்றல்ல, முற்காலத்திலேயே இறைவாக்கினர். அடியார்கள் ஆகியோருக்கு வெளிப்படுத்தப்பட்டு, இக்கால மக்களுக்கென்று முத்திரையிடப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்தன. காலம் நிறைவேறியபோது, அதாவது வாசகர்கள் நன்மைக்காக இக்காலத்தில், அவை வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்று மக்கள் மனத்தில் பதியச் செய்வதே ஆசிரியர்களின் நோக்கமாகும்.

(இ) குறியீட்டுருவான மொழிநடை (Symbolic Language)

மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியங்கள் பெரும்பாலும் குறியீட்டுருவான உருவகங்கள் நிறைந்தனவாகக் காணப்படுகின்றன. இத்தகைய குறியீட்டுருவான உருவகங்களில் சில ப.ஏ.இலிருந்தே எடுக்கப்பட்டவை. ஆனால் பெரும்பான்மையும் பழங்காலப் புராணங்களிலிருந்தெழுந்தவை. சில எடுத்துக்காட்டுகள் ஆசிரியருடைய சொந்தப் படைப்பாகவுமிருக்கலாம்.

இவற்றில் முக்கியமானது பழங்கால பாபிலோனியப் புராணத்தைத் தழுவிய படைப்பாளர் - பெருங்கடலாகிய வேதாளம் ஆகியோருக்கிடையில் ஏற்படும் சண்டை. விவிலியத்தில் படைப்பாளரின் பகைவனாகிய இந்தப் பெருங்கடல் வேதாளம் (எசா. 5:9; திருப். 91:3; திருப். 18:3,4,7,9,13). விவியாதான் (யோபு. 41:1; திருப். 74:14; 104:26; எசா. 27:1); இராகாபு (திருப். 89:10; எசா. 51:9). பாம்பு (தொட. 3:1; எசா. 27:1; திருப். 18:9; 20:2 என்று பல வகைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலகத் தோற்றத்திற்கு முன்னுள்ள கடல் எபிரேய மொழியில் தெகோம் (Tehom) எனப்பட்டது (தொட.1:2). இச்சொல் பாபிலோனியப் புராணத்தின்படி உலகத் தோற்றத்திற்கு முன் காணப்பட்ட வேதாளமாகியப் பெருங்கடல் தியாமத்தைக் (Tiamat) குறிப்பதாகக் கருதப்படுவதுண்டு.

இது தவிர, மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியங்களில் விலங்கு உருவங்கள் சாதாரணமாகப் பயன்படுத்தப்படுவதுண்டு. இவை மனிதர்களை அல்லது நாடுகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன (தானி. 7:8). ப.ஏ.இல், காளை கடவுளின் சமுகத்தையும் வல்லமையையும் உணர்த்தும் ஓர் உருவகமாகக் கொள்ளப்பட்டுள்ளதாகக் காண்கிறோம் (விடு. 32:4மு; 1 அர. 12:26மு.) 1 ஏனோ. 85;86இல் இந்த உருவகம் ஆதாம் முதல் ஈசாக்கு வரையுள்ள மூதாதையர் அனைவரையும் குறித்து நிற்கின்றது. ஓர் இடத்தில் இது மெசியாவையும் அவர் அரசின் புதல்வரையும் குறிப்பதாகக் காணப்படுகின்றது (1 ஏனோ. 90:37,38). மூதாதையர்களுக்குப் பின்வரும் நீதியரின் வழிமரபினர் சில இடங்களில் செம்மறியாடுகள் என்று குறிக்கப்படுகின்றனர். பொதுவாகக் காட்டு விலங்குகள், பறவைகள் ஆகியவை வேற்று நாட்டாரைக் குறிப்பனவாகக் கொள்ளப்பட்டன. 1 ஏனோக்கு 85-90இல் நல்ல வான தூதுவர்கள் மனிதர்களாகவும், விழுந்துபோன வான தூதுவர்கள் விண்மீன்களாகவும் குறிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சிறப்பான எண்களும் மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியங்களில் பயன்படுத்தப்படுவதாகக் காணலாம். குறிப்பாக 2,4,7,10,12 ஆகிய எண்கள் அல்லது இவற்றின் பெருக்கங்கள் (Multiples) அடிக்கடிப் பயன்படுத்தப்படுவதாகக் காணலாம். இவற்றில் பலவும் ப.ஏ. சமயத்தில் சிறப்பான பொருளுடன் தொடர்பு கொண்டவை. சில பாபிலோனிய, பாரசீக சமய இலக்கியங்களில் காணப்படுகின்றன. இந்த இடைக்காலத்தில் ஏழு என்ற எண் முக்கியமானதாகக் காணப்படுகிறது. இது முழுமையைக் குறிக்கும் ஓர் எண்ணாகக் கருதப்பட்டதுபோலும்.

4. மறைபொருள் வெளிப்பாட்டிலக்கிய இறையியல் கூறுகள்

(அ) வரலாற்று நோக்கு

மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியம் தரும் வரலாறுகள் யாவும் நாம் இன்று கொள்கிற பொருளில் சரியான வரலாறுகள் அல்ல. இவற்றின் ஆசிரியர்களின் வரலாற்று அறிவும் அரைகுறையானதாகக் காணப்படுகிறது. ஆயினும் அந்த இலக்கியங்கள் தரும் வரலாறுகள் அனைத்தையும் ஆராயுமிடத்து, இவற்றின் ஆசிரியர்களிடையே காணப்பட்ட பொதுவானதோர் வரலாற்று நோக்கு தெரியவரும்.

இங்கு வரலாறு பல யுகங்களாகப் பகுக்கப்பட்டிருத்தலைக் காணலாம். நான்கு, ஏழு, பத்து, பன்னிரண்டு என்ற பாகுபாடுகள் சாதாரணமானவை. மேலும் இந்த யுகங்கள் முன்னரே தீர்மானிக்கப்பட்டவை என்ற கருத்தும் காணப்படுகின்றது. இத்தகைய கருத்து, சரியானதன்று என்பதைப்

பிற்கால வரலாறு மெய்ப்பித்திருக்கலாம். மறைபொருள் வெளிப்பாட்டிலக்கிய ஆசிரியர்கள் எதிர்பார்த்தபடி இந்தக் குறிப்பிட்ட யுகங்களுக்குப் பின் வரலாற்றின் முடிவு வர வில்லை. அதற்குப் பின்னும் பல வல்லரசுகள் எழும்பின, பல வல்லரசுகள் மறைந்தன. ஆனால் இங்கு மறைபொருள் வெளிப்பாட்டு ஆசிரியர்கள் தரும் நிலையான செய்தி என்னவெனில் கடவுள் வரலாற்றை ஆளுகிறார் என்பது. கடவுள் ஒரு நோக்கத்துடன் என்றும் வரலாற்றில் செயலாற்றுகிறார் என்று அன்னார் உறுதியாக நம்பினர். இப்படியாக தானியேல் நூல் ஆக்கியோர், *காலங்களையும் நேரங்களையும் மாற்றுகிறவர் அவரே; அவரே அரசர்களைத் தள்ளி அரசர்களை ஏற்படுத்துகிறார்* என்கிறார் (தானி. 2: 21). கடவுள் தம் நோக்கத்திற்கு நேராக வரலாற்றை வழிநடத்துகிறார் என்று நூல் ஆசிரியர்கள் உறுதியாக நம்பினர். இது வரலாற்றைக் குறித்த பு.ஏ. நம்பிக்கைக்கு வழி நடத்துகிறதெனலாம். கடவுள் இயேசு கிறிஸ்துவின் வழியாக வரலாற்றில் தம்முடைய மாண்புமிகு நோக்கம் நிறைவேற செயல்பட்டார் என்பதே பு.ஏ. ஈடேற்ற நம்பிக்கை.

கடவுள் வரலாற்றில் செயல்படுகிறார் என்பது ஏற்கெனவே இறைவாக்கினர் நம்பியதும் கூறி அறிவித்ததுமான உண்மைதான். வரலாற்றைத் தொடங்கி அதில் என்றென்றும் கடவுள் செயல்படுகிறார் என்பது இறைவாக்கினர் நம்பிக்கை. ஆனால் மறைபொருள் வெளிப்பாட்டார் கடவுளுடைய வல்லமையான குறுக்கிடலைக் கடைசிக் காலத்திற்கென ஒதுக்கி வைத்தனர். இந்த மாற்றம் ஒருவேளை நிகழ்காலத்தில் நீதியர் துன்புறும் நிலையால் ஏற்பட்டிருக்கலாம். கடவுள் என்றென்றும் வரலாற்றில் செயல்படுகிறார் என்றால் நீதியர்கள் ஏன் துன்புற வேண்டும்? இந்த இடைக்காலத்தில் கடவுள் உலகத்தை அதன் போக்கில் விடுகிறார்; அதனைத் தம் கண்ணோட்டத்திற்குள்ளேயே வைத்திருக்கிறார்; ஆனால் முடிவில் அவர் தம் முழு வல்லமையுடன் வரலாற்றில் குறுக்கிட்டுத் தம் நோக்கத்தை நிறைவேறச் செய்வார். மறைபொருள் வெளிப்பாட்டார் கடவுள் எல்லாக் காலத்திலும் செயல்படுகிறார் என்னும் இறைவாக்கினர் போதனையைப் பொதுவாக ஒப்புக்கொண்டனர்; ஆனால் கடவுளின் வல்லமையான குறுக்கிடலைக் கடைசிக் காலத்திற்கென்று வைத்தனர். இவர்கள் கடவுள் இந்த இடைக்காலத்தில் ஆற்றும் செயல்களையல்ல, மனித ஈடுபாடு எதுவுமின்றி முடிவு காலத்தில் அவர் தமக்கே உரித்தான வல்லமையுடன் ஆற்றும் அருஞ்செயலையே எதிர்பார்த்தனர். இந்த இடைக்கால நிகழ்ச்சிகள் யாவும் அந்தக் கடைசிக்கால மாட்சியின் நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டுவனவாக, அதற்கு வழி நடத்துவனவாக அவர்கள் கொண்டனர்.

மறைபொருள் வெளிப்பாட்டார் வரலாற்று நோக்கின் இன்னொரு கூறு. இந்தக் கடைசிக்கால மாட்சிக்குமுன் ஒரு கொடிய துன்பகாலம் உண்டு என்னும் நம்பிக்கையாகும். இந்தத் துன்பகாலத்தோடு கொடிய வல்லமை ஒன்று பெலியேல், சாத்தான், அசாவேல் என்னும் புராணப் படைப்புகளுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. இந்தக் கொடியது தன்னை கடவுளுக்குச் சமமாகப் பாவித்து அவர் திருவுளத்தை எதிர்த்து நிற்கும்; கடவுளின் அடியார்களைக் கொடுமைப்படுத்தும் (இந்தக் கொடிய உருவம் பற்றிய நம்பிக்கை, அந்தியோகஸ் எப்பிபானஸ், நேரோ போன்ற கொடிய மன்னர்களைப் பற்றிய அறிவினால் ஆசிரியர் உள்ளங்களில் தூண்டப் பட்டிருக்கலாம்).

இதனால், இங்கு இரு பொருள் நம்பிக்கை (Dualism) காணப்படுவதாகக் கொள்ளவேண்டியதில்லை. நாம் தீமையை அறிந்திருப்பதால்தான் கடவுள் நல்லவர் என்கிறோம். நன்மைக்கு எதிரான தீமையும், அதைச் செய்யத் தூண்டும் தீய ஆற்றலும் மனிதரில் காணப்படுகின்றது என்பதை நாம் அறிவோம். இப்படித் தனித்தனி நபர்களில் காணப்படும் தீய ஆற்றல்களை உலக அளவில் நோக்கும்போது உலகில் பெரியதொரு தீய ஆற்றல் காணப்படுகிறதென்று நாம் கொள்ளக்கூடும். இத் தீய ஆற்றலையே இங்கு ஆசிரியர்கள் ஆளியல்பு கொடுத்துக் கற்பிக்கின்றனர் எனல் பொருந்தும். மனிதருடைய பாவத் தன்மையின் ஆற்றலின்றி இத்தீய ஆற்றலுக்குத் தனியான இயல்பு இல்லை. மனிதர் பாவத்தைத் தொடர்ந்து செய்ய இந்தத் தீய ஆற்றல் பலப்படுகிறது. மனிதர் தம் பாவத்தைவிட்டு விலகும்போது இந்த ஆற்றல் அழிகிறது. இதுவே சாத்தானைப்பற்றிய பு.ஏ.நம்பிக்கையுமாகும்.

(ஆ) மெசியா - மானிட மகன்

ப.ஏ.இல் வருங்கால அரசைப்பற்றியும், அந்த அரசில் ஆளுகை செய்யும் சிறப்பு வாய்ந்ததோர் தலைவரைப் பற்றியும் பல கருத்துகள் காணப்படுகின்றன. ஆனால் திருப்பாடல்களில் சில பகுதிகள் தவிர வேறு எங்கும் இந்த இறுதி காலத் தலைவர் **மெசியா** என்பவரே என்று குறிப்பிடவில்லை. மெசியாவைப்பற்றிக் குறிப்பிடப்படும் இடங்களில் இந்த மெசியா இறுதி காலத் தலைவராகக் குறிப்பிடப்படவில்லை; இவ்விடங்களில் மெசியா என்பது உண்மையானதொரு வரலாற்று நபரையே குறிப்பிட்டு நிற்பதாகக் காணலாம். பெரும்பாலும் தாவிதின் அரியணையில் அமரத்தக்கதான ஒரு நபரே குறிப்பிடப்படுவதாகக் காணலாம். ஒருசில இடங்களில் இது அருள்பொழிவு செய்யப்பட்ட இறைவாக்கினர்களைக் குறிப்பதாகக் காணலாம் (1 அர. 19:16ஆ; திருப். 105:15). ஆனால், சாதாரணமாக இச் சொல் அரசர்களை திருப்பொழிவு செய்வதையே குறிப்பிடுகின்றது (1 சாமு. 10:1; 16:13). இத்துடன் மெசியாவின் அரசு தர்விதுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியின் (2 சாமு. 7:14-16) நிறைவேறுதலாகக் கொள்ளப்பட்டது (எசா. 11.1மு; மீக். 5:2மு.).

இந்தத் தேசிய மெசியாவைப்பற்றிய நம்பிக்கையே சிறையிருப்பின் காலத்தில் அதிக வளர்ச்சியடைந்தது. யூதர்களுக்குள் இந்த மெசியா பிறக்கும் குலத்தைப் பற்றிய சந்தேகங்கள் இருந்துவந்ததைக் காணலாம். சில வட்டாரங்களில் இவர் இலேவி குலத்திலிருந்து வருவாரென எதிர்பார்க்கப்பட்டார் (பன்னிரு மூதாதையரின் நூல்களில் ரூபனின் நூல் 6:7-12; இலேவியின் நூல் 8:14). இந் நம்பிக்கை மக்கபேய தலைவர்கள் இலேவி குலத்திலிருந்து எழுந்ததினால் உண்டாகியிருக்கலாம். மெசியா யூதா குலத்துடனும் தொடர்பு படுத்தப்பட்டார் (யூதாவின் நூல் 24:5,6). பின்னால் யோவான் கிர்க்கானஸ் என்னும் மக்கபேயர் தலைவர் மக்களுடைய எதிர்பார்ப்புக்கு மாறாகப் போனபின் இலேவி குல மெசியாவைப் பற்றிய நம்பிக்கை குறைந்தது. யூதா குல மெசியாவைப்பற்றிய நம்பிக்கை வளர்ந்தது (சாலமோனின் பாடல்கள் 17:23). இந்தக் காலத்திலும் மெசியா ஒரு மானிடப் பிறவியாகவே கொள்ளப்பட்டு வந்தார் (சாலமோனின் பாடல்கள் 17:41,42).

மானிட மகன் என்ற தொடர் கம்மூரபியின் சட்டம் என்னும் பாபிலோனிய இலக்கியத்தில் முதன் முதலாகக் காணப்படுவதாகக் கருதப்படுகிறது. இங்கு இத்தொடர் மனிதர்

என்ற பொருளிலேயே பயன்படுத்தப்படுகிறது. இதே பொருளில் இத்தொடர் எசேக்கியேல் நூலிலும் பல திருப்பாடல்களிலும் காணப்படுகிறது.

ஆனால், இறுதியில் நம்பிக்கையுடன் தொடர்புடைய ஒரு தொடராக மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியங்களில் இத்தொடர் அடிக்கடிப் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். இக்கருத்தில் முதன் முதலாக இத்தொடர் தானி. 7:13இல் காணப்படுகிறது. **மானிட மகன் சாயலான ஒருவர் வானத்து மேகங்களோடு வந்தார்.** இவர் நீண்ட ஆயுளுள்ளவரிடம் வந்ததாகக் குறிக்கப்படுகின்றது. இங்கு மானிட மகன் யூதர்கள் எதிர்பார்த்துவந்த தேசியமெசியாவைக் குறிக்கவில்லை யென்பது தெரியவரும். 7:18இல் இவர் உன்னதருடைய புனிதர்களுக்கு நிகராகக் குறிப்பிடப்படுதலைக் காண்கிறோம். இங்கு இவர் இஸ்ரயேலரில் முதன்மையானவர்களின் குறியீட்டுருவாகக் காணப்படுகிறார் எனலாம் (symbol of the glorified).

இதற்கடுத்ததாக, இதனை 1 ஏனோக்கு 37-71இல் காண்கிறோம். இங்கு மானிட மகன் விண்ணுக்குரியவராகவும், என்றுமுள்ளவராகவும், மானிடத் தொடர்பேற்றவராகவும் கொள்ளப்படுகிறார் (48:3). இங்கு இவர் ஞானம், அறிவு, நீதி ஆகியவற்றில் சிறந்தவராகக் குறிக்கப்படுகிறார். நீதியுள்ள இவர் ஒருநாள் நீதியுள்ளவர்கள் கண்களில் வெளிப்படுவார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது (1 ஏனோக்கு 38:2). கடவுளுக்கேற்ற மாட்சியுடன் அரியணையில் அமர்த்தப்படுவார் (1 ஏனோக்கு 61:8). கடவுள் முன்னிலையில் விண், மண் ஆகியவற்றிலுள்ள யாவரையும் நியாயம் தீர்க்கும் நடுவராக நிற்பார் (1 ஏனோக்கு 68:8). இவருடைய வெளிப்பாடு அடியார்களுக்கு மீட்பாக அமையும், அன்னார் இவர் அரசில் பங்கடைவர். இத்தகைய கருத்துக்கள் 2 எஸ்திராஸ், சிபிலைன் உரைகள் ஆகிய நூல்களிலும் காணப்படுகின்றன. இந்த இலக்கியங்கள் யாவற்றிலும் இவரில் கடவுளுடைய இரகசியங்கள் மறைந்து நிற்பனவாகவும், இவர் வெளிப்படும்போது இந்த இரகசியங்கள் யாவும் வெளிப்படும் என்பதாகவும் காண்கிறோம்.

மானிட மகனைப் பற்றிய இந்தக் கருத்தின் தோற்றம் எதுவாக இருந்தபோதிலும் நாளடைவில் சிறிது சிறிதாக இது மெசியாவைப் பற்றிய கருத்துடன் இணைந்தது எனலாம். இந்த இணைப்பினை 2 எஸ்திராஸ் நூலில் காணலாம் (கி. பி. 90). இங்கு மானிட மகன், என்னால் திருப்பொழிவு செய்யப்பட்டவர் (மெசியா) அல்லது திருப்பொழிவு செய்யப்பட்ட என் மகன் என்று குறிப்பிடப்படுகிறார் (7:28,29). இவர் தாவிதின் மரபில் எழுகிறவராகவும் இங்குக் குறிக்கப்படுகிறார் (12:32).

இவ்வுலகத்திற்குரிய மெசியாவும், மறுமைக்குரிய மானிட மகனும் ஆகிய இக்கருத்துக்கள் இணைந்ததால் சில பிரச்சனைகள் கிளம்பியிருக்கக்கூடும்; இதன் விளைவாகவே **ஆயிரம் வருட ஆளுகை** சில நூல்களில் புகுத்தப்பட்டிருக்க வேண்டும். முதலில் ஏற்படும் ஒரு நீதித் தீர்ப்புக்குப் பின்னால் மெசியாவாகிய மானிட மகன் இவ்வுலகில் ஆயிரம் வருடங்கள் ஆளுகை செய்வார் (2 ஏனோக்கு 32; தி.கா. 20:4-7). இந்த இடைக்காலத்திற்குப்பின் பொதுவான நீதித் தீர்ப்பு ஏற்படும். இவ்வுலகம் அழிவுறும்; புதிய யுகமும், புதிய வானமும், புதிய உலகும் உண்டாகும். அப்பொழுது மெசியா ஆகிய மானிட மகன் என்றென்றும் ஆளுகை செய்வார்.

எப்படியும் கிறிஸ்துவின் காலமளவும் இந்தக் கருத்துக்கள் இரண்டும் முழுமையாக இணைக்கப்படவில்லை எனலாம். கிறிஸ்துவுக்கு முன் ஒரளவு இணைப்புப் பெற்றிருந்தாலும், கிறிஸ்துவில்தான் இவை முழுமையான இணைப்பு பெற்றன எனல் வேண்டும்.

(இ) மெசியாவின் அரசு

மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியத்தின்படி தனிப்பட்ட அளவிலும், நாட்டு அளவிலும் வாழ்க்கையின் நோக்கம் கடவுளுடைய அரசை அடைவதாகும். சில கட்டங்களில் இது இந்த உலகிலேயே ஏற்படும் ஒன்றாகவும், வேறு சில இடங்களில் விண்ணுலகில் ஏற்படும் ஒன்றாகவும் குறிக்கப்படுகிறது. நாம் முன்னால் கண்டபடி சில கட்டங்களில் இதனை மானிட மகன் ஆளுவதாகவும், வேறு சில இடங்களில் உன்னதத் தின் தூயவர்கள் ஆளுவதாகவும் கொள்ளப்படுகிறது (தானி. 7:18).

காணப்படாத உலகத்தைக் குறித்து மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியத்தார் இத்தகைய உறுதியான நம்பிக்கையை உடையவர்களாகக் காணப்பட்டனர். ஏனெனில் கடவுள் அன்னாருக்கு அவ்வளவு நிச்சயமானவராகக் காணப் பட்டார். கடவுள் வரலாற்றை ஆண்டு நடத்துகிறாரென்றால், அவருடைய ஆளுகை வந்துதானே தீரும்!

(ஈ) உயிர்த்தெழுதலும் மறுமையின் வாழ்வும்

பு.ஏ. தன் உயிர்த்தெழுதல் - மறுமை நம்பிக்கைகளில் ப.ஏ. மறைபொருள் வெளிப்பாட்டிலக்கியங்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கின்றதெனலாம். பு.ஏ.இன் பல கருத்துக்களும் இந்த வெளிப்பாட்டிலக்கியங்களிலிருந்து எழுந்தனவே.

கடவுளுடைய அரசைக் குறித்த நம்பிக்கையின் தோற்றகாலத்தில், கடவுள் அரசில் மக்கள் மூதாதையரைப் போல் நீடிய ஆயுளைப் பெறுவார்கள் என்று கருதப்பட்டது. பின்னால், குறிப்பாக மக்கபேயர் காலத்திற்குப் பின்னால் (நீதியர் பலர் அகாலமாக இறந்துபோன சூழ்நிலையில்) கடவுள் அரசில் உயிரோடிருக்கிற நீதியர் மட்டுமல்ல, இறந்துபோன நீதியருங்கூட உயிரோடெழுப்பப்படுவார்கள் என்ற நம்பிக்கை எழுந்தது. துன்பகாலத்தில் நீதியர் பலர் சடுதியாக இறந்து போனதே இந்த உயிர்த்தெழுதல் நம்பிக்கை வளர்ச்சியடையக் காரணமாயிருந்தது எனலாம்.

எசாயா 24-27இல் இந் நம்பிக்கை முதன் முதலாகக் காணப்படுகிறது. இங்கு கடவுளுடைய மக்கள் மட்டும் உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்று காண்கிறோம் (26:19). தானி. 12:2,3இல் நல்லவர்கள் மட்டுமல்ல, தீயவர்களும் உயிரோடு எழும்புவார்கள் எனப்பட்டது. நல்லவர்கள் ஆசியைப் பெறவும், தீயவர்கள் தண்டனையடையவும் எழுந்திருப்பர் (1 ஏனோக்கு 6:36).

பன்னிரு மூதாதையர்களின் நூலில் எல்லாருடைய உயிர்த் தெழுதலும் குறிக்கப்படுதலைக் காணலாம் (பென்யமீனின் நூல் 10:8). 2 எஸ்திராஸ் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து நீதித்தீர்ப்பு ஒன்று உண்டு என்று குறிப்பிடுகிறது.

இதைத் தொடர்ந்து மோட்சம், விண்ணுலகம், நரகம், பாதாளம், விண்தூதுவர்கள், சாத்தான் ஆகிய பல கருத்துக்கள்

வளர்ச்சியடைந்துள்ளன. இவை யாவும் பு.ஏ.க்குப் பின்னணியாக விளங்குகின்றன எனலாம்.

இவ்வாறு பல்வேறு கருத்து வளர்ச்சிகளை மறைபொருள் வெளிப்பாட்டு இலக்கிய நூல்கள் தாங்கும். அவற்றில் உள்ள வரலாற்றுப் பார்வை, இறைவாக்கினர் மரபின் திறனாய்வு, பற்றுறுதி சார்ந்த போராட்டம் முதலியவை எக்கால மக்களுக்கும் உரிய உந்துதல்களைத் தரக்கூடியவைகளாக உள்ளன.

துணை நின்ற நூல்கள்

1. Frost, S.B., *Old Testament Apocalyptic*, The Epwroth Press, New York, 1932.
2. Rowley, H.H., *The Relevance of Apocalyptic*, Lutterworth Press, 1947.
3. K. Koch, *The Relevance of Apocalyptic*, SCM, 1975.
4. P.R. Davies, *Daniel*, JSOT, 1988.
5. D. Guthrie, *The Relevance of John's Apocalypse*, Eerdmans, 1987.
6. N. Porteous, *Daniel*, SCM, 1971.

19

இஸ்ரயேலர் சமயம்

ஞான இராபின்சன்

1. சமயங்களுள் இஸ்ரயேல்

மக்களுடைய வழிபாடு, வழிபாட்டுக்குரிய சட்ட திட்டங்கள், ஆசாரங்கள் ஆகியவற்றைக் கொண்டதோர் அமைப்பே பொதுவாக சமயம் என்று அறியப்படுகிறது. கடவுள் நம்பிக்கை உள்ளவை. கடவுள் நம்பிக்கை இல்லாதவை என்று சமய அமைப்புகளை இரு வகையாகக் கொள்ளலாம். கடவுள் நம்பிக்கை இல்லாத சமய அமைப்புக்கு பௌத்தத்தை எடுத்துக்காட்டாகக் கூறலாம். தற்காலத்தில் வழக்கிலிருக்கும் பொதுவுடைமை இயக்கமும் இந்த அடிப்படையில் ஒரு சமயமே. கடவுள் அல்லது தெய்வங்கள் முதலான இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றல்களை மையமாகக் கொண்ட சமய அமைப்புகள் இரண்டாவது வகையைச் சார்ந்தனவாகும். இஸ்ரயேலரின் சமயம் இந்த வகுப்பைச் சார்ந்ததே.

கடவுள் நம்பிக்கையுள்ள சமயமே அறிவுத்துறைகள் அனைத்திற்கும் உயிர்நாடியாகவுள்ளது என்றும், அதுவே அவற்றின் பிறப்பிடம் என்றும் மக்கள் நம்பிவந்த ஒரு காலம் உண்டு. ஆனால் அறிவியல் வளர வளர, மக்கள் சமய அனுபவத்தின் தன்மையைக் குறித்தும், அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் ஆராயத் தொடங்கியுள்ளார்கள். மெய்ப்பிக்காமலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது சமயம் என்பது சமயத்திற்குப் பொதுவாகக் கொடுக்கப்பட்டுவந்த ஒரு விளக்கமாகும். ஆனால், அறிவியல் விளக்கப்படாத எதையும் ஏற்றுக்கொள்வது தகாது என்று கொண்டதால், சமயங்களின் தோற்றத்தைக் குறித்த ஆய்வும் தொடங்கியது.

சமயத்தின் தோற்றத்தைக் குறித்த பல்வகையான கருத்துக்கள் எழுந்துள்ளன. மனிதரின் சிந்தனை ஆற்றலிலிருந்து தோன்றியது சமயம் என்பர் சிலர்; மனு மக்களின் மரபு வழக்கங்களிலிருந்து தோன்றியது அது என்பர் வேறு பலர்; ஆதிமக்களின் மாந்திரீகக் கலையே சமயங்களின் தோற்றம் என்பர் ஏனையோர். ஆனால் வளர்ச்சியடைந்த சமயங்கள் யாவும் தங்கள் தோற்றத்தை இறைவெளிப்பாட்டில் காண்கின்றன. யூத, கிறிஸ்தவ, இசுலாமிய சமயங்களின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் இறைவனின் ஈடுபாடு முக்கிய இடம் பெறுவதைக் காணலாம். இந்த இறைவெளிப்பாடு இஸ்ரயேலர் சமூகத்தில் தனிச் சிறப்புமிக்க முறையில் காணப்படுகிறது என்பதை நாம் பின்னால் காண்போம்.

உலகச் சமயங்களின் வளர்ச்சியில் உயிர் பொருள் வணக்க நிலை (animism), ஆவி வணக்க நிலை (spiritism), மூட நம்பிக்கை நிலை (fetishism), மூதாதையர் வழிபாட்டு நிலை (ancestor worship), மரபுச்சின்ன வழிபாட்டு நிலை (totemism), தலைக் கடவுட் கோட்பாட்டு நிலை (henotheism), தனி இறை வணக்க நிலை (monolatry), இறுதியாக ஓரிறை நம்பிக்கை நிலை (monotheism) ஆகிய பல நிலைகளைக் காணலாம்.

இஸ்ரயேலர் சமயம் பல கூறுகளில் உலகச் சமயங்களுடன் தொடர்புடையதாக இருந்தாலும், குறிப்பிடத்தக்க அளவில் அவற்றிலிருந்து வேறுபட்டு நின்றது என்றும் கூறலாம். இங்கு கடவுளைப்பற்றிய நம்பிக்கை எத்தகைய ஐயப்பாட்டிற்கும் இடமில்லாத ஓர் உண்மையாகக் காணப்படுகிறது. கடவுள் இல்லையென்று கூறுவோர் அறிவிலிகள் (திருப். 14:1; 53:1). கடவுளுடைய தோற்றத்தைக் குறித்தோ, அவர் இயல்பைப் பற்றியோ எவ்வித ஆராய்ச்சியும் இங்கு மேற்கொள்ளப்படவில்லை. கடவுள் ஆளியல்புடன் செயல்படும் ஆற்றலுடையவர் என்பதே இஸ்ரயேல் மக்களின் மாறாத நம்பிக்கை. பிற சமயங்களுடன் ஒப்பிடுகையில் நான்கு வகைகளில் இஸ்ரயேல் சமயம் பிற சமயங்களிலிருந்தும் வேறுபட்டுச் சிறந்து நிற்பதைக் காணலாம்.

முதற்கண், அது வரலாறு சார்ந்த சமயம் என்று காண்கிறோம். கடவுள் வரலாற்றரங்கில் இஸ்ரயேல் மக்களோடு கொண்ட உறவைப்பற்றியே இஸ்ரயேலர் சமயம் குறிப்பிடுகிறது. வரலாற்றுக்கு வெளியில் நாம் இஸ்ரயேலர் சமயத்தைப் புரிந்துகொள்ள முடியாது. இரண்டாவதாக, இது அருளின் சமயம் என்று காண்கிறோம். இங்குக் கூறப்படும் எந்த நிகழ்ச்சியிலும், முழுக்க முழுக்க, முந்திச் செயல்படும் கடவுளின் அருளையே நாம் காண்கிறோம் (இணை. 7:6,7; 26:5) காண்க). மூன்றாவதாக, இது ஒரு மீட்பின் சமயம் ஆகும். இஸ்ரயேலர் வரலாறு மீட்பின் வரலாறு (Heils geschichte) என்று அறியப்படுகிறது. கடவுள் அனைத்துலகுக்கும் அருளும் மீட்பை உலகுக்கு வழங்குவதே இஸ்ரயேல் சமயத்தின் பணியாகும். நான்காவதாக, இது ஒரு வெளிப்பாட்டுச் சமயம் என்று காண்கிறோம். இந்து சமயத்தில் நம்பப்படுவதைப்போல யோகிகளின் சாதகத்தால் இச் சமயம் உண்டாகவில்லை. இங்கு கடைப்பிடிக்கப்படும் ஒவ்வொரு செயலும் கடவுளால் வெளிப்படுத்தப்பட்டது என்று நம்பப்பட்டது.

இஸ்ரயேலர் சமய வரலாற்றை ஆராயப் புகுவோர் எவரும் மேற்கூறிய உண்மைகளை மனத்திற்கொள்வது அவசியம்; அப்பொழுதுதான் அன்னார் அதைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியும்.

இஸ்ரயேலர் சமய ஆராய்ச்சியில் நம்பிக்கையைப் புகுத்தக் கூடாது. அதன் ஆதாரங்களைப் பிற இலக்கியங்களை ஆராய்வதைப் போலவே பகுத்தறிவைக்கொண்டு ஆராய வேண்டுமென்கிறார் கெல்மர் ரிங்க்ரன் என்ற அறிஞர். ஆனால் ஜேம்ஸ் மயிலன்பர்க் என்னும் அறிஞர். வேறுபட்ட ஒரு கருத்தைத் தருகிறார். இஸ்ரயேலர் சமயம் உடன்படிக்கையின் கடவுள் உடன்படிக்கையின் மக்களுடன் கொள்ளும் ஓர் உறவைப் பற்றிக் கூறுகிறது. ஆதலால் இந்த வரலாற்றை நம்பிக்கையால்தான் விளக்க முடியும் என்கிறார் இவர்.

இந்த இரு கூற்றுகளிலும் உண்மை உண்டு. இஸ்ரயேலர் சமயத்தை நாம் நம்பிக்கையின் அடிப்படையில் பகுத்த றிவைக் கொண்டு ஆராயவேண்டும். இதில் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட பல உண்மைகளும் உண்டு; இவற்றை நம்பிக்கை அடிப்படையில்தான் புரிந்துகொள்ள முடியும். எ.கா. கடவுள் இஸ்ரயேலரைத் தேர்ந்துகொண்டார் என்பது பகுத்தறிவால் விளக்க இயலாத ஒன்று; ஆயினும் இந் நம்பிக்கையே இஸ்ரயேலர் சமயத்திற்கு அச்சாணியாக வுள்ளது. இதனைப் புரிந்துகொள்ளவில்லையானால். பின்னால் தரப்படும் பல நிகழ்ச்சிகளை நாம் புரிந்துகொள்ள இயலாமற் போகும். ஆதலால் இஸ்ரயேலர் சமய ஆராய்ச்சிக்குப் பகுத்தறிவுமட்டும் போதுமானதன்று. நம்பிக்கையும் தேவை. இஸ்ரயேலா சமய ஆதார ஏடுகளை ஆராய முற்படுவோர், அவற்றை எழுதிய பழங்கால மக்களுடன் இரண்டறக் கலந்து, அவர்களுடைய சிந்தையைப் புரிந்துகொள்ள முயல வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் அனுபவத்தின் ஆழத்தை உணர்ந்துகொள்ள முடியும் என்கிறார் ஜேம்ஸ் மயிலன்பர்க்.

2. இஸ்ரயேலர் சமய அறிவிற்கான ஆதாரங்கள்

(அ) விவிலியம்

இஸ்ரயேலர் சமய அறிவுக்கு முக்கியமான மூலம் ப.ஏ. ஆகும். ப.ஏ. ஒரு தனி நூலன்று; அதனுள் பல்வேறு காலங் களில், பல்வேறு கைகளிலிருந்தெழுந்த பல இலக்கியங்கள் காணக்கிடக்கின்றன. இவற்றில் சில இஸ்ரயேலர் சமயத்தைப் பற்றிய நேரடியான தகவல்களைத் தருகின்றன (எ.கா. திருப்பாடல்கள்). வேறு சில நூல்கள் கடந்த கால சமய உண்மைகளைத் தருகின்றன (எ.கா. ஐந்திரு நூல்கள், நீதித் தலைவர்கள் முதலியன). ப.ஏ.இன் நூல்கள் கால வரை யறைப்படி, ஒழுங்கான முறையில் தொகுக்கப்படவில்லை. தொடக்கநூல் முதலில் வருவதால் அங்குக் கூறப்பட்டிருக்கும் கருத்துக்கள் யாவும் முதலாவது தோன்றியவை என்பது பொருளன்று. அப்படியே ஆமோசின் நூல் பின்னால் வருவதால் அது பிற்காலத்தில் தோன்றியது என்பதும் பொருளன்று. ஆதலால் இவற்றைச் சமய ஆய்வுக்குப் பயன்படுத்தும் முன்னால், நாம் இந் நூல்களை வரலாற்றுத் திறனாய்வுக்குட்படுத்தல் (Historical Criticism) அவசியம். ஒவ்வொரு நூலையும் அது எழுந்த வரலாற்றுச் சூழலில் வைத்தே ஆராய வேண்டும்.

யூதர்கள் தங்கள் கனோன் ஒழுங்கை மூன்று பகுதிகளாகப் பகுத்துள்ளனர். முதல் ஐந்து நூல்களையும் திருச்சட்டம் (தோரா - Torah) எனவும், யோசுவா முதல் வரலாற்று நூல்கள் (குறிப்பேடு, எசுறா, நெகேமியா தவிர), இறைவாக்கு நூல்கள் உட்பட உள்ள தொகுப்பை இறைவாக்கினர் (நபீயீம் - Nebiim) எனவும், பிற நூல்களின் தொகுப்பை திருவெழுத் தேடுகள் (கெதுவீம் -Ketubim) எனவும் குறிப்பிட்டனர். இந்தப் பாகுபாடு நூல்கள் கனோன் அங்கீகாரம் பெற்ற கால ஒழுங்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

ப.ஏ.ஐ ஆராயும் முறை குறித்து அறிஞர்களிடையே பல்வகை கருத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பற்றி ஐந்திருநூலைக் குறித்த முன் கட்டுரையில் காண்க.

ப.ஏ. கனோன் ஒழுங்கில் இடம்பெறாத பல யூத சமய நூல்கள் இந்த ஒழுங்குக்கு வெளியில் தள்ளுபடி நூல்கள் (Apocrypha) என்றும், புனைப்பெயர் ஏடுகள் (Pseud-epigrapha) என்றும் அறியப்படும் தொகுப்புகளில் காணக்கிடக்கின்றன. இவையும் இஸ்ரயேல் சமய ஆய்வுக்கு முக்கியமான மூலங்களாகும். பிற்கால யூத சமயத்தைக் குறித்த பல உண்மைகளை இவற்றின் மூலம் நாம் அறிகிறோம்.

ப.ஏ. காலத்தில் யூத சமயம் எந்நிலையில் இருந்தது என்று அறிவதற்குப் பு.ஏ. நூல்களும் பல தகவல்களைத் தருகின்றன.

(ஆ) கீழ்ச்சமீப நாட்டுப் பழங்கால இலக்கியங்கள்

விவிலியத்துக்கு வெளியில், இஸ்ரயேலர் சமய ஆராய்ச்சிக்கு நமக்கு உறுதுணையாக இருக்கும் மூலங்கள் பாலஸ்தீனாவின் அண்டை நாடுகளான எகிப்து, சிரியா, அசிரியா, பாபிலோன் போன்ற நாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ள பழங்கால இலக்கியங்கள் ஆகும். ப.ஏ.இல் தெளிவற்றுக் காணப்படும் பல உண்மைகளை இவற்றின் மூலமாக நாம் தக்கவாறு புரிந்துகொள்ள முடிகிறது. மேலும், இஸ்ரயேலர் சமயம் பிற சமயங்களிலிருந்து எவ்வாறு வேறுபட்டுச் சிறப்புடன் விளங்கியது என்பதைக் கணிக்கவும் இவை உதவுகின்றன. எகிப்து, பாபிலோன் ஆகிய இடங்களிலிருந்து கிடைத்துள்ள படைப்பின் புராணங்கள், பரதீசைக் குறித்த புராணங்கள், வெள்ளப்பெருக்கு புராணங்கள் ஆகியவை தொட. 1-11ஐ நாம் நன்கு புரிந்துகொள்ள துணை புரிகின்றன.

அண்மைக் காலமளவும் இஸ்ரயேலர் சமயம் பாபிலோனையே அதிகமாகச் சார்ந்திருந்தது என்று நம்பப்பட்டது. ஆனால் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் (1930-33) இராஸ்-சாம்ரா என்னும் இடத்தில் யுகாரிட் என்னும் பழங்கால கானானிய நகரம் தோண்டிக் கண்டு பிடிக்கப்பட்டதிலிருந்து நிலைமை மாறியுள்ளது. இங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள யுகாரிட் ஏடுகள் இஸ்ரயேலர் சமயத்திற்கும் பண்டைக்கால கானானிய சமயத்திற்கு முள்ள நெருங்கிய தொடர்பை எடுத்துக்காட்டியுள்ளன. இவை தவிர, இஸ்ரயேலரது எகிப்திய வாழ்வு, முடியாட்சி, சிறை யிருப்பு ஆகியவற்றை விளக்கும் பல ஏடுகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன (கூடுதல் விவரங்களுக்கு ஆசிரியரது இஸ்ரயேலர் சமயம் என்னும் நூல், பக். 32-48 காண்க).

(இ) தொல்பொருள் ஆராய்ச்சி

கடந்த ஒரு நூற்றாண்டாக நடந்துவரும் தொல்பொருள் ஆராய்ச்சி இஸ்ரயேல் மக்களுடைய வரலாறு, சமயம், சூழ்நிலை ஆகியவற்றைப் பற்றி நாம் அறியப் பெருமளவிற்கு உதவியுள்ளது. தொல்பொருள் ஆராய்ச்சி, விவிலியம் தரும் உண்மைகளை உறுதி செய்யவே உதவியுள்ளது. அதே வேளையில் அதில் காணப்படும் சில தவறுகளையும் அது சுட்டிக்காட்டியுள்ளது. தொல்பொருள் ஆராய்ச்சி சமய

வரலாற்றின் அடிப்படைகள் சிலவற்றை தெளிவுபடுத்தவே முயல்கிறது; அதன் நம்பிக்கை அடிப்படைகள் குறித்து அது எதுவும் சொல்வதில்லை. எ.கா. கி.மு. 13ஆம் நூற்றாண்டளவில் தென்பாலஸ்தீனாவில் இஸ்ரயேலர் ஆக்கிரமிப்பினால், திரளான மக்கள் மாண்டனர் என்பதைத் தொல்பொருள் ஆராய்ச்சி உறுதி செய்கிறது; ஆனால் அந்தப் போர் யாவேயால் நடத்தப்பட்டது என்னும் இஸ்ரயேலர் நம்பிக்கையை மெய்ப்பிக்க அதனால் இயலாது.

தொல்பொருள் ஆராய்ச்சியின் பயனால் கிடைத்த பல ஏடுகளைக் குறித்து மேலே கண்டோம் (கூடுதல் விவரங்களுக்கு **இஸ்ரயேலர் சமயம்**, பக். 48-53 காண்க). இஸ்ரயேல் சமயத்துடன் தொடர்புடையனவாகக் கருதப்படும் இடங்களில் புதைபொருள் ஆராய்ச்சி தொடர்ந்து நடந்துதான் வருகிறது. இந்த ஆய்வுகளின் பயன்கள் இஸ்ரயேலர் சமய அறிவை மேலும் வளரச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

3. புறச் சமயப் பின்னணி

இஸ்ரயேலர் சமயம் வெறுமையிலிருந்து எழவில்லை. எவ்வளவுதான் பிற சமயங்களிலிருந்து அது வேறுபட்டுச் சிறந்து விளங்கினாலும் அதன் தோற்றத்தைப் பொதுவானதோர் சமயப் பின்னணியில்தான் காணவேண்டும். இந்தப்பொதுவான சமயப் பின்னணியை இஸ்ரயேலர் தினைத்தவுடன் தகர்த்தெறிந்துவிட்டனர் என்று கூறிவிடமுடியாது. தொடர்ந்து வளர்ச்சியடைந்த இஸ்ரயேல் சமய நம்பிக்கையினூடே வளர்ச்சியடையாத இப்பழங்கால நம்பிக்கைகளும் தொடர்ந்து காணப்பட்டுவந்தன. இத்தகைய புறச் சமயக் கூறுகள் பலவற்றைப் ப.ஏ.இல் நாம் இன்னமும் காண்கிறோம். இவை ப.ஏ. சமய நம்பிக்கையின் தரத்தைக் குறைப்பதற்குப் பதிலாக கடவுள் வரலாற்றினூடே தமது மக்களைப் படிப்படியாக வழி நடத்திவரும் மாண்பையே எடுத்துக்காட்டக் கூடும். வளர்ச்சியடையாத இத்தகைய சமயக் கூறுகள் சிலவற்றை நாம் இங்குக் காண்போம்.

உயிர்பொருள் வணக்கக் கூறுகள்: இயற்கையின் பகுதிகளும் தங்களைப்போல, ஆனால் தங்களைவிட ஆற்றலுள்ளனவாக உயிருற்று இயங்குவன என்ற நம்பிக்கையுடன் வளர்ச்சியடையாத மக்கள் அவற்றிற்கு வழிபாடு செய்துவந்தனர். இதையே உயிர்பொருள் வணக்கம் என்கிறோம். இப்படியாக மரம், கல், மலை, நீருற்றுகள் முதலானவை மனிதரின் வழிபாட்டுக் குரியனவாயின. ப.ஏ.இல் இவற்றிற்கான வழிபாடுகள் இல்லையாயினும், இந்த வழிபாட்டுப் பின்னணியின் கூறுகள் இன்னமும் காணப்படுகின்றன. எ.கா. இஸ்ரயேலரிடையில் சில மரங்கள் (தொட. 12:6-8; 13:8; 14:13; 18:1) கற்கள் அல்லது மலைகள் (தொட. 22:11,12; 28:11-22; 1சாமு 6:14-18) நீரோடைகள் அல்லது நீருற்றுகள் (தொட. 14:5,7; 16:14; 21:22-33; எண். 21:17,18...) முக்கியத்துவமுற்றுக் காணப்படுதல் இப்புறச் சமயப் பின்னணியையே காட்டுகின்றன.

மரபுச்சின்ன வழிபாட்டுக் கூறுகள்: ஓர் இன மக்கள் தங்கள் இனம் ஒரு குறிப்பிட்ட விலங்கிலிருந்து தோன்றியது என்று நம்பி, அந்த விலங்கினத்தைத் தங்கள் மரபின் சின்னமாகக் கொண்டு வழிபடுவதையே மரபுச்சின்னு வழிபாடு (totemism) என்கிறோம். இஸ்ரயேலர் பெயர்களில் பல, விலங்குகளின் பெயர்களுடன் தொடர்படையனவாக இருத்தல் இப் பின்னணியைக் காட்டக்கூடும் என்று அறிஞர் கருதுகின்றனர். எ.கா சிமியோன் = கழுதைப்புலி, லேவி (லேயாள்) = காட்டுப்பசு, ராகேல் = பெண் செம்மறியாடு, காலேபு = நாய். பல இடங்களின் பெயர்களும் விலங்குகளின் பெயர்களால் அறியப்படுவது இப் பின்னணியைக் காட்டக் கூடும். எ.கா. அய்யலோன் =ஆண்மான், சால்பீம் =நரிகள், எபிரோன் = இளமான், எக்லோன் = கன்றுக்குட்டி, நிம்ரா = சிறுத்தைப் புலி.

இறந்தோர் வழிபாட்டுக் கூறுகள்: காத்து என்பது தெய்வமொன்றின் பெயர் (எசா. 65:11). பாகால்காத்து (யோசு. 11:27; 12:7; 13:5), மிக்தல்காத்து (யோசு. 15:37) ஆகிய பெயர்கள் இதனை உணர்த்தும். இப் பெயர் இஸ்ரயேல் குலம் ஒன்றின் பெயருமாகும் (தொட. 46:16). இக் குலம் அதன் குலத் தந்தையின் பெயரால் அறியப்படுகிறது. குலத் தந்தை ஒருவரின் பெயர் தெய்வமொன்றின் பெயராக வருவது இறந்தோர் வழிபாட்டைக் குறிக்கலாம். மேலும் இறந்தோர் கல்லறைகளுக்கு முக்கியத்துவமளித்தலும் இதையே உணர்த்தும் (12:6; 13:18; 18:1; 23:1மு; 35:8....). வேறு, தேராபீம் எனப்படும் வீட்டுச் சிலையைக் குறித்தும் வாசிக்கிறோம் (31:19,30-35; நீதித். 17:5; 18:14). இதுவும் இறந்தோர் வழிபாட்டின் எஞ்சியக் கூறு என்று கருதப்படுகிறது.

1சாமு. 28:3-25இல் சவுல் இறந்தோர் ஆவியால் வருவதுரைக்கும் சூனியக்காரிகளைத் துரத்திவிட்டார் என்பதிலிருந்தும், அதன்பின் அவரே சூனியக்காரியைத் தேடிச் சென்றார் என்பதிலிருந்தும் இந்த இறந்தோர் வழிபாடு இஸ்ரயேலரிடையிலும் புகழ்பெற்றிருந்தது என்பது தெரியவருகிறது. பிற்காலத்தில் இறைவாக்கினர் இதனை வன்மையாகக் கண்டித்தனர்.

பேய் வணக்கக் கூறுகள்: எண். 21:6; இ.ச. 8:15 ஆகிய பகுதிகளிலிருந்து **சேராபீம்** என்பது ஒருவகையான பாலைநிலப் பேய் என்று தெரியவருகிறது. இலேவி. 17:7இல் சேயீம் என்பவை ஒருவகையான உரோமம் நிறைந்த பேய்கள் என்றும், அவற்றிற்கு அம்மட்டும் இஸ்ரயேலர் பலி செலுத்தி வந்தனரென்றும் கூறப்படுகிறது. வேறு எசா. 13:21; 34:14 ஆகிய பகுதிகளிலும் இச்சொல் காட்டாடு என்று மொழிபெயர்க்கப்பட்டு பேய் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. இலேவி. 16:7-28இல் **அசாசேல்** என்பது இன்னொரு வகையான பேய் என்று காண்கிறோம். வேறு, **வன விலங்குகள்** (சிய்யீம்: எசா. 13:21,22., எரே. 1:39), ஆந்தைகள் (ஒகீம்: எரே. 1:39), தீக்கோழிகள் (பெனோத் யானா), ஒநாய்கள் (தன்னீம்) என்ற சொற்களும் பேய் வழிபாட்டுக் கூறுகளாகக் கருதப்படுகின்றன. தொட. 4:7இல் பாவம் உன் வாசலில் பதுங்கி இருக்கும் என்ற பகுதியில் வரும் பாவம் என்ற சொல், மூல மொழியில் ரோபேட்ஸ் எனப்படுவதாகும். இது பாபிலோனிய ரபிட்சு என்னும் பேய்க்கு நிகரான ஒரு பேயாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. எசா. 34:14; திருப். 91:5,6 ஆகிய பல பகுதிகளிலும் பழங்கால பேய் வணக்கக்கூறுகள் காணப்படுவதாகக் கருதப்படுகிறது.

பல தெய்வ வணக்கக் கூறுகள்: இஸ்ரயேல் மக்கள் கானானில் குடிபுகுந்த துவக்க நாள்களில் அன்னாரிடையில் கானானிய தெய்வங்களில் பல காணப்பட்டன என்றும், பிற்காலத்தில் இவையார்வும் கண்டிக்கப்பட்டபோதிலும் சிறையிருப்பின் காலமளவும் இவை மக்களிடையில் வழக்கிலிருந்து வந்தன என்றும் காணலாம்.

இஸ்ரயேலரிடையில் கடவுள் என்பதற்கான பொதுவான

அடிச்சொல் ஏல் என்பதாகும். இச் சொல் கானானியரிடத்திலிருந்து வந்ததே. இது கானானிய தெய்வக் கூட்டத்தின் தலைவனின் பெயராகும்,. ப.ஏ.இல் இது ஏல், எலோவம், எலோஹீம் என்ற பல வடிவங்களில் காணப்படுவதைப் பார்க்கலாம். இத்துடன் தொடர்புடைய பல இடப்பெயர்களும் காணப்படுகின்றன. எ.கா. யப்னியேல் (ஏல் கட்டட்டும் யோசு. 15:11), இஸ்ரியேல் (ஏல் விதைக்கட்டும் 15:56), இப்தகேல் (ஏல் திறக்கட்டும் 19:14), மிக்தாவேல் (ஏலின் கோபுரம் 19:38) பெத்தேல் (ஏலின் வீடு தொட. 28:18,19), பெனுவேல் (ஏலின் முகம் 32:31). ஏல் ஆரம்ப காலங்களில் ஒரு பொதுத் தெய்வமாகப் பல இடங்களிலும் வழிபடப்பட்டு வந்திருக்கலாம். இடத்திற்குத் தக்கதாக ஏலின் பெயரிலும் சில மாற்றங்கள் காணப்பட்டிருக்கக்கூடும். இவ்வாறு விடு. 6.3இல் ஏல் சட்டாய் (அனைத்தாற்றல் மிகு ஏல்) என்னும் தொடர் யாவேயைக் குறிக்கின்றது (தொட. 14:18-20; எண். 24:16 காண்க). தொட. 16:13இல் ஆகார் கடவுளை ஏல்ரோய் (பார்கிற ஏல்) என்று குறிப்பிடுகிறார். ஆபிரகாமை ஆசீர்வதித்த மெல்கிசெதேக்குக்கு சாலோமின் அரசரும், ஏல் எல்யோன் (உன்னதரான ஏல்) என்னும் தெய்வத்தின் குருவுமாயிருந்தார் என்று காண்கிறோம் (தொட. 14:18-20). இவை தவிர ஏல் ஒலாம் (என்றுமுள ஏல் 21:33), ஏல் பெத்தேல் பெத்தேலின் ஏல் (35:7), ஏல் பாகாட் (அச்சமான ஏல் 31:42,53), ஏல் பெரீத் (உடன்படிக்கையின் ஏல் -நீதித். 9:46) என்ற பல தொடர்களும் காணப்படுகின்றன.

எகிப்தில் எலிபன்தீன் என்னுமிடத்திலிருந்து கிடைத்துள்ள பல ஏடுகளிலிருந்து அங்குக் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் யூத சமூகம் ஒன்று வாழ்ந்துவந்ததென்றும், அது தன் வழிபாட்டில் யாவேயுடன் சில பெண் தெய்வங்களையும் கொண்டிருந்ததென்றும் (இதும் பெத்தேல், அனாத் பெத்தேல், அனாத் யாகூ, கொம் யாகூ) அறிகிறோம். இதிலிருந்து, இஸ்ரயேலர் யாவே வழிபாட்டு வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் பெண் தெய்வங்களும் யாவேயுடன் கொள்ளப்பட்டிருந்தனர் என்பது தெரியவருகிறது.

அத்துடன் இஸ்ரயேலரிடையில் கானானிய தெய்வமான பாகால், அத்துடன் தொடர்புள்ள பெண் தேவதைகளான அஸ்தரோத்து, அசேரா ஆகியவற்றின் வழிபாடும் நெடுங்காலம் நீடித்திருந்தது என்று அறிகிறோம். இறைவாக்கினர் பிற்காலத்தில் இதனை வன்மையாகக் கண்டித்த போதிலும், மக்களிடையிலிருந்து இதனை முற்றிலுமாக அகற்ற அவர்களால் முடியவில்லை என்று அறிகிறோம் (ஆமோஸ் 7:9; ஒசே. 10:8; எரே. 7:31; 19:5).

இவை தவிர, மாந்தரீகக் கலையின் கூறுகளையும் ப.ஏ.இன் பல பகுதிகளில் நாம் காண்கிறோம் (எண். 21:6-9; 2 அர. 6:5-7; 13:14-19; எசா. 3:3; 26:16; மீக். 5:11...). தொடக்கக் காலங்களில் மறுமையைக் குறித்து அண்டை நாட்டவர் கொண்டிருந்த நம்பிக்கைகளில் இஸ்ரயேலரும் பங்கு கொண்டனர் என்பதற்குப் ப.ஏ.உம், அகழ்வாய்வும் பல சான்றுகளைத் தருகின்றன (விவரங்களுக்கு இஸ்ரயேலர் சமயம், பக்.86மு. காண்க).

இப்படியாக, இஸ்ரயேலர் சமயம் ஒரு புறச் சமயப் பின்னணியிலிருந்து எழுந்தது என்று காணலாம். ஆனால் இந்தப் புறச்சமயப் பின்னணியில் தவறானவற்றை விட்டு விலகி, குறைவானவற்றை நிறைவாக்கி, முன்னேறிச் செல்லும் ஓர் இயக்கத்தைத் தொடக்கத்திலிருந்தே காணலாம். இந்த வெளிப்பாட்டின் வளர்ச்சியை அன்னார் வரலாற்றின் வளர்ச்சியினூடே காண்கிறோம். இது கடவுளால் இஸ்ரயேலருக்காகவும் அனைத்துலக மக்களுக்காகவும் அருளப்பட்ட ஒரு வெளிப்பாடு என்பது நமது நம்பிக்கை.

4. இஸ்ரயேலர் சமய வரலாற்றுச் சுருக்கம்

இஸ்ரயேலர் வரலாற்றைப்பற்றி நாம் ஏற்கனவே கண்டோம். அன்னார் சமயம் வரலாற்றுடன் பின்னிக் கிடப்பதாலால் அதனைத் தனித்துக் காண்பதரிது. மேலும், அது படிப்படியாக வளர்ச்சியுற்றுக் காணப்பட்டதால் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் உள்ள சமய நம்பிக்கைகள், ஆசாரங்கள் ஆகியவற்றை மட்டும் இஸ்ரயேல்ரது சமய நம்பிக்கைகளாக, ஆசாரங்களாகக் கொள்ளமுடியாது. அவற்றை அவ்வாறு தனித்தனியாகக் காண்பதற்கு இக் கட்டுரை இடமளிக்காது. ஆகையால் நாம் இங்கு இஸ்ரயேலர் சமய வரலாற்றினைச் சுருக்கமாகக் காண்போம். அவ் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்பட்ட புதுப்புதுக் கூறுகளையும் சுட்டிக் காட்டுவோம். அதன்பின், அடுத்த பகுதியில் இஸ்ரயேலர் சமயத்தின் பொதுவான பல விதிமுறைகள், ஆசாரங்கள் ஆகியவற்றைப் பற்றிச் சுருக்கமர்க விளக்குவோம்.

(அ) மூதாதையர் காலம்

இஸ்ரயேலர் சமயம் மூதாதையர்களுடன் துவங்குகிறது. கி.மு.20ஆம் நூற்றாண்டுக்கும் 15ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட ஒரு காலத்தில், பாபிலோனிலுள்ள ஊர் என்னும் நாட்டில் வாழ்ந்துவந்த செமித்திய நாடோடி வகுப்பினரில் ஒரு கூட்டத்தாரைக் கடவுள் அழைத்து, வழிநடத்தி, கானானுக்குள் கொண்டு சேர்த்தார் என்பதும், அந்த நாடோடி வகுப்பினர் தலைவர் ஆபிராம் (பின்னால் ஆபிரகாம் பெரிய இனமொன்றின் தந்தை என்று அறியப்பட்டார் என்பதும், அவரே இஸ்ரயேலர் சமயத்தின் தோற்றுனர் என்பதும் விவிலிய மரபு (தொட. 11:10; 25:20; 28:5; 31:20-24). இந்த மரபு தொல்பொருள் ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதென்று கண்டோம்.

மூதாதையர்கள் சமயத்தில் நாம் மேலே கண்ட வளர்ச்சியடையாத சமயக் கூறுகள் பலவற்றையும் காணலாம். வளர்ச்சியடையாத இந்நிலையிலும், இறைவெளிப்பாட்டின் தொடக்கத்தை நாம் இங்குக் காணமுடிகிறது. பல தெய்வங்கள் வழிபடப்பட்டுவந்த ஒரு சூழலில், ஒரிறை வழிபாடு இங்கு முக்கியத்துவமடைகின்றது. அத்துடன் கடவுள் தங்களை அழைத்தார் என்றும், தங்களுடன் உடன்படிக்கை செய்தார் என்றும் அம் மக்களுக்குள் உண்டான ஓர் உணர்வும் இறைவெளிப்பாட்டைச் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறு அழைக்கப்பட்ட மக்கள் பிற வழிபாட்டுச் சூழ்நிலைகளிலிருந்து விலக முயலும் இயக்கத்தின் தொடக்கத்தையும் நாம் இங்குக் காணக்கூடும். இப்படியாக, நரபலி வழக்கிலிருந்த ஒரு காலத்தில், நரபலி வேண்டாம் என்னும் ஓர் உணர்வு இங்கு எழுகிறது (22).

மூதாதையர் கடவுளை ஏல் சட்டாய் (சர்வ வல்லமையுள்ள கடவுள்) என்பதாகத்தான் அறிந்திருந்தனர் என்று கூறப்படுகிறது. விடு.3:2 காண்க). யாவே வழிபாட்டின் தோற்றத்தை மோசேயில் காணலாம்.

மூதாதையர்களின் வழிபாட்டில் வேள்வி காணப்பட்டது. இங்குக் குடும்பத் தலைவர்களே வேள்வி செலுத்துவதாகப் பார்க்கிறோம் . விருத்தசேதன வழக்கமும் இவர்களிடையில்

காணப்பட்டதாக அறிகிறோம். இங்கு விருத்தசேதனம் கடவுளுக்கும் ஆபிரகாமுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையின் அடையாளமாகக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது (தொட. 17:10).

செக்கேம் (12:6,7), பெத்தேல் (28:10-22), மம்ரே (13:18), பெயேர்செபா (21:22-31; 26:33) ஆகிய இடங்கள் முக்கிய வழிபாட்டிடங்களாகக் காணப்பட்டுள்ளன. இவை தோற்றத்தில் கானானிய வழிபாட்டிடங்களாகக் காணப்பட்டன.

இக்காலத்தில் மூதாதையர்களின் சமய சமூக வாழ்க்கையானது வாழ்க்கை வழக்குச் சட்டங்களாலேயே (customary laws) கட்டுப்படுத்தப்பட்டன. மூதாதையர்கள் வாழ்க்கையில் வழக்கிலிருந்ததாகப் ப.ஏ. குறிப்பிடும் பல சட்டங்கள் மாரி, நூசி என்னும் இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஏடுகள் தரும் சட்டங்களை ஒத்திருக்கின்றன.

(ஆ) மோசேயின் காலம்

இஸ்ரயேலர் சமயத்தின் அடுத்த கட்டத்தை மோசேயின் வரலாற்றில் காண்கிறோம். இஸ்ரயேலரை ஒரு மக்களினமாக இணைத்து, அன்னாருக்கு ஒழுங்குபடுத்தப்பட்டதொரு சமயத்தைக் கொடுத்தது மோசேயே எனலாம். இஸ்ரயேலரின் எகிப்திய வாழ்வு குறித்த வரலாற்றின் காலத்தையும், அதன் நம்பத்தகுந்த தன்மையையும் குறித்து நாம் ஏற்கெனவே கண்டோம்.

மோசேயின் காலம் இஸ்ரயேலர் வரலாற்றுக்குப் பல்வகையிலும் முக்கியமானது. முதலாவதாக, யாவே வழிபாட்டின் தோற்றத்தை நாம் இங்குத்தான் காண்கிறோம் (விடு.6:2). இந்த யாவே வழிபாட்டின் தோற்றத்தைக் குறித்து அறிஞர்களிடையில் கருத்து வேறுபாடுகள் காணக்கிடக்கின்றன (விவரங்களுக்கு இஸ்ரயேலர் சமயம், பக். 130மு. காண்க). இவ் வழிபாடு மீதியானியரிடையிலுள்ள கேனியர் என்னும் ஒரு பிரிவினரிடமிருந்து தோன்றியிருக்கவேண்டுமென்ற கருத்தைப் பெரும்பாலான அறிஞரும் ஆதரிக்கின்றனர்.

எகிப்தின் விடுதலையும், செங்கடல் கடத்தலும், சீனாய் மலை நிகழ்ச்சிகளும் ஒன்று சேர்ந்து யாவேயேத் தங்களுடைய கடவுள் என்ற நம்பிக்கையில் இஸ்ரயேலர் உறுதியடையச் செய்கின்றன. இவ்வாறு, ஒரு கடவுள் வழிபாட்டின் பெயரால், ஒன்றுபடுத்தப்பட்ட பல குலத்தாரான இந்த நாடோடி மக்கள் இஸ்ரயேல் என்னும் ஒரு மக்களினமாயினர் (இஸ்ரயேலர் குலக் கூட்டமைப்பு பற்றி அறிய இஸ்ரயேலர் சமயம், பக். 168மு. காண்க).

இவ்வாறு ஒன்றுபடுத்தப்பட்ட மக்களுக்கு அன்னார் வாழ்க்கைக்கான ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு சட்ட அமைப்பு தேவைப்பட்டது. இதை அமைத்துக்கொடுத்த சிறப்பு மோசேயைச் சாரும். சமய ஆசாரங்களைக் குறித்தும், சமூக வாழ்க்கையைக் குறித்தும் பல ஒழுங்குகள் வகுக்கப்பட்டன. இவை யாவற்றையும் சீனாய் மலையில் வைத்து யாவேயே மோசேக்குக் கொடுத்தார் என்பது மரபு. இப்படியாக, இஸ்ரயேலரது சமய சமூகச் சட்டங்களுக்கு தெய்வீக அதிகாரம் கொடுக்கப்பட்டது மட்டுமின்றி, பிற்காலத்தில் எழுந்த சட்டங்கள் இந்தச் சீனாய் வெளிப்பாட்டுச் சூழலுக்குள் கொண்டுவரப்பட்டு தெய்வீக அதிகாரம் பெற்றன.

மோசே தந்ததாகப் ப.ஏ.இல் தரப்பட்டுள்ள சட்டங்கள் அனைத்தையும் மோசே கூறியிருக்கமுடியாதென்பதற்கான பல காரணங்களுண்டு. எ.கா. உடன்படிக்கைச் சட்டத்தில் (விடு. 20:22; 23:33) கூறப்படும் பல உண்மைகளும் கானானின் விவசாயச் சூழ்நிலையைச் சுட்டிக்காட்டுகின்றன. இவற்றை நாடோடிப் பின்னணியில் நின்ற மோசே கூறியிருக்க முடியாது. பத்துக் கட்டளைகளில் சிலவற்றையும், அல்லது எல்லாவற்றையும், வேறு சில சட்டங்களையும் ஒருவேளை மோசே கூறியிருக்கலாம். ஆனால், ப.ஏ. மரபிற்கிணங்க மோசே முறையேற்பு பெற்ற இறைவாக்கினர் என்ற காரணத்தால், பின்னால் தோன்றிய சட்டங்களும் மோசேயால் கொடுக்கப்பட்டனவாகக் கொள்ளப்படுகின்றன. இப்படியாக உண்மையில் மோசேயின் காலம் முதல் எசுறாவின் காலமளவும் எழுந்த பல சட்டங்கள இன்று ஐந்திரு நூல்களில் காணப்படுகின்றன என்று காணலாம்.

இஸ்ரயேலர் யாவேயைக் குறித்துக்கொண்ட நம்பிக்கை அன்னார் சமய வாழ்க்கை முழுவதையும் பெருமளவில் பாதித்து நின்றது. முதற்கண், அவர்கள் அவரை உடன் படிக்கையின் கடவுளாகக் கொண்டனர். இதனால் தேர்ந்து கொள்ளப்பட்ட சிறந்த மக்களாகத் தங்களைக் கொண்டு பிறரிடமிருந்து பிரிந்துவாழும் ஒரு பண்பு இவர்களுள் வேருன்றியது. அத்துடன், யாவே தூயவர் என்னும் நம்பிக்கை, சமய சமூக வழக்கங்களில் அன்னார் தங்கள் தூய்மையைக் காப்பாற்றத் தூண்டுவதாயமைந்தது. சமயச் சடங்குகளை ஆசரிப்பதைக் குறித்த சட்டங்கள் பலவும் இந்த நம்பிக்கையிலிருந்து எழுந்தனவே.

இக்காலத்தில் பாம்பு (எண். 21:4-9), காளை அல்லது கன்றுக்குட்டி (விடு.32:4; 1அர.12:28), உடன்படிக்கைப் பேழை (25:10-22; 37:1-9), சந்திப்புக்கூடாரம் (33:7; எண். 11:16....) ஆகிய பல வழிபாட்டுச் சின்னங்கள் முக்கியத்துவமடைவதாகக் காணலாம். இவற்றில் சில பிற்காலத்தில் கண்டிக்கப்பட்டன (பாம்பு 2 அர. 18:4; காளை எண். 5:11-28; ஓசே. 8:5,6; 10:5). உடன்படிக்கைப் பேழையும், சந்திப்புக் கூடாரமும் எருசலேம் திருக்கோவில் எழும் வரையிலும் வழிபாட்டு முக்கியத்துவம் பெற்றிருந்தன என்று காண்கிறோம்.

ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு வேள்வி முறையையும், பலியிட்டு வழிபாடு செய்வதற்கான ஒரு வகுப்பினராக, குருக்களின் தோற்றத்தையும் நாம் இங்குக் காண்கிறோம். இவற்றைப் பற்றிப் பின்னால் காண்போம்.

விருத்தசேதன முறை தொடர்கிறது (விடு. 4:25,26). இன ஒருமைப்பாட்டைக் காப்பதற்கான பழிவாங்கும் முறை சட்ட ஒழுங்குக்குள் வருகின்றது (21:33). ஓய்வுநாள் விழா, அமாவாசை அல்லது மாதப் பிறப்பு விழா, பாஸ்கா விழா ஆகிய பல விழாக்களும் இக் காலத்தில் தோன்றுகின்றன (16:22-30; எண். 10:10; 28:11-15; விடு. 12:9,46).

(இ) யோசுவா, நீதித்தலைவர்கள் காலம்

எகிப்திலிருந்து விடுதலையடைந்த இஸ்ரயேலர் எப்படிக் கானானில் புகுந்து அந்நாட்டை உரிமையாக்கினார்கள் என்பதை யோசுவா, நீதித்தலைவர்கள் வரலாறு கூறுகின்றது. இவற்றைப் பற்றி நாம் ஏற்கெனவே கண்டோம்.

இக் காலத்தில் உடன்படிக்கைப் பேழை இஸ்ரயேல் குலக் கூட்டமைப்பின் மையமாகக் காணப்பட்டது (யோசு. 3:4; 6:7. 8: 30-35; 1 சாமு. 4:7). கில்கால் (யோசு. 5:9), பெத்தேல் (நீதித். 1:22-26), சீலோ (21:19), மிஸ்பா (10:17; 11:11-29), கிபியோன் (யோசு. 9:10), ஒப்ரா (நீதித். 6:11.14), தாண் (18: 30,31), செக்கேம் (யோசு. 24:26,27) ஆகிய பல இடங்கள் வழிபாட்டிடங்களாக இக் காலத்தில் முக்கியத்துவமடைந்தி ருந்தன. ஏபோத்து (நீதித். 17:15; 18:4,17,18,20), வீட்டுச் சிலை, வெட்டுச் சிலை, வார்ப்புச் சிலை (17:3,4) ஆகிய பல வழிபாட்டுச் சின்னங்களும் வழக்கிலிருந்தன. சாதாரண மக்களும் பலிசெலுத்திவந்தனர் (6:19மு; 25,26,28; 13:19; 1சாமு.7:9). ஆனால் குருத்துவ குலத்தாரான லேவி குலத்தார் கிடைத்தால் அவர்கள் விரும்பப்பட்டனர் (நீதித். 17:7-13).

வழிபாட்டில் பலிகள், விழாக்களுடன் புனிதப் பயணம் செல்லுதலும் இடம்பெற்றது (20:1,2). விழாக்களில் புளிப் பில்லா அப்ப விழா, அறுப்பு விழா அல்லது வார விழா (விடு. 26:16; 34:22; நீதித். 21:20,21 - சப்புவோத்து கூடாரவிழா அல்லது சேர்ப்பின் விழா (விடு. 23:16; 34:22 - சுக்கோத்து - உடன்படிக்கைப் புதுப்பித்தல் விழா ஆகிய பல விழாக்களும் இடம்பெற்றன.

பொருத்தனை செய்தல் (நீதித். 11:30,31; 1 சாமு. 11:1), புனிதப்போர் (விடு.15:3,17-16; எண். 31:3; நீதித். 7:9-14...), சங்காரம் (கெரம் - இணை. 7:1-13; யோசு. 2:10; 6:17-24..) என்ற பல சமய விதிமுறைகளும் எழுந்தன.

உண்மை யாவே அடியாரைப் பொறுத்தமட்டில், இது யாவே சமயத்தின் ஒரு வீழ்ச்சிக் காலமாகும். இஸ்ரயேலரது நாடோடி மரபும் கானானியரது விவசாய மரபும் சந்தித்ததின் விளைவாக யாவே வழிபாட்டில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. கானானிய விழாக்கள் பலவற்றிற்குப் புது விளக்கங்கள் கொடுத்து அவற்றை இஸ்ரயேலர் பயன்படுத்தலாயினர். கானானிய விவசாய வாழ்க்கையை மேற்கொண்ட இஸ்ரயேலர் விவசாயத்துடன் தொடர்புகொண்டுள்ள பாகால வழிபாட்டையும் நாடலாயினர்; யாவேயைப் பாகாலைப் போல வழிபட முற்பட்டனர். இத்தகைய வழிபாடுகளில் கானானிய செழுமை வழிபாட்டுக் கூறுகளான திராட்சைரசம் குடித்தல், நடனமாடுதல், வேசித்தனம் செய்தல் ஆகிய சீர்கேடுகள் அதிகமாகக் காணப்பட்டன. இவை அனைத்தும் விவசாயச் சூழ்நிலையிலிருந்து தோன்றினவையாதலால், நாடோடி களாயிருந்து வந்த இஸ்ரயேல் மக்களுக்கு இவை முற்றிலும் புதியவை. பலர் இவற்றை ஆவலுடன் ஏற்றுக்கொண்டனர். ஆனால் வெகுவிரைவிலேயே வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட யாவே சமய நெறியின் தனிச் சிறப்பை உணர்ந்த ஒரு சில அடியார்கள், இயற்கையை அடிப்படையாகக் கொண்ட இந்த வழிபாட்டின் சீர்கேடுகளை உணர்ந்தனர். அதனை வெறுக்கவும் எதிர்க்கவும் முற்பட்டனர். இவற்றில் புதிதாகக் காணப்பட்ட பல கூறுகளை வெறுத்து, சிறப்பான பொருத்தனைகளைச் செய்து, தங்களை அந்தக் கானானிய கலாசாரத்திலிருந்து விலக்கிக் காத்துக்கொள்ள முயன்றனர். இப்படித் தோன்றியவர்களே நசீரர், இறைவாக்கினர் ஆகியோராவர்.

(ஈ) அரசமைந்த காலம்

இஸ்ரயேலர் அரசின் தோற்றம், வளர்ச்சி, முடிவு ஆகியவற்றைக் குறித்து ஏற்கெனவே கண்டோம் (இஸ்ரயேலர் வரலாறு என்னும் கட்டுரை காண்க). இஸ்ரயேலரது சமய வளர்ச்சியில் அரசமைப்பு முக்கிய ஓர் இடத்தை வகிக்கிறது எனலாம். குலத் தலைவர்கள் ஆளுகை மாறி, அரச ஆளுகை தொடங்கியது. அரசரே மக்களின் சமூக, சமய வாழ்க்கையின் தலைவராக விளங்கினார். அவர் மக்களின் பிரதிநிதியாகவும், யாவேயின் பண்ணையாளராகவும், அவரால் திருப்பொழிவு பெற்றவராகவும் கொள்ளப்பட்டதால் மக்களுடைய சமூக, சமய நலன்கள் யாவும் அவரைச் சார்ந்தே காணப்பட்டன. அவரே யாவே சமயத்தின் காவலர். அண்டை நாடுகளில் காணப்பட்ட வகையில் இங்கு அரசர் தெய்வமாகவோ அல்லது தெய்வீகத் தன்மை (divine) பொருந்தியவராகவோ கொள்ளப்படவில்லை. யாவேயின் பண்ணையாளராகவே கொள்ளப்பட்டார். யாவேயின் பண்ணையாளராதலால் புனிதராகக் (sacred) கொள்ளப்பட்டார். ஆகையால் அரசரைக் கொல்லுகிறவன் சாபத்துக்குள்ளாவான் எனப்பட்டது (1 சாமு. 26.11., 2 சாமு.4.11).

இப்படியாக, இக் காலத்தில் இஸ்ரயேலர் சமயத்தின் வளர்ச்சியும், வீழ்ச்சியும் அதன் அரசரைப் பொறுத்தே காணப்பட்டது. அரசர் நல்லவராயிருந்தால், அதாவது யாவேக்கு அஞ்சி நடப்பவராயிருந்தால், அவருடைய ஆட்சியும் நல்லதாக அமைந்தது. அதில் அவருடைய குடிகளும் நலமுற்று வாழ்ந்தனர். ஓர் அரசர் நல்லவரா கெட்டவரா என்பது யாவேக்கு நேராக அவர் நடந்துகொள்ளும் விதத்திலிருந்தே தெரியவருகிறது. அவர் யாவேக்கு அஞ்சி அவரின் திருச் சட்டத்தின்படி ஆட்சிபுரிந்து யாவே தொழுகை மேம்பட பாடுபடுவாராயின் அவர் நல்லவர் எனப்பட்டார். இப்படியாக, யாவேக்கு அஞ்சி நடந்து அவர் வழிபாட்டை நிலைநிறுத்திய தாவீது, அவரது கோவிலை கட்டிய சாலொமோன், வழிபாட்டில் சீர்திருத்தங்களைச் செய்த எசேக்கியா, யோசியா ஆகிய அரசர்கள் நேர்மையானவர்கள் எனப்பட்டனர். மாறாக, யாவே வழிபாட்டில் வேற்று தெய்வ வழிபாட்டுக் கூறுகளைப் புகுத்தியவர்களும், திருச்சட்டத்தின்படி நடவாதவர்களும் தீயவர்கள் எனப்பட்டனர். இப்படியாக நாடு பிளவுபடக் காரணமாயிருந்து கன்றுக்குட்டி வழிபாட்டை யாவே வழிபாட்டினுள் புகுத்திய எரொபெவாமின் பாவம் வன்மை யாகக் கண்டிக்கப்பட்டது. அவனைப் பின்பற்றி அத்தொழுகை யைப் பின்பற்றி வந்த வடநாட்டு (இஸ்ரயேல்) அரசர்கள் யாவருமே கண்டனத்துக்கு ஆளாயினர்.

அரசமைப்பின் தொடக்ககாலத்தில் இஸ்ரயேல் சமயம் தன் அமைப்பில் உறுதியுற்று வளர்ந்தது என்று காணலாம். எபூசியர் நாடான எருசலேமைத் தாவிது பிடித்து அதைத் தாவிதின் நகரம் என்ற பெயருடன் தலைநகராக்கியவுடன், யாவேக்குரிய பலிபீடமொன்றையும் இங்குக் கட்டி, இதை எல்லாக் குலங்களையும் இணைக்கும் ஒரு புனித இடமாக்கினார். இங்கு உன்னதரான கடவுள் (ஏல் எல்யோன் - el elyon) வழிபடப்பட்டு வந்தார். அபிரகாமுக்கு ஆசி வழங்கிய மெல்கிசெதேக்கு இக் கடவுளின் குரு என்பது மரபு (தொட. 14:18-20). பின்னால் சாலமோன் இங்குத் திருக்கோவிலை கட்டவே இதன் முக்கியத்துவம் அதிகரித்தது. எருசலேம் புனித நகராயிற்று. யாராலும் அதனைக் கைப்பற்ற முடியாது என்ற நம்பிக்கை வளர்ந்தது (2 அர. 18:35; 19:10). எசாயா போன்ற இறைவாக்கினர் இந்த எண்ணத்திற்குத் தூபமிட்டனர். (2 அர. 19:22,32,34).

எருசலேம் கோவில் இஸ்ரயேல் மக்கள் அனைத்தையும் இணைக்கும் ஒரு நடு இடமாகக் காணப்பட்டது. மக்கள் எங்கிருந்தாலும் இந்தக் கோவிலின் எண்ணம் அன்னார் உள்ளங்களில் இருந்துவந்தது. சிதறுண்ட இஸ்ரயேலர்

தாங்கள் இருந்த இடங்களிலிருந்தே இந்தக கோவிலை நோக்கி மன்றாடி வந்தனர் (1அர. 8:35, 38, 46, 47). இக் கோவிலை நோக்கி மன்றாடும் பிற இனத்தாரின் மன்றாட்டும் கேட்கப்பட்டது என்று நம்பப்பட்டது. நாடு பிளவுற்றபோது மக்களைப் பிரிப்பதற்காக எரொபவாம் கன்றுக்குட்டிகளைச் செய்து தாணிலும் பெத்தேலிலும் வைத்தான் (1 அர. 12:27-33) என்று காண்கிறோம். இருப்பினும், இந்தக் கோவில் இஸ்ரயேல் அரசின் இறுதி வரையிலும் மக்கள் நம்பிக்கையின் நடுநாயகமாக விளங்கியது.

எருசலேம் நகரும், அதன் கோவிலும் அழிவுறா என்று எவ்வாறு நம்பப்பட்டதோ, அவ்வாறே அங்கு ஆட்சி செய்த தாவிதின் அரசகுலமும் அழிவுறாது என்று நம்பப்பட்டது. தாவிதோடு கடவுள் செய்த உடன்படிக்கையைக் குறித்த மரபு (2 சாமு.7:13,14) இந் நம்பிக்கைக்கு உரமூட்டியிருக்கலாம். இந்நம்பிக்கையின் அடிப்படையிலேயே யூதாவின் மக்கள் அரசு அழிவுற்ற பின்னும் தங்களுக்குள் நீதியுள்ள அரசர், ஒரு மெசியா எழும்புவார் என்று நம்பிவந்தனர். எசாயா போன்ற இறைவாக்கினர்கள் இந்த நம்பிக்கைக்கு எண்ணெய் வார்த்தனர் எனலாம் (எசா. 7:14; 9:6; 11:1).

அரசமைப்பின் காலத்தில் இறைவழிபாடு நன்கு வளர்ச்சியுற்றருந்தது என்று காணலாம். குருத்துவப் பணி இக் காலத்தில் திட்டவட்டமான ஒரு ஒழுங்குக்குள் கொண்டு வரப்பட்டது. இவற்றைப்பற்றிப் பின்னால் காண்போம்.

அரசமைப்பின் காலத்தில் வழிபாட்டு ஆசாரங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு வலுவடைந்து காணப்பட்டனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு மக்களின் அறநெறி வாழ்க்கை வலுவற்று காணப்பட்டது. மக்கள் புறம்பான ஆசாரங்களில் கவனம் செலுத்தி, உள்ளான அறநெறிக் கூறுகளைப் புறக்கணிக்கலாயினர். எலியா, எலிசா, ஆமோஸ், ஓசேயா, மீக்கா, எசாயா ஆகிய இறைவாக்கினர் இக்குறையை எடுத்துக் காட்டி, தூய யாவே சமயத்தைக் காக்கப் பாடுபட்டனர் எனலாம். சிறையிருப்புக்குப் பின்னும் ஒரு தூய மீதியிருப்பு காணப்பட்தென்றால் அதற்கு இவ் விறைவாக்கினர்களின் பணி முக்கிய காரணம் எனலாம்.

(உ) சிறையிருப்பும் அதற்குப் பின்னும்

பாபிலோனியக் காலம்: மக்களின் புறம்பான வாழ்க்கையைக் கண்டு எட்டாம் நூற்றாண்டு இறைவாக்கினர் அன்னாரை அழிவு அடுத்துள்ளது என்று எச்சரித்து வந்தனர். அந்த அழிவு கிமு. 597, 586ஆம் ஆண்டுகளில் பாபிலோனிய அரசன் நெபுகாத்நேசரின் மூலம் வந்தது என்று காணலாம். புனித நகரம் என்று நம்பப்பட்ட எருசலேம் அழிவுற்றது. அதன் மக்கள் சிறையெடுத்துச் செல்லப்பட்டனர். யாவேயின் வீடான திருக்கோவில் அழிவுற்றது. அதன் செல்வங்கள் கொள்ளைகொள்ளப்பட்டன. கோவிலில்லை, உடன்படிக்கைப் பேழையுமில்லை, பலி இல்லை, வழிபாடு இல்லை. தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களோ பாபிலோன், அசீரியா, எகிப்து, ஏதோம், அம்மோன் ஆகிய பல நாடுகளிலாகச் சிதறடிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இஸ்ரயேலர் சமயம் முழுமையாக அழிவுற்றுப் போகாதிருக்கத் துணையாயிருந்தது எரேமியா இறைவாக்கினரின் பணியெனலாம். அவர் புறம்பான சமயத்தைத் தள்ளி உள்ளான சமயத்தை மக்களுக்குப் போதித்துத் தனியார் பொறுப்பை எடுத்துக்காட்டி, மக்கள் எங்கிருந்தாலும் யாவே நம்பிக்கையில் வேரூன்றி நிலைக்க ஆலோசனைகள் கொடுத்தார். மக்களும் எரேமியாவின் போதனையைக் கேட்டு தாங்கள் சென்ற இடங்களில் முழு மனத்துடன் வாழத் தொடங்கினர். அரசரும், தலைவர்களும் இல்லாத இக் காலத்தில்தான் **மூப்பராளுகை** முக்கியத்துவமடைந்தது (எசே. 14:1; 20:1). கோவில் இல்லாததால் அன்றாட பலி முதலான முறைகள் நின்று போயின. அவற்றின் இடத்தில் முன்னாட்களில் அத்தனை முக்கியத்துவம் பெற்றிராத **ஓய்வுநாள், விருத்தசேதனம்** ஆகிய முறைகள் முக்கியத்துவம் பெறலாயின (எசே. 20:12மு; 22:8,26; 23:38). தொழுமன்ற (synagogue) வழிபாட்டின் தோற்றத்தை இக் காலத்தில் காண்பர் சிலர். தீட்டு, தூய்மையின்மை, விலக்கு என்னும் பல வழிபாட்டு நியதிகள் இக் காலத்திலேயே வளர்ச்சியுற்றன (லேவி. 11). திருச்சட்டத்தைப் படிக்கிறவர்களும், படிப்பிக்கிறவர்களும் அதிகமாயினர். தாங்கள் திருச்சட்டத்தைச் சரிவரக் கடைபிடியாது நடந்ததால் தான் கடவுள் தங்களைச் சிறையாக அனுப்பியுள்ளார் என்று அன்னார் எண்ணியதால், இக்காலத்தில் திருச்சட்டத்தை எழுத்தின்படிக் கடைப்பிடிப்பதில் தீவிர ஆர்வம் காட்டினர். பிற்கால யூத சமயத்தின் தொடக்கத்தை ஒருவேளை நாம் இங்குக் காணக்கூடும்.

பாரசீக காலம்: கி.மு. 539இல் பாரசீக அரசர் சைரசு பாபிலோனை வென்று அரசரானார் என்று கண்டோம். இவர் காலத்தில் யூத மக்களின் வாழ்க்கையில் ஒரு முக்கிய திருப்பம் ஏற்பட்டது. தாய்நாடு திரும்ப விருப்பமுள்ள யூதர்கள் தாய்நாடு திரும்ப இவர் விடைகொடுத்தார் (எசுறா 1:2-4). இதன்படி பாபிலோன் வாழ் யூதர்களில் பலர் சேஸ்பசாரின் தலைமையில் தாய்நாடு திரும்பினர் (1:8). எசுறா 1-6 தரும் விவரங்களைக் கவனிக்குமிடத்து தாய்நாடு திரும்பின யூதர்களின் தொடக்கக்காலம் அவ்வளவு கவர்ச்சி நிறைந்ததாக இருக்கவில்லை என்பது புலப்படும். பெரிய எதிர்பார்ப்புகளுடன் வந்த மக்கள் (எசா. 1:9-11; 2:15-17) பல ஏமாற்றங்களை அடைந்தனர் (ஆகாய் 1:9; 2:15-17). சமாரியருக்கும் யூதருக்குமிடையில் சமாதான உறவு காணப்படவில்லை (2:10-14; செக். 8:10). ஆகாய், செக்கரியா இறைவாக்கினர் இக்காலத்தில் சோர்வடைந்திருந்த மக்களுக்கு ஊக்கமளித்து, அன்னார் ஒரு புது தொடக்கத்தைக் காண உதவினர் எனலாம்.

இந்த இறைவாக்கினரின்உற்சாகமூட்டலாலும் செருபாபேல், யோசுவா ஆகியோர் முயற்சியினாலும் அழிவுற்றிருந்த திருக்கோவில், கி.மு. 520இல் மீண்டும் கட்டப்பட்டு கி.மு. 516இல் முடிவுற்றது. அதைத் தொடர்ந்து நெகேமியா பாலஸ்தீனாவின் ஆளுநராக வந்து அலங்கத்தைக் கட்டி, பல சீர்திருத்தங்களைச் செய்து யூத சமூகத்தைக் கட்டியெழுப்பினார். இதைத் தொடர்ந்து வந்த எசுறா திருச்சட்டத்தை வலியுறுத்தி, யூதர்களின் சமய வாழ்க்கையை உறுதிப்படுத்தினார்.

இக்காலத்தில் யூத மக்களுக்கு அரசியல் உரிமைப்பேறு இல்லையே தவிர, சமய உரிமை காணப்பட்டது. ஆகையால் யூதர்கள் தங்கள் முழுக் கவனத்தையும் சமய முறைமைகளை உறுதிப்படுத்துவதிலேயே செலவிட்டனர். இப்படியாக குருத்துவ அமைப்பு, வேள்வி முறைகள், விழாக்கள் யாவும் இக்காலத்தில் அதிகமாக வளர்ச்சியடைந்தன. தலைமைக் குருவின் பதவி எழுந்தது இக்காலத்தில்தான். அரசன் இல்லாத இக்காலத்தில் தலைமைக்குரு யூதர்களிடையில் எல்லா வகையிலும் மிகுந்த செல்வாக்கு உடையவராகக் காணப்பட்டார்.

பாரசீக சமயமான சாரதுஸ்திரிய சமயத்தின் ஈடுபாட்டை நாம் யூத சமயத்தில் காணமுடிகிறது. சாரதுஸ்திரிய சமயத்தின் ஒரிறை வழிபாடு யூதர்களைக் கவர்ந்திருக்கவேண்டும். தூதர்கள்,

சாத்தான் ஆகியவற்றைப்பற்றிய நம்பிக்கைகளை யூதர்கள் பாரசீகரிடமிருந்தே பெற்றிருக்கலாம்.

கிரேக்க காலம் கி.மு. 330 ஆண்டளவில் பாரசீக ஆட்சி முடிவுற்று கிரேக்க ஆட்சி தொடங்கியதென்று கண்டோம். கிரேக்கர்கள் கொள்கை இதற்கு முன்னாலுள்ள வல்லரசுகளின் கொள்கைகளினின்றும் வேறுபட்டதாயிருந்தது. அன்னார் அரசியல் ஆதிக்கத்தில் மட்டும் நிறைவடையாமல், சமய, கலாசார ஆதிக்கத்தையும் விரும்பினர்; கிரேக்க கலாசாரத்தை நாடெங்கும் பரப்பத் தீவிரமாக முயன்றனர். இது யூதர்களின் வெறுப்பைச் சம்பாதித்தது. செலூக்கிய மன்னனான நான்காம் **அந்தியோகு எப்பிப்பானசின்** காலத்தில் நிலைமை மோசமானது. யூதர்களின் எதிர்ப்பு மக்கபேயர் கலகத்தில் முடிவடைந்தது. யூதாஸ் மக்கபேயுவின் தலைமையில் யூதர்கள் எப்பிப்பானசின்மேல் வெற்றிகொண்டனர். கி.மு. 165ஆம் ஆண்டு டிசம்பர் (கிஸ்லேவ்) மாதம் 25ஆம் நாள் யூதர்கள் திருக்கோவிலைத் தூய்மைப்படுத்தி மீண்டும் அர்ப்பணம் செய்தனர் (1 மக். 4:36-59). இதன் விளைவாக பிற்காலத்தில் அர்ப்பண விழாவென்னும் கனுக்கா விழாவை யூதர்கள் ஆசரித்து வந்தனர். யூதாசுக்குப்பின் யோனத்தான், சீமோன் ஆகியோர் தலைமை தாங்கி யூதர்களை நடத்தினர். இவர்களில் சீமோன் அரசியல் தலைவராகவும், சமயத் தலைவராகவும் விளங்கினார்; தலைமைக் குருவாக அருள்பொழிவு செய்யப்பட்டார் (14:35-41). இப்படியாக, சீமோன் காலத்திலிருந்து யூதர்களுக்குள் குருத்துவமும், அரசும் இணைந்ததொரு புதிய ஆளுகை உருவானது. இது **காஸ்மோனியர் ஆளுகை** என்று அறியப்பட்டது. இவ் வாளுகையின் கடைசித் தலைமைக் குருவான அரிஸ்தோபுலஸ் (கி.மு. 66-63) காலத்தில், உரோமை அரசரான பாம்பே எருசலேமை அழித்து இந்த காஸ்மோனிய ஆட்சிக்கு ஒரு முடிவுகட்டினார்.

ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளாக யூதர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் கிரேக்க ஆதிக்கத்திற்குள் இருந்து வந்தனர். யூதர்களிடையில் இருவகை மக்கள் காணப்பட்டனர். ஒரு சாரார் அனைத்துலக நோக்குடன் நவீனமான எந்தக் கலாசாரத்தையும் ஏற்க ஆயத்தமுடையவர்களாகக் காணப்பட்டனர். கிரேக்க கலாசாரத்தை முழுமனத்துடன் ஆதரித்தனர். மக்கபேயர் காலத்தில் காணப்பட்ட தொபியரும், பின்னால் எழுந்த சதுசேயரும். இவ்வகுப்பைச் சேர்ந்தவர்களாவர். இன்னொரு சாரார் வைதீக நோக்குடையவர்கள். திருச்சட்டத்துக்கும், மரபுக்கும் ஒத்துவராத எந்தக் கலாசாரத்தையும் எதிர்த்து வந்தனர். யூதர்களிடையே காணப்பட்ட **ஹசிதீம்** என்னும் கூட்டத்தாரும், மக்கபேயர் காலத்தில் காணப்பட்ட **ஓனியரும்**, பின்னால் எழுந்த **பரிசேயரும்** இவ்வகுப்பைச் சார்ந்தவராவர்.

கிரேக்கரிடையில் காணப்பட்ட ஒரிறை நம்பிக்கை, ஆன்மாவுக்கும் உடலுக்குமிடையிலுள்ள இருமைக் கொள்கை (dualism), ஆன்மீக வாழ்க்கை, இறுதியியல் நம்பிக்கைகள் என்ற பல யூத சமய நம்பிக்கைகள் வளர்ச்சியடைய கிரேக்க ஈடுபாடு காரணமாயிருந்திருக்கலாம். உயிர்த்தெழுதலைப் பற்றிய நம்பிக்கை யூதர்களிடையே உருவான ஒன்றாக இருப்பினும், நிலைவாழ்வைப் பற்றிய நம்பிக்கை (immortality) கிரேக்கரிடையில் எழுந்த ஒன்றாகும்.

5. இஸ்ரயேலர் சமயத்தின் முக்கிய கூறுகள்

(அ) வழிபாட்டிடங்கள்

இஸ்ரயேலர் வரலாற்றின் துவக்க நாள்களில் மக்கள் இறைவல்லமை எங்கெல்லாம் வெளிப்பட்டதாக நம்பினார்களோ, அங்கெல்லாம் வழிபாடு செய்து வந்ததாகக் காணலாம். இத்தகைய வழிபாட்டிடங்களில் பலவும் பெரிய மரங்கள், குன்றுகள், நீரூற்றுகள் ஆகியவற்றின் அருகில் அமைந்துள்ளன. இவ்வழிபாட்டிடங்கள் பழமையானவை என்பதையும், ஏற்கெனவே பிற மக்களிடையில் முக்கியத்துவமடைந்திருந்த தொழுகையிடங்களையே இஸ்ரயேலர் எடுத்துக்கொண்டனர் என்பதையும் மேற் கூறிய உண்மை விளக்கக்கூடும். பின்னால் எருசலேமில் மட்டுமே வழிபாடு செய்யப்படவேண்டும் என்ற சட்டம் வலியுறுத்தப்பட்டபோது (இணை. 12:1-6) இத்தல வழிபாட்டிடங்கள் யாவும் (localsanctuaries) தங்கள் முக்கியத்துவத்தை இழந்து, வைதீகச் சமயவாதிகளின் கண்டனத்திற்கும் இலக்காயின. இவற்றில் முக்கியமான சிலவற்றை இங்குக் காண்போம்.

1. **செக்கேம்** (தொட. 12:6). கானானில் ஆபிரகாம் முதலாவது தங்கிய இடம்; குறி சொல்லுவோர் மரம் அல்லது குருமரம் எனப்பட்ட மோரேயின் மரம் இங்கு நின்றது. இது ஒரு கானானியர் வழிபாட்டிடம் என்பது அக்காலத்தில் கானானியர் அந் நாட்டில் இருந்தார்கள் (12:7) என்று கூறப்படுவதால் தெரியவருகிறது. இங்கு கடவுளுடைய வெளிப்படுத்தல் ஆபிரகாமுக்குக் கிடைத்தது என்பது மரபு. யாக்கோபு செக்கேமின் சிலைகள் அனைத்தையும் இங்குள்ள கர்வாலி மரத்தின்கீழ் புதைத்தார் (35:1-4). யோசேப்பின் எலும்புகள் இங்குப் புதைக்கப்பட்டன (யோசு. 24:32). யோசுவா மக்களுடன் உடன்படிக்கை செய்த இடமும் இதுதான் (24:28). இங்கு யோசுவா பெரிய கல் (மத்சேபா - mazzebah) ஒன்றை நிறுத்தினார். செக்கேமிலே தூண் நின்ற கர்வாலி மரத்தண்டையில் அபிமெலேக்கு அரசராகப் பிரகடனம் செய்யப்படுகிறார் (1 அர. 12:1). இப்படியாக செக்கேம், முக்கியத்துவம் வாய்ந்த மிகப் பழமையானதொரு வழிபாட்டிடம் என்று காண்கிறோம்.

2. **பெத்தேல்** (தொட. 28:10-22). ஏலின் வீடு அல்லது கடவுளின் வீடு என்பது பொருள். எலிபன்தீன் யூதர்களிடையில் காணப்பட்ட தெய்வங்களின் பெயர்களில் இச் சொல் இடம் பெறுகிறது. இது தோற்றத்தில் தெய்வம் ஒன்றின் பெயராக இருந்திருக்கலாம் (31:13; எரே. 48:13; ஆமோஸ் 5:5 காண்க). தொட. 28:10-22இல் இந்த வழிபாட்டிடத்தின் தோற்றம் யாக்கோபுடன் தொடர்புபடுத்தப்படுதலைக் காண்கிறோம். யாக்கோபு இங்குப் பலிபீடமொன்றைக் கட்டினார் (35:1-9,14,15). பிற்காலத்தில் இது புனிதப்பயணத்துக்கு உரிய ஓர் இடமாகக் கொள்ளப்பட்டது (நீதித். 20:18,26-28; 21:2; 1சாமு. 10:3; ஆமோஸ். 4:4). ஆண்டவருடைய உடன்படிக்கைப் பேழை இங்குச் சிலகாலம் இருந்தது (நீதித். 20:27). இது தோற்றத்தில் கானானிய வழிபாட்டிடமாக இருந்திருத்தல் கூடும். பிற்காலத்தில் யாவே சமயம் வீழ்ச்சியடைந்த காலத்தில் கானானிய வழிபாடு இங்கு மீண்டும் புகுத்தப்பட்டதாகக் காணலாம். இறை வாக்கினர் இதனைக் கண்டித்தனர் (ஆமோஸ் 4:4; 5:5).

3. மம்ரே (தொட. 13:18). மூதாதையர் காலத்தில் வழக்கிலிருந்தது. ஆபிரகாம் இங்கு மூன்று மனிதரைச் சந்தித்தார் (18).

4. பெயர்சேபா (21:22 - 31). இதுவும் மூதாதையர் கால வழிபாட்டிடங்களில் ஒன்று. ஈசாக்குக்கு இங்கு வெளிப்படுத்தல் கிடைத்ததாகவும், அவர் இங்கு பலிபீடம் ஒன்றைக் கட்டியதாகவும் அறிகிறோம் (26:23-25). யாக்கோபும் இங்குப் பலியிட்டார் (46:1-4). 21:33 இதன் தோற்றத்தை ஆபிரகாமுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. அரசமைப்பின் காலத்தில் வடநாட்டார் இவ்விடத்திற்குப் புனிதப் பயணம் சென்றனர் (ஆமோஸ் 5:5; 8:14). இதுவும் தோற்றத்தில் கானானியர் வழிபாட்டிடமாக இருந்திருத்தல் வேண்டும். எட்டாம் நூற்றாண்டு இறைவாக்கினர் இதனைக் கண்டித்தனர் (4:4; 5:5; ஓசே. 4:12-19; 6:9).

5. கில்கால் (யோசு. 5:9). யோசுவா நீதித் தலைவர்கள் காலத்தில் முக்கியத்துவமடைந்ததோர் இடம். ப.ஏ.இல் ஒன்றிற்கு மேற்பட்ட இடங்கள் இப்பெயரால் அறியப்பட்டன (2 அர. 2:1; 4:38 - இச. 11:30 - யோசு. 15:78 - யோசு. 12:23 - யோசு. 4:9,20). எரிகோவுக்குக் கிழக்கான கில்காலே இங்கு நம் கவனத்திற்குரியது (யோசு. 4:9,20; 5:9,10; 9:6; 10:7,9; 14:6). யோதானைக் கடந்த இஸ்ரயேலர் இங்கு 12 கற்களை எடுத்துவைக்கின்றனர். இங்குதாம் இஸ்ரயேலர் விருத்தசேதனமும் செய்து கொள்கின்றனர். யாவேயின் திருக்காட்சியும் இங்குதாம் அருளப்படுகிறது. யோசுவா கிபயோனியருடன் உடன்படிக்கை செய்வதும் அங்கு வைத்தே. சாமுவேல் இதனைச் சந்தித்து வந்தார் (1 சாமு. 7:16). சவுல் இங்கு அரசராக்கப்பட்டார் (11:14,15); அவர் தள்ளப்பட்டதும இங்கு வைத்தே (13:4-15அ; 15:17-31). இதுவும் தோற்றத்தில் கானானியர் வழிபாட்டிடமாக இருந்திருக்க வேண்டும். பிற்காலத்தில் இறைவாக்கினர் இதனைக் கண்டித்தனர் (ஆமோஸ் 4:4; 5:5; ஓசே. 4:25; 9:15).

6. சீலோ (நீதித். 21:19). எப்பிராயிமில் பெத்தேலுக்கு வடக்காகவுள்ளது. யோசுவா காலத்திலிருந்து சாமுவேலின் காலமளவும் இஸ்ரயேலருக்கு முக்கியமான ஒரு வழிபாட்டிடமாகக் காணப்பட்டது (யோசு. 14:1; 18:1,8-10; நீதித். 18:31; 21:12,19; 1 சாமு. 1:3,9; 2:14). இங்குள்ள வழிபாட்டிடத்தில் ஏலியும் சாமுவேலும் பணியாற்றினர் (1:9; 3:3). உடன்படிக்கைப் பேழையும் கூடாரமும் இங்கேதான் வைக்கப்பட்டிருந்தன (யோசு. 18:1). குலங்களுக்குள் நாட்டை பங்கீடு செய்ய யோசுவா இங்கு வைத்து சீட்டுப்போட்டார். ஆண்டுதோறும் மக்கள் இந்த இடத்திற்கு புனிதப் பயணம் சென்றனர் (நீதித். 18:31; 21:19).

உடன்படிக்கைப் பேழையை பெலிஸ்தியர் கைப்பற்றியதோடு சீலோவின் முக்கியத்துவம் குறைந்தது.

7. மிஸ்பா (20:21). இப்பெயர்கொண்ட பல இடங்கள் காணப்பட்டன - கிலயாத்திலிருக்கிற மிஸ்பே (தொட. 31:49), மிஸ்பா நாடு (யோசு. 11:3). மிஸ்பா நாடு (யோசு. 11:3). மிஸ்பே பள்ளத்தாக்கு (11:8). யூதாவிலுள்ள மிஸ்பே (15:38). மோவாபிலுள்ள மிஸ்பே (1 சாமு. 22:3). பென்யமினிலுள்ள மிஸ்பா (யோசு. 18:26). இவற்றில் பென்யமினிலுள்ள மிஸ்பாதான் சமயச் சார்பிலும் அரசியல் சார்பிலும் இஸ்ரயேல் மக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. சாமுவேல் இஸ்ரயேலரை இங்கு கூடி வரச்செய்து கடவுளுடைய விருப்பத்தை அன்னாருக்கு வெளிப்படுத்தினார் (1 சாமு. 7; 10:17-27).

8. கிபயோன் (யோசு. 9). சாலமோனின் காலத்தில் இங்கு ஒரு சிறப்பு மிக்க மேடை இருந்ததாகவும், இதன் மேல் சாலமோன் ஆயிரம் எரிவேள்விகள் செலுத்தியதாகவும் கூறப்படுகிறது. இங்கு வைத்து யாவே சாலமோனுக்கு இருமுறை காட்சியளிக்கிறார் (1 அர. 3:4,5; 9:2). மோசே பாலை நிலத்தில் செய்த யாவேயின் உறைவிடம், முழு எரிபலிபீடமும் இம் மேடையில் இருந்ததாக ஒரு மரபு கூறுகிறது (1 குறி. 16:39; 21:29; 2 குறி. 2:3,13).

9. ஒப்ரா (நீதித். 6). கிதயோன் இங்கு ஆண்டவருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி வழிபட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. இது மனாசே குலத்துக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் ஒன்று.

10. தாண் (18). பாலஸ்தீனாவின் வட எல்லையிலுள்ள ஒரு நகரம், முன்னாள் பெயர் இலாயீசு. தாண் குலத்தார் மீகாவின் வீட்டிலிருந்த சிலைகள் பலவற்றை எடுத்து வந்து இங்கு தங்களுக்கென்று ஒரு வழிபாட்டு இடத்தை ஆயத்தப்படுத்திக்கொண்டனர். எரொபவாம் இங்கு யாவேக்கு ஒரு கோவில் கட்டி பொன் கன்றுக்குட்டி ஒன்றை அதில் வைத்தான் (1 அர. 12:29).

11. எருசலேம் (தொட. 14:18-20). இது முன்னால் எபூசியர் நாடாக இருந்தது. இதைப் பிடித்த தாவிது இதனை தம் தலைநகராக்கினார். தொடக்ககாலத்தில் இங்கு சாலேம் என்னும் தெய்வம் வழிபடப்பட்டு வந்ததாக கருதப்படுகிறது. எருசலேம் என்றால் சாலேமின் நகர். அதாவது அமைதியான நகர் என்பது பொருள். தாவிது இங்கு பலிபீடம் ஒன்றைக் கட்டினார். பின்னால் சாலமோன் பெரிய திருக்கோவிலைக் கட்டினார். இது கடவுளுடைய நகர் என்றும், ஆகையால் தூய்மையானது என்றும், யாரும் இதனைக் கைப்பற்ற முடியாது என்றும் நம்பப்பட்டது. கி.மு. 586இல் பகைவரால் அழிவுற்ற பின்னும் இந் நகர் கட்டி எழுப்பப்படும் என்றும், கடவுள் இந் நகருக்குத் திரும்புவார் என்றும் மக்கள் நம்பினர்.

எருசலேம் முக்கியத்துவமடையவே பிற வழிபாட்டிடங்களின் முக்கியத்துவம் குறைந்தது. அத்துடன் ஒரிட வழிபாடு சட்டம் வழியாக (ஒபா. 12) செயல்படுத்தப்பட்டபோது எருசலேமைத் தவிர வேறு இடங்களில் வழிபாடு செய்வது தவறு என்று கொள்ளப்பட்டது. அதிலிருந்து மற்ற இடங்கள் யாவும் வைதீக சமயத்தின் கண்டனத்திற்கு ஆளாயின.

(ஆ) வழிபாட்டுச் சின்னங்கள்

சிலை வழிபாடு தவறு என்னும் கருத்து வைதீகச் சமயத்தில் காணப்பட்டபோதிலும் (விடு. 20:3) இஸ்ரயேல் பாமர மக்களிடையில் பல வழிபாட்டுச் சின்னங்கள் முக்கியத்துவம் வாய்ந்தன என்று காணலாம். இவற்றில் சில தூவக்கத்தில் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படாதனவாக இருந்திருக்கக் கூடும். பின்னால் மக்கள் இவற்றைத் தெய்வங்களாகவே கொள்ள முனைந்தபோது வைதீக சமயத்தார் கண்டித்திருக்கலாம்.

1. பாம்பு. பாலைநிலத்தில் மோசே வெண்கலத்தினால் பாம்பின் உருவம் ஒன்றைச் செய்து ஒரு கம்பத்தில் வைத்ததாக அறிகிறோம் (எண். 21:4-9). இது இஸ்ரயேலரிடையில் வழக்கிலிருந்த பாம்பு வழிபாட்டின் ஒரு கூறாக இருந்திருக்கலாம். எசேக்கியா அரசர் இவ்வழிபாட்டை அகற்றினார் (2 அர. 18:4).

2. காளை அல்லது கன்றுக்குட்டி. மோசே சீனாயிலிருந்து வர தாமதித்ததும் ஆரோன் பொன்னினால் கன்றுக்குட்டி ஒன்றைச் செய்து அதை மக்கள் முன் தெய்வமாகக் கொடுக் கிறதாகக் காண்கிறோம். (விடு. 32:4). அப்படியே பின்னால் எரோபவாம் செய்கிறதாகக் காண்கிறோம் (1 அர. 12:28). இது கானானியரிடையிலிருந்து வந்த ஒரு கூறாக இருக்கலாம். கானானிய தெய்வங்களின் தலைவரான ஏல், காளை ஏல் என்று அறியப்பட்டார். இந்த ஏலையும், யாவேயையும் இஸ்ரயேலர் ஒன்றாகக் கொண்டனர். இங்கு காளையை இஸ்ரயேலர் யாவேயின் சின்னமாகக் கொண்டனரா அல்லது வாகனமாகக் கொண்டனரா என்பது திட்டமாகத் தெரியவில்லை. இதன் வழிபாடு துவக்கத்தில் ஏற்கப்பட்ட ஒன்றாகக் காணப்பட்டிருக்கலாம். பின்னால் கானானிய செழுமை வழிபாட்டில் இது முக்கிய இடம் பெறவே யாவே அடியார் இதனைக் கண்டித்திருக்கக்கூடும் (ஓசே. 8:5, 6; 10:5).

3. உடன்படிக்கைப் பேழை. இது கடவுளுடைய பேழையென்றும், உடன்படிக்கைப் பேழையென்றும் அறியப்பட்டது. இதைப்பற்றிய வரலாறு விடு. 25:10-22; 37:1-9 ஆகிய பகுதிகளில் காணக்கிடைக்கிறது. கட்டளை பலகைகள் இதனுள் வைக்கப்பட்டன என்பது மரபு (இணை. 10:1-5; 1 அர. 8:9). மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும் ஆரோனின் துளிர்த்த கோலும் அத்துடனிருந்தன என்று எபிரேய திருமுக வாக்கியம் கூறுகிறது (9:4). இது பெத்தேலிலும் (நீதித். 21:2), சீலோவிலும் (1 சாமு. 3:3), கிரியத்யெயாரீமிலும் (7:1) சில காலம் வைக்கப்பட்டிருந்ததாக அறிகிறோம். பின்னால் தாவிது இதனை எருசலேமுக்கு கொண்டுவந்து அங்கு தாம் ஏற்படுத்திய கூடாரத்தில் இதனை வைத்தார்(2 சாமு. 6.17). திருக்கோவிலைக் கட்டி முடித்ததும் சாலமோன் இதனை மா தூயஸ்தலத்தில் கொண்டு வைத்தார் (1 அர. 6:19). இது மா தூயதாகக் கொள்ளப்பட்டது. தாகோனைப் பணியச் செய்யவும் (1 சாமு. 5;3-5), மாடுகள் தங்கள் கன்றுகளைவிட்டு ஓடச் செய்யவும் (6) தக்கதான ஆற்றல் நிறைந்த ஒரு பேழையாக இது காணப்பட்டது என்றறிகிறோம். இதனை எட்டிப் பார்ப்போரும், தொட்டவர்களும் மாண்டனர் (6:19, 2 சாமு. 6:7). இப்பேழை சென்ற பெலிஸ்திய நகர்கள் யாவும் பாதிக்கப்பட்டன. இஸ்ரயேலர் இதனை யாவேயின் இருப்பிடமாகக் கொண்டிருக்கக்கூடும். பேழை பிடிபட்டுப் போனதைக் கேள்வியுற்ற ஏலியின் மருமகள் இஸ்ரயேலின் மாட்சி எடுபட்டுப் போனதாகக் கூறியதாகக் காண்கிறோம். இப் பேழையைப் பற்றிப் பின்னால் நாம் எதையும் கேள்விப்படவில்லை, என்ன ஆனது என்பது தெரியாது.

4. சந்திப்புக் கூடாரம். பாலைநிலத்தில் மோசே யாவே தங்குவதற்கான ஒரு கூடாரத்தைச் செய்ததாகவும், இக் கூடாரத்திலிருந்து யாவேயின் வெளிப்படுத்தல் கிடைத்ததாகவும், இஸ்ரயேலர் சென்ற இடமெல்லாம் இதனையும் கூடவே கொண்டுசென்றதாகவும் அறிகிறோம் (விடு 33:7, எண் 11:6, 12:4). விப. 25-31 ஆம் அதிகாரத்தில் இது கட்டப்பட்ட வரலாற்றைக் குருத்துவ மரபு ஆசிரியர் (P) கொடுக்கிறார். குருத்துவ மரபு ஆசிரியர் கூறுவதைப் போன்ற ஒரு கூடாரம் உண்மை வழக்கிலிருந்ததா என்பது ஒரு பிரச்சனை. சாலமோனின் கோவிலின் அடிப்படையில் பிற்காலத்தில் எழுந்ததோர் இலட்சிய கற்பனைப்படைப்பு என்பர் பலர். ஆனால் பாலைநிலக் காலத்தில் உடன்படிக்கைப் பேழையை வைப்பதற்கும், வழிபடுவதற்கும் ஒரு கூடாரம் இருந்திருக்கக் கூடுமென்பதில் ஐயமில்லை. கானானுக்குள் புகுந்தபின் நிலையான கோவில்கள் எழும்பவே இது தன் முக்கியத்துவத்தை இழந்திருக்கலாம். இப்படியாக சீலோவின் வழிபாட்டுத் தலத்திற்கு வெளியே இது காண்பட்டதாகப் பார்க்கிறோம் (1 சாமு. 2:22). சீலோ அழிக்கப்பட்டதுடன் இக் கூடாரத்தின் வரலாறும் அழிவுற்றிருக்கலாம். பின்னால் தாவிது இதைப் போன்றதொரு கூடாரத்தைச் செய்து எருசலேமில் வைத்தார் (2 சாமு. 6:17).

5. ஏபோத்து. கிதியோன் பொன்னினால் ஏபோத்தைச் செய்து ஒப்ராவில் வைத்தார் என்றும், அது இஸ்ரயேலருக்குக் கண்ணியானது என்றும் காண்கிறோம். இச் சொல்லின் தோற்றமும் பொருளும் திட்டமாகத் தெரியாது (நீதித். 8:27). மீக்கா பிற சிலைகளுடன் தொழுகைக்காக ஒரு ஏபோத்தையும் செய்தார் (17:15, 18:4). இங்கு ஏபோத்து என்பது ஒரு சிலை என்பதாகப் பார்க்கிறோம். வேறு, ஏபோத்து குரு அணியக்கூடிய ஒரு ஆடையாகவும் குறிக்கப்படுகிறது (1 சாமு. 2:18,19, 22:18). இது நிமித்தம் பார்க்கும் ஒரு கருவி என்றும் குறிக்கப்படுகிறது (2 சாமு. 14:3,18, 23:9). ஏபோத்து தோற்றத்தில் ஓர் அங்கியாக இருந்திருக்கக்கூடும். இது தொடக்கத்தில் சிலைகளுக்கு போர்த்தப்பட்டு வந்தது. இவ்வங்கி போர்த்தப்பட்டு வந்ததால் ஒருவேளை அச்சிலையும் ஏபோத்து என்று குறிக்கப்பட்டிருக்கவேண்டும். கடவுளுடைய திருவுளத்தை அறியவேண்டிய வேளைகளில் குருக்கள் இதனைப் போர்த்துக் கொண்டனர் அல்லது சுமந்து சென்றனர்.

6. சிலைகள். இஸ்ரயேலர் சமயத்தின் தொடக்க நாள்களில் அன்னாரிடையில் பலவகையானச் சிலைகள் வழக்கிலிருந் ததாக அறிகிறோம். மீக்கா வழிபாட்டுக்கென்று வீட்டுச்சிலை (தேராபீம்), வெட்டுச்சிலை, வார்ப்புச்சிலை ஆகியவற்றைச் செய்தார் என்று காணலாம் (நீதித். 17:3,4). பின்னால் தாண் குலத்தார் இவற்றைத் தங்கள் வழிபாட்டுக்கென்று திருடிச் சென்றுவிட்டனர். தேராபீம் என்பது இறந்தோர் வழிபாட்டுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. லாபானுடைய வீட்டிலிருந்து ராகேல் இதை எடுத்து வந்தார் (தொட. 31:19,30-35). இது வீட்டின் தலைவருக்கே உரியது. இது குறிபார்ப் பதற்கும் பயன்படுத்தப்பட்டதாக அறிகிறோம் (நீதித். 18:14,17,20. 1 சாமு. 15:23, 2 அர. 23:24).

வெட்டுச்சிலை என்பது கல்லிலோ, பிற உலோகங்களிலோ செதுக்கிச் செய்யப்பட்டச் சிலை, வார்ப்புச்சிலை என்பது உலோகத்தை உருக்கி, வார்த்துச் செய்யப்படுவது. பிந்திய காலங்களில் இவை யாவும் தடை செய்யப்பட்டன (விடு. 20. 4. லேவி. 26.1, இணை. 4.23,25...).

7. ஊரிம், தும்மிம். இவை ஜோதிகள், பரிபூரணங்கள் என்று பொருள்படக்கூடும் என்று கருதப்படுகிறது. இவை குருவுடைய ஏபோத்துடன் இணைக்கப்பட்டிருந்த நடுத்தீர்ப்பு மார்பகத்தினுள் வைக்கப்பட்டன என்று காண்கிறோம் (விடு. 28:16, 28-30). இவை கடவுளுடைய திருவுளத்தை அறிவதற்காகப் பயன்படுத்தப்பட்டன (யோசு. 7, 1 சாமு. 14:41,42).

8. எருசலேம் திருக்கோவிலும் அதன் பணிமுட்டுகளும். எருசலேம் திருக்கோவில் எழுந்தபின் இதன் முக்கியத்துவம் பிற வழிபாட்டுச் சின்னங்கள் யாவற்றினும் முக்கியத துவத்தைவிட மேம்பட்டு நின்றது. திருக்கோவில் கடவுளுடைய உறைவிடமாகக் கொள்ளப்பட்டது. இதன் பணிமுட்டுகள் தூய்மையானவையாகக் கருதப்பட்டன (கோவிலின் அமைப்பைப்பற்றிய விவரங்களை இஸ்ரவேலர் சமயம், பக். 228 - 235இல் காண்க). இதன் முகப்பில் யாகின், யோவாஸ் என்ற இரு தூண்கள் காணப்பட்டன (1அர. 7:21).

அரசர்கள் இத்தூண்களின் அருகில் வைத்து திருப் பொழிவு செய்யப்பட்டுவந்ததாக அறிகிறோம். இவை தூபம் அல்லது விளக்கு ஏற்றுவதற்கான தூண்கள் என்பர் பலர். பகல் இராச்சாம நாள்களைக் (equinoxes) கணக்கிட ஏற்படுத்தப்பட்டவை என்பர் சிலர். இவை வாழும் மரங்களைக் குறிப்பிடுவன என்றும் அல்லது மேகத்தூண், நெருப்புத்தூண் ஆகியவற்றைக் குறிப்பிடுவன என்றும் கூறுவர் வேறு பலர்.

முகப்பை அடுத்த பகுதி திருக்கோவில். இது தூயத்தலம் என்றும் அறியப்பட்டது (1 அர. 6:39). இங்கு வழிபாட்டுக்கான பொற்பலிபீடம், சமுகத்து அப்பங்களை வைப்பதற்கான பொன் மேசை முதலானவை காணப்பட்டன.

அதற்கு அடுத்ததாகக் கருவறை காணப்பட்டது (1 அர. 6:19, 20). இது மகா தூயத்தலம் என்று அறியப்பட்டது. கடவுளுடைய பேழை இதனுள் வைக்கப்பட்டது. 10 முழ உயரமுள்ள கெருபுக்கள் அதன் மேல் வைக்கப்பட்டன. இவை காவல் காப்பதற்காக வைக்கப்பட்டன போலும்.

கோவிலின் எதிரிலுள்ள மண்டபத்தின் நடுவில் ஒரு **வெண்கலப் பலிபீடம்** வைக்கப்பட்டது (1 அர. 8:64; 9:25). இதில் பலிகள் செலுத்தப்பட்டன. ஆகாஸ் என்னும் அரசன் இதை அகற்றி, சிரிய தெய்வமான ஆதாதின் பலிபீடத்தின் மாதிரியில் இன்னொரு பலிபீடம் செய்து அதன்மேல் பலியிட்டான் (2 அர. 16:10,11). இந்த வெண்கலப்பீடத்தை திருவுளம் பார்க்கவென்று ஒதுக்கிவைத்தான் (2 அர. 16:15).

நடுமண்டபத்தில் திருவுரைமேடை ஒன்று வைக்கப்பட்டது (2 குறி. 6:12,13). கோவில் அர்ப்பணத்தின் போது சாலமோன் இதன் மேல் ஏறினார்.

கோவிலின் தென்கிழக்குப் பகுதியில் **கடல் என்னும் வெண்கலத்தொட்டி** வைக்கப்பட்டது (1 அர. 7:23-26, 2 குறி. 4:2-5). இது 12 காளைச் சிலைகள் மேல் வைக்கப்பட்டிருந்தது. எகிப்தின் புனித ஏரிகளின் மாதிரியாகவோ அல்லது பாபிலோனிய அப்சு (Apsu=பூமியின் கீழ்த் தண்ணீர் விடு. 20. 4) என்னும் தெய்வத்தின் மாதிரியாகவோ இக்கடல் தொட்டி தோற்றத்தில் செய்யப்பட்டிருக்கலாம். தொட்டியைச் சுமக்கும் 12 காளைகளும் இராசி மண்டலத்தின் 12 அடையாளங்களையும், கடல் தொட்டி வானக் கடலையும் குறிக்குமென்பர் சிலர்.

(இ) வழிபாட்டுப் பணியாட்கள்

மூதாதையர் காலத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டதொரு வழிபாட்டமைப்பு காணப்படவில்லை. குடும்பத் தலைவர்களே இக் காலத்தில் பலிசெலுத்தி வந்தனர் தொட. 13..18, 15:4மு, 26,25). யோசுவா, நீதித்தலைவர்கள் காலத்திலும் யாரும் பலிசெலுத்தலாம் என்ற நிலைமை இருந்து வந்தது. இப்படியாக மீக்கா தம் புதல்வரில் ஒருவரைப் பலியிடுவதற்கென தனிப்படுத்துவதாகக் காணலாம், ஆனால் லேவியர் ஒருவர் கிடைப்பாரானால் அவர் விரும்பப்பட்டார் (நீதித். 17). அரசமைப்பின் ஆரம்ப நாள்களிலும் இப்பணி திட்ட வட்டான வரையறைக்குள் கொண்டுவரப்படவில்லை. லேவிய ரல்லாதவர்களும் இக் காலத்தில் பலிசெலுத்தி வந்தனர் சவுல் (1 சாமு. 13:8-13), தாவிது (2 சாமு. 6:12-19), சாலமோன் (1 அர. 8:22,23,62,63), எரொபெவாம் (1 அர. 12:32,33).

ஆனால், முக்கிய வழிபாட்டிடங்களில் லேவிய மரபினர் வழிபாடு நடத்தி வந்ததாக அறிகிறோம் தாணில் மோசேயின் மரபிலிருந்து வந்த குருத்துவக் குடும்பம் (நீதித். 18:1-4,15,20,30), சீலோவில் ஆரோன் வழிவந்த ஏலியின் குடும்பம் (1 சாமு. 1 -4, 22:20).லேவி குலம் எவ்வாறு உண்டானது? ஏன் இதற்கு உடைமைப்பேறு ஒன்றும் கொடுக்கப்படவில்லை? இவற்றிற்குத் திட்டமான விளக்கங்கள் தரமுடிவதில்லை. இரு உண்மைகளை நாம் அனுமானிக்கக்கூடும். (1) லேவியர் என்று ஒரு தனிப்பட்டக்குலம் தோற்றத்தில் காணப்படவில்லை. முதலில் வழிபாட்டுப் பணிக்கென தனிப்படுத்தப்பட்ட ஒரு கூட்டத்தார் பின்னால் குல அமைப்பைப் பெற்றனர், அல்லது (2) லேவி குலம் இயல்பிலேயே பலவீனமானதொரு குலம். போரில் திறமையில்லாததால் இவர்கள் போர் செய்து நாட்டைக் கைப்பற்ற இயலவில்லை, ஆனால் இவர்களின் இனத்தாரான பிற குலத்தார் நாட்டைப் பிடித்த போது இவர்கள்மேல் அனுதாபப்பட்டுத் தங்கள் உடைமைப்பேறுகளில் இவர்களும் தங்க இடமளித்தனர், அதற்கு ஈடாக தங்கள் வழிபாடுகளில் இவர்கள் உதவியை நாடினர் எனலாம்.

பலியின் பணி ஆரோன் குடும்பத்துக்கு மட்டுமே உரியது என்ற ஒரு மரபு பின்னால் குருத்துவ மரபால் (P) வலியுறுத்தப்பட்ட ஒன்றாகும். மோசேயின் மூலம் கடவுள் ஆரோனையும், அவரின் புதல்வரையும் குருத்துவப் பணிக்கெனப் தனிப்படுத்தினதாகக் கூறப்படுகிறது (விடு. 28:1, 29:35,36, லேவி. 1:3மு; 4:4மு.). இங்கு, குருத்துவப் பணி ஆரோன் குடும்பத்தாருக்கு மட்டுமே உரிய ஒரு பொறுப்பாகக் கொடுக்கப்படுகிறது (விடு. 28:1,43, எண்.3:10;16:40).

பின்னால் எருசலேமில் சாதோக்கின் குடும்பம் பலி செலுத்திவந்ததாகக் கூறப்படுகிறது (1 அர. 2:35). எருசலேமின் அழிவு வரை இவர்களே அங்குப் பலி செலுத்திவந்தனர் (2 குறி. 6:8). இந்தச் சாதோக்கு யார்? 2 சாமு. 15:24இல் சாதோக்கு என்பவர் ஒரு கூட்டம் லேவியருக்குத் தலைவர் என்பதுபோல் குறிப்பிடப்படுகின்றது. குறிப்பேடு மரபு இவர் ஆரோனின் மூன்றாம் மகன் எலியேசரின் வழிவந்தவர் என்பதாகக் குறிப்பிடுகிறது (1 குறி. 6:3-12, 50-53, 24.31). தொடக்கத்தில் இவர் எந்த குலத்தில் வந்தவர் என்பது கூறப்படவில்லை. இதைக் குறித்து பல கருத்துக்கள் எழுந்துள்ளன. இவர் எருசலேமிலிருந்த முன்னாள் எபூசிய மரபைச் சார்ந்தவராக இருந்திருக்கலாம், எருசலேமைப் பிடித்த தாவிது இவரையும் லேவிய குருக்களுடன் சேர்த்திருக்கக்கூடுமென்று கருதுவர் சிலர். சிலர் இதனை மறுப்பர்.

எப்படியும், விவிலியம் தரும் குருத்துவ மரபு வரலாற்றில் லேவி குலத்தையும், அதில் சாதோக்கின் வழிமரபையும் முக்கியப்படுத்தும் திட்டமானதோர் முயற்சி காணப்படுகிறதென்று நாம் தாராளமாகக் கூறக்கூடும்.

சிறையிருப்பின் காலத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட வழிபாட்டமைப்பு எதுவுமில்லாததால், அக்காலத்தில் குருக்கள் பணியாற்றிவந்ததாக நாம் அறியவில்லை. ஆனால், சிறையிருப்புக்குப் பின, எருசலேம் திருக்கோவில் மீண்டும் கட்டப்படவே குருக்களின் செல்வாக்கு மேலும் வலுவுற்றது என்று அறிகிறோம். இக்காலத்தின் இஸ்ரயேலரின் முப்பிரிவு குருத்துவ அமைப்பு (தலைமைக்குரு + குரு + குரு = தலைமைக் குரு + குரு + குருகுலத்தோன்) முக்கியத்துவமடைந்தது.

சிறையிருப்புக்குப் பின்னாலுள்ள வழிபாட்டமைப்பின் தலைவர் தலைமைக் குருவாவார். இப்பட்டம் முதலாவது

சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த யோசுவாவுக்கு வழங்கப்படுகிறது (ஆகாய். 1:1,12). இக்காலத்திலிருந்து தலைமைக்குருவுக்கு அரச மாட்சி சாற்றப்படுகிறது. வழிபாட்டமைப்பின் மேலுள்ள முழு அதிகாரமும் இவருக்கே (செக். 6:11-13). இவர் ஆரோனின் மகன் எலியேசரின் வழிமரபிலிருந்து எழுந்ததாகக் கொள்ளப்பட்டது (எண். 3:32; 25:11மு; 35:25,28). இவர் சிறப்பான முறையில் திருநிலைப்படுத்தப்பட்டார் (விடு. 29:1-37). பிற்கால யூத சமயத்திலும் தலைமைக் குருவின் பதவி முக்கியத்துவ மடைந்திருந்தது என்று காணலாம்.

அடுத்ததாக, குருக்கள் வழிபாட்டின் அன்றாட செயல்களைக் கவனிக்கின்றவர்களாவர் (28:1,41; 29:9; இலேவி. 1:5,7,8,11; எண். 3:10; 18:7). பிற்காலத்தில் 24 குருத்துவ குடும்பங்கள் இருந்ததாகவும், இவை முறைவைத்து கோவில் பணியைக் கவனித்துவந்ததாகவும் அறிகிறோம். இவற்றில் 16 குடும்பங்கள் ஆரோனின் எலியேசர் வழியும், 8 குடும்பங்கள் இத்தாமார் வழியும் (இவர்கள் ஆரோனின் புதல்வர். தங்கள் வழிமரபுகளைத் தொடர்புபடுத்தின (1 குறி. 24:1-19). தலைமைக் குருக்களைப் போலவே குருக்களும் திருநிலை செய்யப்பட்டனர் (விடு. 29:1-37; இலேவி. 8:5-35). ஆனால் இவர்கள் தலைமைக்குருக்களைப்போல அருள்பொழிவு செய்யப்படவில்லை (21:10). குருக்கள் தலைமைக் குருவுக்கு உதவி செய்யவேண்டும். பலிபீடத்துக்கும் திரையின் உட்புறத்துக்குமுரிய யாவற்றையும் கவனித்துக்கொள்ள வேண்டும் (எண். 18:5,7). திருச்சட்டத்தைப் போதிக்க வேண்டும். மலா. 2:6,7; எரே. 18:18). நீதி நியாயத்தை நிருவகிக்கவேண்டும் (இணை. 17:8,9; 21:5). நசரேயரை திருநிலைப்படுத்த வேண்டும் (எண். 6:1-21); பொருத்தனைகளைக் கவனிக்கவேண்டும் (இலேவி. 27:8-25); எக்காளம் ஊத வேண்டும் (எண். 1:1-10; 31:6). இவை தவிர இன்னும் பல பொறுப்புகள் குருக்களுக்கு உண்டு.

இவர்கள் தங்களுக்கு வந்த காணிக்கைகளைக்கொண்டு வாழ்க்கை நடத்தினர். மூன்று வகைகளில் இவர்களுக்குக் காணிக்கைகள் வந்தன. (1) முதற்பலன்கள் அல்லது மீட்புப் பணம் (விடு. 13:12,13; எண். 18:12-19), (2) சில குறிப்பிட்ட பலிகளுக்கான கட்டணங்கள், சமூகத்து அப்பம், தானிய, தாவர காணிக்கைகள் (இலேவி. 2:3,10; 6:16), பாவக்கழுவாய் பலிகள் (லேவி. 5:13; 6:26), சமாதான பலியின் மார்பு, தொடைச் சந்துகள் (விடு. 29:26-28), எரிபலிகளின் தோல்கள் (இலேவி. 7:8), பத்திலொன்றுகளின் பத்திலொன்று (எண். 18:26-28).

இலேவியர் குருக்களுக்குக் கீழானவர்கள். இவர்கள் வழிபாட்டமைப்பிலுள்ள தாழ்வான பணிகளைச் செய்தனர் (1:50; 3:28,32). குருவுக்குத் துணையாக நின்று மக்களுக்குச் சேவை செய்தனர் (எண். 1:50; 3:6,8; 16:19). கோவில் பணிமுட்டுகளைப் பாதுகாத்தனர் (1குறி. 23:28-32). சிலர் சுமை தூக்குகிறவர்களாகவும் இருந்தனர் (9:19; 26:1,19; 2 குறி. 8:14). இவர்களுக்குப் போதிக்கும் பொறுப்பும் உண்டு (நெகே. 8:7,9; 2 குறி. 17:7-9; 35:9). நியாய விசாரணையில் இவர்கள் குருவுக்குத் துணை நின்றனர்.

இரண்டாவது திருக்கோவிலில் குருக்கள் 4,289 பேரும், லேவியர் 74 பேரும், பாடகர் 128 பேரும், வாசல் காவலர் 139 பேரும், வேறு கோவில் வேலையாட்களும் (நெதினீம்) சாலமோனுடைய வேலையாட்களின் வழிமரபு எனப்பட்டவர்களுமாக 392 பேரும் பணியாற்றினதாகக் கூறப்படுகிறது (எசுறா 2:36-40; நெகே. 7:39-45).

(ஈ) வழிபாடு

இஸ்ரயேலர் வழிபாட்டில் முக்கியமாக மூன்று கூறுபாடுகள் காணப்பட்டன. புனிதப் பயணம், திருவிழா, வேள்வி (பலி).

1. புனிதப் பயணம்

தூர இடங்களில் வாழும் மக்கள் வழிபாட்டிடங்களுக்குப் புனிதப் பயணம் போகும் வழக்கம் பழங்காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளது. தான் முதல் பெயர்சேபா வரையுள்ள இஸ்ரயேலர் யாவரும் கிலியாத்திலுள்ள மிஸ்பாவில் ஆண்டவர் திருமுன் வந்து கூடினார்கள் (நீதித். 20:1). இப்படியே, பெத்தேலிலும் இஸ்ரயேல் குலங்கள் அனைத்தும் கூடின (நீதித். 20:2). சீலோவில் ஆண்டுதோறும் விழாவும் நடந்தது. அதற்கும் மக்கள் பல இடங்களிலிருந்தும் பயணம் புறப்பட்டு வந்தனர் (21:19,20); 1 சாமு. 1:3,21,24; 2:19). பிற்காலத்தில் ஒரிட வழிபாடு அமுலுக்கு வந்த நாள்களிலும், சிறையிருப்புக்குப் பின்னும் மக்கள் எருசலேம் திருக்கோவிலுக்குச் சென்று வழிபட்டு வருவதைப் பெரும்பேறாகக் கொண்டனர்.

2. திருவிழாக்கள்

எபிரேய மொழியில் கக் (Hagx அரேபிய மொழியில் கஜ் Haj என்ற சொல் மெக்காவிற்குச் செல்லும் புனிதப் பயணத்தைக் குறிப்பிடும்) என்ற சொல் விருந்து என்று பொருள்படும். விழாக்கள் முக்கியமாக விருந்துண்ணும் வேளைகளாதலால் அவை இவ்வாறு அறியப்பட்டிருக்கலாம் (செக். 8:19). இஸ்ரயேலர் சமய வளர்ச்சியினூடே பற்பல விழாக்கள் தோன்றி வழக்கிலிருந்து வந்தன. இவற்றில் பலவும் அண்டை நாட்டுச் சமயச் சூழலிலிருந்து வந்திருக்கக்கூடுமென்று காணலாம். விழாக்களுக்கு முன் உண்ணா நோன்பிருத்தலும் (நீதித். 20:26,27; 1 சாமு. 7:5,6), விழாக்களில் பலியிடுவதும் முக்கிய செயல்களாகும். இவற்றில் முக்கியமான சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுவோம்.

(அ) ஒய்வுநாள் விழா. சபத்து என்பது எபிரேயம், ஒய்வெடுத்தல் என்று பொருள்படும் ஓர் அடிச்சொல்லிலிருந்து எழுந்தது. தோற்றத்தில் இது ஒரு விழா நாளாகக் காணப்பட்டது (விடு. 16:22-30; 20:8-11; 23:12). இதன் தோற்றத்தைக் குறித்து வெவ்வேறான மரபுகள் வெவ்வேறான காரணங்களைத் தருகின்றன. (23:12 - JE; 34:21 - J; 20:8 - E; இணை. 5:15 - D; விடு. 31:12-17 - P).

இவ்விழா தோற்றத்தில் நிலாவை மையமாகக் கொண்ட ஒன்றெனலாம். இது அமாவாசை விழாவுடன் தொடர்புபடுத்தப்படுவதிலிருந்து இது விளங்கும் (2 அர. 4:23; ஆமோஸ் 8:5,). ஆதலால், இதன் தோற்றத்தை இஸ்ரயேலருக்கு முந்திய அன்னாருடைய நாடோடி வாழ்க்கைப் பின்னணியில் நாம் ஒருவேளை காணக்கூடும். இஸ்ரயேலர் இதனை எடுத்து இதில் காணப்பட்ட நிலா வழிபாட்டுக் கூறுகளை அகற்றி, யாவே வழிபாட்டுக் கூறுகளைப் புகுத்தினர் எனல் பொருந்தும்.

(ஆ) அமாவாசை விழா அல்லது மாற்றப் பிறப்பு விழா (கோபாஸ்). நிலா முத்லாவது தோன்றும் நாளை அமாவாசை விழாவாக இஸ்ரயேலர் ஆசரித்தனர் (1 சாமு. 20:5, 18, 24; எசா. 1:13மு.). ஏழாவது அமாவாசை நாள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது (லேவி. 23:24,25). இவற்றின்

தோற்றத்தையும் நாம் இஸ்ரயேலரின் நாடோடி வாழ்க்கைப் பின்னணியிலேயே காணக்கூடும்.

(இ) பாஸ்காவும், புளிப்பில்லா அப்ப விழாவும். இஸ்ரயேலர் வழிபாட்டுப் பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பெரிய விழாக்களில் பாஸ்கா ஒன்று. எபிரேய மொழியில் இது பெசக் (Pesah) எனப்பட்டது. விடுதலைப் பயணத்தில் இது இஸ்ரயேலரின் விடுதலை அனுபவத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இவ் விழாவின் தோற்றத்தைக் குறித்து அறிஞர்களிடையில் பல மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. இரு உண்மைகளை எல்லாரும் ஒப்புக் கொள்வர். (1) தோற்றத்தில் பாஸ்காவும் புளிப்பில்லா அப்ப விழாவும் தனித்தனி விழாக்கள். (2) இரண்டுமே இஸ்ரயேலருடைய வரலாற்றுக்கு முந்தினவை. பாஸ்கா நாடோடி இடையர்களிடையிலும், புளிப்பில்லா அப்ப விழா கானானிய விவசாயிகளிடையிலும் தோன்றியிருக்கவேண்டும் (இவற்றைப் பற்றிய முழு விவரங்களுக்கு இஸ்ரயேலர் சமயம், பக். 155-162 காண்க).

பாஸ்கா முதலாம் மாதம் பதினாலாம் தேதி கொண்டாடப்பட்டது. ஆனால், புளிப்பில்லா அப்ப விழா பதினைந்தாம் தேதி தொடங்கி அடுத்த ஏழு நாட்கள் நீடித்தது (23:6). பிற்கால மரபுகள் யாவும் இவற்றை ஒரே விழாவாகக் கொண்டன (எ.கா. மிஷ்னா). இவ்விழாக்கள் இரண்டுமே பிற்காலத்தில் இஸ்ரயேலர் வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவுகூரும் விழாக்களாகக் கொள்ளப்பட்டன. பாஸ்கா தலைப்பிள்ளைச் சங்காரத்தையும் (விடு. 12:24-27), புளிப்பில்லா அப்பம் விடுதலைப் பயணத்தையும் (12:14-20) குறிப்பிட்டன.

(ஈ) அறுப்பு விழா அல்லது வார விழா (சப்புலோத்து). இது பெந்தேகோஸ்தே விழா என்றும் அறியப்பட்டது (லேவி. 23:16). இஸ்ரயேலரின் முப்பெரும் விழாக்களில் இது இரண்டாவதுள்ளது (விடு. 23:14-16). இது கானானியப் பின்னணியில் தோன்றியது. தோற்றத்தில் இது ஓர் அறுவடை விழா. பார்லி அறுவடை தொடங்கிய நாளிலிருந்து, கோதுமை அறுவடை முடியுமட்டும் ஏழு வார காலம் இந்த விழா ஆசரிக்கப்பட்டு வந்தது (34:22; லேவி. 23:15). ஏழாம் வாரம் விழா வாரமாக ஆசரிக்கப்பட்டது. ஐம்பதாவது நாளில் விழா உச்சநிலையடைந்தது (23:16). இதனால் கிரேக்க மொழி பேசிய யூதர்களிடையில் இது பெந்தேகோஸ்தே விழா என்று அறியப்பட்டது. இவ்விழாவில் முதற் பலன்களைப் படைத்தல் முக்கிய இடம்பெற்றது (விடு. 23:16; 34:22). கானானுக்குள் புகுந்த இஸ்ரயேலர் இந்தக் கானானிய விழாவையும் எடுத்து, இதன் மூலம் யாவேயை மழைக்கும் செழுமைக்கும் காரணராக மட்டுமல்ல, தங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, கானானின் உரிமையை தங்களுக்குக் கொடுத்தவராகவும் அறிக்கையிட்டு மகிழ்ந்தனர்.

(உ) கூடார விழா (சுக்கோத்து). இது சேகரிப்பு விழா என்றும் அறியப்பட்டது (23:16; 34:22; இலேவி. 23:33-36). சுக்கோத் என்றால் ஒன்றாக வேய்தல் என்று பொருள். கூடாரத்திற்காக மரக்கிளைகள் ஒன்றாக வேயப்படுவதால் இப்பெயர் வந்திருக்கலாம். இது இலையுதிர் காலத்தில் கனிகள் யாவும் சேகரிக்கப்பட்டபின், முக்கியமாக திராட்சைப் பழ சேகரிப்பின் இறுதியில், மனமகிழ்ச்சியாகக் கொண்டாடப் பட்ட ஒரு விழாவாகும். முப்பெரும் விழாக்களில் இது கடைசியில் வைக்கப்படுகிறது. (விடு. 23:14-17). முந்திய வரலாறுகள் கூடாரத்தைப்பற்றியோ, நினைவுகூருதலைப் பற்றியோ எந்தத் தகவலையும் தரவில்லை. (23:16; 34:22). தோற்றத்தில் இது உண்டு குடித்து களி கூருவதற்கான ஒரு விழா என்பதாகக் காணலாம் (எண். 24; நீதித். 21:19; 1 சாமு. 1:21). இக் கானானிய விழாவை இஸ்ரயேலர் எடுத்து, அதனைத் தாங்கள் பாலைநிலத்தில் அலைந்து திரிந்து கூடாரத்தில் தங்கி வாழ்ந்து வந்த காலத்தில் யாவே தங்களை விந்தையாக நடத்தி வந்ததை நினைவுகூரும் ஒரு விழாவாக மாற்றியமைத்தனர் (இலேவி. 23:43). இவ்விழா சிறையிருப் புக்குப் பின்னும்புகழடைந்திருந்தது (நெகே. 8:13-18). அக்காலத்தில் இது உடன்படிக்கைப் புதுப்பித்தல் விழாவுடன் இணைந்து காணப்பட்டது (இணை. 31:10முe; நெகே. 8:18; 9:38).

(ஊ) யாவே அரியணையேறும் விழா அல்லது புத்தாண்டு விழா அல்லது உடன்படிக்கைப் புதுப்பித்தல் விழா. மேற் கூறிய விழாக்கள் பலவும் அரசமைப்பின் காலத்திலும் வழக்கி லிருந்து வந்தன. இவற்றுடன் இன்னொரு விழாவும் இக் காலத்தில் புதிதாக உருவாகி மக்களிடையில் வழக்கிலிருந்த தாகத் தெரியவருகிறது (24:7,8; திருப். 47:1; 74:12முe; 93:1; 95ஆ. 96.10; 97:7; 132:7). ஆனால் இவ்விழாவின் அமைப்பையோ, ஒழுங்குகளையோ பற்றித் திட்டமாகத் தெரியவில்லை.

S. மோவிங்கல், S.H. கூக், A. பென்ட்ஸன் ஆகிய அறிஞர் பாபிலோனிய புத்தாண்டு விழாவைப் போன்ற ஒரு விழா இஸ்ரயேலரிடையில் காணப்பட்டதென்றும், இதில் பகைவரை வென்று யாவே அரியணை ஏறும் ஒரு சடங்கு முக்கியமாகக் காணப்பட்டதென்றும் கொள்வர். வைசர், ஃபன்ராட் ஆகியோர் இது ஓர் உடன்படிக்கை விழா என்பர். இன்னும் சிலர் இது இஸ்ரயேலரின் புத்தாண்டு விழா என்பர் (இவற்றைப் பற்றிய ஆய்வை இஸ்ரயேலர் சமயம், பக். 253,260இல் காண்க).

ரிங்கரன் என்ற அறிஞர் பின்வரும் கருத்தைத் தெரிவிக்கின்றார். ப.ஏ.இல் காணப்படும் யாவேயின் ஆளுகை, போர், வெற்றி முதலான கருத்துக்கள் உடன்படிக்கை நிகழ்ச்சியோடு பொருந்துவனவல்ல, இவை கீழ்ச் சமீப நாட்டுக் கருத்துக்களை, குறிப்பாகக் கானானிய கருத்துக் களைச் சார்ந்தவை. மாறாக, உடன்படிக்கைப் புதுப்பிக்கும் நிகழ்ச்சி முழுக்க முழுக்க இஸ்ரயேலருக்குரியது. இந்த இரு மரபுகளும் இணைந்து இஸ்ரயேலரின் புத்தாண்டு விழா தொடங்கியது என்கிறார் ரிங்கரன். இக் கருத்து கவர்ச்சியாக இருப்பினும், ப.ஏ. காலத்தில் இவ்விழா புத் தாண்டு விழாவாக அறியப்பட்டதா என்பது இன்னமும் கேள்வியாகவே உள்ளது.

(எ) திருச்சட்ட மகிழ்ச்சி விழா (சிம்காத் தோரா). ப. ஏ. கால இறுதியில் யூத சமயத்தில் திருசட்டம் மிகவும் முக்கிய இடத்தை வகித்தது. திருச்சட்டம் மக்களுக்குச் சுமையாக அல்ல, மகிழ்ச்சியாகவே காணப்பட்டது (1:2; 19-7-14; 119:14-16). இந்த அடிப்படையில் திருச்சட்ட மகிழ்ச்சி விழா என்றொரு விழாவும் கொண்டாடப்பட்டதாக அறிகிறோம். எசுறா காலத்தில் இதைப் போன்ற ஒரு விழா ஏழாம் மாதம் முதல் நாளில் கொண்டாடப்பட்டது.

(ஏ) பாவக்கழுவாய் நாள் விழா (யோம் கிப்பூர்). சிறையிருப்புக்குப் பின் முக்கியத்துவமடைந்த விழாக்களில் ஒன்று. இது ஏழாம் மாதம் (திஸ்ரி) பத்தாம் நாள் ஆசரிக்கப்பட்டது (இலேவி. 23:27-32; எண். 29:7-11). இதன் ஆசரிப்பைப்பற்றி இலேவி. 16இல் கூறப்படுகிறது.

(ஐ) திருநிலைப்படுத்தும் விழா (கனுக்கா). இவ்விழாவின் தோற்ற வரலாறு 1 மக்.4:36-59)இல் தரப்படுகிறது. அந்தியோகு எப்பிபானஸ் என்னும் செலூக்கிய அரசன் கி.மு. 168, கிஸ்லேவ் (December) மாதம் 25ஆம் தேதி, எருசலேம் திருக்கோவிலைத் தீட்டுப்படுத்திப் பாழாக்கும் அருவருப்பை அங்கு வைத்து கிரேக்க தெய்வமான சீயசுக்குப் பலியிட்டான். மூன்று ஆண்டுகளுக்குப்பின் வெற்றிபெற்ற யூதாஸ் மக்கபேயு கி.மு. 165இல் அதே நாளில் திருக்கோவிலைச் சுத்தப்படுத்தி மீண்டும் அர்ப்பணம் செய்தான். அதிலிருந்து அந்நாள் ஆண்டுதோறும் விழா நாளாக ஆசரிக்கப்பட்டு வருகின்றது. இவ் விழா சுக்கோத்து விழாவுடன் தொடர்புடையது (2 மக். 1:18மு.). இரு விழாக்களும் எட்டு நாள்கள் கொண்டாடப்பட்டன (இலேவி. 23:34-36). இரண்டிலும் குருத்தோலைகள் பிடிக்கும் நிகழ்ச்சி இடம்பெற்றது (இலேவி. 23:40,41; 2 மக். 10:6-8).

கனுக்கா மகிழ்ச்சிமிக்க ஒரு விழா. இது விளக்குகள் என்றும் அறியப்பட்டது. விளக்கு அதில் கொளுத்தப் பட்டிருக்கலாம். பு.ஏ.இன் காலத்திலும் இவ் விழா ஆசரிக்கப்பட்டுவந்தது.

(ஒ) பூரிம் விழா. இவ் விழாவின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணம் எஸ்தர் நூலே. ஆமான் இஸ்ர யேலருக்கு எதிராக பூர் என்னும் சீட்டுப் போட்டான் (எஸ். 3:7; 9:24). ஆதலால் அந் நாள்கள் பூரிம் என்று அறியப்பட்டன. ஆண்டுதோறும் அந்த இரு நாள்களையும் பூரிம் விழாவாக ஆசரிக்கவேண்டுமென்றும் கூறப்பட்டது (9.24-26). அளவுக்கு மிஞ்சி குடித்தல் இதில் அனுமதிக்கப்பட்டது இவ் விழாவின் உண்மைத்தோற்றம் எது என்பதைத் திட்டமாகக் கூற முடியவில்லை.

3. வேள்வி

சொற்கள். இஸ்ரயேலர் சமயத்தின் மையக் கூறுபாடு வேள்வி (பலி) எனலாம். செபக் என்னும் எபிரேயச் சொல் பொதுவாக வேள்வியைக் குறிப்பிட்டது. இச் சொல் கொல்லுதல் என்னும் பொருளை உணர்த்தும். ஆதலால் உயிர்களைக் கொல்லுதலை முக்கியமாகக் கொண்ட வேள்விகளையே இச்சொல் தொடக்கத்தில் குறிப்பிட்டிருக்க வேண்டும். அடிக்கடிப் பயன்படுத்தப்படும் இன்னொரு சொல் **மின்கா** என்பது. தொடக்கத்தில் இச் சொல் கடவுளுக்குக் கொடுக்கும் கொடையாக தாவரப் பொருட்களையும், விலங்குகளையும் ஒன்றுபோல் குறிப்பிட்டு நின்றது (தொட. 4:3,4). பின்னால் வந்த குருத்துவ மரபு இது தாவரப் பொருட்களை மட்டும் குறிப்பதாகக் கொள்கிறது. **கொர்பான்** என்னும் இன்னொரு சொல் கடவுளுடைய சமுகத்தில் படைக்கப்பட்ட எல்லாவற்றையும் பொதுவாகக் குறிப்பிட்டு நின்றது (இலேவி. 1:1; மா.7:11).

தோற்றம். இஸ்ரயேலரிடையில் வேள்வி தோன்றியதைக் குறித்து அறிஞர்களிடையில் பலவகையான கருத்துக்கள் நிலவி வருகின்றன. சிலர் இது மெசப்பொத்தாமிய நாடுகளிடையே வழக்கிலிருந்த வேள்விகளிலிருந்து தோன்றியிருக்க வேண்டுமென்றும், வேறு சிலர் இது அரேபியாவிடையிலிருந்து வந்திருக்க வேண்டுமென்றும், கொள்வர். ஆனால், அண்மையில் பாலஸ்தீனாவில் கண்டெடுக்கப்பட்ட யுகாரிட் ஏடுகள், கானானிய வேள்விகளுக்கும், இஸ்ரயேலரின் வேள்விகளுக்குமிடையில் காணப்பட்ட நெருங்கிய தொடர்பை விளக்குகின்றன. கானானிய வேள்வி முறையுடன் இஸ்ரயேலருக்கு நெருங்கிய தொடர்பு உண்டென்று காட்ட விவிலியத்திலும் சான்று உண்டு. சாலமோன் அரண்மனையில் மோவாபிய, சீதோனிய, அம்மோனிய அரச குலப் பெண்கள் பலர் தங்கள் தெய்வங்களுக்கு வேள்வியிட்டு வந்தனர் (1 அர. 11:8). நாமான் தன் தெய்வங்களுக்கு எரி பலிகளும் (ஒலா), ஐக்கிய விருந்தான பிற பலிகளும் (செபக்) செலுத்தி வந்தான். இனிமேல் யாவேக்கு மட்டுமே பலிசெலுத்துவதாக வாக்குறுதி செய்தான் (2 அர. 5:17). பாகாலுக்கும், யாவேக்கும் ஒரே மேடையில், ஒரே வேள்வி படையல் செய்யப்படுகின்றது (1 அர. 18). இன்னும் பல இடங்களில் யாவேக்கான படையல்களும், பாகாலுக்கான படையல்களும் ஒன்றுபோல் கூறப்படுவதைக் காணலாம் (3:3; 22:44; 2 அர. 12:4;). மேலும் வேள்விகளில் பலவும் கானானிய விவசாயச் சூழ்நிலையில் எழுந்தனவாகக் காணப்படுகின்றன. கானானுக்குள் புகுந்த இஸ்ரயேலர் தங்கள் நாடோடிப் பின்னணியிலிருந்து ஒருவகை வேள்வி முறையைக் கொண்டுவந்தனர். கானா னுக்குள் புகுந்த பின் பல புதிய கூறுகளைத் தங்கள் வேள்வி யுடன் சேர்த்து அவற்றுள் புதிய பொருள் கண்டனர் எனல் பொருந்தும்.

வேள்வியின் வகைகள். இஸ்ரயேலர் வேள்வியின் வளர்ச்சியை அரசமைப்பின் காலத்தில், எருசலேம் கோவில் வழிபாட்டில் காணலாம். இவற்றில் சிலவற்றை இங்குக் குறிப்பிடுவோம்.

1. முதற் பலன்கள், பத்திலொன்று. இது விவசாயச் சூழ்நிலையில் எழுந்தது. முதலில் விளைவின் முதற்பலன்கள் படைக்கப்பட்டன (விடு. 22:19; 23:19; 34:26) பின்னால் கால்நடைகள் மனிதர் ஆகியோரின் முதற்பலன்களும் படைக்கப்பட்டன (13:11,12; 34:19,20). மனிதர்களில் முதற்பேறானவர்களையும், தீட்டான விலங்குகளையும் மீட்டுக்கொள்ளலாம். கழுதையின் தலையீற்றை ஓர் ஆட்டுக்குட்டியால் மீட்டுக்கொள்ளலாம் (13 :13). மனிதர்களும் அவ்வாறே மீட்டுக்கொள்ளப்பட்ட வேண்டும்(13:11-16; 34:19,20). பிற்காலத்தில் இஸ்ரயேலின் முதற்பேறானவர்களுக்கு ஈடாக இலேவியர் கொள்ளப்பட்டதாக நம்பப்பட்டது (எண். 3:12,13). இதற்கான வரலாற்றுக் காரணமும் தரப்பட்டது (13:14-16).

முதற் பலன்களின் படைப்பு பின்னால் பத்திலொன்றானது (இலேவி. 27:30-32).

2. எரி பலி (ஒலா). முக்கியமானது; அடிக்கடி செய்யப் படுவதால் என்றுமுள்ள எரி பலி என்றும் அறியபப்ட்டது (விடு. 29:42). பலி பொருள் முழுவதும் எரிக்கப்படுவ்தால் முழு எரி பலி எனப்பட்டது (திருப். 51:19).

3. உணவுப் படையல். (மின்கா) ஆரம்ப காலங்களில் இறைச்சியும் மரக்கறி வகைகளும் இப் படையலில் இடம் பெற்றன (விடு. 29:41). சிறையிருப்பின் காலத்திற்குப் பின் இறைச்சியல்லாத பொருள்களே இடம் பெற்றன (இலேவி.2). இதில் மீதி யானவை குருக்களைச் சேரும்.

4. பானப்படையல் (நெசக்). பிற படையல்களுடன் சேர்த்து படைக்கப்பட்டது. திராட்சை இரசமே இதில் முக்கிய இடம் பெற்றது (தொட. 35:14; விடு. 29:40மு. இலேவி. 23:13மு., எண். 6:15).

5. அசைவாட்டும்-உயர்த்திப் படைக்கும் படையல் (தெனுபா -தெருமா விடு. 29:24-27; இலேவி. 7:30-34;8,27...). இவை ஆச ரிக்கப்படவேண்டிய விதம் இலேவி. 7:30-32இல் தரப்படுகின்றது.

6. சமூகத்து அப்பம் (லெகம் மஃரெக்கத் விடு. 25:30; 35:13; 39:30.).ஒழுங்குபடுத்தப்பட்ட அப்பம் என்பது இதன் பொருள். இது மிகவும் பழங்காலத்தைச் சார்ந்ததோர் படையலென்று கருதப்படுகிறது. கீழைநாட்டுச் சமயங்களில் இத்தகையப் படையல்கள் காணப்பட்டதாக அறிகிறோம். அவற்றில் தெய்வங்கள் உண்பதற்காக இந்த அப்பங்கள் படைக்கப்பட்டன. ஆனால், இஸ்ரயேலர் இதனை நேர்ச்சைப் படையலாக மட்டும் ஆசரித்தனர் என்று அறியலாம் (லேவி. 24:9, 1 சாமு. 21:1-6).

7. நேர்ச்சைப் படையல் (அஸ்காரா லேவி. 2:2,9,16; 5:12; 6:15, 25:7; எண். 5:26). இப்படையலின்போது எது நேர்ச்சை செய்யப்பட்டது என்பது நமக்குத் தெரியாது.

8. நல்லுறவுப்படையல் (செலம் விடு. 20:24; 24:5; லேவி. 3:1-6; 4:10). கடவுளுக்கும் அடியாருக்குமிடையிலுள்ள உறவை வலுப்படுத்துவதற்காக இது படைக்கப்பட்டது.

9. பாவம் போக்கும் வேள்வி (கட்டாத் விடு. 29:14,36, 30:10, லேவி. 4:1-34). இது அறியாமற் செய்யும் பாவங்களை ஈடு செய்வதற்காக ஏறெடுக்கப்படும் வேள்வி. இதில் இரத்தம் தெளித்தல் முக்கிய இடம் பெற்றது.

10. குற்ற நீக்க வேள்வி (ஆசாம் லேவி. 5:14-6.7; 7:1-7;எண் 2. 5.5-8,ஏசா. 53.10). இதுவும் பாவம் போக்கும் வேள்வியைப் போன்ற ஒன்றே. சிறையிருப்பின் நாள்களுக்குப் பின்னாலேயே இது அதிகமாக வழக்கில் இருந்தது. நட்ட ஈடு செய்ய இயலாத கட்டங்களில் பாவம் போக்கும் வேள்விகளும், நட்ட ஈடு கொடுக்கக்கூடிய இடங்களில் குற்றநீக்க வேள்வியும் செலுத்தப்பட்டன எனலாம்.

வேள்வியின் பயன்பயக்கும் வகை. வழிபாட்டில் வேள்விப்படையல் செலுத்துவதில் இஸ்ரயேல் மக்கள் என்ன எதிர்பார்த்தனர்? இக்கேள்விக்கு விடையாக அறிஞர்கள் பல கருத்துக்களைத் தந்துள்ளனர். ரேனான் என்ற அறிஞர் பழங்காலத்தில் மக்கள் சுயநலமுற்ற கடவுள் தங்களிடம் கொடையை எதிர்பாக்கிறார் என்ற எண்ணத்துடன் தொடங்கியதே வேள்விமுறையென்று குறிப்பிடுகிறார். இந்தக் கொடை என்னும் கூறுபாடு இஸ்ரயேலரிடையில் காணப்பட்டது. எட்டாம் நூற்றாண்டு இறைவாக்கினர் இதனை அகற்ற முயன்றும் இயலவில்லை என்பது இவர் கூற்று. ரேனான் குறிப்பிடும் இவ்வகையான வேள்வி இஸ்ரயேலரிடையில் எக்காலத்திலும் இருந்ததில்லை என்கிறார் டிவாஸ் அறிஞர் (Roland de Vaux, Ancient Israel, p.432).

இஸ்ரயேலர் ஒருவகையான பயனை எதிர்பார்த்தே வேள்வி செலுத்தினர் என்பது உண்மைதான்; ஆனால் இது இன்னொருவிதமான கொடையெனக் காணலாம். கடவுளுக்கு ஏதோ தேவையென்பதால் கொடை கொடுத்தனர் என்பது இஸ்ரயேலரைப் பொறுத்தமட்டில் உண்மையன்று, ஏனெனில் மண் ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை என்பது அன்னார் நம்பிக்கை (திருப். 24:1).

வேள்விப்படையல்களை கடவுளுடன் ஐக்கியப்படுவதற்கான ஓர் ஊடகமாகக் கொண்டனர் என்பர் பலர். இத்தகைய வழக்கம் அரேபியாரிடையில் வழக்கிலிருந்திருக்கிறது. ஆனால், இத்தகைய எண்ணம் இஸ்ரயேலரிடையில் காணப்பட்டதாகத் தெரியவில்லை. கடவுளை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை, யாவே கடவுள், மனிதரல்லர் என்ற எண்ணங்களைக் கொண்டுள்ள மக்கள் இவ்வாறு கடவுளுடன் நூல்கள் ஐக்கியப்படக்கூடும் என்று எண்ணியதாகப் ப.ஏ.இல் எங்கும் கூறப்படவில்லை.

பல தெய்வங்களுக்குப் படைக்கப்பட்ட ஓர் உணவேற்பர் பலர். மொசொப்பொத்தாமிய நாடுகளின் வேள்விகள் குறிப்பாக இவ்வகையைச் சார்ந்தனவாகக் காணப்பட்டன. கானானியரும் தெய்வங்களுக்கு உணவு தேவை என்று நம்பினதாக இராஸ் - சாம்ரா ஏடுகள் குறிப்பிடுகின்றன. ப. ஏ.இலும் இத்தகைய கூறுகள் காணப்படுவதாகக் கொள்வர் பலர் (தொட. 8:21; நீதித். 6:19-22; 9:9,13; 13:15-20 என்ற வசனங்கள் ஆதாரமாகக் காட்டப்படுவதுண்டு). இவ் வசனங்களில் கீழ்நாட்டுச் சமயக் கூறுகள் ஓரளவு காணப்படுகின்றன என்பது உண்மைதான். ஆனால் இது அதிகாரப்பூர்வமான இஸ்ரயேலர் சமயத்திலிருந்து படிப்படி யாக மறைந்துவிட்டது எனலாம் (திருப். 50:12,13 காண்க).

இஸ்ரயேலர் உலகைப் பற்றியும், கடவுளைப்பற்றியும், கடவுளுக்கும் உலகிற்கும், கடவுளுக்கும் மனிதருக்கும் இடையிலுள்ள உறவுபற்றியும் என்ன எண்ணம் கொண்டிருந்தார்கள் என்பதை நாம் அறியக்கூடுமானால், அன்னார் வேள்வியின் தனிச் சிறப்பை நாம் உணரக்கூடும். உலகமும் மனிதரும் அவர் படைப்பு, அவரது உடைமை, அவரே அனைத்தையும் ஆளுகிறவர்; கடவுள் மனிதரல்லர், மனிதர் கடவுளாகவும் முடியாது - இதுவே இஸ்ரயேலர் நம்பிக்கை. இந்த அடிப்படையில் மேற்கூறிய எண்ணங்கள் யாவும் அடிபட்டுப் போகின்றன. அப்படியானால் வேள்வியைப்பற்றி அன்னார் என்னதான் எண்ணினர்?

செயல்முறை மன்றாட்டே வேள்வி என்கிறார் டிவாஸ் அறிஞர் (*op. cit.*, p. 451). வேள்வியில் மனிதரின் அந்தரங்கம் வெளிப்படுவதுடன், கடவுளுடைய மறுமொழியும் அருளப்படுகிறது. இவ்வாறு அடியவர் ஒருவரின் மன்றாட்டு என்னும்போது, வேள்வி ஒரு கொடையாக, யாவேயுடன் ஐக்கியமடையும் ஒரு வழியாக, பாவநீக்க ஊடகமாக, இவ்வாறு பலவகையில் அமையலாம். கொடை என்னும்போது, கடவுளுக்கு அவை தேவை என்பதாலோ அல்லது ஏதோ பிரதிபலன் கிடைக்கும் என்பதாலோ கொடுக்கப்படுவதல்ல. எல்லாவற்றிற்கும் காரணர் கடவுளே என்பதை உணர்ந்து (திருப். 24:1; 50:9-12), இவ்வுண்மையை அறிக்கை செய்யும் ஒரு செயல்முறை நன்றி மன்றாட்டே கொடை என்னும் வேள்விப்படையலாகும் (1 குறி. 29:14) காண்க). இதில் அடியார் கடவுளுக்கு முன் தம்மை வெறுமையாக்கும் ஓர் அனுபவத்தையும் அடைகிறார். பயனடைவதல்ல, வெறுமையடைவதே இங்கு அடியாருடைய முதல் அனுபவம். அத்துடன் வேள்வியின் மூலம் அடியார் கடவுளுடன் ஐக்கிய உறவும் கொண்டனர்; இது உடலளவான ஐக்கியமன்று, அன்பின் ஐக்கியம். ஒப்புரவாகுதலின் ஐக்கியம் (23:5 காண்க). வேள்வி பாவம் போக்குவதற்காக ஏறெடுக்கப்படும் செயல்முறை மன்றாட்டாகவும் அமைந்தது எனலாம்.

வேறு பல கூறுகள் காணப்படினும், ஏற்பு பெற்ற இஸ்ரயேல் சமயத்தின் வேள்விமுறை இந்த அடிப்படை யிலேயே வளர்ந்ததெனலாம். இதை விட்டுக் கருத்துப் பிறழும் வேளைகளிலெல்லாம் இறைவாக்கினர் வேள்வி யைக் கண்டித்து வந்தனர் என்று காண்கிறோம் (எசா. 1:11-17; எரே. 6:20; 7:21,22; ஒசே. 6:6; ஆமோஸ். 5:21-27; மீக். 6.6-8).

(உ) சமய வழக்க முறைகள்

வழிபாட்டுக்குப் புறம்பாகவும் இஸ்ரயேலர் அன்றாட வாழ்க்கையில் சமயத்தால் நிறுவப்பட்ட பல வழக்கமுறைகள் காணப்பட்டன. இவற்றில் சிலவற்றை இங்குக் காண்போம்.

1. விருத்தசேதனம் (மூலா). ஆண்குறியின் நுனித்தோலை அறுக்கும் ஒரு சடங்கு. தொட. 17:10-14 இல் ஆபிரகாமுக்கும் யாவேக்குமிடையில் நிகழ்ந்த உடன்படிக்கையின் அடையாளம் இதுவென்று கூறப்படுகிறது. இது குருத்துவ மரபிலிருந்து வந்த வரலாறு. விடு. 4:24-26 இல் மீதியானிய பெண்ணான சிப்போரா இச்சடங்கைச் செய்வதால் இது மீதியானியரிடத்திலிருந்து வந்திருக்கக்கூடும் என்று கருதுவர் சிலர். சிலர் இது யோசுவாவின் காலத்தில் தான் தோன்றினது என்பர் (யோசு. 5:2-7).

இது கீழ்நாட்டு மக்களிடையில் பொதுவாகக் காணப்பட்ட ஒரு பழமையான பழக்கம் என்பது தொல்பொருள் ஆய்வாலும், பிற பல ஏடுகளாலும் தெரியவருகிறது. பாபிலோனியர், அசீரியர் தவிர எல்லாச் செமித்திய மக்களிடையிலும் இப்பழக்கம் காணப்பட்டது. இஸ்ரயேலரின் அண்டை நாட்டு மக்களில் பெலிஸ்தியர் மட்டுமே விருத்தசேதனமற்றவர்கள் (நீதித். 14:3; 15:18; 1 சாமு. 14:6). இதனால், இஸ்ரயேலர் விருத்தசேதனத்தை இன்னாரிடமிருந்துதான் பெற்றார்கள் என்பதற்கில்லை. பொதுவான ஒரு மரபிலிருந்து இவர்கள் இதனை எடுத்திருக்கலாம். தோற்றத்தில் ஒர் ஆண் பெரியமனிதராகப் பருவமடையும் தருணத்தில் அல்லது திருமணம் செய்யும் தருணத்தில் விருத்தசேதனம் செய்யப்பட்டிருக்கலாம் (விடு. 4:25; யோசு. 5:2). குருத்துவ மரபு ஆசிரியர் இதற்குச் சமய முக்கியத்துவமளிக்கிறார் (தொட. 17:10-14).

சிறையிருப்புக்குப்பின் இது முக்கியத்துவம் பெற்றது. அறநெறி இறைவாக்கினர் இதற்கு அவ்வளவாக முக்கியத்துவமளிக்கவில்லை. அன்னார் இதய விருத்தசேதனத்தையே வலியுறுத்தினர் (இணை. 10:16; 30:6; எரே. 9:25,26).

2. பழிவாங்கல். இது பழங்கால நாடோடி மக்களிடையில் வழக்கிலிருந்த ஒரு முறை. மரபைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதாக இருக்கலாம். மேலும், அக்காலத்தில் சில மரபினர் தாங்கள் யாவரும் தெய்வத்தின் இரத்தத்தினால் இணைந்தவர்கள் என்றும், ஆதலால் தங்களில் ஒருவருடைய இரத்தம் சிந்தப்பட்டால், அதனால் தங்களுக்கு மட்டுமல்ல, தங்கள் தெய்வத்திற்கே நிந்தையுண்டானது என்றும் நம்பினர். ஆகையால் அத்தகைய இரத்தம் சிந்துதலை ஈடு செய்வது தங்கள் மேல் விழுந்த ஒரு புனிதமான கடமை என்று எண்ணினர். அன்னாரிடையில் காணப்பட்ட கூட்டு ஆள் தன்மை நம்பிக்கையும் (Corporate personality) இதற்குக் காரணம் எனலாம். பதிலுக்குப் பதில் இரத்தம் சிந்தி தங்கள் மரபுக்கு ஏற்பட்ட இழப்பை அவர்கள் ஈடு செய்தனர்.

ப.ஏ.இல் இத்தகைய நிகழ்ச்சிகள் பலவற்றைக் காண்கிறோம் (தொட. 4:14,23,24; நீதித். 8:8-21; 2சாமு. 14:7; 21:1-14). இவ்வாறு பழிவாங்குவோர் இரத்த மீட்பர் (redeemer of blood) என்று அறியப்பட்டனர்.

ப.ஏ.இன் சட்டங்கள் பழிவாங்கும் இச்செயலை ஒரளவு கட்டுப்படுத்துகின்றன எனலாம் (விடு. 21:23; இணை. 24:16 காண்க). வஞ்சக எண்ணம் எதுவுமின்றி ஒருவர் தற்செயலாக இன்னொருவரைக் கொல்ல நேர்ந்தால் அவர் இந்தப் பழிவாங்கும் முறைக்கு விலக்காகக் காக்கப்பட்டார். இதற்கென ஒரு சில நகர்கள் **அடைக்கல நகர்கள்** என்று குறிக்கப்பட்டன (யோசு. 20:1-9).

3. பொருத்தனைகள். இஸ்ரயேலரிடையில் வாயிலிருந்து புறப்படும் சொற்கள் மிகவும் வல்லமையுடையனவாகக் கொள்ளப்பட்டன. இந்த அடிப்படையில் மனிதர் வாயினால் செய்யும் பொருத்தனைகள் வல்லமை மிக்கனவாகவும், மீறக் கூடாதனவாகவும் கொள்ளப்பட்டன. ப.ஏ.இல் மூன்று வகையான பொருத்தனைகள் காணப்படுகின்றன. (i) நலனெதிர் பார்க்கும் பொருத்தனை; இதனை நேர்த்திக் கடன் எனலாம் (தொட. 28:21,22; நீதித். 11:30,31; 1 சாமு. 11:1). (ii) நலனெதிர் பாரா பொருத்தனை; இதனைச் சபதம் எனலாம் (திருப். 32:1-5). (iii) விலகியிருக்கும் பொருத்தனை; இதனை விரதம் எனலாம்) எண். 21:1-3; 1 சாமு. 14:24). இப் பொருத்தனைகளை நிறைவேற்றுவதைக் குறித்த விதிகளை குருத்துவ சட்டம் வகுத்துள்ளது (லேவி. 22:17-25; எண். 15:1-10).

4. புனிதப் போர். இஸ்ரயேல் மக்கள் யாவே போர் வீரர் (ஈஸ் மில்காமா) என்றும் (விடு. 15:3), அவருக்கு வெற்றியை அருளும் வல்லமை உண்டென்றும் நம்பினர் (1 சாமு. 17:47). இதிலிருந்து எழுந்ததே புனிதப்போர் முறை. போர் யாவேயுடையது; அவரே வெற்றியை அருளுபவர். ஆதலால் போருக்குப் போகுமுன் தகுந்த ஆயத்தம் வேண்டும். முதலாவது, யாவே போருக்கான அனுமதி வழங்க வேண்டும் (விடு. 17:6; எண். 31:3). இஸ்ரயேல் மக்களையோ, அன்னார் எல்லைகளையோ பாதுகாப்பதற்காக யாவேயின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படும் எல்லாப் போர்களும் புனிதமானவைகளே. யாவே அனுமதியளித்து அனுப்பும்போது அவரே போரை நடத்துகிறார்; தலைவருக்குத் தமது ஆவியைத் தந்து தலைவர் மூலமாகச் செயலாற்றுகிறார் (நீதித். 6:34;, 11:29). ஏதாவது காரணத்தால் அவருடைய ஆவி அவரை விட்டு நீங்குமானால் அவருடைய தலைமைப் பதவியும் அத்துடன் அவரைவிட்டு அகற்றப்படும் (16:20; 1 சாமு. 16:14). போர் புரிவதும் வெற்றியருளுவதும் யாவேயே என்று நம்பப்பட்டது (இணை. 20:4 வேறு விடு. 14:14; இணை. 9:3; நீதித். 4:14 காண்க).

5. சங்காரம். (கெரம்) இது புனிதப்போர் நம்பிக்கையுடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு வழக்கமுறையாகும். கேரம் என்ற எபிரேயச் சொல் ஒப்புக்கொடுக்கப்பட்ட அல்லது தனிப்படுத்தப்பட்ட என்று பொருள்படும் யாவேக்காக தனிப்படுத்தப்பட்ட யாவும் தூய்மையானவையே என்று கண்டோம். போர் புனிதமானது என்றும், போர் புரிகிறவர் யாவே என்றும் பார்த்தோம். அப்படியானால் போரின் கொள்ளைப் பொருட்கள் யாவும் யாவேக்கே சொந்தம். ஆகையால் அவை தூய்மையானவை. அவற்றைச் சாதாரணப் பயன்பாட்டிற்கு எடுப்பதே பாவம் (யோசு. 7). ஆகையால் அவற்றைச் சாபத்துக்குட்படுத்திச் சங்காரம் செய்ய வேண்டுமெனப்பட்டது (20:16). எரியக்கூடிய பொருட்கள் யாவும் எரிக்கப்பட வேண்டும். எரியாத உலோகங்கள் முதலானவை தெய்வத்தின் கோவிலில் வைக்கப்பட வேண்டும் (இணை. 7:25,26; யோசு. 6:24).

இவ் வழக்க முறையின் கொடூரம் பின்னால் ஒரளவு குறைக்கப்பட்டது. இப்படியாகப் பிற்காலத்தில் சங்காரத்துக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட பொருள்களில் பல குருவினுடைய உடைமையாயின (இலேவி. 27:21; எண். 18:14; எசே. 44:29).

நாளடைவில் பெண்களும். பிள்ளைகளும். குறிப்பாக இளங்கன்னிகளும் இதற்கு விலக்காயினர் (எண். 31:7, 12,17,18; இணை. 21:10-14). கால்நடைகள் வேள்விக்காகப் பயன்படுத்தப்பட வேண்டுமெனப்பட்டது (இணை. 2:34; 1 சாமு. 15:9,21).

இஸ்ரயேலர் வேற்று தெய்வங்களை வழிபட்டுச் சோரம் போகாதிருக்கத்தக்கதாக இந்த வழக்கமுறை கொடுக்கப் பட்டதாகப் பார்க்கலாம் (இணை. 7:1-13; 20:16-18; யோசு. 10: 1,28-40; 11:11-21) பழைய வரலாறுகள் எதுவும் சங்காரத்துக் குரிய இவைகளில் பெலிஸ்தியரை உட்படுத்தவில்லை (15:63; 16:10; 17:12-18). ஆதலால் இந்த முறை பெலிஸ்தியர் பாலஸ் தீனாவுக்குள் புகுமுன்னமே (கிமு. 1150) இஸ்ரயேலரி டையில் வழக்கிலிருந்து வந்திருக்கவேண்டுமென்று எண்ண இடமுண்டு.

சங்காரத்தைக் குறித்த வழக்கமுறை திருச்சட்டத்தில் கூறப்படும் வண்ணம் எவ்வளவு தூரத்திற்கு நடைமுறை யில் இருந்துவந்ததென்பது கேள்விக்குரியதாகும். இதைப் பற்றிக் கூடுதலாக அறிய இஸ்ரயேலர் சமயம். பக். 195, 196 காண்க.

(ஊ) யாவே சமயக் காவலர்

பிற சமய ஈடுபாடுகளினால் இஸ்ரயேலர் சமயம் தன் தனிச் சிறப்பான வெளிப்படுத்தலை இழந்துவிடும் ஆபத்து அடிக்கடி ஏற்பட்டு வந்தது. இத்தகைய ஆபத்துக்களிலிருந்து தப்பி. இஸ்ரயேலர் சமயம் மென்மேலும் வளர்ந்து வந்ததென்றால் அதற்குக் காரணம் அவ்வப்போது அதனுள் எழுந்த யாவே சமய அடியார்களே எனலாம். இவர்களில் பல தரத்தாரைக் காண்கிறோம்.

1. நசீரர். கானானுக்குள் புகுந்த இஸ்ரயேலர் கானானிய வழிபாட்டுடன் ஓரளவு உறவுகொண்டு. யாவேயைப் பாகாலைப் போல் வழிபட முற்பட்டனர்; கானானிய செழுமை வழிபாட்டுடன் தொடர்புள்ள பல வழக்கங்களையும். ஆசாரங்களையும் கடைப்பிடிக்கலாயினர். இத்தகைய சமயக் கலவையை எதிர்த்து எழுந்தவர்களில் முதன்மையானவர் நசீரர் ஆவர். இவர்கள் நசீர விரதம் எடுத்துக்கொண்டவர்கள். இவர்கள் தலையில் சவரக்கத்தி படலாகாது. திராட்சை இரசமும் மதுவும் அருந்தக்கூடாது (நீதித். 13:3-5), பிணத்துடன் தொடர்புகொள்ளக்கூடாது (இலேவி. 21:11)

தோற்றத்தில் இது ஒருவருடைய ஆயுள்காலம் முழுவதும் மேற்கொள்ள வேண்டிய ஒன்றாகக் காணப்பட்டது (சிம்சோன். சாமுவேல்). ஆனால். பிற்காலத்தில் இது காலத்திற் கேற்றாற்போல் எடுக்கப்படும் ஒரு பொருத்தனை யாகக் கொள்ளப்பட்டது. நசீரர்களைக் குறித்த சட்டம் எண். 6இல் தரப்படுகிறது.

2. இறைவாக்கினர் இஸ்ரயேலர் சமயத்திற்கு அச்சாணியாக விளங்கினவர்கள். இறைவாக்கினர் எனலாம். இறைவாக்கு என்ற சொல் நாபா (Naba) என்ற எபிரேயச் சொல்லின் தமிழாக்கமாகும். நாபா என்ற சொல்லின் பொருள் என்ன என்பது பிரச்சனை. சிலர் பொங்குதல். நுரைத்தல் என்று பொருள்கொள்ளும் ஓர் அடிச்சொல்லிலிருந்து இது எழுந்திருக்கலாமென்று கருதுவர். பரவச இறைவாக்கினர் உணர்ச்சிவசப்பட்டு நுரைபொங்கப் பேசினதினால் ஒருவேளை இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். இப்படியாக சவுல் மேலாடை யின்றி சாமுவேலுக்கு முன்பாகச் பரவசமாகப் பேசி பகல் முழுவதும். இரா முழுவதும் விழுந்து கிடந்தார் என்று காண்கிறோம் (1 சாமு. 19:24). அரேபிய மொழியில் நபி என்ற சொல் இறைவாக்கினர் என்று பொருள்பட்டது

பெரும்பான்மையான ப.ஏ. அறிஞரும் ப.ஏ. இறைவாக்கின் தோற்றத்தை இஸ்ரயேலருக்கு வெளியில் நாம் காணக்கூடும் என்பர். இது முழு உண்மையன்று. இஸ்ரயேலரின் அண்டைய நாட்டாரிடையில் பரவசமாகிப் பேசும் இறை வாக்கினர் கூடங்கள் காணப்பட்டன. இப்படியாக பாகாலின் தொண்டர்கள் கர்மேலில் பரவசமாகிப் பேசினார்கள். ஆடினார்கள் (1 அர. 18). இந்தப் பரவச இறைவாக்கு மரபை இஸ்ரயேலர் கானானியரிடமிருந்து பெற்றுக் கொண்டனர் என்பது உண்மையே. அரசமைப்பின் வரலாறு முழுவதிலும் இக்கூட்டத்தார் இயங்கி வந்தனர் என்று காணலாம் (1 சாமு. 10:10; 19:23பி; (1 அர. 18:20; 2 அர. 4:38; ஆமோஸ். 7:14). இப் பரவசக் கூட்டத்தார் சங்கங்கள் அமைத்துக் கூட்டங்கூட்டமாக வாழ்ந்து வந்தனர். பரவச நிலையடைய இசை அமைத்தனர் (1 சாமு. 10:5; 2 அர. 3:15); உடலைக் கீறிக் காயப்படுத்தினர். கிந்திக் கூத்தாடினர் (1 அர. 18:21). இப் பரவசநிலை ஒட்டுவாரையொட்டும் தன்மையுடையதாகக் காணப்பட்டது (10:10). இவர்கள் ஏதோ ஒருவனை ஆவியால் ஆட்கொள்ளப்பட்டுப் பேசுவதாகவும் அழுவதாகவும் நம்பப்பட்டது. இஸ்ரயேலரைப் பொறுத்தமட்டில் இந்த ஆவி யாவேயின் ஆவியே (1 சாமு. 10:5,10; எண். 11:24). இவர்கள் பைத்தியக்காரர்கள் என்றும் அறியப்பட்டனர் (2 சாமு. 6:20; 2 அர. 9:11; எரே. 29:26). இவர்களைக் கொண்டு சமூகத்துக்கு ஏதும் பயனில்லை.

பிற்கால இஸ்ரயேல் அறநெறி இறைவாக்கினர் பரவசக் கூட்டத்தாரிலிருந்து தோன்றினர் என்பது சரியன்று. இவர்கள் இரு சாராருக்குமிடையில் பொதுக் கூறுபாடாகக் காணப்படுவது இவர்கள் யாவேயின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டுச் செயலாற்றினர் என்பது தான். ஆவியால் ஆட்கொள்ளப்படுவதில்கூட இருசாராருக்குமிடையில் வேறுபாடு உண்டு. பரவசக் கூட்டத்தார் செயற்கையான செயல்களீமூலம் ஆவியை வருந்தியழைத்தனர் (2 அர. 3:15); அந்த ஆவியால் ஆடினர். கூத்தாடினர். அவர்களால் சமூகத்திற்கு ஏதும் பயனில்லை. ஆனால். அறநெறி இறைவாக்கினர் மேல் ஆவி தானாக வந்து இறங்கினது. அவர்களால் அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அன்னார் கூறின யாவும் மக்கள் வாழ்க்கையுடன் தொடர்புடையனவாகக் காணப்பட்டன.

இந்த அறநெறி இறைவாக்கினர்களும். பரவச இறைவாக்கினர்களும் ஒரே காலத்தில் வாழ்ந்ததினால் மக்களிடையில் சிறிது குழப்பம் காணப்பட்டது. இப்படியாக அமட்சியா ஆமோசைப் பரவச இறைவாக்கினராக எண்ணிப் பேசுகிறான் (ஆமோஸ் 7:14). இக் குழப்பத்தைத் தவிர்க்க விரும்பிய இணைச்சட்ட ஆசிரியர் சாமுவேல் நூலில் ஒரு விளக்கம் கொடுக்கிறார். இந்நாளில் இறைவாக்கினர் எனப்படுகிறவர் முற்காலத்தில் திருக்காட்சியாளர் எனப்பட்டார் (1 சாமு. 9:9). சாமுவேல் போன்ற இறைவாக்கினர்கள் பரவசக் கூட்டத்தாராசிய இறைவாக்கினரோடு ஒப்பிடாதிருக்க அவர் இந்த எச்சரிக்கையைத் தருகிறார். முறையான இஸ்ரயேல் இறைவாக்கின் தோற்றம் கானானின் பரவச இறைவாக்கல்ல. இஸ்ரயேலரிடையில் காணப்பட்ட திருக்காட்சி என்று காணலாம் (தொட. 44:5,15). பிற்கால அறநெறி இறைவாக்கினரைப் போலவே திருக்காட்சியாளர் கடவுளுடைய

விருப்பத்தை அறிந்து மக்களை எச்சரித்து வந்தார்கள் (2 அர. 17:13).

யோசுவா.. நீதித்தலைவர்கள் காலத்தில் பரவச இறைவாக்கினர், திருக்காட்சியாளர் ஆகிய இருசாராருமே காணப்பட்டனர் (நீதித். 4:4,5; 6:7-10; 1 சாமு. 3:20; 9:9).

அரசமைப்பின் காலத்தில் யாவே சமயம் அடைந்த வீழ்ச்சிக்கு நிகராக, அதனை ஈடுசெய்யும் வகையில் இறைவாக்கு எழுச்சியடைந்தது. இந்த இறைவாக்கு எழுச்சியில் முதன்மையாக நிற்பவர்கள் எலியா, எலிசா ஆகியோராவர். பாகால் வழிபாட்டுக்கெதிராக இவர்கள் கடும்போர் புரிந்தனர் (1 அர. 17 - 2 அர. 13). இவர்கள் தவிர நாத்தான் போன்ற பல இறைவாக்கினரும் அவ்வப்போது தோன்றி அரசர் நீதிவழுவாது காத்து வந்தனர்.

ப.ஏ. இறைவாக்கின் உச்ச நிலையை எட்டாம் நூற்றாண்டில் காணலாம். எருசலேம் எசாயா (எசா. 1-39), ஆமோஸ், ஓசேயா, மீக்கா ஆகியோர் இக்காலத்தில் யாவே சமயக் காவலராக அரும்பணி புரிந்தனர். எரேமியா அரசமைப்பிற்கும் சிறையிருப்புக்கும் இடைப்பட்ட மாற்ற காலத்தில் அருஞ் சேவை செய்து யாவே நம்பிக்கையைப் பாதுகாத்தார். எசேக்கியேல், சிறையிருப்பில் வாழ்ந்த மக்கள் உள்ளங்களில் எழுந்த பல சந்தேகங்களை அகற்றி வருங்காலத்தைக் குறித்த நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டினார். இரண்டாம் எசாயா (40-55) சிறையிருப்பின் இறுதி நிலையில் வாழ்ந்து இஸ்ரயேல் மக்களுக்கு அன்னார் வாழ்க்கை நிலையின் பொருளையும், உலகில் அவர்களது பொறுப்பையும் உணர்த்திக்காட்டி. இஸ்ரயேலர் சமயத்தை ஓர் உன்னத நிலைக்குக் கொண்டுவந்தார். ஆகாய், செக்கரியா மலாக்கி ஆகியோர் சிறைமீண்ட மக்கள் சமய வாழ்க்கையில் உறுதிப்படப் பணி செய்தனர்.

இவர்கள் பணியினால், யாவே ஒருவரே கடவுள், அவர் நீதியும் அன்பும் உள்ளவர், அவர்மேல் மக்கள் கொள்ளும் பற்று உலக வாழக்கையில், உடன் மக்களோடு கொள்ளும் உறவில் வெளிப்படல் வேண்டும் என்ற உண்மைகள் வெளிப்பட்டன.

3. ரேகாபியர். நசீரரைப் போன்று இவர்களும் யாவே சமய தீவிரவாதிகளாவர். பாகால் வழிபாட்டை அகற்றுவதில் ஏகூவுக்குத் துணையாயிருந்த யோனதாபின் தந்தை ரேகாபின் வழிவந்தவர்கள் என்பது மரபு. இக் கூட்டத்தாரைப் பற்றி எரே. 35இல் கூறப்பட்டுள்ளது. கானானிய கலாசாரத்தை வெறுத்த இவர்கள் நாடோடிகளாக அலைந்து திரிந்ததாகத் தெரியவருகிறது.

4.ஞானிகள். ப.ஏ.இன் இறுதிக்காலத்தில், இறைவாக்கினரின் பணி தடை செய்யப்பட்ட காலத்தில் ஞானிகள் என்னும் ஒரு வகுப்பார் திருச்சட்டத்தை நன்கு கற்று அதை மக்களுடைய வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திப் போதித்து வந்தனர் என்று காணலாம். ப.ஏ.இல் யோபு, நீதிமொழிகள், சபை உரையாளர் ஆகிய நூல்கள் ஞான நூல்கள் என அறியப்படுகின்றன. சில திருப்பாடல்களும் ஞான திருப்பாடல்கள் எனப்படுகின்றன.

5. மறைபொருள் வெளிப்பாட்டார். இறைவாக்கின் குழந்தையாகத் தோன்றியதுதான் மறைபொருள் வெளிப் பாட்டு இயக்கம். இறைவாக்கு வெளிப்பாடு நின்றுபோயிற்று என்று நம்பப்பட்ட ஒரு காலத்தில் (செக். 13:3,4; 1 மக். 4:46; 9:27; 14:41) மக்களுக்குக் கடவுளுடைய திருவுளத்தை தெரியப் படுத்தி, அன்னார் யாவே நம்பிக்கையில் நிலைத்திருக்கச் நிலைத்திருக்கச் செய்யப் பணிபுரிந்தனர் மறைபொருள் வெளிப்பாட்டார். ப.ஏ.இல் தானியேல் நூல் ஆசிரியர் இந்த இயக்கத்தைச் சேர்ந்தவராவார்.

6. மறைவல்லுனர். சிறையிருப்புக்குப்பின் திருச்சட்டம் முக்கியத்துவமடைந்தது. மக்களின் சமூக, சமய வாழ்க்கை முழுமையையும் திருச்சட்டம் கட்டுப்படுத்தி நின்றது. திருச்சட்டத்தைக் கற்றுத் தேர்ந்து, அதனை மக்களுக்கு எடுத்துப் போதிக்கும் பலர் இக்காலத்தில் தோன்றினர். எசுறா இத்தகைய ஒரு மறைவல்லுனராவார்.

6. யூத சமயத் தோற்றம்

இஸ்ரயேலர் சமயத்தின் பிற்கால வளர்ச்சியே யூத சமயம் (Judaism) எனப்பட்டது. இது இன்ன காலத்தில் தான் தோன்றியதென்று திட்டமாகக் கூறமுடியாது. சிறையிருப்பின் காலம் இதற்கு அடித்தளமிட்டதெனலாம். பின்னால், நெகேமியா, எசுறா ஆகியோரின் சீர்திருத்தங்கள், அன்னார் வலியுறுத்தின விலகியிருக்கும் மனப்பான்மை (exclusivism) ஆகியவை யூத சமயத்தின் ஆதாரங்களாக அமைந்தன.

சிறையிருப்பிலிருந்து மீண்ட யூதர், திருக்கோவில் கட்டப்பட்டதும் அதனைச் சுற்றி வழிபாட்டை மையமாகக் கொண்டதொரு சமூகமாகத் தங்களை அமைத்துக் கொண்டனர். ஆனால் எருசலேமிலிருந்து விலகி வாழ்ந்த யூதர், கோவில் வழிபாட்டில் கலந்துகொள்ள முடியவில்லை. இப்படிச் சிதறி வாழ்ந்த யூதர்களை ஒன்றாக இணைக்கத் திருச்சட்டம் உதவியது. தாங்கள் முன்னால் அன்னியருக்கு அடிமைப்பட்டு வாழக் காரணம், திருச்சட்டத்தைக் கடைப் பிடிக்காததே என்று இறைவாக்கினரால் உணர்த்தப்பட்ட யூதர்கள், இனிமேல் திருச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதில் கண்ணுங்கருத்துமாய் இருக்க முடிவு செய்தனர். எசுறா இதற்கு மிகவும் துணை செய்தார்.

இப்படியாக யூத சமயத்தில் திருச்சட்டம் நடு இடம் பெற்றது. எழுத்தின்படி பொருள் கொள்ளப்பட்டது. ப.ஏ. இன் பிற பகுதிகள் யாவும் திருச்சட்டத்தின் விளக்கங்களாகவே கொள்ளப்பட்டன. வழிபாட்டுக்காகத் திருச்சட்டமன்று, திருச்சட்டத்துக்காகவே வழிபாடு என்பதுதான் யூத சமயத்தின் அடிப்படையாயிற்று. திருச்சட்டத்தைப் போதிக்க மறைவல்லுனரும், போதகர்களும் தோன்றினர். இதற்காக தொழுகைமன்றங்கள் பல எழும்பின. திருச்சட்டத்திற்கு விளக்கம் தரும் பல விதிகளும், முறைகளும் தோன்றின (எக்ளி. 38:24 -34; 51:23; யூபிலி. 4:30...).

திருச்சட்டத்தின் அடிப்படையில் மனிதர் தம் அன்றாடத் தேவைகளையும், பிரச்சனைகளையும் பற்றிய கேள்விகள் எழுந்தன. இக் கேள்விகளுக்கு விடையளிக்க ஞானிகள் தோன்றினர்.

திருச்சட்டத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டாலும் யூத சமயம் முழுவதும் வெறும் திருச்சட்டச் சமயமாகிவிடவில்லை. திருச்சட்டம் அறநெறி சார்புடையதாக விளக்கப்பட்டது. நீதி, பெற்றோரை மதித்தல், கற்பு, இரக்கம், ஈகை, அன்பு ஆகிய பண்புகள் பாராட்டப்பட்டன (திருப். 34:11-16; தோபித். 4:3, 12). தனியார் பக்தி சிறப்பிடம் பெற்றது.

இக் காலத்தில் யூத சமயத்தினுள் பல பிரிவுகளும் காணப்பட்டன. மறைவல்லுனர், பெரிய ஜெபாலய புருஷர், ஹசீடியர், பரிசேயர், செலோத்தேயர், சதுசேயர், எசீனியர் முதலானோர் (இவர்களைப் பற்றிக் கூடுதலாக அறிய இந் நூலில் புதிய ஏற்பாட்டுப் பின்னணி என்ற கட்டுரை காண்க).

துணை நின்ற நூல்கள்

1. Kaufmann, Yehezkel, *The Religion of Israel*, 1956.
2. De Vaux, Roland, *Ancient Istael*, 1962.
3. Ringgren, Helmer, *Israelite Religion*, 1966.
4. Orlinksy, H.M., *Ancient Israel*, 1967.
5. இராபின்சன், ஞான, இஸ்ரயேலர் சமயம், 1969.
6. G. Fohner. *History of Israelite Religion*, SPCK, 1972.
7. H.H. Rowley, *Faith of Israel*. SCM, 1956.
8. ஜெ. ஜெயராஜ், திருமறையில் தெய்வங்கள், 1993.

20

பழைய ஏற்பாட்டு இறையியல்

சாமுவேல் அமிர்தம்

1. விவிலிய இறையியல்

விவிலியத்தில் அடங்கியுள்ள இறை நம்பிக்கையைத் தொகுத்து, விவிலியத்தின் கருத்து அமைப்புகளைக் (Biblical categories) கொண்டே ஒழுங்குபடுத்தி விளக்குவது விவிலிய இறையியல் (Biblical Theology) எனலாம். ப.ஏ. நம்பிக்கையை இவ்வாறு ஒழுங்குபடுத்திக் கூறுவது ப.ஏ. இறையியல் ஆகும். மெய்நூல் அமைப்பின் அடிப்படையில் சித்தாந்தங்களைத் திரட்டி ஒழுங்குபடுத்தித் தொகுத்து இறைவன், மானிடம், மீட்பு, இறுதியியல் எனும் பாகுபாடுகளைக் கொண்டது சித்தாந்த இறையியல் (Dogmatic Theology). ஒழுங்குபடுத்தப்பட்ட இறையியல் அல்லது ஒழுங்கமைந்த இறையியல் (Systematic Theology) எனப்படும். விவிலியத்துக்கு உரியதான கருத்து அமைப்புகளைக் கொண்டு கருத்துக்களைக் கோர்ப்பதும் பிற இயல்களிலிருந்து எடுத்துக் கொண்ட கருத்தமைப்புகளைப் பயன்படுத்தாமலும் இருப்பதுவே விவிலிய இறையியலின் சிறந்த கூறுபாடாகும். ப.ஏ. கருத்துக்களைக் கோர்வையாகத் தொகுத்து அளிப்பது மட்டுமன்றி அதன் போதனையையும் செய்தியையும் சரியாகப் புரிந்துகொள்ளவும் ப.ஏ.க்கும், பு.ஏ.க்கும் உள்ள ஒருமைப்பாட்டை விளங்கிக் கொள்ளவும் திருச்சபையில் ப.ஏ.க்குரிய சிறப்பிடம் எது என்று தெளிவு பெறுவதற்கும், ப.ஏ. இறையியல் துணையாக செயல்படுகின்றது. ப.ஏ.ஐக் குறித்த பல தவறான கருத்துக்கள் திருச்சபையில், குறிப்பாக இந்தியத் திருச்சபையில், நிலவி வருகின்றது என நாம் அறிவோம். ப.ஏ. கடவுளின் வார்த்தை என்கின்ற காரணத்தால் அதிலடங்கியுள்ள எந்தச் சொல்லையும், எந்தக் கட்டளையையும், கருத்தையும் நாம் ஏற்றுக்கொண்டு, எழுத்தின்படி அவற்றிற்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்று நம்புகின்றவர் ஒரு சிலர். ப.ஏ. சொல்கிறது என்கின்ற காரணத்தால் ஏழாம் நாளையே ஒய்வு நாளாக ஆசரிக்க வேண்டும் என்று கூறுகிறவர்களும் நம்மிடையே உண்டு. வேறு சிலரோ, ப.ஏ. யூத சமயநூல், இயேசு கிறிஸ்து உலகத்தில் தோன்றி, வாழ்ந்து, இறந்து உயிர்த்தெழுந்து நமக்கு மீட்பை அளித்தபின்னர் ப.ஏ.க்கும் நமக்கும் தொடர்பு இல்லை; அது நமக்குத் தேவையில்லை; பு.ஏ. மட்டுமே போதும் என்று கூறுவர். குறிப்பாக, நமது நாட்டு பண்டைய சமயநூல்களையே பு.ஏ.க்கு ஆயத்த நூல்களாக நாம் ஏற்றுக் கொண்டு ப.ஏ.ஐ ஒதுக்கிவிடலாம் என்று கூறுபவர்களும் இந்தியத் திருச்சபை வரலாற்றில் தோன்றாமலில்லை. இவ்வாறு தொடக்கத் திருச்சபையில் மார்சியன் (Marcion) கூறியது போன்ற கருத்துக்களைச் சென்ற தலைமுறையில் நம் நாட்டு கிறிஸ்தவர்களில் சிலர் கூறிச் சென்றதுண்டு. ப.ஏ. கடவுள் சினமுடையவர், வஞ்சம் காட்டுபவர், மக்களை அழிக்கத் தயங்காதவர், இஸ்ரயேல் மக்கள் மூலம் பிற மக்களை ஒழித்துக் கட்டியவர்; ஆனால் பு.ஏ. கடவுளோ அன்பே உருவானவர்; ப.ஏ. கடவுள் வேண்டாம், பு.ஏ. கடவுள் தாம் நமது கடவுள் என்று கூறத்துணிவோரும் உளர். இந்திய மெய்யியல் பேராசிரியர்களில் மேதையான அறிவர் இராதாகிருஷ்ணன் அவர்கள் இதைக் குறித்துக் கூறுகையில் இவ்வாறு எழுதுகின்றார்: கானான் நாட்டில் இஸ்ரயேலர் புகுந்த காலந்தொட்டு, பிறரது நம்பிக்கையைச் சற்றளவேனும் தாங்கிக் கொள்ளாத (Intolerant) குறுகிய ஓரிறை வணக்கக் கோட்பாட்டின் வன்முறைச் செயல்கள் செங்குருதி எழுத்துக்களால் வரலாற்றில் கொட்டையாக எழுதப்பட்டுள்ளன.

ஒரே கடவுளை வணங்கும் மக்கள் பிற தெய்வங்களைத் தொழும் மக்கள்மேல் போர்களைத் தொடுத்துள்ளனர். பழைய இஸ்ரயேலின் இப்போக்கை கிறிஸ்தவ சமயமும் இசுலாமிய சமயமும் ஏற்றுக்கொண்டுள்ளன. இந்துக்களும் ப.ஏ.ஐப் படிக்கையில் பல நிகழ்ச்சிகளைக் கண்டு கலங்குகின்றனர். கிறிஸ்தவச் சமய விவிலிய நூலில் இவை இருக்கின்றனவே என்று சிலர் குறை கூறுகின்றனர் என்பதற்கு இந்த மேற்கோள் எடுத்துக்காட்டாகும். சீனா நாட்டு கிறிஸ்தவ அடியார் ஒருவர் ப.ஏ. நண்டைப் போன்றது, நண்டின் ஒட்டைத் திறந்தால் இறைச்சி சிறு அளவுதான் இருக்கும் என்று கூறினாராம். இப்படிப்பட்ட சிக்கல்களும் கடினமுமுள்ள நூலைச் சரியாகப் புரிந்துகொள்ளப் ப.ஏ. இறையியல் தேவையாக இருக்கிறது.

ப.ஏ. சுமார் ஆயிரம் ஆண்டுகால அளவில் தோன்றிய நூல்களின் ஒரு தொகுதியாகும். யாவே கடவுள் இஸ்ரயேல் மக்கள் வரலாற்றில் கலந்துகொண்டு எவ்வாறு செயல்பட்டார் என்பதை அடியார்கள் பக்திக் கண்கள் கொண்டு புரிந்துகொண்ட முறைமையையும், தனியாகவும் கூட்டாகவும் அம்மக்கள் யாவே கடவுளிடம் பெற்ற அனுபவத்தைக் குறித்து அவர்கள் எழுதிவைத்திருக்கும் சான்றுகளையுமே நாம் ப.ஏ. இல் காண்கிறோம். ஒரு குறிப்பிட்ட காலத்தின் இறையனுபவத்தையோ, ஒரு குறிப்பிட்ட தனிப்பட்ட நபரின் இறையனுபவத்தையோ நாம் அங்கு பாராமல் பல தலைமுறைகளில் வாழ்ந்த மக்களின் கூட்டு அனுபவத்தையும் அதன் சான்றையும் அங்குப் பார்க்கிறோம். இறைவனைக் குறித்த அறிவு குறிப்பிட்ட ஓர் அளவுடன் நில்லாமல் பெருகிக்கொண்டே வந்துள்ளது. முதன் முதலாக மனிதர் இறைவனைக் குறித்துத் தவறாகப் புரிந்திருந்தனர்; பிற்காலத்தில் அதைச் சரியாகப் புரிந்து கொண்டனர்; சிறிது சிறிதாகப்

பெரும் அறிவைப் பெற்றுக் கொண்டனர். இறை அறிவில் முன்னேற்றம் பெற்றனர் என்று கூறுதல் இஸ்ரயேலைப் பொறுத்தவரையில் சரியன்று. ஏனென்றால் இஸ்ரயேல் மக்கள் தங்கள் இறைவனைப் புரிந்துகொண்ட முறைமை பிற மக்கள் இறைவனைப் புரிந்துகொண்ட முறைமையினின்று வேறுபட்டது. இறைவன் தம்மைக் குறித்து சில கருத்துக்களை மனித இதயங்களில் வெளிப்படுத்துகின்றார் என்பதைவிட மேலான முறையிலே கடவுள் தமது திருவுளத்தை வரலாற்று செயல்களின் மூலமாக வெளியிட்டார். தங்கள் வரலாற்றிலே செயலாற்றினார். எகிப்தின் அடிமைத்தனத்தினின்று தங்களை விடுவித்தபோது ஒரு புது முறையிலே தங்களோடு உறவுகொண்டார் என்று இஸ்ரயேல் மக்கள் கண்டுகொண்டனர். எனவே வரலாற்றின் மூலமாக கடவுள் செயலாற்றும் விந்தையை இஸ்ரயேல் மக்கள் துவக்கத்திலேயே கண்டுணர்ந்தனர். கானான் நாட்டுக்குள் குடியேறுதல். அரசுமுறை நிறுவுதல். அசிரிய. பாபிலோனிய நாடுகளால் துன்புறுத்தப்பட்டு அடிமையாக்கப்படல். பாபிலோனின்று விடுதலைபெறுதல் போன்ற வரலாற்று உண்மைகளே அவர்களுடைய சமய நம்பிக்கைக்கு அடித் தளம் ஆயிற்று. இப்படிப்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு இறையியல் விளக்கம் கொடுக்கப் பல அடியார் குழாங்களும் இறைவாக்கினர்களும் இஸ்ரயேலிலே எழும்பினர். இறை நம்பிக்கையைக் குறித்தும். பல்வேறு காலங்களில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட சில கருத்துக்கள் இருப்பினும் ஒரே கடவுள் இஸ்ரயேல் மக்களாகிய தங்களைச் சிறப்பாகத் தேர்ந்துகொண்டார்; அது முற்றிலும் அவர் அருள் - அன்புச்செயலே அன்றித் தங்களது சிறப்புத் தன்மையின் அடிப்படையில் அல்ல; தேர்ந்து கொண்டவர் அக்காரணத்தால் தங்களைத் தண்டிக்கவும் செய்வார் எனும் ஒரு கருத்து ப.ஏ.இல் அடித்தளம் பெற்று நிற்கிறது. எனவே ப.ஏ.ஐப் புரிந்துகொள்ள வரலாற்று முறை இன்றியமையாததாகும். வரலாற்று முறைமை அன்றிப் ப.ஏ. ஐ நாம் புரிந்துகொண்டால், பல தவறான கருத்துக்களையும் ஏற்கவேண்டியதாயிருக்கும். கிறிஸ்தவர்களின் நல்லொழுக்கத்திற்குத் துணைகாட்டும் ஒரு நூலாக மட்டும் நாம் ப.ஏ.ஐக் கருதினால் கிறிஸ்தவ நல்லொழுக்க முறைமைக்கு முரண்பட்ட பல வாழ்க்கைகளைக் குறித்து அதில் நாம் படிக்கும்போது தயக்கம் ஏற்படும். பு.ஏ.இன் வெளிப்படுத்தலுக்குதவாத சில கருத்துக்கள் ப.ஏ.இல் உண்டு. ஆனால் ப.ஏ.உம் பு.ஏ.உம் ஒன்றுக்கொன்று இணைந்து ப.ஏ. கூறும் வண்ணமாக இஸ்ரயேலிலே செயலாற்றி வந்த இறைவன் இறுதிக் காலத்தில் இயேசுகிறிஸ்துவில் செயலாற்றினார், தம்மை வெளிப்படுத்தினார் என்று கூறினால் மட்டுமே பு.ஏ.ஐயும் நாம் சரியாகப் புரிந்துகொள்ளக் கூடும். எனவே. ப.ஏ. நூல்களை மக்களின் பக்திப் பயண நூல்களாகக்கொண்டு. அந்தப் பயணத்தில் இறைவன் அவர்களை எவ்வாறு நடத்தினார் என்று புரிந்துகொள்வதே நமது கடமையாகும். பயணத்தில் அவர்கள் எட்டிய உச்சிகளும் உள. வீழ்ந்த இடங்களும் உள. ஆனால் தனிப்பட்ட கருத்துக்களுக்கு ப.ஏ.இல் மைய இடம் கிடையாது. யாவேக்கும், இஸ்ரயேல் மக்களுக்கும். மீட்பு, அருள். நடத்துதல் போன்றவற்றின் மூலமாக இடையறாதத் தொடர்பே ப.ஏ.இன் மையப் பொருளாகும்.

2. பழைய ஏற்பாட்டு இறையியலின் தோற்றம்

ப.ஏ. இறையியலை பல நோக்குகளுடன் பல வல்லுநர்கள் சென்ற காலங்களிலே எழுதியுள்ளனர். டேவிட்சன், H.W. இராபின்சன் என்பவர்கள் தங்களுடைய நூல்களை எழுதியபோது சித்தாந்த இறையியல் போக்கிலே இறைவனைப் பற்றிய போதனை, மீட்பைப் பற்றிய போதனை, இறுதியியலைப் பற்றிய போதனை என வகுத்துத் தொகுத்து எழுதினார்கள். N.H. ஸ்நெயித் போன்றவர்கள் எழுதியபோது ப.ஏ.இன் மையக் கருத்துக்கள் என இறைவனின் தூய்மை, இறைவனின் நீதி, இறைவனின் மீட்பு, இறைவனின் உடன்படிக்கை அன்பு, இறைவனின் தூய ஆவி போன்ற சில கருத்துக்களை மையமாகக் கொண்டு விளக்கி எழுதினார்கள். J. மியூலன்பர்க் என்பார் இஸ்ரயேல் சென்றவழி (The Way of Israel) என்னும் நூலிலே நாம் மேற்கூறிய வரலாற்றுக் கருத்தை வெளியிட்டு இஸ்ரயேலின் வரலாறு ஒரு பயணம் என விளக்கி எழுதினார். மில்லர் பரோஸ் என்பவர் ப.ஏ. இறையியல் ஓர் உயிர் நிறைந்த வரலாற்று இயக்கம் (Living Historical Movement) என்று கூறியுள்ளார். ப.ஏ.க்குள்ளேயே நாம் காணக்கூடிய ஒரு முக்கியமான கருத்து உடன்படிக்கை என்பது. எனவே சித்தாந்த இறையியலினின்று கடன் வாங்காமல் ப.ஏ.இன் கருத்தாகிய உடன்படிக்கையையே அடிப்படையாகக் கொண்டு W. ஐக்குரோட் என்பவர் இறையியலை எழுதினார்; இந்த உடன்படிக்கை உறவை கடவுளும் இஸ்ரயேல் மக்களும். கடவுளும் உலகமும். கடவுளும் தனிமனிதரும் என மூன்றாகப்பகுத்து விரிந்த இறையியல் விளக்கம் அளித்தார். இதில் உடன்படிக்கை உறவு, உடன்படிக்கைச் சட்டங்கள், உடன்படிக்கை செய்யும் கடவுளின் தன்மை. உடன்படிக்கையின் மனிதர்கள் அதாவது தலைவர்கள், குருக்கள், இறைவாக்கினர், வழிபாட்டு அமைப்புகள், உடன்படிக்கை முறிக்கப்படுதல், உடன்படிக்கை நிறைவேறுதல், முதலிய கருத்துக்களைத் தொகுத்து இவர் எழுதியுள்ளார். E. ரைட், Y. பன்ராட் போன்றவர்கள் இப்படிப்பட்டக் கருத்துக்களில் ப.ஏ.ஐ விளக்காமல் செயல்படும் கடவுள் (God who acts) என்பதையே மையமாகக் கொண்டு ப.ஏ.ஐப் புரிந்துகொள்ள விழைந்தனர். நாம் முற்கூறிய வண்ணம் வரலாற்றில் செயல்படுவதே இஸ்ரயேல் அனுபவத்தின் நம்பிக்கையின் சிறப்பு என்பதை இப்போக்கு தெளிவுப்படுத்துகின்றது. மேலும் ப.ஏ. நூலிலே ஒரே இறையியல் இல்லை, பல இறையியல் குழுவினர்களின் விளக்கங்கள் உள்ளன (Different Traditions). எனவே தனித்தனியாக ஒவ்வொரு குழுவினரும் எவ்வாறு இறைவன் செயலைப் புரிந்து அதற்கு விளக்கம் தந்தனர் என ஆராயவேண்டும். எனவே ப.ஏ.இல் ஓர் இறையியல் அல்லது பல இறையியல்கள் உண்டு என J நெகன்பி போன்றவர் கூறுவர். அதுவும் நாம் ஒத்துக்கொள்ளக் கூடியதே. எபிரேய நூலாசிரியர் (1:1) கூறுவது போன்று பல முறை, பல வகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார். இஸ்ரயேலிலே பலமுறை பலவகைகளில் தம்மை வெளிபடுத்திய கடவுளைக் குறித்து வேறுபட்டச் சான்றாளர்கள் சான்று பகர்ந்துள்ளனர். அந்தச் சான்றாளர்கள் (witnesses) கூறும் சான்றினைக் கேட்பதுவே ப.ஏ.இன் இறையியலைப் புரிந்துகொள்ளும் முறையென அண்மையில் டாக். W.M.W. ராப் வெளியிட்ட நூலில் எழுதுகின்றார். மேற்கூறிய பல்வேறு ஆசிரியர்களின் பாதைகள் ஒன்றுக்கொன்று சற்று வேறுபட்டிருப்பினும், அடிப்படையாக இஸ்ரயேல் சமயத்தில் இருக்கும் நெருங்கிய உறவை இவர்களனைவரும் ஒத்துக்கொள்ளுகின்றனர். அடிப்படையிலேயே ப.ஏ.ஐப் புரிந்துகொள்ள முனைகின்றனர் என்று கூறலாம். ப.ஏ.ஐ சரியாகப் புரிந்துகொள்ள ஆராய்ச்சி முறை நல்ல துணையாகும். பிற இலக்கியங்களைக் கற்க எந்தெந்த இலக்கியங்கள் பயன்படுகின்றனவோ அவைகளனைத்தையும் ப.ஏ.ஐக் கற்றுக் கொள்ள நாம் பயன்படுத்தலாம். ஆராய்ச்சி முறையில் விவிலியத்தைக் கற்பதென்றால் சிலர் தயங்குகின்றனர்; ஆய்வு முறையில் கற்றால் பக்திக்குக் குறைபாடு என அஞ்சுகின்றனர். ஆனால்

இம்முறைகள் அனைத்தும் ப.ஏ.இன் செய்தியைக் குறைக்க அன்று, அதன் செய்தி தெளிவாக வெளிப்படுத்தப்படுவதற்கே பயன்படுத்தப்படுகின்றன. ஒரு நூல் எழுதப்பட்ட காலம், அந்நூலை எழுதிய ஆசிரியரின் காலத்திலிருந்த நம்பிக்கைகள், அந்நூலை அவர் எழுதக் காரணம், அந்த நூலுக்கு அடிப்படை யாயிருந்த பிற நூல்கள், இவற்றைப் புரிந்தால் அன்றோ, நாம் அந்நூலைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்? ஒரு நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள இலக்கிய வகைகளான கவிநடை, உரைநடை, வரலாற்று நிகழ்ச்சிகள், உவமைகள் முதலியவை களைப் பகுத்தறிந்தால் மட்டுமே அவற்றிற்குச் சரியான விளக்கம் கொடுக்கமுடியும். ஆய்வுத்துறையில் கற்றாலும், கடவுளின் செய்தியை ஏற்றுக்கொள்ள உள்ளத்தில் தாழ்மையும், துணிவும் இன்றேல் அதனால் பயன் இல்லை. ஆனால் பக்தி கொண்டு மட்டும் படித்தால் போதும் என்று எண்ணுவதும் தவறு. ஞாயிறு பள்ளியில் கற்றுக் கொள்வதுபோல கற்றுக் கொண்டால் நூலில் அடங்கியுள்ள உண்மைகளை மட்டுமே நாம் கற்றுக்கொள்வோமே தவிர, அது எடுத்துக்கூற இருக்கும் ஆழ்ந்த உண்மைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளமாட்டோம். மொழியியல், அகழ்வியல், பண்டைய மத்தியக் கிழக்கு வரலாறு, மத்திய கிழக்கு இலக்கிய வரலாறு இவைகளின் துணைகொண்டு, ப.ஏ.ஐச்சரியாகப் புரிந்துக்கொள்ள முயல்வதே விரும்பப்படக்கூடியது. நிலநூல் கற்பதால் நிலப்பரப்பின் அழகு எவ்வாறு குறையாதோ, மண்ணின் செழுமை எவ்வாறு குன்றாதோ, அதேபோல் ப.ஏ.ஐ ஆய்வு முறையில் கற்பதால் அதன் ஆன்மிக, சமய முக்கியத்துவம் குறைவதே இல்லையென H.W. இராபின்சன் கூறுகின்றார். தாவரநூல் மாணவர் ஒருவர் ரோஜாமலரை ஆராய்ச்சி முறைகொண்டு கற்பதால் அதன் அழகும் நறுமணமும் குறைவதில்லையன்றோ. அழகையும், நறுமணத்தையும் சுவைக்க ஆய்வுக்கண்கள் மட்டும் போதா, கலைக் கண்களும் வேண்டும். அதே போன்று ப.ஏ.ஐக் கற்கையில் ஆய்வுக்கண்களும், பக்திக்கண்களும் தேவை என்று கூறலாம். இறையியலைக் குறித்து நாம் பேசுகையில், ஒன்றை நினைவுபடுத்த வேண்டும். இறையியல் என்று ஒரு சொல் ப.ஏஇல் கிடையாது, அதற்குப் பதிலாக அதற்கு ஒத்துப் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர் கடவுளைக் குறித்த அறிவு என்பதாகும். ஆனால் அறிவு என்கிற சொல் புத்திசார்ந்த அறிவை மட்டும் விவிலியத்தில் குறிப்பிடவில்லை. நுண்ணறிவு, சிந்தனை, உணர்ச்சி, செயல் படும் தன்மை முதலிய அனைத்தையும் கொண்ட முழுமனித ஈடுபடுதலையே அறிதல் எனும் எபிரேயச் சொல் விளக்கு கின்றது. ஏசாயா 1:3இல் இறைவாக்கினர் கடவுளை அறியும் அறிவும் இல்லையெனக் கூறுகையில் தொடர்ந்து ஆணையிட்டு பொய் சொல்லுகிறார்கள், கொலை செய்கிறார்கள், திருடு கிறார்கள், விபசாரம் செய்கிறார்கள், கொள்ளையிடுகிறார்கள், இரத்தம், எங்கும் இரத்தமே என்று அங்கலாய்க் கின்றார். எரேமியா 22:15,16ஆம் வசனங்களில் இலிக்கியாவின் மகன் யோயாக்கீ மினிடம் கூறுகையில், உன் தந்தை நியாயமும் நீதியும் செய்ததினாலே அவன் சுகமாய் வாழ்ந்து வந்திருந்தான். சிறுமையும் எளிமையுமானவர்களின் நியாயத்தை விசாரித்தான். சுகவாழ்வு இருந்தது. இதுவே உன்னை அறிகிற அறிவல்லவா என்று கடவுள் கேட்கிறார். கடவுளைப் பற்றிய அறிவு செயலில் விளங்கும் ஒன்று என்பதை நாம் காண்கிறோம். அறிவுபெறுதல் என்பது நெருங்கிய தொடர்புபெறுதல், அத்தொடர்பு செயலில் விளங்குதல் என்னும் பொருள் பெறுகிறது. ஆமோஸ் 3:2இல் உலகத்திலுள்ள எல்லா மக்களினங்களுக்குள்ளும் உங்களைத்தான் நான் சிறப்பாக அறிந்து கொண்டேன் என்று ஆமோஸ் வாயிலாக கடவுள் கூறுகிறார். உங்களுடனேயே உறவு கொண்டேன் என்பது இங்கு விளங்கும் பொருள். ஆண் பெண் உறவிற்கும் இந்தச் சொல் ப.ஏஇல் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே ஆட்தன்மை கள் ஒன்றுக்கொன்று ஈடுபடுதலும், அதன் அடிப்படையிலே செயலாற்றுதலும், அறிதல் என்ற சொல்லினால் விளங்குகின்றது. இறையியல், இறையறிவு என்பது அவ்வாறு இறைவனுடன் முற்றிலும் தொடர்பு கொண்டு, புரிந்துக்கொள்வது மட்டுமல்ல அந்த அடிப்படையிலேயே வாழ்வது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

3. பழைய ஏற்பாட்டின் பல்வேறு இறையியல் நோக்குகள்

ஒன்றுக்கு மேற்பட்ட இறையியல்கள் ப.ஏ.இல் உண்டு என நாம் முன்னே கூறினோம். அதன் தொடக்க நூல்களை நாம் படிக்கையில் இறைவனுக்குப் பல பெயர்கள் கொடுக்கப் பட்டுள்ளன. **யாவே, எலோகீம், ஏல், எல்சடாய், அனைத்து வல்லமையுள்ள கடவுள்,** எனப் பலப் பெயர்களைக் காணலாம். வி.ப.6:3 வசனத்தில் கடவுள் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் நான் எல்லாம் வல்ல கடவுளாக (எல்சடாய்) காட்சியளித்தேன். ஆண்டவர் (யாவே) என்னும் பெயராலேயோ அவர்கள் என்னை அறியவில்லை என்று கூறுவதாக நாம் படிக்கிறோம். ஆனால் தொட. 4:26 வசனத்தில் அக்காலத்திலேதான் மனிதர் ஆண்டவரின் (யாவேயின்) பெயரைத் தொழுதுகொள்ளத் தொடங்கினர். என்பதாகப் படிக்கிறோம். முன்னே யாவே எனும் பெயர் அறியப்படவில்லையென முற்பகுதியிலும், இல்லை ஏனோக்கு காலத்திலேயே யாவே எனும் பெயர் அறியப்பட்டிருந்தது என இந்தப் பகுதியிலும் நாம் காண்கிறோம். இங்கே ஒரு முரண்பாடு இருக்கின்றதல்லவா? இது போன்று காணப்படும் வேறு முரண்பாடுகளையும் தவிர்க்க ஆராய்ச்சியாளர்கள் ஒரு விடை வகுத்துள்ளனர். ப.ஏ.இன் தொடக்க நூல்களிலே, அவற்றிற்கு அடிப்படையாக ஏடுகள் இருந்தன. அவற்றினுள் ஒரு ஏடு யாவே (ஆண்டவர்) என்ற திருப்பெயரைப் பயன்படுத்தியது. தொட.4:26 வசனம் இந்த ஏட்டைச் சார்ந்தது. ஆனால் வேறுசில ஏடுகள் எகிப்தில் மோசேக்கு யாவே தம்மை வெளிப்படுத்தியபின் யாவே என்ற பெயரைப் பயன்படுத்துகின்றன. இந்த உண்மையையும், இதுபோன்ற வேறு உண்மைகளையும் அடிப்படையாகக் கொண்டு, யாவே (Yahweh) பெயரைப் பயன்படுத்தும் ஆசிரியக் குழுவினர் இருந்தனர் என கணிக்கப்படுகிறது. அவர்களுக்கு ஆங்கிலத்திலே J ஆசிரியர்கள் என்று பெயர். எலோகிம் (Elohim) என்ற சொல்லைத் துவக்கத்திலே பயன்படுத்தின ஒரு குழுவினர் இருந்தனர், அவர்களுக்கு E குழுவினர் என்று பெயர். இணைச்சட்ட நூலையும் அதோடு சேர்ந்து யோசுவா முதல் அரசர்கள் முடிய உள்ள நூல்களையும் எழுதியவர்கள் ஒரு குழுவினர் இருந்தனர் (Deutronomy). D குழுவினர் என்று அவர்களுக்குப் பெயர். குருத்துவ முறைமைகளுக்கு முக்கியத் துவம் கொடுக்கும் இன்னொரு குழுவினருக்கு (Priestly) Pகுழுவினர் என்று பெயர். இவ்வகையான குழுவினர் எழுதிய பல ஏடுகள் ப.ஏ.இன் நூல்களுக்கு மூல நூல்களாகப் பயன் பட்டன என்னும் முடிவுக்கு ஆய்வாளர்கள் வந்துள்ளனர். இங்கே, யாவே என்ற ஒரு குழு ப.ஏ.இல் சொல்லப்பட வில்லையே என்று ஒருவேளை நாம் எண்ணலாம். ஆனால் சொற்களை மட்டுமல்ல, கருத்துக்களையும் நாம் பார்க்கையில் இவ்வகையான வெவ்வேறான குழுக்களும் இறையியல் நம்பிக் களும் இருந்து வந்திருக்கின்றன என்பது தெளிவாகும்.

(அ) J இறையியல்

தாவிது, சாலமோன் என்னும் அரசர்களின் காலம் அரசியல்,

இலக்கியம், கலைத்துறைகளிலே ஒங்கி நின்றது. இந்தக் காலத்தில்தான் இஸ்ரயேல் மக்கள் தங்கள் நாடு, தங்கள் மக்கள், தங்கள் வழிபாடு எனும் ஒரு சுய உணர்வை அதிகமாகப் பெற்றிருக்க வேண்டும். அதன் பயனாக அவர்கள் தங்கள் வரலாற்றை எழுதத் தொடங்கினார்கள். தங்கள் வரலாற்றிற்கு ஒரு துவக்கம், ஒரு முடிவு உண்டு என அவர்கள் நம்பினார்கள். அக்காலத்தில்தான் J ஆசிரியர் அல்லது ஆசிரியக் குழுவினர், தங்கள் இறையியலையும் ஏடுகளையும் எழுதிவைத்தனர் என்று நம்ப இடம் உண்டு. தங்கள் வரலாறு எகிப்திலே துவங்குகின்றது, தற்போது நடைபெறுகின்றது. அதற்கு எதிர்கால வாழ்வு உண்டு, கடவுள் ஒரு திட்டம் வகுத்து தமது திருவுளத்தை வெளிப்படுத்துகின்றார் என்ற இறையியலை எழுதினார்கள். மேலும், தங்கள் வரலாறு எகிப்தில் தொடங்குகின்றது என்பதோடு அவர்கள் நிறைவடையவில்லை. உலகம் தோன்றியது எவ்வாறு, மனிதர் எவ்வாறு தோன்றினர், உலகில் மக்கள் தொகுதிகள் நாகரிகம் அடைந்தது எவ்வாறு என்பதையும் அவர்கள் பக்திக் கண்களால் விளக்கினார்கள். கடவுள் மனிதரைப் படைத்தார்; மனிதர் தம் சுயவிருப்பால் பாவம் செய்தனர்; கடவுளிடம் கீழ்ப்படியாமை காட்டினர்; அவர் அவர்களைத் தண்டித்தார்; ஏதேன் தோட்டத்தினின்று மனிதர் துரத்திவிடப்பட்டனர், ஆனாலும் கடவுள் அருள் காட்ட மறக்கவில்லை; அவர்களுக்கு அத்தியிலை உடை அளித்தார்; திரும்பவும் மக்களின் பாவம் பெருகிக் கொண்டே சென்றது. மனிதரின் தீமை மண்ணுலகில் பெருகிற்றென்றும் அவர்களின் இதயத்தின் நினைவுகளும், சிந்தனைகளும் எப்போதும் பொல்லாதவைகளே என்றும் ஆண்டவர் கண்டார்; எனவே உலகத்தைத் தண்டிக்கத் துணிந்தார்; அருள் காட்டி நோவாவையும் அவர் தம் குடும்பத்தாரையும் மீட்டுக்கொண்டார்; நோவாவோடு ஓர் உடன்படிக்கை செய்தார்; அதற்கு அடையாளமாக வான வில்லை விண்ணிலே வைத்தார்; ஆனாலும் பாவம் பெருகிக்கொண்டே சென்றது; இறைவனுக்கு எதிராக மக்கள் செயல்பட்டனர். செயல்படத் துணிந்தனர்; எனவே பாபேலிலே அவர்களைத் தண்டித்துச் சிதறப் பண்ணினார்; ஆனால் அவர் தண்டனைத்தீர்ப்பு இறுதிச் சொல் அன்று; ஆபிரகாமைத் தேர்ந்துகொண்டு அவர் மூலமாக மக்கள் மேல் கருணை காட்டினார்; இறைவனின் அன்பு, தண்டனை, மீட்பு இந்த அடிப்படையிலே வெளிப்பட்டது. தொடக்க வரலாற்றை இந்த J இறையியற் குழுவினர் தங்கள் வரலாறு எவ்வாறு மனுக்குலத்தின் வரலாற்றோடு இணைந்துள்ளது, தந்தை ஆபிரகாமின் அழைப்போடு இறைவனின் புது அருட்செயல் தொடங்குகின்றது என்பதை விளக்கினார்கள். இறைவனின் அன்பு இஸ்ரயேல் மக்களிடத்தில் மட்டுமன்று, அவர்கள் மூலமாக உலகெங்கும், உலக மக்கள் எல்லாருக்கும் செல்கிறது என்கிற ஆழ்ந்தக் கருத்தை இந்த J ஆசிரியர் கூறுகின்றார். மேலும், இந்த J இறையியலில் தேர்ந்துக்கொள்ளுதல் என்னும் நம்பிக்கையையும், தெளிவாக நாம் பார்க்கிறோம். இளைய தம்பி தேர்ந்து கொள்ளப்படுகின்றான். இஸ்மவேல், ஈசாக்கு என்பவர்களுக்குள்ளே ஈசாக்கு, ஏசா, யாக்கோபு என்பவர்களுக்குள்ளே யாக்கோபு, ரூபன், யூதா என்பவர்களுக்குள்ளே, யூதா, மனாசே, எப்ராயீம் என்பவர்களுக்குள்ளே எப்ராயீம் என்கிற கருத்தை இவர் தெளிவுபட விளக்குகின்றார். தாவிது மூத்த மைந்தனன்று இளைய மைந்தன், அவரின் குலமும் முக்கியத்துவம் வாய்ந்த குலம் அல்ல, எளிமை வாய்ந்த குலம். இவ்வாறு கூறுகையில் இஸ்ரயேல் மக்கள் சிறப்பு வாய்ந்த மக்களாதலால் கடவுள் தேர்ந்து கொள்ளவில்லை. சிறிய மக்கள் குழாம், ஆற்றல் குறைந்தவர்கள். ஆயினும் கடவுள் தேர்ந்துகொண்டார் என்னும் நம்பிக்கையையே இவர் அழகுற எடுத்துக் கூறுகின்றார். மக்கள் இடம் பெயர்தல், மக்கள் ஒரு நாட்டில் குடிபுகுதல், அந்நாட்டு மக்களால் ஒடுக்கப்படுதல், ஒரு நாட்டினின்று விடுதலை பெறுதல் யாவும் வரலாற்றுக்கு விளக்கம் கொடுத்துத் தெளிவுபடுத்தியவரும், முதலாவது தெளிவுபடுத்தியவரும், இந்த J ஆசிரியரே என்றால் அது மிகையாகாது. இஸ்ரயேல் காலத்தில் வாழ்ந்த பிற மக்கள் இவ்வாறு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. வரலாற்றிலே தங்கள் கடவுள் செயல்பட்டாரென இந்தக் காலத்தில் வேறு எவரும் கூறியதாக நம்பியதாக நமக்குத் தெரியாது. எனவே ப.ஏ.க்கு மையப் பொருளான இறைவன் வரலாற்றிலே செயல்படுகின்றார் என்கிற நம்பிக்கையை J ஆசிரியரிடமிருந்தே நாம் கற்றுக் கொள்கின்றோம்.

யாவே கடவுள் மக்களோடு உறவு கொள்வதைப்பற்றியும், J ஆசிரியர் கூறிய சில சிறப்பான கருத்துக்கள் உள. இறைவனின் நெருங்கிய தொடர்பினைக் காட்ட அவர் பேசுகின்றார், அவரிடம் பேசலாம், அவர் உலாவ வருவார், அவர் பேழை சாளரத்தை மூடுவார், அவர் மனம் வருந்துவார், அவர் விருப்பமுறுவார், மனிதர் செய்வதைக் காண விண்ணினின்று இறங்கி வருவார். அவருடைய கண்கள், காதுகள் என்று விளக்கம் தந்து கூறுவது இந்த ஆசிரியர்களின் ஒரு சிறப்பு. கடவுள் மனிதருக்கு மிக அருகில் இருப்பவர் என்கிற நம்பிக்கையை நாம் இங்கே காணலாம். இந்நூலில் மனுவுருவேற்பியல் (anthropomorphism) காணக்கிடக்கிறது என்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். எருசலேமில், கடவுள் தாவிதைத் தேர்ந்தெடுத்து அரசராக நிரந்தரமாக அரசுரிமையை அவருக்களித்தார் என்கிற நம்பிக்கை J ஆசிரியர் கூறியது என்று சில ஆராய்ச்சியாளர்களால் நம்பப்படுகிறது. அரசார்ந்த எருசலேம் இறையியல்(Royal Jerusalem Theology) என்று இதற்குப் பெயர் கொடுத்திருக்கின்றனர். தாவிதரசரின் ஆட்சி காலத்தையும் அப்போது யூத இஸ்ரயேல் குலத்தினர் ஒன்றுபட்டதையும் இறைவனின் செயல் என இந்த ஆசிரியர் நம்பினார். J என்னும் சொல் யூதாவையும் குறிக்கும். எனவே இப்படிப்பட்ட இறையியல் தென்னாட்டில் தோன்றியது என்று நாம் ஒத்துக்கொள்ளலாம்.

(ஆ) E இறையியல்

எலோகிம் எனும் பொதுப் பெயரைப் (கடவுள் எனத் தமிழில் மொழிபெயர்க்கலாம்) பயன்படுத்திய குழுவினருக்கு E என்று பெயர் என்று கூறினோம். கடவுளுக்கும் மனிதருக்கும் இருக்கும் உறவை மனு உருவேற்பியல் கொடுத்து விளக்காமல், கடவுள் மனிதருக்குச் சற்று அப்பாற்பட்டவர், நேரடியாகக் காட்சியளிக்கமாட்டார், கனவுகளின் மூலமாகவும், தூதுவர்களின் மூலமாகவுமே பேசுகின்றார் என்கிற நம்பிக்கை இந்த இறையியல் குழுவினரிடம் காணப்பட்டதென நாம் அறிகின்றோம். ஆபிரகாமுக்கு இங்கு முதலிடமில்லை, யோசேப்பு இங்கு முதலிடம் பெறுகிறார். கடவுளுக்கும் இஸ்ரயேலுக்குமுள்ள உறவை விளக்க உடன்படிக்கை எனும் கருத்தை இந்த ஆசிரியர் மையமாகப் பயன்படுத்துகிறார். இந்தக் காலத்து நாட்டு வழக்கில் இருந்தபடி பேரரசர் ஒருவர் சிற்றரசர்களோடு செய்யும் உடன்படிக்கையை உவமையாகக் கொண்டு கடவுள் தங்களிடம் உடன்படிக்கையை ஏற்படுத்தினார், அதற்குச் சில நிபந்தனைகள் உண்டு, அந்த நிபந்தனைகள்தான் கடவுள் வழங்கியருளிய சட்டங்கள். அந்த சட்டங்களின்படி நடவாவிடின் தண்டனை அல்லது சாபம் நேரும் என்று E ஆசிரியர் விளக்குகிறார். வி.ப. அதி. 20: 23இல் நாம் இந்த அமைப்பைப் பார்க்கின்றோம். E

ஆசிரியர் அரசு முறைமையை விரும்பியதாகத் தெரியவில்லை. முன்னே சீனாய் மலையிலே சட்டத்தைப் பெற்றபோதும், செக்கேமிலே 12 குலங்கள் ஒன்று சேர்ந்தபோதும், குலக்கூட்டமைப்பாக வாழ்ந்த வண்ணமாகவே வாழ்தல் கடவுளுக்கு ஏற்புடையது, கானான் நாட்டு மக்களின் முறையான அரசுரிமையை ஏற்பது தவறு என்கிற நம்பிக்கை இவர்களிடத்திலே இருந்திருக்கின்றது. கானான் நாட்டு முறைமைகள், வழிபாட்டுச் சடங்குகள் போன்றவற்றை வெறுத்து, பாலைநில வாழ்க்கையே உயர்ந்தது என்று இவர்கள் நம்பியிருந்தனர் போலும். கானான் நாட்டு பாகால் வணக்கத்தையும், பிற வழிபாட்டு முறைமைகளையும் முற்றிலும் எதிர்த்த எலியா, எலிசா போன்ற இறைவாக்கினரின் நம்பிக்கைகளும், அந்த இறைவாக்கினர் குழாமின் செல்வாக்கும் E நூலிலே நாம் காணலாம். இறைவாக்கினர்களைப்பற்றிக் கூறுமிடத்து, பல அரசியல் கலகங்களுக்கும், சில கொலைகளுக்கும் அவர்கள் காரணமாயிருந்தனர் என்று பார்க்கிறோம். கடவுள் தங்களை இவ்வாறு நடத்தினார் என்று அவர்கள் நம்பியிருந்தபோதும், அந்த நம்பிக்கையில் பிறக்கும் இறையியல் உண்மைகளை நாம் ஒத்துக்கொண்டபோதிலும் அவர்களுடைய ஒழுக்க முறைமைகளை நாம் ஒத்துக்கொள்வதற்கில்லை. இறைவாக்கினர்கள்தான் செய்தாலும், தவறு தவறுதானே.

(இ) D இறையியல்

இணைச்சட்ட ஆசிரியர் மிகவும் திறமைசாலி. இணைச்சட்ட நூலை நாம் வாசிக்கையில் மோசே பேசுகின்றார்; மோசே அறிவுரைகளைக் கொடுக்கின்றார் என்னும் ஓர் உணர்வு நமக்குக் கிடைக்கின்றது. ஆனால் உண்மையாக மோசே முனிவருக்கு சுமார் 600 ஆண்டுகளுக்குப்பின் எழுதப்பட்டது இந்நூல். ஏழாம் நூற்றாண்டில் உசியா அரசர் காலத்தில் கண்டெடுக்கப்பட்ட திருச்சட்ட நூல் இணைச்சட்ட நூலின் பெரும்பகுதியென நம்புவதற்குத் தெளிவான ஆதாரங்கள் உண்டு. ஆசிரியரால், வட நாட்டிலே வந்த அழிவிற்குப் பின்னர், அங்கு எழுதப்பட்டு தென்னகத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஏடு என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர் இஸ்ரயேலின் கீழ்ப்படியாமையையும், தவறுதல்களையும் எடுத்து, இந்த அழிவினின்றும், சிக்கலான நிலைமையினின்றும், விடுதலைபெற எதைச் செய்யவேண்டும் என்பதை இந்த இணைச்சட்ட நூலை எழுதின குழுவினர் தெளிவாகக் கூறுகின்றனர். மேலும் அருளுரை நடையைப் பயன்படுத்தி உணர்ச்சியைத் தூண்டிவிட்டு அவ்வாறு செயற்துறையில் மக்களை ஈடுபட அழைக்கின்றனர்; உடன்படிக்கை என்பது வெறும் அரசியல் அல்லது சமூக முறைமையன்று, அன்பின் அடிப்படையிலே கடவுள் செய்த ஒரு செயல் என்று அவர்கள் புது விளக்கம் கொடுக்கின்றனர். அன்பின் காரணத்தால், கீழ்ப்படிதலுக்கு ஒரு புதுக் காரணமும் புது அவசரமும் கொடுக்கப்படுகிறது: நம் கடவுளாகிய ஆண்டவரை நோக்கி நாம் கூப்பிடும்போதெல்லாம், அடுத்திருப்பது போல வேறெந்தப் பெரிய இனத்திற்கும் அதன் மக்களுக்கும் அவர் அடுத்திருப்பதுண்டோ? ஆண்டவர் உங்கள் பேரில் அன்பு கொண்டு உங்களைத் தேர்ந்தெடுத்து, மக்களினங்களில் திரளானவர்கள் என்பதினாலல்ல, நீங்கள் எல்லா மக்களினங்களிலும் மிகச் சிலராயிருந்தீர்களே, ஆண்டவர் உங்கள் மீது அன்பு கூர்ந்ததினாலும், உங்கள் மூதாதையருக்கு இட்ட ஆணையை நிறைவேற்ற திருவுளங்கொண்டதினாலும், ஆண்டவர் உங்களை அடிமைத்தன வீடாகிய எகிப்தினின்றும், அதன் மன்னனாகிய பார்வோனினின்றும் மீட்டுக் கொண்டார் என்று இறைவனின் அன்பை ஆசிரியர் புதிய முறையில் விளக்குகின்றார்; முற்காலத்திய வரலாற்று உண்மைகளுக்குப் புது விளக்கத்தையே அளிக்க முன் வருகின்றார். மன்னாவைக் குறித்துப் பேசுகையில் மனிதர் அப்பத்தினால் மட்டுமன்று, ஆண்டவருடைய வாயிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பர் என்பதை உனக்கு உணர்த்தும்படிக்கே அப்படிச் செய்தார் என்று அவர் கூறுகின்றார்.

(ஈ) P இறையியல்

தொடக்கநூலில் காணும் மற்றோர் இறையியல் நோக்கு P குழுவினரைச் சார்ந்தது (P=Priestly). இந்த P ஏட்டில் கடவுளைப்பற்றி விளக்குகையில் மனுவுருவேற்பு முற்றிலும் தவிர்க்கப்பட்டு, கடவுளின் முற்றிலும் அப்பாற்பட்ட தன்மை (transcendence) மிகவும் வற்புறுத்தப்படுகின்றது. யாக்கோபுக்கு கடவுள் தம்மை நேரடியாக வெளிப்படுத்தியதில்லையென இவ்வாசிரியர் நம்புகின்றார். அவர் தம்மை வெளிப்படுத்துகையில் அவருடைய மாட்சி அவரது திருமுன்னைக் காட்டுகின்றது. மனிதருக்கு அப்பாற்பட்ட வராகையால் குருக்கள் மூலமாகப் பலி, வழிபாட்டுடன் தான் அவருடன் உறவு கொள்ளலாம் என்னும் கருத்தை இந்த ஏட்டிலே தெளிவாகக் காண்கிறோம். மேலும், மோசேதான் முதலாவது பலியை ஏற்படுத்தினார்; அதற்கு முன் எந்தப் பலியும் செலுத்தப்படவில்லை; குருக்கள் மட்டும் தான் பலி செலுத்தலாம்; சரியான இடத்திலே சரியான முறைமையுடன் பலி செலுத்தினால் மட்டுமே இறைவன் அதை ஏற்றுக்கொள்வார் எனும் கருத்து அங்கே தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. சமயச் சடங்குகள் பெரிய நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடுத்தப்பட்டன. படைப்புடன் ஒய்வுநாள் ஆசரிப்பும், நோவாவின் உடன்படிக்கையுடன் இரத்தம் உண்ணாதிருத்தலும், ஆபிரகாமின் உடன்படிக்கையுடன் விருத்த சேதனமும், ஒன்றாகத் தொடர்பு பெற்றன.

வழிபாட்டு நிறுவனங்களின் வரலாற்றைத் தெளிவாக எழுதுவதும், இறையியல் விளக்கம் கொடுப்பதுமே இந்த ஆசிரியர் குழுவின் நோக்கம் என்று கூறினால் அது மிகையாகாது. சீனாய் மலையில் நடந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவம் சமய ஆசாரங்கள், சடங்குகள் நிறுவப்பட்டவையே என்று இந்த ஆசிரியர் கூறுவதுபோல் தோன்றுகின்றது. பலி ஏற்படுத்தியபோதுதான் ஒழுங்கான சமயமும், சரியான பக்தியும் ஏற்பட்டது என்பது இவருடைய நம்பிக்கை. இஸ்ரயேலர் பாபிலோனில் அடிமையாக இருந்த நாள்களில், எருசலேமின் பழைய மரபுகளைக் கொண்டு இந்த ஏடு தொகுக்கப்பட்டது எனவும், எஸ்ரா எருசலேமுக்கு வந்தபோது இந்த சட்டத் தொகுப்பைக் கூடக் கொண்டு வந்தார் எனவும் நம்புவதற்கு இடமுண்டு. எனவே, சிறை யிருப்புக்குப் பின்னால் எழுதப்பட்ட மூலம் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். லேவியர் நூலின் பெரும் பகுதி இந்த ஏட்டைச் சார்ந்தது. பின்னர் எழுதப்பட்ட ஏடாக இருப்பினும் முற்காலத்திய மரபுகளும் சட்டத்தொகுப்புகளும் இங்கே இடம் பெற்றுள்ளன. குறிப்பாக, லேவி. 17-26 அதிகாரங்களைக் கொண்ட பகுதி தனக்கே உரிய சில சிறப்புகளைக் கொண்டது. தூய்மையைப்பற்றி இங்கு மிகவும் வற்புறுத்திக் கூறப்படுவதால் இதனை (Holiness code) H என்பார்கள். ஆண்டவர் என்னும் உங்கள் கடவுளாகிய நான் தூயவர். ஆகையால் நீங்களும் தூயராயிருக்கவேண்டுமென்பது இப்பகுதியின் மையப் பொருள் எனலாம். 19:2 வசனத்தில் வழிபாட்டின் தூய்மைக்கும், தவிர்க்க முடியாத தொடர்பு உண்டென ஆசிரியர் விளக்குகிறார். மேற்கூறிய பகுதி இதற்கு எடுத்துக்காட்டாகும். எனவே, வழிபாட்டு முறைமைகளில் மட்டும் இவர் அக்கறை

காட்டுகின்றார் என்று கூறுவது பொருத்தமன்று. உன்னிடத்தில் அன்புகூருவதுபோல் அடுத்திருப்பவரிடமும் அன்புகூர வேண்டும், நானே ஆண்டவர் எனும் அன்பின் கட்டளையும் இந்தச் சுவடியிலேயே நாம் பார்க்கிறோம்

4. கடவுளின் வெளிப்பாடு

இப்படிப்பட்ட பல இறையியல் போங்குகள் ப.ஏ.இல் இருப்பினும், இவற்றுக்கெல்லாம் அடிப்படையான ஓர் ஒற்றுமையையும் நாம் அங்கே காணலாம்: கடவுள் இஸ்ரயேல் எனும் மக்களைத் தேர்ந்துகொண்டு, அவர்களுக்கு வரலாற்றுச் செயல்களின் மூலமாக தம்மை வெளிப்படுத்தி, அச் சமூகம் தமக்குக் கீழ்ப்படிய அவர்களைப் பயிற்றுவித்தார்; இறுதியில் தம்மை முற்றிலும் அவர்களுக்கு வெளிப்படுத்தினார் என்னும் கருத்தே ப.ஏ.இல் அடிப்படையாக நிற்கின்றது. இஸ்ரயேல் சமுதாயத்திற்கும், யாவே கடவுளுக்குமுள்ள உறவுதான் ப.ஏ. இன் அடிப்படை என்று நாம் திட்டமாகக் கூறலாம். வளர்ந்துவந்த இவ்வுறவின் அடிப்படையில் வரலாற்றில் நடந்த நிகழ்ச்சிகளை அவர்கள் புரிந்துகொண்டு, அதை அறிக்கை செய்ததின் பயனாகவே ப.ஏ. தோன்றிற்று. கடவுள் தம்மைக் குறித்த கருத்துக்களை அவர்களுக்கு வெளிப்படுத்தவில்லை. தூயவர், தூய வாழ்க்கையை விரும்புபவர், அநீதியைப் பொறுத்துக் கொள்ளாதவர் என்று புரிந்துகொண்ட கருத்துக்களைக்கூட வரலாற்றின் மூலமாகவே இஸ்ரயேல் மக்கள் அறிந்துகொண்டனர்.

கடவுள் தம்மை வெளிப்படுத்துகின்றார் என்று சொல்கையில், வரலாறு முழுவதும் கடவுளின் வெளிப்பாடு என்று நாம் சொல்ல முடியாது. நம்பிக்கை என்னும் கருவியின் துணைகொண்டு, சில வரலாற்று நிகழ்ச்சிகளை, இறைவனின் அருட்செயல்களை மக்கள் புரிந்து கொண்டார்கள்; இவ்விதமாக இறை வெளிப்பாட்டைப் பெற்றுக் கொண்டார்கள் என்றே நாம் கூறத் துணிவோம். நம்பிக்கை இல்லாமல் கடவுளின் வெளிப்படுத்தலைப் புரிந்துக் கொள்ள இயலாது. ப.ஏ.இல் இப்படிக் கூறப்படும் இறைவனின் அருட்செயல்கள்தான் எவை? பத்துக் கட்டளையின் முன்னுரையில், அடிமைத்தன வீடாகிய எகிப்து நாட்டிலிருந்து உன்னைப் புறப்படப் பண்ணிய உன் கடவுளாகிய ஆண்டவர் நானே என்று கூறப்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம். இஸ்ரயேலருடைய நம்பிக்கைக்கு அடிப்படையான அருட்செயல் இதுதான். இத்துடன் வேறு சில நிகழ்ச்சிகளும் முக்கியத்துவம் வாய்ந்திருந்தன. இணை. 26:5-10இல், ஒரு பற்றுறுதி அறிக்கையை நாம் பார்க்கிறோம். நிலத்தின் பலன்களினின்று முதற்பலனை எடுத்துக் கோவிலுக்குக் கொண்டுவரும் அடியார் பின்வருமாறு சொல்வார். நிரந்தரக் குடியற்று அரமேயரான என் தந்தை எகிப்து நாட்டுக்கு இறங்கிச் சென்றார். அங்குச் சில மக்களுடன் அன்னியராய் இருந்தார். ஆனால் அங்கேயே பெரிய வலிமைக்குத் திரளான மக்களினத்தைக் கொண்டவர் ஆனார். எகிப்தியர் எங்களை ஒடுக்கினர், துன்புறுத்தினர். கடினமான அடிமை வேலைகளை எங்கள் மீது சுமத்தினர். அப்போது நாங்கள் எங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவரை நோக்கிக் குரல் எழுப்பினோம். ஆண்டவர் எங்கள் குரலைக் கேட்டார். எங்களுடைய துன்பத்தையும் வருத்தத்தையும் அவதியையும் கண்டார். தனது வலிய கரத்தாலும், ஓடுங்கிய புயத்தாலும், அஞ்சத்தக்க பேராற்றலாலும், அடையாளங்களாலும், அருஞ்செயல்களாலும் ஆண்டவர் எங்களை எகிப்திலிருந்து புறப்படச் செய்தார். அவர் எங்களை இந்த இடத்திற்குக் கூட்டி வந்தார். பாலும் தேனும் வழிந்தோடும் இந்த நாட்டை எங்களுக்குத் தந்தார். எனவே, ஆண்டவரே, இதோ, நீர் எனக்குக் கொடுத்த நிலத்தின் முதற்பலனைக் கொண்டு வந்துள்ளேன் என்பதே. மூதாதையரின் வாழ்க்கை, எகிப்தினின்று விடுதலை, கானான் நாட்டில் குடியேற்றம் என்கிற முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் இந்தப் பற்றுறுதி அறிக்கையில் இடம் பெற்றிருப்பதை நாம் பார்க்கின்றோம். வேறு பகுதிகளை நாம் பார்க்கையில், பாலைநிலத்தில் வழிநடத்துதல், சீனாய் மலையில் கட்டளை பெறுதல் ஆகிய உண்மைகளும் இந்தப் பற்றுறுதிக்கு அடிப்படையாக இருந்ததென உணரலாம். எனவே கடவுளைக் குறித்து இஸ்ரயேலர் கூறியபோது அவர் வரலாற்றில் செயல்புரிகின்றவர் என்பதைத்தான் மிகமிக வலியுறுத்தினர்.

இந்த இஸ்ரயேலின் கடவுள் பல பெயர்களால் அறியப்பட்டுள்ளார். **எல்சதாய்** (விடு.6:2; எண்.24:4,16; தொட. 49:25), வல்லமையுள்ள கடவுள் என நாம் மொழிபெயர்க்கலாம். மேலும் **ஏல், ஏலோகிம்** எனும் புதுப்பெயர்களையும் இஸ்ரயேல் மக்கள் தங்கள் கடவுளைச் சுட்டப் பயன்படுத்தினார்கள். மூதாதையரின் காலத்தில் ஆபிரகாம் வணங்கிவந்த கடவுளுக்கு **ஆபிரகாமின் கடவுள்** எனவும், ஈசாக்கு வணங்கிவந்த கடவுளுக்கு **ஈசாக்கின் கடவுள்** எனவும், யாக்கோபு வணங்கிவந்த கடவுளுக்கு **யாக்கோபின் கடவுள்** எனவும் பெயர் வழங்கி வந்ததாக நாம் காண்கின்றோம். **ஆபிரகாமின் கேடயம்** (15:1; Shield of Abraham). **ஈசாக்கின் அச்சம்** (31:42,53; The Fear of Isaac). **யாக்கோபின் வல்லவர்** (49:24; The Mighty One of Jacob) எனும் பெயர்களாலும் இந்த கடவுள் இந்தக் காலத்தில் அறியப்பட்டிருந்தார் என்று நாம் கூறலாம். குறிப்பிட்ட இடத்தில் வணங்கக்கூடிய கடவுளல்லர், குறிப்பிட்ட நபரோடு அல்லது மக்களோடு தொடர்புடையவர் எனும் ஆழ்ந்த கருத்தை இந்த மூதாதையரின் காலத்திலேயே நாம் காணலாம். இப்படிப்பட்ட உறவுகொள்ளும் கடவுளாக மூதாதையர் இவரை அறிந்திருந்தபடியால் பிற்காலத்தில் இஸ்ரயேலரோடு அவர் உறவுகொள்ளும் கடவுளாக நம்புவதற்கு இது துணையாகவும் உதவியாகவும் இருந்தது. யாவே என்கிற பெயர் மோசேக்கு வெளிப்படுத்தப்பட்டதாக விடு. 3ஆம் அதிகாரத்திலும் 6ஆம் அதிகாரத்திலும் படிக்கின்றோம்! இருக்கிறவராக இருப்பவர் அல்லது இருக்கப்போகிறவராக இருப்பவர் என்றும் நாம் எபிரேயத்தை இங்கு மொழிபெயர்க்கலாம். எனவே, கடவுள் தமது மக்களோடு அல்லது மோசேயோடு கூட இருக்கப் போகிறவர், எவ்வாறு செயலாற்ற விரும்புகின்றாரோ அவ்வாறு செயலாற்றப் போகின்றவர், முற்றிலும் தம் சொந்த உரிமையின்படி செயலாற்ற வல்லவர். எதிர்காலத்தில் அவருடன்கூட இருப்பதிலிருந்தே அவரைப்பற்றிப் புரிந்துக்கொள்ள முடியும் எனும் கருத்துக்கள் இந்தப் பெயர் விளக்கத்திலே அடங்கியுள்ளன.

சீலோவாவிலே உடன்படிக்கைப் பெட்டி வந்தபின் கடவுளுக்கு **யாவே செபாயோத்** (Shebaoth - படைகளின் ஆண்டவர்) எனும் ஒரு பெயரும் 1 சாமு.6:2இல், அளிக்கப்பட்டதாக நாம் பார்க்கிறோம். இஸ்ரயேலரின் படைகளுக்குத் தலைவர் அல்லது வான் படைகளுக்குத் தலைவர் அல்லது விண்தூதுவர் படைகளின் தலைவர் எனும் கருத்துக்களில் எது முதலிடம் பெற்றது என்று நாம் திட்டமாகக் கூறமுடியாது. இஸ்ரயேலர் போர்தொடுக்கும் காலங்களில் கடவுள் தாமே போரில் வெற்றியளித்தார் எனும் நம்பிக்கையுடன், இஸ்ரயேல் படைகளை அவரே நடத்தினார் என்ற நம்பிக்கையும் எழுந்திருக்க வேண்டும். யாவே தான் கடவுள், இஸ்ரயேல் மக்கள் அவர் ஒருவரையே வணங்க வேண்டும் என்கிற கொள்கை மோசேயின் காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கின்றது. வேறு தெய்வங்கள் இல்லவே இல்லை என்னும் கருத்து, தொடக்கத்திலிருந்தே

வந்ததாகத் தெரியவில்லை. பிற மக்களுக்குப் பிற தெய்வங்கள் இருக்கலாம், இஸ்ரயேலருக்கு யாவே தான் கடவுள் என்கிற நம்பிக்கை துவக்கத்திலிருந்து வந்திருக்கிறது. வேறு தெய்வங்கள் இல்லையெனும் தெளிவான ஒரிறைக் கொள்கை (Monotheism) II எசாயாவின் காலத்தில்தான் புகுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இஸ்ரயேலரின் கடவுள் எரிச்சலுள்ள கடவுள் என்று பண்டைக் காலத்திலேயே மக்கள் நம்பியிருந்தனர் (விடு.20:5). தம்மை வணங்கவேண்டிய மக்கள் வேறு எவரையும் வணங்க அவர் இடம் கொடுக்க மாட்டார் என்ற கருத்துதான் இங்கு தெளிவாக இருக்கிறது. யாவேயின் சிறப்புத்தன்மை வேறெந்த சிலைகளையும் செய்து வணங்கக் கூடாது என்ற கட்டளையிலும் மறைந்து நிற்பதை நாம் பார்க்கலாம். யாவேயை மனித முறைமையிலே நினைக்கவும், மனித உருவிலே அவரைக் கற்பனை செய்துகொள்ளவும், மனிதரால் செய்த வடிவத்திலே வணங்குவதும் மிகத் தவறு, மனிதர் அவரைப் புரிந்துக்கொள்ள முடியாது, சிலை செய்து வழிபாட்டின் மூலமாக அவரைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம் என்பதும் முற்றிலும் மதியீனம் எனும் கருத்துக்களும் இந்த கற்பனைகளுக்குள்ளே அடங்கியுள்ளன. சிலையை வணங்கிவந்த மக்களிடையே அவர்கள் வாழ்ந்து வந்த போதிலும், இஸ்ரயேலருக்குள்ளே சிலை வணக்கம் இருந்ததில்லையெனத் தொல்பொருள் ஆய்வாளர்களும் தங்களுடைய அகழ்வாராய்ச்சியின் மூலமாக நமக்குத் தெளிவுறுத்தியுள்ளனர்.

ப.ஏ.இல் சில பகுதிகளை நாம் பார்க்கையில் யாவேக்கு மனுவுருவேற்றி விளக்கியிருப்பதை நாம் காணலாம். யாவேயின் முகம், கண்கள், நா, கால்கள், கை, அவர் பேசுகிறார்; அவர் கேட்கிறார், நுகர்கிறார், மகிழ்கிறார், மாலை வேளையில் உலாவச் செல்லுகிறார். மகிழ்ச்சி, சினம், அன்பு, வெறுப்பு எனும் குணங்கள், அருள் போன்ற உணர்வுகள் உண்டு என்று அவரைக் குறித்து விளக்கியிருப்பதை நாம் பார்க்கின்றோம். ஏதோ மனிதரைப் போன்ற உணர்ச்சிகளையுடையவர், மனிதரைப்போலச் செயலாற்றுகிறவர் என்பதனை இப்பகுதிகள் கூறாமல், அவர் ஓர் ஆள்தன்மையுடையவர், மக்களோடு நெருங்கி உறவுகொள்பவர், மக்களுடன் கலந்துகொள்பவர், உணர்ச்சிகளைப் புரிந்துக்கொள்ளக்கூடியவர் என்கிற முறைமையில்தான் இவைகள் விளக்கம் பெற்றுள்ளன. இவைகளெல்லாம் பண்டைக்காலக் கருத்துக்கள், இப்போது இவைகளை நாம் நம்புவதற்குத் தேவையில்லை என்று கூறுவதும் சரியாகாது. ஏனெனில், கடவுளைப்பற்றிக் கூறி அவர் செயலாற்றும் முறைமையை விளக்கும் போது இப்படிப்பட்டச் சொற்களையும், விளக்க முறைமையையும் நாம் முற்றிலும் தவிர்க்க முடியாது என்பதை அறிவோம்.

(அ) கடவுளின் ஆவி

கடவுளின் ஆவியைப்பற்றியும் நாம் ப.ஏ.இல் படிக்கிறோம். எபிரேயத்திலே காற்று, ஆவி இரண்டிற்கும் மூலச் சொல் ஒன்றே (Ruach). கடவுளுடைய ஆவியர் ஆள்தன்மையுடையவர் என்று ப.ஏ.இல் நாம் பாராமல், ஆற்றலாக, கடவுள் விரும்பும் செயலைச் செய்யும் கருவியாக, கடவுள் விரும்பியோருக்கு வழங்கப்படும் சிறப்பு ஆற்றலாகப் பார்க்கிறோம். ஆண்டவரின் ஆவி கிதியோனை ஆட்கொண்டது. ஆடை போல் அவனைச் சுற்றிக்கொண்டது என நீதித். 6:34இல் பார்க்கிறோம். ஆவி ஊற்றப்பட்டதாக ஏசா. 29:10; 44:3 போன்ற பகுதிகளில் வாசிக்கின்றோம். நீதித். 14:6,19 போன்ற வசனங்களில் ஆவியர் இறங்கியதாக நாம் பார்க்கிறோம். விடு. 31:5இல் பெசலேல் கடவுளின் ஆவியால் நிரப்பப்பட்டார் எனப்பார்க்கிறோம். இந்த ஆவி ஒருவரிடமிருந்து எடுக்கப்படலாம். (திருப். 51:13) அல்லது ஒருவரைவிட்டு அது செல்லலாம் (I சாமு. 16:14). எலிசா எலியாவின் ஆவியின் வரத்தை இரட்டிப்பாகக் கேட்டதாக நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட இடங்களில் ஆவி என்னும்பொழுது கடவுள் அளிக்கும் ஆற்றல் என்றுதான் பொருள்படுகின்றது. யாபேஸ்கிலயாது நகரத்தை சவுல் விடுவித்தபோதும், அம்மோனியரை அவர் தோற்கடித்த போதும் ஆண்டவருடைய ஆவியின் ஆற்றலாலேயே இதை நிறைவேற்றினார். நன்மையான செயல்களுக்கும், சில வேளைகளில் தீமையான செயல்களுக்கும் இந்த ஆவி காரணமாக இருந்ததை நாம் காண்கிறோம். பொய்யின் ஆவி (1 அர. 22:22), சிறப்பு அறிவைத்தரும் ஆவி (வி.ப. 31:3), பொறாமையின் ஆவி (எண். 5:14); நீதித்தீர்ப்பின் ஆவி (எசா. 4:4); குழப்பத்தின் ஆவி (59:14), ஆழ்ந்த தூக்கத்தின் ஆவி (29:10), என்று இவ்வாறு பலவகையாக ஆவியின் செயல்களைக் குறித்து நாம் படிக்கிறோம். எசாயாவின் காலத்திலே அருள்பொழிவு செய்யப்பட்ட மக்கள் கடவுளின் ஆவியைப் பெறுவார்கள் என்னும் நம்பிக்கை இருந்துவந்தது (11:1). ஈசா என்னும் அடிமரத்திலிருந்து தோன்றும் அரசர் மேல் ஆண்டவருடைய ஆவி தங்கும் என்றும் (42:1), கடவுளின் பாடுபடும் பணியாள் இந்த ஆவியைப் பெறுவார் என்றும், (61:1). விடுதலையை அறிவிக்கும் இறைவாக்கினர் இந்த ஆவியைப் பெற்றார் என்றும் நாம் படிக்கிறோம். மேலும் எசா. 35:15; 43:3; யோவேல் 3:22 போன்ற பகுதிகளில், எல்லா மக்கள் மேலும் இந்த ஆவியர் ஊற்றப்படுகிறார் என நாம் படிக்கிறோம். புதுமலர்ச்சி, புத்துயிர் கொடுக்குமளவு புதிய இதயத்துடன் புதிய ஆவியையும் கொடுப்பார் என்று எசேக்கியேல் இறைவாக்கினர் இறைவாக்கு கூறுகின்றார் (36:26). ப.ஏ.இல் தூய ஆவியைப்பற்றித் தோன்றிய நம்பிக்கைகள் இந்த ப.ஏ.இன் அடிப்படையினின்று தோன்றியவை ஆகும்.

(ஆ) கடவுளின் வாக்கு

ஆமோஸ், ஒசேயா, எசாயா, எரேமியா என்பவர்களுடைய திருப்பணி ஆவியின் ஏவுதலால் நடைபெற்றது என்று கூறப்படாமல், வார்த்தை அவர்களுக்கு உண்டாகி, அவர்கள் இறைவாக்குக் கூறினார்கள் என்று கூறப்பட்டுள்ளது. பண்டைக்கால மக்களது சொல்லில் வார்த்தை சொல்லப்பட்டதென்றால் அதற்குரிய ஆற்றல் அதற்குள்ளேயே அடங்கியுள்ளது, கூறப்பட்ட உண்மையை நிறைவேற்றும் ஆற்றல் அந்தச் சொல்லுக்கே உண்டு என்று நம்பியிருந்தார்கள். இது ஒரளவுக்கு மந்திரம் சார்ந்த நம்பிக்கையென்றே நாம் கூற வேண்டும். இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் மந்திரமும் தோன்றியிருக்கும். சொல் அல்லது சொற்கள் சொல்லப்படவேண்டிய முறைமையில் கூறப்பட்டால் கூறிய மனிதருக்கும் சொற்களுக்கும் தொடர்பு இல்லாதிருக்கும்போதும், அந்த அதிகாரம் நிறைந்த ஆற்றல் செயல்படும் என்பது நம்பிக்கை. யாக்கோபு ஈசாக்கிடமிருந்து ஆசி பெற்றது (தொட. 27), யாக்கோபு லாபானால் ஏமாற்றப்பட்டது (29), மீக்காவின் அம்மா தனது பொருள்களைத் திருடிய கள்வனைச் சபித்தது (நீதித். 17:1,2) இவைகள் தவறாகக் கூறப்படினும் கூறப்பட்ட சொற்களை மாற்றமுடியாது, அந்தச் சொற்களின் ஆற்றலையும் தவிர்க்க முடியாது என்ற நம்பிக்கை இருந்து வந்ததாக நாம் அறிகிறோம். கடவுளின் வார்த்தை என்று நாம் சொல்லும்போது இந்தப் பின்னணியிலே நாம் அதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

கடவுளுடைய வார்த்தை இறைவாக்கினர்க்கு வருகையில் அவர் அதைச் சொல்லக் கட்டாயப்படுத்தப்படுகிறார் (ஆமோஸ்

3:8). சொல்ல மாட்டேன் என்று மறுப்பினும், அது எலும்பு களுக்குள் அடைபட்ட நெருப்பைப் போலக் கட்டாயப்படுத்து கிறது என எரே. 20:7-9ஆம் பகுதியில் பார்க்கிறோம். உறை பனியும் மழையும் வானத்திலிருந்திறங்கி அவ்விடத்திற்குத் திரும்பாமல் மண்ணுலகை நனைத்து அதில் முளை கிளம்பி, விதைக்கிறவருக்கு விதையையும், புசிக்கிறவருக்கு உணவையும் கொடுக்கிறதுபோல என் வாயிலிருந்து வரும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடம் திரும்பாமல், நான் விரும்பியதைச் செய்து, நான் அதை அனுப்பிய நோக்கத்தை நிறைவேற்றும் என்று எசா. 55:10,11 ஆம் வசனங்களில் கூறப்படுவதினின்று, யாவேயின் ஆற்றல், திறன் எவ்வளவு என்று நாம் உணர்ந்து கொள்ளலாம். கடவுளுடைய சொல் எரேமியா இறைவாக்கினர்க்குப் பிடுங்கவும், இடிக்கவும், அவிழ்க்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் அதிகாரமும் ஆற்றலும் கொடுப்பதாக எரே. 1:10இல் வாசிக்கிறோம். படைப்பாற்றல உடையதாக கடவுளுடையச் சொல கூறப்படுகிறது. தொட. 1:3; திருப். 33:6,9 வசனங்களில் கடவுள் உலகத்தைத் தமது சொல்லால் படைத்தார் என்று நாம் பார்க்கிறோம். அவருடைய சொல்லால் தான் வரலாறு இயங்குகின்றது என்று எசா. 44:28இல் நாம் படிக்கிறோம். எருசலேம் திரும்பக் கட்டப்பட சைரசை கடவுள் கருவியாக ஏற்படுத்தினார் என்றும், அவர் இவ்வாறு கூறியதன் காரணமாக எருசலேம் திரும்பக் கட்டப்படும் என்றும் நாம் அங்கே பார்க்கிறோம். தமது சொல்லால் வரலாற்றை நடத்துவது தான் யாவே கடவுளின் சிறப்பு என்பதை எசாயா மிகவும் வற்புறுத்திக் கூறுகிறார். வெகு காலத்திற்கு முன்னே நான் உனக்கு அதைச் சொல்லி அறிவிக்கவில்லையோ? (44:8); வரப்போகிறவைகளையும், நிகழப்போகிறவைகளையும் வேறு தெய்வங்கள் கூடுமானால் சொல்லட்டும் (44:7) போன்ற அறைகூவல்கள் இவண் கருதத்தக்கவை.

முழுஉலகத்தை கடவுள் சொல்லால் படைத்தார் என நாம் கூறினோம். இன்னமும் தொடக்க அதிகாரங்களில், திருப். 8;104 போன்ற பகுதிகளில் படைப்பைப் பற்றி அதிகமாகக் கூறப்பட்டிருப்பதை நாம் காணலாம். பிற நாடுகளிலும் பிற சமயங்களிலும் ஆக்க ஆற்றலாக கடவுளுக்கும், அழிவின் ஆற்றலாக இன்னொரு தெய்வத்திற்கும் போர் நடந்து அதன் பயனாகவே உலகம் தோன்றியது என்ற நம்பிக்கை இருந்து வந்தது. குறிப்பாக, பாபிலோனில் மார்துக் என்னும் கடவுளுக்கும், தியாமத் என்னும்அரக்கிதேவதைக்கும் நடந்த போரின் பயனாகவே உலகம் தோன்றியது என மக்கள் நம்பியிருந்தனர். இஸ்ரயேல் மக்களிடையில் இப்படிப்பட்ட நம்பிக்கை இருக்கவில்லை. கடவுளுக்கு மாறான ஒரு எதிர் ஆற்றலுடன் அவர் போரிட்டுத்தான் ஒழுங்கை அமைத்தார் என்னும் நம்பிக்கை அங்குக் காணப்படவில்லை. சிறிதும் கடினமின்றி, தமது சொந்த விருப்பத்தால் தமது சொல்லால், உலகையும் வானையும் அவர் படைத்தார் எனத் தொடக்கநூல் விளக்கம் தருகிறது. ஒன்றுமில்லாமையினின்று படைத்தார் என்கிற கருத்து தெளிவாக அங்குக் காணாதிருப்பினும் வேறொன்றின் துணையின்றி அவர் உலகைப் படைத்தார், ஒழுங்கின்மையினின்று ஒழுங்கை வரவழைத்தார் என்கிற நம்பிக்கை அங்குக் கூறப்பட்டிருப்பதை நாம் தெளிவாகக் காணலாம். அவருடைய படைப்பாற்றல் நிறைந்த சொல்லன்றி வேறொன்றையும் அவர் பயன்படுத்தியதாகக் காணோம். ஆண்டவருடைய வாக்கினால் வானங்களும், அவரது சொல்லின் ஆற்றலால் வான்கோள்கள் எல்லாம் உருவாயின என திருப். 33:6ஆம் வசனம் கூறுகிறது. படைப்பில் கடவுள் தன்மை ஒன்றுமில்லை; விண்மீன்களுக்கும், சூரிய சந்திரர்களுக்கும் இறையாற்றல் ஒன்றுமில்லை, அவை அனைத்தும் இறைவனின் படைப்பு; மனிதரின் நலனுக்காக அவற்றைப் படைத்தார் என்கிற கருத்து தொடக்கநூல் முதலதிகாரங்களிலே நாம் பார்க்கிறோம். விண்மீன்களுக்கு அஞ்சி நடுங்கி, அவற்றை மக்கள் வணங்கிவந்த காலத்தில், ஒரு புரட்சியான நம்பிக்கைத் தோன்றியிருப்பதைக் கண்டு நாம் வியக்கிறோம். பிறநாட்டு படைப்பின் கதைகளையும் கருத்துக்களையும் இஸ்ரயேல் மக்கள் பயன்படுத்தினார்கள் என்பது உண்மையே. ஆனால், அதனை முற்றிலும் மாற்றி தங்கள் கடவுள் நம்பிக்கைக்கு ஏற்ப திருத்திய பின்னர்தான் ஏற்றுக்கொண்டனர். அக்கருத்துக்களை, யாவேயின் செயலாற்றும் திறனை விளக்கத் துணையாகமட்டும் பயன்படுத்தினர். திருப். 89:10; யோபு 26: 12; 38:8-11 போன்ற பகுதிகளில் யாவேயின் புகழ்ச்சியைப் பாட மறைமுகமாக இந்தக் கதைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மண்ணுலகின் செழுமை, குறிப்பிட்ட தெய்வத்திற்கும் மண்ணுலகத்திற்கும் இருக்கிற உறவினால் ஏற்படுகிறது என்கிற நம்பிக்கை இருந்து வந்த காலத்தில் முற்றிலும் கடவுளின் அருளால்தான் நாடு வளம் பெறுகிறது என்கிற நம்பிக்கையையும் இஸ்ரயேலின் வரலாற்றில் காண்கிறோம். பாகால்கடவுள் தான் நாட்டுக்கு நன்மையளிப்பவர், பாகால் வணக்கம் இல்லையெனில், அந்த வணக்கத்தோடு சேர்ந்த செழுமை வழிபாட்டிற்குரிய சில செயல்கள் வழிபாட்டிலே செய்யப்படவில்லையென்றால், நாடு வளம் பெறாது என்கிற நம்பிக்கை இருந்துவந்த நாள்களில், மண்ணுலகினின்று உணவு உண்டாகவும், மனித உள்ளத்தைத் திராட்சை இரசம் மகிழ்ச்சியாக்கவும், எண்ணெய் அவர்களுக்கு முகக்களை உண்டுபண்ணவும், உணவு அவர்களின் உள்ளத்தை ஆதரிக்கவும், கால்நடைகளுக்குப் புல்லையும், மானிடருக்கு பயனுடைய பயிர் வகையையும் ஆண்டவர் முளைப்பிக்கிறார் (திருப். 104:14,15) என்று அறிக்கையிடப்பட்டது. நாட்டின் வளம் கடவுளின் ஈவு என்கிற நம்பிக்கை தெளிவாக ப.ஏ.இல் வற்புறுத்தப்படுகிறது. படைப்பிலே கடவுளின் ஞானம் வெளிப்பட்டிருப்பதைப்பற்றிச் சிறப்பாகப் பல பகுதிகள் கூறுகின்றன (நீதி. 3:19; எசா. 28:21,29; நீதித். 8:22 முதல்). சில மாறுபட்ட தன்மைகளும், படைப்புப் பொருள்களும் இருப்பினும், ஞானத்தால் ஒழுங்காக கடவுள் நடத்துகிறார் என யோபு 38,39 அதிகாரங்கள் விளக்குகின்றன. இயற்கையை கடவுள் தமது திருவுளத்திற்கெனப் பயன்படுத்துகிறார் என்ற கருத்தை ஆமோ. 4:7; எரே. 5:24; ஒசே. 8:7; 9:14 போன்ற பகுதிகளில் நாம் பார்க்கிறோம். மனிதருடைய பாவத்தினால் கடவுள் இயற்கையின் நன்மைகளைக் குறைத்து இவ்விதமாய் இயற்கையை நீதித்தீர்ப்பிற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார் எனவும் ப.ஏ. கூறுகிறது. மேலும் மீட்பின் செயல்களுக்காகவும் இயற்கையின் செயல்களை அவர் தடுத்து ஆட்கொள்கிறார் என்ற நம்பிக்கையை எகிப்திலிருந்து விடுதலைப்பயணம், விடுதலைப் பயணத்தின்போது செங்கடல் இரண்டாகப் பிளந்தது, யோசுவா எமோரியருடன் போர்புரிந்தபோது கிபயோனிலே சூரிய சந்திரர்கள் தரித்து நின்றது போன்ற பகுதிகளினின்று நாம் ஊகிக்கலாம். யாவேயின் ஆட்சி வரும் காலத்தில் இயற்கையின் தீமை ஒழிந்து இயற்கை சீர்பெற்று விளங்குமென எசா. 11-35 அதிகாரங்களில் நாம் படிக்கலாம். பாலைநிலத்திலே தண்ணீர்களும், கடுவெளி யிலே நீரோடைகளும் பாய்ந்தோடும், வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும், பாலைநிலமும் வறண்ட நிலமும் மகிழும், கடுவெளி களித்துப் பூவைப்போலப் பூக்கும். கொடிய விலங்குகளங்கே போவதில்லை, அங்கே காணப்படுவது மில்லை, ஆண்டவரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி மகிழ்ந்து பாடிக்கொண்டு, சீயோனுக்கு வருவார்கள் என்று இந்த வசனங்களிலே இறைவனின் இறுதி மீட்பில் இயற்கையும் பங்குபெறும் எனும் கருத்து அழகாக தெளிவு பெறுகிறது.

(இ) உடன்படிக்கை

கடவுள் தேர்ந்து கொண்ட மக்களும், கடவுளுக்கும் அந்த மக்களுக்கும் இருக்கின்ற உறவும் ப.ஏ.இன் மையப்பொருள் என்று ஏற்கெனவே கூறினோம். இவ்வுறவு கடவுளுக்கும் மனிதருக்கும் இயற்கையாக அமைந்த உறவு அன்று, தமது திருவுளத்தால் செயலாற்றி இஸ்ரயேல் மக்களைத் தமது சொந்த மக்களாக ஏற்றுக்கொண்டதால் வந்தது என்பதைத் திரும்பத் திரும்ப ப.ஏ. வற்புறுத்துகிறது. தந்தை-மகன், கணவன்-மனைவி, மேய்ப்பன்-ஆடு, உறவின் முறையான், அரசன்-மக்கள், மருத்துவர்-நோயாளி முதலிய பலவித மனித உறவின் முறைகளைக் கொண்டு இந்த உறவு அதில் விளக்கம் பெறுகிறது.

எல்லாவற்றிலும் முக்கிய அடிப்படையாக உடன்படிக்கை என்னும் கருத்து இருக்கிறது என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டு உணர்ந்துகொண்டார்கள். மனிதருக்கும், மனிதருக்கும் ஒப்பந்தம் செய்து, அந்த ஒப்பந்தத்தை ஓர் உடன்படிக்கையின் மூலமாக உறுதி செய்துகொள்வது அந்தக் காலத்து வழக்கமாக இருந்தது. ஒரே நிலைமைக்குட்பட்டோரும், உயர்நிலையில்-தாழ்நிலையில் உள்ளோரும், பேரரசரும் - சிற்றரசர்களும் உடன்படிக்கை செய்துகொள்வது அக்கால வழக்கம். ஆபிரகாமும் அமலேக்கும் செய்த உடன்படிக்கை (தொட. 22:31), யாக்கோபும் லாபானும் செய்த உடன்படிக்கை (31:44). கிபயோனியரும் யோசுவாவும் செய்த உடன்படிக்கை (யோசு. 9:15) போன்ற பல உடன்படிக்கைகளை ப.ஏ.இல் நாம் பார்க்கிறோம். மேலும் அக்காலத்தில் பேரரசரும் சிற்றரசரும் செய்த உடன்படிக்கையைப் பற்றியும் நாம் மிக விரிவாக அறிவோம். குறிப்பாக இத்தியரிடையில் நடந்து வந்த உடன்படிக்கையின் அமைப்புகளைக் குறித்து நாம் மிகத் தெளிவாக அகழ்வாராய்ச்சியின் மூலமாக அறிவோம். யாவேக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இருந்த உறவை இப்படிப்பட்ட உடன்படிக்கை அமைப்பில் இஸ்ரயேலர் புரிந்துக்கொண்டனர். யாவே தங்களுடன் உடன்படிக்கை செய்தார் என்று அவர்கள் இந்த உறவை வெளிப்படுத்தினர். தேர்ந்துக்கொள்ளுதல் எனும் கருத்தை விளக்க இந்த உடன்படிக்கை அமைப்பு துணையாக இருந்தது என நாம் அறிகிறோம். அந்தக்காலத்துப் பண்பாட்டு மரபுப்படி அவர்கள் அறிந்திருந்த இம்முறை, தங்கள் இறையியல் நம்பிக்கையை வெளிப்படுத்தப் பயன்படுத்தினர் என்பது இஸ்ரயேல் மக்களுடைய பக்தியின் சிறப்பையும், உறுதியையும் காட்டும். மெந்தன்கால (G.E.Mendenhall) என்னும் ஆசிரியர் ப.ஏ. உடன்படிக்கை, இந்திய மேலாதிக்க உடன்படிக்கையோடு ஒத்திருக்கிறது என்பதைப் பின்வரும் அமைப்பு முறைகளின் மூலம் விளக்குகிறார்.

1. முன்னுரை. பெரிய அரசராகிய அ இப்படி கூறுகிறார் என்று மேலதிகாரியை அறிமுகப்படுத்தும் பகுதி.

2. இருசாராருக்குமிடையில் முன்பிருந்த உறவைக் கூறும் வரலாற்றுச் சூழ்நிலை.

3. உடன்படிக்கையின் நிபந்தனைகள்.

4. சட்டம் வைக்கப்படவேண்டிய இடம், படிக்கப்பட வேண்டிய ஒழுங்கு முதலானவை.

5. சாட்சியாகக் குறிக்கப்பட்ட சில தெய்வங்களின் பெயர்கள்.

6. ஆசி மற்றும் சாப மொழிகள்.

ஏறத்தாழ இதே அமைப்பில் சீனாய் உடன்படிக்கையும் காணப்படுகிறது.

(1) உன் கடவுளாகிய ஆண்டவர் நானே எனும் அந்த உடன்படிக்கை செய்யும் மேலதிகாரியைப் பற்றிய முன்னுரை. (2) அடிமைத்தன வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேற வைத்த கடவுள் என்ற வரலாற்றுச் சூழ்நிலை விளக்கம். (3) என்னையன்றி வேறே தெய்வங்கள் உனக்கு வேண்டாம் என்பது போன்ற பிற கட்டளைகளையும் சேர்த்த உடன்படிக்கையின் நிபந்தனை. (4) இணை. 10:5; விடு. 40: 20 போன்ற பகுதிகளில் உடன்படிக்கைச் சட்டத்தைப் பேழையில் வைக்க வேண்டுமென்ற குறிப்புகள். (5) இணை. 27,28 அதிகாரங்களில் ஆசி, சாப மொழிகள். இத்திய உடன்படிக்கைகளில் காணப்படுவதுபோல சாட்சிகளை இங்கே காணோம். வேறு தெய்வங்கள் இல்லையென நம்பியிருந்த இஸ்ரயேலருக்குள்ளே கடவுளுடன் செய்யும் உடன்படிக்கையில் வேறு எவரையும் சாட்சியாகக் குறிக்கமுடியாது என்கிற நம்பிக்கையால் இது கொடுக்கப்படவில்லை என்றே நாம் கூறவேண்டும். யாவே உடன்படிக்கையின் கடவுள் எனும் கருத்து இஸ்ரயேல் சமய நம்பிக்கையில் ஒரு சிறந்த கூறாகக் காணக்கிடக்கிறது. தேர்ந்துகொள்ளுதல், உடன்படிக்கை என்னும் இந்த இரண்டு கருத்துக்கள் தான் மக்களுடைய சமூக ஒருமைப்பாட்டிற்கு அடிப்படையாக இருந்தன என்பதை அண்மைக்கால ஆராய்ச்சிகள் தெளிவுறுத்தியிருக்கின்றன. சடங்குகளின் அடிப்படையில் தோன்றிய வழிபாட்டு ஒழுக்கச்சட்டங்கள் தங்களைத் தேர்ந்துகொண்ட ஒரே கடவுளை வணங்குதல் போன்ற அடிப்படையில் பல்வேறு பிரிவாக, குலத்தினராக இருந்த மக்கள் குலக்கூட்டு அமைப்பில் (amphiclyony) ஒன்று சேர்ந்து வாழ்ந்தனர் என்று யோசு 24 ஆம் அதிகாரத்தினின்று நாம் யூகிக்கலாம். மார்ட்டின் நோத் (Martin Noth) எனும் பேராசிரியர், யவன மக்களின் சமூக வாழ்க்கையை எடுத்துக்காட்டாகக் கொண்டு இந்த உண்மையை நிறுவியுள்ளார். தனிப்பட்ட ஆட்சி, தனிப்பட்ட அரசர், தனிப்பட்ட சட்டத்தொகுப்புகள் முதலியவை இல்லாதிருந்த காலத்திலும், இஸ்ரயேல் மக்கள் இந்தக் குலக் கூட்டமைப்பின் மூலமாக ஒன்றுசேர்ந்து வாழ்ந்தனர் என்று காண்கிறோம். யாவே வழிபாடு இந்த மக்களை ஒருமைப்படுத்தியது. இந்த உடன்படிக்கைக்கு நிபந்தனையாகச் சட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ப.ஏ.ஐ ஆராய்கையில் தனிநிகழ்ச்சிச் சட்டம் (casuistic), வல்லுறுதிச்சட்டம் (apadiectic) என இருவகையான சட்டங்களை நாம் பார்க்கிறோம். ஒருவரை மற்றொருவரின் மாடு முட்டினால், அதனால் அவர் காயமடைந்தால், அவர் உயிர்துறந்தால் என்னென்ன செய்ய வேண்டுமென்பது தனி நிகழ்ச்சிகளுக்காக எழுதப்பட்ட சட்டங்கள், நீதித்துறையைச் சார்ந்த சட்டங்கள். கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக போன்று அதிகாரத்துடன் வலியுறுத்தப்படும் சட்டங்கள் வல்லுறுதிச் சட்டங்கள். இவை சமயச் சூழ்நிலையை, வழிபாட்டைச் சார்ந்தவை. முதல் துறைச் சட்டங்கள் சமூகநீதி வழங்கும் இடமாகிய ஊர் வாசலில் வழங்கப்பட்டது. ஆனால் வல்லுறுதிச் சட்டங்கள் வழிபாட்டில் கூறப்பட்டு குருக்களால் வழங்கப்பட்டு வந்தது. இரண்டு வகைச் சட்டங்களும் தனி வாழ்க்கை, சமூக வாழ்க்கை, சமய வாழ்க்கை இவற்றைக் கட்டுப்படுத்தும் எல்லாச் சட்டங்களும் கடவுள் அளித்தவை, உடன்படிக்கையுடன் இணைந்தவை எனும் ஒரு சிறப்புக் கருத்தை நாம்

இஸ்ரயேலிலே காண்கிறோம். அக்காலத்து பல சட்டத் தொகுப்புகளுடன் ஒற்றுமை காணப்பட்டாலும், இறை நம்பிக்கையோடு இணைக்கப்பட்ட இந்த சட்டத் தொகுப்புகளைப்போன்ற தனிச் சிறப்புடையவற்றை வேறு எங்கும் நாம் காணமுடியாது. ஆதரவற்றோருக்குக் காட்டும் பரிவும், சிறுமைப்பட்டோரிடம் காட்டும் கருணையும், இந்தச் சட்டங்களின் ஒரு சிறப்புக் கூறாக இருக்கின்றது. அடுத்திருப்பவருடைய மேலாடையை அடகாக நீ வாங்கினால் கதிரவன் மறையுமுன் அதை அவரிடம் திருப்பிக்கொடு. ஏனெனில், அது ஒன்றே அவருக்குப் போர்வை. அவர் என்னை நோக்கி அழுது முறையிட்டால் நான் செவிசாய்ப்பேன் (விடு. 22:26). ஆறு ஆண்டுகள் நீ உன் நிலத்தில் பயிரிட்டு அதன் பலனைச் சேர்த்துக்கொள். ஏழாம் ஆண்டு உன் மக்களில் ஏழைகள் உண்ணவும் மீதியானதை வயல்வெளி உயிரினங்கள் தின்னவும் அந்த நிலம் தரிசாகக் கிடக்க அதைச் சும்மா விட்டுவிடு (23:10,11). அன்னியரைச் சிறுமைப்படுத்தாமலும், ஒடுக்காமலும் இருங்கள். நீங்களும் எகிப்து நாட்டிலே அன்னியராயிருந்தீர்களே (22:21). நீ உன் பயிரை அறுவடை செய்யும்போது உன் வயலில் ஒரு கட்டை மறதியாக வைத்து வந்தாயானால் அதை எடுக்கும்படி திரும்பப் போகவேண்டாம். அதை அன்னியருக்கும், விதவைக்கும், திக்கற்றப் பிள்ளைக்கும் விட்டுவிடு. இப்படிப்பட்டச் சட்டங்கள் இஸ்ரயேலில் ஏழைகள்பால் இருந்த பரிவைத் தெளிவாக நமக்குக் காட்டுகின்றன. வழிபாட்டிற்கும், வாழ்க்கை ஒழுக்கத்திற்கும் எவ்வளவு நெருங்கிய உறவு இஸ்ரயேலில் இருந்தது என்பதையும் இந்தச் சட்டங்கள் நமக்குக் காட்டுகின்றன. உடன்படிக்கையின் கடவுள் தூயவர். எனவே தூய்மையான முறையில் அவருக்கு வழிபாடு செலுத்தவேண்டும் என்ற நம்பிக்கை இஸ்ரயேலிலே அடிப்படையாக இருந்து வந்தது. வேள்வி செலுத்துதல், காணிக்கைகளைப் படைத்தல், வழிபாட்டுத்தலத்திற்கு ஒழுங்காக வருதல் போன்ற சமயச் சடங்குகள் சமய வாழ்க்கையில் இடம்பெற்றிருந்தன.

இத்தகைய சட்டங்களை ஒருவேளை தன்னுள் அடக்கியிருந்த உடன்படிக்கைப் பேழை கடவுளுடைய சமுகத்தின் அடையாளமாகப் பாலைநில வாழ்க்கைக் காலத்திலிருந்தே இஸ்ரயேலில் இடம் பெற்றிருந்தது என்று நாம் கூறலாம். அதே போன்று சந்திப்புக் கூடாரமும் எருசலேம் திருக்கோவிலும் கடவுள் சமுகத்தை, இஸ்ரயேல் மக்களுடன் அவர் தங்குகின்றார் என்பதை நினைவுபடுத்துபவையாக விளங்கின. இது முதல் கானானுக்குள் புகுந்த நாள் தொட்டு, கில்கால், பெத்தேல், சீலோ, செக்கேம் போன்ற பல இடங்களை இஸ்ரயேலர் தங்களுடைய மைய வழிபாட்டுத்தலமாக அமைத்துவந்தனர். தாவிது அரசர் எருசலேமைத் தேர்ந்தெடுத்து, சாலமோன் அங்கு கோவில் கட்டிய பின்னர் கடவுளுடைய திருப்பெயர் அங்கே தங்குகிறது என்கிற புது கருத்தும் இவைகளில் தோன்றியதாக இணை. 12 போன்ற பகுதிகளில் நாம் காண்கிறோம். எங்கள் கடவுளாகிய ஆண்டவர் தமது பெயர் விளங்குமாறு ஓர் இடத்தைத் தேர்ந்துகொள்ளுவார் (12:11; 1 அர. 8:30). கார்மிருளில் கடவுள் உறைவார் என்கிற முற்காலத்தியக் கருத்தும் (8:12) கடவுள் மெய்யாகவே மண்ணுலகில் தங்கியிருப்பாரா? வானங்களும், வான மண்டலங்களும் அவரைக் கொள்ளாதே, இந்தக் கோவில் எம்மாத்திரம் என்கிற உயர்ந்த பிற்காலத்தியக் கருத்தும் (8:27) இஸ்ரயேலிலே இருந்ததெனக் காண்கிறோம்.

இறைவழிபாட்டைப் பாதுகாத்துக்கொள்ளத், தூவக்கக் காலத்திலிருந்தே குருக்கள் இருந்தார்களெனப் பார்க்கிறோம். அக்காலத்தில் எந்தக் குலத்தைச் சேர்ந்தவர்களும் குருவாகப் பணியாற்றலாம் என்ற கருத்து நிலவிவந்திருக்கிறது. எப்பிராயிமியராகிய மீக்கா தம் மகனையே குருவாக்கினார் எனப் பார்க்கிறோம் (நீதித். 17:5); ஆனால் லேவியராகிய ஒருவர் வந்தபோது அவரைக் குருவாக வைத்துக்கொள்ளுகிறார். இஸ்ரயேல் மக்களனைவரும் தாங்களே பலிகொடுத்ததாக நாம் பார்க்கின்றோம். சாமுவேல் இறைவாக்கினரின் காலத்தில் சாமுவேல் இறைவாக்கினர் குருத்துவப் பணியும் சேர்த்துப் புரிந்தார். ஆனால் பிற்காலத்தில் ஆரோன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே குருத்துவப்பணி செய்யலாம் என்ற ஒரு சட்டம் தோன்றியிருக்கிறது. இணைச்சட்ட நூலைப் படிக்கையில் லேவியரனைவரும் குருத்துவப்பணி செய்யலாம் என்ற ஒழுங்கு நிலவியிருந்ததாக நாம் பார்க்கிறோம். 18:1 முதல் விடு. 32: 25-29 வசனங்களும் லேவியர் வழிபாட்டிற்கென தனிப்படுத்தப்பட்ட வரலாற்றைத் தருகிறது. ஆனால் பிற்காலத்தில் ஆரோன் குடும்பத்தார் மட்டும் முக்கியத்துவம் பெற்றதாகவும், குருத்துவப்பணி அவர்களுக்கு மட்டும் உரியதாகத் திரிபு பெற்றதாகவும் நாம் பார்க்கிறோம். விடு. 29:35,36; லேவி. 1:3 போன்ற வசனங்களையும் குறிப்பேடு நூலையும் காணும் போது இந்த லேவியர் பாடகர் குழுவைச் சேர்ந்தவர்களாகவும், கோவிலைச் சார்ந்த பிற தொழில்கள் புரிபவரர்களாகவும் மாறுதலடைந்தனர் என்று நாம் பார்க்கிறோம். எப்படியும் குருத்துவப்பணி செய்கிறவர்கள் எவ்வளவு அக்கறையுடன் தங்கள் கடமைகளைச் செய்யவேண்டும் என்பதை லேவியர் நூலின் முதல் அதிகாரங்களில் இருக்கும் சட்டங்கள் விளக்கி, பலி செலுத்துவதைப் பொறுத்த வரையில், அனைத்தும் சரியாகச் செய்யப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்த குருவும் தம்முடைய பாவங்களுக்காகப் பலி செலுத்தவேண்டும். இறைவனின் மன்னிப்பைப் பெற்றே அவரும் தம்முடையத் திருப்பணியைச் செய்யமுடியும் என்கிற நம்பிக்கையையும் இந்த லேவியர் நூலிலிருந்து நாம் அறியலாம் (லேவி. 16:6 போன்ற வசனங்கள்).

வழிபாடுகள், விழாக்கள் இஸ்ரயேலர் சமயத்திலே முக்கியமான இடம் பெற்றிருந்தன. ஓய்வுநாள், அமாவாசை போன்ற விழாநாள்களைத் தவிர மூன்று முக்கியமான விழாக்கள் இருந்துவந்தன என்று விடு. 23 அதி; 31 அதி; லேவி.23 அதிகாரங்களிலே நாம் பார்க்கிறோம். புளிப்பில்லா அப்ப விழாவும், பாஸ்காவிழாவும் அறுவடையின்போது கொண்டாடப்பட்டன. பாஸ்காவிழா ஆட்டு இடையர் இடையே இருந்த ஒரு விழா. புளிப்பில்லா அப்ப விழா வேளாண்மை செய்தவர்களிடையே வழக்கப்பட்டிருந்த ஒரு விழா. எனவே நாடோடிகளின், ஆட்டிடையர்களின் விழாவும் கானான் நாட்டில் தங்கி விவசாயம் செய்ய ஆரம்பித்தப் பின்னர் ஏற்றுக்கொண்ட பார்லி அறுப்பின் விழாவும் ஒன்று சேர்ந்து பாஸ்கா புளிப்பில்லாத அப்ப விழாவாக மாறின என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் இஸ்ரயேலர் எகிப்தினின்று பெற்ற விடுதலையுடன் பாஸ்கா விழாவும் வந்து குடியேறியது. அந்த நிகழ்ச்சியோடு இந்த புளிப்பில்லா அப்ப விழாவும் இணைக்கப்பெற்று புது சிறப்புப் பெற்றன. தனி விழாக்களை தங்கள் வரலாற்று நிகழ்ச்சிகளுடன் இணைத்துச் சிறப்பிக்கும் பக்திப் பெருக்கு இஸ்ரயேலிலே இருந்ததாக நாம் பார்க்கிறோம். பார்லி அறுவடைக்குப்பின் ஏழு வாரங்கள் கோதுமை அறுவடை வாரங்களின் விழாவாகக் கொண்டாடப்பட்டது. திராட்சை, அத்தி, பேரீச்சம், மாதுளை போன்ற கனிகள் சேர்க்கும் விழாவும் சேர்ப்பின் விழாவாக அல்லது கூடார விழாவாகக் கொண்டாடப்பட்டது. திராட்சைத் தோட்டங்களைக் காவல் செய்யவும், மற்றும் தோட்டங்களில் கூடாரங்களைப் போட்டு மக்கள் தங்க வேண்டியிருந்ததினால்

மக்கள் அவற்றை விழாவாகக் கொண்டாடினர். இதையும் தங்களுடைய வரலாற்றுடன் இணைத்து, பாலைநிலத்தில் கூடாரத்தில் தங்கின நாள்களின் நினைவாக இந்த விழாவையும் அவர்கள் மாற்றம் செய்தார்கள். இன்னும் துவக்கத்திலேயே யாவே வணக்கத்துடன் இணைவுபடாத, தொடர்பு பெற்றிராத விழாக்களை தங்கள் பக்தி உறுதியில் எவ்வாறு மாற்றியமைத்தார்கள் என்பது தற்கால இந்தியச் சூழ்நிலையில் இந்தியத் திருவிழாக்களைத் தங்களுடைய நம்பிக்கைக்கு ஒத்த முறையில் ஏற்று, மாற்றி அமைக்கவேண்டிய முறைக்கு வழிகாட்டியாக விளங்குகிறது எனலாம்.

(ஈ) இறைவாக்கினர்

உடன்படிக்கையின் நெறி சீர்குலைந்துபோகாமல் திரும்பத் திரும்ப உடன்படிக்கைக்குத் தலைவராகிய யாவே கடவுளிடம் இறைவாக்கினர் மக்களை அறைகூவி அழைத்தனர். இஸ்ரயேல் சமயத்தில் தோன்றிய, இறைவாக்கினர் இஸ்ரயேல் சமயம் சிறிய அளவில் தொடங்கி இறைவாக்கினரின் போதனையிலே உச்சநிலையைப் பெற்றது என அண்மைக் காலம் வரை ஆராய்ச்சியாளர்கள் நம்பி வந்தனர். ஆனால் தொடக்கக் காலத்திலிருந்தே, மூதாதையரின் காலத்திலிருந்தே கடவுளைக் குறித்த ஆழ்ந்த கருத்துக்களை மக்கள் கொண்டிருந்தனர். இறைவாக்கினருடைய பணி புதிதான போதனையில் ஏற்கெனவே அவர்கள் உடன்படிக்கையின் கடவுளைப்பற்றி அறிந்திருந்த பழைய உண்மைகளை எடுத்துக்கூறி, அவர்கள் அறிந்திருந்த உடன்படிக்கையின் நெறிக்கு அறைகூவி அவர்களை அழைத்தனர் என்றே நாம் கூறவேண்டும். எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய ஆமோசு, ஓசேயா, எருசலேம் எசாயா, ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய எரேமியா, சிறையிருப்புக்குப்பின் வாழ்ந்த எசேக்கியேல் போன்ற இறைவாக்கினர் இஸ்ரயேலருடைய சமய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளார்கள் என நாம் அறிவோம். இந்த இறைவாக்கினர் தங்கள் சொந்த அதிகாரத்தால் இறைவாக்கு உரையாமல், கடவுளுடைய சொற்களையே எடுத்துக்கூறினார்கள். வாழும் ஆண்டவர் சொல்கிறார். ஆண்டவருடைய வாக்கு இதுவே எனத் தங்களுடைய உரைக்கு முன்னுரையும் பின்னுரையும் அமைப்பதின் மூலம் யாவே கடவுளின் சொல் தூதுவர்களாக (messengers) மட்டுமே தங்களை எண்ணினார்கள் என்று நாம் பார்க்கிறோம். கடவுளுடைய சொல் செயலாற்றும் தன்மையுடையது. அந்தச் சொல்லை எடுத்து உரைக்க மட்டும் தாங்கள் அவருடைய கருவிகள்; தாங்கள் அதற்காகத் தேர்ந்துக்கொள்ளப்பட்டவர்கள் என்று நம்பினார்கள். தங்கள் விருப்பத்தின்படியல்ல, கூறப்போனால் தங்கள் விருப்பத்திற்கு மாறாக கடவுள் கட்டாயப்படுத்தித் தங்களை அழைத்தார் என்றுதான் இந்த இறைவாக்கினர் திரும்பத் திரும்பக் கூறினார்கள். நான் இறைவாக்கினன் அல்லன், இறைவாக்கினர் குழுவில் உறுப்பினனும் அல்லன். நான் ஆடு மேய்க்கிறவன், அத்திமரத் தோப்பு பார்க்கிறவன். ஆடு மேய்த்துக்கொண்டிருந்த என்னை ஆண்டவர் அழைத்து, நீ போய் என் மக்களாகிய இஸ்ரயேலுக்கு எதிராக இறைவாக்கு சொல் என்று ஆண்டவர் உரைத்தார் என்று ஆமோசு தம் அழைப்பைப் பற்றிக் கூறும்போது கடவுளின் கட்டாயத்தினாலன்றி வேறெந்தக் காரணத்தாலும் தாம் ஊழியத்திற்கு வரவில்லையென்பதைத் தெளிவுறுத்துகிறார் (ஆமோ. 7:14). இரண்டுபேர் ஒத்திருந்தாலொழிய ஒன்றாய் நடப்பார்களோ? குருவிக்குத் தலையிலே சுருக்குப் போடாதிருந்தால் அது கண்ணியிலே அகப்படுமோ? என்றிவ்வாறு காரண காரியங்களை அடுக்கிக்கொண்டு போகையில் சிங்கம் கர்ச்சிக்கின்றது, யார் அஞ்சி நடுங்காதிருப்பான்? ஆண்டவராகிய இறைவன் பேசுகின்றார், யார் இறைவாக்கு சொல்லாதிருப்பான்? எனக்கூற விரும்பும் உண்மையை ஆமோசு வற்புறுத்துகிறார் (3:3-7). ஆண்டவரே என்னை இணங்கப் பண்ணினீர், நான் இணங்கினேன், நீர் என்னிலும் வலியவராயிருந்து என்னை மேற்கொண்டீர் என எரேமியா தமது அழைப்பின் கட்டாயத்தை 20:7ஆம் வசனத்திலே கூறுகிறார். மேலும், நான் இனி அதை நினைக்கவும், அவர் பெயரில் பேசவுமாட்டேன் என்பேனாகில் அவர் வார்த்தை என் எலும்புகளில் அடைபட்ட நெருப்பாய் என் உள்ளத்தில் அது எரிந்து, அதைப் பொறுத்துப் பொறுத்து இளைத்துப் போனேன், என்னால் சகிக்க முடியாமற்போயிற்று என்று (20:9) தாம் முயன்றும் இறைவாக்கு உரைக்காமலிருக்க முடியவில்லை என்று கூறுவதையும் நாம் பார்க்கலாம். கடவுள் அழைத்தார், கடவுள் அருளிய சொற்களைக் கூறுகிறோம் என்பதைத் தவிர இறைவாக்கினருக்கு தங்களுடைய ஊழியத்தைக் குறித்துச் சான்று கூற வேறொன்றுமில்லை.

தேர்ந்துக்கொள்ளப்பட்ட மக்களுக்கு, இறைவன் தங்கள் பக்கம்தான் இருக்கிறார் என்று நம்பியிருந்த மக்களுக்கு ஆமோசு போன்ற இறைவாக்கினர் தவறை உணர்த்தி, தேர்ந்துகொள்ளப்பட்டதின் உண்மையானத் தன்மையை விளக்கினார்கள். உலகிலுள்ள எல்லா மக்களினங்களுக்குள்ளும் உங்களையே சொந்தமென அறிந்தேன், ஆதலால் உங்கள் அநீதிச்செயல்கள் அனைத்திற்காகவும் உங்களைத் தண்டிப்பேன் எனத் தெரிந்துக்கொள்ளுதலுக்கும், தண்டனை பெறுதலுக்கும் நெருங்கியத் தொடர்பு இருப்பதாக ஆமோசு கூறுகிறார். எருசலேம் நகரம் கடவுளின் நகரம், எருசலேம் கோவில் கடவுளுடைய கோவில், எனவே அந்நகரத்திற்கு எந்தவித தீங்கும் வராது என்று நம்பியிருந்த மக்களுக்கு உங்கள் பொருட்டு சீயோன் வயல்வெளிகளைப் போல உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம், எருசலேம் மலை காடுமேடுகளாகும் என மீக். 3:12இல் எச்சரிக்கிறார். இதுவே ஆண்டவரின் கோவில், ஆண்டவரின் கோவில், ஆண்டவரின் கோவில் என்று சொல்லிப் பொய் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்திருங்கள் என்று எரேமியா 7:4இல் எச்சரித்தார். மேலும் இறைவாக்கினர் சமூக நீதியையும் இரக்கத்தையும் கடவுள் விரும்புகிறார்; ஏழை எளியவர்கள் ஒடுக்கப்படல், நீதி தவறுதல், ஒழுக்கம் குறைதல் போன்றவற்றை கடவுள் வெறுக்கிறார், கடவுள் அவற்றைத் தண்டிப்பார் என்பவற்றையும் தெளிவாக எடுத்துரைத்தனர். நீதியரைப் பணத்துக்கும், ஏழையை இரு காலணிக்கும் விற்றுப் போட்டார்களே, பூவுலகின் மண்ணில்படும்படி ஏழைகளின் தலைகளை மிதித்து, சிறுமைப்பட்டவர்களின் வழக்கிலே நியாயத்தைப் புரட்டுகிறார்கள் (ஆமோ. 2:6,7). நீங்கள் ஏழைகளை மிதித்து, தானிய வரி வாங்குகிறபடியினால், செதுக்கியக் கற்களால் நீங்கள் வீடுகளைக் கட்டினாலும் அவைகளில் நீங்கள் குடியிருப்பதில்லை (5:11), தந்தக் கட்டில்களில் படுத்து, தங்கள் மஞ்சங்களில் சாய்ந்து கிடந்து மந்தையில் தேர்ந்தெடுத்த ஆட்டுக்குட்டிகளையும், தொழுவத்தில் வளர்த்த கன்றுகளையும் தின்கிறார்கள். தம்புரு வாசித்துக் கத்துகிறார்கள், தாவிது செய்ததுபோல நூதன கீத வாத்தியங்களைக் கண்டுபிடிக்கிறார்கள்; மதுபானத்தைக் குடம் குடமாகக் குடிக்கிறார்கள்; சிறந்தத் தைலத்தைப் பூசிக்கொள்கிறார்கள்; ஆனாலும் யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்தைக் குறித்து அவர்கள் கவலைப்படுவதில்லை. (6:4-6). தங்கள்-படுக்கைகளில் சாய்ந்து தீச்செயல் செய்யத் திட்டமிட்டு, தீமை செய்ய முயலுபவர்களுக்கு ஐயோ கேடு! தங்கள் கையில் வல்லமை

இருக்கும்போதெல்லாம் விடியற்காலமானவுடன் அதை நடப்பிப்பார்கள். வயலை ஆசித்து பறித்துக் கொள்கிறார்கள். ஆண்களையும், அவன் வீட்டையும், மனிதரையும் அவர்களின் சுதந்திரத்தையும் ஒடுக்குகிறார்கள் (மீக். 2:1,2). இவை போன்ற சொற்களால் இறைவாக்கினர் சமூக அநீதியை அழுத்தமாகக் கண்டித்துணர்த்தினர். மனிதனே! நலமானது இன்னதென்று அவர் உனக்குத் தெரிவித்திருக்கின்றார். நியாயம் செய்து மனதார இரக்கத்தைப் பாராட்டி, உன் கடவுளுக்கு முன்பாக மனத் தாழ்மையாய் நடப்பதையேயல்லாமல் வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கிறார் என்று மீக் 6:8 மக்களுக்கு எடுத்து விளக்கினார். நியாயம் தண்ணீரைப் போலவும், நீதி வற்றாத நீரோடையைப் போலவும் புரண்டு வரக் கடவது என ஆமோசு (5:24) விளம்பினார். நீதியை விரும்பும் நீதியுள்ள கடவுள் தமது மக்களிடம் நீதியை விரும்புகிறார் என்பது இறைவாக்கினர் தெள்ளத்தெளிவென எடுத்துரைத்த உண்மை.

வழிபாட்டு முறைமையிலிருக்கும் தவறுகளையும் இறைவாக்கினர் எடுத்துரைக்கத் தவறியதில்லை. கானானிய வழிபாட்டுடன் கலந்து பாகால் தெய்வத்துக்கு வணக்கம் செலுத்தி அவ்வாறு தவறிப்போன மக்களைக் குறித்து ஓசேயா மிக உணர்ச்சியுடன் பேசுகிறார். அவர்கள் மலையுச்சியில் பலியிட்டுவந்து, மேடுகளில் கர்வாலி மரங்களின் கீழும், புன்னை மரங்களின் கீழும், அரச மரங்களின் கீழும் அவைகளின் நிழல் நல்லதென்று தூபம் காட்டுகிறார்கள். இதனால் உங்கள் புதல்வியர் வேசித்தனமும், உங்கள் மருமக்கள் விபசாரமும் செய்கிறார்கள் (4:13). இவ்வித வழிபாட்டுடன் கற்பு தவறும் தீய ஒழுக்கமும் கலந்திருக்கிறது என நாம் எண்ணுவதற்கு இடமுண்டு. நீங்கள் இனி என் மக்களல்ல, (லோ அம்மி) நான் உங்களிடத்தில் இரக்கம் காட்டமாட்டேன் (லோரூகாமா) என தம் பிள்ளைகளின் பெயர்களின் மூலமாக ஓசேயா இறைவனின் செய்தியை மக்களுக்கு எடுத்துக் காட்டினார். தம் மனைவியின் நெறியற்ற வாழ்க்கையின் மூலமாக எவ்வளவு துன்பமடைந்தாரோ, துன்பம் அடைந்த பின்னும் அவளை வெறுத்துவிடாமல் எப்படி அன்புடன் நடந்துக்கொண்டாரோ, அதே முறையில் யாவே கடவுளும் இஸ்ரயேல் மக்களிடம் அவர்களுடைய தவறுகளை எண்ணாது அவர்களுடன் அன்புடன் நடந்துக் கொள்ளுகிறார் என தமது வாழ்க்கையில் கண்டுணர்ந்த உண்மையின் மூலமாக ஓசேயா கடவுளின் செய்தியை விளக்கினார். கடவுளுடைய அன்பையே அவர் தமது இறைவாக்கிலே மிக அழுத்தமாகக் கூறினார். நான் அவளை நயமாகக் கவர்ந்திழுப்பேன். பாலை நிலத்துக்கு அவளைக் கூட்டிப் போவேன். நெஞ்சுருக அவளுடன் பேசுவேன் (2:14). முடிவில்லாக் காலத்திற்கும் உன்னோடு நான் மண உடன்படிக்கை செய்து கொள்வேன். நேர்மையிலும், நீதியிலும், பேரன்பிலும் உன்னோடு மண உடன்படிக்கை செய்து கொள்வேன் (2:19). எப்ராயிமே, நான் உன்னை எப்படி கைவிடுவேன்? (11:8). இத்தகைய வசனங்கள் கடவுளின் அன்பைத் தெளிவுறுத்துகின்றன.

கடவுளின் அன்பு உடன்படிக்கை உறவின் அடிப்படையில் எழுந்த அன்பு (Hesed) என ஓசேயா தமது மக்களுக்கு ஒரு சிறந்த இறையியல் கருத்தினை விளக்கினார். கடவுளுடைய வெளிப்படுத்தலுக்கு மனிதர் அளிக்கும் பதில் நம்பிக்கையன்று, அறிவு என்பது ஓசேயாவில் நாம் காணும் போதனை. ஓசேயா இறைவாக்கினர் கூறுவதை நாம் பார்க்கும்போது அறிவு என்பது அறிவுத்திறன் சார்ந்தது அல்ல என்று விளங்கும். அது நெருங்கிய உறவின் அடிப்படையில் எழுந்த தொடர்பாகும். இருவருடைய ஆட்தன்மைகள் நெருங்கிக் கலந்து கொண்டதின் மூலமாக ஒருவரைப்பற்றி மற்றவர் அறியும் அறிவு. ஒருவருக்கொருவர் கொண்டுள்ள நம்பிக்கை, ஒருவருக்கொருவர் நடந்து கொள்ளும் முறைமை, அனைத்தையும் தன்னுள்ளே கொண்டது. என் மக்கள் அறிவில்லாமையால் அழிகிறார்களே. நீ அறிவை வெறுத்தாய். ஆகையால் நீ என் குருவாயிராதபடி நானும் உன்னைப் புறக்கணிப்பேன். நீ உன் கடவுளுடைய திருச்சட்டத்தை மறந்தாய் என்றெல்லாம் ஓசேயா மக்கள்போில் குற்றம் சுமத்துகின்றார். குருவும் மக்களும் இந்த நேரடித் தொடர்பான இறையறிவை இழந்துவிட்டனர் என்பதை அவர், அவர்களுக்கு எடுத்துக்கூறினார். ப.ஏ.இல் இறையறிவு அல்லது இறையியல் என்பது இவ்வாறு இறைவனுடன் நேரடித் தொடர்பு கொண்டு, வாழ்க்கைச் சார்ந்த ஒன்று என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ப.ஏ. இறைவாக்கினர் மற்றோர் உண்மையையும் மிகவும் அதிகமாகத் தெளிவுப்படுத்தினார்கள்.

சாலில் தண்ணீர் இறைக்கப்படுகிறது; தூளி ஒன்று தொங்குகிறது. இந்தத் தூளி இந்த சால் இயங்குவதால் மேல் எழும்புகின்றதேயொழிய தானாக எழும்பவில்லை. தராசில் தூசு படிந்திருக்கின்றது, தராசைப் பயன்படுத்துகிறவர் அசைப்பதால் தராசு அசைகின்றதேயொழிய தூசின் கனத்தால் அது அசையவில்லை. அதே போன்று மக்களினங்கள் நாடுகள் தங்கள் சொந்த வலிமையால் இயங்குகின்றன என்று எண்ணுவது தவறு; வரலாற்றையும், நாடுகளையும் அடக்கியாளும் யாவே கடவுளின் திருவுளத்தால்தான் அவை இயங்குகின்றன வரலாற்றை நடத்துகிறவர் யாவே கடவுள் என்று எல்லா இறைவாக்கினரும் வற்புறுத்தினார்கள். இஸ்ரயேலின் வரலாற்றை ஆண்டு நடத்துபவர் அனைத்துலக மக்களின் வரலாற்றையும் ஆண்டு நடத்துகின்றார் என்றும் அவர்கள் நம்பினார்கள். வரலாற்றில் பிற நாடுகள் தீமைக்கென கலந்துக்கொள்ள இடம் கொடுப்பதும் யாவேதாம். பிற நாடுகள் யாவேயின் கைகளில் இஸ்ரயேலைத் தண்டிக்க ஒரு கருவியாக மட்டும் செயல்படுகின்றன என்கிற உண்மையை எசாயா நம்பினார். வெட்டுகிறவனுக்கு விரோதமாகக் கோடரி மேன்மை பாராட்டலாமோ? வாள் வீசுகிறவனுக்கு விரோதமாக வாள் பெருமை பாராட்டலாமோ? (எசா. 10:15) என அவர் அசிரியாவைப் பார்த்துக் கேட்கிறார். பாபிலோனியர் இஸ்ரயேலின்மேல் போர் தொடுப்பதும் இஸ்ரயேலைத் தோற்கடிப்பதும் யாவே கடவுளின் கட்டளைப்படியே என்று எரேமியா கூறி, எனவே மக்கள் தங்கள் தண்டனை மூலமாகவாவது வாழ்வு பெற வேண்டுமெனின், கடவுளுடைய விருப்பத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்; 70 ஆண்டுகள் பொறுமையுடன் காத்திருக்கவேண்டும் என்று எடுத்து இயம்பினார். பாபிலோன், பகை நாட்டுடன் சேர்ந்து ஐந்தாம்படை என்று பழிச்சொல் ஏற்றும்கூட அவர் தயங்கவில்லை. வரலாற்றை கடவுள் தமது விருப்பத்தை வெளிப்படுத்தும் ஒரு மண்டிலமாகப் பயன்படுத்துகிறார் என்னும் ஒரு சிறப்புக் கருத்து இஸ்ரயேல் உலகத்துக்கு அளித்த ஓர் ஆன்மிக உண்மை என்றால் அது மிகையாகாது.

உலகின் தொடக்க வரலாற்றை எழுதிய J ஆசிரியர் கூட இக்கருத்தை அதிகமாக நம்பி இருந்தார். வரலாறு தொடங்குவதற்கு முன்னே கடவுள் தமது விருப்பத்தின்படி, குறிப்பிட்ட தனி நபர்களை, நோவா போன்றவர்களைத் தேர்ந்தெடுத்தார். ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்து அவர் மூலமாகவும், அவர் வழிமரபு மூலமாகவும் தமது நோக்கத்தை உலகத்திற்கு வெளிப்படுத்தினார். எனவே, உலகப் படைப்பிற்கும் வரலாற்றிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. வரலாற்றில் வெளிப்படுத்தப்பட்ட இந்த உண்மைக்காகவே உலகம் படைக்கப்பட்டது. இவ்விதமான ஓர் ஆழ்ந்த சிந்தனையை அவர்

தம்முடைய எழுத்துக்களில் வெளியிடுகிறார். சாமுவேல், அரசர்கள், குறிப்பேடு நூல்களை எழுதினவர்களும், இவ்விதமாக வரலாறு கடவுளால் நடத்தப்படுகிறது. அரசர்கள் கடவுளின் கருவிகள் மட்டுமே. இறைவனின் விருப்பப்படி நடக்கிற அரசர்கள் வாழ்ந்தார்கள், பிற அரசர்கள் அழிந்தார்கள் என இறையியல் சார்ந்த விளக்கத்துடன் வரலாறு எழுதினார்கள்.

எருசலேமின் அழிவுக்குப்பின் வாழ்ந்த இறைவாக்கினர் தண்டனைக்குப் பின் வரும் மன்னிப்பையும், அழிவுக்குப் பின் வரும் வாழ்வையும் அதிகமாக வற்புறுத்தினார்கள். துன்பத்திலிருக்கும் மக்களுக்கு இறைவன் ஆறுதல் அளிக்கிறார்; தோய்ந்து போனவர்களை உறுதிமொழி கூறி ஆற்றுகிறார்; தண்டனையும் அன்புச் செயலேயன்றி வேறன்று, தண்டித்தாலும் கைவிடமாட்டார் என்றெல்லாம் ஆறுதல்மொழி கூறினார்கள். யாக்கோபே, நீ என் பணியாள், நான் உன்னை உருவாக்கினேன். நீ என்னுடைய தொண்டன். இஸ்ரயேலே, நான் உன்னை மறப்பதேயில்லை. உன் மீறுதல்களை கார்மேகத்தைப் போலவும், உன் பாவத்தை மேகத்தைப்போலவும் களைந்து விட்டேன்;நீ என்னிடம் திரும்பி வா. நான் உன்னை மீட்டுக்கொண்டேன் என்று உருக்கமான சொற்களைக்கூறி II எசாயா சிறையிலிருந்த மக்களை ஆற்றினார் (எசா. 44:21,22). அஞ்சாதே, நான் உன்னை மீட்டுக்கொண்டேன். உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன். நீ என்னுடையவன். நீர்நிலைகளை நீ கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன். ஆறுகளை நீ கடக்கும் போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை என்று இவ்வாறான ஆறுதல் மொழிகள் எசாயா 40ஆம் அதிகாரம் முதல் தொடர்ந்து மலிந்து கிடக்கின்றன. இறைவாக்கு என்று கூறுவது எப்போதும் தண்டனைச் சொற்கள் அல்ல. எந்தச் சூழ்நிலையில் மக்கள் இருக்கின்றார்களோ, அந்தச் சூழ்நிலைக் கேற்ற கடவுளின் செய்தியை அருளுவதே என்னும் உண்மையை நாம் பார்க்கலாம். மேலும் கடவுள் புதிதான முறையிலே இனி செயலாற்றுவார் என்கிற கருத்தையும் இறைவாக்கினர் வலியுறுத்தினார்கள். இதோ, நான் புதுச் செயல் ஒன்றைச் செய்கிறேன். இப்போதே அது தோன்றுகிறது (43:19). இதோ புதிய விண்ணுலகையும் புதிய மண்ணுலகையும் படைக்கிறேன். முந்தினவை இனி நினைக்கப்படுவதுமில்லை, மனத்திலே தோன்றுவதுமில்லை (65:17). கடவுளின் புதிய செயலாற்றும் முறைமைகளை இறைவாக்கினர் எடுத்துரைத் தார்கள். எரேமியாவை நாம் பார்க்கையில், அந்நாள்களில் இஸ்ரயேல் வீட்டாரோடும் யூதா வீட்டாரோடும் புது உடன் படிக்கை செய்வேன். என் திருச்சட்டத்தை நான் அவர்கள் உள்ளத்தில் வைத்து, அதை அவர்கள் இதயத்தில் எழுதுவேன். நான் அவர்கள் கடவுளாயிருப்பேன், அவர்கள் என் மக்களா யிருப்பார்கள் என்று புதிய முறைமையிலே கடவுள் செய்யும் உடன்படிக்கையை எடுத்துக் கூறுகிறார். புதிய வரலாற்றுச் சூழ்நிலைகளுக்கேற்ப புதிய முறைமைகளிலே செயலாற்றி, புதிய முறையில் மீட்பை அளிப்பவர் யாவே என்பது இந்த இறைவாக்கினரின் நம்பிக்கையாக இருந்து வந்தது. மறை பொருள் வெளிப்பாட்டினர், இறைவாக்கினருக்குப்பின் திருக் காட்சி எழுத்தாளர்கள் தோன்றினர். இந்த உலகம் தீயது, கடவுள் இப்போது உலகத்தை ஆண்டு நடத்துகிறார், இறுதியில் நேராக உலக வரலாற்றில் கலந்து அதை வெற்றியோடு முற்று பெறச் செய்வார் எனும் கருத்தைத் தெளிவுறுத்தும் பொருட்டு பெரும்பாலும் இறந்த காலத்துப் பெயர்களைக் கொண்ட புனைப்பெயர்களைப் பயன்படுத்திக் கற்பனைப் பொருட்கள், புதிர் கருத்துக்கள், புதிர் எண்கள், கதை பொதிந்த உண்மைகள் முதலியவற்றின் மூலமாக தங்கள் நம்பிக்கைக்கு இந்த திருக்காட்சி இயக்கத்தினர் விளக்கம் கொடுத்தனர். எசா. 24-27அதி; எசே. 38,39அதி., தானியேல் நூலின் பிற்பகுதி போன்ற இடங்களில் இந்த கருத்துக்களை நாம் பார்க்கலாம்.

(உ) ஞானிகள்

கடவுளுடைய திருவுளத்தை இஸ்ரயேல் மக்களுக்கு வெளிப்படுத்திய தொண்டர்களுள் ஞானிகளும் தங்களுக்கே உரிய சிறப்பிடம் பெறுகிறார்கள். நீதிமொழிகள், சபைஉரை யாளர் நூல்களும், பிற நூல்களும் பிற நூல்களில் சிறு பகுதி களும் இந்த ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டவை. கடவுளுக்கு அஞ்சுவதே ஞானத்தின் தொடக்கம் (நீதி. 1:7; 9:10; 15:33) எனும் கருத்தை சார்ந்து, கடவுளுக்கு அஞ்சுதல் மூலம் தீமைக்கு விலகியிருக்கலாம். கடவுளுக்கு அஞ்சுதல் மூலமாகவே கடவுளை அறியலாம் (நீதி. 3:7; 8:13). கடவுள் இல்லை எனச் சொல்வது மனிதருடைய மதியீனமே தவிர வேறு ஒன்றுமல்ல. இவ்வாறான கருத்துக்களைக் கூறி நல்லொழுக்கத்தை அதிகமாக வற்புறுத்தி, நல்லொழுக்கத் திற்கும் இறைப்பற்றுக்குமுள்ளத் தொடர்பை இந்த ஞானிகள் அதிகமாக எடுத்துக்கூறினார்கள். தங்களுடைய வாழ்க்கை அனுபவத்தினின்றும், முன்னோர்களுடைய அனுபவத்தினின் றும், இவ்வித உண்மைகளை அலசி ஆராய்ந்து, அவர்கள் கூறி னார்கள். மனிதரின் ஞானம் கடவுளின் ஞானத்தை எட்டிப் பிடிக்க முடியாது என்ற எண்ணத்தையும் அடிக்கடி நாம் இந்த நூல்களில் பார்க்கிறோம். குறிப்பாக யோபுவின் நூலை நாம் பார்க்கையில், இந்த உலகத்திலிருக்கும் துன்பத்தைவிட்டு நாம் தெளிவாக ஒன்றும் புரிந்துக்கொள்ள இயலாது, விடை காண முடியாது, கடவுளுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய திரு வுளத்திற்கு ஒப்புக்கொடுத்து வாழ்வதே மேலான வாழ்வு என்பதை நாம் அங்கே பார்க்கிறோம். ஞானிகளின் இயக்கம் அல்லது ஞானத்தால் பிறருக்குப் பணியாற்றிய மக்கள் மரபு ஒன்று இஸ்ரயேலிலே இருந்து வந்திருக்கிறது என நாம் ஊகிக்க இடமுண்டு. 2 சாமு. 14:2இல் யோவாபு தெக்கோவா விலிருக்கும் ஞானியான பெண்மணியை அழைத்து தாவிதின் உள்ளத்தை மாற்ற முயற்சிக்கிறார். ஆபேல் என்னும் ஊரில் தாவிதின் வீரர் போர்தொடுக்கச் செல்லுகையில், அங்கே ஞானியான ஒரு பெண் அந்த நகரத்தை விடுவித்தார் என நாம் பார்க்கிறோம். எரே. 18:18இல், ஞானிகளுக்கு இருக்கும் ஆலோசனை, குருவினிடத்திலிருக்கும் திருச்சட்டத்துக்கும், இறை வாக்கினரிடமிருக்கும் வசனத்திற்கும் ஒத்தச் சிறப்புடையது என்று நாம் பார்க்கிறோம். எனவே கடவுளின் வெளிப்படுத் தலுக்குக் கருவியாக ஞானிகளிடமிருந்த ஆலோசனை அல்லது அறிவுத்திறன் உதவியது என்று நாம் இங்கு பார்க்கலாம். சபைஉரையாளர் போன்ற நூல்களில் மகிழ்ந்து வாழ்வதே வாழ்க்கை முறை, வாழ்க்கை நிலையானதன்று என்கின்ற ஒரு சில போங்குகள் காணப்படினும், இறைவனுக்கு அஞ்சி வாழ் வதே வாழ்க்கையின் நோக்கம் என்பதைத் திரும்பத் திரும்ப நாம் இந்த ஞான நூல்களிலே காண்கிறோம்.

(ஊ) பக்திக் கவிஞர்கள்

இறைவாக்கினர், குருக்கள், ஞானிகளை மட்டுமல்ல, கவிஞர் களையும், திருப்பாடல்களைப் பாடுவோரையும் நாம் ப.ஏ.இல் சந்திக்கிறோம். பொது வழிபாட்டில் பயன்படுத்திய பக்திப்பாடல் களும், தனி பக்தர்களின் பரவசப் பெருக்கு நிறைந்த பாடல்களும், துன்பநேரங்களில் அவர்களின் அழுகுரலும், இன்பநேரங்களில் அவர்களது துதிக் குரலுமே இந்தத் திருப்பாடல்களில் காணப்படுகின்றன. ஆக, இஸ்ரயேல் மக்களின் பக்தி வாழ்க் கையின் ஓர் அளவுகோலாக இந்தத் திருப்பாடல்களைக் காணலாம். தாவிதரசர் முதல் சிறையிருப்பின் பிற்காலம்

வரையிலும், பல அடியார்கள் எழுதிய பாடல்களின் தொகுப்பு தான் இப்போதிருக்கும் திருப்பாடல்கள் ஆகும். குறிப்பிட்ட நோக்கத்துடன் எழுதப்படாமல், பலவிதமான நோக்கங்களுடன், பலவிதச் சூழ்நிலைகளில் இப்பாடல்கள் எழுதப்பட்டன. திரு விழாக்களில் பயன்படுத்தப்பட்ட வழிபாட்டு முறைமைகள், பொதுமக்களின் பொது துதிப்பாடல்கள், பொதுமக்களின் பாவமன்னிப்புப் பாடல், நோய், பஞ்சம், போர் போன்ற பெரும் துன்பங்கள் நாட்டிற்கு வந்தபோது பாடின துயர்ப் பாடல்கள், தனி நபர்களின் நன்றிப் பாடல்கள், தனிநபர்களின் துயர்ப் பாடல்கள், திருப்பயணம் செல்லும் பயணிகளின் பாடல்கள், அரசரின் பாடல்கள் என்று பலவகையான பாடல் களை நாம் திருப்பாடல்கள் நூல்களிலே பார்க்கிறோம். இஸ்ரயேலின் துதிகளின் நாவில் வாழ்ந்திருக்கிற கடவுளுக்குப் புகழ்ச்சியாகப் பாடப்பட்ட புகழ்மாலைகள் திருப்பாடல்கள் நூலிலே நிறைந்துகாணப்படுகின்றன. ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர், என்றும் உள்ளது அவரது பேரன்பு(திருப். 136:1) எனப்பாடும் திருப்பாடல்கள் கடவுளின் படைப்புத் திறமையையும், அழகையும், (8,104,136) போன்றவற்றில் விவரிக்கின்றார். இயற்கையை அவர் நடத்தும் விந்தையான முறைமையையும், அவர் விலங்கினங்களுக்கும் கூப்பிடுகிற காக்கை குஞ்சுகளுக்கும் இரை கொடுக்கிறதையும் (147:9), இஸ்ரயேல் வரலாற்றிலே அவர் செயல்பட்ட முறைமை யையும், அவர் பாடி மகிழ்கின்றார். நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவருக்கு நன்றி செலுத்துங்கள். அவரது பேரன்பு என்றுமுள்ளது (136:23,78,105,106 முதலியன காண்க). தனி வாழ்க்கையில் ஆண்டவர் செய்த கனிவான செயல்களை எண்ணி, என் உயிரே ஆண்டவரைப் போற்றிடு, அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே! அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார், உன் நோய்களை யெல்லாம் குணமாக்குகின்றார் (103) எனப் பாடுகின்றார். தனிக் குழுவினர் பெற்ற நோயில் விடுதலை, ஆபத்தில் பாது காவல், கப்பல் பயணத்தில் பாதுகாவல் போன்ற நன்மை களுக்காக 107ஆம் திருப்பாடல் பாடப்பட்டுள்ளது. துயர நேரங்களில் கடவுள் நமக்கு அடைக்கலமும் ஆற்றலும் ஆபத்துக் காலத்தில் உற்றதுணையுமானவர் (46:1). மானானது நீரோடை களை வாஞ்சித்துக் கதறுவதுபோல, கடவுளே என் நெஞ்சம் உம்மை நோக்கிக் கதறுகின்றது (42:1). என் கடவுளாகிய ஆண்டவரே, உம்மில் அடைக்கலம் புகுந்தேன் என்னைப் பிடிக்கத் தொடருகிறவர்கள் எல்லாருக்கும் என்னை விலக்கித் தப்புவியும் (7:1). வசனங்கள் மூலமாக அடியார் கடவுளில் தமக்கிருக்கும் உறுதியையும் தாம் பெற்றிருக்கும் ஆறுதலையும் கூறுகிறார். பொல்லார் தரும் துன்பங்கள் பெருகுகையில், பறவையைப்போல உன்மலைக்குப் பறந்து போ என்று அடியாரிடம் தீயவர் கூறுகையில் (11:1) என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்? என்னைக் காப்பாற்றா மலும் நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தொலைவில் இருக்கிறீர்? (22:1) போன்ற வசனங்கள் மூலமாக கடவுளிடமே தங்கள் குறைகளை அவர்கள் எடுத்துக் கூறினார்கள். சமூகத்தில் துன்பம் வந்த காலத்திலும் எங்களை அடுத்து வாழ்வோரின் பழிச்சொல்லுக்கு இலக்கானோம், எங்களைச் சூழ்ந்துள்ளோரின் நகைப்புக்கும், ஏளனத்துக்கும் ஆளாகிவிட்டோம். ஆண்டவரே! இன்னும் எவ்வளவு காலம் நீர் சினம் கொண்டிருப்பீர்? உமது வெஞ்சினம் நெருப்பென எரியுமோ? (79:4,5). பாபிலோன் ஆறுகள் அருகே உட்கார்ந்திருக் கையில் ஆண்டவரது பாடலை அன்னிய நாட்டில் எங்ஙனம் பாடுவோம்? எருசலேமே! நான் உன்னை மறந்தால் என் வலக்கை சும்பிப்போவதாக!(137:4,5) என்று தங்களுடைய நாட்டுப்பற்றையும், இறைப்பற்றையும் சேர்த்து அவர்கள் வெளியிட்டனர். ஆண்டவர் மேல் உன் சுமையை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார். நீதியரை ஒருபோதும் அவர் தள்ளாட ஒட்டார் என்பது இந்த அடியார்களின் உறுதியாக இருந்தது. 23ஆம் திருப்பாடலைப் போன்ற ஆறுதல் பாடல் களிலே இந்த உறுதி தெளிவாக வெளியிடப்பட்டுள்ளது. மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் தீமைக்கு அஞ்சிடேன். இறைவா நீர் என்னோடே கூட இருக்கிறீர். கடவுளுடைய இடைவிடாத சமூகம் அடியார்களுடன் எப்போதும் இருக்கிறது என்பது அவர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை யாக இருந்தது. கடவுள் வேண்டுதலைக் கேட்டார் என்ற உறுதியை மெய்யாக கடவுள் எனக்குச் செவி கொடுத்தார், என் விண்ணப்பக் குரலைக் கேட்டார்; என் மன்றாட்டைத் தள்ளாமலும், தமது பேரன்பை என்னைவிட்டு விலக்காமலு மிருந்த கடவுளுக்கு நன்றி (66:19,20) போன்ற வசனங்களில் நாம் பார்க்கின்றோம்.

வரும் துன்பங்களுக்கெல்லாம் செய்த பாவம்தான் காரணம் என்கிற பெரும் நம்பிக்கையும், பாவம் இல்லாது வாழ்ந்தால் ஆசி கிடைக்கும் என்கிற நம்பிக்கையும், சில பாடல்களில் நாம் காணலாம். என் உள்ளத்தில் தீய சிந்தை கொண்டிருந்தே னானால் ஆண்டவர் எனக்குச் செவிகொடார் (66:18). இளைஞ னாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன் ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் மரபினர் பிச்சை எடுக் கிறதையும் நான் காணவில்லை (37:25). ஆண்டவர் நீதியர்களின் நெறியை அறிந்திருக்கிறார், பொல்லாரின் வழியோ அழியும் (1:6) போன்ற வசனங்கள் இக்கருத்தை ஆதரிக்கின்றன.

தனி நபர்களின் துயரப்பாடல்கள் என்று கூறப்படும் திருப் பாடல்கள் வகையில் (3:7,17 போன்றவை), ஒருவித பகைவரைப் பற்றித் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கி றோம். இவர்கள் தனிப்பட்ட பகைவர்களாக இருக்கலாம், அல்லது மந்திர வித்தைகள் மூலமாகப் பக்தர்களுக்குத் துன்பம் விளைவித்தவர்களாக இருக்கலாம். அல்லது துன்பம் வந்தபோது, பாவத்தினால் வந்த தண்டனை கடவுளாக இதை அனுப்பியுள்ளார் என்று தங்கள் தவறான பக்தியால் நினைத்து, அவ்வாறு இவர்களைத் துன்பப்படுத்தியவர்களாக இருக்கலாம். எப்படியும் இப்பகைவர்கள் பக்தர்களுடைய அழிவையும், இவர்களுடைய இறப்பையும் எதிர்பார்த்திருந்தார்கள் என்பதைத் திரும்பத் திரும்ப வசனங்களில் பார்க்கிறோம். இப்படிப்பட்டப் பகைவர்களிடமிருந்து கடவுள் தம்பேரில் பற்றுடையவர்களை விடுவிப்பார் என்று நம்பி மிக மிக உறுதியாகத் திருப்பாடல்களில் கூறப்படுகின்றது. இறப்பிற்குப் பின் கடவுளைப் போற்றும் வாழ்வு இல்லை, வெறும் நிழல் போன்ற வாழ்க்கை மட்டுமே உண்டு என்ற நம்பிக்கையும் சில திருப்பாடல்களில் நாம் காண்கிறோம். இறந்தபின் உம்மை நினைப்பவர் இல்லை, பாதாளத்தில் உம்மைப் போற்றுவார் யார்? (6:5); நான் குழியில் இறங்கும்போது என் இரத்தத்தால் என்ன பயனுண்டு? புழுதி உம்மைப் புகழ்ந்து உமது பற்றுறுதியை அறிவிக்குமோ? (30:9). இருளில் உமது அருஞ்செயல்களும் மறைவின் நாட்டில் உமது நீதியும் அறிவிக்கப்படுமோ? (திருப். 88:12) எனவே இறப்பிற்குப் பிறகு மறதியின் வாழ்வு என்றுதான் நம்பப்பட்டு வந்தது. இந்த இறப்பினின்று விடுவிக்கப்பட வேண்டுமென்று திரும்பத் திரும்ப அடியார் வேண்டுவதையும் நாம் இங்கே காண்கிறோம் (33:18; 56:13; 116:8). இறப்பினின்று விடுதலையென்றால், இறப்பிற்குப்பின் வரும் உயிர்த்தெழுத லையோ, விடுதலையையோ குறிக்காமல், நோய்வாய்ப்பட்ட போதே சாவின் வல்லமைக்குள் மனிதர் சென்றுவிட்டார்கள், அவர்களுடைய வாழ்க்கை ஆற்றல் குறைந்துவிட ஆரம்பிக் கின்றது, ஏற்கெனவே தொடங்கிவிட்ட சாவாகிய நிலையி னின்று விடுவிக்கப்படவேண்டுமென்று திருப்பாடகர் கூறுகின்

றார் என கிறிஸ்டோப் பார்த் (Christoph Barth) என்னும் ஆராய்ச்சியாளர் விளக்குகிறார். சாவுக்குப் பின் வாழ்வு உண்டா என்பதைக் குறித்து நாம் திருப்பாடல்களில் தெளிவாகப் பாராவிடினும், 49ஆம் திருப்பாடலும், 73ஆம் திருப்பாடலும் இதைக் குறித்த ஒரு நம்பிக்கையைச் சுட்டிக்காட்டுகின்றன. உமது ஆலோசனையினால் என்னை நடத்தி, முடிவிலே என்னை மாட்சியோடு ஏற்றுக்கொள்வீர். விண்ணுலகத்தில் உம்மையன்றி எனக்கு யார் உண்டு? மண்ணுலகில் உம்மையன்றி எனக்கு வேறே விருப்பமில்லை (73:24,25) போன்ற வசனங்களில் உயிர்த்தெழுதலைப்பற்றிக் குறிப்பாக அல்லது இறப்புக்குப் பின் வாழ்வைப்பற்றித் தெளிவாகக் சுறாவிடினும், இந்த உலகவாழ்வில் தொடங்கிய உறவு அற்றுப்போகாமல் இறப்புக்குப் பின்னும் நீடித்து வாழும் என்ற ஒரு கருத்து அங்கே இருப்பதை நாம் பார்க்கலாம்.

தனி நபர்களின் துயரப்பாடல்களில், பாவ அறிக்கைப் பாடல்கள் 6, 32, 38, 51, 102, 130, 131 போன்றவை மிகச்சிறப்புடையவை. மனிதருடைய குற்றங்களை கடவுள் ஒருவரே கழுவ முடியும். மீறுதல்களை நீக்கி அவர் ஒருவரே புனிதப்படுத்த முடியும். மனிதர் செய்த பாவங்கள் முழுவதும் கடவுளுக்கு முன்பாக, கடவுளுக்கு எதிராகச் செய்த பாவங்கள், மனிதருடைய இயற்கை குணம், சிறு வயது முதலே, ஏன், பிறப்பு முதலே பாவத் தன்மை வாய்ந்தது, பாவத்தைப் போக்க கடவுளுக்கு விருப்பமான பலி நொறுங்குண்ட ஆவிதான். பாவ அறிக்கை செய்யும் ஒருவரையும் கடவுள் தள்ளி விடுவதில்லை இவை போன்ற ஆழ்ந்த ஆன்மிக உண்மைகளை 51ஆம் திருப்பாடலிலும் பிற திருப்பாடல்களிலும் பார்க்கிறோம். பாவமீட்பும் பாவ மன்னிப்பும் கடவுளே அளிக்கிறார் என்கிற நம்பிக்கையும் அந்தத் திருப்பாடல்களிலே நாம் தெளிவாகக் காண்கிறோம்.

கானானியத் திருப்பாடல்களில் ஒன்றை யாவேக்குப் புகழ் பாடலாக மாற்றியதுதான் 29ஆம் திருப்பாடல் எனவும், எகிப்தியப் பாடல் ஒன்றை எடுத்து எபிரேயப் பக்திக்கு ஏற்ப மாற்றியதுதான் 104ஆம் திருப்பாடல் எனவும் ஆய்வாளர் கூறுகின்றனர். பாடல் முறைமையும், பாடல் கருத்துக்களும் சில வேளைகளில் பிற சமயங்களினின்று ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், யாவே கடவுளின் தன்மைக்கும் வெளிப்பாட்டிற்கும் ஏற்ற முறையிலே அவை மாற்றப்பட்டு வழிபாட்டிலே பயன்படுத்தப்பட்டன. பிந்திய திருப் பாடல்களாகிய முதலாம் திருப்பாடல், 19ஆம் திருப்பாடலின் பிற்பகுதி, 119ஆம் திருப்பாடல் போன்றவற்றில் கடவுளின் வார்த்தையைப்பற்றிய பல சிறப்பான கருத்துக்களையும், சட்டங்கள் வாழ்க்கைக்கு எவ்வளவு பயனுடையவை, எவ்வளவு மகிழ்ச்சியுடையவையாயுமிருக்கின்றன என கடவுளின் சட்டத்தையும் பாடும் புகழ் பாடலாக அமைக்கப்பட்டுள்ளன. உம்முடைய வசனம் என் கால்களுக்கு விளக்கும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (119:105); உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொள்ளுகிறபடியால் முதிய வர்களைப் பார்க்கிலும், ஞானமுள்ளவனாயிருக்கிறேன் (119:10). ஆயிரக் கணக்கான பொன் வெள்ளியைப் பார்க்கிலும் நீர் திருவாய் மலர்ந்த சட்டம் எனக்கு அருமையானது (119:72) உமது கட்டளைகளின் பாதையில் என்னை நடத்தியருளும், அதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் (119:35). உமது வார்த்தையின் உட்பொருள் உண்மை. உமது நீதியுள்ள நெறிமுறைகள் ஒவ்வொன்றும் நிலைத்துள்ளது (119:160). கடவுளின் சட்டத்தைக் கடைப்பிடிப்பது கடினமானது, அதற்கென துணைச்சட்டங்கள் வேண்டும். சட்டமாகிய வேலியைத் தாண்டாதபடி கருத்துடன் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற பிந்தைய கருத்தை நாம் இங்கே காணாமல் கடவுளுடைய திருச்சட்டம் மனிதரைச் சரியான பாதையில் நடத்துகின்றது. அது பக்தருக்கு மகிழ்ச்சியையும் வாழ்வையும் அளிக்கும் என்கிற சிறந்தக் கருத்துக்களையே திருப்பாடகர் எடுத்துரைக்கின்றார்.

ப.ஏ.இலுள்ள இறையியல் போங்குகளையும், இறையியல் கருத்துக்களையும், அவற்றை எடுத்துரைத்த இறைத் தொண்டர்களையும் நாம் பார்த்தோம். ப.ஏ. பல நூற்றாண்டுகளாக உருவாகிய ஒரு நூல். எனவே, கருத்துக்கள் விரிவும் வளர்ச்சியும் மாற்றமுமடைந்தன. வரலாற்று அடிப்படையில் மட்டுமே ப.ஏ.ஐச் சரிவர புரிந்து கொள்ளக் கூடும்.

5. பழைய ஏற்பாட்டு நிறைவேறுதல்

பண்டைக்காலத்தில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், இறைவாக்கினர் மூலமாக நம் மூதாதையருக்கு கடவுள் எவ்வாறு திருவுளம் பற்றினார் என்பதைத்தான் ப.ஏ. விளக்குகின்றது. ஆனால் அந்த கடவுளின் செயலாற்றும் முறையை நாம் பார்க்கும்போது, அவருடைய திட்டம் முழுமையாக தம் மகனில் நிறைவேறிய நிகழ்ச்சியை மனத்தில் கொள்ளவேண்டும். ப.ஏ. யூதர்களுக்கும் மறைநூல் இயேசு கிறிஸ்துவில் கண்ட வெளிப்படுத்தலை ஏற்காமல், பு.ஏ.ஐ ஏற்காமல் அவர்கள் மறைநூல் முற்றுப்பெறுகின்றது. ப.ஏ. ஐ கிறிஸ்தவர்களாகவும் படிக்கலாம், யூதர்களாகவும் படிக்கலாம். கிறிஸ்தவர்களாகப் படிக்கையில் ப.ஏ.க்கும், பு.ஏ.க்குமுள்ள நெருங்கியத் தொடர்பையும், ப.ஏ. பு.ஏ.இல் எவ்வாறு நிறைவேறுகிறது என்பதையும் நாம் சிந்திக்காமலிருக்க முடியாது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் தாங்கள் கிறிஸ்துவின் அடியார்கள் என்பது மட்டுமல்ல, தாங்கள் புது இஸ்ரயேலராக இருக்கிறார்கள் (1 கொரி. 10:18) எனவும் நம்பியிருந்தார்கள். ப.ஏ. எதிர்பார்த்த மெசியா தான் நாசரேத்து ஊரானாகிய இயேசு கிறிஸ்து என்பதைப் பு.ஏ. ஆசிரியர்கள் நிறுவ முற்படுகின்றனர். இயேசு நாதரும் ப. ஏ.ஐ தமது மறைநூலாகக் கொண்டு, அதில் கூறப்பட்டிருப்பவை அனைத்தும் தம்மில் நிறைவேறியது என்று தமது திருப்பணியைப் புரிந்து அம்முறையில் செயலாற்றினார். இறைவாக்கினரும் நீதியர்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும், விரும்பியும், காணாமலும், கேளாமலும் போனார்கள் (மத். 13:17) என்று அவர் கூறினார். காலம் நிறைவேறியபோது கடவுள் தம்முடைய மகனை பெண்ணிடம் பிறந்தவராகவும், திருச்சட்டத்திற்குக் கீழ்ப்பட்டவராகவும் அனுப்பினார் (கலா. 4:5) என்பது பவுலின் நம்பிக்கை. இயேசு நாதர் தாமே உயிர்த்தெழுந்தபின்னர் தம்முடைய சீடர்கள் தமது தன்மையையும், தமது வாழ்க்கை, இறப்பு, உயிர்த்தெழுதல் என்பவற்றின் கருத்தையும் புரிந்துக்கொள்ளக் கூடிய முறையில் மறைநூல் வாக்கியங்களை எடுத்து விளக்கினார் என லூக். 24:45ஆம் வசனத்தில் காண்கின்றோம். ப.ஏ.க்கும், பு.ஏ.க்கும் இருக்கிற தொடர்பை ஆராய்ச்சியாளர்கள் பல முறையில் புரிந்துகொள்கின்றனர். ப.ஏ.இலுள்ள ஒவ்வொரு வசனமும், பு.ஏ.ஐச் சுட்டிக்காட்டுகிறது. ஒவ்வொரு வசனத்திலும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. எனவே ஆன்மிகப் பொருட்களைக் கொடுத்து ஒவ்வொரு வசனத்திலும் இயேசு கிறிஸ்துவைக் காண்பதே ப.ஏ.ஐச் சரியாக விளக்குவது என்று வாதிப்பர் சிலர். ப.ஏ. அனைத்தும் எதிர்பார்ப்புகளைப் பெருக்கிக்கொண்டே போகிறது (mounting expectation). இந்த எதிர்பார்ப்புகள் அனைத்தும் இயேசு கிறிஸ்துவில்

நிறைவேறுகின்றது என்பர் வேறு சிலர். ப.ஏ.இல் பு.ஏ. மறைந்து கிடக்கின்றது, பு.ஏ.இல் ப.ஏ. விரிந்துக்கிடக்கின்றது என்றார் ஒரிகென் (Origen) என்னும் மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு கிறிஸ்தவப் பெரியார்.

ப.ஏ.இன்றி நாம் பு.ஏ.ஐப் புரிந்துக்கொள்ள முடியாது. அதேபோன்று பு.ஏ.இன்றி நாம் ப.ஏ.இன் சிறப்பையும் அறிந்துக் கொள்ள முடியாது. இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்ட கடவுள், ப.ஏ.இல் செயலாற்றினார் என்கின்ற காரணத்தால்தான் ப.ஏ. கிறிஸ்தவர்களுக்குச் சிறப்புடையதாக இருக்கின்றது. இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்ட கடவுள் முந்தைய காலங்களில் வாளாவிருக்கவில்லை; ஒரு மக்களைத் தேர்ந்து, அவர்கள் மூலமாகத் தம்மை வெளிப்படுத்தும் தொடக்கத் திட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டே வந்தார். அந்த நிறைவேறுதலின் இறுதிக்கட்டமாக மட்டுமே நாம் பு.ஏ.ஐக் கொள்ளுகிறோம். இந்த மொத்த வெளிப்படுதலின் முற்பகுதி மிக முக்கியத்துவம் வாய்ந்தது. பிற்பகுதியால் முற்பகுதி தெளிவு பெறுகின்றதேயன்றி, பிற்பகுதி வந்த காரணத்தால் முற்பகுதி தேவையில்லை, அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் இல்லையென்பது மிகத் தவறாகும். பு.ஏ.இலுள்ள இறைக் கருத்துக்கள் எல்லாம் ப.ஏ.இல் காண்பவை, ப.ஏ.இலிருந்து வளர்ந்தவை. ப.ஏ. வெளிப்படுத்துதல் இல்லையென்றால் மக்கள் இயேசுவை கிறிஸ்து என்று அறிந்துக் கொள்ளவும், அவரை கிறிஸ்து என்று ஏற்றுக்கொள்ளவும் வழி இருந்திராது. விவிலியத்தின் இரு பகுதிகளும் ஒரே ஆன்மிக மொழியைப் பேசுகின்றன, ஒரே இறைவனின் செயல்திறனை விளக்குகின்றன; ஒரே மக்களின் தேர்ந்துக் கொள்ளுதலைப்பற்றிக் கூறுகின்றன.

ஆனால் அதே நேரத்தில் ப.ஏ.க்கும், பு.ஏ.க்கும், வேறுபாடு இல்லையென்று கூறுவதும் சரியாகாது. ப.ஏ.இன் வெளிப்பாட்டிற்கு அளவுகோல் அல்லது உரைகல் பு.ஏ. மோசேயின் மூலமாய் திருச்சட்டம் கொடுக்கப்பட்டது. கிறிஸ்துவின் மூலமாய் அருளும் உண்மையும் வெளிப்பட்டன (யோ. 1:17). ப.ஏ. வாசிக்கப்படுகையில் முக்காடு இன்னும் நீங்காமலிருக்கிறது, இயேசு கிறிஸ்துவில் ஆண்டவரின் மாட்சியை நேராக நாம் காண்கிறோம் (2 கொரி. 3:12-18). கடவுள் தமது வெளிப்படுத்தலுக்குத் துணையாக வேறு தொண்டர்கள் மூலம் பேசாமல் மனு உருவேற்று வந்து பேசுகின்ற உண்மையைப் பு. ஏ.இல் நாம் காண்கிறோம். வாக்கு மனிதனானார்.

மேலும் உனக்குள் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும் என்று ஆபிரகாமுக்கு கடவுள் அளித்த உறுதிமொழி (தொட. 12:3), உலகத்தின் அனைத்து எல்லை நாட்டாரே! என்னிடம் திரும்பி விடுதலை பெறுங்கள் என்று எசாயா அழைத்த அழைப்பு (எசா. 45:22), பு.ஏ.இல்தான் உண்மையாய் நிறைவேறுகின்றது. ப.ஏ.இல் இஸ்ரயேலுக்கு மட்டும் என்றிருக்கும் ஒரு தன்மை நீங்கி, இறைஅன்பும், இறைமீட்பும், இறையாட்சியும், மனுக்குலமனைத்துக்கும், உலகத்தின் இறுதிமுனை மட்டும் செல்கின்றது. அதுவே இறைவனின் திருவுளம் என்பதை நாம் பு.ஏ.இல் தெளிவாகக் காண்கிறோம். நடுச்சுவர் தகர்க்கப்பட்டு யூதனென்றும், கிரேக்கரென்றுமில்லை, அடிமையென்றும், உரிமைப்பெற்றவரென்றுமில்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை எனும் உண்மை நிறுவப்படுகின்றது. நம்பிக்கையுடன் அவரை எத்தனை பேர் ஏற்றுக்கொண்டார்களோ அத்தனை பேரும் அவருடைய பிள்ளைகளாகும்படிக்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார் என்று நாம் வாசிக்கையில், மனுக்குலமனைத்தையும் கடவுளுடைய பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளக்கூடிய அன்புச் செயலை இறைவன் இயேசு கிறிஸ்துவில் செய்து முடித்தார் (யோ. 1.12). இந்தவிதத்தில் ப.ஏ.இன் அனைத்துலக வாக்குறுதி பு.ஏ.இல் செயல்வடிவம் பெற்றுள்ளதைக் காணலாம். அதே நேரத்தில் யூத சமயத்தவர் இன்றும் தங்கள் தனித்தன்மையை வலியுறுத்தி தங்கள் ஒரே திருநூலாக ப.ஏ.ஐ விளக்குவதால் நாம் அவர்களின் விளக்கத்தையும் அணுகுமுறைகளையும் உரையாடல் நெறி நின்று பார்க்கவேண்டும். விவிலியத்தின் முதல் பகுதியை ப.ஏ. என்று அழைப்பது உட்பட நம் மரபுவழிச் சிந்தனைகளை மாற்றிட முன்வருதல் தேவை.

இந்தியத் திருச்சபை தன் செய்தியை மேனாட்டுச் சபைகளிடமிருந்து பெற்றுக்கொண்டது. மேனாட்டிலே சமய நூல்கள் என்று கூறவதற்குச் சிறப்பு வாய்ந்த நூல்கள் இல்லாமலிருந்தன. இந்தியாவில் வேதங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை, ஆழ்வார்கள், நாயன்மார்களுடைய பாடல்கள், சமயநூல்கள், பக்தி நூல்கள் நிறைய உள. ப.ஏ.ஐ நீக்கிவிட்டு, இந்த நூல்களை இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்தலுக்கு நாம் ஆயத்த நூலாக ஏற்றுக்கொள்ளக் கூடாதா என்ற வினா இந்தியத் திருச்சபையில் பல காலங்களில் எழும்பியதுண்டு. பிற சமயங்களிலும் கடவுள் செயலாற்றுகிறார் என்ற உண்மையை நாம் ஒத்துக்கொள்ளுகின்றோம். ஆனால் கடவுள் தம்மை வெளிப்படுத்த திருவுளங்கொண்டபோது இஸ்ரயேல் மக்களையே தேர்ந்துகொண்டார். இஸ்ரயேலரில் ஒருவராகத் தோன்றினார் என்கிற வரலாற்று உண்மையை, குறைக்கவோ மறைக்கவோ முடியாது. ஆர்வமிகுதியால், பிற சமய நூல்களுக்கு ப.ஏ.க்குரிய இடத்தைக் கொடுத்தால், ப.ஏ.க்கும், பு.ஏ.க்கும் இருக்கிற ஒற்றுமையை நாம் களைந்துவிட்டு ப.ஏ. இல்லாமலேயே பு.ஏ.ஐப் புரிந்துக்கொள்ளக் கூடும் என்று சொல்லுபவர்களாவோம். ப.ஏ. இன்றி நாம் பு.ஏ.ஐப் புரிந்துக்கொள்ள முற்பட்டால், நமக்குத் தோன்றிய முறையிலே தான் மீட்பரையும், மீட்பின் செயலையும் புரிந்துக்கொள்ள முடியுமே ஒழிய இறைமகன் இயேசு தமது பணியைப்பற்றி எவ்வாறு எண்ணினார் என்பதை அறிந்துக்கொள்ளக் கூடாதவர்களாகி விடுவோம். இயேசு நாதரில் கடவுள் வெளிப்பட்டார் என்கிற உண்மையை நாம் ஏற்றுக்கொள்வோமென்றால், ப.ஏ.ஐயும், பு.ஏ.ஐயும் பிரித்துவிட முடியாது. இஸ்ரயேல் மக்களும் யாவே வணக்கம் இல்லாத பிற தெய்வங்கள் வணங்கப்பட்டச் சூழ்நிலையில், யாவே வணக்கத்தில் உறுதியாக இருந்து தங்கள் வாழ்க்கைப் பயணத்தை எவ்வாறு ஓட்டினார்கள் என்பதைப் ப.ஏ.இல் நாம் பார்க்கையில் பிற சமயச் சூழ்நிலையில் வாழும் கிறிஸ்தவத் திருச்சபையும் எவ்வாறு தனது பக்தியைக் காத்துக் கொள்ள வேண்டும்; ஆனால் எவ்வாறு துணிச்சலுடன் பிற சமயங்களினின்று உண்மை களை எடுத்துக்கொள்ளலாம் என்று கற்றுக்கொள்ளலாம். திருச்சபை தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பணியை மறந்துவிட்டு இறைவனுக்கும் தனக்கும் ஒரு தனிச் சிறப்புத் தொடர்பு இருப்பதாகவும், அதன் மூலமாகத் தனக்குத் தீமை ஒன்றும் வராது எனவும் தன்னைத் தேர்ந்துக்கொண்டதால் இறைவன் தனக்குக் கட்டுப்பட்டவர் என்றும் தவறாக எண்ணினால், இஸ்ரயேல் சபைக்கு வந்த அதே நிலை கிறிஸ்தவத் திருச்சபைக்கும் வரும் என்பதை ப.ஏ. நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. திருச்சபையைத் தேர்ந்துக் கொண்ட காரணத் தால் இறைவன் திருச்சபைக்குக் கட்டுப்பட்டவரல்லர்; அவர் விரும்பும்போது திருச்சபையைத் தூக்கி எறிந்துவிட்டு வேறு மக்களைப் பயன்படுத்த வல்லவர்; கல்லுகளால் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவர் என்பது ப.ஏ. திருச்சபைக்கு அளிக்கும் எச்சரிக்கை. ஆபிரகாம் முதல் பல வித இக்கட்டான வரலாற்றுச் சூழ்நிலைகளில் இஸ்ரயேலை நடத்தி வந்த ஆண்டவர், திருச்சபையைச் சிக்கல்கள்

நிறைந்த தருணங்களிலும் வழிநடத்துவார் என்பதே ப.ஏ. நமக்கு அளிக்கும் ஆறுதல்.

புனிதப் பாதையில் நாமும் பயணம் செல்லுகின்றோம். அப்பாதையின் இறுதியில் இயேசு முன்னே செல்ல நாமும் வாழும் ஒரே கடவுளை வணங்கி வாழ்த்தி, எல்லா மக்களினங்களிலும், குலங்களிலும், மக்களிலும் மொழி பேசுகிறவர்களிடமிருந்தும் வந்தவர்களாக அரியணை முன் தாழ்பணிந்து விழுந்து ஆமென், துதியும், மாட்சியும், ஞானமும், நன்றியும், மாண்பும், வல்லமையும், ஆற்றலும் எங்கள் கடவுளுக்கு என்றென்றைக்கும் இருப்பதாக, ஆமென் எனப் போற்றிப் பாடுவோம்.

துணை நின்ற நூல்கள்

1. Baab, Otto, J., *The Theology of the Old Testament*, Abingdon press, New York: 1949.
2. Von Rod, Gerhard, *Old Testament Theology*, Vol.1&2, Oliver and Boyd, Edinburgh: 1962&1965.
3. Eichrodt, Walther, *Theology of the Old Testament*, Vol.2, SCM press Ltd., London: 1967.
4. G. Von Rod, Old Testament Theology, Vol. 1 & 2, SCM, 1962, 1965.
5. W. Eichrodt, *Theology of the OT*, Vol..1 & 2, SCM, 1964.
6. G. Knight, *Tradition and Theology in the O.T.*, Fortress: 1979.
7. B. Wielenga, *It's a Long Road to Freedom*, TTS.
8. N.K. Gottwald (ed.), *The Bible and Liberation*, Orbis, 1980.
9. W.J. Dumbrell, *Covenant and Creation*, Paterhoster: 1984.
10. W. Zimmerli, *OT Theology*, SCM, 1981.
11. W. Dyrness, *Themes in the OT Theology*, Paternoster: 1977.

21

பழைய, புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்துச் சமயச் சிந்தனை

தோ. சா. காரட்

1. முன்னுரை

புதிய ஏற்பாடானது, அக்கால யூத சமயத்திற்குக் கண்டிப்புடன் கூடிய ஓர் இறைவாக்குரையாக அமைந்திருக்கிறது என்பது உண்மையாகும். இயேசுவும் அவருடைய அடியாரும் பரிசேயரின் மரபை விட்டுவிட்டுப் பழைய விவிலிய நூல்களில் அமைந்த கடவுளின் வார்த்தையைச் சுட்டிக் காட்டுகின்றனர். யூத சமயத் தலைவர்களின் குற்றச்சாட்டுகளினாலேயே இயேசுவும் சிலுவைக்கு நடத்தப்படுகின்றார். தொடக்ககாலத் திருச்சபையானது நம்பிக்கையற்ற யூதரோடு அமைதியற்ற இழுபறியுடன் (tension) குறுகிய காலம் யூத தொழுகைமன்றத்தினுள் இருந்தது. என்றபோதிலும் அதே யூத பகையினாலே பு.ஏ. காலத்தின் தொடக்க ஆண்டுகளிலேயே அது வெளியேற்றப்பட்டது.

எனினும், அக்கால யூத சமயத்திற்கு எதிர்க் கிளர்ச்சியாக கிறிஸ்தவம் எழுந்தது என்பதைத் தெளிவுபடுத்திய பின்னர், அது தோன்றிய காலத்து யூதர்கள் நடுவில் நிலவிய சமயக் கருத்துக்களுக்கும் இயக்கங்களுக்கும் அது கடமைப்பட்டுள்ளது என்பதையும் அதே அளவு அழுத்தமாகக் கூறவேண்டும். உண்மையில், யூத சமயமே கிறிஸ்தவம் வளர்ந்த தொட்டிலாகும். மேலும், கி.பி. முதல் நூற்றாண்டிலேயே கிறிஸ்தவம் எடுத்துக்கொண்ட தனிப்பட்ட அமைப்பை அதனுடைய யூதப் பின்னணியத்தைப்பற்றிய மதிப்பீடின்றிப் புரிந்துகொள்வது இயலாததாகும். கிறிஸ்தவர்கள் யூதர்களிலிருந்து வேறுபடும் உண்மைகளிலும் (எ.கா. மோசேயின் சட்டத்தைக் கடைப்பிடித்தல்) சமகால யூத நோக்குகளோடு ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் மட்டுமே கிறிஸ்தவ நிலையைச் சரிவரப் புரிந்துகொள்ள இயலும்.

வேறு முறையில் இதைச் சொல்வதானால், பு.ஏ. எழுத்தாளர்கள், யூத மறைநூல்களை மேற்கோளாக எடுத்துக்காட்டுகின்றனர். ஆனால், அவர்கள் அவற்றை எடுத்துக்காட்டிப் பொருள்கூறும் முறையானது, அதே காலத்து யூத ரபிமார் அவற்றினை எவ்வாறு எடுத்துக் காட்டிப் பொருள் கூறினார்களோ, அந்த முறையோடு தொடர்புடையதாயிருக்கிறது. தனிப்பட்ட மறை நூல்களின் எடுத்துக்காட்டு, விளக்கம் ஆகியவற்றைப் பொறுத்த அளவிலும் இது அதிகமாகப் பொருத்தமாயிருக்கின்றது. ஜேம்ஸ் பார் (James Barr) என்பவர் விளக்கத்தில் பழைய, புதிய ஏற்பாடுகள் என்னும் தம் நூலில் கூறுவதுபோல, பழைய ஏற்பாடானது, கி.பி. முதல் நூற்றாண்டில் அது புரிந்து கொள்ளப்பட்ட நிலைமையை (சூழலை) உற்பத்தி செய்வதிலேயே, கிறிஸ்துவில் வரும் மீட்போடு தொடர்புள்ளதாகின்றது. வேறு வார்த்தைகளில் கூறினால், ப.ஏ.இல் இருந்த பலவித இறையியல் கூறுகளும், சமயப் போங்குகளும் இரு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்டக் காலத்திலே யூத சமயத்தின் தொடர்ந்து முன் செல்லும் வாழ்க்கையில் வளர்ச்சியுற்றதோடு, அவை உற்பத்தி செய்த சமய நிலைமையிலிருந்து தனது திடீர் தோற்றத்திற்கு அமைப்பும் நிறமும் பெற்றது.

மன்னுருவேற்பில் இது முக்கியமான ஒரு கூறாகும். கடவுள் தமது மானிடத்தன்மையோடு உறவில்லாத ஓர் உலகிற்குள் மனிதராக வரவில்லை, குறிப்பிட்ட ஒரு வரலாற்றுச் சூழலில், ஓர் இனத்தில், ஒரு கலாசாரச் சூழ்நிலையில் ஒரு மனிதராக வந்தார். இயேசுவைப் பொறுத்தவரையில் இது உண்மையாயின், அவருடைய சீடர்கள், யூத சமய எல்லைகளை மீறி, கிரேக்க- உரோமைக் கலாசாரத்தைச் சந்திக்குமுன் காணப்பட்ட பாலஸ்தீனத் திருச்சபைக்கும் இது சம அளவு உண்மையானதே என்பது தெளிவு.

கிறிஸ்தவம், யூத சமயத்தின் கருப்பையில் பிறந்து, யூத சமயத்தால் ப.ஏ.ஐப் பெற்று, அதனைத் தனக்கேற்ற முறையில் புரிந்துகொண்டது. இந்தப் பொதுவான நிலைப்பாடு, இயேசுவுடையவும், அவருடைய சீடர்களுடையவும் காலத்தில் நிலவிய யூத சமய நோக்கின் மிக முக்கியக் கூறுகளைப் பற்றிய விவரமான ஆராய்ச்சியினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இப்பொழுது அவற்றைக் காண முயல்வோம்.

2. பழைய ஏற்பாடும், கனோனுக்குப் புறம்பான நூல்களும்

பு.ஏ. ஆக்கியோர் விவிலிய நூல்கள் எனக் குறிப்பிடும்போது, சீர்திருத்த சபைகள் வெளியிட்ட ப.ஏ.இல் சேர்க்கப்பட்ட நூல்களை மட்டுமல்ல, ஏற்காத மறைநூல்களையும் சேர்த்தே குறிப்பிட்டனர் என்பதை நாம் மறந்துவிடலாகாது. திருத்தூதத் திருச்சபை விவிலியம் என ஏற்றுக்கொண்ட செப்துவசிந்து என்றறியப்படும் யூத மறைநூல்களின் கிரேக்க மொழிபெயர்ப்பில் இந்தப் பிற நூல்களும் இடம் பெற்றிருந்தன. பிற்காலத்தில் ஏற்காத மறைநூல்கள் என்று வரையறுக்கப்பட்டவற்றிலிருந்து நேரடியாக எடுக்கப்பட்ட மேற்கோள்கள் பு.ஏ.இல் இருந்தாலும், அவை மிகவும் குறைவே. எனினும், சுட்டுக் குறிப்புகளாகவும் (allusions), எதிரொலி வாக்கியங்களாகவும் சுமார் 100-க்கு மேல் இருப்பதாக பு.ஏ. அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இவை தவிர, செப்துவசிந்து வெளியிடப்பட்ட பின்னர்

எழுதப்பட்டபடியால், சேர்க்கப்படாத, ஏனோக்கின் நூல், சாலமோனின் தள்ளுபடிநூற்களிலும் திருப்பாடல்கள் என்னும் பல யூத நூல்கள் காணப்பட்டன. இவற்றிலிருந்து எடுக்கப்பட்ட 20-க்கும் மேலான மேற்கோள்களும் பு.ஏ.இல் காணக் கிடக்கின்றன.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில்தான் இந்த ஏடுகள் யூத மறைநூல்கள் என ஒப்புக்கொள்ளப்பட்டவைக்குப் புறம்பாக்கப்பட்டன. இந்த யூதத் தீர்ப்பையே பதினாறாம் நூற்றாண்டில் சீர்திருத்தக்காரர்களும் பின்பற்றினர். இதன் விளைவாக, சீர்திருத்த சபையினர் பெருமளவில் இவற்றினை வாசிப்பதில்லை. தமிழில் தாமஸ் உவாக்கர் என்பவரின் தள்ளுபடிநூற்களின் மொழி பெயர்ப்பு இப்போது அச்சிடப்படாததோடு, தமிழ் பழைய, புதிய ஏற்பாடுகளோடே சேர்த்து ஒருபோதும் இவை வெளியிடப்படவில்லை. தமிழ் சீர்திருத்த சபையினரில் எத்தனை பேருக்கு இதன் இருக்கை தெரியும் என்பதும் கேள்விக்குரியதே!

தூய பவுல் உரோமர் 1ஐ எழுதும்போது, சாலமோனின் ஞானம் என்ற ஏற்கப்படாத மறைநூலிலுள்ள பின்வரும் வாக்கியங்களைத் தம் மனத்தில் வைத்திருந்தார் என்பது தெளிவு; அதைப்பற்றிய அறிவு அவரது பொருளைப் புரிந்துகொள்ள உதவியாயிருக்கக்கூடும்.

மெய்யாகவே, மனிதர் எல்லாரும் இயல்தன்மையின்படி வீணராயிருக்கிறார்கள்; கடவுளை அறிகிற அறிவு அவர்களுக்கு இல்லவே இல்லை (13:1. ஒப்பிடுக உரோ. 1:20).

படைப்புகளுடைய சிறப்பின் மிகுதிக்குத் தக்கதாக, அவற்றைப் படைத்தவர் இப்படிப்பட்டவர் என்று, அவர்களுக்குத் தோன்றுவார் அல்லவா? (13:5. ஒப்பிடுக உரோ. 1:20).

எப்படியாயினும் சாக்குப்போக்குச் சொல்ல அவர்களுக்கு இடமில்லை (13:8. ஒப்பிடுக உரோ. 1:20).

அவர்கள் அறிவற்றக் குழந்தைகளைப்போல வஞ்சனைக் குள்ளாகி, தங்கள் பகைவர் முதலாய் ஈனமாய் எண்ணும் உயிரினங்களைத் தங்கள் தெய்வங்களாகக்கொண்டு, தவறான வழிகளில் அதிக தூரமாய் விலகிப்போனார்கள் (12:24. ஒப்பிடுக உரோ. 1:22).

ஆகையால் வாழ்வையும் இல்லறத்தையும் காப்பாற்றாமல் சதிசற்பனையால் இறப்பையும், விபசாரத்தில் பிறந்த பிள்ளைகளால் மனவேதனையையும் ஒருவருக்கொருவர் உண்டாக்குகிறார்கள். இரத்தஞ் சிந்துதலினாலும், கொலையினாலும், களவினாலும், கபடத்தினாலும், சீர்கேட்டினாலும், உண்மையில்லாமையினாலும், கலகத்தினாலும், பொய்யாணையினாலும், நல்லோரை வருத்துவதினாலும், நன்றிக்கேட்டினாலும், ஆன்மிகத் தீட்டினாலும், ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு தோன்றாத முறைகேடான நடக்கையினாலும், திருமண ஒழுங்கீனங்களினாலும், வேசித்தனத்தினாலும், காமவிகாரத்தினாலும் சகலமும் தாறுமாறாயிற்று. இப்படியாகப் பெயர் சொல்லக்கூட வாயெழாத அந்தச் சிலைகளை வணங்குவது, எல்லாவித தீமைகளுக்கும் காரணமும், ஆதியந்தமுமாயிருக்கிறது (14:24-27. ஒப்பிடுக ரோ. 1:29-31).

அவ்வாறே மத். 11:28-30 வரையுள்ள அருள் செறிந்த வார்த்தைகளைக் கூறும்போது, நமது ஆண்டவரும் எக்கிலீயாஸ்றிக்கஸ் (சீராக்குவின் மகனாகிய இயேசுவின் ஞானம்) என்னும் நூலில் கடவுளின் ஞானத்தின் வாயிலிருந்தெழும் சில வார்த்தைகளைச் சிந்தித்திருக்கலாம் என்று தோன்றுகிறது:

நற்போதனையைக் கல்லாதவர்களே, என்னிடத்தில் அடுத்து வாருங்கள், நற்போதனை செய்யப்படும் வீட்டில் தங்கி வாழுங்கள் (51:24).

நுகத்தடிக்கு உங்கள் கழுத்தை நீட்டி அதற்கு இணங்குங்கள்; உங்கள் ஆன்மா நற்போதனையை ஏற்றுக் கொள்வதாக; கண்டுபிடிப்பதற்கு அது மிகவும் அடுத்திருக்கின்றது. என்னை நோக்கிப் பாருங்கள்; நான் சிறிதளவு மட்டும் முயற்சி செய்து மிகுந்த இளைப்பாறுதலை அடைந்து கொண்டேன் (51:26,27).

இவ்விரு நூல்களும் ப.ஏ.இல் ஞான இலக்கியம் (Wisdom Literature) என்று அறியப்படுகின்ற நீதிமொழிகள், யோபு, சிறப்புமிகுபாடல் ஆகியவற்றின் வகுப்பைச் சேர்ந்தவைகளாம். இவைகள் சாலமோன் காலத்திலேயே தோன்றினவர்களும், சிறையிருப்பின் காலத்திற்குப் பின்னர் வரவர முக்கியமானவர்களாகி, இறைவாக்கினரின் இடத்தை எடுத்துக்கொண்டவர்களுமான ஞானிகள் என்று அழைக்கப்பட்ட போதக வரிசையினரால் எழுதப்பட்டன. அவர்களது போதனையின் பொருளைப் பின்வருமாறு சுருக்கமாக வரையறுக்கலாம்:

(அ) கடவுளின் ஞானம் என்பது படைப்பு முழுவதிலும் ஈடுபட்டிருக்கும் அவரது தொடர்பாகப் படைத்து வல்லமையளித்து ஆதரிக்கும் செயலாகும். இதில், சிறப்பாக, கிறிஸ்துவுக்கு முந்திய நூற்றாண்டில் எழுதப்பட்ட சாலமோனின் ஞானம் என்ற நூலில், கிரேக்க மெய்யியலில் நிலவிய கருத்துக்களால் இவர்கள் உறுதியாகத் தூண்டப்பட்டனர்.

(ஆ) கடவுளைப் பற்றிய அறிவிலும், சேவையிலும் மனிதர் ஞானத்தைச் சம்பாதிக்கின்றனர் என இவர்கள் நம்பினார்கள். நன்னடத்தை என்பது தெய்வீக ஞானத்தின்படி வாழ்வது, தீய நடத்தை என்பது அதற்கு எதிரானது. மடமையாகும் என்ற அடிப்படையில் அவர்களது போதனையின் பெரும் பகுதியும் அறநெறிப் போதனையாக அமைந்திருக்கின்றது.

திருவள்ளுவர், அக்கால யூதராக இருந்திருந்தால் அவரை ஒரு ஞானி என்றும் திருக்குறளை ஞான இலக்கியம் என்றும் உறுதியாக வரையறுத்திருப்பார்கள். ப.ஏ.இலும், ஏற்கப்படாத மறை நூல்களிலுமுள்ள ஞான இலக்கியத்தின் பல எதிரொலிகள் பு.ஏ.இலிருக்கின்றன என்ற உண்மை, பு.ஏ. எழுதப்பட்டுக்கொண்டிருந்த காலத்திலும், யூத சமய நோக்கில் இந்த இலக்கியம் முக்கிய ஒரு கூறுபாடாயிருந்தது என்பதற்கு அத்தாட்சியாயிருக்கின்றது.

3. மெசியா எதிர்பார்ப்பு

ஆயினும், நம் ஆண்டவரது காலத்தில் அதிக ஆர்வமும் நாட்டுப்பற்றுமுள்ள யூதர்கள், ஞானியரின் தனியாள் கடவுள் பற்று, ஒழுக்க நேர்மைபற்றிய அமைதலான அறிவுரைகளில் நிறைவடையவில்லை. கி.மு. 167இல் அவர்களது நாடு கிரேக்க அரசரான அந்தியோகஸ் எப்பிபானஸ் என்பவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த யூதா மக்கபேயு, அவரின் சகோதரர்கள் ஆகியோரின் தலைமையில் விடுதலை

பெற்றிருந்தது. ஏறக்குறைய 70 ஆண்டுகாலமாக மக்கபேயரின் பின்மரபினர் தலைமைக் குருவும் அரசர்களுமாயிருந்தனர். ஆனால், கி.மு. 63 முதல் திரும்பவும் உரோமைப் பேரரசென்னும் வேற்று ஆளுகைக்குக் கீழானார்கள்.

குருவும் அரசனும் ஒரே ஆள் என்ற முறையில் இந்தப் புதுப்பிக்கப்பட்ட யூத அரசு துவக்க பருவத்திலேயே உலகப் பற்றுள்ளதும் ஏளனத்துக்குரியதுமாகிவிட்டது. அன்னிய ஆளுகையின் கீழ் வந்த பின்னரும் குருக்களில் சதுசேயர் என்னப்பட்ட அவர்களின் ஆதரவாளர்கள் அறிவுக்கூர்மையுள்ள அரசியல் தந்திரத்தினால் உள்நாட்டு அதிகாரம், செல்வாக்கு ஆகியவற்றில் பெரும்பகுதியைத் தங்கள் கைகளில் வைத்துக்கொண்டனர். மக்கபேய எதிர்க்கிளர்ச்சியை முதலில் ஆதரித்த அதிக கடவுட்பற்றுள்ளவர்கள், குருத்துவத் தலைவர்களின் உலகப்பற்றினால் ஏமாற்றமுற்று முதலில் பக்தியுள்ளவர்கள் என்றும், பின்னர் பரிசேயர் என்றும் பெயர் பெற்ற தனிக்கட்சி ஒன்றை அமைத்தனர். அவர்கள் வன்முறையில் அவநம்பிக்கைக் கொண்டு, தனியார் கடவுட்பற்று, திருச்சட்டப் பற்றுறுதி ஆகியவற்றில் அக்கறைகொண்ட போதிலும், நீதியர்களின் விடுதலை, உயிர்த்தெழுதல் ஆகியவற்றை ஆர்வத்தோடு நம்பியிருந்தனர். மேலும், பரிசேயரைத் தவிர செலோத்தேயர் (Zealots) என்று அறியப்பட்ட தீவிர புரட்சிக் கூட்டத்தாரும் இருந்தனர்.

பரிசேயர் தனியார் கடவுட்பற்று வடிவிலோ, புரட்சிகரமான தோற்றத்திலோ, வேற்று ஆளுகையிலிருந்து விடுதலையளிக்கும் ஒருவரது வருகைபற்றிய மிகவும் முனைப்பான ஒரு நம்பிக்கையைத் தோற்றுவித்ததில் ஆச்சரியமில்லை.

இந்த எதிர்பார்ப்பு புதியதன்று. யூதர்களும், அவர்களது முன் மாதிரியைப் பின்பற்றி கிறிஸ்தவர்களும், தொடக்கத்தில் மெசியா தொடர்புப்படாத ப.ஏ. பகுதிகளுக்கு அடிக்கடி மெசியா தொடர்பான பொருள் கொடுத்ததுபோல, இதுவும் ப.ஏ.இல் வேரூன்றி ப.ஏ. இறைவாக்கிலிருந்து வளர்ச்சியடைந்தது.

ப.ஏ.இல் காணப்பட்டதுபோலவே, பிந்தைய யூத இலக்கியத்திலும், எழுத்தின்படி எடுத்துக்கொண்டால் ஒன்றுக்கொன்று முரண்பாடான பலவித தோற்றங்களில் மெசியா பற்றிய எதிர்பார்ப்பு எழுந்தது. இவற்றில் சில மெசியா எதிர்பார்ப்புகள், மற்றவைகளைவிட வெளிப்படையாக அரசியல், நாட்டுப்பற்று நோக்குடையவைகளாய் இருந்தன. இவ்விதமான வேறுபாடுகளும் முரண்பாடுகளும் நாம் எதிர்பார்க்கக்கூடியவைகளே. மெசியா உண்மையில் வருமுன்னர் அவர் எப்படி இருப்பார் என்று ஒருவரும் அறிய இயலாது. யாவரும் அறிந்த சாதாரண முறைகளில் ஒன்று என்னவெனில் ஒரு மெசியா அல்லர், இருவரைப் பற்றிய எதிர்பார்ப்பாகும். இவர்களில் ஒருவர் அரசர், மற்றவர் குருத்துவ மெசியா ஆவார். இது, ப.ஏ.இல் செக. 4:14; 6:9-14 ஆகிய இடங்களில் யோசுவா தலைமைக்குரு என்றும், செருபாபேல் தாவீதின் குலத்து இளவரசர் என்றும் இருவரும் ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவர்கள் என்றும் கூறப்படுவதிலிருந்து எழுந்ததாகும்.

கி.மு. 109-106இல் எழுதப்பட்ட பன்னிரு குலத் தலைவர்களின் உடன்படிக்கை (The Testament of the Twelve Patriarchs), என்னும் நூலில், இந்த முறையான மெசியா எதிர்பார்ப்பு கூறப்படுகிறது.

லேவியின் உடன்படிக்கை 7:1இன் பிந்தைய பகுதியில் லேவியிலும் யூதாவிலுமிருந்து கடவுளின் மீட்பு எழும்பும். ஏனெனில், ஆண்டவர் லேவியிலிருந்து தலைமை குருவைப் போலவும், யூதாவிலிருந்து அரசரைப் போலவும் எழும்புவார் என நாம் வாசிக்கிறோம்.

யூதாவின் உடன்படிக்கை 21:1-3இல், லேவியிடம் அன்புகூருங்கள்.... ஏனெனில், என்கசு (யூதா) ஆண்டவர் அரசை அளித்தார். அவருக்குக் குருத்துவத்தை அளித்து அரசை குருத்துவத்திற்குக் கீழ்ப்படுத்தினார். எனக்கு உலகிலுள்ள பொருட்களை அளித்தார். அவருக்கு விண்ணுலகிலுள்ளவைகளை அளித்தார் எனப் படிக்கிறோம்.

யூதாவின் உடன்படிக்கை 24இல், எண்ணிக்கை 24:17இல் வருகிற பிலேயாமின் இறைவாக்கு இந்த எதிர்பார்ப்பிற்கு ஏற்றவாறு விளக்கப்படுகிறது. விண்மீன் குருத்துவ மெசியா என்றும், செங்கோல் அரச மெசியா என்றும் பொருள் கூறப்படுகிறது. அப்படியே சவக்கடலுக்கு அருகில் கும்ரான் என்ற இடத்திலிருந்த ஆசிரமம்* தாவிதின் குல வம்சமான இஸ்ரயேலின் மெசியாவையும் தாவிதின் மெசியாவைவிட அதிகாரத்தில் உயர்ந்த குருத்துவ ஆரோனின் மேசியாவையும் எதிர்பார்த்தது.

இந்த இடத்தில், மூன்றாவது இன்னோசன்ட்டும் பிற பல மத்திய காலப் போப்பாண்டவர்களும் உலக அரசர்களின் மேல் தங்களுக்கு அதிகாரம் கோரியது இவண் நினைவிற்கு வரலாம்.

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தின் ஆக்கியோர் இந்த யூத எதிர்பார்ப்பையும், கிறிஸ்தவர்கள் அதற்களிக்க வேண்டிய பதிலையும் தன் மனத்தில் கொண்டிருக்கக் கூடும். இயேசு, யூத கருத்தின்படி ஆரோனின் மெசியாவுக்குத் தாழ்வாகக் கருதப்பட்ட தாவிதின் மெசியா மட்டுமல்லர்; அவர் ஆரோனின் குருத்துவத்தைவிட உயர்வான மெல்கிசெதேக்கின் முறைமையின்படியான குருத்துவ மெசியாவும் ஆவார் என இவர் விவாதிக்கின்றார். அவரில் அரச, குருத்துவ மெசியாபற்றிய இரட்டை எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட்டு உயர்வடைந்தது. ஆக்கியோர், அக்காலத்து யூத சிந்தனையில் இடையீட்டாளராய் ஒருவரைப்பற்றி நிலவிய கருத்தைக் குறிப்பாகப் பயன்படுத்தி இக்கருத்தைச் சிறப்பிக்கின்றார். யூதர்களுக்கு, மோசே கடவுளுக்கும் மனிதருக்கும் இடையில் இடையீட்டாளராய் இருந்தார். அன்னாரின் இறப்புக்குப் பின் இடையீட்டாளர் பதவி மரபு வழியுரிமையாக தலைமைக்குருவால் அனுபவிக்கப்பட்டது. ஆகையால், ஆரோனின் குருத்துவத்தைவிடப் பெரிய குருத்துவத்தின் தலைமைக்குருவாகிய இயேசு யூதருடைய வருங்கால எதிர்பார்ப்பின் ஒரு பகுதியாக எரே. 31:31இல் வாக்குப்

* இச் சமூகத்தினர் பெரும்பாலும் முழுக்கு முனிவர் யோவானுக்கும் இயேசுவுக்கும் நூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே இருந்து, எருசலேமின் விழுகைக் காலம்வரையிலும் இங்குள்ள கட்டடங்களில் வாழ்ந்தனர். பல நூற்றாண்டுகளாக சவக்கடல் ஓரத்தில் குகைகளில் மறைந்திருந்த இவர்களது நூல் நிலையத்திலுள்ள பல ஏடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இக்காலத்து இறையியல் கல்வியில் இது மிகவும் முக்கிய நிகழ்ச்சியாகும்.

பண்ணப்பட்ட புதியதும் பெரியதுமான உடன்படிக்கையின் இடையீட்டாளரானார். இந்தத் திருமுகத்தில் பு.ஏ.இல் மற்ற இடங்களில் இருப்பது போலத் தொடக்கக் கால கிறிஸ்தவத்திற்கும் சமகால யூத சமயத்திற்குமிடையிலுள்ள உரையாடலின் ஆழமான பலனைக் காண்கிறோம்.

4. மறைபொருள் இலக்கியம் (Apocalyptic literature)

யூத மெசியா எதிர்பார்ப்பு மறைமுகமான அமைப்புக்களில் அடிக்கடிக் காணப்படுகின்றது. இங்கும் பிந்தைய யூத சிந்தனையும் இலக்கியமும் ப.ஏ.வேர்களிலிருந்தே வளருகின்றன. ப.ஏ.இல் எசேக்கியேல், செப்பனியா, செக்காரியா ஆகிய நூல்களில் மறைபொருட்காட்சி இலக்கியத்தின் தொடக்கங்கள் இருப்பினும், அதில் தானியேலின் நூல் மட்டுமே முழுவதும் வளர்ச்சியடைந்த மறைபொருள் இலக்கியத்தின் ஒரே எடுத்துக் காட்டாகும். இந்நூல் கி.மு.165இல் எழுதப்பட்ட, ஒருவேளை ப.ஏ. நூல்களில் மிகவும் பிந்தைய நூலாயிருக்கலாம். இந்நூல் ப.ஏ.இலிருந்து மறைபொருள் இலக்கியங்களுக்குக் கடந்து செல்லும் இடைப்பட்ட காலத்திற்குச் செல்லும் கால மாற்றத்தைக் குறிக்கிறது. உண்மையில் நற்செய்தி நூல்களிலும் திருமுகங்களிலும் காணப்படும் பல பகுதிகள் (மார்.13; 1 கொரி. 15). எல்லாவற்றிற்கும் மேலாக திருக்காட்சி நூல் போன்றவை ஒரு தனிப்பட்ட விதமான கிறிஸ்தவ இலக்கியத்தின் மாதிரிகள் மட்டுமல்ல, இவை யூத இலக்கிய மரபின் நிறைவேறுதலுமாகும்.

ப.ஏ.இல் தானியேல் நூல் இறைவாக்கினரின் வரிசையில் எண்ணப்படுகிறது, ஆனால் தானியேலின் நூலிற்கும் மற்றும் சரியாகக் குறிக்கப்படும் இறைவாக்கு நூல்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன? வேறு வார்த்தைகளில் கேட்டால், இறை வாக்கிற்கும் மறைபொருள் இலக்கியத்திற்கும் வேறுபாடு என்ன?

இவை இரண்டையும் முழுமையாகப் பிரிக்க இயலாது, ஏனெனில், நாம் பார்த்ததுபோல, இறைவாக்கில் மறைபொருள் இலக்கியத்தின் கூறுகள் இருக்கலாம். அப்படியே மறைபொருள் இலக்கியமும் இறைவாக்கைத் தருகின்றது. ஆனால் குறிப்பிடத் தக்க வேற்றுமைகளும் இருக்கின்றன.

(அ) இறைவாக்கினர் தங்கள் பெயரில் பேசுகின்றனர். ஆனால் மறைபொருள் இலக்கிய ஆக்கியோர் இறந்தகால வீரர்களின் பெயர்களை எடுத்துக் கொள்கின்றனர்.

(ஆ) ஆகையால் இறைவாக்கினரின் செய்தி, அக் காலத்து நிகழ்ச்சிகள்பற்றி அவர்கள் காலத்து மக்களுக்கு நேரான செய்தியாய் இருக்கிறது, வருங்காலத்தைப் பற்றிய இறைவாக்கு முன்னறிவிப்புகள் நிகழ்காலத்தில் உலகில் கடவுளின் செயல் பற்றிய நுண்ணறிவிலிருந்தும், நிகழ்கால நிலைமைகளிலிருந்து எழும் நீதித்தீர்ப்பு அல்லது விடுதலையின் நம்பிக்கையிலிருந்தும் எழுகின்றன. நேர்மாறாக, மறைபொருள் இலக்கிய எழுத்தாளர் கடந்த கால வரலாற்றிலிருந்து தேர்ந்தெடுத்த நிகழ்ச்சிகளை இறைவாக்கு எனத் திரும்ப எழுதி, தாம் யாருடைய பெயரில் எழுதுகின்றாரோ அந்த வீரனின் நாவில் அதனை வைத்து விடுகின்றார். அவருடைய வாசகர்களுக்கு அறிமுகமானபடியே இந்த இறைவாக்குகள் கடந்தகால நிகழ்ச்சிகளில் நிறைவேறியதாகக் கருதப்படுவது இவற்றினை வருங்கால நிகழ்ச்சிகளுக்குரிய இறைவாக்கு முன்னறி விப்புகளாய் ஏற்றுக்கொள்ள நியாயமாகின்றது.

(இ) இறைவாக்கின் நுண்ணறிவு, நிகழ்கால நிகழ்ச்சி களிலும் அவற்றின் விளைவிலும் தெய்வீக நோக்கத்தைக் காண்கிறது. ஆனால், மறைபொருள் எழுத்தாளர்கள் பெரும்பாலும் நிகழ்காலத்தில் நம்பிக்கை இழந்து, தற்கால உலக அமைப்பை விழத்தள்ளும், முற்றிலும் அற்புதமான தெய்வீகமான தலையீட்டில் விடுதலையை எதிர்பார்க்கின்றனர்.

(ஈ) இறைவாக்கு செய்திகள் அடையாள மொழியில் மறைந்திருக்கலாம். ஆயினும் அவற்றின் அடையாள நடை (Symbolism), பெரும்பாலும் நேர்முகமானதும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதுமாகவே இருக்கும். மறைபொருள் இலக்கியத்தின் அடையாள நடை மிகவும் விரிவானதாகவும், மக்களையும் அரசுகளையும் எடுத்துக்காட்டப் பலவிதமான கால்நடைகளையும், பறவைகளையும் உடையதாகவும் இருக்கும். இவற்றில், வானதூதர் அல்லது மெசியாவின் தலைமைத்துவத்தில் கடவுளின் ஆற்றல்களுக்கும், பேலியார் (Beliar) அல்லது எதிர்க்கிறிஸ்துவின் தலைமைத்துவத்தில் தீமையின் சக்தி களுக்குமிடையில் நடைபெறும் அண்டசராசரப் போர் திரும்பத் திரும்ப வரும் பொருளாகும். சிறையிருப்புக்கு முந்தைய இறைவாக்கில் காணப்படாத இந்த சில கூறுகள் பாரசீக ஊற்றுகளிலிருந்து யூத சிந்தனைக்குள் வந்திருக்கக்கூடும். உயிர்த்தெழுதல், இறுதித்தீர்ப்பு இவற்றில் உள்ள நம்பிக்கையும் இதில் வெளிப்படும்.

இரு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்டக் காலத்து யூத சமயம் இறைவாக்கிலிருந்து மறைபொருள் இலக்கியத்திற்குத் திரும்பியதிலிருந்து சமயப்பற்றுடைய மக்கள் பலர், நிகழ்காலம் முற்றிலும் தீயசக்திகளின் ஆதிக்கத்திலிருக்கின்றது என நம்பிக்கையின்மை கொண்டு கட்டுக்கதை, தொடர் உருவகக் கதை என்னும் உலகத்திற்குள் தப்பத் தொடங்கினர் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. தொடக்கக் கிறிஸ்தவச் செய்தியானது, கிறிஸ்தவர்களுங்கூட பங்குகொண்டபடி, இவ்விதக் எதிர் பார்ப்பினால் தங்கள் எதிர்நோக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பேசப்பட்டபடியால், மறைபொருள் இலக்கிய முறையை எடுத்துக்கொள்வது இன்றியமையாததாயிற்று. ஆனால், கிறிஸ்தவ மறைபொருள் இலக்கியமானது, யூத மறைபொருள் இலக்கியத்தில் காணப்பட்ட நிகழ்கால நம்பிக்கை யின்மையிலிருந்து பெருமளவு தப்பினது. ஏனெனில், கடவுள், பாவம், இறப்பு, பசாசு ஆகியவற்றை, நிகழ்காலத்தில் கிறிஸ்து வெற்றிகரமாய்ச் செயல்பட்டதின் மூலம் மேற்கொண்டார் என்றும், உலகில் திருச்சபையின் வழியே தமது நோக்கத்தை நிறைவேற்றிக்கொண்டேயிருக்கிறார் என்றும் உறுதியாக நம்பப்பட்டது. இவ்வாறு இறைவாக்கின் ஆவி புதுப்பிக்கப்பட்டதால் மறைபொருள் இலக்கியம் மீட்கப்பட்டது. திருக்காட்சி நூல் சில முறைகளில் சமஅளவில் யூத கிறிஸ்தவ இலக்கியம்போல் தோன்றலாம். எனினும், ஆக்கியோர் ஏற்கெனவே இறந்துபோன பிறிதொருவரின் பெயரில் எழுதாமல் தம் சொந்தப் பெயரில் எழுதுவதுபோல் தோன்றுகிறது.

பெருமளவில் இயேசுவின் வாழ்க்கைக் காலத்தில் எழுதப்பட்ட யூத மறைபொருள் இலக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக ஏனோக்கின் ஒப்பனைகள் என்னும் நூலில் பின்வரும் பகுதியை நாம் எடுத்துகொள்ளலாம் (48:4-7).

நீதியர்கள் தாங்கள் விழாமல் நிற்பதற்கு மானிடமகன் ஒரு கோலாயிருப்பார்.

அவர் பிற மக்களுக்கு ஒளியாயிருப்பார்.

இதயத்தில் துன்பப்பட்டவர்களின் நம்பிக்கை அவர்.

உலகில் வாழும் எல்லாரும் அவரைத் தொழுது அவருக்கு முன் விழுவார்கள்.

ஆவிகளின் ஆண்டவரை அவர்கள் போற்றி, ஆசி கூறி, பாடல்களினால் கொண்டாடுவார்கள்.

இதற்காகவே, அவர் தேர்ந்துகொள்ளப்பட்டு, அவர்களுக்கு முன்பாக மறைத்து வைக்கப்படுகின்றார்.

உலகம் படைக்கப்படுமுன்னர் என்றென்றுமுள்ள காலத்துக்காக இப்படியாயிற்று. ஆண்டவரின் ஆவிகளின் ஞானம் அவரைத் தூயர்களுக்கும், நீதியர்களுக்கும் வெளிப்படுத்தியிருக்கிறது.

ஏனெனில், நீதியர்களின் நிலையை அவர் கவனித்தார்.

ஏனெனில், இந்த அநீதி நிறைந்த உலகத்தை அவர்கள் வெறுத்து, பழித்தனர்.

ஆவிகளின் ஆண்டவரின் பெயரிலே அதின் எல்லாச் செயல்களையும், வழிகளையும் அவர்கள் வெறுத்திருக்கின்றனர். ஏனெனில், அவருடைய பெயரில் அவர்கள் மீட்கப்படுகிறார்கள்.

அவருடைய நல்லெண்ணத்தின்படியே அது அவர்களது வாழ்க்கைக்குப் பொருத்தமாயிற்று.

தம்மை மானிடமகன் என்று குறிப்பிட்டபோது இயேசுநாதர் மனத்தில், விண்ணுலக மெசியா பற்றிய இந்த உயரிய காட்சி இருந்ததா அல்லது இந்தத் தனிப்பெயரை மானிடமகன் கருத்தின் பிந்தைய முதிர்ச்சியிலிருந்து எடுக்காமல், தானியேலின் நூலிலிருந்து எடுத்துக்கொண்டாரா என்பது அறிஞரிடையில் இன்னும் விவாதத்துக்குரிய ஒன்றாகவே இருக்கிறது. இயேசுநாதர், மானிடமகன் பற்றிய தம்முடைய கருத்தைப் பிந்தி வளர்ந்த ஏனோக்கின் நூலைவிட அதன் மூல ஊற்றாகிய தானியேலின் நூலிலிருந்து எடுத்துக் கொண்டார் என்றே பலர் சிந்திக்க விழைகின்றனர். எவ்விதமும், இப்பட்டப் பெயருக்கு முற்றிலும் முனைப்பான தமது சொந்த, புதிய விளக்கத்தை அவர் அறிவித்தார். ஏனோக்கின் மானிட மகன் பற்றிய பகுதிகளிலிருந்து இயேசுநாதர் தமது வாழ்க்கைக் குறிக்கோளைப் பெற்றுக்கொண்டார்; அவர் காலத்து மக்களால் அது எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதாயிருந்தது என்றும் அறியக் கிடக்கின்றது. பாடுபடும் மக்களின் சார்பாளரே மானிடமகன் என்ற கருத்தும் மக்களிடையே பரவலாயிருந்தது.

5. விவிலிய நூல்கள்

பு.ஏ.ஐ நாம் வாசிக்கும்போது புனித எழுத்தேடுகள் என்று குறிப்பிடப்படும் யூத இலக்கியப் பகுதிகளிலுள்ள எடுத்துக்காட்டுகள், சுட்டிக்காட்டல்கள் ஆகியவற்றைத் திரும்பவும் திரும்பவும் சந்திக்கின்றோம். சிலவேளைகளில், ஒரு பகுதியானது இயேசுவின் வாழ்க்கை, இறப்பு, உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் அல்லது முன்னோடியான திருமுழுக்கு யோவானின் சேவையில், நிறைவேறியதாக மேற்கோள் காட்டப்படுகிறது அல்லது அன்னார் போதனையின் ஒரு பகுதிக்கு ஆதாரமாக ஒரு வசனம் எடுத்துக்காட்டப்படுகிறது அல்லது கிறிஸ்தவ அனுபவங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் ப. ஏ.இல் உருவ மாதிரிகள் (types) காட்டப்படுகின்றன. எ-கா. நோவாவும் அவரது குடும்பமும் உலகப் பெருநீர்ப் பெருக்கிலிருந்து பாதுகாக்கப்படுதல் அல்லது இஸ்ரயேலர் செங்கடல் வழி கடந்து செல்லுதல் திருமுழுக்கிற்கு உருவ மாதிரிகள், மன்னாவும் கற்பாறையிலிருந்து புறப்பட்ட தண்ணீரும் திருவிருந்தின் உருவமாதிரிகள்; ஆகாரும் சாராவும் முறையே மனிதஇயல்பின் படியான இஸ்ரயேலுக்கும் ஆவியின்படியான இஸ்ரயேலுக்கும் உருவ மாதிரிகள்; மோசேயின் முகத்திற்கு முகமூடியிடுதலும், முகமூடி அகற்றுதலும் பழைய, புதிய ஏற்பாடுகளைக் குறிப்பிடும். விவிலிய நூல்களை இவ்விதம் பயன்படுத்தும் முறைக்கு எடுத்துக்காட்டுகள் பழைய, புதிய ஏற்பாடுகளின் இடைப்பட்ட காலத்து யூத நூல்களில் மல்கிக் கிடக்கின்றன. ஆகவே, தங்கள் காலத்தில் நிலவிய விளக்க மரபையே கிறிஸ்தவர்கள் பின்பற்றினர்.

இவ்விதம், விவிலிய நூல்களைப் பயன்படுத்தும் முறையானது, பிற கூறுகளைப்போல ப.ஏ.இலிருந்தே எழுந்தபோதிலும், ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இதில் புதுமை காணக்கிடக்கின்றது என்பதை நாம் மறக்கலாகாது. ப.ஏ.இன் மிகவும் பழைமையான நூல்கள், தொன்மையான மரபுகள், இறைவாக்குகளின் தொகுப்புகளாகும்; மேலும் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து தோன்றிய எழுத்தாளர்களால் தாராளமாகப் பதிப்பிக்கப்பட்டு, தாராளமாகக் கூடுதல் பகுதிகள் சேர்க்கப்பட்டவைகளுமாம். ப.ஏ. நூல்களில் மிகவும் பிந்தியவைகளான குறிப்பேடு நூல்கள், தானியேல் ஆகியவற்றில் வேறுபட்ட ஒரு போங்கின் தொடக்கங்களைக் காண்கிறோம். குறிப்பேடு நூல்களின் ஆக்கியோர், சாமுவேல், அரசர்களின் நூல்களை எடுத்து, எஸ்ராவின் காலத்தில் நிலைநாட்டப்பட்ட சீர்திருத்த யூத சமயத்திற்கு தெய்வீக உடன்பாடு உண்டென விளக்கிக்கூற அவற்றினைப் பயன்படுத்துகின்றார். இரு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்டக் காலத்து நூலாகிய யூபிலிகளின் நூல் அதே காலத்து இஸ்ரயேலர் வரலாற்று நிகழ்ச்சியுரைகளை திருச்சட்டத்திற்கு நேரான யூத குருபக்திக்குத் தெய்வீக உடன்பாடு உண்டென உறுதிப்படுத்தப் பயன்படுத்துகின்றனர். சாலமோனின் ஞானம் என்னும் நூலின் பொருளாகிய தெய்வீக ஞானத்தோடு இசைவுற்றால் மட்டுமே வாழ்க்கை சரிவர அமைகின்றது என்பதை முழுக்க முழுக்க ப.ஏ. எடுத்துக்காட்டுகளுடன் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

முந்தைய இறைவாக்கை எடுத்து மறுவிளக்கம் அளித்து ஆக்கியோரின் காலத்திற்கு ஏற்பப் பயன்படுத்தும் ஒரே நிகழ்ச்சி ப.ஏ.இல் தானியேல் 9ஆம் அதிகாரத்தில் மட்டுமே அமைந்திருக்கின்றது. இது, பாபிலோனிய சிறையிருப்பு எழுபது ஆண்டுகளிருக்கும் என்ற எரேமியாவின் இறைவாக்காகும். தானியேல் நூலின் ஆக்கியோர் எழுபது ஆண்டுகளை எழுபது வாரங்களின் ஆண்டுகள், அதாவது 490 ஆண்டுகள் என்றாக்கி, அவரது கணிப்பின்படி அவர் எழுதிக்கொண்டிருக்கும் ஆண்டிலே நிகழ்ந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளில் அந்த இறைவாக்கு நிறைவேறுவதாக எடுத்துக் காண்பிக்கின்றார். கும்ரான் சமயப்பிரிவினர் தோன்றிய காலத்தில், பழைய இறைவாக்குகளுக்கு இவ்விதம் மறு விளக்கம் தரும் முறை நன்முறையில் அமைந்துவிட்டது. பெரும்பாலும் கும்ரானில் எழுதப்பட்ட சவக்கடல் ஏடுகளில் ஆபகூக்கு நூலின் விளக்க உரையும் ஒன்றாகும். விளக்க உரையாளர் ஆபகூக்கின் இறைவாக்குகளை ஒவ்வொன்றாய் எடுத்து, அவற்றினை அண்மைக் காலத்திய நிகழ்ச்சி களுக்குச் சிறப்பாக, அச்சமயப் பிரிவினரின் வரலாற்று நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தி எழுதுகின்றார். இங்கே ப.ஏ.இவிட இறைவாக்கின் முன்னறிவிக்கும் கூறுபாடு அதிக

வன்மையாக அழுத்தப்படுவது குறிப்பிட்டத்தக்கதாகும். மேலும், பழைய இறைவாக்குகள் எல்லாம் நிறைவேறினதாகத் தோன்றாதபடியால் பிந்தைய ஒரு காலத்தில் நிறைவேறும்படி இவை கூறப்பட்டன எனக் கருதப்படுகின்றது. இஸ்ரயேலின் பழமையான ஏடுகள் தெய்வீக அருள் பெற்ற விவிலிய நூல்கள் என அவை இவ்வாறு புதிதாய் மதிக்கப்பட்டதிலிருந்தும், இவை நீண்டகால முன் அறிவிப்புத் தன்மையுள்ளவை என்ற அழுத்தத்திலிருந்தும், ஒரு விவாதத்தை நிலைநிறுத்த வாக்கியங்களைப் கோர்ப்பதும், மோசேயின் திருச்சட்டத்தைத் தாங்கள் வாழ்கின்ற காலத்து பல்வேறு நிலைமைகளுக்குப் பொருத்தமாக அமைக்க யூத மறைவல்லுநர் மேற்கொண்ட முடிவுல்லாத செயல்களும் எழுந்தன. இந்தப் பின்னணிய ஒளியில் மட்டுமே யூதரின் அறநெறிச் சட்ட திட்டத்திற்கிசைய எழுத்தின்படி நடப்பதை (legalism) வலியுறுத்துவதைக் கிறிஸ்தவர்கள் மறுத்ததையும், நற்செய்தியின் ஏதாவது ஒரு கூறுபாட்டை மெய்ப்பிக்க விவிலிய மேற்கோள்களைப் பயன்படுத்துவதையும் புரிந்துகொள்ள இயலும்.

6. மானிட வீழ்ச்சி

இரு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்து யூத இலக்கியத்தைப் படிப்பது, சில பு.ஏ. பொருட்கள், அழுத்தங்களின் துவக்கங்களை அறிவதில் எவ்வாறு ஒளி தருகின்றது என நாம் குறிப்பிட்டோம். அவற்றில் நம் கவனத்துக்குரியவற்றில், ஆதாம் ஏவா, மனிதரின் வீழ்ச்சி வரலாறுகள் முக்கியமானவையாகும்.

தொடக்கநூல் 8ஆம் அதிகாரத்தின் கதை தவிர, ப.ஏ. எல்லா இடத்திலும் மனிதர் பாவமுள்ளவர் என்பதை ஒப்புக்கொண்டபோதிலும், ஆதாமின் பாவத்தைக் குறித்து அதில் ஒன்றும் சொல்லப்படவில்லை. 1 கொரிந்தியர் 15இலும், உரோமர் 5இலும் இதே பகுதிக்கான பவுலின் விளக்கம் முற்றிலும் புதிதாகுமோ? இல்லையென்பது தெளிவு. அக்காலத்து யூத சமயத்திலிருந்து கருத்துக்களை அவர் எடுத்துக் கொண்டார் என்னும் உண்மையினால் பவுலின் தனித்திறமை எம்முறையிலும் குறைவுபடுவதில்லை. தனித் திறமை என்பது முற்றிலும் புதுமை அல்லது முற்றிலும் தொடர்பற்ற நிலைமை என்பதிலல்ல, ஏற்கெனவே எளிதில் கிடைக்கக்கூடிய மூலப்பொருளைப் புதிய முறையில் பயன்படுத்துவதில் அமைந்திருக்கிறது.

சாலமோனின் ஞானம் 1:13; 16இல் ஏனெனில் கடவுள் இறப்பை உண்டுபண்ணியதுமில்லை, வாழ்வோருடைய கேட்டின் பேரில் அவர் விருப்பம் கொள்வதுமில்லை. பொல்லாரோ தங்கள் செயல்களாலும் வார்த்தைகளாலும் தங்கள்மேல் (சாவை) வரவழைத்துக்கொண்டார்கள் என்றும், 2:23; 24இல் கடவுள் மனிதரை அழியாமைக்கென்று படைத்து, அவர்களைத் தமது உண்மைச் சாயலின்படியே உண்டாக்கினார், பசாசின் பொறாமையினாலேயே சாவு உலகத்தில் உண்டானது, அவன் பக்கத்தைச் சேர்ந்தவர்கள் அதைப் பெற்றனுபவிக்கிறார்கள் என்றும் வாசிக்கின்றோம். ஆனால், 10:1-4இல், ஆதாம் செய்த மீறுதலினின்று, ஞானத்தால் அவன் விடுவிக்கப்பட்டதாகவும், இறப்பு காமீனால் வந்ததாகவும் கூறப்படுகின்றது.

இங்கே சற்று சிறிய அளவில் இரு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியதும், கி.மு. முதல் நூற்றாண்டில் நன்றாய் உறுதிபெற்று தொடக்கத் திருச்சபையால் இயல்பாகவே எடுத்துக்கொள்ளப்பட்டதுமான பசாசானவன், கடவுளின் எதிரி என்ற கருத்தைக் கவனிக்கிறோம். யோபின் நூலில் சாத்தான் என்பது இறை நீதிமன்றத்தில் குற்றம் சாட்டும் வழக்குரைஞனாகவும் சோதனைகளையும், தண்டனைகளையும் நிறைவேற்றுகிறவனாகவும் அமைகிறான். விவிலியத்தின் பிந்தைய பகுதிகளில் அசுத்த ஆவிகள் ஆண்ட வராலேயே அனுப்பப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

இதே வாக்கியங்கள் தொடக்கநூலின் கதைகள், பாவம், சாவு ஆகியவற்றின் தோற்றுவாயை வெளிப்படுத்துகின்றன என்ற முறையில் ஏற்பட்ட அக்கறையின் வெளிப்பாடாகவும் அமைகின்றன. ஆனால் இப்பொருள் தொடக்கநூலின் கதையோடு அதிக விரிவாகவும், கட்டுக்கதை மிகுதிப்படுத்தியும் பவுலின் சமகாலத்தவரான ஆக்கியோர்களால் எழுதப்பட்ட இரண்டு யூத நூல்களில் விரிவுபடுத்தப்படுகிறது. இவை ஆதாம் ஏவாவின் வாழ்க்கை, மோசேயின் மறைப் பொருட்காட்சி நூல் என்பனவாகும். அவ்வாறே பிந்தைய சில கிறிஸ்தவக் கூறுகள் சேர்ந்தபோதிலும் பொருளளவில் பெரும்பாலும் யூத விளைவாகிய 4ஆவது எஸ்றா என்னும் முதல் நூற்றாண்டு நூலில் 7:116-118 வரையுள்ள பகுதியில், மண்ணுலகம் ஆதாமைத் தராதிருந்தால் நலம்; அல்லது அவனைத் தந்த பின்னர் நீர் அவனைப் பாவம் செய்யாமல் தடுத்திருந்தால் நலம், ஏனெனில் இவ்வாழ்க்கையில் நாம் துயரத்தோடு வாழ்ந்து இறப்பிற்குப் பின்னர் தண்டனையை எதிர்பார்ப்பதில் என்ன பயன் இருக்கிறது? ஆதாமே! நீ என்ன செய்துவிட்டாய்! ஏனெனில், நீ பாவம் செய்தபோதிலும் வீழ்ச்சி உன்னுடையது மட்டுமன்று. உன் பின்சந்ததியாராகிய எங்களுடையதுமாகிவிட்டதே! என்று படிக்கிறோம்.

எனவே, உரோமர் 5ஆம் அதிகாரத்தில் பவுல் ஒரு யூத இறையியல் வாதத்திற்குக் கிறிஸ்தவத் திருப்பம் கொடுத்தார் என நாம் யூகிக்கலாம்.

7. ஒளியும் இருளும்

கும்ரான் சமுதாயத்தினரின் ஒழுங்கு முறைக் கையேடு (Manual of Dicipline) பின்வரும் பகுதி இடம் பெற்றிருக்கிறது. ஒளியின் இருப்பிடமே உண்மையின் பிறப்பிடங்களாகின்றன. இருளின் ஊற்றில் தவறின் (error) பிறப்பிடங்களிருக்கின்றன. ஒளிகளின் இளவரசனின் கையில் நீதியின் மக்களின் மேலான எல்லா ஆளுகையும் இருக்கின்றது. ஒளியின் பாதைகளிலே அவர்கள் நடக்கிறார்கள். இருளின் வானதூதன் கையிலே தவறின பிள்ளைகளின் மேலான அனைத்து ஆளுகையும் இருக்கின்றது. இருளின் பாதைகளிலே அவர்கள் நடக்கிறார்கள்.

1947இலும் அதற்குப் பிந்தைய ஆண்டுகளிலும் சவக்கடல் சுருள்கள் கண்டுபிடிக்கப்பட்டது முதல், தொடக்கக்காலக் கிறிஸ்தவச் சிந்தனையும் செயல் வழக்கமும் எந்த அளவுக்குக் கும்ரானுக்குக் கடமைப்பட்டிருந்தன என அறிஞர்கள் விவாதம் செய்துகொண்டிருக்கின்றனர். திருமுழுக்குநர் யோவான் அல்லது இயேசுவுக்கு, கும்ரானோடு ஏதாவது தொடர்புகள் இருந்தனவா? சொத்தைப் பொதுவில் அனுபவிக்கும் முதற் கிறிஸ்தவ செயற்பழக்கம் கும்ரான் அல்லது அதுபோன்ற எபியோனியர் கூட்டத்தினரிடமிருந்து எடுக்கப்பட்டதா? கிறிஸ்தவத் திருமுழுக்கின் தோற்றம் கும்ரானின் திருமுழுக்குகள் பற்றிய பழக்கத்தில் காணக் கிடக்கின்றதா?

கும்ரானுக்கும் தொடக்கச்சபைக்குமிடையில் நிலவும் சில ஒருமைப்பாடுகளை அக்கரையோடு கவனிக்கும்போது,

இவற்றினைவிட அதி முக்கியமான வேறுபாடுகளையும் நாம் குறிப்பிடவேண்டும். கும்ரான் ஆசிரமமானது, உலகிலிருந்து பின்வாங்கி வாழ்ந்த ஒரு தனிப்பட்ட சமூகமாகும். இவர்கள் தங்கள் உறுப்பினரில் புரோகிதர்களாயிருந்தவர்களின் உரிமைகளுக்கு மிகவும் முக்கியத்துவம் அளித்தனர். பிற எபியோனியர் கூட்டங்களைப் போலவே, இதுவும் அதிகாரப்பூர்வமான யூத சமயத்தின் கறைப்பட்ட நிலைமைக்குக் கண்டனமாகத் தோன்றியபோதிலும், இதன் சமயப்பற்று (piety) கிறிஸ்தவத்தின் புதிய நோக்கோடு தொடர்புள்ளதாகவன்று. திட்டமாக யூத சமயத்தோடேயே தொடர்புள்ளதாக விளங்குகின்றது. முதல் திருச்சபைக்கும் கும்ரானுக்குமிடையிலுள்ள ஒருமைப்பாடுகள், கிறிஸ்தவம் கும்ரானின் மாதிரியைச் சார்ந்ததிலிருந்து எழுந்தன என்று கூறுவதைவிட, யூத சமயத்தினுள் நிலவிய மறுமலர்ச்சி இயக்கங்களின் பொதுவான தன்மைகளே இவைகள் எனலாம். தன் தோற்றத்தில் கிறிஸ்தவமும் இவ்வித இயக்கங்களில் ஒன்றாகும்.

எனினும், ஒளியும் இருளும் பற்றிய இப்பகுதியை (இது கும்ரான் நூல்களிலுள்ள பல பகுதிகளில் ஒன்றாகும்) யோவானின் நற்செய்தி நூலிலும், திருமுகங்களிலும் இதே பொருளுள்ள பகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். ஒன்று ஒழுங்குமுறைக் கைநூலை யோவான் வாசித்திருக்க வேண்டும் அல்லது இச் சமயப்பிரிவின் உறுப்பினரோடு யோவான் சிறிதளவு உரையாடியிருக்க வேண்டும் என்ற முடிவை எதிர்ப்பது கடினமாயிருக்கின்றது.

கும்ரான் சிந்தனைக்கும், கிறிஸ்தவச் சிந்தனைக்குமுள்ள பிறிதொரு உறவு மனிதர் செயல்களினாலல்ல, கடவுளின் அருளினாலேயே நீதியராக்கப்படுகிறார் என்னும் உண்மையைப் பற்றி இடையிடையே சில பகுதிகளில் வெளிப்படும் நுண்ணறிவாகும். கும்ரான் இலக்கியத்தில் இந்த நுண்ணறிவு துவக்க நிலையில் இருந்தபோதிலும், கலாத்தியரிலும், உரோமரிலும் பவுலின் சிந்தனையில் இது மையமாக அமைந்துள்ளது. ஆனால், அவர் இந்தப் பொருளை விளக்கிய சமகாலத்து யூத மக்களுக்கு இது தெளிவாய் இருந்தது. ஏனெனில், அவர் இதனைப் போதிக்கும் முன்னரே அவர்கள் இதைப் பற்றிச் சிறிதளவு அறிந்திருந்தனர்.

8. திருச்சட்ட ஈடுபாடு

பு.ஏ.இல் அறநெறிச் சட்ட எழுத்தின்படி நடப்பது என்ற யூத முறைமை வெளிப்படையாய்க் கண்டிக்கப்பட்டு பழிக்கப் படுகிறது. இயேசுவைச் சிலுவையில் அறைய பிலாத்துவை அறிவுறுத்தி இணங்க வைத்தவர்களும், கிறிஸ்தவர்களைத் தொழுகைமன்றங்களுக்குப் புறம்பாக்கினவர்களும், திருச்சட்டத்தை வலியுறுத்தியவர்களும் யூதர்களாவர். இந்த நிலையில் பு.ஏ. காலக் கிறிஸ்தவர்கள் பேரில் அன்னார் நேரில் அனுதாபமுள்ளவர்களாயிருக்க நாம் எதிர்பார்க்க இயலாது. அதே வேளையில் இக்காலத்தில் ஆதிக்கத்திலிருந்த யூதக்கட்சியாகிய பரிசேயர்களின் கடவுட்பற்றிலுள்ள நலன்களையும் குறைகளையும் கண்டுணர்ந்து, அவற்றிற்குக் கிறிஸ்தவ அறநெறி குறிக்கோளானது சிறிதளவு கடமைப்பட்டுள்ளது என்றும். அதே வேளையில் அதின் சட்டக் கடைப்பிடித்தன்மையைக் கண்டிக்கக் கடமைப்பட்டுள்ளது என்பதையும் ஒத்துக்கொள்ளவேண்டும்.

யூபிலிகளின் நூல் திருச்சட்டத்திற்குக் கீழ்ப்படிதல் என்ற தெய்வீக கோரிக்கையை விளக்கிக் காட்டுவதற்கு, ப.ஏ.இன் வரலாற்றுக் கதைகளை பயன்படுத்தியிருக்கிறது என்பதை நாம் குறிப்பிட்டோம். இந்நூலானது கி.மு. 63இல் உரோமைப் படைப் பெருந்தலைவனான பாம்பே எருசலேமைப் பிடித்ததற்குச் சற்றுப் பிந்தி ஒரு பரிசேயரால் எழுதப்பட்டது போல் தோன்றுகிறது. பரிசேயக் கருத்துக்கோணத்துக்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். அப்படியே பரிசேயர்களால் அதே காலத்தில் எழுதப்பட்ட சாலமோனின் திருப்பாடல்கள் என்ற நூலும் அமைந்திருக்கிறது. குறைகூறும் தன்மையுள்ள (cynical) புரோகித கட்சியான சதுசேயருக்கு எதிரான வெறுப்பான பகைமையையும், 119ஆம் பாடல் போன்ற ப.ஏ.த் திருப்பாடல்களை நினைவூட்டும் கடவுட்பற்றையும் பக்தியையும் அவைகள் தெளிவாகக் காட்டுகின்றன.

யூதக் கடவுட்பற்றில் நம்பிக்கையின்மைக்குக் குறைவில்லை. எனினும், அடிக்கடி, பரிசேயரும் மற்றுள்ளோரும் செயல்முறை அளவில் குறைவுபட்டு வந்தனர். இயேசுவின் சமகாலத்தவரான கில்லயேல் இரபிதான் முதன் முதலில் அடுத்தவர் உனக்கு எதைச் செய்ய வேண்டாமென்று விரும்புகிறாயோ அதை அவர்களுக்குச் செய்யாதே என்னும் பொன்மொழியைத் தந்தவராகும். மலைப் பொழிவில் எழுதப்பட்டிருக்கிறபடி, இதை இயேசுநாதர் உடன்பாட்டு முறையில் தந்தார். நீதிமானான சிமியோன் என்னும் பிறிதொரு சிறந்த இரபி உலகமானது மூன்று உண்மைகளால் நிலைகுலையாது தாங்கப்படுகிறது; அவையாவன, திருச்சட்டம், திருக்கோவில் தொழுகை, அன்புச் செயல்கள் என்பனவாம் என்கிறார்.

இதன் பொருள் என்னவெனில் மனித சமூகம் மூன்று தூண்களில் அல்லது அடிக்கற்களில் நிலைநிற்கின்றது. அவையாவன;

1. எழுதப்பட்டதும் எழுதப்படாததுமான திருச்சட்டத்தைப் படித்து அதன் மூலம் கிடைக்கும் இறை வெளிப்படுத்தலுக்குக் கீழ்ப்படிதல்.

2. மனிதரது கடவுள் பற்றினை வெளிப்படுத்தி மனிதரையும் கடவுளையும் பிரிக்கும் பாவத் தடை வேலியை மேற்கொள்ளும் பலிசெலுத்தி திருக்கோவிலில் தொழுதல்.

3. அன்பினால், அதாவது திருச்சட்டத்தில் கட்டளையிடப் பட்டவைகளை மட்டுமல்ல, இரக்கத்தினாலும் நற் குணத்தினாலும் செயலாற்றல்.

வேறு வார்த்தைகளில் கூறினால், உண்மை அல்லது நீதி, தொழுகை, அன்பு என்னும் தூண்கள் அனைத்துலகை நிலைத்திருக்கச் செய்கின்றன. இரபிகளின் சமயத்தில் இதுவே மிக உன்னதத் தனிச்சிறப்புப் பண்பாகும். கிறிஸ்தவத் திருச்சபைக்கு இவை யூத சமயம் கொடுத்த மரபுரிமைச் செல்வத்தின் ஒரு பகுதியை நாம் உரிமை கொள்ளலாம். இவ்வாறு நாம் யூத மரபுகளுக்கு எத்துணைக் கடன் பட்டிருக்கிறோம் என்று ஆய்ந்து தெளிவது பொதுவாக சமய உரையாடலையும், சிறப்பாக யூத-கிறிஸ்தவ உரையாடலையும் இன்று வளர்க்க உதவும் என்பதில் ஐயமில்லை.

துணை நின்ற நூல்கள்

1. Bevan, E., Jerusalem under the High Priests.
2. Charles, R.H., Religious Development - between the O.T. and the N.T.
3. Rowley, H.H., The Relevance of the Apocalyptic.
4. Burrows, M., The Dead Sea Scrolls.

22

புதிய ஏற்பாட்டின் பின்னணி

லா. ஈஸ்டர்ராஜ்

1. முன்னுரை

காலம் நிறைவேறியபோது கடவுள் தம்முடைய மகனை... அனுப்பினார் (கலா.4:5).

இறைமகன் இயேசு கிறிஸ்து மானிடமகனாக மனுவுருவில் வந்தபோது இவ்வுலகம் அவருடைய வருகைக்காக மிகவும் பக்குவப்பட்டிருந்தது. போர் நிலைமை ஒழிந்து, மத்திய தரைக் கடலின் ஒரு முனையிலிருந்து மறு முனைவரை என்றுமில்லாத அமைதி நிலவி வந்தது. பாலஸ்தீனத்தில் மட்டும் சிற்சில இடங்களில் ஒரு சிலர் நாட்டுப் பற்றினால் புரட்சி செய்தனர். பிற இடங்களில் மக்கள் போர்களினால் பட்டுக் கெட்டது போதுமென்றெண்ணி வாளாவிருந்தனர். இத்தகைய அமைதியான நிலைமைக்குக் காரணம் அக் காலத்தில் ஏற்பட்டிருந்த உரோமருடைய அரசுதான். இவ்வித அரசும், அரசின் கீழ் ஏற்பட்டிருந்த அமைதியும் ஆண்டவர் இயேசுவின் வருகையால் ஏற்பட்டப் புது இயக்கம் பரவுவதற்குப் பேருதவியாக இருந்ததென்று காட்டுவது இக்கட்டுரையின் நோக்கம். ஒரு யுகம் மறையவும் ஒரு புது யுகம் மலரவும், கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியின் வித்து வேருன்றி வளரவும் உலகம் எவ்வாறு பண்பட்டிருந்தது என்பதை ஆராய்வோம். புது சமயம் பரவுவதற்கு வரலாற்றில் மூவகை ஆயத்தங்கள் நடந்தன என்பர்: (1) உலகு முழுமைக்கும் ஒரே மொழி; (2) உலகமெங்கும் ஒரே மக்கள் சமுதாயம்; (3) உலகு முழுமையிலும் ஒரே அரசு.

2. கிரேக்கரும், கிரேக்க மொழியும்

கி.மு. நான்காம் நூற்றாண்டில் மகா அலெக்சாந்தர் தம் வெற்றியால் கிழக்கு நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையிலிருந்த வேறுபாட்டை ஒழித்து, கிரேக்க மொழியும் கிரேக்க கலாசாரமும் இந்தியா வரையில் செல்ல வழி வகுத்தார். அவருக்குப் பின் வந்த மன்னர்கள் சின்ன ஆசியா, சிரியா, எகிப்து முதலிய நாடுகளைத் தங்கள் ஆட்சிக்குள் கொண்டுவந்தமையால், நம்முடைய வரலாறு தொடங்கும் போது கிரேக்க மொழி எங்கும் பேசப்பட்டு, எவரும் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு பொதுமொழியாக ஆகி விட்டிருந்தது. சாதாரண மனிதரான பேதுருவும், யோவானும் கூட எழுதப் படிக்கத் தெரியாவிடினும் (திருத். 4:13) புரிந்துகொள்ளக் கூடிய மொழியாக அது பரவியிருந்தது. பெந்தெகொஸ்தேயன்று பேதுரு பல மொழிகளில் பேசத் தேவைப்படவில்லை; கிரேக்க மொழியொன்றே போதுமானதாயிருந்தது என்ற கூற்று சரியெனக் கொள்ளலாம். இத்துணைச் செல்வாக்குடனிருந்த கிரேக்க மொழி நற்செய்தியைப் பரப்ப முனைந்த தூதுவருக்குப் பேருதவியாயிருந்தது. தற்காலத்தில் செய்வதுபோல அவர்கள் மக்களுடைய மொழியைக் கற்பதில் நீண்ட காலத்தைச் செலவிட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. இன்றைய ஆங்கில மொழியைப் போல அன்றைய கிரேக்க மொழியிருந்தது. கிரேக்க மொழியில் எழுதப்பெற்ற நற்செய்தி நூல்களை எல்லாரும் வாங்கிப் படித்துப் பயனடைந்தார்கள்.

3. யூதரும் அவர்களுடைய சமயமும்

கிரேக்கர் தங்கள் கலைத் திறனையும், காவியங்களின் நுட்பத்தையுங்காண மக்களுடைய கண்களைத் திறந்து விட்டாரெனின், யூத மக்கள் தங்கள் மதிநுட்பத்தாலும் ஆவிக்குரிய பயிற்சியினாலும் உலக இரைச்சலினூடே இறைவனின் மெல்லிய குரலைக் கேட்டு, மெய்ப்பொருள் எதுவெனவும், மெய்ப் பரம்பொருள் எதுவெனவும் உலகிற்கு எடுத்துக்காட்டினர். யூதர் தாங்கள் சென்று தங்கியிருந்த இடங்களிலெல்லாம் தொழுகைமன்றங்களை அமைத்து, வழிபாடுகளை நடத்தி வந்திருந்தமையால், இயேசு கிறிஸ்துவின் தந்தையாம் மெய்க் கடவுளை ஓரளவு அறிந்த மக்களை மூலைமுடுக்கிலும் ஆற்றோரங்களிலும் (16:13) அமைக்கப்பெற்றிருந்த தொழுகை மன்றங்களில் சந்திக்கக் கூடியதாயிருந்தது. அந்த தொழுகை மன்றங்களில் ப.ஏ. வாசிக்கப்பட்டது. அதிலுள்ள இறை வாக்குகள் மெசியாவின் வருகைக்கு ஆயத்தம் செய்யும் வகையில் விளக்கப்பட்டு வந்தன. தூய பவுலும் பிறரும் யூதர் ஏற்கெனவே அறிந்திருந்தவற்றைச் சொல்லித் தொடர்ந்து இயேசுவைப் பற்றிக் கூறுவதற்கு இது உதவியாயிற்று. இதற்குள்ளாக, யூதர் தங்கள் சமயக் கருத்துக்களைப் பரப்புவதிலும், தங்கள் சமயத்தில் ஆள்களைச் சேர்ப்பதிலும் ஆர்வங்காட்டினார்கள் (23:15). தூய பவுல் கிறிஸ்துவுக்கு ஆள் சேர்ப்பதில் யூதரோடு போட்டியிட வேண்டியதாயிற்று. யூதருடைய ஒரே கடவுள் வணக்கத்தினாலும், உயர்தர அறநெறிச் சட்டங்களினாலும் கவரப்பட்டப் பிற இனத்தார் பூத சமய தொழுகைமன்றங்களுக்கு வந்து போய்க் கொண்டிருந்தார்கள். யூதருடைய சமய நூல் கிரேக்க மொழியில் திருப்பப்பட்டிருந்ததினால் பிற இனத்தாரும் அதனைப் படிக்கலாயினர். யூத சமயக் குரவரும், இறையரசு வல்லுநரான வேதபாரகரும் மறை நூலுக்கு விளக்கநூல்களை வரைந்து, மக்கள் அவற்றை எளிதில் புரிந்துகொள்ளுவதற்கு வழிகோலி வந்தனர். பரிசேயர் என்ற வகுப்பினர் மோசேயின் திருச்சட்டத்தை வலியுறுத்தினர். விண்ணுலகத் தந்தையின் விருப்பத்தை அறிந்து அதற்குக்

கீழமைவதையும் பெரிதும் வலியுறுத்தினர். இவ்வாறு பண்பட்ட. ஆனால் சமூக, அரசியல் நெருக்கடிகள் மிகுந்த ஒரு சமுதாயத்திலேதான் உலக மீட்பர் தோன்றினார்.

4. உரோமரும், அவர்களுடைய அரசும்

கிரேக்கருடைய கலைத்திறனையும், யூதருடைய சமயக் கருத்துக்களையும், உரோமருடைய ஆட்சியினால்தான் மக்கள் கிடைக்கப்பெற்றார்கள். இஸ்ரயேலரிடையே தோன்றிய எசாயா முதலிய இறைவாக்கினர் எவ்வாறு இயேசு பிரானின் வருகைக்கு ஆயத்தம் செய்தார்களோ, அவ்வாறே மாவீரர் அலெக்சாந்தரும், பேரரசர் ஜூலியஸ் சீசரும் அவர் வருகைக்கு ஆயத்தம் செய்தனர் எனலாம். கிறிஸ்தவ சமயத்தொண்டர் ஒரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குச் செல்லப் பயணச்சீட்டுத் தேவைப்படவில்லை. பவுலடியார் தம்முடைய உரோமைக் குடியுரிமையைப் பயன்படுத்தி உலகின் பல பகுதிகளுக்கும் பத்திரமாய்ச் செல்லக் கூடிய நிலைமை காணப்பட்டது. அரசியல் அதிகாரிகள் பலர் அவருக்கு ஆதரவளித்ததாகவும் அறிகிறோம் (19:31). இத்தகைய ஆதரவின்கீழ் இளந் திருச்சபை ஆணிவேர் விட்டு, அடுத்தடுத்து அலைபோல வந்த இடுக்கண் நாள்களில் அசையாமலிருக்க உறுதிப்படுத்தப்பட்டது.

5. பாலஸ்தீனாவின் நிலை

(அ) அரசியல் நிலை

இயேசு கிறிஸ்து பாலஸ்தீனாவில் பிறந்தபொழுது அந்நாடு உரிமையிழந்து அடிமை நாடாக இருந்தது. அதன் இயற்கை அமைப்பின் காரணத்தால் அது ஒரு தனி நாடாகவே நீண்ட காலம் திகழ்ந்துவந்தது. சாலமோனின் காலத்தில் ஏற்பட்ட பிளவு அந்நாட்டைச் சூழ்ந்திருந்த பல மன்னரை அந் நாட்டின் மீது படையெடுக்கத் தூண்டியது. எகிப்து, அசிரியா, பெர்சியா, செலூக்கியா ஆகிய நாடுகளின் மன்னர்கள் நாட்டை வரிசையாகச் சூறையிட்டனர். நாடு நலிவடைந்திருந்தது.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பாலஸ்தீனா நாட்டைப் பாபிலோனியர் கைப்பற்றினர். கி.மு. 586இல் எருசலேமைப் பிடித்து யூத மக்கள் பலரைப் பாபிலோனியாவுக்குச் சிறையாகக் கொண்டு சென்றனர். அவர்களுள் பெரும்பாலோர் கி.மு. 538இல் பாரசீக ஆட்சியின்கீழ் பாலஸ்தீனாவுக்குத் திரும்பி வந்து ஒருவகை சுயாட்சியை ஏற்படுத்தினர். கி.மு. 333இல் மகா அலெக்சாந்தர் அந்நாட்டைத் தம் குடையின்கீழ்க் கொண்டு வந்தார். இப்பேரரசரின் ஆட்சியில் நன்மையுண்டாகுமென நம்பியிருந்த யூதர் ஏமாற்றமடைந்தனர். அலெக்சாந்தரின் தீடீர் இறப்பே இதற்குக் காரணம். கி.மு. 323இல் அலெக்சாந்தர் இறந்தார். அவருக்குப்பின் அவருடைய தளபதிகளில் ஒருவரான தாலமி என்பவர் எகிப்தை ஆண்டார். இவர் பாலஸ்தீனா உட்பட பல நாடுகள் தம்முடைய ஆட்சிக்குட்பட்டதென உரிமை கொண்டாடினார். எகிப்தியர் ஆட்சியில் பாலஸ்தீனா ஏறத்தாழ நூறு ஆண்டுகள் இருந்தது. இவ்வாட்சியையும் எவரும் விரும்பவில்லை. சிரிய செலுக்கியரின் வலிமை வலுத்த காரணத்தால் பாலஸ்தீனா வெகு விரைவில் சிரியரின் ஆட்சிக் குட்பட்டது. பல்லாண்டுகள் அமைதி நிலவியது. ஆனால், எப்பிபானஸ் என்னும் நான்காம் அந்தியோகுவின் தவறான முயற்சியினால் யூதர் புரட்சி செய்யத் தலைப்பட்டனர். அந்தியோகு தம் ஆட்சிக்குட்பட்டவர்களைக் கிரேக்கக் கலாசாரத்துக்குள் கொண்டுவர முயன்றார். யூதர் இதை வன்மையாக எதிர்த்ததோடன்றி, அவர் எருசலேமைத் தீட்டுப்படுத்தியதினால் தீராச்சினமும் கொண்டனர். யூதர் பலர் எகிப்துக்கு ஓடிப் போனார்கள். அந்தியோகுவுக்கும் யூதருக்கும் நாளாவட்டத்தில் பகைமை முற்றிய காரணத்தால் யூதகுருக்களில் பலர் எகிப்துக்கு ஓடிப்போனார்கள். அந்தியோகுவுக்கும் யூதருக்கும் நாளாவட்டத்தில் பகைமை முற்றியதால் யூதகுரு மத்தத்தியாவின் தலைமையில் ஒரு பெருங் கலகம் உண்டாயிற்று. அக் கலகத்தை அவருடைய மக்களுள் ஒருவரான யூதா தொடர்ந்து நடத்தினார். இவர் மக்கபேயர் என அழைக்கப்பட்டதினால் இக்கலகம் மக்கபேயப் போர் என வரலாற்றில் இடம் பெற்றது. யூதாவுக்குப்பின் வந்த தலைவர்களின் தலைமைக் குறைவால் மக்கபேய ஆட்சியில் தளர்ச்சி ஏற்பட்டது; உள் நாட்டுக் குழப்பமும் உண்டானது. இதைக் கவனித்துக் கொண்டேயிருந்த உரோமர் எருசலேமைக் கைப்பற்றி, கிர்கானஸ் என்பவரைத் தலைமைக் குருவாக அமர்த்தினர். அக் காலத்திலிருந்து இயேசு கிறிஸ்து பிறக்கும் வரையில் யூத மக்கள் உரோமைப் பேராட்சிக்குட்பட்டு வந்தனர். பாலஸ்தீனா நாடு உரோமை மாகாணங்களில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. கி.மு. 47இல் உரோமைப் பேரரசர் யூதேயாவை ஆளும்படி ஏரோது என்பவரை நியமித்தார். இந்த ஏரோது தவறான செயல்களைச் செய்வதில் தலைசிறந்தவர். எனினும் இந்த ஏரோதுவின் காலத்தில் பாலஸ்தீனாவில் நற்காலம் நிலவியதென்பர் சிலர். இவர் காலத்தில்தான் இஸ்ரயேலை மீட்கப்போகிறவர் இந்த அவனியில் உதித்தார்.

(ஆ) சமய நிலை

கிரேக்க-உரோமை உலகில் எலியூசினியம், ஆர்பிக், மாபெரும் தாய், ஐசிசுத் தொழுகை, மித்ரா முதலிய மறைசமயங்கள் இருந்தன. இரகசியச் சடங்குகள், பல்லிறை வணக்கம், செழுமை நோக்கு, பரவச நிலை, மெய்ப்பொருள் தேட்டம் ஆகியவை இவற்றில் கலந்திருந்தன. பேரரசர் வணக்கமும் வழக்கிலிருந்தது.

பாபிலோனிய சிறையிருப்புக்காலம் யூத அடியாருக்குப் பலத்த சோதனைக் காலம். கடவுள் எங்கே? அவருடைய வல்லமை என்னவாயிற்று? கடவுள் நீதியுள்ளவராயின் அநீதி தலைவிரித்தாட விடுவாரா? இவ்வாறு பல கேள்விகள் எழுந்தன. தகுந்த விடை காணாத பலர் கடவுளை விட்டு விலகினர். ஆனால் சிறையிருப்பின் காலத்தில் இறைவாக்கினர் பலர் தோன்றித் தளர்ந்தவர்களை நிமிர்த்தி, மருள விழுந்தவர்களைத் திருப்பிக் கொண்டுவந்தனர்; கடவுள் நீதியுள்ளவர், கண்டிப்பாய்த் தமது நீதியை விளங்கச் செய்வார் என்று சொல்லி, கடவுளின் உடன்படிக்கை உறுதியானது என வலியுறுத்தினர். அத்தகையோரில் எசேக்கியேல் என்னும் யூத்குரு தலைசிறந்தவர். அவரைப்போலவே மக்களை ஊக்குவித்தவர் இரண்டாம் எசாயா எனப்படுபவர்.

எருசலேம் மதில் இழந்து இடிந்து கிடந்தது யாவேக்கு இழிவே. எருசலேமின் மதில்கள் மீண்டும் கட்டப்பட்டாலன்றி யாவேயை வழிபட இயலாது. யூதருடைய சிறப்பு ஆசாரங்களும் கடைப்பிடிக்கப்படவேண்டும். ஓய்வுநாள் ஆசரிப்பு, விருத்தசேதனம், உண்ணாநோன்பிருத்தல் முதலியவற்றின் மூலமே கடவுளின் கருணையைப் பெறலாம் என எசேக்கியேல் வலியுறுத்தினார். இவருடைய சேவையின் பயனாய் கோவில் வழிபாடும் ஆசார வழிகளும் அதிகமாக மக்கள் மனத்தில் பதியத் தொடங்கின.

சைரசு பதவியேற்றப்பின் யூதருக்கு விடுதலைப் பிரகடனம் செய்தார். பலர் பாலஸ்தீனத்துக்குத் திரும்பினர்; அங்கு சமயம் சீர்கெட்டிருந்ததைக் கண்டு கலங்கினர். அங்கிருந்த

மக்கள் யூதரல்லாதாரோடு கலப்புத் திருமணம் செய்து கொண்டதுமன்றி கடவுள் கொள்கையிலும் கானானியரின் கருத்துக்களைப் புகுத்தியிருந்தனர். எசுறா, நெகேமியா என்னும் தலைவர்கள் மக்களிடையே காணப்பட்ட சீர்கேட்டைத் திருத்த முயன்றனர். ஆகாய், செக்காரியா என்னும் இறை வாக்கினர்கள் மக்களை ஊக்குவித்து எருசலேம் கோவிலைக் கட்டிமுடித்தனர். இதனால், (1) எருசலேம் கோவில் மீண்டும் கடவுள் வழிபாட்டு மையமாயிற்று, குருத்துவத் திருப்பணி உறுதிப்படுத்தப்பட்டது. (2) இறைவாக்கினரின் ஊழியம் நாளாவட்டத்தில் மறைந்தது. (3) திருச்சட்ட விதிகளை விளக்கும் மறைவல்லுநருக்கு மதிப்பு வளர்ந்தது. சுருங்கச் சொல்லின், சிறை மீட்புக்குப்பின் யூதருடைய வரலாறு ஒரு சமய வரலாறாகவே மாறிவிட்டது. கோவிலை மையமாகக் கொண்டு எல்லாம் அமைக்கப்பெற்றன. கோவில் வழிபாடு எவ்வகையிலும் தடைபடாவண்ணமும், கோவில் தீட்டுப் படாவண்ணமும் இருக்கக் கண்ணுங்கருத்துமாயிருந்த காரணத்தால் அந்தியோகு எப்பிபானோஸ் என்னும் அரசனின் அட்டூழியத்தை எதிர்த்து யூதர் மக்கபேயப் போரைத் தொடங்கினர். கி.மு. 167 முதல் கி.மு. 40 வரையில் யூதர் வெற்றிமேல் வெற்றிபெற்று எல்லா வெற்றிகளும் யாவேயின் வெற்றியே எனக் கொண்டாடி வந்தனர். சமயமும் தழைத்தது.

ப.ஏ.க்கும் பு.ஏ.க்கும் இடையேயுள்ள காலத்தில் ஒன்றுக் கொன்று முரண்பட்ட பல கட்சிகள் தோன்றலாயின. யொசீபஸ் நான்கு கட்சிகளைக் குறிப்பிடுகின்றார். அவை, பரிசேயர், சதுசேயர், எசேனேயர், செலோத்தேயர் என்பவை.

பரிசேயர்: இந்த யூதக் கட்சியினர் பிறரிடமிருந்து தங்களை வேறுபடுத்திக்கொண்டு, தங்களை நீதியர் எனவும் உயர்குடி மக்கள் எனவும் எண்ணிக்கொண்டவர்கள். இவர்கள் மோசேயின் சமயநெறிக் கொள்கைகளைக் கைக்கொண்ட தினால் அந்நெறியினைப் பின்பற்றாதவர்களிடமிருந்து, தங்களைப் பிரித்துக்கொண்டவர் எனவும் சிலர் பொருள் கூறுவர். ஆனால், மறைநூலுக்கு விளக்கந் தந்ததே இவர்களின் சிறப்பு. ஆகையால் இவர்கள் எப்போதும் மறைநூல் அறிஞரோடு சேர்த்தே பேசப்பட்டனர். காரணம், மறைநூல் அறிஞர் திருச்சட்ட விரிவுரையாளர். பரிசேயரோ அவற்றை நடைமுறையில் கடைப்பிடிக்கக் கற்பித்தவர்கள். இவர்கள் கனோன் அங்கீகாரம் பெற்ற திருநூல்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டுமெனவும் விவாதித்திருக்கிறார்கள். பரிசேயர் சனநாயகக் கட்சியினர். இவர்கள் அப்போது ஏற்பட்டிருந்த குருத்துவ வகுப்பினரும் பழமையைப் பாதுகாத்து வந்தவர்களுமான சதுசேயரை எதிர்த்து, எல்லா நிலைகளிலும், சிறப்பாக, சமயச் சார்பானவைகளிலும், புதுமைக் கருத்துக்கள் புகுவதற்குக் காரணமாய் இருந்தனர். இவர்கள் மூலமாகவே யூத சமயத்தில் பாரசீக சமயக் கருத்துக்களான தூதுவர், ஆவிகள், இறந்தோரின் உயிர்த்தெழுதல் முதலியவை புகுந்தன என்று நம்பப்படுகிறது. அவர்கள் பக்திக் கூட்டத்தார் என அவர்களுடைய எதிரிகளாகிய சதுசேயர் பகடி செய்தார்கள். பரிசேயர் என்னும் வகுப்பார் கசிடிம் என்னும் வகுப்பாரிலிருந்து தோன்றியவர்கள் என்பது பலருடைய கருத்து. கசிடிம் என்ற சொல் தூயவர்கள், பக்தர் என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்த கசிடிம் வகுப்பார்தான் சமய நெறியைத் தடையின்றி கைக்கொள்வதற்கு உரிமை கிடைக்கவேண்டுமென்று மக்கபேயப் போரில் பெரிதும் துணைசெய்தவர்கள்.

சதுசேயர்: பரிசேயருக்கு எதிர்க் கட்சியினராகிய சதுசேயருடைய தொடக்கம் திட்டமாய்த் தெரியாது. சதுசேயர் பழமைப்பற்றாளர். இக்கட்சி, தலைமைக் குருவின் குடும்பத் தாரும், உயர்குடி ஆட்சித் தலைவர்களும் அடங்கிய ஒரு கட்சியாய் விளங்கிற்று. பரிசேயர் சமய எண்ணங்களில் முற்போக்காளர், அரசியலுக்குரியவைகளிலே பழமைப் பற்றாளர். சதுசேயர் சமய எண்ணங்களில் பழமைப்பற்றும், அரசியல் போங்குகளில் முற்போக்கும் உடையோராயிருந்தனர். அவர்களுடைய முழுநோக்கமும் கடவுள் ஆட்சி நிலை நாட்டப்படவேண்டும் என்பதே. அவர்கள் மறைநூலாகக் கருதப்பட்ட தோராவாகிய ஐந்திருநூலை மட்டுமே தொடக்கத்தில் மறைநூலாக ஒப்புக்கொண்டு, பரிசேயரின் விளக்கவுரைகளையும், சொல்வழக்கு மரபுகளையும் ஒப்புக்கொள்ள மறுத்தனர். பரிசேயர், இறந்தவர்கள் உயிர் பெற்றெழுவார்கள் என்று நம்பினார்கள். சதுசேயருக்கு அதில் நம்பிக்கையில்லை. மேலும், வானதூதுவரையும், ஆவிகளையும் அவர்கள் நம்பவில்லை (திருத். 23:8). இவர்களை யோசிபஸ் இரண்டாம் தத்துவம் என்று குறிப்பிடுகிறார்.

எசனேயர்: இவ்வகுப்பினரை யோசிபஸ் மூன்றாம் தத்துவம் என்கிறார். இவர்கள் பு.ஏ.இல் எங்கும் கூறப்பட வில்லையெனினும் எசனேயர் நம்முடைய ஆண்டவர் பிறக்கு முன்பே பாலஸ்தீனாவில் இருந்திருக்கின்றனர். இவர்கள் சவக்கடலுக்கருகிலுள்ள பினிஞி என்னுமிடத்தில் மிகுதியாய்க் காணப்பட்டிருக்கிறார்கள். விரக்த விரதம்பூண்டு, மிகவும் கண்டிப்பான வாழ்க்கை நடத்திய துறவிகள் கூட்டத்தினராகிய இவர்கள் பரிசேய வகுப்பாரில் மிக முனைப்பானவர்களின் ஒரு கட்சியெனப் பெரும்பாலோர் நினைக்கின்றார்கள். பரி சேயர், சமய நெறியைக் கடைப்பிடிக்காதவர்களிடமிருந்து தங்களைப் பிரித்துக்கொண்டவர்கள் என்போமானால், எசனேயரோ சமயநெறியைச் சரிவரக் கைக்கொள்ளுவதற்காக மக்கள் சமூகத்தை விட்டுப் பிரிந்து துறவிகளாக வாழ்ந்தவர்கள் எனலாம். பொதுவுடைமைக் கட்சியினரைப்போல தங்கள் சொத்துக்களைப் பகிர்ந்துகொள்ளுவதும், பொதுவாக உணவு உண்பதும் இவர்களின் சிறப்பு. எசனேயருடைய கட்சியில் ஒருவரைச் சேர்த்துக்கொள்ளுவதற்கு விரிவானதொரு சடங்கு முறை கைக்கொள்ளப்பட்டது.

செலோத்தேயர்: - யூதசமயத்தின் நான்காம் தத்துவம் என வருணிக்கப்படும் செலோத்தேயர் ஓர் அரசியல் கட்சியினர். இவர்கள் சாதாரணக் குடியானவர்கள் எனினும் நாட்டுப் பற்றுடையவர்கள். செலோத்தேயர் கடுமுனைப்பானவர்கள். இயேசு நாதருடைய சீடருள் ஒருவர் இக்கட்சியைச் சேர்ந்தவர். யோசிபஸ் இக் கட்சியினரைக் கொள்ளைக்காரர் என்றே குறிப்பிடுகிறார். எல்லா காரியத்திலும் இவர்கள் பரிசேயருக்கு ஒத்திருந்தாலும், அரசியல் விடுதலை என்பதே இவர்களுடைய ஒரே கவலை, கடவுள் ஒருவரே தங்கள் தலைவர் எனக் கொண்டிருந்தார்கள்.

இத்தகைய தீவிர முற்போக்குவாதிகள் தவிர நாசரேத்தூர் யோசேப்பு, எருசலேம் நகர் சிமியோன் போன்ற பலர் இஸ்ரயேலின் மீட்புக்காக ஆவலோடு காத்திருந்து, அமைதி யுடன் மன்றாடி வந்தார்கள். ஆண்டவர் அருளும் மீட்புக்காக அமைதலாகவும் நம்பிக்கையுடனும் காத்திருப்பதே நன்று என்பதே அவர்கள் குறிக்கோள். இத்தகைய அமைதியாளரிட மிருந்தே தள்ளுபடி நூல்களில் ஒன்றாகிய ஏனோக்கின் நூல் வந்திருக்கவேண்டும் என ஆராய்ச்சியாளர் எண்ணுகின்றனர்.

சவக்கடல் சுருள்களில் காணப்படுகிற கும்ரான் குழுவினர் மேற்கூறப்பட்ட எசனேயரோடு நெருங்கியத் தொடர்பு கொண்டிருந்ததாகக் கொள்ளப்படுகிறது. இவர்களும் பரிசேய, சதுசேயப் போதனைகளை எதிர்த்துப் பலிகளுக்குப் பதிலாய்ப்

பொது உணவையும், முழுக்குச் சடங்கையும் வலியுறுத்தினர். இக்காலத்தியத் திருமுழுக்கு இயக்கத்தினர்போல இவர்கள் காணப்பட்டனர். இக்குழுவினர் பல கட்சிகளாகப் பிரிந்து சமாரியாவின் வடக்குப் பகுதியிலும், யூதேயாவின் பாலை நிலங்களிலும் தங்கியிருந்ததாக அறிகிறோம்.

நிற்க, ப.ஏ.க்கும் பு.ஏ.க்கும் இடைமிலுள்ள காலத்தில் ஆசிரியர் பெயர் தெரியாத பல நூல்களும் அவற்றில் விளக்குதற்காகிய உருவகங்களும் எதிர்காலத்தைப்பற்றிய விவரங்களும் தோன்றி விரைவில் வளர்ந்தன. அவற்றில் ஒன்று எதிர்காலத்தில் வரப்போகும் மெசியாவைப் பற்றியது. அவரை உன்னதராகவும், விண்ணுலக மனிதராகவும் விவரிக்கலாயினர். அவர் தாவிதின் அரசை மீண்டும் ஏற்படுத்துவார் (2 சாமு.7; திருப்.2; எசா. 6:11); அவர் தாவிதின் வழி வரும் தாவீதின் மகன் என்றும் எண்ணினர். ஆனால், அவருடைய ஆட்சி ஆவிக்குரியது, தூய்மையும் நீதியும் நிறைந்ததாயிருக்குமெனக் கொண்டார்கள். இதைப் பற்றி இன்னும் அதிக விவரங்கள் கும்ரான் சுருள்களில் சாலமோனின் திருப்பாடல்கள் என்னும் நூலில் காணப்படுகின்றன. இக்கருத்து யூதரிடையே அதிகமாய்ப் பரவியிருந்ததினால் கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தி எளிதில் புரிந்துகொள்ளப்படக் கூடியதாயிருந்தது. வரப்போகும் மெசியா மோசேயைப் போன்றதோர் இறைவாக்கினர், ஒரு மீட்பர் என்னும் கருத்து அக்கால மக்களிடையே மிகுதியாகக் காணப்பட்டது

மெசியாவைப் பற்றிய மற்றுமொரு கருத்தும் வளரத் தொடங்கியது. அது தானி. 7:13இல் கூறப்பட்ட மாட்சியுள்ள மானிடமகன் என்பதாகும். இவர் மேகங்களின் மேல் வந்து என்றுமுள்ள அரசைப் பெற்றுக்கொள்ளுவார். ஏனோக்கின் முதல் நூலில் கூறப்பட்டுள்ளபடி மானிடமகன் யுக இறுதியில் தோன்றி கடவுளின் சார்பாளராக, பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாளராக மனுமக்களை நியாயந்தீர்ப்பார். ஏனோக்கின் நூலில் மெசியாவையும் மானிடமகனையும் சமப்படுத்திக் கூறுவது கிறிஸ்தவ சமயம் வரும் முன்னரே வழக்கில் இருந்தது. இந்தக் காலத்தில்தான் இறுதிக் காலத்தில் நடக்கும் நீதித்தீர்ப்பைப் பற்றிய கருத்து விரிவடைந்தது. இக் கருத்தையே கிறிஸ்தவ அடியார் எடுத்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோடு தொடர்புப்படுத்தி விவரித்தார்கள். மற்றும், **அப்போகலிப்டிக் நூல்கள்** என்னும் மறைபொருள் விளக்க நூல்களில் கடவுள் அரசு, மோட்சம், நரகம் முதலிய வற்றைப் பற்றிய கருத்துக்கள் மலிந்து காணப்படுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவை கிறிஸ்தவச் சமயக் கருத்துக் களாக்கப்பட்டிருக்கின்றன.

(இ) சமூக நிலை

சமூகப் பொருளாதார நிலையில் கிரேக்க, உரோமை உலகத்தால் பாலஸ்தீனாவும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. நகர்களில் வாழ்ந்த உயர்குடி மக்கள், நடுத்தர மக்கள், தன்னுரிமை கொண்ட கூலியாட்கள், அடிமைகள் ஆகிய நான்கு பிரிவினர் அன்றிருந்த ஏற்றத்தாழ்வுகளுக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்கினர். கீழ்நிலையில் வாழ்ந்தோரின் உரிமைகளைப் பாதுகாக்கச் சட்டங்கள் பல இருந்தும் அவை முறையாகச் செயல்படுத்தப்படவில்லை. பாலஸ்தீனாவிலும் இந்த நிலையின் தாக்கத்தைக் காண முடிந்தது. அங்கு வாழ்ந்த ஆயக்காரர், பாவிகள், ஏரோதியர் என்னும் வகுப்பினரைப் பற்றியும் அங்குள்ள குடும்பநிலை பற்றியும் முக்கிய உண்மைகளை இவண் குறிப்பிடுவோம். இவை சா.தா. செபஞானம் எழுதிய புதிய ஏற்பாட்டுப் பின்னணி வரலாறு (தமிழ் இறையியல் நூலோர் குழு, 1984) பக். 113-122இலிருந்து அப்படியே எடுத்து இவண் தரப்படுகின்றன.

வரி வாங்குவோர் (ஆயக்காரர்). ஒரு நாட்டார், அயல்நாடுகளைக் கைப்பற்றி ஆண்டபொழுது, அந்நாட்டு மக்கள் மேல் பலவகையான வரிகளைச் சுமத்திப், பணத்தைத் திரட்டுவது வழக்கம். பொதுவாக, உரோமை நாட்டார் தங்கள் ஆட்சிக்குட்பட்ட அயல்நாட்டு மக்கள்மேல் மிகவும் கடுமையான வரி சுமத்தி, அவர்களை வருத்துவதில்லை. யூதர் உரோமை அரசினருக்கு இரண்டு வகையான வரி செலுத்தினார்கள். ஒன்று ஆள் வரி. இது திட்டமாகக் குறிக்கப்பட்ட ஒரு தொகை. செல்வந்தருக்கு மிகுதி என்றும் ஏழைகளுக்குக் குறைவு என்றும் இல்லை. எல்லாரும் ஒரே தொகையைக் கட்டினார்கள். இந்த வரியை அடிமை நாட்டு மக்கள்தான் கொடுத்தார்கள். இந்த வரிபோடுவதற்காகவே உரோமர் குடித்தொகை (Census) எடுத்தார்கள். குடித்தொகை எடுக்கும் செயல், அந்நாட்டு மக்களின் அடிமை நிலையை வெளிப்படையாகக் காட்டிற்று. ஆதலால் குடிக்கணக்கு எடுத்தபொழுதெல்லாம் யூதத் தீவிரக் கட்சிக்காரர் கலகஞ் செய்தார்கள். அடுத்த வரி சுங்க வரி (ஆயம்). நாட்டுப்புறத் திலிருந்து நகரங்களுக்கு, கொடிமுந்திரிப் பழங்கள், ஒலிவக்கொட்டைகள் முதலிய பொருட்களை விற்கும்படிக் கொண்டு போகும் சாலையின் ஒரு குறித்த இடத்தில், சுங்க வரி வாங்குவோர் அமர்ந்திருப்பார்கள் (மத். 9:9). விற்கும்படி பொருட்களைக் கொண்டு வருவோரிடம், அவர்கள் அப் பொருட்களின் ஒரு பகுதியை வாங்கிக் கொள்வார்கள். இப்படி வாங்குகிறவர்கள்தான் சுங்க வரிக்காரர் அல்லது ஆயக்காரர். அவர்களை மற்ற யூதர்கள் ஏன் மிகவும் இழிவாக எண்ணினார்கள்? அதற்கு இரண்டு காரணங்கள் உள. முதலாவது, அவர்கள் ஏழை மக்களை வருத்திய கொடியோர் என்று கருதப்பட்டார்கள். இக்காலம்போல் அக்காலத்தில் பொருளின் மதிப்பிற்கேற்றபடி, அல்லது நிறைக்கேற்றபடி வரித்தொகை குறிக்கப்படவில்லை. உரோமை அரசியலார், நாட்டில் வரி திரட்டும் உரிமையை ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட்டார்கள். அவ்வகையாய் குத்தகைக்கு எடுத்தவன் அந்த உரிமையைத் தனக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும் முறையில், வேறு சிலருக்கு விற்பான். அவர்களிடமிருந்து இத்தொழிலைச் செய்கிற பலர். இந்த உரிமையை விலைக்கு வாங்குவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு ஆதாயம் எடுக்க முடியுமோ அவ்வளவு எடுக்க முயல்வார்கள். அது அவர்கள் திறமையைப் பொறுத்ததுதான். ஒலிவக் கொட்டையை அல்லது கருவாட்டை விற்கச்செல்லும் ஒரு கிழவியிடம் ஒரு பகுதியைக் கேட்பான் வரிக்காரன். அவள் பேரம் செய்ய முயல்வாள், அவன் மிகவுஞ் சீறி, பொருளை யெல்லாம் தரையில் வீசி எறிவான், கடைசியில் அவன் கேட்ட அளவு கொடுத்துத்தான் தீர வேண்டும். ஒரு தடவை ஒரு கழுதையைக் கொண்டு சென்ற ஒருவனிடம், சுங்கம் வாங்குவோன் ஒரு தொகையைச் சுங்கமாகக் கேட்டானாம். அவனிடம் அந்தத் தொகை இல்லை. ஆதலால் அவன் வைத்திருந்த நல்ல கழுதையை எடுத்துக்கொண்டு ஒரு கிழட்டுக் கழுதையைக் கொடுத்து அனுப்பிவிட்டானாம்! இந்நிலையில் பொதுமக்கள் அவர்களை வழிப்பறிக்காரர் என்று எண்ணியது வியப்பன்று (லூக். 18:11). ஆன்ால், அவர்களை முழுவதுமாய் வெறுத்ததற்கு வேறு காரணமும் உண்டு. நாம் முன் பார்த்த படி யூதரில் பெரும்பாலோர் உரோமை ஆட்சியை மிகுதியாக வெறுத்தார்கள், உரோமரைக் கண்டதும் அவர்கள் வயிறு எரிந்தது. அப்படியிருக்க அந்த உரோமருக்குக் கையாட்களாயிருந்து, தங்களது நாட்டு மக்களை வருத்தி, அயல் நாட்டாருக்கு வரி திரட்டிக் கொடுத்தவர்களைக் கண்டவுடன்

அவர்கள் உள்ளம் எவ்வளவாகக் கொதித்திருக்கும் என்று நாம் நன்கு உய்த்தறியலாம். அவர்களை நாட்டுப் பகைவர் என்றே கருதினார்கள். நம் திருமறையில் இவ்வகுப்பார் ஆயக்காரர் என்று குறிப்பிடப்படுகிறார்கள். ஆயந் தண்டுவோர் அல்லது வரி வாங்குவோர் என்று சொல்வது நலம்.

பாவிகள்: யூத சமூகத்திலும் கூலிக்கு வேலைசெய்து பிழைத்த ஒரு வகுப்பார் இருந்தார்கள். இவர்கள் பெரும்பாலும் நாட்டுப்புறத்தார்; உழவுத்தொழில், மீன் பிடித்தல் முதலிய வேலைகளைச் செய்தார்கள். செபெதேயு இவ்வகையான கூலியாட்களை வைத்துத் தம் தொழிலை நடத்தினார் (மார். 1:20). யூதரில் ஒரு வகுப்பார் அம்மீ -கா -ஆரெட்சு (Amme-ha-aretz) என்று அழைக்கப்பட்டார்கள். இச்சொல்லுக்குப் பாமர மக்கள் என்று பொருள் கொடுக்கலாம். மேற்கூறிய கூலி யாட்களும், நாட்டுப்புறத்தாரும் பெரும்பாலும் இவ் வகுப்பைச் சேர்ந்தவர்களையும் இச்சொல்லால் குறிப்பிடலாம். இதன் பொருளைச் சரிவர அறிய வேண்டுமாயின், இதற்கு நேர் எதிரான சொல்லாகிய **கபரீம்** (Haberim) என்ற சொல்லின் பொருளை அறிதல் நலம். கபரீம் என்ற சொல்லின் அடிப்படையான பொருள் குழுவினர் அல்லது கூட்டத்தார் (Associates) என்பதாம். அதிலிருந்து பக்திக் கூட்டத்தார் அல்லது சமயநெறியாளர் என்ற பொருள் உண்டாயிற்று. யூத மக்களில் பெரும்பாலோர் பரிசேயக் கட்சியைச் சேர்ந்தவர்களே. எருசலேம் அழிந்தபின் சதுசேயக் கட்சியார் தங்கள் செல்வாக்கை முழுவதுமாய் இழந்து போனார்கள். அதன்பின் அக்கட்சி அழிந்து போயிற்று. எசேனியர் கட்சியார் பரிசேயரைக் காட்டிலும் கண்டிப்பாகச் சமயநெறியைக் கடைப்பிடித்து ஒழுகினவர்கள். அவர்கள் பரிசேயர் கட்சியின் ஒரு பகுதியினர் என்றுதான் கூறவேண்டும். ஆதலால் யூத மக்களில் பெரும் பாலோர் பரிசேயக் கட்சியைச் சேர்ந்தவர்களே. ஆனால் அவர்களில் ஒரு வகுப்பார், பல காரணங்களினால், சமயச் சடங்குகள் யாவையும் கைக்கொண்டு வாழமுடியாதவர்களாய், அல்லது மனமற்றவர்களாயிருந்தார்கள். மோசேயின் சமய நெறிப்படி ஒழுகுவதென்றால், அது எளிதன்று. மோசேயின் ஐந்து நூல்களில் சொல்லப்பட்டவைகளைக் கைக்கொண்டால் மட்டும் போதாது. அவைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த மரபுச் சட்டங்களையும், சடங்குகளையும் கைக்கொள்ள வேண்டும். ஓய்வுநாளைக் கைக்கொள்வதைப் பற்றி 600க்கு மேற்பட்டச் சட்டங்களைத் திருமறை வல்லுநர் ஏற்படுத்தி யிருந்தார்கள். பொதுமக்கள் அவைகளைக் கைக்கொள்ள வேண்டுமாயின், அவைகளை முதலாவது கற்க வேண்டும். அதற்கு வேண்டிய கல்வியும் அவர்களுக்குக் கிடையாது. காலமும் நேரமும் கிடையாது. அவைகளைக் கற்றாலும். அவைகளை முழுவதுமாய்க் கைக்கொள்ள முடியாது. கைகளையும், கால்களையும் கலன்களையும் ஏற்ற முறையில் ஏற்றக் காலத்தில் கழுவ மீன் பிடிக்கும் தொழிலாளியால் எப்படி முடியும்? இப்படிப்பட்ட மக்களிலிருந்து தங்களைத் தனிப்படுத்திக் கொண்டவர்கள் தான் கபரீம் என்பவர்கள். அவர்கள் சமயநெறி முழுவதையும் கைக்கொண்டு வாழ்ந்தவர்கள், சமயநெறியாளர்கள். அப்படி வாழாத மக்களை அவர்கள் **அம்மீ கா ஆரெட்சு** என்று அழைத்தார்கள், அவர்களைக் கல்லாதவர்கள் என்று குறிப்பிட்டார்கள். அக்காலத்தில் ஒரு யூதன் கற்றது அவனுடைய மறைநூலையே. யோ. 7:49இல் மறைநூலை அறியாதவர்களாகிய இவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று கூறியுள்ளது இந்த அம்மீ-கா -ஆரெட்சு என்ற மக்களையே குறிக்கும். ஆதலால் யூதருக்குள் புகழ்பெற்ற கில்லேல் (Hillel) என்ற யூதக் குரு (ரபி) கல்லாதவன் பக்திமானல்லன் என்று கூறியுள்ளார். நற்செய்தி நூல்கள் முழுவதிலும் இச்சொல் வழக்கில் இல்லை. ஆனால் அங்கு பாவிகள் என்று குறிக்கப்பட்ட வகுப்பார் அம்மீ -கா-ஆரெட்சு என்ற மக்களாகவே இருந்திருக்க வேண்டும். இயேசு இப்படிப்பட்ட மக்களிடம் அன்போடு பழகினார். அவருடைய சீடர்கள் இம்மக்களைப் போலவே கைகழுவுவது போன்ற சடங்குகளைச் செய்யாதிருந்தார்கள். பிற்காலம் எழுந்த இவ்வகையான மரபுச் சடங்குகளும் சட்டங்களும் முக்கியமானவையல்ல என்று இயேசு கற்பித்தார். ஆனால் கபரீம் வகுப்பாரோ அந்தச் சடங்குகளையும், சட்டங்களையும் கைக்கொண்டு வாழாதவர்களைப் பாவிகள் என்றார்கள். ஒரு யூதக்குரு, ஒரு கபரீம் தம் மகளை அம்மீ-கா-ஆரெட்சு வகுப்பைச் சேர்ந்த ஒருவனுக்கு மணஞ்செய்து கொடுப்பதைக் காட்டிலும், அவளைக் கிணற்றில் தூக்கி எறிந்துவிடுவது நலம் என்று கூறியுள்ளார். இந்நிலையில் பாவிகள் என்று கருதப்பட்ட அந்த மக்களோடு நெருங்கி அன்பாகப் பழகிய இயேசுவை அக்காலச் சமயத் தலைவர்கள் பகைத்து, அவர் மெசியாவாக மக்களை மீட்பதற்கு கடவுளின் அதிகாரத்தைப் பெற்றவராக இருக்கமுடியாது என்று முடிவு கட்டியது வியப்பன்று.

ஏரோதியர்: இவர்கள் ஓர் அரசியல் கட்சியரே. பெரிய ஏரோதுவின் மைந்தர் ஆண்ட யூதேயா, கலிலேயா, பெரியா முதலிய நாடுகளை உரோமை மாகாணத் தலைவர் ஆண்டனர். அந்நிலையில், சில மக்கள் உரோமர் தங்களை நேர்முகமாக ஆளுவதைக் காட்டிலும், ஏரோதுவின் குடும்பத்தைச் சார்ந்த அகிரிப்பா போன்றவர் யாராவது தங்களை ஆண்டால் நலமாயிருக்கும் என்று எண்ணினார்கள். ஏரோது குடும்பத்தாரின் ஆட்சியை மறுபடியும் நிலைநாட்ட நேர்முகமாக முயன்றால் பயனில்லை என்று அறிந்து மறைமுகமாகச் சூழ்ச்சி செய்து அதற்கேற்ற வாய்ப்புக்காக அவர்கள் காத்திருந்தார்கள். அவர்கள்தான் ஏரோதியர்.

குடும்ப நிலை: கிரேக்க நாட்டில், பழங்காலத்தில், ஆண்களும் பெண்களும் சமநிலையோடு பழகினர் என்று கோமருடைய (Homer) இலியட் (Illiad) என்ற காவியத்தின் மூலமாய் அறிகிறோம். ஆனால் கிரேக்க வரலாற்றில் சிறந்த காலம் (Classic Period) என்று கருதப்பட்ட கி.மு.ஆறாம் நூற்றாண்டுகளில், பெண்களின் நிலை மிகவும் தாழ்ந்திருந்தது. நாங்கள் இன்பம் பெறுவதற்கு விலைமாதர்கள் இருக்கிறார்கள். உடலின் தேவைக்கு வைப்பாட்டிகள் உண்டு. சட்டமுறைப்படி பிள்ளைகளைப் பெறுவதற்கும், நம்பி வீட்டை ஒப்படைப்பதற்கும் மனைவிகள் இருக்கிறார்கள் என்று புகழ்பெற்ற நாவலர் டெமாஸ்தனிசு (Demosthenes) கூறியுள்ளார். பெண்கள் இந்நிலை அடைவதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன: (1) அக்காலத்தில் கிரேக்கநாடு பல சிறிய நகர்-நாடுகளாகப் (City States) பிரிந்திருந்தது. அந்தந்த நாடுகளின் அரசியல் செயல் அந்தந்த நாடுகளிலுள்ள ஆண்கள் யாவரும் சேர்ந்து அவைகளைச் செய்வார்கள். ஆதலால் பெண்கள் வீட்டு வேலைகளையெல்லாம் செய்ய வேண்டுவதாயிற்று. ஆண்கள் வீட்டுவேலை செய்வது இழிவாகக் கருதப்பட்டது. இழிவான வேலையைச் செய்த பெண்களை ஆண்கள் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. (2) அக்காலத்தில் மக்கள் கற்பை மதிக்கவில்லை. ஆண்களின் காமவேட்கையைத் தணிக்கும் கருவியாகப் பெண்கள் கருதப்பட்டார்கள். ஆனால், மக்கதோனியாவில், பெண்கள் பெரும்பாலும் நன்மதிப்புப் பெற்றிருந்தார்கள், அந்நாட்டில் மிகவும் திறமையுள்ள பெண்கள் நாட்டிற்குச் சிறந்த பணியாற்றியுள்ளார்கள். அலெக்சாந்தர் காலத்திற்குப் பின் பெண்களின் மதிப்பு உயர்ந்ததற்கு ஒரு முக்கிய காரணம், தனி ஆளின் மதிப்பு உயர்ந்ததேயாம். நகர்-நாடுகள் அழிந்து பேரரசு நிலை நாட்டப்பட்டப்பின், தனி

ஆட்களின் மதிப்பு வளர்ந்தது. நகர்-நாடுகளில் எல்லாரும் சேர்ந்து செயல் ஆற்றியதால், தனி ஆட்களுக்கு மதிப்பில்லை. அவர்கள் ஒரு குழுவின் உறுப்பினராகவே கருதப்பட்டார்கள். குழுக்களாலான சமூகமே மதிப்பிற்குரியதாயிருந்தது. ஆனால் பேரரசில் திறமையுள்ளவர்கள் உயர்ந்தார்கள். ஆதலால் தனி ஆட்களின் மதிப்பு உயர்ந்தது. மேலும் எல்லாரும் அரசியல் பணியில் நகர-நாட்டில் போல் ஈடுபட முடியாததால் ஆண்கள் வீட்டு வேலைகளில் அக்கறைக் காட்டினார்கள். குடும்ப வாழ்க்கை முக்கியம் பெற்றது. அதன் பயனாய் பெண்களின் மதிப்பு உயர்ந்தது. மேலும் தோக்கியர்கள் பெண்களின் சம நிலையையும், கற்பு வாழ்க்கையின் சிறப்பையும் கற்பித்தார்கள். முக்கியமாக உரோமை நாட்டில் அவர்கள் இவ்வாறு கற்பித்ததால், அங்கு பெண்களின் நிலை உயர்ந்தது.

பொதுவாக உரோமை நகரில் பெண்களின் நிலை கிரேக்கப் பெண்களின் நிலையைவிட மேம்பட்டதாயிருந்தது. அங்கும் கணவன் தான நினைத்தப்படி தன் மனைவியை நடத்துவதற்கு உரிமை இருந்தது. எனினும் கிரேக்க நாட்டுக் கணவர்கள் தோழமை பெறுவதற்கு விலைமாதர்களிடம் சென்றதுபோல் அவர்கள் செல்லவில்லை. உரோமை நாட்டுக் கணவர்கள் தங்கள் மனைவிகளிடமிருந்து தோழமை பெற்றார்கள். பிளினி தம் மனைவி கலிபூர்னியாவுக்கும், புலுடார்க்கு (Plutarch) அவரது மனைவி தோமாக்சனா (Tomoxena) வுக்கும் எழுதிய கடிதங்களிலிருந்து மேற்கூறிய உண்மையை அறிந்து கொள்ளலாம். ஆயினும் உரோமைச் சமூகத்தில் மணமுறிவு (divorce) மிகவும் எளிதாக நடைபெற்றது.

யூதச் சமூகத்தில் பெண்களின் நிலை பொதுவாக கிரேக்க, உரோமை நாடுகளின் நிலையைக் காட்டிலும் உயர்ந்த தாயிருந்தது. யூத சமயத்தில் கற்பு மிகவும் மதிப்புப் பெற்றிருந்தது. மேலும் பிற்காலத்தில் பல மனைவிகளை மணந்துகொள்ளும் வழக்கம் அறவே ஒழிந்தது. என்றாலும் ஆலயத்தில் கடவுளை தொழுது கொள்வதில் அவர்களுக்கு ஆண்களோடு சமநிலை இல்லை. ஒரு யூதகுரு கடவுளே, நான் பிற மகனாக (புற இனத்தான்) அல்லாததற்காகவும், பெண்ணாகப் பிறக்காததற்காகவும் உம்மைப் போற்றுகிறேன் என்று கூறியுள்ளார். ஆயினும் பெண்கள் குடும்பத் தொழுகைகளிலும், தொழுகை (Synagogue) வழிபாடுகளிலும் பங்கெடுத்தார்கள். மிகவும் பக்தியுள்ள பெண்மணிகளைப் பற்றிப் பழைய ஒப்பந்தத் திருமறையில் நாம் படிக்கிறோம். கடவுள் மனிதராகப் பிறப்பதற்குத் தகுந்த குடும்பம் அக்காலத்தில் யூதக் குடும்பமாகத்தான் இருந்திருக்க முடியும். ஆனால் கிறிஸ்து சமயம் பெண்களுக்குச் சமநிலை அளித்தது. தோயிக்கியர் கற்பின் சிறப்பைக் கூறிவந்தார்கள். ஆனால் கிறிஸ்து சமயம் கற்பை வற்புறுத்தியது போன்று அக்காலத்தில் வேறு எச்சமயமும் வற்புறுத்தவில்லை. மேலும் அக்கற்புப் பெண்களுக்கு மட்டுமல்லாது, ஆண்களுக்கும் உரியது என்று கற்பித்தபொழுது, அது அக்காலத்திற்கு ஒரு புதிய உண்மையாக விளங்கிற்று. ஒரு மனைவியை மட்டுமே மணஞ்செய்ய வேண்டும் என்று சொன்னபொழுது பெண்கள் ஆண்களோடு முழுவதுமாய்ச் சமநிலை அடைந்தார்கள். ஒரு குடும்பத்தில் கணவனே தலைவர் என்றும், அத்தலைமை அன்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்றும் கிறிஸ்து சமயம் கற்பித்தது.

ஒரு சமூகத்தில் குழந்தைகளை நடத்தும் வகையில் அச்சமூகத்தின் உயர்வை அல்லது தாழ்வை நாம் அறியலாம். கிரேக்க உரோமை நாடுகளில் குழந்தைகளுக்கு மதிப்பு சிறிதேனும் இல்லை. கிரேக்க நாட்டில் பிள்ளைகளின் எண்ணிக்கையைக் குறைக்கவே முயன்றார்கள். பொதுவாக இரண்டு ஆண் மக்களும் ஒரு பெண் மகவும் இருந்தால் போதும் என்று நினைத்தார்கள். உரோமை நகரின் பழங்கால சட்டப்படி, பிறக்கும் ஆண் பிள்ளைகளையெல்லாம் வளர்க்க வேண்டும். ஆனால் ஒரு பெண் பிள்ளையை மட்டும் வளர்த்தால் போதும். பிற்காலத்தில் உரோமை நகரில் நோய்கொண்ட குழந்தைகளையும், உறுப்பிழந்த குழந்தைகளையும், காட்டிலுள்ள கற்பாறைகளில் கொண்டு போட்டு விடுவது வழக்கம். ஏனென்றால் நாட்டிற்கு உடல் வலிமையில்லாக் குழந்தைகள் தேவையில்லை என்பது அவர்கள் கொள்கை. நாளடைவில் வேண்டாக் குழந்தைகளையும் அதிலும் முக்கியமாகப் பெண் குழந்தைகளையும் கருவில் அழிப்பது பெரும்பாலாரின் வழக்கமாயிற்று. பிறந்தவுடன் கொல்லும் வழக்கமும் மிகுதியாகப் பெருகிற்று. ஒரு தாய், குழந்தை பெற்றவுடன் அக்குழந்தையை, அதன் தந்தைமுன் கொண்டுபோய் வைப்பாள். அவன் அதைக் கையில் எடுத்துக் கொண்டால், அக்குழந்தையைக் கொல்லமாட்டார்கள். முகத்தைத் திருப்பிக் கொண்டால், அதைக் கொன்று விடுவார்களாம். எகிப்து நாட்டு மண்ணிற் குள் புதைந்து கிடந்த ஏடுகளில் (Papyri) பலவற்றை இப் பொழுது தோண்டி எடுத்துள்ளார்கள். அதில் ஒரு கடிதம் கீழ்வருமாறு எழுதப்பட்டுள்ளது. கிலோரியன் (Hilarian)' என்ற படைவீரன் தன் மனைவி அலிசு (Alis) என்பவளுக்கு, நீ குழந்தை உண்டாயிருப்பதைக் கேட்டு மகிழ்வுறுகிறேன். ஆண் குழந்தையாகப் பிறந்தால் அதை வைத்துக் கொள்; பெண் குழந்தையாகப் பிறந்தால் வெளியே எறிந்து போடு என்று எழுதியிருந்தான். ஆனால் இயேசு பெருமானார் மூலம் சிறுவர் சிறுமிகளின் மதிப்பு உச்சநிலை அடைந்தது. அவர் ஒரு குழந்தையாகப் பிறந்தார். குழந்தைகளை அணைத்து அவர்கள் தலையின் மேல் கைவைத்து அவர்களுக்கு அருள்பாலித்தார். சிறுவர் இறையரசுக்கு மிகவும் உகந்தவர்கள் என்றார். அதன் பயனாகச் சிறுவரின் மதிப்பை உலகம் கற்றது; கற்று வருகிறது என்று கூறுவது மிகையாகாது.

6. முடிவுரை

பு.ஏ. பின்னணியில் இருந்த மிக முக்கியக் கூறுகளையே இவண் குறிப்பிட்டுள்ளோம். இக்கட்டுரைக்கு முன்வரும் பழைய, புதிய ஏற்பாடுகளின் இடைப்பட்டக் காலத்துச் சமயச் சிந்தனை என்ற கட்டுரையுடன் இதை இணைத்துப் படித்தல் நலம். மொத்தத்தில், புதிய ஏற்பாட்டின் பின்னணி உண்மைகளைச் சரிவர அறியாமல் அதன் செய்தியை முழுமையாகப் புரிந்துகொள்வது இயலாத ஒன்று. பின்னணிச் சூழலை மறந்து பு.ஏ. பகுதிகள் விளக்கப்பட்டால் அதன் செய்தியின் மெருகும் ஆழமும் குறைந்தே இருக்கும். எனவே பின்னணியை அறிந்து விவிலியப் பகுதிகளை விளக்குவது நற்செய்திப் பணியின் ஒரு முக்கியக் கூறு எனலாம்.

துணை நின்ற நூல்கள்

1. Oesterly. O.E., The Jews and Judaism during the Greek Period, 1941.
2. Pfeiffer, R.F., History of the N.T. Times, 1949.
3. Burrows, M., The Dead Sea Scrolls, 1955.
4. Jepagnanam, S.T., The Background History of the N.T., 1965.

23

புதிய ஏற்பாட்டுக் கனோன் *

பியான் பியாஸ்டட்

1. கனோன் என்ற சொல்

கனோன் (Canon) என்ற சொல்லுக்கு அடிப்படையான பொருள் யாதெனில். பிரம்பு அல்லது கோல் என்பதே. கிறிஸ்தவ யுகத்திற்கு முன்னுள்ள இலக்கியங்களில் அச்சொல்படி, கோல். கோடு வரைய உதவும் கோல். சட்டம் அல்லது மாதிரி என்ற கருத்துகள் வழங்கப்பட்டு வந்தன. செமித்திய மொழியில் இச சொல் கானாக் (qanach) எனப்படும். சமய. இலக்கண. அறநெறி ஆகிய துறைகளில் இது சட்டம் என்று பொருள்பட்டது (கலா. 6:16). மற்றொரு பொருள் அளவு (2கொரி. 10:13மூ.) அல்லது பட்டியல் அல்லது பதிவேடு என்பதாகும். இலத்தீன் மொழியில் ஆர்டோ அல்லது நியுமெரஸ் (Ordo or Numerus).

ஏற்கெனவே முதல் நூற்றாண்டில் இச்சொல் மாதிரி, அளவை (norm) என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ளது. இது கனோன் தேஸ் அலேதெயஸ் (Canon tes aletheias) அல்லது பிஸ்தெயாஸ் (pisteos). அதாவது நம்பிக்கை அல்லது உண்மை என்பதற்கான மாதிரி அளவை எனக் கொள்ளப்பட்டது. இச்கருத்திலேயே திருச்சபையின் போதனைக்கும் கொளகைக்கும் ஒரு மாதிரி அளவையாக இருக்கும்படி திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மறை நூல்களின் பட்டியலைக் குறிப்பதற்குத் திருச்சபை இச்சொல்லைப் பயன்படுத்தி வந்திருக்கின்றது. இதிலிருந்து அடுத்ததாக மறை நூல்களின் தொகுப்பு ஒன்றினைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது. எனினும். நான்காம் நூற்றாண்டுவரை கனோன் என்ற சொல் பு.ஏ. நூல்களின் திரட்டுக்குப் பயன்படுத்தப்படவில்லை.

2. யூத சமயப் பின்னணி

சில நூல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் திருச்சபையின் திருநூற் சட்டமாக அமைத்ததின் வளர்ச்சியைப் பற்றி அறிய வேண்டுமாயின். தொடக்கத் திருச்சபையின் பின்னணியை நாம் சற்று ஆராய்தல் நலம்.

அத் திருச்சபை ஓர் உறுதியான பின்னணியிலிருந்து தோன்றியது. அது யூத சமயத்தோடு மிக நெருங்கிய தொடர்புடன் உருவாயிற்று. ப.ஏ.இன் நிறைவேறுதலாகவே திருச்சபை தோன்றியது என தொடக்கத் திருச்சபை உணர்ந்தது. திருச்சபை புத்தம் புதியதொரு சமயம் அன்று. முன்னோருடைய சமயத்தைப் போன்ற ஒன்றேதான். ஆனால் ஆயத்த காலம் முடிவடைந்தாயிற்று. இயேசு கிறிஸ்துவில் நிறைவேறப்போகும் காலம் அடுத்துவிட்டது. பழைய சமயத்தோடுள்ளத் தொடர்பு அற்றுப்போகவில்லை. கி.பி. 60க்குப் பின்னர் இயேசு கிறிஸ்துவில் ஏற்பட்ட முடிவான வெளிப்படுத்தலை ஏற்றுக்கொள்ளாத யூதர்கள் பிளவினை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

பழைய நம்பிக்கையின் தொடர்ச்சியே திருச்சபை. இச் சமயத்தினருக்கு மறைநூல் மிக இன்றியமையாதது. அது மறைநூலை மையமாகக் கொண்ட ஒரு சமயம். எந்தச் செயலும் மறைநூலை ஆதாரமாகக்கொண்டே செய்யப்பட்டது. மக்கள் அதனை நன்றாகக் கற்று மனப்பாடம் செய்து வந்தனர். மறைநூலின் அடிப்படையிலேயே தங்கள் அன்றாட வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர்.

மோசேயின் நூல்கள் என்று அறியப்பட்ட ஐந்து நூல்கள் அடங்கிய திருச்சட்டமே யூதர் மறைநூலில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். உண்மை அவைகளிலே முழுவாக வெளிப்படுத்தப்பட்டுவிட்டது எனவும். இவ்வுலக வாழ்க்கைக்குத் தேவையான போதனை யாவும் அவைகளில் அடங்கியுள்ளன எனவும் அம் மக்கள் எண்ணிவந்தனர். புதிதாய்த் தோன்றக் கூடிய சூழ்நிலைகளை கடவுள் முன்னறிந்துள்ளார். எனவே வாழ்க்கையின் சூழ்நிலைகள் யாவுக்கும் தேவைப்படும் விளக்கங்களும். சட்டங்களும் திருச்சட்டத்தில் அடங்கியுள்ளன எனறு அவர்கள் நம்பினர்.

யூதர் மறைநூலிலுள்ள ஏனைய இரு பகுதிகள். (1) இறைவாக்கு நூல்கள். (2) புனித எழுத்தேடுகள் என்பன. அவைகள் கபாலா (kabbala) மரபு எனப்பட்டன. அவைகளும் முக்கியமானவைகளே. ஆனால் அவைகளில் பெரும்பாலும் விளக்கவுரைகளும். தெளிவுரைகளும் அடங்கியுள்ளன. உரோமர் திருமுகம் 10ஆம். 11ஆம் அதிகாரங்களில் இது எவ்வாறு பயன்படுகிறது என்பதற்கு பவுல் ஓர் எடுத்துக்காட்டு கொடுத்துள்ளார். அவ்வதிகாரங்களில் அவர் திருச் சட்டத்திலிருந்து ஒரு மேற்கோளைக் கொடுத்து. அதனை விவாதமுறையில் விளக்கத் தொடங்குகிறார்; பின்னர் அதற்கு ஆதாரமாக இறைவாக்கு நூல்களிலும். திருநூல்களிலு மிருந்து மேற்கோள்கள் கொடுத்துள்ளார்.

தொழுகைமன்றவழிபாட்டு முறையில் திருச்சட்டத்திலிருந்து ஒரு பகுதியை வாசிப்பது வழக்கம். இத்துடன் கூப்டரோத்

*பழைய ஏற்பாட்டுக் கனோன் என்னும் கட்டுரையின் கீழ்க் குறிப்பைக் காண்க.

(இறுதி வாசிப்பு) எனப்படும் இறைவாக்கு நூல்களிலிருந்தும் ஒரு பகுதி வழக்கமாக வாசிக்கப்படும். இந்தப் பகுதியே அன்று ஆற்றப்படும் அருளுரையின் தலைப்பு வாசகமாக அமையும்.

மறைவல்லுநர் அன்றாடம் தனிமையிலிருந்து தங்கள் பள்ளிகளில் திருச்சட்டத்தைக் கற்றுவந்தனர். முதலாவது, திருச்சட்டத்திலுள்ள பகுதிகளையும், பின்னர் அவைகளுக்குரிய விளக்கவுரைகளையும் அவர்கள் மனப்பாடம் செய்வார்கள்; அதன் பின்னர் தங்களின் சீடர்களும் அவ்வண்ணமே செய்யுமாறு அவர்களுக்குப் போதித்துவந்தனர். சீடர்கள் முதற்கண் மூலப்பகுதியை மனப்பாடம் செய்யவேண்டும். பின்னர் தக்கப் பருவமடைந்த பின்னரே விளக்கவுரையை மனப்பாடம் செய்யவும், விளக்கவுரைக்குரியச் சட்டங்களைக் கற்றுக்கொள்ளவும் அனுமதிக்கப்படுவர். மறைநூல் அறிஞர் பழைய மரபு முறையிலிருந்தும் புதிய விளக்கங்களை வளர்க்கலாம். எனவே, புதிய சூழ்நிலைக்குரிய புதிய சட்டங்களை உருவாக்கலாம். ஆனால், திருச்சட்டம் மட்டும் எக்காலத்தும், எல்லா விளக்கங்களுக்கும் மாதிரியாக அல்லது திருநூலாக அமைந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட புதிய விளக்கம் திருச்சட்டத்தின் முரணாக ஒருபோதும் இருக்கவேகூடாது.

மூப்பர்களுக்குரிய விதிகளையும், அவர்களது அன்றாட வாழ்க்கைக்குரிய விவரங்களையும் பு.ஏ.இன் மூலமாக அறிகிறோம். இது மறைநூல் ஆராய்ச்சி செய்ததின் விளைவாகக் கிடைத்த பயனாகும். இவ்விதிகள் திருச்சட்டத்தின் வேலிகள் என்றழைக்கப்பட்டன. அதன் பொருள் யாதெனில், கடவுளுடைய சொற்களிலிருந்து தவறான முடிவுகளை உருவாக்கிவிடாதபடி இவ்விதிகள் திருச்சட்டத்தைப் பாதுகாக்கின்றன என்பதே. இயேசு மறைநூல் அறிஞர்களையும் அவர்களின் சட்டங்களையும் இடித்துரைத்தார். ஏனெனில் அவர்களின் சட்டங்கள் சிலவேளைகளில் அவரது கருத்தின்படி உண்மையான பொருளுக்கு முரணான விளக்கங்களாயிருந்தன. அவர் மறைவல்லுநரோடும், பரிசேயரோடும் வாதம் செய்தபோதும் திருச்சட்டமே ஒரு மாதிரி அளவையாக அமைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

3. இயேசுவும், திருநூல்களும்

இயேசுவின் போதனையும் சாதனையும் மறை நூலின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன (மத். 5:17; யோ. 5:29; லூக். 16:17).

இயேசுவுக்கும் திருநூல்களுக்குமுள்ள நெருங்கியத் தொடர்பைக் கண்டுகொள்ளவேண்டுமாயின், லூக்கா நற்செய்தி நூலின் கடைசி அதிகாரத்தைக் கருத்துடன் வாசிக்கவேண்டும். அங்கே தான் அது தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. எம்மாவுக்குச் செல்லும் வழியில் இயேசு தம்முடைய சீடர்களில் இருவரைச் சந்திக்கின்றார். அவர்கள் அவரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. அவர்களோடு அவர் செல்கையில், எருசலேமில் நிகழ்ந்தவைகள் யாவும், மறைநூலின் நிறைவேறுதல்களே என்பதை மெய்ப்பிக்கும் பொருட்டு மறைநூலின் துவக்கத்திலிருந்து இறுதிவரை அடங்கியுள்ள ஆதாரங்களை அவர்களுக்குச் சுட்டி விளக்கினார். பின்பு இயேசு அவர்களைப் பார்த்து, மோசேயின் திருச் சட்டத்திலும், இறைவாக்கினரின் நூல்களிலும், திருப்பாடல்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகள் எல்லாம் நிறைவேற வேண்டியதென்று நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லி வந்தவைகள் இவைகளே என்றார் (24:44). ஏதோ ஒரு சில சமயங்களில் விளக்கம் கொடுப்பதற்காகத்தான் ப.ஏ.இலிருந்து மூலப் பகுதிகளைப் பயன்படுத்தி வந்தார்கள் என்பது சரியன்று. மறைநூல்களும், அவைகளில் அடங்கியுள்ளவையாவும் இயேசுபெருமானையே குறிக்கின்றன என்பதே பொருத்தமான கருத்தாகும்.

தொடக்கத் திருச்சபையின் நம்பிக்கையின் அடிப்படையும் இதுவே. வாதத்துக்கு இடமே இல்லாத அளவுக்கு அவ்வளவு அதிகாரம் படைத்தவைகள் திருநூல்கள். இயேசு கிறிஸ்துவில் அவரது வாழ்க்கை, போதனை ஆகியவற்றில் திருநூல்களுக்கான முடிவான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

4. முதற் சான்றுகள்

மறைவல்லுநர்களில் பலரும், பரிசேயர்களில் பலரும், மனம் மாறி புதிய இயக்கத்தை ஏற்றுக்கொள்ளலானார்கள். எனவே தொடக்கத் திருச்சபையில் அவர்கள் புதிய இயக்கத்தினை விளக்கிக்கூறவும், அதனைப் பாதுகாக்கவும் பயன்படுத்தப் பட்டார்களென அறிகிறோம். ஏனெனில், முதல் கிறிஸ்தவர்கள் யூத சமயத்துக்குள் அமைந்திருந்தாலும், வெகு விரைவில், ஏற்கெனவே நிலைநாட்டப்பட்டுள்ள யூத சமயத்துக்கும், தாங்கள் ஏற்றுள்ள புதிய இயக்கத்திற்கும் கருத்து வேற்றுமை இருப்பதை உணரலானார்கள். இயேசுவைப்பற்றியும் இக்கருத்து வேற்றுமை எழலாயிற்று. அத்தகையச் சட்டங்களில் சீடர்கள் தங்கள் கருத்தினைத் திருநூல்களிலுள்ள ஆதாரங்களைக்கொண்டு பாதுகாத்துக்கொள்ளக் கற்றுக்கொண்டனர். பேதுரு முதன்முதலாகத் தமது திருப்பணியின் அருளுரையை (திருத். 2) ஆற்றும்போது, யோவேல் இறைவாக்கு நூலிலிருந்து மேற்கோள் ஒன்று கொடுத்துத் துவங்குகின்றார். அவரது சான்று மறைநூலின் பேரிலுள்ள ஓர் அறவுரையாகவும், விளக்கவுரையாகவும் அமைந்தது. ஸ்தேவான் சனகெரீம் சங்கத்தின்முன் தமது காப்புரையை ஆற்றும்போதும் இதே முறையினைக் கையாளுகிறார். அவரது தூது முழுவதும் மறைநூற்பகுதிகளையே ஆதாரமாகக் கொண்டது (அதி. 7).

நற்செய்திப் பணிக்காகத் திருத்தூதுவர்கள் சென்ற போதும், இதே முறையைக் கையாண்டுள்ளனர். பவுலும் சீலாவும் பெரோயாவுக்கு வந்தபோது வழக்கத்தின்படியே அவர்கள் வழிபாட்டில் பங்கு பெறவும், வாய்ப்பு கிடைக்குமாயின் கிறிஸ்துவுக்காகச் சான்று பகரவும் தொழுகைமன்றத்தினுட் சென்றார்கள். பெரோயாவில் இருந்தவர்கள், திருவசனத்தை முழு ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டு (திருத்தூதுவர்கள் கூறியது போல்) உண்மை இப்படி இருக்கிறதா என்று தினந்தோறும் மறைநூல் வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து வந்தார்கள் (17:11). எனவே கிறிஸ்தவச் சான்று என்றால் ஓர் ஆளின் அனுபவத்தைக் கூறுவது மட்டுமன்று, மறைநூல் ஆதாரத்தினை அடிப்படையாகக்கொண்டு போதனை கொடுக்கும் சான்றாகும்.

இதனைச் சிந்திக்கும்போது, துவக்கத் திருச்சபைக்கு மறைநூல் எவ்வளவு இன்றியமையாததொன்றாய் விளங்கியதென்பதை நாம் ஓரளவுக்கு ஊகித்துக்கொள்ளலாம்.

5. ஓர் எடுத்துக்காட்டுப் பகுதி

லூக்கா நான்காம் அதிகாரத்தை வாசித்துப் பார்த்தால், துவக்கத் திருச்சபையில் மறைநூல் எவ்வாறு செயல்முறையில் சிறப்பிடம் பெற்று வந்தது என்பது நன்கு விளங்கும். திருச்சபையின் அன்றாட வாழ்க்கையில் மறைநூல் வாக்கியங்கள்

எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வந்தன என்பதற்கு இவ்வதிகாரம் சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும்.

ஓய்வுநாள் ஒன்றில் இயேசு தமது வழக்கத்தின்படியே தொழுகைமன்றத்திற்குள் போனார். அவர் வாசிப்பதற்கு எழுந்து நின்றார். எசாயா இறைவாக்கு நூல் அவருக்குக் கொடுக்கப் பட்டது (திருச்சட்டத்திலிருந்து ஒரு பகுதி ஏற்கெனவே வாசிக்கப்பட்டாயிற்று, இப்பொழுது இறைவாக்கு நூலிலிருந்து ஒரு பகுதி வாசிக்கப்படவேண்டும்). அவர் அந்நூலை விரித்து எசா.61:1 முதல் உள்ள பகுதியை வாசித்தார். பின்னர் அவர் உட்கார்ந்து (உட்கார்ந்துதான் அருளுரை ஆற்ற வேண்டும்) பேசத் தொடங்கி, உங்கள் காதுகள் கேட்க இந்த மறைநூல் வாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று என்றார் (இதுவே அருளுரையின் தலைப்பு ஆகும்). ஆனால் இயேசுவில் இவ்வாக்கியங்கள் எவ்வாறு நிறைவேறலாயின என்பதை அருளுரையாளர் மெய்ப்பித்துக் காட்டுவர். அப்பகுதியின்பேரில் இயேசு தாமே கூறிய விளக்கவுரையின் சொற்கள் கிடைக்குமாயின் அவைகளைக் குறிப்பிட்டு அல்லது இயேசுவின் வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சி அல்லது அவரது உவமைகளில் ஒன்று அல்லது திருப்பாடுகளின் வரலாறு முதலான ஏதாவதொன்றினோடு ஒப்பிட்டு அருளுரையாற்றுவர்.

சொற்பொழிவு அல்லது கதை அல்லது நிகழ்ச்சி போன்றவைகளை, மனப்பாட முறைகளைப் பயன்படுத்திச் சுருக்கியத் திட்டமான அமைப்பு வடிவத்தில் மனப்பாடம் செய்யும் பழக்கம் யூத சமயத்தில் இயற்கையாகவே காணப் பட்டது. மனனம் செய்யும் இப்படிப்பட்ட முறை அக்காலத்தில் மறைநூல் அறிஞரின் பள்ளிகளில் சிறப்பாக இரபிமார்கள் நடத்திய பயிற்சி முறையில் பயன்படுத்தப்பட்டு வந்தது. மக்கள் இயேசுபிரானை அடிக்கடி இரபி என்று அழைத்ததாக நற்செய்தி நூல்களின் வாயிலாக அறிகிறோம். மேலும் அதிகாரமுள்ள போதனையை இயேசு நாதர் கொடுத்து வந்தார். அவர் தம்முடைய சீடர்களைத் தூரமான ஓர் இடத்திலோ அல்லது கப்பர் நகூமிலுள்ள தொழுமன்றத்திலோ தனியாகக் கூட்டி வந்தார். எனவே இயேசுவின் சொற்களையும் அவரது வாழ்க்கையின் நிகழ்ச்சிகளையும் எளிதில் நினைவில் பதிப்பதற்கும், மற்றவர்களுக்கு அவைகளை எடுத்துக் கூறுவ தற்கும் ஏற்ற எளிய வடிவத்தில் உருவாக்கி மனப்பாடம் செய்து வந்த பழக்கம் அவர்களுக்கு மிகவும் இயல்பானதே.

யூத சமய மரபில் சமயத்தொடர்பான போதனை உறுதியான உருவில் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆனால் அதே சமயத்தில் அவைகளைக் கையாளுவதில் அவர்களுக்கு உரிமை உண்டு. ஏதாவதொரு கருத்தினை ஐயமற விளக்க வேண்டுமாயின் அல்லது ஆதரிக்கவேண்டுமாயின் மரபுகளைத் தங்களுக்கேற்ற ஒரு வடிவில் அமைத்து மேற்கோள் காட்டலாம் அல்லது பயன் படுத்தலாம். இதற்கு உரிமை உண்டு. ஏதாவதொரு தகுந்த கருத்தினை வற்புறுத்திக் கூறுவதற்கு ஒரு மரபை ஏற்றவாறு சுருக்கியும், அதனை மேலும் நன்றாகப் புரிந்துகொள்ளுவதற்கும், விவரங் கண்டுகொள்வதற்குப் பெருக்கியும் கூறுவதற்கு உரிமை உண்டு.

6. தொடக்கத் திருச்சபை

இயேசுவும், அவருடைய திருத்தூதுவர்களும் தொடர்புடைய மரபுகளிலுங்கூட ஏறக்குறைய இதேபோன்ற சில உண்மைகளைக் காண்கிறோம். இயேசுவின் சொற்கள் குறித்து மிகவும் உறுதியானதொரு வடிவம் மிகவும் ஆரம்ப காலத்திலிருந்தே வழக்கிலிருந்து வருகின்றது. எ.கா. Q-மூலம் (Q-source). லூக்காவும், மத்தேயுவும் இதனை மார்க்குவின் மூலத்தோடு சேர்த்துப் பயன்படுத்தியுள்ளனர். மக்கள் இயேசு வையும் அவரது வாழ்க்கையையும் பற்றிய மரபுகளை இவ்வித உரிமை முறையில் பயன்படுத்துவதைக் காண்கிறோம். மிகவும் துவக்கக் காலத்திலுள்ள திருத்தூதுவர்களின் நூல்களிலும், திருச்சபைத் தந்தையர்களின் நூல்களிலும் நாம் நற்செய்தி நூல்களின் வாயிலாக அறிகின்ற மரபுகள் வேறொரு வடிவில் மேற்கோளாகச் சுட்டிக்காட்டப்படுவதைக் காண் கிறோம். ஆனால் சொற்கள் அமைக்கப்பட்டிருந்த முறை அவ்வளவு முக்கியமானதன்று.

மிகப் பிந்திய காலத்தில், அதாவது இரண்டாம் நூற்றாண்டின் துவக்கப் பகுதியிலும்கூட (ஏறக்குறைய கி.பி. 140) கியாராப்பாலீஸ் நகரத்துக் கண்காணியார் பாப்பியாசின் (Papias of Hierpolis) நூல் ஒன்றில், பின்வரும் சுவையானதொரு கூற்றினைக் காண்கிறோம். அங்கு உயிருள்ள வார்த்தை, அதாவது வாய்மொழி மரபு (*Viva vox domini*) எழுத்து வடிவத்திலுள்ள மரபைவிட மிக மதிப்பு வாய்ந்தது என்று கருதப்பட்டது. ஆனால் அவர் கொடுத்துள்ள மரபுகளைப் பார்க்கும்போது வாய்மொழி மரபுகள் மிகவும் உறுதியற்ற நிலையில் இருந்தன எனவும், இயேசுவிடமிருந்தே வராத மரபுகள் அத்துடன் சேர்க்கப்பட்டுள்ளன எனவும் அறியக் கிடக்கின்றது.

எனினும், இயேசுவின் சொற்கள் நற்செய்தி நூல்களில் எழுத்துவடிவில் அமைக்கப்படுவதற்கு மிக நீண்ட காலத்திற்கு முன்னரே அதிகாரம் நிறைந்த முடிவான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. எடுத்துக்காட்டாக பவுல் இயேசு பிரானின் சொற்கள் சிலவற்றை முடிவான வார்த்தைகளாகப் பல கட்டங்களில் பயன்படுத்துகிறார் (1 கொரி. 7:10,25; 14:37மு.). மேலும், துவக்கத்தில் தோன்றிய நூல்களில், இயேசுவின் சொற்களையும், அவரது சொற்களைப் பற்றி மறைவாகச் சுட்டுகின்ற சொற்களையும் பயன்படுத்துவது மிகவும் சாதாரணமான செயலாகும்.

7. நற்செய்தி நூல்களும், திருத்தூதுவர்களின் திருமுகங்களும்

கி.பி. 60 முதல் உள்ள ஆண்டுகளில் முக்கியமானச் சான்றுகள் மறைய, முதல் நற்செய்தி நூல்கள் தோன்றத் தொடங்குகின்றன. யாக்கோபு, பேதுரு, பவுல் ஆண்டவரின் சகோதரராகிய யாக்கோபு, மற்றும் பல திருத்தூதுவர்கள் கி.பி. 70ஆம் ஆண்டுக்குமுன் மண்ணுலகை விட்டு மறைந்தனர். அவர்களோடு கண்ணாரக் கண்ட சாட்சிகள் யாவரும் மறைந்தனர். கண்ணாரக் கண்டவர்களின்மூலம் கிடைக்கும் மரபுகளைப் பாதுகாக்க விழைவது இயல்பே. நமது ஆண்டவர் தாமே தம் திருத்தூதுவர்களுக்கு இதற்கான அதிகாரத்தை அளித்துள்ளார்.

கி.பி. 60ஆம் ஆண்டுக்கு முன்னுள்ள மரபை எந்த வடிவில் பாதுகாத்து வந்தனர் என்பது தெரியவில்லை. இதைக் குறித்துப் பற்பல கருத்துக்களும், ஊகங்களும் அறிஞரிடையில் நிலவுகின்றன. ஆனால் கி.பி. 60 முதல் 70 வரையுள்ள காலங் களில் மூன்று நற்செய்தி நூல்களும் தோன்றலாயின. (மத்தேயு நற்செய்தி நூல் அது இப்பொழுதிருக்கும் வடிவில் மிகப் பிந்தைய காலத்தில்தான் தோன்றியதெனச் சிலர் கூறுவர்).

இதைப்பற்றி நாம் நன்கறியவேண்டுமாயின், துவக்கத் திருச்சபையின் சரியான நிலையைத் தெரிந்துகொள்வது

இன்றியமையாதது. அத்திருச்சபை ஆங்காங்கு தனித்தனியே சிதறிக்கிடந்து, தனித்தியங்கி வந்த பல தலச்சபைகளாக இருந்தன என்று எண்ணலாகாது. ஆனால் தலச்சபைகளின் ஒன்றிப்பாக அது விளங்கியது. அவைகளுக்கிடையே மிகுதியான போக்குவரத்துகள் இருந்துவந்தன. பற்பல இடங்களிலுமுள்ள மக்கள் மத்தியதரைக் கடல் நாடுகளை முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, அடிக்கடி ஒருவரையொருவர் சந்தித்து வந்தனர். திருத்தூதுவர்களும், நற்செய்தியாளர்களும் சபைகளைச் சந்தித்து வந்தனர்; தலச்சபைகளிலிருந்து மக்கள், எபேசு, கொரிந்து, அந்தியோகியா போன்ற பெரிய சபைகளுக்குச் சென்று வந்தனர். இவ்வண்ணமாக அவர்கள் இயேசுவைப் பற்றிய மரபுகளைச் சேகரித்தனர். நற்செய்தி நூல்கள் தோன்றியவுடன் அவைகளின் நகல்களைப் பலரும் பல இடங்களில் எழுதி எடுத்தனர். ஒவ்வொரு தலச்சபையும் இந்நூல்களைப் பெற்றுகொள்ள மிக்க ஆர்வம் கொண்டது. சில சபைகளில் விவிலியத்தில் இப்பொழுது நாம் காண்கின்ற நான்கு நற்செய்தி நூல்களைத் தவிர ஏனைய நற்செய்தி நூல்களும் நிலவி வந்தன.

திருத்தூதுவர்களோவென்றால் நமது ஆண்டவரிடமிருந்தே அதிகாரத்தைப் பெற்றிருந்தனர். கண்கண்ட சாட்சிகள் அவர்களே. எனவே அவர்களது போதனை பெரிதும் மதிக்கப்பட்டு வந்தது. 1 கொரி. 7இல் பவுல், தாம் ஒரு திருத்தூதுவராக இருப்பதினால் கட்டுப்படுத்தக்கூடிய அளவு அதிகாரம் தனக்கு உண்டென வெளிப்படையாகக் கூறியுள்ளார். திருத்தூதுவர்கள் சபைகளுக்குச் சிற்சில சமயங்களில் திருமுகங்களை எழுதிவந்தார்கள். அவைகளிற் சில தனி மனிதருக்கெழுதிய சொந்தக் கடிதங்களாகவும் இருந்தன. எனினும் அவைகள் திருச்சபைக்கு அதிகாரமுடைய நூல்களாகக் கருதப்பட்டன. இத்திருமுகங்களில் கிறிஸ்தவ நம்பிக்கைக்கும், அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடைய பல நிகழ்வுகளுக்கும், தேவைப்பட்ட உண்மையான விளக்கத்தை முதற் திருச்சபையார் கண்டார்கள்.

1 தெச. 5:27இலும், கொலோ. 4:16இலும் பவுல் தாம் எழுதிய திருமுகங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் பிற சபைகளுக்கும் அவைகளை அனுப்பிவைக்கவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கின்றார். எனவே அவரது திருமுகங்களைப் பாதுகாத்துச் சபையார் மீண்டும் மீண்டும் வாசித்து வந்தனர். பிற சபைகளும் அவைகளினின்று பிரதிகளை எழுதி எடுத்துக்கொண்டன. பவுலைத் தலைசிறந்த திருத்தூதுவராகவும், அதிகாரியாகவும் போற்றிவந்த கிரேக்கம், சின்ன ஆசியா போன்ற இடங்களில் உள்ள சபைகள் பிற சபைகளுக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்ட திருமுகங்களையும், தாங்கள் திரட்டிவந்த திருமுகங்களோடு சேர்த்துக்கொள்ள விரும்பின.

உரோமையின் கிளமந்துவின் திருமுகம் (கி.பி. 96), அந்தியோகியாவின் இக்னாசியுவின் திருமுகங்கள் (கி.பி. 110-116), சிமிர்னா போலிகார்ப்புவின் திருமுகங்கள் (கி.பி. 116) போன்றவை மிகப் பழமையான சான்றுகளாய் விளங்குகின்றன. இச்சான்றுகள் வாயிலாக அக்காலத்தில் பவுலின் திருமுகங்கள் சேகரிக்கப்பட்டு, ஆராயப்பட்டு வந்திருக்கின்றன என்றும், அத்திருமுகங்களைப் பெற்றவர்கள் அவரின் திருமுகங்களை நன்றாய்ப் படித்து அவைகளை அறிந்திருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டார்கள் என்றும் அறிகிறோம். 2 பேது. 3:15இனைப் பார்க்கும்போது, பவுலின் திருமுகங்கள் முன்னமேயே சேகரிக்கப்பட்டு வந்ததென்பது தெரியக் கிடக்கின்றது.

8. பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும்

ப.ஏ.முதற் திருச்சபைப் பணியில் பெரிதும் பயன்பட்டு வந்தது. கிறிஸ்தவர்கள் திருப்பணியைத் தொடங்குமுன்னே, யூதர்கள் மத்தியதரைக்கடல் பகுதிகளிலுள்ள தொழுகைமன்றங்களின் மூலமாகத் திருப்பணியைச் செய்து வந்தார்கள். அதன் பயனாக ஒரே கடவுள்பேரிலுள்ள நம்பிக்கையும் ப.ஏ.இன் அறநெறி சார்ந்த வலிமையும் மக்கள் மனத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டன. இறைவாக்கு நூல்கள், திருப்பாடல்கள் ஆகியவற்றின் மொழிநடை கற்றோரைக் கவர்ந்தன. முதற் கிறிஸ்தவர்களும் தங்கள் திருப்பணிக்குப் ப.ஏ. இறைவாக்கு நூல்கள் பெரிதும் பயன்பட்டதை உணர்ந்தனர். பல நூற்றாண்டு களுக்கு முன் எழுதப்பட்ட இறைவாக்குகள் கிறிஸ்துவில் நிறைவேறினதை மக்கள் உணரலானார்கள். இது அவர்களை மிகவும் கவர்ந்தது.

இப்பொழுது அவர்கள் முன்னே மிகவும் கவர்ச்சிகரமான ஒன்று தோன்றியுள்ளது. இதுவரை மக்களைக் கவர்ந்துவந்த பத்துக் கட்டளைகளுடன் இப்பொழுது இயேசு பிரானின் மலை அருள்மொழிகளும், அவரின் உவமைகளும் அவர்களுக்குக் கிடைத்துள்ளன. யூத மக்களின் வியத்தகு வரலாற்றுடன், சிறப்பாக எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று, வாக்குப்பண்ணப்பட்ட நாட்டை அடைந்த வரலாற்றுடன். இப்பொழுது இயேசுவின் திருப்பாடுகளின் வரலாறும், அவர் மாட்சியோடு உயிர்த்தெழுந்த வெற்றி வரலாறும் அவர்களுக்கு வந்துள்ளன. இறைவாக்கு நூல்களுடன் இப்பொழுது திருத்தூதுவர்களின் வியத்தகு நூல்களும் தோன்றியுள்ளன.

ப.ஏ. ஓரளவுக்குப் பு.ஏ.இன் அமைப்பு முறைக்கு ஒரு மாதிரியான மாதிரி அளவையாக விளங்கியுள்ளது. திருச்சட்டத்தைப்போன்று நற்செய்தி நூல்கள் அமைந்துள்ளன. இறைவாக்கு நூல்கள் அங்கே, திருமுக நூல்கள் இங்கே. ப.ஏ.இல் வரலாற்று நூல்கள், பு.ஏ.இல் நற்செய்தி நூல்களுக்கும் திருமுகங்களுக்கும் இடையில் திருத்தூதுவர் செயல்களின் நூல், அங்கே வாக்களிக்கப்பட்ட நாட்டை வென்று மகிழ்ச்சியுடன் குடியேறினார்கள். இங்கே அதற்கிணையாக, திருத்தூதுவர்கள் பிறஇனத்தார் நடுவில் வெற்றித் திருப்பணியாற்றுகின்றார்கள். இறுதியாக, வெளிப்பாட்டின் கருப்பொருளைப் போன்று திருவெளிப்பாடுநூல் அமைந்துள்ளது.

9. கனோன் அமைப்பின் பற்பல வடிவங்கள்

கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையாக இருந்து அதனை விளக்கி அறிவுட்டுவதற்கு ஏற்ற நூல்களைத் தொடக்கத் திருச்சபை சேகரித்து வந்தது. துவக்கக் கட்டத்தில் உறுதியான உச்சவரம்புத்திட்டம் அமுலில் இல்லை.சில சபைகளில் கூடுதல் நூல்களும், சில சபைகளில் குறைந்த நூல்களும் இருந்து வந்தன. பற்பல இடங்களில் யூதா, 3 யோவான், 2 பேதுரு ஆகிய திருமுகங்களைப் பற்றித் தெரியவே தெரியாது. எப்படியிருப்பினும், அந்நூல்கள் திருநூலைச் சார்ந்த கருத்தில் பயன் படுத்தப்படவில்லை. மற்றும் சில சபைகளில் நான்கு நற்செய்தி நூல்களைத் தவிர போதனைகள் (Didache), எர்மாசின் மேய்ப்பர் நூல் (Shepherd of Hermas), பேதுருவின் செயல்கள், பேதுருவின் திருக்காட்சி போன்ற பிற நூல்களும் வழக்கில் இருந்துவந்தன.

இது வழக்கத்திற்கு மாறாக உள்ளது என வியப்புறுவதற்கில்லை. இக்காலத்தில் ப.ஏ.இன் கனோன்கூட

உறுதியற்ற நிலையில் இருந்துவந்தது. இது கி.பி. 90இல்தான் இறுதிக் கட்டத்தை அடைந்தது.

இக் காலங்களில் கடவுள் ஆவியினால் ஏவப்பட்டு நூல்கள் எழுதப்பட்டனவா இல்லையா என்பதில் அதிகக் கவனம் செலுத்தப்படவில்லை. ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட தன்மை சில நூல்களுக்கே உண்டு என்று வரையறுக்கப்பட வில்லை. பல திருமுகங்களும், நூல்களும் கடவுள் ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டுள்ளன என்று நம்பப்பட்டது. திருத் தூதுவர் அதிகாரம் பெற்றவை. நேர்மையான கொள்கைகள் யாவை என்பதை இவற்றிலிருந்து திட்டம் செய்வதற்கில்லை. ஆனால் திருத்தூதுவ அடிப்படையில் கட்டப்பட்டு முதன்மையாக நின்ற பெரிய சபைகளில் பாதுகாக்கப்பட்டு வந்த மரபு அடிப்படையிலிருந்துதான் அதனைத் தீர்மானிக்கவேண்டும். திருத்தூதுவ நம்பிக்கை நூல் ஒன்றினால் அல்ல, திருத்தூதுவ மரபில் எழுந்த பேராயர்கள் மூலமாகப் பாதுகாக்கப்படும் எனறு கொள்ளப்பட்டது. ஆயினும் அதே சமயத்தில் பெரிய நகர்களில் உள்ள முதன்மையான சபைகளில், திருக்கோவில் வழிபாட்டில் வாசிப்பதற்கும், அதிகாரப் பாங்கான போதனை கொடுப்பதற்கும், வழங்கப்பட்ட நூல்கள் நாளடைவில் தலச் சபைகளுக்குள்ளும் இடம் பெறலாயின. எனவே அப்படிப்பட்ட நூல்களின் நகல்களைச் சேகரிக்கும் முயற்சி மேற் கொள்ளப்பட்டது. கனோன் அதிகாரமுற்ற நிலையில் பயன் படுத்தப்பட்டுவந்த நூல்களிடையில் அதிக வேற்றுமைகள் காணப்படவில்லை.

ஏறக்குறைய எல்லா இடங்களிலும் ஒரேவிதமான நூல்கள் வழக்கிலிருந்ததைக் காண்கிறோம். இங்கோ நாம் ஒர் உண்மையை மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது, அக்காலங்களில் ஊழியர்களை ஒரு சபையிலிருந்து மற்றொரு சபைக்கு அடிக்கடி மாற்றிக் கொண்டு வந்தார்கள். செய்தியும் ஒர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு மாறிக்கொண்டு வந்தது. எடுத்துக்காட்டாக, ஒர் ஊழியர் சின்ன ஆசியாவிலுள்ள சபைகள் ஒன்றிலிருந்து, எபேசுவிலுள்ள தலைமை நகர் சபைக்கு வருகிறார். அங்கே அவர் பவுலின் 10 அல்லது 12 திருமுகங்களைக் காண்கிறார். எனவே அவைகளில் எவைகள் தமது சபையில் இல்லையோ அவைகளின் நகல்களை எடுத்து மீண்டும் சின்ன ஆசியாவிலுள்ள தமது சபைக்குக் கொண்டு செல்லுவார் அல்லவா? அல்லது திருத்தூதுவரின் சீடர்களில் ஒருவர், குறிப்பாக பவுலின் சீடரான தீத்து, பவுலின் ஆணைப்படி கிரேத்தாத் தீவில் கண்காணிப்புப் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளுவார். அவர் பவுல் கட்டளைப்படியே தலச் சபைகளில் மூப்பர்களை ஏற்படுத்த சுற்றுப்பயணம் செய்கின்றார். அதே சமயத்தில் அவர்களை நம்பிக்கையில் உறுதியாக நிலை நிறுத்துவதற்காக பவுலின் திருமுகங்களையும் எடுத்துச் செல்லுகின்றார் அல்லது தேவைப்பட்ட சபைகளுக்கு, அவைகளின் நகல்களை அனுப்பி வைக்கின்றார்.

10. வரையறை செய்யும் காலம்

திரிபுக் கொள்கையினர் இடைப்பட்ட காலங்களில் தோன்றியிராவிட்டால், இன்றுங்கூட கனோன் அமைப்பு உறுதியற்ற நிலையில்தான் வழக்கில் இருந்திருக்கும். இதுபோன்ற ஒரு புதியச் சூழ்நிலையைப்பற்றி கி.பி. 140இல் உரோமையில் தோன்றியதாகக் கருதப்படும் ஒரு காட்சியில் காண்கிறோம். பெரிய சபைகளில் காணப்பட்டதுபோலவே, விவிலிய நூல்கள் எல்லா இடங்களிலுமுள்ள சபைகளிலும் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. அக் காலத்தில் சின்ன ஆசியாவிலுள்ள பொந்து (Pontus) என்னுமிடத்தில் மார்சியான் என்றொருவர் இருந்தார். கி.பி. 144இல் அவர் திருச்சபை யினின்று பிரிந்துகொண்டபடியால், திரிபுக் கொள்கை யினராகத் தீர்க்கப்பட்டார். அவர் ப.ஏ.க்கு எதிரான இறையியல் கொள்கைகளை உடையவர்; ஏனெனில் ப.ஏ.இல்தான் நம்பக்கூடாத ஒரு கடவுளைப்பற்றிக் கூறப்பட்டுள்ளதாகக் கண்டார்; அதே சமயத்தில் பு.ஏ.இல் காணும் நல்ல கடவுளைப் பற்றிப் போதிக்க ஆவல் கொண்டார்; ப.ஏ.ஐ மிகவும் உயர்வாகக்கொண்டு எழுதப்பட்ட நூல்களையும், ப.ஏ.உடன் மிக நெருங்கிய தொடர்புள்ள நூல்களையும் மறை நூல்களி னின்றும் அகற்றிவிட எண்ணினார். அவர் லூக்கா எழுதிய நற்செய்தி நூலையும், பவுல் எழுதிய பதின்மூன்று திருமுகங்களை யுமே திருச்சபையின் கனோனாகக் கொள்ள விரும்பினார்.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஏற்கெனவே பற்பல இடங்களில் நிகழ்ந்துள்ளன. மக்கள் ஐயத்துக்கிடமான சில நூல்களை சபையில் புகுத்த முனையும்போது பேராயர், சபையில் வாசிப்பதற்கும், போதிப்பதற்கும் ஏற்ற நூல்கள் எவையெனத் தேர்ந்தெடுத்து வரையறுப்பார். ஆனால் இச்சமயத்தில் அந்நடவடிக்கை தீவிரமாய் மேற்கொள்ளப்பட்டது. அனைத் துலக சபை செயல்படத் தொடங்கியது. எந்தெந்த நூல்களை அதிகாரப்பூர்வமாய்ப் பயன்படுத்தலாம் என்பதை ஒழுங்கு படுத்தித் திருநூல் சட்டத்தை அமைக்க அது முற்பட்டது. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து, திருத்தூதுவ அதிகார அடிப்படையைச் சார்ந்ததெனக் கருதப்பட்ட பல நற்செய்தி நூல்களும், நடபடிகள் நூல்களும், திருமுகங்களும் திருக்காட்சி நூல்களும் தோன்றலாயின.

இவ் வளர்ச்சியின் வாயிலாக, திருச்சபை எந்தெந்த மறை நூல்களை சபைகளில் அதிகாரப் பூர்வமாய் வாசிக்கவும், ஆராயவும் அனுமதிக்கலாம் என்பதைச் சற்று அதிகமாய் ஆழ்ந்து சிந்திக்கவேண்டியதாயிற்று. இரண்டாம் நூற்றாண்டில் நிலவிவந்த பல புதிய நற்செய்தி நூல்கள், திருமுகங்கள் முதலானவைகளின் போங்குகள் பெரிய சபைகளில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்த மரபிற்கும், அவ் விடங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த நூல்களுக்கும் ஒவ்வாத நிலையிலிருந்தன. புதியதோர் இறையியல் தொடர்பான கருத் தடங்கிய போதனையை ஆதரிப்பதற்கென திருத்தூதுவரின் நூல்கள் பல புதிதாக இயற்றப்பட்டு வந்தனவெனத் தெரிகிறது. சில இடங்களில் உள்ள சபைகளில், குறிப்பாக எகிப்திலுள்ள சபைகளில், பாராட்டப்பட்டுவந்த குனோஸ்திய (அறிவு நெறிக் கோட்பாடு) நூல்களில், குறிப்பாக **தோமாவின் நற்செய்தி நூல்** (The Gospel of Thomas), **உண்மையின் நற்செய்தி நூல்** (The Gospel of Truth) ஆகிய பல நூல்கள் தோன்றின.

இத்தகையத் திருத்தூதுவ நூல்களல்லாத போலி நூல்கள் சபையில் பயன்படுத்தப்பட்டு வருவதைத் தடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கொரிந்து, உரோமை, எபேசு, அந்தியோகியா போன்ற இடங்களிலுள்ள சில முக்கிய சபை கள் ஏறக்குறைய முதல் நூற்றாண்டின் இறுதிக்குள்ளாக, திருத்தூதுவர்கள் வழியாக வந்த உண்மையான மரபிற் கிசைந்துள்ள மறை நூல்களைத் தேர்ந்தெடுத்துப் பயன் படுத்துமாறு ஏற்பாடுகள் செய்யலாயின. அவ்வாறு தேர்ந் தெடுக்கப்பட்ட அந்நூல்கள் - திருத்தூதுவர்களிடமிருந்தே தோன்றியிருக்கவேண்டும் அல்லது எவ்விதத்திலாவது திருத் தூதுவர்களுடன் தொடர்புகொண்டதாக இருக்கவேண்டும் (திருத்தூதுவர்கள் அல்லது அவரது சீடர்கள் எழுதியிருக்க வேண்டும்). அத்துடன் அந்நூல்கள் எல்லா இடங்களிலுமுள்ள சபைகளிலும் துவக்கத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டுவந்தன என்பதும், அவைகள் **புனித மறை நூல்கள்** எனக் கருதப்பட்டு,

வாசிக்கப்பட்டு வருகின்றன என்பதும் மெய்ப்பிக்கப்பட வேண்டியதாயிருந்தது.

11. கனோனின் பட்டியல்கள்

இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே மேற்காட்டிய பிரச்சனையை மிக ஒழுங்கு முறையில் எடுத்தாள்கின்ற ஏடுகள் தோன்றலாயின. அத்தகைய ஏடுகளில் ஒன்று **மூரட்டோரியின் கனோன்**. இது உரோமையில் கி.பி. 170க்கும் 200க்கும் இடைப்பட்டக் காலங்களில் உருவாக்கப் பட்டதெனத் தெரிகின்றது. இவ்வேட்டில் கீழ்க்காணும் நூல்கள் உள்ளன: நான்கு நற்செய்தி நூல்கள், திருத்தூதுவர் செயல்கள், பவுலின் 13 திருமுகங்கள், 1,2 யோவான், யோவானின் திருவெளிப்பாடு நூல், பேதுருவின் திருக்காட்சி நூல் (இந்நூல் எல்லாச் சபைகளிலும் பயன்படுத்தப்படவில்லை எனக் கூறப்படுகின்றது). எர்மாசின் மேய்ப்பர் நூல் தள்ளப் பட்டுள்ளது. அலெக்சாந்திரியாவுக்கும் இலவோதிக்கேயா வுக்கும் பவுல் எழுதியதாகக் கருதப்பட்ட சில திருமுகங்கள் நஞ்சினைத தேனுடன் கலக்கக்கூடாது என்னும் குறிப்புடன் விலக்கப்பட்டுள்ளன.

மேலும் சிரியா நாட்டிலுள்ள தாத்தியான் கி.பி. 172க்குப் பின்னர், நான்குபேர் வாயிலாய் வந்த நற்செய்தி நூல்கள் என்றழைக்கப்பட்ட நான்கு நற்செய்தி நூல்களில் சுருக்கவுரை ஒன்றைத் தயாரித்து வெளியிட்டார். அதன்மூலமாக அந்நான்கு நற்செய்தி நூல்களையும் அக்காலத்தில் திருநூல் சட்டத்திற்கு உட்பட்ட நூல்களெனக் கருதி சிரியாவில் பயன்படுத்தி வந்தார்கள் என அறியக்கிடக்கின்றது.

இரேனியஸ் (லியான் நகரத்துப் பேராயர் கி.பி. 202இல் இறந்தார்): இவர் நான்கு நற்செய்தி நூல்கள், பவுலின் 13 திருமுகங்கள், 1 பேதுரு, 1,2 யோவான், திருத்தூதுவர் செயல்கள், திருவெளிப்பாடு ஆகியவைகளைக் குறிப்பிடுகின்றார். இவர் அக் காலத்திலுள்ள மற்றவர்களைப்போலவே, ப.ஏ.உம், பு.ஏ.உம் இணைந்த ஒரே நூலெனக் கருதி அவற்றைப் பயன் படுத்துகின்றார்.

தொத்துல்லியன்: இவர் உரோமையிலும் வட ஆப்ரிக்காவி லும் (கி.மு. 160) திருப்பணியாற்றியவர். அவர் புதிய ஒப்பந்த மறை நூலுக்கு முதல் தடவையாக நோவம் டெஸ்ற்றமென்றம் (Novum Testamentum) என்ற தலைப்பினை ஒரு பெயராகச் சூட்டிப் பயன்படுத்தி வந்தார். அவர் அதனைக் கீழ்க்காணும் இனங்களாகப் பிரித்தார்: (1) நற்செய்தி நூல்கள், (2) திருத்தூதுவர் செயல்கள், (3) பவுலின் திருமுகங்கள், (4) யோவானின் நூல்கள், (5) திருத்தூதுவர்களின் நூல்கள் (1 பேதுரு, யூதா முதலியன).

ஓரிகென்: இவர் ஆதித் திருச்சபையில் புகழ்பெற்ற மற்றொரு பெரியார் ஆவார். அவர் எகிப்திலுள்ள அலெக்சாந் திரியாவில் பணியாற்றி, ஏறக்குறைய கி.பி. 254இல் இறந்தார். அவர் அந்தச் சபையில் பயன்படுத்திய மறை நூல்களின் பட்டியல் ஒன்றைக் கொடுத்துள்ளார். அவைகளை அவர் இரு இனங்களாகப் பிரிக்கின்றார்: அவை (1) எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டவை, (2) வாதத்துக்கிடமானவை. எபிரேயர், 2 பேதுரு, யாக்கோபு, யூதா ஆகிய நூல்களை வாதத்திற் கிடமானவைகளின் கீழே இவர் சேர்த்துள்ளார். இந்நூல்கள் சபைகளில் விவாதிக்கப்படவுமில்லை, சந்தேகிக்கப்படவுமில்லை. ஆனால் சில இறையியல் அறிஞர்கள் விவாதித்து, சந்தேகப்பட்டனர். எபிரேயர் திருமுகத்தைப் பற்றி ஓரிகெனுக்குச் சந்தேகமுண்டு. 2 பேதுரு, யாக்கோபு, யூதா எனும் நூல் களைப் பற்றிப் பிற அறிஞர்கள் வாதம் செய்தனர்.

துவக்கத் திருச்சபையிலுள்ள மிக முக்கியமான பட்டியலை இசுபியு (Eusebius) வழங்கியுள்ளார். அவர் செசரியாவில் பேராயராகப் பணியாற்றியவர். அவர் திருச்சபையின் வரலாற்றை எழுதத் தொடங்கி ஏறக்குறைய கி.பி. 325இல் முடித்தார். அந்தப் பட்டியலில் அக்காலம் வரை பயன் படுத்தப்பட்டு வந்த எல்லா நூல்களையும், அவைகள் அந்தக் காலம் வரை பல்வேறு இடங்களிலுள்ள சபைகளில் அதற்கு முன் பயன்படுத்தப்பட்டு வந்ததற்கான விவரங்களையும் அவர் ஆராய்ச்சி செய்துள்ளார். இவரும் நூல்களை இரு இனங்களாகப் பிரிக்கின்றார்: (1) எல்லாராலும் ஏற்கப்பட்ட நூல்கள். இந்த இனத்தில் நான்கு நற்செய்தி நூல்கள், திருத்தூதுவர் செயல்கள், பவுலின் திருமுகங்கள் (எபிரேயர் உட்பட), 1 யோவான், 1 பேதுரு, திருவெளிப்பாடு நூல் ஆகிய யாவும் அடங்கியுள்ளன. (2) வாதத்திற்கிடமான நூல்கள். இந்த இனத்திலே மூன்று உட்பிரிவுகள் உள்ளன: (அ) பலரால் ஏற்கப்பட்டவை. யாக்கோபு, யூதா, 2 பேதுரு, 2,3, யோவான். இவைகள் கனோனுக்குள் அமைவதற்குத் தகுதியானவை. (ஆ) போலி நூல்கள். இவைகளில் பவுலின் செயல்கள், மேய்ப்பர் நூல், பேதுருவின் திருக்காட்சி பர்னபாவின் திருமுகம், போதனைகள் (didache) நூல் போன்றவைகள் அடங்கியுள்ளன. இந்த இனத்தில் இசுபியு மீண்டும் யோவானின் திருவெளிப்பாட்டைக் குறிப்பிட்டுள்ளார். ஏனெனில் அவரே இதனை ஏற்பதற்கு எதிராக இருந்தார். ஆனால் மற்ற யாவரும் இதனை ஒப்புக்கொண்டபடியால் பின்னால் அவர் இதனை முதல் இனத்தில் சேர்த்துள்ளார். (இ) தகுதியற்ற, பக்திக்கு ஏற்காத நூல்கள்: இவ்வினத்தில் பேதுருவின் நற்செய்தி நூல், மத்தியா, தோமா, அந்திரேயா, யோவானின் செயல்கள் முதலியவை அடங்கியுள்ளன.

இரண்டாம் நூற்றாண்டிலுள்ள டாக்டிரினா அடஜ் (Doctrina Addaj) என்றழைக்கப்படும் ஓர் ஏட்டில் பின்வரும் குறிப்பு காணப்படுகின்றது: கீழ்க்கண்ட மறை நூல்களை மட்டுமே கிறிஸ்தவ சபைகளில் வாசிக்கவேண்டும். திருச்சட்டம், அன்றாடம் மக்களுக்கு வாசிக்கப்படுகிற இறைவாக்கு நூல்கள், நற்செய்தி நூல்கள், உரோமையிலிருந்து சீமோன் பேதுரு அனுப்பிய பவுலின் திருமுகங்கள் எபேசுவிலிருந்து யோவான், செபதேயு அனுப்பிய திருத்தூதுவர் செயல்கள்.

12. திருச்சபையின் பல பகுதிகளிலும் காணப் பட்ட நிலைமை

கிழக்கத்திய சபைகளில் (கிரேக்க சபை, அலெக்சாந்திரியா சபை) இறையியல் அறிஞர்கள் திருவெளிப்பாடு நூலை மிகவும் எதிர்த்தார்கள். எனினும் இறையியல் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டக் குறைபாடுகளினால் அந்நூலை கனோ னுக்கு இசைந்ததொன்றாகப் பாவித்துப் பயன்படுத்துவதில் தடை ஏற்படவில்லை. பேராயர் அதனாசியு (கி.பி. 367), 39ஆவது உயிர்த்தெழுந்த விழா திருமுகம் ஒன்று எழுதினார். அத் திருமுகத்தைத் திருச்சபை முழுவதும் அதிகாரப்பூர்வமான ஓர் அறிக்கையாக ஒப்புக்கொள்கின்றது. இத் திருமுகத்தில் பிந்தைய காலத்தில் திருநூல் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 27 மறை நூல்களில் திருவெளிப்பாடு நூலும் அடங்கியுள்ளது. ஆனால் இந்நூலை அதன் கருத்து காரணமாக இறையியல் அறிஞர்கள் எதிர்த்துக்கொண்டே வந்தனர்.

இப்பொழுது நாம் திருநூல் சட்டத்திற்குட்பட்டவைகளாக ஒப்புக்கொள்ளுகிற எல்லா நூல்களையும் சிரிய சபை துவக்கத்

திலேயே ஒப்புக்கொண்டது. எனினும், பெசித்தா (Peshitta) என்றழைக்கப்படும் சிரிய மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்ட போது (கி.பி. 400) சில மறை நூல்களின் உண்மைத் தன்மையைப்பற்றிப் புதியதொரு வாதம் எழலாயிற்று. சிலர் திருநூல்களின் எண்ணிக்கையை வரையறுக்க விரும்பியபொழுது, அவைகளைச் சிரிய மொழியிலுள்ள நெடுங்கணக்கின் எண்ணிக்கைக்குச் சமமாக்கினார்கள். எனவே அதில் 2 பேதுரு, 2,3.யோவான், யூதா, திருவெளிப்பாடு நூல் ஆகிய 5 நூல்கள் விடப்பட்டன. ஆனால் பிந்தைய காலத்து மொழிபெயர்ப்புகளில் அவைகள் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளன.

மேற்கத்திய சபைகளில் எபிரேயர் திருமுகத்தைப்பற்றி மீண்டும் வாதம் செய்யலாயினர். ஏற்கெனவே உரோமை கிளமந்து (கி.பி. 96), அத்திருமுகம் புனிதமும், அதிகாரப் பூர்வமுமானதென்று கருதிப் பயன்படுத்தியுள்ளார். இந்நூல் மிக சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டு ஏற்கப்பட்டுள்ளது என்று தெர்த்துல்லியன் தமது நூல்களில் எழுதியுள்ளார்.

எனினும் நான்காம் நூற்றாண்டில் இத்திருமுகத்தைப் பற்றி வாதம் எழுந்தது. அத்திருமுகத்தின் பொருள் பொருத்தமானதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆகவே அது மிக முந்தைய காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டு வந்ததொன்று என்று மெய்ப்பிக்கப்பட்டது. ஆனால் அதற்குரிய திருத்தூதுவ அதிகாரத் தைப்பற்றிச் சிக்கல் எழுந்தது. இத்திருமுகம் பவுலால் எழுதப்பட்டதென்பதையோ அல்லது அவரது மேற்பார்வையில் எழுதப்பட்டதென்பதையோ மெய்ப்பிக்க முடியவில்லை. மிகத் தொடக்கத்திலேயே அதன் மொழியிலும், மொழி நடையிலும் வேற்றுமை கண்டனர். ஆனால் அதே சமயத்தில் அதில் காணும் இறையியலும், சிந்தனையின் மாதிரிகளும் பவுலின் நூல்களுக்கு ஒத்தவைகளாய்க் காணப்படுகின்றன.

இக் காரணத்திற்காகக் கடும் வாதம் எழுந்ததைக் கவனிக்கும்போது, நூல்களைத் தேர்ந்தெடுப்பதில் மக்கள் எவ்வளவு கண்ணுங் கருத்துமாய் இருந்திருக்கின்றனர் என்பது தெரிய வருகின்றது. இதனால் நீண்ட காலத்திற்குப்பின் ஓரளவு திருத்தூதுவ அதிகாரத் தன்மையுள்ள புதிய நூல்களும் அல்லது போலி நூல்களும் தோன்றியபொழுதிலும், உண்மையான நூல்கள் யாவை என்பதைக் கண்டுகொள்வதற்கு அவர்கள் அனுபவம் பெற்றிருந்தார்கள்.

நான்காம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் திருப் பேரவைகளிலும், சபைச் சட்டங்களிலும் கனோனைப் பற்றிய வாதம் எழலாயிற்று. இது ஒரு புதுமையாகத் தோன்றியது. கி.பி. 382இல் முதன் முதலாக உரோமையில் இது நிகழ்ந்தது. எபிரேயர் திருமுகம் உட்பட 22 நூல்கள் அதில் ஒப்புக் கொள்ளப்பட்டன. கி.பி. 393இல் கிப்போ விலும் (Hippo), கி.பி. 397இல் கார்த்தேகோவிலும் (Karthago) நடந்தத் திருப்பேரவைகளில், மீண்டும் மீண்டும் இப்பிரச் சனை எழலாயிற்று. இச் சமயத்தில் எபிரேய திருமுகத் திற்குத் தனிப்பட்ட இடம் கொடுக்கப்பட்டது. ஏற்கப்பட்ட அட்டவணையில் திருத்தூதுவராகிய பவுலினால் எழுதப்பட்ட 13 திருமுகங்கள், அதே ஆக்கியோரால் எபிரேயருக்கு எழுதப் பட்ட திருமுகம் ஒன்று என்று கண்டுள்ளது. இதன் கருத்து யாதெனில், எபிரேய திருமுகம் ஓரளவு பவுலோடு தொடர்புடையதாகக் கருதப்பட்டதால் ஏற்கப்பட்ட தெனினும்,அவரால் எழுதப்பட்ட பிற 13 திருமுகங்களுக் குரிய அதே இடம் இதற்கு அளிக்கப்படவில்லை என்பதே.

கார்த்தேகோ திருப்பேரவை (கி.பி. 419) பவுலினால் எழுதப்பட்ட திருமுகங்கள் 14 என்று மட்டும் குறிப்பிட்டுள்ளது. ஆயினும் கிழக்கு நாடுகளிலும் மேற்கு நாடுகளிலும், பொதுவான திருமுகங்கள் என்று அழைக்கப்படுகிற திருமுகங்களில் 2 பேதுரு, 2,3 யோவான், யூதா ஆகியவைகளைப்பற்றிச் சில ஐயப்பாடுகள் இருந்து வந்தன.

ஆயினும் ஐந்தாவது நூற்றாண்டில் மேற்காட்டிய நூல்களைப்பற்றி அவைகள் இரண்டாந்தரமானவை எனச் சில கருத்துக்கள் நிலவி வந்தாலுங்கூட திருநூல்சட்டத்தில் அவை சேர்க்கப்பட்டுவிட்டன.

உரோமன் கத்தோலிக்கச் சபை, கி.பி. 1546இல் திரந்துவில் (Trent) கூடிய திருப்பேரவையில், கனோனில் ஏற்கவேண்டிய நூல்களை இறுதியாக முடிவு கட்டியது. பல சீர்திருத்தச் சபைகள் தங்களுக்கெனத் தனியான கனோனை அமைக்க வில்லை. ஆனால், ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் மரபாக வழங்கி வந்த கனோனை அதே அமைப்பில் ஏற்றுக்கொண்டது.

கனோனில் சேர்க்கப்படவேண்டிய நூல்கள் திருச்சபையின் மரபை ஆதரித்து, உறுதிப்படுத்துகின்ற நிலையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. திருச்சபையின் மரபிற்கிசைய இருப்பதில் அவைகள் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்கவேண்டும்: (அ) அந்நூல்கள் திருத்தூதுவர் களிடமிருந்தே தோன்றியிருக்கவேண்டும். (ஆ) திருத் தூதுவர்களால் எழுதப்பட்டிருக்கவேண்டும் அல்லது திருத்தூதுவர்களது மேற்பார்வையில் அவர்களுடைய சீடர்களால் எழுதப்பட்டிருக்கவேண்டும். (இ) ஓரளவுக்காவது திருத் தூதுவ அதிகாரம் பெற்றவை என்ற நிலையிலிருக்கவேண்டும். திருத்தூதுவர்களால் எழுதப்பட்ட பிற திருமுகங்களும் பல இருந்திருக்கக்கூடும். எடுத்துக்காட்டாக, கொரிந்தியருக்கு எழுதப்பட்ட மற்ற இரு திருமுகங்கள், இலவோதிக்கேயாவுக்கு எழுதப்பட்ட திருமுகம் ஆகியவை. பின்னர் இவை மறைந்து போயின. அவை எந்தச் சபைகளுக்கு எழுதப்பட்டனவோ, அந்தச் சபைகளில் தவிர வேறு சபைகளில் மறை நூல்களாகக் கருதி வாசிக்கப்படவில்லை. எனவே, அத்திருமுகங்கள் பொதுவான திருமுகங்கள் என்று கருதப்படவில்லை; அதாவது, முழுத் திருச்சபையையும் கருத்தில் கொண்டு எழுதப்படவில்லை என்பது தெரிய வருகின்றது. எடுத்துக்காட்டாக, பிலமோனுக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் தன்மையைப் பார்த்தால் அது தனியாளுக்கு எழுதப்பட்ட சொந்தக் கடிதம் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆயினும் அடிமைத்தனப் பிரச்சனைக்கு ஏற்ற மிகவும் ஞானமான விளக்கம் அந்நூலில் காணப்படுவதாலும், அத்திருமுகம் எபேசுவுக்கும், கொலோசேக்கும் அனுப்பப்பட்ட திருமுகங்களோடு சேர்த்து அனுப்பப்பட்ட காரணத்தாலும் அத்திருமுகத்தின் பிரதியும் அவைகளோடு பரப்பப்பட்டு வந்தது என்பதாலும், ஒருவேளை திருச்சபை அதனைப் பாதுகாத்து வந்திருக்கக்கூடும்.

திருவெளிப்பாடு நூலில் ஆயிரம் ஆண்டு அரசாட்சியைப் பற்றிய பல அபாயகரமான கருத்துக்கள் இருப்பதால், பல இறையியல் அறிஞர்கள் இந்நூலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இக் கருத்து பல இடங்களிலும் தவறாகப் பொருள் கொள்ளப் பட்டது. ஆயினும் அந்நூலின் திருத்தூதுவப் பின்னணியைப் பற்றிச் சிறிதும் சந்தேகமில்லாததாலும், அது மக்களால் விரும்பப்பட்டு, எல்லா இடங்களிலும் தாராளமாக வாசிக்கப் பட்டு வந்ததாலும், கனோனில் சேர்க்கப்பட்டு நிலை வரமாக்கப்பட்டது.

திருவிவிலியத் துணை நூல்

திருச்சபையில் இன்னும் பல நூல்களை அடிக்கடி வாசித்து ஆராய்ச்சி செய்து வந்தனர். ஆனால், அவைகளில் திருத்தூதுவ அதிகாரத் தன்மையும், பொதுவான தன்மையும் காணப் படாததால் திருச்சபையின் திருநூல்சட்டத்தில் அவைகளைச் சேர்க்கமுடியவில்லை.

திருநூல்சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள சில நூல்களைப் பற்றி ஒரு சாராருக்கு இன்னும் ஐயம் இருந்துகொண்டே வருகின்றது. எப்படியெனில், பக்குவமடைந்த கிறிஸ்தவர் களேயன்றி, மற்றவர்கள் சில நூல்களை (எடுத்துக்காட்டாக சில பொதுவான திருமுகங்களை) மிகக் குறைவாகப் பயன்படுத்தி வருகின்றனர். தற்காலத்திலும்கூட லுத்தரன் சபையைச் சேர்ந்த பல இடங்களில் யாக்கோபு திருமுகத்தைப்பற்றிய ஐயம் நிலவி வருகின்றது. மேலும் திருவெளிப்பாடு நூலின் கருத்தை அறிந்துகொள்வதில் மிகவும் அதிகமான கடினம் இருப்பதால் அந்நூலும் வெகு குறைவாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், மறைப்பொருட்காட்சி இயக்கத்தார் இதனைப் பெரிதும் விரும்புகின்றனர்.

எனினும், மொத்தத்தில் பு.ஏ.இன் கனோன் மிகவும் உறுதியாக நிலைவரமாக்கப்பட்டு விட்டது. எனவே, பு.ஏ.இல் இணைப்ப தற்குரிய புதிய நூல்களைத் தேர்ந்தெடுப்பதற்கோ அல்லது ஆராய்ச்சி நடத்துவதற்கோ அவசியமில்லை.

துணை நின்ற நூல்கள்

1. Gregory, C.R., The Canon and Text of the N.T., 1907.
2. Goodspeed, E.J., The Formation of the N.T., 1927.
3. Souter, A., The Text and Canon of the N.T., 1953.

24

புதிய ஏற்பாட்டு மூலப் பாட ஆய்வு

ஆ. இராபின் மக்ளாஷன்

1. ஆய்வின் நோக்கம்

பு.ஏ.இல் உள்ள இருபத்தேழு நூல்களுள் ஒரு நூலுக்காவது முதன்முதலாக எழுதப்பட்ட மூலக் கையெழுத்துப் பிரதி கிடை யாது. பவுல் சொல்லச் சொல்ல, எழுதப்பட்டு பவுலின் சொந் தக் கையெழுத்திடப்பட்ட உண்மையான திருமுகங்களும், மார்க்குவும் பிற நற்செய்தி நூலாசிரியரும் உண்மையாக எழு திய நற்செய்தி நூல்களும் பல நூற்றாண்டுகட்கு முன்னரே எவ்வித அறிகுறித் தடமுமின்றி அழிவுண்டன. பு.ஏ.ஐ எழுதியவர்கள் தம் கைப்பட உண்மையாகவே என்ன எழுதினார்கள் என்று அறிவதற்குப் பார்த்தெழுதப்பட்ட பிரதிகளையே நம்ப வேண்டி இருக்கிறது. அப்படிப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் கூட நேரடியாக மூல ஏடுகளைப் பார்த்து எழுதப்பட்டவை அல்ல. அவை எத்தனையோ பிரதிகளுக்குப் பின்னால் எழுந்தவை.

பு.ஏ. முழுவதுமோ அல்லது அதன் பகுதிகளோ அடங்கிய கையெழுத்துப் பிரதிகள் இன்று கிட்டத்தட்ட ஐயாயிரம் உள்ளன. அவற்றுள் மிக மிகத் தொன்மையான கையெழுத்துப் பிரதிகூட கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் முதல் அரை நூற் றாண்டில் எழுதப்பட்டதாகும். எஞ்சியுள்ளவை அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பதினாறாம் நூற்றாண்டு வரை பார்த்து எழுதப்பட்டவை. கையால் எழுதப்பட்ட பிரதிகளில் ஆயிரக்கணக்கான பாட வேறுபாடுகள் காணப்படுவது இயல்பே. எனவே, எந்த ஒரு கையெழுத்துப் பிரதியும் ஏனையப் பிரதிகளோடு ஒன்றுபடுவதில்லை.

கிரேக்க மொழியில் பு.ஏ முழுவதுமோ அல்லது அதன் பகுதிகளோ அடங்கிய கையெழுத்துப் படிகள் தவிர, இலத்தீன், சிரியாக், கோப்டிக் மொழிகளிலும் பிற பண்டைய மொழி களிலும் பு.ஏ. கையெழுத்துப் பிரதிகள் உள்ளன. இந்த மொழிபெயர்ப்புகள் தொடக்க நூற்றாண்டுகளில் எழுதப் பட்டவை. பன்மொழிப் புலவர்கள் இவற்றை ஆராய்ந்து இவை எந்த கிரேக்க மூலப் பாடத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டன என்று புரிந்துகொள்ளக்கூடும். பு.ஏ.இன் மூலப் பாடம் பற்றி அறிய நமக்குதவும் பிறிதொரு ஆதாரம் தொடக்க நூற்றாண்டுகளில் சபைத் தந்தையர் எழுதியவை களே. இவர்கள் தங்கள் நூல்களில் அடிக்கடி பு.ஏ.இலிருந்து மேற்கோள்கள் காட்டியிருக்கின்றனர். அம்மேற்கோள்கள் அவர் காலத்திய பு.ஏ. மூலப் பாடத்தை அறிய உதவுகின்றன.

எனவே, பு.ஏ.இன் முதல் கையெழுத்துப் பிரதிகள் மறைந்துபோயின. பிந்தைய கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகள் மட்டுமே பெரயளவில் கிடைத்திருக்கின்றன. அவற்றில் குழப்பத்தை, திகைப்பை உண்டுபண்ணுகிற ஏராளமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவற்றோடு பண்டைய மொழிகளிலுள்ள மொழிபெயர்ப்புக்களும் தொடக்க திருச் சபைத் தந்தையர் தம் நூல்களில் எடுத்தாண்டுள்ள மேற்கோள் வாசகங்களும் இருக்கின்றன. இவையனைத்தையும் வைத்து, இயன்ற அளவிற்கு, பு.ஏ.ஐ எழுதியவர்கள் எழுதிவைத்த உண்மையான மூலப் பாடங்கள் எவை என்று ஆய்வு செய்வதே பு.ஏ. மூலப் பாடத் திறனாய்வின் கடன்.

மூலப் பாடத் திறனாய்வு அறிவியல். பு.ஏ. ஆராய்ச்சிக்கு மட்டும் அன்று, பண்டைய இலக்கியங்கள் அனைத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. எ.கா. மகாபாரத மூல ஏடுகளோ, திருக்குறள் மூல ஏடுகளோ கிடையா. அத்தகைய இலக்கி யங்களைப் பதிப்பிடுகிறவர் இன்றுள்ள கையெழுத்துப் பிரதிகளில் காணப்படுகிற வெவ்வேறு பாட வேறுபாடுகளையும் துருவி ஆராய்ந்து, ஆக்கியோரின் கருத்து இதுதான் என்று முடிவு செய்யவேண்டியிருக்கிறது. சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியைப்பற்றிச் சரியான முடிவிற்கு வர இயலாதபோது அடிக்குறிப்பில் பதிப்பாளர் வெவ்வேறு பாட வேறுபாடுகளையும் குறிப்பிடுவர். இம்முறை பண்டைய இலக்கிய ஆராய்ச்சியில் மட்டுமல்லாது பு.ஏ.இன் இன்றைய ஆங்கில மொழிபெயர்ப்புக்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

சில விதங்களில் பிற பழங்கால இலக்கியங்களைவிட பு.ஏ. மூல பாடத் திறனாய்வு கடினமாயிருக்கிறது. ஏனெனில், பு.ஏ.இன் கையெழுத்துப் பிரதிகளின் எண்ணிக்கை அதிகம். அதே சமயத்தில் அவற்றின் தொன்மையும் அதிக எண்ணிக்கை யும் அவற்றுள் எங்கேனும் உண்மையான மூலப் பாடம் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் என்ற நம்பிக்கையைத் தருகின்றன. மேலும், மூலப் பாடத் திறனாய்வு நாம் நன்க றிந்துள்ள வாசகங்கள் சிலவற்றைப் பற்றி ஐயப்பாட்டை எழுப்பியிருக்கின்றன. இன்னும் பல சிக்கல்களுக்கு முடிவில்லை. என்றபோதிலும் அவற்றால் நம் அடிப்படை நம்பிக்கைகளும் அடிப்படைக் கொள்கைகளும் பாதிக்கப்படவில்லை.

2. எழுதும் பொருட்களும், எழுதும் முறைகளும்

பு.ஏ. கையெழுத்தேடுகளை எழுதியபோது பயன்படுத்திய பொருட்கள் இரண்டு. அவை நாணற்புல் தாள், பதனிடப்பட்ட ஆட்டுத்தோல் ஆகியவைகளுமே. பாப்பைரஸ் என்ற நாணற்புல் எகிப்தில் நைல் நதியில் ஏராளமாக வளரும் ஒருவிதக் கோரைப்புல். அந்த நாணற்புல்லை இரண்டாகக் கிழிப்பர். அதிலுள்ள நாரை அகற்றிவிடுவர். அதன்பின் அவற்றைச் சிறு சிறு நீண்ட கீற்றுக்களாகக் கிழிப்பர். கிழித்தவற்றை ஒன்றோடொன்று ஒட்டுவர். அதன்மேல் பசைபோட்டு இறுகும் படி அழுத்துவர். இவ்விதமாக எழுதுவதற்கேதுவாக சொர சொரப்பற்ற மிருதுவான ஏடாக்குவர். அப்படியே செம்மறி ஆட்டுத்தோல் அல்லது வெள்ளாட்டுத்தோலை எடுத்து

உரோமத்தை நீக்கி ஏடுகளாக்குவர். இவை பாப்பைரஸ் ஏடுகளைவிட உறுதியாகவும் மிருதுவாகவும் இருக்கும்.

பாப்பைரஸ் தாள்களைப் பொதுவாக ஒரத்தோடு ஒரம் ஒட்டி முப்பத்தைந்து அடி நீளம் வரை நெடுந்தாளாக்குவர். இந் நீண்ட தாளை ஒரு குச்சியில் சுருளாகச் சுற்றுவர். சுருளை இரண்டு அல்லது மூன்று அங்குலப் பத்திகளாகப் பிரித்து எழுதுவர். எழுதப்படும் நூலின் நீளம், சுருளின் நீளத்தைப் பொறுத்திருக்கும். லூக்கா நற்செய்தி நூலும், திருத்தூதுவர் செயல்களும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுருளில் அடங்கி விடும். சுருளை வாசிக்கும்போது இரு கைகளும் வேலை செய்யும். ஒரு கை வாசித்து முடித்த பகுதியைச் சுற்றும், மறு கை வாசிக்கவேண்டிய பகுதியை விரிக்கும். தோல் ஏடுகளும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் பாப்பைரஸ் தாள்களும்கூடப் பக்கம் பக்கமாக மடித்துத் தைக்கப்பட்டன. இப்படி தைக்கப்பட்ட நூல் **கோடெக்ஸ்** (Codex) என்றழைக்கப்பட்டது. தோல் ஏடு தடிப்பாகவும், உறுதியாகவும் இருந்தமையால் முன் எழுதினவற்றை அழித்து விட்டு அதில் புதிய செய்திகளை எழுதக்கூடியதாயிருந்தது. அவ்விதமாக முன்னெ முதியிருந்ததை அழித்துவிட்டு அதில் புதிதாக எழுதப்பட்ட நூல், **பாலிம்செஸ்ற்** (Palimpsest) என்றழைக்கப்பட்டது.

ஒன்பதாம் நூற்றாண்டு வரையிலும் இலக்கியங்கள் சதுர எழுத்துக்களில் (Uncials) எழுதப்பட்டன. இவ்வாறு எழுதுவதில் கிரேக்க எழுத்துக்கள் பெரிய எழுத்து வடிவில் (Capitals) எழுதப்பட்டன. ஒவ்வொரு எழுத்தும் தனித்தனியாக எழுதப்பட்டது. சொற்களுக்கிடையில் இடைவெளி கிடையாது, நிறுத்தற்குறிகளும் கிடையா. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து எழுதப்படும் ஏட்டிலிருந்து எழுதும் கோலை எடுக்காமலே எழுதுமுறை (Running hand) பயன்படுத்தப்பட்டது. இம்முறை சிறியக் கூட்டெழுத்து (Miniscule) எனப்பட்டது. இம்முறையில் எழுத்துக்கள் சிறியனவாகச் சங்கிலிக்கோவை போன்றிருந்தன. இது எழுதுவதற்கு எளிது. எடுத்துக்கொள்ளும் இடமும் சிறிது. இவ்விருமுறைகளிலும் சில முக்கியமான ஆள்களுடைய பெயர்களுக்கும், தொழில் நுணுக்கச் சொற்களுக்கும் சுருக்கக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டன. தொடக்கத்தில் இத்தகைய ஏடுகளில் அதிகாரப்பிரிவோ வசனப்பிரிவோ இருக்கவில்லை.

தொடக்க நூற்றாண்டுகளில் தமக்காக அல்லது தம் சபைகளுக்காகத் தனி ஆள்கள் பு.ஏ.இன் நகல்களை (Copies) தங்கள் விருப்பப்படி எழுதினார்கள். நான்காம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் உரோமைப் பேரரசின் அரசாங்க சமயமானபோது, வாணிக அடிப்படையில் கையெழுத்துப் பிரதிகள் எடுக்க ஒரு புதிய முறை கையாளப்பட்டது. அதாவது, ஓர் எழுத்தர் மூல ஏட்டை வாசிக்கக் கூலிக்கு எழுதும் பல எழுத்தர்கள் நகல்களை எழுதினார்கள். அதற்கும் பிந்தைய காலத்தில் சமயத் துறவிகள் வாழ்ந்த மடங்களில், அடிக்கடி தனிப்பட்ட துறவிகளால் கையெழுத்துப் பிரதிகள் எழுதப்பட்டன. அவ்வாறு கையெழுத்துப் பிரதிகளை எழுதிய எழுத்தரும் துறவியரும், தாம் பார்த்தெழுதிய கைப்பிரதிகளை மூல ஏடுகளோடு ஒத்துப் பார்த்துத் தம் கையெழுத்துப் பிரதிகளில் தவறுதலாக ஏற்பட்ட பிழைகளைத் திருத்தினர். சொல்லச் சொல்ல எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகளைத் திருத்தக் கூலி ஆட்கள் அமர்த்தப்பட்டனர். இன்றுள்ள கையெழுத்துப் பிரதிகளில் அவ்வாறு செய்த திருத்தங்கள் பல காணப்படுகின்றன.

3. பிழைகள் எழக் காரணங்கள்

பு.ஏ.இன் கைப்பிரதிகள் எப்படி எழுதப்பட்டன என்பதை நாம் கவனிக்கும்போது, நமக்குக் கிடைத்துள்ள இன்றைய விவிலியக் கையெழுத்துப் பிரதிகள் ஒன்றுக்கொன்று பல வேறுபாடுகள் உடையனவாக இருப்பது வியப்பன்று. விவிலிய ஏடுகளிலிருந்து கையெழுத்துப் பிரதிகள் எழுதப்பட்டபோது ஏற்பட்ட பிழைகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்திக் காட்டலாம்.

(அ) வேண்டுமென்றே மனதாரத் திட்டமிட்டுச் செய்திராத மாறுதல்கள்

எழுத்துக்களால் ஏற்பட்ட குழப்பம். சதுர எழுத்துக்களில் (Uncials) எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகளில் சில கிரேக்க எழுத்துக்களை வேறுபடுத்திக் கண்டறிவது கடினமாயிருந்தது.

எ.கா. கம்மா (gamma,γ), பை (pi,π), இற்றாவ் (tau,τ). சில சமயங்களில் இவை குழப்பத்தை உண்டுபண்ணின.

இருமுறை எழுதவேண்டியதை ஒருமுறை எழுதுவதால் ஏற்படும் பிழை (Haplography).

எ.கா. KUP E, KuP E என்று எழுதுவதற்குப் பதிலாக KUP E என்று மட்டும் எழுதுதல்.

ஒரே முடிவுடைய சொற்களால் உண்டாகும் பிழை (Homoioteleuton). முந்தைய சொற்களைப் போலவே பின்வரும் சொற்களும் ஒரேவிதமாக முடிகின்றமையால் பிந்தி வரும் சொற்களை விட்டுவிடல்.

கையெழுத்துப் பிரதிகளை எழுதும்போது தற் செயலாக ஏற்படும் பிழைபட்ட இரட்டுறு பகர்ப்பு அல்லது இரட்டிப்பு (Dittography). அதாவது ஒரே சொல்லை அல்லது சொற்றொடரை இருமுறை எழுதுதல்.

பல்வேறு உயிர்களும் இணையுயிர்களும் ஒரேவிதமாக ஒலிக்கப்படுவதால் உண்டான பிழை (Itacism). பு.ஏ. காலத்தில் கிரேக்க மொழியில் η, L, U, EL, OL, UL இவை எல்லாம் தமிழில் ஈ போன்று ஒரே மாதிரி உச்சரிக்கப்பட்டன. எனவே சொல்வதைக் கேட்டெழுதும்போது η μ ε T S என்பதற்கும் U μ ε T S என்பதற்கும் இடையே வேறுபாடு இருக்காது. இதனால் குழப்பம் எளிதில் உண்டாகும்.

(ஆ) வேண்டும் என்றே செய்த மாற்றங்கள்

ஒரு கவலையீனமான அல்லது களைப்புற்ற எழுத்தர் தற்செயலாகப் பிழைகள் விடுவது இயல்பு. ஆனால் கூர்மதிபடைத்த இறைப்பற்றுள்ள எழுத்தர் மூலப் பாடம் குறைவுடையதாய்த் தோன்றினால் அதனை நிறைவு செய்யத் துணிந்து மாற்றங்கள் செய்வார்.

1. **இலக்கணத் திருத்தங்கள்:** ஒரு கிரேக்க வாக்கியத்தின் இலக்கணம் பிழையுடையதாயிருப்பின் அதனை திருத்தல். எ.கா. திருவெ. 1:4ஆம் வசனத்தில் ὤν என்ற சொல்லுக்குப் பிறகு வரும் எழுவாய் வேற்றுமையை உடைமை வேற்றுமையாக மாற்றுவது.

2. ஒன்றுபோலிருக்கும்படி செய்யும் மாற்றங்கள்: ஓர் எழுத்தர் ஒரு விவிலியப் பகுதியை மற்றொரு விவிலியப் பகுதிபோல ஒன்றாயிருக்கும்படி மாற்றுவார். சிறப்பாக ஒரு நற்செய்தி நூலில் உள்ள ஒரு பகுதி பிற நற்செய்தி நூல்களில் அதனையொத்த பகுதிகளோடு ஒத்திருக்கும்படியாக மாற்றுவது வழக்கம்.

எ.கா. சில கையெழுத்துப் பிரதிகளில் மத்தேயுவில் உள்ள ஆண்டவர் கற்றுத் தந்த இறைவேண்டலின் முடிவு லூக்காவில் உள்ள ஆண்டவருடைய இறைவேண்டலோடு கூட்டப்படுகிறது.

3. சிறு பிழைகளைத் திருத்தல்: மூலப் பாடத்தில் வரலாற்றுப் பிழையோ, புவியியல் பிழையோ காணப்படின் எழுத்தர் தம் மனம்போல தம் சொந்தப் பிரதியில் திருத்துவார்.

எ.கா. மார்க்கு நற்செய்தி நூலில் 1:2இலிருந்து தொடர்ந்துவரும் இறைவாக்கு வசனம் எசாயாவின் இறைவாக்கு என்கிற பிழை பல கையெழுத்துப் பிரதிகளில் திருத்தப் பட்டிருக்கிறது.

4. ஓரக் குறிப்புக்களைச் சேர்த்தெழுதல்: திருத்தங்களையும் விளக்கக் குறிப்புக்களையும் ஓரத்தில் எழுதுவது எழுத்தர் வழக்கம். அவருக்குப்பின் வந்த ஓர் எழுத்தர் அந்தக் கையெழுத்துப் பிரதியின் ஓரங்களில் காணப்படும் விளக்கக் குறிப்புக்களைத் திருத்தங்கள் என்று சேர்த்தெழுதுவார்.

5. கொள்கை தொடர்பான மாறுதல்கள்: ஒப்புதல் பெற்ற கொள்கையோடு ஒத்திருக்கும்படி, அல்லது கொள்கைப் பிழையை நீக்கும்படி சில சமயங்களில் எழுத்தர் மாறுதல்கள் செய்வர்.


எ.கா. யோசேப்பு இயேசுவின் உண்மையான தந்தை அல்லர் என்பதைத் தெளிவாக்க மத். 1:16 சில கையெழுத்துப் பிரதிகளில் மாற்றப்பட்டிருக்கிறது.

4. குடும்ப வழி முறை

மூலப் பிரதியைப் பார்த்தெழுதிய முதல் கையெழுத்துப் பிரதியிலேயே பிழைகள் நுழைந்திருக்கும். மேலும் தொடக்கக் காலத்தில் பு.ஏ.இன் மூலாதாரங்களை மறைநூல் என்று போற்றி மதிக்கும்வரை ஒவ்வொரு பிரதியும் எல்லா விவரங்களிலும் மூலத்தை ஒத்து இருக்கும்படி சிறப்புக் கவனம் செலுத்தப்படவில்லை. அம்மூலாதாரங்களை மறைநூல் என்று ஒப்புக்கொண்ட பிறகுதான், சமயக் கொள்கைகளையும், வரலாற்றுத் திட்ப நுட்பங்களையும் பாதுகாக்குமாறு, வேண்டுமென்றே மாறுதல்கள் செய்யும் எண்ணம் பிறந்தது. இதற்கு முன்னுள்ள பகுதிகளில் நாம் விவரித்த விதங்களில் விரைவில் பிழைகள் பெருகின. பு.ஏ.இன் மூலாதாரங்கள், இறை அகத்தூண்டுதலால், அருள் கிளர்ச்சியால் எழுதப்பட்டவை என்பது கிறிஸ்தவ நம்பிக்கை. எனினும் எந்த நூலிலிருந்தும் ஒரு பிரதி கையால் எழுதி எடுக்கப்படும்போது, அந்நூலில் பிழைகள் ஏற்படுவது இயற்கையே. அவ்வாறு பு.ஏ. ஏடுகளில் பிழை ஏற்படாதபடிக்கு கடவுள் சிறப்பான முறையில் காப்புச் செய்யவில்லையாம்.

பிற்காலத்திய பாட வேறுபாடு தொடங்கி முந்தைய மூலப் பாடத்திற்குட் செல்வதற்குக் குடும்பவழி முறை நமக்குத் துணையாகும். அதாவது ஒரு கையெழுத்துப் பிரதி எதிலிருந்து பார்த்தெழுதப்பட்டதோ, அந்தக் கையெழுத்துப் பிரதியில் உள்ள பிழைகளே அதிலும் காணப்படும். அப்படியே இந்தப் பிழைகளுள்ள பிரதியைப் பார்த்தெழுதப்படும் பிரதிகள் அனைத்திலும் அப்பிழைகள் இருக்கத்தான் செய்யும். அவை மட்டுமா? அப்பிழைகளோடு புதிய பிழைகளும் சேரும். இவ்விதம் உருவாகிய பல்வேறு கையெழுத்துப் பிரதிகளையும் ஒப்பிட்டுப் பார்த்து எந்தெந்தப் பிரதிகளில் ஒரேவிதமான பிழைகள் உளவோ அந்தப் பிரதிகள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று அவற்றை ஆய்வாளர் பிரிப்பர். இங்ஙனமே எல்லாப் பிரதிகளையும் வெவ்வேறு குடும்பங்களாகத் தொகுப்பர். இவ்வாறு பிரிக்கப்பட்ட குடும்பங்களிலிருந்து பாட வகைகளைத் (Text types) திருப்பி அமைப்பர். இப்படி வகுக்கப்பட்டவைகளை அவை தோன்றிய இடவாரியாக இணைப்பர்.

இதனை ஓர் எளிய எடுத்துக்காட்டு மூலம் இனிது விளக்கலாம். கிரேக்க நாட்டிலுள்ள ஒரு சபையால் பாதுகாத்து வைக்கப்பட்ட ஒரு பு.ஏ. திருமுகக் கையெழுத்துப் பிரதியை அ என்ற எழுத்து குறிப்பதாக வைத்துக்கொள்ளுவோம். இந்த அ பிரதியைப் பார்த்து மூவர் தனித்தனியாக ஆ,இ,ஈ என்ற பிரதிகளை எழுதுகின்றனர். இவர்கள் பார்த்தெழுதிய பிரதிகளில் ஒவ்வொருவரும் சிற்சில பிழைகள் விட்டிருப்பர். மூன்று பிரதிகளிலும் பிழைகள் ஒரேவிதமாயிரா. முதல் எழுத்தாளர் தாம் எழுதிய ஆ என்ற பிரதியோடு உரோமைக்கும். இரண்டாமவர் தாம் எழுதிய இ என்ற பிரதியோடு அலெக்சாந்திரியாவிற்கும். மூன்றாமவர் தாம் எழுதிய ஈ என்ற பிரதியோடு அந்தியோகியாவிற்கும் போகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். உரோமையில் ஆ என்ற பிரதியிலிருந்து க,ங என்ற இரு கையெழுத்துப் பிரதிகளும், அலெக்சாந்திரியாவில் இ என்ற பிரதியிலிருந்து ச,ஞ,ட,ண, த,ந,ப,ம, ய,ர என்ற பத்துப் பிரதிகளும் எழுதப்படுகின்றன. இவையாவும் கிரேக்க மொழியில் உள்ள கையெழுத்துப் பிரதிகள். இவற்றைப் பின்வருமாறு விளக்க வரைப்படம் மூலம் விவரிக்கலாம்.



திருவிவிலியத் துணை நூல்

இந்த விளக்க வரைப்படத்தில் க,ங என்ற பிரதிகள் ஆ என்ற பிரதியிலிருந்த பிழைகளோடு தமக்கே உரிய பிழைகளும் அடங்கியனவாயிருக்கும். அவ்வாறே ச,ஞ,ட,ண,த,ந,ப,ம,ய,ர என்ற பத்துப் பிரதிகளும் இ என்ற பிரதியிலிருந்த பிழைகளோடு தமக்கே உரிய பிழைகளும் உடையனவாயிருக்கும். பிற்காலத்தில் இவற்றை ஆராயும் கூர்மதிமிக்க ஓர் ஆய்வாளருக்கு அ,ஆ,இ என்ற பிரதிகள் கிடையாதுபோயினும், அவர் க,ங. என்ற பிரதிகளுக்குப் பொதுவாயுள்ள பிழைகளையும். ச,ஞ,ட,ண. த,ந,ப,ம,ய,ர என்ற பிரதிகளுக்குப் பொதுவாயுள்ள பிழை களையும். ஈ என்ற பிரதிக்குச் சிறப்பாயுள்ள பிழைகளையும் வைத்து இப் பிரதிகளை மூன்று குடும்பங்களாகப் பிரிக்க இயலும். மேலும் க,ங, என்ற குடும்பத்துக்குப் பொதுவான பாட வேறுபாடுகளையும் ச,ஞ,ட,ண,த,ந,ப,ம,ய,ர என்ற குடும்பத்துக்குப் பொதுவான பாட வேறுபாடுகளையும் வைத்து முறையே ஆ,இ என்ற கையெழுத்துப் பிரதிகளை உத்தேசமாகத் திருத்தி அமைக்கலாம்.

பிறிதொரு மிக முக்கியமான குறிப்பை இந்த எடுத்துக்காட்டில் காணலாம். ஒரு குறிப்பிட்ட இடத்தில் ச,ஞ,ட,ண,த,ந,ப,ம,ய,ர என்ற பத்து கையெழுத்துப் பிரதிகளிலும் ஒரு பாட வேறுபாடு இருக்கிறது என்றும், ஈ என்ற கையெழுத்துப் பிரதியில் மட்டும் வேறொரு பாடவேறுபாடு இருக்கிறது என்றும் வைத்துக் கொள்வோம். இதில் பத்துப் பிரதிகளிலுமுள்ள சான்றே வலிமை பொருந்தியது என்றும், ஒரு பிரதியில் மட்டும் காணப்படும் பாடவேறுபாட்டை ஏற்கமுடியாது என்று வாதாடுவது பொருந்தாக்கூற்று. ஏனெனில், ச,ஞ,ட,ண, த,ந,ப,ம,ய,ர என்ற பிரதிகளில் காணப்படும் பாடவேறுபாடு பத்து தனிப்பட்ட சான்றுகளால் நிலைநாட்டப்படவில்லை. அப் பாடவேறுபாடு ஒரே கையெழுத்துப் பிரதியான இ என்பதிலிருந்தே தோன்றியது. எனவே ஒன்றுக்கு எதிரே ஒன்றே அல்லாது ஒன்றுக்கு எதிராகப் பத்து அன்று. இப் பிரச்சனையைக் கையெழுத்துப் பிரதிகளின் எண்ணிக்கையை வைத்து முடிவு செய்யாது, பிற காரணங்களை வைத்தே முடிவு செய்தல் வேண்டும்.

இதில் மேலும் ஒரு படி செல்லலாம். நாம் ஆராய்ந்து கொண்டிருக்கும் திருமுகத்தின் ஆ என்ற கையெழுத்துப் பிரதியை அடிப்படையாகக்கொண்டு ஒருவர் இலத்தீன் மொழியில் அந்தத் திருமுகத்தை மொழிபெயர்க்கிறார் என்றும், அவ்வாறே வேறொருவர் த என்ற கையெழுத்துப் பிரதியின் அடிப்படையில் அலெக்சாந்திரியாவில் கோப்டிக் மொழியில் அத்திருமுகத்தை மொழிபெயர்க்கிறார் என்றும், ஈ என்ற கையெழுத்துப் பிரதியின் அடிப்படையில் அந்தியோகியாவில் சிரிய மொழியில் இன்னொருவர் அந்தத் திருமுகத்தை மொழிபெயர்க்கிறார் என்றும் வைத்துக் கொள்ளுவோம். எந்தெந்தப் பிரதியிலிருந்து இந்த மொழிபெயர்ப்புக்கள் தயாரிக்கப்பட்டனவோ அந்தந்தப் பிரதிகளில் இருந்த பிழைகள் இவற்றிலும் இருக்கும். மேலும் இவை எந்தக் கையெழுத்துப் பிரதிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டனவோ அந்தக் கையெழுத்துப் பிரதிக் குடும்பத்தைச் சேர்ந்ததாயிருக்கும்.

மேலும் உரோமைநகரத்தாரான ஓர் எழுத்தாளர் இந்தத் திருமுகத்திலிருந்து கிரேக்கத்தில் மேற்கோள் காட்டுவாராயின், அவர் ஆ அல்லது க அல்லது ங என்ற கையெழுத்துப் பிரதிகளையே பயன்படுத்துவார். அவருடைய மேற்கோள்கள் அதே மூலப் பாடவகையைச் சேர்ந்தனவாயிருக்கும். இவ்விதி சில மாறுதல்களுடன் அலெக்சாந்திரியா அல்லது அந்தியோகியாவிலுள்ள கிறிஸ்தவ எழுத்தாளருக்கும் பொருந்தும். இந்தச் சான்றின் அடிப்படையில், பிற்கால ஆராய்ச்சியாளர் ஒருவர், மேலே கண்ட மூன்று மூலப் பாடங்களையும் பிரித்தெடுத்த பிறகு க,ங என்ற கையெழுத்துப் பிரதிகளில் காணப்படுகிற மூலப் பாட வகையை உரோமையைச் சேர்ந்தது என்று கொள்ளுவார். ஏனெனில் உரோமையில் வாழ்ந்ததாகத் தெரிந்த ஓர் எழுத்தாளர் அப்படிப்பட்டப் பாட வகையைப் பயன்படுத்தி வந்தார். அதே பாட வகைதான் இலத்தீன் மொழிபெயர்ப்புக்கு அடிப்படை என்பதனாலும் அந்த முடிவு உறுதிப்படுத்தப்படுகிறது. ஏனெனில் இம் மொழிபெயர்ப்பு உரோமையைத் தலைநகராகக் கொண்டதும், இலத்தீன் மொழி பேசப்படுவதுமான நாட்டில் எங்கோ ஓரிடத்தில் தோன்றியிருக்கும். இதே அடிப்படையில் பிற குடும்பங்களையும் அலெக்சாந்திரியாவோடும் அந்தியோகியாவோடும் தொடர்புபடுத்தலாம்.

மேலே கண்ட எடுத்துக்காட்டு, புனைவுக்கோலேயன்றி வேறன்று. மிக்கக் கருகலும் விரிவுமான ஓர் ஆராய்ச்சியை எளிய முறையில் விளக்க நாம் அதனைக் கையாண்டோம். ஏனெனில், இந்தக் கொள்கைகளையும் இந்த முறைகளையும் பயன்படுத்தித்தான் இக்கால விவிலியப் புலவர்கள் முக்கியமான பாட வகைகளை வேறுபடுத்துவதில் வெற்றி கண்டுள்ளனர். அவற்றைப் பின்வருமாறு விளக்குவோம்.

5. முக்கிய பாட வகைகள்

1. கோய்னே அல்லது பைசான்டைன் பாடம்: இது கிடைக்கப்பெற்ற பல கையெழுத்துப் பிரதிகளை ஒத்துப் பார்த்து உண்டாக்கப்பட்ட பாடமாகும். ஒருவேளை கி.பி. 312இல் இறந்த, அந்தியோகியா வாசியான லூசியன் என்பவர் அதனை உண்டாக்கியவராயிருந்திருக்கலாம். கி.பி. நான்காம் நூற்றாண்டின் பிந்தையப் பகுதியில் பைசான்டைன் திருச்சபையால், இது பு.ஏ.இன் அதிகாரப்பூர்வமான பாடமாக ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன்பின் கிரேக்க மொழிபேசும் சபைகள்தோறும் இதுவே வழங்கலாயிற்று. 5ஆம் நூற்றாண்டிற்குப் பின் தோன்றிய கையெழுத்துப் பிரதிகள் பெரும்பாலும் இதன் செல்வாக்கிற்குட்பட்டவையே. பதினாறாம் நூற்றாண்டில், இந்த வகையைச் சேர்ந்த கையெழுத்துப் பிரதிகளையே, கிரேக்கப் பு.ஏ.இன் முதல் அச்சுப் பதிப்புக்களுக்கு அடிப்படையாகப் பயன்படுத்தினர். எனவே இவ்வகையான கிரேக்க பாடம்தான் ஒப்புக்கொள்ளப்பட்ட மூலம் என்கிற மூலப் பாடத்திற்கு அடிப்படை ஆயிற்று. ஒப்புக்கொள்ளப்பட்ட மூலப் பாடம் என்பது பதினாறாம் நூற்றாண்டு முதல் 1881 வரை பொதுவாய்த் திருச்சபையில் ஒப்புக்கொள்ளப்பட்டுத் தமிழ் உட்பட பிற மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட மூலப் பாடத்தைக் குறிக்கிறது.

முக்கிய பாட வகைகளில் இதுதான் மிகப் பிந்தையதும், மூலப் பாடத்துக்கு மிகவும் தூரமானதுமாகக் கருதப்படுகிறது. அதிலே தெளிவு, சமம், உணர்ச்சி, ஊறுபாடின்மை ஆகியவை பொருந்தியதும், முந்தைய பாட வகைகளில் முக்கியமான எதையும் விட்டுவிடாததுமான ஒரு மூல பாடத்தைப் பெற முயற்சி செய்யப்பட்டது. அதன் விளைவாக முந்தைய பாடங்களில் இரண்டு வேறுபட்ட பாடங்கள் காணப்படின், பைசான்டைன் பாடத்தில் அவை இணைக்கப்பட்டுள்ளன. விடுதல்கள் அரிது. ஆனால், விளக்கச் சேர்க்கைகள் அதிகம். இந்த மூலப்பாடம் கீழ்க்காணும் பிரதிகளில் காணப்படுகிறது.

நற்செய்தி நூல்கள் மட்டும். A

பொதுவாக, பல மினிஸ்கியூல் கையெழுத்துப் பிரதிகள், கிறிசொஸ்தமும், பிந்தைய சபைத் தந்தையரும்.

8. மேற்கத்திய பாடம்: மார்சியோன், ஐரேனியு, தெர்த்துல்லியன் ஆகியோர் இவ்வகை மூலப் பாடத்தையே பயன்படுத்தியமையால், இது இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியது என்று கொள்ளலாம். அது புறச்சார்பற்றது, கட்டுப்பாடற்றது; அதில் சொற்களும், சொற்றொடர்களும், முழு வாக்கியங்களும் மாற்றப்படுகின்றன, விட்டு விடப்படுகின்றன, உள்ளே நுழைக்கப்படுகின்றன. இந்த மாற்றங்களின் பயனாக அடிக்கடி அதில் ஒரு தனி வலிமை காணப்படுகிறது. இம் மூலப் பாடம் சுருக்கிக் கூறுவதை விடப் பெருக்கிக்கூறும் தன்மையது. ஆனால், அதன் வழக்கமானப் பாணிக்கு எதிரிடையாக சில இடங்களில் மேற்கத்தியப் பாடம் பிற பாட வகைகளில் உள்ள சொற் றொடர்கள் அல்லது வாக்கியங்கள் இல்லாத குறைபாடு உடையதாயிருக்கிறது. இந்தக் குறைபாடு சிறப்பாக லூக்கா நற்செய்தி நூலின் பிந்தைய அதிகாரங்களில் காணப்படுகிறது (லூக். 22:19,20; 24:12). வெஸ்ட்காட், கார்ட் ஆகியோர் இத்தகைய வாசகங்களை மேற்கத்திய இடைச் செருகல் இல்லாதவை என்றனர்.[1] அவற்றில் மேற்கத்திய கையெழுத்துப் பிரதிகளில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சுருக்கப் பாடம், மூலப் பாடத்துக்கு மிக அண்மையிலுள்ளது என்பது அன்னவர் கருத்து. ஸ்ட்ரீட்டர் மேற்கத்திய குடும்பத்தை மேலும் இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளார்.[2] அவை ஆப்பிரிக்க, ஐரோப்பிய

அடையாளம்	பெயர்	இடம்	காலம்	பொருளடக்கம்	பாட வகை
ℰ	கோடெக்ஸ் சினாய்ற்றிகஸ்	லண்டன்	4ஆம் நூற்றாண்டு	புதிய ஏற்பாடு முழுவதும்	அலெக்சாந்திரிய வகை
A	கோடெக்ஸ் அலெக்சாண்டிரியனஸ்	லண்டன்	5ஆம் நூற்றாண்டு	புதிய ஏற்பாடு முழுவதும்	(நற்செய்தி நூல்களில்) பைசான்டைன் வகை (பிறவற்றில்) அலெக்சாந்திரியன் வகை
B	கோடெக்ஸ் வற்றிக்கானஸ்	உரோம்	4ஆம் நூற்றாண்டு	தீமோத்தேயு, தீத்து, திருவெளிப்பாடு தவிர்ந்த புதிய ஏற்பாடு	அலெக்சாந்திரியன் வகை
C	கோடெக்ஸ் ஈஃப்ரேமி	பாரீஸ்	5ஆம் நூற்றாண்டு	புதிய ஏற்பாடு முழுவதும்	கலந்தது
	(இந்தப் பிரதி ஒரு பாலிம்செஸ்ற் ஆக இருக்கிறது).				
D	கோடெக்ஸ் பீசி	கேம்ப்ரிட்ஜ்	6ஆம் நூற்றாண்டு	நற்செய்தி நூல்களும் திருத்தூதுவர் செயல்களும்	மேற்கத்திய வகை
L	கோடெக்ஸ் ரேகியஸ்	பாரீஸ்	8ஆம் நூற்றாண்டு	நற்செய்தி நூல்கள்	அலெக்சாந்திரிய வகை
W	வ்ரியர் கையெழுத்துப் பிரதி	வாஷிங்டன்	5ஆம் நூற்றாண்டு	நற்செய்தி நூல்கள்	கலந்தது
H	கோடெக்ஸ் கொரிடேதி	திபிலிஸ்	9ஆம் நூற்றாண்டு	நற்செய்தி நூல்கள்	(மார்க்குவில்) செசரியன் வகை (மற்றவற்றில்) பைசான்டைன் வகை

[1] கிரேக்க மொழியில் புதிய ஏற்பாடு - 1881.

[2] நான்கு நற்செய்தி நூல்கள், அவற்றின் மூல பாட ஆராய்ச்சி - 1924.

(இத்தாலியும் காலும்) பிரிவுகளே. இந்தப் பாட வகைக்கு முக்கியச் சான்றுகளாவன.

ஆப்பிரிக்க. W (மார். 1:1-5:30)
k சிப்பிரியான்

ஐரோப்பிய. D a b ஐரேனியு

பொது. முற்காலத்துப் பழைய இலத்தீன் மொழிபெயர்ப்பு, இலத்தீன் சபைத் தந்தையர்.

3. **செசரியப் பாடம்:** இவ்வகையான பாடம் ஒரு தனிப் பட்ட குடும்பமாக ஸ்ட்ரீட்டரால் வரையறுக்கப்பட்டது. கி.பி. 231இல் அலெக்சாந்திரியாவிலிருந்து செசரியாவுக்குச் சென்ற பிறகு, ஒரிகென் (Origen) பயன்படுத்திய பாடத்தை இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த கையெழுத்துப் பிரதிகளோடு ஒப்பிட்டுப்பார்த்து இதனை செசரியாவோடு தொடர்பு படுத்தினார். இந்தப் பாடம் கலப்புடையதாகத் தோன்றுகிறது. ஏனெனில், இதில் மேற்கத்தியப் பாடத்தில் காணப்படுகிற பாடவேறுபாடுகளும், அலெக்சாந்திரியாப் பாடத்தில் காணப்படுகிற பாடவேறுபாடுகளும் உள்ளன. மேற்கத்தியப் பாடம், அலெக்சாந்திரியப் பாடம் ஆகியவை போலவே இதுவும் ஒரு தனிப் பாட வகையாக எண்ணப்படத்தக்கதா என்பதையும், இது எங்கே எவ்வாறு தோன்றியது என்பதையும்பற்றி இன்னமும் ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

இந்தப் பாட வகைக்கு முக்கிய சான்றுகளாவன

P^{45} W (மார். 5:31-16:20) H (மார்க்குவில் மட்டும்) குடும்பம் 1. குடும்பம் 13, 28, 565, 700. ஒரிகென், இசுபியு.

பழைய சிரியாக்கு மொழிபெயர்ப்புக்கும் (சிரியாக் 1, c), செசரியக் குடும்பத்திற்கும் ஓரளவு ஒற்றுமை இருப்பது கவனிக்கத்தக்கது. பழைய சிரியாக் மொழிபெயர்ப்பு அந்தி யோகியா பாடத்தைச் சேர்ந்தது என்று ஸ்ட்ரீட்டர் கருதினார். மேலும் அவர் மேற்கத்தியப் பாடக் குடும்பத்தில் ஆப்பிரிக்க, ஐரோப்பியப் பிரிவுகள் இருப்பதுபோலவே கீழ் நாட்டு பாட வகை என்கிற இன்னொரு பாட வகையில் அந்தியோகியக் குடும்பமும் செசரியக் குடும்பமும் ஆக இரண்டு உள் பிரிவு கள் இருக்கின்றன என்றும் எண்ணினார். ஏனையோர் அதை மறுத்துப் பழைய சிரியாக் மொழிபெயர்ப்புக்கும், மேற் கத்தியப் பாடத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பர்.

4. **அலெக்சாந்திரியப் பாடம்:** அலெக்சாந்திரியா கிரேக்கக் கலைக்கும் புலமைக்கும் பெயர்பெற்றதாயிருந்தது. இவை அலெக்சாந்திரியப் பாடக் குடும்பத்தில் பிரதிபலிக்கப் படுகின்றன. இது சுருங்கக் கூறுதல், மொழி நடை, நயம், உயிரியத் திட்ப நுட்பம் ஆகிய இலக்கணங்கள் உடையது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இப் பாடத்தின் தொன்மை வடிவம் வழக்கிலிருந்ததாக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பாப்பைரஸ் ஏடுகள் காட்டுகின்றன. வெஸ்ட்காட்டும் கார்ட்டும் இப் பாட வகை பிறவற்றைவிட மிக மிகச் சிறந்தது என்றும், பு.ஏ.இன் மூலப் பாடத்திற்கு மிக நெருங்கிய தொடர்புடையது என்றும் மதித்தனர். அன்னவருக்குப் பின் வந்த ஆய்வாளர்கூட இதன் உயரிய மதிப்பை ஒப்புக் கொண்டபோதிலும், அது ஒப்பற்றது என்று மதிக்கவில்லை. அதன் முக்கிய அமைப்புக்களாவன.

P^{75} ℵ B L 33 கோப்டிக் மொழிபெயர்.

6. புதிய ஏற்பாட்டு மூலப் பாடத்தின் முக்கிய சான்றுகள்

(அ) கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகள்

1. **பாப்பைரஸ் ஏடுகள்:** எகிப்திய பாலைநிலத்தில் அண்மையில் பாப்பைரஸ் தாள்களில் எழுதப்பட்ட பல கடிதத் துண்டுகளும் பட்டியல்களும் பிறவும் கண்டு பிடிக் கப்பட்டுள்ளன. இந்தப் பாப்பைரஸ் துண்டுகளில் பு.ஏ. பகுதிகள் பலவும் கிடைத்துள்ளன. அவை துண்டு துண்டுகளாக உள்ளன. இவை நான்காம், மூன்றாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. ஆகவே நமக்குக் கிடைத்துள்ள சதுர எழுத்துக் கையெழுத்துப் பிரதிகள் எழுதப் பட்டதற்கு முந்தையக் காலத்தில் பு.ஏ.இன் மூலப் பாடம் எந்நிலைக்கு வந்திருந்தது என்றறிய இவை மிக்க உதவியாயிருக்கின்றன.

சில முக்கிய பு.ஏ. பாப்பைரஸ் துண்டுகள் கீழ்க்காண்பவையே.

P^{45}-பெயர். செஸ்டர் பீட்டி பாப்பைரஸ்.
காலம். மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கம்.
பொருளடக்கம். திருத்தூதுவ செயல்களிலும், நற்செய்தி நூல்களிலும் சில பகுதிகள்.
பாட வகை. செசரியப் பாட வகை (ஓரளவு).
P^{53}-பெயர். ரைலாண்டஸ் பாப்பைரஸ் 457.
காலம். 2ஆம் நூற்றாண்டின் முதல் அரை நூற்றாண்டு.
பொருளடக்கம். யோ. 18;31-33,37-38 (இதுதான் பு.ஏ.இன் மிகத் தொன்மையான கையெழுத்துப் பிரதி. இவ்வளவு தொடக்கக் காலத்திலேயே யோவான் நற்செய்தி நூல் எகிப்தில் பிரபலமாயிருந்திருக்கிறது என்பதை இது மெய்ப்பிக்கிறது).

P^{66}-பெயர். பாட்மெர் பாப்பைரஸ் II.
காலம். சுமார் கி.பி. 200.
பொருளடக்கம். யோவான் நற்செய்தி நூலில் சில பகுதிகள்.
பாட வகை. மேற்கத்தியப் பாட வகையும், அலெக்சாந்திரியப் பாட வகையும் கலந்தது.
P^{75}-பெயர். பாட்மெர் பாப்பைரஸ் XIV, XV.
காலம். மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கம்.
பொருளடக்கம். லூக்கா, யோவான் நற்செய்தி நூல்கள்.
பாட வகை. அலெக்சாந்திரியப் பாட வகை.

2. **சதுர எழுத்தேடுகள்:** இவை 4 முதல் 9ஆம் நூற் றாண்டு வரை உள்ளவை. தோல் ஏடுகளில் சதுர எழுத்துக் களில் எழுதப்பட்டவை. கீழ்வரும் எட்டு ஏடுகளும் சதுர எழுத்தேடுகளுள் முக்கியமானவை, அவை எபிரேய, உரோமை அல்லது கிரேக்க எழுத்துக்களால் குறிக்கப்படுகின்றன.

3. **கூட்டெழுத்து ஏடுகள்:** இவை கோடெக்ஸ் வடிவில் தைக்கப்பட்ட தோல் ஏடுகளில் 9ஆம் நூற்றாண்டு முதல் எழுதப்பட்டன. அவை அரபு எண்களால் குறிக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட எல்லாமே பைசான்டைன் பாட வகை. வேறு பாட வகைகளைச் சேர்ந்த முக்கியமானவை சில. அவை.

குடும்பம் 1. ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடைய 1, 118, 131, 209உம் பிறவும். இவை 11ஆம், 12ஆம் நூற்றாண்டு களைச் சேர்ந்தவை. இவற்றின் பாட வகை செசரியன் வகை.

குடும்பம் 13. இது பிறிதொரு வேறுபடுத்தக்கூடிய தொகுதி. இதில் 13, 69, 124, 346 முதலியன அடங்கும். 11 முதல் 15ஆம் நூற்றாண்டுகள் வரையுள்ள காலம். செசரியன் பாட வகையை ஒத்தது.

28.11ஆம் நூற்றாண்டு. நற்செய்தி நூல்கள். செசரியப் பாட வகை.

33.9ஆம் நூற்றாண்டு. பு.ஏ. முழுவதும், அலெக்சாந்திரியப் பாட வகை, B உடன் நெருங்கிய தொடர்புடையது.

81. கி.பி. 1044. திருத்தூதுவர் செயல்கள். அலெக்சாந்திரியப் பாட வகை.

565. 9ஆம் நூற்றாண்டு. நற்செய்தி நூல்கள். மார்க்குவில். செசரியப் பாட வகை, H உடன் நெருங்கிய தொடர்புடையது.

579. 13ஆம் நூற்றாண்டு. நற்செய்தி நூல்கள். மத்தேயுவில் பைசான்டைன் பாட வகை. பிறவற்றில் அலெக்சாந்திரியப் பாட வகை.

700. 11ஆம். 12ஆம் நூற்றாண்டு. நற்செய்தி நூல்கள். சில செசரிய வாசகங்களோடு கலந்த அலெக்சாந்திரியப் பாட வகை.

4. விவிலியப் பகுதித் திரட்டுகள்: இவை சதுர எழுத்துக்களின் காலத்தில் தயாரிக்கப்பட்டவை, இறைவழிபாட்டின் போது ஆண்டு முழுவதும் வாசிக்கப்படும்படியாகப் பு.ஏ. இலிருந்து திரட்டப்பட்ட மறைநூல் பாடங்கள். அவை தற் காலத்தில் கிரேக்க மொழியில் அச்சிடப்பட்ட பு.ஏ. பதிப்புக் களில் l என்ற எழுத்தை முன்னிடைச் சொல்லாகக் கொண்ட ஓர் எண்ணால் மேற்கோள் காட்டப்படுகின்றன. எ.கா. l 10, l 76. பொதுவாக அவை பைசான்டைன் பாட வகையைச் சேர்ந்த பாடமுடையதாயுள்ளன. ஆயினும் சில இடங்களில் பைசான்டைன் பாடத்திற்கு எதிராக அலெக்சாந்திரியப் பாடத்தை ஆதரிக்கின்றன.

(ஆ) மொழிபெயர்ப்புக்கள்

இவை தொடக்க நூற்றாண்டுகளில் மறைந்துபோன கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை. எனவே அவை முன்னைய பாட வகை களுக்குச் சான்றுகளாயுள்ளன. எனினும் மூல முதலான கிரேக்க மூலப் பாடத்தைப் போலவே, ஒவ்வொரு மொழி பெயர்ப்பின் மூலப் பாடமும் ஒருவர் கைவிட்டு இன்னொருவர் கைக்கு வரும்போது பிழை மலிந்ததாயிருந்தது. மூல மொழிபெயர்ப்பிலிருந்து ஒரு மொழிபெயர்ப்புக் கையெழுத்துப் பிரதி எவ்வளவு சேய்மையில் இருக்கிறதோ அவ்வளவிற்கு அது கிரேக்க மூலப் பாடத்திற்குப் பலவீனமான சான்றா யிருக்கிறது. மேலும் ஐயத்திற்கும் வாதத்திற்கும் இடமான சில வாசகங்களில் அவை நமக்குப் பயன்படா. ஏனெனில், கிரேக்க இலக்கணத்திலும் தொடரியலிலும் வருகிற சில குறிப்புக்களை இலத்தீன் மொழியிலோ, சிரியாக் மொழியிலோ, கோப்டிக் மொழியிலோ மொழிபெயர்க்க முடியாது. பின்வருவன மிக முக்கிய மொழிபெயர்ப்புக்களாகும்.

1. இலத்தீன்:

(அ) பழைய இலத்தீன் மொழிபெயர்ப்புக்கள்:

இவை வட ஆப்ரிக்கா, இத்தாலி, கால் என்ற வெவ் வேறு பகுதிகளில் இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆயத்தம் செய்யப்பட்டன. பழைய இலத்தீன் மொழிபெயர்ப்பின் கையெழுத்துப் பிரதிகள் மேற்கத்தியப் பாட வகையைச் சேர்ந்தவை. அவை சிறிய உரோமன் எழுத்துக்களால் குறிக்கப்படுகின்றன.

அதன் முக்கிய சான்றுகளாவன.

ஆப்ரிக்கப் பிரிவு-e, k

ஐரோப்பியப் பிரிவு-a, b, d

(ஆ) வல்கேட்:

இது ஏரோம் என்பவரால் 383-386இல் திருத்தப்பட்ட இலத்தீன் விவிலியம், இது b போன்ற பழைய இலத்தீன் கையெழுத்துப் பிரதிகளையும், அலெக்சாந்திரியப் பாட வகையைச் சேர்ந்த சில கிரேக்க கையெழுத்துப் பிரதிகளையும் அடிப்படையாகக் கொண்டது எனத் தோன்றுகிறது. மிகுதியான வேறுபாடுகள் அல்லது பாடவேறுபாடுகளுடைய எண்ணா யிரத்திற்கதிகமான வல்கேட் கையெழுத்துப் பிரதிகள் இப்போதுள்ளன.

2. சிரியாக்கு:

(அ) பழைய சிரியாக் மொழிபெயர்ப்பு: இது மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மொழிபெயர்க்கப்பட்டது. இதற்கு சினேய்ற்றிக் சிரியாக் (syr^s). கியுரெட்டோனிய சிரியாக் (syr^c) ஆகிய இரண்டு கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. இக்கையெழுத்துப் பிரதிகளில் அடங்கிய பாட வகை மேற்கத்திய பாட வகையோடு தொடர்புள்ளது. எனினும் முழு ஒற்றுமை இல்லை. ஸ்ட்ரீட்டருடைய அந்தியோகிய பாடத்தின் முக்கிய சான்றுகளே அவை.

(ஆ) சிரியாக்கு வல்கேட். இது பெசட்டா என்றும் அழைக்கப்படும் (syr^p). இம் மொழிபெயர்ப்பு கி.பி. 411-436இல் செய்யப்பட்டது. இது சிரியத் திருச்சபையால் பொது வாய் ஒப்புக்கொள்ளப்பட்ட விவிலியமாய் விளங்கிற்று. இது பைசான்டைன் பாட வகையைச் சேர்ந்தது. ஆயினும், அலெக் சாந்திரியப் பாடங்களும் மேற்கத்தியப் பாடங்களும் இதில் சில இடங்களில் காணப்படுகின்றன. வேறு சில சிரியாக் மொழிபெயர்ப்புக்களும் உண்டு. அவை முக்கியமாக பிலாக் சேனிய சிரியாக் (syr^{ph}). கார்க்கிளியன் சிரியாக் (syr^h) மொழிபெயர்ப்புக்களே. முறையே 508இல், 616இல் செய்யப்பட்ட பெசட்டாவின் திருத்திய மொழிபெயர்ப்புக்கள் இவை. பாலஸ்தீனிய சிரியாக் (syr^{pal}) அலெக்சாந்திரிய பாட வகையும், மேற்கத்தியப் பாட வகையும் கலந்தவையாம்.

3. கோப்டிக் மொழிபெயர்ப்பு: இது பழங்கால எகிப்திய மொழி. குறிப்பிடத்தக்கப் பு.ஏ. மொழிபெயர்ப்புக்கள் சாகிடிக், பொகைரிக் ஆகிய அதன் கிளை மொழிகளில் செய்யப்பட்டன.

(i) சாகிடிக் மொழிபெயர்ப்பு (sa): இது அலெக்சாந்திரியப் பாட வகையைச் சேர்ந்தது. ஆயினும் மேற்கத்தியப் பாட வகைக் கலப்பும் இதில் காணப்படுகிறது. இது 3ஆம் நூற்றாண்டில் உண்டானது.

(ii) பொகைரிக் மொழிபெயர்ப்பு (bo): இது அலெக் சாந்திரியப் பாட வகையோடு ஒத்துப்போகிறது. சாகிடிக் மொழிபெயர்ப்பைச் சாராதது. அதற்குப் பிந்தையது. ஆனால் இதன் காலம் பற்றி சரியான முடிவில்லை.

பு.ஏ.இன் கிரேக்கப் பதிப்புக்களில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள பிற மொழிபெயர்ப்புக்கள் அர்மேனிய, ஜியார்ஜிய, எத்தியோப்பிய, கோதிக் மொழிபெயர்ப்புக்களாகும்.

(இ) சபைத் தந்தையர்

பொதுவாக கிரேக்க மொழியிலோ, இலத்தீன் மொழியிலோ, முன்னைய சபைத் தந்தையர் இயற்றிய நூல்களில் பு.ஏ. இலிருந்து எடுத்தாளப்பட்ட ஏராளமான மேற்கோள்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மாபெரும் பயன் யாதெனில், இவற்றின் ஆக்கியோர் எங்கு, எப்போது வாழ்ந்தனர் என்று தெரிவதால், அவர்கள் பயன்படுத்திய பாட வகையின் காலம், இடம் பற்றி அறிய இந்த மேற்கோள்கள் ஏதுவா யிருக்கின்றன என்பதே. ஆனால் அவசரமாக முடிவு செய்யாதபடி கவனமாயிருத்தல் வேண்டும். ஏனெனில், பு.ஏ. இன் மூலப் பாடம்போலவே சபைத் தந்தையர் எழுத்துக்களும் பிழை மலிந்தவையாகவே உள்ளன. மேலும், அன்னார் தம் மேற்கோள்கள் கிடைக்கப் பெற்ற பாடத்தோடு இசைந்து செல்வனவாகும்படி மாற்றப்படக் கூடியதாயிருந்தது. மேலும் சபைத் தந்தையர் சொற்பிறழாது எங்கெங்கு மேற்கோள்கள் காட்டினர், எங்கெங்கு நினைவிலிருந்து மேற்கோள் காட்டினர் என்று நமக்குத் திட்டவட்டமாகத் தெரியாது. ஆயினும் இந்த எச்சரிக்கைகளை மனத்தில் வைத்துக்கொண்டு நாம் சபைத் தந்தையரின் மேற்கோள்களைப் பு. ஏ. மூலப் பாடத்திற்கும், அது ஒருவர் கையிலிருந்து இன்னொருவர் கைக்கு வந்த வரலாற்றிற்கும் முக்கியச் சான்றுகளாகப் பயன்படுத்தலாம்.

7. புதிய ஏற்பாட்டு மூலப் பாட ஆய்வு முறை

விவாதத்திற்குரிய ஒரு குறிப்பிட்ட வாசகத்தின் மூலப் பாடத்தைக் காண முயலும்போது பல்வேறு வேறுபாடுகளை மதிப்பிட நாம் கையாளும் முறைகளைப்பற்றிக் கூறவேண்டும்.

(அ) புறச்சான்று

அதாவது, ஆராயப்படும் பாடவேறுபாடுகளுக்கு ஆதாரமான கையெழுத்துப் பிரதிகளுக்கிடையேயுள்ள தொடர்பையும், அவற்றின் பொது இயல்பையும் சார்ந்துள்ள சான்றுகள்.

1. **ஆதாரங்களின் காலம்:** பாடவேறுபாடுகள் காணப்படும் ஆதாரங்களின் காலம் பற்றியும், இவ்வாதாரங்கள் சேர்ந்துள்ள பாட வகைகளின் காலங்கள் பற்றியும் ஆராய்தல் வேண்டும். இயற்கையாக, பிந்திய ஆதாரங்களைவிட முந்தைய ஆதாரங்களே வலிமை வாய்ந்தவை.

2. **ஆதாரங்கள் தோன்றிய நிலப் பகுதிகள்:** ஒரு நிலப் பகுதியில் மட்டும் தோன்றிய ஆதாரங்களால் ஆதரிக்கப்படும் ஒரு பாடத்தைவிட பல நிலப் பகுதிகளில் தோன்றிய ஆதாரங்களால் ஆதரிக்கப்படும் பாடத்தையே ஏற்க வேண்டும்.

3. **குடும்ப முறை:** ஒரு குறிப்பிட்ட பாட பேதம் பல ஆதாரங்களில் காணப்படும்போது அந்த ஆதாரங்கள் யாவும் ஒரே முன்னோலையிலிருந்து வந்தனவாயிருப்பின் அவற்றின் வலிமையை அந்த முன்னோலையின் வலிமையை விடப் பெரிதாக எண்ணலாகாது. வேறு விதமாகச் சொல்லின், ஆதாரங்களை எண்ணிக்கையின்படி அன்று, அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்தே மதிப்பிடல் வேண்டும்.

(ஆ) அகச்சான்று

அதாவது, ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட பாடவேறுபாடுகளின் தகுதிகள் பற்றியது.

1. **பார்த்தெழுதின முறையில் அமைந்த சான்றுகள் (Transcriptional Probability):** இதற்கு எழுத்தர் கையாளும் முறைகளையும், அவற்றின் காரணமாக அவர்கள் விடும் பிழைகளையும் கவனித்தல்வேண்டும்.

(i) கடினமான பாடத்திற்கே மதிப்புத்தரவேண்டும். விளங்கிக்கொள்ளவோ, ஒத்துக்கொள்ளவோ இயலாத பாடத்தை மாற்றுவதும் இலக்கணப் பிழையுடையதும், மொழி நடை நயம் குன்றியதுமான பகுதியை மாற்றுவதும் எழுத்தருக்கு வழக்கம். எனவே இரு பாடங்களுள் எளிமையாகக் காணப் படுகின்ற பாடம், ஓர் எழுத்தாளரது கைக்கு வந்த பிரதியில் தோன்றிய ஒரு புதிருக்கு அவரால் உண்டாக்கப்பட்ட விடை என்று ஊகிக்கலாம்.

(ii) குறுகியப் பாடத்திற்கே மதிப்புத் தரவேண்டும். ஏனெனில், கையெழுத்துப் பிரதிகளில் இரண்டு அல்லது அதிகமான பாடவேறுபாடுகள் காணப்படின் அவ்வேறுபாடுகளை ஒருங்கிணைப்பதும், ஒரத்திலுள்ள விளக்கக் குறிப்புக் களைச் சேர்ப்பதும் எழுத்தருக்கு வழக்கம். ஆனால் குறுகிய பாடத்தில் ஏதோ தற்செயலாக (ஒரே முடிவுடைய சொற்களால் உண்டாகும் பிழையால்) விடப்பட்டது என்றோ, கருகலான ஒரு சொல்லோ ஒரு சொற்றொடரோ எழுத்தரால வேண்டுமென்றே விடப்பட்டது என்றோ காண்போமாயின், நீண்ட வாசகமே சரியான வாசகம் என்று கொள்ளலாம்.

(iii) ஓர் இடத்தில் ஏற்பட்ட பாட வேறுபாடுகளுள் விவிலியத்தில் பிற இடங்களில் உள்ள வாசகங்களோடு ஒன்றுபடும் பாடவேறுபாட்டைப்பற்றி ஐயம் கொள்ளல் வேண்டும். நற்செய்தி நூல்களில் உள்ள வாசகங்களை ஒன்றோடொன்று இசைவுறச் செய்வதும், பு.ஏ.இல் வருகிற மேற்கோள்களை கிரேக்கப் ப.ஏ.ஒடு ஒன்றுபடுத்த முயல்வதும் எழுத்தர்கள் வழக்கம். அப்படிப்பட்ட இடங்களில் தொடர்புள்ள பிற விவிலியப் பகுதிகளுக்கு முரண்படுகிற பாடங்களை எடுத்துக்கொள்ளவேண்டும்.

2. **பாடவேறுபாடுகள் ஏற்பட்ட பகுதி, நூல் இவற்றின் தனித் தன்மைகளில் அமைந்த சான்றுகள்** (Intrinsic Probability). இது, எழுத்தாளரது குறிப்பிட்ட மொழிநடை, சொற் களஞ்சியம், இறையியல் கொள்கை, ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பகுதியின் பொதுக் கருத்து ஆகியவற்றைச் சீர்தூக்கிப் பார்ப்பதும், அதனால் எழுத்தாளர் தாமே இங்கு எதனை எழுதியிருப்பார் என்று முடிவிற்கு வருவதுமாகும்.

சில சமயங்களில் இந்த முறைகளைக் கையாளும் போது அவை ஒன்றுக்கொன்று முரண்பாடுள்ள முடிவுகளுக்கு வழி காட்டுவதைக் காணலாம். குறிப்பாக, கையெழுத்துப் பிரதிகள் பார்த்தெழுதிய முறையில் அமைந்த சான்றுகள் ஒரு முடிவுக்கும், பாட வேறுபாடு ஏற்பட்ட பகுதி, நூல் இவற்றின் தனித்தன்மைகளில் அமைந்த சான்றுகள் வேறொரு முடிவுக்கும் அடிக்கடி வழிகாட்டுவதுண்டு. அத்தகைய சூழ்நிலையில் கையெழுத்துப் பிரதிகள் பார்த்தெழுதிய முறையில் அமைந்தச் சான்றினையே வழிகாட்டியாக எடுத்துக்கொள்வது பல சமயங்களில் சரியாயிருக்கும். ஆயினும் மூலப் பாடத் திறனாய்வு அறிவியல் மட்டுமன்று, கலையுமாயிருக்கின்றமையால் அதன் சிக்கல்களை ஒரு குறிப்பிட்ட விதியைக்கொண்டு தீர்க்க இயலாது. எனவே, அதற்குக் கூர்ந்த பகுத்தறிவும், முதிர்ந்த அனுபவமும் தேவைப்படும். பல பிரச்சனைகளில் வேறு திறனாய்வாளர், கிடைத்துள்ள சான்றுகளை வெவ்வேறு விதமாக மதிப்பீடு செய்து வெவ்வேறு முடிவுகளுக்கு வருவர்.

பொதுவாக. வெவ்வேறு பாட வேறுபாடுகள் காணப்படும் போது பெரும்பாலும் கையாளப்படும் விதி இதுதான். பிற பாட வேறுபாடுகள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்திருக்கக் கூடிய பாடமே ஏற்கத்தக்கது என்பதே. எ.கா. மார். 1:41இல். மனதுருகி. சினமுற்று என்ற இரண்டு வேறுபாடான பாட வேறுபாடுகளைக் காண்கிறோம். இவற்றை ஆதரிக்கிற கை யெழுத்துப் பிரதிகளின் எண்ணிக்கையையும் மதிப்பையும் நாம் கவனிக்காமல் விட்டுவிடுவோமாயின் இங்கே மனதுருகி என்பதே மூலப் பாடமாயிருந்தால். அதற்குப் பதிலாக சினமுற்று என்கிற பாடம் தோன்றியதெப்படி என்று சொல்ல முடியாது. இந்த இடத்தில் எந்தவோர் எழுத்தாளரும் அந்த மூலப் பாடத் தை வேண்டுமென்று மாற்றி இயேசு சினமடைந்தார் என்று சொல்லத் துணியமாட்டார். மேலும் இவ்விரு சொற்களும் கிரேக்க மொழியில் முற்றிலும் வேறுபட்டவை. ஆதலால் இச் சொற்களால் குழப்பம் ஏற்படக் காரணமே இல்லை. ஆனால் சினமுற்று என்பது மூலப் பாடமாயிருப்பின் பார்த்தெழுதிய எழுத்தர் அதனை மனதுருகி என்பதாக மாற்றியிருப்பது வியப்பன்று. இப்படிப் பார்க்கும்போது. இங்கு சினமுற்று என்றுதான் மார்க்கு எழுதியிருப்பார் என்று முடிவுசெய்யலாம்.

மூலப் பாடத் திறனாய்வு மிக்க நுட்பமான ஓர் ஆராய்ச்சி. அதனைப் பற்றிய இக் கட்டுரையில், அதன் முறைகளையும் விதிகளையும் சுருக்கமாகவும். எளிமையாகவும் எழுதியிருக் கிறோம். அம்முறைகள் சீர்திருத்த காலத்திற்குப்பின். சிறப்பாகக் கடந்த நூற்றைம்பது ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதே காலத்தில். இந்த நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட பாப்பைரஸ் ஏடுகள் உள்பட பல புதிய சான்றுகளும் கிடைத்துள. இவற்றின் வளர்ச்சி வரலாற்றை இடம் போதா மையால் விவரிக்க இயலவில்லை. இதுகாறும் கண்ட முடிவு களே இங்குச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இது மிகச் சுருக்கமான அறிமுகமாயிருப்பினும். பு.ஏ.ஐ ஆராயும் எந்த மாணவரும் இவ்வாராய்ச்சித் துறையை அசட்டை செய்ய இயலாது என்பது வெளிப்படை. கிறிஸ்தவ நம்பிக்கைக்கு அடிப்படையான வரலாற்றுச் சான்றுகளாயிருக்கும் ஆதாரங் களின் மூலப் பாடம் எவ்வளவு தூரம் நம்பத்தக்கது என்பது இந்த ஆராய்ச்சியின் முடிவுகளைப் பொறுத்தே அமையும்.

துணை நின்ற நூல்கள்

1. Souter, A., *The Text and Canon of the N.T.*, 1953.
2. Taylor, V., *The Text of the N.T. - a short introduction* (2nd edition), 1963.
3. Metzger, B.M., *The Textual Criticism of the N.T.*, 1964.

25

சமநோக்கு நற்செய்தி நூல்களின் இசைவுப் பிரச்சனை

து. போத்திராஜுலு

முதல் மூன்று நற்செய்தி நூல்களின் இசைவை ஆராய்வதே இசைவுப் பிரச்சனையாகும். வாய்ச்சொல் மரபினடியாகவே நற்செய்தி நூல்கள் எழுதப்பட்டன என ஒரு சமயம் ஓர் எண்ணம் நிலவியது. பின்னர் இவ்வெண்ணம் கைவிடப் பட்டது. ஏனென்றால், கீழை நாட்டு மக்கள் எவ்வளவு தூரம் செய்திகளை நினைவிலிருத்திக் கொள்கிறவர்களாயிருப்பினும், இசைவு நூல்களில் காணப்படும் அளவிற்கு ஒத்த, ஒரே மாதிரியான செய்திக்கோவைகளை அன்னார் தந்திருக்க வியலாது. இருப்பினும் அமைப்பாய்வு (Form Criticism) எழுந்தபின், செய்திக் கோவையின் தொடர்கள், நற்செய்தியாளர் கலந்துறவாடிய மக்களிடையே நிலவிய மரபில் காணப் பட்டிருக்க வேண்டும் என்று கொள்ள இடமுண்டு. அதாவது, பு.ஏ. ஆய்வாளர்கள் வாய்மொழி மரபுக் கொள்கையை விட்டுவிட்டனர்; ஆனால் அதையே குறிப்பிட்ட உரைக் கோவைகளின் பகுதிகளை ஆராயப் பயன்படுத்துகின்றனர் எனலாம். எ.கா. லூக். 21உம், மார்.13உம் வேறுபடுவதைப் பார்க்கும்போது, லூக்கா இங்கு மார்க்குவின் நற்செய்தி நூலைக் காட்டிலும் வாய்மொழி மரபை அதிகம் சார்ந்தார் என்று கூற இடமுண்டு.

1. முதலிடம் பெறும் மார்க்கு

மார்க்குவின் 661 வசனங்களில் 65 வசனங்களின் செய்தி மட்டும் மத்தேயுவில் காணப்படவில்லை. மார்க்குவின் 1/3 பகுதி மட்டும் மத்தேயு, லூக்கா இரண்டிலும் காணப் படவில்லை. ஆனால் இந்த 1/3 பகுதி லூக்கா அல்லது மத்தேயுவில் காணப்படுகின்றது. உண்மையாகவே 31 வசனங்கள் தவிர பிற யாவும் இவற்றில் உண்டு (மார் 1:1; 2:27; 3:20.21; 4:26-29; 7:3; 4:32-37; 8:22.26; 9:29; 48:49; 13:33-37). இதையொத்த செய்தி மத்தேயுவில் வேறு இடத்தில் உண்டு 14:51-2). மார்க்கு முதலிடம் பெறுவதற்கும் மத்தேயுவும் லூக்காவும் அதைப் பயன்படுத்துவதற்கும் காரணம் இவ்வுண்மைகளே. உரோமன் கத்தோலிக்க ஆய்வாளர் 26, ஜூன் 1912இன் விவிலியக் குழுவின் முடிவின்படி மார்க்குவிற்கு முந்தியது மத்தேயு என்கின்றனர். ஏனென்றால் மத்தேயுவின் முன்னோடி நூல் (Proto-Matthew) மார்க்குவிற்குமுன் அரமேய மொழியில் இருந்தது என்றெண்ணுகின்றனர். மத்தேயுவும், லூக்காவும் பயன்படுத்தும் சொற்கள் மார்க்கு கையாளும் சொற்களாகும். இருவரில் ஒருவர் அதனைப் பயன்படுத்தாத போது மற்றவர் அதனை எடுத்தாளுகின்றார். எ.கா. மார். 11:1-10ஐ மத். 21:1-9; லூக். 19:28-38 உடன் ஒப்பிடுக. இதனால் மார்க்கு முந்தையது என்பது உறுதிசெய்யப்படுகிறது. மேலும், நிகழ்ச்சிகளை மார்க்கு தரும் வரிசையிலேயே மத்தேயுவும் லூக்காவும் தருவதாலும் இதனை அறியலாம். இவ்விருவரில் ஒருவர் மார்க்குவைப் பின்பற்றாதபோது மற்றவர் அதனை முழுமையாகப் பின்பற்றுகிறார். இதற்கு விதிவிலக்கு மார்க்கு 3:31-5. மார்க்குவின் வரிசையை மத்தேயு முந்தைய பகுதியிலே (மத்.8-13) அதிகமாகப் பின்பற்றாவிடினும், பிற்பகுதியில் அப்படியே பின்பற்றுவது வெளிப்படை. மத்தேயுவும், லூக்காவும் மார்க்குவை எலும்புக்கூடாக வைத்துக்கொண்டு பிற செய்திகளைச் சதையும் இரத்தமுமாகச் சேர்த்திருக்கின்றனர் என்று கூறலாம். ஒரு நிகழ்ச்சி மற்றொரு நிகழ்ச்சியை நினைவுபடுத்துகின்றது. அந் நிகழ்ச்சியை மார்க்கு அல்லாத மூலத்திலிருந்து எடுத்து இரு நிகழ்ச்சிகளையும் ஒன்று படுத்துகின்றார். இது மத்தேயுவின் முறை. லூக்கா, மார்க்கு கிடைக்குமுன்னரே செய்திகளைத் தொகுத்திருக்க வேண்டும். மத்தேயு கால ஒழுங்கிற்கு அடிப்படையாக மார்க்குவைப் பயன்படுத்தி, தமக்கே உரிய சிறப்பான செய்தியை மார்க்குவின் செய்தியில் இணைக்கின்றார். எ.கா. மத். 16:17-19. மத்தேயு தமக்கேயுரிய மூன்று வசனங்களைச் சேர்க்கின்றார். இவை இயேசுவின் வெவ்வேறு மூன்று உரைகளாய் இருக்கலாம். இதை செசரியா பிலிப்புவில் பேதுருவின் அறிக்கையில் சேர்ப்பது பொருத்தமாயிருக்கும் என மத்தேயு, எண்ணியிருக்கலாம். ஒத்திருப்பவற்றைச் சேர்க்கும் கொள்கையுடையவர் மத்தேயு. முழு மலைப்பொழிவையும் உருவாக்கியிருக்கும் முறையைப் பார்க்கும்போது, மத்தேயு, மார்க்குவினுடையவையல்லாதவற்றை எடுத்து, மார்க்கு 1:22, 39ஐ விளக்க மத். 7:29க்கு முன் அதனை அமைத்தார் எனக் காண்கின்றோம்.

லூக்காவின் முறை வேறு. ஆண்டவரின் திருமுழுக்கும் சோதனையும் ஒருபுறமும், திருவிருந்து மறுபுறமும் இருக்க இவையிரண்டிற்குமிடையில் மார்க்குவினுடையவை அல்லாத பகுதிகளை மார்க்குவின் பகுதிகளினூடே அவர் சேர்க்கின்றார். எ.கா. லூக். 6:20-8:3; 9:51-18:14; 19:1-27. இவற்றில் சில பகுதி Q-வைச் சேர்ந்தவை (Q=Quelle=Source). சில லூக்காவின் தனிப்பட்ட செய்திகள். லூக்காவின் 55 சதவீதச் சொற்கள் மார்க்குவினுடையவை. இயேசுவின் வார்த்தைகளைக் கூறுமிடத்து இச் சதவீதம் 69க்கு உயருகின்றது.

மத்தேயுவும் லூக்காவும் மார்க்குவின் நடையைச் சீர்ப்படுத்துவதினின்றும் மார்க்கு முந்தையது என்பது மேலும்

உறுதி செய்யப்படுகின்றது. பிற்கால எழுத்தாளர்களுக்கும், மொழி நயத்தை விரும்புகிறவர்களுக்கும் ஏற்காத ஒரே மாதிரியான வார்த்தைகளை அவர்கள் திருத்துகிறார்கள். எ.கா. மத். 11:1-10இலும். மேற்குறிப்பிட்ட அதையொத்த வாசகங்களிலும் மார்க்குவின் வரலாற்று நிகழ்காலத்தை (Historical Present tense) மத்தேயுவும் லூக்காவும் விட்டு விடுகின்றனர். சொன்னதைத் திரும்பக்கூறும் மார்க்கு 11:4 முதலான வசனங்களை அவர்கள் மாற்றுகின்றனர். மத்தேயு ஆறு வார்த்தைகளில் அதை எழுதுகின்றார். லூக்காவும் சுருக்குகின்றார். மார்க்கு நூல் வடிவில் எழுதியிருக்கலாம். ஆனால் மத்தேயுவும், லூக்காவும், சுருள் வடிவில் எழுதியிருந்தால் 25-30 அடியுள்ள, எளிதில் எடுத்துச் செல்லும் சுருள் வடிவத்திற்குச் செய்தியைச் சுருக்கியிருக்க வேண்டும்.

2. மார்க்குவின் முன்னோடி (Ur Markus)

அலெக்சாந்திரிய, மேற்கத்திய வாசகங்களிலிருந்து நாம் உருவாக்கக்கூடிய மார்க்கு அல்லாமல் பிறிதொன்றை, காலத்தால் முந்திய ஒன்றை, மத்தேயுவும், லூக்காவும் பெற்றிருந்தனரோ என்று ஒரு சமயம் கேட்கப்பட்டது. அப்படியிருந்தால், மார்க்குவிற்கு மாறாக ஏன் மத்தேயுவும் லூக்காவும் ஒன்றுபடுகின்றனர்? மார்க்குவின் சில பகுதிகளை ஏன் அவர்கள் இருவரும் விட்டுவிடுகின்றனர்? என்ற கேள்விகளுக்கு விடைகிடைக்கும். இருவரும் விட்டுவிடும் பகுதி குறைவானதுதான். அவை 31 வசனங்கள் மட்டுமே. மத்தேயு செய்தியை ஒருமைப்படுத்துவதினால் சில சமயம் மார்க்குவை விட்டுவிடுவதைப் போல் தோன்றுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல.

லூக்கா விட்டுவிடும் பகுதியான மார். 6:45-8:26க்கு ஸ்ட்ரீட்டர் (B.H. Streeter) விளக்கம் கொடுக்கின்றார். அதாவது, மார். 6:45-8:26ஐப் பெற்றிராத சேதமுற்ற ஒரு பிரதி லூக்காவினிடம் இருந்திருக்கவேண்டும். எனவேதான், இயேசு தனிமையாய் இறைவனிடம் மன்றாடுவதை லூக்கா குறிப்பிடுகின்றார். திரள் கூட்டத்திற்கு உணவளிக்கும் செய்தியின் முற்பகுதியில் பெத்சாயிதாவை அவர் சேர்க்கின்றார் (லூக். 9:10; மார். 8:22ஐ ஒப்பிடுக., லூக். 9:18; மார். 6:45ஐ ஒப்பிடுக). ஸ்ட்ரீட்டரும், மற்றவர்களும் வற்புறுத்துவது யாதெனில் 16:8க்குப் பின் மார்க்குவின் மூல முடிவு அழிந்துவிட்டதால் உர் மார்க்கஸ், மார்க்கு ஆகிய மார்க்குவின் இரு பதிப்புகள் தொடக்க சபையில் இருந்திருக்கவோ, சமநோக்கு நற்செய்தியாளருக்குத் தெரிந்திருக்கவோ முடியாது என்பதாகும். ஆர்.எச். லைட்புட்டின் (R.H. Lightfoot) கூற்றுப்படி, மார்க்கு தமது நற்செய்தி நூலை 16:8இல் ஒரு வியப்புக் குறிப்புடன் முடிக்கவும், உயிர்த்த ஆண்டவரின் தோற்றங்களை எழுதாது விட்டுவிடவும் விரும்பியிருந்தாலொழிய, அப்பகுதிகளில் மூல முடிவு இருந்திருக்க முடியாது எனக் கூறவியலாது.

எப்படியிருப்பினும் ஜி.ஏ. பார்ட்டன் (G.A. Barton) அவர்கள், குட்ஸ்பீட் (Goodspeed) அவர்களைப் பின்பற்றி கூறுவது, அழிந்துபோன மார்க்குவின் மூல முடிவை அடிப்படையாகக் கொண்டதே மத்தேயுவின் முடிவு, மத். 28:9 முதல், 16-19அ., 20 ஆகியவற்றிற்கும் அதுவே அடிப்படை; மார்க்கு தமது நற்செய்தியின் இரண்டு பதிப்புக்களை வெளியிட்டார் (லூக்காவின் கைக்கு வந்த). முதற் பதிப்பில் மார்க்கு 6:48-8:26; 9:28,29,43; 10:1-10; 35-41; முடிவு ஆகியவை இல்லை. இப் பதிப்பு சுமார் கி.பி.46-7இல் வந்தது. பிந்தியது நமது மார்க்குவைப் போன்றது; உரோமிலிருந்து சுமார் கி.பி.65-70இல் வந்தது. அதாவது, பார்ட்டன் அவர்களின் கூற்றுப்படி மத்தேயுவும் லூக்காவும் மார்க்குவின் வெவ்வேறு பதிப்புக்களைப் பயன்படுத்தினர். ஆனால், ஸ்ட்ரீட்டர் அவர்கள் கூறுவது, உர் மார்க்கஸ் என்று ஒன்று இருந்திருக்குமானால் அதையே நாம் எடுத்துக்கொள்ளுவோம், பிந்தைய பதிப்பையன்று என்பதாகும்.

3. மத்தேயுவுக்கும் லூக்காவுக்கும் பொதுமூலம்-Q

மத்தேயுவும் லூக்காவும் மார்க்கு அல்லாத மற்றொரு பொதுவான மூலத்தைப் பயன்படுத்தினர் என்று ஆங்கிலேய கத்தோலிக்க வல்லுநரும், உரோமானியர் அல்லாதோரும் கருதுகின்றனர். இந்த மூலத்தைத் தெளிவாக வரையறுத்துக் கூறவியலாது. இதில் சில மத்தேயுவிலும் லூக்காவிலும் காணப்படலாம். மத்தேயுவும் லூக்காவும் மார்க்குவின் சில பகுதிகளை விட்டுவிடுவதைப்போல் இதன் பகுதிகளையும் விட்டுவிடலாம். வல்லுநர்கள் பலரும் பல பட்டியல்களைக் கொடுத்திருப்பதினால் மட்டும் Q என்று ஒரு மூலம் உண்டு எனக் கொள்ளவியலாது. மான்சன் (T.W. Manson) அவர்களின் பட்டியல் (The Sayings of Jesus (1950). 1. 15f). காண்பிக்கப்படும் சூழ்நிலையும் சேர்க்கப்பட வேண்டுமென்றால் போதுமானதாயிராது. லூக். 3:7-9; 4:1-13; 6:20-3; 27-33; 35, 44, 46-9; 7:1-10; 18-20; 22-35; 9:57-60; 10:2-16; 21:4; 11:9-13; 29-35; 39,41,42,44,46-52; 12:2-10; 22-31,33,34,39, 40, 42-46,51, 53,58,59; 13:18-21,24,28,29,34,35; 14:26,27,34,35; 16:13,16-18; 17:1,3,4,6,23,24,26,27,33-35,37. சில வல்லுநர்கள் இப்பகுதிகள் ஒரே மூலத்திலிருந்து வருபவை எனக் கருதுகிறார்கள். ஈஸ்டன் (Easton) என்பவர் கூற்றுப்படி இம்மூலம் பாலஸ்தீனத்தில் தொடங்கியிருக்கவேண்டும். Q வின் காலம் சுமார் கி.பி. 50க்குப்பின் இராது. Q ஒன்றுக்கு மேற்பட்ட ஏடுகளினின்று எழுதப்பட்டது என்ற கருத்தும் நிலவுகிறது. பஸ்மான் (Bussman) என்பவர் கூற்றுப்படி, ஒத்த பகுதிகள் (T), வேறு படும் பகுதிகள் (R) என்று இரு பகுதிகள் உண்டு. T இன் மொழி R இனின்றும் வேறுபட்டது. T கிரேக்கத்திலிருந்தும், R அரமேய மொழியினின்றும் எழுந்தவை.

பொதுவாக Q வில் சிறிதளவு செய்தியே உண்டு என்று எண்ணப்படுகிறது. அது முக்கியமாக இயேசுவின் சொற்களே. சரியாக உருப்பெற்றிராத காரணத்தால் அச்செய்தி மத்தேயுவிலும் லூக்காவிலும் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் மறைந்துபோனது.

இம் மூலம் உரோமன் கத்தோலிக்க வல்லுநரால் மட்டுமல்ல, பிறராலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பலர் இதைக் கடுமையாகத் தாக்குகின்றனர். சிலர் இப் பிரச்சனையை எடுத்துக்கொள்வதில் பயன் உண்டா என்றும் ஐயுறுகிறார்கள்.

4. லூக்காவின் முன்னோடி (Proto-Luke)

லூக்கா, முதலாம் நூற்றாண்டுக் கடைசியில், அவருடைய சொந்த அமைப்பின்படியும் திட்டத்தின்படியும் எழுந்த நற்செய்தி நூல் என்று கருதுவதைவிட ஸ்ட்ரீட்டர் அவர்களின் முந்தைய புனைவை எடுத்துக்கொள்வோம். அதன்படி, லூக்கா தமக்கே யுரிய L செய்தியுடன், Q செய்திகளையும் சேர்த்து, கி.பி. 70-80 அளவில் மார்க்குவின் பிரதி ஒன்று கிடைக்கப்பெற்றார். இப் பிரதி கால ஒழுங்கைத் தந்தது. இதனை முக்கிய மூலமாகப் பயன்படுத்தாமல் அவருடைய Q+L அல்லது முந்தைய லூக்காவின் (Proto-Luke) திட்டத்திற்கு உதவியாகப் பயன்படுத்தினார் என்று அறிகிறோம்.

திருவிவிலியத் துணை நூல்

புனைவின் முக்கியமான செய்தி இதுதான். லூக்கா Q+L செய்திகளை ஏற்கெனவே ஒரு திட்டமாக உருவாக்கிவிட்டார். இது காணப்படும் இடம்: லூக். 3:1-4:30; 6:12-8:3; 9:51-18:14; 19:1-27. மேலும் 22:14-24:52ஐயும் சேர்த்துக்கொள்ளலாம். இதனுடன் குழந்தைப் பருவச் செய்திகளும். (1:1-2:52) கடைசியில் சேர்க்கப்பட்டிருக்கலாம். நாம் பெற்றிருக்கிற லூக்காவில் மார்க்குவினுடையவையும். மார்க்குவினல்லாதனவையுமான செய்திகளை அருகருகே காண்கின்றோம். மார்க்குவினல்லாதனவற்றில் Q வை L செய்தி நிரப்புவதையும் காண்கின்றோம். இக் கருத்தின்படியாகப் பார்க்கும்போது மார்க்குவின் பகுதிகளை லூக்கா ஏன் விட்டு விடுகிறார் என்பது எளிதாக விளங்குகிறது . மார்க்கு லூக்காவின் முதல் மூலம் அல்ல.

மேலும், லூக்காவின் பாடுகளின் செய்தி மார்க்குவினல்லாத செய்தியினின்று எடுக்கப்பட்டதென்றும். மார்க்குவின் பகுதிகள் மார்க்குவினல்லாத உரையில் சேர்க்கப்பட்டதென்றும் நிறுவினால் லூக்காவின் முன்னோடிப் புனைவு (Theory of Proto-Luke) உறுதிசெய்யப்படும். இங்குக் கருத்து வேறுபாடு உண்டு. ஒரு சாரார் லூக்காவின் பாடுகளின் செய்திக்கு மார்க்கு மூலமாக பயன்படுத்தப்பட்டதென்றும். மற்றொரு சாரார் பாடுகளின் செய்தி மார்க்கு புகுத்தப்பட்ட மார்க்கல்லாத செய்தியை மூலமாகக் கொண்டது என்றும் கூறுகின்றனர்.

லூக்காவின் பாடுகளின் செய்திக்கு (Passion Narrative) லூக்கா மார்க்குவிற்குக் கடன்பட்டவரல்லர் என்ற கருத்தை கோகுல் (M. Goguel), கில்பட்ரிக் (G.D. Kilpatrick) ஆகியோர் மறுக்கின்றனர்.

பத்ரீ (C.S. Petrie) லூக். 3.1-9.50ஐ ஆராய்ந்து இது மார்க்குவைச் சார்ந்தது என வாதித்தார். ஆனால், அறிஞர் டெய்லர் (V. Taylor) இதனை ஏற்றபடி மறுத்தார். அவர் நம்புவது யாதெனில் YQL என்ற ஓர் ஏடு உண்டு. இதில் Q செய்தியுடன் லூக்காவின் தனிப்பட்ட மரபின் செய்தியும் சேர்ந்திருக்கின்றது. இது, மூன்றாம் நற்செய்தி நூல் தொகுக்கப் பெறுவதற்கு முந்தையது என்பதாகும். எனவே, அறிஞர் டெய்லரின் கருத்து. மூன்றாம் நற்செய்தி நூலில் Q+L, லூக்காவின் பாடுகளின் செய்தி, பிறப்பின் செய்திகள், மார்க்கு ஆகியவை அடங்கும் என்பதாகும். Q புனைவைப் போன்று லூக்காவின் முன்னோடி புனைவும் வழக்கிலிருக்கின்றது.

நான்கு ஏடுகளின் புனைவுக் கொள்கையின்படி. (Four document hypothesis), மார்க்குவையும் Qவையும் தவிர. லூக்காவின் சிறப்புச் செய்தியான L ஐயும். மத்தேயுவின் சிறப்புச் செய்தியான Mஐயும் நாம் பெற்றிருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காண்பித்தார் ஸ்ட்ரீட்டர். இது மார்க்கும் Qவும் மட்டும் சேர்ந்த இரு ஏடுகளின் புனைவுக் கொள்கையை மாற்றியது. இருப்பினும் L,M ஆகியவை ஏடுகளா அல்லது வாய்மொழி மரபின் தொகுப்பா என்பது தெளிவில்லை. இந்த ஏடுகளின் பகுதிகள் பின்வருமாறு.

லூக்காவின் சிறப்புப் பகுதிகள் (L)

1:5-2:52.	குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள்.
3:10-14.	திருமுழுக்கு யோவானின் போதனை.
3:23-48.	கிறிஸ்துவின் வழிமரபு.
4:16-30.	நாசரேத்தில் கிறிஸ்து தள்ளப்படல்.
5:1-11	மீனுக்கு வலையிடுதலும் சீமோனின் அழைப்பும்.
5:39	பழையதும் புதியதுமான திராட்சை ரசம் (மார். 2:22ஐ ஒப்பிடுக).
7:11-17	நாயினூர் கைம்பெண்ணின் மகனை எழுப்புதல்.
7:36-50	பாவியாயிருந்த பெண்.
8:1-3	பணிவிடையாற்றும் பெண்கள்.
9:51-56	சமாரிய ஊர்களில் தள்ளப்படுதல்.
10:1	எழுபது பேரின் (இருவர்) தூது.
10:17-20	அவர்கள் திரும்புதல்
10:25-28	மறைநூல் அறிஞரின் கேள்வி (மார். 12:28-31 ஒப்பிடுக).
10:29-37	நல்ல சமாரியர்.
10:38-42	மார்த்தாளும் மரியாளும்.
11:1-8	இறைவேண்டல் கற்பித்தல் (மத். 6:9-13 ஒப்பிடுக).
11:27 முதல்	கிறிஸ்துவின் தாயின் அருட்தன்மை.
11:37-41. 53-4.. 12:1	உட்புற, வெளிப்புறத் தூய்மை.
12:13-21	பணக்கார மூடன்.
12:35-38	விழித்திருத்தல் (மத். 25:1 முதல் ஒப்பிடுக).
13:1-9	மனம் மாற அழைப்பு.
13:10-17	உடல் ஊனமுற்ற பெண் குணமடைதல்.
13:31-33	ஏரோதிடமிருந்தும் கலிலேயாவிலிருந்தும் புறப்படல்.
14:1-6	நீர்க்கோவை நோயாளி குணமடைதல்.
14:7-14	தாழ்மையின் போதனை.
14:28-33	விலைமதிப்பைக் கணித்தல்.
15:1-32	காணாமற்போன ஆடு, நாணயம், மகன் -உவமைகள்.
16:1-13	நேர்மையற்ற வீட்டுப் பொறுப்பாளர்.
16:15மு., 19:31	தீய முறையில் செல்வத்தைப் பயன் படுத்துதல், லாசரு-செல்வர்.
17:7-10	வேலையாளின் கூலி.
17:11-19	பத்து தொழுநோயர் சுகமடைதல்.
17:20. மு	இறையாட்சி (மார். 13:21 ஒப்பிடுக).
18:1-8	நேர்மையற்ற நடுவரும், கைம்பெண்ணும்.
18:9-14	பரிசேயரும், ஆயக்காரரும்.
19:1-10	சக்கேயு.
19:11-27	தாலந்துகளின் உவமை (மத். 25:14-30ஐ ஒப்பிடுக).
19:37-40	எருசலேமில் நுழைதல் (மார். 11:9 முதல் ஒப்பிடுக).
19:41-44	நகரைப் பார்த்துப் புலம்பல்.
20:18	கல்லின் ஆற்றல்.
21:5-36	வெளிப்படுத்தல் (மார். 13ஐ ஒப்பிடுக).

மத்தேயுவின் சிறப்புப் பகுதிகள் (M)

1:1-2:23	குழந்தைப் பருவ நிகழ்ச்சி.
3:14மு.	திருமுழுக்கின் காரணம்.
4:13-16	எசா. 9:1மு.இன் நிறைவு.
5:1,5. 7-10.14. 16மு.. 19-24.27மு.. 31.	மத்தேயுவின் மலைப்பொழிவின் பகுதிகள்.
33-7.38-9அ.. 41.43.. 6:1-4.5-8. 10ஆ.. 13ஆ.. 16-18.34. 7:6. 12ஆ.. 15. 19மு.. 22	இதில் சில பதிப்பாசிரியப் பகுதிகள், பிற நம்பத் தகுந்தவை. லூக்கா விட்டுவிட்ட Q பகுதிகளாகவும் இருக்க முடியும்.

8:17	எசா. 53:4இன் நிறைவேறல்.
9:13அ.	ஓசேயா 6:6இன் நிறைவேறல்.
9:27-31	பார்வையற்றோர் இருவரைக் குணப் படுத்தல் (மத். 10:46மு. ஒப்பிடுக).
9:32-36	பேச்சிழந்தவர் பேசுதல். பன்னிருவரின் தூதிற்கு முன்னுரை.
10:5ஆ.	இஸ்ரயேல் வீட்டாரிடம் செல்லக் கட்டளை.
10:8ஆ.. 16.23. 25.36.41	தூதுப் பணியின் செய்தியமைந்த சொற்கள்.
11:1	ஆசிரியக் குறிப்பு?
11:14மு.	மார். 9:13ஐ ஒப்பிடுக.
11:20	ஆசிரியக் குறிப்பு?
11:28-30	பாரச் சுமை சுமக்கிறவர்களுக்கு அழைப்பு.
12:5-7	ஒருவேளை பல்வேறு சமயங்களில் பேசப்பட்ட இயேசுவின் மூன்று செய்திக ளாயிருக்கலாம். இங்கு கதிர் அறுக்கும் செய்தியை விரிவுபடுத்துகின்றது.
12:17-21	எசா. 42.1-4இன் நிறைவேறல்.
12:36மு.	வீண் வார்த்தைகளுக்கு நீதித்தீர்ப்பு.
12:40	லூக். 11.30ஐ ஒப்பிடுக.
13:24மு., 44. 45மு., 47மு., 51மு.	களை. புதையல். முத்து. வலை ஆகியவைப் பற்றிய உவமைகள். ஒரு முடிவும் உண்டு.
14:28-31	தண்ணீரின் மேல் பேதுரு.
14:33	மார். 6.51ஆ. ஒப்பிடுக.
15:12-14அ.	பரிசேயரும் பார்வையற்றோரும்.
15:23மு.	சிரோபெனிக்கேயப் பெண்ணின் சரிதையின் யூத கிறிஸ்தவ விரிவாக்கம்.
13:12	புளித்தமா குறித்து விளக்கம்.
16:17-19	இயேசுவின் மூன்று வெவ்வேறான உரைகளாயிருக்கலாம். பேதுருவின் அழைப்பை விவரிக்க சேர்க்கப் பட்டிருக்கலாம் (12:5-7 பார்க்க).
17:6மு.	மார்க்குவின் தோற்றம் மாறுதல் நிகழ்ச்சி விவரிப்பு.
17:13	எலியா பற்றிய விளக்கம்.
17:24-27	மீனின் வாயில் நாணயம் (லூக். 14:11.. 18:14ஐ ஒப்பிடுக).
18:10	காணாமற்போன ஆட்டின் கதைக்கு ஒரு முன்னுரை (18:14 ஒரு முடிவுரை)
18:16-20	உடன் கிறிஸ்தவர்களின் கடமை பற்றிய விளக்கம்.
18:23-35	மன்னிக்காத வேலையாள்.
20:1-16	திராட்சைத் தோட்ட வேலைக்காரர் உவமை.
21:10ஆ..மு.	திருக்கோவிலில் கிறிஸ்து - செய்திக்கு முன்னுரை.
21:14-16	திருக்கோவிலில் குணமாக்குதல். 8.3இன் நிறைவேறல்.
21:28-32	இரு புதல்வரின் உவமை.
21:43	விளக்கம் குறிப்பு.
22:6மு.	திருமண விருந்தின் உவமைக்கு ஒரு பிந்தையச் சேர்க்கை. 22:11-14. திருக் கலியாண உடையின் உவமை வேறொரு உவமையாக இருக்க லாம். அதன் முற்பகுதி காணாமற் போக. மத்தேயு இவ்வாறு நயமின்றி இணைத்திருக்கலாம்.
23:2f., 5:23., 7ஆ. -10., 23:15-22., 23:27ஆ.-28., 23:32மு.	சதுசேயர், பரிசேயர் ஆகியோருக்கு ஐயோ என்பதின் விளக்கம்.
24:10-12	வெவ்வேறான மூன்று செய்திகள். ஐயோ பகுதிக்கு முன்னுரை.
23:14ஆ.	ஒரு பகுதியின் முடிவுரை.
24:20ஆ.	ஒடிப்போவது ... ஓய்வுநாளிலாவது - ஒரு யூதக் கிறிஸ்தவச் சேர்க்கை.
24:30அ.	தானி. 7:13இன் விரிவுரை.
25:1-13	பத்துக் கன்னியரின் உவமை.
25:31-46	இறுதித் தீர்ப்பு நாள்.
26:1	பாடுகளின் செய்தி அறிமுகம்.
26:25	காட்டிக் கொடுப்பவனை இயேசு அறிந்தி ருந்தார் எனக் காட்டும் மற்றொரு சேர்க்கை (லூக். 22:23ஐ ஒப்பிடுக. இது பழமையானது).
26:50	லூக். 22:48ஐ ஒப்பிடுக.
26:52ஆ.-54	திருவெளி. 13:10ஐ ஒப்பிடுக.
27:3-10	யூதாசின் இறப்பு (சக. 11:12இன் நிறைவு -அப். 1:15மு. ஒப்பிடுக).
27:19.24மு.. 62-66உம். 28:11-15உம்	பிலாத்துவைக் குறித்த மித்ராஷ் கதைகள். பல பிந்தியவையாக இருக்கலாம்.
27:43	சங்.22:9இன் நிறைவு.
27:51ஆ.-53	இயேசுவின் இறப்பும், நிகழ்ந்த அடையாளங்களும்.
28:2-4	நில நடுக்கமும் கல்லறையில் தூதுவரும், தொடக்கத்தில் வெவ்வேறான மூன்று செய்திகள். இதில் இரண்டாவது ஒருவேளை கிறிஸ்துவைக் குறித்திருக் கலாம். அது உயிர்த்தெழுதலின் செய் தியை விரிவுபடுத்த இங்கு மத்தேயுவி னால் கொண்டு வரப்படுகின்றது (12:5-7.., 16:17-19 ஒப்பிடுக).
28:11-15	போர்வீரருக்கு கையூட்டு பிந்தியச் செய்தியாக இருக்கலாம்.
28:16-20	திருமுழுக்கின் கட்டளை.

M செய்திகளின் சுருக்கம் அதன் ஒன்றுசேராத் தன்மை யைக் காண்பிக்கின்றது. M செய்திகளும், M மார்க்குவைப் பயன்படுத்தும் முறையும், ஏன் மத்தேயுவின் நற்செய்தி நூல் திருச்சபைக்குத் தேவையாய் இருந்தது என்னும் கேள்வியை எழுப்பியிருக்கின்றது. அறிவர் ஜி.டி. கில்பட்ரிக் (Dr.G.D. Kilpatrick) அவர்களின் கூற்றுப்படி, இந்த நூல் இயற்றப்படுவ தற்கு, அக் கால வழிபாட்டு முறை (Liturgical custom) முக்கிய காரணமாயிருந்தது என்று காண்கிறோம். ஆனால், கே. ஸ்டெண்டால் (K. Stendhal) இதை ஏற்றுக் கொள்ளவில்லை. இவர் கருத்துப்படி மத்தேயுவின் செய்திகள் ஒரே சிந்தனையாள ரிடமிருந்து வந்தது எனக் கருத இடமுண்டு. அது எழுந்த காரணம், திருச்சபைப் போதகருக்கும் தலைவர்களுக்கும் போதிப்பதற்காகவும், சபை ஆளுகைக்காகவும் கைநூலாக எழுந்தது என்பதாம்.

மத்தேயு ப.ஏ. வசனங்களைக் கோவையாகக் கொண்டு வந்து, இறைவாக்கினரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது ... (மத். 2:15,17 முதலியன) எனச் சேர்ப்பது தெளிவாகத் தெரிகின்றது. இவ்வார்த்தைகள் பழைய ஏற்பாட்டி லிருந்து நேரடியாக எடுக்கப்பட்டிருக்கலாம். இயேசுவின் வாழ்க்கைக்குச் சான்றிடும், மெய்ப்பிக்கும் வசனங்கள் பலவும்

தொகுக்கப்பட்டு நடைமுறையிலிருந்தது. அப்படிப்பட்ட பிரதியும் மத்தேயுவின் மூலத்தைச் சார்ந்திருப்பதால் இது பாலஸ்தீனத்தில் உருவாகியிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு.

மத்தேயுவின் கோவைகளில் பல புராண முறையில் எழுதப்பட்டுள்ளன. எ.கா. மீனின் வாயில் நாணயம் (17:24-27), பிலாத்துவின் மனைவியின் கனவு (27:19), கல்லறையில் சேவகர் (27:62-66., 28:4). இவற்றில் விந்தை நிலையும் இறையியல் கருத்தும் சிறப்புற்றிருக்கின்றன. இவை நேரடியாக வாய்மொழி மரபினின்று வந்திருக்க வேண்டும்.

எனவே, மத்தேயுவிற்கு எழுத்து, வாய்மொழி என மூலங்கள் பல இருந்திருக்கவேண்டும். அவை தன்மையில் வேறுபட்டவையாகும் என்ற உண்மைகளும் புலப்படுகின்றன.

துணை நின்ற நூல்கள்

1. Williams, C.S.C., in *New Peake's Bible Commentary.*
2. Alfred M. Perry, in *The Interpreter's Bible Commentary.*
3. Bultmann, R., *The History of the Synoptic Tradition,* Oxford, Basil Blcckwell, 1963.

26

இயேசுவின் வாழ்க்கை வரலாறும், அவர் கற்பித்த உண்மைகளும்

சா. தா. செபஞானம்

1. முன்னுரை

மேல் குறித்த பொருளை விரிவாக விளக்கி எழுதுவதற்கு இது ஒரு நூலன்று. ஒரு கட்டுரையே. ஆதலால், இயேசு பெருமானார் வாழ்க்கையைப் பற்றி மேலை நாடுகளிலும், நமீ நாட்டிலும் எழுந்துள்ள பல சிக்கல்களுள் முக்கியமானவற்றைச் சுருக்கமாக எடுத்துக்கூறி, அவற்றிற்கு விடை காணும் வழியைச் சுட்டிக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். உண்மையில் இயேசு என்று ஒருவர் இவ்வுலகில் வாழவில்லை, அவரது வாழ்க்கை வரலாறுகள் பொய்க் கதைகளே, அவர் கற்பித்த உண்மைகளில் புதியது ஒன்றுமில்லை, யாவும் முன்பே யூத சமயத்திலும், பிற சமயங்களிலும் இருந்தவையே, கிறிஸ்தவ சமயத்தை நம்பாத அறிஞரில் சிலர் இவ்வாறு கூறி அச்சமயத்தின் அடிப்படையான உண்மைகளை அழிக்க முயன்றனர். அதன் காரணமாக கிறிஸ்தவ அறிஞர் பல ஆராய்ச்சிகள் செய்து நம் சமய உண்மைகளை நிலைநாட்ட முயன்றுள்ளனர். இவ்வாராய்ச்சிகளைச் சுருக்கி எழுதுவுங்கூட இங்கு இடமில்லை. ஆராய்ச்சியின் முடிவைமட்டும் சுட்டிக்காட்டமுடியும். இவ்வாராய்ச்சிகளை விளக்கி எழுதிய பல நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. அவைகளுள் முக்கியமானவை தேவையான இடங்களில் குறிக்கப்படும். இந்நூல்களைப் படிக்க நேரமில்லாதவர்கள், இவ்வாராய்ச்சிகளைச் சிறு கட்டுரைகளாக விவிலியம் முழுவதற்கும் ஒரே நூலாக விளக்கங் கொடுக்கும் நூல்களில் (*One Volume Commentaries* by Peake, Gou, Abbingdon etc.) படிக்கலாம்.

நம் நாட்டில் இயேசு ஒரு சிறந்த பெரியார், அவரைப் போன்ற பெரியார் இதுவரையும் இவ்வுலகில் எவரும் வாழவில்லை என்றும், அவர் அரும்பெரும் அருளுரைகள் ஆற்றியுள்ளார் என்றும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் அவர் உண்மையில் இவ்வுலகில் வாழ்ந்த ஒருவரா என்று வினவினால், அவர் அவ்வாறு வாழ்ந்தாரோ, இல்லையோ என்ற உண்மை எமக்குத் தேவையில்லை, அவர் உண்மையில் இவ்வுலகில் வாழ்ந்திராவிடினும் அவர் கொடுத்ததாக நம்பப் படும் அறவுரைகளே முக்கியம் என்பர். மேலும் தெய்வங்களைப் பற்றிச் சொல்லப்படும் கதைகளை பொய்யென்று தங்கள் வாயால் சொல்லமாட்டார்கள். ஆதலால் இயேசுவின் கன்னிப் பிறப்பு, அவர் செய்த அருஞ்செயல்கள் (அற்புதங்கள்), உயிர்த் தெழுந்த செயல் முதலியவை தங்கள் தெய்வங்களைப் பற்றிச் சொல்லப்படும் கதைகளைப் போன்றவையே, ஆதலால், அவை நடைபெற்றவை என்று உறுதி சொல்லத் தேவையில்லை என்பார்கள்.

ஆனால், கிறிஸ்தவ சமயத்தின் அடிப்படையான உண்மை, இயேசு பெருமானாரே. இவ்வுலகில் கடவுளை மனிதர் எவ்வளவு அறிய வேண்டுமோ அவ்வளவாக கடவுளை மனிதருக்குக் காண்பித்தவர் அவரே. கடவுளுடன் மனிதர் இவ்வுலகிலேயே உறவுகொண்டு வாழ்வதற்கு வேண்டுவன யாவையும் தம் வாழ்க்கை, சிலுவைச்சாவு, உயிர்த்தெழுதல் ஆகியவை மூலம் அவர் செய்து முடித்தார். அவர்மீது நாம் நம்பிக்கை வைக்கும்பொழுது நாம் கடவுளுடன் உறவு கொள்கின்றோம். மனிதர் தாம், தமது என்னும் பாவத்திற்கு அடிமைப்பட்டிருப்பதால் அவர்கள் சமயநெறிகளைக் கைக் கொண்டு அருளுரைகளின் படி ஒழுக முடியாதவர் களாயிருக்கின்றனர். ஆகையால் அவர்களுடைய அடிப்படை யான தன்மையில் மாறுதல் ஏற்படவேண்டும். அது கடவுளுடன் உறவுகொள்வதால் மட்டுமே ஆகும். மேற்கூறியது உண்மையா யின் இயேசு உண்மையில் இவ்வுலகில் வாழ்ந்தவராயிருக்க வேண்டும். அவருடைய வாழ்க்கை ஒரு பொய்க் கதையாக இருக்கக்கூடாது. இக்காரணத்தின் பொருட்டே இயேசு வரலாற்றுண்மை கொண்டவர் என்று எடுத்துக்காட்ட அறிஞரில் பலர் பெருமுயற்சி எடுத்துள்ளனர்.

அவ்வாறு முயன்றவர்களில் சிலர், இயேசு உண்மையில் உலகில் வாழ்ந்த ஒருவர்தாம். ஆனால் அவர் ஒரு மனிதரே, அவருடைய கன்னிப்பிறப்பு, அவர் செய்த வல்ல செயல்கள், உயிர்த்தெழுதல் ஆகிய செயல்கள் பிற்காலத்தில் கூட்டிச் சேர்க்கப்பட்ட கதைகள் என்றார்கள். மேலும் அவர் சிலுவையில் உயிர்விட்டதன் மூலம் நமக்கு மீட்பு ஆயிற்று என்ற கொள்கையும், அதைப்போலான கொள்கைகளும் பிற்காலத்தில் எழுந்தவையே என்றனர், சுருங்கச் சொல்லின், பொதுவான உலக வரலாற்றில் நடைபெறாதவை அல்லது நடைபெறமுடியாதவை யாவையும் வரலாற்று உண்மையில்லாதவை என்று புறக்கணித்தனர். மேலும் நற்செய்தி நூலை எழுதினவர்களே, தாங்கள் வரலாற்று இயேசுவைப்பற்றி எழுத முற்படாமல் தாங்கள் அவரைப் பற்றிக்கொண்டிருந்த நம்பிக்கையை யாவரும் அறிந்து கொள்ளவேண்டும் என்று எழுதியிருப்பதைச் சுட்டிக் காட்டி (யோ.20:30; மார்.1:1), வரலாற்று ஆசிரியர்கள் தாமே இவ்வாறு ஒரு முடிவுக்கு வருவது வரலாற்றுண்மைக்கு இழுக்காகும் என்று கூறினர். ஆனால் இந்த வரலாற்று இயேசுவைக் காண எடுத்துக்கொண்ட முயற்சி (the quest for the historical Jesus) இரு வகைகளில் குறைவுபட்டு நின்றதை அவர்கள் அறியாதிருந்தார்கள்.

1. இயேசு மற்றெவரைக் காட்டிலும் தனிப்பட்ட முறையில் சிறந்து விளங்கியதால் மட்டுமே நற்செய்தி நூலாளர் தங்கள் நூல்களை எழுதலாயினர். ஆதலால் வரலாற்றுண்மை காண முயன்றவர்கள் நற்செய்தி நூல்களில் எழுதப்பட்ட வற்றில் எவையாயினும் வாழ்க்கையில் பொதுவாக நடை பெறாதவையாயின், அவற்றைப் பொய்க்கதைகள் என்று

புறக்கணித்த செயல் தகுந்த செயலன்று.

2. வரலாற்றில் தோன்றிய அரசியல் தலைவர், படைத் தலைவர் போன்றோரின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் வரலாற்றாசிரியர் ஒருவர், அவர்களைப் பற்றி ஒரு முடிவுக்கு வராமல் எழுத முடியாது. நெப்போலியன் வாழ்க்கையைப் பலர் எழுதியுள்ளார்கள். சில பக்கங்களைப் படித்தவுடனே, ஆசிரியர் நெப்போலியனைப் பாராட்டுகின்றவர் அல்லது குறைகூறுகின்றவர் என்று தெளிவாக அறிந்து கொள்ளலாம். அதைக்கொண்டு அவர் எழுதியது பொய் என்று சொல்லக் கூடாது. என்ற போதிலும் இவ்வறிஞர் உண்மையைக் காண எடுத்துக்கொண்ட முயற்சியை நாம் பழிப்பது அறிவுக்குரிய செயலாகாது.

இவ்வகையான முயற்சி மிகவும் தேவை. கையாண்ட முறைகளே குறைவுள்ளனவாக விளங்கின. ஆனால் அறிஞரில் வேறு பலர் தகுந்த முறைகளைக் கையாண்டு ஒரளவு வெற்றிகண்டுள்ளார்கள். அவைகளில் முக்கியமானவை முதல் நூல்களைப்பற்றிய ஆய்வு (source criticism), கதை அமைப்பைப் பற்றிய ஆய்வு (form criticism) என இருவகைப் படும். இவையிரண்டும் வரலாற்றுக் கதைக்கு உட்சான்று (internal evidence) அளிக்கும் கருவிகள். இவற்றைப் பற்றி சுருக்கமாக விளக்குமுன் அக்காலப் பொது வரலாற்றில் இயேசுவின் வாழ்க்கைக்குச் சான்றுகள் உள்ளனவா எனக் காண்போம். இவ்வகையான சான்றுகள் புறச்சான்றுகள் (external evidences) என்று குறிக்கப்படுகின்றன. வெகு சில சான்றுகளே உள்ளன. தாசிதசு (Tacitus) என்பவர் உரோமை நாட்டைச் சேர்ந்த வரலாற்றாசிரியர். அவரது காலம் ஏறத்தாழ கி.பி. 60-120. இவர் நீரோ பேரரசன் கி.பி. 64ஆம் ஆண்டில் கிறிஸ்தவர்களைக் கொடுமையாக வதைத்துக் கொன்றதைத் தம் வரலாற்றில் விவரித்துள்ளார். அதில் கிறிஸ்தவர்கள் என்ற பெயரை கிறிஸ்து என்ற ஒருவர் மூலமாக அவர்கள் பெற்றார்கள். அவர் திபேரியு பேரரசர் காலத்தில் பொந்தியு பிலாத்து என்ற ஆட்சியாளரால் கொல்லப்பட்டார் என்று எழுதியுள்ளார். சூட்டோனியு (Suetonius) என்பவர் உரோமை நாட்டு இன்னொரு வரலாற்றாசிரியர் ஆவார். அவரது காலம் ஏறத்தாழ கி.பி. 75-160. அவர், யூதர் கிரெஸ்ற்றஸ் என்பவரின் தூண்டுதலால் தொடர்ந்து உரோமை நகரில் குழப்பம் உண்டாக்கிக்கொண்டிருந்ததால் கிலாடியு பேரரசர் அவர்களை உரோமை நகரைவிட்டு விரட்டினார் என்று கூறுகின்றார். இவர் கூறியிருப்பது கிறிஸ்தவர்களுக்கும், யூதருக்கும் அக்காலத்தில் ஏற்பட்டுக் கொண்டிருந்த சச்சரவுகளைக் குறிக்கும். கிறிஸ்ற்றாஸ் (கிறிஸ்து) என்ற சொல்லை அவர் பிழையாக எழுதியுள்ளார். இந்நிகழ்ச்சி திருத். 18.2இல் குறிக்கப்பட்டுள்ளது. யோசிபஸ் என்பவர் யூத வரலாற்றாசிரியர். இவரது காலம் ஏறத்தாழ கி.பி. 37-100. இவர், இயேசு கிறிஸ்துவின் தம்பி யாக்கோபு, அனானசு என்ற தலைமைக் குருவின் கட்டளைப்படி கல்லெறி யுண்டு கொல்லப்பட்டார் என்று எழுதியுள்ளார். வேறு குறிப்புக்கள் அவ்வளவு வரலாற்றுண்மை இல்லாதவை. ஆதலால் அவை இங்கு குறிக்கப்படவில்லை.

முதல் நூல்களைப்பற்றி அறிஞர் செய்துள்ள ஆய்வைச் சுருக்கமாகக் காணுமுன் பவுல் அடியாரின் திருமுகங்கள் இயேசுவின் வாழ்க்கைக்கு எவ்வாறு சான்றளிக்கின்றன என்று காண்பது நலம். முதலில் நற்செய்தி நூல்களே எழுதப் பட்டன என்று பொதுவாக மக்கள் கருதுவதுண்டு. ஆனால் பவுல் அடியார் எழுதிய கடிதங்களே நற்செய்தி நூல்களுக்கு முந்தையவை. சில கடிதங்கள் கி.பி. 55ஆம் ஆண்டிற் குள்ளாகவே எழுதப்பட்டு முடிந்தன. அதாவது இயேசு உயிர்பெற்றெழுந்த காலத்திலிருந்து 25 ஆண்டுகளுக்குள் அவைகள் எழுதப்பட்டுவிட்டன. மார்க்கு நற்செய்தி நூல் எழுதப்பட்ட காலத்திற்குள் (கி.பி.65) பவுல் அடியாரின் திருமுகங்கள் யாவும் எழுதப்பட்டு முடிந்தாயின. அவைகளில் இயேசுவின் வாழ்க்கை விவரங்களை நேரடியாக பவுல் அடியார் எழுதவில்லை. ஆனால் இயேசுவின் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகளை அவரின் திருமுகங்கள் எழுதப்பட்ட சபையினர் நன்கு அறிந்தும் அவைகளை ஒப்புக்கொண்டு மிருந்தார்கள் என்று அவரின் திருமுகங்கள் மூலம் தெளிவாக நாம் காணலாம். எ.கா. கலா.4:4; 1கொரி. 15:16; உரோ. 6:5 முதலியன. அத்துடன் நேரடியாகவும் பவுல் முக்கிய விவரங்களைக் கொடுத்துள்ளார் (1 கொரி. 15:3-6; 11:23-26). மேலும் 1 கொரி. 13ஆம் அதிகாரத்தின் மூலம் இயேசுவின் அன்புப் பண்புகளையும் மறைமுகமாக எடுத்துக்காட்டுகிறார். பேதுரு அடியார் எழுதிய முதலாம் திருமுகமும் கி.பி. 65ஆம் ஆண்டிற்குள் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்பது விவிலிய அறிஞரில் பெரும்பாலானோரின் கருத்து. அப்படியாயின் அத்திருமுகத்தில் இயேசுவின் வாழ்க்கை விவரங்களுக்கு பல ஆதாரங்களை நாம் காணலாம் (1பேது. 2:23,24; 3:18,21,22 முதலியன).

பவுல் அடியாரும், பேதுரு அடியாரும் உரோமை நகரில் ஏறத்தாழ கி.பி. 64இல் நீரோ அரசன் கிறிஸ்தவர்களை துன்புறுத்தியபொழுது கொல்லப்பட்டார்கள் என்ற மரபு ஏறத்தாழ யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அவர்கள் கொல்லப்பட்டு ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குள் மார்க்கு அடியாரின் நற்செய்தி நூல் எழுதப்பட்டு முடிந்திருக்க வேண்டும். பொதுவாக மத்தேயு அடியாரின் நூலே முதலில் எழுதப்பட்டது என்று மக்கள் கருதுவதுண்டு. அகுஸ்தின் அவ்வாறே நினைத்தார். மார்க்கு மத்தேயு நூலை முதல் நூலாகக்கொண்டு அதை சுருக்கித் தம் நூலை எழுதினார் என்றார். இவ்வாறு அகுஸ்தின் கூறியதால் உரோமை கத்தோலிக்கச் சபையார் இன்றும் மத்தேயுவே முதல் நற்செய்தி நூல் என்று கூறுகின்றனர். ஆனால் மூல நூல் ஆய்வின் பயனாய் மிகவும் தெளிவாக்கப்பட்ட உண்மை மார்க்கு எழுதிய நூலே முதல் நூல் என்பதாகும். மத்தேயுவும், லூக்காவும் மார்க்கு எழுதிய நூலைத் தங்கள் முன்வைத்து அதிலுள்ளவற்றுள் பெரும்பாலானவற்றை, பல இடங்களில் சொற்களைச் சிறிதும் மாற்றாமலே எழுதியுள்ளார்கள் என்பதாம் (இது பற்றி இந்நூலிலுள்ள முந்தைய கட்டுரைகள் சில விளக்கியுள்ளன).

அடுத்து, நான்காம் நற்செய்தி நூலைப்பற்றி ஒன்றிரண்டு குறிப்புக்களைச் சுட்டிக்காட்டுவது தேவை. இக்காலத்தில் யாவருமே, இந்நூல் இயேசுவின் சீடரான யோவானால் எழுதப்படவில்லை, ஆனால் யோவானுடன் மிகவும் நெருங்கிப் பழகிய அவருடைய சீடரால் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்துள்ளார்கள். ஒரு காலத்தில் விவிலிய ஆராய்ச்சியாளர், இந்நூல் சிறிதும் வரலாற்றுண்மை இல்லாத ஒரு நூல் என்று கருதினார்கள். ஆனால் இப்பொழுதோ, இந்த நூல் வரலாற்றுண்மைக்கு மிகுந்த ஆதாரங்களைத் தன்னுள் கொண்டுள்ளது என்று ஆராய்ச்சியாளர் கண்டிருக் கின்றனர். எடுத்துக்காட்டாக, பாஸ்கா விழாவுக்கு ஆடுமாடுகள் கொல்லப்பட்ட வேளையில் இயேசு சிலுவையில் கொல்லப் பட்டார் என்று இந்நூல் ஆசிரியர் கூறியுள்ளதே பொருத்தமானது (யோ. 19:14,31; 18:38). இயேசு அதற்கு முந்திய நாளிலேயே பாஸ்கா உணவை அருந்தினார் என்று மார்க்கு எழுதியிருப்பது

பொருத்தமன்று (மார். 14:13). அதே வேளையில் இயேசுவின் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளையும், அவருடைய அருளுரைகளையும் எழுதும்பொழுது அவைகளுடன் அவைகளின் உட்கருத்தையும் அவர் விளக்கி எழுதியுள்ளார். ஆனால் அவர் எழுதிய கருத்து இயேசுவின் கருத்தை விளக்கி விரிவாக்கிற்றே யொழிய அதை மறைக்கவில்லை அல்லது அழிக்கவில்லை. இந்நூல் ஏறத்தாழ கி.பி. 100இல் எழுதப்பட்டிருக்கவேண்டு மென்று அறிஞர்கள் கணித்திருக்கிறார்கள்.

இவ்வாராய்ச்சியின் பயன் யாது? முதலாவது, ஏறத்தாழ இருபது நூற்றாண்டுகளுக்கு முன் பிறந்த வேறு எவருக்கும் இவ்வகையான வரலாற்றுண்மைச் சான்றுகள் இல்லை என்று இவ்வாய்வு திண்ணமாகக் காட்டுகிறது. இயேசு உயிர் பெற்றெழுந்த பின் 25-35 ஆண்டுகளுக்குள் அவரைப்பற்றி மூன்று நூல்கள், அதாவது, கொல்லே, மார்க்கு முதல் லூக்கா ஆகிய மூன்று நூல்கள் எழுதப்பட்டுப் பழக்கத்தில் இருந்தன என்று காண்கிறோம். இவ்வகையான பல நூல்கள் தாம் தம் நூல்களை எழுதும் முன்பே எழுதப்பட்டன வென்று லூக்கா 1:1இல் கூறுகின்றார். அவைகளெல்லாம் இப்பொழுது அழிந்துபோயின. கொல்லேயும், முதல் லூக்காவும் அவ்வாறு அழியாமல் மற்ற நூல்களுடன் சேர்க்கப்பட்டு இலங்குகின்றன. மார்க்கு, மற்ற நூல்களுடன் சேர்க்கப்பட்டும் தனியாக நின்றும் இயங்குகிறது. மார்க்கும், கொல்லேயுங்கூட வேறு சில நூல்களை தங்களுள் கொண்டவையாயிருக்கலா மென்று அறிஞர் கருதுகிறார்கள். ஆனால் இவ்வுண்மை கொல்லேயைப் போன்று திட்டமும் தெளிவுமாக எடுத்துக் காட்டப்படவில்லை. இதன் உண்மை எதுவாயினும் தொடக்கத்திலேயே பல நூல்கள் எழுதப்பட்டுவிட்டன என்று இவ்வாராய்ச்சி திண்ணமாக எடுத்துக்காட்டுகிறது.

இரண்டாவது, இந்நூல்கள் வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு இடங்களில் எழுதப்பட்டனவாதலால் வரலாற் றுண்மையை அறிந்துகொள்வதற்கு பெரிதும் துணை செய்யும் கருவிகளாக விளங்குகின்றன. (மார்க்கு எழுதிய நூல் உரோ மைச் சபையில் நிலவிய மரபுகளை அடிப்படையாகக் கொண்டது என்றும், கொல்லே, அந்தியோகியா சபையின் மரபுகளையும், முதல் லூக்கா செசாரியாவின் மரபுகளையும், மத்தேயு தாமே திரட்டிய பொருள் எருசலேம் சபையின் மரபுகளைக் கொண்டது என்றும் அறிஞர் கருதுகிறார்கள்). நம் இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் அல்லது அவருடைய அருளுரைகளில் வேறு பாடுகள் காணப்படின், தொடக்கக் காலத்தில் எழுதிய நூல் சொல்வதே பெரும்பாலும் உண்மையாயிருக்கும் ஆதலால் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டபொழுது இவ்வகையான ஆய்வின் மூலமாக அவற்றின் உண்மையைக் கண்டுபிடித்துள்ளார்கள். இதற்கு இரண்டு எடுத்துக்காட்டுக்களை மட்டும் கொடுப்போம். மார். 11:7இல், இயேசு கழுதைக் குட்டியின்மேல் அமர்ந்தார் என்றுள்ளது. மத்.21:7இல் கழுதையின் மேலும், கழுதைக் குட்டியின் மேலும் உட்கார்ந்தார் என்றுள்ளது. எது உண்மை? மார்க்கு எழுதியது முந்தையது, பொருத்தமாகவுமுள்ளது. ஆதலால் அதுவே உண்மை. இயேசுவின் செயலுக்கு பழைய ஒப்பந்த மறையின் ஆதாரத்தைக் கொடுக்க முயல்வது மத்தேயுவின் வழக்கம். செக். 9:9இல் கழுதையும், கழுதைக் குட்டியும் என்று சொல்லியிருப்பதால் தம்முடைய வரலாற்றில் மத்தேயு அவ்வகையான விவரத்தைக் கொடுத்துவிட்டார். உண்மையில் குறிப்பிட்டார். அவர் எழுதியது எபிரேயச் செய்யுள் வழக்கு. மத்தேயு அதையறியாது போனார். அடுத்த எடுத்துக்காட்டு: இயேசுவின் சொல்லைப் பொறுத்தது. லூக். 6:20இல் ஏழை கள் பேறு பெற்றோர் என்றுள்ளது. மத். 5:3இல் ஏழைகளின் உள்ளத்தோர் பேறு பெற்றோர் என்றுள்ளது. எது உண்மை? லூக்காவின் சொல், கொல்லேயிலிருந்து எடுக்கப்பட்டதாகை யாலும், வேறு காரணங்களாலும் உண்மை அதுவே என்று அறிஞரில் பலர் ஒப்புக்கொண்டுள்ளார்கள். இந்த இரு எடுத்துக்காட்டுக்கள் மூலமாக மூல நூல்களின் ஆய்வு எவ்வாறு உண்மையைக் காணத் துணை செய்கிறது என்று அறியலாம்.

இனி கதை அமைப்பைப்பற்றிய ஆய்வு (form criticism) என்றால் என்னவென்றும், அதன் பயன் என்னவென்றும் சுருக்கமாய்க் காண முயல்வோம். இவ்வாய்வைச் செய்த அறிஞர் பெரும்பாலும் செர்மன் நாட்டைச் சேர்ந்தவர்களே; அவர்களுள் தலைசிறந்தவர்கள் திபேலியு (Dibelius). புல்ட்மான் (Bultmann) என்பவர்களாவர். (இந்த ஆய்வைப்பற்றி நன்கு அறிய விரும்புகிறவர்கள் வின்சென்ட் டெய்லர் ஆங்கிலத்தில் எழுதிய நற்செய்தி மரபின் உருவாக்கம் (The Formation of the Gospel Tradition) எனும் நூலைப் படிப்பது நலம். இவ் வாராய்ச்சியாளர் பல நாடுகளிலுள்ள பழங்காலக் கதைகளின் வரலாற்றுண்மையைக் காண அறிஞர் கையாண்ட முறைகளைப் பயன்படுத்தி இயேசுவின் வாழ்க்கைக் குறிப்புக்களைப்பற்றிய கதைகள் எவ்வாறு தொடக்கத்தில் உருவாயின, அவைகள் மரபு வழக்கில் எவ்வாறு நிலவி பின் நூல்களாக எழுதப்படலாயின என்று ஆய்வு செய்தார்கள். அதன் பயனாய் இக் கதைகள் முதலில் சிறு சிறு துண்டுக்கதைகளாக ஒன்றுக்கொன்று எவ்வகையிலும் தொடர்புமில்லாமல் பழக்கத்திலிருந்தன என்றார்கள். அவைகளைப் பெரிகோபே (Pericopae=Paragraph). அதாவது சிறு பத்திகள் அல்லது துண்டுகள் என்று குறிப்பிட்டார்கள். இக்கதைகள்[1] உருவானதற்குக் காரணம், இயேசுவின் நற்செய்தியைப் பற்றிச் சபையின் மக்களுக்கறிவித்தவர்கள் அவர் கூறிய கூற்றுக்களைச் சொன்னதாகும். அப்படி ஒரு முக்கிய கூற்றைச் சொன்ன பொழுது அதற்குரிய சூழமைவு நிலையையும் (Life situations) குறிப்பிட்டார்கள் என்று திபேலியு கூறினார். ஆனால் வின்சென்ட் டெய்லர் நற்செய்தியைக்கூறி அறிவித்தபொழுது மட்டுமன்று, ஒரு சபையின் வாழ்க்கையில் சிக்கலான பல கேள்விகள் எழுந்தபொழுதெல்லாம் சபை மக்கள் அச் சிக்கலான கேள்விகளுக்கு இயேசு என்ன விடை கொடுத்தார் என்று அறிய விரும்பியிருப்பார்கள். அப்பொழுது இயேசு சொல்லியதை அறிந்தவர்கள் அந்தந்த கேள்விகளுக்குப் பொருத்தமான கூற்றுக்களை அவைகளுக்குரிய சூழமைதி நிலையுடன் கூறியிருப்பார்கள் என்று விளக்கியுள்ளார். எ.கா. ஒரு கிறிஸ்தவர் தம் மனைவியை விலக்கலாமா என்ற கேள்வி சபையில் எழுந்திருக்கும். அப்பொழுது கடவுள் சேர்த்தவர்களை எம்மனிதரும் பிரிக்கக்கூடாது (மார். 10.9) என்று இயேசு கூறியதையறிந்த ஒருவர் அக் கூற்றைக் கூறி அதற்குரிய சூழமைவு நிலையையும் விளக்கியிருப்பார் (10.2-8). இவ்வாறு வெவ்வேறு சபைகளில் வெவ்வேறு கதைகள் உருவாகியிருக்க வேண்டும். சில வேளைகளில் இயேசுவின் கூற்று சிறிது மாறியும் அல்லது அதற்குரிய கதை சிறிது மாறுபட்டதாகவும் வெவ்வேறு சபைகளில் நிலவியிருக்கலாம். எ.கா. மத். 19. 9க்கும். மார். 10.9க்குமுள்ள வேற்றுமை சபைகளில் இவை நிலவியதன் காரணமாயிருக்கலாம்.

[1] கதைகள். இச்சொல் கட்டுக் கதைகள் என்ற பொருள் கொண்டதில்லை. வரலாற்றுக் கதைகள், விவரத்தைக் கொடுக்கும் கதைகள் போலானவையாம்.

இக்கதைகளின் வடிவத்தைக்கொண்டு அவைகளைப் பல பிரிவுகளாக இவ்வாராய்ச்சியாளர் பிரித்துள்ளார்கள். ஒரு முக்கிய சொல்லைக்கொண்ட சிறு கதைகளை மாதிரிப் படிவங்கள் (Paradigmata=models) என்றும், வல்ல செயல்களை (அற்புதங்கள்) விளக்குபவைகளை கதைகள் (Novellen=stories) என்றும், உவமைகள் போலான அருளுரைகளைக் கொடுக்கும் பகுதிகளை அறிவுரைப் பகுதிகள் (Paranese=exhortations) என்றும், இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப்பற்றிக் கூறும் நீண்ட பகுதிகளை புனைவுக்கதைகள் (Mythen) என்றும், திபேலியு நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றார். புல்ட்மன் இவைகளுக்கு வேறு பெயர்கள் கொடுத்துள்ளார். நாம் அவைகளைப்பற்றி இங்கு விளக்கத் தேவையில்லை. ஆனால் நான்காம் பிரிவை அவர் மரபுக்கதைகள் (legend) என்று குறிப்பிட்டுள்ளார். ஆங்கிலத்தில் அவற்றின் பொருள் கட்டுக் கதைகள் என்பதே. ஆனால் திபேலியும் புல்ட்மானும் அக் கருத்துடன் இச்சொற்களைப் பயன்படுத்தவில்லை. ஏனெனில் அவர்கள் திருமுழுக்கு, யோவானின் பணியை விளக்கும் கதைகள், இயேசுவின் பிறப்பு, சோதனை, மறுதோற்றக் காட்சி, எருசலேமுக்குள் ஊர்வலம் செல்லுதல், இறைவனாரின் கடுந்துன்பங்கள் (Passions), சிலுவையில் உயிர் நீத்தல், உயிர்பெற்றெழுதல் ஆகியவற்றை விளக்கும் கதைகளையே மிதென் அல்லது லிஜண்ட் என்றார்கள். இறைவனாரின் கடுந்துன்பங்களை விளக்கும் கதைகள் உண்மைக் கதைகள் என்று திபேலியு பெரும்பாலும் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆதலால் அவர்கள் இச்சொற்கள் மூலம் நெடுங்கதைகள் (Narratives) என்றே பொருள் கொண்டார்கள்.

முன் விளக்கியபடி, சபையின் மக்களுக்கு கிறிஸ்தவ உண்மைகளைக் கற்றுக்கொடுத்தவர்கள் இக்கதைகளையும் கூற்றுக்களையும் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். ஆதலால் அக்கதைகள் யாவராலும் மனப்பாடம் செய்யப்பட்டன. ஒரு சொல்லையும் எளிதில் மாற்ற முடியாத நிலை ஏற்பட்டது. இத்துடன், நம் இயேசுவின் அருளுரைகள் தொடக்கத்திலேயே செய்யுள் முறையில் அமைந்திருந்தன. அவைகளை இயேசுவே அரமேய மொழியில் செய்யுள் வடிவிலே கூறியிருக்க வேண்டும். அவைகளைக் கிரேக்க மொழியில் மொழி பெயர்த்தபொழுதும் அவைகளின் செய்யுள் வடிவம் முழுவதும் மறையவில்லை. ஆதலால் அவைகள் மனப்பாடம் செய்வதற்கு எளிதாயிருந்தன என்று கேனன் பர்னி (Canon Burney) என்பவரின் ஆய்வைச் (நம் ஆண்டவரின் செய்யுள்) சுட்டி விரிவாகவும் தெளிவாகவும் வின்சென்ட் டெய்லர் விளக்கியுள்ளார். ஆகவே இவ்வாறு நிலவிய கதைகளையும், கூற்றுக்களையும் முதல் மூன்று நற்செய்தி நூலாளர் திரட்டித் தங்கள் நூல்களை எழுதினார்கள். இவ்வகையான கதைகளை எழுதியதால் அவர்கள் எழுதிய இயேசுவின் வாழ்க்கை வரலாற்றில் எத்தொடர்பையும் எதிர்பார்க்கக் கூடாது. அவர்களின் நூல்களை இயேசுவின் வாழ்க்கை வரலாறு என்று கூறுவதே தவறு. ஆராய்ச்சி யாளர்கள் இவ்வாறு கூறுவதில் உண்மையுண்டு. மார். 2.1-3.6 பகுதியைப் படித்தால் அங்கு இயேசுவுக்கும் யூத சமயத் தலைவருக்கும் நடந்த வாதாட்டத்தைப்பற்றிய கதைகள் கூட்டித் தொகுக்கப்பட்டு எழுதப்பட்ட கதைகளே என்று காணலாம். அவைகள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ச்சியாக நடந்தன என்று கூற முடியாது.

ஆனால் அவர்கள் கூறுவது முழுவதும் உண்மை அன்று. இயேசுவின் கடுந்துன்பம், சாவு ஆகியவற்றைப் பற்றிய தொடர்ச்சியான ஒரு வரலாறு, நம் நற்செய்தி நூல்களின் வரலாறு எழுதப்படும் முன்னரே எழுதப்பட்டிருந்தது என்று கதை அமைப்பு ஆராய்ச்சியாளரே ஒப்புக்கொண்டுள்ளார்கள். முதலாவது தொடர்ச்சியாக எழுதப்பட்ட வரலாறு அதுவே என்று அவர்கள் கூறுகிறார்கள். மார். 14:1,2,3-9,10,11 பகுதி களிலுள்ள கதைகளைப் போலான கதைகள் தனிக் கதைகளாக இயங்கி, பின்பு எழுதப்பெற்ற பழங்கால வரலாற்றுடன் மார்க்குவினாலும் மற்ற நற்செய்தி நூலாசிரியராலும் சேர்க்கப்பட்டிருக்கலாம். இயேசுவின் கடுந்துன்பத்தைப் பற்றிய வரலாறு, தொடர்ச்சிக் கதையாக முதலிலேயே எழுதப் பட்டதின் காரணமென்ன? இயேசு சிலுவையில் உயிர்விட்டு நம் மீட்பை ஆற்றினார் என்ற நற்செய்தி யூதருக்கு முட்டுக்கட்டை யும், கிரேக்கருக்கு மடமையுமாயிருந்தது (1 கொரி. 1:23). ஆதலால் இயேசுவின் கடுந்துன்பம், உயிர்நீத்த செயல் ஆகியவற்றின் விவரத்தை கிறிஸ்தவர்கள் யாவரும் திட்டமும் தெளிவுமாக அறிந்து மற்றவர்களுக்கு அவைகளைத் தெரிவிக்க விரும்பினார்கள். அக்காரணத்தைக் கொண்டே கடுந்துன்பக் கதைகள் தொடர்ச்சியாக எழுதப்பட்டன என்று அறிஞர் எடுத்துக்காட்டியுள்ளார்கள். அதுமட்டுமன்று, ஆல்பெர்ட்ஸ் (Albertz) என்ற ஆராய்ச்சியாளர் மார். 2:1-36 பகுதியும், 9:15-12:40 பகுதியும், அவைகளை மார்க்கு தொகுத்து எழுது முன்பே தொடர்ச்சியான வரலாறாக எழுதப்பட்டிருக்க வேண்டு மென்று கருதுகிறார். இவ்வகையான வேறு பகுதிகளையும் சுட்டிக்காட்டலாம். தொடக்கத்தில் இயேசுவைப் பற்றிய நிகழ்ச்சிகளும், கூற்றுக்களும் தனித்தனிக் கதைகளாகவும், கூற்றுக்களாகவும் நிலை பெற்றிருந்தன. இந் நிகழ்ச்சிகளை நேரில் கண்டவர்கள், கூற்றுக்களை நேரில் கேட்டவர்கள் பலர் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவராக மறையலாயினர். அக்காரணத்தின் பொருட்டே இக்கதைக ளையும் கூற்றுக்களையும் எழுதவேண்டிய தேவை ஏற்பட்டது. வின்சென்ட் டெய்லர் கூறியபடி இவர்கள் யாவரும் ஒரே நாளில் மறைந்து விடவில்லை. ஆதலால் வரலாற்றை எழுதும் பொழுது ஓரளவு வரிசைப்படுத்தி எழுத அவர்கள் துணையாயிருந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. கொல்லே முதல் லூக்கா போன்ற நூல்கள் எழுதப்படுமுன் பல சிறு சிறு நூல்கள் எழுதப்பட்டி ருக்கவேண்டும். அதுவே உண்மையென்று மூல நூல் ஆராய்ச்சியாளர் காரணங்காட்டியுள்ளார்கள்.

இவ்வாராய்ச்சியை அறிந்துகொள்வதற்கு, மேலே விளக்கி யுள்ளப்பகுதி ஓரளவு துணை செய்யும். இதற்குமேல், விரிவாக எழுதத் தேவையில்லை. இனி இவ்வாராய்ச்சியினால் பயன் என்ன என்று காண முயல்வோம். புல்ட்மான் நற்செய்தி நூல்களிலுள்ள சில கதைகளையும், இறைவனாரின் அருளுரை களையும் வரலாற்றுண்மை கொண்டவைகள் என்று ஒப்புக் கொண்டார். எ.கா. அரசனுக்குரியவைகளை அரசனுக்கும், கடவுளுக்குரியவைகளை கடவுளுக்கும் கொடுங்கள் என்ற இயேசுவின் கூற்றும் அதற்குரிய கதையும் உண்மையானவை யாயிருக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். ஆனால் பெரும்பாலான கதைகளும், சில கூற்றுக்களுங்கூட சபையே உருவாக்கிற்று என்று அவர் கூறு கின்றார். அவ்வாறு அவர் கூறுவதற்கு இரு காரணங்கள் உள:

1. நூறு ஆண்டுகளுக்குள் நடைபெற்ற வரலாற்றுநிகழ்ச்சி களுக்குரியச் சான்றுகளை அவர் இரண்டாயிரம் ஆண்டு களுக்குமுன் நடந்த நிகழ்ச்சிகளை விவரிக்கும் வரலாற்றில் எதிர்பார்க்கிறார். எடுத்துக்காட்டாக, தற்காலத்தில் ஓர் அரசியல் தலைவர் ஒரு கட்டடத்தைத் திறந்து வைத்தார் என்றால், அது எந்த இடத்தில், எந்நாளில், எவ்வேளையில் நடைபெற்றது, குழுமினவர்களில் முக்கியமானவர்கள் யாவர் ஆகிய குறிப்புக்கள் கொடுக்கப்படும். இவ்வகையான குறிப்புக் கள் இயேசுவைப்பற்றிய கதைகளில் இல்லாவிட்டால் புல்ட்மான் அவைகளைப் புனைவுக்கதைகள் என்று முடிவு கட்டிவிடுவார்.

2. மேலும் நற்செய்தி நூல்களை எழுதியவர்கள் வரலாற்றை (History) எழுத முற்பட்டதாகக் கூறாமல் சபையின் நம்பிக்கையையே தெரிவிக்க எழுதுவதாகக் கூறியுள்ளார்கள். ஆகவே இயேசு கிறிஸ்து சபையின் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு நிற்பவர். ஆதலால் வரலாற்று இயேசுவைக் காண முயல்வது வீண்; தேவையுமில்லை என்பது அவரது கொள்கை.

ஆனால் ஆல்பெர்ட்ஸ் போன்ற அறிஞர்கள், ஒருவருடைய சிறந்த அருளுரைகளையும் அரும்பெருஞ் செயல்களையும் சபை உருவாக்க முடியாது. தனக்குக் கிடைத்த விவரங்களையும் கூற்றுக்களையும் சபை விரிக்கலாம் அல்லது மாற்றலாம்; ஒருபொழுதும் உருவாக்க முடியாது என்று காட்டியுள்ளனர். இப்பொழுது புல்ட்மானுடைய மாணவர்களும் அவர்களில் முக்கியமாக பார்ன்காம் (Bornkam) என்பவரும் புல்ட்மானுடைய குறைகளை ஒப்புக் கொண்டுள்ளார்கள். பார்ன்காம் என்பவர் நாசரேத்தூர் இயேசு (Jesus of Nazareth) என்ற நூலில் கூறுவது: சிலுவையில் அறையப்பட்டு உயிர்பெற்றெழுந்த இயேசுவின் மேல் சபைக்கிருந்த நம்பிக்கை பின் எழுந்ததன்று. தொடக்கத்திலேயே சபை அந் நம்பிக்கையைக் கொண்டதாய் இயேசுவின் வாழ்க்கை விவரங்களைப் பேணிக் காத்தது. அவற்றை மாற்றத் தேவையான வேளைகளில் அவற்றை மாற்றி இயேசுவின் கருத்தைத் தெளிவாக்கும் கருவியாக சபை விளங்கிற்று. பழங்கால ஏடுகளைக் காத்துப் பேணும் இடமாகமட்டும் (archives) அது தன்னைக் கருதவில்லை. அதே வேளையில் சபை தன் அனுபவத்தைத் தேவையான சில இடங்களில் இயேசுவின் சொல்லுடன் சேர்த்து அல்லது மாற்றிப் புகுத்துகிறது. எ.கா. விதைக்கிறவருடைய உவமையைப் பற்றிக் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கம் (மார். 4:14,20). ஆனால் அதே வேளையில் வரலாற்றுண்மையைக் காப்பதில் அது மிகவும் விழிப்பாயுள்ளது. என்பதைத் திறந்த மனத்துடன் நற்செய்தி நூலைப் படிப்பவர்கள் யாவரும் அறிந்து கொள்ளலாம். இதற்கு ஒரே ஓர் எடுத்துக்காட்டை மட்டும் கொடுப்போம். பிற்காலத்தில் இயேசுவே ஆண்டவர் (Lord) என்று பு.ஏ. ஆசிரியர்கள் குறிப்பிட்டார்கள். பவுல் அடியார் தம் திருமுகங்களில் ஏறத்தாழ இருநூறு தடவைகள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

முடிவாக, உயிர்பெற்றெழுந்த கதை அமைப்பின் ஆய்வின் பயனைச் சுட்டிக் காட்டுவோம். உயிர்த்தெழுதலுக்கு இருபது அல்லது இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்பே இயேசுவைப் பற்றி நூல்கள் எழுதப்படலாயின என்று ஏற்கெனவே கண்டோம். அதற்கு முந்தைய காலத்தில் இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் அருளுரைகளும் சபையில் எவ்வாறு காக்கப்பட்டு நிலை நின்றன என்ற இவ்வாராய்ச்சி தெளிவாகக் காட்டி அவை மிகுதியான வரலாற்றுண்மை கொண்டவை என்று திண்ணமாகக் காட்டியுள்ளது. மேலும், இச் சிறுகதைகள் அல்லது கூற்றுக்களும் (Pericopae) தொடர்ச்சியாக நம் நற் செய்தி நூல்களில் தொகுக்கப்பட்டபொழுது ஒரு கதைக்கும் அதை அடுத்துவரும் கதைக்கும் அதனுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள சொல்லுக்கும் எவ்வகையான தொடர்புமில்லாதிருப்பதைப் பல இடங்களில் காண்கின்றோம். எ.கா. தொழுநோயாளரைக் குணப்படுத்திய கதை (மார். 1:40-45) அதற்கு முந்தியதுடன் (வ. 39) எவ்வகையான தொடர்புமில்லாது அமைக்கப்பட்டுள்ளது. மத்தேயுவில் இது வேறு சூழ்நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது (மத். 8:1-4). அப்படியே மார். 9:36க்குப்பின் மத். 18:2-4இல் உள்ளதே பொருத்தம். எப்படியோ மார்க்கு அதை அறியவில்லை. மார். 9:37 வசனம் 10:14க்கு அடுத்தாற்போல் வந்தால் பொருத்தமாயிருக்கும். இதன்மூலம் ஒரு கதையின் அல்லது அருளுரையின் இயல்பான பொருள் மாறி அல்லது கெட்டுப் போகின்றது. இக் குறைகளைக் கண்டுபிடித்து அவைகளை நீக்குவதற்கு இவ்வாய்வு பெரிதும் துணையாயுளது என்பதில் ஐயமில்லை.

2. இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகள்

கதையின் அமைப்பைக்கொண்டு வரலாற்றுண்மையைக் காண ஆய்வு செய்கிறவர்கள் ஒருவராலும் இயேசுவின் வாழ்க்கை வரலாற்றை எழுதமுடியாது. ஏனெனில் அவரைப்பற்றிய விவரங்களும், அவர் கூறிய அருள்மொழிகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாமல் தனித் தனிக் கதையாக அல்லது கூற்றாகச் சொல் மரபில் நிலைபெற்றிருந்தன என்று கூறுகிறார்கள் என முன் கண்டோம். அவர்கள் கூறுவது ஓரளவு உண்மையே. தற்காலத்தில் ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றை ஒருவர் எழுதினால், அவருடைய வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகளுக்குரிய திட்டமான காலக் குறிப்புக்கள், அவருடன் தொடர்பு கொண்ட இடங்களைப் பற்றிய குறிப்புக்கள், அவர் நெருங்கிப் பழகிய ஆள்களைப்பற்றிய விரிவான விவரங்கள், அவருடைய கல்வி, தொழில், வாழ்க்கையின் சூழ்நிலை முதலியவற்றைப்பற்றிய விளக்கங்கள் முதலியன யாவையும் எழுதுவார். எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய உள்ளான ஆள்தன்மை (Personality) எவ்வாறு படிப்படியாக வளர்ந்தது என்று தெளிவாகக் காட்டுவார். இயேசுவின் வாழ்க்கையில் இவ்வகையான குறிப்புக்கள் இல்லை. அவர் பிறப்பை விளக்கிய கதைக்குப்பின் அவர் பன்னிரண்டாம் வயதில் எருசலேம் கோவிலுக்குப்போன குறிப்பு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து முப்பதாம் வயதில் திருப்பணி செய்யத்தொடங்கும் வரையும் அவருடைய வாழ்க்கையைப்பற்றிய விவரங்கள் ஏறத்தாழ ஒன்றுமே இல்லை. அவர் எத்தனை ஆண்டுகள் திருப்பணி செய்தார், எந்த வயதில் சிலுவையில் கொல்லப்பட்டார் என்று உறுதியாகச் சொல்லமுடியாது. அவரது தோற்றத்தைப்பற்றி ஒரு குறிப்புமே கிடையாது என்றபோதிலும் அவருடைய வாழ்க்கையின் முந்தைய நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக எழுத முடியும். அதிலும் அவருடைய துன்ப வார (passion week) நிகழ்ச்சிகள் விரிவாகவும், தொடர்ச்சியாகவும் தொடக்கத்திலேயே எழுதப்பட்டிருந்தனவென்று முன் கண்டோம். எந்த இடத்தில், எந்த நாளில் ஒரு குறிப்பிட்ட வல்ல செயலைச் செய்தார் அல்லது அருளுரை ஆற்றினார் என்று கூறமுடியாது என்பது உண்மையே. ஆனால் இவ்வகையான விவரங்களைச் சபை மக்கள் தங்கள் நினைவில் வைத்துக்கொள்ள முயன்றிருக்க மாட்டார்கள்; இன்றியமையாதனவற்றை மட்டுமே நினைவில் வைத்தக்கெ..ள முயல்வார்கள், அதுவே முடியும். ஆகவே முக்கியமான வாழ்க்கை நிகழ்ச்சிகளை மட்டும் சபை பேணிக்காத்தது. அவற்றைக் கீழ்வரைவோம்:

பிறப்பு: இயேசுவின் பிறப்பைப் பற்றிய வரலாறு முதலாவது எழுதப்பட்ட மார்க்கு நற்செய்தி நூலிலும், கடைசியில் எழுதப்பட்ட நான்காம் நற்செய்தி நூலிலும் கொடுக்கப்படவில்லை. மத்தேயுவும், லூக்காவும் பிறப்பின் விவரத்தை எழுதியுள்ளார்கள். மத்தேயு எழுதியதில் வரலாற்றுண்மைக்குப் பொருத்தமில்லாத குறிப்புக்கள் உளவென்று விவிலிய ஆராய்ச்சியாளர்களில் பலர் கருதுகின்றனர். லூக்கா எழுதிய வரலாறு, முதலில் சொல் மரபில் நிலைநின்று பின்பு லூக்காவால் தொகுத்து எழுதப்படவில்லை என்று தெரிகிறது. லூக்காவே அவ்வரலாறு முழுவதையும் ஏறத்தாழ கி.பி. 80 ஆம் ஆண்டில் எழுதியுள்ளார். இவ்வகையான காரணங்களைக் கொண்டு இயேசு ஆண்சேர்க்கையில்லாமல் கன்னி

மரியாளிடத்தில் பிறந்தார் எனும் உண்மையைப் பலர் மறுக்கின்றனர். வேறுபலர், பல ஆதாரங்களைக் கொடுத்து அவ்வுண்மையை ஆதரிக்கின்றனர். இயேசு உண்மையில் கடவுளின் திருமைந்தர் என்று நம்புகின்றவர்களில் சிலருங்கூட. இயேசு ஆண் சேர்க்கையில்லாமல் பிறந்தால் அவர் நம்மைப்போல் முழுவதும் மனிதராகமாட்டார். ஆதலால் அவ்வகையான பிறப்பிற்குத் தேவையில்லை என்று கூறுகின்றனர். ஒன்று திண்ணம். இயேசு கடவுளுக்கு நிகரானவர் என்பதற்குக் கன்னிப் பிறப்பை ஆதாரமாகக் கொடுக்கக்கூடாது, விவிலியத்தில் ஓர் இடத்திலும் அவ்வாறு கொடுக்கப்படவில்லை. ஆனால் அவருடைய வாழ்க்கை முழுவதையும் படித்துப் பார்க்கும் பொழுது அவர் உண்மையாகவே தம்மை மனிதராக்கிக் கொண்ட கடவுளின் வார்த்தை என்ற முடிவுக்கு வந்தோமானால் கன்னிப்பிறப்பு அம்முடிவுக்கிசைந்த ஒரு நிகழ்ச்சியே என்று காண்போம். அவர் நம்மைப்போல் ஆண் சேர்க்கையால் பிறந்தால், அவர் தம்மை மனிதராக்கிக் கொண்ட கடவுள் என்று நாம் நம்புவதற்கு அது ஒரு பெருந்தடையாகவேயிருக்கும்.சிலர் அவர் கடவுள் நிலைக்கு உயர்த்தப்பட்ட மனிதர் என்று வாதிப்பர்.

12ஆம் வயதில் நடைபெற்ற நிகழ்ச்சி: அவர் பிறப்புக் கதைகளுக்குப்பின் அவருடைய பன்னிரண்டாம் வயதில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி லூக். 2:42-52இல் கொடுக்கப் பட்டுள்ளது. இதைத் தவிர அவர் பிறப்புக்குப்பின் ஏறத்தாழ முப்பதாம் வயதில் திருமுழுக்குப் பெறும் வரையிலும் அவருடைய வாழ்க்கையின் வேறு விவரங்கள் நற்செய்தி நூல்களில் கொடுக்கப்படவில்லை. ஆதலால் இக் காலத்தின் விவரங்களை விரிவாக விளக்கி எழுதிய பல நூல்கள் எழுந்தன. ஆனால் திருச்சபை அந்நூல்களை மறைநூல்களாக ஒப்புக்கொள்ளாமல் அவைகளைப் புறக்கணித்து நான்கு நற்செய்தி நூல்களை மட்டும் ஒப்புக்கொண்டது. அதற்கு முக்கிய காரணம். அந்நூல்களில் இயேசு ஓர் இயல்பான சிறுவனைப் போன்றவராகக் காணப்படாமல் எதற்கும் இறை ஆற்றலைப் பயன்படுத்தி வாழ்ந்தவராகக் காணப்பட்டதேயாகும். எடுத்துக் காட்டாக, இயேசு விளையாடுவதற்கு களிமண்ணால் பறவைகளைச் செய்து அவைகளுக்கு உயிர் கொடுத்துப் பறக்க விட்டார். தம் சிறுவரை வேலை செய்யவிடாமல் விளையாடுவதற்கு அழைத்துச் சென்றதாகச் சீறிய பெற்றோருக்குப் பாடங்கற்பிக்க அவர்கள் பிள்ளைகளை ஆடுகளாக மாற்றி விட்டார். இவ்வகையான கதைகள் அந்நூல்களில் இருந்தபடியால் அந்நூல்களைச் சபை புறக்கணித்தது. இயேசு பன்னிரண்டாம் வயதில் எருசலேம் கோவிலுக்குப் போய் அங்கு அவர் நடந்து கொண்ட முறை இறைப்பற்றுள்ள ஓர் இயல்பான யூதச் சிறுவனுக்குரிய செயலேயாம். அவர் யூத குருக்களுக்குக் கற்றுக் கொடுக்கும் அறிவு கொண்டிருந்தார் என்று 46,47ஆம் வாக்கியங்களுக்குப் பொருள் கொடுக்கக்கூடாது. ஆனால் 41ஆம் வாக்கியத்தில், நான் என் தந்தையின் வீட்டில் இருக்கவேண்டுமென்பதை நீங்கள் அறியீர்களா என்று இயேசு கேட்டது தனிப்பட்ட முறையில் குறிப்பிட வேண்டியதாகும். அது அச்சிறு வயதிலே கடவுளுடன் அவருக்கிருந்த தனித் தொடர்பின் அறிவைக் காட்டுகிறது.

திருமுழுக்குப் பெறுதல்: திருமுழுக்குப் பெறுவதற்கு முன் நடந்த அவருடைய வாழ்க்கையைப்பற்றி இரண்டு விவரங்களை மார். 6.3இல் காண்கிறோம். அவை இவர் அக்காலத்தில் தச்சு வேலை செய்தார், அவருக்கு நான்கு தம்பிகளும், குறைந்தது இரண்டு தங்கையரும் இருந்தனர் என்பனவாம். அவருடைய வளர்ப்புத் தந்தை யோசேப்பு அவர் திருப்பணி செய்த காலத்திற்கு முன்பு இறந்துபோயிருக்க வேண்டுமென்று இவ்வாக்கியத்தைக் கொண்டு உய்த்தறியலாம். இக் குறிப்புக்களைத் தவிர வேறு விவரங்கள் அவரைப் பற்றி நமக்கில்லை. ஆனால் அவருடைய உவமைகள், அருளுரைகள் முதலியவற்றின் மூலமாக, இயற்கையின் மேல் அவருக்கிருந்த பற்றையும், அவருடைய குடும்பச் சூழ்நிலையையும் உய்த்தறியலாம். ஏறத்தாழ முப்பதாம் பருவத்தில் திருமுழுக்குப் பெறுவதற்காக யோவான் முன் வந்து தோன்றியதே அவருடைய வாழ்க்கையின் அடுத்த முக்கிய நிகழ்ச்சி (மார். 1:9). யாவரும் தங்கள் பாவத்திற்கு மன்னிப்பு கிடைக்கும்படி யோவானிடம் திருமுழுக்குப் பெற வந்து கூடினார்கள். அப்பொழுது இயேசு திருமுழுக்குப் பெற்றார். அவர் ஏன் திருமுழுக்குப் பெற்றார்? இக்கேள்வியைத் திருச்சபை கேட்டது. எல்லா நீதியையும் நிறைவேற்ற அவ்வாறு செய்தார் என்ற திருச்சபையின் விடையை மத்தேயு தம் நூலில் எழுதினார் (3:15)-இங்கு நீதி என்ற சொல்லின் பொருள் கடவுளின் ஏற்பாடு என்பதாம் (லூக். 7:30ஐப் பார்க்கவும். கடவுளின் ஆலோசனை என்பதைக் கடவுளின் நோக்கம் என்று மொழிபெயர்த்தல் நலம்). ஆனால் அவர் திருமுழுக்குப் பெற்றதின் காரணம் அதிலும் ஆழமானது. பாவ மன்னிப்பைப் பெறுவதற்கு அவர் திருமுழுக்குப் பெறவில்லை என்பது திண்ணம். ஏனெனில், உலகில் பிறந்த யாவரும் தங்கள் பாவத்திற்காக மனம் வருந்தி கடவுளின் மன்னிப்பை நாடியிருக்க, இவர் மட்டும் அவர் வாழ்க்கை முழுவதிலும் தம் பாவத்திற்காக மனம் வருந்தினார் அல்லது கடவுளின் மன்னிப்பை நாடினார் என்று சொல்ல ஓர் ஆதாரமுமில்லை. ஆதலால் இந்த வேளையில் அவ்வாறு மனம் வருந்தினார் என்று சொல்வோமாயின் அது அவர் வாழ்க்கை முழுவதிற்கும் முரண்பட்ட செயலாகவேயிருக்கும். ஆதலால் கடவுளுக்கு நேராக மக்கள் திரும்பிய இந்த இயக்கத்தில் தாமும் தம்மை அவர்களுடன் ஒன்றுபடுத்தி, அவர்களுடன் சேர்ந்து கொண்டார் என்று கருதுவதே பொருத்தம்.

திருமுழுக்குப் பெற்றவுடன் இயேசு வானுலகம் திறக்கப்பட்டதையும், ஆவியர் புறாவின் வடிவமாக அவர்மேல் இறங்கியதையும் கண்டார். மேலும், நீர் என் அன்பார்ந்த மைந்தர். உம் பொருட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன் என்று ஒரு குரல் கேட்டது. இதன் முதல் பகுதி திருப். 2:7இன் மேற்கோள். இது மெசியாவைப் பற்றிப் பாடிய பாசுரம் என்பது பொதுவான எண்ணம். பின்பகுதி எசா. 42:1ஐ அடிப்படையாகக் கொண்டது. 42;1-4; 49:1-6; 50:4-9; 52:13-53:12 ஆகிய பகுதிகள் அடியாரின் பாடல்கள் (Servant Songs) எனப்படும். இப்பாடல்களில் கடவுளின் அடியார் எவ்வாறு பிறரின் நல்வாழ்வுக்காகத் துன்புறுவார் என்று விளக்கப்பட்டுள்ளது. ஆதலால் அக்குரலின் மூலமாக தாம் மெசியா என்று அவருக்கிருந்த அறிவு உறுதியாக்கப்பட்டதென்றும், சிலுவையின் நிழல் அப்பொழுதே அவர்மேல் விழுந்ததை அவர் கண்டார் என்றும் அறிஞரில் பலர் விளக்கம் கொடுத்துள்ளார்கள். ஆனால் வேறு சிலர், உம் பொருட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன் என்னும் கூற்று அடியாரின் பாடலிலுள்ள கூற்று என்பதைக்கொண்டு அது அவருக்கு வரப்போகும் துன்பத்தைச் சுட்டிக்காட்டிற்று என்று சொல்வது, வலிந்து பொருள் கொள்வதாகும் என்று கூறி, மேல் கொடுக்கப்பட்ட விளக்கத்தை ஒப்புக்கொள்ளவில்லை. உண்மை எதுவாயினும், வானிலிருந்து எழுந்த இக்குரல், இயேசு தம் தந்தையிடம் கொண்டிருந்த தனித் தொடர்பை உள்ளங்கை நெல்லிக்கனி போன்று காட்டியது எனலாம்.

சோதனை: இந்த அனுபவத்திற்குப் பின் ஆவியர் இயேசுவை ஒரு பொட்டல் காட்டிற்குச் செல்லும்படி தூண்டினார். அங்கு நாற்பது நாள்கள் அவர் கடவுளுடன் நெருங்கிய உறவு

கொண்டு வாழ்ந்தார். அக்காலம் முடிந்ததும் தீயோன் (சாத்தான்) அவரைச் சோதித்தான். அதாவது, கடவுளின் திருவுளத்திற்கு மாறானவற்றைச் செய்யும்படி தூண்டினான். மார்க்குவில் இத்தூண்டுதல்களைப் பற்றிய விவரம் கொடுக்கப் படவில்லை. மத்தேயுவும், லூக்காவும் கொல்லே என்ற முதல் நூலிலிருந்து இத் தூண்டுதல்களின் விவரங்களை எழுதி யுள்ளார்கள் (மத். 4:1-11; லூக். 4:1-13). இவைகளில் மத்தேயு கொடுக்கும் வரிசையே பொருத்தமானது. மெசியாவின் பணியை எவ்வாறு செய்வதென்று வழி காட்டும்படி இக் காலத்தில் இயேசு கடவுளை மிகுதியாக வேண்டுதல் செய்திருப்பார் என்பதில் ஐயமில்லை. அப்பொழுது வெற்றியைப் பெறுவதற்கு எளிதான குறுக்கு வழி முறைகளைக் கையாளவும், மக்களைக் கவரும் முறைகளைப் பயன்படுத்தவும் அவர் மனத்தில் பல எண்ணங்கள் தோன்றின. ஆனால் அவர் அவைகளைப் புறக்கணித்துத் தாம் செல்ல கடவுள் விரும்பிய வழியையே தேர்ந்து கொண்டார். முதல் சோதனையின் கருத்து மக்களின் உடல் நலத்துக்கானவைகளைக் குறைவில்லாமல் அவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் தீய வழியில் செல்லமாட்டார்கள், கடவுளுக்குகந்த அவருடைய பிள்ளைகளாக வாழ்வார்கள், கடவுள் ஆட்சி நிலைநாட்டப் படுமாதலால் மக்களின் உடல் நலத்துக்கானவைகளைக் கொடுத்து மெசியாவின் ஆட்சியை நிலைநாட்டவேண்டும் என்ற தூண்டுதல் அவருக்கு உண்டாயிற்று என்பதாகும். ஆனால் அதற்கு விடையாக இயேசு, மனிதர் உணவினால் மட்டுமன்று, கடவுளின் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையாலும் வாழுவர் என்றார், அதாவது, உடலுக் குரியவைகள் தேவையே. ஆனால் அதைவிட முக்கியமானது கடவுள் மீது பற்று. கடவுள் மீது அன்புகொள்ளாதவருக்கு இவ்வுலக நன்மைகள் குறைவில்லாமல் இருந்தாலும் அவை அவருக்கு நல்வாழ்வைக் கொடுக்கமாட்டா என்பதாகும். இரண்டாம் சோதனையின்படி, மனிதர் கடவுளின் அன்பினால் இழுக்கப்பட்டுத் தாமாகவே அவரைத் தம் இறைவனாகத் தேர்ந்துகொள்ளவிடாமல் அரிய வல்லச் செயல்களைச் செய்து அவர்களுடைய மதியை மயக்கி அவர்களை அடிமைப்படுத்தும் வழியைப் புறக்கணித்தார் என்பதாகும். மூன்றாம் சோதனையில், வெற்றி காணத் தீயோனின் வழியைக் கையாளத் தூண்டப்பட்டார். அது கடவுள் வழிக்கு மாறானது. கடவுள் வழி அன்பின் வழியே, சிலுவையின் வழியே, பாவிகளை அழித்து கடவுள் ஆட்சியை நிலைநாட்டும் வழியன்று, அவர்களை மன்னித்து கடவுளாட்சியை நிலைநாட்டும் வழியாகும். மேலும் கடவுளின் வழி உண்மையை விட்டு சிறிதும் விலகாத வழி. தீயோனின் வழியோ, தனக்கு வேண்டிய வேளையில் உண்மையை விட்டுக்கொடுக்கும் வழி. இயேசு கடவுளைப் பணிந்து அவர் வழியில் செல்வதையே தேர்ந்துகொண்டார். இதன்பின் தீயோன் சிறிது காலம் அவரை விட்டு விலகினான் (4:13). பின்பு பேதுருவின் மூலமாகவும் (மார். 8:32,33), கெத்சமனேயிலும் (14:36), ஒருவேளை சிலுவையிலும் (15:34) தீயோன் அவரைச் சோதித்தான் என்று அறிகின்றோம்.

திருப்பணி: திருமுழுக்குநர் யோவான், ஏரோது அரசனால் சிறையில் வைக்கப்பட்ட பின்பு இயேசு கலிலேயாவில் இறை யரசின் நற்செய்தியைப் பறைசாற்றினார் (1:14). அப்பொழுது அவர் சீமோன் பேதுருவையும், அந்திரேயாவையும், யாக்கோ பையும், யோவானையும் தம்முடைய சீடர்களாக அழைத்தார் (1:16-20). ஆனால் நான்காம் நற்செய்தி நூலை எழுதியவர், திருமுழுக்குநர் யோவானும் இயேசுவும் அடுத்தடுத்து யூதேயா நாட்டில் பணி செய்தார்கள் என்றும், யோவானுடைய சீடர் இயேசுவுடன் பழகியிருந்தார்கள் என்றும் கூறுகின்றார் (யோ. 1:35-40; 3:22-24). ஒரு காலத்தில் நான்காம் நற்செய்தி நூலில் கூறப்பட்டவை யாவும் வரலாற்றுண்மை இல்லாதவை என்று அறிஞர் பலரும் கருதினர். ஆனால் இப்பொழுதோ 4ஆம் நற்செய்தி நூலில் வரலாற்றுண்மையுள்ள பல விவரங்கள் உள என்று ஒப்புக்கொண்டுள்ளனர். அப்படியாயின் இயேசு மேலே குறித்தவர்களைத் தங்கள் தொழிலை விட்டுத் தம்மு டைய சீடர் ஆகும்படி அழைக்கும் முன்னதாகவே அவர்களை நன்கறிந்திருந்தார் என்று கருதலாம். கலிலேயா கடலைச் சுற்றியுள்ள நகரங்களில், அதிலும் மிகுதியாக கப்பர்நகூம், பெத்சாயிதா, கொராசின் ஆகிய நகரங்களில் அவர் பணி செய்தார். பின் குறிக்கப்பட்ட இரண்டு நகரங்களிலும் அவர் பணி செய்ததற்கு கொல்லே ஆதாரமளிக்கிறது (மத். 11:21-24; லூக். 10:13,14). முதலில் இயேசு தொழு மன்றத்தில் இறையரசின் நற்செய்தியை அறிவித்தார் (மார். 1:21,39; 6:2). ஒரு யூத குருவுக்கு (இரபி) வேண்டியப் பயிற்சியை அவர் பெற்றிராவிடினும், தொழு மன்றத்தின் தொழுகையில் அருளுரையாற்றும் உரிமை அவருக்குக் கொடுக்கப்பட்டது அவருக்கிருந்த தனி மதிப்பைக் காட்டுகிறது.

மார். 1:21-38 பகுதியில் இயேசுவின் வாழ்க்கையின் ஒரு நாள் நிகழ்ச்சி விவரம் தொடர்ச்சியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றெந்த இடத்திலும் இவ்வகையான விவரம் நமக்கில்லை. அவர் கூறுவதை மிகுந்த விருப்பத்துடன் கேட்பதற்காகவும், அவர் மூலமாகத் தங்கள் நோய்களும், பிணிகளும் குணமடையும்படியாகவும் பெருங் கூட்டமாக மக்கள் கூடிவந்தார்கள் (1:33,45; 2:2,4). ஆனால் சில சமயத்தலைவர்கள் மூலம் எதிர்ப்பு வளர்ந்தது. 2:3-3:6இல், சில சமயத் தலைவர் மூலம் இயேசுவுக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்குக் காரணங்களும், அவைகளின் விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. தமக்குப் பாவங்களை மன்னிக்க அதிகாரம் உண்டு என்று அவர் உரிமை பாராட்டியதாலும், வரிவாங்குவோருடனும், பாவிக ளுடனும் அன்பாகப் பழகியதாலும், அவருடைய சீடர் நோன் பிராததைக் கண்டியாமல் அதற்கு ஆதரவளித்ததாலும், ஓய்வு நாள்களில் நோய்ப்பட்டோருக்கு உடல் நலமளித்ததாலும் சில யூத சமயத் தலைவர் இயேசுவைப் பகைத்து அவருக்குக் கெடுதி செய்ய வழி தேடினார்கள். 7:1-23இலும் இவ்வகையான விவரமொன்று கொடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் இயேசு வெளிச் சடங்குகளைக் கைக்கொள்வதால் பயனில்லை, அவை களில் உட்கருத்தே முக்கியம் என்று வற்புறுத்தியுள்ளார். இவை யாவும் தொடர்ச்சியாக நடைபெறவில்லை, பல வேளைகளில் பல இடங்களில் நடைபெற்றவைகளை இங்கு மார்க்கு ஒன்றுதிரட்டி எழுதியுள்ளார். அது எப்படியாயினும் அவருக்கேற்பட்ட எதிர்ப்பின் மூலமாகத் தொழுகைமன்றத்தின் தொழுகையில் கடவுள் செய்தியைக் கொடுக்க அவருக்குத் தடையுண்டாயிற்று (6:1-6, இதே நிகழ்ச்சி லூக். 4:16-30இல் விரிவாக விளக்கப்பட்டுள்ளது). ஆதலால் அவர் கலிலேயாவின் சிற்றூர்களிலும், முக்கியமாக, கலிலேயாக் கடலோரத்திலுள்ள நகரங்களிலும் தம் திருப்பணியைச் செய்து வந்தார். பெருங் கூட்டம் இயேசுவைக் காணவும், அவர் சொன்னவற்றை ஆவலுடன் கேட்கவும் கூடிவந்தது. மக்கள் தம்மை நெருங்கி விடாதபடி, அவர் பல வேளைகளில் படகில் இருந்துகொண்டு கடற்கரையில் அமர்ந்திருந்த மக்களிடம் பேசினார் (மார். 3:8,10; 4:1; 5:1,21). இவ்வாறு இறையரசின் நற்செய்தியைச் சொல்லால் மட்டும் அறிவிக்காமல், செயலாலும் இயேசு அறிவித்தார். பல அருஞ்செயல்களை (அற்புதங்கள்) இக் காலத்தில் செய்தார், ஆனால் எந்த இடத்தில், எந்த வேளையில் அவைகளைச் செய்தார் என்ற திண்ணமான குறிப்புக்கள் இல்லை. கப்பர்நகூம் தொழுகைமன்றத்தில் பேய் பிடித்தவருடைய பேயை அவர் விரட்டினார் (1:23-26). அதே நாளில் பேதுருவின் மாமியாருடைய காய்ச்சலை நீக்கினார் (1:30,31). மாலையில்

பல வகைப்பட்ட நோயாளிகளுக்கும், பிணியாளிகளுக்கும் குணமளித்தார் (1:32-34). தொழு நோயாளருக்கு எப்பொழுது எந்த இடத்தில் இயேசு நலமளித்தார் என்று சொல்ல முடியாது (1:40-45). இயேசுவுக்கு எழுந்த எதிர்ப்பைப் பற்றிய விவரங்களில் முடக்குவாதத்தைக் குணப்படுத்திய விவரமும், கை சூம்பியவருக்கு நலமளித்த விவரமும் கொடுக்கப்பட்டுள்ளன (2:1-13; 3:1-5). அவர் கலிலேயாக் கடலின் மறு கரைக்குப்போன ஒருவேளையில் கதரேனருடைய நாட்டில் கல்லறைக்குள் தங்கியிருந்த பேய் பிடித்தவனைக் குணமாக்கினார் (5:1-20). யவீரு மகளை எழுப்பியதும், குருதிப் பெருக்கால் துன்புற்றவருக்குக் குணமளித்ததும் எப்பொழுது, எவ்விடத்தில் என்று கூறமுடியாது (5:22-43). இவை போக நூற்றுவோர் படைத்தலைவரின் பணியாளுக்குக் குணமளித்த அருஞ்செயலை மத்தேயுவும், லூக்காவும் எழுதியுள்ளார்கள். அவர்கள் அதை கொல்லே என்ற நூலிலிருந்து எடுத்திருக்கவேண்டும்.

இக்காலத்தில் தம்முடன் பழகிய பலருள் பன்னிருவரை இயேசு தம் சீடராக்கினார். அவர்கள் தம்முடன் இருக்க வேண்டுமென்றும், தாம் அவர்களை அனுப்புமிடத்திற்கு அவர்கள் சென்று நோய்களை நீக்கவும், பேய்களை விரட்டவும் அவர்களுக்கு ஆற்றல் அருளினார். புது இஸ்ரயேலின் மையக் கருவாக (Nucleus) அவர்களை ஏற்படுத்தினார் என்று சொல்லலாம். இயேசு பன்னிருவரையும் தேர்ந்துகொண்ட பின், அவர்கள் பல இடங்களுக்குச் சென்று இறையரசைப் பறைசாற்றிப் பேய்களை விரட்டி, நோய்ப்பட்டோரைக் குணமாக்கி, மக்களை மனம் மாறுங்கள் என்று தூண்டி ஒரு தனிப் பணி செய்யும்படி (mission) அவர்களை அனுப்பினார். இதன் விவரம் முதல் மூன்று நற்செய்தி நூல்களிலும் கொடுக்கப்பட்டுள்ளது (6:7-13; மத். 10:5-15; லூக். 9:1-6). அவர்கள் பிற இனத்தாரிடத்திலும் சமாரியரிடத்திலும் போகாமல் காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடம் மட்டும் போகவேண்டுமென்று இயேசு கட்டளை கொடுத்ததாக மத்தேயு கூறுகிறார். இது உண்மையாயிருக்கலாம். ஏனெனில் முதலில் யூதரை கடவுளுக்கு நேராகத் திருப்பிப் பின்பு அவர்கள் மூலம் பிற இனத்தாரை கடவுளிடம் கொண்டுவரவேண்டுமென்றே அவர் தொடக்கத்தில் விரும்பினார் என்று கருத இடமுண்டு (மார். 7:27). இத் தனிப் பணி அவ்வளவு வெற்றியாக முடியவில்லை என்று அறிஞரில் பலர் கருதுகின்றனர். ஆனால் 70 பேர் தனிப் பணி வேலையை முடித்துவந்தபொழுது இயேசு தீயோன் மின்னலைப் போன்று வானிலிருந்து விழுவதைக் கண்டேன் என்று சொல்லி மிகுந்த மகிழ்ச்சியுடன் கடவுளைப் போற்றுகிறார் (லூக். 10:18,21-24). 70 பேரைத் தனிப் பணி செய்யும்படி அனுப்பியதாக லூக்கா மட்டும் எழுதியுள்ளார். பெரும்பாலும் பன்னிருவரை அனுப்பிய விவரமே சொல் மரபில் இவ்வடிவில் வேறு இடத்தில் நிலவியிருக்கலாம் என்று அறிஞரில் பெரும்பாலோர் கருதுகிறார்கள். அப்படியாயின், இங்கு இயேசு கொண்ட மகிழ்ச்சி பன்னிருவரின் தனிப் பணியைப் பற்றியதேயாம்.

பன்னிருவர் தங்கள் தனிப் பணியை முடித்துத் திரும்பிய பின், இயேசு கலிலேயாவை விட்டு அதன் வடக்குப் பகுதியிலுள்ள நாட்டிலும், நகரங்களிலும் சிறிது காலம் மறைந்து வாழ்ந்தார் என்று காண்கிறோம் (மார். 7:24). மார். 7:31இன் பொருளை அறிவது எளிதன்று. பொது மொழிபெயர்ப்பில், மீண்டும் இயேசு தீருவின் பகுதியை விட்டு, சீதோன் வழியாகச் சென்று தெக்கபோலி பகுதி நடுவே கடந்து கலிலேயாக் கடலை அடைந்தார் என்றுள்ளது. இதுவே தகுந்த மொழி பெயர்ப்பாகும். நிலப்படம் (atlas) ஒன்றை வைத்துப் பார்த்தால் இயேசு சென்ற வழியைக் குறிப்பிடுவது எவ்வளவு கடுமை என்று காணலாம். அதன் மூலம் அவர் இந்த இடங்களிலெல்லாம் அலைந்து திரிந்தார் என்று உய்த்தறியலாம். இவ்வாறு கலிலேயாவை விட்டுப் போவதற்கு இரு காரணங்கள் கொடுப்பதுண்டு. அவை (1) கலிலேயாவில் மக்களுக்கு அவர் மீதிருந்த பற்று குறைந்துவிட்டது. (2) ஏரோது அரசன் யோவானைக் கொன்றபொழுது தமக்கும் அவன் கெடுதி செய்யலாம் என்று அஞ்சி அவ்வாறு ஒளிந்து அலைந்தார் என்பனவாம் (6:29,31. இது மத். 14:13இல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது). மக்களுக்கு அவர்மீதிருந்த பற்று குறைந்து விட்டது என்று சொல்லமுடியாது. ஐந்து அப்பத்தை ஐயாயிரம் பேருக்குக் கொடுத்த அருஞ்செயல் விவரத்தைப் படித்தோமானால், எவ்வாறு மக்கள் பெருங்கூட்டமாக வந்துகொண்டிருந்தார்கள் என்று அறிவோம் (மார். 6:31-34). இவ்வேளையில் மக்கள் இயேசுவை அரசராக்க விரும்பினார்கள் என்று யோவான் தம் நூலில் கூறியுள்ளார் (யோ. 6:15). இதிலிருந்து மக்களுக்கு அவர்மீதிருந்த கவர்ச்சியைக் காண்கிறோம். அதன்பின் கெனசரேத்து நாட்டிற்கு அவர் போன பொழுது மக்கள் கும்பலாக அவரிடம் வந்தார்கள் (மார். 6:53-56) என்று கூறப்பட்டுள்ளது. ஏரோது அரசனுக்கு அஞ்சி ஒளிந்துகொண்டார் என்று கூறுவதும் பொருத்தமில்லாததே. எருசலேமில் தமக்கு நேரிடப்போவதை அறிந்தும் சிறிதும் அஞ்சாமல் எருசலேமை நோக்கிச் சென்றவர் (10:32) ஏரோதுக்கு அஞ்சி ஒளிவாரா? அப்படியாயின், உண்மை என்ன? மக்கள் பெருங்கூட்டமாய் அவரைத் தேடிவந்த போதிலும் இறையரசை ஏற்றுக் கொள்ளும்படி அவர்கள் மனம்மாறவில்லை. இதை லூக். 10:13-15இலிருந்து உய்த்தறியலாம். இது ஒரு காரணமாகும். மேலும் யோவானை ஏரோது கொன்றதற்கு யோசிபசு கொடுக்குங் காரணம், யோவானுக்கு மக்களிடம் மிகுந்த செல்வாக்கு இருந்தது. ஆதலால் மக்களைத் தனக்கெதிராக யோவான் எழுப்பிவிடு வார் என்றஞ்சி அவரைக் கொன்றான் என்பதாகும். இயேசுவைப் பற்றியும் இவ்வகையான அச்சம் ஏரோதுக்கு இருந்தது என்று நாம் கருதலாம் (மார். 6:14-16, யோவான் கொல்லப்படுவதற்கு முன்பே இப்பகுதி இவ்விடத்தில் வைக்கப்பட்டிருப்பதைக் காணவும்). பொது மக்களும் இவ்வகையான அச்சத்திற்கு இடமளித்தார்கள். இயேசுவை அரசராக்க முயன்ற செயல் உண்மையில் ஏரோது மூலமாய் இயேசுவுக்குத்தத் துன்பத்தைக் கொண்டு வரும் செயலாகும். தாம் எவ்வகையான மெசியா என்று மக்கள் அறியாதவரைக்கும் அவர்கள் கும்பல் கும்பலாக அவருக்குப்பின் வருவதால் பயனில்லை, கேடே விளையும் என்று அவர் கண்டார். 3:6இல் சில சமய நெறியாளர் (பரிசேயர்) ஏரோதியருடன்கூடச் சேர்ந்து அவரைக் கொல்லும்படி சூழ்ச்சி செய்தார்கள் என்று கூறியிருப்பது இவ்விடத்திற்கே பொருந்தும். அத்துடன் தமக்கு ஏதும் நேரிடவேண்டுமாயின் அதற்குரிய தந்தையின் வேளை வரவேண்டுமென்று அவர் கூறுவது அவருடைய வழக்கம். இதை நான்காம் நற்செய்தி நூலில் காண்கிறோம். இன்றும், நாளையும், மறுநாளும் நான் நடமாடவேண்டும், எருசலேமுக்கு வெளியே ஓர் இறைவாக்காளரும் சாகமுடியாது என்று அந்த நரிக்குச் சொல்லுங்கள் என்று இயேசு சொன்னதும் (லூக். 13:32,33) இதே கருத்துள்ளது. ஆதலால் மக்கள் உண்மையாக மனம்மாறாமல் தம்மை அரசியல் மெசியாவாக மட்டும் ஏற்றுக்கொள்வதால் கேடு விளையும் என்று அறிந்து, இவ்வாறு மறைந்து வாழ்ந்தார் எனலாம்.

தீரு நகரின் எல்லைக்கு இயேசு வந்தபொழுது சீரோபேனிக்கிய நாட்டுப் பெண்ணின் மகளைப் பிடித்திருந்த

பேயை விரட்டி நலமளித்தார் (மார். 7:24-30). மேசையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் பிள்ளைகள் சிந்துகிற துண்டு துணுக்குகளைத் தின்னுமே என்று அவர் கூறிய விடையின் மூலம், பிற இனத்தாருக்கும் கடவுளின் மீட்பை அருள்வது தந்தையின் திருவுளமாகும் என்று இயேசு அறிந்துகொண்டார். அதன் பின்பு அவர் பிலிப்பு செசரியா நகரத்தின் அருகேயிருந்த சிற்றூர்களுக்குச் சென்றார் (8:27). வழியில், நீங்கள் என்னை யாரென்று கருதுகிறீர்கள்? என்று கேட்டவுடன், பேதுரு, நீர் மெசியா (கிறிஸ்து) என்று தம் நம்பிக்கையை அறிவித்தார். நம் இயேசு மிகவும் மகிழ்ந்து, பேதுருவைப் பாராட்டி, கடவுளே இவ்வுண்மையை உமக்குக் காட்டியிருக்கிறார் என்று சொன்னார் (மத். 16:17). தாம் மெசியா என்று சீடர் அறிந்ததால் மகிழ்ந்தவுடன் நின்றுவிடாமல், இயேசு தாம் எவ் வகையான மெசியா என்று அவர்களுக்குக் கற்பிக்க முற்பட்டார். தம்மைப் பெரும்பாலும் மானிடமகன் என்று குறிப்பிடலானார். அவ்வாறு குறிப்பிட்டபொழுது பெரும்பாலும் தாம் அனுபவிக்கப்போகும் துன்பத்தை அத்துடன் இணைத்துப் பேசினார். முதல் தடவை, தாம் கடுந் துன்பத்தை அனுபவித்துக் கொல்லப்பட வேண்டுமென்று தம் சீடர்களுக்குச் சொன்ன பொழுது (மார். 8:31). மெசியாவுக்கும், துன்பத்திற்கும் எவ்வகை யான தொடர்புமிருக்கக்கூடாது என்று கருதியே பேதுரு இயேசுவுக்கு அறிவு புகட்டத் துணிந்தார். எனக்குப் பின்னாகப் போ சாத்தானே என்று பேதுருவை இயேசு கண்டித்தபொழுது, பேதுரு மூலம் தீயோன் தம்மைச் சோதிப்பதைக் கண்டார். இந்நிகழ்ச்சிக்குப் பின் இயேசு பொதுமக்களைவிட்டுக் கூடிய வரையிலும் விலகித் தம்முடைய சீடர்களுடன் தம் காலத்தைச் செலவிட்டார். இக்காலத்தில் முன்போன்று அருஞ்செயல்களைச் செய்யவில்லை. தமக்கு வரப்போகும் துன்பத்தைப் பற்றித் திரும்ப இருமுறை கூறியதாகக் காண்கிறோம் (9:31; 10:33,34). இந்த மூன்று வேளைகளிலும் தாம் மூன்றாம் நாளில் உயிர்பெற்றெழப்போவதாகவும் கூறியுள்ளார். அவர்களோ அதைப் புரிந்து கொள்ளவில்லை. தம் முடைய சீடரும் தம் முடைய துன் பத் தில் பங்கெடுக்கவேண்டுமென்று இயேசு கற்பித்ததை, மார்க்கு இவ்விடத்தில் அமைத்திருப்பது மிகவும் பொருத்தம் (8:34,35).

இந் நிகழ்ச்சிக்குப்பின் ஆறாம் நாளில் ஓர் உயர்ந்த மலையில் இயேசுவின் தோற்றம் மாறிய அனுபவத்தை மார்க்கு 9.2-8இல் எழுதியுள்ளார். அம்மலை 9,200 அடிகள் உயரமுள்ள எர்மோன் மலையாயிருக்கலாம். இந்த அனுபவத்தின் உட் கருத்தை விளக்குவதில் கருத்து வேறுபாடு மிகுதியாக உண்டு. இயேசு தம் தந்தையுடன் நெருங்கிய உறவு கொண்ட நிலையில் அவருடைய முகத்தில் ஏற்பட்ட மாறுதலின் விவரமும் அவ் வேளையில் அவருடைய சீடர், ஒருவேளை பேதுரு மட்டும் கண்ட காட்சியின் விவரமுமாயிருக்கலாம். எதுவாயிருந்தாலும் தம் இறைத்தன்மையை வெளிப்படுத்திச் சீடரின் மதியை மயக்கி அவர்களின் நம்பிக்கையைப் பெருக்க இக் காட்சி கொடுக்கப்படவில்லை என்பது திண்ணம். அப்படிச் செய்திருந்தால் அது இரண்டாஞ் சோதனைக்கு இடங் கொடுத்ததற்கு ஒப்பாகும். ஒரு வகையில் இது ஒரு சிறிய கெத்சமனே என்று சொல்லலாம். லூக்காவில் மோசேயும் எலியாவும் அவருடைய பயணத்தைக் குறித்துப் பேசினார்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது (லூக். 9:31). நம் விவிலியத்தில் இறப்பு என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்கச் சொல் இஸ்ரயேல் மக்கள் எருசலேமைவிட்டுப் புறப்பட்ட செயலைக் குறிக்கும். ஆகவே இஸ்ரயேல் மக்களுக்கு கடவுளின் விடுதலை அளிக்கக் கருவியாயிருந்த மோசேயும், மீட்கப்பட்ட எஞ்சியவர்களுடைய குழுவின் (remnant) தலைவரான எலியா வும் உலகத்திற்கு விடுதலை அளிக்கத் துன்பப்படப் போகிற அவருடன் இருக்கிறார்கள். ஒருவேளை இப்பொழுதும் கெத்சமனேயில் அவர் பட்டத் துயரத்தை ஒரளவு அனுபவித் திருப்பார். அதில் அவருக்குத் தோழமை கொடுக்கிறவர்களாக மோசேயும், எலியாவும் அவருடனிருந்திருக்கலாம்.

இந்த அனுபவத்திற்குப்பின், இயேசுவும் அவருடைய சீடரும் எருசலேமுக்குப் போவதை மார்க்கு விளக்குகிறார். முதலில் அவர் கலிலேயாவுக்கு வருகிறார். ஆனால் மறைவாக அதைக் கடந்து செல்கிறார் (9:30). அவர் சென்ற வழி எருசலேமின் விழாக்களுக்கு யூதர் பொதுவாகப் போன வழியேயாகும். அவர்கள் கலிலேயாவைக் கடந்தவுடன் சமாரியாவுக்குள் போகாமல் யோர்தானைக் கடந்து அதன் கிழக்குப் பகுதியிலுள்ள பெரியா வழியாகச் செல்வார்கள். எரிகோவைச் சேர்ந்தபொழுது யோர்தானைக் கடந்து எருசலேமுக்கு வந்து சேருவார்கள். இயேசுவும் அவ்வழியில் சென்றதாக மார்க்கு குறிப்பிடுகிறார் (10:1,17,32,46; 11:1). லூக்கா இப்பயணத்தை விளக்கும்பொழுது இயேசு சமாரியா நாட்டின் வழியாகச் சென்றதாக எழுதுகிறார். மேலும் அவர் இந்தப் பயணத்தை நீட்டி, அதைப் பற்றிய விவரத்திற்குள் தாமாகவே திரட்டிய மரபுக் கதைகளைப் புகுத்துகின்றார். உண்மையில் அவருக்கு இந்தப் பயணத்தைப் பற்றித் திட்ப நுட்பமான அறிவு இல்லை என்றே அறிஞர் சிலர் கருதுகின்றனர். இப்பயணக் காலத்தில் காக்காய் வலிப்புள்ள ஒரு சிறுவனுக்கு (9:14-29) நலமளித்த விவரத்தையும், எரிகோவுக்கு வந்தபொழுது அங்கு பர்திமேயுவுக்குப் பார்வையளித்த விவரத்தையும் (10:46-52) மார்க்கு கொடுத்திருக்கிறார்.

மார்க்கு எழுதிய விவரத்தின்படி, இயேசு பெரிய வாரத்தில் மட்டும் எருசலேமில் பணியாற்றினார் என்று சொல்ல வேண்டும். இது உண்மையில்லை என்று கூறுவதற்குப் பல ஆதாரங்கள் உள. மார்க்கு நூலிலேயே இதற்குச் சான்றுகள் உள. 11:3ஐயும் 14:13,14ஐயும் படித்தால் இயேசுவுக்குத் தெரிந் தவர்கள் எருசலேமிலிருந்தார்கள் என்று காணலாம். 14:49இல் நான் நாள்தோறும் தொழுமன்றத்தில் உங்களுக்கு அருளுரை யாற்றி வந்தேனே என்று அவர் கூறுகின்றார் (லூக். 19:47; 21:37,38யும் படிக்கவும்). லூக். 13:34இல் எருசலேமை நோக்கி எத்தனை தடவைகளில் நான் உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்க்க மனதாயிருந்தேன் என்று இயேசு இரங்குவதைக் காணும் பொழுது, அவர் பல தடவைகளில் அங்குச் சென்று திருப்பணி செய்திருக்கவேண்டுமென்று உய்த்தறியலாம். யோவான் நற்செய்தி நூலில் 7:10; 14,32,37; 8:20; 10:22,23; 12:1 ஆகிய வாக்கியங்களில் இயேசு ஒரு தடவைக்குமேல் எருசலேமுக்குச் சென்று பணியாற்றினார் என்று காட்டி யிருப்பதைக் காணலாம். இதைக்கொண்டு மாரிசு கோகுயெல் (Maurice Goguel) என்ற ஆசிரியர் கருத்துப்படி, இயேசு கூடாரத் திருநாளுக்கு சிறிது முன்பு கலிலேயாவை விட்டுப் புறப்பட்டு அத்திருநாளில் எருசலேமுக்கு வந்திருக்க வேண்டும் (7:2,14 - அது செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதமாயிருக்கலாம்). அதிலிருந்து பிரதிட்டை நாள்வரையும் (7:10-22 - டிசம்பர்) எருசலேமில் பணி செய்தார். அதன்பின் சிறிது காலம் யோர்தான் ஆற்றைக் கடந்து பெரியா நாட்டுக்குப் போனார் (10:40; 11:54), கடைசியாக பாஸ்கா விழாவுக்கு ஆறு நாள்களுக்கு முன் பெத்தானியாவுக்கு வந்தார் (12:1). இதை மட்டுமே மார்க்கு தம் நூலின் 11:1இல் குறிப்பிடுகிறார். இவ்வாறு இயேசு எருசலேமில் பணிசெய்த காலத்தில் வரி கொடுப்பது முறையா, கட்டளைகளில் முக்கியமானது எது ஆகியவை போன்ற விவாதங்கள் அவருக்கும் யூதச் சமயத் தலைவருக்கும் நடைபெற்றிருக்கவேண்டும். மார்க்கு அவை யாவற்றையும் தொகுத்துப் புனித வாரத்தில் நடைபெற்றதாக அமைத்துள்ளார்

(மார். 11:27-33; 12:13-37). ஆனால் தொழுகை மன்றத்தைத் துப்புரவாக்கினச் செயல் இவ்வாரத்தில் நடைபெற்றிருக்க வேண்டுமென்று மேல் குறித்த கோகுயெல் என்பவர் கூறியுள்ளார்.

இயேசுவின் துன்பம், சிலுவைச்சாவு ஆகியவற்றின் விவரம் நற்செய்தி நூல்கள் எழுதப்படுமுன்பே தொடர்ச்சியாகத் தொகுக்கப்பட்டு எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று முன் கண்டோம். லூக்கா, மார்க்கு எழுதிய விவரங்களுடன் தாமாகத் திரட்டிய விவரங்களையும் சேர்த்து எழுதியுள்ளார். ஆதலால் இந்நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக இங்கு வரையத் தேவையில்லை. சில முக்கிய குறிப்புக்களை மட்டும் சுட்டிக் காட்டுவோம். இயேசு கோவேறு கழுதையின்மேல் ஏறி புனித வாரத்தின் முதல் நாளில் எருசலேமுக்குள் சென்றதின் தகுந்த காரணத்தை இன்றும் பலர் அறியாதிருக்கின்றார்கள். தாம் எவ்வகையான மெசியா என்று காட்டும்படி அவ்வாறு சென்றார் என்று கருதுவதே பொருத்தம். தாம் அன்பினால் ஆளுகை செய்யும் மெசியா என்று காட்டவே கோவேறு கழுதைமேல் ஏறிச் சென்றார். ஆனால் சில யூத மக்களோ அதையறிந்து கொள்ளவில்லை. அடுத்த முக்கிய நிகழ்ச்சி வியாழன் இரவில் திருவிருந்து ஏற்படுத்தியச் செயலாகும். இயேசு தம் சீடருடன் அருந்திய உணவு பாஸ்கா நாளுக்குரிய உணவுதானா என்ற ஒரு கேள்வி எழும்புகிறது. நான்காம் நற்செய்தி நூலின்படி, அது பாஸ்கா உணவன்று. ஏனெனில், அந்நூலின் ஆசிரியர் கூறியதின்படி இயேசு பாஸ்காவுக்கு முந்திய பிற்பகலில் பாஸ்கா ஆடுகள் கொல்லப்படும் வேளையில் சிலுவையிலறையப்பட்டார் (யோ. 19:14,31). பெரிய ஒய்வுநாள் என்றால் அந்த ஆண்டில் சனிக்கிழமையில் பாஸ்கா வந்தது. யோவான் நற்செய்தி நூலில் கொடுக்கப்பட்ட விவரமே ஒப்புக்கொள்ளத் தகுந்தது என்று அறிஞர் கருதுகின்றனர். ஆதலால் இயேசு அருந்திய உணவு கிடூசு (kiddush) என்ற உணவாயிருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். அது பாஸ்கா நாளுக்கு ஆயத்தமான ஒரு சமயம் சார்ந்த உணவு. வேறு சிலர் அது கபுராத்து (Haburoth) என்ற உணவாயிருக்கலாம் என்று கருதுகின்றனர். அது ஒரு பொதுவான சமயத் தோழமை விருந்து. கிடூசு அல்லது கபுராத்து உணவை அருந்தினார் என்று உறுதியாகச் சொல்வதற்கும் பல தடைகள் உள. ஆதலால் இயேசு பாஸ்கா உணவையே ஒரு நாள்முந்தி அருந்தினார் என்று சிலர் கருதுகின்றனர். இதுவே பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

பாஸ்கா உணவு அருந்தியபின் அருகிலிருந்த ஒலிவ மலையின் பகுதிக்குப் போனார்கள். அப்பகுதிக்கு கெத்சமனே என்று பெயர். அங்கு இயேசு தம் தந்தையின் திருவுளத்திற்குத் தம்மை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து தீயோனைத் தோற்கடித்தார். அவருடைய சீடர்கள் அவருடைய துயரத்தில் அவருக்குத் தோழமை கொடுக்கமுடியாதவர்களாக விளங்கினார்கள். அப்பொழுது யூதாஸ்காரியோத்து சனகரீம் சங்கத்தாரால் அனுப்பப்பட்ட ஆள்களைக் கூட்டிக்கொண்டு அங்குவந்து அவர் வழக்கமாக இரவில் தங்கும் இடத்தைக் காட்டிக் கொடுத்தான். மேலும் முன்பே ஒழுங்கு செய்தபடி அவரை முத்தஞ்செய்தான். அவரைக் கைப்பற்றும் வேளையில் ஏற்படும் குழப்பத்தில் அவர் தப்பியோடிவிடலாம் என்று இந்த ஒழுங்கை செய்திருக்கவேண்டும். ஆனால் அவரோ எவ்வகையிலும் எதிர்க்காமல் தம்மை ஒப்புக்கொடுத்தார். அவர்கள் முதலில் அவரை அன்னா வீட்டிற்கு கொண்டுபோனார்கள். பின் இரவிலேயே தலைமைக்குருவாகிய காய்பா வீட்டில் சமயத் தலைவர்கள் கூடி அவரை விசாரணை செய்தார்கள் (மார். 14:53), முதலில் இறைப்பழிப்பு என்னும் குற்றத்தை அவர்மேல் சுமத்த முயன்றார்கள். எருசலேம் தொழுமன்றத்தை இடித்துப் போடுவேன் என்று அவர் சொன்னதாகக் குற்றஞ்சாட்டினார்கள். அதை மெய்ப்பிக்க முடியாமற்போகவே, நீர் மெசியாவா? என்று இயேசுவை தலைமைக்குரு கேட்டார். கடவுள் ஆணையின்பேரில் விடை சொல்லும்படிக் கேட்டதாக மத்தேயு கூறுகிறார். மத்தேயுவிலும், லூக்காவிலும், நீர்தாம் அப்படிச் சொல்கிறீர் என்று விடை சொன்னதாகக் காண்கிறோம். ஆனால் மார்க்குவில் தாம் மெசியா என்று இயேசு ஒப்புக்கொண்டார் என்று கூறியுள்ளது (15:62). அதைக் கொண்டு அவர் கொலைத் தீர்ப்புக்குரியவர் என்று முடிவுகட்டி விட்டார்கள். சனகரீம் சங்கம் காலையில் கூடிக் கலந்துபேசி இயேசுவை பிலாத்துவினிடத்தில் விசாரணைக்கு ஒப்புவித் தார்கள் என்று மார்க்கு கூறியுள்ளார். திரும்பவும் விசாரித்தார்கள் என்று சொல்லமுடியாது. இரவில் முடிவு கட்டியதை சனகரீம் சங்கம் முழுவதும் உறுதிப்படுத்திற்று என்று கூறலாம். ஆகவே விசாரணையில் மூன்று தவறுகளை அறிஞர் பலர் எடுத்துக்காட்டியுள்ளார்கள். (1) யூதச் சட்டத்தின்படி இரவில் ஒரு குற்றவாளியை விசாரணை செய்யக் கூடாது. அதை மீறினார்கள். (2) சாட்டினக் குற்றத்தை மெய்ப்பிக்க முடியாமற் போனவுடனே குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்திருக்க வேண்டும். அதிலும் குற்றம் செய்தார்கள். (3) யூதச் சட்டத்தின்படி குற்றவாளி சொல்வதைக்கொண்டு அவரைக் குற்றவாளியாக தீர்க்கக் கூடாது. இச்சட்டத்தையும் மீறினார்கள்.

பிலாத்துவின் முன்பு இயேசு தாம் மெசியா என்று சொன்னதாகக் குற்றஞ்சாட்டியதுடன் வரி கொடுக்கக் கூடாதென்று உரோமை ஆட்சியாளரை எதிர்த்துக் கலகம் செய்யும்படி பொதுமக்களை எழுப்பிவிட்டதாகவும் பொய்க் குற்றஞ் சாட்டினார்கள். உண்மையில் அவர் அவ்வாறு செய்யாததால் மட்டுமே அவரை உரோமை ஆட்சியாளர்முன் கொண்டுபோய் விட்டு அவருக்குக் கொலைத்தீர்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அக்காலத்தில் அவர்களுக்கு கொலைத்தீர்ப்பு கொடுக்கும் உரிமை இல்லையென்றே கருத இடமுண்டு. இயேசு தாம் குற்றவாளியில்லை என்று எடுத்துக்காட்டச் சிறிதும் முயலவில்லை. அதில் யாதொரு பயனுமில்லை என்று அறிந்தார். நீதிக்காக யூதரை எதிர்க்கும் வலிமை அவருக்கில்லை என அவர் கண்டார் (யோ. 19:11). ஆதலால் அவர் ஒன்றும் பேசாதிருந்தார். இதைக் கண்ட பிலாத்து, அவர் குற்றவாளியாயிருக்க முடியாது என்று கருதினார். ஏனெனில், அக்காலத்தில் மெசியா என்று எழும்பி உரோமை ஆட்சியாளருக்கு எதிராகக் கலகத்தை மூட்டிவிட்டவர்கள் அவ்வாறு அமைதலாக இருந்திருக்கவே மாட்டார்கள். மேலும் என் அரசு இவ்வுலகத்திற்குரியதன்று. நான் உண்மைக்குச் சான்று பகரவே வந்தேன் என்று அவர் கூறியது (18:36,37) அவரைப் பார்த்தபொழுது நம்பக்கூடிய தாயிருந்தது. அவர் குற்றவாளியில்லை என்று தீர்ப்புக்கூறி அவரை விடுதலை செய்யும் முறைகளை அவன் கையாண்டு பார்த்தான். ஏனெனில், இதற்கு முன்னதாகவே பிலாத்து அரசியல் குற்றஞ்செய்ததாக உரோமைப் பேரரசருக்கு இருமுறை செய்தி போயிருந்தது. இன்னும் ஒருமுறை அவ்வகையான செய்தி பேரரசனுக்கு எட்டுமாயின், பிலாத்துவின் வேலை போய்விடும். இந்நிலையை யூதத் தலைவர்கள் தாங்கள் விரும்பியதைச் செய்து முடிக்கும் வகையில் பயன்படுத்தினார்கள் (19:12). பிலாத்து இயேசு பெருமானாரைச் சிலுவையில் அறைந்து கொல்லும்படி தீர்ப்பிட்டார். இவ்வாறு கொல்லப்படும்படி தீர்ப்பைப் பெற்றவர்களைக் கசையினால் அடிப்பதும், படையாட்கள் வேறு பல வகைகளில் துன்புறுத்துவதும் வழக்கம். இயேசுவை அவ்வாறு கசையினால் அடித்தார்கள், துன்புறுத்தினார்கள்.

சிலுவையில் அறைந்து கொன்றார்கள். இவ்விவரங்களை எழுதும்பொழுது, நற்செய்தி நூலாளர் இயேசு பட்ட துன்பங்களை வலியுறுத்தச் சிறிதும் முயலவில்லை. அவரைக் கொன்றவர்களையும் வதைத்தவர்களையும் குற்றப்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் எழுதியதாகவும் தெரியவில்லை. என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர் என்ற சிலுவையில் அவருடைய கூற்று (மார். 15:34) அவருடைய உள்ளத் துயரத்தின் உச்சத்தை ஓரளவு காட்டும் பலகணியாக விளங்கிற்று எனலாம். அதே வேளையில், தந்தையே, இவர்களுக்கு மன்னியும் என்ற கூற்று, பாவத்தை அவர் தோற்கடித்ததையும், தந்தையே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று கூறி அவர் உயிர்நீத்தச் செயல், அவர் வாழ்க்கை தோல்வியாக முடியவில்லை, வெற்றியாக முடிந்தது என்பதையும் காட்டுகின்றன.

நம் இறைவனார் உயிர்பெற்றெழுந்து காட்சியளித்த கதைகள் சொல்மரபில் நிலவின. அவருடைய கடுந்துன்பங்கள், சாவு ஆகியவற்றின் விவரங்களைப்போல் இக் கதைகள் நற்செய்தி நூல்கள் தொகுத்து எழுதப்படும்முன்பே தொகுத்து எழுதப்படவில்லை. ஏனெனில், ஒவ்வொரு தனிக்கதையும் இயேசு உயிர்பெற்றெழுந்த நிகழ்ச்சிக்குச் சான்று அளிப்பதாயிருந்தது. ஆதலால் அவற்றைத் தொடர்ச்சியாகத் தொகுத்து எழுதத் தேவையில்லை. நம் நற்செய்தி நூல்கள் எழுதப்படும் முன்பே பவுல் அடியாரின் திருமுகங்களில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் இயேசு உயிர்த்தெழுந்த நிகழ்ச்சிக்குச் சான்றுகள் உள என்று தொடக்கத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. திரும்பவும் அவைகளை எடுத்து இங்கு விவரிக்கத் தேவையில்லை. நம் நற்செய்தி நூல்களில் அதைப் பற்றிய விவரங்களில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மார்க்குவின்படி, கல்லறைக்குள் ஓர் இளைஞர் உட்கார்ந்திருந்தார் (16:5); மத்தேயுவின்படி, ஆண்டவரின் தூதுவர் ஒருவர் கல்லறை வாசல் கல்லின்மேல் உட்கார்ந்திருந்திருந்தார் (28:2); லூக்காவின்படி, இரண்டு மனிதர்கள் கல்லறையின் அருகே நின்றார்கள் (24:4); யோவானின்படி, இரண்டு வானதூதுவர்கள் கல்லறைக்குள் ளிருந்தார்கள் (20:12); இப்படிப் பல முரண்பாடுகள் உள. இக்கதைகள் சொல் மரபில் வெவ்வேறு இடங்களில் நிலைபெற்றிருந்தமையால் இவ்வித முரண்பாடுகளிருப்பது இயல்பே. அப்படி இல்லையாயின், நற்செய்தி நூலாளர் கதையைப் புனைவதற்காகக் கூடிச் சேர்ந்து ஒன்றுபோல் விவரங்களை எழுதினார்கள் என்று சொல்ல வேண்டியதிருக்கும்.

மார்க்கு எழுதிய நற்செய்தி நூல் 16:8ஆம் வாக்கியத்துடன் முடிவடைகிறது. மத்தேயுவும் லூக்காவும், மார்க்கு எழுதிய நூலைப் பார்த்து தங்கள் நூல்களை எழுதும் முன்பே அதற்கு முந்தைய பகுதிகள் அழிந்துபோயிருக்கவேண்டும்; அதற்குப் பின்னால் இப்பொழுதுள்ள வாக்கியங்கள் பிற் காலத்தில் எழுதப்பட்டவை என்றபோதிலும் நான்கு நற்செய்தி நூல்களும் கல்லறை வெறுமையாயிருந்தது, இயேசுவின் உடல் அங்கில்லை என்று கூறுவதில் ஒத்திருக்கின்றன. மார்க்கு நூலைத் தவிர மற்ற மூன்று நூல்களும் உயிர்பெற்றெழுந்த இயேசு பல வேளைகளில் தம் சீடர்களுக்குக் காட்சியளித்ததாகக் கூறுவதில் ஒத்திருக்கின்றன. இறுதிப் பகுதி அழிந்துபோன மார்க்கு நூலும் அக்காட்சிக்குச் சான்று அளிக்கின்றது (16:7). கல்லறை வெறுமையாயிராமல் காட்சி மட்டும் கண்டிருந்தால் ஓர் ஆவி உருவத்தைக் கண்டதற்கே அது சான்றாகும். கல்லறை வெறுமையாயிருந்த காட்சியை கண்டிருக்காவிடில் உடலை யாரோ ஒளித்து வைத்துக்கொண்டார்கள் என்றே சொல்லவேண்டும். மேலை நாடுகளில் இவ்விவரங்களின் உண்மையை அறிய வேண்டுமென்று முயற்சித்த அறிஞரில் சிலர், தங்களுக்குத் தெரிந்த இயல் அறிவுக்கு ஒவ்வாத யாவையும் பொய் என்று முடிவுகட்டினார்கள். எ.கா. கதவு பூட்டியிருக்கும்பொழுது அதைத் திறக்காமலே அறையினுள் வந்து காட்சியளித்த இயேசுவின் உடல் தொட்டு உணரக்கூடியதாயிருந்தது என்ற விவரம் உண்மையாயிருக்க முடியாது என்றார்கள். அடியாரின் நம்பிக்கைகளை உறுதிப் படுத்தவேண்டுமென்று அவர்கள் காணும் முறையில் காட்சியளித்தார். எனின், அவர்கள் தொடும் முறையில் உடல் நிலையை மாற்றிக்கொள்ள அவரால் முடியும் என்று நம் நாட்டினர் யாவரும் ஒப்புக்கொள்வார்கள்.

உயிர்பெற்றெழுந்த கதைகளைப் பற்றிய இன்னுமொரு குழப்பம் உள்ளது. மார்க்குவில் கல்லறையிலிருந்த இளைஞர் மகதலேனா மரியாளுடன் போன பெண்களிடம், இயேசு உயிர்த்தெழுந்தார். அவருடைய சீடர்களை கலிலேயாவிற்குப் போகச் சொல்லுங்கள். அவர் முன்புசொன்னபடி அவரை அங்குக் காண்பார்கள் என்று சொன்னதாகக் காண்கிறோம். ஆகவே மார். 6:8ஆம் வாக்கியத்திற்குப் பின்னுள்ள பகுதி அழியாமல் காக்கப்பட்டிருந்தால், இயேசு கலிலேயாவில் தம் சீடருக்கும், பேதுருவுக்கும் காட்சியளித்த விவரம் நமக்குக் கிடைத்திருக்கும். லூக்காவின்படி காட்சிகளெல்லாம் எருசலேமிலும், அதனருகே இருந்த எம்மாவூரிலும் நடைபெற்றன. மத்தேயு கலிலேயாவில் இயேசு காட்சியளித்தார் என்று எழுதியுள்ளார். யோவானின்படி, முதலில் எருசலேமில் அவர் காட்சியளித்தார்; பின்பு கலிலேயாவில் காட்சியளித்தார். லூக்காவின் விவரத்தின்படி, இறைவனார் உயிர்பெற்றெழுந்த அடுத்த நாளிலேயே வானுலகு ஏறிச் சென்றார் என்று கருத இடமுண்டு. அப்படியாயின், கலிலேயாவில் கண்ட காட்சிக்கு இடமில்லை. ஆனால் திருத்தூதுவர் செயல்கள் என்ற நூலில் (Acts of the Apostles) நம் இயேசு உயிர் பெற்றெழுந்தபின் நாற்பது நாள்கள் திருக்கட்டளைத் தொண்டருக்குக் காட்சியளித்து அதன் பின் வானுலகுச் சென்றார் என்று லூக்கா எழுதியுள்ளார். ஆகவே லூக்கா தம் முதல் நூலை எழுதியபொழுது ஏருசலேமில் காட்சியளித்த கதைகளே அவருக்குக் கிடைத்திருக்கவேண்டும். ஆனால் திருத்தூதுவர் செயல்கள் நூலை எழுதிய காலத்தினுள் இயேசு கலிலேயாவில் தம் சீடருக்குக் காட்சியளித்த விவரங்களைப் பற்றி அவர் அறிந்திருக்கவேண்டும். ஆதலால் முதல் நூலில் காலத்தைப்பற்றிய திட்ப நுட்பமில்லாமையை இந்நூலில் திருத்திக்கொள்ளுகிறார் என்று டர்னர் என்ற பேராசிரியர் (H.E.W. Turner) தலைவரும் ஆண்டவருமான இயேசு (Jesus, Master and Lord) என்று தமது நூலில் கூறியுள்ளார். அப்படியாயின், தொடக்கத்தில் இயேசு சீடர்களுக்குக் காட்சியளித்த பின்பு அவர்கள் கலிலேயாவுக்குத் திரும்பியிருக்கவேண்டும். அங்கு அவர்களுக்குக் காட்சியளித்து தம் பணிக்கு வேண்டிய அதிகாரத்தைக் கொடுத்தார். அவர் வானுலகுக்குச் சென்ற பின்பு அவர் கட்டளைப்படி சீடர்கள் தூய ஆவியின் பொழிவைப் பெறும்படி திரும்பவும் எருசலேமில் கூடிக் காத்திருந்தார்கள் என்று டர்னர் விளக்கியுள்ளார்.

3. கடவுளாட்சி பற்றிய இயேசுவின் கருத்து

யோவான் சிறையில் வைக்கப்பட்ட பின்பு இயேசு கலிலேயாவில் வந்து கடவுளாட்சியின் நற்செய்தியை முழக்கம் செய்து, காலம் நிறைவாகிவிட்டது. கடவுளாட்சி அண்மையில் வந்துள்ளது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள் என்று மொழிந்தார் என மார்க்கு நம் இறைவனாரின் திருப்பணியின்

தொடக்கத்தை விவரிக்கிறார் (1:14,15). பன்னிருவரைத் தனிப் பணி செய்ய அனுப்பியபொழுது கடவுளின் ஆட்சியைப் பற்றி அறிவிக்கவேண்டுமென்று இயேசு கட்டளை கொடுத்ததாக லூக்கா கூறியுள்ளார் (9:3). (நம் விவிலியத்தில் வரும் அருளுரையாற்ற என்ற சொல்லுக்குரிய கிரேக்கச் சொல்லின் பொருள் சொற்பொழிவு அல்லது அருளுரை ஆற்றுதல் என்ப தன்று. முழக்கஞ்செய்தல் அல்லது பறைசாற்றுதல் (proclaim) என்பதே அதன் தகுந்த மொழிபெயர்ப்பாகும்). இயேசுவின் உவமைகளில் பெரும்பாலானவை கடவுளாட்சியைப் பற்றினவையேயாகும். இயேசு செய்த வல்ல செயல்களும், கடவுளாட்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவைகளே. நான்கு நற்செய்தி நூல்களிலும் இச்சொல்லுக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆதலால் இதன் பொருள் என்ன வென்று முதலில் அறிய வேண்டும். இதற்குரிய கிரேக்கச் சொல் பாசிலையா (Basileia) என்பதாகும். அரமெயச் சொல் மல்கூத் (malkuth) என்பது. இவ்விரு சொற்களின் பொருள் கடவுளாட்சி என்பதே. கடவுள் ஆட்சி என்பது முதல் கருத்திலிருந்து எழும் இரண்டாம் கருத்தேயாகும். இதைக்கொண்டு. கடவுளைத் தமது இறைவராக ஏற்றுக்கொண்டு அவருடைய திருவுளத்திற்கு அடிபணிகிறவரிடத்தில் கடவுளாட்சி நிலை பெற்றிருக்கிறது என்று அறிஞரில் பலர் விளக்கம் கொடுத்துள்ளார்கள்; இயேசு கற்றுக்கொடுத்த இறைவேண்டலில் உம் ஆட்சி வருவதாக. வானுலகில் உமது திருவுள்ளம் நடைபெறுவது போன்று பூவுலகிலும் நடைபெறுவதாக என்றிருப்பதை அதற்கு ஆதாரமாகக் கொடுக்கின்றனர். இவ்வாறு கடவுளாட்சியைத் தங்கள் வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டவர்களுக்குத் தனி உரிமைகளும் கடமைகளும் உண்டு என்றார்கள்; கடவுளாட்சியை ஏற்றுக்கொண்டவர்களுக்கு கடவுளின் பாதுகாப்பு. ஆதரவு. வழிநடத்துதல் முதலியவையுள்ளன. அவர்கள் அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்து அவருடைய திருவுளத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப்பட்டுள்ளார்களென்று கடவுளாட்சி என்ற சொல்லுக்குப் பொருள் கொடுத்தார்கள். இவ்வாறு பொருள் கொடுப்பதில் ஒரு நன்மை உள்ளது. இதன் மூலம் தனியாட்களின் மதிப்பு வலியுறுத்தப்படுகிறது. ப.ஏ. மறைநூலில் தனியாட்களுக்கு மதிப்பில்லை. குழுவே முக்கியம். ஆனால் பிற்காலத்தில் தனியாட்களின் மதிப்பு வலியுறுத்தப்படலாயிற்று. எசே. 18இலும் திருப்பாடல்களிலும் இந்த உண்மையைக் காணலாம். ஆனால் இயேசு தனி ஆளின் மதிப்பை மிகுதியாக வலியுறுத்தினார் (காணாமற் போன ஆட்டின் உவமை-லூக். 15:3-7). அதே வேளையில் குடும்பத்தின் உறுப்பினராகவே தனி ஆளுக்கு மதிப்பு என்னும் உண்மை பு.ஏ.இல் அழுத்தப்படுகிறது.

அறிஞர் மேலே கொடுத்த விளக்கத்தில், சில குறைகளும் உள. கடவுள் ஆட்சி. தனியாட்கள் அதை ஏற்றுக்கொள்வதை மட்டும் பொறுத்ததாகக் காணப்படுகிறது. இது உண்மை யன்று. குழுவின் மூலம் தனியாட்கள் சீரடைவதை நாம் கண்டுள்ளோம். அத்துடன் கடவுளாட்சி வருவதற்கு மனிதரின் செயலே மிகுதியாக வலியுறுத்தப்படுவது போன்று காணப் படுகிறது. ஆதலால் கிரேக்கச் சொல்லையும். அரமெயச் சொல்லையும் மட்டும் கொண்டு பொருள் கூறுவது தகுந்த முறையன்று. இச் சொல்லுக்குரியப் பின்னணியத்தை ஆராய்ந்து அதற்குப் பொருள் கொடுப்பதே தகுந்த முறை யாகும். பண்டைய காலத்திலிருந்தே மெசியா வந்து கடவு ளாட்சியை நிலைநாட்டுவார் என்று யூதர் எதிர் நோக்கினர். அதிலும் பிற நாட்டாரால் ஆளப்பட்டு அடிமைகளா யிருந்தபொழுது மெசியா வந்து தங்களை விடுதலை செய்து தங்கள் மூலம் கடவுளாட்சியை நிலைநாட்டுவார் என்று நம்பினார்கள். இதன்படி மெசியாவின் ஆட்சி நிலைநாட்டப் படும்பொழுது தங்களுக்கு அரசியல் விடுதலையுண்டு; அந்த மெசியாவின் ஆட்சி அறவாட்சியாயிருக்கும் (ஏசா. 11:3-5); மக்கள் ஒருவருடன் ஒருவர் போர் செய்யாமல் நல்லுறவு கொண்டு வாழ்வார்கள் (ஏசா. 16:6-14). இவை யாவுக்கும் அடிப்படையாக உலக முழுவதும் கடவுளை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். அதாவது மக்கள் கடவுள் பற்றுள்ளவர் களாயிருப்பார்கள் (ஏசா. 11:9). மேலும் மெசியாவின் ஆட்சியில் துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சிறையில் வைக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்படுவார்கள். இவ் வகையான எல்லாத் தீங்குகளிலிருந்தும் விடுதலை கிடைக்கும். (எசா. 61:1-3). மேலும் எசா. 35:4-6இல் கடவுள் இஸ்ரயேல் மக்களை மீட்கும் பொழுது பார்வையற்றோரின் கண்கள் பார்வை பெற்று காது கேளாதோரின் செவிகள் திறக்கப் படும். அப்பொழுது கால் ஊனமுற்றவர் மானைப்போன்று குதிப்பார். வாய்பேசாதவரின் நா மகிழ்ந்து பாடும் என்று கூறப்பட்ட செயல்களைப் போலான செயல்களைத் தாம் செய்வதாக இயேசு திருமுழுக்கு யோவானுக்குச் சொல்லி யனுப்பினார் (லூக். 7:32). ஆகவே மெசியாவின் ஆட்சியில் மக்களுக்கு நல்வாழ்வு உண்டாகும் என்று மக்கள் நம்பினார்கள். அவ்வாட்சியில் நோயிராதென்றும். மக்களை வருத்தும் எல்லாத் தீங்குகளும் அகற்றப்படும் என்றும் கருதினார்கள்.

இயேசுவின் காலத்தில் பல மறைபொருள் வெளிப்பாட்டு இலக்கிய நூல்கள் இருந்தன (Apocalyptic Literature). இந்நூல்கள் மெசியாவின் ஆட்சி எப்பொழுது வரும். அவர் வரும்பொழுது என்ன அறிகுறிகள் காணப்படும். அவர் ஆட்சி எத்தன்மையதாயிருக்குமென்று விளக்கின. மெசியா வந்து பிற மக்களைக் கொடுமையாகத் தண்டித்து அவர்களை அழித்து அல்லது அவர்களை அடிமைப்படுத்தித் தங்களுக்கு அரசியல் விடுதலையைக் கொடுப்பார் என்ற எண்ணம் இந்நூல்களில் மிகுதியாக வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அவ்வாட்சியில் மக்கள் நல்வாழ்வு பெற்று வாழ்வார்கள் என்ற எண்ணமும் மிகுதியாக விவரிக்கப்பட்டுள்ளது. மெசியா வந்து பேய்களை எல்லாம் ஓட்டுவாரென்றும். நிலத்தின் விளைவு மிகுதியாயிருப்பதால் மக்கள் வறுமையை அறியமாட்டார்கள் என்றும் விளக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் மெய்பக்தி வளரும் எண்ணம் அவ்வளவாக அழுத்தப்படாவிட்டாலும் அது முழுவதுமாக மறையவில்லை. மேல் விளக்கிய உண்மைகளின் இரு முக்கிய பகுதிகளை செக்காரியாவின் பாடலில் நாம் காணலாம். லூக். 1:74இல் நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்று நம்மை மீட்கும்படிக்கு என்ற கூற்று அரசியல் விடுதலையையும். 77இல் அவருடைய மக்களுக்குப் பாவ மன்னிப்பாகிய மீட்பைத் தெரியப்படுத்தவும் என்ற கூற்று பாவத்திலிருந்து விடுதலை பெற்று மெய்பக்தியில் வளர்வதையும் காட்டுகின்றன. ஆகவே கடவுளாட்சி என்றால் எல்லாத் தீங்குகளிலிருந்தும் மக்களை விடுதலை செய்கின்ற கடவுளின் மீட்பேயாம். இவ்வாறு பொருள் கொடுப்பதே தகுந்தது என்பதற்கு மார். 10:17-28இல் கொடுக்கப்பட்ட விவரம் ஆதார மளிக்கின்றது. ஒரு செல்வந்தர் ஓடி வந்து இயேசுவிடம், நிலை வாழ்வைப் (eternal life) பெற்றுக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார். அவர், உனக்குள்ள யாவையும் விற்று வறியருக்குக் கொடு என்றார். அவர் மிகுந்த செல்வந்தராயிருந்தபடியால் அவ்வாறு செய்ய மனமில்லாது துக்கத்துடன் போய் விட்டார். அப்பொழுது இயேசு செல்வத்தின் மீது நம்பிக்கை வைக்கிறவர் கடவுளாட்சியினுள் வருவது எவ்வளவு அரிது என்றார். அவர் நிலைவாழ்வைப் பெறும் வழியைத் தேடினார். இயேசு அவர் கடவுளாட்சிக்குள் வரும் வழியை இழந்தார் என்றார். ஆகவே இரண்டும் ஒரு பொருளைக்

குறிக்கிறது என்று காணலாம். மேலும் இயேசு, செல்வந்தர் கடவுளின் ஆட்சியினுள் வருவதைக் காட்டிலும் ஒட்டகம் ஊசியின் காதுக்குள் நுழைவது எளிதாயிருக்கும் என்றார். அப்பொழுதும் சீடர்கள், அங்ஙனமாயின் யார்தான் மீட்கப்பட முடியும் என்று சொன்னதாகக் கூறப்பட்டுளது. இதன்மூலம் கடவுள் ஆட்சியும் மீட்பும் ஒன்றே எனக் காண்கிறோம்.

இக் கடவுளின் ஆட்சிக்குள் வந்தவர்கள், அதாவது கடவுள் தம் திருமைந்தர் மூலம் செய்து முடித்த மீட்பைத் தங்களதாக்கியவர்கள் திருச்சபையின் மக்களாதலால் புனித அகுஸ்தின் திருச்சபையே கடவுளின் அரசு என்றார். ஏனெனில், இவ்வுலகில் கடவுளின் ஆட்சி நிலவிய மண்டலம் அல்லது மன்குழு திருச்சபை என்பது அவர் கருத்து. அவர் கொடுத்த விளக்கம் சீர்திருத்தக் காலம் வரைக்கும் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வந்தது. ஆனால் சீர்திருத்தக் காலத்தில் அகுஸ்தின் கொடுத்த விளக்கத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டது. போன நூற்றாண்டிலும், இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் இவ்வுலகத்தின் தீங்குகள் யாவும் நீக்கப்பட்டு, மக்கள் நல்வாழ்வுடன் வாழ்வதே கடவுளாட்சி என்றார்கள். ஆதலால் அத்தீங்குகளை நீக்குவதற்காக ஏற்பட்ட இயக்கங்களில் யாவரும் ஈடுபட்டு கடவுளின் அரசை நிலைநாட்ட வேண்டுமென்றார்கள். அவர்களுடைய எண்ணத்தின்படி, இவ்வுலகத்திலேயே கடவுளின் அரசு நிலைநாட்டப்படும். உலகத்தின் வரலாறு முடிவடைவதில்லை என்பதாம்; இந்நிலையில் ஆல்பர்ட்சுவைட்சர் என்ற பேரறிஞர் **வரலாற்று இயேசுவைக் காண முயற்சி** (The Quest of the Historical Jesus) என்னும் நூலை எழுதி, அதுவரையிலும் நிலவியிருந்த எண்ணத்தை முழுவதுமாக மாற்றிவிட்டார். அவர் மிகவும் திறமையாக எழுதி விளக்கிய உண்மை: இயேசு முதல் தடவை கடவுள் அரசின்முன் தூதுவராக வந்தார். அவ்வேளையில் அவர் மெசியா அல்லர். அப்பதவிக்கென்று முன்னமே குறிக்கப் பட்டவர். தாம் இவ்வுலகத்தில் இருந்தபொழுதே கடவுள் அரசு மிகுந்த மாட்சியுடனும், வலிமையுடனும் இவ்வுலகில் நிலைநாட்டப்படும் என்றும், அப்பொழுது மெசியாவாகத் தாம் ஆளுகை செய்வார் என்றும் எதிர்பார்த்தார். ஆனால் அவர் காலத்தில் கடவுள் அரசு வரவில்லை. சுவைட்சர் எழுதியதிலும் பலகுறைகள் உள்ளன. அறிஞர் அவற்றைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். அவற்றை இங்குக் குறிக்க இடமில்லை. அதே வேளையில் அவர் வலியுறுத்திய முக்கிய உண்மை பெரும்பாலோரால் இன்னும் ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. அது கடவுள் அரசு, மனிதர் தங்கள் முயற்சியால் கட்டுவதன்று, கடவுளே அதைக் கட்டுகிறவர். அது இன்னமும் வரவில்லை. ஆனால் திண்ணமாக வரும்.

இதற்கு நேர்மாறாக டாட் (C.H. Dodd) என்ற பேராசிரியர் கடவுளாட்சி வந்து விட்டது, இனி வரப்போகிறது என்று சொல்வது முழுவதும் பொருளற்றதாகும் என்று **ஆட்சியின் உவமைகள்** (Parable of the Kingdom) என்ற தமது நூலில் மிகவும் திறமையுடன் விளக்கியுள்ளார். கடவுளாட்சி இன்னும் வரவில்லை. இயேசு இரண்டாம் முறை வரும்பொழுது மட்டுமே கடவுளாட்சி வரும் என்பது நம் நாட்டுக் கிறிஸ்தவர்களில் பெரும்பாலோரின் கருத்து. அவர்களுக்கு டாட் விளக்கிய உண்மை மிகவும் தேவை. தாம் விளக்கும் உண்மைக்கு ஆதாரமாக டாட் பல ஆதாரங்களைக் கொடுத்துள்ளார். அவைகளில் சிலவற்றைச் சுட்டிக் காட்டுவோம். நான் கடவுளின் விரலினால் பேய்களை ஓட்டினால் கடவுளாட்சி உங்களிடத்தில் வந்துள்ளதே (லூக். 11:20 Q) என்று நம் இயேசு கூறினார். மார். 11.15இல் காலம் முழுமையடைந்தது. கடவுளாட்சி அண்மையில் வந்துள்ளது என்று விளம்பரம் செய்தார் என்று கூறப்பட்டுள்ளது. அதை கடவுளாட்சி நெருங்கிவிட்டது என்று மொழிபெயர்க்கலாம். ஆனால் இதற்குரிய கிரேக்கச் சொல் செப்துவசிந்து மறையில் நாகா (naga) என்ற எபிரேயச் சொல்லை மொழிபெயர்க்கப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. அச் சொல்லுக்குரிய பொருளின்படி கடவுளாட்சி வந்துவிட்டது என்று மொழிபெயர்க்க வேண்டும் என்று டாட் எடுத்துக் காட்டியுள்ளார். லூக். 10:23,24இல் குறிக்கப்பட்டது கடவுளாட்சியே. நம் தமிழ் மறையில் 11:31,32இல் சாலமோனிலும் பெரியவர் இங்கிருக்கிறார். யோனாவிலும் பெரியவர் இருக்கிறார் என்றிருக்கிறது. சாலமோனிலும் யோனாவிலும் பெரியது இங்கிருக்கிறது என்பதே தகுந்த மொழிபெயர்ப்பு. அது கடவுளாட்சியேயாம். இவ்வகையான பல ஆதாரங்கள் உள்ளன.

அடுத்தபடியாக கடவுளாட்சி எதிர்காலத்தில் வரும் என்று தெளிவாக இயேசு சொன்னார் எனத் திண்ணமாகச் சொல்வதற்கு ஆதாரமில்லை என்று டாட் கூறியுள்ளார். அவ்வாறு சொல்வதுபோன்று தோன்றும் வாக்கியம் கடவுளின் ஆட்சி ஆற்றலுடன் வருமுன் இங்கு நிற்கிறவர்களில் சிலர் சாகமாட்டார்கள் (மார். 9:1) என்பது மட்டுமேயாகும். ஆனால் அவ்வாக்கியம் இயேசுவின் இரண்டாம் வரவைக் குறிக்கிறது என்று உறுதியாகச் சொல்ல முடியாது என்று அவர் விளக்கியுள்ளார். மேலும் இரண்டாந்தடவை வந்து தாம் நடுத்தீர்ப்புச் செய்வதாகக் கூறும் கூற்றுக்கள், உண்மையில் யூதருக்கு உரோமை நாட்டாரால் வரும் அழிவைப்பற்றி முன்கூறிய கூற்றுக்களேயாகும். இறுதிநாள் நடுத்தீர்ப்பைக் குறிக்கும்படி அக்கூற்றுக்களைப் பிற்காலத்தில் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று டாட் விரிவாக விளக்கியிருக்கிறார். அத்துடன் இரண்டாம் வருகையை விளக்கும் உவமைகள் என்று பொதுவாகக் கருதப்படும் உவமைகளையுங்கூட, அவைகள் இயேசுவின் முதல் வருகைக்குரியவைகள் தாம் என்று அவர் விளக்கிக் காட்டியுள்ளார். எடுத்துக்காட்டாக பத்து தாலந்து உவமையை (லூக். 19:12-27) கீழ்க்காட்டியபடி விளக்கியுள்ளார். முதலைப் பெருக்காமல் இருந்த வேலைக்காரனுக்கு ஒப்பானவர்கள் சமய நெறியாளர் ஆவர். தாங்கள் சமய நெறியைக் கைக்கொண்டதன் காரணமாக கடவுள் தங்களுக்கு நன்மையளிக்கவேண்டுமென்று அவர்கள் எதிர்நோக்கினார்கள். ஆனால் அவர்கள் சமயநெறியைக் கைக்கொண்டதால், பாமர மக்கள், பாவிகள் என்று சமுதாயத்தை விட்டு விலக்கப் பட்டவர்கள். பிற இனத்தார் ஆகியோருக்கு யாதொரு பயனுமில்லாமற் போயிற்று. அதாவது கடவுளுடைய முதலுக்கு வட்டி இல்லாமற்போயிற்று என்று அதன் பொருளை விளக்கியுள்ளார். இவ்வகையான நிலையைத் தம் மனத்தில் கொண்டவராய் இயேசு இந்த உவமையைச் சொன்னார் என்பது அவர் கருத்து. இது பத்துக் கன்னியரின் உவமைக்கும் (மத். 25:1-2) பொருந்தும். கடவுளின் ஆட்சி நமக்கு எதிர்ப்படும்பொழுது நாம் விழிப்பாயிருந்தால் மட்டுமே அதன் ஆட்சிக்குள் வருவோம்; அதாவது அதை அனுபவிப்போம். மற்றப்படி நாம் அதை இழந்துபோவோம் என்று பொருள் கொடுத்துள்ளார் (மத். 11:12இன் கருத்து இதற்கொப்பானதே).

மேல் விளக்கியதைச் சுருங்கச் சொல்வோமாயின், இயேசு இவ்வுலகில் வாழ்ந்து சிலுவையில் உயிர்விட்டு மூன்றாம் நாள் உயிர்பெற்றெழுந்ததின் பயனாய் கடவுளாட்சி இவ்வுலகில் வந்துவிட்டது. அத்துடன் இவ்வுலகில் கடவுள் ஆட்சியை ஏற்றுக்கொண்டவர்கள் மறுவுலகில் கடவுளாட்சியின் நிறைவில் பங்கெடுத்து மகிழ்கிறார்கள் என்று அதன் தொடர்பை விளக்கலாம். பேராசிரியர் டாட் கொடுத்துள்ள விளக்கத்தில் மிகுந்த உண்மை உள்ளது என்று அறிஞரில் பெரும்பாலோர்

ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் அவர் கூறியது முழு உண்மையில்லை என்று அவர்கள் உணருகின்றார்கள்.

டாட் கொடுத்த விளக்கத்திலுள்ள குறையைச் சுருக்கமாக வரைவோம். ப. ஏ. மறைநூலின்படி கடவுள் உலக முழுவதன் மேலும் ஆளுகை செய்கிறவர். உலக முழுவதையும் தம் ஆட்சிக்குள் கொண்டுவரவேண்டும், அதாவது உலகத்தின் எல்லாத் தீங்குகளையும் அதற்குக் காரணமான பாவத்தையும் நீக்கி அதை மீட்க வேண்டும் என்பதே அதைப்பற்றி அவர் கொண்டுள்ள நோக்கம் என்று கூறலாம். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் கடவுள் கையாளும் முறையைப்பற்றிக் கருத்து வேறுபாடுண்டு. பலரின் கருத்துப்படி பாவிகளை அழித்து, அதாவது யூதரல்லாதோரை அழித்துத் தம் அறத்தின் ஆட்சியைத் தம் மக்களாகிய யூதர் நடுவில் நிலைநாட்டுவார் (எ.கா. எசா. 63:1-8). சில வேளைகளில் பிறஇனத்தார் யூதருக்கு அடங்கி அவர்கள் மூலமாக கடவுளின் மீட்பைப் பெறுவார்கள். எங்ஙனமாயினும் கடல் தண்ணீரால் நிறைந்திருப்பதைப் போன்று உலக முழுவதும் கடவுளையறிகிற அறிவினால் (மெய் பக்தியால்) நிறைந்திருக்கும் (எசா. 11:9). 49:6இல் நீர் நிலவுலகின் கடைசி எல்லை வரைக்கும் என்னுடைய மீட்பாயிருக்கும்படி உம்மை மக்களுக்கு ஒளியாக வைப்பேன் என்று கடவுளின் அடியாரைப்பற்றிக் கூறியுள்ளது. அந்த அடியார் முதலில் இஸ்ரயேல் மக்களும், பின் அவர்களில் எஞ்சிய குழுவும், முடிவில் ஒரு தனி ஆளும் ஆவார் எனப் பொருள் கொடுக்கலாம் என்று முன் கண்டோம். ஆகவே ப.ஏ. மறைநூலின்படி இவ்வுலகத்தை மீட்பதே கடவுள் அதைப் பற்றிக் கொண்டுள்ள நோக்கம் என்பது தெளிவாகிறது. பு.ஏ.இலும் கிறிஸ்துவைத் தலையாகக் கொண்டு வானுலகத்திலுள்ளோரையும், இவ்வுலகத்திலுள்ளோரையும் ஒரே குடும்பமாக்குவதே கடவுளின் முடிவான நோக்கம் என்று பவுல் அடியார் கூறியுள்ளார் (எபே. 2:9,10; 3:14,15). இக்கருத்தை பவுல் அடியார் தாமே உருவாக்கிக்கொண்டாரா அல்லது இயேசு அதற்கு ஆதாரமளிக்கின்றாரா? கடவுளாட்சியைப் பற்றி இயேசு கற்பித்தவைகளை நாம் படித்தோமானால், அவரே பவுல் அடியாரின் கருத்துக்கு ஆதாரமாவார் என்று உறுதியாகச் சொல்லலாம். கடவுள் தந்தை என்னும் உண்மையை இயேசு மிகவும் அழுத்தமாக வலியுறுத்தியுள்ளார் (இதை விரிவாகக் கீழ்க் காண்போம்). ஆதலால் கடவுளுக்கு மக்கள் யாவர் மேலும் அக்கறையுண்டு. யாவருக்கும் தம் ஆட்சியை (மீட்பை) அருள அவர் விரும்பினார்; ஆதலால் தம் திருமைந்தரை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். அவர் கடவுள் ஆட்சியின் நற்செய்தியைப் பறை சாற்றினார், தொலைந்துபோன ஓர் ஆடுங்கூட அழிந்துபோவதை ஆயன் விரும்பாததுபோன்று, கடவுளும் ஒரு பாவியும் கெட்டழிந்துபோவதை விரும்பவில்லை என்பதைத் தம் வாழ்க்கையில் தெளிவாகக் காட்டினார். ஆனால் எல்லாரும் அவருடைய பிள்ளைகள் அல்லர். கடவுளைத் தந்தையாக ஏற்றுக்கொண்டவர்களே அவருடைய பிள்ளை களாவர் (யோ. 1:12). வேறு வகையில் சொல்வோ மாயின் கடவுளின் ஆட்சியை ஒரு சிறு குழந்தைபோன்று ஏற்றுக் கொண்டவர்களே அவருடைய பிள்ளைகள். கடவுள் ஆட்சியின் தலைவர் தந்தை. ஆதலால் அவருடைய ஆட்சிக்குள் வந்தவர்கள் அவருடைய பிள்ளைகள். ஆகவே கடவுளாட்சிக்குள் வந்தவர்கள் ஒரு குடும்பத்தின் பிள்ளைகளாவர். இக் குடும்பத்தை கடவுள் உருவாக்கியதின் நோக்கம், குடும்பத்திற்கு வெளி யிலிருப்பவர்களையும் கடவுளின் ஆட்சிக்குள் கொண்டு வருவதற்காகவே. ஏனெனில், தம்முடைய பிள்ளைகள் தம்மைத் தந்தையாக ஏற்றுக்கொள்ளாமல் கெட்ட மைந்தனைப் போன்று தம் விருப்பப்படி வாழ்ந்தாலும் அவர்களும் மனம் மாறி நல்வாழ்வு பெற வேண்டுமென்பதே அவருடைய நோக்கமாகும். ஆதலால் இந்நோக்கம் நிறைவாகும் வரைக்கும் கடவுளாட்சி முழுவதுமாய் வந்துவிட்டது என்று கூறுவது பொருத்தமன்று.

இயேசு இவ்வுலகில் வந்ததன் மூலமாக ஒரு தனி வகையில் கடவுளின் மீட்பு இவ்வுலகிற்கு வந்தது என்பது மிகவும் உண்மை. பவுல் அடியார் கூறியிருப்பதை நாம் ஒப்புக் கொள்வோமாயின், மனித குல முழுவதும் மீட்கப்பட்டாயிற்று. தானியேலின் மானிடமகன், புனிதரின் சபை என்றும், அதிலிருந்து எழுந்த கருத்தின்படி அவர் துன்புற்ற அச் சபையின் பெயராளர் என்றும் கண்டோம். கடவுளின் ஆட்சி (மீட்பு) முழுவதும் நிறைவான ஒரு மனிதர் இயேசு ஆவார். ஆனால் அவர் மனுக்குலத்தின் முதல் மனிதரே. மனித குலம் அந்நிலைக்கு வரும் என்பதற்கு அவர் முன்னுறுதியாவார். இயேசுவில் தொடங்கிய மீட்பு நிறைவடையும் நாளையே இரண்டாம் வருகை என்று நாம் கருதுவது பொருத்தமாம். உம்முடைய ஆட்சி வருவதாக என்று கடவுளை வேண்டும்படி தம் சீடருக்கு இயேசு கற்றுக்கொடுத்தபொழுது, வானுலகில் தூதுவர்கள் நடுவில் கடவுளின் ஆட்சி எவ்வகையான பாவமும், தீங்கும் இல்லாத வகையில் நிலவுகின்றதோ அதுபோன்று இந்நிலவுலகிலும் அது நடைபெறுவதற்காக வேண்டுதல் செய்யும்படி கேட்டார் எனலாமன்றோ! மேலும் பேராசிரியர் டாட், கடவுளின் ஆட்சியை ஏற்றுக்கொண்டவர்கள், அவர்கள் இறந்தபொழுது கடவுள் ஆட்சியின் நிறைவைப் பெறுகிறார்கள் என்று விளக்கியுள்ளார். ஆனால் பு.ஏ.இல் வலியுறுத்தப்பட்ட உண்மை, திருச்சபை கிறிஸ்துவின் உடல் என்பதாகும். இது உண்மையாயின், உடல் முழுமையடையுமுன் தனியுறுப்பு முழுமையடைய முடியாது. ஏனெனில், ஒரு தனி மனிதர் வாழும் சமூகம் (society) குறைவான நிலையிலிருக்கும் வரையில் அவர் நிறைவான நிலை அடைய முடியாது என்பது உண்மை. ஆகவே தனியாட்களின் மீட்பும் கடவுளின் நாளில் மட்டுமே நிறைவாகும் என்பது உறுதி.

கடவுளின் நாளைப்பற்றி பு.ஏ.இல் பலவகைப்பட்ட கருத்துக்கள் இருக்கின்றன என்று நாம் காணலாம். இயேசு அதைப்பற்றிக் கூறியிருப்பதிலுங்கூட முரண்பாடுகள் உள்ளன. ஆதலால் மேற்குறித்த முடிவை யாவரும் ஒப்புக்கொள்வது எளிதன்று. இவ்வகையான குழப்பத்திற்குக் காரணம் என்னவென்பதை மட்டும் இங்குச் சுட்டிக் காட்டுவோம். முதலில் யூதர், மெசியா இருமுறை வருவார் என்று ஒருபொழுதும் எதிர்பார்க்கவில்லை. அவர் வரும்பொழுது கடவுள் தம் மெசியா மூலமாக நடுத்தீர்ப்புச் செய்து பாவிகளைத் தண்டித்து அழிப்பார் என்று நம்பினார்கள். மேலும், மெசியா வரும்பொழுது இறைஆற்றலுடன் இயல்கடந்த பல செயல்கள் நடைபெற அவர் வருவார் என்றார்கள். இவ்வகையான யூத எண்ணங்கள் இயேசு தாம் இரண்டாம் முறை வருவதைப்பற்றிக் கூறியவற்றுடன் மிகுதியாகக் கலந்திருக்கின்றன. ஆதலால் முதல் தடவை வந்தபொழுது மன்னித்து கடவுளாட்சியை நிலைநாட்டும் வழியைத் தெரிந்து கொண்ட மெசியாவாகிய இயேசு, இரண்டாம்முறை வரும் பொழுது யூதர் எதிர்பார்த்த வண்ணம் மக்களை நடுத்தீர்ப்புச் செய்து பாவிகளை நரகத்தில் போட்டு அழித்துத் தம் ஆட்சியை நிலைநாட்டுவாரா என்று கேட்க வேண்டும். கடவுளின் ஆட்சி முடிவில் வெற்றியடையும், ஒருவரும் அதை எதிர்க்கமுடியாது என்று நாம் கருதுவதற்குப் பு.ஏ.இல் ஆதாரங்கள் உள்ளன. பவுல் அடியார் உரோமைச் சபையாருக்கு எழுதிய திருமுகத்தின் 6ஆம் அதிகாரத்திலும், அதிலும் முக்கியமாக 18ஆம் வாக்கியத்திலும் இவ்வுண்மையைத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். நான் உயர்த்தப்படும் பொழுது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன் (யோ. 12:32) என்று இயேசு கூறியதும் இதற்கு ஆதாரமாகும்;

வேறு ஆதாரங்களும் உள்ளன. மேல் விளக்கிய உண்மையை நாம் ஒப்புக்கொள்ளாமல் இறுதிவரையும் கடவுளை எதிர்த்து நிற்கும் மக்கள் இருப்பார்கள் என்று நம்பினாலும், கடவுள் அவர்களைத் தண்டிக்கும் முறை செயற்கையான நடுத் தீர்ப்பாயிராமல் இயல்பான நடுத்தீர்ப்பாகவேயிருக்கும் என்று நம்ப ஆதாரம் உண்டு. அவர்கள் தாங்களே கடவுளை விட்டுத் தங்களைப் பிரித்துக்கொள்வார்கள். அதுவே நரகம் என்று கருதுவதே பொருத்தம்.

திருச்சபை: இனி கடவுளாட்சிக்கும், திருச்சபைக்கு முள்ள தொடர்பை மிகவும் சுருக்கமாக ஆராய்வோம். புனித அகுஸ்தின் திருச்சபையும், கடவுளாட்சியும் ஒன்றே எனக் கூறினார் என்று முன் கண்டோம். சீர்திருத்தக்காலம் வரைக்கும் அவர் கருத்தை ஒருவரும் மறுக்கவில்லை. அதன்பின் ஏன் அக் கருத்தை ஒப்புக்கொள்ள மறுத்தனர் எனில், வரப்போகும் கடவுளாட்சியின் நிறைவையே அவர்கள் கடவுளாட்சியாகக் கருதினார்கள். இயேசு மூலம் கடவுளாட்சி வந்துவிட்டது என்னும் உண்மை அக்காலத்தில் வலியுறுத்தப்படவில்லை. ஆகையால் குறைவான நிலையிலிருந்த திருச்சபையை கடவுளாட்சியாக அவர்கள் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அது ஒருவகையில் உண்மையே. கடவுளாட்சி என்ற சொல் தொடக்கத்தையும்,முடிவையும் நம் கண்முன் நிறுத்துகின்றது. ஆனால் வேறொரு காரணத்தைக் கொண்டும் திருச்சபையை கடவுளாட்சிக்கு நிகராக்கக்கூடாது. கடவுளின் மீட்பின் ஆற்றல் திருச்சபைக்கு வெளியிலும் செயல்புரிந்து கொண்டேயிருக்கின்றது. ஒரு சிறு பிள்ளையைப் போன்று கடவுளாட்சியை ஏற்றுக்கொண்டவர்கள் நடுவில் கடவுளாட்சி ஒரு தனிப்பட்ட முறையில் செயலாற்றுகின்றது என்பதில் ஐயமில்லை. அவ்வாறு ஏற்றுக்கொண்டவர்களின் குழுவே திருச்சபை. ஆனால் திருச்சபைக்கு வெளியே இருப்பவர்களை கடவுள் முழுவதும் கைவிடவில்லை.

அதேவேளையில் கடவுளாட்சிக்கும், திருச்சபைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. கடவுளாட்சியின் நற்செய்தியை நம்புகிறவர்களும் கடவுளாட்சியைச் சிறு பிள்ளையைப்போன்று ஏற்றுக் கொள்கிறவர்களும் திருச்சபையின் மக்களாவர். கடவுளாட்சியை உலகில் நிலைநாட்ட கடவுள் தேர்ந்துகொண்ட கருவியே திருச்சபையாகும். திருச்சபையை இயேசு உருவாக்கவில்லை, அதை உருவாக்கவேண்டுமென்பதும் அவருடைய நோக்கமன்று என அறிஞரில் சிலர் கூறுகின்றனர். மத். 16:18; 18:17 முதலிய வாக்கியங்களிருக்க இயேசு சபையை உருவாக்கவில்லை என்று எங்ஙனம் கூறமுடியும் என சிலர் வினவலாம். அதற்கு விடையாக அவ்வறிஞர். இவ்வகையான வாக்கியங்கள் பிற்காலத்தில் எழுதப்பட்டன. மார்க்கு, கொல்லே போலான மூல நூல்களில் இந்தக் கருத்துக்கு ஆதாரமில்லை என்று கூறுகின்றனர். ஆனால் நாம் முன் கண்டபடி கடவுள் தந்தையாயின் கடவுளாட்சியை ஏற்றுக்கொண்டவர்கள் அவருடைய பிள்ளைகளாவர். அங்ஙனமாயின் அவர்கள் ஒரு குடும்பத்தின் உறுப்பினர் ஆவாரன்றோ! திருச்சபையே அக்குடும்பம். மேலும், இயேசு மானிடமகன் என்றால், அவர் இறையரசை ஏற்றுக்கொண்ட குழுவின் முதல் மனிதர் என்பதாம். ஆகவே மானிட மகன் என்ற பட்டத்தை அவர் சூடிக்கொண்டபொழுது ஒரு குழுவை உருவாக்குவது அவருடைய நோக்கம் என்று நாம் உய்த்தறியலாம். தாம் புதிய இஸ்ரயேலுக்குத் தலைவர் எனும் உண்மையை வலியுறுத்த பன்னிரு சீடரை அவர் தேர்ந்துகொண்டார் எனலாம். லூக். 12:32இல், அஞ்சாதே, சிறு மந்தையே, உங்களுக்கு ஆட்சியைக் கொடுக்க உங்கள் தந்தை விரும்புகிறார் என்றுள்ளது. அங்கு சிறு மந்தை என்பது ஒரு குழுவையே குறிக்கும். இயேசு கற்பித்த இறைவேண்டலில், எங்கள் தந்தையே, எங்கள் பாவங்களை மன்னியும் என்பவை போலான விண்ணப்பங்கள் சபையைச் சுட்டிக் காட்டுகின்றன. திராட்சைத் தோட்டத்தின் உவமையில் (மார். 12:1-9; மத். 21:33-46; லூக். 20:9,19) பழைய தோட்டக்காரரை அழித்துப் புதிய தோட்டக்காரரிடத்தில் கொடுப்பார் என்று இயேசு சொல்லி யுள்ளார். அங்கு பழைய தோட்டக்காரர் இஸ்ரயேல் மக்கள் என்பது திண்ணம். அங்ஙனமாயின் புதிய தோட்டக்காரர் திருச்சபையாகுமன்றோ! கடுகு முளைத்துப் பெரிய செடியாகி அதன் கொப்புக்களில் பறவைகள் வந்து தங்கும் என்று சொல் லியது திருச்சபையைக் குறிக்கும் எனக் கூறலாம். ஆகவே திருச்சபை இயேசுவின் நோக்கத்திற்கு மாறான ஒன்றில்லை, முழுவதும் இசைந்ததேயாகும் என்பதில் ஐயமில்லை.

4. அருஞ்செயல்கள் (அற்புதங்கள்)

கிரேக்க மொழியில் டுனாமிஸ் (dunamis), இஸ்தெராஸ் (steras), சேமையான் (semeion) என்ற மூன்று சொற்களையும் நம் தமிழ் மறைநூலில் அற்புதம் அல்லது அருஞ்செயல் என்று மொழிபெயர்த்துள்ளார்கள். அச்சொற்களின் பொருள் முறையே வல்ல செயல், வியத்தகு செயல், அருஞ் செயல், அறிகுறியான செயல் என்பதாகும். இஸ்தெராஸ் என்ற சொல் பன்மையில் மட்டும் பு.ஏ.இல் பயன்படுத்தப்பட்டுள்ளது. நற்செய்தி நூல்களில் மத். 24:24இலும், 13:22இலும் மட்டுமே இச்சொல் வழங்கப்பட்டுள்ளது. யோவான் நற்செய்தி நூலாசிரியர் சேமையான் என்ற சொல்லை மட்டுமே பயன்படுத்தியுள்ளார். ஆதலால் அருஞ்செயல் (வியத்தகுச் செயல் - steras) என்பதைக் காட்டிலும் அடையாளச் செயல் என்பதே பொருத்தம்.

இயேசு அருஞ்செயல்கள் (வல்ல செயல்கள்) செய்ததின் நோக்கமும் கருத்தும் பலருக்கு விளங்குவதில்லை. அவர் வரலாற்றில் இக் கதைகள் இராவிட்டால் அவர் வாழ்க்கை இப்பொழுது சிறந்து விளங்குவதைக் காட்டிலும் மிகுதியாகச் சிறந்து விளங்கும் என்று சிலர் கருதுகின்றனர். இவ்வாறு அவர்கள் கருதுவதற்கு இரு வகைப்பட்ட காரணங்கள் உள. ஒரு பக்கத்தில், போன நூற்றாண்டின் இறுதியிலும் இவ்வாண்டின் தொடக்கத்திலும் கடவுள் தாமே ஏற்படுத்திய இயற்கைச் சட்டங்களுக்கு மாறாக அவர் செயலாற்றமாட்டார்; ஆதலால் இயேசு அருஞ்செயல்களைச் செய்தார் என்ற கதைகள் பொய்க் கதைகள் என்று இயலறிஞர் கூறினர். மறுபக்கத்தில், கடவுள் இவ்வுலகைத் தம் அருஞ்செயல் ஆற்றும் ஆற்றலைக் கொண்டு நடத்த விரும்பவில்லை; அது கடவுளின் விருப்பமாயின் இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலம் முழுவதிலும் அவர் செய்ததைக் காட்டிலும் மிகுதியான அருஞ்செயல்களைச் செய்திருக்க வேண்டும்; இக்காலத்திலும் கடவுளின் அருஞ் செயல்கள் மிகுதியாக நடைபெறவேண்டும். நம்பிக்கையில்லாததால் மட்டுமே அருஞ்செயல்கள் நடைபெறவில்லை என்று சொல்வதை ஒப்புக்கொள்ள முடியாது, ஏனெனில் உறுதியான நம்பிக்கையுள்ள கடவுளின் அடியார் துன்புற்ற பல வேளைகளில், கடவுள் அவர்களுக்கு அருஞ்செயலின் மூலம் விடுதலை கொடுக்கவில்லை என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்; ஆதலால் இயேசு அருஞ்செயல்கள் செய்தார் என்ற கதைகள் பின் எழுந்தவையாம் என்று வேறு சிலர் கூறுகின்றனர். இவ் வகையான கதைகள் பிற சமய தெய்வங்களைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதால், அருஞ்செயல்கள் இயேசுவுக்குத் தனிச் சிறப்பளிக்கின்றன என்று நம் நாட்டார் கருதுவதில்லை. மேலும், இக்காலம் அவ்வாறு நடைபெறாமல் அக்காலம் மட்டும் அவைகள் நடைபெற்றதால் பயன் என்ன என்பதும் அவர்களின் கேள்வியாகும்.

முதலில் இயலறிஞரின் தற்கால நிலையைக் காண்போம். தற்கால அறிஞர். முற்கால அறிஞர்போலத் தங்களுக்கு இயற்கைச் சட்டங்கள் யாவும் தெரியும் என்று கருதுவதில்லை. ஆதலால் அருஞ்செயல்கள் இயற்கைச் சட்டங்களை மீறிய செயல்கள் என்று அவர்கள் கருதாமல் தங்களுக்குத் தெரியாத சட்டங்களின்படி அவைகள் நடைபெறமுடியும் என்று கருதுகின்றார்கள். மேலும் மனநிலை எவ்வளவாக உடலைப் பாதிக்கிறது என்பதை இயல் அறிஞர் மிகுதியாகக் கண்டுள்ளார் கள். ஆதலால் இயேசு உடல் நலமீந்த அருஞ்செயல்கள் நடைபெற்றிருக்க முடியுமென்று அவ்வறிஞர் ஒப்புக் கொள்ளுகின்றனர். ஆனால் இயற்கை அருஞ்செயல்கள் (Nature Miracles) என்று பொதுவாகக் கூறப்படும் நிகழ்ச்சிகளை அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறதில்லை (எ.கா. காற்றையும் கடலையும் அடக்கிய செயல், ஐந்து அப்பத்தைக் கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவூட்டிய செயல் முதலியன). விவிலிய விளக்கவறிஞரில் சிலருங்கூட இவைகளை ஒப்புக்கொள்ளாமல் அவைகளுக்கு இயற்கையான விளக்கங்கள் கொடுத் துள்ளார்கள். எ.கா. இயேசு தம் சீடரை நோக்கியே, இரையாதே. அமைதலாயிரு என்று கூறினார். உடனே அவர்கள் உள்ளத்திலுள்ள அச்சம் நீங்கி அவர்கள் உள்ளத்தில் அமைதி உண்டாயிற்று என்று வின்சென்ட் டெய்லர் கூறியுள்ளார். ஐயாயிரம் பேரும் திருவிருந்தில் பங்கு பெறுவது போன்று ஆளுக்குச் சிறிதளவு அப்பத்தை எடுத்துக் கொண் டார்கள் என்று சுவைட்சர் விளக்கியுள்ளார். ஆனால் டர்னர் (H.E.W. Turner) இவ்வகையான அருஞ்செயல்கள் நடைபெற முடியாது என முடிவு கட்டாமலிருப்பதே சாலச் சிறந்தது, ஏனெனில் இயலறிவு வளர்ந்தபொழுது இவ்வகையான செயல்களும் இயற்கைக்கு மாறான செயல்கள் அல்ல என்று ஒரு வேளை நாம் காணலாம் என்று கூறியுள்ளார். அதுவே தகுதி வாய்ந்த முடிவுமாகும். நம் நாட்டு இயலறிஞரும் மற்றோருமோ அருஞ்செயல் மூலம் மக்களுக்கு கடவுள் உடல் நலமளிக்க முடியுமாயின், அது போன்று இயற்கையைக் கட்டுப்படுத்தவும் அவரால் முடியும் என்று ஒப்புக்கொள்வார்கள்.

இனி இவ்வருஞ் செயல்களின்மூலம் இவ்வுலகை நடத்துவது கடவுளின் வழியன்று எனக் கூறுகின்றவர்களுக்கு விடை கொடுக்க முயலுமுன் ஓர் உண்மையை வலியுறுத்துதல் மிக வுந்தேவை. அருஞ்செயல்களைச் செய்ததால், இயேசு கடவுளுக்கு நிகராகமாட்டார். அருஞ்செயல்களை அவருடைய இறைமைக்கு ஆதாரமாகக் கொள்வது தவறு. ப.ஏ.மறைநூலில். இறைவாக் காளர் அருஞ்செயல்களைச் செய்ததாகப் படிக்கிறோம்; இறந்தவர்களையுங்கூட உயிர்கொடுத்து எழுப்பியதாகக் காண் கிறோம்; மற்ற வேளைகளிலும் கடவுளின் அடியார் வியத்தகு செயல்களைச் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இயேசு தாம் செய்த அருஞ்செயல்களைக் கண்டு, மக்கள் தம்மை மெசியா என்று ஒப்புக்கொள்ளவேண்டுமென விரும்பவில்லை; இரண்டாம் சோதனையில் அவ்வழியைப் புறக்கணித்தார்; தமது அருஞ்செயல்கள்மூலம் உடல் நலம் பெற்றவர்களைப் பிறருக்குத் தாம் செய்தவற்றைத் தெரிவிக்கக்கூடாது என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டார். ஆனால் முதல் மூன்று நற் செய்தி நூல்களிலும் இதற்குமாறாக ஓர் இடத்தில் மட்டும் நலம் பெற்றவரைப் போய் அறிவிக்கச் சொல்லுகிறார். கதரே னருடைய நாட்டினரைப் பிடித்திருந்த பேயை ஒட்டியபின் அவரிடம், நீர் வீட்டிற்குப் போய் உம் இனத்தாரிடம் இறைவன் உமக்கு இரங்கிச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியும் என்று கூறுகின்றார் (மார்.5:19); அவர் இவ்வாறு கூறியதில் சில தனிக் குறிப்புக்கள் உள்ளன. பேய் ஒட்டப்பட்டவர் பிற இனத்தைச் சேர்ந்தவர் (Gentile). தாம் மெசியா என்று முழக்கம் செய்யச் சொல்லவில்லை; கடவுள் அவருக்குச் செய் ததை அவருடைய குடும்பத்தாருக்குமட்டும் அறிவிக்கச் சொன் னார். நான்காம் நற்செய்தி நூலிலோ இதற்கு நேர் மாறான நிலையிருப்பது போன்று காணப்படுகின்றது. அங்கு அருஞ் செயல்கள் அடையாளச் செயல்கள் என்று குறிக்கப்பட்டுள்ளன. ஆதலால் அருஞ்செயல்கள் மூலமாகத் தாம் மெசியா என்று மக்கள் தம்மையறிந்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இயேசு விரும்பினார் என்று கருத இடமளிக்கின்றது. அது உண்மை யன்று. ஐந்து அப்பங்களைக் கொண்டு ஐயாயிரம் பேருக்கு இயேசு பெருமானார் உணவூட்டிய பொழுது மக்கள் இவரே மெசியா என்று நம்பி அவரை அரசராக்க விரும்பி னார்கள். ஏனெனில், மெசியா அவ்வகையான செயல்களைச் செய்வார் என்று அக்காலத்து யூதர் எதிர் நோக்கியிருந்தனர். இயேசு அதற்கு இடங்கொடாமல், நீங்கள் அடையாளச் செயல்களைக் கண்டதினாலன்று, உணவருந்தி நிறைவானதால் மட்டும் என்னைத் தேடுகிறீர்கள் என்றார் (யோ.6:26). இதன்படி, யூதர், ஐந்து அப்பங்களைக் கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவூட்டிய செயலில் கடவுளின் அன்பு அவருடைய மெசியா வின் மூலம் செயலாற்றியதை அறிந்து கொள்ளவில்லை. அச் செயலின் வாயிலாக அடக்கியாளும் கடவுளின் ஆற்றலையே கண்டார்கள். அவ்வாற்றல்மூலம் தங்களுக்கு நன்மையும், தங்கள் பகைவருக்கு அழிவும் வரும் என்று நம்பினார்கள் எனலாம்.

முதல் மூன்று நற்செய்தி நூல்களிலும் இதற்கு ஒப்பான நிலையே உள்ளது. இயேசு அருஞ்செயல்களைச் செய்த பின் அச்செயல்களின் மூலம் நலம் பெற்றவர்களிடம் ஒருவருக்கும் அச்செயல்களைத் தெரிவிக்கக்கூடாது என்று கட்டளையிட்டார், அதே வேளையில் அச் செயல்களின் வழியாகத் தாம் மெசியா வின் வேலையைச் செய்ததாகத் தெரிவித்தார் (லூக். 7.22,23. 4.18-21). அகவே, தாம் எவ்வகையான மெசியா என்று மக்கள் அறியவேண்டுமென்று அவர் இங்ஙனம் செய்தார். ஒரு மந்திரவாதி போன்று தாங்கள் விரும்பியதையெல்லாம் கொடுக்கும் மெசியா அல்லர் அல்லது தங்களுடைய பகைவரை அழிக்க கடவுளின் ஆற்றலைப் பயன்படுத்தும் மெசியாவுமல்லர். எல்லாத் தீங்குகளிலிருந்தும் மக்களுக்கு விடுதலையளித்து அவர்களுக்கு நல் வாழ்வைக் கொடுக்கும் மெசியா என்று காட்டினார்; நலம் பெறத் தம்மிடம் வந்தவர்கள் தம்மை நம்ப வேண்டுமென்று விரும்பினார். அந்த நம்பிக்கையை மிகவும் வலியுறுத்தினார் (மத். 9:28; மார். 5:36; 9:23,24). இதிலிருந்து அவரிடம் நலம்பெற்றவர்கள் ஓரளவு அவருடைய மெசியாவின் மெய்த்தன்மையை அறிந்தவர்களாவர் என்று உய்த்தறியலாம். அதே வேளையில் இயேசு முதலில் கடவுளாட்சியை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றார்; மக்கள் மனம் மாறாமல் தங்கள் உடல்நலத்துக்காக மட்டும் அவரிடம் கும்பல் கும்பலாக வந்த பொழுது அவர்களை விட்டுத் தம் சீடருடன் தனியாயிருக்க முயன்றார். இக் காலத்தில் அவர் பல அருஞ்செயல்கள் செய்யவில்லை என்று கண்டோம்.

இன்னும் ஒரு முக்கிய உண்மையை வலியுறுத்த வேண்டும். இயேசு செய்த செயல்கள் கடவுளின் செயல்கள், அவர் திரு வுள்ளத்திற்கிசைந்த செயல்கள், அவரின் அன்பு தம் மைந்தர் மூலம் பாய்ந்து செயலாற்றிய செயல்கள் என நாம் நம்புகிறோம். அவர் கடவுளுடன் தனி மைந்தரின் தொடர்பைக் கொண்டி ருந்தார் என்று முன் கண்டுள்ளோம். அப்படியாயின், நாம் நம்பும் நம்பிக்கை தகுந்த அடிப்படையைக் கொண்டதேயாம். இயேசு ஒரு தொழுநோயாளரைத் தொட்டார். அக் காலத்தில் அது யூத சமயத்திற்கு மாறான ஒரு செயல். இந் நோயாளர் விலங்கினங்களைவிடக் கொடுமையாக நடத்தப்பட்டார்கள். இந்நோயை முன்வினை நோய் என்று கருதி, அவர்களுக்கு

எவ்வகையான நன்மையும் செய்வது பாவம் என்று கருதுகிறவர்கள் இன்னும் நம் நாட்டில் உளர். அவர்களுக்கு எவ்வகையான புகலும் கிடையாது. இந் நிலையில் கடவுள் அவர்கள்மீது அன்புள்ளவர் என்று சொன்னால் யார் அதை நம்பமுடியும்? இயேசு அத்தொழுநோயாளரைத் தொட்ட செயல் கடவுள் அவரை அரவணைத்த செயலாயிற்றன்றோ? இன்று தொழுநோயாளருடைய நிலையில் ஏற்பட்டிருக்கும் மாறுதலை நன்கறிந்தவர்கள் அம் மாறுதலுக்கு மூல காரணம் அன்று இயேசு ஆற்றிய அருஞ்செயலே என்று ஒப்புக் கொள்வார்கள். அவ்வாறே பார்வை இழந்தோர், காது கேளாதோர், பேச முடியாதவர்கள், உறுப்புக்களை இழந்தவர்கள் ஆகியவரைப் பற்றி மக்களுக்கிருக்கும் அக்கறைக்கு மூலகாரணம் இயேசுவின் அருஞ்செயல்களே. அப்படியே, நோயாளருக்கு அளிக்கப்படும் தீர்வுகள், மருத்துவ வளர்ச்சி போலானவற்றிற்கும் தொடக்கம் அவரின் செயலே. ஒடுக்கப் பட்டவர், தாழ்த்தப்பட்டவர், வறியோர் முதலியோருக்கு விடுதலை அவர் மூலமே வந்துள்ளது. பல வேளைகளில் திருச்சபை இவ்வுண்மைக்கு மாறாக வாழ்ந்ததுண்டு. சபைக்கு வெளியிலிருந்தோர்மூலம் கடவுள் இவ்வுண்மையை உலகிற்கு வெளிப் படுத்தியதுண்டு. என்றபோதிலும் கடவுளை நம்பும் மேல் குறிக்கப்பட்டவர்கள் மீது கடவுள் அன்புள்ளவர்; தீங்குகளிலிருந்து அவர்களை விடுதலை செய்வதே அவருடைய திருவுள்ளம் என்பதை இயேசுவின் வல்ல செயல்களின் மூலமே ஐயமில்லாமல் உறுதியாக ஒப்புக்கொள்ள முடியும். இங்கு தீங்குகள் எனும்போது அரசியல், சமுதாய, பொருளாதாரத் துறைகளில் இருக்கும் அடக்கும் ஆற்றல்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். எ.கா. மார். 5இல் வரும் பேய் பிடித்திருந்தவர் தம்மை லேகியோன் என்று அறிமுகம் செய்கிறார். இது உரோமை இராணுவத்தைச் சுட்டும் சொல். ஆக இங்கே இராணுவம் தொடர்பான அனைத்துத் தீய ஆற்றல்களும் சுட்டப்படுகின்றன. ஒவ்வொரு அருஞ்செயலிலும் இவ்வாறு பார்ப்பதற்கு ஒரு தடக்கூறு உள்ளது. அதை நாம் கண்டுபிடித்து விளக்க வேண்டும்.

கடவுள் அருஞ்செயல்களின் மூலம் இவ்வுலகை நடத்த விரும்பவில்லை. இயேசுவும் மக்களைத் தீங்கிலிருந்து விடுதலை செய்யும் வழியாக அதைத் தேர்ந்துகொள்ளவில்லை. அங்ஙன மாயின், அவ்வேலையிலேயே முழுவதும் அவர் ஈடுபட்டு அலைந்திருப்பார். மக்கள் தாங்களாகவே கடவுளின் துணையைக் கொண்டு இவ்வேலையைச் செய்யவேண்டு மென்பதே அவருடைய மனவிருப்பம் என்று நாம் உய்த்தறியலாம். அவர் குணப்படுத்திய நோய்கள் யாவும் அக்கால மருத்துவர்களால் குணப்படுத்த முடியாத நோய்களே. பேதுருவின் மாமி இதற்கு மாறாகக் காணப்படலாம். ஆனால் அவருக்கிருந்த காய்ச்சல் மலேரியா என்று அறிஞர் கருதுகின்றார்கள். அப்படியாயின் அக்காலத்தில் அதைக் குணப்படுத்த மருந்து கிடையாது. பேய்களை மற்றவர்கள் ஒட்டினார்கள். ஆனால் அவர்கள் கையாண்ட முறைகள் மூலம் பேய் பிடித்தவர்களுக்குப் பெரும்பாலும் தீங்கே உண்டாயிற்று. மேலும் நிலையான நலம் கிடைத்தது என்று சொல்ல முடியாது. ஆதலால் அக் காலத்தில் மனிதரால் நலம் பெற முடியாதவர்களுக்கே இயேசு உடல் நலமளித்தார் என லாம். மேலும் லாசருவை உயிருடன் எழுப்பியவர் அவரைச் சுற்றியிருந்த துணியை நீக்கவில்லை. அவ்வேலையை மனிதர் தாம் செய்யவேண்டியதிருந்தது. யவீருவின் மகளை எழுப்பிய பின் அவளுக்கு உணவு கொடுக்கும்படி சொன்னார். மனிதர் செய்யவேண்டியதை அவர்கள் தாம் செய்ய வேண்டியதாயிற்று. ஆகவே நம் இறைவனார் அருஞ் செயல்கள் செய்ததின் ஒரு முக்கிய நோக்கம், மக்கள் கடவுளின் உள்ளத்தையறிந்து அதற்கிணங்கி உலகத்தின் எல்லாத் தீமைகளிலிருந்தும் மக்களை விடுதலை செய்வதற்கு அவர்கள் கடவுளின் கருவிகளாயிருக்கவேண்டும் என்பதே. என்மீது நம்பிக்கையுள்ளவர் நான் செய்கிற செயல்களைத் தாமும் செய்வார் (யோ. 14:12) என்று இயேசு சொன்னது எவ்வளவு உண்மை! அன்று அவர் செய்த அருஞ் செயல்களைக் காட்டிலும் எவ்வளவு மிகுதியாக இன்று உலகமுழுவதிலும் தம் அடியார் மூலமாகவும், தம்மை ஏற்றுக்கொள்ளாதவர் மூலமாகவும் தீங்கிலிருந்து தம் மக்களை விடுதலை செய்யும் செயல்களைச் செய்து வருகின்றார்!

5. இயேசு கற்பித்த உண்மைகள்

உவமைகள்: இயேசு கற்பித்த உண்மைகளைப் பற்றி ஆராயுமுன் அவர் கற்பித்த முறையைப்பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுவது நலம். இவ்வுலகில் தோன்றியவர்களில் அவரைப் போன்று வேறு எவரும் உவமைகளைச் சொல்வதில் சிறந்து விளங்கவில்லை என்றே கூறவேண்டும். உவமையை ஒரு சிறு கதை என்று விளக்கலாம். அது மனிதரை அல்லது இயற்கையைப் பற்றியதாக இருக்கும். அது உண்மையில் நடைபெற்றதாயிருக்கத் தேவையில்லை. வரலாற்றில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி ஒர் உவமையில் மட்டும் இடம் பெற்றுளது (லூக். 19:14,15). பொதுவாக, அன்றாட வாழ்க்கையில் நடைபெறுவனவற்றையே உவமை தனது பொருளாகக் கொண்டிருக்கும். சீ.சீ இந்தப் பழம் புளிக்கும் என்று நரி சொன்னது போன்ற கட்டுக் கதைகளை இயேசு கூறவில்லை. இங்ஙனம் உவமைகளை அவர் கூறியதன் நோக்கமென்ன? பொதுவாக, தாம் அறிவிக்க விரும்பிய உண்மைகளைத் தெளிவாக்க அங்ஙனம் செய்தார் என்று கருதுகின்றோம். அது அவ்வளவு பொருத்தமானதன்று. அரும் பெரும் உண்மைகளைக் கொண்ட கதைகளை அவர் கூறியதன் நோக்கம் எளிய அறிவுள்ளவர்களும் மிகவும் எளிதாகத் தங்கள் மனத்தில் அவர் கூறிய உண்மைகளை நிறுத்திக்கொள்வதற்கு அக்கதைகள் துணையாயிருந்தன என்று அவர் அறிந்தார்உலகத்தின் அதே வேளையில் அக்கதைகளை அவர்கள் தங்கள் மனத்தில் பேணி வைத்து அவற்றினுள்ளடங்கிய உண்மைகளைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டுமென்றும் விரும்பினார். உவமையானது நிலத்தினுள் புதைக்கப்பட்ட புதையலுக்கு ஒப்பாயிருந்தது. தோண்டினால் மட்டுமே புதையலைக் காணமுடியும். அதுபோன்று கதையிலடங்கிய உண்மையைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும் என்றும், அவ்வாறு கண்டுபிடித்த உண்மையை ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்ற கேள்வி கேட்டு ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்றும் விரும்பி உவமைகள் மூலம் மக்களிடம் பேசினார். இயேசு ஓர் உண்மையைச் சொல்லிமுடித்து, கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும் என்று கூறுவதின் கருத்து இதுவேயாம் (மார். 4:9; மத். 13.43 முதலியன). உள்ளவருக்கு கொடுக்கப்படும் இல்லாதவரி டமிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் என்ற கூற்றும் (4:25) இக் கருத்தையே கொண்டதாம்.

4:33இல் அவர்கள் கேட்டறியும் திறமைக்குத் தகுந்தபடி இயேசு இவ்வாறான உவமைகளினாலே அவர்களுக்குத் திரு மொழியை அறிவித்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. இது மேலே விளக்கியதற்குப் பொருத்தமாகும். ஆனால் 4:11இல் கடவுளாட்சியின் மறைபொருளை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டுள்ளது. புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகின்றன. அவர்கள் கடவுளுக்கு நேராகத் திரும்பாதிருக்கவும், அவர்கள் மன்னிக்கப் படாதிருக்கவும், அவர்கள் கண்டும் காணாதவர்களும், கேட்டும் உணராதவர்களாயுமிருக்கவும் இவையெல்லாம் உவமைகளாகச்

சொல்லப்படுகின்றன என்று இயேசு கூறினதாக மார்க்கு எழுதியுள்ளார். இது முன் விளக்கிய உண்மைக்கு முழுவதும் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. இதற்கு விளக்கம் கொடுப்பது எளிதன்று. பலர் பல வகைகளில் விளக்கம் கொடுத்துள்ளார்கள்.

முன் குறித்த ரீட் என்னும் அறிஞரைச் சேர்ந்தவர்கள், இது மெசியாவைப்பற்றிய மறைபொருளைப் (Messianic secret) போன்றது என்று விளக்கம் கொடுத்துள்ளார்கள். அதாவது, தாம் மெசியா என்ற உண்மையையும், கடவுளாட்சியைப் பற்றிய உண்மையையும் பொதுமக்களுக்குத் தெரிவிக்காமல் தம் சீடருக்கு மட்டுமே தெரிவிக்கவேண்டுமென்று இயேசு இவ்வாறு பேசினார் என மார்க்கு பிற்காலத்தில் எழுதினார் என்றும், அதற்குக் காரணம், இயேசு மெசியா ஆவார் என்ற எண்ணம் பிற்காலத்தில் எழுந்ததாயினும் அது முன்னரே சீடருக்குத் தெரியும் என்று காட்டும்படி மார்க்கு பயன்படுத்திய முறையாகும் என்றும் விளக்கினார்கள். பல விளக்கங்களில் மான்சன் (T.W. Manson) என்பவர் தம் **இயேசு பெருமானார் கற்பித்த உண்மைகள்** (The teachings of Jesus) என்ற நூலில் கொடுத்துள்ள விளக்கமே சிறந்ததாகத் தெரிகிறது. அது கீழே கொடுக்கப்பட்டுள்ளது. நாம் விளக்கம் கொடுக்க முயலும் வாக்கியம் எசா. 6:10இன் முதல் பகுதியின் மேற்கோளாகும். இயேசு இதைத் தொழுமன்றங்களில் படித்த தார்கம் (Targum) என்ற எபிரேய மறைநூலின் அரமேய மொழிபெயர்ப்பிலிருந்து எடுத்துச் சொல்லியிருக்க வேண்டும் என்று மான்சன் கூறுகின்றார். ஏனெனில், அங்கு அவர்கள் கடவுளிடம் திரும்பாதிருக்கவும், அவர்கள் மன்னிக்கப் படாதிருக்கவும், அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் உணராதவர்களுமாயிருந்தார்கள் என்றுள்ளது. மார்க்கு அதை உணராதவர்களாயிருக்கும்படி என்று மொழிபெயர்த்துள்ளார். ஏனெனில் அதில் வரும் 7 என்னும் அரமேய எழுத்தை இருந்தார்கள் என்றும், இருக்கும்படியாக என்றும் மொழிபெயர்க்கலாம். மார்க்கு இருக்கும்படியாக என்று மொழிபெயர்த்துவிட்டார். அவர்கள் உண்மையில் உவமைகளின் பொருளையறியாமல் கெட்டுப்போக வேண்டு மென்பது இயேசுவின் நோக்கமாயின், எசா. 6:10இன் பின் பகுதியை மேற்கோளாகக் கொடாது விட்டிருப்பாரா என்று மான்சன் கேட்கிறார். இவ்விளக்கத்தை ஒப்புக்கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் தாம் சொல்வதை மற்றவர்கள் புரிந்து கொள்ளக்கூடாது என்று இயேசு உவமைகளைச் சொன்னார் என்று நாம் ஒருபோதும் ஒப்புக்கொள்ளமுடியாது.

இனி உவமைகளைப்பற்றிய சில பொதுக் குறிப்புக்களைச் சுட்டிக்காட்டுவோம். மார்க்குவிலுள்ள உவமைகளில் மற்றவர்கள் அறியாத முறையில் விதை முளைத்து விளைவு கொடுக்கும் உவமையை மட்டுமே (4:26-29) மத்தேயுவும், லூக்காவும் எடுத்துக்கொள்ளவில்லை. பாறையின் மேலும், மணலின் மேலும் வீடு கட்டினவர்களின் உவமை (மத். 7:24-27; லூக். 6:47-49), புளித்தமாவின் உவமை (மத். 18:12-14 லூக். 13:20,21), தொலைந்துபோன ஆடு (மத். 18.12-14 லூக். 15.3-7) ஆகிய மூன்று உவமைகளும் கொல்லே (Q) யிலிருந்து எடுக்கப்பட்டவை. மத்தேயுவுக்குரிய உவமைகளில் பெரும்பா லானவை கடவுளின் ஆட்சியைப்பற்றியவையாகும். லூக்காவில் நல்ல சமாரியர் (10:30-37), மனம் மாறிய மைந்தர் (15:11-32), சமய நெறியாளரும் வரி வாங்குவோரும் (18:9-14) முதலிய பல சிறந்த உவமைகள் உள. நான்காம் நற்செய்தி நூலில் இவ்வகையான உவமைகள் கிடையா. நானே நல்ல ஆயன் என்றாற் போன்ற ஒப்புவமையணிகளே மிகுதியாக உள்ளன. முதல் மூன்று நற்செய்தி நூல்களிலுள்ள உவமைகள் மூலமாக இயேசுவின் வாழ்க்கையின் பின்னணியத்தை மிகுதியாக உய்த்தறியலாம்.

எடுத்துக்காட்டாக, புதிய துணியின் துண்டைப் பழைய துணியின் கிழிவில் வைத்துத் தைக்கக்கூடாது என்று இயேசு சொல்லியதை அவருடைய தாயார் தையல் தைத்ததைக் கண்டு கற்றிருக்கவேண்டும் என்றும், விதைக்கிறவருடைய உவமையைக் கொண்டு அவர் அந்நாட்டில் பயிர்த்தொழில் முறையை நன்கு அறிந்திருந்தார் என்றும் உய்த்தறியலாம். இவைபோன்ற வேறு பல குறிப்புக்களையும் நாம் அவர் உவமைகளிலிருந்து அறிந்துகொள்ளலாம். அத்துடன் கதை அமைப்பு, ஆய்வாளர் உவமைகளின் அமைப்பைக்கொண்டு இயேசு இவ்வுவமைகளைக் கூறியிருக்கவேண்டும் என்று ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் அவைகளின் சூழமைவு நிலையை (life situation) ஆய்ந்து பார்க்கும்பொழுது, பல உவமைகளுக்குக் கொடுக்கப்பட்ட கருத்துக்கள் பிற்காலத்தில் எழுந்தவை என்று கூறியுள்ளார்கள். எ.கா. விதைக்கிறவருடைய உவமையின் தொடக்கக் கருத்து, கடவுள் ஆட்சியின் நற்செய்திப் பணிக்குப் பல தடைகள் ஏற்படும் என்றபோதிலும், அவ்வேலை வெற்றியாக முடியும் என்பதே என்றும், மார். 4:14-20இல் கொடுக்கப்பட்ட விளக்கம் பிற்காலத்தில் எழுந்தது என்றும் அறிஞர் எடுத்துக்காட்டியுள்ளார்கள். பேராசிரியர் டாட் தமது **ஆட்சியின் உவமைகள்** என்ற நூலில் உவமைகளின் சூழலமைதி நிலையை ஆய்ந்து இயேசு அவ்வுவமைகளைச் சொன்னபொழுது என்ன நோக்கத்தைத் தம் மனத்தில் கொண்டிருந்தார் என்று மிகவும் திறமையாக விளக்கியுள்ளார்.

உவமைகளை இயேசு கூறியபொழுது ஓர் உண்மையையே அதன்மூலம் வலியுறுத்தினார் என்று அறிஞர் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். ஓர் உவமையில் பல விவரங்கள் இருக்கும். ஒவ்வொரு விவரத்திற்கும் தனிக் கருத்து கொடுக்க வேண்டுமென்பது இயேசுவின் நோக்கமன்று. அங்ஙனம் விளக்கம் கொடுத்தால் அது உவமையாகாது. அது தொடர் உருவகமேயாகும் (allegory). விதைக்கிறவருடைய உவமைக்கு மார். 4:14-20இல் கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் இவ்வகை யான விளக்கமே. இவ்வகையான விளக்கத்தைப் பிற்காலத்தில் மிகுதியாகக் கையாண்டார்கள். அகுஸ்தீன் நல்ல சமாரியர் உவமையின் ஒவ்வொரு விவரத்திற்கும் ஒவ்வொரு கருத்து கொடுத்துள்ளார். அதன் சில கருத்துக்கள் கீழ்க்காட்டப் பட்டுள்ளன. எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் சென்ற மனிதர் ஆதாம். எருசலேம் அமைதியின் வான் நகரம். அதிலி ருந்து ஆதாம் தவறிவிழுந்தார். எரிகோ என்பதற்கு நிலா என்று பொருள். அது பிறந்து, வளர்ந்து, தேய்ந்து சாவதால் அது மனிதரின் நிலையற்றத் தன்மைக்கு அறிகுறி. கள்ளர் என்றால், தீயோனும் அவனுடைய தூதுவர்களுமாம். ஆடையை உரிந்தார்கள் என்றால், சாவாமையை உரிந்தார்கள் என்பதாம். கோவில் குருவும், இலேவியரும் பழைய ஏற்பாடு மறைநூலின் குருப்பணியும், கோவில் பணியுமாம். சமாரியர் இயேசு இவைபோல் அகுஸ்தின் பல கருத்துக்களைக் கொடுத்துள்ளார். இங்ஙனம் செய்வதில் தவறில்லை. ஆனால் இயேசு ஓர் உவமையைச் சொன்னபொழுது என்ன நோக்கத்துடன் சொன்னார் என்று கண்டால் மட்டுமே அதன் தொடக்கக் கருத்தை அறிய முடியும். ஓர் உவமை முதலில் எக்கருத்தைக் கொண்டிருந்தது என்று அறிவது சாலச் சிறந்ததாகும். இன்று உவமைகளை ஆய்வோர் இறையாட்சி பற்றி அவை வெளிப் படுத்தும் புரட்சிகரமான உண்மைகளைச் சுட்டிக்காட்டி, ஓர் ஒட்டுமொத்த அரசியல்-பண்பாட்டு-சமூகப் புனரமைப்புக்கு அறைகூவல் விடுக்கின்றனர்.

மலையிலிருந்து ஆற்றிய அருளுரை: இயேசு கற்பித்த உண்மைகளில் மிகுதியானவற்றை மத்தேயு ஒருங்கே திரட்டித் தமது நூலில் 5,6,7 ஆகிய மூன்று அதிகாரங்களில் தொகுத்து எழுதியுள்ளார். அப்பகுதியை மலைப்பொழிவு என்று குறிப் பிடுவது வழக்கம். அதாவது, மலையிலிருந்து ஆற்றிய அருளுரைகளை நாம் லூக்காவில், முக்கியமாக 6ஆம், 12ஆம் அதிகாரங்களில் காணலாம். லூக். 6:17இல். இயேசு சம வெளியில் நின்று அருளுரையாற்றினார் என்றுள்ளது. ஆதலால் 6ஆம் அதிகாரத்தில் அடங்கிய அருளுரையை சமவெளி அருளுரை என்று குறிப்பிடுவதுண்டு. மலைப்பொழிவுப் பகுதியிலுள்ளவற்றை மத்தேயு மிகுதியாக **கொல்லே** என்ற நூலிலிருந்து எடுத்திருக்கவேண்டும். கொல்லே, பெரும்பாலும் இயேசுவின் அருளுரைகள் நிறைந்த ஒரு நூலாகும். மீதியானவற்றைத் தாமே திரட்டி எழுதியுள்ளார். பொதுவாக மலைப்பொழிவு முழுவதையும் ஒரே வேளையில் இயேசு பேசினார் என்று கருதுவதுண்டு. அது தவறு. அந்த அருளு ரையைக் கூர்ந்து படித்தால், அவ்வருளுரை ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லா பல பொருள்களைப்பற்றிய உரைகளைக் கொண்டது என்று நாம் காணலாம். மேலும் ஒவ்வொரு பொருளையும் பற்றிய உரை மிகவும் சுருக்கமாயிருப்பதையும் காண்போம். இதிலிருந்து, இவை இயேசு ஆற்றிய விரிவான சொற்பொழிவுகளின் அடிப்படையான கருத்தைக் கொண்ட வாக்கியங்களே (texts of His sermons) என்று உய்த்தறியலாம்.

மலைப்பொழிவில் மட்டுமே இயேசு கற்பித்த உண்மைகள் அடங்கியுள்ளன என்று சிலர் கருதுவதுண்டு. நான்கு நற் செய்தி நூல்களின் வெவ்வேறு பகுதிகளில் அவருடைய அரு ளுரைகள் நிறைந்துள்ளன. அவருடைய உவமைகள்மூலம் அவர் அரும்பெரும் உண்மைகளைக் கற்பித்தார் என்று கண் டோம். இவற்றுடன் அவருடைய அருஞ்செயல்கள் மூலமாகவும், அவருடைய வாழ்க்கையின் மற்ற செயல்கள் மூலமாகவும் பல உண்மைகளை அவர் கற்பித்துள்ளார். அவர் கற்பித்த உண்மை களை ஆராயும்பொழுது, அவருடைய சொல்லையும், அவருடைய செயலையும் பிரிக்கவே முடியாது. இரண்டும் ஒன்றுக்கொன்று முழு ஆதரவு கொடுத்தன என்றே கருத வேண்டும்.

இயேசு கற்பித்த உண்மைகளைச் சுருக்கமாக காட்டுமுன் ஒன்றிரண்டு பொதுக் குறிப்புக்களைச் சுட்டிக்காட்டுதல் நலம். இயேசு வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைக்கும் வேண்டிய சட்டங்களை உருவாக்கவில்லை. பொது விதிகளை (General Principles) மட்டும் எடுத்துக்காட்டினார். எ.கா. ப.ஏ. மறை நூலில் ஒருவர் ஒரு மனைவிக்கு மிகுதியான மனைவிகளை மணக்கலாம், ஆனால் கிறிஸ்தவர்கள் அவ்வாறு செய்வது பாவம் என்று யாவரும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். இயேசு இவ்வகையான சட்டத்தை ஒருபொழுதும் கொடுக்கவில்லை. இனி அவர்கள் இருவர் அல்ல, ஒரே உடல் என்று மார். 10:8இல் இயேசு கூறிய பொதுவிதியிலிருந்து ஒரு மனைவிக்கு மேல் மணஞ்செய்யக் கூடாது என்ற சட்டத்தை வருவித்துக் கொண்டோம். அடுத்த குறிப்பு. இயேசு நன்னெறியைக் கற்பிக் கவில்லை. கடவுள் உறவைப்பற்றிய உண்மைகளையே கற்பித்தார். நற்செயல்கள் மெய்பற்றின் கனிகள் என்று அவர் விளக்கினார்.

கடவுள் தந்தை: இயேசு கற்பித்த உண்மைகள் யாவும் கடவுள் தந்தை என்னும் உண்மையை அடிப்படையாகக் கொண்டவை. மற்ற உண்மைகள் யாவும் அம் முதல் உண்மை யிலிருந்து பிறந்தவையே. ப.ஏ. மறைநூலில் கடவுள் தந்தை என்ற உண்மையுள்ளது. அதே வேளையில் அவர் அரசர் என் றும், நீதித்தீர்ப்பாளர் என்றும், படைகளின் தலைவர் என்றும் விளக்கப்பட்டுள்ளது. இயேசுவோ அவரைத் தந்தை என்று மட்டுமே எடுத்துக்காட்டுகிறார். மான்சன் என்ற அறிஞர் கடவுள் தந்தை என்ற உண்மையை ஒரு தனிமுறையில் இயேசு வலியுறுத்தினார். அதற்கு அவருடைய அனுபவமே காரணம். அவர் ஒரு தனிமுறையில் கடவுளைத் தம் தந்தையாகக் கொண்டு வாழ்ந்த அனுபவம் அவருக்கிருந்தபடியால் தம் சீடருக்கு அவ்வுண்மையைக் கற்றுக்கொடுக்க முடிந்தது என்று கூறியுள்ளார். இயேசு இவ்வுலகிற்குக் கொண்டு வந்த ஆட்சி ஓர் அரசரின் ஆட்சியன்று. அது எப்பொழுதும் கடவுளாட்சியே. அவ்வாட்சியின் தலைவர் தந்தையாகிய கடவுளே. ஆதலால் அவர் தம் சீடருக்கு விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே, என்று அழைக்கக் கற்றுக் கொடுத்தார்.

தந்தையின் ஆதரவு: கிரேக்க சமயத்தில் பல வேளைகளில் தெய்வங்கள் மனிதரின் தந்தையராயிருந்தன. ப.ஏ. மறைநூலில் இவ்வகையதான எண்ணம் அறவே இல்லை. பிற்காலத்தில் தோயிக்க மெய்விளக்கியல்படி (StoicPhilosophy), கடவுளிலுள்ள லாகாசின் (logos) ஒரு பகுதி, அதாவது பகுத்தறிவின் ஒரு பகுதி ஒவ்வொரு மனிதரிலும் இருப்பதால், கடவுள் யாவருக்கும் தந்தை என்றார்கள். இவ்வகையான எண்ணமும் யூத சமயத் தில் இல்லை. ப.ஏ.இல் கடவுள் தந்தை என்று சொன்ன பொழுது கடவுளே மனிதருடைய வாழ்வுக்கு மூலாதாரம் என்னும் உண்மை வலியுறுத்தப்பட்டது. இயேசு கடவுளின் ஆதரவை அதைக்காட்டிலும் மிகுதியாக வலியுறுத்தியுள்ளார். நமக்கு வேண்டிய தேவைகள் அவருக்குத் தெரியும் (மத். 6:32).

ஆதலால் எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுப்போம் என்று கவலைக்கு இடங்கொடுக்கக் கூடாது என்றார் இயேசு (6:25-31). நமக்கு வேண்டியவற்றிற்காக முன்னொழுங்கு செய்யக்கூடாது அல்லது முயற்சி எடுக்கக் கூடாது என்பது அதன் பொருளன்று. கடவுளின் திருவுளத்திற் கிசைந்தபடி நாம் செய்யவேண்டியவற்றைச் செய்து முடித்த பின் நமக்குத் தேவையான யாவையும் நம் முயற்சியின் மூலமாக நாம் பெற்றுக் கொள்ளமுடியாது என்று அறிந்து, கடவுளை நம்பியிருக்கவேண்டும் என்பதே அதன் பொருள். அவ்வாறே நமக்கு வரும் இடர்களில் நம்மை கடவுள் காப்பார். அடைக்கலான் குருவியுங்கூட கடவுளின் திருவுளத்திற்கு மாறாகத் தரையிலே விழாது. நீங்கள் அடைக்கலான் குருவிகளிலும் சிறந்தவர்கள் என்றார் (10:29-31). இதன் பொருள், இடர்வராது என்பதன்று. இடர் வந்தபொழுது அந்நிலையைத் தம் பிள்ளை களின் நன்மைக்கென்று ஆண்டு நடத்துவார் என்பதாம்.

இறை வேண்டுதல்: ஆதலால் தந்தையை நோக்கி பிள்ளைகள் வேண்டுதல் செய்யவேண்டும் என்றார் இயேசு. கேளுங்கள், அப்பொழுது கொடுக்கப்படும் (7:17). கேளா விட்டாலும் கடவுள் தம் பிள்ளைகளுக்கு நன்மையானவற்றைக் கொடுப்பது திண்ணம் (7:9-11) லூக்கா இதற்கொப்பான இடத்தில் நன்மையானவற்றை என்று எழுதாமல் தூய ஆவியானவர் என்று எழுதியுள்ளார் (லூக். 11:13). இதிலிருந்து கடவுள் நம் முழுஆர்த் தன்மைக்குமுரிய நன்மைகளைக் கொடுக்க விரும்புகிறார். கடவுளைத் தந்தையாக ஒப்புக்கொண்டு அவருடைய பிள்ளைகளாக வாழ மனமுள்ளவர்களே அந்த நன்மைகளைப் பெற முடியும் என்று அறிகிறோம். அவர்கள் தாங்கள் முழுவதும் கடவுளைச் சார்ந்தவர்களென்று அறிந்து, தங்களுக்குத் தேவையான யாவையும் தந்தையிடம் கேட்டுப் பெற்றுக்கொள்வார்கள். அவ்வாறு வேண்டுதல் செய்யும்படி ஒரு மாதிரி விண்ணப்பத்தைத் தம் சீடருக்கு இயேசு கற்றுக் கொடுத்தார் (மத். 6:9-13). முதலாவது கடவுளாட்சிக்கான வற்றிற்காக வேண்டுதல் செய்யவேண்டும். அதன்பின் நம்

உடலுக்குரிய நன்மைகளுக்காக மட்டுமல்லாது கடவுளின் மன்னிப்பைப் பெற்று அவருடன் தந்தை-பிள்ளை உறவு கொண்டு வாழ்வதற்கும், அவருடைய பிள்ளைக்குத் தகுந்த வாழ்க்கையை நடத்துவதற்கும் அவருடைய துணையைத் தேட வேண்டும். அதே வேளையில் அந்த விண்ணப்பத்தை ஏறெடுக்கும் பொழுதெல்லாம் நாம் கடவுளைத் தந்தையாகக் கொண்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை உணர்ந்தவர்களாக விண்ணப்பிக்க வேண்டுமென்பது இயேசுவின் நோக்கமாகும்.

மேலும் மனந்தளராமல் கடவுளை வேண்டிக்கொள்ள வேண்டுமென்று கற்பிக்க, கடவுளுக்கு அஞ்சாதவரும் மனிதரை மதியாதவருமான ஒரு நீதித்தீர்ப்பாளரின் உவமையை அவர் சொன்னார். அதன் கருத்து அவ்வகையான நீதித்தீர்ப்பாளரே அந்த கைம்பெண்ணின் தொந்தரவைப் பொறுக்க முடியாமல் நீதி செய்தாரேயாயின் கடவுள் தம்மை நோக்கி இரவும் பகலுமாக மனந்தளராமல் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு தேவையானதை அருளுவார் என்பதே. ஆனால் அவர்கள் பொறுமையாயிருக்க வேண்டும். ஏனெனில், அவரும், தீங்கு செய்வோர் சீரடையும்படி பொறுமையுடன் காத்திருக்கிறார். ஒன்று அவர்கள் சீரடைவர் அல்லது அவர்களுடைய செயல்களினால் அவர்கள் அழிவர். ஆதலால் அவர்களும் பொறுமையாயிருக்க வேண்டும்.

தந்தையின் மன்னிக்கும் அன்பு: கடவுளின் ஆதரவைக் கொண்டு கடவுள் தந்தை என்ற உண்மையை இயேசு வலியுறுத்துவதைக் காட்டிலும் மேலாக வேறொரு தனி வகையில் கடவுள் தந்தை என்னும் உண்மையை வலியுறுத்தி யுள்ளார். அது கடவுள் தம் மக்களின் பாவங்களை மன்னித்து அவர்களைத் தம் பிள்ளைகளாக அரவணைக்கிறார் என்ப தாகும். திருந்திய மைந்தர் உவமையில் கடவுள் மன்னிக்கும் தந்தை என்று காண்கிறோம். ஆனால் இவ்வுண்மை அவ் வுவமையில் அவ்வளவாக வலியுறுத்தப்படவில்லை. அந்த உவமையை இயேசு கூறியதின் நோக்கம், கடவுளின் மன்னிப்பை வலியுறுத்துவதற்காகவன்று. கடவுளாட்சியில் மனம் மாறும் பாவிகள் பங்கு பெறுகிறார்கள். மனம் மாறத் தேவையில்லை என்று கருதுகின்ற அறவோர் அதில் பங்குபெறாது போகின்றனர் என்னும் உண்மையை வலியுறுத்தவே இது. வரி வாங்குவோரும், பரத்தையரும் உங்களுக்கு முன் கடவு ளாட்சிக்குள் செல்கின்றனர் என்று இயேசு கூறிய கூற்றுக்கு ஆதாரமான ஓர் உவமை எனலாம். ஆனால் நம் இறைவனார் தம் வாழ்க்கையின் மூலம் கடவுளின் தன்மையை தெளிவாகக் காட்டினார். மாண்டிபியோர் (G. G. Montefiore) என்னும் யூத அறிஞர், பாவிகளைத் தேடிச் செல்லும் கடவுளின் அன்பை, ப.ஏ.இல் நாம் காணாத முறையில் நற்செய்தி நூல்களில் காண்கின்றோம் என மிகுந்த வியப்புடன் திரும்பத் திரும்பக் குறிப்பிடுகின்றார். பாவிகளையும், வரி வாங்குவோரையும் அக்கால யூத சமயத் தலைவர் போல் குற்றவாளிகள் என்று ஒதுக்கி வைக்காமல் இயேசு அவர்களுடன் அன்புடன் பழகினார். அதினால் அவர்களுடைய பாவச் செயலில் சேர்ந்துகொண்டார் என்றாவது அல்லது அவைகளைப் பற்றிக் கவலையற்றவராயிருந்தார் என்றாவது சொல்ல முடியாது. நோயாளிகளுக்கு எங்ஙனம் மருத்துவர் தேவையோ அவ்வாறு தான் அவர்களுக்குத் தேவை, அவர்கள் மனமாறத் தூண்டுவதற்குத் தாம் வந்ததாகக் கூறினார் (மார். 2:17).

பாவச் செயலில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்ட பெண்ணிடம் அவர், நானும் உனக்குத் தண்டனை கொடேன். நீ போ. இனிப் பாவஞ் செய்யாதே என்றார் (யோ. 8:11). இக்கதை நற்செய்தி நூலில் இடம் பெற்றிருப்பதால் அப் பெண்ணின் வாழ்க்கையில் மாறுதல் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு. பாவியான பெண் இயேசுவின் கால்களில் நறுமண எண்ணெய் பூசி தம் கூந்தலால் அவருடைய கால்களைத் துடைத்த செயல், அவளுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதலைக் காட்டுகிறது. அவளுக்கு மிகுதியாக மன்னிக்கப்பட்டது ஆதலால், மிகுதியாக அன்பு கொண்டார் (லூக். 7:37-47). அவ்வாறே வரி வாங்குவோராகிய சக்கேயுவில் ஏற்பட்ட மாறுதலும் (19:1-10). ஆகவே இயேசு பாவிகளுக்குக் காட்டிய அன்பு, அவர்களுடைய பாவத்தில் பங்கெடுத்த அன்பாகாது. அது கடவுளுடைய அன்பாகும். ஆதலால் கடவுள் தொலைந்துபோன ஆடுகளைப் போல் கெட்டழிந்து போகும் பாவிகளாகிய தம் பிள்ளைகள் மீது எவ்வளவு அன்புள்ளவராயிருக்கிறார் என்று அவருடைய திருமைந்த ருடைய செயல்களின் மூலம் காண்கிறோம். இவ்வாறு அன்பு கொண்டால் மிகுந்த துன்பமுண்டு. பாவமேயில்லாத இயேசு, பாவிகளை மன்னித்து அவர்களுடன் உறவு கொண்டு வாழ்ந்த செயல் அவருக்கு மிகுந்த துன்பத்தை விளைவித்திருக்கும். இதை நாம் உய்த்தறிய முடியும். ஆனால் சிலுவையில் இவ்வுண்மையைத் தெளிவாகக் காண்கிறோம். ஆகவே, கடவுள் பாவிகளான தம் பிள்ளைகள் மீது அன்பு கொண்டவர் என்றால், அதன் மூலம் சிலுவையின் துன்பத்தை அனுப விக்கிறார் என்பது புலனாகிறது. ஆனால் அத்துன்பம் சக்கேயுவைப் போன்று ஒரு பாவி மனம் மாறும்பொழுது மிகுந்த மகிழ்ச்சியாக மாறுகிறது (15:17).

பிள்ளையின் கடமை: இவ்வாறு கடவுள் தந்தை யாயிருப்பதால் அவருடைய பிள்ளைகளுக்குப் பல சிறப்புரிமைகள் உள என்பதில் ஐயமில்லை. பலர் இவ்வுரிமை களையே வலியுறுத்துகின்றனர்: ஆனால் கடமைகளும் உள. அக்கடமைகள் கட்டாயமான சுமையாக கொடுக்கப்பட்டவை யல்ல. நாம் கடவுளின் பிள்ளைகளாயிருப்பதே நம் கடமை. நாம் கடவுளின் பிள்ளைகளாக, அவர் மன்னிப்பின் அன்பை அனுபவித்தோமானால், மற்றவர்களும் கடவுளின் பிள்ளை நிலையை ஏற்றுக் கொள்வதற்கு அவருடைய கருவிகளாக விளங்குவோம். வேறு வகையில் சொல்வோமாயின் நாம் முத லாவது கடவுளாட்சியையும் அவரது அறத்தையும் தேடுவோம் (மத். 6:33), உம் ஆட்சி வருவதாக என்று விண்ணப்பிப்போம். இயேசு கற்பித்த விண்ணப்பத்தின் முதல் பகுதி கடவுளின் ஆட்சிக்கானவையே. இவ்வேலையைச் செய்ய குடும்பம், செல்வம் முதலியவை இடையூறாக நிற்க இடங்கொடுக்கக் கூடாது (லூக். 14:26; மத். 10:37,38; மார். 10:2-10). லூக். 14:26, இல் ஒருவர் தம் தந்தையையும் தாயையும் ... தன்னுயிரையும், வெறுக்காவிடில் தமக்குச் சீடராயிரார் என்று இயேசு கூறியதின் கருத்து, கடவுளாட்சியின் கடமையை நிறைவேற்றுவதற்கு மேல் குறிக்கப்பட்டவர்கள் இடையூறாக இருந்தால், அவர்களை வெறுக்க வேண்டும் என்பதேயாகும். இயல்வாழ்க்கையைக் கீழ்த்தரமாக்கினார் என்று கூறுவது பொருத்தமற்றது. லூக். 14:16இன் கருத்தே மத். 10:37,38இல் கொடுக்கப்பட்டுள்ளது. அங்ஙனமே மார். 10:21இன் கருத்து செல்வம் பாவமானது என்பதன்று, கடவுளின் தனி அழைப்பிற்கு அச்செல்வம் இடையூறாக நிற்க இடங் கொடுத்ததே பாவம் என்பதாகும்.

நாம் முழுவதும் கடவுளாட்சியின் பணிக்குரியவர்கள். கடவுள் தம் பிள்ளைகளுக்கு முழுவதுமாக தம்மைக் கொடுக்கின்றார். ஆதலால் அவருடைய பிள்ளைகள் முழுவதுமாகத் தங்களை அவருக்குக் கையளிக்க வேண்டும். இவ்வுண்மையை பவுல் அடியாரும். யோவான் அடியாரும் மிகவுந் தெளிவாக விளக்கி யுள்ளனர் (யோ. 3:16; எபே. 2:4; 1 யோ. 4:9,10; உரோ. 5:8,

8:32; 6:13; 12:1). ஆனால் இவ்வுண்மை முதல் மூன்று நற்செய்தி நூல்களிலும் மறைந்தே கிடக்கின்றது. ஏனெனில், சிலுவைக்குப் பின்னர் தான் அவ்வுண்மை தெளிவாக முடியும். அங்கு இயேசு கடவுளின் ஆட்சிக்குள் வந்தவர்கள் முழுவதும் கடவுளுக்குரியவர்கள். அவர்களுக்குரியவைகள் முழுவதும் கடவுளுக்குரியவைகள். இரு தலைவர்களுக்கு (masters) ஒருவர் பணிவிடை செய்ய முடியாது என்றார் (மத். 6:24). செல்வத்தையும், மற்றும் உடமைகளையும், திறமைகளையும் அவருடைய திருவுளத்திற்கு இசைந்தபடியே பயன்படுத்த வேண்டுமென்பதே தாலந்து. நாணயம் ஆகியவற்றைப் பற்றிய உவமைகளின் கருத்தாகும் (25:15; லூக்.19:13). செல்வத்தையும், திறமைகளையும் தவறான முறைகளில் செலவழியாமல் இருந்தால் போதும் என்று கருதுவது தவறு (19:23). கடவுளாட்சியின் நோக்கம் நிறைவேறும் முறையில் அவற்றைப் பயன்படுத்தவேண்டும் (16:9).

கடவுளாட்சியின் பணியில் ஈடுபடும்பொழுது மிகுந்த துன்பங்களை அனுபவிக்க வேண்டியதிருக்கும் என்று இயேசு மிகுதியாக வலியுறுத்தினார். துன்பமில்லா வாழ்க்கையை நடத்தலாமென்று கருதித் தம்மைப் பின்பற்ற விரும்பிய ஒருவரிடம் அவர், நரிகளுக்குக் குழிகளும், வான் பறவைகளுக்குக் கூடுகளுமுள. மானிட மகனுக்கோ தலைவைக்க இடமில்லை, தம்மைப் பின்பற்றியதால் குடும்பத்தினரே பகைப்பார்கள் (மார். 10:29; மத். 10:34-36), உயிரையும் இழக்கவேண்டியதிருக்கும் என்றார் (மார். 8:34,35). ஆதலால் கடவுளாட்சியை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று, அதாவது தம்மைப் பின்பற்ற வேண்டுமென்று முடிவுகட்டுமுன் அங்ஙனம் செய்வதால் வரும் துன்பத்தைத் தாங்க மனமுண்டா என்று ஒருவர் தம்மைச் சோதித்து அறிந்து அவ்வழியைத் தேர்ந்து கொள்ள வேண்டுமென்றார். அதற்கு ஆதாரமாகக் கோபுரம் கட்டுகின்றவர், போருக்குச் செல்லும் அரசர் ஆகியோரின் உவமையை இயேசு சொன்னார் (லூக். 14:28-32). முடிவு கட்டிய பின்பு பின்வாங்கக் கூடாது என்றார் (9:62).

கடவுளாட்சியின் நற்செய்தியை முழக்கஞ் செய்வது, கடவுளைத் தந்தையாக ஏற்றுக் கொண்டவர்களின் இயல்பான கடமை என்று முன் கண்டோம். அதை அவர்களுடைய வாழ்க்கையின் மூலமாக உலகிற்குத் தெரிவிக்க வேண்டுமென்றார். இயேசு கடவுளாட்சி புளித்த மாவிற்கு ஒப்பாயிருக்கிறது (மத். 13:33). அதாவது, கடவுளாட்சிக்குள் வந்தவர்கள் மூலம் அது வளரும். இயேசுவின் அடியார் உப்பு, உலகுக்கு ஒளி (மத். 5:13,14). மனிதர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு வானிலுள்ள உங்கள் தந்தையை மேன்மைபடுத்தும்படி உங்கள் ஒளி அவர்கள் முன் கதிர் வீசக் கடவது (5:16). இவ்வொளி பிறர்மீது நாம் கொள்ளும் அன்பின் மூலமே கதிர் வீசுகின்றது. கட்டளைகள் யாவிலும் முதன்மையானது, கடவுள் மீது அன்பு கொள் என்பதும், அதற்கு ஒப்பானது அடுத்திருப்பவர் மீது அன்பு கொள் என்பதுமாம் என்று நம் இறைவனார் கூறினார் (மார். 12:30,31). யூதர் மட்டுமே தமக்கு அடுத்திருப்பவர் என்று யூதர் கருதினர். ஒரு சமாரியர் ஒரு யூதருக்கு அடுத்திருப்பவர் ஆவார் என்று இயேசு ஒரு யூதரையே சொல்ல வைத்தார் (லூக். 10:29-37). கடவுளாட்சிக்குள் வந்தவர்களுக்கு அவர்களுடைய பகைவரும் அடுத்திருப்பவர் ஆவர். உண்மையில் அவர்களுக்குப் பகைவரிலர். அவர்களைக் கெடுத்துத் தீங்கு செய்கிறவர்களும் கடவுளுடைய பிள்ளைகளே. ஆகையால் கடவுள் அவர்களை மன்னிப்பதுபோன்று கடவுளின் பிள்ளைகளும் அவர்களை மன்னிக்க வேண்டும். மன்னிப்பதென்றால் தீங்குக்குத் தீங்கு செய்யாதிருப்பதுடன் தீங்கு செய்தவர்களின் நல்வாழ்வுக்காக கடவுளிடம் விண்ணப்பம் செய்வதுமாகும். அத்துடன் அவர்களின் நல்வாழ்க்கைக் கானவற்றை வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் செய்ய மனமுள்ளவர்களாயிருக்க வேண்டும் (மத். 5:38-46). மேலோட்டமாக அவர்களுடன் நட்புக் கொண்டு வாழ வேண்டுமென்பது அதன் பொருளன்று. அவர்கள் மனம் மாறுமளவும் அவ்வாறு வாழ முடியாது.

நம் இயேசு யூதத் தலைவர் மீதும் அன்புகொண்டவரே. அக்காரணத்தால் மட்டுமே அவர்கள் குற்றத்தை அவர் எடுத்துக்காட்டினார். ஆனால் அவர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளாதிருந்தபொழுது அவர் அவர்களுடன் நட்புறவு கொள்ள முடியவில்லை. கடவுளின் நோக்கம், கேடு விளைவிப்பவர்களை அழிப்பதன்று, அவர்கள் சீரடைந்து நல்வாழ்வு பெறுவதே. அடக்குமுறையின் மூலம் மனிதரை ஒருபோதும் சீர்ப்படுத்தமுடியாது. ஓரளவு கேடு செய்யாமல் தடுக்கலாம். மன்னிப்பு ஒன்றே அவருடைய கல்லான உள்ளத்தை மாற்ற முடியும். ஆதலால் கடவுளின் பிள்ளைகள் தங்களுக்குக் கேடு செய்கிறவர்களுக்கு மன்னிக்கவேண்டும். அதன் மூலமாக கேடு செய்கிறவர்கள் மாறுதலடையலாம். தீங்குக்குத் தீங்கு செய்யின், தீங்கே வளரும். மன்னிப்பு தீங்கைப் பெருக்காமல் குறைக்கும். இவை நடைபெறாவிட்டாலும் கடவுளின் பிள்ளைகள் தீயோருக்கும், நல்லாருக்கும் நன்மை செய்யும் தங்கள் தந்தையைப் போன்றே செயல்புரிய வேண்டும் (5:45). இவ்வாறு நாம் அடுத்தவரை மன்னிக்கும்பொழுது அதன் மூலமாக நாம் சிலுவையின் துன்பத்தை அனுபவிக்க வேண்டியதிருக்கும். உயிரையே இழக்கநேரிடும். என்றாலும், கடவுளின் ஆட்சியை ஏற்குமுன்பே இதை நன்கறிந்து, கடவுளாட்சியை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று இயேசு கூறியிருப்பதை முன் கண்டோம். ஆனால் முடிவு வெற்றியே. இயேசுவின் சிலுவை முடிவானதன்று, அவர் உயிர் பெற்றெழுந்ததே முடிவு. இவ்வுண்மையை மத். 5:5இல் இயேசு குறிப்பிட்டுள்ளார்.

அடுத்திருப்பவரை மன்னிப்பது, அவர் மீது அன்பு கொள்வதின் முக்கிய பகுதி என்று மேலே கண்டோம். அவ்வன்பின் பிறிதொரு பகுதி அடுத்தவரைக் குற்றவாளி என்று தீர்க்கா திருப்பதாகும். குற்றவாளியாகத் தீர்ப்பது ஒருவகையான செருக்கேயாகும். பாவத்தில் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்ட பெண்ணின்மேல் பாவமில்லாதவர்கள் முதற் கல்லை வீசட்டும் என்றார் இயேசு. பாவம் இல்லாத அவரே அவளைக் குற்ற வாளியாகத் தீர்க்கவில்லை. நாம் யாவரும் பாவிகளே. அந்நிலையில் நம்முடைய பாவங்களைக் காண நாம் மறுத்து நம் கண்களை மூடிக்கொண்டு அடுத்தவர் குற்றங்களைக் காணக் கண்களை விரிவாகத் திறப்பதற்குக் காரணம், பிறரைக் காட்டிலும் நாம் நல்லவர்கள் என்று மெச்சிக்கொள்ள விரும்புவதேயாகும் (7:1-5). இச்செருக்கு ஒரு வகையில் கொலைக்குக்கூடக் காரணமாயிருக்கிறது எனலாம். கேடு செயலில் வெளிப்பட்டால் மட்டும் பாவம் என்று கருதுவது தவறு. அதன் தொடக்கத்திலேயே, அது எண்ணமாயிருக்கும் பொழுதே, அதை எதிர்க்கவேண்டும் (5:21,22,27,28). அவ்வாறு சொல்லுகையில் கொலைக்குக் காரணம் சினம். ஆனால் அச்சினத்திற்குக் காரணம் உண்மையில் பிறரை மதியாதேயாம். உடன் பிறந்தார் மேல் சீற, மூடனே, வீணனே என்று வசைமாரி பொழிவதற்கு அடிப்படையான காரணம் செருக்கே. அதே நேரத்தில் அநீதிக்கு எதிராகச் சினந்து குரலெழுப்புவதை, ஒட்டு மொத்த சமூக மாற்றத்தை விரும்புவதை இதனுடன் குழப்பிவிடக் கூடாது.

அடுத்தவர் மீதுள்ள அன்பு கடவுளைத் தலையாகக் கொண்ட குடும்பத்தின் ஒற்றுமையை வளர்க்கும் கருவியாகும். ஆனால்

அக்குடும்பத்திற்கு அடிப்படையாக கடவுள் கிறிஸ்தவ குடும்பங்களைத் தேர்ந்துகொண்டுள்ளார். ஒருவேளை அடுத்தவரை மன்னிக்க முதலாவது அங்குக் கற்றுக் கொள்ளுகிறோம். உடன்பிறந்தாரை ஏழெழுபது தடவைகள் மன்னிக்க வேண்டும் (18:21. இந்த இடத்தில் உடன்பிறந்தார் என்ற சொல் திருச்சபையில் உடன் சேர்ந்த உறுப்பினரையுங் குறிக்கும்). மனைவியை எக்காரணத்தைக் கொண்டும் விலக்கக்கூடாது (மார். 10:14). மத். 5:32இல் கூடாவொழுக்கத்தின் காரணமாக மனைவியை விலக்கலாம் என்று கூறியிருப்பதை யூத வழக்கத்திற்கு இசைந்தவாறு மத்தேயு எழுதியுள்ளார் என்றே சொல்லவேண்டும். மேலும் குடும்பத்தை அழிக்கும் கூடாவொழுக்கத்தை அறவே நீக்க வேண்டும் என்றும், அதற்குத் தொடக்கமாகிய தவறான பார்வையை எதிர்க்கவேண்டுமென்றும் இயேசு வலியுறுத்தினார் (மத். 5:27,28). இக்காலத்தில் இப்பாவத்தின் மூலமாக குடும்பம் இருக்கவேண்டிய நிலையில் இல்லாது விரைவில் கெட்டழிந்து வருகின்றது என்பதை மக்கள் அறியாதிருக்கின்றார்கள். சிறு பிள்ளைகளைத் தம் கைகளால் அணைத்து அவர்களுக்கு அருள்பாலித்த செயலின் மூலமாக (மார். 10:16) இயேசு சிறுவருக்குக் குடும்பத்திலுள்ள மதிப்பைத் தெளிவாகக் காட்டினார். அவர்களைப் பற்றிய தனிப் பொறுப்பைக் குடும்பத்திற்கும் சபைக்கும் கொடுத்தார் (மத். 18:6). அவர் கருத்துப்படி இறையரசின் சின்னங்களில் குழந்தைகளிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை ஏராளம்.

இவ்வாறான குடும்பத்தின் கடமைகளும், பிறருக்குச் செய்யவேண்டிய கடமைகளும் பிறர்மீது அன்புகொள் என்ற கட்டளையிலிருந்து இயல்பாக எழும்புகின்றன. அடுத்தவர்மீது கொள்ளும் அன்பிலிருந்து சுரப்பன. ஆதலால் கடவுளுக்கும் மனிதருக்கும் நாம் செய்யும் கடமைகள் யாவும் கடவுள் மீதுள்ள அன்பிலிருந்து எழவேண்டும். அடுத்தவர் தம்மைப் பாராட்டிப் புகழ வேண்டுமென்ற நோக்கத்துடன் எதையுஞ் செய்யக்கூடாது என்று இயேசு கற்பித்தார் (6:1-6; 16-18). கடவுள் நம் உள்ளத்திலுள்ள அன்பையே பார்க்கிறார். கடவுளின் அன்பு நம்மை ஆட்கொள்ளும்பொழுது நாம் நம்மையே மையமாக வைத்து வாழமாட்டோம். நம்மிலுள்ள தான் என்பது மாளும். இவ்வுலக மேன்மைகள், செல்வங்கள் முதலியவை கடவுளாட்சிக்கு நிகரானவையல்ல என்று காண்போம்.

கடவுளாட்சியே எல்லா முத்துக்களிலும் விலையுயர்ந்த முத்து. உலக மேன்மைகள், செல்வங்கள் யாவும் சிறு முத்துக்களுக்கு ஒப்பானவைகளே. பெரிய முத்தைப் பெறுவதற்காகச் சிறு முத்தை இழப்பது அறிவிற்குரிய செயல். அங்ஙனமே, புதையலுள்ள நிலத்தை வாங்குவதற்கு உடைமைகள் யாவையும் விற்பது மடமையன்று (13:44-46). ஒருவர் உலக முழுவதையும் கைப்பற்றினாலும் தம் வாழ்வையிழந்து போனால் அவருக்கு அதனால் பயனில்லை (மார். 8:36). இவ்வுலக செல்வம் அழிந்து போகும். கடவுளாட்சியின்பேறு ஒருபொழுதும் அழியாது (மத். 6:19,20). நீங்கள் எதன் மீது உங்களன்பைச் செலுத்து கிறீர்களோ அதையே மதிப்பீர்கள். கடவுள்மீதும் அவர் ஆட்சி யின்மீதும் அன்புகொண்டால் அதற்குரியவற்றில் ஈடுபடுவீர்கள். அவையே அழியாத விண்ணுலகக் களஞ்சியமாகும் (6:21).

இக்கடவுளின் மீது காட்டும் அன்பு மனக்கிளர்ச்சியாகமட்டும் இருந்துவிடக்கூடாது. அவ்வன்பு செயலாக மாற வேண்டும். என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே என்று உருக்கமாக இறைஞ்சி மனக்கிளர்ச்சியைத் தூண்டி விடும் சமய வினைகளாகமட்டும் அவ்வன்பு நின்றுவிடக் கூடாது என்றார் இயேசு (7:21-29). இச் செயல்களை நம் முயற்சியால் செய்ய முடியாது. கடவுள் விரும்பும் செயல்களைச் செய்வதற்கு நம் முயற்சியைச் சார்ந்தோமானால், நாம் அதன்மூலம் பொய்யான மன நிறைவு கொள்வோம். நாம் இயல்பாக விரும்பும் அல்லது நமக்கு இயல்பாக முடிகின்ற சிலவற்றைச் செய்துவிட்டு, கடவுள் அச்செயல்களுக்காக நம்மைப் பாராட்ட வேண்டும் என்று எதிர்நோக்குவோம். ஆனால் செய்யாது விட்டுவிட்ட செயல்களை அல்லது நம்முடைய குறைகளை நாம் அறிய முடியாதவர்களாகின்றோம். அக்காலத்து சமயக் கட்சியாளரும் (சதுசேயரும், மறைநூல் அறிஞரும் வேதபாரகரும்) அந்நிலையில் இருந்தனர். அவர்கள் தங்களுடைய பாவங்களை அறிய முடியாதவர்களாகத் தங்களுடைய நிலையில் மனநிறைவு கொண்டவர்களாக இருந்து தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொண்டிருந்தார்கள். இயேசு இக்குற்றத்தைப் பாசாங்கு (hypocrisy) என்று கூறி (23:28). அதனை மிகவும் கடுமையாகக் கண்டித்தார் (23:27). இக்குற்றத்தைத் தெளிவாய் எடுத்துக்காட்டும்படி சமய நெறியாளரும், வரி வாங்குவோரும் என்ற உவமையைச் சொன்னார். அவ்வுவமையில் சமய நெறியாளர் சொன்ன யாவும் உண்மையானவைதாம். ஆயினும் அவரின் செயல்கள் கடவுள்மீதுள்ள அன்பிலிருந்து எழவில்லை. வரிவாங்குவோர் மீது சிறிதும் அவருக்கு அன்பில்லை. அதை அவர் அறிய முடியவில்லை. தம் முயற்சியால் செய்தவைகளையே முழுவதும் அவர் நம்பியிருந்தார் என்று காண்கிறோம்.

ஆகவே, அறச் செயல்கள் அன்பிலிருந்து எழ வேண்டும். ஒரு மரத்திலிருந்து கனிகள் விளைவது போன்று அன்பின் செயல்கள் இருக்கவேண்டும் என்றார் இயேசு. நல்ல மரம் கெட்ட கனியைக் கொடாது, கெட்டமரம் நல்ல கனியைக் கொடுக்காது (7:17,18). நல்ல கனி வேண்டுமாயின், மரத்தை நல்லதாக்குங்கள் (12.33, பொது மொழிபெயர்ப்பைக் காணவும்). ஆதலால் கனிகள் போல இயல்பாகச் செயல்கள் எழ வேண்டுமாயின் மனிதரின் அடிப்படையான தன்மையில் மாறுதல் ஏற்படவேண்டும். இது தம் முயற்சியால் ஒருபொழுதும் நடைபெறாது. இது கடவுளின் ஈவு. இதுவே கடவுளின் ஆட்சிக்குள் வருகிறவர்கள் பெறும் நிலைவாழ்வு (Eternal life). அவ்வாழ்வு கடவுளிடமிருந்து வரும் வாழ்வு, நிறைவான வாழ்வு. அதைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும். நம் எளிமையை அறிந்து கடவுளைச் சார்ந்திருப்பதே அதற்கு முதற்படி. அத்துடன் சமூக, பொருளாதார ஒடுக்குதலால் மனமுடைந்தோருடன் ஒன்றுபட்டு எளிய உள்ளத்தவர்கள் பேறு பெற்றோர். கடவுளாட்சி அவர்களுடையது (5:3). கேளுங்கள், பெற்றுக் கொள்வீர்கள், தேடுங்கள், கண்டடைவீர்கள், தட்டுங்கள், திறக்கப்படும் என்பது அடுத்தபடியாகும் (7:7). இவ்வாறு கடவுளைச் சார்ந்து அவர் மக்கள் பக்கம் நிற்பதே கடவுள் அருளும் மெய்வாழ்வைப் பெறும் வழியாகும். மனம்மாறி கடவுள் ஆட்சியின் நற்செய்தியை நம்புங்கள் என்று (மார். 1:15) இயேசு கூறியதின் கருத்தும் இதுவே.

6. முடிவுரை

இயேசுவின் வாழ்வையும் அவர் உரைத்த உண்மைகளையும் மிகச் சுருக்கமாகவே இக்கட்டுரையில் பார்த்துள்ளோம். இதில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள், போதனைகள் தொடர்பான பாடச் சிக்கல்களை நாம் இங்கு ஆழ்ந்து ஆயவில்லை. எனவே வாசகர் இதுபற்றிய முந்தைய கட்டுரைகளையும், வேறு நூல்களையும் படித்தல் நலம். மேலும் இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், பணிகள், போதனைகள் ஆகியவற்றில் அடங்கியுள்ள புதுமைப் புரட்சியை நன்கு அறிய வேண்டுமானால் அவர் காலத்து அரசியல், சமூக, பொருளாதாரச் சூழலை உடனுக்குடன் சுட்டிக்காட்டவேண்டும். இதனைப்

போதிய அளவில் செய்ய இக்கட்டுரையில் இடமில்லை. முந்திய கட்டுரைகள். குறிப்பாக பு.ஏ. பின்னணி வரலாறு பற்றிய கட்டுரை. இங்கு நினைவுகூரப்பட வேண்டும்.

இன்னும் குறிப்பிடத்தக்க இரண்டு கரிசனைகள் இக்கட்டுரையில் விடப்பட்டுள்ளன. ஒன்று இயேசு தம்மை யார் என்று புரிந்துகொண்டார் என்ற கேள்வி. இது பற்றி அடுத்து வரும் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. மற்றது. இயேசுவின் வாழ்க்கை. பணிகள், போதனைகளைப் புதிய முறையில் அணுகியிருக்கின்ற ஆய்வுகள். இவையும் தனியொரு கட்டுரையாக இந்நூலில் இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

துணை நின்ற நூல்கள்

1. Manson, T.W., *The Teaching of Jesus,* 1934.
2. Dibelius, M., *From Tradition to Gospel,* 1934.
3. Dibelius, M., *The Message of Jesus Christ,* 1939.
4. McCown, C.C., *The Search for the Real Jesus,* 1940.
5. Bornkamm, G., *Jesus of Nazareth,* 1956.
6. Knox, J., *The Death of Christ,* 1958.
7. Wenham, D., *The Parables of Jesus - Pictures of Revolution,* 1989.
8. Jerpmios, J., *The Sermon on the Mount, The Lord's Prayer, The Problem of the historical Jesus,* 1973.

27

புதிய ஏற்பாட்டு இறையியல்

இஸ்ரயேல் செல்வநாயகம்

1. முன்னுரை

கால அளவை நோக்கும்போது ப.ஏ.இறையியல் பல நூறு ஆண்டுகளாகப் பல்வேறு துருவங்களில் வளர்ச்சியடைந்தது. ஆனால் அதனோடு ஒப்பிடும்போது பு.ஏ. இறையியலின் கால அளவு மிகவும் குறுகியதாகும். இயேசுவின் திருமுழுக்கிலிருந்து துவங்குவோமாயின் அறுபது ஆண்டுகளுக்கும் குறைவானதொரு காலக்கட்டத்தில் தோன்றி வளர்ந்த சிந்தனைகளையே பு.ஏ.இல் படிக்கிறோம். பு.ஏ.இல் அடங்கியிருக்கிற நூல்களில் கலாத்தியர் மடல் முதலிலும் (கி.பி. 50 வாக்கில்) திருவெளிப்பாடு இறுதியிலும் (95) எழுதப்பட்டன என்று ஒப்புக்கொள்வோமாயின் எழுதப்பட்ட நிலையில் பு.ஏ. இறையியல் ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்குள் உருப்பெற்றது. இந்த உண்மை கருதத்தக்கது. ஏனெனில் குறுகிய காலத்தில், வேகமான வரலாற்று மாற்றங்களினூடே, திட்டவட்டமான வரைமுறைகளுக்குள் சிந்தனைகளை உள்ளடக்க முடியாத நிலையை பு.ஏ. இறையியல் சுட்டி நிற்கின்றது. அணுகுண்டு போல் வரலாற்றில் வெடித்த இயேசு நிகழ்ச்சி விறுவிறுப்பாகவும் பல்முனை நோக்கிலும் பாதிப்புகளை ஏற்படுத்தியது. இப்பாதிப்புக்கள் உணரப்பட்ட நிலையிலேயே எழுதப்பட்டுள்ளபடியால் பு.ஏ. செய்தியின் உயிர்த்துடிப்பை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. மேலும் பாதிப்புகளின் பன்மை நிலை, வளர்ச்சிப்போக்கு, ஏன் சில முரண்பட்டப் போக்குகள் கூட, இந்த உயிர்த் துடிப்பை நாம் புரிந்துகொள்ள உதவியாயிருக்கின்றன என்றால் மிகையாகாது.

பு.ஏ. இறையியல் அதன் அடிப்படைகளில் ப.ஏ. இறையியலின் தொடர்ச்சியாக உள்ளது. கிறிஸ்தவத்தின் தொட்டில் யூதசமயம் என்று சொல்லப்படுவதுண்டு. ப.ஏ.க்கும், பு.ஏ.க்கும் இடையே தொடர்பின்மை இருக்கிறது என்று மார்சியோன் போன்றவர்கள் நிறுவ முயன்றார்கள். ஆனால் திருச்சபை இதனை மறுத்தே வந்துள்ளது நமக்கு மன நிறைவை அளிக்கிறது. பு.ஏ.ஐப் புரிந்துகொள்ள ப.ஏ. தேவைப்படுகிறது என்று சொன்னால் கூடப் போதாது. பதிலாக, ப.ஏ.இல் கூறப்படும் விடுதலை, நீதி, சமூகத் திறனாய்வு, நல்லெதிர்நோக்கு, இறைப் பற்று ஆகியவற்றின் இயக்குநரான இறைவனே பு.ஏ. நிகழ்ச்சிகளுக்கும், சிந்தனைகளுக்கும் அடித்தளமாக இருக்கிறார் என்று நாம் உறுதியோடு கூற வேண்டும். ஏற்கெனவே இறைவன் படைத்தப் பல புதுமைகளை ப.ஏ.இல் படிக்கிறோம். அவற்றிற்கொத்த, அவற்றின் நிறைவான ஒரு புதுமையை நாம் பு.ஏ.இல் பார்க்கிறோம். ப.ஏ. மரபில் வந்த பலர் இப்புதுமையை ஏற்க முடியாமலிருந்தனர். ஆயினும் இப்புதுமையில் ஆழ்ந்த பொருள் கண்ட பு.ஏ. எழுத்தாளர்கள் ப.ஏ.இன் கருத்துக்கள், காட்சிகள் அடிப்படையிலேயே இதனைப் புரிந்து கொண்டார்கள். இதனை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது. சிறப்பாக, இன்று மும்முரமாக நடந்து வரும் யூத-கிறிஸ்தவ உரையாடலின் ஒளியில் இத்தகைய தெளிவு இன்றியமையாத ஒன்றாகும். மேலும் பழைய, புதிய என்னும் பெயர்கள் இத் தெளிவைக் குலைத்து விடுவதற்கு வாய்ப்பு இருப்பதால் இன்று விவிலியத்தின் இரு பகுதிகளையும் முதல் ஏற்பாடு, இரண்டாம் ஏற்பாடு என்று அழைப்போர் உளர். மரபுப் பழக்கத்தினின்று மாறுவது பல கிறிஸ்தவர்களுக்கு மிகவும் கடினமாகப்படினும் இவ்வாறு அழைப்பதால் பு.ஏ. நம்பிக்கையையும் இறையியலையும் பற்றிய தெளிவு ஏற்படுகிறது என்பதை மறுக்கவே முடியாது.

இந்தியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் பல்வேறு சமயத்தவர், பண்பாடுடையோர், கொள்கையாளர் வாழுகின்ற ஒரு பன்மைச் சூழலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். கடவுள் ஒருவரே எனும்போது இப்பன்மையை எவ்வாறு அவருடன் இணைப்பது என்கின்ற கேள்வி இன்று எழுப்பப்படுகிறது. இது குறித்து காரசாரமான விவாதங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்நிலையில் நமக்கு அறைகூவலாக இருக்கின்ற உண்மை பு.ஏ. இறையியலுக்குள்ளேயே இருக்கும் ஒருவிதப் பன்மை நிலையாகும். கோட்பாட்டுப் பிடிப்பிலிருந்து விடுபட்டு நாம் பு.ஏ.ஐப் படிப்போமானால் ஒரே நிகழ்ச்சி அதில் வெவ் வேறு விளக்கங்கள் பெற்றிருப்பதையும் சிந்தனைகளில் ஒரு வளர்ச்சி இருப்பதையும் நம்மால் கண்டுகொள்ள முடிகிறது. இவ்வாறு நமது மறைநூலுக்குள் இருக்கும் பன்மை நிலையை நாம் உணரும்போது பல்சமயச் சூழலைத் திறந்த மனத்தோடு அணுக நம்மால் முடிகிறது.

பு.ஏ. இறையியலை நாம் அணுகும்போது இரு கடைத்தீவிரப் போக்குகளை நாம் தவிர்க்க முயல வேண்டும். ஒன்று ஒரு கோட்பாட்டுப் போர்வையால் பு.ஏ. முழுவதையும் மூடப் பார்ப்பது; இன்னொன்று எல்லாவற்றையும் சமூக, வரலாற்று உண்மைகளுக்குள் மட்டுப்படுத்துவது, எ.கா. இறைவெளிப்பாடு இயேசுவில் மட்டுமே என்ற இறையியல் நிலைப்பாட்டில் உரோமர் மடலுக்கு விளக்கவுரை எழுதிய கார்ல் பார்த் மானிட இயல்பில் இருக்கும் நல்ல பகுதிக்கோ பிற சமயங்களில் இருக்கும் ஒளிச் சிதறலுக்கோ எவ்வித இடமும் கொடுக்க வில்லை. பற்றுறுதியால் நீதியராக்கப்படுதல் எனும் கருத்தை அழுத்திய மார்ட்டின் லுத்தரும் அவர் மரபைப் போற்றுவோரும் மனம் மாறுதல், நற்செயல்களைச் செய்தல் முதலியவைகளுக்கு

எவ்வித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை. இதுபோல் மறு கோடியில் இயேசுவை ஒரு புரட்சி மனிதர் என்றும், திருச் சபையை வரலாற்றில் தோன்றிய ஒரு மக்கள் இயக்கம் என்றும் அழுத்தியோர் இறைவனின் அருள்சார்ந்த ஈடுபாட்டைப் பற்றியோ, வெளிப்பாட்டைப் பற்றியோ கவலைப்பட்டுக் கொள்ளவில்லை. இந்த இரு கோடி நிலைப்பாடுகளிலும் இருக்கும் அரிய உண்மைகளை ஏற்கும் அதே நேரத்தில் நாம் ஒரு பக்க அழுத்தங்களையும், தீவிரப் போங்குகளையும் தவிர்க்க கவனமாயிருத்தல் நலம்.

பு.ஏ. இறையியல் புரிந்து கொள்ளுதலுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. அதில் பல்வேறு அணுகுமுறைகளும், அழுத் தங்களும், விவாதங்களும் இருந்து வந்துள்ளன. மிகவும் கருதத்தக்க இரு கருத்துக்களை இவண் குறிப்பிட்டாக வேண்டும். ஒன்று வரலாற்று இயேசு-நம்பிக்கையின் கிறிஸ்து பற்றியது. இன்னொன்று பு.ஏ.இன் ஒருமைப்பாடு பற்றியது. இருப்பு நிலைக் கோட்பாட்டினால் (Existentialism) பாதிக்கப்பட்ட புல்ட்மான் என்னும் ஜெர்மானிய அறிஞர் பு.ஏ. ஆய்வில் இந்த நூற்றாண்டில் ஒரு பூகம்பத்தை ஏற்படுத்திவிட்டார். வரலாற்றில் இயேசு எப்படி வாழ்ந்தார் என்ற கேள்வி தேவையற்ற ஒன்று என்று அவர் வாதாடினார். மாறாக பற்றுறுதியை முன்னிட்டு அவரது சீடரும் துவக்கத் திருச்சபையினரும் அவரை எவ்வாறு புரிந்துகொண்டு அறிக்கை செய்தனர் என்று அறிந்துணர்வதே அவருக்கு முக்கிய மாகப்பட்டது. ஆனால், அவரது மாணவர்களில் சிலர் வரலாற்று இயேசுவைப் பற்றியக் கேள்வியை புறக்கணிக்க முடியாது என்றும், நம்பிக்கை அடிப்படையில் ஏற்றுக்கொண்ட கிறிஸ்துவைப் புரிந்துகொள்வதற்கு அது முக்கியம் என்றும் கருதினர். இன்று பெருமளவில் இரண்டையும் இணைத்துச் செல்லும் போங்கு காணப்படுகிறது. அடுத்த கேள்வி பு.ஏ. ஒரே செய்தியையுடையதா அல்லது பல்வேறு செய்திகளின் திரட்டா என்பதாகும். இதிலும் ஓர் ஒருங்கிணைவு இன்று ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன்படி இயேசுவை மையமாகக் கொண்ட நம்பிக்கை, சிந்தனை என்ற விதத்தில் ஒருமையும் அது தொடர்பான விளக்கங்களும், வாழ்க்கை முறைகளும் வேறுபட்டவை என்ற விதத்தில் பன்மையும் இன்று ஒன்றாக ஏற்கப்படுகின்றன. இந்த இரு கருத்துக்களிலும் எழுந்த பல்வேறு நிலைப்பாடுகளையும் விவாதங்களையும் குறிப்பிட இக்கட்டுரையில் இடமில்லை. ஆயினும் ஒருங் கிணைந்த ஒரு நிலைப்பாட்டை இது வெளிப்படுத்துகிறது என்பதை வாசகர் எளிதில் புரிந்து கொள்வர்.

பொதுவாக பு.ஏ. இறையியலை விளக்கும் நூல்கள் பின்வரும் நூல் வரிசை முறையைப் பின்பற்றுவதுண்டு: சம நோக்கு நற்செய்தி நூல்கள், யோவானின் நற்செய்தி நூலும், மடல்களும், பவுலின் மடல்கள், பொதுவான மடல்கள், திருவெளிப்பாடு. ஆனால் நாம் இம்முறையை இங்கு முழுமையாகப் பின்பற்ற வில்லை. வரலாறும் நம்பிக்கையும், ஒருமையும் பன்மையும் ஒருங்கிணைகின்றன என்ற நிலைப்பாட்டில் இவற்றின் செய்திகளை இதில சுருக்கமாகத் திரட்டித் தரவே முயன்றுள்ளேன். ஆயினும் கருத்து வளர்ச்சியைச் சுட்டிக்காட்ட ஆங்காங்கு கால வரிசை கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

2. அணுகுமுறை

இறையியலின் உள்ளடக்கத்தைப் பார்க்குமுன் அடிப்படை அணுகுமுறைகளைப் பார்ப்பது நலம். இயேசுவின் அணுகு முறை, அவரது சீடர் குழாமான திருச்சபையின் அணுகுமுறை ஆகியவற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

நாம் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோன்று பு.ஏ. இறையியலை யூதப் பின்புலத்திலிருந்து பிரிக்கவே கூடாது. இயேசு ஒரு நல்ல யூதராக வாழ்ந்தார். ஒய்வுநாள்தோறும் தொழுகைமன்றத்திற்குப் போவது அவருடைய வழக்கம் (லூக். 4:16). மறைநூல் வாசிப்பதற்கு அவர் எழுந்து நின்றது, அவர் வாசித்த முறை, கொடுத்த விளக்கம் முதலியவை நாசரேத்தூர் தொழுகை மன்றத்தில் இருந்தோரை வியப்பில் ஆழ்த்தின (4:17-22). இதற்குமுன் பன்னிரு வயதில் இயேசு எருசலேம் கோவிலில் சமயத்தலைவர்களுடன் எழுப்பிய கேள்வியும் பலரை வியப்புறச் செய்தது (2:46,47). எனவே, ஒரு நல்ல யூதராக, சமயப் பற்றா ளராக அவர் நடந்து கொண்டபோதிலும் அவரது அணுகு முறையில் ஒரு புதிய போங்கு காணப்பட்டது. இதனை நாம் சற்று விளக்கமாகக் காண்போம். அவர் தம் மறைநூலையும் மரபுகளையும் எவ்வாறு அணுகினார் என்று பார்த்தோமானால் உண்மை நிலை ஒரளவில் தெளிவாகி விடும். ஐந்து கூறுகளை இவண் காண்போம்.

முதலாவது, இயேசு தம் மறைநூலை அணுகியதில் எழுத்துக்கெழுத்தானப் பொருள் காணலுக்கு அல்லது ஒரு வசனத்தை மட்டும் உயர்த்திப் பிடிக்கும் அடிப்படைவாதப் போங்குக்கு அவர் இடமளிக்கவில்லை. எ.கா. இயேசுவின் சோதனையின்போது தீயோன் அவரிடம் கோவில் உச்சியிலிருந்து கீழே குதியும்; தம் பாதம் கல்லில் இடறாதபடிக்குத் தங்கள் கைகளில் ஏந்தும்படி அவர் (கடவுள்) தம் தூதுவர்களுக்கு ஆணையிடுவார் என்று சொல்லியிருக்கிறதே என்று கூறினான். இங்கு தீயோன் திருப். 91:11,12ஐ மேற்கோள் காட்டுகிறான். ஆனால் உடனே இயேசு இணை. 6:16ஐ மேற்கோள் காட்டி, உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்காதே என்று எழுதி யிருக்கிறதே என்று கூறிவிட்டார். ஏனைய சோதனைகளிலும் இவ்விதப் பார்வையை இயேசு கொண்டிருந்தார் என்று உணரமுடிகிறது. மேலும், அன்றிருந்த சமயத் தலைவர்களில் பலர் இன்னொருவிதமான ஒரழுத்த நோக்குடையவர்களாக இருந்தனர். அவர்கள் நீதிச்சட்டத்தின் விதிமுறைகளான பத்திலொன்று கொடுத்தல் முதலிய செயல்களை அழுத்தி அதன் வலுவான பகுதியான நீதி, இரக்கம், பற்றுறுதி ஆகிய வற்றை விட்டுவிட்டார்கள். இது குருட்டுத்தனம் என்றும், கொசுவுக்கு வடிகட்டி ஒட்டகத்தை விழுங்கும் செயல் என்றும் இயேசு இடித்துரைத்தார் (மத். 23:23,24). அவரைப் பொறுத்தவரை இரண்டும் இணைந்து செல்ல வேண்டும்.

இரண்டாவது, மறைநூலின் செய்தி பற்றிய ஓர் ஒட்டுமொத்தச் சிந்தனை இயேசுவிடமிருந்தது. ஒவ்வொரு வசனத்திற்கும் அல்லது பகுதிக்கும் நுணுக்கமான விளக்கவுரை காண அவர் முயலவில்லை. மாறாக, ஒரு மைய இழையின் கோர்வையில் பல்வேறு கருத்துக்களையும் நிகழ்வுகளையும் அவர் இணைக்க விரும்பினார். எ.கா. எம்மாவூருக்குப் போன இரு சீடர்களுடன் உயிர்த்தெழுந்த வழிப்போக்கராக நடந்து சென்ற இயேசு, இறைவாக்கினர் கூறியவைகளை நம்ப முடியாத அவர்களின் மந்த நிலையைக் கடிந்தார். பின்னர் மோசே தொடங்கி இறைவாக்கினர் கூறிய எல்லா முறைப்பகுதிகளையும் அவர் களுக்கு விளக்கிக் காட்டினார் (லூக். 24:27). இது அவர்களின் இதயத்தில் கொழுந்து விட்டு எரிந்த ஓர் உணர்வைக் கொடுத் தது (24:32). இங்கு நடந்தது என்ன? பு.ஏ.இன் பகுதிகள் அனைத்தையும் இயேசு விரித்து விளக்கினாரா? பயணம் குறுகிய கால அளவுடையதாக இருந்தபடியால் இதற்கு வாய்ப் பில்லை. அப்படியானால் இறைவனின் அவரது அடியவரின் பாடுகளும் நல்லெதிர்நோக்கும் (சாவும் உயிர்த்தெழுதலும்) பு.ஏ. முழுவதிலும் இழையோடியிருப்பதையும் அதன் தொடர்ச்சி யாகவே தம்முடைய சாவும் உயிர்ப்பும் நிகழ்ந்ததையும் இயேசு

சுட்டியிருக்கவேண்டும். மேலும், இத்தகைய ஒட்டுமொத்தச் சிந்தனையில் மேற்கோள்கள், இணைப்புகள் தவிர்க்க இயலாதவை. இதனால் இவ்வாறு கூறியது நிறைவேறும்படி இப்படி நடந்தது என்று நற்செய்தி நூலாசிரியர்கள் எழுதுவதெல்லாம் பொருத்தமானது என்பதற்கில்லை (மத். 1:22மு; 2:15,23; 8:17; 12:17; 13:35; 21:4; 27:35, யோ.12:38; 15:25; 18:9; 19:24,28,36). ஆர்வமிகுதியால் அவசரமாக எழுதி மேற்கோள்களில் தவறிழைத்தக் கட்டங்களும் உண்டு (எ.கா. மத். 27:9ஐ எரே. 18:2,3; 32:6-15 உடனும் சக. 11:12,13 உடனும் ஒப்பிட்டு நோக்குக). அதே நேரத்தில் இயேசு தாமே மேற்கோள் காட்டித் தொடர்பு ஏற்படுத்தும் இடங்கள் என்று கூறப்பட்டிருப்பவை கூடுதல் பொருத்தமுடையவைகளாக உள்ளன. இறைவனுக்கு என்றுமே நிகழ்காலமாயிருப்பதால் உயிர்த்தெழுதல் உண்டு என்ற வாதம் (மத். 22:29-32; மார். 12:26; லூக். 20:37,38) வெற்றிப் பவனியின் போது எளிய மக்களும் குழந்தைகளும் எழுப்பிய குரல் வலியோரை அடக்கவே என்னும் கூற்று (மத். 21:16; சங். 8.2), எருசலேம் கோவில் எல்லா மக்களுக்குமுரிய இறைவேண்டல் இல்லம் என்ற உறுதிப்பாடு (மத். 21:13; எசா. 56:7), தள்ளப்பட்டக் கல் தலைக்கல்லாவதை தம் வாழ்வோடு பொருத்தியது (மத். 21:42; திருப். 118:22,23), கடவுளால் கைவிடப்பட்ட நிலையில் திருப்பாடகின் சொற்களைப் பயன்படுத்தியது (மார். 15:34; திருப். 22:1) ஆகியவை இத்தகைய பொருத்தலுக்கு எடுத்துக்காட்டுகளாகும். ஆக, எதனை எதனோடு பொருத்த வேண்டும் என்பதற்கு இயேசு இலக்கணம் வகுத்துள்ளார்.

மூன்றாவதாக, திருச்சட்டம் பற்றிய மரபுகளில் இயேசு திருத்தம் செய்தார். `அழிக்கவன்று, நிறைவேற்றவே வந்தேன்' என்றும் (மத். 5:17,18), `இக்கட்டளைகளில் சிறிதானவற்றைக் கூடக் கடைப்பிடிக்கவேண்டும்' (5:19) என்றும் கூறிய இயேசு மறைவல்லுநர், பரிசேயர் நீதியிலும் உங்கள் நீதி பெரிதாயிருக்கவேண்டும் என்றும் தம் சீடர்களிடம் கூறினார் (5:20). குறிப்பிட்டச் சூழலில் விதிமுறைகள் வழங்கப்பட்டிருப்பதினால் உயர்ந்த நீதிக்கு நேராக, ஏன், கடவுளின் முழுமைக்கு நேராக மானிடர் வளர வேண்டுமென்பது இயேசுவின் கருத்து (5:48). இந்த அடிப்படையில், ஏற்கெனவே இருந்த விதிமுறைகளில் இயேசு செய்த திருத்தங்களுக்கு ஆறு எடுத்துக்காட்டுகளை மத்தேயு குறிப்பிடுகிறார். (i) கொலை செய்வது தீர்ப்புக்குரியது என்று சொல்லப்பட்டது; ஆனால் அயலார் மேல் சினங் கொள்வதும் அவரை மூடர் என்று அழைப்பதும்கூட தீர்ப்புக்கும் தண்டனைக்குமுரியது (5:21-26). (ii) இச்சையோடு பார்ப்பது கூட விபசாரத்திற்குச் சமமான குற்றம் (5:27-30). (iii) மண முறிவு அனுமதிக்கப்பட்டது. ஆனால் ஒருவர் தம் துணைவியைத் தள்ளிவிடுவது தாமும் விபசாரம் செய்து தம் துணைவியையும் விபசாரியாக்குவதாகிவிடும் (5:31,32). (iv) ஆணையிட்டுக் கூறுவதால் எந்த மாற்றமும் நிகழப் போவதில்லையாதலால் நேரடியாக ஆம் அல்லது இல்லை என்று சொல்லிவிடுவதே சிறந்தது (5:33-37). (v) கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல் என்ற நியதி மாறி ஒரு கன்னத்தில் அடிக்கிறவருக்கு மறு கன்னத்தையும் காட்டும் உயர்ந்த நெறி வரவேண்டும். (vi) எதிரிகளைப் பகைத்து நண்பரில் அன்பு காட்டும் நிலை மாறி பகைவரிலும் அன்பு கூரும் பண்பு பெருகவேண்டும். இவ்வாறெல்லாம் செய்வதால், நல்லோர்-தீயோர் என்று பாராமல் மழையையும் வெயிலையும் தருகிற பெருந்தன்மையுள்ள வானகத் தந்தையின் பிள்ளைகளாகலாம், அவரின் முழுமையைப் பெறலாம் என்று இயேசு கருதினார்.

நான்காவதாக, இயேசுவிடம் அவரது திருமறைப்பயன் பாட்டில் தெரிவு நோக்கு இருந்தது. பல்வேறு புனைவுகள், நிகழ்வுகள், மரபுகள், கருத்துக்கள் அவர் படித்த மறைநூலில் இருந்தன. அவற்றிற்கெல்லாம் சம மதிப்பு கொடுத்து அவற்றை எடுத்துக்காட்டாமல் குறிப்பிட்டச் சிலவற்றைத் தெரிந்தெடுத்து இயேசு முக்கியப்படுத்தினார். ஒரு விதத்தில் தங்கள் கருத்துக்களை அழுத்துவதற்கு இன்று போல் அன்றும் சமயத் தலைவர்கள் தங்கள் மரபுகளில் இருந்த சில கதைகளையும், கருத்துக்களையும் பெரிதுபடுத்திக் காட்டினர். ஒருவேளை மோசேயை எதிர்த்த கோராகு கூட்டத்தார் கடவுளால் நிலப் பிளப்பில் அழிக்கப்பட்டது (எண். 16), ஆடிய உடன்படிக்கைப் பெட்டியை எதேச்சையாகத் தொட்ட ஊசா அடிக்கப்பட்டது (2 சாமு. 6:6,7) முதலிய கதைகளை அவர்கள் பெரிதும் சுட்டிக் காட்டியிருக்கலாம். ஆனால் இயேசு முற்போக்குச் சிந்தனையை வளர்க்கக் கூடிய கதைகளை எடுத்துக்காட்டினார். எ.கா. சீடர் ஓய்வுநாளில் கதிர்களைக் கொய்து தின்றதைப் பரிசேயர் குறைகூறினர். அப்போது தாவிதின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சி யொன்றை அவர் அவர்களுக்கு நினைவூட்டினார். தாவிதும் அவர் கூட்டாளிகளும் ஒருமுறை பசியாக இருந்தபோது ஆலயத்தில் சென்று அங்கு ஆசாரியர் மட்டுமே உண்ணக் கூடிய திருமுன் அப்பங்களை உண்டார்கள் (மத். 12:3-7; 1 சாமு. 21:2-7). இயேசு இதை எடுத்துக்காட்டியது பூசாரித் தனத்தைத் தக்கவைத்துப் பொதுமக்களை இறைவன், தூய்மை என்னும் பெயர்களில் அச்சுறுத்த நினைத்தவர்களுக்கு ஓர் அறைகூவலாக இருந்தது.

இன்னோர் எடுத்துக்காட்டையும் பார்ப்போம். மணமுறிவை எதிர்த்த இயேசு படைப்பின்போது மானிடரை கடவுள் ஆணும் பெண்ணுமாகப் படைத்ததைச் சுட்டிக்காட்டினார் (மத். 19:3-7). இது தொட. 1:26இல் சொல்லப்பட்டுள்ளது.. முதலாம் படைப்பு விவரிப்பைச் சேர்ந்தது. ஆனால் இரண்டாம் படைப்பு விவரிப்பில் முதலில் ஆண் படைக்கப்பட்டு பின் பெண் படைக்கப்பட்டதாக தொடக்கநூல் வடிக்கிறது. பவுல் ஒரு கட்டத்தில் பெண்களின் எழுச்சியை அடக்க நினைத்தபோது இந்த இரண்டாம் விவரிப்பையே மேற்கோள் காட்டி பாவமும் முதலில் பெண்ணால் வந்தது என்று வலியுறுத்துகிறார் (1.தீமோ. 2:11-14). இயேசுவும் இன்னோர் உண்மையை வலியுறுத்த, அதாவது ஆண் தன் பெற்றோரை விட்டு மனைவியுடன் சேர்ந்து இருவரும் ஒருடல் என்று இரண்டாம் விவரிப்பில் வருவதை எடுத்துக்காட்டுகிறார் (19.5). பவுல் இதனை ஒரு முறை நேரியக் கூற்றில் குறிப்பிட்டாலும் இன்னொருமுறை ஒருடல் என்னும் கருத்தை விபசாரத்துடன் இணைத்துக் காட்டுகிறார் (1 கொரி. 6:16).

ஐந்தாவதாக, தம் சமய மரபின் அடித்தளத்தில் நின்றுகொண்டே அதில் ஏற்பட்ட சிதைவுகளை இயேசு சீரமைத்தார். சில வேளைகளில் இச் சீரமைப்பு நற்செய்தி நூலாசிரியர்களால் நேரிடையாகக் குறிப்பிடப்படவில்லை. எனினும் இயேசுவின் சில செயல்பாடுகளைக் கூர்ந்து கவனிக்கும்போது இந்த உண்மையைக் கண்டு கொள்கிறோம். எ.கா. இயேசு தாவிதின் மகன் என்று அழைக்கப்பட்டதை ஏற்றாலும் தாவிதின் தடம் புரண்டப் போக்கை மாற்றியமைக்க நினைத்தார். தாவிதே அவரை (மெசியாவை) ஆண்டவர் என்று கூறியிருக்க அவர் எப்படி தாவிதின் மகனாக இருக்க முடியும்? என்ற கேள்வியை ஒருமுறை இயேசு எழுப்பினார் (22:42-45; மார். 12:35-37; லூக்.20:41-44). தாவிதின் மகனுக்கு ஓசன்னா என்ற வெற்றி ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து இந்த நிகழ்ச்சி நடக்கிறது. இந்தப் புதிரின் உட்பொருள் என்ன?

குடும்பவழிப் பட்டியலில் இயேசு தாவிதின் மகன் என்று மத்தேயு குறிப்பிடுகிறார் (1:1). இந்த விதத்தில் இயேசுவின்

தந்தை யோசேப்பும் தாவிதின் மகன் என்று குறிக்கப்படுகிறார் (1:20). தாவிதின் காலம் இஸ்ரயேலர் வரலாற்றில் பொற்காலம் என்றும், அவர் வழி வரும் மெசியா அக்காலத்தைத் திரும்பவும் ஏற்படுத்துவார் என்றும் அக்காலத்தில் கருதப்பட்டது. ஆனால் மூன்று அடிப்படைகளில் இயேசு தாவிதின் போங்கிற்கு எதிராகச் சென்றார். (i) பூகோளத் தொடர்பு அவற்றில் ஒன்று. தாவிது பெத்லகெம் என்னும் சிற்றூரைச் (கிராமத்தை) சேர்ந்தவர். ஆனால் அவர் எப்ரோன் என்னும் புறநகர்ப் பகுதியில் அரசராக முடிசூட்டப்பட்டார்; பின்னர் எபூசியர் நகராகிய எருசலேமைப் பிடித்து அதனைத் தலைநகராக்கினார். அது தாவிதின் நகர் என்றும், கடவுளின் நகர் என்றும் அழைக்கப்பட்டது (2 சாமு. 5:9; திருப். 4:4). இந்த நகர்மய வளர்ச்சியில் பெத்லகெம் மறக்கப்பட்டது. இந்நிலையில் எருசலேமிலிருந்துதான் மெசியா தோன்றுவார், நீதிச்சட்டம் புறப்படும் என்று சில இறைவாக்கினர் எதிர்பார்த்தனர். ஆனால் மீக்கா போன்ற இறைவாக்கினர் யூதேயாவின் சிற்றூராகிய பெத்லகெமிலிருந்து அவர் தோன்றுவார் என்று இறைவாக்குரைத்தனர் (மீக்கா. 5:2). எப்படியும் இயேசுவின் பெற்றோரின் சொந்த இடம் எதுவென்பது திட்டமாகத் தெரியாவிடினும் (கலிலேயா. பெத்லகெம் என்று மத்தேயுவும், லூக்காவும், தங்கள் இயேசுவின் பிறப்பு பற்றிய விவரிப்பில் வேறுபடுவதையும் இது பற்றி யோ. 7:41-43இல் வரும் விவாதத்தையும் நோக்குக) லூக்கா தரும் தகவல்படி இயேசு பெத்லகெமில் பிறந்தார். மேலும், தாவிதின் காலத்தில் பெத்லகெம் ஒரு பின்தங்கிய கிராமமாக இருந்ததுபோல் தம் காலத்தில் பின்தங்கியிருந்த கலிலேயாவின் கிராமப் பகுதிகளில், குறிப்பாக நாசரேத்தில், இயேசு தம் பணி மையத்தை அமைத்துக் கொண்டார். நாசரேத்தூரிலிருந்து நன்மை வருமோ என்று நாத்தானியேல் போன்றோர் கேள்வி எழுப்பினர் (யோ. 1:46). ஆனால் எருசலேமுக்கு இயேசு வெற்றிப்பவனி வந்தபோது இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரிலிருந்து வரும் இறைவாக்கினர் என்று மக்கள் மிக அழுத்தமாகக் கூறினர் (மத். 21:11). எருசலேம் நகரைப் பார்த்து இயேசு கண்ணீர்விட்டார் (லூக். 19:41). எதிர்பார்ப்புக்கு மாறாக, உயிர்த்தெழுந்த ஆண்டவரின் காட்சியும், உலகெங்கும் நற்செய்தி அறிவிக்கும் கட்டளையும் கலிலேயாவின் கிராமச் சூழலில் கொடுக்கப்பட்டன. இவ்வாறு தாவிதால் மறக்கப்பட்ட கிராமம் இயேசுவால் உயிர்பெற்றது. (ii) தாவிதால் பாதிக்கப் பட்டோருக்கு இயேசு தம் திருப்பணியில் முதலிடம் கொடுத்தார். வெற்றிப்பவனியைத் தொடர்ந்து அப்போது முடவரும், விழி இழந்தோரும் கோவிலில் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களைக் குணமாக்கினார் என்று மத். 21:14இல் படிக்கிறோம். இந்த நிகழ்ச்சிக்கு ஒரு முக்கிய வரலாற்றுப் பின்னணி உண்டு. தாவிது எபூசியர் நகரைப் பிடிக்க வந்தபோது அந்த ஊர் மக்கள் தங்கள் ஊரிலுள்ள முடவரும், விழி இழந்தோரும் அவர் படைகளைத் தடுத்து நிறுத்துவார்கள் என்று ஏளனமாகப் பேசினர். இதனால் சினமடைந்த தாவிது மிகவும் நுணுக்கமான முறையில் எருசலேமைப் பிடித்தபோது அங்குள்ள முடவரையும், விழி இழந்தோரையும் கொன்றொழிக்கும்படி ஆணையிட்டார். இந்தக் கொடிய நிகழ்ச்சி முன்னிட்டு முடவரும் விழி இழந்தோரும் வீட்டில் (கடவுளின் வீட்டிலும் கூட) வருவதில்லை என்பது மரபாயிற்று (2 சாமு. 5:6-8). சில விழியிழந்தோர் இயேசுவை தாவிதின் மகன் என்று உரக்க அழைப்பதையும் (மத். 9:27--30; 20:30-34; மார். 10:47-52; லூக். 18:35-43) இயேசு ஊனமுற்றோரை கோவிலுக்குள் வரவழைத்துக் குணமாக்கியதையும் இந்தப் பின்னணியில்தான் புரிந்து கொள்ளவேண்டும். மேலும், பொதுமக்கள், குழந்தைகள், ஊனமுற்றோர் தவிர இயேசுவை தாவிதின் மகன் என்று அழைத்தவர் ஒரு கானானியப் பெண் மணியாவார் (மத். 15:21-28). எபூசியர் உட்பட சில கானானிய மக்களினத்தவருக்கு தாவிது எதிரியாக விளங்கினதையும் நாம் நினைவு கூரலாம். (iii) தாவிது முதலில் நூற்றுக்கணக் கான வலுவுள்ள மனிதர்களாலும் (1 சாமு. 22:2;30.9) பின்னர் படைவீரர்களாலும் சூழப்பட்டார், பாதுகாக்கப்பட்டார். ஆனால் இயேசுவோ பலவீனரான ஏழை மக்கள் திரளால் (குழந்தை கள் உட்பட) சூழப்பட்டார் (21:16; லூக். 19:37). ஆக, நிருவாகச் சூழமைவிலும் இயேசு தாவிதின் பாணியை மாற்றியமைத்தார் எனலாம்.

தொடக்கத் திருச்சபையிலும் இயேசுவின் அணுகுமுறைகள் அளித்த பாதிப்பையும் புதிய போங்குகளையும் பார்க்கிறோம். மறைநூலை மேற்கோள் காட்டுவதில் நற்செய்தி நூலா சிரியர்களின் பாணியையே பவுல், பேதுரு முதலியோர் பெருமளவில் கடைப்பிடித்தார்கள் (எ.கா. உரோ. 4:3; 11:2; கலா. 4:30; 1 தீமோ. 5:18; 1 பேது. 2:6). ஆயினும் இயேசு மறை நூல்களை ஆய்ந்து தெரிந்து பயன்படுத்திய பாணியை இவர்களிடம் காண முடியவில்லை. பதிலாக அவர்கள் மறை வசனங்கள் இறைத்தூண்டலால் எழுதப்பட்டவை என்பதையும் அவை வாழ்வின் மாற்றத்திற்கும், கிறிஸ்தவ வாழ்வின் வளர்ச்சிக்கும் ஏற்றவை என்பதையும் அறிவுறுத்துவதிலே கருத்தாயிருந்தார்கள் (2 பேது. 1:16-21; 1 தீமோ.3:16,17). அதே நேரத்தில் இறையியல் சிந்தனை வளர்ச்சியில் மறைநூலைக் கவனமாகப் புரிந்து விளக்க வேண்டும் என்பதற்குரிய குறிப்புக்களை நாம் காண்கிறோம். எ.கா. முறையாக விளக்குகிறவர் இல்லாவிட்டால் சில இறைவாக்குரைகளைப் புரிந்துகொள்ள இயலாது என்பதை திருத். 8:26-39இல் வரும் எத்தியோப்பிய அண்ணகர்-பிலிப்பு உரையாடல் எடுத்துக்காட்டுகிறது. இதுபோல் பவுல் எழுதிய திருமுகங்களில் வரும் சில உண்மைகள் புரிந்துகொள்ளக் கடினமா யிருக்கின்றன என்பதையும் அவற்றை கல்லாதவர்களும், உறுதியற்றவர்களும் தவறாக விளக்குவதற்கு வாய்ப்புள்ளது என்பதையும் பேதுரு எச்சரிக்கையாக எழுதுகிறார் (2 பேது. 3:16). மேலும், தாவிதின் மகன் என்ற பெயரில் தாவிதின் தவறுகளை இயேசு திருத்தினார் என்பதைப் பற்றிய விழிப்புணர்வு தொடக்கச் சபையினரிடம் இருந்தது என்பதற்குச் சில அறிகுறிகளைக் காண முடிகிறது. எ.கா. அருட்பொழிவு செய்யப்பட்டவரை (மெசியா அல்லது கிறிஸ்து) தாவிது ஆண்டவர் என்று அழைத்ததை அவர்கள் எடுத்துக் காட்டினார்கள் (திருத். 2:25-28,34,35; திருப். 16:8-11; 110:1). தாவிது தூய ஆவியால் நிறைந்து இந்த ஆண்டவரின் வருகையை முன்னறிவித்தார் என்றும் அவர்கள் நம்பினார்கள் (திருத். 4:25-27; திருப். 2:1,2). உயிர்த்தெழுந்த ஆண்டவரை யூதக் குலத்தின் சிங்கமாகவும், தாவிதின் வேராகவும் கண்ட அதே நேரத்தில் அடிக்கப்பட்ட வண்ணமாக நின்ற ஆட்டுக் குட்டி யானவராகவும் எடுத்துக்காட்டினார்கள் (திருவெ. 5:5,6).

இயேசுவின் அடியவர்களான திருத்தூதுவர்கள் தங்கள் ஆண்டவரைப் போலவே யூதப் பின்னணியில் நின்றே பேசினார்கள். ஸ்தேவான் (திருத். 7:1-53), பேதுரு (10:34-43),பவுல் (13:16-41) ஆகியோரின் நீண்ட உரைகள் மூதாதையர் வரலாற்றிலிருந்து அல்லது இஸ்ரயேலர் எகிப்திலிருந்து விடுதலை பெற்ற வரலாற்றிலிருந்து தொடங்கி இயேசுவை கடவுள் உயிரோடெழுப்பி, மானிடருக்கு நீதிபதியாய் ஏற்படுத் தினார் என்று முடிகின்றன. இயேசுவின் வருகை, வாழ்வு, சாவு, உயிர்ப்பு ஆகியவை ப.ஏ. இன் எதிர்பார்ப்புக்கு ஏற்றவையே என்று அவர்கள் விளக்கினார்கள். காலம் நிறைவேறியபோது, இந்த இறுதி நாள்களில் அவரை ஆண்டவராக, மீட்பராக, கிறிஸ்துவாக ஏற்படுத்தினார் முதலிய தொடர்களைப் பயன்

படுத்தி இயேசுவை ப.ஏ. இன் நிறைவேறுதலாகவும் இறைவனின் புதுமையான செயல்பாடு என்றும் அவர்கள் விளக்கினார்கள்.

தொடக்கத் திருச்சபை தூய ஆவியரால் நடத்தப்பட்டு பல புதிய சூழல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. இது பல்வேறு விதங்களில் அவர்களின் இறையியல் காட்சியை விரிவுபடுத்தியது. உடன்படிக்கையையும், நீதிச்சட்டங்களையும் பெற்றபேறு யூதருக்குரியதாயினும், இயேசுவை ஏற்காத அவர்களின் விழுகையால் புற இனத்தவர் இறைமக்களாகும் வாய்ப்புக் கிடைத்ததைப் பவுல் உரோ. 9-11 (எபே. 2:14-16 பார்க்க) முதலிய பகுதிகளில் விளக்குகிறார். இயேசுவின் உவமைகள் பலவற்றில் உரியோர் அல்லது அழைக்கப்பட்டோர் வராத சூழலில் எதிர்பாராதோர் அழைக்கப்பட்டு இறையாட்சியில் ஏற்கப்படும் உண்மை வலியுறுத்தப்படுகிறது (மத். 21:33-41). பவுலின் விளக்கமும் இதற்கு ஒத்திருக்கிறது. எப்படியும் இத்தகைய விளக்கமும், தேவைக்கேற்றத் திருத்தமுறைகளும் கிறிஸ்தவர்களை யூத அமைப்பிலிருந்து தூரத்திற்குக் கொண்டு சென்றன.

புற இனத்தவர் கிறிஸ்தவர்களானபோது அவர்கள் யூதப் பழக்கவழக்கங்களுக்கு முற்றிலும் உட்பட வேண்டுமா என்ற கேள்வி எழுந்தது. தேவையில்லை என்பதே எருசலேம் மன்றத்தின் முடிவு. இந்த முடிவு இயேசுவின் அடியவருக்கும் தூய ஆவியருக்கும் ஒன்றுபோல் நலமாய்ப்பட்டது (திருத். 15:28) நம் கவனத்தை ஈர்க்கின்றது. பொதுமை உணர்வுடன் எழும் ஒரு கூட்டுறவின் முடிவில் தூய ஆவியர் இணைந்திருப்பது இறையியலின் புதிய பயணத்திற்கு ஒரு வழிமுறையை முன் வைக்கிறது. மேலும், இறைவனைப் பற்றியக் காட்சியில் யூதர்களின் சிந்தனைகளுக்கு அணி உண்மைகளாக கிரேக்க எண்ணங்களும், கருத்து வடிவங்களும் ஏற்கப்பட்டன. பவுல் அத்தேனே நகரில் உரையாற்றியபோது கிரேக்கப் புலவர்களை மேற்கோள் காட்டியதையும்(17:28,29), யோவான் நற்செய்தியாளர் வார்த்தை என்னும் கருத்துவடிவம் வழியாக இயேசுவின் முன்னிருப்பதை விளக்குவதையும் இங்கு எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம். உரோமைப் பேரரசின் ஆதிக்கச் சூழலில் இறைவனை எல்லாம் வல்லவராகவும், அடிக்கப்பட்டவராகவும் எதிர்த்துருவங்களில், புனைவுகள் வாயிலாக எடுத்துக் காட்டியதற்கு திருவெளிப்பாடு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது.

தொடக்கத் திருச்சபையாரின் அணுகுமுறையில் வேறொரு உண்மையையும் கவனிக்கவேண்டும். அவர்கள் யூதக் கட்டுக்கோப்புகளினின்று விலகி ஒரு தாராளப் போங்குக்கு ஒருபுறம் இடமளித்தாலும் மறுபுறம் சில தீவிரப் போங்குகளையும், ஒரு பக்க அழுத்தங்களையும் திரிபுக் கொள்கைகள் என்று தீர்த்தார்கள். எ.கா. புறவினத்தவரிலிருந்து வந்த கிறிஸ்தவர்களை யூதப் பழக்கவழக்கங்களுக்கும், சில கருத்துக்களுக்கும் கட்டாயப்படுத்துதல் (கலா. 3:1-5; 6.15). உடலெடுத்து வந்தவராகவும் கிறிஸ்துவாகவும் இயேசுவை ஏற்காத எதிர்க்கிறிஸ்து (1 யோ. 2:22,23; 4:1-3). சில நூதனமானப் போதனைகளினால் மக்களைக் கவருகிற குழுவினர் (திருவெ. 2:6,9,14,20). மொத்தத்தில் திறந்த மனத்தோடும் அதே நேரத்தில் கவனமாகவும் இருந்த ஓர் இறையியல் அணுகுமுறையை ப.ஏ. இல் பார்க்கிறோம். இன்றைய இறையியலில் இருக்கும் புதுப் போங்குகளுக்கு இந்த அணுகுமுறை ஆதரவு தருகிறது.

3. கடவுள் எத்தகையவர்?

படைப்பாளர், விடுதலை வழங்குபவர், நீதியையும் நியாயத்தையும் விரும்புகிறவர், இரக்கமும் அன்புமுள்ளவர் என்று கடவுளைப்பற்றி ப.ஏ. இல் காணப்படும் கருத்துக்கள் ப.ஏ. இலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடருகின்றன. இவை தவிர புதிய அழுத்தங்களும், புதிய பண்புகளும் ப.ஏ. இல் காணப்படுகின்றன.

மனிதரை ஆணும் பெண்ணுமாகப் படைத்தவர் கடவுள். மணமுறிவுக்கு எதிரான தம் வாதத்தில் இயேசு இதனைச் சுட்டிக்காட்டினார் (மார். 16:6; மத். 19:4). வரலாற்றின் துவக்கமே கடவுளின் படைப்பு என்பது மார். 13:19 இல் காணப்படும் இயேசுவின் கூற்றில் தொக்கி நிற்கிறது. விண்ணையும் மண்ணையும் படைத்தவர் கடவுள் என்ற உண்மை பவுலின் உரைகளில் திரும்பத்திரும்பக் கூறப்படுகிறது (திருத். 14:15; 17:24,29). கடவுளின் பண்புகள் படைப்புகளில் தெளிவாய்க் காணப்பட்டாலும் அவற்றை வணங்கக் கூடாது என்று பவுல் எழுகிறார் (உரோ. 1:20,25) .எல்லாவற்றையும் கடவுளே படைத்தபடியால் அவர் படைத்த எதையும் தீட்டாக எண்ணக்கூடாது (11:16; 1 கொரி. 8:6; 11:12; எபே. 3:9;1 தீமோ. 4:3). வார்த்தையால் கடவுள் உலகைப் படைத்தார் (எபி.11:3). இந்த வார்த்தை படைப்புக்கு முன்னேயே இறைவனுடன் இருந்த கிறிஸ்துவையும் குறித்தது (கொலோ. 1:16; யோ. 1:2,3; 17:5,24; எபே. 1:4; 1 பேது. 1:20). மானிட விழுகை படைப்பனைத்தையும் பாதித்ததால் முழுப்படைப்புமே விடுதலைக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறது (உரோ. 8:19 மு). மீட்கப்பட்டோர், கடவுளே, எங்கள் ஆண்டவரே, மாட்சி, மாண்பு, ஆற்றல், அனைத்தையும் பெற நீரே தகுதி வாய்ந்தவர், நீரே யாவற்றையும் படைத்தீர், உம் திருவுளத்தால் அவை படைக்கப்பட்டன என்று பாடினார்கள் (திருவெ. 4:11).

படைத்தவர் பராமரிக்கிறவராகவும் இருக்கிறார். பறவைகளுக்கும் உணவளிக்கிற அவரின் திருவுள அறிவின்றி ஒரு சிட்டுக்குருவி கூடக் கீழே விழாது (மத். 6:26மு; 10:29). நல்லோர்-தீயோர் என்று பாராமல் கடவுள் இயற்கையின் வளங்களை எல்லோருக்கும் கொடுக்கிறார் (5:45; திருத். 14:17; 17:25). நன்மையான அருட் கொடைகள் அனைத்தும் அவரிடமிருந்தே வருகின்றன (யாக். 1:17). தம் பிள்ளைகள் மேல் அக்கறை உடைய தந்தையாக கடவுள் இருப்பதால் எல்லாவற்றையும் அவர்களின் நன்மைக்கென்று பயன்படுத்துவார் (உரோ. 8:28). நம்முடைய தலைமுடிகள் கூட அவரது எண்ணிக்கையில் அடங்குகின்றன (மத். 10:30).

இயேசு கடவுளை விண்ணகத் தந்தை என்று அழைத்ததுடன் தம் அடியாரும் அவ்வாறு அழைக்கக் கற்றுக் கொடுத்தார் (6:9,32; 11:2மு). தொடக்கத் திருச்சபையார் கடவுளை இயேசு கிறிஸ்துவின் தந்தை, மாட்சிமையின் தந்தை (எபே. 1:17), ஆவிகளின் தந்தை (எபி. 12:9), ஒளிச்சுடர்களின் தந்தை (யாக். 1:17), விண்ணிலும் மண்ணிலுமுள்ள முழுக்குடும்பத்திற்கும் காரணத் தந்தை (எபே. 3:14,15) என்றெல்லாம் அழைத்தனர். விண்ணகத் தந்தைக்கும் அவரது அன்புநிறை மகனுக்கு முரிய நெருக்கமானத் தொடர்பை யோவான் நற்செய்தி நூல் விளக்குகின்றது. எ.கா. நானும் தந்தையும் ஒன்றே (10:30). இத் தொடர்பின் தன்மையை இயேசுவின் இறையியல் சிறப்பை நோக்கும்போது விளக்குவோம். தம் தந்தையே தம் அடியாரின் தந்தை என்று இயேசு கூறியது இவண் குறிப்பிடத்தக்கது (20:17). இறைவனைத் தங்கள் தந்தை என்று அழைக்கும் பேற்றினை யூதர் பெற்றிருந்தனர். ஆனால் இயேசுவில் சிறப்பாக வெளிப்பட்ட அருளினால் அவரை ஏற்ற அனைவரும் (புற இனத்தவர் உட்பட) கடவுளை அப்பா, தந்தையே என்றழைக்கும் மகவுரிமையைப் பெற்றிருப்பதாக பவுல் விளக்குகிறார் (உரோ. 8:15, கலா. 4:6).

நெருக்கமான உறவில் இறைவன் அன்புள்ள தந்தையாக இருப்பினும் வானத்தை அவர் அரியணையாகவும், பூமியைக் காலடியாகவும் கொண்டு ஆண்டவராக உயர்ந்து விளங்குகிறார் (திருத். 7:49; மத்.4:7,10; 5:34; 11:25; 23:22; லூக்.4:8,12; திருவெ. 4:2,5f; 20:11; 21:5). உலகத் தோட்டத்திற்கு அரசரும் உடைமையானரும் இறைவனே என்பதை முழுக்கு முனிவர் யோவானும் இயேசுவும் தம் உரைகளில் எடுத்துக்காட்டினர். இது மானிடர் முன் சிறந்த பொறுப்பை வைக்கிறது. அவர் கனிதேடி வரும்போது கொடுக்காவிட்டால் தீர்ப்புக்கும் தண்டனைக்கும் உட்படுவோம். இது இப்போதும் நிகழுகிறது. இறுதியிலும் நிகழும் (மத்.3:7மு; 7:1,2; 11:22,24; 12:36-37; லூக். 3:7மு). கடவுள் இரக்கமுடையவராயிருப்பினும் (உரோ. 11:22) அவருடைய நீதித்தீர்ப்பினின்று எவரும் தப்ப முடியாது (2:16; 3:6; 14:10). அனைத்தாற்றலும் உடைய இறைவரே வரலாற்றில் குறுக்கிட்டு, தீர்ப்பிட்டு, அதைத் திருத்தி அமைக்கிறார் (திருவெ. 4:8; 11:17; 15:3; 16:7,14; 19:16,15).

ஆவியாக (யோ. 4:24), ஆதியும் அந்தமுமாக (திருவெ. 22:13), உன்னதமானவராக (திருத். 16:17), ஒளியாக (1 யோ. 1:5), அன்பாக(4:8) இருக்கும் இறைவர் மாட்சி மிகுந்தவராக விளங்குகிறார் (2 பேது. 1:17). அவர் தம் மகனை மாட்சிமைப்படுத்துவது எதுவும் அவரையே மாட்சிமைப்படுத்தும் (யோ. 13:31மு). நெருக்கடியான கட்டங்களில் கடவுளின் மாட்சிமையைக் கண்ட தொடக்கத் திருச்சபை (திருத். 7:55) அவருக்கே அனைத்து மாட்சிமையையும் உரித்தாக்கியது (11:18; 21:20). ஆட்சியும், ஆற்றலும், மாட்சியும் அவருடையவை. அவர் தம் மாட்சிமையை இயேசுவின் வாயிலாக எல்லா மக்களுக்கும் கொடுக்க ஆவலுள்ளவராயிருக்கிறார்.

கடவுளின் அறிவும் ஞானமும் மிகவும் ஆழமானது (1 கொரி. 2:7; உரோ. 11:33). எனவே முயன்று, மன்றாடி, அவர் திருவுளத்தை அறிய வேண்டும் (மத். 6:10; உரோ. 15:32). அவர் அதிதூயவராக இருப்பதால் அஞ்சத்தக்கவர்(யோ. 17:11; 1 யோ. 2:20). இயேசுவில் அவருடைய நீதி வெளிப்பட்டுள்ளது (உரோ. 1:17). பொதுவாக பக்கச் சார்பின்றி அவர் அனைவருக்கும் ஒன்றுபோல் தீர்ப்பிடுவார் (1 பேது. 1:17, எபி. 6:10 கடவுள் ஒடுக்கப்பட்டவர்மேல் பக்கச் சார்புடையவர் என்பதை இதனுடன் குழப்பக் கூடாது). நீதி மிகும் அவர் அநீதி மேல் சினங்கொள்கிறார் (உரோ. 1:18). இறைச் சினத்திலிருந்து விடுபடுவதே மீட்பு (5:9; 1 தெச. 5:19). அவர் தம் அன்பாலும் அருளாலும் கிறிஸ்துவைக் கொண்டு மானிடரை மீட்கிறார். தம்முடைய வாழ்விலேயே இந்த அருளை உணர்ந்த பவுல் எவரையும் அதற்கு அப்பாற்பட்டவராகக் காணவில்லை (கலா. 1:15; உரோ. 3:24; 5:15; தீத்.2:11). ஏனெனில் இரக்கமுடையவராக இருக்கும் இறைவர் எவரையும் புறக்கணிக்காமல் ஏற்றுக் கொள்கிறார் (உரோ. 9:15-16,18; 11:30-32).

மூதாதையரின் கடவுளாக (மத். 22:32; திருத். 7:32), அவர்கள் வாழ்வில் மிகவும் உண்மையுள்ளவராக இருந்த இறைவர் (எபி. 11:11) பாடுபடுபவர்களைத் தாங்குவதிலும், பாவங்களை மன்னிக்கவும் உண்மை நிறைந்தவராக உள்ளார் (1 பேது. 4:19; 1 யோ. 4:19). அவரது ஆம் என்பது ஐயத்திற்கிடமற்றது. அதே நேரத்தில் அவருடைய அன்பின் உடன்பாட்டில் உட்படுகிறவர்களும் உண்மையுள்ளவர்களாக இருக்க எதிர்பார்க்கப் படுகிறார்கள். மொத்தத்தில், அளவற்று உயர்ந்திருப்பவர் - அன்புத் தந்தையாக உறவு கொள்பவர், அநீதியில் சினங் கொள்பவர் - அநீதரில் இரக்கம் காட்டுவர், உயர்ந்திருப்பவர் - உடனிருப்பவர் முதலிய இரு துருவ நிலையில் பு.ஏ. கடவுளை வடிக்கிறது என்று கண்டு கொள்ள முடிகிறது.

4. யார் இந்த இயேசு?

இயேசுவின் சொந்தப் பெயர் அவர் தம் சமய மரபிலிருந்து (எபிரேயத்தில் யோசுவா = விடுவிப்பவர்) வருவது. அவர் பிறக்குமுன்பே இயேசு என்ற பெயர் சூட்டும்படி இறைத்தூதுவரால் அவர் பெற்றோருக்குக் கூறப்பட்டது (மத். 1:21; லூக். 1:31). ஏனெனில் அவர் மக்களின் பாவங்களை நீக்கி அவர்களை விடுவிப்பார் என்பது மத்தேயுவின் குறிப்பில் விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த விளக்கம் ஒருபுறமிருக்க, இயேசு ஒரு மனிதர், முழுமையான மனிதர் என்றும், பு.ஏ. வடிக்கிறது. துவக்க மனிதரான ஆதாம் தொடர்பில் பார்க்கும் போது இயேசுவை இரண்டாம் ஆதாமாக அல்லது புதிய மானிடத்தின் முதல் நபராகப் பார்க்கலாம் என்று பவுல் கூறுகிறார் (உரோ. 5:12-21; 1 கொரி. 15:22). இவ்வாறு பாவங்களை அகற்றி மீட்பவர், மானிடருள் மாணிக்கம் ஆகிய இரு கருத்துக்களும் பல்வேறு பட்டப் பெயர்கள் மூலமாக இயேசுவின் இரு தன்மைகளை, இரு முக்கியப் பணி நோக்குகளை, பு.ஏ. எடுத்துக் கூறுவதற்கு அடிப்படைகளாக உள்ளன.

வருகிறவர் நீர் தானா, இன்னொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா? (லூக். 7:18,19). இது முழுக்கு முனிவர் யோவான் இயேசுவிடம் கேட்டனுப்பிய கேள்வி. தம் விடுதலைப் பணிகளைப் பற்றிக் கண்டவைகளையும் கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவிக்கும்படி கூறிய இயேசு என்னை முன்னிட்டு இடறி விழாதோர் பேறு பெற்றோர் (7:23) என்று கூறினார். தொடர்ந்து யோவான் யார் என்பதற்கு பல ஐயுறு கேள்விகள் எழுப்பப்பட்டு அவர் இறைவாக்கினரிலும் உயர்ந்தவர் என்ற விடை கொடுக்கப்படுகிறது. இதிலிருந்து என்ன அறிகிறோம்? யூதரின் எதிர்பார்ப்பு ஒளியில் இயேசு யார், அவருக்கும் முழுக்குநர் யோவானுக்குமுரிய தொடர்பும் வேறுபாடும் எது என்னும் கேள்விகள் துவக்கத்திலேயே எழுப்பப்பட்டன என்று அறிகிறோம்.

மனித மகனைப் பற்றி மக்கள் என்ன சொல்லுகிறார்கள்? இயேசு இக்கேள்வியை ஒருமுறை தம் சீடரிடம் கேட்டார் (மத். 16:13). சிலர் முழுக்கினர் யோவான் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் எரேமியா அல்லது இறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்று பதில் வந்தது. நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்? என்று இயேசு தொடர்ந்து கேட்டார். நீர் வாழுகின்ற கடவுளின் மைந்தராகிய கிறிஸ்து என்று பேதுரு கூறினார் (16:16). இது ஊனும், உதிரமும் வெளிப்படுத்தியதன்று. விண்ணகத் தந்தையே வெளிப்படுத்தினார் என்று இயேசு கூறினார்; தாம் கிறிஸ்து என்று எவருக்கும் சொல்லக் கூடாது என்றும் இயேசு உறுதியாகக் கட்டளையிட்டார் (16:20). அதிலிருந்து தாம் படப் போகும் துன்பங்களைப் பற்றி இயேசு முன்னறிவித்தார். இவை கிறிஸ்துவாகிய அவருக்கு நேரக்கூடாது என்பது பேதுருவின் கோரிக்கை. உடனே இயேசு பேதுருவை தீயோன் (சாத்தான்) என்று அழைத்து பேதுரு தமக்கு இடறுதலை ஏற்படுத்துவதாகவும் கடவுள் வழி நின்று சிந்தியாமல் மனிதர் வழி நின்று சிந்திப்பதாகவும் கூறி இயேசு அவரைக் கடிந்தார் (6:23).

இந்த உரையாடல்கள் எதைச் சுட்டுகின்றன? இயேசு யார் என்பது துவக்கத்திலேயே ஒரு பிரச்சனைக்குரிய கேள்வியாகவே இருந்தது. தாம் யூதரால் எதிர்பார்க்கப்பட்ட மெசியா (கிறிஸ்து) என்ற தன்னுணர்வு இயேசுவுக்கு இருந்தது என்று வைத்துக் கொண்டால் கூட அது மக்களின் பொதுவான எதிர் பார்ப்புக்கு மாறான ஒன்றாகவே இயேசுவின் மனத்தில்

இருந்தது என்பது தெளிவாகிறது. மேலும் தொடர்ந்து இயேசு யார் என்பது பல்வேறு பட்டப்பெயர்களால் அறிக்கை யாக எடுத்துரைக்கப்பட்டது. இப்பெயர்களின் கருத்தில் ஒரு திட்ட வட்டமான படிவளர்ச்சி இருந்தது என்றோ முழுமையான ஒருங்கிணைப்பு இருந்து என்றோ கூறுவதற்கில்லை. எ.கா. இயேசுவின் வெற்றிப் பவனியின்போது இவர் யார்? என்றக் கேள்விக்கு இவர் கலிலேயா நாட்டு நாசரேத்தூர் இயேசு என்னும் இறைவாக்கினர் என்ற பதிலே கொடுக்கப்பட்டது (மத். 21:10,11). என் கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர்? என்ற கேள்விக்குப்பின் இயேசு உயிர்விட்டார். தொடர்ந்து இயற்கையில் நடந்த அதிசய நிகழ்ச்சிகளைக் கண்டு அஞ்சிய நூற்றுவோர்த் தலைவரும் அவரோடிருந்தவர்களும் இவர் உண்மையிலேயே இறைமகன் என்று அறிக்கையிட்டனர் (27:54). எனினும் தொடர்ந்து இயேசுவின் கல்லறைக்கு மணப்பொருள்களுடன் சென்ற பெண்கள் ஒரு நல்ல மனிதருக்குரிய மரியாதையைச் செய்யச் சென்றதாகத்தான் தெரிகிறது. தாம் இறந்த பின் உயிரோ டெழும்பப் போவதாக இயேசு முன்பு சொன்னதையும் அவரது சீடர்கள் மறந்துவிட்டார்கள். தொடர்ந்து இயேசுவைப்பற்றிய புதியக் காட்சிகள், கருத்துக்கள் கிடைக்கின்றன. இவற்றை எழுதுவதில் பு.ஏ. எழுத்தாளர்களிடையே வெவ்வேறு பார்வைகள், அணுகுமுறைகள் இருந்தன. எ.கா. பிந்திய நற்செய்தி எழுத்தாளரான யோவான் என்றென்றும் இறைவார்த்தையாக இருந்து மனித உடல் எடுத்தவர் கிறிஸ்து என்று தொடங்கி, அவர் கடவுளின் ஒரே பேறான மகன் (1:15-18), உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற இறையாட்டுக்குட்டி (1:29), யூத சமய ஆசிரியர் (ரபி.1:38), இறைமகன், இஸ்ரயேலரின் அரசன் (1:49), மனிதமகன் (1:51), இறைவாக்கினர் (4:19), உலக மீட்பர் (4:42) என்று அடுக்கிக் கொண்டே போகிறார். இப்படி ஒவ்வொரு பு.ஏ. எழுத்தாளரும் இயேசுவைப் பல்வேறு விதமாக, தத்தம் சூழல்களுக்கேற்ப வடிக்கிறார்கள் என்பதை ஆய்ந்து அவரின் தனிப்பட்ட அணுகுமுறையைக் காணப் பல முயற்சிகள் நடக்கின்றன. ஆனால், இயேசுவைப் பற்றிய புரிந்து கொள்ளுதலில் இருந்த சில அடிப்படை உண்மைகளை மட்டும் சுட்டிக்காட்டவே இவண் இடமுண்டு.

முதலாவது, இயேசு தம்மை அடிக்கடி மனித மகன் என்றே அழைத்தார் (எ.கா.24:30; மார்.8:38; 13:26,14.62; லூக். 17:24; யோ.1:51). ப.ஏ. இல் மனிதமகன் என்பது முதலாவது திருப்பாடல்களில் வருகிறது. அங்கு இக்கருத்து ஒரு சாதாரண மனிதரைக் குறிக்கும் சொல்லாக உள்ளது. (எ.கா.திருப் 8:4) அடுத்தாற்போல் மனிதமகன் கருத்து எசேக்கியேல் நூலில் மட்டுமே அதிகமாக வருகின்றது (90க்கும் அதிகமான முறை, எ.கா.2:1,3,6,8). அங்கு இதன் பொருள் இறைவாக்கினராகிய ஓர் ஆள் என்பதே. ஒருவேளை ஒரு நல்ல மனிதராக எசேக்கி யேலுக்கிருந்த சிறப்பு தம் உடன் மக்களுடன் தாமும் ஒருவராக இருந்து அவர்களின் துன்பத்தில் (சிறையிருப்பு) பங்கேற்றதாகும். அப்போதுதான் அவர் இறைக்காட்சி கண்டார் (1:1). இது ஒரு துன்புறும் மனிதமகன் கருத்துடையதாகும். இவ்வாறு துன்புறும் இனறவனோடும் அவர் தம் மக்களோடும் தங்களை ஒன்றுபடுத்தியது ஏனைய உண்மையான இறைவாக்கினருக்கும் பொருந்தும். மூன்றாவதாக ப.ஏ.இல் வரும் மனிதமகன் கருத்து தானியேல் நூலில் உள்ளது. இது ஓர் ஆற்றல்மிகும் மனிதமகனைக் காட்டுகிறது. பொதுவாக, தானியேல் நூலில் வரும் (7:13மு) மனிதமகன்தான் இயேசுவின் கூற்றுக்குப் பின்னணி என்ற கருத்து நிலவி வருகிறது. இதனால் வலியுறுத்தப்படும் உண்மை வானிலிருந்து வந்த அவருக்கு இறைமை, ஆற்றல், அனைத்துலக அதிகாரம் முதலிய தன்மைகள் இருந்தன என்பதாகும். ஆனால் மார்க்கு நற் செய்தி நூலிலும் ஏனைய நூல்களிலும் மனிதமகன் குறிக்கப் படுகின்ற பகுதிகளை ஆழ்ந்து ஆய்ந்தவர்கள் புதியதோர் உண்மையை அண்மைக் காலங்களில் வெளியிட்டுள்ளார்கள். இதன்படி மனிதமகன் பாடுபட்ட மக்களின் பிரதிநிதியாக இருந்தார். யூதமக்கள் கிரேக்க ஆட்சியாளர்களின் பிடியிலிருந்து துன்புற்றபோது தானியேல் நூலில் எழுந்தபடியால் தங்களின் பிரதிநிதியாக மனிதமகனைக் கண்டது பொருத்தமானதே. இயேசு தம் காலத்தைய சமுதாய, பொருளாதார, அரசியல் பிடிப்புகளின் கீழ் இருந்து பாதிக்கப்பட்டவர்களும் தம்மை ஒன்றுபடுத்தி அவர்களின் பிரதிநிதியாக தம்மைக் காட்டிக்கொண்டார் என்பதும் பொருத்தமானதே. இதனைச் சில எடுத்துக்காட்டுகள் வழியே தெளிவுப்படுத்தலாம்.

திமிர்வாதக்காரர் ஒருவரை தாம் குணமாக்கிய கட்டத்தில் இயேசு பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் மனிதமகனுக்கு உண்டு என்றார் (மார். 2:10). இதைத் தொடர்ந்து யூதரின் ஒய்வுநாளில் தம் சீடர் பயிர்வழியே சென்ற போது கதிர்களைக் கொய்து நமுட்டி உண்டதைப் பற்றிப் பரிசேயர் பராது சொன்னபோது இயேசு சீடர் செய்ததை நியாயப்படுத்தி மனிதமகன் ஒய்வுநாளுக்கு ஆண்டவர் என்று அறிவித்தார் (2:27). திமிர்வாதக்காரர் அன்றிருந்த சமூகத்தின் அமைப்பு முறையாலும் சமய எண்ணங்களாலும் முடமாகி, மனம் உடைந்தவராயிருந்தார். கடவுள் தம் மக்களின் பாவங் களை மன்னிக்கும்போது அவர்களின் காயங்களால் தாமும் காயப்படுபவராக இருந்து (எரே.8:21) மன்னிக்கிறார். இந்த ஆழ்ந்த உண்மையை உணர்ந்த இயேசு கடவுளின் மகனாக தாம் இருந்ததின் வெளிப்பாடாக, மனித மகனாக, பாதிக்கப் படுகிறவர்களுடன் தாமும் பாதிக்கப்படுகிறவராக இருந்து பாவங்களை மன்னிக்கிறார். அதாவது துன்புறுத் தப்பட்டவர்களுக்கே, அல்லது ஒடுக்கப்பட்டவர்களுக்கே மன்னிக்கும் அதிகாரமும் உண்டு. இதுபோல் ஒய்வுநாள் விடுதலையின் நாள் என்ற இணைச்சட்ட மரபைப் பற்றிக்கொண்டு (5:14மு), யூத மரபில் ஒய்வுநாள் விடுதலைக்கு முட்டுக்கட்டை போடும் நிலைக்கு வந்துவிட்டதை உணர்ந்து ஒய்வுநாள் மேல் தமக்கிருந்த அதிகாரத்தை அவர் உறுதிப்படுத்தினார். மரபுப் பிடிப்புடையோரிடமிருந்து எதிர்ப்புகள் வந்துபோதும் அவர் ஒய்வுநாளில் பலரைக் குணமாக்கியது (எ.கா.மார்.3:1-5; லூக்.13:10-17) இதன் வெளிப்பாடேயாகும்.

கோதுமை மணி நிலத்தில் விழுந்து இறந்தால் தான் பலனுண்டு என்பதை இறைமாட்சியோடு இயேசு பொருத்திப் பேசியதை யோ.12 இல் படிக்கிறோம். இச்சூழலில், நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடம் இழுத்துக் கொள்வேன் என்று இயேசு கூறினார் (12:32). மனிதமகன் பாதிக்கப்படுவோரின் கூட்டுப் பிரதிநிதி என்பதை ஒத்துக்கொண்டோமானால், இங்கு இழுத்துக் கொள்ளப்படுபவர்களெல்லாம் நீதியின்மேல் பசிதாகங் கொண்ட அப்பாவி மக்கள் என்று எடுத்துக்கொள்வது பொருத்த மானதே. இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது அவருடைய சீடர்கள் சிதறிவிட்டாலும் உயிர்த்தெழுந்த பின்னர் தொடர்ந்து இறைமகனாக அவர் பாடுபட்டார் என்ற உண்மை பற்றிய உணர்ச்சிதான் அவர்களை ஒன்று திரட்டியது. சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்? என்ற கேள்விதான் அவரை ஒரு புதுமனிதராக மாற்றியது. புற இனத்தவருக்கும் சிலுவை பற்றிய (சிக்கல் நிறைந்த) நற்செய்தியை அறிவித்து அவர்களை ஒரு புதுச் சமூகமாகக் கூட்டிச்சேர்க்கவும் காரணமாயிருந்தது.

உயிர்த்தெழுந்த பின்னரும் மனித மகன் பாடுபடுவோரின் பிரதிநிதியாக இருந்து செயல்படுகிறார் என்பது மிகவும் கருதத்தக்கச் செய்தி ஆகும். கல்லெறியுண்டு சாகும் தறுவாயில் ஸ்தேவான் அதோ வான்னங்கள் திறந்திருக்கிறதையும் மனிதமகன் கடவுளின் வலப்பக்கத்தில் நிற்கிறதையும் பார்க்கிறேன் (திருத்.7:56) என்று கூறியது அக்காலத்தில் துன்புறுத்தப்பட்டக் கிறிஸ்தவர்களின் சார்பில் எழுந்த குரலாகும். இந்தச் சூழலில்தான் மனிதமகன் மாட்சியோடு வருவது பற்றி பு.ஏ. கூறும் பகுதிகளை நாம் புரிந்து கொள்ளவேண்டும். எ.கா. மத். 25:31-46இல் வரும் வெள்ளாடு-செம்மறியாடு பிரிவில் இந்தச் சிறியர்களுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் (25:40) என்று வரும் கூற்று இந்த உண்மையை மேலும் தெளிவுபடுத்துகிறது. துன்பச்சூழலில் உடையும், உணவும், ஏற்பும், பராமரிப்பும் இல்லாமல் திரிந்த தம் சீடர் குழாமை என் சகோதரர் என்று இயேசு அழைக்கிறார். இதுபோல் துன்பச் சூழலில் வைக்கப்பட்டு உரோமைப் பேரரசால் இன்னல்கள் பலவற்றிற்கு ஆட்பட்டிருந்த சிறுபான்மைக் கிறிஸ்தவர்களிடையே மாட்சிமை பொருந்திய மனிதமகனாக, இருபுறமும் கருக்குள்ள வாளைப்போன்று தீர்ப்பிடுகிற வார்த்தையைக் கொண்டவரைப் பற்றி யோவான் கண்ட காட்சிகளை திருவெளிப்பாடு நூல் (எ.கா.1:9-18) முன் வைக்கின்றது.

இரண்டாவதாக, இயேசுவே கிறிஸ்து, ஆண்டவர் மீட்பர் என்பது தொடக்கச் சபையின் அறிக்கைகளில் வரும் முக்கியப் பட்டப்பெயர்கள் ஆகும். இன்று ஆண்டவராகிய கிறிஸ்து என்னும் மீட்பர் பிறந்திருக்கிறார் என்று விண்தூதுவர் கூறிய செய்தியில் இம்மூன்று பெயர்களும் இடம்பெற்றுள்ளன (லூக். 2.11) இயேசு யார் என்றக் கேள்விக்கு இப்பெயர்கள் வாயிலாக அக்காலக் கிறிஸ்தவர்கள் நம்பிக்கை சார்ந்த தங்கள் விடையைக் கொடுத்தார்கள். இந்தப் பெயர்கள் ஒவ்வொன்றிலும் தனியொரு சூழலும் அழுத்தமும் தொக்கி நிற்கின்றது. இவைகளை அக்காலத்தில் இருந்த வெறும் சமயச் சூழல் மட்டும் பின்னணியமாகக் கொண்டு புரிந்து கொள்ளாமல் அக்கால சமூக, அரசியல் பின்னணியங்களையும் மனதில் கொள்ளவேண்டும்.

யூதர் தங்கள் துன்பக்கட்டங்களில் தாவிதைப் போன்று வலிமையுடைய, தாவிதின் வழியில் வருகின்ற மெசியாவை எதிர்பார்த்தனர். அவர்களின் எதிர்பார்ப்புப்படி மெசியா (=அருட்பொழிவு பெற்றவர், கிரேக்க மொழியில் கிறிஸ்து) தங்கள் எதிரிகளை முறியடித்து தங்களைத் தங்கள் சொந்த நாட்டுக்கும் இறைவனண்டையிலும் சேர்த்து வைப்பார். அவரைச் சுற்றி ஆதாம், சேத், மெத்துசலா, ஆபிரகாம், யாக்கோபு, மோசே, தாவிது ஆகிய ஏழு பேர்கொண்ட ஆலோசனை சபை அமைந்திருக்கும் என்று யூத இரபிமார் இலக்கியங்கள் விவரிக்கின்றன.

இயேசுவின் காலத்தில் மெசியாவைப் பற்றிய யூதரின் எதிர்பார்ப்பு கூர்மையடைந்திருந்தது. அதே நேரத்தில் மெசியாவின் தன்மைகளைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் மலிந்திருந்தன. சிலர் தங்களை மெசியா என்று உரிமை கொண்டாடினார். ஒருவேளை இதனால்தான் தம்மை கிறிஸ்து என்று சீடர் சொன்னவுடன் அதை யாருக்கும் சொல்லாமலிருக்கும்படி இயேசு கட்டளையிட்டார் (மத்.16:20; 17:9; மார்.9:7-9; யோ.6:15). ஆயினும் அவரின் சாவு நெருங்கி வந்தபோது, குறிப்பாக அவரது நீதிவிசாரணையின்போது இயேசு தாம் மெசியா என்று வெளிப்படையாக ஒத்துக் கொண்டார் (மத்.26:63மு; மார்.14:61மு; லூக். 22:69மு; 23:2மு). ஆயினும் தாம் மண்ணகத்தின் மதிப்பீடுகள் சார்ந்த மெசியா அல்லர் என்று இயேசு கூறியதாக யோவான் (18:36) குறிப்பிடுகிறார். நாம் ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று, இயேசு தாமே மெசியா என்ற தன்னுணர்வுடையவராயிருந்தால் மெசியா பற்றிய பொதுமக்களின் எதிர்பார்ப்புக்கு மாறான ஒரு கருத்தை வைத்திருந்தார் என்று துணிந்து கூறலாம். மெசியாவுக்கு இன்னொரு பெயர் தாவிதின் மகன். இவ்வாறு இயேசு அழைக்கப்பட்டக் கட்டங்களில் அவர் தாவிது செய்த சில தவறுகளைத் திருத்தி அமைப்பவராகச் செயல்பட்டார் என்பதை ஏற்கெனவே கண்டோம். மேலும் மத் 3:17; 12:17-21 முதலிய பகுதிகளை இத்துடன் தொடர்புபடுத்தி நோக்கினால் இயேசு தம்மை அரசார்ந்த மெசியாவுடன் ஒன்றுபடுத்தாமல் பாடுபடும் பணியாளருடன் ஒன்றுபடுத்திக் கொண்டார் எனலாம். இவன் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவானால் தன்னைத்தானே விடுவித்துக்கொள்ளட்டும் என்று இயேசுவின் சிலுவையைச் சுற்றி நின்றவர்கள் கூறினார்கள் (லூக்.23:35). அப்படியானால் இயேசு சிலுவையில் பாடுபட்டு அகால மரணமடைந்தது அவர் எதிர்பார்க்கப்பட்ட கிறிஸ்து அல்லர் என்பதைப் பல யூதர்களின் மனத்தில் உறுதிப்படுத்தியது.

யூதச் சூழலில் கிறிஸ்தவர்கள் இறைவாக்கினரால் முன்னுரைக்கப்பட்ட கிறிஸ்து இயேசுவே என்று அறிக்கை யிட்டார்கள் (திருத்.3:17-24; 8:5). குறிப்பாக, யூதர்களுக்கு இயேசு கிறிஸ்து என்று அவர் விளக்கிக்காட்டினார் (18:5:28). எந்த முறையில் பவுல் விளக்கினார் என்று நமக்குத் தெரியவில்லை. எப்படியும் இந்த விளக்கத்தை யூதர் ஏற்காத போது அவர் புற இனத்தவரிடம் சென்றார்(18:6).

புற இனத்தவரிடையே மெசியாவைப் பற்றிய எதிர்பார்ப்பு இருக்கவில்லை. இதனால் அவரை வெறும் யூத மெசியாவாகப் பார்க்காதபடி அனைத்துலக மெய்மையான கிறிஸ்துவாகப் பார்க்கும்படி விளக்கம் கொடுக்கப்பட்டது. நம் பாவங்களுக்காக கிறிஸ்து இறந்தார் என்பது இந்த விளக்கத்தில் அடிப்படை உண்மையாக இருந்தது (1பேது 2:21; 3:18; 4:1). அவர் இறப்பின் வாயிலாக கடவுள் முழு மானிடத்தையும் தம்முடன் உறவுபடுத்திக் கொண்டார். தம்மை நம்பி ஏற்றோரின் வாழ்வில் கிறிஸ்து உறைந்திருக்கும் ஒரு மெய்மை ஆனார். அதன்பின் அவர் மானிட நோக்கில் அறியப்படவில்லை. இந்த உண்மைகளை 2 கொரி.5:16-21இல் பவுல் சுருக்கித் தருகிறார். இனி புதுவாழ்வு என்பது கிறிஸ்துவில் வாழ்வதாகும் (கலா.2:20). அவர் நம் இதயங்களில் வாழ்கிறார் (எபே.3:17). உலகிலுள்ள அனைத்தையும் கிறிஸ்துவில் ஒருங்கிணைப்பதே கடவுளின் திட்டம் (1:10). கிறிஸ்து இஸ்ரயேலரின் வாழ்விலும் மறைந்து செயல்பட்டுள்ளார் (1கொரி. 10:4, எபி. 11:26).

கிறிஸ்து பற்றிய இத்தகைய புதிய காட்சியின் ஒளியில் பவுல் திருச்சட்டத்தின்படி வாழும் யூத நெறியை தாழ்வுப்படுத்தினார். எனினும் மிகவும் கருதத்தக்க ஒர் உண்மை என்ன வெனில் கிறிஸ்துவை கடவுளுக்கு இணையாகவோ, கடவுளைப் போல வணங்கத்தக்கவராகவோ பவுலும் பிற அடியார்களும் எண்ணவில்லை. அவர்களைப் பொறுத்தவரை இயேசுவை கடவுளே கிறிஸ்துவாக்கினார் (திருத்.2:36). கிறிஸ்துவை கடவுளே இறப்பினின்று உயிரோடெழுப்பினார் (உரோ. 6:4; 10:9 1கொரி. 15:12). கிறிஸ்து கடவுளுக்குரியவர் (உரோ. 11:15; 12:10; 1கொரி. 3:23). கிறிஸ்துவில் நம்மை கடவுளே

மன்னிக்கிறார் (எபே.4:32). இறைமைந்தரான கிறிஸ்து கடவுளின் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவராயிருந்தார் (எபி.3:6). கிறிஸ்து கடவுளால் ஏற்படுத்தப்பட்டார் (5:5). அதே நேரத்தில் சில இடங்களில் கிறிஸ்து கடவுளின் இடத்தில் வைத்தும் பேசப்படுகிறார். எ.கா. கிறிஸ்து நம்மில் அன்பு கூர்ந்தார் (எபே. 5:2). அவர் நமக்கு ஒளிதருவார் (5:14). கிறிஸ்து சபைக்கு தலையும் கணவருமானவர் (5:23மு). அவர் சபையில் அன்புகூர்ந்தார் (5:26). கிறிஸ்துவுக்கும் சபைக்கு முரிய உறவு ஆழ்ந்தது. புதிர்மிக்கது (5:32). இத்தகைய கூற்றுக்கள் ஒரிறை நம்பிக்கையில் உறுதியாயிருந்தோருக்கு ஒரு குழப்பமாகவே இருந்தது.

இயேசுவின் சீடர்கள் என்று அறியப்பட்டவர்கள் **கிறிஸ்தவர்கள்** என்று அழைக்கப்பட்டபோது இந்தக் குழப்பம் இன்னும் பெருகியது (திருத்.11:26; 26:28; 1பேது.4:16). முதலில் இயேசு என்னும் கிறிஸ்து என்று கூறப்பட்டது (மத். 1:16; 27:17,22). காலப்போக்கில் இயேசு கிறிஸ்து என்பது ஒரே பெயராக வழங்கப்பட்டது (திருத். 2:38; 3:6; 8:12; உரோ. 1:8). இவ்வாறு ஓர் அறிக்கைப்பெயர் இயற்பெயரானதும், இறைவனால் ஏற்படுத்தப்பட்டவர் இறைவனின் இடத்தை எடுத்துக் கொண்டதும் யூதர்களுக்கு மட்டுமன்று பல கிறிஸ்தவர் களுக்கும்கூட ஓர் இறையியல் குழப்பமாகவேபட்டது.

அடுத்துவரும் அறிக்கை இயேசுவே ஆண்டவர் என்பது. சில இடங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்று சேர்த்து எழுதப்பட்டுள்ளது (திருத். 11:17; உரோ. 5:1, 1கொரி. 1:7; 2பேது. 1:11). ஆயினும் இந்த அறிக்கைக்கு ஒரு குறிப்பிட்டச் சூழல் இருந்தது. கொரிந்து நகரில் பவுலும் சீலாவும் உரோமைப் பேரரசுக்கு எதிராக இயேசு என்னும் இன்னோர் அரசர் (ஆண்டவர்) இருக்கிறார் என்று கூறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டனர் (திருத்.17:7). எனவே ஆண்டவர் என்ற அறிக்கை ஓர் அரசியல் சார்ந்த ஒன்றாகக் கருதப்பட்டது.

யாவே இஸ்ரயேலரின் ஆண்டவர் என்று அழைக்கப்பட்டார். யாவே என்னும் சொல் அஞ்சத்தக்க, புனிதமான ஒன்றாகக் கருதப்பட்டபடியால் அதோனாய் (= என் ஆண்டவர்) என்ற சொல்லால் யூதர் கடவுளை அழைத் தனர். ஆனால் இச்சொல் மானிடத் தலைவர்களை, கணவரை, கானானிய தெய்வமான பாகாலைக் குறிக்கவும் பயன் படுத்தப்பட்டது. இச்சூழலில் கிறிஸ்தவர்கள் இயேசுவை எந்தப் பொருளில் ஆண்டவர் என்று அழைத்தார்கள் என்று ஆய்ந்தறிவது அவசியம்.

ஆண்டவர் (கர்த்தர்) என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் குரியாஸ் என்னும் கிரேக்கச் சொல் மானிடத் தலைவர்களைக் குறிக்கவும், கடவுளைக் குறிக்கவும் பு.ஏ. இல் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத்.10:24மு; 1:20,22,24). இயேசு எந்தப் பொருளில் ஆண்டவர் என்ற சொல்லால் அழைக்கப்பட்டார் என்பது ஒரு சிக்கலான கேள்வி. அவர் உலகத்தில் வாழ்ந்த போது அவருடைய சீடர்கள் அவரை ஆண்டவரே என்று அழைத்தது அவர் ஒரு மனிதத் தலைவர், ஆசிரியர் என்பதாலேயாகும். ஆனால் அவர் உயிர்த்தெழுந்த பின்னர் கடவுள் அவரை ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார் எனும்போது (திருத் 2:36) கடவுளுக்கு இணையாக இல்லாவிடினும் மனித நிலைக்கும் உயர்ந்த நிலையில் அவர் கருதப்பட்டார் என்று எண்ண இடமுண்டு அத்துடன் தொடக்கத் திருச்சபையில் இயேசுவை ஏற்றோர், ஆண்டவராகிய கிறிஸ்துவின் பெயரில் திருமுழுக் காட்டப்பட்டார்கள் (8:16). இயேசு கிறிஸ்து அனைவருக்கும் ஆண்டவர் என்றும் அறிவிக்கப்பட்டார் (10:36). எனினும் பல இடங்களில் இயேசுவாகிய ஆண்டவருக்கும் தந்தையாகிய கடவுளுக்குமுரிய வேறுபாடு குறிக்கப்பட்டுள்ளது (எ.கா. உரோ. 1:3,7; 5:1; 11; 6:11; 7:25; 1கொரி. 1:3). கடவுள் இயேசுவை உயிரோடெழுப்பினார் என்று நம்புவதும் இயேசு ஆண்டவர் என்று வாயினால் அறிக்கையிடுவதும் மீட்புக்கு வழியாகச் சொல்லப்பட்டது (உரோ.10:9). தூய ஆவியினால் மட்டுமே ஒருவர் இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிட முடியும் (1கொரி. 12:3).

மனிதராக இருந்து, கடவுளால் எழுப்பப்பட்டு ஆண்டவராக்கப்பட்ட இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கை யிட்டது யூதர்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை எனினும் கிரேக்க - உரோமை உலகுக்கு அது பொருத்தமுடையதாக இருந்தது. கிரேக்கர் தங்கள் தெய்வங்களை ஆண்டவர் என்று அழைத்துவந்தனர். உரோமைப் பேரரசன் எல்லாருக்கும் மேலாக உயர்த்தப்பட்டு எல்லாப் பெயர்களுக்கும் மேலான பெயரைப் பெற்றிருந்தான் என்ற நம்பிக்கையில் அவனை மக்கள் ஆண்டவன் என்று அழைத்தார்கள். அத்தகையச் சூழலில்தான் தூய ஆவியரால் அல்லாமல் கிறிஸ்துவை ஆண்டவராக அறிக்கையிட ஒருவராலும் இயலாது என பவுல் கூறுகிறார் (1கொரி. 12:3). இது ஓர் அரசியல் தன்மையுள்ள அறிக்கையாகும். இதே சூழலில்தான் பவுல் இயேசுவாகிய கிறிஸ்து தம்மைத்தாம் வெறுமையாக்கி அடிமைமின் உரு வெடுத்து, மனித சாயலாகி, சிலுவை மரணம் மட்டும் தம்மைத் தாழ்த்தியதால் கடவுள் அவரை உயர்த்தி உயர்ந்த பெயரைக் கொடுத்து எல்லா முழங்கால்களும் அவருக்கு முன் முடங்கும் படியும் நாவுகள் யாவும் அவரை ஆண்டவர் என்று அறிக்கை யிடவும் செய்தார் என்று பிலி.2:9-11 இல் எழுதுகிறார். இப்படிச் செய்தது தந்தையாகிய கடவுளின் மாட்சிமைக்கே என்று அவர் முடிப்பது கருதத் தக்கது. கொடிய விலங்குகளாக வடிக்கப்பட்டிருக்கும் உரோமை ஆளுநர்களுக்கு எதிராக இயேசுவாகிய ஆண்டவரை அடிக்கப்பட்ட ஓர் ஆட்டுக்குட்டியாக வடிக்கிறது திருவெளிப்பாடு நூல் (5:6; 13:8). இறுதியில் ஆட்டுக்குட்டியாகிய ஆண்டவர் வெற்றியடைவார், அவர் ஆண்டவர்களுக்கெல்லாம் ஆண்டவர், அரசர்களுக்கெல்லாம் அரசர் என்ற வெற்றி முழக்கம் அதில் காணப்படுகிறது (17:14; 19:16). ஆயினும் அனைத்தாற்றல் மிக்க இறைவன் ஆட்குக்குட்டியாகிய ஆண்டவரினின்று வேறுபடுத்தியே பேசப்பட்டிருக்கிறார் (21:22).

இயேசு கடவுளை ஆண்டவர் என்று அழைத்தார் (மத்.4:10; 11:25; 22:37). அவ்வாறே தொடக்கத் திருச்சபையி னரும் அழைத்தனர் (திருத். 1:24; 2:20மு; 47; 3:22). பவுலும் தம்முடைய எழுத்துக்களில் தந்தையாகிய கடவுளையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும் வேறுபடுத்தியே எழுதுகிறார் (கலா.1:3, எபே. 1:2, கொலொ. 1:2, 1தெச.1:1மு, 2தீமோ.1:2). ஒரு யூதக் கிறிஸ்தவரான பவுல் கடவுளை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தந்தை என்று அழைத்தார் (2கொரி. 1:3; எபே.1:3,17; 3:14; கொலொ.1:3). அத்துடன் மனிதராக வாழ்ந்த இயேசுவின் சகோதரர்களை ஆண்டவரின் சகோதரர்கள் என்று அவர் அழைக்கிறார் (1கொரி.1:5). பவுலைப் பொறுத்த வரையிலும் கடவுள் இயேசுவை ஒரு குறிப்பிட்ட நோக்கோடு, குறிப்பிட்டக் காலத்திற்கு ஆண்டவராக்கினார். ஆதிக்கம் செலுத்திய ஆண்டவர்கள் பலர் இருந்த சூழலில் அடிமை நிலையில் பாடுபட்டு இறந்த

இயேசுவின் பாதத்தில் எல்லா அதிகாரங்களும் பணிந்தடங்க வேண்டுமென்பது கடவுளின் நோக்கு. இறுதியில் இயேசுவாகிய ஆண்டவரும் ஆட்சியை கடவுளிடம் ஒப்படைத்துவிட, கடவுளே எல்லாவற்றிற்கும் எல்லாமுமாய் இருப்பார்(1கொரி.15:25-28). இறுதியில் எல்லாம் வல்ல இறைவனே போற்றுதலுக்குரியவர் என்று ஏனைய எழுத்தாளர்களும் குறிப்பிடுகின்றனர் (எ.கா. 1பேது.3:15; திருவெ.4:8; 11:17; 15:3; 16:7; 19:6). ஆக ஆண்டவரில், ஆண்டவருடன், ஆண்டவர் வழி என்றெல்லாம் இயேசுவைக் குறிப்பிடினும் கிறிஸ்தவப் பற்றுமையின் முழு முதல் நோக்கப் பொருள் இறைவனே ஆவார்.

அப்படியானால் இயேசுவை கடவுளாகக் கருதிப் பற்றுனர்வுடன் ஆண்டவரே என்று அழைக்கலாமா? மிகவும் மங்கலான பொருள்தரும் ஒரு சில பகுதிகளே பு.ஏ. இல் இதற்கு ஆதரவு தரும். அவற்றையும் ஆழ்ந்து படித்தால் எதிரிடையான பதில் கிடைக்கவும் வாய்ப்புள்ளது. உயிர்த்தெழுந்த ஆண்டவர் தம் காயங்களைக் காட்டி, கைப்போட்டுப் பார்க்க தோமாவை அழைத்தவுடன் தோமா என் ஆண்டவரே, என் கடவுளே என்று ஒலமிடுகிறார் (யோ.20:28). இங்கு இது அபய ஒலமாக இருப்பதால் கடவுள் என்பது இயேசுவைக் குறிக்கும் என்று எடுத்துக்கொள்வது சரியாகாது. தான் அப்படிச் செய்யமாட்டேன் என்று (தந்தையாகிய) கடவுள்மேல் ஆணை மிடுவதையே இங்கு குறிக்கும். இன்னொரு குறிப்பு ஸ்தேவானின் இறைவேண்டல் ஆகும். அவர் கல்லெறிந்து கொல்லப்பட்ட போது ஆண்டவராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்று மன்றாடினார் (திருத். 7:59மு). பாடுபடுவோரின் பிரதிநிதியாகிய மனிதமகன் இயேசு கடவுளின் வலப்பக்கத்தில் நிற்பதைக் கண்டு மிகவும் பதட்டமான நிலையில் இவ்வாறு ஸ்தேவான் மன்றாடினார். பவுல் ஒரு முறை ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவுக்கு, அவர் வழி பொழியப்பட்ட இறையருளை எண்ணி, நன்றி செலுத்தினார். ஆயினும் உடனேயே என்றென்றும் ஆளுகைசெய்யும் ஒரே கடவுளுக்கு அனைத்து மாட்சிமையையும் உரித்தாக்கினார் (1 தீமோ. 1:12-17). ஆண்டவரே வாரும் (மாரநாதா) என்று தொடக்கத் திருச்சபையினர் கூறியபொழுது (திருவெ.22:20) கடவுளின் இடத்தில் அவரை வைத்தனர் என்று நினைப்பதற்கில்லை. ஆக, பேரரசனையும் தெய்வங்களையும் ஆண்டவர் என்று அழைத்த சூழலில் கடவுளால் ஆண்டவராக்கப்பட்ட இயேசுவை கிறிஸ்தவர்கள் அவ்வாறு அழைத்தனரேயன்றி கடவுளின் முழு முதல் இடத்தை அவர்கள் எடுத்துவிடவில்லை.

இனி மீட்பர் என்ற பட்டப்பெயரைப் பார்ப்போம். லூக். 2:11இல் இது ஆண்டவர், கிறிஸ்து ஆகியவற்றுடன் சேர்ந்து வருகிறது. இதுபோன்று மூன்று பட்டப்பெயர்களும் சேர்ந்து வருகின்ற வேறு சில பகுதிகளும் உள்ளன (பிலி.3:20, 2பேது. 1:11, 2:20, 3:18). ஆயினும் ப.ஏ. ஐப்போல் பு.ஏ. இலும் மீட்புச்செயல்கள் விளக்கப்படுகின்றனவே தவிர மீட்பர் என்னும் பெயர் சில இடங்களிலேயே வருகிறது. ப.ஏ. இல் முழுமையான நலவாழ்வை (ஷாலோம்) உருவாக்குகிறவர் என்ற அளவில் கடவுள் மீட்பர் என்று அழைக்கப்படுகிறார். பு.ஏ. இல் இயேசு என்ற பெயருக்கு விளக்கமாக மக்களின் பாவங்களை நீக்கி விடுவிப்பவர் என்று மத்தேயு குறிப்பிடுகிறார் (1:21). இதற்கு இணையாக லூக்காவில் வரும் பகுதி(1:32,33) அவர் சிறந்திருந்து, இறைமகனாக, தாவிதின் அரியணையைப் பெற்றவராக, யாக்கோபின் வீட்டாரை ஆளுபவராக, முடிவில்லாத ஆட்சியை உடையவராயிருப்பார் என்று ப.ஏ. பாணியில் விளக்கமாகக் கூறுகிறது.

பு.ஏ. எழுத்தாளர்களும் கடவுளை மீட்பர் என்று குறிப்பிடு கின்றனர் (1தீமோ.1:1; 2:3; 4:10; தீத்து 1:3; 3:10; 3:4). இயேசுவை தம் வலது கையால் உயர்த்தி மீட்பராக்கியவரும் கடவுளே (திருத். 5:31; 13:23). தந்தை தம் மகனை மீட்பராக அனுப்பி யுள்ளார் (1யோ. 4:14), அவர் வழியாக நம்மேல் தூய ஆவியைப் பொழிந்துள்ளார் (தீத்து 3:6). கடவுளின் மாட்சி வெளிப்படும் போது இயேசு கிறிஸ்துவாகிய மீட்பரும் வெளிப்படுவார் (2:13). தந்தையாகிய கடவுளும் கிறிஸ்து இயேசுவாகிய மீட்பரும் தனித்தனியாகக் குறிக்கப்படுகின்றனர் (1:4). இயேசுவே மீட்பர் என்று ஒருசில இடங்களில், அதுவும் வேறுபெயர்களுடன் சேர்ந்து வருகிறது (யோ.4:42, 2தீமோ. 1:10; எபே.5:23). மீட்பர் என்னும் பெயர் ஏற்கெனவே கிரேக்க-யூத உலகில் வழக்கிலிருந்தது. கிரேக்க மறைபொருள் சமயங்களில் சில தெய்வங்கள் மீட்பர் என்று அழைக்கப்பட்டனர், மீட்பர் ஒருவர் தோன்றுவார் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது. அத்துடன் உரோமைப் போரரசில் ஓர் இளவரசர் பிறந்துவிட்டால் மீட்பர் பிறந்து விட்டார் என்று மக்கள் சொல்லி மகிழ்ந்தார்கள். ஆக, கிறிஸ்து, ஆண்டவர் என்னும் பட்டப்பெயர்கள் முறையே யூத, உரோமைச் சூழலுக்கு உடனடிப் பொருத்தமுடையதாக இருந்தபோது மீட்பர் எனும் பெயர் கிரேக்கச் சூழல உட்பட மூன்று சூழலகளுக்கும் பொருத்தமாயிருந்தது. ஏனைய பல பட்டப்பெயர்கள் (தலைமைக்குரு, திருத்தூதுவர் போன்ற எபி.3:1; 5:5) தவிர இம் மூன்று பெயர்களும் பொது அறிக்கையில் பயன்படுத்தப்பட்டனவே தவிர இயேசு இறைவனின் இடத்தை விட்டார் என்றோ, இறைவனைப்போல் வழிபடத் தக்கவர் என்றோ எண்ண பு.ஏ. இல் தடக்கூறுகள் எதுவும் இல்லை. அப்படியானால் இயேசுவுக்கும் இறைவனுக்குமிடையே இருந்த தனிச்சிறப்பான உறவை பு.ஏ. எவ்வாறு எடுத்துக் காட்டுகிறது?

மூன்றாவதாக, இயேசு கடவுளுடன் ஒன்றாகவும் வேறாகவும் இருந்தார். பு.ஏ. நூல்களிலேயே மிகவும் பிந்தி எழுதப்பட்ட நூல்களில் ஒன்று யோவான் எழுதிய நற்செய்தி நூலாகும். துவக்கத்திருச்சபையில் இயேசு யார் என்பதை விளக்கும் முயற்சியில் பதிதாக புனையப்பட்டப் பலக் கருத்துக்கள் அதில் அடங்கியிருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். குறிப்பாக, இயேசுவின் முன்னிருப்பையும் அவர் இறைவனுடன் ஒன்றியிருப்பதையும் இந்நூல் கூறுகிறது. இதனை வைத்து இயேசுவின் இருதன்மை (இறைவன் மனிதன்) பற்றிப் பல்வேறு கோட்பாடுகள் எழுந்தன. எனினும் கோட்பாடுகளால் மட்டுப் படுத்தப்படாமல் இந்நூலின் செய்திகளைப் படிப்பது நல்லது.

நானும் தந்தையும் ஒன்றாயிருக்கிறோம்? என்று கூறிய இயேசு தந்தை என்னிலும் பெரியவர் என்றும் கூறினார் (யோ.10:30; 14:28). இந்த வசனங்களை அடிப்படையாகக் கொண்டு கடவுளும் இயேசுவும் ஒன்றாயிருந்தார்கள் என்றால் அதன் பொருள் என்ன என்று ஊன்றிப்பார்க்கவேண்டும். இது ஒரே தன்மையைக் காட்டும் ஒன்றிப்பா? இல்லை, இது உறவு சார்ந்த ஒன்றிப்பு என்பதே பொருந்தும். யோ. 17 இல் வரும் இயேசுவின் மன்றாட்டின் ஒரு பகுதி இவ்வாறு அமைந்துள்ளது. தந்தையே, நீர் என்னில் இருப்பதுபோன்று அவர்களும் (சீடர்கள்) நம்மில் ஒன்றாயிருக்கவேண்டுகிறேன். நாம் ஒன்றாயிருப்பதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, அதாவது நீர் என்னிலும் நான் அவர்களிலும் நிலைத்திருந்து அவர்கள் முற்றிலும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்கு அளித்த மாட்சிமையை நான் அவர்களுக்கு அளித்தேன். இதனால் நீர் என்னை அனுப்பினதையும் நீ என்னில் அன்புகூர்ந்தது போல் அவர்களிலும் அன்புகூர்ந்தீர் என்பதையும் இந்த உலகம்

அறிந்து கொள்ளும் (17:21-23). இங்கு ஒன்று என்பது அன்புறவு சார்ந்தது. கடவுளுக்கும் இயேசுவுக்கும் இருந்த உறவு திருச்சபையோடும் திருச்சபைக்குள்ளும் இருக்க முடியும் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. பவுல் கூறுகின்ற இருவர் இணைந்து ஒருடல் ஆகின்ற ஆழ்ந்த உறவும் இத்தகைய ஒன்றாகவே தெரிகின்றது (எபே. 5:31,32). ஒரே மனம், முழுமையான ஒருங்கிணைவு முதலிய அவருடைய வார்த்தை களும் இதே கருத்தையே விளக்குகின்றன (பிலி. 2:2, கொலொ. 3:14). அப்படியானால் இயேசுவும் கடவுளும் ஒன்றா யிருந்தனர் என்றால் அன்புறவிலும் ஒரே நோக்கமுடை யவர்களாகவும் ஒருங்கிணைந்திருந்தார்கள் என்று புரிந்து கொள்ளலாம்.

கடவுள் தம்மோடு இருந்ததின் வெளிப்பாடு தம்முடைய செயல்பாடுகளே என்று இயேசு கூறினார் (யோ. 5:20-23, 36-39). கடவுள் செயல்பட்டதால், அச்செயல்பாட்டைத் தாம் கண்டறிந்ததால் இயேசுவும் செயல்பட்டார். இந்த அடிப்படையில் இயேசுவைக் கண்டோர் தந்தையாகிய கடவுளையும் கண்டதாகக் கொள்ளப்படும் (14:8-11). இதே செயல்களை இயேசுவின் சீடர்கள் செய்யமுடியும், அதிகமாகவும் செய்ய முடியும் (14:12). அத்துடன் தாமும் கடவுளும் ஒருவரையொருவர் நேசித்ததுபோல் (3:35; 5:20; 10:17; 14:21,23; 17:24,26), எதிர்காலத்திலும் (அந்த நாளில்) அவர் தந்தையிலும், சீடர்கள் தம்மிலும், தாம் சீடரிலும் நிலைத்திருக்கக்கூடிய அன்புறவைப் பற்றியும் இயேசு தம் சீடர்களிடம் கூறினார். ஒருவர் தம்மில் அன்புகூர்ந்தால் அவர் தம் வார்த்தையைக் கைக்கொள்ளுவார் என்றும், தாமும் தந்தையும் அவரில் அன்பு கூர்ந்து இருவரும் அவரிடம் வந்து தங்குவர் என்றும் கூறினார் (14:18-24). யோ. 15 ஆம் அதிகாரம் இதற்கு ஒரு விளக்கவுரையாக அமைந்துள்ளது. இவ்வாறு ஆழ்ந்த உறவுகள், அன்புப் பிடிப்புகள், அரிய பணிகள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் இறைவனுக்கும் இயேசுவுக்கும் அவர்தம் அடியவருக்குமிடையே உள்ள ஒற்றுமை அமைகின்றது.

நான்காவதாக, இயேசு ஊனுடல் எடுத்த கடவுளின் **வார்த்தை.** இதுவும் யோவானின் நற்செய்தி நூலில் வருகின்றது. இதற்கு இணையான கருத்தை பவுல் ஓரிடத்தில் வெளியிடுகிறார். கிறிஸ்து கடவுளின் உருவாயிருந்தும் கடவுளுக்குச் சமமா யிருப்பதைக் கொள்ளைப் பொருளாக எண்ணாமல் தம்மைத் தாமே வெறுத்து அடிமையின் உருவெடுத்து மனித சாயலானார் (பிலி. 2:6-8).

நான்காம் நற்செய்தி நூலை எழுதிய யோவான் கிரேக்கச் சிந்தனையால் பாதிக்கப்பட்ட ஒரு யூதர் என்றும் அவருடைய வாசகர்களும் அத்தகையோர் என்றும் பல அறிஞர்கள் கருதுகின்றனர். நற்செய்தியின் முன்னுரையிலேயே தொடக்கத்தில் வார்த்தை இருந்தார், அவர் கடவுளோடிருந்தார், கடவுளுமாயிருந்தார் என்று கவிநயத்துடன் அவர் எழுதுகிறார். அவர் ஏற்கெனவே உலகில் மானிடர் ஒவ்வொருவருக்கும் உள்ளொளி பெருக்குகிறவராக இருந்தார் என்று விளக்குகிறார். பின் அந்த வார்த்தை ஊனெடுத்து நம்மிடையே தங்கினார், அருளும் மெய்மையும் நிறைந்தவராயிருந்தார், அவர் மாட்சி மையைக் கண்டோம், அது தந்தையின் ஒரே மைந்தருக்குரிய மாட்சிமைக்கு ஒப்பாக இருந்தது என்று ஆசிரியர் குறிப்பிடு கிறார் (1:14).

கிரேக்கச் சிந்தனையில் லாகாஸ் எனும் வார்த்தை இறைவனின் தூய உள்ளமாகக் கருதப்பட்டது. அலெக் சாந்திரியாவில் இருந்த பைலோ என்னும் கிரேக்க - யூத மெய்யியலார் இந்த **லாகாஸ்** இறைவனையும் மானிடரையும் இணைக்கின்ற பாலமாக இருக்கிறது என்று விளக்குகிறார். இந்த வார்த்தை இறை ஆளுமையின் கூட்டுறவில் இருந்தது என்ற பொருளில் யோவான் எழுதுகிறார் போல் தெரிகிறது. கடவுளுமாயிருந்தார் என்பதின் கிரேக்க மூலத்தில் வார்த்தையுடன் சிறப்புச் சுட்டு இல்லாதபடியால் கடவுள் வார்த்தையாக இருந்தார் என்று மொழிபெயர்ப்பதே பொருந்தும். எப்படியும் வார்த்தையும் இறைவனும் ஒருவரல்லர் என்பது தெளிவு. இருவருக்குமுள்ள உறவை விளக்க தந்தை-மகன் உருவகம் பயன்படுத்தப்படுகிறது. இதனால் வார்த்தை ஊனெடுத்தது என்று முகவுரையில் குறிப்பிட்டாலும் ஏனைய இடங்களில் கடவுள் தம் மகனை அனுப்பினார் என்றே யோவான் குறிப்பிடுகிறார் (3:16; 17:18). இந்த வேறுபட்டக் குறிப்புகளை இணைத்துப் பார்க்கும்போது, வார்த்தையின் ஊனெடுப்பால் கடவுளாகிய தந்தையின் இடம் காலியாகி விடவில்லை. ஊனெடுத்தப் பின்னரும் அவர் அன்புறவிலும் நோக்கிலும் ஒன்றாகவும் ஆள்நிலையில் மகனைவிட வேறா கவுமே காட்டப்படுகிறார்.

ஒரு குறிப்பிட்டச் சூழலில் விளக்க ஊடகமாக எடுக்கப்பட்ட லாகாஸ் கருத்தை மட்டும் அதிஉயர் மெய்மையாகப் பிடித்துக் கொண்டு வாதிட்டபடியால் இதுபற்றி மாறுபட்டப் பல கோட்பாடுகள் திருச்சபையில் எழுந்தன. ஆனால் பு.ஏ. இயேசுவைப் பற்றிக் குறிப்பிடும் எல்லா, உண்மைகளையும் சேர்த்துப் பார்ப்போர் வார்த்தை ஊனெடுத்தார் என்பதைப் பல அறிக்கைகளில், விளக்கங்களில் ஒன்றாகக் கருதுகின்றனர். லாகாஸ் கருத்தை ஆழ்ந்து நோக்குவோர் இயேசுவில் மட்டும் அது செயல்பட்டது என்று கூறத் துணிய மாட்டார். கடவுளின் மைந்தராக, வார்த்தையாக இருந்து ஊனுடல் எடுத்தவர்தான் இயேசு என்றாலும், கடவுளால் அனுப்பப்பட்டவர் இயேசு என்றாலும், கடவுளையும் அவரையும் ஒன்றெனக் குழப்பிக் கொள்ளக் கூடாது என்றே அவர்கள் கூறுவர். மேலும் உலகில் எந்த மானிடரையும் ஒளிரச் செய்யும் உள்ளொளியாக இருக்கும் வார்த்தை அல்லது ஞானம் இயேசுவில் ஊனுடல் ஏற்றதோடு தம் செயல்பாட்டை முடித்துக் கொள்ளவில்லை, இன்றும் தொடர்ந்து செயல்படுகிறார் என்பதில் தவறில்லை.

ஐந்தாவதாக, இயேசு **கடவுளை வெளிப்படுத்தியவர்** என்று அறியப்பட்டார். ஏற்கெனவே நாம் பார்த்த மனிதமகன், கிறிஸ்து, ஆண்டவர், மீட்பர், கடவுளுடன் ஒன்றாக இருந்தவர், ஊனுடல் ஏற்ற வார்த்தை என்னும் கருத்துக்களும் வெவ்வேறு விதங்களில் கடவுளை இயேசு வெளிப்படுத்தினதையே காட்டுகின்றன. அத்துடன் நானே வழி, வாழ்வு, வாய்மை, ஒளி, உயிர்த்தெழுதல், திராட்சைச் செடி, வாசல், என் பெயரில் வேண்டிக்கொள்ளுங்கள், என்னிடம் கேட்பது எதுவோ, இரண்டு மூன்று பேர் கூடியிருந்தால் நானும் அவர்களிடையே இருக்கிறேன் முதலிய இயேசு கூறிய தொடர்கள் கடவுளின் சார்பில் அவர் மானிடரிடம் பேசியதைச் சுட்டுகின்றன. பு.ஏ. இறைவாக்கினரும் சில வேளைகளில் இவ்வாறு கடவுள் பேசுவது போல் தன்மை ஒருமையில் பேசியுள்ளனர். ஆயினும் கடவுளின் தன்மையை, கடவுளுக்கும் தமக்கும் உள்ள உறவை முன்னிட்டு இயேசு இவ்வாறு பேசினாரேயன்றி கடவுளின் இடத்தை அவர் எடுத்துக் கொண்டார் என்று பு.ஏ. ஆசிரியர்கள் எங்குமே குறிப்பிடவில்லை. அப்படியானால் சுமை சுமந்து சோர்வுற்றிருப்போரே, நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு ஓய்வு தருவேன், என்னிடம் வருவோரை நான் புறம்பே தள்ளுவதேயில்லை முதலிய இயேசுவின் கூற்றுகள் இறைவனின் சார்பில் கூறப்பட்டவை என்று எடுத்துக் கொள்வதே பொருத்தமாயிருக்கும்.

வெளிப்பாடு என்கிற வார்த்தையை பு.ஏ. எப்போதுமே ஒரே பொருளிலும் பயன்படுத்தவில்லை, இயேசுவுடன் மட்டுப்படுத்தியும் குறிப்பிடவில்லை. பொதுவாக இறைவெளிப்பாட்டின் விளக்கத்திற்கு முகவுரையாக எபி. 1:1-3 பகுதியை எடுத்துக் காட்டுவதே வழக்கு. பழங்காலத்தில் வெவ்வேறு வகைகளில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையருடன் பேசிய கடவுள் இந்த இறுதி நாள்களில் ஒரு மகன் வழியே பேசியிருக்கிறார் என்று இப்பகுதி கூறுகிறது. பவுல் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய தம்முடைய நற்செய்தியுரை நீண்ட காலமாக இரகசியமாக வைக்கப்பட்டு இப்போது இறைவாக்குரைகள் வழியாக பல்வேறு இனத்தவருக்கு வெளிப்படுத்தப்பட்டதின் அடிப்படையில் இருக்கிறது என்று எழுதுகிறார் (உரோ. 16:25,26). இங்கு இயேசு கிறிஸ்துவில் நிகழ்ந்த இறைவெளிப்பாட்டை இறைவாக்கினர் வாயிலாக யூதருக்குக் கொடுக்கப்பட்ட வெளிப்பாட்டுடன் அவர் இணைக்கிறார். இந்த இரகசியம் ஒரு வெளிப்பாடு மூலம் தமக்குத் தெரிவிக்கப்பட்டதாக எபே. 3.3இல் அவர் குறிப்பிடுகிறார். ஆனால் 1 கொரி. 2:10இல் ஆவியரால் நற்செய்தியின் உண்மைகளை கடவுள் நமக்கு வெளிப்படுத்தினார் என்கிறார். வேறு இடங்களில் இயேசுவின் இரண்டாம் வருகையையும் வெளிப்பாடு என்றே பவுல் அழைக்கிறார் (1 கொரி. 1:7; 2 தெச. 1:7). பேதுருவும் இந்தப் பொருளில் எழுதுகிறார் (1 பேது. 4:13). ஆக இறைவெளிப்பாடு என்பது பு.ஏ.இல் பல்வேறு பொருள்களில் குறிக்கப்பட்டுள்ளது என்று அறிக.

நாம் ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று இரு இடங்களில் மட்டும் கடவுளோடிருந்த வார்த்தையானவர் (யோ. 1:1,14) அல்லது கடவுளுக்கு சமமாக இருந்த கிறிஸ்து மனிதரானார் என்று வருகிறது. இந்த இரு பகுதிகளும் மாட்சிமைக் கவி நடையில் தரப்பட்டுள்ளன. இரண்டின் நோக்கமும் இயேசுவின் முன்னிருப்பை அழுத்துவதாக இல்லை. முதல் பகுதியில் யோவானை விட இயேசு தனித் தன்மை வாய்ந்தவர், உண்மையாக ஊனுரு ஏற்றவர் (வெறும் தோற்றம் அன்று) என்பது அறிவுறுத்தப்படுகிறது. இரண்டாம் பகுதியில் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை நம்மிலும் இருக்கவேண்டுமென்றும், சிலுவைச் சாவு மட்டாகத் தம்மைத் தாழ்த்தின அவர் கடவுளால் உயர்த்தப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. எப்படியும் ஏனைய இடங்களில் கடவுள் இயேசுவை அனுப்பினார் என்றே கூறப்பட்டுள்ளது (எ.கா. யோ. 3:16; 6:57; 17:18; மத். 10:40; கலா. 4:4,6; 1 யோ. 4:9).

இயேசுவின் வாயிலாக கடவுள் தம்மைச் சிறப்பான விதத்தில் வெளிப்படுத்தினார் என்பது பு.ஏ. கூறும் அடிப்படை உண்மை. ஆனால் இந்த உண்மையை எடுத்துக்கூற பல்வேறு மொழி நடைகள், உருவகங்கள் ஆளப்பட்டுள்ளன. மேற்கூறிய இரு முறைகள் தவிர ஏனையவற்றையும் நாம் பார்க்க வேண்டும். (i) எல்லாவற்றிற்கும் இயேசுவை கடவுள் உரிமையாளாக ஏற்படுத்தினார் என்று எபி. 1:2இல் படிக்கிறோம். ஆனால் அவரது அடியாரும் அவரோடு கூட கடவுளின் உரிமையாள்களாக இருப்பதை உரோ. 8:17; கலா.4:7; எபே. 3:6; தீத்து. 3:7; யாக். 2:5 முதலிய பகுதிகள் குறிப்பிடுகின்றன. (ii) கடவுளின் மாட்சிமையை இயேசு எதிரொளி செய்கிறார் (எபி. 1:3). உலகப் படைப்புக்கு முன்னரே அவர் அந்த மாட்சிமையில் பங்கடைந்தாலும் மனிதராக அவர் இருந்த போது மறுபடியும் அதைப் பெறுவது தேவையாக இருந்தது (யோ. 17:5). ஆனால் அதே மாட்சிமையை அவர் தம் அடியவர்களுக்கும் கொடுக்கிறார் (17:22). நாம் அவருடைய சாயலில் மாட்சிமை மேல் மாட்சிமையடைந்து மறுஉருவடைகிறோம் என்கிறார் பவுல் (2 கொரி. 3:18). (iii) இயேசு இறைத்தன்மையின் பதிப்பை அல்லது முத்திரையைப் பெற்றுள்ளார் (எபி. 1:3). அவரது அடியவரும் இறைத்தன்மையில் பங்குபெறும் பேற்றினைப் பெற்றுள்ளனர் (2 பேது. 1:3,4). நமது தன்மை நம்மைப் படைத்தவரின் தன்மைக்கேற்பப் புதுப்பிக்கப்படுகிறது (கொலொ. 3:10). (iv) இயேசு காணக்கூடாத கடவுளின் சாயல் (கொலொ. 1:15, 2 கொரி. 4:4). நாமும் அந்த சாயலுக்குள் இணைக்கப்பட்டிருக்கிறோம் (உரோ. 8:29). (v) இயேசுவில் கடவுளின் முழுமை தங்கியிருந்தது (கொலொ. 1:19). அவர் அடியாரும் இந்த முழுமைக்கென்றே அழைக்கப்பட்டிருக்கின்றனர் (2:9,10). நாம் கிறிஸ்துவின் முழு மானிடத்திற்கும், கடவுளின் முழுமைக்கும் நேராக வளர வேண்டியவர்களாயிருக்கிறோம் (எபே. 4:13; 3:19). ஆக, மனிதராகிய இயேசு ஒரு கண்ணாடியாக, சன்னலாக இருந்து கடவுளை வெளிப்படுத்தினார் என்பதையும் அவரது நிலைக்கு அவருடைய அடியார் வரலாம் என்பதையும் மேற்கூறிய உருவங்களும் கூற்றுக்களும் உறுதிப்படுத்துகின்றன. எனவே இயேசு கடவுள் என்று சொல்லாமல் கடவுளை வெளிப்படுத்தியவர் என்று சொல்வது பு.ஏ. இன் செய்திக்கு ஏற்றதாக இருக்கிறது. இயேசு உலகில் வருவதற்கு முன்னரே கடவுளுடனிருந்தவர் என்ற பார்வையும் விளக்கமும் இச் செய்திக்கு முரண்படவில்லை. ஆனால் இந்த ஒரே பார்வையும் விளக்கமும் மட்டும்தான் இயேசுவுக்கு சிறப்பூட்டுகின்றது என்று நினைக்கத் தேவையில்லை. மானிடரைத் தம் சாயலில் படைத்த இறைவன் மானிடத்தைத் தம்முள் கொண்டவராகவும் மானிடருள் இறைமையைத் தருகிறவராகவும் காணப்படுகிறார். இதற்கு இயேசு ஒரு தன்னிகரற்ற எடுத்துக்காட்டாய் இருந்தார்.

5. சிலுவை எவ்வாறு மீட்கும் பொருள் ஆகிறது?

இயேசு என்கிற ஒருவர் புரட்சியாளராக செயல்பட்டார், இதனால் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார். வரலாற்றாசிரியர்கள் இவ்வாறுதான் சொல்ல முடிந்தது. ஆனால் இந்தச் சிலுவைக்கு இயேசுவின் அடியவர் கொடுத்த பல்வேறு விளக்கங்களை பு.ஏ. எடுத்துக்காட்டுகிறது. இயேசுவின் விடுதலைப்பணிகளும், இறையரசைப் பற்றிய அவரது போதனைகளும் மக்களுக்கு மீட்பாக அமைந்தன. அவற்றின் ஒளியில் அவரது சிலுவை மீட்புப் பணியின் மகுடமாக இருந்தது, அனைத்துலகச் சிறப்புடையது என்று தொடக்கத் திருச்சபையார் பார்த்து விளக்கினர். ஆனால் காலப்போக்கில் கடவுளின் நீதிச் சினத்தைத் தணிக்க அனைத்துலக மக்களின் சார்பிலும் செய்யப்பட்ட ஒரு வேள்விதான் சிலுவையில் நடந்தது என்ற விளக்கமே திருச்சபையில் முக்கியத்துவம் பெற்றது, அதன் அடிப்படையில் வழிபாடு, திருவிருந்து, திருப்பணி ஆகியவையும் புரிந்து கொள்ளப்பட்டன. ஆனால் பு.ஏ. சிலுவைக்குப் பல்வேறு பொருள் கொடுக்கிறது என்பதை இவண் பார்க்கப் போகிறோம், அத்துடன் வேள்வி அல்லது ஈடேற்றப் பலி என்று அதனை விளக்குவதிலிருக்கும் சிக்கலையும் சுட்டிக் காட்டுவோம்.

(i) இயேசு தம்மை ப.ஏ. இல் குறிக்கப்படும் பாடுபடும் பணியாளுடன் இணைத்துப் புரிந்து கொண்டார். இது அரசார்ந்த மெசியாவைப் பற்றிய எதிர்பார்ப்புக்கு எவ்வாறு முரணாயிருந்தது என்று ஏற்கெனவே சுட்டிக்காட்டினோம். இயேசு தமக்குப் பாடுகள் வரப் போவதை எதிர்பார்த்தே பணிசெய்தார். ஆனால் அது விதிக்கப்பட்ட ஒன்று என்று நினைக்காமல் அதைத் தவிர்க்கவே இறுதிமட்டும் அவர் போராடினார், மற்றபடி யூதாஸ் உட்பட அவருடைய சாவுக்குக் காரணராயிருந்தோர் அனைவரும் கடவுளின் திட்டத்தின்படி கருவிகளாகச் செயல்பட்டதாக அமையும். இயேசு சிலுவையை

ஏற்ற விதத்தைப் பார்க்கும் போது இவ்வாறு சிந்திப்பது முரணிலும் முரண். மனித மகன் பணி ஏற்கும்படி வராமல் பணி செய்யவும், பலருக்காகத் தம் உயிரைக் கொடுக்கவும் வந்தார் என்று இயேசு கூறினார் (மத். 20:28; மார். 10:45). இங்கு மீட்கும் பொருள் என்பதை எழுத்துக்கெழுத்தாக ஏற்பது எத்துணைச் சிக்கல்மிக்கது என்பதை அடுத்த பகுதியில் விளக்குவோம். எசாயா இறைவாக்கினரால் உரைக்கப்பட்டப் பாடுபடும் பணியாள் இயேசுவின் தன்மைக்குப் பொருத்த மாயிருந்ததை நற்செய்தி நூல் ஆசிரியர்கள் உணர்ந்தார்கள் (எ.கா. மத். 12:17-21). தொடக்கத் திருச்சபையிலும் இந்தப் பொருத்தம் உணரப்பட்டது (திருத். 8:32,33). பாடுபடும் பணியாளுக்கு அன்றும் இன்றும் யூதர்கள் பல்வேறு விளக்கங்கள் கொடுத்திருக்க, இயேசுவோடு இணைக்கப்பட்ட விளக்கம் ஒரு சாத்தியக் கூறாகவே படுகிறது

(ii) அநீதமாய் கொல்லப்பட்டார். நீதியை நிலைநாட்ட எழுப்பப்பட்டார். திராட்சைத் தோட்டத் தலைவன்-குடியானவர் உவமையில் இயேசு இறுதியில் தலைவனின் சொந்த மகனையே குடியானவர் கொன்றுவிடுவதாகக் காட்டுகிறார் (மத். 21:33-42; மார். 12:1-12; லூக். 20:9-19). இதற்குப் பதிலாக தலைவன் குடியானவரைக் கொன்றுவிடுவான் என்று இயேசுவின் போதனையைக் கேட்டவர்களும் ஒத்துக்கொள்ளுகின்றனர். இந்த உவமையைத் தொடர்ந்து ஆகாதென்று தள்ளப்பட்ட கல்லே தலைக்கு மூலைக்கல் ஆயிற்று என்று சங். 118:22-23 இல் வரும் பழமொழியை இயேசு சுட்டிக்காட்டுகிறார். ஆக. அநீதிச் சூழலில் அதற்கு உடந்தையாக இருந்தோரைத் தண்டிப்பதும் பாதிக்கப்பட்டவர்களை உயர்த்துவதும் இங்கு கூறப்படுகிறது. இந்தப் போதனை, மிக அழுத்தமாக அதன் இரண்டாம் பகுதி, தொடக்கத் திருச்சபையில் சிலுவையோடு இணைத்துப் பேசப்பட்டது. நீங்கள் இயேசுவைக் கொலை செய்தீர்கள், கடவுள் அவரை உயிரோடெழுப்பினார் (திருத். 3:15; 4:10,11; 7:52; 10:39,40; 17:41).

(iii) மீட்கும் பொருளாகிய பலி. இயேசு கூறியது போன்று மீட்கும் பொருள் என்ற சொல்லை வேறுசில பு.ஏ. எழுத்தாளரும் எந்த விளக்கமுமின்றிப் பயன்படுத்தினர் (1 தீமோ. 2:6; 1 பேது. 1:18; திருவெ. 5:5). யூதரின் வழிபாட்டுச் செயல்களுடன் சிலுவையைப் பொருத்தி விளக்க முயன்ற எபிரேயர் திருமுக ஆசிரியர் இயேசு தாமே தலைமைக்குருவாக இருந்து தம்மை அனைத்துலக வேள்வியாக அர்ப்பணித்துவிட்டார் என்று எழுதுகிறார். அதே நேரத்தில் யூதத் தலைமைக் குருவுக்கும் இயேசுவுக்குமிடையே அவர் பல வேறுபாடுகளையும் சுட்டிக் காட்டுகிறார். இயேசு பிறருடைய பலவீனங்களைப் பற்றிய அனுதாபம் உடையவராக, எல்லாவிதத்திலும் நம்மைப் போன்று சோதிக்கப்பட்டும் பாவமற்றவராயிருக்கிறார். இதனால் கடவுளின் அரியணையை நெருங்கும் துணிவு நமக்கு ஏற்பட்டுள்ளது (எபி. 4:14-16). இயேசு மெல்கிசெதெக் (= என் அரசர் நீதியுள்ளவர்) என்னும் ஆசாரிய-அரசர் வழியில் கடவுளால் ஏற்படுத்தப்பட்டவர். அவலக்குரல் எழுப்பியும் கூட கடவுளுக்குக் கீழ்ப்படிந்து உயர்ந்த வேள்வியைச் செய்தவர் (5:1-10; 7:1-22). பிற தலைமைக் குருக்கள் இறந்தனர். இயேசுவோ என்றென்றும் உயிரோடிருக்கிறார் (7:23-25). பிற தலைமைக் குருக்கள் திரும்பத் திரும்ப வேள்வி செய்ய வேண்டியிருந்தது. இயேசு ஒரே வேள்வியைச் செய்து அதற்கொரு முற்றுப்புள்ளி வைத்தார் (7:26-28; 8:1-6; 9:23-28; 10:1-4; 11மு). இயேசு உயரே சென்று நம் சார்பில் கடவுளுடனிருக்கிறார் (9:23மு). எல்லா வற்றிற்கும் மேலாக இந்த ஆசிரியர் செய்யும் வேறுபட்டதோர் ஒப்பீடு 13:10-15இல் காணப்படுகிறது. அதன்படி, யூதத் தலைமைக் குரு வேள்வி செய்யும்போது இரத்தத்தை மாதூயகத்தில் படைத்துவிட்டுச் சதையை நகருக்கு (பாளையத்துக்கு) வெளியில் சுட்டெரிப்பார். ஆனால் இயேசு வோ மக்களின் பாவங்களைப் போக்க வெளியிலேயே இறந்தார். மிகச் சிறப்பான கருத்து என்னவென்றால் நாமும் நகருக்கு வெளியே சென்று அவரின் பாடுகளில் பங்குபெற வேண்டும்.

வேறு சில எழுத்தாளர்களும் இயேசுவின் சிலுவைச் சாவைப் பாவ ஈடேற்ற வேள்வி என்ற உருவக நடையில் குறிப்பிடு கின்றனர். திருச்சபையார் அனைவரையும் அரசார்ந்த ஆசாரியக் கூட்டம் என்றும் அழைக்கின்றனர் (1 பேது. 2:5,24; 1 யோ. 1:7; 2:1-2; திருவெ. 1:5).

இயேசு சிலுவையில் தம்மையே மீட்கும் பொருளாகக் கொடுத்தார், பலியிட்டார் என்பதை எழுத்துக்கெழுத்தாக எடுத்துக் கொண்டோமானால் பல சிக்கல்கள் எழும். மீட்கும் பொருள் யாருக்கு, எப்படி, எதற்காகக் கொடுக்கப்பட்டது என்பதை விளக்க சில திருச்சபைத் தந்தையர் செய்த முயற்சிகளையும் இது தொடர்பாக எழுந்த கருத்து முரண்பாடுகளையும் வரலாறு படிப்போர் அறிந்து கொள்வர். விவிலியத்திற்குள் நின்று ஒரு சில சிக்கல்களை இவண் குறிப்பிடுவோம். (அ) பலியிடுவதை ப.ஏ. இன் முதல் ஐந்து நூல்களும் சிறப்புப்படுத்தினாலும் உண்மையிலேயே இறைவன் அதனைக் கேட்டாரா என்பதை இறைவாக்கினர் கேள்வியாக எழுப்பினர் (எ.கா. 1 சாமு. 15:22; ஒசே. 6:6; மத். 12:7). (ஆ) வேள்வியை ஆன்மிகப்படுத்தி உடைந்த உள்ளமே உண்மை வேள்வி என்றாற் போன்ற விளக்கங்கள் விவிலியத்தில் உள்ளன (திருப். 51:17,18). (இ) பலிக்காகப் பயன்படுத்தப்பட்ட விலங்கு எப்போதுமே உயிரோடெழுப்பப்படவில்லை, எனவே அது இயேசுவுக்குப் பொருந்தாது. (ஈ) ப.ஏ. இலும் (எ.கா. 103:10-13), இயேசுவின் உவமைகளிலும் (எ.கா. லூக். 15:11-31) வேள்வியின் தேவையில்லாமலேயே கடவுள் அருள்கூர்ந்து மன்னிக்கிறார் என்பது அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ) கடவுளின் நீதி குற்றமற்ற ஒருவரின் சாவினால் சரிக்கட்டப்படுகிறதென்றால் அது ஒரு முதலாளித்துவ மனப்போங்கைக் காட்டுவதையன்றி ஏற்கெனவே நீதியும், அன்பும் நிறைந்த இறைவன் துன்புறு கிறார் என்ற உண்மையை மழுங்கடிக்கிறது. (ஊ) இயேசுவின் இறப்பை ஒரு வேள்வியாக விளக்கும் எபிரேயர் திருமுக ஆசிரியரும் பவுலும் அதன் வாயிலாக சடங்கு சார்ந்த வேள்விக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதாகவே கருது கிறார்கள். எனவே திருவிருந்தை ஒரு தொடர் வேள்வி என்று நினைப்பதற்கு பு.ஏ. இல் ஆதாரமில்லை. எனவே வேள்வி என்ற வகையில் சிலுவையை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் அதற்குத் தரப்படும் வேறு பொருள்களையும் கருத்தாக நோக்குதல் நலம்.

(iv) சிலுவையில் இறைவனின் அருளும் அன்பும் சிறப்பான விதத்தில் வெளிப்பட்டது (உரோ. 5:6-9; 8:32; எபே. 1:7-9; 5:25; யோ. 3:16; 1 யோ. 4:9,10; தீத்து 2:14). அவர் தம் உயிரை நமக்காக அளித்ததால் அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம் (1 யோ. 3:16). இந்த அன்பின் ஆழ, அகல, நீள, உயரத்தை நாம் தொடர்ந்து அறிந்து கொண்டேயிருக்க வேண்டும்.

(v) சிலுவைச் சாவு மட்டும் தம்மைத் தாழ்த்தி இயேசு கடவுளுக்குக் கீழ்ப்படிந்தார் (பிலி. 2:7மு). இதே சிந்தை கிறிஸ்தவர்களுக்கும் வேண்டும் (2:5). ஒரு மனிதனின் கீழ்ப்படியாமை பலரை பாவத்திற்குள்ளாக்கியது போன்று ஒரு மனிதனின் கீழ்ப்படிதல் பலரை நீதிக்குள்ளாக்கியது (உரோ. 5.18-21). நமக்காகப் பாடுபட்ட இயேசு நமக்கொரு முன்மாதிரியை வைத்துவிட்டுச் சென்றுள்ளார் (1 பேது. 2:21).

(vi) சிலுவை ஒரு பழைய வாழ்க்கையின் முடிவாகவும் ஒரு புதிய வாழ்வின் தொடக்கமாகவும் இருக்கிறது (உரோ. 6:3மு; 10மு). நாம் பாவத்திற்குச் செத்து நீதிக்கென்று பிழைக்கும்படி இயேசு நம் பாவங்களைச் சுமந்தார் (1 பேது. 2:24). இச்சாவு திருச்சட்டத்திற்குச் சாவதுமாகும் (உரோ. 7:4; கலா. 3:13). இப்போது நமக்கு நீதியின் புதுவாழ்வு கிடைத்துள்ளது (1 பேது. 3:17மு).

(vii) கிறிஸ்தவர்களும் சிலுவையில் அறையப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும். தாம் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டிருந்ததாகவும் (கலா. 2:20), கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் உடலையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் என்றும் (5:24). இந்த உலகம் தமக்கு சிலுவையிலறையுண்டிருப்பதுடன் தாமும் உலகத்திற்குச் சிலுவையில் அறையுண்டிருப்பதாகவும் பவுல் கலாத்தியருக்கு எழுதுகிறார் (6:14). உலகின், சமூகத்தின் தீயத் தகவுகளுக்கு உடன்படாதிருக்கச் சிலுவை தூண்டுகிறது (2 கொரி. 5:14,15).

(viii) சிலுவை ஒப்புரவாகுதலை ஏற்படுத்துகிறது. அது மானிடரை கடவுளுடன் ஒன்றிணைக்கிறது (உரோ. 5:10), புறவினத்தவரை இறைமக்களுடன் ஒன்று சேர்க்கிறது (எபே. 2:16), உலகிலுள்ள எல்லாரையும், எல்லாவற்றையும் இறை வனடியில் ஒன்று கூட்டுகிறது (கொலொ. 1:20).

(ix) அதிகாரம், ஆற்றலைப் பற்றிய ஒரு புதிய கருத்தை சிலுவை அறிமுகம் செய்கிறது. அதிகாரத்தை அடிமைப்பணி செய்வதாக மாற்ற வேண்டுமென்று இயேசு போதித்திருந்தார் (எ.கா. மார். 10:45, யோ. 13:3மு). தம்முடைய அதிகாரமும் ஆற்றலும் ஏளனமாகக் கேள்வி கேட்கப்பட்டபோது அவர் சிலுவையில் தொங்கிக் கொண்டே என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று அவலக் குரல் எழுப்பினார். பலவீனமான இயேசுவைக் கொன்ற சிலுவையின் மறைவில் கடவுளின் புதிர் நிறைந்த பலம் இருந்ததை பவுல் உணர்ந்தார் (1 கொரி. 17-19). கடவுளுடைய பலவீனம் என்பது மனித பலத்தை விடவும் மேலானது (1:25; 2 கொரி. 13:4). பல ஆதிக்க அமைப்புகள் தூற்றிருந்தபோது, இயேசு எல்லா ஆற்றல்களையும், ஆளுகைகளையும் துறந்து சிலுவையின் மேல் வெற்றி சிறந்தார் (கொலொ. 2:14,15). பல கொடியவிலங்கு களுக்கு முன்பாக ஒர் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக இயேசுவை வடித்த கிறிஸ்தவர்களும் (திருவெ. 5:6) இதே உண்மையை எடுத்துக் கூறினர், இந்த ஆட்டுக் குட்டிக்கு முன் அல்லது இறைப்பலவீனத்துக்கு முன் அனைவரும் பணிந்தடங்கு வதில்தான் உலகின் உய்வு அடங்கியிருக்கிறது என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தனர்.

(x) இயேசுவின் சிலுவை என்றென்றும் துன்புறும் இறைவனின் இதயப் பரிவை எடுத்துக்காட்டுகின்றது. அடிக்கப் பட்ட ஆட்டுக்குட்டியாக இயேசுவை எடுத்துக்காட்டிய கிறிஸ்த வர்கள் அவரை உலகத் தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டி என்று கண்டனர் (13:8). இயேசு என்றென்றும் தந்தை யோடு வார்த்தையாக, உள்ளமாக, ஞானமாக இருந்தார் என்ற நம்பிக்கையுடையோர் அவரைத் துன்புறும் இறைவனின் இதயத்தை எடுத்துக்காட்டுகிறார் என்று சொல்வது பொருத்த மானது. அன்பு நிறைந்த கடவுள் மானிடரின் பாவத்துக்கும் தம்முடைய நீதிக்கும் இடையில் நின்று துடியாய்த் துடித்து வேதனைப்பட்டார் என்று ப.ஏ. பல இடங்களில் கூறுகிறது (எ.கா. தொட. 6:4; விடு. 3:7; எரே. 8:21; 31:20; ஒசே. 11:8). இயேசு மனிதராக உலகில் இருந்தபோது இத்தகைய வேதனை யை வெளிக்காட்டினார் (மார். 3:5; லூக். 19:41மு). இத்தகைய வேதனையின் உச்சக்கட்டத்தை சிலுவையில் காண்கிறோம். இயேசுவின் கைவிடப்பட்ட உணர்வில் இறைவனே கைவிடப்பட்ட வேதனையை அடைந்தார் என்று புரிந்துகொள்ள வாய்ப்புள்ளது. உயிர்த்தெழுந்த பின்னரும் இயேசு தம் துன்பத்தை வெளிப்படுத்து வதுடன் (யோ. 20.27, திருத். 9.4) தம் பாடுகளில் பங்குபெறும்படி அடியவரை அழைக்கிறார் (9.18, பிலி.3.8). மொத்தத்தில், சிலுவையின் மூலம் கிறிஸ்துவின் வழியாக கடவுள் துன்புறும் மனுக்குலத்தோடு தம்மை இணைத்துக் கொண்டார், அதுபோல அவர்தம் அடியவரும் இணைத்துக் கொள்ள அழைக்கிறார்.

ஆக, ஒரே சிலுவையை கிறிஸ்தவர்கள் பல்வேறு கோணங்களில் புரிந்து கொண்டனர். இவை ஒன்றையொன்று அணிசெய்கின்றன. மீட்பு என்பதை அதன் பல்வேறு குருவங் களுடன் புரிந்து கொண்டோமானால் இக்கோணங்கள் அத் துருவங்களுடன் தொடர்புடையவைகளாமிருக்கின்றன. எனவே, வெறும் ஈடேற்ற வேள்வி என்ற நிலையில் சிலுவையை விளக்கக்கூடாது. ஒருவேளை வேள்வி அல்லது பலி என்ற உருவகம் இன்றும் பொருத்தமாக இருந்தால் பயன்படுத்தலாம். ஆனால் நீதிக்கடவுளின் சினத்தைத் தணிக்க இயேசு இரத்தம் சிந்தினார் என்று புரிந்துகொண்டோமானால் கடவுளைப் பற்றியும், இயேசுவைப் பற்றியும் தேவையில்லாத பல கேள்விகள் எழும். நாம் மேலே கண்ட உண்மைகளின் ஒளியில் நோக்கி னால், சிலுவையின் பார்வையில் ப.ஏ. வேள்வி முறைகளை அணுகினால் இறைவன் வேள்விப் பொருளில் நிறைவு காண் கிறவராக அல்லர், அந்த வேள்விப் பொருளாக இருக்கிறார் என்று கூறுவதே பொருத்தமானது. அவர் அந்த வேள்வி முறைகளை ஏற்கிறவராக அல்ல, தம்மில் அவைகளை நிறைவு செய்து நீக்கி விடுகிறவராக உள்ளார்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் சிலுவையின் இடத்தை அழித்துவிடாமல் அதற்குப் புதிய பொருள் ஏற்றுகின்றது. உயிர்த்தெழுதல் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது, நல்லெதிர் நோக்கை முன்வைக்கிறது, பாடுபடுவதற்கு ஆற்றல் வழங்கு கிறது. பவுல் 1 கொரி. 15இல் கூறுவதுபோன்று இயேசுவின் உயிர்த்தெழுதல் ஒரு புதிய மானிடத்தின் முதற்பலனாக இருக்கிறது.

6. தூய ஆவியாரின் பங்கு யாது?

ப.ஏ. கடவுளின் ஆவியைப் பற்றிப் பேசும் உண்மைகள் பு.ஏ.இலும் தொடருகின்றன. ஆனால் இயேசுவின் வாழ்விலும் அவரது அடியாரின் வாழ்விலும் ஆவியாரின் இயக்கத்தைப் புதுவிதங்களில் காண்கிறோம்.

தூய ஆவியால் கன்னிமரியாள் கருவுற்று இயேசு பிறந்தார் என்பதை நற்செய்தி எழுத்தாளர்கள் குறிப்பிடுகின்றனர் (மத். 1.18, லூக். 35). இயேசுவின் திருமுழுக்கிலும் (மார். 1.10), சோதனையின்போதும் (1.12, லூக். 4.1) ஆவியார் அவர்மேல் இறங்கி அவரை வழிநடத்தினார். இயேசுவின் விடுதலைப் பணிகள் அனைத்தும் தூய ஆவியின் ஆற்றலால் நிகழ்ந்தன (4.18, மத். 12.28). புறா (மத். 3.16, மார். 1.10), கடவுளின் விரல் (லூக். 11.20), நெருப்பு (மத். 3.11), வாழ்வின் நீரூற்று (யோ. 7. 37மு) ஆகியவை தூய ஆவியின் அடையாளச் சின்னங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. ஆவியார் விடுதலைப்பணி மூலம் புதுமை படைக்கும்போது அப்பணியைப் பேயின் பணி என்று சொல்லு கின்ற ஆவியருக்கு எதிரான பாவம் மன்னிக்கப்படாது என்று இயேசு கூறினார் (மத். 12.13, மார். 3.29, லூக். 12.10). இயேசு வின் உயிர்த்தெழுதலிலும் தூய ஆவியின் இயக்கம் இருந்தது

உரோ. 1:4; 8:1). உயிர்த்தெழுந்த ஆண்டவராய் அறியப்பட்ட இயேசு தம் அடியவர் மேல் ஊதி தூய ஆவியை அவர்களுக்கு வழங்கினார் (யோ. 20:22). ஆக, கடவுளின் காற்றாக, மூச்சாக, இயக்க ஆற்றலாக இருந்த ஆவியர் இயேசுவின் வாழ்வில் புதுவிதங்களில் செயல்பட்டார்.

கடவுள் ஆவியாயிருக்கிறார், அவரை வழிபடுவோர் ஆவியோடும் உண்மையோடும் அவரை வழிபடவேண்டும் என்று இயேசு அறிவித்தார் (யோ. 4:24). இங்கு கடவுளுக்கும் அவர் தம் அடியவருக்குமிடையே ஓர் உறவாற்றலாக ஆவியர் குறிக்கப் படுகிறார். இதே ஆற்றல் காற்றைப் போன்று கண்ணுக்குத் தெரியாத விதமாக மனிதரை ஆவிக்குரிய புதுப்பிறப்படையும் படி செய்கின்றது (3:8).

இயேசுவின் மறைவுக்குப் பின் இன்னும் புதியவிதமாக ஆவியர் செயல்பட்டார். தமக்குப்பின் வரப்போகின்ற ஆவியாகிய உதவியாளரை அல்லது தேற்றரவாளரைப் பற்றி இயேசு முன்னறிவித்தார். அவர் இயேசு தந்தையுடன் இருப்பதை அடியவருக்கு எடுத்துக்காட்டுவார், அன்புறவு வாயிலாக இயேசு தம் அடியவர்களுடன் உறைந்திருக்கும் உணர்வைக் கொடுப்பார் (14:18-24), தந்தையினால் அனுப்பப்படும் ஆவியர் இயேசு கூறிய அனைத்தையும் தம் அடியவருக்கு நினைவூட்டுவார் (14:25,26). அவர் இயேசுவால் தந்தையிடமிருந்து அனுப்பப் படுகிறவர் கூட. உண்மை ஆலோசகராக இருந்து இயேசுவுக்கு சாட்சி கொடுப்பார் (15:26). இயேசுவால் எல்லா உண்மை களையும் சொல்லிவிட முடியவில்லை. எனவே ஆவியர் வரும் போது தம் அடியவரை எல்லா உண்மைக்குள்ளும் வழி நடத்துவார் என்று அவர் கூறினார். ஆயினும் அவர் தம் சொந்த அதிகாரத்தினால் எதையும் செய்யாதபடி தந்தையோடி ருக்கும் தமக்குரிய உண்மைகளையே அறிவித்து தம்மை மாட்சிமைப்படுத்துவார் என்று இயேசு கூறினார் (16:12-15). அவரின் இக்கூற்றுக்கள் தூய ஆவியரை தந்தையாகிய கடவுளுடனும் மைந்தராகிய இயேசுவுடனும் தொடர்புப்படுத்து கின்றவைகளாக உள்ளன.

திருத். 2இல் நாம் படிக்கிறபடி. பெந்தெகொஸ்தே நாளில் தூய ஆவியரின் செயல்பாடு ஒரு புதிய வருகையை எடுத்துக் காட்டியது. அடியவருக்குள் புத்தெழுச்சி, அடுத்தவருடன் தொடர்பு, திருச்சபையின் எழுச்சி, புதிய இயக்கத்தின் பெருக்கம் முதலியவை இந்த வருகையால் நிகழ்ந்தன. தொடர்ந்து ஒவ்வொரு கட்டத்திலும் தூய ஆவியர் தொடக்கக் கிறிஸ்த வர்களின் வாழ்வையும், பணிகளையும் எவ்வாறு இயக்கி நடத்தினார் என்பதை திருத்தூதுவர் நூலில் படிக்கிறோம்.

பவுல் கிறிஸ்தவ வாழ்வை ஆவியரின் வாழ்வு என்று அழைக்கிறார் (உரோ. 8:2). அவர் கடவுளின் ஆவி, கிறிஸ்து வின் ஆவி கூட (8:9). இயேசுவை உயிரோடெழுப்பின ஆவியே அடியவர் உள்ளங்களில் வாழ்கிறார் (8:11). நாம் கடவுளுடைய பிள்ளைகள் என்பதற்குரிய சாட்சியத்தை அவர் நம் உள்ளுறைந்து வழங்குகிறார் (8:15,16). எதிர்கால நம்பிக்கையின் முன்சுவையை அளித்துள்ள ஆவியரே நம்முடைய பலவீனங்களில் நமக்கு உதவி, நம் ஏங்கல்களையும், பெருமூச்சுகளையும் வேண்டல் களாக இறைவன்முன் படைக்கிறார் (8:26-28). பவுல் தம் நற் செய்தியுரைகளில் கடவுளின் ஆவியரின் ஆற்றல் வெளிப் பட்டதை உணர்ந்தார் (1 கொரி. 2:4,5). 1கொரி. 12,14 அதிகாரங்களில் ஆவியர் திருச்சபையின் பொது நன்மைக் காக வழங்கும் பல்வேறு அருள் வரங்களைப் பற்றி அவர் குறிப்பிடுகிறார் (12:7). பொதுப் பயனுக்கு வராத எதையும் அவர் ஆதரிக்கவில்லை. மேலும், ஆண்டவரே ஆவியர், ஆண்டவரின் ஆவி எங்கு உண்டோ அங்கு விடுதலை உண்டு என்கிறார் பவுல் (2 கொரி. 3:17). ஆவியில் அடங்கும் வாழ்வை ஊனியல்பின் வாழ்வுக்கு எதிராகக் காணும் அவர் அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, கனிவு, தயவு, உண்மை, பரிவு, கட்டுப்பாடு ஆகிய பண்புகளை ஆவியின் கனிகள் என்று அழைக்கிறார் (கலா. 5:22,23).

எல்லாருக்கும் ஆவியர் வழங்கப்படினும் ஒருசிலர் அவரைப் பெற்றுக் கொள்வது ஒரு தனி அனுபவமாக இருந்தது. எனினும், காலப்போக்கில் ஆவியினால் பெற்ற அருட் பொழிவு அனைத்துக் கிறிஸ்தவர்களிலும் நிலைத்திருப்பதாகக் கொள்ளப்பட்டது (1 யோ. 2:26,27). இயேசுவைப் பற்றி சாட்சியிடுகிற ஆவியரே உண்மை (5:6). மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற ஆவியை ஒருவர் துக்கப்படுத்தக்கூடும் (எபே. 4:30). எனவே ஆவியர் அவ்வப்போது சபைகளுக்குச் சொல்வதைக் காதுள்ளவர்கள் கேட்கக்கடவர்கள் என்று திருவெளிப்பாடு நூல் திரும்பத் திரும்ப அறிவுறுத்துகிறது (2:7,11,29, 3:6,13,22). இறுதியில் உலகம் முழுவதற்கும் கொடுக்கப்படும் மீட்பிற்கான அழைப்பை ஆவியரும் மணமகளாகிய திருச்சபையும் சேர்ந்து விடுக்கி றார்கள் (22:17). இவ்வாறு தந்தையாகிய கடவுளுடனும் மைந்தராகிய இயேசு கிறிஸ்துவுடனும் இணைந்திருக்கும் அன்புறவான ஆவியர் அடியாரின் நெஞ்சில் உறைந்து திருச்சபையின் கூட்டுறவில் செயல்படுகிறார்.

மும்மை (திரித்துவம்) பற்றிய கருத்து பு.ஏ. காலத்தில் வளர்ச்சியடையாவிடினும் அதற்குரிய சில கூறுகள் காணப் படுகின்றன. தந்தை, மைந்தன், தூய ஆவியின் பெயரில் திருமுழுக்குக் கொடுக்கும் முறை மத். 28:19இல் குறிக்கப்பட் டுள்ளது. ஆண்டவர் ஒருவரே, கடவுள் ஒருவரே, தூய ஆவியர் ஒருவரே என்று பவுல் எழுதுகிறார் (1 கொரி. 12:4-6). ஆண்டவராகிய கிறிஸ்துவின் பெயராலும், கடவுளின் ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள் என்றும் அவர் குறிப்பிடு கிறார் (6:11). இவ்வாறு மூவரின் செயல்களையும் பவுல் அடுக்குகின்ற வேறு சில பகுதிகளும் உள்ளன (2 கொரி. 1:21, 1 தெச. 5:18,19, கலா. 3:11). ஆனால் ஒரே இடத்தில் மட்டும் (2 கொரி. 13:13) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருள், தந்தையாகிய கடவுளின் அன்பு, தூய ஆவியரின் ஒன்றிப்பு என்னும் மும்மை ஆசிமுறையை அவர் அறிமுகப்படுத்துகிறார். அதே நேரத்தில் இயேசுவின் பெயரில் ஆசி, இயேசுவின் பெயரில் திருமுழுக்கு ஆகிய தொடர்களும் தொடருகின்றன. ஆக, கடவுளின் வெவ்வேறு செயல்பாடுகளின் ஒளியில் தந்தையாகிய கடவுள், ஆண்டவராகிய இயேசு, தூய ஆவியர் என்று கூறப்பட்டிருப்பதையன்றி ஒரு வளர்ச்சியுற்ற மும்மைக் கருத்தை நாம் பு.ஏ.இல் பார்க்க முடியவில்லை.

7. உலகும் மானிடரும்

மனிதர் உள்ளிட்ட இந்த உலகம் கடவுளின் படைப்பு என்னும் ப.ஏ. கருத்தை எல்லா பு.ஏ. எழுத்தாளர்களுமே ஏற்றுக்கொண்டுள்ளனர். இங்கு உலகம் என்பது தொடக்கத்தில் படைக்கப்பட்ட சடஉலகையும் குறிக்கிறது (மத். 24:1). மனிதர் களையும் குறிக்கிறது (4:8, லூக். 12:30). ஆனால் மனித வாழ்வு என்று வரும்போது உலகம் முழுவதுமே அதற்கு ஈடாகாது (மத். 16:26). எனினும் இந்த உலகத்திலேயே நற்செய்தி விதைக்கப்படுகிறது அல்லது அறிவிக்கப்படுகிறது (13:38; 28:19). உலகத்திற்கு ஒளியாயிருக்க இயேசுவின் சீடர் அழைக்கப் பட்டுள்ளனர் (5:14).

உலகம் தன்னுள்தானே தீயதன்று. ஆனால் இந்த உலகத்தில் தீயோனின் சோதனைகள், இடறல்கள் இருந்தே வருகின்றன (4:8; 18:7). இறைத் தூதுவர்கள் வாயிலாகவும், நிறைவாக இயேசுவின் வாயிலாகவும் இறைவன் உலக வரலாற்றில் தலையிடுவதால் அவர் அதன்மேல் கரிசனை கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகிறது. இயேசுவின் அருஞ்செயல்கள் தீயோனுடன் போராடி பெற்ற வெற்றிகளாகக் கருதப்பட்டன (லூக். 13:16). இயேசு விதைக்கும் நல்ல விதைகளைப் பொறுக்கிக் கொண்டு சென்றுவிட தீயோன் துடிக்கிறான் (மார். 4:15; மத். 13:19; லூக். 8:12). அதுபோல் இயேசுவின் துன்பத்தைத் தவிர்க்க நினைத்ததும் தீயோனின் செயலாகக் கருதப்பட்டது (மத். 16:23). இயேசு கடவுளின் ஆவியால் பேய் களைத் துரத்தியது பலம் பொருந்திய தீயோனைக் கட்டி விடும் செயலாக எண்ணப்பட்டது (12:29). எனவே உலகம் இரு முரண்பட்ட ஆற்றல்களின் போராட்டத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறது என்ற அறிவுநெறிக் கோட்பாட்டினரின் கருத்துக்கு மாறாக, தீயோனின் ஆற்றலுக்கு ஒரு முடிவு உண்டு என்பதையே நற்செய்தி நூல்கள் கூறுகின்றன. தீயோன் வானிலிருந்து மின்னல் போன்று விழுவதை இயேசு பார்த்தார் (லூக். 10:18).

தொடக்கத் திருச்சபையார் இறைவனைப் படைப்பாளர் என்று அழைத்தனர் (திருத். 4:24). வானத்திலும் பூமியிலும் உள்ள அருட்கொடைகள் அனைத்துக்கும் அவரே காரணர் (14:15-17; 17:24மு). விண்தூதுவரின் பணிகள், தீய ஆவிகளின் ஆற்றல்கள் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டிருந்தன. ஆயினும் இயேசுவின் அடியவர் செய்த அருஞ்செயல்கள், அறிவித்த செய்தி ஆகியவை முன்னிட்டு அவர்கள் உலகத்தைக் கலக்குகிறவர்கள் (தலைகீழாக்குகிறவர்கள்) என்ற பட்டப் பெயருக்கு ஆளாயினர் (17:6).

யூத மரபிலிருந்து வந்த பவுல் கடவுளே உலகின் படைப்பாளர் என்பதைத் தம் நற்செய்திக்கு எப்போதுமே முகவுரையாகக் கொள்கிறார் (உரோ. 1:25). அவரைப் பொறுத்தவரையிலும் ஒரு புறம் இவ்வுலகம் கிறிஸ்துவால் படைக்கப்பட்டதாயினும் (கொலொ. 1:15மு), பாவமும் இந்த உலகில் நுழைந்தபடியால் (உரோ. 5:12) பாவிகளை மீட்கிறவராக கிறிஸ்து இவ்வுலகில் மனிதராக வர வேண்டியிருந்தது (1 தீமோ. 1:15). இதனால் உலகம் கடவுளின் தீர்ப்புக்கும் கீழடங்கியிருக்கிறது. முழு உலகும் கடவுளுக்கு முன் கணக்குக் கொடுக்கவேண்டும் (உரோ. 3:6,19; 1 கொரி. 6:2; 11:32). அத்துடன் உலக ஞானத்துக்கும் கடவுளின் ஞானத்துக்கும், உலக ஆவிக்கும் கடவுளின் ஆவிக்கும் ஒரு முரண்பாட்டையும் பவுல் காண்கிறார் (2:12; எபே. 2:12). இதனால் உலகம் தன்னுள்தானே தீயதென்று அவர் கருதாமல் கிறிஸ்துவில் வாழ்வோர் அதில் சுடர்களாக ஒளிர வேண்டுவதின் தேவையை உணர்த்துகிறார் (பிலி. 2:15). இந்த உலகம் கடந்து போவதாக இருப்பினும் (1 கொரி. 7:31) அதற்கு நம்பிக்கையுண்டு. ஏனெனில் கடவுள் உலகத்தாரின் பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவின் வழியாக அவர்களைத் தம்முடன் ஒப்புரவாக்கியிருக்கிறார் (2 கொரி. 5:19). அதே நேரத்தில் கிறிஸ்தவர்கள் இவ்வுலகின் ஆற்றல்களுக்கு கிறிஸ்துவோடு சேர்ந்து இறந்திருப்பதால் உணவு முதலியவற்றில் பொது மரபுகளுக்குக் கட்டுப்படக்கூடாது (கொலொ. 2:20-22).

விண்தூதுவர் உலகில் செயல்படுவதைப் பற்றிய குறிப்புக்கள் குறைவாயினும் தீய ஆவிகளை பவுல் தம் எழுத்துக்களில் தீய அமைப்புகளுடன் சேர்த்தே குறிப்பிடுகிறார். விண்தூதுவரோ, அதிகார அமைப்புகளோ, ஆற்றல்களோ கிறிஸ்து இயேசுவிலுள்ள கடவுளின் அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க முடியாது (உரோ. 8:38,39). இயேசுவின் இரண்டாம் வருகையில் அவர் எல்லா ஆதிக்கத்தையும், அதிகாரத்தையும், ஆற்றலையும் அழித்து அரசை கடவுளாகிய தந்தைக்கு அர்ப்பணிப்பார் (1 கொரி. 15:24). அதுவரை ஆதிக்கங்களோடும், அதிகாரங்களோடும், இருள் நிறைந்த இவ்வுலகின் ஆளுநர்களோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளோடும் நமக்குப் போராட்டமுண்டு (எபே. 6:12). ஆக, இந்த உலகம் கிறிஸ்துவின் வழியே அவருக்கென்று கடவுளால் படைக்கப்பட்டிருப்பினும், அதில் தீய ஆற்றல்கள் இருப்பதால், கிறிஸ்தவர்கள் ஒரு போராட்ட உணர்வுடன் இவ்வுலகில் வாழ வேண்டியிருப்பதை பவுல் அறிவுறுத்துகிறார்.

யோவானின் எழுத்துக்களில் உலகம் என்னும் வார்த்தை பல்வேறு பொருள்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கடவுளால் படைக்கப்பட்ட இந்தச் சடஉலகில் இயேசு வந்து விட்டுச் சென்றார் (யோ. 1:3; 6:14; 9:39; 11:27; 16:28; 17:5; 18:37). கடவுள் உலகில் அன்புகூர்ந்தார் (3:16). இந்த உலகமே இயேசுவுக்குப் பின் சென்றது (12:19). அவர் உலகத்துடன் பேசினார் (18:20) முதலிய தொடர்கள் மக்கள் நிறைந்த உலகத்தையே குறிக்கின்றன. இயேசு இந்த உலகத்துக்கு மீட்பர் ஆனார் (1:29; 4:42; 6:33). ஆனால் இந்த உலகத்துக்கு இன்னொரு பக்கமும் உள்ளது. வார்த்தையாக, ஒளியாக இறைமகன் உலகில் இருந்தும் உலகம் அவரை அறியவில்லை (1:10). மனித வடிவில் அவர் உலகுக்கு ஒளியாயிருந்தும் (8:12) உலகம் அவரைப் பகைத்தது (7:7). இந்த வகையில் அவர் உலகத்துக்குரியவரல்லர், மேலிருந்து வந்தவர் (8:23). ஆயினும் அவர் தம் வருகையால் இந்த உலகுக்குத் தீர்ப்பு உண்டாயிற்று, அதன் தீய ஆளுநர்கள் தள்ளப்படும் நிலையும் ஏற்பட்டது (12:31, 14:30, 16:11). தம் அடியாருக்கு உலகில் துன்பங்கள் இருப்பினும் தாம் அதனை வென்றுவிட்டதால் அவர்கள் துணிவுடனிருக்கலாம் என்று இயேசு கூறினார் (16:33). அவர் இந்த உலகத்திற்குரியவரல்லாதது போல அவர் தம் அடியவரும் இந்த உலகத்திற்குரியவர்களல்லர் (17:14,16). ஆயினும் இந்த உலகத்திலிருந்து அவர்கள் எடுத்துக் கொள்ளப்படாமல் தீமையிலிருந்து காக்கப்படுவதே அவரது மன்றாட்டாயிருந்தது (17:15). தாம் உலகில் அனுப்பப்பட்டது போன்று இயேசு தம் அடியவரையும் இவ்வுலகில் அனுப்பினார் (17:18). அவர் தந்தையோடு அவர்களுடன் அன்புறவு கொண்டிருப்பதும், அவர்கள் தங்களுக்குள் ஒன்றாயிருப்பதும் இந்த உலகம் நம்புவதற்கே ஆகும் (17:21,23).

யோவான் நற்செய்தி நூலில் உலகம் பற்றித் தரப்படும் கருத்துக்கள் யோவானின் மடல்களிலும் தொடருகின்றன. ஒருவர் உலகில் அன்பு கூர்ந்தால் தந்தையாகிய கடவுளின் அன்பு அவரிடம் இல்லை. ஏனெனில் ஊன் இச்சை, கண்களின் இச்சை, வாழ்வின் வீண்பெருமை முதலிய உலக இயல்புகள் தந்தையினுடையவையல்ல. உலகமும் அதன் இச்சைகளும் ஒழிந்துபோக, கடவுளின் திருவுளப்படி செய்வோர் என்றென்றும் நிலைத்திருப்பர் (1 யோ. 2:15-17). உலகம் முழுமையும் தீயோனுக்குள் கிடக்கிறது (5:19). கடவுளை அறிந்திடாத உலகம் அவர் தம் பிள்ளைகளைப் பகைப்பது இயல்பு (3:1,13). உலகில் எதிர்க்கிறிஸ்துக்களும், பொய்வாக்கினரும் இருப்பதால் கடவுளின் பிள்ளைகள் விழிப்பாயும் பகுத்தறிகிறவர்களாகவும் இருக்கவேண்டும் (4:1-5). இயேசு உலக மீட்பராக இருப்பதால், அவரது அடியவர் நம்பிக்கை மூலம் உலகை வென்றுவிட முடியும் (4:14, 5:4,5). ஆக, யோவானின் எழுத்துக்களில் கடவுளும் தீயோனும் எதிர் ஆற்றல்களாக வடிக்கப்படுவதுபோல் தோன்றினும் இறுதியில் கடவுளால் அனுப்பப்பட்ட இயேசு தீயோனை வென்றுவிட்டபடியால்

அவரின் சீடர்களும் தீயோனை இவ்வுலகில் வென்றுவிட முடியும் என்பதை அவை ஆணித்தரமாக அறிவிக்கின்றன.

உலகம் பற்றி நாம் இதுவரை பார்த்த கருத்துக்களே பு.ஏ. இன் வேறு பகுதிகளிலும் வருகின்றன. கடவுளால் படைக்கப் பட்ட உலகம் இயேசு உட்பட நீதிக்குச் சான்றாக வாழ்ந்தவர் களுக்கு உரியதாக இருக்கவில்லை என்பதை எபிரேயர் கடித ஆசிரியர் குறிப்பிடுகிறார் (எபி. 4:3; 9:26; 11:38). உலகில் ஏழைகளாயிருப்போர் தங்கள் நம்பிக்கை முன்னிட்டு இறை யரசுக்கு சொந்தமாவதை யாக்கோபு குறிப்பிடுகிறார் (2:5). எல்லா நல்வரங்களும் விண்ணகத் தந்தையிடமிருந்து வரினும், அடியவரைக் கறைப்படுத்தும் நிலையில் உலகம் இருக்கிறது (1:17,27). இந்நிலையைப் பற்றி பேதுருவும் எழுதுகிறார் (2 பேது. 1:4, 2:20). உலகத்தைப் படைத்தவர் இறுதிநாளில் நெருப்பினால் அதை அழிக்கவும் செய்வார் என்றும் அவர் குறிப்பிடுகிறார் (3:7,10,12). தொடர்ந்து நீதி குடிகொண்டிருக்கும் புதிய வானம் - புதிய பூமி கூறப்படுவதால் (3:13) நெருப்பால் அழிக்கப்படுவது இப்போதைய உலகின் தீமை என்று எடுத்துக் கொள்ளவும் வாய்ப்புண்டு. திருவெளிப்பாடு நூலின் மொத்தச் செய்தி உலகின் அரசாட்சி தீய ஆற்றல்களினின்று விடுவிக்கப் பட்டு ஆண்டவராகிய கடவுளுக்கும் அவர் கிறிஸ்துவுக்கும் உரியதாக்கப்படுவதாகும் (திருவெ. 11:15). எல்லாவற்றையும் தம் திருவுளத்தால் படைத்த கடவுள் (4:11, 10:6), எல்லா ஆற்றல்களையும் அடக்கி ஒரு புதிய வானத்தையும் புதிய பூமியையும் படைப்பார் என்ற காட்சியோடு (21:1மு) இந்நூல், பு.ஏ.இன் நிறைவாக, முடிவடைகிறது.

முழுப்படைப்புமே விடுதலை பெறுவதற்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறது (உரோ. 8:22) என்கிறார் பவுல். அவர் கருத்துப்படி இந்த ஏக்கத்தோடு இணைந்ததாகவே புது வாழ்வடைந்தோர் முழு உடல் மீட்பை அடையக் காத்திருப் பதும் அமைந்துள்ளது (8:23,24). ஆயினும் இப்படைப்போடு இணைந்தும், வேறுபட்டும், படைப்புக்குப் பொருள் விளக்கம் கொடுத்தும் இருப்போராக பு.ஏ.இல் மானிடர் வடிக்கப் படுகின்றனர். இனி மானிடரைப் பற்றி சற்று விரிவாகக் காண்போம்.

பறவைகளைவிடவும், விலங்கினங்களைவிடவும் மானிடர் சிறப்பானவர் என்று இயேசு கூறினார் (மத். 10:31; 12:10மு). அவரைப் பொறுத்தவரை முழு உலகம் ஆதாயப்பட்டாலும் அது வாழ்வுக்கு ஈடாகாது (மார். 8:37). மனித ஆளுமையை உள்ளும் புறமும் (7:14மு), ஊன் - ஆவி (14:38; மத். 26:41), உடல் - ஆன்மா (10:28) என்று இயேசு சில நேரங்களில் பிரித்துப் பேசினாலும் அது ஒருமைப்பாடுடையது என்ற யூதக் கருத்தையே அவர் ஏற்றிருந்தார். ஆன்மா - உடல் என்ற பிரிவுக்கு இடமளிக்கவில்லை. அவரது உயிர்த்தெழுந்த உடல்கூட ஊனும், எலும்பும், உறுப்புக்களும், ஆவியும் கூட்டுச் சேர்ந்த தாகவே இருந்தது (லூக். 24:39). ஆனால் பிறர் நலம் பேணி, அன்பு காட்டி ஒரு சமூக உயிரியாக வாழ்வதிலேயே மானிட வாழ்வின் சிறப்பு இருக்கின்றது என்பதை இயேசுவின் வாழ்வும், பணிகளும், போதனைகளும் எடுத்துக்காட்டுகின்றன. இச் சிறப்பு மானிடர் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவர், கடவுளைச் சார்ந்து வாழ வேண்டியவர் என்ற அடிப்படையுடன் இணைந்தது. மேலும், கடவுள் தம் சாயலில் மானிடரை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார் என்பதைச் சுட்டிக்காட்டிய இயேசு (மார். 10:6) தம் பணியில் பெண்களுக்கு ஆண்களைப் போன்றே சமஉரிமை கொடுத்தார். அத்துடன் மானிடக் குடும்பத்தில் குழந்தைகள் இறையரசின் முதல் உரிமையாள ராக மதிக்கப்படவேண்டும் என்பதையும் அவர் அறிவுறுத்தி னார் (10:14,15). கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட மானிடர் எந்த உலக ஆளுகைக்கும் அடிமைப்பட்டுவிடக்கூடாது என்ற பேருண்மையை உரோமப் பேரரசனுக்கு வரி கொடுப்பதைப் பற்றிய் விவாதத்தில் (12:15-17) இயேசு மறைமுகமாகச் சுட்டிக்காட்டினார்.

மானிடருக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் கடவுளுக்குக் கீழ்ப்படிவதே மேல் என்று தம் அடியவர் ஆணித்தரமாகப் பேசியது (திருத். 4:19, 5:29,32) இயேசுவின் மேற்கூறிய போதனையை எதிரொலிக்கின்றது. மானிட இனமான எல்லாரையும் கடவுள் ஒன்றிலிருந்தே உருவாக்கினார், ஒருவரும் அவருக்குத் தூரமானவர்கள் அல்லர் என்னும் உண்மை திருத் தூதுவர் உரைகளில் ஒங்கி நிற்கின்றது (17:26-28).

மனித ஆளுமையையும் அதன் தன்மையையும் விளக்கியதில் பவுல் தன்னிகரற்று விளங்குகிறார். ஆனால் அவர் பயன் படுத்தும் சொற்கள் கிரேக்கச் சிந்தனையின் தாக்கத்தை எடுத்துக்காட்டுகின்றன. ப.ஏ.இல் மானிடர் என்போர் உடல் - ஆன்மா என்று பிரிக்க முடியாத கூட்டு உயிரிகளாகக் காட்டப்படுகின்றனர். பு.ஏ.இன் புதியச் சூழலையும், கிரேக்கச் சொற்கள், சிந்தனைகளின் பாதிப்பையும் நாம் ஆழ்ந்து நோக்காவிடில் உடல் - ஆன்மா பிரிவை ஒத்துக் கொள்ளும் நிலைக்கே தள்ளப்படுவோம். ஆன்மா, ஆவி, ஊன், உடல், இதயம், மனம், மனச்சான்று, உள்ளான மனிதம் என்னும் சொற்கள் பவுலின் எழுத்துக்களில் கலந்து வருகின்றன.

ஆன்மா என்னும் சொல் உயிர் (உரோ. 11:3; 16:4; பிலி. 2:30), வாழ்வு (1 தெச. 2:8; 2 கொரி. 1:23), திருவுளம் (எபே. 6:6), தீமையால் பாதிக்கப்படக் கூடிய உள்நிலை (உரோ. 2:9), முழு ஆளுமை (2 கொரி. 12:15) என்னும் பல்வேறு பொருள் களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1 தெச. 5:23இல் மட்டும் ஆவி, ஆன்மா, உடல் என்னும் முக்கூறுகள் குறிக்கப்பட்டுள்ளன. இப்படி ஒரே சொல்லைப் பல்பொருள்களில் பயன்படுத்தி யிருப்பது குழப்பத்தையே ஏற்படுத்துகிறது. ஆயினும் ஆன்மா உடல் உருவாகுமுன்பே வாழ்கிறது, உடலிலிருந்து விடுவிக்கக் கூடியது என்ற கிரேக்க, இந்தியக் கருத்துக்கு பவுல் இடமளிக்க வில்லை என்பது தெளிவு.

ஆன்மா என்ற சொல்லைவிட ஆவி என்ற சொல்லை பவுல் அதிகமாகப் பயன்படுத்துகிறார். இதிலும் ஒரே பொருள் இல்லை. நாம் கடவுளின் பிள்ளைகளென்று ஆவியார் நம் ஆவியுடன் சாட்சி கொடுக்கிறார் (உரோ. 8:16) என்ற வசனத் தில் தூய ஆவியுடன் மனித ஆவி தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. ஆனால் 1 கொரி. 2:11இல் கடவுளின் ஆவி மனித ஆவிக்கு எதிரிடையாக வைக்கப்பட்டுள்ளது. அப்படியானால் கிறிஸ்து வினால் புதுப்படைப்பாக்கப்பட்டு ஆவிக்குரியவர்களாக வாழ்வோரே தூய ஆவியுடன் இணைகிறார்கள் என்கிற கருத்து இங்கு தொக்கி நிற்கிறது எனலாம். சில இடங்களில் உள்ளத்தைக் குறிக்கவும் ஆவி என்னும் சொல் பயன் படுத்தப்பட்டுள்ளது 1 கொரி. 16:18; 2கொரி. 2:13; 7:13). இந்த வகையில் உடலைப் போன்று ஆவியும் தீட்டுப்படக்கூடும் (7.1), தூய்மையாக்கப்படவும் கூடும் (1 கொரி. 7:34). ஆவிக்குரியவர்கள் கடவுளைச் சார்ந்து வாழ்கிறார்களே தவிர என்றென்றும் இருக்கும் ஆவியை உடையவர்கள் என்றோ, கடவுளின் ஆவியுடன் இரண்டறக் கலக்கிறவர்கள் என்றோ கருதப்பட இடமில்லை.

இதயம் என்பது வாழ்வின் மையம் (2 கொரி. 3:3), நம்பிக்கையின் தளம் (உரோ. 10:10), இறையொளி வீசத்தக்கது (2 கொரி. 4:6), தூய ஆவியைப் பெறக்கூடியது (1:22), முழு

ஆளுமையையும் குறிக்கும் (5:5); கிறிஸ்து வசிக்கக் கூடியது (எபே. 3:17), கிறிஸ்துவின் அமைதியால் ஆளப்படக்கூடியது (கொலோ. 3:16). இறைப்பற்றில்லாத இதயம் இச்சைக்குட் பட்டது (உரோ. 1:24); கடினப்படக்கூடியது (2:5). இதயத்திற்கு விருப்பமும், நோக்கும் உண்டு (10:1; 1 கொரி. 7,37). உதவி செய்யவும் அன்பு காட்டவும் இதயத்தைத் திறக்க முடியும் (2 கொரி. 7:2; பில. 7,20). ஆக, இதயத்தை ஓர் உடலுறுப்பாக பவுல் கருதாமல் உணர்வு, உள்நோக்கு ஆகியவற்றின் உருவேற்பிடமாகக் கருதுகிறார்.

மனம் (உள்ளம்) என்பது மனித ஆளுமையின் ஒரு தனிக்கூறாகப் பேசப்படாமல் அதன் சிந்தனையாற்றலையே சுட்டுகிறது. ஊனின் சிந்தை என்று கொலோ. 2:18இல் குறிக்கப்படுவது இதற்கோர் எடுத்துக்காட்டாகும். உள்ளத்தைத் தொடாத அளவில் உணர்வு (ஆவி) இருக்க முடியும் (1 கொரி. 14:14). கடவுளின் அமைதி புரிந்து கொள்ளும் உள்ளத்தையும் தாண்டி நம்மில் குடிகொள்ள முடியும் (பிலி. 4:7). கடவுளை அறிவால் பற்றிக் கொள்ளாவிடில் சிந்தை கெடும் (உரோ. 1:28). மனத்தைத் தீயோன் குருடாக்கவும் முடியும் (2 கொரி. 4:4); இறைவனின் திருவுளத்தை அறியத்தக்கவிதமாய் புதிதாக்கவும் இயலும் (உரோ. 12:2). கடவுளின் சிந்தையை அறிந்திட கிறிஸ்துவின் சிந்தை நம் சிந்தையுடன் இணைய வேண்டும் (1 கொரி. 2:16; பிலி. 2:5). மனத்தால் கடவுளின் திருச்சட்டத்துக்கு சேவை செய்ய முடியும் (உரோ. 7:25). இவ்வாறு மனம் தன்னுள் தானே நன்மையாகவோ தீமையாகவோ இல்லாமல், நன்மையாலும் தீமையாலும் அல்லது இறைவனாலும் தீயோனாலும் தூண்டப்படக்கூடியதாகவும் மாற்றப்படக்கூடியதாகவும் உள்ளது.

மனச்சான்று என்பது பல பொருள்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது. அது மனத்தோடு தொடர்புடையது, உள்ளுணர் வைக் குறிப்பது (2:15). நன்மை - தீமையைப் பகுத்தறியக்கூடிய இந்த உணர்வு எல்லா மானிடரிலும் உள்ளது. ஒருவர் நல்லது - கெட்டது செய்தால் மனச்சான்று அவரை உணர்த்தும் (2 கொரி. 1:12). பிறருடைய மனச்சாட்சியை உணர்த்தும் அளவிலும் ஒருவர் நடந்துகொள்ளலாம் (4:2; 5:11). மனச்சான்று மழுங்கிப்போன நிலையில் ஒருவர் தம்மைத் தாமே தீர்ப்பிடுவது தவறானதாயிருக்கும். எனவே, கடவுளின் தீர்ப்பே இறுதியானது (1 கொரி. 4:4). மனச்சான்று குற்றவுணர்வு அடையவோ கடினப்படவோ வாய்ப்புள்ளது (8:7; 1 தீமோ. 4:2). எனவே கடவுளின் தூண்டுதலுக்கு அதைத் திறந்து வைத்திருப்பது சிறப்பு.

ஊன் என்பது ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒவ்வொருவிதமாக உள்ளது (1 கொரி. 15:39). மனிதரும் ஒருவித ஊனால் (தசை யால்) பொதியப்பட்டுள்ளனர். இரத்தமும் சேர்ந்து மனித ஊன் உயிர்பெறுகிறது (கலா. 1:16). ஆயினும் அது பலவீன மானது. மனிதர் எவரும் தம் ஊனைப் பகைப்பதில்லை (எபே. 5:29). அதே நேரத்தில் ஊனின் இயல்பு இறைவனிடமிருந்து விலகிச் செல்வதாக இருக்க முடியும். எனவே ஊனில் வாழ்ந்தாலும் ஊன் இயல்புக்கேற்ப தாம் வாழவில்லை என்று பவுல் 2 கொரி. 10:3இல் குறிப்பிடுகிறார். ஊனியல்பின் வெளிப்பாடுகளாக இச்சை, பொறாமை முதலிய பாவங்களின் பட்டியலையும் அதற்கு எதிரான ஆவியின் கனிகளான அன்பு, அமைதி முதலிய பண்புகளின் பட்டியலையும் கலா. 5:16-26இல் படிக்கிறோம். இத்தகைய எதிர் துருவங்களை உரோ. 7இல் பவுல் இன்னொருவிதமாக விளக்குகிறார். அதன்படி, ஊனியல்பு திருச்சட்டத்தால் உணர்வு பெற்று சாவுக்கு ஏதுவான கனிகளைத் தந்தது. ஆனால் ஆவிக்குரிய ஒரு புது நிலைமை எழுத்திற்குரிய பழைய நிலையிலிருந்து அல்லது நீதிச் சட்டத்திலிருந்து விடுதலை தந்தது. நீதிச்சட்டம் தன்னுள்தானே தூய்மையுடையதாக இருந்தாலும் பாவ இயல்புக்கு அது உயிர் கொடுத்து ஓர் உளப் போராட்டத்தை ஏற்படுத்தியது. விரும்புவதைச் செய்யாமல் விரும்பாததைச் செய்யும் இப்போராட்டத்தை ஏற்படுத்திய பாவ இயல்புக்கு நீதிச் சட்டம் ஒரு தீர்வாக அமைய முடியவில்லை. உள் மனத்தில் உருவாகும் நல்லுணர்வு செயல்பட முடியாதபடி ஓர் ஊனியல்பு வாழ்க்கையை ஒரு பரிதாப நிலைக்குக் கொண்டு வருகிறது.

ஊனியல்பு உடலையும் பாதிக்கிறது. ஆனால் ஊனியல்பின் பாதிப்பிலிருந்து உடலை விடுவிக்கலாம். ஏனெனில் ஊனியல்பு இயல்பிலேயே உடலுடன் ஒட்டிக்கொண்டிருக்கவில்லை. கிறிஸ்துவும் கிறிஸ்துவின் ஆவியும் ஒருவரில் குடிபுகுந்தால் உடல் பாவத்திலிருந்தும் சாவிலிருந்தும் விடுபட்டிருக்கும் (உரோ. 8:10;11). உடல் ஒழுக்கக்கேட்டுக்கு உட்படுத்தப்படாமல், ஆண்டவருக்கு உரியதாக தூய ஆவியாரின் கோவிலாக விளங்கவேண்டும் (1 கொரி. 6:13-19). இதனால் உடலால் கடவுள் மாட்சியுறுவார் (6:20). எனினும் எதிர்காலத்தில் மீட்பு முழுமையுறும்போது உடல் உயிர் பெற்று ஆண்டவர் இயேசுவின் மாட்சி மிகும் உடலுக்கேற்ப மறுஉருவாக்கப்படும் (உரோ. 8:23; பிலி. 3:21). அதற்கிடையில் மனத்தில் புதுப்பித்தல் ஏற்படு வதுடன் உடலும் உயிருள்ள வேள்வியாக ஒப்படைக்கப்படும் உண்மை வழிபாடு நடக்க வேண்டியுள்ளது (உரோ. 12:1,2).

ஒட்டு மொத்தமாக நோக்கும்போது, மானிடர் கடவுளின் மாட்சிமைக்கென்று படைக்கப்பட்டவர்கள் என்று ப.ஏ. கருத்தை பவுல் அடிப்படையில் ஏற்றுக்கொள்கிறார் (1 கொரி. 11:7; உரோ. 1:21). ஆனால் ஒரே மனிதனால் உலகில் நுழைந்த பாவம் எல்லா மானிடரையும் பாதித்துவிட்டது (5:12மு; 1 கொரி. 15:22). இதனால் உள்ளுக்குள் போராட்டமும் சாவும் விளைந்தன. ஆனால் மானிட ஆளுமையின் வெளிநிலையையும், உள் நிலையையும் விளக்க பவுல் பல கிரேக்க வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். மேற்போங்காக இந்த வார்த்தைகளை வைத்து கிரேக்க மெய்யியலில் இருந்த உடல் - ஆன்மா என்ற இருமை நிலையை பவுல் ஏற்கிறார் என்போர் உளர். ஆனால் ஆழ்ந்து நோக்கும்போது, அவர் சில உட்கூறுகளைத் தனிப் படுத்திப் பேசினாலும் அடிப்படையில் மானிடர் உடலும் உயிராற்றலும் ஒருங்கிணைந்த உயிரிகள் என்ற ப.ஏ. கருத்தில் பவுல் உறுதியாக இருந்தார் எனலாம்.

யோவானின் எழுத்துக்களும் கடவுளின் படைப்புதான் மானிடர் என்றும், மானிட வாழ்வுக்கு மூலமும் ஒளியும் கடவுளே என்றும் சாற்றுகின்றன (யோ. 1:4; 1 யோ. 1:5). எந்த மானிட ரையும் ஒளிரச் செய்யும் உள்ளொளியாக அவர் இருந்தும் மனிதர் இருளையே விரும்பினர் (யோ. 3:19). ஆன்மாவுக்குரிய கிரேக்கச் சொல் (psyche) இங்கு உயிருக்கும் (12:25; 13:37; 15:13; 1 யோ. 3:16), உள்ளான உயிராற்றலுக்கும் (3யோ. 2) பயன்படுத்தப்பட்டுள்ளது. ஊனுக்கு (யோ. 6:63) எதிர்நிலையாக ஆவி (13:21) குறிக்கப்படுகிறது. ஆயினும் என்றென்றும் இருந்த இறைவார்த்தை ஊனுடல் ஏற்றபடியால் ஊனும் உடலும் இறைவனின் ஏற்புக்குரியவைகளே. உடலும் ஆவியும் ஒன்றித்து இறைவனுடன் சார்ந்து வாழ்ந்த முழு மானிட வாழ்வுக்கு இயேசு எடுத்துக்காட்டாய் விளங்கினார்.

மேலே கூறிய உண்மைகளே பு.ஏ.இன் ஏனைய பகுதிகளிலும் வருகின்றன. மனித ஆளுமையைக் குறிக்க உடல், ஊன், ஆவி, ஆன்மா, மனம், மனச்சான்று முதலிய சொற்கள் வரை முறைப்படுத்தப்படாத முறையில் குறிக்கப்படுகின்றன. மானிடர்

கடவுளின் படைப்பு என்றும் ஆனால் கடவுளைவிட்டு விலகி பிரிவுகளுக்கும் போராட்டங்களுக்கும் சாவுக்கும் உட்படும் வாய்ப்பு நிலையில் அவர்கள் உள்ளனர் என்றும் பு.ஏ. நூல்கள் வலியுறுத்தும் அடிப்படை உண்மைகள் ஆகும்.

பாவம் என்பதைப் பற்றியும் பு.ஏ. ஒரு கோட்பாட்டைத் தரவில்லை. நாம் ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று பாவத்தின் ஆற்றல் பல்வேறு விதங்களில் மனித வாழ்வில் செயல்படுகிறது. குறிப்பாக, பாவம் ஊனமுற்ற நிலையுடன் இணைத்துப் பேசப்பட்டது (எ.கா. திமிர்வாதக்காரர் - மத். 9:1-8; மார். 2:1-12; லூக். 4.17-26, பிறவிக்குருடர் - யோ. 9:1-12). இயேசு அதன் காரணத்தைப் பற்றிய விவாதத்தில் இறங்காமல் சுகமும் மன்னிப்பும் வழங்கி கடவுளின் மாட்சிமையை வெளிப் படுத்தினார். அதே நேரத்தில் இயேசு தங்களிடம் பாவம் இல்லை என்று நினைத்தவர்களின் பாவத்தைச் சுட்டிக் காட்டினார். விடுதலையின் நாளாகிய ஒய்வு நாளில் விடுதலைப் பணி செய்ததை எதிர்த்த சமய நெறியாளரை அவர் மன வருத்தத்துடனும் சினத்துடனும் நோக்கினார் (மார். 2:5). தம்மிடத்தில் அடையாளம் தேடி வந்தோரை பொல்லாத விபசாரச் சந்ததியார் என்று அவர் சாடினார் (மத். 12:39). பரிசேயர் - ஆயக்காரர் உவமையில் தம்மை நீதியராகக் காட்டிய பரிசேயரல்லர், பாவியாக எண்ணிய ஆயக்காரரே நீதியராக்கப்பட்டார் (லூக். 18:9-14). தாங்கள் யாருக்கும் அடிமையாக இருந்ததில்லை என்று கூறிய யூதரிடம் இயேசு பாவம் செய்வோர் எவரும் பாவத்துக்கு அடிமைகள் என்று எடுத்துக்கூறினார் (யோ. 8:32). எங்களை சோதனைக்குட்படப் பண்ணாமல் தீமையினின்று காத்தருளும் என்னும் வார்த்தைகள் இயேசு கற்பித்த இறைவேண்டலில் அடங்கியிருந்தன (மத். 6:13). எதிர்காலத்தில் தீமை பெருகி அன்பு குறைகின்ற ஒரு கட்டத்தைப் பற்றி இயேசு குறிப்பிட்டார் (24:12). ஆக இயேசுவின் கருத்தில் பாவம் என்பது தவறான மனப்போக்கையும், இறையுளத்திற்கு ஏற்காத செயல்களையும் குறித்து நின்றது.

பாவத்தின் விளைவு சாவு (உரோ. 6:23). பாவம் பற்றிய பவுலின் கருத்துக்களின் சாரம் இந்த வார்த்தைகளில் அடங்கியுள்ளது. ஊனியல்பு ஏற்படுத்தும் போராட்டத்தையும் சாவையும் பற்றி பவுல் எழுதுவதை ஏற்கெனவே பார்த்தோம். மேலும் மீறுதல் (கொலோ. 2:14), ஒழுக்கக் கேட்டுக்கு அடிமையாதல் (உரோ. 6:19), கீழ்ப்படியாமை (11:30), பொய்மை (1:18) முதலிய பல்வேறு சொற்கள் மூலம் அவர் பாவத்தின் தன்மையை விளக்குகிறார். இத்தகையச் சொற்கள் ஏனைய பு.ஏ. நூல்களிலும் காணப்படுகின்றன. திருவெளிப்பாடு நூல் உரோமைப் பேரரசின் ஆதிக்கத்தை அடக்குமுறையை, பாவம், இரத்தவெறி, வேசித்தனம் என்றெல்லாம் அழைக்கிறது. ஆக தனிமனிதர் முதல் பேரரசு வரை வெவ்வேறு தளங்களில், வெவ்வேறு வகைகளில் பாவத்தின் ஆற்றல் செயல்படுவதை பு.ஏ. விளக்குகிறது. நமக்குப் பாவமில்லை என்போமானால் நம்மை நாமே ஏமாற்றுகிறவர்களாயிருப்போம் என்று யோவான் கூறுவது (1 யோ. 1:8) உலகிலுள்ள அனைவருக்கும் பொருந்தும்.

8. புதுவாழ்வு

காலம் நிறைவேறிற்று, கடவுளின் அரசு அடுத்துவிட்டது, மனமாற்றமடைந்து நற்செய்தியில் நம்பிக்கை வையுங்கள். மார்க்கு தரும் தகவல்படி (1:15) இது இயேசு ஆற்றிய முதல் உரை. இயேசுவின் பணி, போதனை ஆகியவற்றின் கருப் பொருள் இவ்வசனத்தில் அடங்கியிருக்கிறது எனலாம். இயேசு வின் வரவினால் ஒரு புது யுகம் புரட்சியுகமாகத் தொடங்கி விட்டபடியால் வாழ்க்கையில் ஒரு புதுத் திருப்பம் வேண்டும் என்பது அழுத்தப்பட்டது. முழுக்கு முனிவர் யோவானின் போதனையிலும் மனமாற்றமடைதல் ஒரு கோரிக்கையாக முன்வைக்கப்பட்டது (மத். 3:2). இது மேற்போங்காக திருமுழுக்கு எடுத்து ஒருவர் தம்மில் மனநிறைவடைகின்ற ஒன்றாகப் போய்விடக்கூடாது. இதை உணர்ந்த யோவான் மன மாற்றத் திற்கான கனிகளைக் கொடுங்கள் என்று வலியுறுத்தினார் (லூக். 3:8). பொதுவாக, உள்ளவர்கள் இல்லாதாரோடு பகிர்ந்துகொள்வதும், வரி வாங்குவோர் விதிக்கப்பட் டிருப்பதற்குக் கூடுதலாக வாங்காதிருப்பதும், காவலர் தங்கள் சம்பளமே போதுமென்றிருந்து ஒருவருக்கும் இடுக்கண் செய்யா திருப்பதும் இக்கனிகளில் அடங்கும் (3:10-14). இயேசுவும் மனந்திரும்புதலுக்கென்று மக்களை அழைத்தார் (மார். 2:17). விளைவு செல்வந்தர் தங்கள் செல்வத்தை விட்டுவிடுவதும், மரபுப்பிடியிலிருந்த சமயப் பழமைவாதிகள் இறையரசின் விடுதலை ஒட்டத்தில் உட்படுவதுமாக இருந்தது. இவ்வாறு செய்யும்போது ஒருவர் மீட்பை அடைகிறார். எ.கா. சகேயு தம் சொத்துக்களில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கவும், தாம் எவரிடமிருந்தாவது அநீதமாய் வாங்கியிருந்தால் அதை நான்கு மடங்காகத் திரும்பக் கொடுக்கவும் முன்வந்தபோது இயேசு இந்த வீட்டுக்கு இன்று மீட்பு வந்தது என்று அறிவித்தார் (19:9).

மேற்கூறிய அறிவிப்பைத் தொடர்ந்து இயேசு காணாமற்போனதைத் தேடவும் மீட்கவுமே மனித மகன் வந்திருக்கிறார் என்று கூறினார் (19:10). இங்கு காணாமற்போனவர்கள் என்போர் ஏதோ ஒளிந்து கொண் டிருந்தவர்களல்லர். அவர்கள் சமூக, பொருளாதார, அரசியல் ஒடுக்குதலால் வெளிக்குத் தெரியாமல் அடக்கப்பட்டிருந்தவர்கள். சமூகத் தாழ்நிலையில் பாவிகள் என்று அழைக்கப் பட்டிருந்தவர்கள், சுமை சுமந்து சோர்வுற்றிருந்தவர்கள் (மத். 11:28). இப்படிப்பட்டவர்களுக்கு இயேசு விடுதலையையும், ஒய்வையும் வாக்களித்தார். அத்துடன் இப்படிப்பட்டவர்களும், இறையுறவிலிருந்து விலகிப் போனவர்களும் கடவுளால் ஏற்கப்படுவதையும் மன்னிக்கப்படுவதையும் இயேசு விளக்கினார். காணாமல் போன ஆடு, தூரம் சென்ற இளைய மகன், காணாமல் போன வெள்ளிக்காசு முதலிய உவமைகளை (லூக். 15) இயேசு தம் விளக்கத்திற்கு எடுத்துக்காட்டுகளாகக் கொண்டார். மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் உலகெங்கும் கூறி அறிவிக்கப்படவேண்டும் என்பது இயேசுவின் இறுதிக்கட்டளை (24:47). இதை முழுப்படைப்புக்கும் அறிவிக்கும் நற்செய்தி என்று மார்க்குவும் (16:15), எல்லா இனத்தவரையும் சீடராக்குதல் என்று மத்தேயுவும் (28:19) குறிப்பிடுகின்றனர். இப்பணியைச் செய்யவும், இறையாட்சியின் புது வாழ்வுக்குச் சின்னங்களாக வாழவும் இயேசு தம் சீடரை அழைத்தார். இயேசு கூறிய புதிய உண்மைகளை நம்புவது, அவரையும் அவருடைய சீடர்களையும் ஏற்றுக்கொள்வது மக்கள் முன் கோரிக்கைகளாக வைக்கப்பட்டன.

வாழ்வில் மன மாற்றமடைந்து, மன்னிப்பையும், இறை ஏற்பையும் உணர்ந்து இறையாட்சியின் புதுவாழ்வுக்குள் வருகின்றவர்கள் ஓர் உயர்ந்த வாழ்க்கை நெறிக்கு அழைக்கப் பட்டார்கள். இயேசுவின் மலைப்பொழிவு இந்த உயர்ந்த வாழ்க்கை நெறிக்கு விளக்கமாக அமைந்தது (மத். 5-7). இதற்கு அடிப்படை அன்பு. ப.ஏ.இன் திருச்சட்டம் முழுவதையும் ஆண்டவராகிய கடவுளிடம் ஒருவர் முழுமையாக அன்பு கொள்ளுதல், தம்மைப் போன்று பிறரையும் அன்புகூருதல் என்னும் இரட்டைநெறியில் இயேசு அடக்கிவிட்டார் (மார். 12:28-31; மத். 22:34-40).

மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் தொடக்கத் திருச்சபையின் நற்செய்தி அறிவின் கருப்பொருளாயிருந்தது (திருத். 2:38; 5:31; 11:18). பவுல் மீட்புக்கு முதற்படியாக மனந்திரும்புதலைக் கருதினார் (14:15; 17:30; 2 தீமோ. 2:25). நம்பிக்கை வைத்தல் அத்துடன் இணைக்கப்பட்டது (கலா.2:22; கொலோ. 2:12). ஆனால் காலப்போக்கில் பவுலும் ஏனையோரும் கிறிஸ்தவர் அடையும் புது வாழ்வை வெவ்வேறு கருத்து வடிவங்களால் விளக்கினர்.

ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் அவர் புதுப் படைப்பு, பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின (2 கொரி. 5:17). புதுவாழ்வு பற்றிய பவுலின் எண்ணங்களுக்கு இந்த வசனம் அடிப்படையானது எனலாம் (கலா. 6:15 பார்க்க). இதில் ஒருவர் கடவுளுக்குத் தம்மை ஒப்புவிப்பது (உரோ. 6:13,19; 12:1; 2 தீமோ. 1:12). ஆவிக்குரியவராவது (1 கொரி. 2:15). பாவம், நீதிச் சட்டம், சாவு ஆகியவற்றிலிருந்து விடுதலையடைவது (கலா. 5:1,13). நீதியராக்கப்படுதல் (உரோ. 1:17; 1 கொரி. 6:11). கடவுளுடன் ஒப்புரவாகுதல் (2 கொரி. 5:19-20). மீட்பை தலைச்சீராவாகப் பெறுதல் (எபே. 6:17). கிறிஸ்துவுக்குள் வாழுதல் முதலியவை உள்ளடங்கும்.

சமநோக்கு நற்செய்தி நூல்களில் சில இடங்களில் மட்டும் வருகின்ற நிலைவாழ்வு (மத். 16:16; 25:46; மார். 10:17; 10:30; லூக். 10:25) யோவானிய நூல்களில் அதிகமாகக் குறிக்கப் பட்டுள்ளது (யோ. 3:16; 10:28; 17:3; 1யோ. 5:11-13). மறுபடியும் பிறத்தல் என்னும் உருவகம் இவற்றில் பயன்படுத்தப்படுகின்றது (யோ. 3:1-15). முழுமையான வாழ்வு என்பது புதுவாழ்வைக் குறிக்கின்ற இன்னொரு சொல் (10:10).

குணமாக்குதல் என்ற உருவகச் சொல்லை இயேசுவிடமிருந்து கற்றுக் கொண்ட பேதுரு(லூக். 22:32), கிறிஸ்துவின் சிலுவையால் நாம் குணமாகின்றோம் என்கிறார் (1 பேது. 2:24). மீட்கப்படுதல், மறுபடியும் பிறப்பிக்கப்படுதல் என்னும் சொற்களையும் அவர் பயன்படுத்துகிறார் (1:19,23). இதுவரை புதுவாழ்வை விளக்க நாம் பார்த்த சொற்களையும் உருவகங்களையும் ஏனைய பு.ஏ. ஆசிரியர்கள் பயன்படுத்துகின்றனர்.

மீட்பின் வாழ்வுக்குள் வருவதற்கு நற்செய்தியில் நம்பிக்கை வைக்கவேண்டும், தம்மை நம்பி ஏற்கவேண்டும் என்றெல்லாம் இயேசு கூறினார். இதன் பொருள் என்ன? ஒரு கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் எண்ணியதாகத் தெரியவில்லை. பதிலாக, தம் வழியாக இறைவன் ஒரு புதுமை யைச் செய்துள்ளார் என்பதை நம்பி ஏற்க வேண்டும். இறைவன் இயேசுவில் வாழ்ந்து அவர் செயல்களை இயக்கினார் என்பதை இறைப்பற்றுள்ள அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் (யோ. 5). மேலும், இயேசுவின் வழியாக இறையாட்சி மிகுந்த ஆற்றலுடன் வந்துள்ளதைப் புதிய தகவுகள் வழியாகக் கண்டு அவற்றைக் கடைப்பிடித்தல் நலம். எ.கா. இறைவனை இயல் கடந்த ஓர் ஆற்றலாக எண்ணியவர்கள் இப்பொழுது வலுவற்ற ஒரு குழந்தையை ஏற்பதின் வாயிலாக இயேசுவையும் இறைவனையும் ஏற்க முடியும் (மார். 9:36,37). குழந்தைகளைப் போன்று இறையரசை ஏற்க வேண்டும் (10:15). தலைவராக இருக்க விரும்புவோர் ஒரு குழந்தையைப் போல் தம்மைத் தாழ்த்த வேண்டும் (மத். 18:1-5).

பற்றுறுதி (விசுவாசம்) என்பதை இயேசு இன்னொரு வகையிலும் புரிந்து கொண்டார். அதாவது, இருப்பு நிலையைத் தாண்டிச் சிந்தித்துச் செயல்படும் நிலையே அது. உன் பற்று றுதி உன்னை மீட்டது என்று வருகிற இடங்களிலெல்லாம் இந்த உண்மையே உணர்த்தப்பட்டது. இத்தகைய பற்றுறுதி பிற சமயத்தவரில் இருப்பதையும் இயேசு கண்டார் (எ.கா. 8:10; 15:28; லூக். 17:19).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை கொள், அப்போது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்கள் என்று பவுல் பிலிப்பி நகர்ச்சிறை காவலரிடம் கூறினார் (திருத். 16:33). இயேசுவை ஆண்டவரென்று வாயினால் அறிக்கையிட்டு, கடவுள் அவரை இறந்தோரிலிருந்து உயிரோடெழுப்பினார் என்று நம்பினால் மீட்படையலாம் என்று அவர் இன்னொரு இடத்தில் விளக்குகிறார் (உரோ. 10:9). நம்பிக்கையினால் நீதியராக்கப்படுதல் என்று பவுல் கூறுகிற இடங்களில் மானிடர் அனைவரையும் இயேசுவில் இறைவன் ஏற்றுக் கொண்டு விட்டார் என்பதை ஒப்புக் கொள்வதே அதன் பொருள் என்று தோன்றுகிறது.

மீட்கப்பட்ட வாழ்வாகிய புதுவாழ்வு முழுமையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. முடிவு மட்டும் நிலைத்திருப்போரே மீட்கப்படுவர் என்று இயேசு கூறினார் (மத். 10:22; மார்.13:13). இப்போது நாம் நீதியராக்கப்பட்டிருப்பது எதிர்கால மீட்பை உறுதிப்படுத்துகிறது என்று பவுல் எழுதுகிறார் (உரோ. 5:9). மாட்சிமையடைவோம் என்ற நம்பிக்கையோடு நாம் மீட்பை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் (13:11). அடைந்தாயிற்று அல்லது முற்றிலும் தேறிவிட்டோம் என்று சொல்லாதபடி நாம் எதற்காகப் பிடிக்கப்பட்டோமோ அதைப் பிடித்துக் கொள்ள ஆவலாய்த் தொடர வேண்டும் (பிலி. 3:12). மீட்பு நிறைவேற அச்சத்துடனும் நடுக்கத்துடனும் நாம் உழைக்க வேண்டியுள்ளது (2:12). நமக்கு நேரிடும் துன்பங்களை மீட்பின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு இறைவன் மாற்றியமைப்பார் (உரோ. 5:3; 2 கொரி. 1:16; 2 தீமோ. 2:10). மேலும் கிறிஸ்து வின் நிறைவான வளர்ச்சிக்குத் தக்கதாக (எபே.4:12), ஏன், கடவுளின் முழுமையால் நிரப்பப்படும் அளவில் (3:19) நாம் வளர வேண்டியுள்ளது. நாம் வளரும்படி, நாம் மறுபடியும், மறுபடியும் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல களங்கமற்ற ஞானப்பாலில் வேட்கை கொண்டிருக்க வேண்டும் (1 பேது. 2:3). கிறிஸ்தவர்கள் தொடர்ந்து மனம் மாற வேண்டியதின் தேவையை ஆவியர் சின்ன ஆசியாவின் ஏழு சபைகளுக்கு எடுத்துக் கூறுவதை திருவெ. 2,3 அதிகாரங்களில் படிக்கிறோம்.

புதுவாழ்வின் அறநெறியை நாம் ஆங்காங்கு ஏற்கெனவே சுட்டிக்காட்டினோம். ஊனியல்பின் செயல்களை ஒழித்து விட்டு ஆவியின் கனிகளைக் கொடுக்க வேண்டுவது பற்றியும் குறிப்பிட்டோம். புதுவாழ்வைத் தூய்மையும், ஒழுக்கமும், நன்மை யும் நிறைந்த வாழ்வு என்று பொதுவாகக் கூறிவிடலாம். எனினும் இயேசு அடிப்படையாகக் கொண்ட அன்பின் வாழ்வு பு.ஏ. முழுவதிலும் அறிவுறுத்தப்படுகிறது. ஒருவரில் ஒருவர் அன்பு காட்டுவதை பவுலும் (உரோ. 10:13; கலா. 5:14); யோவானும் (யோ. 13:35; 15:12,17; 1 யோ. 3:14,23; 4:16,20). பிற ஆசிரியர்களும் (யாக். 2:8; 1 பேது. 1:22; 3:8) திரும்பத் திரும்பக் கூறுகின்றனர்.

புதுவாழ்வின் ஒரு கூட்டு வெளிப்பாடே திருச்சபை எனலாம். இயேசு கூறி, அறிவித்து, தம் வாழ்வில் எடுத்துக் காட்டியும் சென்ற இறையாட்சியின் தகவுகளை இவ்வுலகுக்கு வெளிப்படுத்த அவரைப் பின்பற்றிய சீடர்கள் ஒரு மக்கள் இயக்கமாக உருவாயினர். அரசியலின் மேலாதிக்கத்தை எதிர்த்தவர்களாகச் சிலுவையில் அறையப்பட்டு பின் உயிரோடெழுப்பப்பட்ட இயேசுவைத் தங்கள் ஆண்டவர் என்று இவர்கள் அறிக்கை செய்தனர். சமூகத்தில் ஆண்-பெண்,

யூதர்-கிரேக்கர், அடிமை-உரிமையாள் வேறுபாடுகளுக்கு அப்பால் தொடக்கக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒரே மனிதர் என்று கூறும் அளவில் புதிய மானிடத்தின் சின்னமாக இருக்க முயன்றார்கள் (கலா. 3:28). பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை முறியடிக்கும் முயற்சியாக அவர்கள் பொதுவுடைமையையும், பகிர்ந்து கொள்ளுதலையும் செயல்படுத்தினார்கள் (திருத். 2:42-46). ஆனால் இந்த முயற்சிகளெல்லாம் முழு வெற்றியடைந்தன என்று சொல்வதற்கில்லை. திருச்சபை புதியச் சூழல்களையும் அறைகூவல்களையும் சந்தித்தபோது பல குறைபாடுகள், தளர்வுகள் ஏற்பட்டன.

பு.ஏ.இன் திருச்சபையின் அமைப்பு, வாழ்க்கை, பணி முதலியவற்றைப் பற்றி இந்நூலின் அடுத்த கட்டுரை விவரிக்கிறது. எனவே இங்கு ஒரிரு குறிப்புக்களை மட்டும் காண்போம். வரலாற்றில் எழுந்த கிறிஸ்தவத்தை நோக்கும்போது இப்படியொரு திருச்சபையை இயேசு உருவாக்க விரும்பினாரா என்பது கேள்விக்குரியது. எப்படியும் அவர் புதுமையாகத் துவக்கி வைத்த இறையாட்சியின் நெறியைச் செயல்படுத்தவும் பரப்பவும் தம் அடியவரின் கூட்டுறவு உருப்பெறுவதை அவர் எதிர்நோக்கினார் என்று கருதுவதில் தவறில்லை.

ப.ஏ.இல் குறிக்கப்படும் இறைமக்களின் தொடர்ச்சியும் விரிவாக்கமும் தான் திருச்சபை. ஆனால் இறைவார்த்தையின் மன்னுருவாக விளங்கிய இயேசுவுடன் அது கொண்ட உறவிலும், பணியிலும் புதிய களங்களையும், தளங்களையும் தன்னுள் ஏற்றுக் கொண்டது. எனவே ப.ஏ.இன் பட்டப் பெயர்களும் புதிய பட்டப் பெயர்களும் திருச்சபைக்குச் சூட்டப்பட்டுள்ளன. ஆபிரகாம் தங்களின் தந்தை என்று பெருமையுடன் பேசிய யூதர்கள் ஆபிரகாமின் வழியினின்று தடம்புரண்டு போனதை முழுக்கு முனிவர் யோவானும் இயேசுவும் எடுத்துக் காட்டினார்கள் (மத். 3:7-9; லூக். 3:7-9; யோ.8:39-44). அதே நேரத்தில் பால், பொருளாதாரம், வேலை முதலியவை முன்னிட்டு யூத சமூகத்தில் அன்னியமாக்கப்பட்டிருந்தோரை ஆபிரகாமின் பிள்ளைகள் என்று அவர்கள் மற்றவர்களுக்கு உறைக்கும்படி அழைத்தார்கள் (லூக். 13:16; 16:23மு; 19:9). பின்னர் இந்த உரிமை புற இனத்தவர்களுக்கும் கொடுக்கப் பட்டது (கலா. 3:7,9,29; 4:28-31). மேலும் இஸ்ரயேலரைப் போன்று கிறிஸ்தவர்களும் அழைக்கப்பட்டவர்கள் (1 கொரி. 1:9,24,26; 1 பேது. 2:21), தூயவர்கள் (1 கொரி. 1:2; 14:33; 2 கொரி. 1:1), அரசார்ந்த ஆசாரியக் கூட்டத்தினர் (1 பேது. 2:5,9), மந்தை (லூக். 12:32; 1 பேது. 5:2). அத்துடன் இயேசுவோடுள்ள அவர்களின் ஆன்மிகத் தொடர்பால் அவர்கள் சீடர் (மத். 28:19; திருத். 6:1; 9:1,16; 11:26), இயேசுவாகிய திராட்சைச் செடியில் இணைந்த கிளைகள் (யோ. 15:1-8), சாட்சிகள் (திருத். 1:8; 2:32; 10:39,41), சகோதரர் (மத். 12:50; திருத். 1:16; 6:3; 9:30; 10:23; 21:7,17), பற்றாளர் (2:44; 4:32), இயேசுவின் உடல் (உரோ.12:4,5; 1 கொரி. 12:14-27; எபே. 4:15,16), கடவுளின் வீட்டார் (எபே. 2:19; 1 பேது. 4:17), கிறிஸ்துவின் மணமகள் (எபே. 5:25-27; 1 கொரி. 11:2,3), கோவில் (1 கொரி. 2:16,17; எபே. 2:21,22), கட்டிடம் (2:20-22; 1பேது. 2:5). ஆக, திருச்சபையார் ப.ஏ.இன் இறை மக்களுடன் இணைந்தும் தனித்தும் நிற்கிறார்கள்.

அழைக்கப்பட்டது பணி செய்யவே என்பது திருச்சபைக்குத் திரும்பத் திரும்ப உணர்த்தப்பட்டது. இயேசுவில் கடவுள் செய்த புதுமையை, உருவாக்கிய புதிய மானிடத்தை திருச்சபையினர் எங்கும் எடுத்துக்கூறினர். அதே நேரத்தில் ஏழைகளைப் பற்றிய தனிக்கவனம் (கலா. 2:9,10) அவர்களின் பணியில் இருந்தது. பணியை ஒழுங்குபடுத்தவும் ஒருங்கிணைக்கவும் சில அமைப்புகள் தோன்றின. எல்லா பணிகளும் ஒரே கடவுளின் மாட்சிமைக்கென்று, இயேசுவின் வழி நின்று, தூய ஆவியாரின் துணையுடன் செய்யப்படுபவை என்று விளக்கப்பட்டது. இவ்வாறு புதிய வாழ்வின் சின்னமாகவும் பணிக்குழுவாகவும் விளங்கிய திருச்சபை நாளுக்கு நாள் வளர்ந்தது. புதிய கூட்டுறவின் நுழைவுக்குத் திருமுழுக்கும், அதன் நிலையான தொடர்ச்சிக்குத் திருவிருந்தும் அடையாளச் செயல்களாகக் கடைப்பிடிக்கப்பட்டன.

9. நல்லெதிர் காட்சி

இறையரசு வந்துவிட்டதா அல்லது இனிதான் வருமா? இது பற்றி இயேசுவின் கூற்றுக்களின் அடிப்படையில் விவிலிய அறிஞர் வலியுறுத்திய வேறுபட்டக் கருத்துக்களை முந்திய கட்டுரையில் படித்தோம். இறையாட்சி அடுத்துவிட்டது (மார். 1:15), உங்களிடையே வந்துவிட்டது (மத். 12:28; லூக். 11:20), அது ஓர் இரகசியம் (மார். 4:10,11), விதை போன்று, பயிர் போன்று, புளித்தமா போன்று, முத்துப் புதையல் போன்று கண்களுக்குத் தெரியாமல் வளர்ந்து பரவுவது (4:26மு; மத். 13:33,44), உங்களுக்குள்ளேயே இருக்கிறது (லூக். 17:21) என்றெல்லாம் ஒருபுறம் பேசினார். ஆனால் மறுபுறம் அவர் உம்முடைய அரசு வருக என்று வேண்டுதல் செய்யக் கற்றுத் தந்தார் (மத். 6:9), இங்கே நிற்கிற சிலர் இறையாட்சி வல்லமையோடு வருவதைக் காணுமுன் இறப்பதில்லை என்றார் (மார். 9:1). இயேசு சிலுவையில் தொங்கிய போது அவருடன் தொங்கிய கள்வருள் ஒருவன் நீர் உம் அரசில் வரும்போது என்னை நினைத்தருளும் என்று கேட்க, இயேசு இன்று என்னுடன் நீ பரதீசில் இருப்பாய் என்றார் (லூக். 23:42,43). உயிர்த்தெழுந்த இயேசு பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுமுன் அவருடைய சீடர்கள், இக்காலத்திலா அரசை இஸ்ரயேலருக்குக் கொடுப்பீர்? என்று கேட்க அவர் தந்தை தம் ஆளுகையில் வைத்திருக்கும் காலங்களை அறிவது உங்களுக்கு அடுத்ததன்று, நீங்கள் தூய ஆவியின் ஆற்றல் பெற்று உலகெங்கும் சாட்சிகளாயிருங்கள் என்றார் (திருத். 1:6-8). மார். 13:3-37; லூக். 17:20-37 முதலிய பகுதிகளில் அத்நாள்களில் அல்லது மனிதமகன் நாள்களில் என்று குறிக்கப்படுபவை வரலாற்றில் உடனடியாக நடக்கவிருந்தவையா அல்லது உலக முடிவில் நடக்கப்போகின்றவையா என்பது தெளிவாக இல்லை. மேலும் நிலை வாழ்வை அடைதல், மறுமை, அந்த நாளையும் நாழிகையும் போன்ற சொற்களையும் இயேசு பயன்படுத்தினார். இவை அனைத்தையும் திரட்டிப் பார்க்கும்போது பின்வரும் உண்மைகள் தெளிவாகின்றன. (i) எதிர் காலத்தைப் பற்றிய காட்சி இருந்த தேயன்றி திட்டமாக நடக்கும் நிகழ்ச்சிகள், நேரம் குறித்த விவரங்கள் இல்லை. (ii) இயேசு பேசிய இறையரசைப் பற்றிப் புரிந்து கொள்ளுவதில் அவரின் சீடருக்கே பிரச்சனை இருந்தது. (iii) இறையரசின் செயல்பாடு, நிறைவு ஆகியவற்றில் நிகழ்காலமும் எதிர்காலமும் இணைக்கப்பட்டிருந்தது. அதாவது, வந்துவிட்ட இறையரசின் ஆற்றலை அறிந்து விரைவாகவும் உற்சாகமாகவும் செயல்படுவது வலியுறுத்தப்பட்டுள்ளது. (iv) விரைவில் நடக்கப் போகின்றவைகளாக இருந்தாலும் இறுதியில் நடப்பவையாக இருந்தாலும் இயேசுவைப் பின்பற்றுவோர் அவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் தங்கள் வாழ்வில் நம்பிக்கை இழக்காமல் பணி செய்யவேண்டும்.

ப.ஏ.இன் காட்சியைப் போன்று பு.ஏ.இலும் புதிய வானம்-புதிய பூமி எதிர்நோக்கப்படுகிறது (ஏசா. 65:17; திருவெ. 21:1). இங்கு பழையவை ஒழிகின்றன என்பதை முழு அழிவாக எண்ணாதபடி நீமையான தகவுகள் அழிவதாக எடுத்துக் கொள்ளலாம். அப்படியானால் இந்த உலகம் வெந்துருகி

அழிந்து போகும் என்று சொல்லப்படும் ஒரு சில பகுதிகளை (2 பேது. 3:10-13) எழுத்துக்கு எழுத்தாக நோக்காமல் தீமை அழிந்து, நீதி நிலைத்திருக்கும் புத்துலகம் படைக்கப்படும் என்று விளங்கிக் கொள்ள வாய்ப்பு உண்டு. முழுபடைப்புமே விடுதலைக்காக ஏங்கித் தவிப்பதைப் பற்றியும் (உரோ. 8:22), எல்லாவற்றையும் தம் ஆளுகையின்கீழ் கொண்டு வந்தபின் ஆண்டவராகிய இயேசு அரசை தந்தையிடம் ஒப்படைக்க, கடவுளே எல்லாவற்றிலும் எல்லாமுமாய் இருப்பார் (1 கொரி. 15:24-28) என்றும் பவுல் எழுதுவது இவ்விளக்கத்தை ஆதரிப்பதாக உள்ளது.

புதிய வானம் - புதிய பூமி பற்றிய காட்சியை ஒட்டி வேறு சில நிகழ்வுகளையும் பு.ஏ. விவரிக்கிறது. அதில் ஒன்று இயேசுவின் இரண்டாம் வருகை ஆகும். மின்னலைப் போன்று, திருடன் வருகிறவிதமாய், தம் அடியாருக்கென்று ஓர் இடத்தை ஒதுக்கி விட்டு தாம் திரும்ப வருவதாக இயேசு கூறினார் (லூக். 17:24; 12:39,40; யோ. 14:3). தங்கள் காலத்திற்குள்ளேயே இயேசு திரும்ப வருவார் என்று பவுல் போன்ற அடியார் எதிர்பார்த்ததாகத் தெரிகிறது (1 கொரி. 15:51,52; 7:29; 1 பேது.4:7). இது நிகழாது என்று தெரிந்தவுடன் கடவுளுக்கு ஆயிரம் நாள் ஒரு நாளைப் போன்றது என்றும் அவர் 'மக்களின் நலன் கருதி நீடிய பொறுமையுடன் இருக்கிறார் என்றும் கருதப்பட்டது (2 பேது. 3:8,9). எப்படியும் யாரும் அறியாத நேரத்தில் எதிர்பாராதவிதமாய் இயேசு வருவார் என்பதால் அனைவரும் விழிப்பாயிருந்து செயல்பட வேண்டுமென்பது அறிவுறுத்தப் பட்டது (மார். 13:32; 1 தெச. 5:1-11).

இயேசுவின் வருகை இப்போது காணப்படும் உலகுக்கு முடிவாகவும் இருக்கும். அந்தக் கடைசி நாள்களில் துன்பங்களும் எதிர்க் கிறிஸ்துவின் ஆட்சியும் நேரிடும் என்ற எதிர்பார்ப்பும் சிலரிடையே இருந்தது (மத்.24:24,29; 2 தீமோ. 3:15; 1 யோ. 2:18,22; 2 யோ. 7; 2 தெச. 2:3-12). இங்கேயும் இவை உடனடி நிகழவிருந்தவையா அல்லது யுக முடிவில் நிகழ்பவையா என்பது தெளிவில்லை. குறிப்பாக, பாழாக்கும் அருவருப்பு என்று இயேசு கூறுவது (மத். 24:25; மார். 10:14) கி.பி. 70இல் உரோமர் எருசலேமை அழித்த நிகழ்ச்சியைக் குறிக்கலாம். ஏனெனில் இத்தகைய நிகழ்ச்சி கி.மு. 2ஆம் நூற்றாண்டில் எப்பிபானஸ் என்பவன் எருசலேம் கோவிலைத் தீட்டுப் படுத்தின போது நடந்தது (தானி. 11:31).

மேலும் இறந்தோர் உயிர்பெற்றெழுவதும் இயேசுவின் இரண்டாம் வருகையோடு சேர்த்து எதிர்நோக்கப்பட்டது. இறந்தோர் உயிர்த்தெழுவர் என்று பரிசேயர் கொண்டிருந்த நம்பிக்கையை இயேசு ஏற்றிருந்தார். இறைவன் என்றென்றும் இருக்கிறவராக இருப்பதாக வெளிப்படுத்தியுள்ளதை இதற்கு அவர் சான்றாகக் கொண்டார். உயிர்த்தெழுதலில் எல்லோரும் சமமாக இறைத்தூதுவர்கள் போல் இருப்பர் என்றும் இயேசு கூறினார் (மத். 22:29-33). ஆயினும் இறந்தோரை இயேசு உயிரோடெழுப்பியதும், தாமே உயிரோடெழுந்து இறுதி எதிரியாகிய இறப்பை வென்றதும் அவர் அடியார் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொள்ள ஆதாரங்களாயின. அத்துடன் இயற்கையில் விதை முளைப்பது போன்று புதைக்கப்பட்ட உடல் கடவுளின் மாட்சிக்கேற்ப மறுவுருவாகும் போன்ற விளக்கங்களை பவுல் கொடுத்தார் (1 கொரி. 15:35-34). இயேசுவின் வருகையில் இறந்தோரில் அவர் அடியவர் உயிர்பெற்று பின் ஆயிர வருட அரசாட்சி நடக்கும் என்று குறிப்பை திருவெ. 20:1-8இல் படிக்கிறோம். தீமையின் மேல் கடவுள் இறுதி வெற்றியடைவதை உருவக நடையில் (எ.கா. பழம்பெரும் பாம்பு பாதாளக்குழியில் எறிந்து விடப்படுதல்) வடிக்கும் இக்காட்சியை வைத்து எதிர்காலத்தின் ஒரு நிகழ்வுப்பட்டியல் இங்கு தரப்படுகிறது என்று சொல்வதற்கில்லை.

எதிர்காலக் காட்சியின் இன்னொரு கூறு நீதித்தீர்ப்பு ஆகும். இது நிகழ்காலத்துடன் இணைந்தது. இயேசு நீதித் தீர்ப்பைப் பற்றி தம் போதனையில் குறிப்பிட்டார். ஆனால் அவர் தம் காலத்து வரலாற்றில் இதை எதிர்பார்த்தாரா அல்லது இறுதி காலத்து நிகழ்ச்சியாகக் கண்டாரா என்று திட்டமாகக் கூற முடியாத அளவில் அவரது உரைகள் உள்ளன. எ.கா. மத்தேயு தரும் தகவல்படி மனிதமகன் தம் தந்தையின் மாட்சிமையில் வரும்போது அவரவர் செயலுக்கேற்ற பலன் கிடைக்கும் என்று கூறிவிட்டு, இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனிதமகன் தம் ஆட்சியில் வருவதைக் காணுமுன் இறப்பை சுவைப்பதில்லை என்று இயேசு கூறினார் (மத். 16:27,28). இதுபோல் விருந்துக்கான அழைப்பைப் புறக்கணித்து அழைப்பைக் கொடுத்த ஊழியரை அவமானப்படுத்தி, கொலை செய்தோரை அரசர் அழித்து அவர்களின் ஊரையும் சுட்டெரிப்பது ஓர் உவமையில் கூறப்பட்டுள்ளது (22:1-10). இதற்கு முந்தி வரும் திராட்சைத் தோட்ட உவமையிலும் (21:33-41) இதே செய்தியே தரப்படுகிறது. ஆனால் நல்ல பயிர்-களைகள் பிரிவு கடைசியில் செய்யப்பட்டு களைகள் (பொல்லாதோர்) சுட்டெரிக்கப்படுவதையும் இயேசு கூறுகிறார் (13:36-43; 45:50). நீதித் தீர்ப்பின் நாள் என்னும் சொல்லை மத்தேயுவில் மட்டும் படிக்கிறோம் (10:15; 11:22,24; 12:36). நாள் என்பதை விட்டுவிட்டாலும் தீர்ப்பு உண்டு என்பதை லூக்காவிலும் படிக்கிறோம் (லூக். 10:14; 11:31-32). இயேசுவின் கூற்றுப்படி மனிதர் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் கூட தீர்ப்பு நாளில் கணக்குக் கொடுக்க வேண்டும்(மத். 12:36) மேலும் மிகச் சிறியராக எண்ணப்பட்ட தம் சீடர்கள் இஸ்ரயேலரின் பன்னிரு கோத்திரங்களையும் நீதி விசாரிப்பது (19:28; லூக். 22:30), இந்தச் சிறியரில் ஒருவருக்கு உண்ட, உணவு, புகலிடம் முதலியவற்றைக் கொடுத்தவர்கள்-கொடுக்காதவர்கள் என்று மக்களைப் பிரிப்பது (மத். 25:31-46) முதலிய இயேசுவின் குறிப்புக்களில் இவ்வுலகில் புறக்கணிக்கப்படுவோர் இறுதியில் உயர்ந்த நிலையைப் பெறுவர் என்ற உண்மை அறிவுறுத்தப்படுகிறது.

இயேசுவை இறைவன் மானிடத்தின் நீதிபதியாக ஏற்படுத்தியிருக்கிறார் என்ற குறிப்பு இயேசுவின் அடியவர் கூற்றில் திரும்பத் திரும்ப வருகிறது (திருத். 10:42; 17:30,31). அத்துடன் கடவுள் தம் நீதியை நிறைவேற்றும் சினமிகு தண்டனையின் நாள்(உரோ. 1:17-18; 2:1-11), இறைத் தீர்ப்பின் நாள் (2:16), தண்டனைத் தீர்ப்பு (5:16), கடவுளின் நீதியுள்ளத் தீர்ப்பு (2தெச. 1:5), செயலுக்கேற்ப பலன் பெறுதல் (2 கொரி. 5:10; கலா. 6:7) முதலிய வார்த்தைகள் பவுலின் எழுத்துக்களில் அடிக்கடி வருகின்றது.

யோவான் இப்பொழுதே இயேசுவின் வரவால் உலகம் நீதித் தீர்ப்புக்குள்ளாகியிருப்பதையே பெரிதும் வலியுறுத்துகிறார் (யோ. 3:18,19; 5:30; 12:31; 16:8). தாம் உலகத்தைத் தீர்ப்பிட வராமல் அதை மீட்க வந்ததாக இயேசு கூறினார் (12:47). ஆனால் தீர்ப்பு உண்டாகவே அவர் உலகுக்கு வந்தார் (9:39) அவர் வார்த்தைகளைப் புறக்கணிப்போரை இறுதி நாளில் அவர் வார்த்தைகளே தீர்ப்பிடும் என்றும் அவர் குறிப்பிட்டார் (12:48). அதே நேரத்தில் உலகத்தைத் தீர்ப்பிடும் உரிமையை கடவுள் இயேசுவுக்குக் கொடுத்திருக்கிறார் என்பதை மக்கள் உணர வேண்டும். அவர் வார்த்தைகளை ஏற்று அவரை அனுப்பிய இறைவனை நம்புவோர் நிலைவாழ்வை உடையவர்களாயிருப்பதால் தீர்ப்புக்குள்ளாகமாட்டார் (5:22-24).

இயேசுவின் நிலைவாழ்வை ஏற்று, அன்புடன் வாழ்வோருக்கு இறுதித் தீர்ப்பு நாளைப் பற்றிய அச்சம் இருக்காது (1 யோ. 4:17,18).

பிற எழுத்தாளர்களும் நீதித் தீர்ப்பைக் குறிப்பிடத் தவறவில்லை. எபிரேயர் கடித஧ ஆசிரியர் கடவுளாகிய ஆண்டவரின் தீர்ப்பு (எபி. 10:30) அஞ்சத்தக்க தீர்ப்பு (10:27,29,31) என்று கூறி தம் வாசகரை எச்சரிக்கிறார். ஒரே முறை இறப்பதும் பின் தீர்ப்படைவதும் மனிதருக்கு விதிக்கப்பட்டிருக்கிறது என்பது அவரின் உறுதிப்பாடு (9:27). ஆண்டவரின் வருகை அடுத்திருப்பதால் நீதிபதி வாசலருகே வந்திருக்கிறார் என்று கூறி யாக்கோபு தம் வாசகரை விழிப்படையச் செய்கிறார் (யாக். 5:7-9). இதே அவசரம் பேதுருவின் வார்த்தைகளிலும் தொனிக்கிறது (1 பேது. 4:5). அவரைப் பொறுத்தவரை நீதித் தீர்ப்பு கடவுளின் வீட்டில் துவங்கும் காலம் வந்துவிட்டது (4:17). கடவுளின் மக்களுக்குரிய முழுபலன் வரப் போவதால் அவர்கள் துன்பங்களைப் பொறுத்து ஆவலோடு காத்திருக்க வேண்டும். ஏனையோர் அழிவை எண்ணி அஞ்சி நடுங்க வேண்டும். மேலும் பேதுருவின் இரண்டாம் கடிதத்திலும் யூதாவிலும் இறுதித் தீர்ப்பு ஒருபுறம் குறிக்கப்பட்டிருக்க, சோதோம், கொமோரோ, விழுந்துவிட்ட விண்தூதுவர் தண்டனை பெறுவது போன்ற மறைபொருள் இலக்கியக் கூறுகள் காணப்படுகின்றன (2 பேது. 2:1.4.6; 3:7.10.12.14; யூதா. 6,14-15.21.23.24). திருவெளிப்பாடு நூல், சின்னாசியாவின் ஏழு சபைகளின் செயல்களுக்கேற்ற பலன் உடனே கிடைக்கும் என்ற செய்தியுடன் இறுதித் தீர்ப்பையும் இணைக்கின்றது (அதி. 2,3). இதற்கு மேலாக உரோமையின் அநீதிக்கு எதிராக, அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக இந்நூல் கடவுளின் இறுதித் தீர்ப்பையும் வெற்றியையும் வடிக்கிறது (6:9,10). கடவுளின் சினம் மிகவும் துடிப்பான மொழிநடையில் குறிக்கப்பட்டுள்ளது (6:16; 11:18; 14:10; 16:19; 19:15). நீதியின் அரியணை (20:11)யில் வீற்றிருக்கும் ஆண்டவர் மனிதரின் செயல்களுக்கு ஏற்ப தீர்ப்பு வழங்குவார் (20:12). விரைந்து கொண்டிருக்கும் இயேசுவின் இரண்டாம் வருகையில் உள்ளிருப்பவர் - புறம்பே இருப்பவர் என்ற பிரிவு தெளிவாகிவிடும் (22:12-15).

இறையரசு என்பது, குறிப்பாக மத்தேயு நற்செய்தி நூலில், விண்ணரசு என்று அழைக்கப்படுகிறது. கடவுள் விண்ணில் உயர்ந்திருக்கிறார் என்ற யூதக் கருத்தையும் மொழி நடையையும் பின்பற்றி புஏ.உம் விண்ணகம் (பரலோகம், மோட்சம்) பற்றிப் பேசுகிறது. இயேசு விண்ணை நோக்கி வேண்டிக் கொண்டது, விண்தூதுவர்களைப் பற்றிக் குறிப்பிட்டதையெல்லாம் இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம் (மத். 18:11). தம் தந்தையின் வீட்டில் பல அறைகள் உண்டு என்று இயேசு ஒரு முறை கூறினார் (14:2,3). விண்ணின் கட்டிடம் என்று பவுல் குறிப்பிடுகிறார் (2 கொரி. 5:1). ஆனால் இக்குறிப்புக்களை எழுத்துக்கெழுத்தாக எடுத்துக் கொண்டோமானால் பல சிக்கல்கள் எழும். எ.கா. உயிர்த்தெழுதலின்போது கொள்வினை, கொடுப்பினை இராமல் எல்லாரும் விண்தூதுவர்கள் போலிருப்பார்கள் என்று கூறிய இயேசு (லூக். 20:34-36), தாம் பாஸ்கா திருவிருந்தில் இறுதியாக தம் சீடர்களுடன் அப்பம் உண்டு, திராட்சை ரசம் பருகியபோது, இறையாட்சியில் நிறைவேறுமளவும் தாம் இவற்றில் பங்கேற்பதில்லை என்று கூறினார் (22:15-18). அப்படியானால் மறுமையில் இவற்றில் பங்குபெறும் வாய்ப்பு உண்டு என்று தெரிகிறது. ஆனால் உடலும் இரத்தமும் இறையரசைக் கட்டிக் கொள்வதில்லை என்றும் (1 கொரி. 15:50), அது உண்ணுதலும் குடித்தலுமன்று, நீதி - அமைதி - தூய ஆவியின் மகிழ்ச்சி என்றும் (உரோ. 14:17) பவுல் எழுதுகிறார். அப்படியானால் பரதீசு போன்ற இடங்களையும், திருவெளிப்பாட்டில் வரும் திருநகரின் விவரிப்புகளையும் உருவகங்களாக எடுத்துக் கொள்ள வேண்டுமே யொழிய எழுத்துக்கெழுத்தாக எடுத்துக் கொண்டு குழம்பத் தேவையில்லை. மூன்றாம் வானம் வரைக்கும், பின்பு பரதீசுக்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட ஒருவரைப்பற்றிக் (ஒருவேளை தம்மைப் பற்றி) குறிப்பிடும் பவுல் உடலுடன் இருந்தாரோ, இல்லையோ, எனக்குத் தெரியாது என்கிறார் (2 கொரி. 12:2-5). விண்ணுலகக் காட்சிகளை இயல்கடந்த ஆவி நிலையில் கண்டோம் என்று கூறுவோரும், அதை அப்படியே நம்புவோரும் பவுலிடமிருந்து இந்தத் தாழ்மையைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

இது போன்றுதான் நரகம் என்னும் எரிகுழியைப் பற்றியும் புஏ. உருவக நடையில் குறிப்பிடுகிறது. அது அவியாத நெருப்பு, சாகாத புழு, அழுகை, காரிருள், பற்கடிப்பு உள்ள இடமாக விவரிக்கப்பட்டுள்ளது(மத். 8:12; 13:42,50; 18:8; 25:41; மார். 9:43,45,47; 2 பேது. 2:17; யூதா. 13, திருவெ. 20:14,15; 21:8). இருளும் நெருப்பும் எப்படி ஒன்றாயிருக்க முடியும் போன்ற அறிவு சார்ந்த கேள்விகளை இங்கு எழுப்பாமல் அடையாளங்கள் சுட்டும் உண்மைகளையே மனத்திற்கொள்ள வேண்டும். எப்படியும் இறையாட்சியின் நிறைவில் களைகள் சுட்டெரிக்கப்படுவது தவிர்க்க இயலாதது (மத். 13:30). மறுமையில் களைநிலையில் இருப்போர் அடைகின்ற துன்பம் ஒருபுறம் குறிக்கப்பட்டிருக்க, மறுபுறம் நிலையான அழிவு என்னும் இரண்டாவது இறப்பும் குறிக்கப்படுகிறது (திருவெ. 21:8-10). இறையாட்சியின் குடிமக்களாக இவ்வுலகில் வாழ்வோரின் உயிராற்றலாகிய வாழ்வு இறைவனின் பார்வையில் பத்திரமாக இருக்கிறது என்ற உறுதிப்பாட்டை ஏற்க வேண்டுமேயொழிய யார் யார் எந்தெந்த விதத்தில் எத்தகைய வாழ்வை அல்லது அழிவை மறுமையில் காண்பார்கள் என்று கணிக்கக் கூடாது. இந்த உண்மை புஏ.இன் எதிர்காலம் பற்றிய காட்சிகளில் தொக்கி நிற்கிறது

இப்போது அன்பர்களாக வாழ்வோர் அன்பின் ஆழுகையான இறையாட்சியைக் கண்ணாடியில் நிழலாட்டமாய்ப் பார்க்கிறார்கள்; பின்னர் முகம் முகமாய்ப் பார்ப்பார்கள் (1 கொரி. 13:12). நம் மகிழ்ச்சி எதிர்காலத்தைப் பற்றிய நன்னம்பிக்கையில் அடித்தளம் கொண்டிருக்கிறது (உரோ. 12:12). இப்பொழுது நாம் கடவுளின் பிள்ளைகள், இனி எவ்விதமிருப்போம் என்பது இன்னும் வெளிப்படவில்லை. ஆயினும் இயேசு வெளிப்படும்போது அவரை நாம் பார்க்க முடியுமாதலால் அவரைப் போன்று நாம் இருப்போம் (1 யோ. 3:2). ஆக, நிகழ்வுகளையும் நிலைகளையும் பற்றிய திட்டவட்டமான வரைபடம் இல்லாவிடினும் இந்த உலகில் இயங்கும் இறையாட்சியின் புதுவாழ்வுக்கு நிறைவாக ஒரு புத்துலகத்தை புஏ. நம் எதிர்காலக் காட்சியாக முன்வைக்கின்றது.

10. முடிவுரை

புஏ. இறையியலின் முக்கியமான அணுகுமுறைகளையும் அடிப்படைகளையும் நாம் இக்கட்டுரையில் பார்த்துள்ளோம். பஏ.இன் தொடர்புகளை உடனுக்குடன் சுட்டிக்காட்ட இடமில்லாவிடினும் அதன் நம்பிக்கைகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் தொடர்ச்சியாகவே புஏ. இறையியலை வரைந்துள்ளோம். ஆயினும் இயேசு என்பவரின் மையத்தில் எல்லா உண்மைகளும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இவரை முற்போக்குச் சிந்தனையுடைய ஒரு யூதர், புரட்சிகரமான இறைவாக்கினர் என்று யூதரும் வேறுபலரும் கூறுவதுடன் நாம் நின்றுவிடவில்லை. இந்த மனிதரின் இறையியல் சிறப்பை

அவர் வழி வந்தவர்கள் எவ்வாறெல்லாம் பார்த்தார்கள் என்பதை நாம் சுட்டிக் காட்டியுள்ளோம்.

பு.ஏ. இறையியல் என்று ஒருமையில் குறிக்கப்பட்டிருப்பதால் வரையறைக்குட்பட்ட ஒரு கோட்பாட்டை உருவாக்க முடியும் என்று நினைத்துவிடக் கூடாது. இயேசு கிறிஸ்துவின் ஒளியில் இறைவனைப் பற்றிய பார்வைகள் (perceptions), சிந்தனைகள் (insights) என்று கூறுவதே பொருத்தமாயிருக்கும். இவற்றில் சூழல் சார்ந்த சிலவற்றைக் கூடுதல் முக்கியப்படுத்திச் சிந்திக்கும் போங்குக்கு வாய்ப்பு உண்டு. அண்மைக் காலங்களில் பு.ஏ. இறையியலில் எழுந்துள்ள புதிய அழுத்தங்களை இந்த வகையிலேயே நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் வேறுபட்டப் போங்குகள், அழுத்தங்கள் என்ற பன்மை நிலைக்கு வரையறை உண்டா என்று கேட்டுப் பார்க்க வேண்டும். இல்லையேல் ஒருபுறம் நாத்திகத்தையும் மறுபுறம் எழுத்துக் கெழுத்தாக விவிலியத்தை விளக்கும் அடிப்படைவாதத்தையும் நாம் ஏற்க வேண்டிவரும். ஆகவே பு.ஏ.இன் மையச் செய்திகளை அடையாளம் கண்டு அறிவுறுத்தவே நாம் முயலவேண்டும். இந்த முயற்சியில் இன்றைய சூழலில் பெரிதும் முக்கியமில்லாத பல கருத்துக்களையும், சிந்தனை வடிவங்களையும் தற்காலத்திற்காவது ஒதுக்கி வைக்க வேண்டி வரும். ஆயினும் மையத்தில் இருக்கும் இயேசு என்கின்ற ஒருவரின் வாழ்வும் அணுகுமுறைகளும் இன்றைக்கும் அதிகப் பொருத்தமுள்ளவையாக இருப்பதால் அவற்றைத் தெளிவாகப் புரிந்து பிறருக்குத் தொடர்புபடுத்துவது பு.ஏ. இறையியலில் பிடிப்புடைய அனைவரின் கடமையுமாகும்.

துணை நின்ற நூல்கள்

1. Bultmann, R., *Theology of the New Testament,* London: SCM, 1952 (Vol. I), 1955 (Vol. II).
2. Guthrie, D., *New Testament Theology,* Leicester: Inter - Varsity Press, 1981.
3. Conzelmann, *An Outline of the Theology of the New Testament.* London: SCM, 1969.
4. Hunter, A.M., *Introducing New Testament Theology,* London: SCM, 1957.
5. Kummel, W.G., *Theology of the New Testament,* London: SCM, 1974.
6. Jeremiahs, J., *New Testament Theology,* London: SCM, 1971.
7. Selvanayagam, I., *Bibilical Insights of Inter - faith Dialogue,* Bangalore: BTTBPSA - SATHRI, 1995.
8. சாமுவேல் அமிர்தம் & இஸ்ரயேல் செல்வநாயகம், *திருமறைக்குத் திரும்புவோம். 1. மீட்பு. 3. தூய ஆவியர். 12. இறுதியியல். 13. திருச்சபை.* மதுரை. அரசரடி வெளியீடு.
9. ஞான இராபின்சன் (பதிப்), *திருமறைத் தோழன்,* மதுரை. தமிழ் இறையியல் நூலோர் குழு, 1972.

புதிய ஏற்பாட்டுக் கட்டுரைகள்

1. ஜே.பா. அலெக்சாந்தர், பொதுவான நிருபங்களின் போதனை.
2. வி.பு. ஹாரிஸ், அப்போஸ்தலராகிய பவுல் எழுதின நிருபங்கள் தரும் இறையியற் கருத்துக்கள்.
3. வி.பு. ஹாரிஸ், யோவான் நற்செய்தி நூலும் நிருபங்களும் தரும் இறையியற் கருத்துக்கள்.
4. ஜே.பா. அலெக்சாந்தர், எபிரேயருக்கு எழுதப்பட்ட நிருபத்தின் செய்தி.
5. தோ.சா. கேரட், புதிய ஏற்பாட்டின் இறையியல்.
6. ஏ.ஜெ. அப்பாசாமி, கிறிஸ்தியல்.
7. ஜே.பா. அலெக்சாந்தர், புதிய ஏற்பாட்டு இறுதியியல்.

28

புதிய ஏற்பாட்டுக் காலத் திருச்சபை

ஜே. பா. அலெக்சாந்தர்

1. மூலங்கள்

பு.ஏ. காலத்துச் சபையின் வரலாற்றை அறிவதற்குப் பு.ஏ.டே முக்கியமான மூலமாகும். பு.ஏ.இன் நூல்களில் சபையின் தொடக்கமும் வளர்ச்சியும், அக் காலச் சபையில் பின்பற்றப்பட்ட கிறிஸ்தவ எண்ணங்களும் போதனைகளும் வெளியிடப் பட்டிருக்கின்றன.

பு.ஏ. நூல்களில் அக்காலத்துச் சபையின் வரலாற்றை அறிவதற்கு முக்கியமான நூலாய் விளங்குவது திருத்தூதுவ ருடைய பணிகளின் நூலாகும். அதுவே முதல் திருச்சபை வரலாற்று நூல். இந்த நூலில் கி.பி. 30 முதல் 63 வரை அடங்கிய சபை வரலாறு நமக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. வேறெந்த பு.ஏ. நூலிலும் காணக்கூடாத அளவில் இந் நூலின் ஆசிரியர் கிறிஸ்தவ சமயத்தின் வரலாற்றை உரோமை அரசாங் கத்தின் வரலாற்றோடு தொடர்புப்படுத்தியுள்ளார். இந்நூலில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள், எவ்விதப் பின்னணியத்தில் நடந்தனவென்று அறிவது இந் நூலின் வரலாற்று உண்மையை வலியுறுத்துவதாகும். நற்செய்தி எவ்வாறு கூறி அறிவிக்கப்பட்டது, ஏற்றுக்கொள்ளப்பட்டது, மக்கள் எவ்வாறு கிறிஸ்து சபைக்குள் சேர்ந்தனர் என்பவற்றையும் திருத்தூதுவர் பணிகள் நூலே நமக்குத் தெளிவாய்க் காட்டுகின்றது.

திருத்தூதுவர் காலத்துச் சபைகளின் தன்மையைப் பற்றி அறிய உதவும் அதிகாரப்பூர்வமான பிற மூலங்கள் புனித பவுலடியாரின் திருமுகங்களாகும். அவை அனைத்தும் கி.பி. 70இல் நடந்த எருசலேம் அழிவிற்கு முன் எழுதப்பட்டவை. அவற்றின் மூலம் பவுல் சபைகளோடு நெருங்கிய தொடர்பு டையவராயிருந்தாரென்பது புலப்படுகிறது. குறிப்பாக, சபை களில் அக்காலத்தில் ஏற்பட்ட பிரச்சனைகளைக் குறித்தும், யூதேயக் கிறிஸ்தவ எண்ணங்களைக் குறித்தும், எருசலேமில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளைக் குறித்தும், சபைகளின் சேவை களைக் குறித்தும் அறிய பவுலின் திருமுகங்கள் உதவுகின்றன. மேலும், சபைகளின் வளர்ச்சிகளைப் பற்றியும் குறைவுகளைப் பற்றியும் அவை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன. முதல் கிறிஸ்தவ சமூகத்திலிருந்து தாம் பெற்றுக் கொண்ட சில மரபுகளையும் பவுல் தெரிவித்துள்ளது நமக்கு மிகுந்த பயன்தரத்தக்கவையாகும் (1 கொரி. 15:3-7; 11:23).

பவுலின் இறையியல் கருத்துக்களை அறிகையில் அக்காலத்துச் சபையின் கருத்துக்களையே நாம் அறிகின்றோம். பவுல் அக் காலத்துச் சபையின் முதன்மைத் திருத்தூதுவர். ஆதலின், அவரது வரலாற்றைப் படிப்பதால், பு.ஏ. காலத்துச் சபையின் வரலாற்றையே படிக்கிறோமெனக் கூறலாம். சபையில் அவர் முக்கியமானவராயிருந்தபோதிலும் சபைதான் அவருக்கு அத்தகைய முக்கியத்துவத்தை அளித்தது. எனவே, பவுலின் எண்ணங்களில் சபையின் எண்ணங்களை அறிந்து கொள்வதே சிறந்த செயல். ஏனெனில், சபையில்லாமல் திருத்தூதுவர் இல்லை. ஆகையால், பு.ஏ. சபையின் முழுமையில் பவுலின் எண்ணங்களை அறிதல் வேண்டும்.

பவுலின் திருமுகங்கள் சபையைக் கட்டுவதற்காக எழுதப் பட்டவை என்னும் தன்மையில் விலை பெற்றவை. அவை எழுதப்பட்ட வரிசையில் அத்திருமுகங்களை ஆராய்தல் அவ்வப் போது ஏற்பட்ட நிலையை நமக்கு வெளிப்படுத்தும். அவை எச் சமயங்களில் எழுதப்பட்டவை என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. பொதுவாக, தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட இரு திருமுகங்கள் பவுலால் முதலில் எழுதப்பட்டவை என்றும், கலாத்தியருக்கு எழுதப்பட்ட திருமுகம் எருசலேம் ஆலோசனை மன்றத்திற்கு (கி.பி. 49) முன் அல்லது, சிலரது கருத்துப்படி, எருசலேம் ஆலோசனை மன்றத்திற்குப் பின் எழுதப்பட்ட தென்றும் நம்பப்படுகிறது. அதற்குப் பின் கொரிந்தியருக்கும் உரோமருக்கும் திருமுகங்கள் எழுதப்பட்டன. காவல் திரு முகங்களாக எண்ணப்படும் எபேசியர், பிலிப்பியர், கொலோசேயர், பிலேமோன் ஆகியோருக்கு எழுதப்பட்ட திருமுகங்கள் எபேசுவிலோ, செசரியாவிலோ, உரோமையிலோ பவுல் சிறையிலிருக்கையில் எழுதப்பட்டனவென்று எண்ணப் படுகிறது. தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட முதலாம் திருமுகமும், தீத்துவுக்கு எழுதப்பட்ட திருமுகமும், பவுல் உரோமைச் சிறை யிலிருந்து விடுதலை பெற்றபின் எழுதப்பட்டனவென்றும், அவர் இரண்டாம் முறை உரோமையில் சிறையிலிருந்தபொழுது தீமோத்தேயுவுக்கு இரண்டாம் திருமுகத்தை எழுதினாரென்றும் எண்ணப்படுகிறது. இவ்வாறு வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்ட பவுலின் திருமுகங்கள் மூலம் எண்ணங்களிலும், அமைப்பிலும் சபையில் ஏற்பட்ட வளர்ச்சியை அறிகிறோம்.

ஏனைய திருத்தூதுவர்களின் திருமுகங்களும் பு.ஏ. சபையைப் பற்றிய அறிவை நமக்கு அளிக்கின்றன. 1 பேதுரு, 2 பேதுரு ஆகிய திருமுகங்கள் பவுலின் திருமுகங்களுக்குப் பின் எழுதப்பட்டவை. அவற்றிலிருந்தும் தொடக்கக் காலச் சபையின் நிலையை அறியலாம். முதலாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் எழுதப்பட்ட புனித யோவானின் மூன்று திரு முகங்களும் அக்காலத்துச் சபையில் பரவின எண்ணங்களை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன. யாக்கோபு திருமுகத்திலும் சபையின் சில தன்மைகள் காட்டப்படுகின்றன. யோவானின் திருவெளிப்பாடு நூலில் பு.ஏ. காலத்துச் சபையைப் பற்றிய குறிப்புகள் பலவற்றைக் காண்கிறோம். அக்காலத்துச் சபைகளின் தன்மைகளும், முக்கிய பிரச்சனைகளும், போராட் டங்களும், தெளிவாக ஏழு சபைகளுக்குரிய செய்திகளிலும், மறைமுகமாக ஏனையப் பகுதிகளிலும் தெளிவுறக் காட்டப் பட்டிருக்கின்றன.

தொடக்கக் கிறிஸ்தவ சமூகத்தின் தன்மையை நன்கு வெளிப்படுத்தும் மற்றொரு மூலம் நான்கு நற்செய்தி நூல்களாகும். அவற்றின் மொழி நடையிலிருந்து மட்டுமல்ல, அவற்றின் பொருளிலிருந்தும் பாலஸ்தீனக் கிறிஸ்தவ எண்ணம்

திருத்தூதுவரின் காலத்தில் எவ்வாறிருந்ததென்பதைத் தெளிவாய் அறியலாம். குறிப்பாக, சபையைப் பற்றிய ஆண்டவரின் எண்ணங்களும், கருத்துக்களும் நற்செய்தி நூல்களில் புதைந்து கிடக்கின்றன.

இவ்வாறு, பு.ஏ. நூல்கள் அக்காலச் சபையைக் குறித்து அறிவதற்கு முக்கிய மூலங்களாயிருப்பினும், இக் காலத்தில் எழுதப்பட்ட பிற நூல்களும் நமக்கு உதவுகின்றன. அவை பு.ஏ. நூல்களையும் அறிவதற்கு உதவியாயிருக்கின்றன. அவற்றில் ஒன்று கிளமந்து கொரிந்தியருக்கு எழுதிய திருமுகமாகும். கி.பி. 96இல் கொரிந்து சபையில் அமைதியை உண்டாக்க இது எழுதப்பட்டது. **டிடாக்கி** என்னும் நூல் மற்றொன்றாகும். இது கி.பி. 80க்கும் 100க்கும் இடையில் எழுதப்பட்டிருக்கலாம். இதில் பிற இனத்துக் கிறிஸ்தவர்களுக்குப் போதனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. **திருச்சபை வரலாற்றின் தந்தை** என்று அழைக்கப்படும் **யூசிபியஸ், கிறிஸ்து முதல் காண்ஸ்தந்தீன் வரையுள்ள வரலாறு** என்னும் நூலை எழுதியுள்ளார். அதில் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் சிலரின் எண்ணங்கள் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. இவர் செசரியாவில் கி.பி. 260இல் பிறந்து கி.பி. 325இல் நடைபெற்ற நிசேயா ஆலோசனை மன்றத்தில் சிறப்புக்குரியப் பங்கெடுத்தவர்.

மேற்கூறப்பட்ட மூலங்கள் மூலம் பு.ஏ. காலத்துச் சபையைக் குறித்து அறிய வேண்டிய யாவற்றையும் அறிந்து கொண்டோமென்று கூற இயலாது. நாம் முடிவுகட்டக் கூடாத பல பிரச்சனைகள் உள்ளன. எனினும், அக்காலச் சபையைக் குறித்துப் போதுமான அறிவு நமக்கு இம் மூலங்கள் மூலம் கிடைக்கிறதென்று ஐயமின்றிக் கூறலாம்.

2. தொடக்கம்

கிறிஸ்தவர்களின் முயற்சியாலோ அல்லது திருத்தூதுவர்களாலோ அல்லது குறிப்பாகப் புனித பவுலினாலோ, புனித பேதுருவினாலோ சபை உண்டானதல்ல. உலகம் விரைவில் முடிந்துவிடுமென்றும், எனவே, திருச்சபையைக் குறித்து இயேசு கிறிஸ்து எண்ணவில்லையென்றும் கூறுவது பொருந்தாது. மீட்பை ஏற்படுத்த வந்த அவர் ஒரு மீட்கப்பட்டக் கூட்டத்தை எதிர்பார்த்தாரென்பது தெளிவு. இறையாட்சியைப் பற்றிய அவர் எண்ணங்களும் போதனைகளும் இதற்குத் தக்கச் சான்றாகும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பன்னிருவரைத் தேர்ந்து கொண்டது ஒரு புதிய சமூகத்திற்கு அவர்கள் மையக் கருவாயிருக்க வேண்டுமென்பதற்கே என்று நாம் அறிகிறோம். காணாமற்போன ஆடுகளைச் சேர்க்கும்படி அவரால் அவர்கள் அனுப்பப்பட்டார்கள் (மத். 10:6). அவர்கள் மூலம் எல்லாரையும் தம்மோடுள்ள கூட்டுறவுக்கு அவர் அழைத்தார். தமது சீடர்களை ஆண்டவர் சிறு மந்தை என்று அழைத்தார் (லூக். 12:32; யோ. 10). இத்தொழுவத்திற்குரியவைகளல்லாத வேறே ஆடுகளும் எனக்குண்டு, அவைகளையும் நான் நடத்திக்கொண்டு வர வேண்டும், அவைகள் என் குரலைக் கேட்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும் என்றும் அவர் கூறியுள்ளார் (10:16). யோ. 17ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடையீட்டாளர் மன்றாட்டில், இவர்களுடைய வார்த்தையினால் என்னில் நம்பிக்கை வைக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன் என்று தந்தையிடம் வேண்டினது மன்றி, (17:20) நம்பிக்கை கொள்வோர் யாவரும் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொண்டார். அவர் உயிர்த்தெழுந்து விண்ணேறிச் செல்லுமுன் தமது சீடர்கள் புறப்பட்டுப் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்கும்படி அவர்களுக்கு இறுதிக் கட்டளையும் கொடுத்துள்ளார் (மத். 28:19).

உலக வரலாற்றின் தொடக்கத்திலேயே கடவுள் தமக்கென்று ஒரு மக்களினத்தை உருவாக்கவேண்டுமென்பது அவரது திட்டமாயிருந்தது. இது ப.ஏ.இல் வெளிப்படையாயிருக்கிறது. மீட்கப்பட்ட ஒரு கூட்டத்தின்மூலம் ஏனையோரையும் மீட்க வேண்டுமென்பதே கடவுளின் திருவுளமாகும். சபை என்னும் சொல்லுக்கு ப.ஏ.இல் பயன்படுத்தப்பட்டிருக்கும் எபிரேயச் சொல் **காஹால்** (Qahal) என்பதாகும். இது கடவுளின் மக்களினம் என்னும் உயரியக் கருத்தைத் தருவதாகும். சபை என்னும் சொல்லின் கிரேக்கச் சொல்லாகிய **எக்ளீசியா** (Ekklesia) என்பது ப.ஏ.இன் கிரேக்க மொழிபெயர்ப்பாகிய செப்துவசிந்தில் இஸ்ரயேல் மக்கள் முழுவதையும் கடவுளால் அழைக்கப்பட்ட கூட்டமென்று குறிப்பிட பயன்படுத்தப்பட்டிருக்கிறது. புதிய இஸ்ரயேலில் அதன் உட்கருத்து நிறை வேறிற்று. ப.ஏ.இல் பயன்படுத்தப்பட்டிருக்கும் எக்ளீசியா என்னும் கிரேக்கச் சொல் கிறிஸ்துவின் இரத்தத்தால் விலைக்குக் கொள்ளப்பட்டு, மீட்கப்பட்டு, கடவுளுக்குச் சொந்தமாக்கப்பட்ட புதிய இஸ்ரயேலைக் குறிக்கும். சபை ப.ஏ.இலுள்ள கடவுளின் வாக்குறுதிகளின் நிறைவேறுதலை அடைந்த புதிய சமூகமென்பதைத் தொடக்கக் கிறிஸ்தவர்கள் உணர்ந்தனர்.

இத்தகைய சபையை இயேசு கிறிஸ்து நிறுவினாரெனும் பொழுது முற்றிலும் வேறான ஒன்றை ஏற்படுத்தினாரென்பதல்ல. ஒரு கருத்தில் சபை முற்றிலும் புதியதே. எனினும் புதிய இஸ்ரயேல் பழைய இஸ்ரயேலின் தொடர்ச்சியேயாகும். இறையாட்சியைப் பற்றிய ப.ஏ. எதிர்பார்ப்புகள் பு.ஏ.இல் நிறைவேறுதலடைந்தன. சபை என்னும் சொல் நற்செய்தி நூல்களில் மூன்று தடவைகள் மட்டும் (மத். 16:18இல் ஒரு தடவை, 18:17இல் இரு தடவைகள்) பயன்படுத்தப்பட்டிருப்பினும், கடவுளின் ஆட்சி என்ற சொல் 100க்கு அதிகமாய் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட கடவுளின் ஆட்சி வாயிலிலே வந்திருக்கிறது என்று இயேசு கிறிஸ்து மொழிந்தார். கடவுளின் ஆட்சி விண்ணில் இயங்கும் ஓர் ஆட்சி அல்ல. ஆளுகை செய்யப்படும் ஒரு மக்களினத்தை அதாவது, திருச்சபையை அது குறிக்கும். இயேசு கிறிஸ்துவின் வருகையில் அது வல்லமையோடு வந்தது. அவரது மலைப் பொழிவு போதனைகளையும் இறையாட்சியைப் பற்றிய உவமைகளையும் ஆராயுங்கால், அவற்றில் திருச்சபையிலிருக்க வேண்டிய தன்மைகள் எவையென்பன சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. தமது சீடர்களிடம் கடவுளின் ஆட்சி உங்களுக்குள்ளேயே இருக்கிறது (லூக். 17:21) என்று அவர் கூறினார். எனினும், அது நிறைவேறவேண்டிய ஒன்றாயிருந்தது. யோவானும் திருமுழுக்கும், இயேசு கிறிஸ்துவும் சீடர்களும் கடவுளின் ஆட்சி நெருங்கி வந்துவிட்டது என்று அறிவித்தனர். இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்று ஆண்டவர் பேதுருவினிடம் கூறியபோது அது ஏற்படுத்தப்படும் வருங்காலத்தை அவர் எதிர்நோக்கினார் எனலாம்.

இயேசு தமது சபைக்கு அடித்தளமிட ஆயத்தம் செய்தாரென்பது வெளிப்படையாயிருக்கிறது. உலகின் மீட்புக்காக, அவர் கொண்ட திட்டத்தில் அது ஒரு பங்காகும். சீடர்களை அழைத்ததிலும், அவர்களைப் பயிற்றுவித்ததிலும், அவர்களை ஊழியத்திற்கு அனுப்பியதிலும் அது விளங்குகிறது (மார். 3: 14,15). அவர்களுக்கு அவர் கொடுத்த கட்டளைகள் அவர்கள் ஒரு புதிய சமூகத்தின் சார்பாளர்களாகவும், தலைவர்களாகவும்

செயலாற்றவேண்டுமென்று அவர் விரும்பியதைக் காட்டு கின்றன. சீமோனும், அவரின் சகோதரர் அந்திரேயாவும் கடலில் வலை வீசிக் கொண்டிருக்கையில், அவர்களை இயேசு அழைத்து, என் பின்னே வாருங்கள், உங்களை மனிதரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார் (1:17). கடவுளின் ஆட்சி நெருங்கி வந்துவிட்டதென்று அறிவிக்க அவர் அவர்களை அனுப்புகையில் அவர்களுக்கிருக்கவேண்டிய பண்புகளை எடுத்துக் கூறினார் (மத். 10:18). யோவான் 15 முதல் 17 வரையுள்ள போதனைகளும் குறிப்பிடத்தக்கவை. குறிப்பாக திராட்சைச் செடியாகிய தம்மில் கொடிகளாக அவர்கள் நிலைத்திருக்கவேண்டுமென்று அவர் வற்புறுத்தியதும், அவர்களுக்காகச் செய்த தலைமைக் குருத்துவ மன்றாட்டின் கூறுகளும் அவர்களிடம் ஆண்டவர் வைத்த பொறுப்புகளைக் காட்டுகின்றன. சீடர்களுக்குக் கொடுக்கும் கட்டளையாகப் பேதுருவிடம், என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர், என் ஆடுகளை மேய், என்று அவர் உயிர்தெழுந்தவராகக் காட்சியளிக்கையில் கூறினார். இறுதியாக, அவர்கள் புறப்பட்டுப் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்கித் தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் அவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்து, தாம் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்குப் போதிக்கவும் கட்டளை கொடுத்தார்.

இயேசு திருவிருந்தை ஏற்படுத்தியதும் சபைக்குரிய ஓர் ஆயத்தமான செயல். அது புது இஸ்ரயேலுக்குரிய பாஸ்கா. தமது இறப்பிற்குமுன் அவர் தம் சீடர்களோடு அதை அருந்தி, தம்மை நினைவுகூரும்படி அதைத் தொடர்ந்து செய்யக் கட்டளையிட்டார். தமது வாழ்வைக் கொடுத்துப் புதிய உடன் படிக்கையை அவர் ஏற்படுத்தினார். திருச்சபையை ஏற்படுத்து வதற்கு அவரது இறப்பு முக்கியமான செயல். கிறிஸ்து சபைக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தாரென்றும் (எபே. 5:27), கடவுள் தமது சுய இரத்தத்தால் தமதாக்கிக் கொண்ட தமது சபை என்றும் (திருத். 20:28), பவுல் (திருத்தூதுவர்) கூறியுள்ளார். எனவே, கிறிஸ்துவின் இறப்பை நினைவுபடுத்தும் புனிதத் திருவிருந்தைத் திருச்சபைக்குரிய ஒரு சாக்கிரமெந்தாகவே ஆண்டவர் நியமித்துள்ளார்.

பாவ மன்னிப்பு கிறிஸ்துவின் பெயரால் எல்லா இனத்தா ருக்கும் அறிவிக்கப்படுவதற்குமுன் கிறிஸ்து துன்புற்று, இறந்து, உயிர்த்தெழவேண்டியது இன்றியமையாததாயிருந்தது. உயிர்த் தெழுந்தவராக அவர் எம்மாவூருக்குப் போன சீடர்களோடு நடந்து செல்லுகையில், கிறிஸ்து துன்புற்று, இறந்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழவேண்டும் என்றும், மனம் மாறுதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி எல்லா நாடுகளிலும் அவருடைய பெயரால் பறைசாற்றப்பட வேண்டும் என்றும் எழுதியிருக்கிறது என்று (லூக். 24:46,47) மறைநூலிலிருந்து அவர்களுக்கு எடுத்துக்கூறினார். எனவே இயேசு தமது மீட்பின் செயலை நிறைவேற்றிய பின்னரே அவர்கள் அவரா லுண்டாகும் மீட்பை நற்செய்தியாக அறிவிக்கமுடியும்.

இயேசு உயிர்த்தெழுந்த பின்பு இறப்பை வென்றவராய் விண்ணுலகிலும் மண்ணுலகிலும் எல்லா அதிகாரமுமுடைய வரானார். அதன் பின்புதான் அவர் சீடர்களை நோக்கி, விண்ணுலகிலும் மண்ணுலகிலும் எல்லா அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள் என்றார். திருத்தூதுவராகிய பவுலும், இவர் கிறிஸ்துவை சாவிலிருந்து எழுப்ப, திருச்சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் என்று (எபே. 1:20-22) கூறியுள்ளார்.

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், நம்பிக்கை கொண்டோ ருக்குள், குறிப்பாக திருத்தூதுவர்களுக்குள் வாழ்வையும் புதிய நம்பிக்கையையும் அளித்தது. அவர்களுக்கு ஒரு நற்செய்தி கிடைத்தது. கடவுள் அவரை எழுப்பினார், அதற்கு தாங்கள் சாட்சிகளென்றும், அவராலே பாவ மன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கிறதென்றும், அவரே உலகின் மீட்பரென்றும் வல்லமையுடன் அவர்கள் பறைசாற்றினர்.

மேலும், தாங்கள் ஒரு புது வாழ்வுக்கு அழைக்கப்பட்டதை அவர்கள் உணர்ந்தனர். பற்றாளர் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுறவில் வாழவேண்டுமென்ற சகோதர எண்ணம் அவர்களுக்குள் உருவாயிற்று. உயிர்த்தெழுந்த இயேசு சீடர் களுக்குத் தனியாகவும், கூட்டமாகவும் காட்சியளித்தது, அவர் களது கூட்டுறவுக்கு ஓர் உயிரையும் உருவத்தையும் உண்டாக்கியது எனலாம். இயேசு சபையை உருவாக்கியதில் அவர் உயிர்த் தெழுந்து காட்சியளித்தது ஒரு முக்கிய கூறாகும். சிலுவையில் இறந்தது மூலம் அவர் ஆற்றிய மீட்பின் செயல், சபையைக் கட்டுவதற்காக அவர் செய்த வேலை என்பது உயிர்த் தெழுதலினால் வெளிப்படையாயிற்று. இவ்வாறு அவரே சபையை ஓர் அமைப்புக்குள் கொண்டுவந்தார்.

சீடர்களோடுள்ள தமது உறவை இயேசு உறுதிப்படுத்தி, அவர்கள் தமக்காகச் செய்யவேண்டிய திருப்பணியையும் குறித்துள்ளார். எனவே, சபையானது முற்றிலும் அவருக் குள்ளான கடவுளின் செயலாலேயே உண்டாயிற்று. பு.ஏ. சபைக்கு உயிர் கொடுத்தது கடவுள் இயேசுவை எழுப்பிய விந்தைச் செயலேயாகும். சபை ஓர் அருஞ்செயலால் கட்டப் பட்டிருக்கிறது. முதல் சீடர்கள் தங்கள் கண்களுக்குமுன் கடவுளே விந்தையாய்ச் செயலாற்றுகிறதைக் கண்டனர். இயேசு கிறிஸ்துவால் வாழ்வு பெற்ற மக்களாக அவர்கள் விளங்கினார் கள். அவர்கள் கடவுளால் பிரித்தெடுக்கப்பட்டு ஆண்டவருக்கே சொந்தமாக்கப் பட்டவர்களென்று அறிந்தனர். இனி தாங்கள் சகோதரக் கூட்டுறவில் வாழ வேண்டியவர்களென்றும், தாங்களே புதிய இஸ்ரயேலரென்றும் கூறிக் கொண்டனர்.

பெந்தெகொஸ்தே நாளன்று சீடர்கள் தூய ஆவியாரைப் பெற்றபொழுது திருச்சபையில் தங்கள் அழைப்பின் உறுதியையும், தங்கள் நம்பிக்கையின் மாட்சியையும் தாங்கள் செயலாற்ற வேண்டியதையும் அறிந்து, தூய ஆவியாரின் வல்லமையால் ஆட்கொள்ளப்பட்டனர். அதுவரையிலும், அவர்கள் எருச லேமில் ஒருமனத்துடன் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. உயிர்தெழுந்த இயேசுவைக் கண்ட பின்பும், அவரிடம் ஆண்டவரே, இக்காலத்திலா ஆட்சியை இஸ்ரயேலுக்குத் திரும்பக் கொடுக்கிறீர் என்று சீடர்கள் கேட்டனர். ஆனால், விண்ணுக்கெழுந்தருளின ஆண்டவர் தாமே வாக்களித்த தூயஆவியரை அவர்களுக்குள் அனுப்பியபோது புதிய காட்சியை அடைந்தனர். கிறிஸ்துவை உள்ளான அனுபவமாக அடைந்தபொழுது அவர்கள் அவருடைய எண்ணத்தையும், பார்வையையும், நோக்கத்தையும் அடைந்தனர். அப்பொழுது தான் அவர்கள் இயேசுவை உண்மையாய்ப் பின்பற்றி, அவருக்காகச் செயலாற்றக்கூடியவர்களானார்கள். எனவே, பெந்தெகொஸ்தே நாள் திருச்சபையின் பிறந்தநாள் என்று கூறினால் தவறாகாது. இயேசுவில் உருவான திருச்சபை இந்நாளில் முழு உருப்பெற்று வெளிப்பட்டது.

பெந்தெகொஸ்தே நாள் இயேசு உயிர்த்தெழுந்து ஐம்பதாம் நாள். அது வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிறுதினம், எல்லாரும் ஒன்றாய்க் கூடியிருந்த ஆண்டவருடைய நாள் (அப். 2.1). அன்று காலையில் பதினொரு திருத்தூதுவரும், யூதாசு

இஸ்காரியோத்துக்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியாவும், பெண்களும், இயேசுவின் தாயாகிய மரியாவும், அவர் சகோதரரும் உட்பட ஏறத்தாழ நூற்றிருபதுபேர் ஒன்றாய்க் கூடியிருந்தனர். அப்போது யாவரும் தூய ஆவியாரால் நிரப்பப்பட்டு, வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள் (திருத். 2:4). கடவுளின் மகத்துவங்களைப் பேசக் கேட்ட மக்கள் வியப்புற்று திகைப்புற, சிலர் அவர்கள் மதுவை நிரம்பக் குடித்தவர்களென்று ஏளனம் செய்து, பேதுரு திருத்தூதுவர் ஏனைய பதினொருவருடன் எழுந்து நின்று நடந்ததை விளக்க முயன்றார். திருத். 2ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள அதுவே திருச்சபையில் ஆற்றப்பட்ட முதல் அருளுரையாகும்.

யோவேல் 2:28-30இல் கூறப்பட்ட இறைவாக்கின் நிறைவேறுதலாக இது நடந்ததென்று பேதுரு எடுத்துக்காட்டி, இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததை வல்லமையாய்க் கூறி, அவரே மெசியா என்று மெய்ப்பித்து, கேட்டவர்கள் மனம் மாறி இயேசு கிறிஸ்துவை ஏற்றக்கொள்ளுமாறு ஏவினார். அன்று, ஏறத்தாழ மூவாயிரம் பேர் அவர்களது கூட்டுறவில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

திருத்தூதுவர்கள் மூலம் ஆண்டவர் பல அருஞ்செயல்களையும் அடையாளங்களையும் செய்தார். நம்பிக்கை கொண்டவர்களெல்லாரும் தங்களுக்குரியவைகளையும் பொதுவாய் அனுபவித்து, ஒருமனத்துடன் கடவுளை மாட்சிமைப் படுத்தினார்கள். அந் நாள்களில் மீட்கப்படுகிறவர்கள் அன்றாடம் சபையில் சேர்க்கப்பட்டனர்.

3. வளர்ச்சி

(அ) யூதர்களிடையில் சபை - எருசலேம் சபை. கிறிஸ்தவ சமயம் பரவியபொழுது, ஒவ்வொரு இடத்திலுமுள்ள பற்றாளர்களின் தொகுதி சபை என்று அழைக்கப்பட்டது. இவ்வாறு எருசலேமில் முதல் சபை உண்டாகவே அது எருசலேம் சபை என்று அழைக்கப்பட்டது (திருத். 8:1). தொடக்கத்தில் சாதாரண யூதர்களிலிருந்து இயேசுவை மெசியாவாக (கிறிஸ்து) ஏற்றுக் கொண்டவர்களை வேறுபடுத்தும் ஒரு சொல்லாகவே சபை என்னும் சொல் பயன்படுத்தப்பட்டது. கடவுளின் உண்மையான மக்களாகிய மெய் இஸ்ரயேலருக்கு அது பொருத்தமான சொல்லாக முதல் கிறிஸ்தவர்கள் அறிந்து கொண்டார்களென்று அதன் பயன்பாட்டிலிருந்து தெரியவருகிறது.

நூற்றிருபதுபேருடன் தொடங்கப்பட்ட இம் முதற்சபையில் பேதுரு திருத்தூதுவரின் முதல் அருளுரையினால் ஏறத்தாழ மூவாயிரம்பேரும் (2:41). இரண்டாம் அருளுரையினால் ஏறத்தாழ இரண்டாயிரம் பேரும் (4:4) சேர்க்கப்பட்டனர். அடியவர்களின் தொகை இன்னும் அதிகமாய் வளர்ந்தது. குருக்களிலும் பலர் நம்பிக்கையுடன் கீழ்ப்படிந்து வந்தார்கள் (6:7). 6:1இல் சீடர் தொகை பெருகியதென்றும், 6:7இல் சீடர் தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று என்றும் கூறப்பட்டிருக்கிறது. 21:20இல் யூதருக்குள் பல்லாயிரம்பேர் நம்பிக்கை கொண்டிருந்தார்களென்று காண்கிறோம்.

எருசலேம் சபையின் மூன்று தூண்களாக பேதுருவும், செபெதேயுவின் புதல்வரான யாக்கோபும், யோவானும் விளங்கினார்கள். கி.பி. 44இல் முதலாம் அகிரிப்பா இந்த யாக்கோபை வாளால் கொன்றான் (12:2). அதன் பின்பு, ஆண்டவருடைய சகோதரராகிய யாக்கோபு எருசலேம் சபைக்குத் தலைவராகி கி.பி. 62இல் கொலை செய்யப்படும் வரையிலும் பணிபுரிந்தார்.

செபெதேயுவின் மகனாகிய யாக்கோபு கொல்லப்பட்ட சமயத்தில் பேதுரு சிறைப்படுத்தப்பட்டு அருஞ்செயலால் விடுதலைபெற்றார். அதன்பின் அவர் யூதேயாவின் மற்றப் பகுதிகளில் சுற்றி அருளுரையாற்றி வந்தார்.

ஆண்டவருடைய சகோதரராகிய யாக்கோபு கொல்லப் பட்டபின் வேறொரு சகோதரராகிய சிமியோன் சபைக்குத் தலைவரானார். திரேசான் பேரரசர் காலத்தில் சிமியோன் இரத்தச்சாட்சியாய் இறந்தார்.

யூசிபியஸின் வரலாற்றின்படி 66இல் போர் தொடங்கிய போது கிறிஸ்தவர்கள் ஒரு காட்சிக்கிசைய தெக்கப் போலியிலுள்ள பெல்லா என்னும் ஊருக்குச் சென்று அங்கு வாழ்ந்தனர். இயேசு இறுதிகால நிகழ்ச்சிகளைக் கூறும்போது, முன்னறிவித்தபடியே (மார். 13:14) இது நிறைவேறலாயிற் றென்று முதல் கிறிஸ்தவர்கள் கண்டுகொண்டனர். இதற்குப் பின் எருசலேம் முக்கியமான சபையாக விளங்கவில்லை.

யூதேயா, சமாரியா நாடுகளில் சபைகள். ஸ்தேவானின் இரத்தச்சாட்சி இறப்பு (கி.பி. 33), சபை எருசலேமுக்கு வெளியே பரவ ஏதுவுண்டாக்கிற்று. இதுவரையிலும் சீடர்கள் எருசலேமில் மட்டும் கிறிஸ்துவைப்பற்றிச் சான்று பகர்ந்தனர். ஏழு உதவிக்காரரில் ஒருவராகிய ஸ்தேவான் நற்செய்திக் காகக் கல்லெறிந்து கொல்லப்பட்டபொழுது சபையானது நற் செய்தியை மற்ற நாடுகளிலும் அறிவிக்கவேண்டிய பொறுப்பை உணர்ந்தது.

திருச்சட்டத்தின் மேலுள்ள ஆர்வமிகுதியினால் சவுலும் வீடுகள்தோறும் நுழைந்து, ஆண்களையும் பெண்களையும் சிறையிலிடுவித்து, சபையைப் பாழாக்கி வந்தபோது, கிறிஸ்தவர்கள் யூதேயா, சமாரியா நாடுகளில் சிதறுண்டுபோனார்கள். அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் கிறிஸ்துவைக் குறித்து உரைத்துப் பலரை நம்பிக்கைக்கு உட்படுத்தினார்கள். சமாரியர் ஆண்டவரின் நற்செய்தியை ஏற்றுக்கொண்டபொழுது பேதுருவும் யோவானும் அங்குச் சென்று அவர்களை நம்பிக்கையில் உறுதிப்படுத்தினார்கள். அவர்களும் பல சமாரியச் சிற்றூர்களில் நற்செய்தியை அறிவித்தனர். ஏழு உதவிக்காரர்களில் ஒருவராகிய பிலிப்புவும் சமாரியாவில் பலரைக் கிறிஸ்தவ நம்பிக்கைக்குள் சேர்த்து, எத்தியோப்பிய அரசியாகிய கந்தாகேயின் மந்திரிக்கும் திருமுழுக்குக் கொடுத்து செசரியாவிலும் ஒரு சபையை ஏற்படுத்தினார்.

அந்தியோகியா சபை. சிரியாவின் தலைநகராகிய அந்தியோகியா உரோமை அரசாங்கத்திலேயே மூன்றாவது பெரிய நகரம். உரோமை முதல்வது பெரிய நகரமாகவும் அலெக்சாந்திரியா இரண்டாம் பெரிய நகரமாகவும் விளங்கின.

ஸ்தேவானின் இரத்தச்சாட்சி இறப்பினால் சிதறினவர்களால் அந்தியோகியா சபை உண்டானது. அச்சபையில் பிற இனத்தாரும் யூதர்களும் சேர்ந்திருந்தனர். திருத்தூதுவர் இதைக் குறித்துக் கேள்விப்பட்டபொழுது, பர்னபாவை அங்கு அனுப்பினார்கள். இங்கேதான் இறையடியார்களுக்குக் **கிறிஸ்தவர்கள்** என்னும் பெயர் உண்டாயிற்று. புனித மத்தேயுவுக்குரிய நற் செய்தி நூல் அந்தியோகியா சபையில்தான் எழுதப்பட்ட தென்றும் டிடாக்கி என்னும் நூலும் இங்கேதான் வெளியான தென்றும் நம்பப்படுகிறது. முதல் அருள்தொண்டர்களாகிய

பர்னபாவும், சவுலும் அந்தியோகியா சபையிலிருந்துதான் அனுப்பப்பட்டனர்.

(ஆ) பிற இனத்தாரிடையே சபைகள் - பிற இனத்தாரிடையில் திருத்தூதுவராகிய பவுல். பவுல் சிலிசியாவிலுள்ள தர்சுவில் கி.பி. 3இல் பிறந்தார். அவர் பிறப்பிலிருந்தே உரோமைக் குடியுரிமையுள்ளவர். கிரேக்க, எபிரேய மொழிகளைக் கற்று ஒரு பரிசேயராக வளர்க்கப் பட்டார். திருத். 22:3இல் தாம் எருசலேமில் கற்றதாகவும், கமாலியேலிடம் திருச்சட்டத்தைக் கற்றதாகவும் பவுல் கூறுகிறார். கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த அவர் அதிகாரப்படுத்தப் பட்டிருந்தபடியால், அருள்பொழிவு பெற்ற இரபியாக அவர் இருந்திருக்கலாம். இயேசுவின் ஊழியக் காலத்தில் அவர் எருசலேமிலிருந்திருக்கலாம்.

கி.பி. 33-34இல் ஸ்தேவான் கல்லெறியப்படுகையில், பவுலும் அச்செயலில் உட்பட்டிருந்தார் (7:58). தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் கிறிஸ்துவின் திருக்காட்சி கண்டு மனமாற்றமடைந்து, பிற இனத்தாருக்குத் திருத்தூதுவராக அழைப்புப் பெற்றார். சிலகாலம் அவர் தமஸ்குவில் அருளுரையாற்றியபோது கிறிஸ்தவ மரபுகளை அவர் அறிந்திருக்கலாம் (1 கொரி. 11:23-25). தமஸ்குவிலிருந்து அரேபியாவுக்குச் சென்று (கலா. 1:17), மீண்டும் தமஸ்குவுக்குத் திரும்பியபோது அரபிய அரசன் அரேத்தா யூதருடைய சூழ்ச்சியினால் அவரைப் பிடிக்க முயலும்போது மதிலிலிருந்து சாளரம் வழியாய்க் கூடையில் இறக்கிவிடப்பட்டுத் தப்பினார் (2 கொரி. 11:32).

கி.பி. 37இல் சிரியாவிலும் சிலிசியாவிலும் சென்று பவுல் நற்செய்தியைக் கூறினார். கி.பி. 37 முதல் 44 வரை அவருடைய முயற்சிகளைக் குறித்து நாம் ஒன்றும் அறியோம். கி.பி. 44இல் அவர் பர்னபாவினால் தர்சுவிலிருந்து அந்தியோகியாவுக்குக் கொண்டுவரப்பட்டார்.

ஏறத்தாழ கி.பி. 46இல் பர்னபாவும், பவுலும் கடல் தாண்டி மேற்குப் பகுதிகளில் அருள்தொண்டு செய்யப் பிரித்தெடுக்கப்பட்டனர். எனவே, திருத். 13,14 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள முதல் அருள்தொண்டுப் பயணத்தில், பர்ன பாவும், பவுலும், யோவான் மார்க்குடன் சென்றனர். பிசிதியாவிலுள்ள அந்தியோகியாவிலும், இக்கோனியா, லீஸ்திரா, தொ்பை முதலிய இடங்களிலும் சபைகள் நிறுவப்பட்டன. சின்ன ஆசியாவிலுள்ள தெற்குப் பகுதியிலுள்ள இச்சபைகளுக்கு பவுல் கலாத்தியருக்கு என்ற பெயரால் திரு முகத்தை எழுதினார். சிலர் வட கலாத்தியப் பகுதியிலுள்ள சபைகளுக்கு அவர் இத் திருமுகத்தை எழுதினாரென்று கூறுகின்றனர். அங்குள்ள இடங்களில் பவுல் சென்ற விபரம் அறியோம்.

இப் புதுச்சபைகளில் யூதக் கிறிஸ்தவர்களும் இருக்க, பெரும்பான்மையோர் பிறஇனத்துக் கிறிஸ்தவர்களாயிருந்தனர். யூதக் கிறிஸ்தவர்கள், பிறஇனக் கிறிஸ்தவர்கள் மோசேயின் திருச்சட்டத்தையும் கடைப்பிடிக்கவேண்டுமென்று வற்புறுத் தினார்கள். அந்தியோகியாவிலும் எருசலேமிலிருந்து சில யூதக் கிறிஸ்தவர்கள் சென்று விருத்தசேதனமின்றி மீட்படைவது இயலாதது என்று சாதித்தனர். இது தொடர்பாக கி.பி. 49இல் எருசலேமில் நடைபெற்ற ஆலோசனைச் சங்கத்தில் முடிவு கட்டப்பட்டது. பிற இனத்தார் மோசேயின் திருச்சட்டத்தினால் அல்லாது சபையின் உறுப்புகளாயிருக்கவும், அதன் சிறப்புரிமை களை அனுபவிக்கவும் முழு உரிமையுள்ளவர்களென்று இம் மன்றம் தீர்த்தது. பவுலின் எண்ணம் இதில் நிறைவேறலாயிற்று. திருச்சட்டத்தின் நற்செயல்களால் அல்ல, இயேசு கிறிஸ்து விலுள்ள நம்பிக்கையாலேயே நீதியராகத் தீர்ப்பிடுகிறோம் என்னும் பவுலின் கருத்து வெற்றிபெற்றது. கிறிஸ்தவச் சமய மானது யூத சமயத்தின் ஒரு பிரிவாகிவிடாமல் அனைத்துலகச் சமயமாவதற்கு இம்முடிவு காரணமாயிற்று. பவுல் பிற இனத்தாரின் திருத்தூதுவராகத் தடையின்றி நற்செய்தியைக் கூறி அறிவிக்க வழியுண்டாயிற்று.

கி.பி. 49 அல்லது 50இல் பவுல் இரண்டாம் அருள்தொண்டு பயணத்தை சீலா, தீமோத்தேயு என்பவர்களோடு தொடங்கினார். முதலாம் அருள்தொண்டு பயணத்தில் மார்க்கு பம்பிலியா நாட்டில் அவர்களை விட்டுப் பிரிந்த காரணத்தால் பவுல் அவரைச் சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை. இதனால் பர்னபா பவுலைவிட்டு மார்க்குடன் சீப்புரு தீவுக்குச் சென்றார். இரண்டாம் அருள்தொண்டு பயணத்தில் பவுல் பிலிப்பி, தெசலோனிக்கேயா, பெராயா, கொரிந்து, எபேசு முதலிய இடங்களில் சபைகளை ஏற்படுத்தினார். கி.பி. 53 அல்லது 54இல் பவுல் எருசலேம் வழியாக அந்தியோகியாவுக்குத் திரும்பினார்.

அதன் பின்னர், பவுல் மூன்றாம் அருள்தொண்டு பயணத்தை மேற்கொண்டுச் சபைகளை உறுதிப்படுத்த எபேசுவில் மூன்று ஆண்டுகள் தங்கிப் பணியாற்றினார். 58இல் பவுல் கொரிந்து வுக்கு மீண்டும் சென்று மூன்று மாதங்கள் செலவிட்டார். கி.பி. 58இல் பவுல் எருசலேமுக்கு ஏழைகளுக்காகப் பிரித்த உதவிப் பணத்தோடு சென்றார். எருசலேம் திருக்கோவிலில் அவர் யூதர்களின் சூழ்ச்சிகளிலிருந்து உரோமை வீரரால் காப்பாற்றப்பட்டு, செசரியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டார். இரண்டு ஆண்டுகள் அங்கே சிறையிலிருந்தபின் கி.பி. 60 இல் நீரோ பேரரசருக்கு பவுல் அபயமிடவே, உரோமைக்கு அனுப்பப்பட்டார். உரோமையில் இரண்டு ஆண்டுகள் பவுல் சிறையிலிருந்து விடுதலை பெற்றபின் ஸ்பானியாவுக்கு ஒரு வேளை சென்றிருக்கலாம். கி.பி. 67இல் பவுல் சிரச்சேதம் செய்யப்பட்டார் என்பது மரபு.

பிற இனத்தாரிடையே திருத்தூதுவராகிய பேதுரு. பேதுரு திருத்தூதுவர் மூலமாகவும் பிற இனத்தாரில் பலர் நம்பிக்கை கொண்டார்கள். லித்தாவில் பேதுரு சென்றபொழுது அங்கே சில இறையடியார்கள் இருந்தனர். லித்தாவில் எட்டு ஆண்டுகளாகப் படுக்கையில் முடக்குவாதக்காரராயிருந்த ஐனேயாவைப் பேதுரு குணமாக்கியபொழுது, லித்தாவிலும் சாரோனிலும் குடியிருந்தவர்கள் அனைவரும் ஆண்டவரிடம் திரும்பினார்கள் (9:32-35).

லித்தாவிலிருந்து ஏறத்தாழ பத்து மைலுக்கப்பாலுள்ள யோப்பாவிலும் சபை இருந்தது. அங்கே தபீத்தா என்னும் தொர்க்கா இறந்தபோது, பேதுரு அவரை உயிரோ டெழுப்பினார். அதனால் அங்கே பலர் கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்தனர். யோப்பாவில் தோல் பதனிடுகிறவரான சீமோனிடம் பேதுரு நீண்டகாலம் தங்கியிருந்தார். எனவே, அங்கே சபை பெரும் வளர்ச்சியடைந்தது எனலாம்.

செசரியாவிலும் ஒரு சபை இருந்தது. இத்தாலியா இராணுவத்தில் நூற்றுவர் தலைவராயிருந்த கொர்னேலியுவும், அவர் வீட்டாரும், சுற்றத்தாரும், நண்பர்களும் பேதுருவினால் நம்பிக்கைக்குக் கொண்டுவரப்பட்டனர். சில நாள்கள் பேதுரு அங்கே தங்கி நம்பிக்கை கொண்டோரை உறுதிப்படுத்தினார் (திருத். 10). ஏழு உதவியாளருள் ஒருவராகிய பிலிப்பு என்னும் நற்செய்தியாளருடைய வீடு அங்கே இருந்தது. இறைவாக்கு

சொல்லுகிற நான்கு புதல்வியர் அவருக்கிருந்தார்கள் (21.8,9).

பிறஇனத்தாரிடையே திருத்தூதுவர் பணி செய்த பிறர். பேதுரு திருத்தூதுவர் எருசலேமைவிட்டு வெளியே சென்றது போல **யோவான்** திருத்தூதுவரும் (இவர் இயேசுவின் சீடரா அல்லது வேறொருவரா என்பது பற்றிக் கருத்து வேறுபாடு கள் உள்ளன) எருசலேமைவிட்டுச் சென்றார். பேதுரு உரோமைக்குச் சென்றபோது, யோவான் எபேசுவுக்குச் சென்றார். பவுலின் இறப்பிற்குப் பின், யோவான் எபேசுவிலே தங்கி பத்மூவுக்குத் தொமித்தியான் பேரரசரால் நாடு கடத்தப்படும்முன் ஐந்து ஆண்டுகள் பணியாற்றினார். சின்ன ஆசியாவிலுள்ள சபைகள் அனைத்தையும் அவர் மேற்பார்வையிட்டார். எபேசு சிமிர்னா, பெர்கமு, தியத்தைரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா ஆகிய சபைகளைக் குறித்துத் திருவெளிப்பாடு நூலில் அறிகிறோம். சின்ன ஆசியாவிலுள்ள கொலோசே சபை பிலேமோனால் நிறுவப்பட்டது.

தீருவிலும் சீதோனிலும் அதிகமான கிறிஸ்தவர்களுள்ள சபைகள் இருந்தன. சிரியாவில் அந்தியோகியா சபையுடன் தமஸ்கு, கியாபோலி என்னும் இடங்களில் சபைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. கி.பி. 11இல் பித்தினியாவில் கிறிஸ்தவர்கள் பெருகிவிட்ட காரணத்தால் அங்குள்ள கோவில்கள் கைவிடப்பட்டுவிட்டன என்று பேரரசனாகிய திரேதானுக்குத் தெரிவித்தார். கிரேத்தா தீவிலும், சீப்புரு தீவிலும் ஊர்கள் தோறும் சபைகள் இருந்தனவென்று தெரியவருகிறது (தீத்து 1:5). உரோமையிலும் ஒரு சபை இருந்தது. பெந்தெகொஸ்தே நாளில் மனமாறுதலடைந்த யூதரால் அங்கு சபை நிறுவப்பட்டிருக்கலாம். ஆக்கில்லாவும், அவர் மனைவி பிரிஸ்கில்லாவும் உரோமையில் சபையை ஏற்படுத்தினார்களென்னும் ஓர் எண்ணமுண்டு. இவர்கள் கி.பி. 51-52இல் கிறிஸ்தஸ் (Chrestus) என்பவரால் உண்டான புரட்சியை முன்னிட்டு கிளவுதியு பேரரசரால் உரோமையிலிருந்து வெளியேற்றப்பட்டார்களென்று வரலாற்றில் கூறப்பட்டிருக்கிறது. கிறிஸ்து என்பதற்கு கிறிஸ்தஸ் என்று கூறப்பட்டிருக்கலாம். பேதுருவும், பவுலும் உரோமைச் சபையில் செல்வாக்குடையவர்களாயிருந்தனரென்று இன்னாசியு உரோமருக்கு எழுதிய கடிதத்தின் மூலம் அறிகிறோம். இத்தாலியாவில் வேறு பல சபைகளும் இருந்தன.

எகிப்தில் அலெக்சாந்திரியாவில் ஒரு வளரும் சபை இருந்தது. திருத். 18:24,25இலிருந்து திருமுழுக்குனரான யோவானின் திருமுழுக்குப் போதனையும், கி.பி. 55க்கு முன் அலெக் சாந்திரியாவை எட்டியதென்று புலப்படுகிறது. அலெக்சாந் திரியா நகரிலிருந்து வந்த அப்பல்லோ எபேசுவில் ஆக்கில்லா, பிரிஸ்கில்லா ஆகியோரின் மூலம் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிந்தார். அதற்கு முன் இயேசுவை மெசியாவென்று அறியாதிருந்து அவர்களால் சரியான அறிவை அடைந்திருக்கலாம். அதன் பின்புதான் இயேசு கிறிஸ்து என்று திருவசனங்களைக் கொண்டு காட்டினார் (18:28). அலெக்சாந்திரியாவிலும் அப்பல்லோ சென்று அருளுரையாற்றியிருக்கலாம். யூசிபியஸ் தமது வரலாற்றில், மார்க்கு முதலாவது அலெக்சாந்திரியாவில் நற்செய்தியை அறிவித்தாரென்று குறிப்பிட்டுள்ளார். எனவே, மார்க்கு வால் அச்சபை நிறுவப்பட்டிருக்கலாமென்று எண்ண இடமுண்டு.

கார்த்தேசிலும் வட ஆப்பிரிக்காவிலும் சபைகள் இருந்தன. பார்த்தியாவிலும், காலிலும், பிரித்தானியாவிலும் முதல் நூற்றாண்டிலேயே சபைகள் இருந்ததாக மரபு சார்ந்த எண்ணமுண்டு.

கி.பி. 52இல் தோமா திருத்தூதுவர் தென்னிந்தியாவில் வந்து, பாலூர், கிராங்கனூர், பாரூர், கோகாமங்கலம், சாயல், நிராணம், கொல்லம் ஆகிய ஏழு இடங்களில் சபைகளை நிறுவியதாக உறுதியான மரபுகள் இந்தியாவிலும் மேற்கத்திய நாடுகளிலும் உள்ளன.

பு.ஏ. காலத்தில் சபை பெருமளவில் பரவுவதற்குப் பல காரணங்கள் இருந்தன. திருத்தூதுவர்கள் இயேசு கிறிஸ்து வைப்பற்றிய நேரடியான அறிவிலும் அனுபவத்திலும், உயிர்த்தெழுந்த திருக்காட்சியிலும் தூய ஆவியின் நிறைவிலும் வல்லமை பெற்றவர்களாய்ச் செயலாற்றினார்கள். இன்னல் களைப் பொருட்படுத்தாது, காயங்களைக் கருதாது, துன்பத்திற்கு அஞ்சாது, சபையின் வாழ்வையே முதன்மையாய் வைத்து, தங்களை மீட்ட ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குப் பணி செய்வதையே அவர்கள் தங்கள் தலையாயக் கடமையாய் எண்ணினார்கள், கிறிஸ்துவுக்காகச் சான்று பகர, தங்கள் வீட்டையும், உறவினரையும், தங்களுக்குரிய யாவற்றையும்விட ஆயத்தமாயிருந்தனர். கிறிஸ்துவை மாட்சிப்படுத்துவது அவர்களது பேராவலாயிருந்தது. திருத்தூதுவர்கள் முதலான கிறிஸ்தவச் சமயப் பரப்பாளர்கள் முழு நேரத் தூதுவர்களாய் உழைத்தனர், நகரங்களிலும், சிற்றூர்களிலும், அலைந்து திரிந்து, ஆண்டவருக்கென்று புதிது புதிதாக இறைமக்களைச் சேர்ப்பதைத் தங்கள் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டி. ருந்தனர். ஆகையால், ஆண்டவர் அவர்களோடு செயலாற்றி தமது திருப்பெயரை மாட்சிப்படுத்தினார்.

4. நம்பிக்கை (பற்றுறுதி)

முதலாம் நூற்றாண்டுக்குள் முதல் கிறிஸ்தவர்கள் தங்கள் நம்பிக்கையை ஒரு பற்றுறுதி அறிக்கை வடிவத்தில் வெளியிடா விட்டாலும், தங்கள் நம்பிக்கையைக் குறித்து அவர்கள் தெளிவான எண்ணமுள்ளவர்களாயிருந்தனர்.

கடவுளைத் தந்தையாகவும், எல்லார் மீதும் அன்பு கூர்ந்து எல்லாருக்காகவும் கவலைப்படுகிறவராகவும் அவர்கள் அறிந்தி ருந்தனர். மூன்று விதத்தில் கடவுள் தந்தையாக அறியப்பட்டி. ருந்தார். (1) கடவுள் இயேசு கிறிஸ்துவின் தந்தை. இயேசு கிறிஸ்து கடவுளின் ஒரே மகன். அவரில் கடவுள் முழுமையாய் வெளிப்பட்டுள்ளார். ஆகையால், கடவுளை இயேசு கிறிஸ்துவின் தந்தையாக அறிந்தனர் (யோ. 20:17; சங். 2:26; 3:5). (2) எல்லாருக்கும் தந்தை (திருத். 17:28). (3) நம்பிக்கைக்கொண் டோருக்கு சிறந்த முறையில் அவர் தந்தை (மத். 6:9; 1 பேது. 1:17). இயேசு கிறிஸ்துவின் மூலமாகவே அவர் தந்தையாகிறார். அன்பு கூருகிறவர் எவரும் கடவுளால் பிறந்தவர். கடவுளை அறிந்து கொள்கிறவர். அன்பு கூராதவர் கடவுளை அறியார். கடவுள் அன்பாகவே இருக்கிறார். தம்முடைய ஒரே மகனால் நாம் பிழைக்கும்படி கடவுள் அவரை இவ்வுலகத்திற்கு அனுப்பின தினால் கடவுளின் அன்பு நம்மிடத்தில் வெளிப்பட்டது என்று 1 யோ. 4:7-9இல் கூறப்பட்டுள்ளது இதை விளக்குகின்றது.

இயேசு கிறிஸ்து முதல் கிறிஸ்தவர்களின் செய்தியில் மையமா யிருந்தார். அவரே யூதர்கள் எதிர்பார்த்த மெசியா என்று அவருடைய உயிர்த்தெழுதலை ஆதாரமாய்க் கொண்டு அவர்கள் கூறி அறிவித்தார்கள். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அவர்களுடையச் சான்றின் முக்கிய கூறு. அது அவர்களுடைய

நம்பிக்கையை உறுதிப்படுத்திற்று. அவருடைய உயிர்த் தெழுதல் அவர்கள் மனஉறுதியுடன் சான்று பகருவதற்குரிய ஒன்றாயி ருந்தது அவர்களுடைய நற்செய்தியில் அது ஒரு முக்கிய பகுதி. அவர்களுடைய நம்பிக்கைக்கு அது அடிப்படையாயிருந்தது.

திருவார்த்தைகளிலிருந்து தாங்கள் கண்ணாரக் கண்ட உண்மையை அவர்கள் விளக்கினர். குறிப்பாக திருப். 16:8-11 எடுத்தாளப்பட்டது. நற்செய்தி நூல்களில் கூறப்பட்டுள்ள உயிர்த்தெழுதல் காட்சிகளும். வெறுமையான கல்லறையும், பவுலின் திருமுகங்களில் 1 கொரி. 15ஆம் அதிகாரமும் உயிர்த்தெழுதல் என்பது இயேசு ஆவியில் எழும்பினார் என்றல்ல. உண்மையாகவே அவர் உயிர்த்தெழுந்தா ரென்பதை மெய்ப்பிக்கின்றன. அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தாரென்பது துவக்கச்சபையின் பற்றுறுதி அறிக்கையாயிற்று.

இயேசு கிறிஸ்துவின் சிலுவை இறப்பும் நற்செய்தியின் மற்றொரு முக்கியக் கூறாயிருந்தது. கிறிஸ்து திருவார்த்தை களின்படி நமது பாவங்களின் பொருட்டு இறந்தார் என்றும் (15:3), நாம் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக இறந்தார் என்றும் (1 தெச. 5:10), இவரே நம் தந்தையாம் கடவுளின் திருவுளத்திற்கேற்ப இன்றைய பொல்லாத காலத்தினின்று நம்மை விடுவிக்குமாறு நம்முடைய பாவங்களின் பொருட்டுத் தம்மையே ஒப்புவித்தார் என்றும் (கலா. 1:4), அவர் நமது குற்றங்களுக்காகச் சாகுமாறு ஒப்புக்கொடுக்கப்பட்டார் என்றும் (உரோ. 4:25), பவுல் திருத்தூதுவர் கூறும்போது தமது சிறந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

திருத்தூதுவர் பணிகளில் - பேதுரு, ஸ்தேவான், பவுல் ஆகியோரின் அருளுரைகளில் - இறைவாக்கினர் மெசியாவின் இறப்பைக் குறித்து முன்னறிவித்தார்களென்று பொதுவாகக் கூறுகின்றனர். பிலிப்பு எத்தியோப்பியனிடம் பேசுகையில் எசா. 53ஆம் அதிகாரத்தில் அதை எடுத்துக் கூறுகிறார். எனினும், திருத்தூதுவர் பணிகளில் பாவமன்னிப்பு கிறிஸ்துவின் சிலுவை இறப்போடு தொடர்புடையதாகத் திட்டவட்டமாகக் கூறப்படாததால், பவுலின் திருமுகங்களில் காணப்படும் வளர்ச்சி திருத்தூதுவர் பணிகளில் இல்லை என்று ஜோகான்னிஸ் உயிஸ் எண்ணுகிறார். பிலிப்பு எசா. 53:4,5ஐ அழுத்தாமல் 6,7 வசனங்களையே வற்புறுத்துவதும் இதைக் காட்டுகிறது என்று குறிப்பிடுகிறார். இயேசு கிறிஸ்து பாவங்களுக்காக இறந்தா ரென்பது யூதக் கிறிஸ்தவர்களுக்குள் உண்டாகக்கூடிய எண்ணமே. ஆனால், கிறிஸ்து நமது பாவங்களுக்காக இறந்தாரென்று விளக்கிய பெருமை பவுலுக்குரியதாகும். தமது அனுபவத்திலிருந்து பவுல் அதைக் கண்டுபிடித்தார்.

இயேசு கிறிஸ்து கடவுளின் மகனென்பது பு.ஏ. காலத்தின் முக்கிய எண்ணம். உயிர்த்தெழுதல் மூலமாக அவர் கடவுளின் மகன் என்னும் நிலைக்கு உயர்த்தப்பட்டாரென்னும் எண்ணம் பு.ஏ.க்குப் புறம்பானது. உரோ. 1:3இல் பவுல் மனிதத் தன்மை யையும், இறைத்தன்மையையும் எடுத்துக்கூறி, உயிர்த்தெழுதல் அவரது தெய்வீகத்தை மெய்ப்பிக்கிறதாகக் கூறுகின்றார்.

கிறிஸ்துவின் மெய்யான மனிதத்துவத்தை அறிவுநெறிக் கோட்பாட்டுத் தோற்றக் கொள்கைக்கு எதிராய் விளக்க புனித யோவான் வார்த்தை என்னும் சொல்லைப் பயன்படுத்தி, வார்த்தை மனிதராணார் என்று கூறியுள்ளார்.

திருவெளிப்பாடு நூலில் கடவுளோடு அரியணையில் வீற்றிருக்கிறவராகவும் (திருவெ. 3:21; 7:10; 22:1). கடவுளுக்குரிய அல்பாவும் ஒமேகாவும், துவக்கமும் முடிவும், ஆகிய பெயர்கள் அவருக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் அறிகிறோம்.

இயேசு கிறிஸ்துவை ஆண்டவராகப் பு.ஏ. கிறிஸ்தவர்கள் அறிக்கை செய்தனர். நற்செய்தி நூல்களில் லூக்காவிலும் யோவானிலும் ஆண்டவர் என்னும் பெயர்ச்சொல் அதிகமாய்ப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் அது சிறப்பான கருத்துடையதாயிற்று. பேதுரு தமது அருளுரையில் (திருத். 2:36), நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே கடவுள் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கி னார் என்று கூறுகிறார். திருமுகங்களிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்னும் சொற்றொடர் அடிக்கடி காணப்படு கிறது. எனவே, ஆண்டவர் என்பது இயேசு கிறிஸ்துவுக்குச் சிறப்புப் பெயராயிற்று. செப்துவசிந்து என்னும் கிரேக்க மொழிபெயர்ப்பில் ப.ஏ.இல் இது யாவேக்கு இணையாய் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆயினும் உடனடிச் சூழலாக இருந்தது உரோமைப் பேரரசனை மக்கள் ஆண்டவர் என்று அழைத்து வணங்கியதாகும். இதற்கு உடன்படாத கிறிஸ்தவர்கள் இயேசு ஆண்டவர், கடவுளால் ஆண்டவரும் கிறிஸ்துவு மாக்கப்பட்டவர் என்று அறிவித்தார்கள். பவுல் கிறிஸ்துவின் நிகரற்ற உன்னத நிலையைக் குறிப்பிடும்பொழுது, இயேசு கிறிஸ்து ஆண்டவரென்று நாவுகள் யாவும் தந்தையாம் கடவுளின் மாட்சிக்கென்று அறிக்கைபண்ணும்படிக்கும் கடவுள் அவரை உயர்த்தி, எல்லா பெயருக்கும் மேலான பெயரை அவருக்குத் தந்தருளினார் என்று (பிலி. 2:10,11) கூறியுள்ளார். கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துபிரான் ஒருவரே ஆண்டவர், அரசர்களுக்கெல்லாம் அரசராயிருக்கிற அவரே அடிபணியவும் வணங்கவும் தக்கவர்.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை விரைவில் இருக்குமென்னும் எதிர்பார்ப்பு அக்காலத்து இறையடியார் களுக்குள் இருந்தது. அவர் வரும் நாளைக் குறித்து அவர்கள் திட்டமிட முனையாமல் அது திருடன் வருவதுபோலத் திடீரென்று இருக்கும் என்று நம்பினார்கள் (1 தெச. 5:2; திருவெ. 3:3; 16:15). பவுலும் தம் காலத்திலேயே அது நடைபெறுமென்று தொடக்கத்தில் நம்பியிருந்தார். 2 பேதுருவில், ஆண்டவருக்கு ஒருநாள் ஆயிரம் வருடம் போன்றது, ஆயிரம் வருடம் ஒரு நாள் போன்றது. தாமதிக்கிறாரென்று சிலர் எண்ணுகிறபடி ஆண்டவர் தமது வாக்குறுதியைப்பற்றித் தாமதியாமல், ஒருவரும் கெட்டுப்போகாதபடி எல்லாரும் மனம் மாறவேண்டுமென்று விரும்பியே உங்களிடத்தில் நீடிய பொறுமை பாராட்டுகிறார் என்று கூறப்பட்டிருக்கிறது. வாழ்க்கையில் விழித்திருத்தலே, ஆமென், ஆண்டவராகிய இயேசுவே வாரும் என்பதற்கு நிகரென்று கிறிஸ்தவர்கள் உணர்ந்தனர்.

கிறிஸ்தவர்கள் தூய ஆவியரைப் பெற்றவர்கள் என்பது பு.ஏ. போதனை. கிறிஸ்துவுக்குள் இருப்பது தூய ஆவியருக்குள் இருப்பதற்கு நிகர். யோவான் திருத்தூதுவர், கிறிஸ்துவின் பெயரின் மேல் நம்பிக்கை கொண்டோராய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் கடவுளின் பிள்ளைகள் என்று கூறுகிறார் (யோ. 1:12). பவுல் திருத்தூதுவர் தூய ஆவியரைப் பெற்றவர்கள் கடவுளுடைய பிள்ளைகள் என்று குறிப்பிடுகிறார் (உரோ. 8:14-17). இரண்டும் ஒரே அனுபவமே. ஆவியின் வரங்களில் அன்பின் வரம்தான் பு.ஏ.இல் முக்கியப்படுத்தப்பட்டிருக்கிறது.

மும்மைக் கோட்பாடு திட்டவட்டமாகப் பு.ஏ.இல் எழுதிவைக்கப் படாவிடினும் அக் காலத்துக் கிறிஸ்தவ அனுபவம் கடவுளைப் பற்றிய எண்ணத்தில் அத்தகைய ஒரு கொள்கைக்கு நடத்துவதாக இருந்தது.

5. வழிபாடு

தொடக்கநாள்களில் இறையடியார்கள் எருசலேம் திருக்கோவிலிலும், தொழுமன்றங்களிலும் நடத்தப்பட்ட வழிபாடுகளில் கலந்துகொண்டனர் (திருத். 3:1; 14:1; 17:1,2; 18:4; 21:26). பலிகளில் அவர்கள் பங்குபெறவில்லை. சனிக்கிழமைகளில் ஒய்வுநாளை அவர்கள் ஆசரித்தனர். ஆனால் தங்கள் நம்பிக்கைக்கும் வணக்கத்திற்கும் யூதத் தொழுகை முறைகள் அனுகூலமாயிராதபடியால் நாளடைவில் கிறிஸ்தவ தொழுகைகளைப் பின்பற்றினார்கள். ஆண்டவர் உயிர்தெழுந்த திருநாளாகிய ஞாயிற்றுக் கிழமைகளில் சபை கூடினார்கள். வழிபாடுகள் வீடுகளில் நடத்தப்பட்டன. எபேசுவில் பவுல் திறன்னு என்பவருடைய மன்றத்தில் தொழுகை நடத்தினார் (19:9).

வழிபாடுகளில் பாடல்களும், திருப்பாடல்களும் பாடப்பட்டன, இறை வேண்டல்களும் செய்யப்பட்டன. ப.ஏ.இலிருந்து ஒரு பகுதி வாசிக்கப்பட்டுப் போதனை அளிக்கப்பட்டது. பவுல் முதலானோர் எழுதிய திருமுகங்களும் வாசிக்கப்பட்டிருக்கலாம். ஒருவித குறுகின பற்றுறுதி அறிக்கையும் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். அத்தகைய அறிக்கையின் கூறுகளை 1 கொரி. 15:3,4; 1 தீமோ. 3:16 ஆகியவற்றில் காணலாம். அதன் பின்பு அன்பின் விருந்தும் திருவிருந்தும் நடத்தப்பட்டன.

தொடக்கத்தில் கிறிஸ்தவ வழிபாடு இரு பகுதிகளாக அமைந்திருந்தது. முதற் பகுதியில் கிறிஸ்தவ சமயத்தைக் குறித்து அறிய விரும்பியவர்களும் திருமுழுக்கிற்கு ஆயத்தம் செய்வோரும் பங்குபெற்றனர். அப்பகுதி **மிஸா கேட்டக்கு மெனோரம்** (Missa Catechumenorum) என்று அழைக்கப்பட்டது. இரண்டாம் பகுதியில் திருமுழுக்குப் பெற்றவர்களே கலந்து கொண்டனர். அதில் கிறிஸ்தவ நம்பிக்கைக்குரிய ஆழமான போதனைகள் அளிக்கப்பட்டுத் திருவிருந்தும் நடத்தப்பட்டது. இப்பகுதி **மிஸா பிடலியம்** (Missa Fidelium) என்று அழைக்கப்பட்டது.

திருமுழுக்கு, திருவிருந்து ஆகிய இரு திருவருள்முறைகள் கடைபிடிக்கப்பட்டன. திருமுழுக்கிற்குப் போதுமான தண்ணீர் இல்லாவிடில் தந்தை, மைந்தர், தூய ஆவியின் பெயரால் மூன்று தடவைகள் தெளிக்கப்பட்டன என்று டிடாக்கியில் கூறப்பட்டதின் மூலம் அறிகிறோம். திருத். 8:36-38; 9:18; 10:47,48; 19:5 ஆகியவற்றில் தண்ணீர் தெளித்து திருமுழுக்கு கொடுக்கப்பட்டிருக்கலாமென்று நம்பப்படுகிறது. திருவிருந்து ஒவ்வொரு ஞாயிறன்றும் நடத்தப்பட்டது.

6. அமைப்பு

சபைகள் வளர்ச்சியடையவே அவற்றை ஒழுங்கான முறையில் நடத்தும் திருப்பணியாளர்களின் வரிசை தேவைப்பட்டது. பவுல் 1 கொரி. 12:28இலும், எபே. 4:11இலுமாக இரண்டு திருப்பணியாளர் அட்டவணையைக் குறிப்பிடுகிறார்.

(1) திருத்தூதுவர். இரு வரிசைகளிலும் திருத்தூதுவர் முதன்மையானவர்களாய்க் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். பன்னிருவர் சிறந்தவர்களாக எண்ணப்பட்டனரென்பதற்கு ஐயமில்லை. பேதுருவுக்கு மற்ற திருத்தூதுவர்களுக்கில்லாத அதிகாரத்தை ஆண்டவர் கொடுத்தாரென்று எண்ண இடமில்லை. தங்களுக்குமேல் பேதுரு அதிகாரம் செலுத்தக் கூடியவராக அவர்கள் கருதவில்லை. ஏனெனில், தங்களில் யார் பெரியவர் என்னும் பேச்சு அவர்களுக்குள் உண்டானது. பேதுருவின் சொற்படி சபை நடத்தப்பட்டதென்று திருத்தூதுவ பணிநூல் கூறவில்லை. பேதுருவின் கட்டளையின்படி அவர்கள் நற்செய்திப் பணியில் ஈடுபடவில்லை. தூய ஆவியாரால் ஒவ்வொருவரும் நடத்தப்பட்டனர். முற்காலத்தில் திருத்தூதுவர்கள் இணையாகவே எண்ணப்பட்டனர்.

திருத்தூதுவரின் வரிசையில் பன்னிருவர் மட்டுமல்ல, பவுல், பர்னபா (திருத். 14:14), ஆண்டவருடைய சகோதரராகிய யாக்கோபு (கலா. 1:19), அந்திரோனீக்கு, யூனியா (உரோ. 16:7) ஆகியோரும் உட்பட்டிருந்தனர். திருத்தூதுவராயிருப்பதற்கு உயிர்த்தெழுந்த இயேசுவைக் காட்சி வாயிலாகக் கண்டு திட்டமான அழைப்பும் அதற்கென்று பெற்றிருத்தல் வேண்டும். சான்றாக, பவுலும் பர்னபாவும் திருத்தூதுவர்களாக அந்தியோகியா சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர் (திருத். 13:3).

திருத்தூதுவர் ஒரு சபையிலிருந்து பணியாற்றியவர்களல்ல. எல்லாச் சபைகளையும் பற்றிய கவலையும் மேற்பார்வையும் அவர்களுக்கிருந்தது. பன்னிருவரெல்லாருடைய முக்கியத்தைக் குறித்து நாம் அறியோம். ஆண்டவருடைய சகோதரராகிய யாக்கோபு, பேதுரு, யோவான் ஆகியோர் தூண்களாக எண்ணப்பட்டனர். பின்னர் ஆண்டவரின் சகோதரராகிய யாக்கோபு முக்கியமாக எண்ணப்பட்டாரேயன்றி பன்னிருவரல்ல. எல்லாச் சபைகளையும் பற்றிய கவலையும் மேற்பார்வையும் பவுலுக்கு அதிகமாயிருந்தது. அவர் சபைகளின் பிரச்சனைகளைத் தீர்க்கவும் குறைவுபட்ட சபைகளில் பண உதவி புரியவும் முயற்சி செய்து திருத்தூதுவர் என்னும் பெயருக்குத் தக்கவராக விளங்கினார்.

(2) இறைவாக்கினர். இறைவாக்கினர் தூய ஆவியாரால் வரம்பெற்றவர்கள், முதல் நூற்றாண்டில் மதிப்புக்குரியவர்களாய் எண்ணப்பட்டிருந்தனர். அவர்கள் சபைகளைச் சந்தித்து நம்பிக்கையை உறுதிப்படுத்தினார்கள், தூய ஆவியினால் எச்சரித்து, ஊக்கமளித்துப் போதித்தனர். வருங்காலத்திற் குரியவைகளையும் அவர்கள் முன்னறிவித்தார்கள். பெண்களும் இறைவாக்கு ஊழியம் செய்தனர் (1 கொரி. 11:5; அப். 21:9). போலி இறைவாக்கினரும் தோன்றியபடியால் முதலாம் நூற்றாண்டிலேயே இறைவாக்கு வரம் ஒய ஆரம்பித்தது.

(3) நற்செய்தியாளர். பல இடங்களில் சுற்றித்திரிந்து ஆண்டவராகிய இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அறிவிப்பது நற்செய்தியாளருடைய கடமை (11:19,20). பிலிப்பு ஒரு நற்செய்தியாளராய் இருந்தார் (21:8). சிலர் மட்டும் நற்செய்திப்பணியிலிருந்தார்கள் என்று கூறலாகாது. பவுலும் நற்செய்தி ஊழியம் செய்தார். தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதும்பொழுது, நற்செய்தியாளரின் வேலையைச் செய் என்று கூறுகிறார். நற்செய்தி நூல்களை எழுதியவர்கள் 3ஆம் நூற்றாண்டில்தான் நற்செய்தியாளர் என்று அழைக்கப்பட்டனர்.

(4) போதகர்கள். இவர்கள் மேய்ப்பர்களாகச் சபையில் பொறுப்பாயிருந்தனர், தங்கள் வசமிருந்த மந்தையின் ஆவிக்குரிய நலனுக்காகப் பணியாற்றினர்.

(5) திருத்தொண்டர்கள். முதலாவது எருசலேமில் அன்றாட விசாரணையைக் கவனிப்பதற்காக ஏழுபேர் ஏற்படுத்தப்பட்டனர் (6:1-6). ப.ஏ. காலத்தில் இத்தகைய வரிசை இருந்ததாகக் கூற இயலாது. பல பொறுப்புகள் இருந்தாலும் எல்லாரும் ஒரே ஊழியத்தில் பங்குபெற்றனர். திருத்தொண்டர்கள் நற்செய்தி ஊழியத்தையும் செய்தனர். பவுலும் தம்மை ஒரு திருத்தொண்டர் அல்லது ஊழியக்காரர்

என்று குறிப்பிடுகிறார். பெண் திருத்தொண்டர்களும் முதற் சபையில் இருந்தனர். கெங்கிரேயர் சபையில் பெபேயா பெண் திருத்தொண்டராயிருந்தார் (உரோ. 16:1).

(6) மூப்பர்கள். பவுல் தாம் ஏற்படுத்தின சபைகளி லெல்லாம் மூப்பர்களை ஏற்படுத்தினார் (திருத். 14:23; 20:17; தீத்து 1:5). சபையில் தலைவர்களாயிருந்து அவர்கள் மந்தை யைக் கவனித்தார்கள். 1 கொரி. 12:28இல் அவர்கள் போதகர் களென்றும், மேய்ப்பர்களென்றும் அழைக்கப்படுகின்றனர். அவர்களுக்கிருக்கவேண்டிய பண்புகளை பவுல் தீமோத் தேயுவுக்கும் தீத்துவுக்கும் எழுதின திருமுகங்களில் குறிப்பிட் டுள்ளார். மூப்பர்கள் பேராயர்கள் என்றும் அழைக்கப்பட்டனர் (திருத். 20:28).

(7) பேராயர்கள். ஆண்டவருடைய சகோதரராகிய யாக்கோபு எருசலேம் சபையில் பேராயராகப் பணியாற்றினார். சபையின் தூதுவர் என்று திருவெளிப்பாடு நூலில் அழைக்கப் படுகிறவர்கள் பேராயர்களாயிருக்கலாம். தற்காலத்திலுள்ள பேராயர் பதவி அக்காலத்திலிருந்ததில்லை. ஒரே ஆள் மூப்பராகவும், பேராயராகவும் அழைக்கப்பட்டார். தீமோத்தே யுவும் தீத்துவும் தற்காலத்திலுள்ள பேராயருக்குரியப் பணியைச் செய்ய பவுலால் ஏற்படுத்தப்பட்டனர்.

7. வாழ்க்கை

திருத்தூதுவர் பணிகள் நூல் தொடக்கக்காலக் கிறிஸ்தவ வாழ்க்கையை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. அவர்கள் ஒருமனத்தோடு, அப்பம் பிட்டு, மகிழ்ச்சியுடன் கடவுளைத் துதித்து எல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தனர் (2:46). திருத்தூதுவருடைய போதனையிலும் நிலைத்திருந்தனர் (2:32). இறைவேண்டல் அவர்களுக்கு முக்கியமாயிருந்தது. யூத எண்ணத்திற்கிசைய மூன்றாம், ஆறாம், ஒன்பதாம் மணி வேளைகள் அவர்களுக்குக் குறிப்பிடப்பட்ட இறைவேண்டல் நேரங்கள் (டிடாக்கி 8:3).

கிறிஸ்தவர்கள் அரசாங்கத்திற்கு அடங்கி நடந்தனர். எல்லா அதிகாரங்களும் கடவுளால் உண்டாயின என்று நம்பி அவர்கள் சீசருக்குரியதை சீசருக்குச் செலுத்தினார்கள். எனினும், கடவுளுக்குக் கீழ்ப்படிவதே அவர்களுக்கு முக்கியமாயிருந்தது.

தூய ஆவியரால் நடத்தப்படுவது பு.ஏ. காலத்தில் வற்புறுத் தப்பட்டது. பலவித வரங்களும் அருளப்பட்டன. எனினும் வேற்று மொழி பேசுதலும், இறைவாக்கு உரைத்தலும் தவறான முறையில் பயன்படுத்தப்பட ஏதுவாயிருந்தது. அன்பு எல்லா வரங்களிலும் முக்கியமாக எண்ணப்பட்டதாக பவுலின் போதனையிலிருந்து காண்கிறோம் (1 கொரி. 13).

கிறிஸ்தவர்களுக்குள் பல குறைபாடுகளும் இருந்தன. கிரேக்க யூதர் தங்கள் கைம்பெண்கள் நன்றாய் விசாரிக்கப்பட வில்லையென்று எபிரேய யூதருக்கு விரோதமாய் முறுமுறுத்தனர் (திருத். 6:1). அனனியா, சப்பீரா பணம் தொடர்பாக வஞ்சனை காட்டினார்கள். மாயவித்தைக்காரனான சீமோன் பணத்தினால் ஆவியரைப் பெற்றுக் கொள்ள விரும்பினான். பவுலும் பர்னபாவும் மார்க்குவை முன்னிட்டுப் பிரியவேண்டிய தாயிற்று (15:36-39). கலாத்தியா சபைகளில் போலிச் சகோதரர் கிறிஸ்தவ விடுதலையை உளவு பார்த்து அடிமைத் தனத்துக்குட்படுத்த விரும்பியதை பவுல் குறிப்பிடுகிறார் (கலா. 2:4). கொரிந்து சபையில் பலகட்சிகள் இருந்தன (1 கொரி. 1:10). உணவு, திருநாள்கள் தொடர்பானவற்றில் ஒருவரை யொருவர் குற்றஞ்சாட்டினார்கள் (உரோ. 14:1-12). புற சமயத்தினிடத்திலில்லாத பாவங்கள் அக்காலத்துக் கிறிஸ்தவர் களிடம் இருந்ததாகக் குறிப்புகள் காண்கிறோம். வழக்குகளை தாங்களே தீர்த்துக் கொள்ளாமல் நீதிமன்றங்களுக்குச் செல்லும் பழக்கமுமிருந்தது.

நம்பிக்கையிலிருந்து மக்களை விழச்செய்வதற்கேதுவான பல தீயப் போதனைகளும் நுழைந்தன. கொலோசே சபையில் இயேசு கிறிஸ்துவினால் மீட்படைந்தாலும், தீய ஆவிகள் மேற்கொள்ளாதபடி அவைகளையும் கோபப்படுத்த லாகாதென்ற எண்ணம் குடிகொண்டிருந்தது. இயேசு கிறிஸ்து எல்லாவற்றிற்கும் போதுமானவரென்று பவுல் அவர்களுக்கு எடுத்துக்காட்டவேண்டியதாயிற்று.

யூதேயக் கிறிஸ்தவர்கள் விருத்தசேதனத்தை முக்கியப்படுத்தி, சபைகளில் மிகுந்த இடையூறுகளைக் கொண்டு வந்தனர்.

1 யோவானில் இயேசு கிறிஸ்து மானிடர்ாய் வந்ததை எதிர்த்தவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இயேசு கிறிஸ்துவின் ஆள்த்துவத்தை எதிர்த்தவர்களும் தூதுவர்களுக்கு விரோதமாக நிந்திக்கிறவர்களும், கடவுளின் வெளிப்படுத்துதலை அங்கீகரியாமல் மனோபாவனைகளில் மூழ்கினவர்களும் அருளை அவமதிக்கிறவர்களும், 2 பேதுரு, யூதா ஆகிய திருமுகங்களில் கண்டிக்கப்படுகின்றனர். திருமணத் தையும், இறைச்சி உண்ணுதலையும் எதிர்த்தக் கூட்டத்தினரும் இருந்ததாக மேய்ப்பர் திருமுகங்களில் (Pastoral Epistles) காணப்படுகிறது. 2 பேதுருவில் ஆண்டவருடைய இரண்டாம் வருகையை மறுத்த கூட்டத்தார் கண்டிக்கப்படுகின்றனர்.

திருவெளிப்பாடு நூலில் நிக்கொலாயரின் கொள்கை எபேசுவிலும் பெர்கமுவிலும் சிலரால் பின்பற்றப்பட்டதென்று கூறப்பட்டுள்ளது. பிலேயாமின் கொள்கை பெர்கமுவில் இருந்ததாகத் தெரியவருகிறது. இத்தகைய தீயப் போதனை களைப் பரப்பும் பலர் அக் காலத்தில் இருந்ததாகப் பு.ஏ.இல் அறிகிறோம் (மத்.13:;5, 24:24; திருத்.20:29; உரோ.14:17; எபே. 6:12; பிலி.3:2; 1தீமோ. 1:3; 6:5; 2தீமோ. 2:15; 3; தீத்து. 1:11; 3:9; எபி.13:9; 2பேது. 2:1,2; 2யோ. 1:7; திருவெ. 2:6,14,20).

திருத்தூதுவருடைய போதனைகளும் நூல்களும் மெய் நம்பிக்கையைச் சபைகளில் பாதுகாக்க உதவின.

திருச்சபைக்கு வெளியே அரசாங்கத்தாலும் போராட்டம் ஏற்பட்டது. தொடக்கத்தில் உரோமை அரசாங்கம் திருச்சபைக்கு அனுகூலமாயிருந்தது (திருத். 18:1-17; 19:13-41; 21:31; 23:12-31; 25:10,11). எனினும், நீரோ பேரரசனின் ஆட்சியின் பிந்தைய காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. கி.பி.67இல் பவுலும் பேதுருவும் இரத்தச்சாட்சிகளாய் இறந்தனர். தொமித்தியான் பேரரசர் காலத்தில் (81-96) கிறிஸ்தவர்களுக்கு மீண்டும் துன்பம் உண்டாயிற்று. திருவெளிப்பாடு நூலில் அதைக் குறித்த குறிப்புகளைக் காண்கிறோம். பேரரசரை விலங்கிற்கு நிகராய்க் கூறும் சூழ்நிலை ஏற்பட்டது. யோவான் பத்மு தீவுக்கு நாடு கடத்தப்படலானார்.

இத்தகைய துன்பச் சூழ்நிலையில் கிறிஸ்தவர்களின் நம்பிக்கை உறுதிப்பட்டது. பலர் தங்கள் பொறுமையை விளங்கப்பண்ணினார்கள். எதிரிகளையும் நேசிக்கும் அன்பு வெளிப்பட்டது. பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்வ தில்லையென்னும் ஆண்டவரின் கூற்று சபையில் மெய்ப்பிக்கப் பட்டது.

மேற்கூறப்பட்ட அனுபவங்கள் மூலமாகச் சபை ஒருமைப் பாட்டில் வளர்ந்தது. பு.ஏ.இல் சபையின் ஒருமைப்பாட்டை விளக்க உடல், கோவில், மணமகள், திராட்சைச்செடி, மற்றை ஆகிய உருவகங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் சபை இருந்தாலும், கிறிஸ்துவுக்குள் அவை யாவும் ஒன்றே என்னும் எண்ணம் அக் காலத்தில் வற்புறுத் தப்பட்டதென்பது. உங்கள் அழைப்புக்குரிய ஒரே நன்னம்பிக்கை யில் நீங்கள் அழைக்கப்பட்டதுபோல, ஒரே உடலும் ஒரே ஆவியும் உண்டு. ஒரே ஆண்டவரும், ஒரே நம்பிக்கையும் ஒரே திருமுழுக்கும், எல்லாருக்கும் மேலாகவும், எல்லார் மூலமா கவும், எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் என்ற பவுலின் வார்த்தைகளில் உறுதிப்படுத்தப்படுகிறது. சபையானது, ஒன்றான, தூய, பொதுவான, திருத்தூதுவ சபை என்பது பு.ஏ. உண்மை.

ஆண்டவரின் இரண்டாம் வருகையில் சபை மாட்சி யடையுமென்பது பு.ஏ.இன் தொனி. அது பு.ஏ. சபையின் மகிழ்ச்சியான நம்பிக்கை (தீத்து 2:13; எபி. 6:19). கிறிஸ்து வுக்குள் இறப்பது பேறுபெற்ற நிலை என்று அவர்கள் உணர்ந்தனர். அது உடலை விட்டு கிறிஸ்துவோடிருப்ப தாகும். இரண்டாம் வருகையில் அந்நிலை முழுமையடையும் வாழ்வு. வாழ்வு முழுமையடையும்.

8. முடிவுரை

இன்றிருப்பது போன்றதோரு திருச்சபை உருவாக வேண்டுமென்று இறைவன் திருவுளங்கொண்டாரா அல்லது இயேசு விரும்பினாரா என்பது இன்று உலகெங்கும் கேட்கப்படும் கேள்வி. ஆனால் வரலாற்றின் வளர்ச்சியில் திருச்சபை என்கின்ற ஒன்று உருப்பெற்று வளர்ந்தது மிகவும் கருதத் தக்கதொரு செயலாகும். திருச்சபை இல்லாவிட்டால் உலக வரலாறு மிகவும் வேறுபட்ட ஒன்றாக இருந்திருக்கும்.

இயேசுவைப் பின்பற்றிய சீடர்களே ஓர் இயக்கமாக உருவாகி திருச்சபைக்கு அடித்தளமிட்டனர். எனவே திருச்சபை இயேசுவை மையமாகக் கொண்ட ஒரு மக்கள் இயக்கம் எனலாம். ஆனால் திருச்சபை யூத, கிரேக்க, உரோமைச் சூழல்களில் வைக்கப்பட்டிருந்தபடியால் அச்சூழலுக்கேற்ப அது தன் இருப்பையும் நம்பிக்கையையும் புரிந்து விளக்கிடத் தலைப்பட்டது. இதனால் அது வளமுற்றது என்பது ஒருபுற உண்மை. ஆனால் மறுபுறத்தில் தீயப் பாதிப்புகளால் அது தன் தலைவராகிய இயேசுவின் முன்மாதிரியை விட்டு விலகிச் செல்லும் சோதனை இருந்தது. குறிப்பாக, கிரேக்கச் சிந்தனைகளின் பாதிப்பால் இந்த உலகத்தை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பை விடவும் வரப்போகும் மறுஉலகத்தைப் பற்றிய கரிசனை பெருகும் வாய்ப்பு இருந்தது. அமைப்பு, நிருவாகம் முதலியவற்றில் உரோமையின் மேலாதிக்கச் சிந்தனைகளின் பாதிப்பு ஏற்படும் நிலை காணப்பட்டது. ஆயினும் இயேசுவின் வழியாக உருவாகப் போகும் புதிய மானிடத்திற்குச் சின்னமாக விளங்கவேண்டுமென்ற உணர்வு பு.ஏ. சபையில் இருந்தது.

கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகத் திருச்சபை தன் வரலாற்றில் பல மேடுபள்ளங்களைத் தாண்டி வந்துள்ளது. ஆயினும், பல குறைபாடுகள் இருந்தபோதும் பு.ஏ. சபையைத் திரும்பத் திரும்பப் பார்த்து சீர்திருத்தம் செய்யவேண்டும் என்ற உணர்வு அவ்வப்போது திருச்சபையில் எழுந்து வருவது நியாயமானது, போற்றத்தக்கது.

துணை நின்ற நூல்கள்

1. Hares, W.P., *A History of the Christian Chruch of the First Six Centuries.*
2. Richardson, Cyril, C., *Early Christian Fathers.*
3. Streeter, B.H., *The Primitive Church.*
4. Walker, Williston, *A History of the Christian Church.*
5. அலெக்சாந்தர், ஜே.பா., திருச்சபை வரலாறு, கி.பி. 30-451.

29

விவிலிய விளக்கம் - அணுகுமுறைகள்

தயான்சந்த் கார்

1. முன்னுரை

கடவுளின் எல்லையற்றப் பேரறிவும் அளவிறந்த ஆற்றலும் அவரது படைப்பில் விளங்குகின்றன. பறவைகளின் கவலையற்ற வாழ்வு, பூக்களின் வண்ணங்கள் முதலியவை அவரது பராமரிக்கும் அன்புக்கு எடுத்துக்காட்டுகள் (மத். 6:28-30). மனிதருக்குள் வைக்கப்பட்டிருக்கும் மனச்சான்று, மனித சமுதாய அமைப்புகள், கலாசாரத் தகவுகள், இயற்றப்படும் சட்டங்கள் ஆகியவை நீதிக்குச் சான்றாக விளங்கும்போதெல்லாம் மனிதர்களை மனிதாபிமானத்துடன் படைத்த கடவுளின் மாட்சி ஒளிருகின்றது.

பரவலாகக் காணப்படும் மேற்கூறியவை மட்டுமல்ல, குறிப்பிட்ட வேறு பல ஏதுக்களாலும் கடவுள் தம்மை வெளிப்படுத்துகிறார். எ.கா. அவ்வப்போது தோன்றும் பேரறிஞர், இறை உணர்வில் தேறிய முனிவர், அறநெறியாளர், சமுதாயத்தின் இருண்ட பகுதிகளைப் படம் பிடித்துக் காட்ட வல்ல எழுத்தாளர், கவிஞர், ஆதிக்கக் கலாசாரங்களினால் கண்மூடப்படாமல் உணர்வுகளை வெளிப்படுத்தும் சிறுவர்-சிறுமியர், பகிர்வு நெறியுடைய எளிய மக்கள், ஆன்மிக ஆழத்தில் இயற்கையுடன் இணைந்து வாழும் ஏழைகள், மலைவாசிகள். இப்பட்டியலை நாம் இன்னமும் விரிவுபடுத்தலாம்.

ஆனால் இவற்றின் மூலமாக கடவுளை மனிதர் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை. ஆணவத்தாலும் அநீதியாலும் நிறைந்துவிட்ட மனித அறிவுக்கு அவருடைய அன்பின் ஆழம் எட்டவே எட்டாது. அதைவிட முக்கியமாக அகந்தையால் கண்மூடப்பட்ட மனிதக் கற்பனையால் கடவுளைத் தாழ்மையின் வடிவமாகக் காணவே முடியாது.

கடவுள் தம்மையே அழித்துக் கொள்ளவும் துணிகிறார். ஆனால் அது நேசிக்கும் பற்றாளர்களுக்காக அல்ல! அவரை உதறித்தள்ளும் மாற்றாரின் ஈடேற்றத்திற்காகவே. இந்த உண்மை கிறிஸ்துவில்தான் வெளிப்பட்டது. இதனால் அவர்மேல் பற்றுறுதி கொண்டவர்கள்தான் வேதனையடைவர்.

தம்மைத் தள்ளிவிட்டு சுயஅதிகாரவெறியில் மயங்கிக் கிடக்கும் மனிதரை கடவுள் அழிக்க முற்படவில்லை. அவர்கள் வசமே அவர் தம்முடைய ஆட்சியுரிமையை விட்டுக் கொடுக்கிறார், அவர்கள் தம் ஒரே மைந்தரைக் கொன்றுபோடவும் இடமளிக்கிறார். மனந்திரும்புதலைத் தூண்டி தம்முடைய மனத்தாழ்மையை அவர்களுக்கு அணிவிப்பதற்காகவே அவர் அப்படி செய்கிறார். அந்நிலையில் முழு ஆட்சிப்பொறுப்பும் ஆவியில் எளிமையானோருக்கே என முற்றிலும் கையளித்து விடவும் அவர் திட்டமிட்டுள்ளார். இந்த நூதனமான இறைத்தாழ்மையின் மனுவுருவே இயேசு பெருமான்.

இத்தனைக்கும் ஒரே நிலையான சான்று விவிலியமறையில் இடம் பெற்றுள்ளது. இதுவே அம்மறையின் மாபெரும் சிறப்பு. இறைமைந்தன் இயேசுவின் வருகையை எதிர்நோக்கியதாக ப.ஏ. அமைந்துள்ளது. அவருடைய மீட்பு வரலாற்றைத் தாங்கியதாக அமைவது பு.ஏ. ஆகும்.

ஆனால் இந்தத் தெளிவான இறைவாக்கை நாம் கேட்பதில்லை. ஏனெனில் அத்துடன் பல குழப்பமான ஒலிகள் கலந்துள்ளன. போர்க்காலங்களில் எதிரி நாட்டின் ஒலிபரப்புக்களைப் பாதுகாப்புக் காரணம் காட்டி இருட்டடிப்புச் செய்வது ஒரு பரவலான போர்உத்தி. அதேபோல கடவுளின் தெளிவான குரலைக் கேட்கவொட்டாமல் தடுப்பதில் ஆதிக்க ஆற்றல்கள் நாட்டம் கொள்கின்றன. கடவுளின் தெளிவான குரலைக் கேட்டு மக்கள் கடவுளின் ஆட்சியை ஏற்றுத் திரண்டெழுந்து விட்டால் ஆதிக்க ஆற்றல்களின் வெறியாட்டம் முடிந்துவிடுமே! எனவே கடவுளை அவருடைய அன்பும் தாழ்மையும் மிளிர வடிப்பதற்குப் பதிலாக, இந்தக் குழப்பக் குரல்கள் வேறுபல ஒவ்வாத காட்சிகளால் மக்களை மயக்குகின்றன. விவிலியமறையின் வாக்கியங்களை இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தெரிந்து கொண்டு பலர் மாற்றுக் கருத்துக் கோர்வைகளை உண்டாக்குகின்றனர். இச்சூழ்ச்சிக்குத் திருச்சபையின் தலைவர்களும் அடிபணிந்து விடுகின்றனர். எனவே, மக்களும் மயங்கி விடுகின்றனர். கடவுளின் பெயராலேயே அவருடைய அன்புத் திட்டங்கள் முறியடிக்கப்படுகின்றன. கடவுளின் திருவாக்காகிய விவிலியத்தைக் கொண்டே பொய்யுரைகள் உள்ளே புகுத்தப்படுகின்றன.

எ.கா. திருச்சபையின் பெரும்பாலானோர் கடவுளையும் அவர் இயேசுவில் நிகழ்த்தும் மீட்புச் செயலின் நற்செய்தியையும் பின்வருமாறு ஏற்றுள்ளனர்:

கடவுள் தன்னிகரற்றவர். அனைத்து உரிமைகளுக்கும் ஒரே தகுதியாளர். அவரது அதிகாரத்திற்கு வரம்பு கிடையாது. அவர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும். எனவே, அவர் பேராற்றலுடன் வல்லரசாக செயல்பட்டாலும் அவரால் படைக்கப்பட்ட நமக்கு அவரிடம் கேள்வி கேட்க உரிமையில்லை. அவர் குயவன். நாம் களிமண். குயவன் தன் விருப்பப்படி பாத்திரங்களைப் படைப்பார்; அவற்றில் சிலவற்றை அழகுசெய்யும் அலங்காரப் பொருளாக வனைவார், வேறு

பலவற்றைச் சாதாரண புழுக்கத்திற்குரியவைகளாக வளைவார். களிமண் தன் விருப்பத்தைத் தெரிவிக்க உரிமை பெறவில்லை. அதே போல கடவுளும் சிலரை அரசர்களாகப் படைக்கிறார், சிலரை செல்வத்தில் கொழிக்க வைக்கிறார். ஏராளமான ஏனையோரைப் பாமரராகவும் ஏழைகளாகவும் படைக்கிறார், கன்னைப் படைத்த கடவுளுக்கு அதைச் சிலருக்கு வழங்காதிருக்கும் உரிமை கிடையாதா? எனவே ஊனமுற்றோரின் ஊனங்களுக்கும் கடவுளே காரணர். விபத்துக்கள். இயற்கையின் அத்துமீறல்கள் ஆகியவை நிகழ்வதும் கடவுளால்தான்.

படைப்பிலும் வரலாற்றிலும் எப்படியோ அப்படியே மீட்பிலும் மேலாதிக்கத்துடனேயே கடவுள் செயல்படுகிறார். எல்லோரும் பாவத்திற்குட்பட்டு அழிவுக்கென நியமிக்கப்பட்டு விட்டனர். இந்நிலையில் ஒரு சிலரையேனும் மீட்டு தமது அன்பைக் காட்ட அவர் விரும்பினார். முன்குறிக்கப்பட்ட அந்தச் சிலருடைய மீட்புக்காகவே அவர்தம் மைந்தர் இயேசுவை அனுப்பினார். பாவ ஈடேற்றமாக அவர் சிலுவையில் இறக்க வேண்டுமென முடிவெடுத்து அதை நிறைவேற்றவும் செய்தார்.

கடவுளால் மீட்புக்கென்று முன்குறிக்கப்பட்டோருக்கு, இச்செய்தி எப்படியாவது போய்ச்சேரும். அதை அவர் பார்த்துக் கொள்வார். முன்குறிக்கப்பட்டவர்கள் நற்செய்தியை ஏற்கும்படியும் அவரே துணை செய்கிறார். ஏனையோரின் கதி என்ன எனக் கேட்க எவருக்கும் உரிமையில்லை. ஏனெனில் மனிதராகிய எல்லோரும் மரணத்துக்குரியவர்களே.

கிறிஸ்தவர்களாகிய நாம் இதனால் மிகவும் பேறு பெற்றவர்கள். நம்மை அல்லாத வேறுயாரையெல்லாம் கடவுள் முன்குறித்திருக்கிறார் என்பது நமக்குத் தெரியாது. அதனால் நம்மை வந்தடைந்த நற்செய்தியை நாம் எல்லாரும் கேட்கச் செய்வதே நமது கடமை. முன்குறிக்கப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்வர். ஏனையோர் மறுத்துத் தங்களுக்கே உரித்தான அழிவை உறுதிசெய்து கொள்வர் ...

வேறு பல கருத்துக்களும், தகவுகளும் இந்த இறையியல்/நற்செய்தி வடிவமைப்புடன் இணைந்து கொள்கின்றன:

எ.கா. 1. மேலாதிக்க ஆளுநரான கடவுள் ஓர் ஆணாக வடிக்கப்பட்டுப் பின்னர் ஆண்கள் அனைவரும் அவரது சாயலில் படைக்கப்பட்டிருக்கின்றனர் என்ற கருத்து.

2. மேலாதிக்க ஆளுநரான கடவுள் படிநிலை அதிகாரங்களை ஏற்றுச் சிலரைப் பேரரசராகவும் வேறு சிலரைத் தனிப்பெரும் அதிகாரிகளாகவும் ஏற்படுத்துகிறார். பெரும்பாலான ஏனையோர் இவ்வதிகாரங்களுக்கு உள்ளடங்கி வாழ வேண்டும் என்பதே இறைவன் வகுத்துள்ள விதிமுறை. இந்த அதிகாரங்களின் அநீதிகளைத் தட்டிக் கேட்பது கடவுளையே எதிர்ப்பதாகும் ... இப்படியுமொரு பரவலான கருத்து உள்ளது.

பிரச்சனை என்னவென்றால் இவ்வனைத்துக் கருத்துக்களுக்கும் சான்றாக விவிலியநூலின் பகுதிகள் எடுத்தாளப்படுகின்றன. எனவே, கடவுளுடைய ஏற்பு பெற்றக் கருத்துக்களே என்ற மயக்கம் மக்களுக்கு உண்டாகிறது. ஆதிக்க அதிகாரங்கள், ஆணாதிக்கக் கலாசாரம், உலகமெங்கும் திணிக்கப்பட்டுள்ள ஏற்றத் தாழ்வுகள், சாதி நியாயங்கள் ... எல்லாம் விவிலியத்தைக் கொண்டு நியாயப்படுத்தப்பட்டுள்ளன; பயங்கரப் பொய்களுக்கு உண்மை முலாம் பூசப்பட்டுள்ளது. இதைக் குறித்த தேவையான தெளிவு இன்னமும் பிறக்கவில்லை.

ஆனால் அதே விவிலியம் சரியாக வாசிக்கப்படும்போது கடவுளின் பேரன்பையும், கற்பனைக்கடங்காத அவரது தாழ்மையையும் எடுத்துரைத்து நம்மை மனந்திரும்புதலுக்கு அது அழைக்கின்றது; ஆதிக்க ஆற்றல்களின் ஊடுருவலையும் செயல்பாடுகளையும் நாம் புரிந்து கொள்ளத் தூண்டுகிறது; பிள்ளையார் பிடிக்க குரங்கானது என்ற பழமொழிப் போல தடம்மாறிய போக்கினின்று நம்மைத் திசை திருப்புகின்றது.

ஒரு தாய்ப்பறவை தன் குஞ்சுகளனைத்தையும் அரவணைத்துக் கொள்வது போல, உலகமனைத்தையும் மீட்க கடவுள் துடியாய்த் துடிக்கிறார். கடவுளின் திருமைந்தராகிய இயேசுவோ ஒடுக்கப்படும் அனைவரின் கூட்டுப் பிரதிநிதியெனத் தம்மைப் புரிந்து கொண்டார். இக்காட்சியையும் விவிலியமறைதான் நம் கண்முன் வைக்கிறது. மன்னிப்பும் ஏற்பும் உலகமெங்கும் எட்டி, எல்லாரிடமும் சமாதானம் நிலவுவதே இறைத்திட்டம் என லூக்கா புரிந்து கொள்கிறார்.

குழப்பமூட்டும் ஒலிகளை இனம்கண்டு விலக்க நாம் தேர்ச்சி பெறுவது இன்றியமையாதது. இத்தேர்ச்சி அடைந்தவர்களாக நம் மறைநூலை நாம் வாசிக்கக் கற்றுக் கொள்வது எவ்வாறு? இதை விளக்குவது இக்கட்டுரையின் முதல் நோக்கம்.

விவிலியமறையின் இயல்தன்மை என்ன எனப் புரியாமல், திருமறையைக் குறித்து எழுந்துள்ள பல நம்பிக்கைகள் மூடநம்பிக்கைகளாகி வேறொரு குருட்டுத்தனத்துக்கு நம்மை கொண்டு போய் விடுகின்றன. இதனால், திருமறையின் தோற்ற வரலாறு, அதன் நூல்களின் கால/கலாசாரக் கட்டுகள், அதன் மனித ஆக்கியோர்களிடையே காணப்படும் பார்வை, கருத்து முரண்பாடுகள் ... குறித்த தெளிவும் இன்றியமையாதது.

விவிலியமறையின் சொற்கள் ஒவ்வொன்றும், தூய ஆவியர், ஆசிரியர்களின் மனத்தில் தோற்றுவித்தவை என்பது பலரின் நம்பிக்கை. இது மடமை; கடவுளுக்குப் புகழ்தரும் நம்பிக்கையன்று; உண்மையும் அன்று. ஆனால் விவிலியமறை நூல் கடவுளின் திருவாக்கின் வாகனம் போன்றது. எனவே வாகனம் எது, அது சுமந்துவரும் இறைவாக்கு எது என்ற தெளிவு தேவை. அதைப் பெறுவது எவ்வாறு என விளக்குவது இக்கட்டுரையின் இரண்டாவது முக்கிய நோக்கம்.

எவ்வளவு பிரச்சனைகள் இருந்தாலும், இன்று கடவுள் நம்முடன் தொடர்பு கொள்வதற்குப் பயன்படுத்தும் அதிமுக்கிய தொடர்புச் சாதனம் விவிலியமறையே. கடவுள் அதன் வாயிலாகப் பேசியுள்ளார்; இன்றும் பேசுகிறார். இதுவே இக்கட்டுரை ஆசிரியரின் அசைக்க முடியாத நம்பிக்கை. அந்த நம்பிக்கைக்கு வாசகர்களை அழைத்துச் செல்வதே இக்கட்டுரையின் முடிவான நோக்கம். திருவாக்காம் இயேசுவின் புகழ் ஓங்க இறைவேண்டலுடனும், திறந்த மனத்துடனும் வாசித்துப் பயன்பெறுக.

2. விவிலியமறையின் தோற்றமும் அமைப்பும்

பின்வரும் குறிப்புகள் அனைத்தும் ஆய்வால் நிறுவப்பட்டுள்ள உண்மைகள். அவைகளை மறுத்து நாம் மறைநூலைப் படிக்க முயல்வது மடமை. சில அடிப்படைக் குறிப்புக்களைக் காண்போம்:

i. விவிலியம் என ஒருமையில் சுட்டும் நூல் 66 தனித்தனி நூல்களின் தொகுப்பு.

ii. இத்தனித்தனி நூல்கள் சுமார் 1100 ஆண்டுகள் இடைவெளியில் அவ்வப்போது தோன்றியவை. ஆண்டவரின் தோற்றத்திற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்குமுன் இப்பொழுது நாம் பழைய ஏற்பாடு என்றழைக்கும் 39 நூல்களின் தொகுப்பு (யூதர்களின் மறைநூல்) இரபிமார்களின் சங்க முடிவால் ஏற்பட்டது. புதிய ஏற்பாடு என்று அறியப்படும் பகுதி இயேசு பெருமானின் இவ்வுலகத் தோற்றத்திற்குப்பின் நான்காவது நூற்றாண்டின் இறுதியில் திருச்சபையின் சங்கத்தால் கொடுக்கப்பட்டது. எனவே ஆசிரியர்கள் நூலை உருவாக்கிய திலிருந்து, அதைப் பாதுகாத்து, அதைத் தேர்வு செய்யத் துணைநின்று, இன்று அதை விளங்கிக் கொள்ளவும் உதவி செய்யும் அனைத்துச் செயல்களும் தூயஆவியின் செயல்கள் எனக் காண்பது நல்லது. இவையெல்லாவற்றிலும் மனிதர்களும் தூயஆவியரும் சேர்ந்து செயல்படுகின்றனர் எனப் புரிந்து கொண்டால் தேவையற்ற விவாதங்கள் பலவற்றைத் தவிர்க்கலாம்.

iii. இப்படிக் காலப்போக்கில் தோன்றிய நூல்கள் அதனதன் காலத்தில் எழுந்த பிரச்சனைகளை ஒட்டி எழுந்தவை. நம்மையோ. நமக்குப் பின்வரவிருக்கும் சந்ததிகளையோ மனத்தில் கொண்டு அவை எழுதப்படவில்லை.

iv. திருமறையில் பல வரலாறுகள் இடம்பெறுகின்றன. அந்த வரலாறுகளில் சில வரலாற்றுப் பிழைகள் காணப் படுகின்றன. அதைவிட ஒரே வரலாற்றை ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கூறும்போது (எ.கா. ப.ஏ.இல் அரசர்களின் நூல்கள், ஆட்சிக்குறிப்பு நூல்கள்; பு.ஏ.இல் நற்செய்தி நூல்கள்) ஒருவரிடத்திலிருந்து ஒருவர் வேறுபடுகின்றனர். இவ்வேறுபாடுகளுக்குக் காரணம் ஆசிரியர்களிடையே காணப்பட்ட இறையியல் பார்வை மாற்றங்களே. இதை நாம் மறுக்க முயலாமல் இவற்றைக் கொண்டு கடவுள் எவ்விதம் நம்மிடம் பேசுகிறார் எனக் காண முயல்வதே நல்லது.

v. வரலாறுகள் வரலாறு காப்பு நோக்கத்துடன் எழுதப்படவில்லை. வரலாறு அமைக்கும் ஆசிரியர்களின் காலத்தில் எழுந்த வினாக்களுக்கு முந்தின வரலாற்றின் துணைகொண்டு விடைகள் தேடப்படுகின்றன. எ.கா. தானியேலின் நூல் கி.மு. இரண்டாவது நூற்றாண்டில் எழுதப்பட்டது. ஆனால் தானியேலின் காலமோ கி.மு. 6ஆம் நூற்றாண்டு. நானூறு ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு வரலாறு, 2ஆம் நூற்றாண்டில் இறைமக்கள், அந்தியோக்கஸ் எப்பிபானஸ் என்ற கிரேக்க மன்னனால் துன்பப்பட்டபோது ஒரு தியான நூலாக எழுதப்பட்டது. தற்காலத்தியத் துன்பங்களை கடவுள் தானியேலுக்கு ஏற்கெனவே சொல்லியிருந்தார். எனவே நம்முடைய பாடுகளை அவர் அறிவார். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோருடன் நான்காவது ஆளாக அவர் செந்தீயில் அவர்களுடன் உலாவவில்லையா? தீக்குள்ளேயே ஒரு விடுதலை அவர்களுக்குத் தரப்பட்டதல்லவா? அதுபோல கடவுள் இப்பொழுது நம்முடனிருக்கிறார். இதன் பிறகு மீட்பு நிச்சயம் வரும். இப்படி நம்பிக்கை ஊட்டுவதற்காக எழுதப்பட்டதே தானியேலின் நூல்.

vi. எனவே, ஒவ்வோரு நூலும் எந்தக் காலக்கட்டத்தில் எந்த நோக்கத்தைக் கொண்டு எழுதப்பட்டது என்ற அறிவு நமக்குத் தேவை. இவற்றை ஆசிரியர்கள் தெளிவுறக் கூறுவதில்லை. ஏனெனில், அவர்களுடைய வாசகர்களுக்கு அவை தெரிந்தவை. எனவே, இந்தப் பின்னணியத் தகவல்கள் முன்னேற்புத் தகவல்களாக மறைந்திருக்கின்றன. இவற்றை ஆய்வின் மூலமாக மட்டும் வெளிக்கொணர முடியும். தொலைபேசியில் இருவர் பேசிக் கொண்டிருக்கையில் ஒரு முனையில் பேசுபவருடன் நிற்பவர் எப்படி ஒருவரின் பதில்களையும் விளக்கங்களையும் மட்டும் கேட்க முடியுமோ அதுபோன்று பல மறைநூல்களின் ஆசிரியர்களின் வார்த்தைகள் மட்டும் நம்மை வந்தடைந்துள்ளன. அவர்கள் யாரிடம் பேசினார்களோ அவர்களின் கேள்விகளும் பிரச்சனைகளும் நம்மை வந்தடையவில்லை. இவற்றைச் சரியாக ஊகித்தறிந்தால்தான் நாம் சரியான செய்தியைப் பெற இயலும்.

vii. வெவ்வேறு காலக்கட்டங்களில் தோன்றிய நூல்களில் மொழிநடை வேறுபாடுகள் காணப்படுவது தவிர்க்க முடியாதது. இதுபோன்று ஆசிரியர்களின் சிந்தனைப் போங்குகளும் கலாசாரத் தகவுகளும் அந்தந்தக் கால கலாசாரச் சூழமைவு களால் பாதிக்கப்பட்டன என்பதையும் நாம் மறக்கலாகாது. இதை ஓர் எளிய எடுத்துக்காட்டின் மூலம் புரிந்து கொள்ளலாம்.

இன்று சற்றேறக்குறைய உலகமனைத்தும் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் சேர்ந்து அமைப்பதே இல்லறம் என ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்டது. இருதார தடைச் சட்டங்களும், மணவிலக்கைத் தவிர்ப்பது நல்லது என்னும் உணர்வும் எச்சமயத்தைச் சார்ந்தவரிடமும் காணப்படுகின்றன. சமயச் சார்பற்ற அரசுகளும் சமுதாயங்களும்கூட இவ்வொழுங்கையே ஆதரிக்கின்றன.

ஆனால், ஆபிரகாம், யாக்கோபு, மோசே, தாவிது போன்ற பல பெரியார்கள் பலதாரப் பழக்கத்தை எவ்விதக் குற்ற வுணர்வுமின்றி ஏற்றனர். ஏன், ஆகாரை அனுப்பிவிடுமாறு ஆபிரகாமுக்கு கடவுளே ஆலோசனை தந்ததாகக் கூறவும் தொடக்கநூல் ஆசிரியர் தயங்கவில்லை. ஏனெனில் அக்காலக் கலாசார மதிப்புகள் இதனைத் தவறெனக் கூறவில்லை.

அதுமட்டுமன்று, இறையரசின் தகவுகளுக்கேற்ற புதுமைகளை ஏற்றுக் கொள்ள ஆண்டவர் தூண்டும்போது பழைய பழக்க வழக்கங்களின் அடிப்படையில் அவற்றை எதிர்த்த - சில பெரியாரும் உண்டு. எ.கா. பேதுருவுக்கு ஆண்டவர் யோப்பாவில் ஒரு காட்சியின் மூலமாக புறஇனத்தாரை ஏற்றுக் கொள்ளத் தயங்க வேண்டாம் எனக் கூறியபோது பேதுரு அதற்கு உடனடியாக இணங்கமுடியாமல் முதலில் திணறிப்போனார் எனக் காண்கிறோம் (திருத். 10: 1-16).

அதேபோல கிறிஸ்துவுக்குள் ஆணென்றுமில்லை பெண்ணென்றுமில்லை எனச் சாற்றிய பவுலடிகளார் (கலா. 3:28) ஆண்களே கடவுளின் சாயலில் படைக்கப்பட்டு கிறிஸ்துவின் மாட்சிமையைப் பிரதிபலிக்க நியமிக்கப்பட்டவர்கள்; பெண்களே ஆண்களுக்காக, தங்கள் கணவன்மாரின் மாட்சிமையைப் பிரதிபலிக்கப் படைக்கப்பட்டவர்கள் என்று அவசரப்பட்டு கூறி விடுகின்றார் (1 கொரி. 1:7-9) ஏனெனில் ஆண் ஆதிக்கக் கலாசாரக் கண்ணாடியின் வழியாகவே மறைநூலை அவர் வாசித்துப் பழகியிருந்தார். கிறிஸ்துவுக்குள் வெளிப்பட்ட ஆண்-பெண் சமத்துவம் பற்றிய உண்மையை அவர் அறிந்திருந்தார். ஆனால் அவருடைய பழைய கண்ணாடியை அவரால் உடனடியாக முழுவதும் தூக்கியெறிய முடியவில்லை. இது சமகாலக் கலாசாரம் எந்த அளவிற்கு மனிதருடைய சிந்தனைகளைக் கட்டுப்படுத்துகின்றது, எந்த அளவிற்கு நம்முடைய கண்களை மறைக்கும் ஆற்றல் படைத்தது என்பதைக் காட்டுகிறது.

viii. மீண்டும், விவிலிய மொழிநடை ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுபட்டதாக உள்ளது. சிலருடைய நடை இலக்கியச் சிறப்பு மிக்கது (எ.கா. லூக்கா நற்செய்தி நூல்). வேறு சிலரது

நடையில் இலக்கண வழுக்கள் மலிந்து காணப்படுகின்றன; கொச்சை மொழியையும் பயன்படுத்தியுள்ளனர் (எ.கா. யோவான் நற்செய்தி நூல்).

தூய ஆவியர் விவிலிய ஆசிரியர்களாகிய அவரது மனித அன்பர்களை மனிதருக்குரிய குறைவு - நிறைவுகளோடுதான் பயன்படுத்தினார்; குறைகளை நிவர்த்தி செய்து பயன்படுத்த வில்லை; அவர்களுடைய ஆள்தன்மையை மறைத்துவிட்டு, அவர்கள் அறிவை ஆக்கிரமித்துக் கொண்டு அவர்கள் மனத்தில் சொற்களைத் தோற்றுவிக்கவுமில்லை. அவருடைய உடன் பணியாளர்களை மதித்து நடத்தும் தூய ஆவியரின் சீரியப் பண்புதான் இதில் விளங்குகிறது. இப்படிப் பார்க்கக் கற்றுக் கொள்வதே சரி.

ix. ஆசிரியர்களின் காலக் கலாசாரம் எவ்வாறு அவர்களுடைய சிந்தனைகளைப் பாதித்ததோ அதேபோல அவர்களின் இறையியல் கண்ணோட்டங்களும் அழுத்தங்களும் அவர்கள் கூறிய வரலாறுகளில் மாற்றங்களைத் தோற்றுவித்தன. இதனால் எழும் இறையியல் பிரச்சனைக்குத் தீர்வுகாண நாம் முயலவேண்டும். ஏனெனில் ஆண்டவரின் மீட்பு வரலாற்றைக் கூறும் நற்செய்தி நூல்கள் சில அடிப்படைத் தகவல்களில் வேறுபடுகின்றன. அவ்வேறுபாடுகள் தகவல் குறைவினால் மட்டும் எழுந்தவை அல்ல. நான்கு நற்செய்தி நூல்களின் தகவலையும் சீர்பொருந்தச் செய்ய பல முயற்சிகள் எடுக்கப் பட்டுள்ளன. அவை ஒன்றும் வெற்றியடையவில்லை. அதோடு அப்படிப்பட்ட முயற்சிகள் நற்செய்தி நூல்களின் ஆசிரியர்கள் சொல்லவந்த செய்தியைச் சிதைத்துவிடும் என்பது கவனிக்கத் தக்கது. ஓர் எடுத்துக்காட்டால் இதனை விளக்குவோம். இயேசு பெருமான் உயிர்த்தெழுந்து, தம்முடைய சீடர்களுடன் உறவாடி, அவர்கள் நற்செய்தியைத் தாங்கி உலகத்துக்குள் செல்லுமாறு பணித்து, பின்னர் அவர்கள் கண்களுக்கு மறைந்து விட்டார். இவ்வரலாறு விவரமாக மத்தேயு, லூக்கா, யோவான் நற்செய்தி நூல்களில் இடம் பெறுகிறது. ஆனால் அவற்றிடையே சில முக்கிய வேறுபாடுகள் உள்ளன. இங்கு மத்தேயுவுக்கும் லூக்காவுக்குமிடையே உள்ள வேறுபாடுகளை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

மத்தேயுவில் உயிர்த்தெழுந்த ஆண்டவர், தம்முடைய சீடர்களுக்கு எருசலேமில் காட்சி தரவில்லை. கல்லறைக்குச் சென்று, தூதுவரின் சாட்சியைக் கேட்டுத் திரும்பிக் கொண்டிருந்த பெண்களுக்கு மட்டும் அவர் காட்சியளிக்கிறார். அப்போது அவர்களிடம் தாம் முந்தி கலிலேயாவுக்குப் போவதாகவும், சீடர்கள் அங்கு வந்து தம்மைக் கண்டு கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் மூலம் செய்தி அனுப்புகிறார்; பின்னர் கலிலேயாவில் ஒரு மலையில் சீடர்களைச் சந்தித்து அவர்கள் நற்செய்தியைத் தாங்கி உலகமெங்கும் செல்லப் பணித்து மறைகிறார். தூய ஆவியரைப் பற்றிய வாக்குறுதி இங்கு இடம் பெறவில்லை. பரத்துக்கேறிப் போனதாகவும் கூறப்படவில்லை. மாறாக, உலகத்தின் முடிவுவரை அவர்களுடனிருக்க வாக்குக் கொடுத்து மறைகிறார் (மத். 28:1-20).

லூக்காவிலோ உயிர்த்தெழுந்த ஆண்டவர் எருசலேமிலும் அதன் சுற்றுவட்டாரங்களிலும் மட்டுமே தம்முடைய சீடர்களுக்குக் காட்சியளிக்கிறார்; பரத்திலிருந்து தூய ஆவியர் அவர்களிடம் அனுப்பப்படும்வரை எருசலேமைவிட்டு அவர்கள் எங்கும் போகவேண்டாமென்று கூறி, அவர்களை விட்டுப் பரத்துக்கேறிச் செல்கிறார்.

இருவருமே நடந்ததைத்தான் எழுதுகின்றனர். ஒருவர் கூறாமல் விடுவது அதை அவர் மறுக்கிறார் என்பதால் அன்று. கலிலேயாவில் நடந்ததை மத்தேயு எழுதுகிறார்; எருசலேமில் நடந்ததை லூக்கா எழுதுகிறார். இப்படி சமாதானம் சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்ப்பது விவிலியம் தாங்கி நிற்கும் இறைவாக்கைக் கேட்கவொட்டாமல் நம்மைத் தடுத்து விடும். மாறாக, ஒவ்வொரு நற்செய்தியாளரும் சொல்ல வருவது என்ன என ஆராய்வதன் மூலம் கடவுளுடைய வார்த்தைகளை நாம் தெளிவாகக் கேட்கலாம்.

மத்தேயு இயேசுவை ஒரு கலிலேயராகக் காட்டுவதில் ஆர்வமிக்கவர். கலிலேயா தெற்கத்திய வைதீக யூதர்களால் துச்சமாக மதிக்கப்பட்டது (யோ. 1:46,47). உரோமை அரசு ஒவ்வொரு கலிலேயனையும் ஒரு புரட்சியாளன் எனச் சந்தேகித்தது (லூக். 13:2-5). ஆனால் இயேசுவோ பன்னிருவரையும் கலிலேயாவிலிருந்து தெரிந்து கொண்டார். அவர்களில் பெரும்பாலோர் பாமரரும் படிப்பறிவுமில்லாத மீனவர் (திருத். 4:13). இயேசு ஒரு கலிலேயராக வாழ்ந்தார் என்பதை மீட்பு வரலாற்றின் ஒரு முக்கியக் கூறாக மத்தேயு காண்கிறார் (மத். 4:14). எனவே, தம்மைப் புறக்கணித்த எருசலேமை உயிர்த்தெழுந்த ஆண்டவரும் புறக்கணித்தார். பாலஸ்தீனத்திற்குக் கலிலேயா எப்படியோ அப்படி உலகமெங்கும் கலிலேயாக்கள் உண்டு. உயிர்த்தெழுந்த ஆண்டவர், உலகின் எருசலேம் நகர்ப்பகுதிகளைத் துறந்து (அதாவது சமய ஆதிக்கம்/அரசியல் ஆதிக்கம் ஆகியவற்றின் கூட்டு இருப்பிடம்) ஒதுக்கப்படும் மக்கள் வாழும் பகுதிகளைத் தெரிந்து கொள்கிறார். இந்த நற்செய்திக்கு ஒரு சிறப்பு அழுத்தம் தர மத்தேயு விரும்பியதால் அவர் கூறும் உயிர்த்தெழுதல் வரலாறு ஒரு தனி வடிவம் பெறுகிறது.

ஆனால் லூக்கா ஆண்டவருக்குப் பின் நடந்த திருச்சபை வரலாற்றை மனத்தில் கொண்டு ஆண்டவரின் உயிர்த்தெழுதல் வரலாற்றை அமைக்கிறார். எருசலேமில்தான் திருச்சபையின் தலைமைப் பீடம் இருந்தது. அங்கிருந்துதான் நற்செய்தி யாளர்கள் எட்டுத் திக்கும் சென்றனர். அப்படிச் சென்றவர்கள் திரும்பிவந்து எருசலேமில் தலைவராயிருந்த யாக்கோபுவிடம் தங்கள் பணியின் அறிக்கைகளைக் கொடுத்தனர். இந்த நியதிக்கு பவுலும், பேதுருவும்கூட கட்டுப்பட்டிருந்தனர். இந்த வரலாற்றின் அடிப்படையில் உயிர்த்தெழுதல் - பரமேறுதல் வரலாறு லூக்காவில் உருவேற்கிறது. மேலும், இஸ்ரயேலரின் வரலாற்றோடு திருச்சபையின் வரலாறு தொடர்புடையது. பின்னது முந்தினதின் தொடர்ச்சி. எனவே திருச்சபையே புதிய இஸ்ரயேல் என்ற கருத்தையும் லூக்கா வலியுறுத்த விரும்பினார். இது தொடர்பாக பன்னிருவர் தொடர்ந்து எருசலேம் கோவில் வழிபாட்டில் ஈடுபடுவதாக திருத்தூதுவர் பணிகளின் தொடக்கம் காட்டுகிறது. நற்செய்தி அருளுரைகள் கோவில் சுற்றுகளில் செய்யப்பட்டன.

எனவே, தனித்தனியே மத்தேயுவும் லூக்காவும், நற்செய்தி யின் வெவ்வேறு கூறுகளுக்கு அழுத்தம் கொடுத்து நமது கவனத்தைத் திருப்புகின்றனர். ஒவ்வொருவர் வாயிலாகவும் ஆண்டவர் பேசுகிறார். இப்படிப் பார்ப்பதே முறை. இப்படிப் பார்ப்பதற்கு ஒவ்வொருவருடைய தனித்தன்மைகளை நாம் குறித்துக் கொண்டு அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் எனக் கவனிக்க வேண்டும். வேறுபாடுகள் இல்லை என்று கண்களை மூடிக் கொள்வதும், வேறுபாடுகளை நீக்கி அடிப்படை உண்மைகளை மட்டும் ஏற்பதும் நம்முடைய பார்வையை மழுங்கடித்துவிடும்; செவித்தினவை ஏற்படுத்தும்.

3. விவிலியத்தின் ஒருங்கிணைந்த செய்தி

மனிதர்களால் எழுதப்பட்டவையே விவிலியமறையின் நூல்கள். குறைவுள்ள மனிதரின் கலாசாரக் கட்டுகள், வரலாற்றுப் பிழைகள், குறைவுள்ள மொழிநடை இவையனைத்தும் அதில் உண்டு. அதோடு ஒவ்வொரு ஆசிரியருக்கும் தனி இறையியல் பார்வையுமுண்டு. இவையனைத்தையும் ஆவியர் மதித்துச் செயல்பட்டார். இருப்பினும் விவிலியமறையின் வாயிலாக கடவுளின் திருவாக்கு (ஒருமையில்) முரணில்லாமல் குறைவில்லாமல் வெளிப்படுகிறது. இது எவ்வாறு? இந்தக் கேள்விக்கு நாம் நல்லதொரு விடை கண்டால் நாம் திருமறையைப் புரிந்து கொள்வதுடன் கடவுள் - மனித உறவு பற்றிய ஓர் இரகசியத்தையும் தெரிந்து கொள்வோம். கடவுள் மனித சுதந்திரத்தை மதிக்கிறார்; ஆனால் தம்முடைய திட்டங்களை அவர்களைக் கொண்டே நிறைவேற்றவும் செய்கிறார்.

விவிலியத்தைப் பற்றி விவிலியமே என்ன சொல்லுகிறது எனப் பார்த்து, அதன் பொருள் காணமுயல்வோம்:

2 தீமோ. 3:16: மறைவாக்கியம் ஒவ்வொன்றும் இறை ஏவுதலினால் அருளப்பட்டிருக்கிறது ...

2 பேது. 1:20: மறைநூலிலுள்ள எந்த இறைவாக்குரையும் அவரவர் விரும்புவதின்படியான விளக்குதற் குரியதன்று என்பதை முந்தி நீங்கள் அறிந்திட வேண்டும். இறைவாக்குரை எப்போதும் மனித விருப்பினால் உண்டானதன்று. மனிதர் தூயஆவியரால் ஏவப்பட்டவர்களாய் கடவுள் வெளிப்படுத்தியதைப் பேசினார்கள்.

இவ்வாக்கியங்களுக்கு நாம், விவிலியம் தோன்றிய வரலாற்றை வைத்துத்தான் பொருள் காண வேண்டும். அப்படிப் பார்க்கும்போது முதலாவது, தூயஆவியர் இணையாசிரியரும் பதிப்பாசிரியரும் போலச் செயல்பட்டார் எனலாம். இதனை விவிலியத்தின் மறுக்கமுடியாத சில சிறப்புக் கூறுகளைக் கொண்டு உறுதி செய்யலாம்.

i. திருமறையின் செய்தி ஒருங்கிணைந்த முறை: திருவாக்குடன் குழப்பமூட்டும் ஒலிகள் பல சேர்க்கப்படுகின்றன. ஆதிக்க ஆற்றல்களின் சூழ்ச்சிகளும், விவிலியத்தைக் குறித்த மூடநம்பிக்கைகள், குறைவான அறிவு ஆகியவையும் சேர்ந்து இந்தக் குழப்பமூட்டும் சத்தங்களை ஒலிக்கின்றன என துவக்கத்திலேயே பார்த்தோம். ஆனால் இதுமட்டும் உண்மையெனின் நாம் எடுக்கிற முயற்சிகள் அனைத்தும் வீண். ஆனால் ஆச்சரியமென்னவெனில் குழப்பமூட்டும் ஒலி எழுப்பும் விவிலியமறையே இனிய ஒருங்கிணைந்த இசையையும் எழுப்ப வல்லது என்பதுதான். முதலாவது அது தரும் ஒருங்கிணைந்த செய்தியைத் தெரிந்து கொள்வோம்:

கடவுள் எளியோரின் கடவுள். சிதறடிக்கப்பட்டவர்களை அவர் கூட்டிச் சேர்க்கிறார். ஒடுக்கப்படுவோரை விடுவிப்பதில் அவர் முனைப்பாயிருக்கிறார். ஒதுக்கப்பட்டோருக்கு முதலிடம் தந்து அவர்களைத் தம்முடைய தலையாயக் கூட்டாளிகளாக்குகிறார். ஆபேலுக்காகக் குரல் எழுப்பியவர் அவர். இது தொடக்கநூல் தரும் செய்தி. ஒடுக்கப்படும் திருச்சபையை நோக்கி, நானே முதலும் முடிவுமானவர், நான் யாவருடைய கண்ணீரையும் துடைப்பேன், இதோ எல்லாவற்றையும் புதுப்பித்து மனிதரிடையே நான் தொடர்ந்து வாழ்வேன் எனக் கூறுபவராகத் திருவெளிப்பாடு நூல் கடவுளைக் காண்கிறது.

கடவுள் நீதி பற்றிய தீவிர வைராக்கியமுள்ளவராக விவிலியம் முழுவதும் வெளிப்படுகிறார். இதை யாரும் மறுக்க முடியாது. எனவே, நீதியராகிய கடவுளை அதற்கு முரண்பட்ட விதத்தில் ஏதாவதொரு மறைப்பகுதி காட்டுமானால் அதை கடவுளின் மாட்சிமை கருதி மறுக்க வேண்டியது நமது கடமை. குறிப்பாக, நல்லோர் மேலும் தீயோர் மேலும் சூரியனை உதிக்கச் செய்து மழையைப் பொழியும் கடவுளின் அன்பு முழுமையானது என்கிறார் ஆண்டவர் இயேசு (மத். 5:45). அப்படியெனில் அவரே சிலரை மீட்பு அடைந்தவர்களாகத் தெரிந்து கொள்வார்; மற்றவர் அனைவரையும் நரகத்தில் அழிப்பார் எனக் காண்பது எவ்வளவு அபத்தம்! இப்படி சீர்தூக்கி நிதானிப்பது இன்றியமையாதது. கடவுள் முழுமையான நற்குணர் என்றார் நம்முடைய ஆண்டவர் இயேசு (5:48). அதே கடவுள்தான் குருடரையும், ஊனமையரையும் அவ்விதமாகப் படைத்துள்ளார் என்கிறது விடு. 4:11. அப்படியானால் இவ்வசனத்தைச் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியம். அப்படிச் சீர்தூக்கிப் பார்க்கையில் அவ்வசனம் எழுந்த கால, கலாசாரத் தகவுகளைக் கவனிப்பது அவசியம். இங்கு ஊனமுற்றவர்களுக்கும் தாமே ஆண்டவர் என்று கடவுள் கூறுகிறாரேயன்றி, அவர்களின் ஊனத்திற்குத் தாமே காரணர் என்று அவர் கூறவில்லை என்றறிக.

ii. கால, கலாசாரங்களுக்கப்பால் விவிலியத்தின் கடந்தநிலை: விவிலிய ஆசிரியர்கள் அவரவருடைய காலத்தின் பிள்ளைகள். எனவே, தவிர்க்க முடியாத வகையில் அவர்களுடைய கால, கலாசாரத் தகவுகளுக்கு அவர்கள் கட்டுப்படுகிறார்கள். எ.கா. ஆபிரகாம், யாக்கோபு, தாவிது முதலானோர் பல மனைவிகளைக் கொண்டிருந்த வரலாற்றை எவ்விதத்திலும் குறைகூறாது விவிலியமறை சொல்லுகிறது என்பதையும் அவர்களுக்கும் அது பிரச்சனையாகத் தோன்றவில்லை என்பதையும் பார்த்தோம்.

ஆனால், தொடக்கநூலுக்குள் காணப்படும் மூலமரபுகளில் மூத்தமரபான யாவே மரபின் ஆசிரியரை எடுத்துக் கொள்வோம். அவரும் தவிர்க்க முடியாதவகையில் ஆணாதிக்கக் கலாசாரத்தை ஏற்றவரே. இருப்பினும் அவர் படைப்பின் வரலாற்றைக் கூறுகையில், கணவன், தன் தாயையும் தகப்பனையும் மறந்து, தன் மனைவியோடு (ஒரே மனைவியோடு என்று தானே புரிந்த கொள்ள முடியும்?) இசைதல் வேண்டுமென்கிறார் (தொட. 2:24); அவர்களது உறவு இருமைநிலை கடந்த ஆழ்ந்த ஒருமைநிலை எய்த வேண்டும் என்றும் கூறுகிறார். இதுவே இறைவனால் உண்டாக்கப்பட்ட ஒழுங்கு என அவர் அழகுறக் காட்டுகின்றார்.

அவர் கூறும் வரலாறு, ஆணாதிக்க எதிரொலிகளிலிருந்து முற்றிலும் விடுபட்டதன்று. இருப்பினும் அதனுடைய வரம்புகளை மீறியச் சிந்தனை அவரிடத்தில் காணப்பட்டது என்பதையும் மறுக்கவியலாது. இதுபோல, அடிமைகளை அவர்களின் தலைவர் கொன்றாலும் குற்றமில்லை என்ற சிந்தனை மறுப்பில்லாமல் ஏற்கப்பட்டிருந்த நாள்களில், அடிமைகளை அடித்துக் கொல்லுகிற தலைவன் தண்டிக்கப்படவே வேண்டும் (விடு. 21:20), ஒரு பெண்ணடிமைக்கு ஒரு தலைவன் துரோகம் செய்தால் அவள் விடுதலை செய்யப்படுவதோடு அவளுக்கு அவன் திருமணமும் செய்து வைக்க வேண்டும் (21:7-11) என்பன போன்ற காப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டிருப்பதைக் காண்கிறோம். யாரும், யாரையும் அடிமைப்படுத்த

உரிமையில்லை என்பதுதான் இறையரசின் தகவு என்றாலும், அடிமைகள் மிகவும் கேவலமாக நடத்தப்படுவது தவறன்று என்று எண்ணப்பட்ட நாள்களில் அவர்களுடைய அடிப்படை உரிமைகளைப் பேணும் சட்டங்கள் உருவாக்கப்பட்டன என்றால் அது தூயஆவியருடைய தூண்டுதலால்தான் நடந்திருக்க முடியும் என நாம் துணிந்து கூறலாம்.

இவ்வாறு ஆணாதிக்கக் கலாசாரக் கட்டுகள், அடிமைகளை மனிதர்களாக மதிக்காது, விலங்குகளுக்கீடாக நடத்தும் போங்குகள், அரசர்களின் எல்லையற்ற அதிகாரத்தைக் கேள்வியின்றி ஏற்ற சனநாயக உணர்வுகளற்ற சிந்தனைப் போங்குகள் ... இப்படி பல சமக்காலக் கலாசாரக் கட்டுகளால் கட்டுண்ட விவிலிய ஆசிரியர்கள், தூயஆவியின் ஆற்றலால் இவ்வரம்புகளைக் கடந்த சிந்தனைகளைக் கொண்டிருந்தனர்; காண்க: இணை. 17:15-17. இதுவும் ஆவியாரின் உந்துதலுக்கு ஒரு சிறந்தச் சான்று எனக் கொள்வது சரியே.

iii. **விவிலியத்தின் சீர்பொருந்திய தன்மை:** பலவேளைகளில் கலாசாரக் கட்டுகளுக்குட்பட்ட ஆசிரியர்கள் தங்கள் கட்டுகளுக்கு மீறிய உண்மைகளை உணர்ந்து அவற்றை நம் முன் வைக்கிறார்கள் எனப் பார்த்தோம். ஆனால் சமகால உணர்வுகளுக்கு அடிபணிகிற சிலர் அந்த உணர்வுகளுக்கு முற்றிலும் கட்டுண்டு கிடக்கிற நிலையும் விவிலியமறையில் உண்டு. எ.கா. நெகேமியா இறைப்பற்றில் சிறந்தவர்; நாட்டுப்பற்றில் வைராக்கிய சீலர், எருசலேமின் மதில்சுவரை எடுப்பித்துக் கட்ட முனைந்தவர்; இறையருளைப் பணிவுடன் வேண்டினவர், எதிர்ப்புகளைத் துணிவுடன் சமாளித்தவர்; தியாகச் சிந்தையோடு தம் ஆளுநர் பதவியின் அந்தஸ்து, அதற்குரிய சிறப்பூதியம் அனைத்தையும் விட்டுக் கொடுத்தவர். இத்தனைச் சிறப்புகளை அவர் கொண்டிருந்தாலும் இஸ்ரயேலர் அல்லாதோரை அவர் அறவே வெறுத்தார். உன்னிடத்தில் தங்கியிருக்கும் வேற்றினத்தவரைக் கனிவாய் நடத்து, நீ எகிப்தில் வேற்றினத்தானாய் அல்லல்பட்டதை நினைத்து ஒரு மாற்றுக் கலாசாரத்தை உருவாக்கு என்ற கடவுளின் அழைப்பை அவர் மறந்தார். பாபிலோனில் யூதர்களுக்கு வாழ்க்கைப்பட்டு அவர்களுக்குப் பிள்ளைகளையும் பெற்றிருந்த வேற்றினப் பெண்கள் அனைவரும் திருப்பியனுப்பப்பட வேண்டும் என அவர் கட்டாயப்படுத்தினார். அப்படித் தங்கள் மனைவியரைத் திருப்பி அனுப்பத் தயங்கியவர்களைப் பிடித்து நன்றாக அடித்துவிட்டு அவர் கடவுளிடம் அதைச் சொல்லி பெருமைபட்டுக் கொண்டார். இவ்வாறு பல சிறப்புகள் மிக்க நெகேமியா இக்காரியத்தில் இறைத் திருவுளத்திற்கு முரண்பட்டுக் குறைவுபட்டார். நெகேமியாவின் வரலாற்றைக் கூறும் நூல், தன்னிலையில் சுயசரிதையாக எழுதப்பட்டிருப்பதால் இப்பெருங்குறை அந்நூலில் அவ்வளவாகக் குறிப்பிடப்படவில்லை. ஏனெனில் தூயஆவியாராலும் நெகேமியாவை இந்தக் காழ்ப்புணர்ச்சியிலிருந்து விடுவிக்க முடியவில்லை.

ஆனால், தம்முடைய இறைவெளிப்பாட்டுப் பணியில் தூயஆவியர் தோற்றுப் போகவில்லை. விவிலியமறையும் அதனால் குறைவுபட அவர் அனுமதிக்கவில்லை. இதுதான் விந்தையிலும் விந்தை! ஏனெனில், இனவெறுப்புக் காழ்ப்புணர்ச்சிகளைக் கடந்த உணர்வுடைய வேறொருவரை அதே காலத்தில் தூயஆவியர் தெரிந்து கொண்டார். அவர் நெகேமியாவின் போங்கைக் கண்டிக்கும்வண்ணம், ரூத் நூலை உருவாக்குகின்றார். ரூத் தாவிதின் மூதாதையர்களில் ஒருவர். மோவாபியப் பெண்ணாக அவர் இருந்தாலும், உம் கடவுள் என் கடவுள், உம் மக்கள் என் மக்கள் என்று சொல்லி நகோமியோடு தம்மை இணைத்துக் கொண்டு போவாசுக்கு மனைவியானார். இவ்வரலாற்றைச் சுட்டிக்காட்டி, வேற்றினப் பெண்களை நாம் திருப்பி அனுப்பத் தேவையில்லை, அவர்கள் யாவே வணக்கத்தை ஏற்று, முற்றிலுமாக நம்முடைய மக்களோடு ஒன்றித்தபின் அவர்களைத் திருப்பி அனுப்புவது கொடூரம் என்கிறார் ரூத் நூலின் ஆசிரியர். இவ்வாறு விவிலியமறைக்குள்ளாகவே நெகேமியாவைப்போல் கலாசாரத்தால் கட்டுண்டவர்களையும், ரூத் ஆசிரியர்போல் அதனை உடைத்தெறிவதில் முனைப்பாயிருந்தவர்களையும் காண்கிறோம். நெகேமியாவின் சிறப்பு அவரது நாட்டுப்பற்றும் தியாகமும் எனின் அவற்றுக்கு மட்டுமே அவரை நாம் முன்மாதிரியாகக் கொள்ளவேண்டும். ஒருபோதும் அவரது குறுகிய இனவெறி/ஆணாதிக்கத் தகவுகளை முன்மாதிரியாகக் கொள்ளக் கூடாது. மாறாக, பல்இன உறவுசார்ந்த பிரச்சனைகளுக்கு, இறையரசின் தகவுகளை வெளிப்படுத்தும் ரூத்தின் வரலாற்றையே நாம் இறைச்செய்தியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

4. இயேசு பெருமானும், அவரது மறைநூலும்

i. **விவிலியம் கிறிஸ்துவுக்கு அடிப்படைச் சாட்சி:** இறைமகன் இயேசு ஒரு தாயின் வயிற்றில் தோன்றி மனிதரானார்; ஒடுக்கப்படுவோர் அனைவருடனும் தன்னை இணைத்துக் கொண்டார். அதற்காகவே அவர் கலிலேயன் என்றும் நசரேயன் என்றும் அழைக்கப்பட்டார். அவருடைய வாழ்வு, போதனை, மரணத்தினால் ஆதிக்கவெறியர்கள் (சமய, சமுதாய, அரசியல்) மனந்திரும்ப அழைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு மன்னிப்பையும் அவர் வழங்குகிறார். அவர் இவ்விதம் உலகத்தில் தோன்றுவார் என்ற எதிர்பார்ப்பு தொடக்க நூலிலேயே காணப்படுகிறது. இறுதி நூலாகிய திருவெளிப்பாடு நூலோவெனில் அவர் உலகத் தோற்றத்திற்கு முன்பிருந்தே அடிக்கப்பட்ட நிலையிலுள்ளவர் என்கிறது (திருவெ. 13:8). இப்படித் திருவெளிப்பாடு நூல் கூறுவது எவ்வாறு கடவுளின் திட்டத்தில் படைப்பும் மீட்பும் ஒன்றையொன்று சார்ந்துள்ளது என்பதைக் காட்டுகிறது.

எனவே, ப.ஏ. கிறிஸ்துவை நோக்கியும் பு.ஏ. கிறிஸ்துவுக்குச் சாட்சியாகவும் அமைந்துள்ளது. இந்த மீட்பு வரலாறு திருமறையின் நூல்கள் அனைத்தையும் இணைத்துக் கட்டும் மற்றொரு வலுவான இழை எனலாம். இதனால் ப.ஏ.இன் செய்தி இன்றும் யூதர்களுக்குப் பொருளுள்ளதாக இருக்கிறது என்பதை நாம் மறுப்பதற்கில்லை. இயேசுவின் ஒளியில் அதை வேறொரு முறையில் தொடக்கக் கிறிஸ்தவர்கள் பார்த்து விளக்கினர். இந்த விளக்கம் இன்றும் பொருள் நிறைந்ததாக உள்ளது என்பதை கிறிஸ்தவர்கள் உரையாடல் நெறியுடன் யூதர்களுக்கு எடுத்துக்கூறலாம்.

ii. **ஆண்டவராகிய இயேசு தமது மறைநூலை எவ்வாறு பயன்படுத்தினார்?:** இயேசு பெருமான் முழுமையான ஒரு மனிதராக வாழ்ந்தார். அவர் ஒரு சிறு பாலகனாகத் தோன்றினார். தாயிடமிருந்தும், பெரியவர்களிடமிருந்தும் அவர் பாடம் கேட்டுத் தேர்ந்தார். மறைநூலை வாசிக்க இரபிகளைப் போல அவர் பயிற்சி எடுக்கவில்லை, இருப்பினும் அதை ஊன்றிப் படித்தார். சமகால யூத மக்களிடையே காணப்பட்டப் பிரிவுகளில் அவர் பரிசேயர் பிரிவைச் சார்ந்திருந்தார். ஏனெனில் அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் அவர் ஒழுங்காக வழிபட்டார். அவர்கள் ஏற்றிருந்த 39 நூல்களின் தொகுப்பை அவரும் அங்கீகரித்தார். வெறும் விவாதத்துக்காக மட்டுமன்று, தம்மையும் தம் பணியையும் அவர் மறைநூல் வாயிலாகவே புரிந்து கொண்டார். மெசியா, மனுமைந்தர், கடவுளின் பணியாள், இறைவாக்கினர் போன்ற

பலவிதமான இறைவனின் அடியாருக்குள் அவர் தம்மை மிகச் சிறப்பாக, மனுமைந்தராகவும், கடவுளின் பணியாளராகவும் காட்ட விழைந்தார். எனவே, மறைநூல் அவருடைய வாழ்க்கையில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது. அதனால் அவர் அதனை எவ்விதம் பயன்படுத்தினாரோ அதேவிதமாக நாமும் பயன்படுத்துவதுதான் சரியென்பதால் அவர் திருமறையை எவ்வாறு பயன்படுத்தினார் என்பதை முறைப்படுத்திப் புரிந்து கொள்ள முயல்வோம்.

அ. கடவுளின் அன்பின் அடிப்படையில் இயேசு மறைநூலுக்கு விளக்கமளித்தார்.

கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்பது மோசேயின் சட்டங்களின் அடிப்படை ஆனால் ஆண்டவருக்கு இறைவனின் மன்னிக்கும் பேரன்பே அடிப்படை. எனவே, மோசே எழுதிவைத்த சட்டமே என்றாலும் அது காலாவதியான சட்டமாக ஒதுக்கப்படுதல் வேண்டுமென்றார். எ.கா. மத்.5ஆம் அதிகாரத்தில் ஆண்டவர் விடுக்கும் ஆறு எதிர்க்கருத்துக் களுக்கும் அடிப்படையாக அமைவது மத்.5:48 (உங்கள் தந்தையார் முழுமையான நற்குணர்...).

ஆ. படைப்பில் விளங்கும் கடவுளின் திட்டத்தை வைத்து கலாசாரத்தால் எழுந்த நியாயங்களை இயேசு தகர்த்தார்.

மணவிலக்குச் சட்டத்தை ஆதிக்க உணர்வுடைய ஒரு சலுகையாகப் பாராட்டிப் பெண்களை கிள்ளுக்கீரையாகப் பயன்படுத்தினர்; மோசேயின் அங்கீகாரம் உண்டு., எனவே யாரும் அவ்வுரிமையை மறுக்கக் கூடாதென்றார். புகழ் வாழ்ந்த யூதஇரபிகளும் அச்சட்டத்தை எதிர்க்கத் துணிய வில்லை. ஆனால் ஆண்டவரோ அதே சட்டத்தை முற்றிலும் வேறு கண்களுடன் பார்த்தார். அந்தச் சட்டம் ஏற்பட்டதே ஆண்களின் மனக்கடினத்தால் என அவர் சாடுகின்றார் (மார். 10:5). அதாவது, மனைவியிடத்தில் அன்பு செலுத்த இயலாத கணவர் அவர்களுக்கு மணவிலக்கு கொடுத்து அனுப்புவதே பெண்களுக்குப் பாதுகாப்பு என்பதால் அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதென்கிறார். ஏனெனில் மனைவி யிடத்தில் அன்புகாட்டமுடியாத கணவர் அவளை அடித்துத் துன்புறுத்தத் தயங்குவதில்லை. இந்த மனக்கடினத்தை முன்னிட்டே மோசே மணவிலக்குச் சட்டத்தை மனைவியரின் பாதுகாப்புக் கருதி இயற்றினார் என ஆண்டவர் கண்டார். ஆனால் இப்படிக் கலாசாரம் பலவீனப்படுத்தியிருந்த பெண் களுக்குப் பாதுகாப்பாக ஏற்பட்டதே மணவிலக்கு என்று அவர் கூறுவது அவர் மறைநூலை நீதியின் கண்கொண்டு பார்த்தார் என்பதைக் காட்டுகிறது.

அதோடு, படைப்பில் கடவுள் அமைத்த நியதிக்கும் அவர் முதலிடம் தந்தார். கடவுள் மனுக்குலத்தைப் படைத்தபோதே ஓர் ஆணும் ஒரு பெண்ணும் சேர்ந்து அமைப்பதே இல்லறம் என ஒழுங்கு செய்தார். அதனால் கணவன் தன் மனைவியைச் சார்ந்து இணைபிரியாது வாழவேண்டும் என கடவுளால் தீர்மானிக்கப்பட்டது என்பதை வைத்து பிந்தியக் கலாசாரத்தின் போங்குகளை அவர் கண்டித்தார். எனவே, மோசே எழுதிய சட்டத்தை எவரும் மாற்றக்கூடாது என வாதிட்டக் கூட்டத்தாரிடம், கடவுளின் துவக்க ஏற்பாடு, ஆண்களின் ஆதிக்கத்துக்குத் தடை என்ற இரண்டு நீதிகளைக் காட்டி இயேசு எதிர்வாதமிட்டார் (காண்க. மார். 10:8-9).

இ. மனிதாபிமானமே முக்கியமானது, சடங்குகளும் சட்டங்களுமல்ல என்பதும் ஆண்டவரின் திறனாய்வுப் பார்வையின் ஒரு சிறப்புக் கூறாகும்.

விடு. 20:8ஐச் சுட்டி, ஓய்வுநாளில் ஒருவரும் வேலை செய்யக் கூடாதென்றனர் யூத சமயத்தலைவர்கள். அதே சட்டம் இணை. 5:14,15இலும் வருகிறதை ஆதாரமாக் கொண்டு ஓய்வுநாள் அடிமைகளின் ஓய்வுக்காக, இறைவனின் இறுதித்தீர்ப்பில் வரவிருக்கும் முழுமையான விடுதலையை எதிர்நோக்கியதாக அமைந்தது என்பது ஆண்டவரின் கருத்து. எனவே, விடுதலைப் பணிகளைச் செய்ய அதைவிட நல்லநாள் வேறு கிடையாது என்பது அவரின் கொள்கையாக விளங்கியது. இதனால், அவர் வேள்வியல்ல (அதாவது சடங்காசாரங்கள் அனைத்தும்) இரக்கமே (அதாவது மனிதாபிமானம், விடுதலை ஆகிய நோக்கத்தில் செய்யப்படும் அனைத்தும்) முக்கியம் என்றார். ஓய்வுநாள் மனிதருக்கென்று, (அதாவது ஒடுக்கப்படும் அடிமைகள் போன்றோருக்கென்று) ஏற்பட்டது; அந்த உரிமையைச் சமயத்தின் பெயராலும் பறிக்கக் கூடாதென்ற உணர்வுடன் ஆண்டவர் செயல்பட்டார். எனவே, மறைநூலின் சட்டங்கள், சடங்குகள் எல்லாவற்றையும் மனிதாபிமானத்தின் கண்கொண்டு பார்த்து அதற்கு ஒத்துவராத யாவையும் விலக்கத் துணிந்தார் இயேசு (காண்க: மத். 12:1-8). நல்ல சமாரியன் உவமையிலும் (லூக். 10:30-37) இந்தப் பார்வையை உய்த்தறியலாம்.

எனவே, இறைமாட்சி, இறையன்பு, இறைநீதி, எளியோரின் காப்புரிமைகள், மனிதாபிமானம் ஆகியவை முன்வைக்கப்பட வேண்டும். அவற்றுக்கு முரணாக மறைநூலின் பகுதிகளோ, சட்டங்களோ, சடங்குகளோ இருக்குமாயின் அவை காலாவதியாகிச் செல்லாமற் போனவை என்று தீர்க்கப்பட வேண்டும் அல்லது அதன் உள்நோக்கத்தை அறிந்து வேறுவிதமாகப் புரிந்து கொள்ளவேண்டும். எழுதியது எழுதியதே என்ற நிலைப்பாடு இங்கு சரியன்று என்பதே ஆண்டவரிடமிருந்து நாம் கற்கும் பாடம்.

இதனால், வாசிப்போருக்கு ஒரு தேர்ச்சி தேவை என்பது வெள்ளிடை மலையாகிறது. இத்தேர்ச்சி பெறாவிட்டால் நம்முடைய கண்கள் மூடப்படும், செவிகள் அடைக்கப்பட்டுவிடும். முடிவாக, இது குறித்து ஆண்டவர் சொல்வதைக் கேட்போம்.

இத்தேர்ச்சி பெறாதவர்களின் காதுகள் அவருடைய போதனைகளை ஏற்கவில்லை என்பதால்தான் ஆண்டவர் மீண்டும் மீண்டும் கேட்கிறதற்குக் காதுள்ளவர்கள் கேட்கட்டும் என்று சொல்லித் தன்னுரைகளை முடித்தார்.

மேலும், உங்கள் கண்கள் இருளடைந்தால் உங்கள் வாழ்வே இருண்டுவிடும் (மத். 6:22,23) என்றும், உங்கள் கண்கள் இருளடைந்து விடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள் (லூக். 11:33-36) என்றும் இயேசு போதித்தார். இது அதிமுக்கியமான எச்சரிப்பு. ஏனெனில், பொய்களுக்குத் தீயோனின் சூழ்ச்சியால் உண்மைமுலாம் பூசப்படுகிறது. இப்படி முலாம் பூசப்பட்ட பொய்கள் இறைஅங்கீகாரம் பெற்ற உண்மைகள் எனவும் நாம் நம்பிவிடுகிறோம். இதிலிருந்து, நம்முடைய கண்கள் தெளிவு பெற்றதாகவும் நமது காதுகள் கடவுள் வார்த்தையைக் கேட்டு அடையாளம் கண்டு கொள்ளக்கூடியதாகவும் மாறவேண்டியது மிகவும் இன்றியமையாதது.

இந்தப் பார்வை மாற்றம் ஏற்பட நாமும் கடவுளின் அளவற்ற அன்பையும், நீதியையும் போற்றி, அவர் அனைவரையும்

ஈடேற்ற வகுத்துள்ள திட்டங்களை முன்வைத்து, அதற்காக நம் பெருமான் இயேசுவின் சிலுவைப் பாதையில் செல்ல ஒப்புக் கொடுத்து, அவர் தம்மை இணைத்துக் கொண்ட ஒடுக்கப்படும், ஒதுக்கப்படும் மக்களோடு நம்மையும் இணைத்துக் கொண்டு வாழுதல் வேண்டும். பலரைக் கூட்டாளிகளாகச் சேர்த்துக் கொண்டு ஆண்டவர் செயல்படுகிறார். இவர்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்கள் அல்லர். அவர்கள் புகழ் பெற்ற மனிதரும் அல்லர். எளியோரும், பெண்களும் இதில் முதலிடம் பெறுகின்றனர் என்ற உண்மையை நாம் ஏற்கத் தயாராக வேண்டும். சமய, சாதிய, பணம் -அந்தஸ்து சார்ந்த அனைத்துப் பாகுபாடுகளும் தீயோனின் சூழ்ச்சியின் ஏற்பாடு. இது கடவுளுக்கு ஒவ்வாதது என்ற துணிவு வேண்டும். இத்துணிவை ஆவியர் நமக்கு அருள்கொடையாக வழங்கும் போது மட்டுமே தேவையான பார்வை மாற்றம் ஏற்படும்.

இப்படி உணர்வுப்பூர்வமாக இறையரசுக்காக நம்மை அர்ப்பணித்தபின்பு, அறிவுப்பூர்வமாக நாம் சில முயற்சிகளை மேற்கொள்ளலாம். இதற்கென்றே, விவிலியமறையைப் பற்றிய நமது அறிவை வளர்த்துக் கொள்ள எவ்விதத் துணைநூல்கள் நமக்குண்டு எனக்காட்டும் பகுதி அடுத்து இடம்பெறுகிறது.

5. விவிலியத்தைப் புரிந்து கொள்ளச் சில உத்திகள்

i. விவிலிய விளக்கக் கைநூல்களின் பயன்: விவிலிய மறையின் நூல்கள் வெவ்வேறு காலங்களில் எழுந்தவை, அக்காலப் பிரச்சனைகளுக்குத் தீர்வாக அக்கால இறையியல் கண்ணோட்டங்களின் அடிப்படையில் எழுதப்பட்டவை, என்றாலும் இறைத்தன்மையுடையதாய் இறைச்செய்தியின் வாகனங்களாகத் திகழ்பவை என்று சில உண்மைகளைப் புரிந்துகொள்ள முயற்சி செய்தோம். இவை உண்மையெனில், விவிலியமறையைப் புரிந்து கொள்வதற்கு அந்தந்த நூல்கள் எழுதப்பட்ட காலம், அதனை எழுதியவர்களின் வரலாற்று, சமுதாய, அரசியல், கலாசாரப் பின்னணியம், அவர்களது இறையியல் பார்வைகள், அழுத்தங்கள் போன்ற தகவல் சேகரிப்பு வேலையை அதைப் புரிந்து கொள்ள விரும்புவோர் அனைவரும் முதலில் செய்ய வேண்டியது இன்றியமையாதது.

இந்த வேலைக்குத் துணையாக இன்று அறிஞர்களுடைய ஆய்வுகளினால் உருவாக்கப்பட்டப் பல்வேறு கைநூல்கள் உள்ளன. அவை:

அ. விவிலிய விளக்கவுரைகள் (Commentaries) என்பவை ஒவ்வொரு நூலும் எழுந்த காலம், சூழல், எழுதியவர் யார், நூலின் உள்ளடக்கக் கருத்துச் சுருக்கம், தனித்தனிப் பகுதிகளுக்கான விரிவான விளக்கம் போன்ற தகவல்களால் உருவாக்கப்படுகின்றன. சில தகவல்கள், கருத்துக்கள் குறித்த கருத்து வேறுபாடு இருக்குமாயின் அவற்றையும் விவரித்து அவற்றிற்கான ஆய்வாளர்கள் வழங்கும் தீர்வுகளில் எது மிகப் பொருத்தமானது என நாம் முடிவெடுக்க இவை உதவுகின்றன. ஆனால் இம்முடிவுகள் விளக்கவுரைஞரின் இறையியல் சார்பை ஒட்டியே அமையும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆ. விவிலியச் சொற்பொருள் அகராதிகள் (Dictionaries) என்பவை விவிலிய நபர்கள், பெயர்கள், ஊர்கள், இடங்கள் முதலானவற்றின் பெயர்கள், ஆசிரியர்களின் பெயர்கள், இன்னும் கருத்தாழம் மிக்க அல்லது புரிந்து கொள்வதில் சிக்கல்கள் மலிந்த சொற்கள் ஆகியவற்றை அகர வரிசையில் அடுக்கி அவற்றுக்கு தனித்தனி விளக்கங்கள் தருகின்றன. ஒரு சொல், ஒரு நபர், ஓர் ஊர் முதலானவற்றைப் பற்றிய தகவல் விளக்கங்களை உடனடியாகத் தெரிந்து கொள்ள இவ்வித அகராதிகள் பயன்படுகின்றன. விளக்கவுரைகள் ஆசிரியர்களைப் போலவே இவ்வித அகராதிகளுக்குக் கட்டுரைகள் வழங்குவோரும் தங்கள் தங்கள் இறையியல் கண்ணோட்டங்களின் அடிப்படையிலேயே விளக்கங்கள் தருவார்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இ. நற்செய்தி நூல் ஒற்றுமைத் திரட்டு (Synoptic Parallels) என்னும் நூலும் பயனுடையது. நம்மிடம் நான்கு நற்செய்தி நூல்கள் உள்ளன. குறிப்பாக, முதல் மூன்று நூல்களுக்கிடையே பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஆனால் அவை ஒவ்வொன்றும் பொதுவான நிகழ்ச்சிகளை விவரிப்பதிலும், சில தனி நிகழ்ச்சிகளையும் போதனைகளையும் பாதுகாப்பதிலும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடவும் செய்கின்றன. இவ்வொற்றுமை-வேற்றுமைகளை உன்னிப்பாய் ஆராய்வதால் ஒவ்வொரு நற்செய்தி நூலின் தனித்தன்மையைக் கண்டு கொள்ள முடிகிறது. இந்த ஒப்பாய்வுக்குப் பெரும்துணையாக அறிஞர்கள் இணைப்பகுதிகளை இணை வரிசைகளில் அமைத்து வெளியிடும் நூல்களே **ஒற்றுமைத் திரட்டு** என அழைக்கப்படுகின்றன. மத்தேயுவின் முதன்மை, மார்க்குவின் முதன்மை என அறிஞர்கள் வெவ்வேறு அடிப்படைகளில் இவ்வித ஒற்றுமைகளை உருவாக்குகின்றனர். நற்செய்தி நூல்களை ஊன்றிப் படிப்பதற்கு இவை பெரிதும் உதவுகின்றன. ஓரளவுக்கு நாமே சில பிரச்சனைகளுக்கு நேரடியாக முடிவெடுக்க இவை துணைசெய்கின்றன.

ஈ. ஒத்தவாக்கிய அகராதி (Concordance) நூலும் நமக்குத் திருமறையைப் புரிந்து கொள்ளப் பெருந்துணையாக உள்ளது. ஒத்தவாக்கிய அகராதிகளுள் மிகவும் சிறப்பானது பகுப்பாய்வு **ஒத்தவாக்கிய அகராதி** (Analytical Concordance) என அழைக்கப்படுகின்றது. ஏனெனில் இவ்வகை அகராதிகளில் ஒவ்வொரு சொல்லும் அதன் மூலமொழிச் சொல்-பொருளின் அடிப்படையில் திருமறையில் எங்கெல்லாம் காணப்படுகிறது எனத் தொகுத்து தரப்படுகிறது. அச்சொல்லின் இணைச்சொற்கள் எவை எனக் கண்டுகொள்ளவும், வெவ்வேறு ஆசிரியர்கள் எவ்விதக் கருத்தாழங்களில் ஒரே சொல்லைக் கையாளுகின்றனர் என அறிந்து கொள்ளவும் இந்த அகராதிகள் பெரிதும் துணை செய்கின்றன. நாமே விவிலியமறையை நேரிடையாக ஆய்வு செய்து கருத்தாக்கம் செய்துகொள்ள இதுவே மிகச்சிறந்த துணை. ஆய்வுமுடிவுகளின் மாற்றங்களால் பாதிப்படையாத ஒரே நூல் இது என்றால் மிகையாகாது. ஆனால் புதிய மொழிபெயர்ப்புகளின் சொல்லாட்சிக்கேற்ற பகுப்பாய்வு ஒத்தவாக்கிய அகராதிகளைப் படைத்தல் இன்றியமையாதது. அந்த வேலை தமிழில் இன்னும் செய்யப்பட வேண்டியுள்ளது.

6. விளக்கவுரை

விவிலிய விளக்கத்திற்கு உதவியாகச் சில துணைமூலங்களைப் பார்த்தோம். இனி, இவற்றின் துணைக்கொண்டு ஒரு விவிலியப் பகுதிக்கு எவ்வாறு விளக்கவுரை உருவாக்க வேண்டும் என்று பார்ப்பது நலம். பொதுவாக, ஒரு விளக்கவுரையில் (i) விவிலியப் பகுதி; (ii) இணைப்பகுதி(கள்); (iii) சூழல்; (iv) இலக்கிய அமைப்பு; (v) சொல்விளக்கம்; (vi) இறையியல் செம்பொருள்; (vii) இன்றைய பொருத்தம் முதலிய பகுதிகள் வரும். எனினும், ஒரு பகுதியைப் பொறுத்து, இவற்றில் வரிசை மாற்றம் செய்யலாம்; ஒரு சில பகுதிகளை விட்டுவிடலாம்;

ஏனைய சில பகுதிகளை எடுத்துக் கொள்ளலாம்:

சில பகுதிகளில் வரும் கேள்விகள், குறிப்புக்கள் அப்பகுதியின் பின்னணியை அறிந்திடச் சில தடங்களைத் தரக்கூடும்.

எ.கா. (i) நீர் இறைவாக்கினரோ? (யோ. 1:21).

இறுதி நாள்களில் எலியா வருவார் என்ற எதிர்பார்ப்பும் மெசியா வருவார் என்கிற எதிர்பார்ப்பும் இருந்தது பல இடங்களில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இப்பகுதி இறைவாக்கினர் என்ற ஒருவருடைய வருகையையும் சில யூதமக்கள் எதிர்பார்த்திருந்தனர் எனக் காட்டுகிறது. அத்தகைய குழுவினர் யார்? எதிர்பார்க்கப்பட்ட இறைவாக்கினர் சாதிக்க எதிர்பார்க்கப்பட்டது என்ன? இவை போன்ற கேள்விகளும் எழுகின்றன. அதோடு, இயேசு தம்மை ஓர் இறைவாக்கினராகக் கருதியதும், பலர் அவரை ஓர் இறைவாக்கினர் என அழைத்ததும் இந்த எதிர்பார்ப்பின்படி தானா என்னும் கேள்வியும் ஆம் எனில் அவரை மெசியா எனக்கொள்வது சரியா என்னும் கேள்வியும் சேர்ந்து எழுகின்றது.

எ.கா. (ii) நான் உரிமையாளனன்றோ? நான் திருத்தூதுவனன்றோ? (1 கொரி. 9:1).

தம்முடைய கடிதத்தை எழுதிக் கொண்டு போகிற பவுல் திடீரென இக் கேள்வியை எழுப்புகிறார். இதிலிருந்து, அவர் உண்மையான திருத்தூதுவர் அல்லரென்றும், அவருக்கு உரிமையுடன் போதிக்க அனுமதியில்லையென்றும் யாரோ கொரிந்தியரிடையே கருத்துப் பிரச்சாரம் செய்திருக்க வேண்டும் என்று தெரிய வருகிறது. அத்தகையோர் யார்? அவர்களுக்கு ஆதரவளித்தோர் யார்? அவர்கள் பவுலின் ஊழியத்தைக் கெடுப்பதன்மூலம் சாதிக்க முனைந்தது என்ன? இவை போன்ற கேள்விகளுக்கு விடைகாண முடிந்தால் பவுலின் வாழ்க்கையையும் பணியையும் புரிந்து கொள்வதற்கும் தொடக்கச் சபைகளில் எந்தவகைப் பிரச்சனைகள் எழுந்தன எனப் புரிந்து கொள்வதற்கும் வழிபிறக்கிறது.

எ.கா. (iii) ஏரோது உம்மைக் கொல்ல மனதாயிருக்கிறான் (லூக். 13:31).

ஏரோது இயேசுவின் செயல்களைக் குறித்துக் கேள்விப்பட்டு, தான் கொன்ற யோவான் உயிர்பெற்று இயேசுவாக நடமாடுகிறார் என எண்ணி அஞ்சியதாகவும், அவரைக் காண அவன் ஆவலுடையவனாயிருந்ததாகவும் லூக்காவே கூறுகிறார் (லூக். 9:7-9; 23:8,9). ஆனால் இங்கே கூறப்பட்டுள்ள தகவல் அதிலிருந்து வேறுபடுகிறது. ஒருவேளை யோவானை ஏரோது கொன்றுபோட்டதை இயேசு பகிரங்கமாகக் கண்டித்திருப்பாரோ? அந்தத் தகவல் ஏதோ காரணத்தினால் நற்செய்தியாளரால் மறைக்கப்பட்டிருக்குமோ? இத்தகைய கேள்விகள் எழுகின்றன. இவற்றுக்கு நாம் இருக்கலாம் என விடை கூறக்கூடுமானால் இயேசுவின் அரசியல் ஈடுபாடு குறித்த முற்றிலும் புதிய ஒரு கண்ணோட்டம் எழுவதற்கு வழிபிறக்கிறது.

இவ்வாறு வரலாறு அளவிலும் கருத்து அளவிலும் நிலவியச் சூழல் தெளிவுபடுத்தப்படவேண்டிய பணி விளக்கவுரையாளர்களின் பணியின் ஒரு முக்கியக் கூறு எனலாம்.

விளக்கவுரையாளர்களின் அடுத்த முக்கிய பணி இறையியல் கருத்து விளக்கப்பணி எனலாம். பு.ஏ.இல் பலவிதமான இறையியல் கருத்துக்களின் மோதல்கள் காணப்படுகின்றன. எ.கா. பற்றுறுதிக்கும் செயலுக்கும் இடையேயுள்ள உறவினைப் பவுலும், யாக்கோபும் வெவ்வேறு கோணங்களிலிருந்து அணுகுகின்றனர். பவுலுக்கும், பேதுருவுக்கும் யூத புறஇனத்தவர் உறவு குறித்துக் கருத்து வேறுபாடு நிலவியது. பவுலுக்கும் திருவெளிப்பாடு நூலின் ஆசிரியருக்கும் அரசு அதிகாரம் பற்றிய இறையியல் கண்ணோட்டங்கள் வேறாயிருந்தன. பவுலின் இறையியலிலேயே வளர்ச்சிப்படிகள் தோன்றுகின்றன. மேலும் பு.ஏ. ஆசிரியர்கள் கையாளும் சிறப்புப் பதங்கள் (எ.கா. நீதியராக்கப்படுதல், ஒப்புரவாகுதல், மீட்கப்படுதல்) பலவற்றிற்கும் ஆழ்ந்த ஆய்வின் பின்னரே பொருள் தெளிவு காணமுடிகிறது. எனவே, பு.ஏ.இன் நூல்களுக்குள் பரவிக் கிடக்கும் கருத்து மோதல்களை விளக்கித் தீர்வுகள் காணவும், இறையியல் கருத்து வளர்ச்சிப் படிவங்களை நிறுவவும் புலப்படாதப் பதங்களுக்கு விளக்கம் காணவும் வேண்டிய அதிமுக்கியப் பணியையும் விளக்கவுரையாளர்கள் செய்ய வேண்டியுள்ளது.

விளக்கவுரையாளர்கள் கையாளவேண்டிய சில கட்டாய விதிமுறைகள்

(i) யோவான் நற்செய்தி நூலின் ஒரு பகுதிக்கு விளக்கவுரை ஆயத்தம் செய்ய வேண்டியதாக வைத்துக் கொள்வோம். முதலாவது, நான்காவது நற்செய்தி நூலைத் தொடர்ச்சியாக வாசித்து, அப்பகுதி அதன் கருத்து வளர்ச்சியிலும், வரலாற்றிலும் எந்தக் கட்டத்தை வகிக்கிறது என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

(ii) பகுதியில் குறிப்பிட்டச் சூழலை நன்கு நிறுவ வேண்டும்.

(iii) பகுதியில் தரப்பட்டுள்ள இயேசுவின் வாழ்க்கை/பணி பற்றிய வரலாற்றுக் குறிப்புகள், சமநோக்கு நற்செய்தி நூல்கள் தரும் தகவலுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் காணப்படும் ஒற்றுமை-வேற்றுமைகள், பின்னணிய, சூழ்நிலைத் தகவல்கள் திரட்டப்பட வேண்டும்.

(iv) பகுதியில் காணப்படும் கருத்துக்கள், யோவான் நற்செய்தி நூலிலேயே வேறு இடங்களில் காணப்படுகின்றனவா? அப்படிக் காணப்பட்டால் இரு இடங்களிலும் கருத்து முற்றிலும் இசைந்து காணப்படுகிறதா? அல்லது வேறுபாடுகள் காணப்படுகின்றனவா? கருத்து இசைந்து காணப்பட்டால் ஒரே கருத்து இரண்டு அல்லது மூன்று இடங்களில் மீண்டும் மீண்டும் காணப்படுவது ஏன்? அல்லது வேறுபாடுகள் காணப்படுகின்றனவெனில் அவற்றிற்குக் காரணம் (பதிப்பு படிவங்கள், இடைச்செருகல்கள்) எதுவாயிருக்கக்கூடும்? இவைபோன்ற கேள்விகளை எழுப்பி விடைகாண விழைதல் வேண்டும்.

(v) ப.ஏ.எதிரொலிகள், மேற்கோள்கள் காணப்படுமாயின் அவற்றை ஆசிரியர் பயன்படுத்துவதில் தனிச்சிறப்பு ஏதேனும் காணப்படுகிறதா எனக் காண விழைக. (எ.கா. கழுதை, கழுதைக்குட்டி பற்றி செக். 9:9; யோ. 12:14இல் காணப்படுவதை மத். 21:4இல் காணப்படுவதோடு ஒப்பிடுக).

(vi) பகுதியில் காணப்படும் இறையியற் சொற்கள், சொற்றொடர்கள் (மெசியா, இறைமைந்தர், நீதித் தீர்ப்பு, மறுபடியும் பிறத்தல், அன்பு) ஆகியவற்றின் பொருள் விளக்கக் குறிப்புகள் திரட்டப்பட வேண்டும்.

இவ்வளவு தகவல்களையும் சேகரித்த பின்பே விளக்கவுரைனைத் தொகுத்துத் தரும் முயற்சியில் இறங்குதல் வேண்டும்

இனி சில மாதிரி விளக்கவுரைகளைப் பார்ப்போம்.

I. **ஒரு சமநோக்கு நற்செய்திப் பகுதி:** மத். 9:35-38.

(i) **சூழமைவு:** இப்பகுதி ஆண்டவரின் திருப்பணியைப் பற்றியதொரு சுருக்கமான விளக்கம். இத்தகைய விளக்கம் நற்செய்தி நூலின் துவக்கத்தில் இயேசு தம்முடையப் பணியைத் துவங்கியவுடன் ஒருமுறை காணப்படுகிறது (மத். 4:23-25). இத்தகைய சுருக்கமான விளக்கங்கள் மார்க்குவிலும் (1:39; 3:7-10), லூக்காவிலும் (6:17-19) கூடக் காணப்படுகின்றன. இதற்கு முக்கியக் காரணம் தொடக்க நாள்களில் ஆற்றப்பட்ட நற்செய்தி அருளுரைகள் இந்த அமைப்பினைக் கொண்டதாகக் காணப்பட்டன (திருத். 10:36-39) எனவே, நற்செய்தி நூலின் ஆசிரியர்கள் தங்களுடைய நற்செய்தி நூலிலும் முக்கியமான கட்டங்களில் இத்தகைய சுருக்கமான விளக்கங்களை அமைத்துள்ளனர். மத்தேயு நற்செய்தி நூலின் நம்முடைய பகுதி அந்நூலின் கருத்துவளர்ச்சியில் ஒரு முக்கியமான கட்டத்தைக் கோடிட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளது. இயேசு பன்னிருவரைப் பணிக்களத்துக்கு அனுப்பும் வரலாற்றுக்கு முன்னுரை போல அமைந்துள்ளது. காணாமற் போன ஆடுகளாகிய இஸ்ரயேலரிடையே (மத். 10:5) சீடர் அனுப்பப் பட்டார்கள். அவர்களது பணி, மேய்ப்பனில்லாத ஆடுகள் போலிருந்த மக்கள்பால் அக்கறை கொண்ட இயேசுவின் பணியின் தொடர்ச்சியே எனச் சுட்டும் வண்ணமாக இப்பகுதி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(ii) **பதவுரை:** இப்பகுதியில் சிறப்பான விளக்கம் பெறவேண்டிய கூறுகளாவன: (அ) இயேசுவின் குணமளிக்கும், பேய்களைத் துரத்தும் பணிக்கும் இறையரசின் நற்செய்திக்கும் இடையே ஆசிரியர்கண்ட தொடர்பு, (ஆ) மேய்ப்பனில்லாத ஆடுகள் என்ற ப.ஏ.உருவகத்தின் சிறப்பு, (இ) அறுப்பு மிகுதி என்ற ஆண்டவரின் கூற்றின் சிறப்பு.

(அ) குணமளிக்கும் பணியும் இறையரசின் நற்செய்தியும்: இயேசு பலருக்கு நோய்களிலிருந்தும், பிறவி ஊனங்களிலிருந்தும் குணமளித்தார் என்பதற்கு நற்செய்தி மரபுகளும், திருத்தூதுவர் நூல்களும் ஒன்றுசேரச் சான்று பகர்கின்றன. அவருடைய குணமாக்கும் பணியைப் பற்றிய செய்தி கேட்டு அவரிடம் திரண்டக் கூட்டத்திற்கு இறையரசு அண்மையிலிருக்கிறது எனும் நற்செய்தியை அவர் அறிவித்தார் என்பதும் மறுக்க முடியாதது. இத்தகைய தொடர்பு நற்செய்தி நூலின் ஆசிரியர்கள் சிந்தனையில் மட்டும் எழுந்ததன்று. அதுவே ஆண்டவரின் சிந்தனையாகவும்மிருந்தது என்பதை யோவானின் சீடருக்கு அவர் அளித்த பதிலிலிருந்து காணலாம் (மத். 11:2-5). அவர் பன்னிருவரை காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேலரிடம் அனுப்பும் போது, நோயுற்றோருக்குக் குணமளித்து இறையரசின் நற்செய்தியை அறிவிக்கும்படி கூறியதோடு (10:7,8) தாம் கடவுளுடைய ஆவியினாலே பேய்களை விரட்டுவதால் இறையரசு வந்துவிட்டதே எனக் கூறியதாகவும் காண்கிறோம் (12:28). எனவே, அவருடைய வல்லச் செயல்களுக்கும், இறையரசின் வருகைக்குமிடையே ஒரு நெருக்கமானத் தொடர்பு உண்டு என்பதை எவரும் மறுக்கவியலாது. ஆனால் அவரின் வல்லச் செயல்கள், அடையாளங்கள் மனுக்குலம் கடவுளின் அதிகாரத்தை மறுத்து, தீயோனின் ஆதிக்கத்துக்குட்பட்டதன் ஒரு வெளிப்படையான அடையாளமாக நோய்களும், மனம் பேதலித்த நிலையும் காணப்படுகிறது. எனவே, இந்நிலை யிலிருந்து யாவரும் காணக்கூடிய வகையில் மக்கள் நலம் பெறுவது, தீயோன் முறியடிக்கப்படுவதை உணர்த்தும் செயலாக விளங்குகிறது. தீயோனின் அதிகாரம் நமக்கு உடல் நோய்களைத் தோற்றுவிப்பதோடு நின்றுவிடுவதில்லை. மறைந்து கிடக்கும் ஆழமான பல படிநிலைகள் அந்த ஆதிக்கத்துக்கு உண்டு. இந்த ஆழமான பிடிகளிலிருந்து விடுவிக்கப்படுவதே உண்மையாக இறையாட்சிக்குட்படுவதாகும். அத்தகைய விடுதலை இயேசுவின் இறப்பு - உயிர்த்தெழுதலுக்குப் பின்பே நிகழும். ஆனால் அவருடைய குணமளிக்கும் பணியானது வெளிப்படையானதும் மறுக்க முடியாததுமான முன்அடையாள மாக அமைந்தது எனலாம்.

(ஆ) மேய்ப்பனில்லாத ஆடுகள் ... (வ. 36): இந்த உருவகம் எண். 27:17இலும், 1 அர. 22:17இலும் காணப்படுகின்றது. மேய்ப்பன் என்று குறிக்கப்படுபவர் எண். 27:17இல் யோசுவாவும், 1 அர. 22:17இல் ஆகாபுமாவர். மக்கள் தலைமையிழந்து அதன் விளைவாக அலைப்புண்டு திரிகிற பரிதாபமான ஒரு காட்சியை இப்பகுதிகள் நம்முன் வைக்கின்றன. இந்த நற்செய்தி நூலில் இந்த உருவகம் மிகவும் சிறப்பானதோர் இடத்தை வகிக்கிறது. இயேசு தம்மை ஒரு மேய்ப்பராகப் பாவித்துப் பேசினார் என்பது பல நற்செய்தி மரபுகளில் காணப்படுகிறது (மத். 18:12-14; லூக். 15:3-7; யோ. 10:11). இருப்பினும் மத்தேயு இந்தக் குறிப்பிட்ட உருவகத்துக்கு ஒரு தனிச்சிறப்புத் தருகிறார். அவர் இயேசுவை மீக்கா எதிர்நோக்கிய மேய்ப்பராகிய அரசராகக் காண விழைகிறார் (மீக். 5:4; மத். 2:6). இந்த அரசருடைய சிறப்புப்பணி சிறையிருப்பில் சிதறுண்டு கிடக்கும் இஸ்ரயேல் மக்களைக் கூட்டிச் சேர்ப்பதாகும் (மீக்.4:6,7). அப்படி அவர்கள் கூட்டிச் சேர்க்கப்படுகையில் எல்லா நாட்டவருக்குள்ளும் மெய்யான இறைப்பற்றும் அமைதியும் தோன்றும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது (4:1-4). பாபிலோன் சிறையிருப்பிலிருந்து மீட்கப்படுவதைக் குறித்து முதலாவது எழுதப் பட்ட இந்த இறைவாக்குரை, மெசியாவின் வருகையிலேயே முழுமையாக நிறைவேறும் என ஆண்டவரின் காலத்தில் மக்கள் எதிர்நோக்கியிருந்தனர். அவ்வாறே அவ்விறைவாக்குரை இயேசுவின் திருப்பணியிலும், தொடர்ந்து சீடர்கள் காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேலரைத் தேடிப் போன பணியிலும் அடையாளவிதமாக நிறைவேறி, பின்னர் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கப்பால் நடைபெற்று வருகிற எல்லா நாட்டவருக்கும் உரிய நற்செய்திப் பணியில் முழுமையாக நிறைவேறியதாக மத்தேயு புரிந்து கொள்கிறார்.

(இ) அறுப்பு மிகுதி ... (வ. 38): இதே கூற்று யோ. 4:35இலும் காணப்படுகிறது. இறுதிகாலச் சேகரிப்பையே இவ்வுருவகம் மீண்டும் வலியுறுத்துகின்றது (திருவெ. 14:15 காண்க). யோவானிலும் அது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதைக் காட்டும் ஒரு கூற்றாகவே அமைந்துள்ளது. சமாரியாின் மனந்திரும்புதல் குறிப்பாக இதை அடையாளப்படுத்துவதாக யோவான் காண்கிறார். மத்தேயுவும் யோவானும் வெவ்வேறு கட்டங்களில் இக்கூற்றை அமைத்திருப்பதால் இயேசு எந்தக் கட்டத்தில் இதைக் கூறினாரென்று அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. இருப்பினும், இரு நற்செய்தியாளர்களும் திருவெ. 14:15இல் காணப்படுகிற கருத்துக்கேற்ப இந்தக் கூற்றில் இறுதி நாள்கள் நெருங்கியிருப்பதையே ஆண்டவர் சுட்டுவதாகவே காண்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

(iii) **பொழிப்புரை:** இயேசுவின் திருப்பணியை இப்பகுதி சுருக்கமாக நினைவுறுத்துவதோடு, அவருடைய சீடருடைய பணி அவருடைய பணியின் தொடர்ச்சியே எனவும் அழகுற

எடுத்துக்காட்டுகின்றது. மேலும் இயேசுவை எதிர்பார்க்கப் பட்ட மேய்ப்பராகிய அரசராக வெகு அருமையாக வடித்து, திருச்சபையின் பணி, வாழ்க்கையில் அலைப்புண்டு, கைவிடப் பட்ட, புறக்கணிக்கப்பட்ட நிலையிலுள்ளோரைக் கூட்டிச் சேர்ப்பதே என்பதையும் நயத்துடன் இப்பகுதி சுட்டிக்காட்டுகிறது.

II. நான்காவது நற்செய்தி நூலில் ஒரு பகுதி:
யோ. 3:14-17.

(i) **சூழமைவு:** இரவில் இயேசுவிடம் வந்த நிக்கோதேமுவுடன் நடந்த உரையாடலின் ஒரு பகுதியாக இது காணப்படுகிறது. நிக்கோதேமுவுக்கு இயேசு மீட்பு பற்றி தந்த நேரிடை விளக்கம் போல இப்பகுதி காணப்பட்டாலும் இதில் ஆசிரியருடைய கருத்துக்களும் இழையோடி காணப்படுவது கவனிக்கத்தக்கது. எனவே, இப்பகுதியை இயேசுவின் நேரிடைக் கூற்றாக ஏற்காமல், நற்செய்தி நூலின் ஆசிரியரின் இறையியல் சிந்தனையின் வடிவமாக ஏற்பதே சரி.

(ii) **பதவுரை:** இப்பகுதியைப் புரிந்துகொள்ள நான்காவது நற்செய்தி நூலில் மனிதமகன் என்று இயேசுவுக்கு வழங்கப்பட்டுள்ள பட்டம் எப்பொருளுடன் பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்பதும், இந்நற்செய்தி நூலின் சிந்தனையில் **நிலைவாழ்வு** என்பதற்கு என்ன பொருள் தரப்பட்டுள்ளது என்பதும், உலகம், நீதித்தீர்ப்பு போன்ற சொற்களின் பொருட்செறிவு என்ன என்பதும் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

(அ) **மனிதமகன்:** இது இயேசு தமக்குத்தாமே வைத்துக் கொண்ட பெயர். நற்செய்தி நூல்கள் நான்கிலும் இயேசு இவ்வாறு தம்மைச் சுட்டிப் பேசினார் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. தொடக்கத் திருச்சபையின் சிந்தனையில் இப்பெயர் வழங்கப்பட்டதற்கான அறிகுறிகள் அதிகமில்லை. திருத். 7:56இன்படி ஸ்தேவான் இறக்கும் தறுவாயில் தாம் மனிதமகனை கடவுளின் வலதுபக்கத்தில் காண்பதாகச் சாட்சி பகருகிறார். திருவெ. 14:14இல் மனிதமகனைப் போன்ற ஒருவர் மேகங்களில் தோன்றி இறுதி அறுவடையை நிகழ்த்துவதாகக் காண்கிறோம். இவ்விரண்டு காட்சிகளும் இயேசு, மனிதமகன் உயர்த்தப் படுவார், மேகங்களில் வருவார் எனக் கூறியதை (மார். 14:62) நினைவூட்டுவதாக அமைந்துள்ளன. ஆனால், யோவான் நற்செய்தி நூலின் சிந்தனையில் மனிதமகன் உயர்த்தப்படுவார் என்ற தொடர் முற்றிலும் மறுவிளக்கம் பெறுகிறது.

இப்பகுதியில் மனிதமகன் உயர்த்தப்படுவது, மோசே பாம்பைப் பாலைநிலத்தில் உயர்த்தியதற்கு (எண். 21:9) ஒப்பிடப்பட்டுள்ளது. அவர் உயிர்த்தெழுந்து விண்ணுக்குயர்ந்த மாட்சிமை நிலையை நினைப்பூட்டாமல் அவர் சிலுவையில் உயர்த்தப்பட்டதையே இது நினைப்பூட்டுகிறது. 8:28இல் இது இன்னமும் தெளிவாகக் காணப்படுகிறது. நீங்கள் மனிதமகனை உயர்த்தும்போது நானே அவரென்றும் ... அறிவீர்கள். இங்கே இயேசு தம்மை ஏற்றுக் கொள்ளாத யூதரிடையே பேசின காட்சியை ஆசிரியர் நம் முன் வைக்கிறார். எனவே, அவர் சிலுவையில் தூக்கப்படும் நிகழ்ச்சியே அவரை இன்னாரென அடையாளம் காட்டும் நிகழ்ச்சியென ஆசிரியர் புரிந்து கொள்கிறார். சமநோக்கு நற்செய்தி நூல்களின் ஆசிரியர்கள் இயேசு விண்ணுக்குயர்ந்த மாட்சிமையையும், அவருடைய இரண்டாம் வருகையின் மாட்சிமையையும் வலியுறுத்துகின்றனர். ஆனால் இந்த நற்செய்தி நூலின் ஆசிரியர் சிலுவையில் உயர்த்தப்படுதலே மனிதமகனின் மாட்சிமையை வெளிப்படுத்தும் செயலாகக் காண்கிறார். அதற்குக் காரணம், இயேசு சிலுவையில் உயர்த்தப்படுவதே மீட்புச் செயல் என்பதாகும் (12:34). அப்படி அவர் உயர்த்தப்படுவதாலேயே அவர் விண்ணுலகையும், மண்ணுலகையும் இணைக்கும் ஏணியாக அமைகிறார் (1:51) என்பது ஆசிரியருடைய சிந்தனை. ஏனெனில், அவர் விண்ணிலிருந்து இறங்கிவந்து, இம்மண்ணுலகினரால் சிலுவையின் வழியாக விண்ணுலகுக்கு உயர்த்தப்பட்டவர் (3:13). மோசே நச்சுப் பாம்பின் உருவத்தை உயர்த்தி மீட்புக்கு வழிவகுத்தது போல மனுக்குலத்தின் நச்சுத்தன்மையே, மனிதமகனை சிலுவையில் உயர்த்தி அந்த இழிச்செயலாலேயே நமக்கு மீட்பினையும் தேடிக்கொள்ளுகிற ஒரு விந்தையை இக்காட்சி நம் முன் வைக்கிறது.

(ஆ) **நிலைவாழ்வு:** நிலைவாழ்வு என்றால் முடிவில்லா வாழ்வு மட்டுமன்று, நிலையான கடவுளின் தன்மை விளங்கும் வாழ்வும்கூட என்பதே இந்த ஆசிரியரது கருத்து. ஒளியைப் பார்க்கிலும் இருளையும், நன்மை செய்வதைப் பார்க்கிலும் தீமையையும் நாடுகின்ற மனுக்குலம், உயர்த்தப்பட்ட (அதாவது தீயோரால் சிலுவையில் உயர்த்தப்பட்ட) மனிதமகன்மேல் நம்பிக்கை வைக்கும்போது அவரை சிலுவைக்குயர்த்திய உலகின் அவலத்தினின்று தன்னை விடுவித்துக் கொண்டு, கடவுளுக்குள் நற்செயல்களை நிறைவேற்றக்கூடிய புதிய நிலைக்கு (3:17-21) வருதலே நிலைவாழ்வு என உணர்த்துகிறார்.

(இ) **உலகம்:** வேறு எந்த பு.ஏ. நூலைப் பார்க்கிலும், நான்காவது ந.செ.நூல் இச்சொல்லை அதிகமாகக் கையாளுகின்றது. யோ. 11:5ஐத் தவிர ஏனைய இடங்களில் இச்சொல் உலக மக்களையும் அவர்தம் போங்குகளையும் குறிக்கின்ற சொல்லாகப் பயன்படுகின்றது. உலகமக்களைக் குறிப்பிடுகையில் அவர்கள் கடவுளின் அன்புக்குரியவர்கள் (3:16), அவர்கள் நீதித்தீர்ப்புக்கன்று, மீட்புக்கென்று தேர்ந்துக் கொள்ளப் பட்டவர்கள் (3:17) என்ற கருத்து பல இடங்களில் உணர்த்தப் படுகின்றது (4:42; 6:33; 12:47). இருப்பினும் 9:39இல் இயேசு **இந்த உலகம்** நியாயம் தீர்க்கப்பட வந்தார் எனவும், அவர் அனுப்பும் ஆவியை உலகம் பெற்றுக்கொள்ள இயலாது என்றும் (14:17), அந்த ஆவி (16:8) உலகத்தைக் கண்டித்துணர்த்துவார் எனவும், இயேசு உலகத்துக்காக வேண்டிட மறுத்து, சீடர்களுக்காகவும் திருச்சபைக்காகவும் மட்டுமே வேண்டினார் (17:9) எனவும் முரண்பட்ட கருத்துக்களைக் கொண்ட வாசகங்களையும் இதே ந.செ.நூலில் காண்கிறோம். இந்த முரண்பாட்டுக்குத் தீர்வாக யோவானில் ஒரு குறிப்பும் காணப்படுகின்றது. தீர்ப்புக்குரிய, கண்டனத்துக்குரிய கடவுளையும் அவரது மகனையும் புறக்கணிக்கின்ற போங்கை வைத்து **இந்த உலகம்** என சில இடங்களில் சுட்டப்படுவது கவனத்துக்குரியது (9:39; 14:30; 16:11; 18:36). ஆனால் உலகத்தின் இறைமறுப்புப் போங்கும், தீமையை விரும்பும் போங்கும், தீயவனுக்கு அடிபணியும் போங்கும் எல்லா இடங்களிலும் ஒரேவிதமாக இந்த உலகம் என்று சுட்டப்படவில்லை என்பதனால் காணப்படும் இருநிலைக் கருத்தினின்று முழுமையான விடுதலை இல்லை. இருப்பினும், இந்த ந.செ.நூல் பல பதிப்புக்களாக வெளிவந்தது என்னும் ஆய்வுக் கருத்தினடிப்படையில் நாம் ஒரு தீர்வு காண வழியிருக்கிறது. நூலின் ஆசிரியர் ஒருவேளை உலகம் என்று குறிப்பிடுகையில் கடவுளின் மீட்புக்கென்று ஏற்படுத்தப்பட்ட நிலையினையும், இந்த உலகம் என்று குறிப்பிடுகையில் அதன் தீயப் போங்கினையும் உணர்த்த முற்பட்டிருக்கலாம். பின்னால் வந்த பதிப்பாசிரியர்கள் இந்த வேறுபாட்டைப் புரிந்து கொள்ளாததனால் உலகத்தையே தீர்ப்புக்குரியதாகவும், மீட்புக்குரியதாகவும் ஒருங்கே வடித்துக் குழப்பத்தை உருவாக்கியிருக்க வாய்ப்புண்டு. எனவே, நாம் இப்பொழுது யோவான் நூலை வாசிக்கும்போது உலகின் தீயப்போங்குகளை

சுட்டும் பகுதிகள், அதற்காக இயேசு மன்றாட மறுத்ததாகக் கூறும் பகுதிகள் போன்றவற்றை இந்த உலகம் என்றும் ஏனைய இடங்களில் சுட்டு எதுவுமில்லாமல் வருவதை உலகம் என்றும் வாசித்துப் பழகினால் ஆசிரியரின் கருத்துத் தெளிவாக ஒளிருவதைக் காணலாம்.

(ஈ) **நீதித்தீர்ப்பு:** கடவுள் உலகத்தைத் (அதாவது மனுக்குலத்தை) தீர்ப்புக்குட்படுத்தி அழிப்பவர் அல்லர். அவர் அதன்மேல் பேரன்பு கொண்டிருக்கிறார், அதன் மீட்புக்காகத் தம்முடைய ஒரே மைந்தனைக் கொடுத்திருக்கிறார், அவர்மேல் பற்று வைப்போர் ஏற்கெனவே நிலைவாழ்வுப் பேற்றினை அடைந்து விட்டனர், அவரைப் புறக்கணிப்போர் ஏற்கெனவே தங்களுக்குத் தாங்களே தீர்ப்பு வழங்கிக் கொண்டு விட்டனர் என்பதே நீதித்தீர்ப்பு குறித்த யோவான் நூலின் இறையியல் என சுருங்கக் கூறலாம். ஆயினும் இந்த உலகம் கடவுளை ஏற்க மறுக்கும்நிலை கேட்டுக்குரியது என உணர்த்துவதைத் தூயஆவியர் செய்வார் என்றும் கூறப்பட்டுள்ளது (16:8). மேலும், இவ்வுலகத்தை ஆட்டிப் படைத்துத் தனதாக்கிக் கொண்ட இவ்வுலகத்தின் ஆளுநனாகிய தீயோனுக்கு ஆக்கினைத்தீர்ப்பு உண்டு எனவும் இந்நூல் வலியுறுத்துகின்றது.

(iii) **பொழிப்புரை:** மனிதமகன் விண்ணுலகிலிருந்து கீழிறங்கி வந்து மண்ணுலகின் பிரதிநிதியாகச் சிலுவையில் உயர்த்தப்படுகிறார். அவரை ஏற்காத உலகம் இத்தீயச் செயலைச் செய்கின்றது. ஆனால் அத்தீயச் செயலே மீட்பின் வழியாகவும் இறைவனின் விந்தையான அன்புச் செயலாகவும் மாறிப் போகிறது. அவரைச் சிலுவையில் அறைவித்த மக்கள் அவர்களுடைய அவலச் செயலை உணரும் போது மனிதமகனை இன்னாரென்று இனம் கண்டு அவர்மேல் நம்பிக்கை வைக்கிறார்கள். இந்த நம்பிக்கையே, தீமையை விரும்பும் இயல்பான அவர்களுடைய நாட்டத்திலிருந்து அவர்களை விடுவித்து கடவுளின் செயல்களை விரும்பிச் செய்யும் நிலைவாழ்வுக்கு உட்படுத்துகின்றது. இதுவே இப்பகுதியின் திரண்ட கருத்து எனலாம்.

இத்தகைய விதிமுறைகளைக் கொண்டு நாம் விவிலியப் பகுதிகளை விளக்கும்போது அதன் ஆழ்ந்த செய்தி வெளிவந்து நம்மையும் பிறரையும் மறுவுருவாக்கும் ஆற்றலுடன் விளங்கும். இலலையேல் விவிலியம் மழுங்கிப்போன வாளாகக் காணப்படும்.

7. முடிவுரை

இன்று விவிலிய விளக்கம் செய்யும்போது மனத்திற் கொள்ளவேண்டிய சில முக்கியமான உண்மைகளை இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளோம். தவறான இறையியல் முன்னேற்புகள், மரபுவழிவரும் சிந்தனைகள், வழக்கவழுவல்கள் முதலியவை விவிலியச் செய்தியைச் சரியாக அறிந்து கொள்ள முடியாமைக்குத் தடைகளாக இருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளோம். காலம், இடம், கலாசாரம், மொழி முதலிய வற்றால் விவிலிய ஆசிரியர்கள் எந்த அளவுக்குக் கட்டுப் பட்டிருந்தார்கள் என்பதையும், அதே நேரத்தில் செய்தியைச் சீரமைக்கும் நோக்கில் சில கடப்பு நிலைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதையும் குறிப்பிட்டுள்ளோம். இயேசு பெருமான் தம் மறைநூலை எவ்வாறு அணுகினார் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுக்கள் தந்துள்ளோம். இறுதியாக, விவிலிய விளக்கத்திற்கு விவிலிய விளக்கவுரை, விவிலிய அகராதி, நற்செய்திநூல்களின் ஒற்றுமைத் திரட்டு, ஒத்துவாக்கிய அகராதி ஆகியவற்றின் பயனையும், அவற்றைப் பயன்படுத்தும்போது எழுத்தாளர்களின் தனிப்பட்ட இறையியல் நிலைப்பாடுகளின் தாக்கத்தைப் பற்றிய கவனத்தையும் எடுத்துக்காட்டியுள்ளோம்.

இக்கட்டுரையில் வரும் குறிப்புக்களை இன்னும் விரிவாக விளக்கலாம். வாசகர் இது தொடர்பான நூல்களைப் படித்தல் நலம். இந்த நூலிலேயே சில கட்டுரைகள் இக்குறிப்புகளில் சிலவற்றை விளக்குகின்றன. குறிப்பாக, 2,3,4 கட்டுரைகள் முறையே விவிலிய ஒருமைப்பாடு, அதிகாரம், விவிலியத்தைப் படிக்கும் முறை ஆகியவற்றை விளக்குகின்றன. 11ஆம் கட்டுரை வரலாற்றில் விவிலிய விளக்கம் எந்தெந்த அடிப்படைகளில் செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகளுடன் விவரிக்கின்றது. பு.ஏ.இன் இறையியலைச் சுருக்கித் தரும் 27ஆம் கட்டுரையின் முதல் பகுதிகள் பு.ஏ.இன் ஒருங்கிணைந்த செய்தியை அறிவதில் இருக்கும் சில சிக்கல்களைத் தெளிவுபடுத்துகின்றன. சிறப்பாக இயேசு மறைநூலை எவ்வாறு அணுகினார் என்பது விளக்கமாகவும், தெளிவாகவும் விவாதிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, கூடுதலாக வாசிப்பதற்கு சில நூல்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

விவிலிய விளக்கம் எனும்போது சில பொதுவான அணுகுமுறைகளையே இக்கட்டுரையில் பார்த்துள்ளோம். இவைதவிர, ஒரு குறிப்பிட்ட விவிலியப் பகுதியை விளக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய விளக்கவுரை முறைகள் உள்ளன. அவற்றில் (i) பகுதி, (ii) இணைப்பகுதி(கள்), (iii) சொற்பொருள், (iv) சூழல், (v) இறையியல் செம்பொருள் அல்லது மையச் செய்தி, (vi) இன்றைய பொருத்தம் ஆகிய உண்மைகள் அடங்கும். இந்த அடிப்படையில் வாசகர் விளக்கவுரைப் பயிற்சிகளைச் செய்து பார்த்தல் வேண்டும்.

மொத்தத்தில், நமது பார்வை தெளிவாக இருந்தால், நம் கண்ணாடி பழுதற்றிருந்தால், விவிலியத்தின் செய்தியும் பளிச்சென்று நம் மனத்திரையில் விழும். நம் மரபுகளையும், விருப்பு-வெறுப்புகளையும் விவிலியப் பகுதிகள் மேல் திணித்தால் கட்டவிழ்க்கப்படாத படகை ஒட்டுவதுபோல் சுற்றிக் கொண்டேயிருப்போம். எ.கா. உலகில் நடப்பவையெல்லாம் கடவுளின் முன் விதிப்படித்தான் நடக்கிறது, அதில் நம்முடைய பொறுப்பே இல்லை என்ற நிலைப்பாட்டையுடைய ஒருவர் அதை ஆதரிப்பதைப் போன்ற சில வசனங்களைத் திரும்பத் திரும்ப அடுக்குவாரே தவிர மாற்றிச் சிந்திக்க முன்வரமாட்டார். செல்வம், வெற்றி, பதவி உயர்வு, ஆண் மக்கட்பேறு முதலியவை தான் இறையாசியின் அடையாளங்கள் என்று எண்ணுவோரும் அப்படித்தான். ஆனால், மானிடர் கடவுளுடன் இணைந்து ஒரு புதிய உலகத்தை உருவாக்க வேண்டும், இயேசு இதற்கு அதிஉயர் எடுத்துக்காட்டாமிருக்கிறார். நீதி - சமத்துவம் - இரக்கம் - அன்பு முதலியவைதான் இயேசு காட்டும் புதிய மானிடத்தின் பண்புகள். இயேசுவில் வெளிப்பட்ட கடவுளின் ஆற்றல் ஆட்டிப்படைக்கும் மேலாதிக்கமாக அன்று, அடிமை போன்று பணிசெய்யும் தாழ்மையில் வெளிப்படுகிறது முதலிய அடிப்படைகளில் விவிலியத்தைப் படிப்போர் தங்கள் ஆன்மிகப் பயணத்தில் முன்னேறுவர்; விவிலிய ஆழங்களை உணர்ந்து உள்ளம் கொழுந்துவிட்டு எரியும் அனுபவத்தைப் பெறுவர்; காப்பாற்றப்பட்டாலும் கைவிடப்பட்டாலும் இயேசுவைப் பின்பற்றுவதையே தனிப் பெருங்குறிக்கோளாகக் கொள்வர்.

பொருத்தமான சில நூல்கள், கட்டுரைகள்

1. Amirtham,S. and Israel Selvanayagam,*திருமறைக்குத் திரும்புவோம்,* Madurai: TTS (all the series).
2. Carr,D., *Gospel Through Dissent,* Madurai : TTS, 1985.
3. Carr,D., *Sword of the Spirit - An Activist's Understanding of the Bible,* Geneva: WCC, 1992.
4. Carr,D., and M. Gnanavaram, *திருமறை விளக்கம்,* **இறையியல் மலர்**, 1/15, *ஜனுவரி - மார்ச்* 1984, *பக்.* 21-29.
5. Clevenof,M., *Materialist Approaches to the Bible,* New York: Orbis, 1985.
6. Collison,J.G.F., *Issues in the History of Biblical Hermeneutics - A Protestant Perspective,* **Indian Journal of Theology,** Vol. 31, 1982, pp. 213ff.
7. David, Immanuel, *கிறிஸ்தவ வாழ்வில் திருமறை,* Madurai: TTS, 1986.
8. Frostin,P., *The Hermeneutics of the Poor: The Epistemological Break inThird World Theologies,* **Studia Theologia,** Vol.39, 1985, pp.127-150.
9. Gnanavaram,M., *Dalit Theology and the Parable of the Good Samaritan,* **Journal for the Study of the New Testament,** Vol.50, 1993, pp.59-83.
10. Gottwald,N.K.(ed.), *The Bible and Liberation: Political and Social Hermeneutics,* New York: Orbis Books, 1984.
11. Leer,E.F., *The Bible - Its Authority and Interpretation in the Ecumenical Movement,* Geneva: WCC, 1983.
12. Rowland,C., *The Theology of Liberation and its Gift to Exegesis,* **Blackfriars,** Vol.65, 1984, pp.157ff.
13. Rowland,C., and Mark Corner, *Liberating Exegesis - The Challenge of Liberation Theology Biblical Studies,* London: SPCK, 1990.
14. Schottroff and W. Stegemann, *God of the Lowly: Socio - Historical Interpretation of the Bible,* New York: Orbis, 1984.
15. Sugirtharajah,R.S. (ed.), *Voices from the Margin - Interpreting the Bible in the Third World,* London: SPCK, 1991.
16. Thisulton, *New Horizon in Hermeneutics,* London: Harper & Collins, 1992.
17. Watson,F., (ed.), *The Open Text - New Directions for Biblical Studies,* London: SCM, 1993.
18. Weber,H.R., *Experiments with Bible Study,* Geneva: WCC, 1983.

30

விவிலிய ஆய்வுகள்: ஒரு வரலாற்றுப் பார்வை

இஸ்ரயேல் செல்வநாயகம்

1. முன்னுரை

மறைவாக்கியம் ஒவ்வொன்றும் இறைஏவுதலால் அருளப்பட்டுள்ளது, இறைமனிதர் முழுமையடைந்து எந்த நற்செயலும் செய்வதற்கேற்ப. அது போதிப்பதற்கும், கண்டிப்பதற்கும், சீர்திருத்தம் செய்வதற்கும், நீதியைக் கற்றுக் கொடுப்பதற்கும் பயனுடையது (2தீமோ. 3:16,17). இங்கு மறைவாக்கியம் என்று வருவது முழுவிவிலியத்தையும் குறிக்காமல் ப.ஏ.ஐ மட்டுமே அல்லது அதன் சில பகுதிகளையே குறிக்கின்றது. ஏனெனில் இப்பகுதி எழுதப்பட்டபோது நாம் இப்போது வைத்திருக்கும் முழு விவிலியம் இன்னும் உருப்பெறவில்லை. எனினும் மறைநூலைப்பற்றிய ஆக்கமிகு அணுகுமுறைக்கு இவ்வசனங்கள் நல்ல உந்துதல்களைத் தருகின்றன. மறைவாக்கியத்தை இறைவாக்காக ஏற்பதில் நாம் கொள்ளவேண்டிய கவனத்தையும் அதன் நோக்கத்தையும் அதைச் செயல்படுத்துவதற்குத் தேவையானத் தேர்ச்சியையும் இவை சுட்டுகின்றன.

கவனம், தேர்ச்சி முதலியவைகளைப் பற்றிக் கவலைப்படாமல் விவிலிய வசனங்களைப் பலர் வாயில் வந்தபடியெல்லாம் விளக்குகிறார்கள். பவுல் எழுதியவைகளில் அறிந்து கொள்வதற்கு அரிதானவை உள்ளன என்று பேதுரு கூறுவதைக் கவனிக்கவேண்டும். கல்வியறிவற்றவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற மறைவாக்கியங்களைப் புரட்டுவதுபோல் தங்களுக்கு அழிவு ஏற்படும்படி இவைகளையும் புரட்டுகிறார்கள் என்று பேதுரு தொடர்ந்து எழுதுகிறார் (2 பேது. 3:16). மறைவாக்கியங்களை முறையாகப் புரிந்துகொள்ளக் கல்வியறிவும், உறுதியும் எத்துணை தேவை என்பதை இதிலிருந்து புரிந்து கொள்கிறோம்.

விவிலியத்தை எழுத்தெழுத்தாக எடுத்துக் கொள்வோர், வியாபார உணர்வுடன் அதைக் கையாளுவோர், தங்கள் கோட்பாடுகளுக்கேற்ப அதை விளக்குவோர் என்று பல்வேறு வகையினர் இருக்கின்றனர். அதே நேரத்தில் விவிலியச் செய்தியின் தன்மையையும் சூழலையும் வரையறுக்க சில அறிஞர்கள் முயன்றுள்ளனர். அவர்களில் சிலரை இந்நூலின் பிற கட்டுரைகள் ஆங்காங்கு குறிப்பிடுகின்றன. வரலாற்றுப் பார்வையில் அவர்கள் செய்த ஆய்வை மிகச் சுருக்கமாகக் குறிப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

2. தொடக்கக் கால ஆய்வுகள்

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மார்சியோன் என்கின்ற திரிபுக்கொள்கையாளர் ப.ஏ.ஐயும், பு.ஏ. நூல்களையும் ஊன்றிப் படித்தார். ப.ஏ.ஐயும் யூத மரபையும் இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்ட இறைவனுக்கு ஒவ்வாதவையாகக் கருதி அவற்றை ஒதுக்கித் தள்ளினார்; பு.ஏ. நூல்களிலும் தாம் விரும்பியவற்றையும் தம் கொள்கைக்கேற்றவற்றையும் மட்டும் தெரிந்து கொண்டார். அதே நூற்றாண்டில் வாழ்ந்த டேசியன் என்பவர் நான்கு நற்செய்தி நூல்களையும் ஒன்றாகச் சேர்த்து அவற்றின் தகவல்களை வரிசைப்படுத்தினார்: ஆரிகன் என்கின்ற திருச்சபைத் தந்தையார் (ஏறத்தாழ 185-254) ப.ஏ.ஐ 6 பத்திகளாக வரிசைப்படுத்தி எபிரேயத்திலும், கிரேக்கத்தில் ஒலிபெயர்ப்பும், மொழிபெயர்ப்பும் செய்து எழுதினார். அத்துடன் அவர் ப.ஏ. இன் நிகழ்ச்சிகளுக்கு ஆவிக்குரிய விளக்கம் கொடுத்து அதனைக் கிறிஸ்தவ நம்பிக்கைக்குப் பொருத்தமுடையதாக்கினார்.

இசுபியஸ் (ஏறத்தாழ 260 - 340) என்னும் முதல் திருச்சபை வரலாற்றாசிரியர் பு.ஏ.ஐப் பற்றிப் பயனுள்ளப் பல தகவல்களைக் கொடுத்தார். அத்துடன் அவர் நற்செய்தி நூல்களைச் சிறு பகுதிகளாகப் பிரித்து இணைப் பகுதிகளை அட்டவணை மூலம் எடுத்துக் காட்டினார். அகஸ்டின் (354 - 430) என்னும் இறையியலார் சமநோக்கு நற்செய்தி நூல்களிடையே உள்ள வேறுபாடுகளைப் புரிந்துகொள்ள சில விதிமுறைகளை வகுத்தார். விவரிப்புகளை வரலாற்று வரிசையாகவோ, எழுத்தெழுத்தாகவோ பார்க்காமல் அவை நினைவினின்று எழுதப்பட்டவை என்ற முடிவோடு ஒட்டுமொத்தக் கருத்தையே பார்க்கவேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

3. பதினெட்டாம் நூற்றாண்டு வரை

இடைக்காலத்தில் விவிலியத்தைப் பற்றிய புரிந்து கொள்ளுதலும் விளக்கமும் வளர்ந்தபோதிலும் மூலபாடங்களைத் திறனாய்வு செய்யும் முயற்சிகள் எழவில்லை. சீர்திருத்தக் காலகட்டத்தில் (16 ஆம் நூற்றாண்டு) விவிலிய மொழிபெயர்ப்புக்கும், செய்திக்கும் கொடுக்கப்பட்டது போன்ற முக்கியத்துவம் திறனாய்வு முறைக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் ஒருவருடைய முயற்சி குறிப்பிடத்தக்கது. ஒசியாண்டர் (A. Osiander, 1498 - 1552) என்னும் தொடக்கக்கால

லுத்தரன்முறை சீரமைப்பாளர் 1537 இல் நற்செய்தி நூல்களின் ஒருங்கிணைப்பை வெளியிட்டார். விவரிப்பின் வரிசைமில் வரும் வேறுபாடுகளை அவர் வெவ்வேறு நிகழ்ச்சிகள் என்று வரையறுத்தார். இவருடைய முறை சீர்திருத்தச் சபைகளில் நெடுங்காலம் பின்பற்றப்பட்டது.

அறிவு மறுமலர்ச்சியின் ஒரு விளைவு இறைவெளிப்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மனித அறிவுக்கும், இயற்கையான இயல்புணர்வுகளுக்கும். ஆய்வுமுறைக்கும் முக்கியத்துவம் கொடுத்ததாகும். இந்தப் போங்கு விவிலியத்தையும் அறிவார்ந்து, வரலாற்று நோக்கில் அணுகுவதற்கு வழிநடத்தியது. சைமன் (R. Simon, 1638 - 1712) என்னும் பிரான்ஸ் நாட்டுக் கத்தோலிக்கப் போதகர் முதன் முதலாக பு.ஏ.ஐ இம்முறையில் அணுகினார். **பு.ஏ.இன் வரலாற்றுத் திறனாய்வு** என்ற தலைப்பில் அவர் மூன்று தொகுதிகளை வெளியிட்டார். யூதசமய இலக்கியங்களையும், திருச்சபைத் தந்தையரின் எழுத்துக்களையும், விவிலிய நூல்களையும் அவர் ஆழ்ந்து கற்றிருந்தார். தம் முதல் தொகுதியில் விவிலிய நூல்களின் ஆசிரியர்களைப் பற்றி அவர் எழுதினார். ஐஞ்சுருள் நூல்கள் அனைத்துக்கும் மோசே மட்டும் ஆசிரியராயிருக்க முடியாது என்ற முடிவை அதில் அவர் வெளியிட்டிருந்தார். இரண்டாம், மூன்றாம் தொகுதிகளில் முக்கியமான விவிலிய மொழி பெயர்ப்புகளின் வரலாற்றையும் மூலபாட ஆய்வுக்கும் சரியான மொழிபெயர்ப்புக்குமுரிய விதிமுறைகளையும் அவர் குறிப்பிட்டார். விவிலியத்தை வரலாற்றில் எழுந்த ஓர் இலக்கியமாக மட்டும் பார்க்க வேண்டுமென்று கூறிய சில சிந்தனையாளர்களின் பாதிப்பை சைமனின் அணுகுமுறையில் காணமுடிகிறது. அவருடைய தொகுதிகள் ஆங்கிலத்திலும், ஜெர்மன் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டதுடன் சிலர் அவரின் அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு தங்கள் சிந்தனையைச் செலுத்திக் கூடுதல் ஆய்வு நூல்களை வெளியிட்டனர்.

மூலபாட ஆய்வை இன்னும் மும்முரமாக்கும் முயற்சியில் 17ஆம் நூற்றாண்டிலும் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியிலும் சிலர் இறங்கினர். எ.கா. பிரான்ஸ் நாட்டில் மோரினஸ் என்பவர் குறியிடப்பட்ட எபிரேயப் பாடத்தைவிட ப.ஏ.இன் கிரேக்க மொழிபெயர்ப்பான செப்துவஜிந்து மூலத்திற்கு நெருங்கிவருவதாகக் கூறினார். கேப்பெல்லஸ் என்பவர் எபிரேயப் பாடம் முழுமையற்ற நிலையில் தொகுக்கப் பட்டிருந்ததை எடுத்துக்காட்டினார். ஏறத்தாழ இவர்களின் காலத்தில் கால்வின் பிரிவைச் சேர்ந்த க்ரோட்டியஸ் (H. Grotius, 1583 - 1645) என்பவர் கோட்பாடுகளை விடுத்து, இலக்கண, வரலாற்று அடிப்படையில் விவிலியப் பகுதிகளுக்கு விளக்கவுரை எழுதினார். கென்னிகாட் என்னும் ஆங்கிலேயர் கிரேக்கப்பாடத்தைவிட எபிரேயப்பாடமே மூலத்திற்கு உண்மையானது என்று நிறுவ முயன்றார். வேறு சில அறிஞர்கள் எபிரேய மொழியை தனிச்சிறப்பு மிக்க ஒரு செமித்திய மொழியாகக் காட்டி இலக்கிய ஆய்வுகள் செய்தனர். இவர்களின் ஆய்வுகள் மூலபாடங்களைப் பற்றியப் பல்வேறு உண்மைகளை எடுத்துக்காட்டியபோதும் மிகப் பழமையான, உண்மையான பாடம் எது என்பதைத் திட்டப்படுத்த முடியவில்லை.

பதினெட்டாம் நூற்றாண்டில் நடந்த ஆய்வுகள்

ஜெர்மனியில் கோத்திங்கன் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்த மைக்கேலிஸ் (J.D. Michaelis, 1717 - 1791) என்பவர் செய்த விவிலிய ஆய்வின் விளைவாக அவர் வைதீக இறையியலை ஏற்கும் நிலைக்கு வந்தார். மொழியியல், நிலவியல், அகழ்வியல் முதலிய துறைகளில் ஆய்வு செய்து அதன் துணையுடன் விவிலியப் பகுதிகளுக்கு அவர் விளக்கவுரை கண்டார். இந்த ஆய்வின் ஒளியில் ஒரு சரியான விவிலிய மொழிபெயர்ப்பு செய்ய முயன்று, 13 தொகுதிகளாக 1786 இல் அதை முடித்தார். ஜே. ஆஸ்ட்ருஸ் என்பவர் 1753 இல் வெளியிட்டத் தம் நூலில் கடவுளின் பெயர்கள் தொடக்க நூலில் இருவிதமாக (எலோகீம், யாவே) எழுதப்பட்டிருப்பதைச் சுட்டி இரு எழுத்தேடுகளின் பிணைப்பு அதில் இருக்கிறது என்ற ஊகத்தை வெளியிட்டார். மைக்கேலிஸின் சமகாலத் தவரான செம்லர் (J.S. Semler, 1721 - 1791) என்பவர் தொடக்கத் திருச்சபையில் வரையறுக்கப்பட்ட நூல்பட்டியல் (கனோன்) இருக்கவில்லை என்று நிறுவினார். விவிலியத்தில் இறை வார்த்தைகளும் உள்ளன, மானிட இலக்கியங்களும் உள்ளன என்று அவர் பிரித்துக் காட்டினார். இறை வார்த்தைகள் என்றென்றும் மாறாத உண்மைகள், மனித எழுத்துக்கள் தவறுக்குட்பட்டவை. அத்துடன் கருத்தளவில் ப.ஏ.க்கும் பு.ஏ.க்கும் வேறுபாடு உள்ளது என்றும் அவர் கருதினார்.

ரெய்மாருஸ் (H.S. Reimarus, 1674 - 1768) என்பவர் பு.ஏ. ஆய்வில் முக்கியமானவர். அவர் காலத்துக்குப் பின் இயேசுவின், அவர் சீடர்களின் நோக்கு பற்றி அவர் எழுதிய நூலிலிருந்து சில பகுதிகள் 1778இல் தொகுத்து வெளியிடப்பட்டன. இவற்றில் ரெய்மாருஸ் வரலாற்று இயேசுவுக்கும், பற்றுமையின் கிறிஸ்து வுக்கும் வேறுபாடு கண்டிருந்தது தெளிவாயிற்று. அவர் கருத்துப்படி, வரலாற்று இயேசு மெசிய அரசை இவ்வுலகில் நிலைநாட்ட முயன்று தோல்வியுற்ற ஒரு யூதப்புரட்சியாளர். அவரது இறப்புக்குப் பின் சீடர்கள் அவரின் உடலைக் களவாடி, உயிர்த்தெழுதல், இரண்டாம் வருகை முதலியவற்றைப் புனைந்து அவரை கிறிஸ்துவாக அறிவித்தனர். அறிவார்ந்தச் சிந்தனையால் இயல்கடந்த ஆற்றலுக்கு ரெய்மாருஸ் இடமளிக்கவில்லை. எனினும் வரலாற்று இயேசுவை அறிந்திட அவர் செய்த ஆய்வு இன்றும் புயனுடையதாகக் கருதப்படுகிறது.

அறிவார்ந்தச் சிந்தனைகள் கொடிகட்டிப் பறந்த காலக்கட்டத்தில் ஹமான் (J.G. Hamann, 1730 - 1788) என்ற ஜெர்மானியர் அதனை எதிர்த்து உணர்ச்சி, உள்ளுணர்வின் காட்சி முதலியவற்றை அறிதலின் அடிப்படைகளாக விளக்கினார். விவிலியத்தின் பொருளுக்கு அடிப்படையாக அவர் மானிட ஊடகம் வழியாக கடவுள் தம்மை வெளிப்படுத்தினார் என்றும் மனிதமகனின் மன்னுருவேற்பில் விவிலிய வெளிப்பாடு உச்சநிலை அடைந்தது என்றும் கருதினார். ஜெர்மானிய இலக்கியத்தைப் பாதித்தவராயினும், அக்கால மானிடநலச் சிந்தனைகளை ஏற்றவராயினும், அவற்றை வைதீகப் பற்றுறுதியுடன் இணைத்ததில் ஹமான் தன்னிகரற்று விளங்கினார்.

18ஆம் நூற்றாண்டின் இறுதியில் சில விவிலிய அறிஞர்கள் தோன்றி 19ஆம் நூற்றாண்டையக் கூரியத் திறனாய்வு முறைக்குத் தளம் அமைத்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கோர் ஹெர்டர். ஐக்கோர்ன் என்போராவர். ஹெர்டர் (J.G. Herder, 1744 - 1803) ப.ஏ.இன் மனித நலச் சிந்தனையால் கவரப்பட்டார். ஹமானின் சிந்தனை இவருக்கு ஏற்புடையதாக இருந்தது. மெய்யியலையும் இறையியலையும் இவர் இணைக்க முயன்றார். மானிடர் கடவுளின் சாயல் என்பதை ஹமான் போன்றே இவரும் ஏற்றார்; எனினும் இயேசு கிறிஸ்துவைத் தவிர்த்துப் பார்த்தாலும் மானிடரின் மனித இயல்பில் தான் இறைமையின் இரகசியம் அடங்கியிருக்கிறது என்றார். இவர் விவிலியத்தை அழகுணர்ச்சியுடன் நோக்கி அதன் இலக்கிய வளத்தைப்

போற்றினார். எபிரேய இலக்கியத்தின் ஆற்றல் பற்றிச் சிறந்த நூல் ஒன்றை இவர் எழுதினார். இலக்கிய அமைப்புக்கு அப்பால் உயிர்த்துடிப்புள்ள ஆன்மிகத்தன்மை இருப்பதை இவர் சுட்டிக்காட்டினார். விவிலிய எழுத்தாளர் இவ்வாறு உணர்வும், எளிய மனமும் உடைய ஒருவருடன் நேரடிப் பேசுவதாக இவர் நினைத்தார். அதே நேரத்தில் மானிட உணர்வுடன் கடவுளின் வார்த்தையைப் படிக்கும் ஒருவரே அதன் உள்ளானப் பொருளை அறிந்திட முடியும் என்று இவர் விளக்கினார்; ஏனெனில் அது மனிதரால் மனிதருக்காக எழுதப்பட்ட ஒரு நூலாக இருக்கிறது. இவ்வாறு மனித நலச் சிந்தனையையும் ஆன்மிக உணர்வையும் இணைத்து விவிலியத்தை ஹெர்டர் அணுகின முறை அவருக்குப் பின்வந்த அறிஞர் பலரைப் பாதித்தது

ஐக்கோர்ன் (J.G. Eichhorn, 1752 - 1827) என்பவர் இதுவரை எழுந்த போங்குகளை ஒருங்கிணைத்து வரலாற்றுத் திறனாய்வுக்கான விதிமுறைகளை உருவாக்கினார். முதலில் மைக்கேலிஸின் மாணவராக இருந்த இவர் பின்னர் தமக்கே உரித்தான ஒரு பாணியைப் பின்பற்றினார். இறையியல் முன்னேற்புகள் கூரிய விவிலிய ஆய்வுக்குத் தடையாக இருக்கின்றன என்று கூறி, இவர் ப.ஏ.ஐ ஒரு வரலாற்றுப் பார்வையுடன் அணுகினார். அறிவு சார்ந்து செம்லர் பயன்படுத்திய வரலாற்று, நிலவியல் உண்மைகளையும், ஆன்மிக உணர்வு சார்ந்து ஹமான் பயன்படுத்திய முறையையும் இவர் ஒருங்கே ஏற்றார். ப.ஏ. அறிமுகமாக அவர் எழுதிய முத்தொகுதி நூல்கள் அவருக்குப் பெரும் புகழைக் கொண்டுவந்தன. முதல் தொகுதி ப.ஏ. நூல்களின் உள்ளடக்கம், தொகுப்பு, நம்பகத் தன்மை, நூல்பட்டியல் வரையறை ஆகியவற்றை ஆயும் ஒரு பொது அறிமுகமாக அமைந்தள்ளது. இரண்டாம் தொகுதி முல ஏட்டின் வரலாற்றைப் பற்றியது. மூன்றாம் தொகுதி ப.ஏ.ஐத் திறனாய்வுடன் பார்ப்பதற்குரிய வழிமுறைகளைக் கூறி ஒவ்வொரு நூலைப் பற்றியும் திறனாய்வு உண்மைகளை வெளியிடுகிறது. மிகச் சிறப்பாக ஐஞ்சுருள் நூல்கள் பற்றிய ஆய்வில் அவர் சிறந்தவராக அறியப்படுகிறார். பிற எழுத்துக்களை அவர் கையாண்டிருக்கலாம்; ஆயினும் ஐஞ்சுருள் நூல்களின் ஆசிரியர் மோசே என்பதே அவரின் முடிவு. அத்துடன், இறைவாக்கினரின் செய்தியை அவர்தம் காலத்துச் சூழலின் ஒளியில் அவர் விளக்கினார். இவரின் அணுகுமுறை பிற்கால அறிஞர்களைப் பெரிதும் பாதித்தது.

4. பத்தொன்பதாம் நூற்றாண்டு கண்ட ஆய்வு முறைகள்

இலக்கிய, வரலாற்றுத் திறனாய்வு இந்நூற்றாண்டில் மேலும் வளர்ச்சியடைந்தது. டி. வெற்றெ (W.M.L. de Wette, 1780 - 1849) என்பவர் ஐக்கோர்னின் அணுகுமுறையைப் பாராட்டி அதன் ஒளியில் மேலும் கூர்மையான ஆய்வினை மேற்கொண்டு விவிலிய ஆய்வின் முறையியலுக்கு முக்கியமான அடித்தளம் அமைத்தார். வரலாற்று - திறனாய்வு அடிப்படையில் விவிலியத்திற்கு அவர் ஓர் அறிமுக நூல் எழுதினார். விவிலியத்தில் தோன்றும் எல்லா நிகழ்வுகளையும் கருத்துக்களையும் அவற்றின் வரலாற்றுத் தொடர்பில் பார்க்கும்படி அவர் கோரினார். விவிலியம் எத்தன்மையது, அது எவ்வாறு உருவெடுத்தது என்பது அவருக்கு அடிப்படையானக் கேள்வியாகப்பட்டது. விவிலிய நிகழ்வுகளை அவற்றிற்கொப்பான வேறு வரலாற்று நிகழ்வுகளைப் போலக் கருதி அவர் ஆய்ந்தார். டி. வெற்றெயும் அவருக்குப் பின் வந்தவர்களும் இலக்கிய ஆய்வையும் வரலாற்று ஆய்வையும் இணைத்தார்கள். இலக்கிய ஆய்வு பாடங்களை வரையறுத்து, அவற்றின் மூலங்களின் பாணிகளையும் சிறப்புத் தன்மைகளையும் நிறுவுகின்றது. மொழி, அமைப்பு, தோற்றம் ஆகிய கூறுகளினடியில் அது உட்பொருளைக் காணுகிறது. வரலாற்று ஆய்வு மறை எழுத்துக்கள் வரலாற்று ஏடுகளாக உண்மை, போதனை தொடர்பாக எத்துணை மதிப்பைப் பெற்றுள்ளன என்று நிறுவுகின்றது. இந்த முறை ஆசிரியரின் வாழ்க்கை, கருத்து, சூழல் ஆகியவற்றை மொழியியல், அகழ்வியல், நிலவியல் ஆகிய அறிவியல்களின் துணைகொண்டு திரும்பக்கட்டுகிறது. டி. வெற்றெ விவிலியப் பகுதிகளுக்கு விளக்கவுரை கண்டபோது முதலில் இலக்கிய ஆய்வையும் பின் வரலாற்று ஆய்வையும் பயன்படுத்தினார். திருப்பாடல்களை அவர் ஆறுவகைகளாகப் பிரித்தார். இறையியல் கோட்பாடுகள் கூரிய ஆய்வைப் பாதிக்க இடங்கொடுக்காத அவர் கிறிஸ்தவ ஒப்படைப்புக்கேற்ற ஆன்மிகத் தேட்டத்தை ஆய்விலிருந்து விலக்கவில்லை.

ஹெகல் (G.W.F. Hegel, 1770 - 1831) என்னும் வரலாற்று மெய்யியலார் மானிட வரலாற்றின் வளர்ச்சியைக் கருத்து (thesis), எதிர்க்கருத்து (antithesis), கலப்புக்கருத்து (synthesis) என்னும் படிநிலைகளாகப் பகுத்தார். ஒரு கலப்புக்கருத்து அடுத்து ஒரு கருத்தாக அமையும் என்றார். இவரின் சீடரான வாட்கே (W. Vatke, 1806 - 1882) என்பவர் டி. வெற்றெயின் அணுகுமுறையில் போதிய உயிர்த்துடிப்பு இல்லை என்று குறைகூறினார். இஸ்ரயேலரின் சமயம் பற்றி அவர் எழுதிய நூலில் அச்சமயம் வளர்ச்சியடைந்ததை ஹெகலின் வரலாற்றுக் கருத்து மூலம் விளக்கினார். அவரைப் பொறுத்தவரை அறிவிற்குட்பட்ட உண்மைகளும் குறிப்பிட்டச் சூழல்களும், அதாவது நிலையான உண்மையாகிய சமயமும் வரலாற்றுச் சூழலும் ஒன்றிணைந்து மீட்பின் வரலாற்றை உருவாக்குகின்றன. ஒட்டுவமை, உருவகம், புனைவு ஆகியவை மூலமாகப் படிப்படியாக வெளிப்படுத்தப்படும் சமயம் இயேசு கிறிஸ்துவின் வரலாற்று வெளிப்பாட்டில் உச்சநிலை அடைகின்றது. விவிலிய இறையியல் ஒரு வரலாற்று ஆய்வுக்குட்பட்டது என்று வாட்கே கருதினார்; ஆனால் வரலாற்று நிகழ்வுகளுக்கும் மானிடத் தன்னுணர்வுக்கும் தொடர்புண்டு என்றார். எனவே முழுமுதல் மெய்மை வரலாற்றில் வெளிப்படுவதால் வரலாற்று மெய்மையும் இறைவெளிப்பாடும் ஒன்றாகக் கலந்துவிடுகிறது என்று முடிவுகட்டினார். ஹெகலைப் போன்று வாட்கேயும் சமயம் கீழ் நிலையிலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்து கொண்டிருப்பதால் உச்சநிலையில் வெளிப்பட்ட கிறிஸ்தவத்திற்கு இஸ்ரயேலரின் சமயம் தாழ்வானது என்று கணித்தார். இக்கருத்து சமய மெய்யியலாளரான பிரடெரிக் ஷ்லையர் மாக்கரால் (1768 - 1834) இன்னும் மெருகேறியது. அவர் கருத்துப்படி எபிரேய சமய உணர்வுக்கும் கிறிஸ்தவ சமய உணர்வுக்குமுள்ள இடைவெளி கிறிஸ்தவத்திற்கும் புறவினத்துக் கீழ்த்தர சமயங்களுக்குமுரிய இடைவெளிக்கொத்தது.

டி. வெற்றெ, வாட்கே என்பவர்களின் வரலாற்று அணுகுமுறையை மேலும் வளர்த்தவர் கோத்திங்கனிலும், ட்யூபிங்கனிலும் பேராசிரியராக இருந்த எவால்டு (H. Ewald, 1803 - 1875) ஆவார். இஸ்ரயேல் மக்களின் வரலாறு பற்றி அவர் எழுதிய நூல் ஜெர்மன் மொழியில் இஸ்ரயேலரின் வரலாற்றை சமயச்சார்பற்ற உணர்வுடன் எடுத்துக் காட்டிய முதல் நூல் ஆகும். பல்வேறு மூலங்களை ஆய்ந்து இந்நூலை அவர் திறம்படப் படைத்திருந்தார். பழங்கால மக்களினத்தவரில் இஸ்ரயேலர் மட்டும்தான் உண்மையும் முழுமையுமான சமயத்தைப் படைக்க அயராது உழைத்தார்கள். இறை வெளிப்பாடும் சமயமும் கலந்தே மீட்பின் வரலாற்றை உருவாக்குகின்றன. அதுபோன்றே எவால்டு உண்மைச்

சமயத்தையும் வரலாற்றையும் ஒன்றிணைத்தார். மேலும் இஸ்ரயேலரின் உண்மைச் சமயத் தேட்டத்தில் இறைவாக்கினர் ஆன்மிக மையங்களாக்கச் செயல்பட்டதையும் அவர் எடுத்துக்காட்டினார்.

டி வெற்றெ, வாட்கே, எவால்டு ஆகியோர் ப.ஏ. ஆய்வை வரலாற்று முறைக்கு நடத்திச் சென்றாலும் இஸ்ரயேலர் வரலாற்றைப் பற்றிய ஒரு பொதுக்கருத்தை அவர்களால் உருவாக்க முடியவில்லை. இதை உருவாக்கியவர்கள் ரியுஸ், கிராஃப், குயினன், வெல்ஹவுசன் என்னும் அறிஞர்கள் ஆவர். ரியுஸ் (1804 - 1891) இலேவியர் நூலின் சடங்குவிதிமுறைகள் பாலைநிலச் சூழலுக்குப் பொருந்தாமையைச் சுட்டிக்காட்டினார், எனவே, அவை காலத்தால் பிற்பட்டது என்றார்; இறைவாக்கினர் அவற்றிற்கும் முற்பட்டவர் என்றும் முடிவுகட்டினார். அவர் மாணவராகிய கிராஃப் (1815 - 1869) ப.ஏ.இன் வரலாற்று நூல்களை ஆய்வு செய்து நூல் வெளியிட்டார்; ஐஞ்சுருள் நூல்களின் வரலாற்றுப் பிரச்சனைக்குப் புதிய தீர்வுகள் வெளியிட்டார். ஆபிரகாம் குயினன் (1828 - 1891) என்னும் டச்சு அறிஞர் வரலாற்றுத் திறனாய்வு பற்றி எழுப்பிய சில கேள்விகள் கிராஃப் இன் ஆய்வுக்குப் பயனுடையவையாக இருந்தன.

வரலாற்று ஆய்வுமுறைகளை ஒருங்கமைத்த பெருமை ஜூலியஸ் வெல்ஹவுசன் (J. Wellhausen, 1844-1918) என்பவரைச் சாரும். ப.ஏ.இன் முதல் ஆறு நூல்களைப் பற்றியும், இஸ்ரயேலரின் வரலாறு பற்றியும் இவர் எழுதிய நூல்களில் இவரது அணுகுமுறை தெரியக் கிடக்கிறது. எவால்டின் மாணவரான இவர் விவிலியத்தின் வரலாற்றையும், அதில் இஸ்ரயேலரின் சமயம் வளர்ந்ததையும் தெளிவுபடுத்தினார். இலக்கிய ஆய்வைப் பொறுத்தவரையில் ரியுஸ், க்ராஃப் முதலியோரின் முறையை இவர் பின்பற்றினார். வரலாறு பற்றிய மெய்யியலில் ஹெகல், வாட்கே ஆகியோரின் பாதிப்பை இவரில் காண முடிகிறது. ஐந்நூல் ஆய்வு பற்றிய இந்நூலின் கட்டுரையிலும், வேறு சில கட்டுரைகளிலும் நாம் காண்கிறபடி, J, E, D, P என்னும் நான்கு மூலங்களைக் கணித்துக் கூறியவர் இவரே. இஸ்ரயேலரின் வரலாற்றை ஒரு மானிட வரலாறாகவும் அண்டை நாட்டு வரலாறுகளுடன் இணைந்த ஒன்றாகவும் இவர் எடுத்துக்காட்டினார். இறைவாக்கினரின் காலம் ஐஞ்சுருள் நூல்களுக்கு முந்தியது என்று இவர் எடுத்துக்காட்டியது இஸ்ரயேலரின் வரலாறு பற்றிய அறிவுக்குச் சில முக்கியமான தெளிவுகளைத் தந்தது.

டூம் (B. Duhm, 1847 - 1928) என்பவர் இஸ்ரயேலரின் சமயவரலாற்றைப் பற்றிய அறிவுக்கு இறைவாக்கினரின் இறையியலை அடிப்படையாக எடுத்துக்காட்டினார். வெல்ஹவுசனின் வரலாற்று ஆய்வு, இவருக்கு உதவியாக இருந்தது. இறைவாக்கினரின் வரலாறு, இறையியல் பற்றி விளக்கமான நூல்களை இவர் எழுதினார். ஓர் இயற்கைச் சமயம் என்ற நிலையிலிருந்த இஸ்ரயேலர் சமயத்தை ஓர் அறநெறிச் சமயமாக உருவாக்கியவர்கள் இறைவாக்கினர்கள் என்று இவர் விளக்கிக் காட்டினார். சட்டம், வழிபாடு ஆகியவற்றிலிருந்து இறைவாக்கினர் அழுத்திய அறஒழுக்கத்தை இவர் வேறுபடுத்திக் காட்டினார். எசாயா நூலில் மூன்று எசாயாக்களின் செய்தி இருப்பதை இவர் எடுத்துக்காட்டினார்; இரண்டாம் எசாயா நூலிலிருந்து பாடுபடும் பணியாள் பற்றியப் பகுதிகளைப் பிரித்துக்காட்டினார்.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து கீழையச் சமயங்கள் ஆய்வு செய்யப்பட்டன. சமய அனுபவம், வரலாறு, உளவியல், பண்பாடு முதலிய அணுகுமுறைகளிலிருந்து ஆய்வு செய்யப்பட்டன. சமயத்தில் ஒரு பரிணாம வளர்ச்சி இருப்பது சுட்டிக்காட்டப்பட்டது. இவை யாவையும் சுட்டும் சொல் சமய அறிவியல், சமய ஒப்பீட்டாய்வு அல்லது சமய வரலாறு (in German Religionsgesehichte) ஆகும். இந்த ஆய்வு, விவிலிய ஆய்வு முறையையும் பாதித்தது. பழங்காலத்திய, கீழையச் சமயங்களைப் பற்றிச் செய்யப்பட்ட ஆய்வு விவிலிய ஆய்வுக்குப் புதிய தடங்களையும் மூலங்களையும் வழங்கின. விங்க்லர் (H. Winckler, 1863 - 1913) என்பவர் ஒரிறை நம்பிக்கை உட்பட இஸ்ரயேலர் சமயத்தின் கூறுகள் பல அசிரிய - பாபிலோனிய சமயத்திலிருந்து வந்தவை என்று கருதினார். ஆனால் இவரைத் தொடர்ந்து வந்த அறிஞர்கள் எகிப்திய, கானானிய செல்வாக்குகளையும் ஏனையப் பாதிப்புகளையும் இஸ்ரயேல் சமயத்தில் கண்டனர்.

இவ்வாறு வெளிப்பாதிப்புக்கள் பல இருப்பதை ஒத்துக்கொண்டாலும் இஸ்ரயேலர் அவற்றை ஏற்று அதே நேரத்தில் தங்கள் தனித்தன்மையையும் இணைத்திருப்பதை பண்டிதர் குங்கல் (Hermann Gunkel, 1862 - 1932) சுட்டிக் காட்டினார். எ.கா. ப.ஏ.இன் படைப்பு விவரிப்புக்கும் பாபிலோனியப் படைப்புப் புராணங்களுக்கும் பல ஒற்றுமைகள் இருந்தாலும் இஸ்ரயேலர் சமயம் தனக்கே உரித்தான வகையில் அவற்றை மாற்றி எழுதியிருப்பதை இவர் எடுத்துக் காட்டினார். இதுபோன்றே க்ரஸ்மான் (H. Grassmann, 1877-1927) என்பவர் இறைவாக்கினரின் எழுத்துக்களிலும் இறையியலிலும் இருக்கும் தனித்தன்மைகளை எடுத்துக்காட்டினார். அதே நேரத்தில் கூரிய இலக்கிய, வரலாற்று, மூலபாட ஆய்வுகள், இறை வெளிப்பாடு, மீட்பின் வரலாறு என்னும் கருத்துக்களைத் தகர்ப்பனவாகக் காணப்பட்டன. எனவே இவற்றிற்கு எதிராக கத்தோலிக்க, சீர்திருத்தசபை அறிஞர்கள் சிலர் ஆய்வுகள் செய்து இஸ்ரயேலரின் வரலாறு, மீட்பின் வரலாறு என்றும் அதில் இறைவெளிப்பாடு இருக்கிறது என்றும் வலியுறுத்தினர். ஆயினும் குங்கல், க்ரஸ்மான் முதலியோரின் நிலைப்பாடுகளும் ஆய்வுகளும் விவிலிய ஆய்வுத் துறையில் மிகுந்தப் பாதிப்பை ஏற்படுத்தின. இருபதாம் நூற்றாண்டு முயற்சிகளைப் பற்றிப் பார்க்கும்போது இவர்களின் பங்களிப்பை மேலும் விளக்குவோம்.

இனி பு.ஏ. ஆய்வுக்கு வருவோம். முந்தைய ஆய்வுகளைத் தொடர்ந்து பு.ஏ.அறிஞர்கள் பு.ஏ.இன் வரலாற்றுச் சிறப்பையும், அதன் இறையியல் பொருளையும் விளக்குவதில் ஈடுபட்டிருந்தார்கள். ஜெர்மனியில் ட்யூபிங்கன் பல்கலைக் கழக அறிஞர் சிலர் இதில் பெரும் முனைப்புக் காட்டினார்கள். அவர்களில் மிக முக்கியமானவர்களை இவண் குறிப்பிடுவோம்.

பார் (F.C. Baur, 1792 - 1860) என்பவர் ட்யூபிங்கன் அறிஞர் குழுவில் தலைசிறந்தவர். இவர் ஹெகலின் வரலாறு பற்றியக் கருத்தினால் பாதிக்கப்பட்டவர். இவர் கருத்துப்படி கி.பி. 40 - 160இல் கிறிஸ்தவத் திருச்சபை பல போராட்டங்களுக்கும் இழுவை நிலைக்கும் உட்பட்டிருந்தது. குறிப்பாக, தொடக்கத் திருத்தூதுவர்கள் யூத மரபைச் சார்ந்திருந்தனர். பவுல் அதற்கு மாறான விடுதலை வாழ்வை முன்வைத்தார். இறுதியில் இரு நிலைப்பாடுகளும் ஒன்றிணைந்தன. இந்த அடிப்படையில் பு.ஏ. நூல்களின் காலத்தைப் பற்றியும் பார் புதிய கருத்துக்களை வெளியிட்டார். அவரைப் பொறுத்தமட்டில் பவுல் தாமே எழுதிய கடிதங்கள் யாவும் கி.பி. 70க்கு முன்னானவை: மத்தேயு யூதமரபைப் போற்றுவதால் நற்செய்தி நூல்களில் அதுவே முந்தியது. லூக்கா பவுலின் சிந்தனைகளைப் பிரதிபலிக்கிறார். இந்த இருவரின் கருத்துக்களின் ஒன்றிய

நிலையை மார்க்குவில் காண்கிறோம். திருத்தூதுவர் செயல்களும், யோவான் நற்செய்தி நூலும் 2ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எழுந்தவை. மொத்தத்தில் பு.ஏ.ஐ தொடக்கத் திருச்சபையின் வரலாற்றில் எழுந்த நூலாக பார் படித்தார்; மிக முந்தைய நூல்களான பவுலின் கடிதங்களிலிருந்து தொடங்கினார்; பவுலின் இறையியலுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். சமநோக்கு நற்செய்தி நூல்களுக்கும் யோவான் நற்செய்தி நூலுக்குமிடையே பெரும் வேறுபாடு கண்டார். இவரின் மாணவர் ஸ்ட்ராஸ் என்பவர் ஆவார்.

ஸ்ட்ராஸ் (D. Strauss, 1808 - 1874) இயேசுவின் வாழ்க்கை பற்றி ஒரு நூல் வெளியிட்டார். இயேசுவின் வாழ்வு பற்றி நற்செய்தி நூல்கள் தரும் தகவல்களுக்கு அவர் புரட்சிகரமான முறையில் புது விளக்கம் தந்தார். இயேசுவின் வாழ்க்கை முழுவதுமோ அல்லது பகுதியோ இறைவெளிப்பாடு என்ற முந்தைய கருத்துக்களுக்கு இவர் ஒரு மாற்றுக் கருத்தை முன்வைத்தார். அதன்படி வரலாற்று இயேசுவை முழுமையாக அறிந்திட வாய்ப்பில்லை; ஏனெனில் கிறிஸ்தவர்களின் பற்றுமை சார்ந்த புனைவுகள் அதில் இணைந்துள்ளன, துண்டு துண்டான உண்மைகளை நற்செய்தி ஆசிரியர்கள் தங்கள் பார்வைக்கேற்ற ஒரு வரிசைக்குட்படுத்தியுள்ளனர். ஸ்ட்ராஸின் இக்கருத்து சில அதி தீவிரப் போங்குகளுக்கு வழிநடத்தியது. சிலர் இயேசுவின் வாழ்வு முழுதும் புனைவு என்று முடிவுகட்டினர்.

பார், ஸ்ட்ராஸ் ஆகியோர் பு.ஏ.இன் வரலாற்று ஆய்வுக்குச் செய்த பங்களிப்பு ஒரளவில் இன்றும் பயனுடையது. ஆனால் அவர்களின் நிலைப்பாடுகளை அப்படியே ஏற்க வேண்டியதில்லை என்பதை வேறு சில அறிஞர்கள் எடுத்துக்காட்டினர்.

இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பு.ஏ. ஆய்வில் மும்மூர்த்திகள் என்று அறியப்பட்ட மூவர் இருந்தனர். அவர்கள் வரலாற்றுத் திறனாய்வு முறையின் துணைகொண்டு பு.ஏ.க்கு விளக்கவுரை எழுத முற்பட்டனர். திட்டம் முற்றுப் பெறவில்லையெனினும் அவர்கள் முயற்சி கருதத்தக்கது. (i) லைட்ஃபுட் (J.B. Lightfoot, 1828 - 1889) என்பவர் பார் வெளிப்படுத்திய எண்ணத்தின் அடிப்படையில் பவுலின் மடல்களுக்கு விளக்கவுரை எழுதத் தொடங்கி கலாத்தியர், பிலிப்பியர், கொலோசெயர், பிலமோன் ஆகியவற்றிற்கு எழுதி முடித்தார்; அத்துடன் இக்னேஷியஸ், கிலமெந்து ஆகிய திருச்சபைத் தந்தையரின் எழுத்துக்கள் பெரும்பாலான பு.ஏ. நூல்களைக் குறிப்பிடுவதால் அவற்றை ஆய்ந்து அவற்றின் காலம் பற்றிப் புதிய முடிவுகளை வெளியிட்டார். அவற்றின்படி, கிலமெந்தின் கடிதம் முதல் நூற்றாண்டின் இறுதியிலும், இக்னேஷியஸின் ஏழு கடிதங்கள் இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் எழுதப்பட்டன. இவை அக்கால மூன்று முக்கிய கிறிஸ்தவ மையங்களான அந்தியோகியா, எபேசு, உரோமை ஆகியவற்றிலிருந்த திருச்சபைகளின் வாழ்வைப் பற்றியத் தகவல்களைத் தருகின்றன. பார் நினைத்ததற்கு முன்பே பவுலையும் பேதுருவையும் அவை இணைத்துக் காட்டுகின்றன. (ii) வெஸ்ட்காட் (B.F. Westcott, 1825 - 1901) யோவான் நற்செய்தி நூலுக்கு ஒரு சிறந்த விளக்கவுரை எழுதினார். வரலாற்றாய்வும் இறையியலும் அதில் கலந்திருந்தன. யோவானின் கடிதங்கள் பேரிலும் அவர் விளக்கவுரை எழுதினார். (iii) ஹார்ட் (F.J.A. Hort, 1828 - 1892) எழுதிய நூல்களில் குறிப்பிடத்தக்கவை தொடக்கத் திருச்சபையின் **வரலாறு, யூதக் கிறிஸ்தவம், கிறிஸ்தவ சபை, பேதுரு விளக்கவுரை** ஆகியவை. ஆனால் இவை எல்லாவற்றையும் விடப் புகழ்சேர்த்தது வெஸ்ட்காட், ஹார்ட் இணைந்து உருவாக்கிய பு.ஏ. மூலபாடமாகும். அதுவரையிலுமிருந்த ஒப்புக்கொள்ளப்பட்ட மூலபாடம் 16ஆம் நூற்றாண்டில் எராஸ்மஸ் வெளியிட்டது; சில பிரதிகளை மட்டும் சார்ந்தது. மூலபாட ஆய்வுக்கு அறிவியல் வகுத்து, நன்கு ஆய்வு செய்து, பப்பைரஸ் ஏடுகளில் புதிதாகக் கிடைத்த வேறுபலப் பிரதிகளையும் ஒத்துநோக்கி 1881 இல் பு.ஏ.இன் புதிய மூலபாடத்தை இவர்கள் வெளியிட்டனர்; மூலபாட ஆய்வு பற்றியும் முன்னுரையில் எழுதினர்.

ஜெர்மனியில் வான் ஹார்னாக் (A. Von Harnack, 1851 - 1930) 19ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த பு.ஏ. அறிஞராகக் கருதப்படுகிறார். விவிலிய ஆய்வு, திருச்சபைத் தந்தையர், திருச்சபை வரலாறு, இறையியல் ஆகியவற்றில் இவர் புலமை பெற்றிருந்தார். இவர் ட்யூபிங்கன் மரபுக்கு இன்னொரு முறையில் அறைகூவல் விடுத்தார்; மரபுக்குத் திரும்புங்கள் என்று அழைத்தார். வரலாற்று ஆய்வுக்கு முக்கியம் கொடுத்த அதே நேரத்தில் பு.ஏ.இன் தோற்றம், வளர்ச்சி பற்றி மரபு வழியாகப் பாதுகாக்கப்பட்ட உண்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்றார். லூக்காவை மையமாக வைத்து (மருத்துவர், திருத்தூதுவர் நூல், சமநோக்கு நற்செய்தி நூல்கள்) மூன்று நூல்களை இவர் எழுதினார்: இவற்றில் லூக்கா நற்செய்தி நூல், திருத்தூதுவர் செயல்கள் நூல்களுக்கு ஆசிரியர் லூக்கா என்றும், அவர் பவுலின் கூட்டாளி என்றும் அவர் நிறுவினார். பார் என்பவரின் புரட்சிக் கருத்துக்களால் சுமார் 60 ஆண்டுகளாக மறக்கப்பட்டிருந்த மரபுண்மைகளை ஹார்னாக் மறுபடியும் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தார். மேலும், ஹார்னாக் ஆற்றிய பல சொற்பொழிவுகள் **எது கிறிஸ்தவம்?** என்னும் நூலாக வெளிவந்தது. சீர்திருத்த இயக்கத்தின் தாராளப்போக்குடைய இறையியலுக்கு இந்நூல் வித்திட்டது. மானிட ஆன்மாவின் என்றென்றுமுள்ள மதிப்பு, கடவுள் தந்தை என்பது, மானிட சகோதரத்துவம் முதலிய அறநெறிப் போதனைகளே கிறிஸ்தவத்தின் சாரம் என்று ஹார்னாக் கருதினார். இக் கருத்து பிற்காலத்தில் பெரும் தாக்குதலுக்கு உட்பட்டது.

வெல்ஹவுசன், டும், ஹார்னாக் போன்றவர்கள் ஏற்கெனவே இருபதாம் நூற்றாண்டிற்குள் வந்துவிட்டனர். எனினும் இந்த நூற்றாண்டுக்கு விவிலிய ஆய்வு வந்த கட்டத்தில் எழுந்த சில போங்குகளைச் சுட்டிக் காட்டுதல் நலம். விவிலிய நூல்களை மூல மொழியில் இலக்கண, இலக்கிய ஆய்வுடன் கற்கும் போங்கு வளர்ந்தது. வான் திஷ்ஷெந்தார்ப் (C. Von Tishendorf, 1815 - 1874) சீனாய் மலையிலுள்ள ஒரு துறவி மடத்திலிருந்து இரு மிகப் பழம் விவிலியப் பிரதிகளில் ஒன்றான சீனாய்ச்சுவடியைக் கண்டெடுத்தார். இதில் பு.ஏ. இன் முழுப் பாடமும் அடங்கியிருந்தது. டெய்ஸ்மான் (A. Deissmann, 1866 - 1937) என்பவர் எகிப்தில் கண்டெடுக்கப்பட்ட பு.ஏ. இன் பப்பைரஸ் மூலத்தை வைத்து ஆய்வு செய்தார். கிரேக்க மொழியியல், கிரேக்க நாட்டு யூத சமயம், பழங்கிறிஸ்தவம் ஆகியவை பற்றிய அறிவுக்கு இவருடைய நூல்கள் மிகவும் துணைசெய்கின்றன.

இக்கட்டத்தில் பு.ஏ.இன் பின்னணி என்று அறியப்படும் அதன் வரலாறு, நிலவியல், அரசியல் சூழல், சமயச் சூழல், இலக்கிய அமைப்புகள், கருத்து வடிவங்கள் பற்றிச் சில அறிஞர் ஆய்வு செய்தனர். ஹேட்ச் என்பவர் கிரேக்க - யூத சமயத்தின் பாதிப்பையும், சார்லஸ் என்பவர் மறைவெளிப்பாட்டு இலக்கியத்தையும், இரான்செ என்பவர் அகழ்வாராய்ச்சியுடன் உரோமை - கிரேக்க வரலாற்றுப் பின்னணியையும் ஆய்வு செய்து நூல்கள் எழுதினார்கள்.

திருவிவிலியத் துணை நூல்

சமநோக்கு நற்செய்திநூல்களின் இசைவுப் பிரச்சனை பற்றியும் அடிப்படை மூலங்களைப் பற்றியும் லேச்மான், வீசே, ஹோல்ட்ஸ்மான் முதலியோர் ஏற்கெனவே செய்திருந்த ஆய்வுகளைத் தொடர்ந்து சில புதிய முயற்சிகள் இக்காலத்தில் செய்யப்பட்டன. குறிப்பாக ஹோல்ட்ஸ்மான் செய்த ஆய்வின் முடிவாக 1863இல் மார்க்கு நற்செய்தி நூல் முந்தியது என்றும், லூக்காவுக்கும் மத்தேயுவுக்கும் பொதுவாக இன்னொரு மூலம் (Q) இருந்துள்ளது என்றும் கூறினார். இந்த மூலபாட ஆய்வுகளை மேலும் திறம்பட விளக்கியவர் ஸ்ட்ரீட்டர் (B.H. Streeter) ஆவார். வெஸ்ட்காட் - ஹார்ட் வெளியிட்ட பு.ஏ.இன் கிரேக்கப் பாடமும் வோல்ட்ஸ்மான் வெளியிட்ட இரு மூலபாட ஆய்வும் இவருக்குப் பயன்மிக்கப் பின்புலங்களாக அமைந்தன. நான்கு நற்செய்தி நூல்களின் தோற்றம் பற்றி 1924இல் இவர் ஒரு நூல் வெளியிட்டார். மார்க்கு நற்செய்தி நூல் (65 - 70) உரோமை மரபுகளிலிருந்து எழுந்திருக்க, Q மூலம் இன்னொரு கிறிஸ்தவ மையமான அந்தியோகியாவில் (50) உருப்பெற்றிருக்கும் என்று இவர் கருதினார்; அப்படியே லூக்காவின் தனிப்பட்ட மூலம் செசரியாவிலும் (60), மத்தேயுவின் தனிப்பட்ட மூலம் எருசலேமிலும் (65) உருவாகி இருக்கவேண்டுமென்று கருதினார், அப்படியானால் லூக்கா 80இலும், மத்தேயு 85இலும் இறுதிவடிவம் பெற்றன என்று கணித்தார்; இவ்வாறாக சமநோக்கு நற்செய்தி நூல்களுக்கு அடியில் நான்கு மூலங்கள் இருப்பதை இவர் எடுத்துக்காட்டினார்.

தொடர்ந்து யூத விளக்கவுரை நூல்களான தால்மூத், மித்ராஷ் ஆகியவற்றின் ஒளியில் பு.ஏ.இல் செமித்திய, கிரேக்கச் செல்வாக்கு சேர்ந்திருந்ததை சில அறிஞர்கள் கண்டுபிடித்தனர். குறிப்பாக, நற்செய்தி நூல்களில் அரமேயக் கலப்பு மிகுதியாக இருந்தது கண்டறியப்பட்டது. இயேசுவும் அவர்தம் சீடர்களும் பேசியது அரமேய மொழியாதலால் இக்கலப்பு இயல்பானதே என்று கொள்ளப்பட்டது. பு.ஏ.இல் அரமேயத்தின் செல்வாக்கையும், இயேசு தம் சீடரிடம் அரமேயத்தில் பேசினதையும் டால்மான் (G. Dalman, 1855 - 1941) என்பவர் விளக்கிக் காட்டினார். டோரி (C.C. Torrey, 1863 - 1956) என்பவர் நற்செய்தி நூல்கள் பழங்கால அரமேயத்திலிருந்து கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டவை என்று கருதினார். பர்னி என்பவர் (C.F. Burney, 1868 - 1925) கிரேக்க - யூதமயமாக்கப்பட்டதே யோவான் நற்செய்தி நூல் என்ற கருத்துக்கு மாறாக செமித்தியச் செல்வாக்கு அதில் இருக்கிறது என்று சுட்டி அதுவும் அரமேயத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதே என்று காட்டினார். இருபதாம் நூற்றாண்டில் அரமேய ஒளியில் இயேசுவின் உவமைகள், இராவிருந்து வார்த்தைகள் முதலியவை பற்றிய ஆய்வு செய்து நூல்கள் வெளியிட்ட டால்மானின் மாணவரான ஜேயாக்கீம் ஜெரேமியாஸ் அவர்கள் மேற்கூறிய அரமேய மூல ஆய்வுகளின் பயனை பு.ஏ. மாணவருக்குத் திறம்படத் திரட்டிக் கொடுத்தார்.

5. இருபதாம் நூற்றாண்டின் முயற்சிகள்

குங்கல் (1862 - 1932) பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டோம். வெறும் இலக்கியப் பகுப்பாய்வு ஒரு மறைநூலின் முழுத்தன்மையையும் செய்தியையும் புரிந்துகொள்வதற்குப் போதாது என்று அவர் உறுதிபூண்டார். இலக்கிய வடிவம் பெறுவதற்கு முன் ஒரு பகுதி எந்த அமைப்பில் சொல்வழக்கில் இருந்தது என்பதைப் பார்ப்பது அவருக்கு முக்கியமாகப்பட்டது. இஸ்ரயேலர் சமயம் ஒரு தனிவகையைச் சேர்ந்தது என்றும், பாணி, உள்ளடக்கம், குறிப்பிட்ட அக்கரை ஆகியவற்றை வைத்து ஓர் இலக்கியத்தின் வகையையும் அமைப்பையும் (எ.கா. புனைவு, நாட்டுப்பாடல்) அறிந்து கொள்ளவேண்டும் என்றும், அமைப்பை அறிந்து கொள்ளக் குறிப்பிட்ட வாழ்க்கைச் சூழலைப் (Sitz im Leben) பற்றிய அறிவு இன்றியமையாதது என்றும் அவர் கருதினார். அவரது இந்த முறைக்கு அமைப்பு ஆய்வு (Form Criticism) என்று பெயர்.

அமைப்பை அறிந்துகொள்ள அகழ்வாராய்ச்சி, அண்டை நாட்டு இலக்கியங்களின் அறிவு ஆகியவற்றின் துணையை குங்கல் ஒத்துக்கொண்டார். ஆனால் ஓர் அமைப்பைப் பெறுமுன் ஒரு பகுதியின் வளர்ச்சி ஒரே சீராக இருக்கவேண்டுமென்றில்லையென்றும் அது பல்பிணைப்பு நிறைந்த ஒன்றாக இருக்கமுடியும் என்றும் அவர் கருதினார். மானிட வரலாற்றில் எழுந்த இலக்கியங்களில் ஒன்றாக பு.ஏ. இருந்தாலும் அது ஒரு சமூகத்தின் சமய அனுபவத்தை உள்ளடக்கியிருப்பதால் இலக்கிய ஆய்வுடன் அழகுணர்ச்சியும் சேர்ந்தால்தான் முழுமையான விளக்கவுரை காணமுடியும் என்று அவர் எண்ணினார். தொடக்க நூல் பற்றி குங்கல் எழுதிய விளக்கவுரையில் இம்முறையை அவர் செயல்படுத்திக் காட்டினார். அதில் புனைவுகள், பழங்கதைகள் நிறைந்திருப்பினும் இஸ்ரயேலர் அவற்றைத் தங்கள் செய்திக்கு ஒரு கருவியாகவே பயன்படுத்தினர் என்று அவர் காட்டினார்.

பு.ஏ. இன் உரைநடைப் பகுதிகள் பலவற்றை அமைப்பாய்வு முறையில் படித்தபின் குங்கல் திருப்பாடல்களையும் அம்முறைகொண்டு ஆய்வு செய்தார். ஒவ்வொரு திருப்பாடலின் இலக்கிய வகை, தனிக்கூறுகள், வரலாற்று வளர்ச்சி ஆகியவற்றை அவர் வரையறுத்தார். வழிபாட்டுச்சூழலை மையமாக வைத்துக்கொண்டு, கருத்துசார்ந்து திருப்பாடல்களை நன்றி, புலம்பல், போற்றுதல் என்று அவர் வகைப்படுத்தினார். சிறையிருப்பின் காலத்திற்குச் சற்று முன்தான் பல திருப்பாடல்கள் முழுவடிவம் பெற்றனவென்றாலும் அவை அதற்கு முன்னாலேயே உருவாகத் தொடங்கின என்றும், சிறையிருப்புக்குப் பின் எழுந்த திருப்பாடல்களில் இத்தகைய நெடும் வளர்ச்சிக்கான சான்றுக்கூறுகள் இல்லை என்றும் அவர் எடுத்துக்காட்டினார். பாபிலோனிய, எகிப்தியப் பாடல்கள் பலவற்றுடன் திருப்பாடல்களை ஒப்பிட்டுத் துவக்க நிலையில் இருந்த சமக்கூறுகளை குங்கல் சுட்டிக்காட்டினார். அவருடைய அமைப்பாய்வு முறையில் இருந்த குறைபாடுகள் சில இன்று சுட்டிக்காட்டப்பட்டாலும் அம்முறையின் பயனை யாரும் மறுப்பதில்லை. இம்முறை பு.ஏ. ஆய்வுக்கு எவ்வாறு பொருத்தப்பட்டது என்று பின்னர் பார்ப்போம்.

குங்கலை ஆர்வமுடன் பின்பற்றியவர் க்ரெஸ்மான் (1877 - 1927) ஆவார். இவர் அவருடன் இணைந்தும் செயல்பட்டார். குறிப்பாக அண்மைக் கிழக்கு மக்களினத்தவரின் சமய, இலக்கியச் செல்வாக்கு பு.ஏ. இல் இருப்பதை இவர் எடுத்துக்காட்டினார். அமைப்பாய்வு முறையின் துணை கொண்டு குறிப்பிட்டப் பகுதிகள் இறுதித் தொகுப்பைப் பெறுமுன் துண்டுத்துண்டு இலக்கியங்களாக எவ்வாறு உருப்பெற்று வளர்ந்தன என்றும் அவர் பகுத்துக்காட்டினார். இதனால் பு.ஏ. இன் வரலாற்று நூல்கள் துண்டுப்படுத்தப் படுவதற்குரிய நிலை ஏற்பட்டது.

வான்ராட் (1901 -) என்பவர் இவ்வாறு துண்டுப்படுத்தி நோக்குவதுபோலவே முழுமையாக நோக்குவதும் முக்கியம் என்றார். இறுதி வடிவம் பெறும்போது ஒரு பகுதியின் தன்மையும் நோக்கும் வேறுபட்ட ஒன்றாக இருக்கமுடியும் என்று அவர் கருதினார். துண்டுகள் ஒன்றிணைந்த நிலையில் அவற்றை விளக்குவதற்கு விடுதலைப்பயணம், வாக்குறுதியின்

நாட்டைக் கைப்பற்றுதல், உடன்படிக்கை ஆகிய மீட்புச் செயல்களைத் திறவுகோல்களாக அவர் கண்டார். இணைச்சட்ட நூலின் பேரில் செய்த அவரது ஆய்விலும், தொடக்க நூலுக்கு எழுதிய விளக்கவுரையிலும், ப.ஏ. இறையியல் பற்றிய அவர் எழுத்துக்களிலும் அவரின் தனிச்சிறந்த அணுகுமுறையைக் காண முடிகிறது.

மார்ட்டின் நோத் (1902 -) என்பார் ஐஞ்சுருள் நூல்களில் பெரும் ஆய்வை மேற்கொண்டார். அத்துடன் இணைச்சட்ட வரலாற்றின் ஒரு பகுதியாக அவர் இணைச்சட்ட நூலைக் கண்டபடியால் அதுமுதல் 2அரசர் நூல் வரையுமுள்ள நூல்களையும் தம் ஆய்வில் சேர்த்துக் கொண்டார். ப.ஏ. நூல்களுக்குப் பின்னணியில் இருந்த மிகவும் பழமையான மூலங்களை அவர் ஆய்வு செய்தார். ஆயினும் இஸ்ரயேலர் கோத்திரங்களாக அமைந்தபின்னர்தான் அவர்களின் வரலாறு தொடங்குவதால் பழம் மரபுகளை வைத்து ஒரு வரலாற்றை உருவாக்கும் சாத்தியத்தை அவர் ஐயுற்றார். ஆயினும் கோத்திரக் கூட்டமைப்பை வைத்து அவர் இஸ்ரயேலரின் வரலாற்றைக் கட்டி எழுப்புவதால் அக்கூட்டமைப்பு பெற்றப் பல்வேறு மாற்றங்களை அவர் பெரிதாக நினைக்கவில்லை.

அமைப்பாய்வு முறையைப் பின்பற்றி ஆல்பிரட் ஆல்ட் (1883 - 1956) என்பார் எபிரேயச் சட்டங்களை வகைப்படுத்தி ஆய்ந்தார். இச்சட்டங்கள் முதலில் துண்டுத் துண்டுப் பகுதிகளாக இருந்து பின் சேர்த்திணைக்கப்பட்டன என்றும் சட்டங்களை நிலையானச் சட்டங்கள், சூழல் சார்ந்த வழக்குச்சட்டங்கள் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம் என்றும் அவர் கூறினார்.

அமைப்பாய்வு முறையை உருவாக்கி வளர்த்த அறிஞர்கள் ஜெர்மானியர்கள் ஆவர். இனி ஸ்காண்டிநேவியாவில் செய்யப்பட்டச் சில ஆய்வுகளைக் குறிப்பிடுவோம். இங்குள்ள சில அறிஞர்கள் குங்கலின் அமைப்பாய்வு முறையில் பெரும் மாற்றங்களைச் செய்தனர்; சொல்வழக்கு மரபுக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்தனர்; புனைவின் வழிபாட்டுச் சிறப்பின்மேல் கவனம் செலுத்தினர். பெடர்சன் (J. Pedersen) என்பவர் இஸ்ரயேலரின் வாழ்வு, பண்பாடு பற்றி 1926 இல் நான்கு தொகுதிகளை வெளியிட்டார். இவர் வெல்ஹவுசன் கூறிய மூலமரபுகளை மறுத்தார்; வேறுபட்ட மரபுகளை உருவாக்கிய சமூக வாழ்க்கைச் சூழலுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். நைபெர்க் (H.S. Nyberg) என்பவரும் மூல மரபுகளை மறுத்து சொல்வழக்கு மரபுக்கு முதலிடம் கொடுத்தார். ஒசேயா நூலின் பேரில் இவர் செய்த ஆய்வு (1935) அதற்குப் பின்னிருந்த மரபுகளை வெளிக்கொணர்ந்தது. மரபுகள் ஒரே சீராக நிலைத்திருக்கவில்லை என்றும், அவை பல மாற்றங்களுக்குட்பட்டன என்றும், இப்போதிருக்கும் எழுத்துக்களைத் திறனாய்வு செய்ய அவை உதவுகின்றன என்றும் அவர் கருதினார். மொவிங்கல் (S. Mowinckel. 1884 - 1965) என்பவர் குங்கலின் சிறந்த மாணவராக இருந்தாலும் ஆசிரியரின் கருத்துக்களுக்கு அப்பால் செல்லக்கூடியவராக இருந்தார். அவர் ஓர் இலக்கிய ஆய்வாளர். திருப்பாடல்களை ஆய்ந்து புனைவின் சடங்கு சார்ந்தக் கூறுகளை அவர் சுட்டிக் காட்டினார்; திருப்பாடல்கள் பற்றி ஆறு தொகுதிகளை வெளியிட்டார்; அவற்றில் இஸ்ரயேலில் புத்தாண்டுஅரியணை ஏறும் விழா ஒன்று இருந்தது என்று சாதித்தார்; இது பாபிலோனில் மார்துக் அரியணை ஏறுவதை ஒத்தது என்றார். இவருடைய கருத்து பிரிட்டனில் மனிதவியல் அடிப்படையில் சடங்குகளையும் புனைவுகளையும் ஆய்ந்த குக் (S.A. Cook), ஹூக் (S.H. Hook) ஆகிய அறிஞர்களைப் பெரிதும் பாதித்தது. எங்னெல் (I. Engnell) என்பவர் அரசன் அரியணை யேறுவதிலிருந்த வழிபாட்டுச் சிறப்பைப் பற்றி மொவிங்கல் கூறியதை மேலும் வலியுறுத்தினார். தெய்வீக அரசாட்சி பற்றி அவர் வெளியிட்ட நூலில் (1943) கிழக்கத்திய வழிபாட்டில் அது மையமானது என்று எடுத்துக்காட்டினார். எசாயாவில் வரும் பாடுபடும் பணியாளையும் தெய்வீக அரசர் என்ற நிலையிலேயே அவர் விளக்கினார். இலக்கிய ஆய்வு, அமைப்பாய்வு ஆகியவற்றின் போதாமையை எடுத்துக்காட்டிய எங்னெல் வழிபாட்டுச் சூழலில் உருவாகிய சொல்மரபுகளையே சார்ந்து ஆய்வு செய்யவேண்டும் என்றார். இவரும் இவரைச் சோந்தவர்களும் மரபு - வரலாற்று ஆய்வுமுறை மூலம் சொல்வழக்கு மரபிலிருந்து இலக்கியம் உருவாகிய கட்டத்தைக் காண முயன்றனர். மொத்தத்தில் ஸ்காண்டிநேவிய அறிஞர்கள் திட்டமற்ற நிலையிலிருந்த சொல் வழக்கு மரபுகளுக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்தது அவர்களின் ஆய்விலிருந்த பலவீனமாகும். அதே நேரத்தில் வழிபாட்டுச் சூழலுக்கு அவர்கள் கொடுத்த முக்கியம் கருதத்தக்கது. குறிப்பாக, ப.ஏ. இன் இறைவாக்கினர் வழிபாட்டுக்கு எதிரானவர்கள் என்ற 19ஆம் நூற்றாண்டையக் கருத்தை மாற்றி, வழிபாட்டுக்கன்று, வாழ்க்கை நெறியற்ற வழிபாட்டிற்கே அவர்கள் எதிராயிருந்தனர் என்ற தெளிவு இவ்வறிஞர்களால் கொடுக்கப்பட்டது.

அகழ்வாய்வின் துணைகொண்டு, இஸ்ரயேலரின் வரலாற்றிற்குட்பட்டப் பல எண்ணங்கள் அண்டைநாடுகளில் காணப்பட்டதை வைத்து, இஸ்ரயேலரின் வரலாறு ஒருங்கிணைந்த ஒரே வரலாறன்று என்று நோத் காட்டினார். இதை ஒத்துக்கொண்ட வான்ராட் அண்டைநாட்டு உறவுகள், வரலாற்று உண்மைகள் இவைகளை விடவும் இஸ்ரயேல் ஒரு தனிப்பெரும் மக்களினமாக யாவேயோடு கொண்ட உறவும் அதையொட்டிய எண்ணங்களுமே ப.ஏ. இன் அடிப்படை என்று கருதினார். இவர்களை ஏற்கெனவே குறிப்பிட்டோம். இவர்களின் அணுகுமுறைகளின் ஒளியில் வேறு சில அறிஞர்களின் முயற்சிகளைப் பார்ப்போம்.

அறிவியல் சார்ந்த வரலாறு விவிலியத்தில் இல்லை என்ற நோத் அவர்களின் கருத்தை ஒத்துக்கொண்டாலும் ஆல்பிரைட் (W.F. Albright) என்பவரும் அவரின் சீடர் ஜான்பிரைட் (John Bright) என்பவரும் இஸ்ரயேலரின் வரலாற்றை அறிய விவிலியம் தரும் விவரங்களை முக்கிய மூலங்களாகக் கருதினர். அகழ்வியல் தரும் தகவல்களின் ஒளியில் விவிலிய மரபுகளின் தனிச் சிறப்பை ஆராயவேண்டுமென்று அவர்கள் கருதினர். இவ்வாறு அகழ்வியலும் அண்டைநாட்டு இலக்கியங்களும் தரும் வரலாற்றறிவுக்கும் விவிலிய மரபுகளுக்கும் ஒரு நெருக்கம் ஏற்பட இவர்கள் வழிவகுத்தனர். அத்துடன் எபிரேயர் தங்கள் வரலாற்றை எவ்வாறு புரிந்துகொண்டனர் என்று பார்க்கவும் இவர்கள் உதவிசெய்தனர். அவர்களுக்கு நிகழ்ச்சிகளின் வரிசை அமைப்பு அன்று. அவற்றிற்கு அப்பால் கடவுளின் அருட்செயல்களைத் தங்கள் மரபுடன் இணைத்துப் பார்த்ததே வரலாறாகத் தோன்றியது.

இருபதாம் நூற்றாண்டில் படிப்படியாகப் பல அறிஞர்கள் ப.ஏ.இன் இறையியல் சிறப்பை வலியுறுத்தினார்கள். வரலாற்றறிவு தேவையெனினும் இஸ்ரயேலரின் வாழ்விலும் அனுபவத்திலும் இறைவெளிப்பாடு இருந்தது என்ற பற்றுறுதி இல்லாமல் ப.ஏ.ஐப் புரிந்துகொள்வது கடினம் என்று இவர்கள் எடுத்துக்காட்டினார்கள். நாம் ஏற்கெனவே சுட்டியபடி வான்ராட் என்பவர் இஸ்ரயேலருக்கும், யாவேக்குமுள்ள உறவின் மையத்தில்தான் அவர்களின் அனுபவத்தையும், வரலாற்றையும் பார்க்கவேண்டுமென்று கருதினார். உடன்

படிக்கை, ஆட்சி என்னும் இரு மைய உண்மைகளின் அடிப்படையில் அவர் ப.ஏ. இறையியலை அமைத்தார். இவை தொடர்பாக இறைவெளிப்பாட்டை இஸ்ரயேலர் ஒவ்வொரு கட்டத்திலும் புரிந்துகொள்வதற்குப் புற வரலாற்றறிவு ஏதுவாயிருப்பினும் அவர்கள் இறைவனுக்கு முன் நின்றார்கள், பதிலளித்தார்கள், தவறினார்கள் முதலிய உண்மைகளை மறுக்கவே முடியாது என்றார் வான்ராட். வரலாற்று அணுகுமுறையை இறையியலுடன் இணைத்து ப.ஏ. இறையியல் உருவாக்கிய இன்னொரு சிறந்த அறிஞர் ஐக்ரோட் (W. Eichrodt, 1890-) ஆவார். உடன்படிக்கை என்ற மையத்தில் இஸ்ரயேல் சமயத்தின் ஒற்றுமையை அவர் கண்டார். இஸ்ரயேலரின் நம்பிக்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் அவர்களுக்கும் யாவேக்குமுள்ள உடன்படிக்கை உறவு மோசே மரபிலிருந்தே தொடர்ந்து வந்துள்ளது என்பது அவர் முடிவு. ஆனால் இத்தகைய இறையியல் போங்கினால் இலக்கிய, வரலாற்று ஆய்வுகளைப் புறக்கணிக்கும் போக்கு ஒரு சில அறிஞர்களிடையே எழுந்த அதே நேரத்தில், இந்த ஆய்வுகளின் அடிப்படையில் தொடர் ஆய்வுகளை நடத்திக் கொண்டிருப்பவர்களும் இருபதாம் நூற்றாண்டில் இருந்து வந்துள்ளனர்.

புதிய ஏற்பாட்டு ஆய்விலும் ப.ஏ. ஆய்வின் முறைகளே கையாளப்பட்டன. இங்கும் மூலபாட, இலக்கிய, வரலாற்றறிவுக்கும் இறையியலுக்குள்ள தொடர்பை வரையறுப்பதே இருபதாம் நூற்றாண்டில் அறிஞர்களின் முக்கிய முயற்சியாக இருந்தது. வரலாற்று இயேசுவை இனம் கண்டு வெளிப்படுத்த முந்தைய நூற்றாண்டுகளில் எடுத்த முயற்சிகள் முழு வெற்றியடையவில்லை. அதற்குக் காரணம் துண்டுத் துண்டாக விவரங்கள் கோர்க்கப்பட்டிருந்ததும், எழுத்தாளர்கள் வெவ்வேறான இறையியல் பார்வைகளைக் கொண்டிருந்ததுமாகும். எ.கா. ரீடே (W. Wrede, 1859 - 1906) என்பவர் நாசரேத்தூர் இயேசு தாம் மெசியா என்று உணரவில்லை என்றும், பிற்காலத்தில் மெசியாப் பட்டம் அவர் மேல் திணிக்கப்பட்டது என்றும், மார்க்கு நற்செய்தியாளர் தம் நம்பிக்கையின் அடிப்படையில் அதை மெசிய இரகசியம் என்று குறித்தார் என்றும் வாதிட்டார். உண்மையான வரலாற்று இயேசுவை அறிந்திடலாம் என்று நினைத்தவர்களுக்கு இது முட்டுக்கட்டைப் போடுவதாக இருந்தது.

ஆனால் ஆல்பர்ட் சுவைட்சர் (1875 - 1965) தாம் வெளியிட்ட **மெசிய ரகசியம்** அல்லது **இறையரசின் புதிர்** என்னும் ஆய்வில் இயேசுவுக்குத் தாம் மெசியா என்ற தன்னுணர்வு இருந்தது என்று நிறுவினார். அடுத்து வரலாற்று இயேசு பற்றி அவர் செய்த ஆய்வில் ரெய்மாருஸ் முதல் ரீடே வரையும் உள்ள அறிஞர்களின் அணுகுமுறைகளையும் முடிவுகளையும் அலசி ஆராய்ந்தார். இயேசுவை வெறும் ஓர் அறநெறிப் போதகர் என்று வடித்த ஹார்னாக்கின் அணுகுமுறையை இவர் குறைகூறினார். மறைபொருள் வெளிப்பாடு, இறுதியியல் சார்ந்த கூறுகள் இயேசுவின் வாழ்க்கையோடு கலந்திருந்ததை சுவைட்சர் கண்டார். அவரைப் பொறுத்தவரை நற்செய்தி நூல்களில் நாம் காணும் இயேசு வைராக்கியமுடைய ஒரு நாயகர்; தாமே மெசியா என்று உறுதிபூண்டவர்; விரைவில் உலக முடிவை எதிர்பார்த்தவர், அதற்காக சாவை ஏற்றவர். உண்மையான வரலாற்று இயேசுவை வடித்த முயற்சியில் சுவைட்சர் வெற்றி பெறவில்லை. எனினும் இயேசுவின் வாழ்வுக்கும் போதனைக்கும் பின்னணியாக மறைபொருள் வெளிப்பாட்டைக் கண்டது ப.ஏ. ஆய்வுக்கு அவருடைய சிறந்த பங்களிப்பு எனலாம்.

சமய ஒப்பீட்டுக் கல்வி ப.ஏ. ஆய்வைப் பாதித்தது போலவே பு.ஏ. ஆய்வையும் பாதித்தது. சில அறிஞர்கள் கிறிஸ்தவத்தை ஏனைய சமயங்களைப் போன்று ஒரு சமயமாகக் கற்றனர்; அது உருவான சூழலில் கிரேக்க, உரோமை மரபுகளின் அமைப்புகளும், சமய நம்பிக்கைகளும் இதில் கலந்தன என்று எடுத்துக்காட்டினர். இந்த அடிப்படையில் பு.ஏ.ஐ அணுகியவர்களில் ஒருவர் ரீட்சென்ஸ்டெயின் (R. Reitzenstein, 1861 - 1931) ஆவார். இவர் கிரேக்கச் சமய எண்ணம் பு.ஏ. எழுத்தாளர்களை, குறிப்பாக பவுலைப் பெரிதும் பாதித்தது, தொடக்கத் திருச்சபையின் செய்தியிலும் வழிபாட்டிலும் மறை சமயங்கள், அறிவுநெறிக் கோட்பாடு ஆகியவற்றின் செல்வாக்கு உள்ளது; கிறிஸ்துவின் இறப்பினாலும் உயிர்த்தெழுதலினாலும் மீட்பு என்ற கருத்து கிறிஸ்தவத்துக்கு முன்வழக்கிலிருந்த மீட்பு பற்றிய ஓர் அறிவுநெறிப் புனைவிலிருந்து எடுக்கப்பட்டது என்று கூறினார். பூஸ்ஸெட் (W. Bousset, 1865 - 1920) என்பவர் இரேனியஸ் காலம் வரையிலுள்ள கிறிஸ்தவ உருவேற்பின் வளர்ச்சிப் படிகளை ஆய்ந்தார். பவுலும் அவருக்குப் பின் வந்தவர்களும் கிறிஸ்தவத்தை ஒரு மறைசமயமாக்கி, மறைசமயங்களில் ஒரு வீரர் - தேவதை வழிபடப்பட்டது போன்று இயேசுவை இவர்கள் ஆண்டவராக வழிபட்டனர் என்று கருதினார். இவ்வாறு சமய ஒப்பீட்டு முறையில் செய்யப்பட்ட ஆய்வுகள் கிறிஸ்தவத்தை ஒரு கலவைச் சமயமாகக் காட்டின.

அமைப்பாய்வு முறை பு.ஏ. ஆய்வில் பயன்படுத்தப்பட்டது இருபதாம் நூற்றாண்டில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். 19ஆம் நூற்றாண்டில் மூல ஏடுகளைப் பற்றிய ஆய்வு முக்கியம் பெற்றது. இப்போது, நிகழ்ச்சிகளுக்கும் அவை முதலாவதாக எழுதப்பட்டக் காலத்திற்கும் இடையில் (ஏறத்தாழ கி.பி.30 - 60) இயேசுவின் வாழ்க்கைப் பற்றிய தகவல்களும் போதனைகளும் அரமேய மொழியில் எவ்வாறு வழக்கிலிருந்தன என்ற கேள்வி கேட்கப்பட்டது. நற்செய்தி நூல்கள் எழுதப் படுவதற்கு முன் அவற்றின் செய்திகள் சிறுசிறு துண்டுகளாக (pericopes) கிறிஸ்தவக் கூட்டுறவுகளிடையே வழக்கிலிருந்தன என்று கணிக்கப்பட்டது. இவற்றின் அமைப்பு அல்லது பாணி, நற்செய்தி நூல்களில் அவை பாதுகாக்கப்பட்டதின் காரணம் ஆகியவற்றைக் கண்டுபிடிப்பதே அமைப்பாய்வு முறையின் முக்கிய நோக்கமாகும். இயேசுவின் காலச்சூழல், தொடக்கத் திருச்சபையின் காலச்சூழல், எழுதப்பட்ட நிலையில் ஒரு செய்தி வைக்கப்பட்டிருக்கும் சூழல் ஆகிய மூன்று சூழல்கள் ஊன்றிக் கவனிக்கப்பட்டன. ஒரு நிகழ்ச்சி அல்லது கருத்து எவ்வாறு உருவாகி, எத்தகு மாற்றமும் பொருளும் பெற்று, எந்த நோக்குடன் இறுதி வடிவம் பெற்றது என்று கண்டறிய இது உதவியாக இருந்தது. மேலும், குறிப்பிட்ட ஒரு செய்தியைக் குறிப்பிட்டதோர் இடத்தில் வைப்பதினால் நற்செய்திநூல் ஆசிரியர் என்ன உணர்த்த வருகிறார் என்று கண்டறியும் ஆய்வு தொகுப்பாய்வு (Redaction Criticism) என்று அறியப்பட்டது.

ஷிமிட் (K.L. Schmidt, 1891 - 1956) 1919இல் இயேசுவின் வரலாற்றுப் பின்னணி பற்றி ஒரு நூல் வெளியிட்டு அமைப்பாய்வைத் தொடங்கிவைத்தார். அவர் சமநோக்கு நற்செய்தி நூல்கள் தனித்தனியே துண்டுத்துண்டாக சொல் வழக்கிலிருந்த இயேசுவின் வாழ்வு பற்றிய தகவல்களின் திரட்டு என்று இவர் கருதினார்; சிலவற்றில்தான் அவை உருவாகிய காலம், இடம் பற்றிய குறிப்புக்கள் உள்ளன என்றார்; குறிப்பாக இயேசுவின் பாடுமரண நிகழ்ச்சி மிகவும் தொடக்கத்திலேயே ஒரே அமைப்பாக இருந்தது ஏன்றார். மார்க்கு நற்செய்தி ஆசிரியர் ஆங்காங்கு துண்டுகளை

இணைப்பதற்குத் தேவையான வாசகங்களைப் புகுத்தினார் என்பதற்குச் சில சான்றுகளை (எ.கா. 1.14,15,21-22, 2.13) அவர் சுட்டிக்காட்டினார்; இவ்வாறு செய்திகளை ஒருங்கிணைத்ததில் மார்க்குவின் சொந்த இறையியல் பார்வையின் பாதிப்பு இருந்தது என்றும் அவரின் நூல் இயேசுவின் வாழ்க்கைச் சூழலையன்று, தொடக்கத் திருச்சபையின் வாழ்க்கைச் சூழலைச் சுட்டுகிறது என்றும் கூறினார்; ஏனெனில் மார்க்குவின் செய்திகள் தொடக்கத் திருச்சபையில் பயன்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன.

டிபெலியஸ் (M. Dibelius, 1883 - 1947) என்பவரும் 1919இல் மரபிலிருந்து நற்செய்தி நூல் உருப்பெற்றதைப் பற்றி ஒரு நூல் வெளியிட்டார்; இவர் தொடக்கத் திருச்சபையின் தேவைக்காக, குறிப்பாக அருட்பணிக்காகவே நற்செய்தி நூல்கள் எழுந்தன; சமநோக்கு நற்செய்தி நூல்கள் இலக்கியங்களாக அல்ல, பொதுமக்களின் உடனடிப் பயனுக்காக எழுதப்பட்டன; சமநோக்கு நற்செய்தியாளர்கள் தங்கள் நூல்களின் ஆசிரியர்களல்லர், ஏற்கெனவே எழுதப்பட்டிருந்த துண்டுகளைத் திரட்டித் தந்தவர்கள் என்றார். நோக்கமின்றி அவர்கள் திரட்டாமல் ஒர் இறையியல் பார்வையுடன் தொகுத்தார்கள் என்பது இவருக்குப் பின் வந்தவர்கள் செய்த திருத்தம் ஆகும்.

அமைப்பாய்வு முறையைப் பின்பற்றிய இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த பு.ஏ. அறிஞர் என்று பெயர் பெற்றவர் புல்ட்மான் (Rudolf Bultmann, 1884 - 1976) ஆவார். அறிவியல் ஆய்வையும் இன்றுள்ளத் தலைமுறையினருக்கு நற்செய்தியைப் பொருளுள்ள முறையில் அறிவிக்க வேண்டுமென்ற அருட்பணி ஆர்வத்தையும் இவர் ஒன்றிணைத்தார். மார்புர்க் பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் பு.ஏ. ஆய்விலும் சீர்திருத்தச் சபையின் இறையியலிலும் பெரும் செல்வாக்கைப் பதித்துக் கொண்டார். ஏற்கெனவே இயேசுவின் வரலாறு பற்றிய தேட்டம், சமய ஒப்பீட்டு ஆய்வு, அமைப்பாய்வு ஆகியவை இவரைப் பாதித்தன. இவை தவிர லுத்தரன் இறையியல் மரபும் இருப்பு நிலை கோட்பாட்டினர் ஹைடக்கர் என்பவரின் தாக்கமும் இவரில் ஆழமாகப் பதிந்திருந்தன. பற்றுறுதியால் நீதியராக்கப்படுதல், அறிவிக்கப்பட்ட வார்த்தையின் ஆற்றல் ஆகிய லுத்தரன் கருத்துக்களை ஏற்ற புல்ட்மான் வரலாற்று இயேசுவைப் பற்றிய அறிவு பற்றுறுதிக்கு இன்றியமையாதது அன்று என்று கருதினார். இயேசு கிறிஸ்து என்னும் தனி மனிதரின் வாழ்வும் இறப்பும் நம்மில் ஏற்படுத்தும் பாதிப்பே அவருக்கு முக்கியம். இங்கே லுத்தரும், ஹைடக்கரும் வலியுறுத்திய தனியாள் மீட்பு இவரது நிலைப்பாட்டில் அடித்தளம் கொண்டிருப்பதைக் காணலாம். 1923 - 1928 இல் மார்புக்கில் தம் உடன் பேராசிரியராக இருந்த ஹைடக்கரின் சிந்தனைகள் தம்மை வெகுவாகப் பாதித்ததை புல்ட்மான் வெளிப்படையாகவும் குறிப்பிடுகிறார். குறிப்பாக சூழலுக்குக் கட்டுண்ட போலியான இருத்தல் நிலையிலிருந்து மானிடர் தன்னுரிமையுடைய மெய்யான இருத்தல் நிலைக்கு மாறுவதை ஹைடக்கர் வலியுறுத்தினார். அதுபோன்ற மெய்யான இருத்தல் நிலை இந்த உலகப்பற்றை விட்டு நற்செய்தி வழங்கும் மன்னிப்பை பெற்று மகிழ்ந்திருத்தலில் அடங்கியிருக்கிறது என்று புல்ட்மான் கூறினார்.

ஷிமிட், டிபெலியஸ் ஆகியோரின் அமைப்பாய்வைத் தொடர்ந்து புல்ட்மான் மேலும் புரட்சிகரமான கருத்துக்களை வெளியிட்டார். சமநோக்கு நற்செய்தி நூல்களின் பகுதிகளை அவர் இருவகையாகப் பிரித்தார். ஒரு வகை உண்மையிலே நடந்தவை அல்லது பேசப்பட்டவை, இயேசுவின் பெரும் பாலானக் கூற்றுக்கள் இதில் அடங்கும். ஆயினும் அவை தோற்றச் சூழலில் இல்லை, பிந்தைய நற்செய்தியாளர் சூழலில் எழுதப்பட்டுள்ளன. இன்னொரு வகை தொடக்கக்காலக் கிறிஸ்தவச் சமூகங்கள் ஆக்கப்பூர்வமான கற்பனையால் உருவாக்கியவை. மேலும், தற்கால மனிதர்களுக்குத் தங்கள் இருத்தல் நிலையை அறிந்திட பு.ஏ.இன் புனைவுகள் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்றும் அதன் செய்தி அவர்களைக் கூர்மையுடன் அறைகூவ வேண்டும் என்றும் புல்ட்மான் விரும்பினார். இது தொடர்பாக அவர் புனைவகற்றல் (demythologisation) பற்றிப் பேசினார். இது பல கருத்துவேறுபாடுகளை உருவாக்கியது. புல்ட்மானைப் பொறுத்தவரை புனைவு என்பது பழங்கதைகளோ, வெறும் கற்பனைக் கதைகளோ அல்ல; மறு உலக வாழ்வை விவரிக்க இவ்வுலக உருவகங்களைப் பயன்படுத்துவதாகும். பு.ஏ.இல் இவ்வுருவகங்கள் பல உள்ளன. அவற்றை நீக்கி அவற்றிற்குப் பின்னாலிருக்கிற கருத்தை இருத்தல் நிலைக் கோட்பாட்டின் உதவியால் விளக்கிட புல்ட்மான் முயன்றார். இவ்வாறு விளக்கும் முறை பு.ஏ.இல், சிறப்பாக பவுல், யோவான் ஆகியோரின் எழுத்துக்களில் காணப்படுகிறது என்று அவர் சுட்டிக் காட்டினார். எ.கா. யோவான் இங்கேயே உணரப்பட்ட மெய்மையாக இறுதியியலை அல்லது நிலைவாழ்வை விளக்குகிறார். புனைவகற்றிப் பார்த்தால் நமக்காகவும் நமது மீட்புக்காகவும் இயேசு கிறிஸ்துவின் வாழ்விலும் இறப்பிலும் இறைவன் செய்த இறுதிக்காலச் செயல் இருக்கிறது என்றும் அது மானிடருக்கு இடறுதலானச் செய்தியாக இருக்கிறது என்றும் அவர் கூறினார். அதே நேரத்தில் புனைவுகள் என்று தாம் கருதிய அருஞ்செயல்கள், உயிர்த்தெழுதல் போன்றவை சிலருக்கு நேரடிப் பொருளைத் தர முடியும் என்று புல்ட்மான் உணர்ந்தாரில்லை.

புல்ட்மானின் எழுத்துக்களில் யோவான் நற்செய்தி நூலுக்கு அவர் எழுதிய விளக்கவுரை மிகவும் புகழ் வாய்ந்தது. அவர் முடிவின்படி யோவான் அறிவு நெறிக்கோட்பாட்டிலிருந்து கிறிஸ்தவத்திற்கு மாறி வந்தவர்; மூன்று தனிப்பட்ட மூலங்களிலிருந்து எடுத்து தம் நற்செய்தி நூலை அமைத்துள்ளார்; (i) அடையாளமான, வரலாறல்லாத, இயேசுவின் அருஞ்செயல்களைக் கொண்டதொரு மூலம், (ii) கவிதை நயமுடைய கிழக்கத்திய அறிவுநெறிக் கோட்பாட்டின் தன்மையுடைய வெளிப்பாட்டு உரைகள், (iii) பாடுமரணும் உயிர்த்தெழுதலும். இது சமநோக்கு விவரிப்போடு ஓரளவு ஒத்துப்போயினும் தனியாக வழக்கிலிருந்தது. யோவான் நற்செய்தியாளரின் இறப்புக்குப் பின் வரிசை ஒழுங்குடன் இல்லாத அவர் எழுத்துக்களை ஒருவர் தொகுத்தார். தொகுப்பாசிரியர் சமநோக்க நற்செய்தி நூல்களை அறிந்திருந்த படியால் அவற்றிற்கும் திருச்சபையின் போதனைக்கும் ஒத்துப்போகுமளவில் யோவான் நற்செய்தி நூலைத் தொகுத்தமைத்தார். திருச்சபை ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் மற்றபடி திருவருட்சாதனங்களுக்கு எதிராக அமைந்திருந்த நூலில் அவை பற்றிய குறிப்புகளைச் சேர்த்தார்; புனைவகற்றிய இறுதியியலோடு மரபு வழி வந்த இறுதியியல் புனைவுகளையும் சேர்த்துக் கொண்டார். புல்ட்மானைப் பொறுத்தவரை இயேசு அறிவுநெறிக் கோட்பாட்டின் இரகசியத்தை அறிவிக்க வந்தவருமல்லர், மீட்புச் செயலைச் செய்ய வந்தவருமல்லர், மாறாக அவரும் அவர் வார்த்தைகளும் வழியாகவும் ஒளியாகவும் இருந்து மானிடர் இப்போதே இங்கேயே முடிவெடுக்கத் தூண்டுகின்றன.

புல்ட்மானின் நிலைப்பாட்டை ஆதரித்தும், மறுத்தும் திருத்தியும், பல்வேறு அறிஞர்கள் தங்கள் ஆய்வுக் கருத்துக்களை வெளியிட்டனர். கார்ல் பார்த்து (1886 - 1968) என்பவர் இறையியல் கொள்கை வகுத்தவராயினும் உரோமர் மடலுக்கு எழுதிய புகழ் மிக்க விளக்கவுரை வாயிலாக பு.ஏ. ஆய்வில் தமக்கிருந்த அக்கரையை வெளிப்படுத்தினார். புல்ட்மானின் சமகாலத்தவரான இவர் அவருடன் பலவிதங்களில் ஒத்துப்போனார். இறையியலில் ஏற்பட்டத் தாராளப் போங்கை (Liberalism) இருவருமே எதிர்த்தனர். ஆனால் இறைவெளிப்பாட்டில் மானிடரின் பங்கையும் பதிலீட்டையும் புல்ட்மான் முக்கியப்படுத்திய வேளையில் இறைவனின் பங்கை கார்ல் பார்த் வலியுறுத்தினார். மேலும் புல்ட்மானின் புனைவகற்றல் முறையை பார்த் ஒத்துக்கொள்ளவில்லை.

பாசல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த குல்மான் (O. Cullmann, 1902 -) என்பவர் பு.ஏ. ஐப் புரிந்து கொள்ள மீட்பின் வரலாற்றை மையமாகக் கொண்டார். அவரைப் பொறுத்தவரை கிறிஸ்து நிகழ்ச்சி மையமானது, முந்திய மீட்பின் வரலாற்றுப் பகுதிகளின் தொடர்ச்சியாக வந்தது, இப்போதைய திருச்சபையையும், எதிர்கால இறுதியியலையும் உள்ளடக்குவது. வாக்குறுதிக்கும் நிறைவேறுதலுக்குமிடையே மீட்பின் வரலாறு முழுவதிலும் ஓர் இழுவை நிலை இருக்கிறது என்று குல்மான் சுட்டிக்காட்டினார். மீட்பின் வரலாறு நற்செய்தியாசிரியர்கள் தவறாக உருவாக்கியது என்ற புல்ட்மானிய நிலைப்பாட்டிற்கு எதிராக இவர் இயேசுவின் போதனையில் வேர்கொண்ட இவ்வரலாறு இயேசு முதல் யோவான் வரையிலும் முழு பு.ஏ. இன் சிறப்புத் தன்மையாக இருக்கிறது என்று கூறினார். மேலும் மீட்பின் வரலாற்றில் ப.ஏ.இல் காணப்படும் ஆயத்தத்தையும் அதினால் இயேசுவும் திருச்சபையும் வளம் பெற்றனர் என்றும் குல்மான் கூறினார். பு.ஏ. இறையியலை, குறிப்பாக கிறிஸ்தியலை மிகவும் விரிவாக ஆய்ந்த குல்மான் இயேசுவுக்குக் கொடுக்கப்பட்டப் பட்டப் பெயர்கள் ஒரு குறிப்பிட்டச் சூழலில் திருச்சபை தன் நற்செய்திப் பணிக்கு தேவை என்று கண்டு பயன்படுத்தியவை என்றும், ஆண்டவர் என்னும் பட்டப்பெயர் கிரேக்க மறைச் சமயப் பின்னணியிலிருந்தன்று, பாலஸ்தீனக் கிறிஸ்தவச் சூழலிலிருந்து எழுந்தது என்றும் நிறுவினார்.

பானன்பெர்க் (W. Pannenberg, 1928 -) என்பவர் மெயின்ஸ் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஒரு சிறந்த இறையியலார் ஆவார். பார்த்தும், புல்ட்மானும் வரலாற்றைப் பற்றிப் போதிய ஆர்வம் காட்டாததற்கு இவர் ஒரு மாற்றுவழி காட்டினார். அதன்படி அவர்கள் இருவரும் கருதியது போன்று இறைவெளிப்பாடு திடீரென்று உடனே ஏற்படுவதன்று, மறைமுகமாகவும், நடுவர் நிலையுடனும் வரலாற்று நிகழ்ச்சிகளில் பிரதிபிம்பமாகக் காணப்படுவதாகும். வெளிப்பாட்டுக்கு வரலாறு நிலைக்களமாக இருப்பதால் வரலாற்று ஆய்வு மூலம் வெளிப்பாட்டைச் சோதித்தறிந்திட முடியும். இதில் அறிவார்ந்த சிந்தனைக்கு இடமுண்டு. பற்றுறுதி என்பது பழைய நிகழ்ச்சிகளுக்கு உட்பொருள் காண்பதன்று. இறுதியியலை எதிர்நோக்கிச் செயல்படுவதில் அடங்கியிருக்கிறது. நாம் எதிர்நோக்கும் எதிர்காலம் நம் நிகழ்காலத்தில் தன் பதிப்பையும் இருக்கையையும் காட்டி நிற்கின்றது.

பிரிட்டனின் அறிஞர்கள் புல்ட்மானின் இருத்தல் கோட்பாடு சார்ந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவரின் அணுகுமுறையை எளிதில் அவர்களால் புறக்கணிக்க முடியவில்லை. ஹாஸ்கின்ஸ் (B. Hoaxyns, 1884 1937) என்பவர் புல்ட்மான் உரோமர் மடலுக்கு எழுதிய விளக்கவுரையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். புதிய ஏற்பாட்டின் புதிர் என்ற பொருள்தலைப்பில் தாம் எழுதிய நூலில் இறையியல் பார்வை இல்லாமல் இயேசுவில் வரலாற்றைக் காண எழுந்த முயற்சிகளை அவர் தாக்கினார்; அமைப்பாய்வாளர் கருதியதுபோல் நாசரேத்தூர் இயேசுவுக்கும் தொடக்கத் திருச்சபைக்கும் இருந்த உறவே இந்தப் புதிர் என்று விளக்கினார்; ஆயினும் வரலாற்று இயேசுவைப் பற்றி அறிய இன்னும் கூடுதல் வாய்ப்புண்டு என்று கருதினார். யோவான் நற்செய்தி நூலுக்கு அவர் எழுதிய விளக்கவுரை மிகவும் சிறப்பு வாய்ந்தது.

வின்சென்ட் டெய்லர் (Vincent Taylor, 1887 -) என்பவர் அமைப்பாய்வின் நன்மைகளையும் அத்துமீறலையும் மனத்திற்கொண்டார். நற்செய்தி மரபுகளின் உருவேற்பு பற்றிய நூல் அவரின் நிலைப்பாட்டை விளக்குகிறது. வரலாற்று இயேசுவை அறிவதற்குப் போதுமான வாய்ப்புகளை அமைப்பாய்வு தருகிறது என்று அவர் கருதினார் பற்றுறுதியும், இறையியலும் இழைந்தோடினாலும், இயேசுவின் வரலாற்றை வடிப்பதில் நற்செய்தி நூல்கள் நம்பகமானவை என்றார். கிறிஸ்தியல் பற்றி அவர் எழுதிய நூல்கள் தொடக்கத் திருச்சபையின் சூழல் சார்ந்த இறையியல் பார்வைகளை முன்வைக்கின்றன. மார்க்கு நற்செய்தி நூலுக்கு டெய்லர் எழுதிய விளக்கவுரை வரலாற்று இயேசுவை நிறுவுவதற்கு அறிவியல் சார்ந்த அனைத்து ஆய்வுகளையும் பயன்படுத்துகின்றது.

நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட லைட் ஃபுட் (R. H. Light foot, 1883-1953) என்பவர் இங்கிலாந்தில் அமைப்பாய்வுக்கு ஆதரவை ஏற்படுத்தினார். நற்செய்தி நூல்களின் வரலாறு, விளக்கம் பற்றி இவர் எழுதிய நூலில் இயேசுவின் வரலாறு கலப்பற்ற நிகழ்ச்சிக் குறிப்புகளாக இல்லாமல் இறையியல் விளக்கங்களால் பொதியப்பட்டுள்ளது என்று கூறினார். ஏறத்தாழ இவர் காலத்தவரான டாட் (C.H. Dodd, 1884-1973) வரலாற்றுக்கும் இறையியல் விளக்கத்திற்கும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி பு.ஏ.இன் ஒற்றுமைத் தன்மையை நிறுவினார். திருத்தூதுவருடைய நற்செய்தியுரையின் வளர்ச்சி பற்றியும், இயேசுவின் உவமைகள் பற்றியும் இவர் எழுதிய நூல்களில் தோற்றச் சூழலையும் வளர்ச்சிச் சூழலையும் வேறுபடுத்தி விளக்கிக் காட்டினார். இயேசு அறிவித்த இறுதியியல் நிகழ்காலத்திலேயே உணர்ந்தறியப்படக்கூடியது (realisedeschatology) என்ற கருத்தை இவர் வலியுறுத்தினார். யோவான் நற்செய்தி நூல் பற்றி இவர் எழுதிய இரண்டு சிறந்த நூல்களில் இந்நூலின் கிரேக்கச் சூழலை முக்கியப்படுத்தியதுடன் சமநோக்கு நற்செய்தி நூல்களுக்கு இணையான நூல் என்ற விதத்தில் அது கூறும் நிகழ்ச்சிகள் வரலாற்று நம்பகமுடையவை என்றும் காட்டினார்.

புல்ட்மானின் அணுகுமுறையைக் கூடுதல் திறனாய்வு செய்து மாற்றுக் கருத்துக்களை வெளியிட்டவர்கள் அவரின் சில மாணவர்கள் ஆவர். அவர்கள் வரலாற்று இயேசுவை அறிவதின் அவசியத்தை உணர்ந்தனர்; நற்செய்தி விளக்கத்திற்கு ஹைடக்கரின் இருத்தல் கோட்பாட்டின் பயனைக் கேள்வி கேட்டனர். குறிப்பாக, வரலாற்று இயேசு பற்றி கேஸமான் (E.Kasemann, 1906-) என்பவர் புதிய கேள்விகளை எழுப்பினார். ட்யூபிங்கனிலிருந்து இவர் இது பற்றி ஒரு கட்டுரை எழுதினார். இதில் மூன்று கருத்துக்களை இவர் முன் வைக்கிறார்; (i) வரலாற்று இயேசுவுக்கும் தொடக்கத் திருச்சபை நம்பி விளக்கிய கிறிஸ்துவுக்கும் நெருங்கியத் தொடர்பில்லாவிட்டால் கிறிஸ்துவைப் பற்றி நாம் கூறுவதெல்லாம் ஒரு புனைவாக,

வெறும் தோற்றமாகப் பட்டுவிடும். (ii) தொடக்கத் திருச்சபைக்கு இயேசுவின் வரலாற்றைப் பற்றிய அக்கரை இல்லை என்றால் நற்செய்தி நூல்கள் எழுதப்பட்டிருக்கத் தேவையே இல்லை; தாங்கள் விவரித்தெழுதிய இயேசு, வரலாற்றில் வாழ்ந்தவர் என்று அவர்கள் உறுதிபூண்டிருந்தனர். (iii) பற்றுறுதியின் அடிப்படையில் நற்செய்தி நூல்கள் எழுதப்பட்டிருந்தாலும் வரலாற்றில் வாழ்ந்த இயேசுவின் மையத்தில்தான் அது சார்ந்திருக்க வேண்டியுள்ளது. அடுத்து, வரலாற்று இயேசுவைத் தெளிவாக அறிவதற்கு கேஸமான் சில முறைகளையும் மேற்கொண்டார். அவர் முறைப்படி முதலாவதாக, இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் நற்செய்தி அறிவிக்கும் நோக்கில் காணப்படும் பகுதிகளை விலக்கி, இயேசு உண்மையிலே செய்தவைகளையும் சொன்னவைகளையும் பார்க்க வேண்டும். இரண்டாவது, அக்கால யூத இரபிகளின் கருத்துக்களுக்கு அல்லது மறைப்பொருள் வெளிப்பாட்டு இலக்கியத்திற்கு ஒத்திருக்கிற பகுதிகளை விலக்கவேண்டும். மூன்றாவது, எந்தப் பகுதிகள் இயேசு பேசிய அரமேய மொழியின் பண்புக் கூறுகள் உடையனவாக இருக்கின்றன என்று பார்க்க வேண்டும்.

கேஸமான் போன்று வேறு சிலரும் புல்ட்மானின் நிலைப்பாட்டை மறுத்தனர். எ.கா. ஃபுக்ஸ் (E. Fuchs, 1903 -) என்பவர் இயேசு ஆயக்காரருடனும் பாவிகளுடனும் உணவுண்டது போன்ற நிகழ்ச்சிகள் அவரின் உண்மையான இயல்பைக் காட்டுவதுடன் அவர் தம் உவமைகளில் கூறியிருக்கும் உண்மைகளுக்கு ஏற்றவையாகவும் இருக்கின்றன என்றும், தொடக்கக் கிறிஸ்தவர்கள் அவரின் வார்த்தைகளை மாற்றினாலும் செயல்களை மாற்றியிருக்க முடியாது என்றும் கூறினார். பார்ன்காம் (G. Bornkamm) என்பவர் இயேசுவின் சொல்லிலும் செயலிலும் இருந்த அதிகாரம் ஒப்புயர்வற்றது என்றும் இதற்குப் பற்றுறுதி பதில் தந்ததே அன்றி இதை உருவாக்கவில்லை என்றும் கூறினார்.

இன்னும் சிறப்பாக, கொன்சல்மான் (H. Conzelmann. 1915) என்பவர் வரலாற்றளவில் இயேசுவைப் பற்றி நாம் அறியக்கூடியவற்றையும் அவரைப் பற்றிய நம்பிக்கையையும் ஒன்றிணைத்தார். அதன்படி, மானிடர் கடவுளுடன் செய்யும் போராட்டத்திற்கு இயேசு ஒரு சின்னமாயிருந்தார், இறையாட்சி பற்றிய அவரின் உரை மானிடரை உடனேயே அதனுள் ஈடுபடுத்துகிறது; அவரின் வார்த்தை இறைவார்த்தை; அவர் செயல்கள் இறையரசை இருப்பு நிலைக்குக் கொண்டு வந்துள்ளன. லூக்காவின் இறையியல் பற்றிய தம் நூலில் கொன்சல்மான், முதலில் லூக்கா எழுதிய நூல் இயேசுவின் உண்மையான வாழ்க்கையையும் போதனைகளையும் உள்ளடக்கியது; அதன்படி இயேசு உயிர்த்தெழுந்து பரத்துக்கு ஏறியதற்கும், அவரின் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்டது ஒரு குறுகிய காலமே, ஆனால் வருகை தாமதமானபோது லூக்கா நம் நற்செய்தி நூலை மாற்றியமைத்து எழுதினார் என்று கூறுகிறார். வரலாற்று இயேசுவை நிறுவுவதிலும், அவரின் சமய வாழ்வு, அவரைச் சுற்றி அவரது அடியார் எழுப்பிய நம்பிக்கைகளைக் குறிப்பிடுவதிலும் இவரை ஒத்தும், இன்னும் கூடுதலாகச் சேர்த்தும் சில அறிஞர்கள் ஆய்வு செய்தாலும் லூக்கா பற்றிய இவரின் நிலைப்பாட்டை ஏற்காதோர் உளர்.

இதுவரை, இருபதாம் நூற்றாண்டுப் பு.ஏ. ஆய்வு ஒளியில் நாம் குறிப்பிட்ட அறிஞர்கள் சீர்த்திருத்த சபையைச் சார்ந்தவர்கள். உரோமன் கத்தோலிக்கச் சபையிலும் சிலர் செய்த முயற்சிகளை இவண் குறிப்பிடுவது நலம். இந்த நூற்றாண்டுக்கு முன்வரை விவிலிய ஆய்வு கத்தோலிக்க வட்டாரத்தில் பெரும் சலனத்தை ஏற்படுத்தவில்லை. ஸ்ட்ராஸ், பார் போன்றவர்கள் செய்த ஆய்வு பயத்துடன் அல்லது எதிர்ப்புணர்வுடன் நோக்கப்பட்டது. 1943இல் போப்பு பயஸ் XII விவிலிய ஆய்வுகள் பற்றி ஒரு சுற்றறிக்கை விட்டார். அதில் இறைமக்களான விவிலிய அறிஞர் திருச்சபையின் போதனைக்கு உண்மையாயிருந்துகொண்டு அறிவியலின் துணைகொண்டு ஆய்வு செய்து கத்தோலிக்கக் கொள்கையை வளப்படுத்தும் உரிமையுடையவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வறிக்கை வெளியாவதற்கு முன்னரே ஒரு சில அறிஞர் விவிலிய ஆய்வில் ஈடுபட்டிருந்தனர். டொமினிக்கப் பிரிவைச் சேர்ந்த லேக்ரேன்ஞ் (M. J. Lagrange, 1855 - 1938) என்பவர், வியன்னாவில் படித்துக்கொண்டிருந்தபோது ஜெர்மனியில் நடந்த ஆய்வுகளை அறிந்தார்; 1890இல் விவிலிய ஆய்வகம் ஒன்றை எருசலேமில் நிறுவினார்; இதன் நோக்கு விவிலியத்தை இறைவார்த்தையாக மட்டுமன்று இலக்கியமாகவும் படிக்கத் தூண்டுதல் வழங்கவேண்டுமென்பதாகும்; விவிலிய ஆய்வுத் தொடர்பான முதல் கத்தோலிக்க ஆய்விதழை 1892இல் தொடங்கினார், 1902இல் விவிலிய விளக்கவுரை வரிசை ஒன்றைத் துவக்கினார். இவற்றின் மூலம் விவிலிய ஆய்வு கத்தோலிக்க நம்பிக்கைக்கு முரணானதன்று என்று காட்டினார். லாய்ஸி (A. Loisy. 1857 - 1940) என்பவர் ப.ஏ. கனோன் பேரில் பாரிஸில் அறிவர் பட்டத்துக்காக ஆய்வு செய்தார். கிறிஸ்தவப் பற்றுறுதிக்குத் திருச்சபை தேவையில்லை என்று ஹார்னாக் எழுதியதை மறுத்து இவர் சில நூல்கள் வெளியிட்டார். இயேசு இத்தகைய ஒரு திருச்சபையை எதிர்பாராவிடினும் அது இறைவனின் திட்டத்திற்குட்பட்டது என்றார். அடுத்து அவர் செய்த ஆய்வுகளில் தம் இறைத்தன்மை பற்றியத் தன்னுணர்வு இல்லாத வரலாற்று இயேசுவுக்கும், தொடக்கக் கிறிஸ்தவர்கள் நம்பிக்கை சார்ந்து உருவாக்கிய கிறிஸ்துவுக்கும் அவர் வேறுபாடு கண்டார். ஆனால் படிப்படியாக, அவர் கத்தோலிக்கப் போதனைகளை மறுக்குமளவில் உயர்திறனாய்வு நிலைக்குச் சென்றதால் 1908இல் சபை நீக்கம் செய்யப்பட்டார். ஆயினும் அறிஞர் வட்டாரத்தில் இன்றும் அவரின் செல்வாக்கு உண்டு.

மேற்கூறிய போப்புவின் சுற்றறிக்கையைத் தொடர்ந்து பல கத்தோலிக்க அறிஞர்கள் பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் விவிலிய ஆய்வுகள் செய்து பல நூல்கள் வெளியிட்டுள்ளனர். இவர்களின் ஆய்வு முடிவுகள் கத்தோலிக்கக் கொள்கைப் பிடிப்புடைய பலருக்கு அதிர்ச்சியாக இருப்பினும், திருச்சபையின் ஒட்டுமொத்த அமைப்பைத் தகர்க்கும் அளவில் இவர்களின் கருத்து இல்லாததால் அவைகளை மக்கள் பொறுத்துக் கொள்ளுகின்றனர். இவர்களில் பெரும்பாலோரும், வரலாற்று இயேசுவையும் நம்பிக்கைசார்ந்த கிறிஸ்துவையும் பெருமளவில் ஒருங்கிணைத்து அணுகிய குல்மான், டெய்லர், டாட் முதலியோரின் நிலைப்பாட்டையே ஏற்றுள்ளனர். நாளடைவில் கத்தோலிக்க, சீர்திருத்தசபை ஆய்வாளர் என்று பிரித்தறிய முடியாதபடி விவிலிய ஆய்வு வளர்ந்து கொண்டு வருகிறது.

6. அண்மைக்கால ஆய்வுகள், அழுத்தங்கள்

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விவிலிய ஆய்வு இன்னும் முடுக்கிவிடப்பட்டது. அறிவர்பட்ட ஆய்வுகளும், தனிப்பெரும் ஆய்வுகளும், நூல்களும், இதழ்களும் கணக்கிலடங்காமல் பெருகிவிட்டன. ஆய்வாளர்கள் ஏற்கெனவே செய்யப்பட்ட வரலாறு, மூலபாடம், இலக்கியம், அமைப்பு சார்ந்த அணுகுமுறைகளின் வழிநின்று மேலும் நுணுக்கமானக் கருத்துக்களை வெளியிட்டனர். பலருடைய ஆய்வுகள் ஒரு தனிப்பட்ட அணுகுமுறையில் அடங்காமல் பல்வேறு கோணங்களிலிருந்து பார்த்தறியும் அகல்விரிவானப்

(Comprehensive) போங்கினைக் கொண்டிருக்கின்றன. எனினும் குறிப்பிடத்தக்க வகையில் மேற்கொள்ளப்பட்டச் சில அணுகுமுறைகளையும் முடிவுகளையும் மட்டும் இவண் பார்ப்போம்.

ப.ஏ.ஐப் பொறுத்தவரை அமைப்பாய்வு முறை வளர்ச்சிபெற்றே வந்துள்ளது. எ.கா. வெஸ்டர்மான் என்பவர் இம்முறையைப் பின்பற்றி இறைவாக்கினர். திருப்பாடல்கள் பேரில் ஆய்வுசெய்துள்ளார். இம்முறையுடன் தொடர்புடைய இன்னொன்று வரலாற்றில் எழுந்த வேறுபட்ட மரபுகளைப் பற்றிய ஆய்வாகும். இறைப்பற்றுள்ள ஒரு சங்கம் தங்கள் வரலாற்றையும் பற்றுறுதியையும் இணைத்து உருவாக்கிய மரபினை இந்த ஆய்வு வலியுறுத்துகின்றது. இப்படி விடுதலைப் பயண மரபு, சீனாய் மரபு, தாவிதின் மரபு, இணைச்சட்ட மரபு, இறைவாக்கினர் மரபு, சீயோன் மரபு முதலிய பல்வகையான மரபுகள் ப.ஏ.இல் காணப்படுகின்றன. கிளாஸ் கோக் (Klaus Kock), நைட் (Knight), முதலிய அறிஞர்கள் இந்த மரபுகளை ஆய்ந்து அவற்றின் தனிச்சிறப்புகளையும் அவற்றிற்கிடையேயுள்ளத் தொடர்புகளையும் ஆய்ந்துள்ளனர். எ.கா. அரசன் ஏற்படுத்தப்பட்டதும், ஆலயம் கட்டப்பட்டதும் ஆண்டவருக்கு விருப்பமானதா, இல்லையா என்பதுபற்றி வேறுபட்டக் கருத்துக்கள் ப.ஏ.இல் அடங்கியிருப்பதை அறிந்துகொள்ள இவர்களின் ஆய்வு துணை செய்கிறது.

பழங்குடிகளின் வாழ்க்கை வழக்குகளை மனிதவியல் (anthropology), சமூகவியல் (sociology) மூலமாக ஆய்ந்து செய்யப்பட்ட முடிவுகள் ப.ஏ. சமய ஆய்வுக்குப் பொருத்தப்பட்டன. இலேவியர், இணைச்சட்ட நூல்களில் வரும் வாழ்க்கை விதிமுறைகள் பழங்குடி மக்களிடையே இருந்த எண்ணங்களையும் வாழ்க்கை வழக்கங்களையும் எவ்வாறு பிரதிபலித்து நிற்கின்றன என்று காட்டப்பட்டது. அத்துடன், இத்தகைய ஆய்வை சமூக, பொருளாதார விடுதலை நோக்குடன் திருப்பிவிட்டதில் சில அறிஞர் பெருந்தொண்டாற்றினர். தென் அமெரிக்காவில் தோன்றிய விடுதலையுணர்வும், மார்க்சீயச் சமூகத் திறனாய்வு முறையும் இதற்கு உடனடித் தூண்டுதல்களாக அமைந்தன. குறிப்பாக, மெண்டால் (G.E. Mendhall) என்பவர் பழங்குடி மக்களின் கூட்டமைப்பையும் அவர்களின் விடுதலைப் போராட்டத்தையும் இஸ்ரயேல் மக்களின் வரலாற்றுடனும் கூட்டமைப்புடனும் பொருத்திக் காட்டினார். அவரின் மாணவரான கோட்வால்டு (N. Gottwald) என்பவர் ஒரு படிகூடச் சென்று இஸ்ரயேலரின் வரலாற்றையும் கூட்டமைப்பையும் பற்றி மார்ட்டின் நோத் முதலியவர்கள் செய்த ஆய்வையும் முடிவுகளையும் திறனாய்வு செய்தார். நீதித் தலைவர்கள் நூலை அகழ்வாராய்ச்சியின் துணைகொண்டும், வேறு சில அரேபியக் குடிகளின் வரலாற்று ஒளியிலும் ஊன்றி ஆய்ந்தார். இந்த ஆய்வு யாவேயின் பழங்குடிகள் (The Tribes of Yahweh) என்னும் நூலாக வெளிவந்தது. இவரது முடிவின்படி இஸ்ரயேலர் என்று உருவாகிய மக்கள் கூட்டமைப்பில் முதலில் ஒருவருக்கொருவர் தொடர்பிராத மூன்று கூட்டத்தார் இருந்தனர். அவர்கள் எகிப்திலிருந்து விடுதலையடைந்து வந்த கூட்டத்தினர், வேறு இடங்களிலிருந்து குடிபெயர்ந்து வந்த ஹப்பீரு என்னும் இனத்தவர், கானானில் வாழ்ந்த குடியானவர்கள் ஆவர். விடுதலையடைந்து வந்த மக்கள் தங்கள் கடவுளான யாவேயைப் பற்றித் தங்கள் அறிவையும் அனுபவத்தையும் மற்றவர்களுடன் கூறியபோது ஒரு புதிய சமூக எழுச்சி ஏற்பட்டது. இந்த மூவரும் சேர்ந்து செய்த நீண்ட போராட்டத்தின் விளைவாகத்தான் கானான் நாடு முழுமையாகக் கைப்பற்றப்பட்டது. கோட்வால்டின் அணுகுமுறை பற்றிப் பல கேள்விகள் இன்று எழுப்பப் படுகின்றன. பிறச் சூழல்களின் பிந்தைய வரலாற்றை இஸ்ரயேலரின் பழைய வரலாற்றுக்குப் பொருத்துவது சரியா என்பது அவற்றில் ஒன்று. ஆயினும் முற்போக்குச் சிந்தனையுடன் விவிலிய ஆய்வு செய்கிறவர்கள் அவரின் முடிவை ஏற்றுப் போற்றுகின்றனர்.

விவிலியத்தை ஓர் இலக்கியமாகக் கருதி ஆய்வு செய்யும் முறையும் வளர்ந்துள்ளது. ராபர்ட் ஆல்ட்டர் என்பவரின் ஆய்வை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். சமயஞ்சாரா உலகில் இருக்கும் பொது இலக்கியங்களில் இருக்கும் கூறுபாடுகள், வாசகர் ஈடுபாடு முதலியவற்றை இவர் விவிலியத்துக்குப் பொருத்துகிறார். இந்த வகையில் ஜஞ்சுருள்நூலை ஓர் இலக்கியத் தொகுதியாக எடுத்து ஆய்வு செய்துள்ள க்ளையன்ஸ், குன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவ்வாறு ஆய்வுகள் ஒருபுறம் சென்று கொண்டிருக்க, ப.ஏ.இன் குறிப்பிட்டத் தலைப்புகளில் (எ.கா. பாவம், நீதித் தீர்ப்பு, நீதி, இறைமக்கள்) ஆழ்ந்து ஆய்வு செய்கிறவர்களும் இருக்கிறார்கள். எட்மண்ட் ஜேக்கப், நார்மன் ஸ்னெயித், H.S. நோலி, G.H. ஆண்டர்சன், R.E. கிளமெண்ட்ஸ் ஆகியோர் இது தொடர்பாகக் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவர். மேலே கூறப்பட்ட ஆய்வுகளை இவர்கள் பயன்படுத்திக் கொண்டாலும் ஒரு குறிப்பிட்டப் பொருளை ஆழ்ந்து ஆய்ந்து அதன் எல்லாத் துருவங்களையும் எடுத்துக்காட்டுவதே இவர்களின் தலையாய நோக்கமாகும்.

பு.ஏ.க்கு வருமுன் ப.ஏ.ஐயும், பு.ஏ.ஐயும் உள்ளடக்கிய இரு ஆய்வுப்போங்குகளை இவண் குறிப்பிடுவோம். கனோன் பற்றிய ஆய்வுகளையும், புதிதாகக் கிடைத்தச் சுவடிகளையும் இந்நூலின் வேறு சில கட்டுரைகள் விளக்குகின்றன. அண்மையில் சேண்டர்ஸ் (J.A. Sanders), சைல்ட்ஸ் (B.S. Childs) ஆகிய அறிஞர்கள் விவிலிய விளக்கவுரையானது வரலாற்று, இலக்கிய அடிப்படையிலன்று, இப்போதிருக்கும் அமைப்பில் விவிலிய நூல்கள் கனோனாகக் கோர்க்கப்பட்டிருப்பதின் பின்னணியில் இருக்கும் சமயக் கரிசனையின் அடிப்படையில் அமைந்திருக்கவேண்டுமென்று வாதிட்டனர். இப்போதிருக்கும் வரிசை ஒழுங்கில் நூல்களைத் தேர்ந்து கோர்த்ததில் யூத, கிறிஸ்தவ சமூகங்களிடையே இருந்த சமயப்பார்வைக்கும் பொருளுக்குமுரிய முக்கியத்துவம் வழங்கவேண்டுமென்பது இவர்களின் கருத்து. ஒரு தகுந்த காரணத்துடனேயே இப்போதிருக்கும் அமைப்பில் நூல்கள் வரிசைப்படுத்தப்பட்டன என்பதை இவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

அடுத்து, யூத இலக்கியங்கள் இன்று ஆர்வமுடன் படிக்கப்படுகின்றன. இயேசு கிறிஸ்துவின் போதனைகளை இரபிமார் எழுத்துக்களின் ஒளியில்தான் சரிவரப் புரிந்து கொள்ளமுடியும் என்று காட்டப்பட்டுள்ளது. அதே நேரத்தில், யூத அறிஞர்களிடையே விவிலிய ஆய்வும் விளக்கமும் அண்மையில் பெரும் வளர்ச்சி கண்டுள்ளன. இதன் விளைவாக, விவிலிய மொழிபெயர்ப்புக்கள், கிறிஸ்தவ விளக்கவுரைகள் எவ்வாறு யூதருக்கு எதிரான உணர்வைத் தூண்டிவிட்டிருக்கின்றன என்று சுட்டிக்காட்டப்படுகிறது. யூத - கிறிஸ்தவ உரையாடலிலும், இணைந்த ஆய்விலும் ஈடுபட்டிருப்போர் யூதர்களை ஒட்டுமொத்தமாக இயேசுவின் எதிரிகள், நற்செய்தியின் எதிரிகள் என்றெல்லாம் குறிக்கும் பு.ஏ. பகுதிகளை நீக்கிவிடவோ அல்லது திருத்தி மொழி

பெயர்க்கவோ செய்யவேண்டுமென்று கூறிவருகிறார்கள். இது தொடர்பாக நூல்கள், கட்டுரைகள், அறிக்கைகள் பல வெளிவந்துகொண்டிருக்கின்றன (எ.கா. Mature Christianity in the 21st Century - The Recognition and Repudiation of the Anti - Jewis Polemic in the NT by Norman A. Beck; Education for Shalom by Philip A. Cunningham).

இனி பு.ஏ.க்கு வருவோம். புல்ட்மான் பு.ஏ. ஆய்வில் ஏற்படுத்தியப் புரட்சியை நாம் ஏற்கெனவே பார்த்தோம். அவரைப் பொறுத்தவரை வ்ரலாற்றில் வாழ்ந்த இயேசுவைப் பற்றிக் கவலையில்லை. தொடக்கக் கிறிஸ்தவர்கள் தங்கள் பற்றுறுதியால் கண்டுகொண்ட கிறிஸ்துவும் நற்செய்தி அறிவித்தலுமே அவருக்கு முக்கியம். கேஸமான் போன்ற புல்ட்மானின் மாணவர்கள் வரலாற்று இயேசுவை முக்கியப் படுத்தினார்கள். அவர்களின் முயற்சி பு.ஏ. ஆய்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

வரலாற்று இயேசு பற்றிய தேட்டம் சார்ந்த முந்திய ஆய்வுகள் ஒருபுறமிருக்க, இயேசு பற்றிய வரலாற்று ஆய்வு என்று இன்னொரு ஆய்வு அண்மையில் எழுந்தது. சிறப்பாக வட அமெரிக்க அறிஞர்கள் இயேசு ஆய்வு (Jesus Research) என்ற பெயரில் அதனைச் செய்தார்கள். முந்தீய முறையைவிட இது பின்வரும் விதங்களில் வேறுபட்டது: முந்திய ஆய்வுக்குப் பின் கிறிஸ்தவப் பற்றுறுதியும் அதை வளப்படுத்தும் ஆசையும் இருந்தது. ஆனால் புதிய முறையில் பொது மானிட உணர்வோடு சமயஞ்சாரா மனநிலையில் சில அறிஞர்கள் இயேசு பற்றிப் புதுக்கேள்விகளை எழுப்பியுள்ளனர். முந்தைய ஆய்வுக்கு அடிப்படையாக நான்கு நற்செய்தி நூல்களே நம்பத்தக்க மூலங்கள் என்று கொள்ளப்பட்டது. ஆனால் புதிய ஆய்வில் புதிதாகக் கிடைத்துள்ள சுவடிகள், அகழ்வுக் குறிப்புக்கள், தள்ளுபடி நூல்கள், வரலாற்று நூல்கள் முதலியவை பயன்படுத்தபபட்டுள்ளன. அவை பு.ஏ. பின்னணி பற்றிப் புதிய தகவல்களைத் தந்துள்ளன. முந்தைய ஆய்வுகள் வரலாற்று, இலக்கிய, சமய ஒப்பீட்டு முறைகளைப் பின்பற்றின. புதிய ஆய்வு சமூகவியல், பண்பாட்டு மனிதவியல் முதலிய ஆய்வு முறைகளைப் பின்பற்றி இயேசுவின் காலச் சூழலைக் கணிக்க முயன்றுள்ளது. முந்திய ஆய்வுகளில் சமூக, பொருளாதார, அரசியல் சார்ந்த கேள்விகள் எழுப்பப்படவில்லை. புதிய ஆய்வுகளில் அவை மிகவும் கூர்மையாகக் கேட்கப்பட்டுள்ளன

இயேசு ஆய்வில் ஈடுபட்டு எண்பதுகளின் நடுப்பகுதியில் நூல்கள் வெளியிட்டோரில் முக்கியமானவர்கள் பார்க் (M. Borg), சார்ஸ்வொர்த் (J.H. Charlesworth), டவுணிங் (F.G. Dowing), ஹார்ஸ்லி (R.A. Horsley), ஒக்மேன் (D.E. Oakman) என்போர் ஆவர். இவர்கள் வெளியிட்ட முடிவுகள் மூன்றாம் உலக நாடுகளில் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விடுதலை சார்ந்த காட்சிகளும் விளக்கங்களும் ஏற்படக் காரணமாயிருந்தன. இவர்கள் ஒவ்வொருவரின் அணுகுமுறையையும் முடிவையும் விளக்க இவண் இடமில்லை. மிக முக்கியமானக் கருத்துக்களை மட்டும் இங்கு குறிப்பிடுவோம்.

மூன்றாம் உலக நாடுகள் காலனி ஆதிக்கத்துடன் இணைந்த கிறிஸ்தவ அருட்பணி வாயிலாக இயேசுவை அறிந்து கொண்டனர். இருப்பு நிலைகளுக்கு ஒத்துப்போகிற ஒரு வெள்ளைக் காரராகவே அவர்கள் இயேசுவைக் கண்டார்கள். காலனி ஆதிக்கம் ஒய்ந்தபின்னரும் பல நாடுகளில் இந்தப் பார்வையே தொடருகிறது. இந்நிலையில் இருப்புநிலைகளில் மறைந் திருக்கும் அடிமைத்தனங்களை இனங்கண்டு அதற்கு எதிராகப் போராடி மானிடநேய்த்தையும், சமத்துவ சமூகத்தையும் உருவாக்க இயேசுபற்றிய யதார்த்தங்கள், புதிய காட்சிகள் தேவைப்படுகின்றன. நாம் மேலே குறிப்பிட்ட ஆய்வுமுடிவுகள் பின்வரும் விதங்களில் இத்தேவையை நிறைவு செய்கின்றன.

இயேசுவை விண்ணிலிருந்து தோன்றிய இறை மனிதராகப் பார்த்ததால் அவரின் உண்மையான மனித வாழ்வு மறைக்கப்பட்டுவிட்டது. இயேசுவின் வாழ்க்கையையும் போதனைகளையும் திறந்த கண்களுடன் படிப்போர் குடியானவர், கடன்பட்டவர், தோட்டக்காரர், வரிவதூலித்தவர் போன்ற சாதாரண மக்களுடன் உறவாடி வாழ்ந்த ஓர் ஏழைக் குடியானவராகவே இயேசுவைக் காண்பர். இறையரசு ஏழைகளுடையது என்று கூறிய இவரே இன்று வறுமையிலும், கடனிலும், ஒடுக்குதல்களிலும் உழலும் ஏழைகளின் உற்ற நண்பராக விளங்க முடியும்.

இறுதிக்காலத்தைப் பற்றிப் பேசியவராக இயேசுவைப் பார்த்ததால் அக்காலத்திற்காக ஆயத்தப்பட வேண்டும், அக்காலம் விரைந்து வர முடுக்கிவிட வேண்டும் என்ற எண்ணங்கள்தான் வளர்ந்தன. ஆனால் உண்மையில், இயேசு உலகின் முடிவை எதிர்பாராமல் அரசியல் - சமூக - பொருளாதார ஒடுக்குதலுக்கு மையமாக இருந்த எருசலேமின் முடிவையும் அங்கிருந்த ஆலயத்தின் அழிவையுமே முன்மொழிந்தார். தீமையான அமைப்புகளுடன் மக்கள் தங்களை ஒன்றுபடுத்திக் கொள்ளாமல் புதுமை மிக்க ஒரு வாழ்க்கை நெறிக்கு அவர்கள் தனியாகவும், கூட்டாகவும் மனந்திரும்பவேண்டுமென்று அவர் அழைப்பு விடுத்தார்.

வன்முறைகளைக் கண்டாலும் அன்பைப் போதித்து ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தைக் காட்டும் ஒரு சாதுவாகவே இயேசு அறியப்பட்டிருக்கிறார். ஆனால் இயேசு அப்படிப்பட்டவரல்லர். அவர் தீவிரவாதிகளான செலோத்தியரிடமிருந்து தம்மைப் பிரித்துக் கொண்ட அகிம்சைவாதியல்லர். ஏனெனில் செலோத்தியர் என்ற குழு இயேசுவின் காலத்திற்குப் பின்னரே உருப்பெற்றது. உரோமையின் மேலாதிக்கத்தால் யூதேயாவிலும் கலிலேயாவிலும் வன்முறை அமைப்பளவில் மக்களை வாட்டிக் கொண்டிருந்தது. இந்நிலையில் வன்முறைப் புரட்சியில் இயேசு இறங்கவில்லை யெனினும் வன்முறைக்கெதிராக அவர் வன்மையாகக் குரல் கொடுத்து அப்போதிருந்த ஆட்சி முறைகளுக்கு எதிரான ஒன்றாக இறையரசை அறிவித்தார்.

நீதிமொழிகள், பழமொழிகள் ஆகியவை நற்செய்திக்கு உடன்பட்டு வராதவை என்று கருதப்பட்டக் காலம் உண்டு. ஆனால் இயேசுவை உற்று ஆயும் போது அவர் நன்னெறிபேசும் ஒரு முனிவராகக் காட்டப்படுகிறார். எனவே பிற சமய முனிவர்களினின்று அவரைப் பிரித்து நோக்காமல் அவர்களுடன் இணைந்து வாழ்க்கைக்குரிய பொதுப் பாடங்களைச் சொல்கிறவராக அவர் காணப்படுகிறார். அவர் காலத்திலிருந்த யூத - கிரேக்கப் பண்பாட்டு மரபுகள் வைத்திருந்த நீதிமொழிகளுக்கும் இயேசுவின் உரைகளுக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. இன்றும் பிற சமயத்தவருடன் நல்லுறவு கொண்டு உரையாடல் செய்ய இந்த உண்மை நம்மை ஊக்குவிக்கிறது.

மொத்தத்தில் முந்தைய வரலாற்று ஆய்வுகள் இயேசு யார் என்றக் கேள்விக்கு விடைகாணும் வகையில் அமைந்திருந்தன. ஆனால் இயேசு பற்றியப் புதிய ஆய்வுகள் இயேசு எங்கே இருக்கிறார் என்றக் கேள்வியை எழுப்புகின்றன. அதற்கு விடையாக அவர் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஏழ்மைக்கும்

கடன்தொல்லைக்கும் உட்படுத்தப்பட்ட மக்களிடையே இருக்கிறார் என்ற விடையே தரப்படுகிறது. எனவே இயேசுவைப் பின்பற்றி அவருடைய இயக்கத்தில் இணைவோர் தங்களை ஓர் எளிய வாழ்வுக்கு உட்படுத்திப் பாதிக்கப்பட்ட மக்களுடன் சேர்ந்து தீய அமைப்புகளுக்கும் தகவுகளுக்கும் எதிராகப் போராட அழைக்கப்படுகிறார்கள்.

மனிதவியல் - சமூகவியல் அணுகுமுறைகள் வாயிலாக கலிலேயாவின் கடலோரங்களிலும், கிராமப்புறங்களிலும் சுற்றிநடந்த வரலாற்று இயேசுவைக் காண ஏற்பட்ட முயற்சியில் பு.ஏ.இன் பின்னணி பற்றி இதுவரை அறியப்பட்டிருந்தக் கருத்துக்களுக்கு வேறுபட்டக் கருத்துக்கள் தெரியவந்துள்ளன. எ.கா. கை கழுவுவதைப் பற்றி மார். 7இல் வரும் நிகழ்ச்சியை ஒட்டி முன்னர் அறிஞர்கள் ஒழுக்கம், சட்டம் சார்ந்த உண்மைகளை எடுத்துக் கூறினர். ஆனால் இப்போதுள்ள ஆய்வுகளில் அக்கால சமூக. பண்பாட்டு வழக்கம் சார்ந்து இத்தகு செயல்கள் விளக்கப்படுகின்றன. இதுபோன்று இயேசுவின் சில உவமைகளையும் கூற்றுக்களையும் அறிந்திட பாலஸ்தீனச் சூழலில் இருந்த தாவரங்கள், விலங்கினங்கள் பற்றிய அறிவு தேவைப்படுகிறது. எ.கா. கடுகு விதை பற்றிய உவமை சிறிய தோற்றம் (பற்றுறுதியின் அளவு) - பெரிய வளர்ச்சி (இறையரசு அல்லது திருச்சபை) என்ற உண்மையைச் சுட்டுவதாகவே கருதப்பட்டுவந்துள்ளது. ஆனால் பாலஸ்தீனக் கடுகுச் செடிகள் படர்ந்து வளர்ந்து சுற்றியுள்ளப் பகுதிகளை வசமாக்கிக் கொள்ளும் தன்மையுடையவை. இதுபோன்று இறையரசின் வளர்ச்சி பற்றிப் படர்ந்து வசமாக்கும் தன்மையுடையது என்பதே இயேசு கருத்தில் கொண்ட உண்மை. இதுபோல் ஏரோதுவை இயேசு நரிக்கு ஒப்பிட்டபோது நரியின் தந்திரம், சூழ்ச்சி ஆகியவையே சுட்டப்பட்டன என்பது பொதுக் கருத்து. ஆனால் பாலஸ்தீன நரிகள் பிற பிராணிகளைக் கொன்றொழிக்கும் தன்மையுடையவை. ஏரோதுவை நரி என்று இயேசு சொன்னதைத் தொடர்ந்து, கோழி தன் குஞ்சுகளைக் கூட்டிச் சேர்ப்பதுபோல் ...என்ற வாசகம் லூக்காவில் (13:33) வருவது கவனிக்கத்தக்கது.

மனிதவியல் - சமூகவியல் அணுகுமுறையிலேயே கூரிய திறானய்வுப் பார்வையில்லாதப் போங்குகளும் இருக்க முடியும் என்பதை இவண் சுட்டிக்காட்ட வேண்டும். எ.கா. தெய்சன் (G. Theissen) என்பவர் இயேசு இயக்கத்தினை சமூகவியல் துணை கொண்டு ஆய்ந்தார். அக்காலப் பாலஸ்தீனச் சூழலில் இந்த இயக்கம் செய்த பங்களிப்பை அவர் இதுபோன்ற பிற இயக்கங்களுடன் ஒப்பிட்டு நோக்கினார். இவர் கருத்துப்படி இயேசு ஓர் இயக்கத்தைத் தோற்றுவிக்கவில்லை. மாறாக அவரும் அவரது சீடர்களும் அக்கால கிரேக்க உலகில் சுற்றித் திரிந்த மெய்யியல் குழுக்களைப் போன்று ஒரு நாடோடித் துறவுக்கூட்டமாகச் சுற்றித் திரிந்தனர். வீட்டையும் செல்வங்களையும் துறந்த இவர்கள் எளிய வாழ்க்கை நடத்தினர். இவர்களின் கருத்துக்களை ஆதரித்த, ஆனால் தீவிரப் போங்குக்குச் செல்லாத சிறு சமூகங்கள் இவர்களை ஆதரித்தன. இயேசுவின் போதனையும் பணியும் யூதரிடையே இருந்த சீர்திருத்தக் குழுவினரின் சமூக மாற்றச் செயல்களுக்குட்பட்ட பொருள் கொடுப்பதாக இருந்தது. இயேசுவைப் பின்பற்றி நடந்தோரும், அவரை ஆதரித்தோரும் மனித மகனாகிய அவரின் துன்பம் தங்கள் துன்பத்தையும், அவர் போதித்த வரப்போகும் இறையரசின் மாட்சி தங்கள் நம்பிக்கையையும் பிரதிபலிப்பதாக உணர்ந்தனர்.

மேலும், மேல்குடிமக்கள் - ஏழைகள், நகர்வாசிகள் - கிராமக்குடியானவர்கள் ஆகியோருக்கிடையே இழுவை இருந்த சூழலில் இயேசு கிராமிய மக்களின் பக்கம் நின்று எருசலேமைத் தவிர வேறு நகர்களைப் புறக்கணித்தார் என்று தெய்சன் கூறுகிறார். அவர் கருத்துப்படி இயேசு கூட்டத்தினர் ஏற்கெனவே கருத்தளவில் நிலவியிருந்த இறையாட்சி என்பதைப் பழுதுநீக்கித் தீவிரமாக்கும் சீர்திருத்த உணர்வுடையோராய் இருந்தனர். இவர்கள் உள்ளூர் மேம்பாட்டை விரும்பாமல் அதன் அழிவையும் எங்கும் சிதறியிருந்த (காணாமல் போன ஆடுகள்) யூதரை உள்ளடக்கும் அனைத்துலகப் போக்கை ஆதரித்தும் பேசினர். இவர்களின் போங்கு ஏனைய யூத இயக்கங்களின் போங்குக்கு வேறுபட்டிருந்தது. சில நற்செய்தி மரபுகள் இயேசு தம் மரபில் நின்று, அதை மதித்து சட்டத்தை நிறைவேற்ற முயன்றார் (எ.கா. மத். 5:17-19) என்ற செய்தியைத் தருகின்றன. ஆனால் பாபிலோனிலிருந்து சிறைமீண்ட யூதரும் இறைவாக்கினரும் எண்ணியதுபோல், இயேசு தம் நற்செய்தி அக்கால உலகம் என்று அழைக்கப்பட்ட உரோமையின் கீழிருந்த நிலப்பகுதிகளுக்கெங்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டுமென்ற (மத். 28:19-20) அனைத்துலக நோக்குடையவராக இருந்தார்.

தெய்சனின் அணுகுமுறையை நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட இயேசு ஆய்வாளருள் ஒருவரான ஹார்ஸ்லி வன்மையாகக் குறைகூறியுள்ளார். தெய்சன் சமூகவியல் முறைகளில் ஒன்றான அமைப்பு சார்ந்த செயல்பாட்டுக்கோள் (Structural Functionalism) கூறுகின்ற, ஒரு சமூகத்தின் எல்லாக் கூறுகளும் சேர்ந்து அதன் உறுதியைக் காக்கின்றன என்னும் கருத்தைச் சார்ந்திருந்தார் என்று கூறுகிறார். இதனால் சிறுசிறு மாற்றங்கள் செய்து அமைப்பு பாதுகாக்கப்படுகிறதே தவிர இருக்கும் முரண்பாடுகள் சுட்டிக்காட்டப்படவில்லை; புரட்சிகரமாக அது மாற்றப்படவேண்டியதின் தேவை உணரப்படவுமில்லை. இது வட அமெரிக்க, ஐரோப்பிய மக்களில் செல்வந்தராக இருப்போரின் மெத்தன உணர்வுகளுக்கு உரம்போடுகின்ற கருத்து என்று ஹார்ஸ்லி சாடுகிறார். இயேசுவும், பவுலும் அடிப்படை மாற்றங்கள் செய்யாமல், சிறுசிறு மாற்றங்கள் செய்து சமூகக் கட்டுக்கோப்பைத் தக்கவைக்க முயன்றிருந்தால் அவர்கள் ஏன் கொலைத் தண்டனைக்கு உள்ளானார்கள் என்று இவர் கேட்கிறார். இயேசு இயக்கம் ஒரு போராட்ட இயக்கம் என்றும் பாலஸ்தீனக் குடியானவர் பக்கம் நின்று ஒடுக்கும் ஆற்றல்களான இராணுவ அரசியல், முதலாளித்துவப் பொருளாதாரம், ஏற்றத்தாழ்வுடைய சமூகம் ஆகிய அமைப்புகளுக்கு எதிராக நின்ற இயக்கம் என்றும் ஹார்ஸ்லி வலியுறுத்தினார். இன்று தெய்சனின் முடிவுகளுக்கேற்பவும், ஹார்ஸ்லியின் முடிவுகளுக்கேற்பவும் இருவகையாக ஆய்வுகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

விவிலிய ஆய்வில், குறிப்பாக, பு.ஏ. ஆய்வில் ஈடுபட்டிருப்பவர்கள் இன்றைய சமூகத்தில் எத்தகைய மக்களின் சார்பாளராக நிற்கிறார்கள் என்பது ஒரு முக்கியமானக் கேள்வியாகும். ஒரு நற்செய்திநூலை எழுதிய ஆசிரியர், வாசகர், இலக்கிய அமைப்பு, சொற்பொருள் முதலியவற்றை அறிந்திட முயற்சி செய்யும் முந்திய நிலைமாறி ஒரு செய்தி எத்தகு விளக்கங்களுக்கெல்லாம் இடம் கொடுக்கிறது என்று பார்ப்பதே முக்கியம். இந்தப் பார்வையின்படி விளக்கமளிப்பவர் எந்த சமூக, பொருளாதாரப் படிநிலையில் நிற்கிறார் என்பதைப் பொறுத்து அவரின் விளக்கமும் அமையும். இருப்பு நிலைகளைத் தக்க வைத்து, ஏற்றத் தாழ்வுகளை நியாயப்படுத்துவோர் இயேசுவை ஒரு சாதுவாக, அற ஒழுக்கத்தை வலியுறுத்துகிறவராக, சிறு சீரமைப்புகளைச் செய்பவராக வடிக்க விரும்புவதற்கு ஏற்கெனவே எடுத்துக்காட்டுகளைப் பார்த்தோம்.

விளக்கமளிப்பவரின் வாழ்க்கைச் சூழல் (Sitz im Leiben of the Interpreter) விவிலிய விளக்கத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம். அண்மைக் காலம் வரை ஆண்களே விளக்கவுரையாளர்களாக இருந்துவந்தனர். இப்போது சில பெண் அறிஞர்கள் விவிலிய அமைப்பையும் அதன் நூல்களையும் புதிய முறையில் அணுகுகிறார்கள். 2 இரா. 22:14-20இல் வரும் உல்தாள் என்னும் பெண் இறைவாக்கினர், இயேசுவைப் பின்பற்றிய பெண்சீடர்கள், ஒரு பெண் இயேசுவுக்குத் தைலம் பூசியது நற்செய்தி அறிவிக்கப்படுமிடமெல்லாம் நினைவுகூரப்படும் என்ற இயேசுவின் கூற்று (மத். 26:13) முதலிய குறிப்புக்கள் இவர்களுக்குள் ஒரு புது உந்துதலைக் கொடுத்தன. விவிலியக் குறிப்புக்கள், தள்ளுபடி நூல்கள் தரும் தகவல்கள், வேறு வரலாற்றுக் குறிப்புக்கள் ஆகியவற்றைக் கொண்டு விவிலியத்தின் உருவேற்பிலேயே ஆணாதிக்கம் விளையாடியிருக்கிறது என்று இவர்கள் எடுத்துக்காட்டுகிறார்கள். கடவுளை ஓர் ஆண் என்று கருதிய போங்கு அவரைப் பற்றிய உண்மைகளை எத்துணை மட்டுப்படுத்தியுள்ளது என்றும் அவரை, குறிப்பாக தூய ஆவியரைப் பெண்ணாகப் பார்ப்பதில் பொருத்தமுள்ளது என்றும் இவர்கள் கருதுகிறார்கள். இன்று உலகெங்கும் பெண்கள் படும் பாடுகளுக்கு முடிவு காண இவர்களின் விவிலியப் பார்வையும் விளக்கமும் மிகவும் உதவி செய்கின்றன. இந்தப் பெண் அறிஞர்களில் எலிசபெத் ஃபியோரென்சா (Elizabeth Fiorenza), லெட்டி. ரூஸ்ஸெல் (Letty Russell), ஆலிஸ் லேட்டி (Aalice Lattey), க்வாக் புய் லான் (Kwok Pui Lon) ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். பெண்ணுரிமைக்காகப் போராடும் பலர் இவர்களின் எழுத்துக்களால் பெரும் பயனடைந்துள்ளனர்.

இதுபோன்று கறுப்பின விளக்கவுரையாளர் வெள்ளையர் தந்த விவிலிய விளக்கங்களில் மறைமுகமாகக் காணப்படும் இன, நிற வெறியை வெளிப்படுத்துகிறார்கள். எ.கா. எத்தியோப்பிய அண்ணகன் பிலிப்புவின் விவிலிய விளக்கத்தைக் கேட்டு, கிறிஸ்துவை ஏற்று, திருமுழுக்குப் பெறுவதை லூக்கா தம் திருத்தூதுவர் செயல்கள் நூலில் (8:26-40) குறிப்பிடுகிறார். இங்கு இறைவாக்குரையின் நிறைவேற்றம் சுட்டப்படுகிறதை எடுத்துக்காட்டும்போது இந்த அண்ணகனின் தோல் நிறம் கறுப்பு என்பதையும், அவர் வலியத் திருமுழுக்குக் கேட்டப் பண்பையும் வெள்ளையரான விளக்கவுரைஞர் குறிப்பிடுவதில்லை. இதுபோன்ற உண்மைகளை க்ளாரிஸ் மார்ட்டின் (Clarice Martin) என்னும் ஆப்பிரிக்கப் பெண் விளக்கவுரையாளர் சுட்டிக்காட்டுகிறார். அத்துடன் எத்தியோப்பியன் என்ற பெயர் கறுப்பின மக்களைச் சுட்டும் ஒருபொதுப்பெயர் என்றும், இத்தாலியைச் சேர்ந்த கொர்நேலியு திருமுழுக்குப் பெறுமுன்னரே ஒரு கறுப்பர் திருமுழுக்குப் பெற்றது கறுப்பின மக்களுக்கு சிறப்பேற்றுகிறது என்றும் அவர் விவாதிக்கிறார். இதுபோன்று கறுப்பின மக்களின் தன்னுரிமையையும், விடுதலையையும் மையமாகக் கொண்டு காயீன் ஹோப் ஃபெல்டர் (Cain Hope Felder), இதுமெலங் மொசாலா (Itumeleng Mosaala), வின்சென்ட் விம்புஷ் (Vincent Wimbush) போன்ற ஆப்பிரிக்க அறிஞர்கள் விவிலிய விளக்கம் செய்துள்ளனர்.

சமூக, பொருளாதார, அரசியல் அமைப்புக்கு எதிராற்றலாக இயேசு இறையரசைக் கண்டார், அதன் ஒளியில் செயல்பட்டார் என்ற நிலைப்பாட்டின் அடிப்படையில் புதுமுறையில் நற்செய்திநூல்களை விளக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளனர். எ.கா. செட் மெயர்ஸ் (Ched Myers) என்பவர் மார்க்கு நற்செய்திநூலுக்கு ஒரு விளக்கவுரை (Binding the Strong Man) எழுதியுள்ளார். வட அமெரிக்கச் சூழலில் தாம் வாழ்ந்தாலும், ஆதிக்க ஆற்றல்களால் பாதிக்கப்பட்ட மக்களுடன் தம்மை ஒன்றுபடுத்திக் கொண்ட நிலையில் தான் இந்நற்செய்திநூலை ஆய்ந்துள்ளதாக அவர் கூறுகிறார். மார்க்கு நற்செய்திநூல் ஒரங்கட்டப்பட்ட மக்களுக்காக எழுதப்பட்டது என்றும், தியாகமும் போராட்ட உணர்வும் நிறைந்த ஒரு சீடத்துவ வாழ்வுக்கு இந்நற்செய்தி நூல் அழைப்புவிடுக்கிறது என்றும் இவர் கூறுகிறார். நுகர் வேட்கையும் ஆடம்பரமும் இத்தலைமுறையினரைக் கவர்ந்திழுக்கும்போது விழிப்புணர்ச்சி நிறைந்த ஓர் எளிய வாழ்வுக்கு இவர் தம் வாசகரை அழைக்கிறார். இயேசுவின் அருஞ்செயல்கள் ஒரு சிலருக்கு வாழ்வும், நலமும் கொடுத்தன என்பதோடு நிறுத்திக்கொள்ளாமல் ஒவ்வொரு அருஞ்செயலிலும் ஒரு சமூக மதிப்பீடு மறைந்திருப்பதை இவர் எடுத்துக்காட்டுகிறார். தீய ஆற்றலை முதலில் கட்டிவிடுவது என்ற பொருளில் அருஞ்செயல் நிகழ்ச்சிகளை விவரித்து அவற்றிற்கு ஒப்பான இன்றைய நிகழ்ச்சிகளை அவர் சுட்டிக்காட்டுகிறார். யார் கல்லைப் புரட்டித் தள்ளுவார்? (Who will roll away the Stone?) என்ற நூலில் செட் மெயர்ஸ் புரட்சிகரமான சீடத்துவத்தில் இருக்கும் ஏக்கங்களையும் தோல்விகளையும் ஐயப்பாடுகளையும் விவரித்து, இயேசுவின் உயிர்த்தெழுதலை நம்பிக்கைக்கு அடையாளமாக எடுத்துக்காட்டுகிறார். ஆனால் இந்த நம்பிக்கை நம்மை வாளாவிருக்க அல்ல, தொடர்ந்து சிலுவை சுமக்கத் தூண்டவேண்டும் என்பதை அவர் வலியுறுத்துகிறார். இவர் போன்றே இங்கிலாந்தில் க்றிஸ்டோபர் றோலண்ட் (Christober Rolland) என்பவர் விடுதலைதரும் விளக்கவுரை (Liberative Exegesis) என்னும் தலைப்பில் நூல் ஒன்று எழுதியுள்ளார்.

மேற்கூறிய நோக்கில் நற்செய்திநூல்களில் வரும் ஒரு பட்டப்பெயரை அல்லது கருத்தை எடுத்து விளக்குகின்ற முயற்சிகளும் உள்ளன. எ.கா. மோர்னா ஹூக்கர் (Morna Hooker) என்பவர் மார்க்குவில் வரும் மனிதமகன் பற்றி ஆய்வு செய்து ஒரு நூல் வெளியிட்டுள்ளார். மனிதமகன் துன்புறுகிறவராகவும், மாட்சியடைந்தவராகவும் காட்டப்படுவது ஒரே உண்மையின் இரு கூறுகள் என்று அவர் விளக்குகிறார். தானியேல் 7:13-27இல் வரும் மனிதமகனின் பின்னணியை அவர் ஆய்ந்து அவர் இஸ்ரயேலரில் ஒடுக்கப்பட்ட மக்களின் கூட்டுப்பிரதிநிதியாக இருக்கிறார் என்றும் இதனைச் சரிக்கட்ட ஆற்றலும் அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்படுகிறது என்றும் விளக்கிக்காட்டுகிறார். இயேசுவின் காலத்தில் வாழ்ந்த யூதர்கள் இதைப்பற்றிய அறிவுடையவர்களாக இருந்தார்கள் என்றும் இச்சூழலில்தான் இயேசு மனிதமகனாக, ஒடுக்கப்பட்டுத் துன்புறும் மக்களுக்குப் பிரதிநிதியாக, அவர்களின் சார்பில் மன்னிக்கும் அதிகாரம் பெற்றவராகக் காட்டப்படுகிறார் என்றும் அவர் நிறுவுகிறார்.

விடுதலை நோக்கில் பு.ஏ.ஐ ஆய்கின்றவர்களில் பலர் சமநோக்கு நற்செய்தி நூல்களுக்கும் யோவான் நற்செய்தி நூலுக்குமிடையே பெருத்த வேறுபாட்டைக் காண்கிறார்கள்; இதுபோன்றே இயேசு இயக்கத்திற்கும் பவுல் போன்ற ஏனைய திருத்தொண்டர்கள் செய்த விளக்கத்திற்கும் பெரும் வேறுபாடு இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்கள். ஆனால் அவர்களின் கருத்துப்படி இவ்வேறுபாடு தவிர்க்க இயலாதது; ஏனெனில் யூதச்சூழலிலிருந்து கிரேக்கச் சூழலுக்குச் சென்ற நற்செய்தி அச்சூழலின் தேவைக்கேற்ப விளக்கப்பட வேண்டியிருந்தது. எ.கா. அச்சூழலில் இருந்த வார்த்தை (Logos) என்ற கருத்துவடிவத்தை யோவான் எடுத்து கிறிஸ்துவின் முன்னிருப்பை விளக்கினார். ஆனால் இப்படிச் செய்ததால்

சமநோக்கு நற்செய்திநூல்களில் இருக்கும் புரட்சிப்பார்வை மங்கிவிட்டது என்பது இவர்களின் கருத்து. அதே நேரத்தில் புரட்சிப்பார்வை ஒருவிதத்தில் தொடர்ந்துள்ளது என்று சாதிக்கிறவர்களும் உள்ளனர். மனிதமகன் பற்றிய சம நோக்குப் பார்வை யோவானிலும் இருப்பதை இவர்கள் எடுத்துக்காட்டுவர்; கொரிந்தியருக்கு பவுல் எழுதுவதைப் போன்று பலமுள்ளவர்களை வெட்கப்படுத்தப் பலவீனமான ஒரு சமூகத்தை கடவுள் தெரிந்துகொண்டதைச் சுட்டுவர் (1 கொரி. 1:26-28). ஆண்-பெண், யூதர்-யூதரல்லாதார் போன்ற வேறுபாடுகள் கடந்த ஒரு கூட்டுறவு (கலா. 3:28) திருச்சபையின் வாயிலாக உருவானதை எடுத்துக்காட்டுவர். எல்லாவற்றிற்கும் மேலாக, தொடக்கத் திருச்சபையினர் உரோமைப் பேரரசின் மேலாதிக்கத்திற்கு எதிராகச் செய்தப் போராட்டத்தின் நேரடியும், மறைமுகமுமான விவரிப்பாக திருவெளிப்பாடு நூலை இவர்கள் எடுத்துக்காட்டுவர்.

இப்படிப்பட்ட அணுகுமுறைகளெல்லாம் இன்றைய கிறிஸ்தவத் திருச்சபைகளைப் பாதித்துள்ளனவா என்ற கேள்வியை எழுப்புவதில் தவறில்லை. பெருமளவில் திருச்சபையில் எழுத்துக்கெழுத்தாகத் திருமறையை அணுகும் அடிப்படைவாதம் ஒருபுறமும், பொதுவான அறநெறிப்பார்வை மறுபுறமும் இருப்பதைப் பார்க்கிறோம். புரட்சிப்பார்வை மிகவும் சிறிதளவே உள்ளது. இதற்குக் காரணம், கூரிய ஆய்வுகளும் அவற்றைக் கற்பதும் பல்கலைக்கழகங்களுக்குள் அடங்கிவிடுகின்றன. மேலை நாட்டுத் திருச்சபைகள் பலவற்றில் மேலோட்டமான விவிலியப் பார்வையும், கதை விவரிப்புகளுமே அருளுரைகளில் வெளிப்படுகின்றன. அண்மைக்கால விவிலிய ஆய்வாளர்களில் புரட்சிப்பார்வையுடையவர்களில் பலர் இன்றையத் திருச்சபையைப் பெருமளவில் கருத்தில் கொள்ளாமல் அதற்கப்பால் உலகில் மானிட நேயமும், நீதியும், சமத்துவமும் வளரவேண்டுமென்றே விரும்புகிறார்கள்.

அதே நேரத்தில் விவிலிய ஆய்வின் பயன்களைத் திருச்சபைக்கு எடுத்துக்கூறும் முயற்சிகளும் நடந்தே வருகின்றன. எ.கா. அனைத்துலகத் திருச்சபை மன்றத்தில் விவிலிய வெளிச்சத்திற்காகப் பணிபுரிந்து வந்த ஹேன்ஸ் ரூடி வீபர் (Hans Ruedi Weber) என்பவர் திருச்சபைகளை மனத்திற்கொண்டு ஆழ்ந்த உண்மைகளை எளிய முறையில் எழுதி வருகிறார். 1979இல், இயேசுவும் குழந்தைகளும் (Jesus and the Children) என்ற தலைப்பில் அவர் வெளியிட்ட நூல் தன் துணைத் தலைப்பில் அருளுரை, படிப்பு ஆகியவற்றிற்கான மூலம் என்ற வாசகத்தைக் கொண்டுள்ளது. வளர்ந்தவர்களின் உரிமை, விடுதலை, வளர்ந்தவர்களின் அனுபவம் ஆகியவற்றையே மையமாகக் கொண்டு விவிலிய அணுகுமுறைகளும் விளக்கங்களும் பெருகிக்கொண்டிருக்கும் சூழலில் எந்தநிலையிலும் எல்லாரைவிடவும் மிகவும் பாதிப்புக்குள்ளாகும் குழந்தைகளை இறையரசின் சின்னங்களாக, கடவுளின் குணவடிவங்களாக நடுவே நிறுத்திப் பார்க்க இந்நூல் துணைசெய்கிறது.

இன்னொரு விதத்திலும் விடுதலை உணர்வுடன் கூடிய விவிலிய ஆய்வு மக்கள் தளத்திற்கு வந்துள்ளது. திருப்பாடல்கள் உட்பட விவிலிய நூல்கள் பல ஒதுக்கப்பட்டு ஒரங்கட்டப் பட்டவர்களுக்காக, அப்படிப்பட்டவர்களால் அல்லது அப்படிப் பட்டவர்களோடு தங்களை ஒன்றுபடுத்திக்கொண்டவர்களால் எழுதப்பட்டவை என்ற உண்மையை சிறப்பாக இலத்தின் அமெரிக்க விடுதலை இறையியலார்கள் வலியுறுத்தினார்கள். இதன் விளைவாக இலத்தின் அமெரிக்க நாடுகளில் உருப்பெற்று வளர்ந்துவரும் அடித்தள சமூகத்தவர் (Base Communities) குழுவாகக் கூடியிருந்து விவிலியப்பகுதிகளைக் கூட்டாகச் சிந்தித்து மனத்தில்படும் உண்மைகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்கிறார்கள்.

7. இந்தியாவில் விவிலிய ஆய்வுகள்

நாம் இதுவரையும் பார்த்த விவிலிய ஆய்வுகள் பெருமளவில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் செய்யப்பட்டவை. கிறிஸ்தவ நாடுகள் என்று அறியப்படும் இந்நாடுகளின் பல்கலைக் கழகங்களில் விவிலியக் கல்வி ஒரு முக்கியத் துறையாகச் செயல்படுகிறது. அகழ்வாராய்ச்சியிலும், வரலாற்று, இலக்கிய ஆய்விலும் இந்நாடுகள் ஆர்வம் காட்டி பெருமளவில் பணத்தையும் செலவளித்துள்ளன. சிறந்த விவிலிய அறிஞர்களை உருவாக்கியதுடன் இந்நாடுகள் ஆழ்ந்த இலக்கியங்களையும் படைத்துள்ளன. இன்று விவிலிய ஆய்வு இந்நாடுகளின் ஆய்வுத் தொழிலகங்களில் (Research Industries) ஒன்று என்று சொல்லுமளவிற்கு நவீன வசதிகளையுடைய ஆய்வு மையங்கள் இந்நாடுகளில் செயல்படுகின்றன. இந்தியாவில் விவிலியத்துறையில் உயர் கல்வி பெற விரும்புவோர் பெருமளவில் மேலைநாடுகளுக்கே செல்கின்றனர். விவிலிய ஆய்வுபற்றிய நூல்கள் இங்கு மிகவும் குறைந்த அளவிலேயே உள்ளன. வட்டாரமொழிகளில் காணப்படும் ஒரு சில நூல்கள் இங்கு மிகவும் குறைந்த அளவிலேயே உள்ளன. வட்டார மொழிகளில் காணப்படும் ஒரு சில நூல்கள் ஆங்கில நூல்களின் மொழிபெயர்ப்புகளாகவோ, கருத்துத் திரட்டுகளோகவோ உள்ளன. நிலைமை இவ்வாறிருக்க, இந்திய விவிலிய மாணவர்கள் தங்கள் சூழலில் நின்று தங்களுக்கே உரித்தான முறைகளில் விவிலிய ஆய்வு செய்யவேண்டுமென்ற எண்ணம் இன்று வளர்ந்துகொண்டிருக்கிறது. இந்த எண்ணம் தொடர்பாக எழுந்த ஒரு சில முயற்சிகளை இவண் குறிப்பிடுவோம்.

இந்தியக் கிறிஸ்தவ இறையியலின் தொடக்க முயற்சிகளில் விவிலியம் எவ்வாறு பார்க்கப்பட்டது என்பதை இந்நூலின் 12வது கட்டுரை குறிப்பிடுகிறது. இக்கட்டுரையில் இடம் பெறும் சிந்தனையாளர்களில் சிலர் ஒரு குறிப்பிட்டப் பகுதியை முக்கியப்படுத்தினார்கள்; சிலர் இந்துசமயத்தில் வரும் சுருதி இலக்கியத்துடன் அதை ஒப்பிட்டார்கள்; சிலர் அறிதலுக்குரிய ஒரு மூலமாக (பிரமாணம்) விவிலியத்தைக் கண்டார்கள்; சிலர் விவிலியக் கருத்துக்களை இந்து மறைநூல்களின் கருத்துக்களோடு ஒப்பிட்டார்கள். சாது சுந்தர் சிங் போன்றோர் விவிலிய வார்த்தைகள் மானிட வார்த்தைகளாமினும் அவற்றினுள் உயிர்த்துடிப்புள்ள இறையாற்றலும், தூய ஆவியின் தூண்டுதலும் இருப்பதாக நம்பினார்கள்.

மேற்கூறிய இறையியலார்களில் ஆழ்ந்த விவிலிய ஆய்வு செய்தவர் பேராயர் A.J. அப்பாசாமி என்றால் மிகையாகாது. நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட, கேம்பிரிட்ஜ் பு.ஏ. அறிஞர்களில் ஒருவரான பேராயர் வெஸ்ட்காட் என்பவர் நான்காம் நற்செய்திநூலின் பேரில் ஆழ்ந்த விளக்கவுரை ஒன்று இனிதான் உருவாகவேண்டும் என்றும் ஓர் இந்திய இறையியலார் மட்டுமே அந்த வேலையைச் செய்யமுடியும் என்றும் நம்பினார். இந்த நம்பிக்கையை நிறைவேற்றுவதாக அப்பாசாமியின் முயற்சி அமைந்திருந்தது. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் அறிவர் பட்ட ஆய்வுக்காக அவர் யோவான் நற்செய்திநூலை எடுத்துக் கொண்டார்; அதில் காணப்படும் இறையிணைவை (Mysticism) இந்து சமயப் பக்தி இலக்கியங்களின் ஒளியில் விளக்கினார்; வார்த்தையையும், தூய ஆவியையும் உள்ளுறையும் ஆற்றல்களாகக் கண்டார்; விண் தந்தைக்கும் இயேசுவுக்கும் இடையே இருந்த ஒருமைப்பாடு பொருள் (substan

சார்ந்ததாயிராமல் உறவு சார்ந்தது என்று விளக்கினார். வைணவப் பக்தி இலக்கியங்களிலும், இராமானுஜரின் விசிஷ்டாத்வைதத்திலும் உடல் - ஆன்மா என்ற அளவில் மானிட - இறை உறவு இருக்கிறது என்பதைச் சுட்டி கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் என்பது அத்தகைய நெருக்கமான உறவைப் போன்றது என்று விளக்கினார்.

அப்பாசாமியைத் தொடர்ந்து சில இந்தியக் கிறிஸ்தவச் சிந்தனையாளர்கள் யோவான் நற்செய்தி நூலின் கருத்துக்கள் இந்திய மெய்யியலின் அடிப்படைக் கருத்துக்களுடன் (எ.கா. வார்த்தை - ஒம்) ஒப்பிடத்தக்கவை என்பதைக் காட்டினார்கள். ஆனால் அதே நேரத்தில் பல்சமயச் சூழலில் இந்த நற்செய்தி நூலில் வரும் இயேசுவின் நானே வாக்கியங்கள் கிறிஸ்தவத்தின் தனிஉயர்ச் சிறப்பை எடுத்துக்கூறப் பெரிதும் பயன்படுத்தப் படுகின்றன. ஆக, யோவான் நற்செய்தி நூல் ஒருபக்கத்தில் சமய உரையாடலுக்கும், மறுபக்கத்தில் தீவிர நற்செய்திப் பணிக்கும் துணைபோகின்றதாக உள்ளது.

அண்மையில் இந்தியாவின் இருபெரும் சூழல்களை மனத்திற்கொண்டு விவிலிய அறிஞர் சிலர் தனிப்பெரும் அழுத்தம் கொடுத்தனர். இவற்றில் ஒன்று இந்தியாவின் வறுமை, அநீதி, சமூக - பொருளாதார ஏற்றத்தாழ்வுச் சூழல்; இன்னொன்று அதன் பல்சமயச் சூழல். இவ்விரு சூழல்களின் ஒளியில் அழுத்தப்பட்டச் சில உண்மைகளை இவண் பார்ப்போம். நாம் இந்திய முயற்சிகளை மட்டுமே இங்கு குறிப்பிடுகிறோம். இதுபோன்ற சிந்தனைகள் ஏனைய ஆசிய நாடுகளிலும் செய்யப்படுகின்றன என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

80 கோடிக்கும் மேலான இந்திய மக்களில் 50 விழுக்காட்டிற்கு மேலானோர் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவும் வறுமைக்கோட்டின் கீழும் வாழ்கிறார்கள். ஏறத்தாழ 20 விழுக்காடு மக்கள் நெடுங்காலமாகத் தீண்டத்தகாத சமூகத்தினராக நடத்தப்பட்டு வந்துள்ளனர். இவர்கள் இன்று தலித் (= நொறுக்கப்பட்டோர்) என்று தங்களை அழைத்துக் கொண்டு தங்கள் உரிமைக்காகவும் வரலாற்றில் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி சரிக்கட்டப்படவும் போராடுகிறார்கள். இதுபோன்று மலைவாழ் மக்கள் தங்கள் தனித்துவம் பாதுகாக்கப்படவும் உரிமை பேணப்படவும் போராடுகிறார்கள். இவர்கள் தவிர பொருளாதார நிலையிலும் செய்கின்ற தொழில்கள் முன்னிட்டும் ஒரங்கட்டப்பட்ட மக்கள் எல்லா சமூகங்களிலும் இருக்கிறார்கள். இவர்களிடையே இருக்கும் பெண்களின் நிலை இன்னும் மோசமாக உள்ளது, குழந்தைகளின் நிலை அதைவிடப் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில் முற்போக்குச் சிந்தனையாளர்கள் சிலர் மேலைநாடுகளில் எழுந்துள்ள விடுதலை சார்ந்த விவிலிய ஆய்வுகளைக் கற்று இந்தியச் சூழலில் தங்களுக்கே உரித்தான முறையில் விளக்கமளிக்கிறார்கள். அடிப்படையில் கடவுளின் நீதி வேட்கையையும், ஏழைகளுடன் அவர் பக்கம் சார்வதையும் இவர்கள் எடுத்துக்காட்டுகிறார்கள். எகிப்தில் இஸ்ரயேல் மக்கள் பட்டப் பாடுகளுடன் இந்தியாவில் ஏழைகள் படும் பாடுகளை இவர்கள் இணைத்துக்கொள்ளுகிறார்கள். மேலும் இவர்கள் அழுத்தப்படி மோசேக்கு எரியும் முட்செடி வாயிலாக வெளிப்பட்ட இறைவன் இன்று துன்பத்தால் உள்ளம் எரிந்துகொண்டிருக்கும் மக்களுடன் தாமும் எரிந்து கொண்டிருக்கிறார். முட்செடி எரிந்து சாம்பலாகாதது ...க்கைக்கு அடையாளமாயிருக்கிறது. வாக்குறுதியின் ... இஸ்ரயேல் மக்கள் புரட்சி செய்து போராடியே பெற்றார்கள். ஒடுக்குதலும் ஆதிக்கமும் நிறைந்த மக்களினத் தவரிடையே வாழ்ந்த இஸ்ரயேலர் ஓர் எதிர்ப் பண்பாட்டை, மாற்றுச் சமூகத்தை உருவாக்க அழைக்கப்பட்டிருந்தார்கள். இந்த அழைப்பில் அவர்கள் தவறிப்போனபோது இறைவாக்கினரால் கண்டிக்கப்பட்டார்கள். இஸ்ரயேலரின் வரலாற்றோடும் ஏனைய மக்களோடும் தம்மை இணைத்துக்கொண்ட இறைவன் திக்குமுக்காடுவதையும் துன்புறுவதையும் இறைவாக்கினர் எடுத்துக்காட்டுகிறார்கள். ப.ஏ. இறைவாக்கினரின் கூரிய சமூக, பொருளாதாரத் திறனாய்வு இந்தியச் சூழலுக்குப் பொருந்தும்.

இறைவாக்கினர் மரபிலும், துன்புறும் பணியாளாகவும், ஏழைகளின் தோழனாகவும் இயேசு வாழ்ந்தார். ஒதுக்கப்பட்ட மக்கள் வாழ்ந்த கலிலேயாவுக்கு அவர்தம் பணியில் முன்னுரிமை கொடுத்தார். பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதி என்ற பொருளில் அவர் தம்மை மனித மகன் என்று அழைத்துக் கொண்டார். அந்தத் தகுதியினால் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் தமக்கு உண்டென்று அவர் சாதித்தார். இயேசுவின் உரைகள், உவமைகள், அருஞ்செயல்கள் அனைத்தும் இறையரசு ஏழைகளுக்கு என்பதைச் சுட்டுகின்றன. மிகவும் சிறியவர்களான கலிலேய சமூகத்தவர் ஆட்டுக்குட்டிகள், அவர்களை ஒடுக்கியோர் ஓநாய்கள். ஓநாய்கள் மனந்திரும்பி ஆட்டுக்குட்டியின் நிலைக்கு வருவதில்தான் அவற்றின் மீட்பு அடங்கியிருக்கிறது. ஆட்டுக்குட்டியினர் யாருடைய பாவங்களை மன்னிக்கிறார்களோ அவர்களுடைய பாவங்களையே ஆண்டவரும் மன்னிக்கிறார். மேலும், இயேசு உரோமைப் பேரரசின் மேலாதிக்கத்தையும், அதற்குக் கைக்கூலிகளாக இருந்த யூத சமயத் தலைவர்களையும் எதிர்த்தார். கடைசியில் அரசியலும் சமயமும் சேர்ந்து அவரை சிலுவையில் அறைந்து கொன்றன. இயேசுவை இறைவன் உயிருடன் எழுப்பி நீதியைச் சரிக்கட்டினார்; நொந்துபோயிருந்த மக்களுக்கு நம்பிக்கை வழங்கினார். கலிலேயக் கூட்டத்தினரே உலகெங்கும் நற்செய்தி அறிவிக்கும்படி ஓநாய்களுக்குள் ஆட்டுக்குட்டிகளாக அனுப்பப்பட்டனர்.

கலிலேயச் சீடர்களின் அருட்பணியினால் நற்செய்தியை ஏற்று இயேசுவின் சீடர்களாக, கிறிஸ்தவர்களாக மாறினவர்கள் பலவீனரும், ஒரங்கட்டப்பட்டவர்களுமாயிருந்தவர்களே. பவுலடியார் புறவினத்துச் சூழலுக்கேற்ப நற்செய்திக்குப் புதிய கூறுகளைக் கொடுத்து விளக்கமளித்தாலும் அக்கால உலகில் கிறிஸ்தவர்கள் உப்பாக, ஒளியாக, மாற்றுச் சமூகத்தின் சார்பாளராக இருக்க அழைக்கப்பட்டவர்கள் என்ற உண்மை மறக்கப்பட வில்லை. உரோமையின் ஆதிக்கத்துக்கு எதிராகத் தொடக்கக் கிறிஸ்தவர்கள் பற்றுறுதிப் போராட்டம் செய்ததையே திருவெளிப்பாடு நூல் விவரிக்கிறது. எரிந்தும் சாம்பலாகாத முட்செடி, இறைவாக்கினர் காட்சி கண்ட புதிய உலகம், இயேசு வெளியிட்ட நம்பிக்கை ஆகியவற்றின் தொடர்ச்சியாக புதிய வானம் - புதிய பூமி பற்றிய ஒரு பரந்துபட்டக் காட்சியோடு விவிலியத்தின் கடைசிநூலான திருவெளிப்பாடு முடிவடைகிறது.

மேற்கூறிய உண்மைகளைத் திறவுகோல்களாகக் கொண்டு விவிலியத்தின் பகுதிகளில் சிலவற்றை மட்டும் தெரிந்து கொண்டு, ஏனையவற்றை ஒதுக்கிட அல்லது மறுவிளக்கம் செய்திட இந்திய விவிலிய அறிஞர் தயங்குவதில்லை. எ.கா. கடவுள் வேள்வியை விரும்பினார் என்ற மரபை இவர்கள் மறுக்கிறார்கள்; சிலுவையை வேள்வியாகவும் மானிடப்பாவங்களுக்குக் கழுவாயாகவும் கருதி தரப்படுகின்ற விளக்கங்களை வெறுக்கிறார்கள்; துன்புறும் மக்களிடையே துன்புறும்

இறைவனாக இருப்பவரின் தன்மைக்கு இந்த எண்ணங்களும் விளக்கங்களும் ஒவ்வாதவை என்கிறார்கள்.

இந்த அடிப்படைப் போங்கு இருந்தாலும் தங்கள் திருச்சபைச் சூழலுக்கும், தாங்கள் ஈடுபாடுகொண்டுள்ள மக்கள் இயக்கங்கள், செயல்பாட்டுத்திட்டங்களின் சூழலுக்கும் ஏற்ப இவர்களின் விவரிப்புகளிலே, அழுத்தத்திலே வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்தியாவில் கத்தோலிக்க வட்டாரங்களிலும், சீர்திருத்தசபை வட்டாரங்களிலும் இவ்வாறு விவிலியத்தை அணுகுகிறவர்கள் இருக்கிறார்கள். எ.கா. கத்தோலிக்கரிடையே செபஸ்தியான் காப்பன், ஜார்ஜ் சோரஸ் பிரபு முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சீர்திருத்த வட்டாரத்திலே, மதுரை தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் சில பேராசிரியர்கள், குறிப்பாக தயான்சந்த் கார், விடுதலை சார்ந்து விவிலியத்தை அணுகுகிறார்கள்.

விடுதலை சார்ந்த விவிலிய விளக்கம் முற்றும் முடிந்த கோட்பாட்டு நிலைக்குச் செல்வது ஆபத்தானது. எனவே அதே விடுதலை வேட்கையோடு ஒரமுத்தப்பார்வைகளை ஐயுறுவோரும் இந்த வட்டாரங்களில் உள்ளனர். மேற்கூறிய விவிலியப் பார்வையை இன்றைக்கிருக்கும் இந்தியத் திருச்சபையுடன் எப்படித் தொடர்புபடுத்துவது என்பது இவர்கள் எழுப்பும் கேள்வி. ஏனெனில் இந்தப் பார்வையை இந்தியத் திருச்சபை புரிந்து ஏற்றுக்கொண்டால் அதன் அமைப்பிலும், வழிபாட்டிலும், பணியிலும் தலைகீழ் மாற்றங்களைச் செய்ய வேண்டிவரும். இந்நிலையில் இடிப்பதிலும் கட்டுவதிலும், பிடுங்குவதிலும், நாட்டுவதிலும் எத்தகையப் போதக அணுகுமுறையை (pastoral approach) நாம் கையாளவேண்டுமென்று சிந்திப்பது இன்றியமையாதது. இந்தியத் திருச்சபையில் பழமைவாதமும், விவிலிய அணுகுமுறையில் அடிப்படைவாதமும் ஆழ வேருன்றிக் காணப்படுகின்றன. மாற்ற முடியாத சடங்கு, நெஞ்சுருக்கும் பக்தி ஆகிய இந்து சமயத்தின் இருபோங்குகளின் பாதிப்பையும் இந்தியக் கிறிஸ்தவர்களிடையே காண முடிகிறது. இத் திருச்சபையைப் பற்றிய அக்கரையும் அனுதாபமும் இருந்தால் விவிலிய விளக்கம் சிந்தனையாளர் வட்டங்களோடு, இறையியல் கல்லூரிகளோடு நின்றுவிடக்கூடாது. ஒருவேளை கிறிஸ்தவர்களைத் தொடும் அளவில் விடுதலை சார்ந்த கரிசனைகளை அவர்களுடன் தொடர்புபடுத்த அவர்களின் சூழல்களில் காணப்படும் ஊடக வளங்களைக் கண்டுபிடித்து அவற்றைப் பயன்படுத்த வேண்டும். அதே நேரத்தில் இயேசுவை ஒரு புரட்சியாளராக எடுத்துக்காட்டும் விவிலிய விளக்கம் திருச்சபையின் கோட்டைக்குள் கட்டுப்பட்டதல்ல என்போரும் உளர். அவர்கள் மனித நேயமுடைய சமயஞ்சார்ந்த, சமயஞ் சாராத மக்கள் எவரோடும் சேர்ந்து பணியாற்ற விவிலியம் தங்களுக்கு உதவுகிறது என்று கூறலாம். அப்படியானால் குறிப்பிட்ட நோக்கோடு, ஒரு சமூகத்தவர் உருவாக்கிய மறைநூலை தனிமனிதர் கையிலெடுத்து ஒரு பொது நூலாகப் பயன்படுத்தலாமா என்ற கேள்விக்குத் தகுந்த விடையளிக்க வேண்டிவரும்.

மேலும் ஒரமுத்தப் பார்வைகள் விவிலியத்திற்குள்ளேயே இருக்கும் பன்மைப் பார்வையை மழுங்கடித்துவிடுகிறதோ என்ற ஐயம் எழுவதில் தவறில்லை. எ.கா. புரட்சிக்குத் தண்டனையாக இயேசு சிலுவையில் மாண்டார் என்பது ஒரு பார்வை. ஆனால் தொடக்கக் கிறிஸ்தவர்கள் இந்தச் சிலுவையில் இறைவனின் இயல் கடந்த அன்பைக் கண்டார்கள்; ஆதிக்கமும் அதிகாரமும் ஆணியடிக்கப்படுவதைக் கண்டார்கள்; முரண்பட்ட சமூகங்கள் ஒப்புரவாக்கப்படுவதைக் கண்டார்கள்; மானிட ஞானம் பைத்தியமாக்கப்படுவதைக் கண்டார்கள்; உடல் இச்சைகள் சிலுவையில் அறையப்பட வேண்டுவதின் தேவையைக் கண்டார்கள். இப்படி ஒரே நிகழ்ச்சிக்குப் பல்வேறு பொருள்கள் பொருத்தப்படுவது முற்றிலும் தவறா? அத்துடன், ஆட்டுக்குட்டிகளாயிருந்தோர் ஓநாய்களாக மாறும்போது என்ன செய்வது? ஒரே ஆளே ஒரு தளத்தில் ஆட்டுக்குட்டியாகவும் இன்னொரு தளத்தில் ஓநாயாகவும் மாறும் வாய்ப்பு இருக்கிறதே! எ.கா. ஒரு மனிதர் சமூகத்தில் ஒரங்கட்டப்பட்டவர் என்ற நிலையில் ஆட்டுக்குட்டியாக இருக்கிறார், ஆனால் ஓர் ஆண் என்ற நிலையில் தம் மனைவி முன் ஓநாயாக நடந்துகொள்கிறார்; பின் இருவரும் வளர்ந்தவர்கள் என்ற நிலையில் அப்பாவிக் குழந்தைகள் முன் ஓநாய்களாக நடந்து கொள்கிறார்கள்! அப்படியானால் குழந்தைகளைப்போல் வலுவற்ற, களங்கமற்ற நிலைக்கு வரும்போதுதான் இறையரசின் குடிமக்களாகிறோம் என்ற இயேசுவின் கூற்றை எப்படிச் செயல்படுத்துவது? வாய்ப்பு கிடைக்கும்போது பிறரை ஒடுக்குகின்ற உணர்வு, சுயநல உணர்வு முதலியவை எல்லா மானிடருக்கும் உரியதுதானே? அப்படியிருக்க மானிட ஆள்மையே ஓர் இழுவை நிலைக்குட்பட்டிருக்கிறது என்ற பவுலின் கூற்றை ஏற்பதில் என்ன தவறிருக்கிறது? இப்படி எத்தனையோ கேள்விகள் எழுகின்றன. இவற்றை உரையாடல் நெறிநின்று சிந்தித்து விடைகாணும்போது உண்மையில் விவிலிய அணுகுமுறை உயிர்த்துடிப்பு மிக்கதாகவும், அகன்று விரிந்த போங்குடையதாகவும் விளங்கும்.

இனி பல்சமயச் சூழலுக்கு வருவோம். இந்திய விவிலிய அறிஞர் தமக்கே உரித்தான முறையில் விவிலியத்தை ஆய்ந்து விளக்க இச்சூழல் உதவுகிறது. பல்வேறு மறைநூல்கள் பல்வேறு மக்களால் போற்றிக் காக்கப்பட்டு, விளக்கப்பட்டு வரும் சூழலில் விவிலியத்தைக் கையிலெடுக்கும் ஒருவரின் முன் ஒப்படைப்பு மிகவும் கருதத்தக்கது. இந்த ஒப்படைப்புடன் இக்கட்டுரை ஆசிரியர் உட்பட சிலர் பின்வரும் முறைகளில் ஆய்வுசெய்துள்ளனர்.

முன்பெல்லாம் விவிலிய உண்மைகளும், பிறசமயக் கருத்துக்களும் ஒப்பிடப்பட்டு விவிலியத்தின் உயர்வு போற்றப்படும். ஆனால் இப்போதெல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகளாக, அணிசெய்பவைகளாகக் கருத்துக்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன. எ.கா. பகவத் கீதையும் பு.ஏ.உம் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது; இறைவடிவங்களாக கிருஷ்ணனும் இயேசுவும் ஒப்பிடப்பட்டுள்ளனர்; இறையிணைவு நிலையுடன் சமூக - பொருளாதாரக் கரிசனையும், சிலுவையுடன் மகிழ்ச்சியும் எவ்வாறு சேர்ந்து செல்லக்கூடும் என்று காட்டப்பட்டுள்ளது (Ref. Ishanand Vempeny, *Krishna and Christ*). இதுபோல அடியவர் கூட்டுறவு அல்லது தூயவர்களின் ஒன்றிப்பு கிறிஸ்தவத்திலும் சைவசமயத்திலும் இறையியல் சிறப்புடன் கருதப்பட்டிருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறே பிறர் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதை அவர்களுக்குச் செய்யுங்கள் என்ற இயேசுவின் கூற்று யூத இரபிகளின் எழுத்துக்களிலும், மகாபாரதத்திலும், பௌத்தத் திருநூல்களிலும் காணப்படுவது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதுபோன்ற முயற்சிகள் தென்னாசிய நாடுகளிலும் காணப்படுகின்றன. குறிப்பாக பு.ஏ. எழுத்துக்களில் பௌத்த எழுத்துக்களின் பாதிப்பும், அனத்தா என்னும் பௌத்தக் கோட்பாட்டை ஆன்மா இல்லை என்ற கருத்திலல்லாது வெறுமையாக்குதல் என்ற பொருளில் விளக்கலாம் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இப்ப' செய்வதால் எல்லாச் சமயங்களும் ஒன்று என்ற மு'

அறிஞர்கள் வரவில்லை; வேறுபாடுகளை அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். ஆனால் ஒப்புமைகளையும், ஒன்றுக்கொன்று நெருங்கிவரும் கருத்துக்களையும் ஒத்துக் கொள்வதால் அடிப்படையான வேறுபாட்டினை ஆழமாகவும், கூர்மையாகவும் அறியவும் எடுத்துக்கூறவும் வாய்ப்பு இருப்பதை இவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

விளக்கவுரையாளர்களின் வாழ்க்கைத்தளம் (location) அவர்களின் ஆய்வைப் பாதிக்கின்றது அல்லது வளப்படுத்து கின்றது என்பதை இந்தியாவின் பல்சமயச் சூழலில் விவிலிய விளக்கம் செய்கிறவர்களின் முயற்சிகளிலிருந்து கண்டு கொள்ளலாம். சமயங்களிடையே உரையாடல் நடைபெறுவதற்கு விவிலியம் தரும் உந்துதல்கள் பற்றி அண்மையில் வெளிவந்த நூல் இந்தியச் சூழலில் வாழ்ந்து சிந்திக்கும் சில அறிஞர்களின் விவிலிய விளக்கங்களை உள்ளடக்கியுள்ளது. இன்னொரு சூழலில் நின்று பார்த்திருந்தால் சில ஆழ்துருவங்கள் கண்ணில் படாமலிருந்திருக்கும் என்று சொல்லுமளவில் இவை அமைந் துள்ளன. மேலும், இந்து சமய மரபுகளில் மறைநூல்கள் எவ்வாறு அணுகப்பட்டு, விளக்கப்பட்டுள்ளன என்பதைப் பார்க்கும்போது விவிலிய ஆய்வுக்கும், விளக்கத்திற்கும் ஏற்ற உண்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. எ.கா. பிராமணிய இந்து மரபில் வேதங்கள் என்றென்றும் இருப்பவையாகவும், புனித அதிகாரம் மிக்கவையாகவும் ஏற்கப்பட்டுள்ளன. ஆனால் இதே மரபில் வேதங்களின் அதிகாரத்தை மறுக்கின்ற போங்குகள். ஒரு சில பகுதிகளை மட்டும் தெரிந்துகொண்டு ஏனையவற்றை ஒதுக்கும் போங்குகள், வேதப்பகுதிகளை முறையாக விளக்கும் விதிமுறை கள் முதலியவற்றைப் பார்க்க முடிகிறது. (இக்கட்டுரையின் இறுதியில் இதன் ஆசிரியர் பதிப்பித்தவையாகக் காட்டப்படும் நூல்களைக் காண்க). இவ்வாறே பௌத்த சமயத்திலும், தமிழ்ச் சைவத்திலும் திருநூல்கள் முறைப்படுத்தப்பட்ட வரலாறு (கனோன்) விவிலிய ஆய்வாளர்களின் சிந்தனைகளைத் தூண்டக்கூடும்.

பல்சமயச்சூழலில் விவிலிய ஆய்வுசெய்வதால் ஏற்படும் பக்கவிளைவையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். விவிலிய ஆய்வின் அணுகுமுறைகளை பிறசமய மறைநூல்களின் ஆய்வுக்குப் பயன்படுத்தலாம். எ.கா, பொதுவாக இந்து சமயத்தை வரலாற்று நோக்கில் ஆய்ந்து படிப்பதில் இந்து சமய அறிஞர்கள் போதிய அளவில் அக்கரைப்பட்டுக் கொள்வதில்லை. இதனால் மெய்யியல் சார்ந்தும், இலக்கிய ஆய்வு சார்ந்தும் இச்சமயத்தின் மறைநூல்கள் படிக்கப்படுகின்றன. இந்நிலையில், வேத சமயத்தின் மையமான வேள்வி, வேதகாலத்திற்குப்பின் எழுந்த அரசியல், பொருளாதார, சமய மாற்றங்களை முன்னிட்டு எத்தகைய மாற்றங்களைப் பெற்றுள்ளதென்று இக்கட்டுரை ஆசிரியர் ஆய்வுசெய்துள்ளார். பிராமணிய இந்து சமயத்திலுள்ள அடிப்படைக் கருத்துக்கள் அடைந்த மாற்றத்தையும், விளக்க முறைமையின் பல்வேறு கூறுகளையும் இவர் எடுத்துக்காட்டியுள்ளார். இதுபோன்று, இன்று இந்து சமயம் என்று பொதுவாக அழைக்கப்படும் பன்முக இந்தியப் பெருஞ்சமயத்தில் அடங்கியிருக்கும் நான்கு மரபுகளை இனங்கண்டு அவற்றின் தனிச்சிறப்புக்களையும், ஒன்றுக்கொன்றுள்ளப் பிணைப்புகளையும் இவர் தம் தொடர் ஆய்வில் சுட்டிக்காட்டியுள்ளார். அவை வேதகால வேள்வி மரபு, நாடோடித் துறவிகளின் யோகமரபு, ஒறிறைப்பக்தி மரபு, கிராமிய வழிபாட்டு மரபுகள் என்பனவாகும். மேலும், விவிலியம் தரும் விடுதலைப் பார்வையின் அடிப்படையில் ந்த மரபுகளில் காணக்கிடக்கும் நீதி, சமத்துவம் சார்ந்த க்கள் இன்று சில அறிஞர்களால் சுட்டிக்காட்டப் படுகின்றன. இக்கருத்துக்களின் பேரிலும் அவை தொடர்பான ஈடுபாட்டுப் பணிகளிலும் வெவ்வேறு சமயத்தவர் சேர்ந்து செயல்பட வேண்டும் என்ற அழுத்தமும் தரப்படுகிறது. ஆனால், பல்வேறு தகுந்த காரணங்களினால் இந்து சமயத்தை விட்டு வந்தவர்கள் அல்லது அவர்களின் ஒரிரு தலைமுறையினரே இன்று இந்தியாவில் கிறிஸ்தவர்களாக இருக்கின்றனர். இதனால் இந்து சமயத்தின் வரலாறும், மறைநூல்களும் தங்களுக்குச் சில நல்ல பாடங்களைத் தர முடியும் என்பதை இவர்கள் நம்புவதில்லை; விடுதலை நோக்கில் பிற சமயத்தவரோடு சேர்ந்து உழைக்க முன்வருவதுமில்லை. ஆயினும் ஒரு சிலர் இன்று வடமொழி இலக்கியங்களில் மட்டுமன்று, தமிழ் போன்ற மாநில மொழிகளில் புதைந்துக் கிடக்கும் சமய எண்ணங்களையும், சமூகக் கருத்துக்களையும் விவிலிய ஒளியில் ஆய்ந்து தன்னாட்டு இறையியல் படைக்க முயலுவது கருதத்தக்கது.

8. முடிவுரை

ஏறத்தாழ இருபது நூற்றாண்டுகளில் செய்யப்பட்ட விவிலிய ஆய்வுகளையும் விளக்க முறைகளையும் இக்கட்டுரையில் தொட்டுக்காட்டியுள்ளோம். இதில் இடம்பெறாத பல அறிஞர்கள் பல்வேறு நாடுகளில் விவிலிய ஆய்வு செய்து தரமான நூல்களை வெளிட்டிருக்கிறார்கள் என்பதை வாசகர் மனத்திற்கொள்ளவேண்டும். ஆயினும் தனிச்சிறப்புமிக்க, திருப்புமுனைகளை ஏற்படுத்திப் புகழ்பெற்ற ஆய்வாளர்களும் அவர்களின் முயற்சிகளும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. ஆங்கில நூல்களைப் படிக்கும் தமிழ் மாணவர்களுக்கு இதில் தரப்படும் தகவல்கள் பயனுடையவையாக இருக்கக்கூடும்.

விவிலிய அணுகுமுறையில் இருபார்வைகள் உள்ளன. ஒன்று ஆன்மிகப் பார்வை, மற்றது ஆய்வுப் பார்வை. பல்வேறு மறைநூல்கள் இருக்கும்போது விவிலியத்தைத் தம் மறைநூலாக ஒருவர் ஏற்கும்போது ஏற்கெனவே ஓர் ஒப்படைப்பு நிகழ்ந்து விடுகிறது. இந்த ஒப்படைப்புடன் கடவுள் தமக்கும், தம் சமூகத்திற்கும் சொல்ல விரும்பும் செய்தி விவிலியத்தில் உள்ளது என்று அவர் நம்புகிறார்; எனவே மிகவும் ஆர்வத்துடன் அதை கடவுள் அனுப்பியக் கடிதமாகப் படித்து மகிழ்கிறார்; தியானித்துப் பரவசம் கொள்கிறார். இத்தனைக் கூறுகளும் ஆன்மிகப் பார்வையில் உள்ளன. அதே நேரத்தில் விவிலியம் மனிதர்களால் எழுதப்பட்டு, மனிதர்களால் பாதுகாக்கப்பட்டு, மனிதர்களால தொிவு செய்யப்பட்டு, மனிதர் களால மொழிபெயர்க்கப்பட்டு, பல்வேறு விளக்கங்களுக்கு இடமளிக்கும் வகையில் தங்களிடம் வந்தடைந்திருக்கிறது என்பதை கிறிஸ்தவர்கள் மறக்கக் கூடாது; மறந்தால் மூட நம்பிக்கைகளும், மாந்திரிக எண்ணங்களுமே மேலிடும். இவ்வாறு ஒத்துக் கொள்வது ஆன்மிகப் பார்வைக்கு முரண்பட்டதா? இல்லவேயில்லை. எல்லாம் வல்ல இறைவன் பலவீனமான மனிதர் வாயிலாகத் தம் வார்த்தையைத் தந்ததில் அவரது இயல்கடந்த தாழ்மை வெளிப்படுகிறதன்றோ? இதைக் கருத்துடன் எண்ணும்போது நம் ஆன்மிக உணர்வு கூடுமேயன்றிக் குறையாது.

அதே நேரத்தில் ஆய்வுப்பார்வையுடையவர்கள் அனைவரும் ஆன்மிகப் பார்வையுடையவர்களாக இருந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. அவர்களில் தங்கள் இயல்பான அறிவுவேட்கையை நிறைவு செய்ய ஆய்வு செய்தவர்கள் இருந்துள்ளனர்; நாத்திகர்கள் இருந்துள்ளனர்; நற்செய்தியின் கூர்மையை வெளிக்கொணரும் நோக்கில் ஆய்வு செய்தவர்களும் இருந்துள்ளனர். பிற சமயத்தவர் ஒருவரோ அல்லது இறைவன்

திருவிவிலியத் துணை நூல்

இல்லை என்று சாதிக்கிற ஒருவரோ சமைத்த உணவை நாம் உண்ணும்போது அது நம் உடலுக்கு ஊட்டம் தராமலிருப்பதில்லை. இதுபோன்றே எந்த ஆய்வுமே நம் ஆன்மிகப்பார்வை விரிவடையவும். அறிவை வளர்க்கவும் உதவியாய் இருக்கக்கூடும்.

ஆய்விலே பல்வேறு அணுகுமுறைகளும் பார்வைகளும் இருந்துள்ளன என்று கண்டோம். சிலர் வரலாற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். வேறு சிலர் இலக்கிய அமைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள்; வேறு சிலர் மூல ஏடுகளுக்கும். மரபுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள்; இன்னும்சிலர் இருப்புநிலைக்கும். இறைச்செய்திக்கும் அழுத்தம் கொடுத்துள்ளனர். இன்னுஞ்சிலர் மனிதவியல் - சமூகவியல் முறைகளை விவிலிய ஆய்வுக்குப் பொருத்தியுள்ளார்கள்; வேறு சிலர் விடுதலை. சமூக நீதி முதலியவற்றிற்கு அழுத்தம் கொடுத்து விளக்கியுள்ளார்கள். இதனாலென்ன? மனித வார்த்தைகளால் கடவுள் தம் செய்தியை இந்த உலகுக்குத் தர முடிவெடுத்திருக்க. மனித மொழியின். இலக்கியத்தின். வரலாற்றின் எல்லாக்கூறுகளும் விவிலியத்தில் அடங்கியிருப்பது இயல்புதானே! இப்படியிருக்க நாம் பார்த்த முறைகளில் நம் சூழலுக்குச் சிலவற்றைவிட வேறு சில அதிகப் பொருத்தமாயிருக்கலாம். ஆயினும், ஆன்மிகத்தையும், அறிவையும், பணியையும் வளப்படுத்தும் வகையில் அகன்று விரிந்த, அதே நேரத்தில் ஒருங்கிணைந்த பார்வையுடையவர்களாக இருக்கவேண்டுமென்று கூறுகின்ற இறையியலார் உள்ளனர்.

இறையியல் கல்லூரியில் விவிலியத்தை அக்குவேரும் ஆணிவேருமாக ஆய்ந்துவிட்டு அதை ஆன்மிகப் பாலாகப் பருகுவதில் பலர் தவறிவிட்டதைப் பார்த்த சாது சுந்தர்சிங் இறையியல் கல்லூரியை விட்டு வெளியேறினார். ஆயினும் பிற்காலத்தில் இறைவார்த்தை என்னும் உடலை மனித வார்த்தைகளாகிய உடைகள் விவிலியத்தில் பொதிந்துள்ளன என்று அவர் கூறினார். இந்திய இறையியலார்களில் ஒருவர் எனறு போற்றப்படுகின்ற சாது சுந்தர்சிங் உடைகளை உரிந்து விட ஒருபோதும் கூறவில்லை. அவர் காவி உடையணிந்து நற்செய்தியை அறிவித்ததுடன். இயேசுவின் வாழ்வளிக்கும் தண்ணீராகிய நற்செய்தி இந்தியக் கிண்ணங்களில் வழங்கப்படவேண்டுமென்றும் கூறினார். உடைகளைப் பற்றிய பேணுதல், புது உடைகளை அணிதல், குறிப்பாக நம் பண்பாட்டுக்கேற்ப உடையணிதல் முதலியவை உடலுக்கு அழகையும் பாதுகாப்பையும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. இதை மனத்திற்கொண்டு இந்திய இறையியல் மாணவர்களும் கிறிஸ்தவர்களும் ஆன்மிகப் பார்வையையும். ஆய்வுப் பார்வையையும் இணைத்து விவிலியத்தை அணுகுவது சாலச் சிறந்தது. விவிலிய ஆய்வுக்கு மேலைநாடுகளில் இருக்கும் கருவூலங்களும். வசதிகளும் இந்தியாவில் இல்லைதான். ஆயினும் அவற்றை அறிந்து. இந்தியச் சூழலில் புதிய பார்வைகளையும் அழுத்தங்களையும் முன்வைக்கும்போது விவிலிய ஆய்வுக்குத் தனிச்சிறப்புமிக்கப் பங்களிப்பை நாம் செய்கிறோம் எனலாம்.

துணை மூலங்கள்

1. John s. Kselman, "*Modern New Testament Criticism*", **The Jerome Biblical Commentary,** II, 7 - 20.
2. Alex Suelzer, "*Modern Old Testament Criticism*", **Ibid.**, 590 - 604.
3. R.J. Coggins and J.L. Houlden (ed.), **A Dictionary of Biblical Interpretation,** London: SCM, 1990.
4. R.S. Sugirtharajah, "*Why do men say remins of me? - Current Jesus Research and Third World Christologies*", **Asia Journal of Theology**, 5/2 (1991), 331 - 337.
5. R.S. Sugirtharajah, " *திருமறை விளக்கம் ",* ***கிறிஸ்தவத் திருப்பணியர்***, பதிப். CRW டேவிட், மதுரை: தமிழ் இறையியல் நூலோர்குழு, 1992, 104 - 110.
6. Dhyanchand Carr, "*Development of Interpretative Perspective and Academic Ministry*, **SATHRI Journal**, 1/1 (1991), 16 - 51.
7. Dhyanchand Carr, **The Sword of the Spirit**, Geneva: WCC, 1992.
8. John K. Riches, **A Century of New Testament Study**, Cambridge: The Lutterworth Press, 1993.
9. Sinclair B. Ferguson and David F. Wright (ed.) **New Dictionary of Theology,** Leicester: Inter - Varsity Press, 1988.
10. R.A. Horsley, **Sociology and the Jesus Movement,** New York: Cross Road, 1989.
11. George Soares - Prabhu (ed.), "*The Word of God*", **JEEVADHARA**, XX 11/128, March, 1992.
12. Felix Wilfred (ed.), **Leave the Temple - Indian Paths to Human Liberation,** Maryknoll: Orbis, 1992.
13. Israel Selvanayagam (ed.), **Multi-Faith Context of India - Resources and Challenges for Christians,** Bangalore: BTTBPSA - BTESSC, 1992.
14. Israel Selvanayagam (ed.), **Biblical Insights on Inter-Faith Dialogue**, Bangalore: BTTBPSA - BTESSC, 1995.

தமிழ் இறையியல் நூலோர் குழு
அண்மைக்கால வெளியீடுகள்

1. திருமறை விளக்கவுரை — ரூ. 250·00
   பதிப்பாசிரியர்: ஞான ராபின்சன்,
   தி. தயானந்தன் பிரான்சிஸ்
2. கிறிஸ்தவத் திருப்பணியர் — ரூ. 60·00
   பதிப்பாசிரியர்: C. R. W. டேவிட்
3. விடுதலைப்பயணம் நெடியது — ரூ. 30·00
   பாஸ்டியன் வீலங்கா
4. திருப்பணியருக்கு இலக்கணத் தமிழ் — ரூ. 5·00
   S. லாரன்ஸ் அடிகள்
5. புத்த சமயம் — ரூ. 25·00
   M. A. இரத்தினராஜா

விரைவில் வெளிவர இருப்பவை

1. இந்திய மெய்யியல்—ஓர் அறிமுகம்
   A. E. இன்பநாதன் & இசுரேல் செல்வநாயகம்
2. வரலாற்றில் கிறிஸ்தவம் என்னும் வரிசை நூல்கள்
3. திருமறைத் தோழன் (திருத்திய பதிப்பு)
4. சமயச் சொல் விளக்க நூல்
5. தொடர்பியல்

இன்னும் சில

(மொத்தமாக வாங்குவோருக்கு விலைச் சலுகை உண்டு.)

நூல்கள் கிடைக்குமிடம்: புத்தக அரங்கு
தமிழ்நாடு இறையியல் கல்லூரி
மதுரை - 625 010.

BIBLICAL, THEOLOGICAL WORDS
COLLECTION OF ESSAYS

TAMIL THEOLOGICAL BOOK CLUB
Price Rs. 120·00